ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.

PATH IVIRATHAS

CHARITRAM.

2nd PART.

வ்ரதிரீகள் பக்தவிஜய மென்னும்

பதிவிரதைகள்

சரித்திரம்.

இ ஃ து

ப்ரஜவை-நாராயணதாஸரவர்களால்

இயற்றப்பட்டு,

சென்னை - சூளை.

எஸ். டி. இராஜாராமவர்களாற்

றமது

" ஸன் ஆப் இந்தியா பிரஸ்ஸிற் "

பதிப்பிக்கப்பெற்றது.

1917.

இதன் விலை] [அணை 0-12-0

Registered Copy-Right.

ரிஜிஸ்டர் காப்பி ரைட்டிங்.

அறிவிப்பு.

இதனால் சகலருக்குந் தெரிவிப்பது யாதெனில், இந்த பதிவிரதைகள் சரித்திரமென்னும் இந்நூலை புதுவை நாராயணதாஸர் அவர்களால் இயற்றியதை, ஸன் ஆப் இந்தியா அச்சுக்கூடத் தலைவர் எஸ். பி. இராஜாராம், அவர்கள் சகல சுதந்தரத்துடன் பெற்றுக்கொண்டு கனம்பெருந்திய கவர்ன்மெண்டார் அவர்களது 1867-வது வருஷத்திய 25-வது ஆக்டின், 20-வது பிரிவின், 6-வது விதியின் பிரகாரம், ரிஜிஸ்டர் காப்பிரைட் உத்திரவு பெற்றிருக்கிறபடியால் என்னுடைய உத்திரவன்னியில் யாரும் அச்சிடக்கூடாது.

முக்கிய கவனிப்பு.

இப்புத்தகமாவது இன்னும் இதரமான புத்தகங்களாவது ஒளஷதங்களாவது, தேவையானவர்கள் அடியிற்கண்டிருக்கும் கம்பெனியாரவர்களுக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம். கேடலாக் தேவையானவர்கள் எமக்குத் தெரிவித்துக்கொண்டால் இலவசமாக அனுப்பப்படும்.

எமது விலாசம்.

எஸ். பி. இராஜாராம் அண்டு கம்பெனி.

நெ. 14. ஸ்ரீமுத்துமேஸ்திரி தெருவு,

சூகோ போஸ்டு மதராஸ்.

17848

ஸ்ரீ

ராமஜெயம்.

ஸ்ரீமதிகள் பக்தவிஜயமென்னும்

பதிவிரதைகள் சரித்திர

அட்டவணை.

பெயர்.	பக்கம்.
க—கானுபாத்ரி கற்பின் மகத்துவம்	க
உ—ஜனபாயி கற்பின் மகத்துவம்.	கக
ங—பதுமைவல்லி கற்பின் மகத்துவம்,	ஙo
ச—இருபி கற்பின் மகத்துவம்.	சஙு
ஞ—சகுந்தலை கற்பின் மகத்துவம்.	ஞ
சு—காந்தாரி கற்பின் மகத்துவம்.	எச
எ—மந்திராதேவி கற்பின் மகத்துவம்.	அச
அ—சுபத்திரை கற்பின் மகத்துவம்.	கoo
சு—ஆண்டாள் கற்பின் மகத்துவம்.	கசுo
கo—தேவகி கற்பின் மகத்துவம்	கஎo
கக—உலூபி கற்பின் மகத்துவம்.	ககச
கஉ—சித்திராங்கதை கற்பின் மகத்துவம்	உoடு
கங—சித்திரரேகை கற்பின் மகத்துவம்.	உஉசு
கச—கோகிலாம்பாள் கற்பின் மத்துவம்	உசங
கடு—புனிதவதியார் கற்பின் மகத்துவம்	உசுஅ
கசு—ரத்தினங்கி கற்பின் மகத்துவம்.	உசுச

அட்டவணை-முற்றிற்று.

மூன்றாம்பதிப்பு.

OFFICE OF THE REGISTRAR
15 JAN 19

ஸ்ரீராமஜெயம்.

ஸ்திரீகள் பக்தவிஜயமென்னும்

பதிவிரதைகள் சரித்திரம்.

காணேபாத்ரி கற்பின்மகத்துவம்.

1. ஸ்ரீமகாலட்சுமிகடாட்சம்பொருந்திய பண்டரிபுரத்திற்குத்தெற்கே மங்களவடமெனு மொருகிராமமுளது அதில் ஸ்யாமயெனும் ஒரு வேசிக்கு காணேபாத்ரியெனும் புத்திரிகாரத்தின முதித்தது இப்பெண்குழந்தையை ஸ்யாமயென்னுந் தாய் மெத்தப் பிரியமாக வளர்த்துவந்தனள். அப்பெண்ணே வளர்பிறைச்சந்திரனைப்போல நாளுக்குநாள் விருத்தியடைந்து அழகில் ஊர்வசி ரம்பை திலோர்த்தமை மேனகைகளிலும் அதிகரித்திருந்தனள் பகவதபக்தியில்ப்ரஹ்லாதனனுக்கும் வீணுகானத்தினில் நாரதருக்கும் நாட்டியத்தினில் சித்திரரதனெனுங் கந்தர்வனுக்கும் நற்குணசம்பத்தினில் சாவித்திரிதேவிக்கும் சமமாகவிருந்தனள் இப்படிக்கிருக்கும் தன் புதல்வியை ஸ்யாமவென்பவள் அரசனுக்குக் கொடுத்து அவனபிமானத்தைப் பெறவேண்டுமென்று நினைத்திருந்தனள் அதையறிந்து காணேபாத்ரி தன் அன்னையைநோக்கி ஓ என்னைப்பெற்ற தாயே இந்த வுலகத்தினில் சுகமுளதா ஒவ்வொரு பதார்த்தமும் துக்கத்தையே யுண்டுபண்ணிக்கொண்டிருக்கின்றது அந்தந்த பதார்த்தங்கள் புசிக்கப்பட்டசேதனர்கள் கர்மானுசாரமாக போக்கியங்களாகவும் அபோக்கியங்களாகவும் தோற்றுகின்றதேயன்றி தத்துவத்தை விசாரித்தால் போக்கியங்களும், அபோக்கியங்களும் அவ் வஸ்துக்களினிடமில்லை எப்படியெனில், ஒருவனுக்கு மதுரமாகியிருக்கும் பதார்த்தம் அதேகாலத்தில் மற்றொருவனுக்கு கசப்பாகியிருக்கும் அன்றியும் ஒருவனுக்கே ஒருகாலத்தினில் இனிப்பாயிருக்கும் வஸ்து மற்றொருகாலத்தினில் கசப்பாகியிருக்கும் பசிகொண்டவனுக்கு இனிப்பாயிருக்கும் அன்னமானது அஜீர்ணத்துடன்கூடியிருக்குமவனுக்கு கசப்பாகியிருக்கும். ஒருவனுக்கு சீதளகாலத்தினில் சுகமாயிருக்குஞ் சொக்காயானது அவனுக்கே உஷ்ணகாலத்தில் கஷ்டமாயிருக்கும் இதிப்படியிருக்கட்டும் ஸ்திரிபுருடர்களுக்கு ஒருவர்க்கொருவர் கட்டித்தழுவுவது

ஸ்திரீபுருடர்களால் மோகிக்கப்பட்ட சுந்தராங்கர்களாகும் புரு ஷர்களும் ஸ்திரீகளும் வார்த்திகப்பிராயத்தையடைந்து தங்கள் சரீரம் ரணதுர்க்கந்தாதிகளுடன் கூடினகாலத்தில் அவர்களுடைய அங்கஸ்பரிசம் கேவலம் அசுசியாகத் தோன்றும் மனிதர்கள் சரீ ரங்கள் மாதாகர்ப்பத்தினி லுண்டாவதும் பிறப்பதும் வளர்கிற தும் ஸ்தூலிப்பதும் இளைப்பதும் நசிப்பதும் அறுவகை விகாரங்க ளுடன் கூடினதாகையால் எப்போதும் ஒரேவிதமா யிருக்கமாட் டாது யான் சுந்திரவதியென்றும் என்னை யரசனுக்குக் கொடுப்ப தால் உனக்கு அரசன் சன்மானமுண்டாகுமென்று நினைத்தாய் என்னுடைய சுதந்திரம் எத்தனைநாள்வரைக்கும் நிறமாகியிருக் கும் உலகத்தினில் காமாந்தகாரர்களாலே கிரகிக்கப்பட்ட சுந்திர வடிவுனடைய ஸ்திரீகள் வார்த்தீகத்தினலும் தளர்ச்சியினலும் தங் கள் சுதந்திரமும் ரூபமும் மாறினபோ தந்த காமிகளால் வெறுக் கப்பட்டு அன்னவஸ்தியங்களுக்கு அலைச்சல்பட்டு கொடிய வீடுக் கண்கள் படுவதைக்கண்டுங் கேட்டுமறியாயோ ஓ அன்னையே நான் சிறுவளானபோதிலும் என்னுடைய மனனகமலவாசராகிய பகவானது கடாட்சத்தினலே என்னறிவுக்கெட்டின அர்த்தத்தை புனக்குச் சொல்லுகின்றேன் கேளும்.

சுலோகம்.

அமேதயபூர்ணம் க்ரிமிஜாலஸங்குல
ஸ்வபாவதுர்க்யந்தமசௌச்சமத்ருவம்
களேபரம்மூத்ரபுரீஷபாஜனம்
ரமந்திமூடா நரமந்திபண்டிதா.

என்றால் இத்தச் சரீரம் நரகலினல் நிரையப்பட்டு புழுக்கூட்ட ங்களினல் கூடினதாய் துர்க்கந்தமேசுபாவீகமாகவுடையதாய் சுசி யில்லாததாய் அநித்தியமாகியிருக்கும் மலமூத்திரங்களுக்கு வீடா கும் இந்த சரீரத்தை மூடர்கள் ஆசிப்பர்கள் பண்டிதர்கள் துவே ஷிப்பர்கள் மிகவும் மதுரமாகி ஆயுசு சக்தி பல ஆரோக்கியங்களை யுண்டாக்குவதுமாகி சுகப்பிரியவர்த்தகங்களாய் மதுரங்களாய் நெய்யுடன் கூடினதாய் வெகுகாலத்தியதாகும் பதார்த்தங்கள் மனிதர்களால் புசிக்கப்பட்டு இவர்களது தேகசம்பந்தத்தினல் ஒரு ஜாமத்திற்குள்ளாக ஜீரணமாகி தரிசனஸ்பரிசன உச்சார ணங்களுக்கு உதவியில்லாததாகும் மலமாகின்றது நரர்கள் தம் சரீரத்தினிடத்தில் துர்க்கந்தத்தை மறைப்பதற்காய் மிகவுஞ் சிலா

க்கியமாகும் சந்தன புஷ்பதாம்பூலாதிகளைத் தரிப்பதால் அப் பதார்த்தங்கள் கொஞ்ச நேரத்தினில் இவர்கள் உச்சிஷ்டசஹவா சத்தினாலே அன்னியர்கட்கு சகிக்கக்கூடாத துர்க்கந்தமாயிருக் கின்றது ஆகையால் புத்திவான்கள்.

(நாரீஸ்தனபாரனாபீதேசம் த்ருஷ்ட்வாமாகாமோஹாவேசம்
ஏதன்மாம்ஸவஸாதிவிகாரம் மனஸிவிசிந்யவராம்தவாரம்.)

என்றால் பார்த்தமாத்திரத்திலேயே புருடர்கட்கு மோகா வேசமுண்டாகச் செய்துக்கொண்டிருக்கும் ஸ்திரீகளுடையகொங் கைகள் நாபிப்பிரதேசங்கள் மாங்கிசம் கொழுப்புமுதலாகும் கேவல பதார்த்தசமுதாயங்களாகி மிகவும் விகாரமாயினவென்று பலதடவைகள் சிந்தனை செய்துக்கொண்டிருக்கவேண்டும் ஒருவ னுக் கிப்படிப்பட்ட பாவம் உண்மையாக உண்டாகுமாகில் இந்த அசுசிபதார்த்தங்கள் மதுரமென்று தோன்றாது.

(சரீரம்ப்ரணவத்மன்யே தன்னந்துவ்ரணலேபனம்
வ்ரணநேசனவத்தாகம் வஸ்த்ரந்துவ்ரணபட்டவத்)

ஓ அன்னியே இத்தேகத்தைப் புண்ணாகநினைக்கவேண்டும் புருடர்கள் சரீரத்தினி லொரு புண்ணுண்டாகில் அது மெத்த அசுசியென்றும் அதற்குத்தக்க உபாயத்தினால் விரைவாகநிவர்த்தி செய்துக்கொள்வ தலகயியல்பாகும் இதைப்போல ஆத்துமாவுக் குண்டாகிய ரெணரூபமாகும் சரீரங்களில் புத்திவான்கள் அசுசி பட்டுக்கொண்டு இதின் வினாசகாலத்தை எதிர்பார்த்துக்கொண் டிருக்கவேணும் இப்படிபபட்ட அசுசிக் கிருப்பிடமான சரீரங் களை நூதனமாகும் ஆபரணங்களினாலும் திவ்யியங்களாகும் புஷ்ப சந்தனாதிகளாலும் அலங்கரித்து அதன்விஷயமாய்ஆனந்தமடையு மவர்கள் புண்ணை யலங்கரித்து ஆனந்திப்பவர்களாவார்கள் பசி யைப் போக்குவதற்காய் புசிக்கப்படும் அன்னத்தை புண்ணுக் கரைத்துக்கட்டும் அன்னத்தைப்போல பாவனைபண்ணவேணும் இப்படிப்பட்ட அன்னம் மதுரமாக விருக்கவேணுமென்றுகோரு மவர்கள் ரெணத்திற்குக் கட்டப்பட்ட அன்னம் அறுசுவையுடன் கூடின மதுரமாகி யிருக்கவேணுமென்று கோருமவர்களுக்குநிக ராகுவர்கள் தாகநிவர்த்திக்காக அருந்துநீர்த்தத்தை புண்ணை யலம்புந் தீர்த்தமென்று பாவிக்கவேணும் இந்த ஜலத்தை பரிம ளங்கலந்ததா யிருக்கவேணுமென்று கோருமவர்கள் புண்ணை யலம்புவதற்கு சுகந்ததீர்த்தம் அபேட்சிப்பவர்களாவார்கள் மான

த்திற்காக தேகத்தின்மீது சுற்றிக்கொள்ளும் வஸ்திரத்தைப் புண்ணின்மீது சுற்றும் துணியென்று பாவிக்கவேணும் மனிதர்கள் வஸ்திரமின்றி நிர்வாணராகி தங்கள் பிரதிபிம்பங்களைக் கண்ணாடிகளில் பார்க்கில் அது தமக்கே விகாரங்களாகியிருக்கும் ஆகையால் அசுசியாகும் புண்ணை அன்னியர்கள் கண்களுக்குப் புலப்படாமல் துணியினுல்சுற்றி மறைத்துக் கொள்ளுமாப்போல மனித சரீரத்திலுள்ள விகாரத்தை அன்னியர் கண்களுக் ககப்படாவண்ணம் வஸ்திரத்தினுலே மறைக்கவேண்டியதாயிருக்கின்றது இப்படிப்பட்ட வஸ்திரம் மனதிற்குப் பிரியமாகி நூதனமாகியிருக்கவேணுமென்று நினைப்பது புண்ணிற்குச் சுற்றும் துணி திவ்யபீதாம்பரமாகியிருக்கவேணுமென்று கோருவதற்கு நிகராகும் ஓ அன்னையே நன்முகயோசியும் நன்முகத் தன்னைத்தானறியாதவர்களும் அறிந்தபோதிலும் பகவான்விஷயத்தில் சரணுகதிசெய்யுமவர்களாய் அவன் சரணரவிந்தத்தினில் ஆத்மசமர்ப்பணஞ் செய்யுமவர்களாய் பயமற்றவர்களாய் (க்ருதக்ருத்யா: ப்ரதீக்ஷந்தே ம்ருத்யும்ப்ரியமிவாதிதிம்) என்யதுபோல ம்ருத்யுவைப் பிரியமாகிய அதிதியைப்போல எதிர்பார்த்துக்கொண்டிருப்பது. இந்த ஆன்மாவுக்குப்பிராப்தமாகியிருக்கையில் அந்தப்படிசெயயாமல்,

(நளினீதளகதஜலமதிதரளம் தத்வஜ்ஜீவிதமதிசயசபலம்
வித்வியாத்யபிமானக்ரஸ்தம்லோகம்சோகஹதம்சஸமஸ்தம்)

என்பதுபோல தாமரையிலையையடைந்த தண்ணீரைப்போல மனமானது மெத்த சஞ்சல முடையதென்றும் உலகத்தினிடத்தில் சகல பதார்த்தங்களும் சோகமின்றியிருக்கின்றதென்றும் கிஞ்சித்தாயினும் சிந்திக்காமல் நீர்க்குமிழிபோன்ற தேகத்தை நித்தியமென்று நம்பி (ஈஸ்வரோ ஹமஹம்போகீ கோன்யோஸ்திஸத்ருசோமயா) என்னுமாப்போல் நானே பிரபுவென்றும் போகியென்றும் எனக்கு நிகரானவர்களில்லையென்றும் நினைக்கும் துரபிமானக் கிரஸ்தராகி சாஸ்திரங்களை தூஷித்தும் நாஸ்திகராய் சதாகாலமும் ஆத்மஸ்துதி பரநிந்தை அன்னியாவமானம் அன்னியபீடை விஷயானுபவங்களாலே காலத்தை வீண்போக்கியும் அன்னைதந்தை அதிதி குருநாதரை பகவான்சொரூபங்களென்று கருதாமல் அவர்களையவமதித்து நாஸ்திகர்களாகி காமாந்தகார குதூகலர்களாகியிருக்கும் மனிதர்களிடஞ்சேர்ந்து வாழ்வதற்கு எனக்கிஷ்டமில்லை ஆகிலும் ஓ அன்னையே கொஞ்சம்பொருத்திரும் எனக்குத்தக்கவரனை நானே தேடிமணஞ்செய்துக்கொ

ளுகின்றேன் என்று சொல்லிய நற்குணசீலியாகிய தன்புதல்வி யின் வசனங்களைக்கேட்டு அந்தஸ்யாம எதுவுஞ் சொல்லமுடியா மல்மௌனமாக விருந்தனள்.

இப்படிக்கிருக்கிறபோது ஒருநாள்பண்டரீபுரத்திற்கு ஆஷாட கார்த்திகைசுத்த ஏகாதசி மஹோற்சவத்திற்காக சாதுஜனங்கள் கூட்டங்கூடி கரதாளங்களுடன் ஸ்ரீபாண்டுரங்கனதுகல்யாணகுண ங்களைப் பாடியும் ஆனந்தமேலீட்டால் மெய்மறந்து நடனமாடி யும் அழுதும் தொழுதும் வெறிகொண்டவரைப்போலவும், பேய் பிடித்தவரைப்போலவும் அம்மாது வசிக்கும் வீதியாய்ப் போய்க் கொண்டிருக்கையில் அவர்களைப்பார்த்து காளைபாத்ரி அம்மகா த்துமாக்களுக்குக் குறுக்கேவந்து வந்தனஞ்செய்து வினயத்து டன் சற்று நின்றிருந்து உடனே சிரசாஷ்டாங்கதெண்டனிட்டு இந்தப்படி விண்ணப்பஞ்செய்தனள் ஓ மகானுபாவர்களே நீங்க ளெங்கிருந்து எதுக்காக எங்கேபோகின்றீர்கள்,

(வஸதிஃருதிஸனுதினேசவிஷ்ணௌ
பவதிபுமான்ஜகதோஸ்யஸௌம்யரூப:
க்ஷிதிரஸமதிரம்யமாத்மனேமதஃ
கதயதிசாருதயைவஸாலபோத;)

ஓ சாதுக்களே எவனதுஹிருதயத்தினில் ஸுதனனுகும்வி ஷ்ணுவானவன் வசித்திருக்கின்றானே அந்தப் புருடன் ஜெகத்திற் குச் சாந்தரூபனுகிக் காணப்படுவன் அதெப்படியெனில், நெற்பயி ருக்கு பால் கட்டக்கட்டத் தலை வணங்குவதுபோல உங்களுடைய பத்தியானது சாந்தம் பொருமை முதலான நற்குணங்களை வெளி ப்படுத்துமென்று எமன் தூதர்களுக்குச் சொல்லிய வைஷ்ணவ லட்சணம் உங்களிடத்தில் பூரணமாக மூர்த்திகரித் திருக்கின்ற தென்று விண்ணப்பஞ் செய்தபோது அந்த சுந்தரவதியினுடைய மெல்லியதாகி மதுரங்களாகி சிலாக்கியங்களாகிய இனியமொழிக ளென்னும் அமிர்தவெள்ளம் பண்டரியாத்திரைக் கேகும்படியான சாதுஜனங்களுடைய செவிகளிற் பிரவேசித்து அவர்களுச்கு ஆன ந்தம் பிரம்மானந்தமெனு மிரண்டுங்கடந்து மூன்றுவதாகிய பரமா னந்தத்தை உண்டாகச்செய்தது அப்போ தந்தச்சாதுக்கள்காளை பாத்ரியைநோக்கி ஓ அம்மணி ஆஷாடசுத்த ஏகாதசிமஹோற்சத் திற்காக பண்டரிபுரத்திற்குப் போய்க்கொண் டிருக்கின்றோம் பூலோகவைகுந்தமாகும் அந்த க்ஷேத்திரத்தினில் அந்தமஹோற்

சமகாலத்தினில் வெகுதேசங்களிலிருந்து அனேக சாதுக்கள் வருவார்கள் அப்படிப்பட்ட சாதுஜனங்களுடன் பக்தவரதனுகும் பண்டரிநாதனைத் தெரிசிப்பது பரமப்பிரயோஜனமாகக்கோரி போய்க்கொண்டிருக்கின்றோம் உன்னுடைய குணவிசேஷங்களைப் பார்க்கையில் அந்தப் புண்டரீகவரதன் ஆதியில் ஜனபாயியை அதிக பிரியத்துடன் அங்கீகரஞ் செய்துக்கொண்டதுபோல தானேயுன்னை அங்கீகரிப்பர்போலத் தோன்றுகின்றது என்று சாதுஜனங்கள் சொல்லவே காணுபாத்ரி பரமானந்தசாகரத்தில் மூழ்கினவளாகி அந்தகூட்டத்திற்குப் பிரதட்சணநமஸ்காரங்கள் செய்து ஒசாதுக்களே உங்களால் துதிக்கப்பட்டு உங்களுக்கு வந்தனப்பிரியராகியிருக்கும் ஸ்ரீ பண்டரிநாதனது சொரூபசுபாவங்களையும் உங்கள் திருவாக்கினற் சொல்ல அடியாள் செவியாறக் கேட்க விரும்புகின்றேன் கிருபைசெய்யுங்களென்று வேண்டிக் கொள்ள அவர்கள் மெத்த சந்தோஷித்து காணுபாத்ரியை நோக்கி கேளுமம்மாவென்று சொல்லத்தொடங்கினர்கள்.

ஓ புண்ணியராசியே அந்தப் புருஷோத்தமனது சொரூபரூப குணவிபவங்களைப் புகழுவதற்கு ஆயிரந்திருவாய்களும் இரண்டாயிரம்நாக்குகளுமுடைய ஆதிசேடனுலும் முடியாது விதிசிவசனகாதிகளது தியானத்திற்கும் அகோசரமாகியிருக்கும் வேதபுருடன் அந்த மகாத்மனுடைய ஆனந்தமென்னும் சாரத்தைக் கண்டுபிடிக்க உத்தேசித்தவனுகி முதலில் மனிதானந்தத்தைநிச்சயித்து கிரமமாக பிரம்மானந்தம்வரைக்கும் சொல்லிக்கொண்டேபோய் பரப்பிரம்மானந்தம் மனதிற்கு எட்டாதென்று திரும்பினன் அந்த ஜகதீசன் தன்னுடைய கல்யாணகுணங்களைத் தானே சிந்தித்து அதின்சாரத்தைக்கண்டு தெளியாதிருக்கின்றன் அப்படிப்பட்ட பகவானுடைய சொரூபசுபாவங்களை நாங்களெப்படிப் புகழ்த்தரமாகுமோ ஆகிலும் அவரவர்கள் மதிக்குக் கோசரமாகுமட்டும் துதிசெய்யத் தப்பாகாது எப்படியெனில்,

மகம்மேருபர்வதத்தில் பிடிபொன்னிருக்கின்றதென்றும் மகாசாகரத்தினில் ஒருகைஜலமிருக்கிறதென்றும்சொல்லிய அச்சொற்கள் பொய்யல்ல மகம்மேருவினில் பொன்மிதமற்றிருக்கினும் அதில் பிடிபொன்னுமுளதல்லவா கடலினிடத்தில் மிதமற்றஜலமிருக்கினும் அதில் ஒருவகைமுளதல்லவா ஆகையால் பகவானது சொரூபரூபகுணவிபவங்கள் சர்வநியந்தாவாகும் தனக்கே கணக்கிடமுடியாததாயிருக்கினும் அரைவர்கள் மதிக்கெட்டினமட்டும்

புகழுவதற்சிதமாயிருக்கும் பகவான் தனது கல்யாணகுணங்க
ளுக்குத் தானேமுடிவுகாணுனென்று சொன்னல் அவனுடைய
சர்வசக்திக்குக் குறையுண்டாகாதா என்றல் உலகத்திலே உத்தம
ஞானியாகு மொருவன் முசல்கொம்பை யறியேனென்றல் அவ
னது ஞானத்தை நிந்திக்கத்தக்கதல்ல முசல்கொம்பு உலகத்தினில்
யில்லாதபதார்த்தம் ஆகையால் அப்படிப்பட்டதனை அறியேனெ
ன்பது ஞானமேயாகும் அந்தப்படி அனந்தகல்யாணகுணங்க
ளனந்தமென்று அறிந்திருப்பது சர்வேசனது சர்வநியந்தாவென்
பதற்குக் குறைவுண்டாகமாட்டாது இனியுன் மனோரதபூர்த்திக்
காய் அந்த ஜகதீசனது விபவத்தை எங்கள் மனதுக் கெட்டின
மட்டும் புகழ்கின்றோம் துஷ்டர்களைச் சிக்ஷித்து சாதுக்களை
ரக்ஷித்து பூவியில் தர்மபரிபாலனஞ் செய்யும்பொருட்டு தேவகி
வசுதேவருக்குப் புத்திரனுயவதரித்து நந்தநந்தனனென்றும்யசோ
தையின் புதல்வனென்றும் பிரசித்தியடைந்து பிருந்தாவனத்தி
னில் பிரகாசித்து தனக்குச் சமமான வயதுடைய கோபாலபாலர்
களுடன்கூடி கோக்களை மேய்த்தும் கம்சாதிதுஷ்டர்களைமடித்து
பாண்டவாதிஷ்டர்களை யாதரித்துப் பூமிபாரத்தைத்தீர்த்த பரம
யோகி ஜனங்களால் சேவிக்கத்தக்கவனுகும் ஸ்ரீகிருஷ்ண பரமா
த்மா அன்னைதந்தைகளுக்குத் தொண்டுசெய்வதே சொரூப உச்
சிதமாகும் பகவத்கைங்கரியமென்று அந்த நிஷ்டையுடையவனுகி
அன்னியவிஷயங்களை யறியாமலிருந்த பரமபாகவதனுகும் புண்ட
ரீகனையாதரிப்பதற்கு பண்டறிபுரத்தினில் சன்னிதிசெய்து கடிதட
த்தினில் இரண்டுகரங்களையும் வைத்துக்கொண்டவனுகி பீமாந
தீரத்தினில் செங்கல்லின்மீதுநின்று சாதுஜனங்களைக் கடாட்சித்
துக்கொண்டிருக்கின்ற னம்மகாத்துமன் விகாரரகிதனுகி என்றும்
ஒரேவிதமாகயிருப்பவன் சகலமுஞ் சாதிக்குஞ் சக்தியுடையவன்
தன் பிரகாசத்தினுலே சகலத்தையும் பிரகாசிக்கச்செய்யு மவன்
திறமாகும் ஆனந்தத்துடன் கூடினவன் சஞ்சலமற்றவன் சிலாக்
கியமாகும் வாக்குகளுடையவன் அளவற்ற ஐஸ்வரியமுடையவன்
விரோதியை வதைசெய்யுஞ் சீலன் உன்னிதமாகும் புஜங்களுடை
யவன் சுபங்களாகும் கரங்களுடையவன் சங்கைப்போன்ற கந்த
ரத்துடனும் சிறிது உப்பியிருக்குங் கன்னங்களுடனும் விசால
மாகி உன்னிதமாகி கடுமைபொருந்திய மார்புடனும் சத்துருக்க
ளுக்கு பயமுண்டாக்கத்தக்க திரேகஒளியுடனும் குண்டாகுஞ்
சிரத்துடனும் விசாலமாகும் லலாடத்துடனும் யானையைப்போ

ன்ற கெம்பிரமாகும் நடையுடனும் மிகவுமுன்னிதமும் மெத்தக் குள்ளமுமாகாமல் தொண்ணூற்றியாறங்குலப் பிரமாணத்துடன் கூடிய திரேகத்துடனும் வித்தியாசமாகாமல் சமனுக பகுக்கப்பட்டிருக்கும் அவயவங்களுடனும் தன்னைப்பார்க்கு மவர்களுடைய நேத்திரசித்தங்களை அபகரிக்குஞ் சுந்திரவிக்கிரகத்துடனும் மெத்த ஒளியுடனும் தாமரையிதழைப்போல விசாலமாகி நீண்டதாகிய சிவந்தரேகைகளுடன் கூடியிருக்கும் நேத்திரங்களுடனும் சாமுத்திரிகை சாஸ்திரவிதிப்படி சகலசுபலட்சணங்களுடன் கூடினவனும் சகலதருமங்களை யறிந்தவனும் சொற்சோர்வுபடாதவனும் சகலபிராணிகளுக்கும் மேன்மையேசெய்யுமவனும் சகலமு மறிந்திருப்பவன் மகாபரிசுத்தன் ஆஸ்ரிதர்களுக்கு சுவாதீனமாகியிருப்பவன் தன்னை யடுத்தவர்களை ரட்சிப்பதுமுதலாகும் நல்லகார்யங்களையே யோசிக்குமவன் பிரம்மாதிதேவர்கட்கு முதன்மையானவன் லட்சுமிவிலாசத்துடன் கூடினவன் யாவரையும் ரட்சிப்பதற்கு சமர்த்தன் தன்னடியார்கட்கு விரோதிகளை மாய்த்திடுஞ் சீலன் அவரவர் குணங்களை யோசிக்காமல் சொந்தகாரியமாக யாவரையும் ரட்சிக்குமவன் பாவிகளைத் தண்டனைசெய்து தருமத்தை நிலைநிறுத்துமவன் அடுத்தவர்களைக் கைவிடாதவன் வேதசாஸ்திரத்திலுல் வசிப்பவன் யாவருக்கும் பிரியருகியிருப்பவன் கெம்பிரமான இருதயமுடையவன் மெல்லியமொழியுடையவன் நதிகளிலுலே சேவிக்கப்படுமவனும் வருணராஜனைபோலசாஜனங்களிலுலே சேவிக்கப்பட்டிருப்பவன் யாவருந் தன்னவன் தடையவேணுமென்ற ஆவலுடன்கூடியிருக்குமவன் பட்சபாதமின்றி நியாயத்தை நடத்துமவன் ஓவனிதைகள் ரத்தினமே நாங்களென்னவென்று சொல்லுவோம் இப்போது எங்களாலே சொல்லப்பட்டவைகளும் சொல்லப்படாததுமாகும் சகல நற்குணங்களுடன் கூடினவன் மேலும் உலகதிருஷ்டாந்திரங்களுடன் அம்மகாத்துமாவின் குணங்களைச் சொல்லுகின்றோம் கேளுமம்மாவென்று பின்னுஞ் சொல்லத்தொடங்கினர்கள்.

கேளுமம்மா புனிதவதியே கெம்பீரத்தினில் வருணனுக்கும் தைரியத்தினில் இமவத்பருவதத்திற்கும் சகலத்தையுஞ்சாதிக்குஞ் சக்தியில் விஷ்ணுவுக்கும் பார்க்கப் பார்க்க நூதனமாகும் ஆனந்தத்தைவினவிக்கும் சந்திரனுக்குஞ் அடுத்தவர்களைரட்சிக்கும்பொருட்டு அசுரர்கள்மீதுண்டாகும் கோபத்தினில் பிரளயகாலாக்கினிக்கும் பொருமையில் பூமாதேவிக்கும் சம்பத்தினில் குபேரனுக்கும்

சத்தியத்தினில் தருமதேவனுக்கும் சமமாகியிருக்குமென்று ஆதி
யோடந்தமாகச் சொல்லக்கேட்டு அந்த காஞ்சிபாத்ரியானவள்
பகவத்கல்யாணகுணங்களில் லயித்த மனமுடையவளாகி சாது
ஜனங்களைநோக்கி ஓ புண்ணியசீலர்களே அடியாள்மீது தயை
செய்து சிறிதுநேரமிருங்கள் இதோ வருகிறேனென்றுசொல்லி
அந்த காஞ்சிபாத்ரி தடாலுமென்று வீட்டிற்குட்சென்று அன்னை
யிடம் விடைபெற்று வெளியில்வந்து சாதுக்கள்பின்சென்று பண்
டரிபுரத்தையடைந்து புண்டரீகவரதனைச் சேவித்து அப்பிரமேய
வரதா உன்னுடைய கீர்த்தியைச் சாதுக்களாலே கேட்டு நினது
தரிசன அபேட்சையினால் வந்தேன் அடியாள் செவியாற் கேள்
விப்பட்ட சகல லட்சணங்களும் மூர்த்தீகரித்திருக்கும் நினது
திவ்யமங்களவிக்கிரகத்தைச் சேவித்தமாத்திரத்தில் என்னுடைய
ஹிருதயமென்னும் சாதகப்பறவை மேகஸ்யாமமாகும் நினது
திவ்யமங்கள விக்ரகசேவையி லயித்து மனமானது அன்னியவிஷ
யங்களை நீக்கியிருக்கின்றது பூமரர்களாகி இதரதேவதைகளை
கெதியென்று நாடுமவர்களுக்கு எட்டிமாமாகியும் உன்னையன்னியி
லன்னியதெய்வங்களைத் தொழாத திறமதியுடையவர்களுக்குக் கற்
பகமரமாகியிருக்கு மவனுதலால் அடியாளுடைய தோஷங்களை
மனதிலெண்ணுமல் இவ்வேழையை அங்கீகரித்துக்கொள்ளும்
கடற்கரையினில் விபீஷணருக்கும் உபயசேனைகள் நடுவினில் அர்ச்
சுனனுக்கும் கிருபாகடாட்சம்பண்ணின அபயப்பிரதானத்தை
நினைத்துச் சரணுகெதியடைந்த அடியாளைக் கைசோரவிடவேண்
டாம் தேவரீர் அடியாளைக் கைவிட்டபோதிலும் மந்தாரை மக
ரந்தமெனு மதுரத்தைப் புசிக்கும் வண்டானது அதைவிட்டு வே
றொன்றைப் புசிக்க இச்சைகொள்ளாது அதுபோல அடியாள்
அமிர்தத்திற் கிருப்பிடமாகுந் தேவரீருடைய திருப்பாதகமலங்
களை நீக்கி அன்னியங்களையடைய மனந் தளரமாட்டேன் அஜா
மீளாதிகளுடைய அபராதங்களையெண்ணுமல் ரட்சித்து கீர்த்திப்
பெற்ற தேவரீர் அடியாளை யிப்போது பேக்ஷைசெய்து அபகீர்த்
திக் குடன்படவேண்டாம் ஆபத்பந்துவாரு மூன்னை அடியாளை
ரட்சிக்கும்பொருட்டு யான் பிரார்த்தனை செய்வது பசியினால் பால்
குடிக்கவேண்டிச் சிசுவானது தாயை வேண்டிக்கொள்வதற்கு நிக
ராயிருக்கின்றது சகல அண்டங்களையும் ஜாக்கிரதையுள்ளவனை
ரட்சிக்கும் நினக்கு ஒரு ஆத்துமாவினுடைய ரட்சணம் பாரமா
காது என்று பற்பலவாறு வேண்டி தன்னுடைய ஆத்துமபாரத்

தை புண்டரீகவரதனது திருவடித்தாமரைகளுக் கர்ப்பணஞ்செ
ய்து பாண்டுரங்களே இடைவிடாது சேவித்துக்கொண்டு அவரது
நாமங்களேத் துதிக்கும் பாகவதர்கள் செய்யும் பகவன்ணமசங்கீர்
த்தனே கோலாகலத்திற் கானந்தித்தும் கோபுரதுவாரத்தினில்
வசித்து சதா பகவத்தியானஞ் செய்துக்கொண்டிருந்தனள்.

இப்படிக்கிருக்கையில் அத்தேசத்தையாளும் அரசன் காளே
பாத்ரியின் சுந்தரரூபத்தைப் பலரால் கேட்டு தனக்குப்பிரியரா
கும் தூதர்களேயழைத்து நீங்கள் பண்டரிபுரத்திற்குச்சென்று
பாண்டுரங்கனது கோபுரவாசலில்வசிக்கும் காளேபாத்ரியெனுங்
கணிகைமாதை என்னிடத்தில் அதிகப்பிரியமும் காமமும் உண்
டாகும்படி யோசித்து உங்கள் புத்திக்கெட்டினமட்டும் அம்மா
தை கிலாக்கித்து உடனழைத்து வாருங்களென்று நேமித்து அனு
ப்பினன் அவர்களும் அந்தப்படி பண்டரிபுரத்திற்குவந்து காளே
பாத்ரியைக்கண்டு தங்களரசன்கருத்தைத் தெரியப்படுத்தினர்கள்
அப்போதந்தச் சுந்தரவனிதை அவர்களேநோக்கி ஓ சேவகர்களே
உங்களரசன் நேமனத்தின்படி நீங்களென்னே யழைத்துக்கொண்
டேபோக வந்ததற்கு யான் மெத்த சந்தோஷித்தேன் இங்கு சிறிது
நேரம் நில்லுங்கள் ஆலயத்திற்குட்போய் பாண்டுரங்களே தெரிச
னஞ்செய்து உங்கள்பின் தொடர்ந்துவருகிறேனென்றுசொல்லி சன்
னிதிக்குட்புகுந்து பகவான் வலதுபக்கத்தில்நின்று ஓ ஆபத்பந்து
வே என்பிராணநாதனே நினக்கு அடியாளாகு மென்னே ஒரு
ராஜன் ஆசிக்க நியாயமோ மூழுதேங்காய் நாய்க்கெட்டுமோ இந்
தச்சமயத்தில் தேவரீர் என்னே யுபேட்சைசெய்யாமல் ரட்சிக்க
வேணுமென்று வேண்டிக்கொள்ள ஆலயத்திலுள்ள அர்ச்சகர்க
ளும் சாதுக்களும் பார்த்துக்கொண்டிருக்கும்போதே யம்மாதின்
சரீரத்திலிருந்து ஒரு திவ்யசோதி வெளிப்பட்டு பண்டரிநாதனது
திவ்யமங்கள விக்ரகத்தினில் பிரவேசித்தது பின்பு பகவான் நேம
னத்தின்படி அப் புண்ணியவதியின் தேகத்தை ஆலயப்பிரதட்ச
ணப் பிரகாரத்தில் அடக்கஞ் செய்தார்கள் அந்தத் திவ்ய சரீரமா
னது பகவான் செயலினல் ஒரு மரமாயிற்று அம்மரம் இப்போ
துஞ் செழித்துந் தழைத்து மிருக்கின்றது அந்த க்ஷேத்திரத்திற்
குச் செல்லுமவர்கள் அம்மரத்தைக் கௌரவித்து காளேபாத்ரி
யைத் துதித்து அப்பத்திரத்தைச் சிரசினில் தரித்துக்கொள்ளு
வார்கள்.

அங்கே யப்படிக்கிருக்க இங்கே கோபுரவாசலில்காத்திருந்த ராஜதூதர்கள் சிறிதுநேரம் காணுபாத்ரி வரவுக் கெதிர்பார்த்திருந்தும் வராமையால் உடனே யுட்புகுந்து அங்கு நடந்த வரலாற்றைக்கேட்டு களிப்படையாமல் காணுபாத்ரியின்மீது மெத்த மோகாந்தகாரர்களாகி அம்மாதை நீங்க ளெங்கே யொளித்து வைத்துப் பொய்சொல்லுகின்றீர்களென்று அங்குள்ள அர்ச்சகர்கள்மீது கோபித்து அதட்டி மிரட்டிட அவர்கள் நாங்கள் எந்தப் பாபமும் அறியோமென்று பலதடவை உண்மைசொல்லியும் அவர்களைப் பிணைத்துக்கட்டி அரசனிடத்திற் கழைத்துப்போய் நடந்த விர்த்தாந்தமியாவையும் அரசனுக்கு விண்ணப்பஞ்செய்தார்கள். அரசனும் அத்தூதர்கள் சொற்களுக் குடன்பட்டு அர்ச்சகர்களை உதாசனமாகப் பேசி அவர்கள் கொடுத்த பகவத்பிரசாதத்தைப் பார்க்கையில் அது ரோமத்துடனு மிருந்தது அரசன் அர்ச்சகர்களைநோக்கி நமது பண்டரிநாதனுக்குஞ் சிகையுண்டாவென்று கேட்க அர்ச்சகர்கள் பயந்தவர்களாகி முன்பின் யோசிக்காமல் உண்டென்று சொன்னார்கள் அப்போது சிந்தைப்பட்டு நான் பண்டரிபுரத்திற்குவந்து பண்டரிநாதனுக்கும் திவ்யமங்கள விக்ரகத்தைப் பரிட்சைசெய்து அவருக்குச் சிகையிருக்கும் பட்சத்தில் உங்களை விசுவாசித்து மெத்தவுங் கௌரவப் படுத்துவேன் இல்லாத பட்சத்தில் கொடூரதண்டனைக் குட்படுத்துவேனென்று சொல்லி அவர்களுடன் பண்டரிபுரத்திற்குவந்து பகவானுடைய சிரசைபரிசோதிக்கையில் சரணாகதியென்ற சாதுக்களை ஆதரிக்கும் ஜெகந்நாதன் தன்னைத் தினந்தோறும் பயபக்தியுட னர்ச்சிக்கும் அர்ச்சகர்கள் சொற்களை உண்மைசெய்யக்கோரி பெருத்தகுடுமியுடைய வனுகி சேவையளித்து தன்னுடைய வாற்சல்லிய குணத்தை வெளிப்படுத்தினர் அதைக்கண்டு அரசன் பயபக்தி யுடையவனுகி ஸ்ரீ பாண்டுரங்கனுக்கும் அர்ச்சகர்களுக்கும் வந்தனஞ்செய்து அபராதக்ஷமைசெய்துக்கொண்டு காணுபாத்ரியை அடக்கஞ்செய்திருக்கு மிடத்திற்குவந்து அம்மங்கையின் திரேகம் வேறுருபமாகும் மரத்திற்கு வலம்புரி நமஸ்காரங்கள்செய்து அம்மரத்தின் பத்திரங்களைச் சிரசாகவகித்து அவ்விடத்திய சாதுக்களை யாராதித்துத் தன் அரண்மனையைச் சேர்ந்தனன்.

காணுபாத்ரி கற்பின் மகத்துவம்

முற்றிற்று.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

ஜனபாயி கற்பின் மகத்துவம்.

(2) ஓராஞருவருடம் ஆஷாடகார்த்திகைமாதத்தினில் ஏகாதசி வுற்சவத்தைச் சேவிக்க வெகுஜனங்கள் பண்டரிபுரத்திற்கு வந்து பண்டரிநாதனைச் சேவித்து பாகவதர்கள் கோலாகலத்தைக் கண்களாற்பார்த்து ஆனந்தித்து அவரவர்கள் ஊருக்குப் போகுப் போது அதிலொரு பாலிகை பகவான் சன்னிதானத்தின் முன்னின்று பர்கவதர்களுடைய பக்திபரவசத்தைக்கண்டு அவ்வானந்தத்திலில் மனது லயித்து ஸ்தம்பிதமாகியிருந்தனள் அதைதாயார் முதலாகும்பந்துக்கள் கண்டும் அந்த பாலிகையைத் தங்களுடன் ஊருக்கு வரச்சொல்லி எவ்வளவு சந்தோஷவார்த்தைகளைச் சொல்லியபோதிலும் அப்பாலிகைசம்மதிக்காமல் நான் இந்தப் பண்டரிகூஷ்த்திரத்தினில் வசித்துப் புண்டரீகவரதனையும் அவரது அடியார்களையுஞ் சேவித்துக்கொண்டிருக்கிறேன் நீங்கள் என் சிந்தனையைவிட்டு ஊருக்குப்போங்களென்று சொல்லவே அவர்களுக்கன்னிகையை விடுவிட்டுப்போயினர்கள் அவர்களுடைய விவாதத்தைக் கேட்டிருந்த அடியார்கள் மிகவு மாச்சரியப்பட்டு இந்த பாலிகைக் கித்தனை விரைவினில் ஞானபக்தி வைராக்கியங்கள் பரிபாகமாவதற்குக் காரணந் தெரியவில்லை ஸ்ரீபண்டரிநாதன் அபிமானித்தார்போ லிருக்கிறது (அன்யஜன்மனிஸ்வாத்மா விஷ்ணு ரப்யர்ச்சிதோயயா) என்னுமாப்போல இந்தப்பாலிகை சர்வசரீரியாகும் விஷ்ணுவைப் பூர்வஜென்மத்தினில் நன்முயாராதித்திருப்பாளென்று கொண்டாடினர்கள். பின்பு அந்தப் பாலிகை பகவான் சன்னிதியில் உட்கார்ந்து பாண்டுரங்கனைத் துதிசெய்துக் கொண்டிருக்க நாமதேவர்பார்த்துக் கருணித்து நீயேன் அன்னை தந்தையர்களைவிடுத்து ஒண்டியாயிருக்கின்றாய் நின்பேரென்னவென்று வினவ அக்கன்னிகை என்பெயர் ஜனபாயி என் தந்தை பண்டரிநாதன் தாய் ஸ்ரீருக்மணிதேவி பகவத்பக்தர்கள் என் பந்துக்களென்று சொல்லி மௌனமாகயிருந்தனள். நாமதேவர் அம்மொழிகளைக்கேட்டு மெத்தசந்தோஷித்து ஓ ஜனபாயி நீ எங்கள்வீட்டிற்குவந்து பகவத்தியானஞ் செய்துக்கொண்டிருமென்று சொல்லி அப்பாலிகையின் கையைப்பிடித்து அழைத்துக் கொண்டுபோய் தன் அன்னையாகும் குணபாயியைநோக்கி ஓ அன்னையே இச்சிறுவள்பண்டரிநாதனிடத்தில் பக்தியினுலே அன்னைதந்தை முதலா

சூம்பந்துவர்க்கங்களைநீக்கி இங்கு நின்றனள் ஆகையால் நம்முடன் வசித்து பகவன்னாமசங்கீர்த்தனைகள் செய்துக்கொண் டிருக்கட்டு மென்று சொல்லி பின்னும் இக்கன்னிகை முன்னம் ஸ்ரீகிருஷ்ண வதார காலத்தில் கம்சன் அனுப்புதலால் பரமபாகவதராகும் அக்ரூரன் தனுர் யாகத்திற்காக பகவானை பலபத்திரருடன் மதுரைக்கு அழைத்துக்கொண்டு வருகையில் ராஜவீதியில் கம்சனுக்குச் சந்தனமெடுத்துக்கொண்டு போய்க்கொண்டிருந்த ஏகவக்றையெனும் சூப்ஜையைநோக்கி பகவான் (சுகந்தமேதத்ராஜார்ஹம் நம்ருசிராநனே அவயோர்க்காதீரஸத்ருதம் தீயதாமனுலேபனம்) என்று கேட்டு யம்மாதினுல் திரேகத்தினில் சந்தணம் பூசப்பட்டு அம்மாதின் விகாரத்தைப்போக்கி அம்மங்கை கோரியபடி அந்நாள் அம்மாதைக்கூடி அவ்வனிதை கர்ப்பத்தினில் உபசுலோகனெனும் பரமபாகவதரை அவதரிக்கும்படி கிருபைசெய்திடஅப் பரமபாகவதர் நாரதருக்குச் சீடராகி உலகயுஜ்ஜீவனத்திற்காகச் சாத்விகதந்திரமெனும் கிரந்தத்தைச் செய்தனர். அந்த ஏகவக்கிரை யிப்போது பாண்டுரங்கனது கிருபையினுல் ஜனபாயியாகி அவதரித்து அனவரதமூம் நிராமயமாகும் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் திருவடித்தாமரையினிலுள்ள அமிர்தத்தைப் பானஞ்செய்துக்கொண்டிருக்கின்றனள் என் பாக்கியவிசேஷத்தினுலே இந்த உத்தமியுடன் நேசஞ்செய்திருக்கப் பிராப்தமாயிற்று என்று புராதன விருத்தாந்தத்தைச் சொல்லி யானந்தித்திக் கொண்டிருந்தனர்.

பின்பு அந்த ஜனபாயி நாமதேவர் வீட்டினில் நாளுக்குநாள் வளர்ந்து வீட்டுவேலைகளைச்செய்தும் சதா பகவத்தியான பராயணளாகியிருந்தனள் யாராகிலும் நீ யாரென்று வினவினுல் நான் நாமதேவர்வீட்டு வேலைக்காரியாகும் இந்த மகானுபாவரே எனக்குத்தந்தை அவரன்றி எனக்கு வேறொருவரு மில்லையென்று சொல்லிக்கொண்டிருந்தனள். இப்படிக்கிருக்கிறபோது ஒருநாள் நாமதேவர் தன்வீட்டில் படுத்துக்கொண்டிருக்கையில் நடுராத்திரியில் காற்று மழை யடித்துக்கொண்டிருக்க அதனுல் அந்த வீட்டின் மேல்கூறை ஆகாயத்தி லெகிரிப்போயிற்று அப்போது ருக்குமணி நாயகன் சுதர்சன மென்னும் தன் சக்கரத்தைநோக்கி ஓ சக்கரத்தாழ்வானே நீ விரைவாகச்சென்று நாமதேவர்வீட்டு மேற்கூறையை எப்போதும்போல மூடி அந்த வீட்டில் ஒரு மழைத்துளியாகிலும்விழாமலிருக்கும்படி செய்யும் நானுமிதோ உன்னைப்பின் தொடர்ந்து வருகின்றேனென்று நேமித்திட சுதர்சனழ்வானும்

அந்தப்படியே செய்தார் உடனே பாண்டுரங்கன்வந்து விழுந்து போன சுவர்களைப்பார்த்து தன்கையினால் மண்ணைக்கூட்டி எப் போதும்போல சுவர்களைவைத்து பகவான்சர்வசக்தனுகி சத்திய சங்கல்பனுகி யிருந்தபோதிலும் தன்னையடுத்தவர்களுக்கு மோட்ச விரோதியாகும் சம்பத்துசுகங்களைக் குறையுபடுத்துவார் (யாகி தோபிஸதாபக்தை ர்னுஹிதம்காரயேந்தரி பாலமக்னௌபதம் தம்து மர்தாகிம்நவிவாரயேத் என்றபடி நெருப்பினில்விழ அபே ட்சிக்கும் சிசுவை அன்னை நீக்கிவிடுவதைப்போல தன் பக்தர்கள் உலகசுகங்களை யபேட்சித்தபோதிலும் பக்தப்பிரியனுகும்பகவான் இவன் அபேட்சையை அனுகூலப்படுத்த மாட்டானென்றுல் அபேட்சையற்றவனுகும் நாமதேவனுக்கு கிருஹக்ஷேத்திராதி உலகசுகங்களை அளிக்கவில்லையென்பது சித்திரமல்ல மேலும் (ஹரிர்த்துக்கானிபக்தேப்யோ ஹீதபுத்தி யாகரோதிவை சஸ்த்ர க்ஷாராக்னிசர்மாணிஸ்வபுத்ராயயதாபிதா) என்பதுபோல நன் மார்க்கத்திலேயே பிரியங்கொண்டவனுகும் தந்தை புதல்வன்சுகத் துக்காக புண்ணையறுத்துக் காரம்வைப்பதுபோல சர்வேஸ்வரன் உண்மையான பக்தர்களுக்கு வைராக்கியமுண்டாவதற்காக துக் கங்களை யுண்டாக்கிக்கொண் டிருப்பவன் ஆகையால் பகவத் பக் தர்களுக்கு உலகமானது கஷ்டமாகி அனேகவிதங்களாகும் ஆபத் துக்க ளுண்டாக்கிக் கொண்டிருக்கும் ஆகையால் பகவான் இவ் வண்ணஞ் சுவர்களைவைத்து கீழேவிழுந்திருந்த செத்தையைத்தூர மாக எடுத்துப்போய்விழ வெறிந்துக்கொண்டிருக்கையில் இதற் குள்வைகறை காலமாகியதால் நாமதேவர் வெளியில்வந்து பகவா னைப்பார்த்து வந்தனந்தந்து இது என்னவேஷம் இவ்விடத்தி லென்னசெய்துக்கொண் டிருக்கிறீரென்று வினவ வாசுதேவர் நாம தேவரை அனுக்கிரகம்புரிந்து ஓ நாமதேவரே காற்றுமழையி னுல்வீட்டிற்கு அபாயமுண்டாயிற்று நீயோ சம்சாரகாரியங்க ளைச் சிறிதேனும் கவனிக்காமல் சதா என்னைத் துதிசெய்துக் கொண்டிருப்பதால் நின் அன்னையாகும் குணபாயி நிஷ்டூரங்கள் பேசுவாளென்று நான் நடுராத்திரியில்வந்து நினவீட்டை எப்போ தும்போலிருக்கும்படி கட்டிவைத்தேன் என்று சொல்லிக்கொண் டிருக்கக் குணபாயி ஓட்டமாயோடிவந்து பகவானுக்கு வந்தனஞ் செய்தவள் பகவானை நாமதேவருடன் சல்லாபஞ்செய்துக்கொ ண்டே நாமதேவருடைய வீட்டிற்குள் பிரவேசித்து களிப்புடன் உட்கார்ந்திருந்தனர்.

அப்போது ஜனபாயி விரைந்தோடிவந்து பகவானுடையதிரு வடித்தாமரைகளில்வீழ்ந்து தெண்டனிட்டெழுந்து பகவானுக்கு ஆயாசமுண்டாயிற்றென்று அவருடைய சரீரத்தை மெதுவாகப் பிடித்துக்கொண்டவண்ணங் கிருபாநிதியே கருணைக்கடலே எங்களை ரட்சிப்பதற்காக நின்சரீரத்திற்குக் கஷ்டமுண்டாக்கிக்கொண்டீரென்று சொல்லிக்கொண்டிருக்கையில் நாமதேவர் ஓ சுவாமி தங்கள் சரீரத்திற்கு ஆயாசமிகவாயிருப்பதினால் எழுந்து சுடுகையானஜலத்தில் ஸ்நானஞ்செய்து புசிக்கவாருமென்று வேண்டிக்கொண்டார் அக்குறிப்புணர்ந்து குணபாயி பகவானுக்கு ஸ்நானத்திற்காக உஷ்ணதீர்த்தங்கொடுத்து ஸ்நானானுஷ்டான மாயினவுடன் போஜனத்திற்காக ஸ்தலசுத்திசெய்து இலைகளைப்போட்டனள் அப்போது கோவிந்தன் விட்டலன் நாராயணன் மாதவனென்னும் பேருடைய நாமதேவர் புதல்வர்கள் நால்வருடன் பகவானுமொரு பந்தியாக உட்கார்ந்தார் குணபாயியும் நாமதேவரும் ஒருபக்கத்தில் உட்கார்ந்தார்கள் பகவான் நேமித்ததினால் அந்த நேமனத்தைத் தடுக்கக்கூடாதென்று மனவாளன் அனுமதியையடைந்து ராதாபாயியும் தாளைருமூலையில் உட்கார்ந்தாள் இப்படியாவரும் உட்காரலே ஜனபாயிபரிமாறியவண்ணம் தன்மனதில் என்னமாத்திரம் விடித்து யாவரு முட்கார்ந்துப் புசிப்பது ரசபங்கமென்று நினைத்தனள் அதையறிந்து பகவான் கொஞ்சம் புசித்து எனக்கு அன்னம் ருசிக்கவில்லையென நாமதேவர் ஓ பக்தவச்சலா! அதுஉண்மையே எப்படியென்றால் ஜனபாயி இந்தபந்தியிலில்லாமையால் உமக்கு ஆகாரம் ருசிக்கவில்லையென்றார் பின்பு பகவான் புசிக்காமல் பிரசாதத்தைக் கையில்வைத்துக்கொண்டு சிறிதுநேரம்உட்கார்ந்து மற்றவர்கள் புசித்தானபின்பு யாவருமெழுந்து கைகால்களைச் சுத்திசெய்து சுகமாக வீற்றிருந்தார்கள். அந்தச் சமயத்தில் பகவானுக்கு ஜனபாயினிடத்தில் உண்டாயிருக்கும் அதிக பிரியத்திற்கு ராதாபாயியும் குணபாயியும் ஆச்சரியப்பட்டார்கள் அதில் குணபாயி பகவான் கையிலிருந்த சேஷானனத்தைத் தான் வாங்கி ஜனபாயிக்குக்கொடுத்து இதுபிரமாதிகளுக்குங் கிடைப்பது அரிது நாமதேவர் நேசத்தினால் உனக்குக் கிடைத்ததென்று சொல்லினள். அதற்கு ஜனபாயி சந்தோஷசாகரத்தில் மூழ்கினவளாகி நாம் இந்தப் பிரசாதத்தைப் பிறகு புசிப்போமென்று அந்த மகாப்பிரசாதத்தை பத்திரம்செய்துவைத்தனள் பின்பு அந்தராத்திரி நாமதேவரும் பகவானும் ஒருபடுக்கை

யில் படுத்திருக்க நாமதேவர் நித்திரைபோனபின்பு பகவான் ஒசைப்படாம லெழுந்து ஜனபாயினிடத்திற்குவந்து ஒ சிறுபெண் ணே எனக்கு பசியாயிருக்கின்றது நாமதேவருடன் புசிக்கும்போ து நீ ரசபங்கமென்று நினைத்ததினால் எனக்கு அன்னம் ருசிக்கா தாயிற்று இப்போது நீ என்பசியைத் தீர்க்கவேணுமென்றனர் ஜனபாயி ஒலக்குமிநாயகரே தேவரீருடைய கிருபைக்குச்சமமாக நான் கொடுக்கத்தகுந்த பதார்த்த மெதுவுமில்லை எனது ஆத்து மாவை யளிக்கின்றேன் அங்கீகாரஞ்செய்யும் அன்றியும் இப்போ து அகாலமாகையால் புசிக்கத்தக்க வஸ்துக்க ளெதுவுமில்லைதேவ ரீர் புசித்த சேஷத்தை குணபாயி எனக் களித்தனள் அதை யுமக் கீவதற்கு வெட்கமுற் றிருக்கின்றேன் என்று சொல்லிய ஜனபாயி யின் மதுரமொழிகளுக்குப் பண்டரிநாதன் களித்து ஒ ஜனபாயி நீ ஈண முறவேண்டாம் நான் புசித்த செஷத்தை எடுத்துவாவெ ன்றுசொல்ல ஜனபாயி மகாப்பிரசாதமென்று அதனைக் கொண்டு வந்து பகவானுக்கெதிரில் வைத்தனள் உடனே பகவான் ஜன பாயியை தன்னுடன் உட்காரவைத்துக்கொண்டு இருவருமாகப் புசித்தார்கள் அதைப்பார்த்து ருக்மணிதேவி வேதபுருடனுக்கும் அறிவதற்கரியவராகும் பகவான் இந்த ஜனபாயியுடன் ஏகபாத்தி ரத்தில் புசித்துக்கொண்டிருக்கிறார்களென்று ஆச்சரியப்பட்டனள் இவ்வாறு அதிசயப்படும்படியாக இருவரும்புசித்து கையலம்பிக் கொண்டு சயனித்தார்கள் அதைக் குணபாயி இவையாவும் பார்த் துக்கொண்டிருந்து ஒசைப்படாமல் நடந்து நாமதேவரிடத்திற்கு வந்து இந்த விருத்தாந்தம் யாவற்றையும் அவருடன் சொல்லிட அவர் ஒ அன்னையே இது விந்தையல்ல பகவான் பக்தப்பிரியனல் லவா அப்பகவான் இராமாவதாரகாலத்தினில் சபரி எச்சலைப் புசிக்க வில்லையாவென்று சொல்லிக்கேட்டு அதிசயித்து குணபாயி தன்னிருப்பிடஞ் சேர்ந்தனள்.

அப்போது புருஷோத்தமனுகிய பகவான் ஜனபாயி நித்திரை செய்தபிறகு எப்போதும்போல நாமதேவ ரருகிற்சென்று சய னித்தார் மறுபடியும் நான்காஞ்சாமத்தினிலெழுந்து ஜனபாயினிட த்திற்குவந்து கைதட்டியும் அம்மங்கைக்கு அதிகநித்திரையினல் மௌனமாகயிருந்தனள் அதைக்கண்டு பகவான் அம்மாதைத்தன் கைகளாலெடுத்து உட்காரவைத்து தன் பீதாம்பரத்தினல் முகத் தைத்துடைத்து ஒ ஜனபாயி நீ மாவரைக்கும்போது நானு முன் னுட னரைத்து களிப்படைய வேணுமென்று அபேட்சித்துவந்

தேன் என்றவுடனே ஜனபாயி யந்திரக்கற்களைச் சந்தித்து தானிய மெடுத்துவந்து வைக்கவே பகவான் ஒ மங்கைகட்கரசே நீ யந்திரத்தின்கொம்பைக் கையிற்பிடித்துக்கொண்டு பாடிப்புகழ்ந்துக் கொண்டிரும் நானுன்பாட்டைக் கேட்டவண்ணம் மாவரைக்கிறேனென்று சொல்ல அம்மாது அந்தப்படியே யந்திரத்தின் கொம்பைப் பிடித்தவண்ணம் பாடிக்கொண்டிருக்கப் பகவான் மாவரைத்திருந்தனர் அப்போது பகவானெதிரில் ஜனபாயி பாடின கீர்த்தனைகளின் தாத்பரிய மென்னவெனில், திவர்த்தி தேவர் ஞானதேவர் ஸோபானதேவர் இம்மூவரும் எனக்கு ஆப்தபந்துக்கள் அவர்கள் பிரசாதத்தினால் சாரங்கபாணி என்மீது கிருபை செய்தனர் நாமதேவர் என்தந்தை ராதாபாயி என்பிரியமானதாய் கபீர் சாமந்தர்முதலானவர்கள் என்சகோதரர்கள் அவர்கள் செய்த அதிசயத்தை நான் என்னென்றுசொல்லுவேன் அவர்கள் பக்திசெய்து சக்கரபாணியைச் சுவாதீனஞ் செய்துக்கொண்டு அனேகமான அற்புதங்களை யுண்டாகச்செய்து சுகானந்தத்தினில் பரிபூர்ணர்களாகியிருக்கின்றார்கள் பைட்னிபுரத்தினில்பிராமணர்கள் ஞானேஸ்வரை அவமானமாகப் பேசியபோது அவர் மஹிஷத்தின் வாக்கினால் நான்குவேதங்களையும் சொல்லிவைத்தனர் கோராகும்பார் பாண்டுரங்கனைத் துதித்தவண்ணம் தன்பிள்ளையை மண்ணுடன்பிசித்து பகவானுடைய ஆணையைத் தவறினேனென்று தன்கைகளை வெட்டிக்கொண்டனர் பின்பு நாமதேவர் கீர்த்தனைகளைக் கேட்டுக்கொண்டிருக்க அக்கைகள் எப்போதும்போல மூளைத்தது மரணமடைந்தபிள்ளையைப் பாண்டுரங்கன் கொண்டு வந்துகொடுத்தனர் மேலும் இதென்னவாச்சரியம் தோட்டக்காரன் கும்சாவந்தியாமாலியைப் பாண்டுரங்கன் பார்க்கப்போனயிடத்தில் அவன் தன் மார்பைப்பிளந்து பகவானைத் தன் ஹிருதயத்தினில் வைத்துக்கொண்டனன் அனந்தகோடிபிரம்மாண்டங்களைத் தன் குக்ஷியில் வைத்துக்கொண்டிருக்கும் பகவான் சந்தோஷத்துடன் சாவந்தியாமாலி ஹிருதயத்தினில் ஒளித்துக்கொண்டார் அப்படி யொளித்துக்கொண்டவனை உடனே நாமதேவர் வந்து வெளிப்படுத்தினர் அன்றியும் எனதிஷ்ட பந்துவாகும்கபீர் காசிதேசத்தில் தூணிகள் நெய்யும்போது பகவானைத் துதிசெய்தபடியே தன்னை மறந்திருக்கக் கோதண்டபாணிவந்துட்கார்ந்து அந்தத்தூணிகளைநெய்தனர் மேலும் சிவராத்திரியினில் மிழக்குமுகமாகியிருந்த நாகனாதசுவாமி நாமதேவர்கீர்த்தனைகளைக் கேட்

பதற்காக தன்னுலயத்துடன் மேற்குமுகமாகத் திரும்பியிருந்தனர் அப்படி நாமதேவர் கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டிருக்க ஒன்பதுலட்சம்பேர்கள் கரங்குவித்தபடி ஆகாயத்திலிருந்து பூமிக்கிறங்கினார்கள் கணக்கிடுவதற்கு முடியாததாகும் இந்த அற்புதங்களுக்குக் காரணமிப்போது என்னுடன் உட்கார்ந்து மாவறைத்துக்கொண்டிருப்பவர் இவர்மகிமையைப் புகழுவதற்கு வேதசாஸ்திரங்கட்கும் சாத்திரமாகமாட்டாதென்பதே இந்த தாத்பரியத்துடன்கூடிய கீர்த்தனைகளை ஜனபாயி பாடிக்கொண்டிருக்கையில் பகவான் செவிக்கானந்தமாகக் கேட்டபடியே மாவறைத்துக் கொண்டிருந்தனர்.

இவ்வண்ணம் ஜனபாயி யந்திரத்தினச்சைப் பிடித்தபடியே பாடிக்கொண்டிருக்க பகவான் அப்பாடல்களைக் கேட்டவண்ணம் மாவறைத்துக்கொண் டிருக்கும்போது குணபாபி இந்த யந்திர ஓசையைக்கேட்டு படுக்கையிலிருந்தபடி ஓ ஜனபாயி உன்னுடன் மாவரைப்பவர் யாரென்றுவினவ அதற்கு ஜனபாயி ஒன்றும் பேசாமல் மௌனமாகவிருந்தனள். அப்போது குணபாயி மாவறைப்பதற்கு ஒரு கூலிக்காரியை வைத்துக்கொண்டாயா என்ன இவ்விருட்டினில் கூலிக்குவந்த பெண் யாவளென்று கோபத்துடன்கேட்க அதற்கு பகவான் மாவறைத்துக்கொண்டிருக்கும் என்பேர் கிருஷ்ணபாயி நான் கூலிக்குவரவில்லை பாடல்கள் கேட்பதற்கு வந்துமாவறைத்துக்கொண் டிருக்கின்றேனென்று சொல்லினர் அப்போதந்த நாமதேவர் அன்னையினிடத்திற்கு ஓடோடியும்வந்து ஓ அம்மணி இப்போது பேசினவர் திரிலோகத்தையும் ரட்சிக்கும் மணியாகும் கோபாலசூடாமணி யல்லவா உனக்குத் தெரியவில்லையா அந்த மகாத்துமனைக் கடினமாகப் பேசத்தகுமோவென்று சொல்லவே குணபாயி நாணமடைந்து வீட்டிற்குட் பிரவேசித்து ஜனபாயி முகமும் பாக்கியவதி இதுமெத்த அற்புதம் ஸ்ரீருக்மணியின் குசங்களிரண்டையும் பூஷணமாகக்கருதும் மணிபாகிய சுந்திரமுத்திரைமணியை இந்த ஜனபாபி இவ்வளவு சுவாதீனஞ் செம்துகொண் டிருக்கின்றாளல்லவா இதை யறியாமல் அவிவேகத்தினல் விபரீதஞ்செய்தேனே பிரம்மாதிகட்கும் அதிப்பதற்குச் சாத்தியப்படாதவனை கடினமாகப் பேசினேன் ஆஹா இப்படிபகவானுக்கு அந்தரங்கபக்தி செலுத்துமவளாகும் ஜனபாயிக்கு மபராதஞ்செய்த எனக்கு எத்தனை கொடுமைதண்டனை விதித்தபோதிலும் தகுமென்று துயரப்பட்டுக்கொண்டிருந்தனள்

இதற்குள் பகவான் மாவனைத்தையும் அறைத்து மேலுங் கொஞ்சம் இரவாகயிருந்தபடியால் ஜனபாயியுடன் பேசிக்கொண்டிருந்து சிறிது நேரத்தில் நித்திரைசெய்தனர் பின்னர் சூரியோதயமானதினல் அந்த ஜனபாயி (உத்திஷ்டநரசார்த்தூல கர்த்தவ்யம்தைவ மாஃனிகம்) என்று கைதட்டி ஓ சுவாமி சந்நிதியில் உன்னை அர்ச்சனைசெய்வதற்கும் தெரிசனஞ் செய்வதற்கும் அனேகபக்தர்கள் வந்து கார்த்திருப்பார்களென்று சொல்லப் பகவான்எழுந்திருந்து ஜனபாயினிடத்தில் தனக்குண்டாகிய ஆதராதிசயத்தை யாவருக்கும் தெரியச்செய்யவேணுமென்று நினைத்து பீதாம்பரத்துடன் திவ்யாபரணங்களை அங்கேவைத்து ஜனபாயினுடைய கந்தைத் துணியை போர்த்துக்கொண்டு சந்நிதிக்குவந்தனர் அர்ச்சகர்கள் அப்போது கதவைத்திறந்து உள்ளே பிரவேசித்துப்பார்க்கையில் பாண்டுரங்கன் கந்தைத்துணியைப் போர்த்துக்கொண்டிருந்தனர் அதைப்பார்த்து சிலபேர்கள் தேவாதிதேவனுக்கு மூனக்கு இந்த கந்தைத்துணி தகுமோவென்று கேட்டனர்கள் சிலமர்மிகள் மூன்னம் ராமாவதாரத்தில் கூனியும் கிருஷ்ணவதாரத்தில் சபரியுமிருந்தனர்கள் இப்போ! திக்கலியுலகத்தில் பாண்டுரங்காவதாரத்திலும் எவளோ ஒருபெண் பகவானுக்கு மெத்தப்பிரிய அந்த ரங்கபக்தியுடையவளாகியிருக்கவேணும் அவளிடத்தில் தனக்குண்டாயிருக்கும் பிரியத்தை வெளிப்படுத்துவதற்காக அம்மாது தரித்திருந்த கந்தைத்துணியை நமது பிராணநாதன் போர்த்திக்கொண்டு வந்தனரென்று அர்ச்சகர்கள் அந்த கந்தைத்துணிபோர்வையை யெடுத்துப்பார்க்கையில் ஆபரணங்களில்லாமற்போக அதைக்கண்டு அர்ச்சகர்முதலானோர்கள் நமதுசுவாமி பிரியத்துடன் பிடியவுலக் கொடுக்குமவர்களுக்குத் தன்னுடைய சசல சொத்துக்களையு மீவார் அபோல இப்போது தன் சிந்தனைமாறுக பக்தியோகமுடையவளாகும் ஒரு பாக்கியவதியினுடைய பக்தியெனும் வலையிற்சிக்கி இந்தப் பக்தப்பிரியன், தன் பீதாம்பர ஆபரணங்களை அந்தம்மாளுக்கீந்து அம்மங்கையின் கந்தைத்துணியை மகாப்பிரசாதமென்று போர்வை போர்த்துக்கொண்டு வந்தனர் உலகத்தோர் கொண்டாடத்தக்க அந்த புண்ணியவரசி எங்கிருப்பவளோ அறியோம் நாம் சந்நிதிக் கதவுகளைப் பூட்டி முத்நிரை செய்திருக்குங்காலத்தில் பகவான் இப்படிச்செய்தால் நாமென்ன செய்யலாமென்று சொல்லிச் சிலரை விசாரித்து சிலநாளைக்கு முன்பு சந்நிதிக்குவந்திருந்த ஜனபாயி தரித்திருந்த வஸ்திர மிது

வென்று சகுதேகித்து யாவரும் அம்மாதினிடத்திற்குச்சென்று ஓ ஜனபாயி நினது அந்தரங்கபக்தியினால் தேவர்களுக்குந் தேவனாகிய பாண்டுரங்கனை வசியஞ்செய்துக்கொண்டாய் ஆகையால் நாங்கள் செய்யும் உபசாரங்கள் பகவானுக்கு ரசிக்கவில்லை அதிருக்கட்டும் ராத்திரி அவர் உன்னிடத்திற்கூவந்து தன்னுடைய பீதாம்பரத்துடன் ஆபரணாதிகளை யுனக்கீந்து நினது கந்தைவஸ்திரத்தைத் தரித்துக்கொண்டுவந்தனர் இப்போதந்தபீதாம்பரத்துடன் ஆபரணாதிகளை யீவாயாகில் பகவானுக்குச் சமர்ப்பிக்கலாமென்று சொன்னார்கள் அதைக்கேட்டு ஜனபாயி அவர்களைநோக்கி அந்தவஸ்துக்களை நானறியேனென அதற்கவர்கள் ஓ மாதுசிரோணியே அந்தவஸ்துக்கள் உன்னிடத்திலிருக்குமென்பதற்கு சந்தேகமேயில்லை ஆதலால் அதனைக்கொடும் அப்படி நீ கொடாவிடில் நீ தண்டிக்கப்படுவாயென்ன அதற்கு ஜனபாயி இதுவென்ன விபரீதம் எண்ணியேன் நிந்தனைக்குட்படுத்துகின்றீர்கள் அந்தவஸ்துக்களை நானறியேன் அது யென்னிடத்தினிலிருந்தால் என்னுடைய கண்கள் கெட்டுப்போகுமல்லவாவென்று பிரமாணிக்கஞ் செய்தனள். அப்போதவர்கள் உள்ளேபிரவேசித்து அவ்வுத்தமி சயனிக்குமிடத்தில் சோதனைசெய்கையில் அவ்வாபரணங்கள் யாவும் பீதாம்பரத்தினில் சுற்றி ஒருமூலையில் வைத்திருக்கப்பட்டது அதைப்பார்த்து அவர்கள்யாவரும் பகவானுடைய திரவியத்தை அபகரித்து தான் அறியேனென்று ஆணையிட்டவள் இப்படிப்பட்ட துஷ்டாத்துமாவை கிராமத்திற்குவெளியில் ராஜவீதிக்குச் சமீபத்தில் சூலத்தில் கோர்க்கவேணுமென்று கிராமாதிகாரர்கட்கு அறிக்கைசெய்து யாவரும் ஒரேமனதுடையவர்களாகி ஜனபாயியை யிழுத்துக்கொண்டுபோய் சந்திரபாகா நதியினிடத்தில் நட்டிருக்குஞ் சூலத்தினருகில் நிறுத்தினார்கள்.

அப்போது ஜனபாயி (சத்ருச்சேதைகமந்ரம் சகலயுபநிஷத் வாக்யசம்பூஜ்யமந்ரம் சம்சாரோத்தாரமந்ரம் சமூபதிதவமஸ்ஸங்கநிர்யாணமந்ரம் சர்வைஸ்வர்யைகமந்ரம் வ்யசனபுஜகசந்தஷ்டசம்த்ராணமந்ரம் ஜீஃவேஸ்ரீகிருஷ்ணமந்ரம் ஜபஜபசதம் ஜன்மசாபல்யமந்ரம்) என்னுல் ஓ மனதே சத்குரு நாசத்திற்கு முக்கியமானமந்திரமும் உபநிஷத்துவாக்கியங்களுக்கு சிலாக்கிய மந்திரமும் சம்சாரக்கடலைத் தாண்டுவிக்குமந்திரமும் அதிகமாகும் அக்ஞானராசியை நசிக்கச்செய்யுமந்திரமும் சகலசம்பத்தைக்கனையும் யீவதற்கொன்றுகுமந்திரமும் விசனங்களென்னும்

சர்ப்பங்களால் கடிக்கப்பட்டவர்களைக் காப்பாற்றும்படியான மந்திரமும் ஜென்மத்தைச் சாபல்யஞ்செய்யுமந்திரமுமாகும் ஸ்ரீகிருஷ்ணமந்திரத்தை இடைவிடாமல் ஜபித்துக்கொண்டிருமென்று தியானித்திருந்தனள். யக்ஞாங்கம்ஜபயக்ஞோஸ்மி) என்றும் எக்கியங்களில் ஜபயக்கியம் நானென்று பகவத்கீதையினில் தானே சொல்லியிருக்கிறுனுகையால் ஜனுபாயி ஜெபத்திற்குக் களிப்படைந்து பக்தர்கட்கு அபாயத்தையுண்டாக்க வெண்ணினசர்ப்பத்தை வதித்த கெருடனைப்போன்ற மணியாகும்பகவான் ஜனுபாயிக்கு நேரிட்ட ஆபத்துக்குமூலமாகும் அந்த யிருப்புச்சூலத்தைப் பஸ்பமாகும்படி எண்ணினுர் உடனே அச்சூலமானது பஸ்பமாய்ப் போயிற்று அவ்வற்புதத்தைக்கண்டு யாவரும் ஆச்சரியப்பட்டு இந்த மாதசிரோமணியினுடைய பக்திரசமானது பெருகியோடும் வெள்ளத்திற்குச் சமமாகியிருக்கின்றதென்று அந்தசாந்தமுடையவளைக் கொண்டாடி அனுதாபமுடையவர்களாகி வினயத்துடனம் மாதினிக்கு வந்தனஞ்செய்து ஓ அன்னையே நின் பக்தியானது மூவுலகத்திலும் மேன்மையாகியிருக்கின்றது உன்னிடம் நாங்கள் செய்த அபராதங்களை பன்னிக்கவேணுவென்று பலவாறு துதித்து பண்டரிநாதனுடைய லீலைகளை வெகுவாகத் துதித்துக்கொண்டே தங்கள்தங்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள். ஜனுபாயியும் பகவத்தியானஞ் செய்துக்கொண்டே நாமதேவருடைய வீட்டையடைந்து சதா பக்திப் பரவசளாகியிருந்தனள்.

இவ்வாறு ஜனுபாயி பக்திசாகரத்தினில் மூழ்கினவளாகியிருக்கிறபோது ஒருநாளிந்த ஜனுபாயி நாமதேவர்வீட்டு வாசற்படியில் உட்கார்ந்துக்கொண்டு பாண்டுரங்கன் விஷயமாகச் சவணஞ்செய்துக்கொண்டிருக்க இதையறிந்து பகவான் சந்நிதிகெர்ப்பகிருகத்தினில் ஏகாந்தமாகவிருந்து அந்த மதுரவாணிசெய்யுங் கவனமாகுங் கீர்த்தனைகளை யொரு ஓலையிலெழுதிக்கொண்டிருந்தார் அப்போது க்ஞானதேவர் பகவானைத் தெரிசிக்கவேண்டிவருகையில் பகவான் அந்த ஓலையை மறைத்துக்கொண்டார் க்ஞானதேவர் பகவானுக்கு சாஷ்டாங்கமாக வந்தனஞ்செய்து ஓ சுவாமி ஏகாந்தமாகத் தாங்க ளெழுதிக்கொண்டிருந்து ஓலையமறைத்துக்கொண்டதென்னவென்றுவினவ அதற்குபகவான் புன்னகையுடைய முகாரவிந்தராகி ஓ க்ஞானேஸ்வரா ஜனுபாயி நாமதேவர்வீட்டின் வாசற்படியிலிருந்து பரமபக்தியுடன் என்மீது கீர்த்தனைகள் கவனஞ்செய்துக்கொண்டிருக்கின்றுள் அந்தக்கீர்த்தனைகள் சனகாதி

கள் துதிக்காயினும் அதிசயமாயிருப்பதினால் பிரியத்துடன் அந்தக் கீர்த்தனைகளை எழுதிக்கொண்டிருக்கின்றேனென்றனர் க்ஞானதேவர் அதைக்கேட்டுமெத்த வியப்படைந்து ஜெயாவிஜைபவாருக்மணிநாயகா தினதுபுகழை சுருதிகள் கொண்டாடுகின்றது தினது அனந்தகலியாணகுணங்களென்னும் ஜலராசியை வால்மீகர் பராசரமுனிவர் வியாசசுகாதிமேகங்கள் ஆசிரயித்து அந்தஜலத்தைப் பானஞ்செய்து ஜீவகோடிகட்குத் தாரகமாக வாழித்துக் கொண்டிருக்கின்றது அனந்தாதி நித்தியசூர்யர்களும் பிரம்மாதி தேவர்களும் சனகாதியோகிகளும் நாரதாதிதேவரிஷிகளும் பிரகலாதிபக்தர்களும் உன்னியனவரதமும் பக்திபரவசர்களாகித் துதி செய்துக்கொண்டிருக்கின்றார்கள் இவர்கள் யாவரையும் உபேட்சைசெய்து ஜனபாயிகவனத்திற்குச்சொக்கி யெழுதிக்கொண்டிருந்தாய் இது பசுவு அப்போதின்றதாகும் கன்றினிடத்தில் அதிக பிரியத்தினால் முன்னமீன்ற கன்றுகளைக் கொம்புகளால் முட்டித் தள்ளுவதுபோலிருக்கின்றது (த்வயிஞ்சித்ஸமாபன்னேகிம்கார்யம்சீதயாமயா) என்றால் உனக்குச் சிறிய ஆபத்துண்டாகில் சீதையினுலெனக் கென்னகாரியமென்று சுக்ரீவமகாராஜாவினிடஞ் சொன்னயல்லவா இது உனக்கு சுபாவகுணமாகி யிருக்கின்றதல்லவா மணவாளன்தன் அந்தரங்கத்தை பதிவிரதையாகும் மனைவிக்கு ஒளித்ததுபோல தேவரீருடைய அந்தரங்கத்தை முன்னோர்களுக்குத் தெரியப்படுத்தாமல் ஒளிப்பதற்குக் காரணமென்ன நீர் பக்தபரதந்திரனென்று மூவுலகங்களும் அறியும் இதற்கு லஜ்ஜையேதுக்கு உனக்கிவ்வளவு அபிமானமுண்டாகும்படி நடந்துக் கொண்ட ஜனபாயியை யானுன்னுடன்வந்து தெரிசிக்கவேணுமென்று அபேட்சிக்கின்றேனென்று விண்ணப்பம்செய்ய நிஜபக்தர்களுக்குப் பரதந்திரனுகும் நந்தனந்தன் சந்தோஷராகி முன்னம் குப்ஜையின் கிரகத்திற்கு உத்தமருடன் வந்ததுபோல இப்போது ஜனபாயினிடத்திற்கு பகவான் க்ஞானதேவருடன் வந்தனர். இந்த அற்புதத்தைப்பார்த்து பக்தபராதீனனது பரதந்திரத்தைப் புகழ்ந்துக்கொண்டே அனேகபாகவதர்கள்பின்தொடர்ந்தார்கள் இந்தப்படி பகவான் க்ஞானதேவாதிகளாகும் அந்தரங்கபக்தர்களுடன் வருவதைப்பார்த்து நாமதேவரெதிர்க்கொண்டுசென்று சாஷ்டாங்கமாக வந்தனஞ்செய்து உடனழைத்துவந்து உட்காரவைத்து பகவன்னுமசங்கீர்த்தனை செய்துக்கொண்டிருக்க யாவரும் ஆனந்தபரசவர்களாகிக் கேட்டிருந்தார்கள்

போது பகவான் நாமதேவரைநோக்கி ஓ நாமதேவரே இந்தசாது க்களியாவரும் ஜனுபாயியைப் பார்க்கவேணுமென்று அபேட்சித் துவந்தார்கள் ஆகையால் அவர்கள் மனோபீஷ்டத்தை முடிக்கும் படி அந்தப்பெண்ரத்தினத்தை வரவழையுமென நாமதேவர் மகா பாக்கியமென்று நடந்து சாணமிதித்துக்கொண்டிருந்த ஜனுபாயி யை யழைத்துக்கொண்டுவந்தனர் அப்போது ஜனுபாயி பாண்டு ரங்கனுக்கும் க்ஞானதேவர்முதலாகும் சாதுக்களுக்கும் வந்தனஞ் செய்து ஓர் பக்கத்தில் நின்றுக்கொண்டிருக்கையில் க்ஞானதேவர் நாமதேவரைநோக்கி ஓ பரமசாந்தமூர்த்தியாகும் நாமதேவரே இன்னொரு வதிசயத்தைக் கண்டேன் அதென்னவெனில் இந்தப் புண்ணியபுருடர் ஜனுபாயின்பொருட்டுச் செய்த கவனத்தைத் தானே ஏகாந்தமாக எழுதிக்கொண்டிருந்து என்னைப் பார்த்த வுடன் தாளபத்திரத்தை ஒளித்துவைத்தனரென்று சொல்ல பக் தப்பிரியன்கேட்டு ஓ சாதுஜனங்களே ஜனுபாயியினுடைய பக்தி ரசத்தை நானெழிதினது தப்பல்ல இந்தச் சுபவனிதையினுடைய கிளிமொழிகள் எனக்கு ஆனந்தத்தை விளைவித்திருக்கின்றது தேட்டைவசனங்களாகியும் வேதகொர்ப்பமாகும் பரமதத்துவமா கியிருக்கின்றது ஆகையா லந்தக் கீர்த்தனைகளை என்மனதாகும் பத்திரத்தினில் எழுதிக்கொண்டேன் மேலும் இந்தஜனுபாயி என் சந்நிதிசெய்து அவர்களை வெகுசாக்கிரதையாய் ரட்சித்துக்கொண் டிருப்பேனென்று பகவான் சொல்லக்கேட்டு க்ஞானதேவாதிகள் கரதாளம்போட்டு ஜெயவிஜயீபவாவென்று கோக்ஷித்தார்கள் அப்போ தவ்விடத்தில் கபீர் சோகா மீளர் ரோஹிதாசர் சாவந் தியா மாலிமுதலாகும் பரமபக்தர்களிருந்தனர்கள் அதில் க்ஞான தேவர் நாமதேவர் கிரகங்களினடுவில் பிரகாசிக்கும் சூரிய சந்தி ரர்களைப்போல பிரகாசித்திருந்தார்கள் அப்போது க்ஞானதேவர் ஜனுபாயியைநோக்கி ஓ மாதசிரோமணியே ஸ்ரீகிருஷ்ணபகவா னுக்கு மிகவும் அந்தரங்கனுகும் உத்தம ரிப்போது நாமதேவராகி பண்டரிநாதனை ஆராதித்து சுவாதீனப்படுத்திக்கொண்டார் நீ பூர்வஜென்மத்தில் பகவானை எந்தரூபமாகப் பஜித்தாயென்று வினவ ஜனுபாயி தீனதயாகி க்ஞானதேவரைநோக்கி ஓ சுவாமி அடியாள் ஸ்ரீகிருஷ்ணவதாரத்தினில் குப்ஜையாகி சந்தனத்தைக் கொடுத்தது பகவானை யாராதித்தேன் வாசுதேவன் கம்சனை வதை த்தபின்னர் தன் பிராணசினேகிதராகும் உத்தமருடன் என்வீட் டிற்குவந்து என்னை யனுக்கிரகித்தனர் இப்போ தந்தப்பகவான்

புண்டரீகவரதனுகி யுத்தம அம்ச பூதராகும் நாமதேவருக்கு பர தந்திரனுகியிருப்பதினுல் யான் பகவான் மனோபாவத்திற்கு அனு குணமாக ஜனபாயியாகி உத்தம அம்சத்தைப்பெற்ற நாமதேவ ருடைய அபிமானத்தைப்பெற்று அவரால் இந்த பகவானுடைய கிருபாகடாட்சத்திற்குப் பாத்திரமாயினேனென்று விண்ணப்பஞ் செய்யக்கேட்டு க்ஞானதேவர் ஆச்சரியப்பட்டு அப்படியானுல் நீ அபாரபுண்ணியாரசியாகையால் பிரம்மாதிகட்கும் எட்டப்படாத தாகும் ரிஷிகேசன் நின்வசமாகியிருக்கின்றனென்று சொல்லினர்.

இந்தப்படிக்கு ஞானதேவர் சொல்லியபின்பு பகவான் அங்கி ருந்த பக்தர்களைநோக்கி ஒசாதுக்களே இதுமுதல் என்னைப் புகழு மவர்களில் இவரிவர் கீர்த்தனைகளை இவரிவர்கள் எழுத வேணுமென்று ஒரு யேற்பாடு செய்கின்றேன் அவர்களில் யாரெனில் க்ஞான தேவர் கீர்த்தனைகளைச் சச்சிதானந்த பிரமணரும் நிவர்த்தி தேவர் கீர்த்தனைகளைச் சோபானதேவரும் முக்தாபாயி கீர்த்தனை களை க்ஞானதேவரும், சோகாபரமானந்தர் கீர்த்தனைகளை வீசோ பாகேசரும், சாவந்தியாமாலி கீர்த்தனைகளைச் சிவோபா அர்ச்சக ரும், கூர்மதாசர்கீர்த்தனைகளைச் சயத்தேவரும், அனந்தபட்டர் கீர்த்தனைகளைச் சோகாமேளரும் எழுதவேணுமென்று நேமித்து நாமதேவருடைய கீர்த்தனைகளையும் ஜனபாயி கீர்த்தனைகளையும் நானே எழுதுகிறேனென்று சொல்லி க்ஞானதேவரைநோக்கி இனி ஜனபாயிகீர்த்தனைகளை உங்களுக்குக்காட்டுவதற்கு யாதொரு நாணமு மில்லையென்று சொன்னர் இதைக்கேட்டு சாதுஜனங்கள் பகவானைநோக்கி சேவிப்பதற்கும் புகழுவதற்கும் அறியதாகும் ஓ தேவா விஸ்வம்யாவும் நிதைத்திருப்பதாகும் தேவரீரையிப்படி வசி யஞ்செய்துகொண்டிருக்கும் ஜனபாயினுடைய பாக்கியவிசேஷ மானது மனதுக்கும் வாக்குக்கு மெட்டாததாகி யிருக்கின்றது அன்றியும் ஜெகத்திலுள்ள சகலமுங் கொண்டாடும்படியான கீர்த் தியையுடையவளாயினள் இந்தப் பாக்கியாசியை பரிகரிகையென் றும் யாராயினும் அற்பமாகப் பேசத் தகுமோவென்று கொண் டாடினர்கள். அப்போது நாமதேவர் பரிமளங்கள் கலந்த சுத்த தீர்த்தத்தைக் கொண்டுவந்து (அஸ்மத்குரு ஸ்மாரம்பரம் மற்ச்யா தீஸ்வரம்யமாம் லட்சுமிநாயகபர்யந்தாம்வந்தேகுருபரம்பராம்) என்று குருபரம்பரை யனுசந்தானஞ் செய்துக்கொண்டே பகவா னுடையதும் பாகவதருடையதும் ஸ்ரீபாததீர்த்தத்தைச்சேர்த்து (விஷ்ணுபாதோகம்பித்வா கோட்டிஜென்மகராசனம் ஏதத்சமஸ்

தபாபானும் ப்ராயச்சித்தம்மணீஷிபி:நிர்ணீதம்பகவதபக்தபாதோ தகநிஷேபனம்) என்றுல் விஷ்ணுபாத தீர்த்தத்தைப் பானஞ்செய் தால் கோடிஜென்மங்களில்செய்த பாபங்கள் நசித்துப்போம் சே தனனுல் செய்யப்பட்ட சகல பாபங்கட்கு பகவத்பக்தர்கள் பாத தீர்த்தம் பிராயச்சித்தமாகுமென்று புத்திமான்களாலேசொல்லத் தக்கதாகி யிருக்கின்றதென்று ஸ்ரீபாததீர்த்தத்தின் பிரபாவத் தைக் கொண்டாடி (பிபன்சிரவீதாரயேத்) என்னுமாப்போல அந்தத் தீர்த்தத்தைப் பானஞ்செய்து சிரசினிற்றரித்து பகவானுக் கும் சாதுகட்கும் வெகுவித வுபசாரங்கள் செய்தனர். பின்பு பக வான் பக்தர்களுடன் சந்நிதிக்குச்சென்று உடந்தவிருந்தார்தங்களை ஸ்ரீருக்மணிதேவிக்குச் சொன்னர்.

இவ்வாறு ஜனபாயின் பிரதாபத்தைப் பகவான் ருக்மணிதே வியுடன் சொல்லியபோது ருக்மணிதேவி அந்த ஜனபாயின் சௌ ந்தரியத்தையும் நற்குணபக்தியையும் பலவாறு புகழ்ந்துக்கொண் டாடிக்கொண்டிருக்க இங்கே குணபாயி ஜனபாயியையழைத்து அருகில் வீற்றிருக்கச்செய்து ஓ புண்ணியவதி பெண்ஜென்மமெடு த்தபோதிலும் உன்னைப்போல் பதிவிரதையையும் நற்குணநற்செ ய்கை பகவத்பாகவதவிசுவாசமும் இவ்வுலகத்திலுள்ள சகலருங் கொண்டாடும்படியான கீர்த்தியும் பகவானுடைய அபிமானமும் பெற்றவாகள் மூவுலகத்திலுமில்லை உன்னைப்போல யானும் பெண் ணுப்பிறந்தும் என்னபயன் உண்ணவும் உடுக்கவும் உறங்கவும் மெத்த சாக்கிரதையுடையவளாகி யிருக்கின்றேனேயன்றி ஜென்ம சாபல்யமாகும்படியானதற்கு ஒருவழியையுந் தேடாத பாவியாகி னேன் என்னைப்போலுங் கொடிய பாவி மூவுலகிலுந் தேடக்கிடை க்குமோ நீ எப்படி பாவியாவாயென்பாயோ பிரமமருத்திரேந்திர தேவர்களாலும் யோகிகளாலும் வியாசர் பராசாரதிமுனிவர்களா லும் துதிக்கவும் சேவிக்கவும் அறிதாகும் பகவானுடைய திருபா கடாட்சத்தைப்பெற்ற நின்னருமையான குணவிசேடங்களைக் கரு தாமல் என்னுடைய அஞ்ஞானத்தினுல் உன்னை வீட்டுவேலைசெய் யப் பரிசாரியாய்க்கருதி செய்யப்படாத அற்பவேலைகளையெல்லாம் உன்னுற் செய்வித்துக்கொண்டபடியால் என்னைப்போலும் பாதகி கிடையாதென்றேன் ஆகிலும் யானுன்விஷயத்திற்செய்த அபசா ரங்களையெல்லாம் கருதாமல் உபசாரமாகக் கருதி என்னை யாதரி க்கவேணும் அன்றியும் இன்றுமுதல் நீ எங்கள் வீட்டுவேலைகள் செய்வதைநீக்கி யுன் சொந்தவீடாகப்பாவித்து யானும் என் மகு

மகள் ருக்மாபாயும் செய்யும்படியான உபசாரங்களைப்பெற்றுகிரு பாகடாட்சம்வைத்து எங்களை ரட்சிக்கவேணுந்தாயேயென்று வேண்டிக்கொள்ளும் குணபாயியைநோக்கி ஜனபாயி சொல்லுகின்ருள். கேளும் என்னை யீன்றவளுக்குநிகரான அன்னையே தாங்கள் என்னை யொருபொருளாகவெண்ணி இப்படியும் புகழலாமோ உம் முடையபிள்ளையாகிய நாமதேவருடைய கிருபையினலன்ருேயான் பகவானைச் சேவிக்கப்பெற்றேன் அன்றியும் அவருடைய ஆதரவில்லாவிடில் யான் எவ்வாறு ஜீவித்திருப்பேன் பக்தியும் பகவானுடைய அபிமானமும் பாகவதர்களுடைய சங்கமும் இவையாவுமெனக்குண்டாயினதற்கு மூலம் உமது புதல்வராகிய நாமதேவரன்ருே இத்தனையுபகாரஞ்செய்த உங்கள்வீட்டினில் நான்வேலை செய்யத்தகாதோ செய்தால் எனக்குக் குறையொன்றுமிராதே இப்படித்தாங்கள் பேதமெண்ணலாமோ ஏழையாகுமெனக்கொரு பெருமை யுண்டுபண்ணலாமோ உங்களைவிட ஆதரவு எனக்கு வேறு யாரேனுமுண்டோ இன்றுமுதல் வீட்டுவேலைகள் செய்யலாகாதென்பதற் கென்னுலெந்தயிழிவைக்கண்டோ சொந்தவீடென்றுகந்துச்செய்தால் இழிவுண்டோ ! ஓ அம்மணி தேவரீர் அடியாளைத் தங்கள் புதல்வியைப்போலப்பாவித்து எப்போதும்போல நடந்துக்கொள்ளும்படி கிருபைசெய்யவேணும்அன்னையேயென்று தாழ்ந்து அடியில்வீழ்ந்து தெண்டனிட குணபாயிக்குத் திகைமியாவும் நடுநடுங்கித் தானும் ஜனபாயின்திருவடியில்வீழ்ந்தெழுந்து ஜனபாயியைநோக்கிச் சொல்லுகின்ருள் ஓ ஜனபாயி நீ இந்தகாரியஞ் செய்யத்தகுமோ யானும்பெற்றுக்கொள்ளத்தகுமோ தகாதாகையால் நானு முன்திருவடியில்வீழ்ந்து தெண்டனிட்டேனென ஜனபாயி ஓ அம்மா குணபாயி நீ வயதில் மூத்தவளானபடியினலே யானுன் திருவடியில்விழுந்து தெண்டனிடத்தகும் வயதில் தாழ்ந்தவளான எனக்கு நீ தெண்டனிடத்தகுமோவென அதற்கு குணபாயி வயதில் முதிர்ந்தவளானலும் இளையவளானலும் புத்தியும் பக்தியும் வெற்றியும்சித்தியுமுடையவள் எவளோ அவளே பெரியவள் இதுகளில்லாதவள் வயதில் முதிர்ந்தவளாயிருக்கினும் அவள் சிறுவளேயெனத்தகும் ஆதலால் யான் மூத்தவளாயிருக்கினும் என்னபிரயோசனம் (தேன்படு பனையின் றிரள்பழத் தொருவிதை வானுர வோங்கி வளம்பெற வளரினும் ஒருவர்க்கிருக்க நிழலாகாதே தெண்ணீர் கயற்றிற் சிறுமீன்சினையினும் தெள்ளியவாவின் சிறுபழத் தொருவிதை தண்ணிதேயாயினு மண்ணல் யானை

யணிதேர்ப்புரவி யாட்பெரும் படைபொடி மன்னர்க்கிருக்க நிழ
லாகும்மே) என்றல் பனையின்விதை யொன்று பூமியில்விழுந்து
தழைத்துச் செழித்தும் ஆகாயத்தையளாவி வுயர்ந்துமிருக்கினும்
ஒருமனிதனுக்கு நிழல்கொடாது அதுபோல யான் பெரியவளாகி
யிருக்கினும் ஒருவருக்கேனும் உதவியில்லாதவளாகியும் ஒருவ
ரேனு மென்னைப் புகழும்படியான கீர்த்தியைப் பெறவில்லை தடா
கத்திலுள்ள சிறியமீன் சினைக்கும் சிறியதாகும் ஆலின்விதையொ
ன்று பூமியில்விழுந்து கப்புங்கிளையுமாகிச் செழித்துத்தழைக்குமா
கில் ரதகஜதுரகபதாதிகளுடன் அரசனெருவனிருந்து அரசுசெய்ய
நிழல்கொடுப்பதுபோல நீ சிறுவளாயிருக்கினும் உன்னுடைய பக்
திப்பிரதாபத்தினால் சகலரும் உன்னைப் புகழ்ந்துக்கொண்டாடும்
படியான கீர்த்தியையடைந்தாய் இப்படிப்பட்ட நற்கீர்த்தியைப்
பெற்ற நினக்குக் கேவலமான வேலைகள் செய்யும்படிக்குச் சொல்
வது நீதியோ (தெய்வந்தொழாள் கொழுநனைத்தொழுதெழுவள்
பெய்யெனப்பெய்யுமழை) என்ற நாயனார்மொழிக்கிணங்க பதிவிர
தைகளின் கற்பின் பிரபாவத்தினால் மழை பெய்யென்றால் பெய்
யும் சூரியோதயமாகாதிருக்கவேணுமென்றால் சூரியோதயமாகா
து இதனைத் தெரிந்த நான் கற்புடைய நினக்கு வேலைகள் நேமிக்
கக்கூடுமோ ஏதோ ஒருசந்தர்ப்பத்தில் யுன்மனம்நொந்தால்குடும்
பத்துடன் நாங்கள் யாவரும் படுசூரணமாய்விடுவோம் ஆகையால்
என்னம்மணி ஜனபாயி எங்கள் குடும்பம் செழித்திருக்கவேணு
மென்ற யெண்ணம் உனக்கிருக்குமேயாகில் யான்செய்யும் உபசா
ரத்தைக்கொண்டு கடைக்கண்ணாற்பார்த்து எங்களையீடேறச்செய்
யும் அம்மணியென்று பலவாறு வேண்டிக்கொள்ள ஜனபாயி மறு
த்து ஒன்றுஞ்சொல்வதற்கு யிடமில்லாமல் குணபாயியைநோக்கி
ஓ அம்மா பாக்கியவதி உன்னிஷ்டப்படி நடந்துகொள்ளுகிறே
னென்று சொல்ல குணபாயி இன்றல்லோ என்புண்ணியம்பலித்த
தென்று என்றுமில்லாத களிசாகரத்தில் மூழ்கினவளாகித் தன்
மருமகளாகிய ராதாபாயியும்தானுமாகவீட்டுவேலைகளியாவு மூடி
த்து பிரசாதஞ்செய்து பகவானுக்கு ஓர் தட்டினில்வைத்து நாம
தேவரிடங்கொடுத்தனுப்பி உடனே ஜனபாயிக்கும் பிரசாதமளி
த்து புசித்தானபிறகு தானும் மருமகளும்பேரன்மார்களும் நாம
தேவரும் புசித்து பகவத்பிரசாதத்தி லீடுபட்டுக்கொண்டிருந்தார்
கள் இவ்வண்ணம் அனுதினமும் ஜனபாயிபைச் சகலவுபசாரத்து
டன் ஆராதனைசெய்துக்கொண்டுவர ஒருநாள் ஜனபாயி ஸ்நா

நஷ்டானங்களைமுடித்து தன்பிராணநாதராகிய பாண்டுரங்கனைத் தியானித்தவண்ணம் தன்னைமறந்துபரவசமாகி நிஷ்டையிலேயே அசையாமல் சித்திரபதுமைபோலவும் நிஸ்தரங்கசாகரத்தைப் போலவும் அசைவற்றிருந்தனள் குணபாயி பிரசாதஞ்செய்து பகவானுக்கப்பி ஜனபாயினிடமவந்து பகவத்தியானத்திலிருக்கின்றாள் அதைக் கெடுக்கலாகாதென்று நெடுநேரங் காத்திருந்து ஜாக்கிரதைப்படாமலும் சுயக்ஞானமில்லாமலுமிருப்பதை யுணர்ந்து அகாலமாய்விடுகிறதே வேளைக்குப்புசித்து பகவத்தியானஞ்செய்துக்கொண்டிருந்தாலல்லவோ சுகம் வேளைதப்பிப் புசிப்பதால் பகவத்தியானத்தில் மனஞ்செல்லுமோ ஆதியுகமாகிய கிரேதாயுகத்தில் அஸ்தகதப்பிராணன், திரேதாயுகத்தில் மாம்சகதப்பிராணன், துவாபரயுகத்தில் ரக்தகதப்பிராணன், கலியுகத்திலோ அன்னகதப்பிராணன் என்று மூன்னோர்கள் சொல்லியபடி இது கலியுகமாதலால் இந்தயுகத்தினில் அன்னமில்லாவிட்டால்பிராணன்போகுமே இப்போது ஜனபாயியை கைதட்டி சுயஞானமுண்டாகும்படிச் செய்யலாமென்றால் பக்தியைக் கெடுத்ததாகும் இப்படியே பசியுடனிருந்தால் மெத்த ஆயாசத்திற்கிடமாகும் தருமசங்கடமாயிருக்கின்றதே இதற்கு நாமென்னசெய்கிறது அன்றியும் நமக்குண்டாயிருக்கும் பசியின் கொடுமையால் இந்த உத்தமியைவிட்டு நாம்மாத்திரம் புசிப்பதுதருமமோ வீட்டிற்குவந்திருக்கும் அதிதியைவிட்டு கிரகஸ்தன் புசிப்பது நீதியோ அதிதியைத் திருப்திசெய்த்து அனந்தரம் புசிப்பதல்லோ கிருகதருமம் தருமத்திற்குவிரோதமாய் நடப்பவர்கள் ரௌரவாதிநரகத்தை யடைவார்களென்று மனுதருமசாஸ்திரம் மூறையிடுகின்றதன்றோவென்று கவலைப்பட்டுக்கொண்டிருந்தனள் இதற்குள் ஜனபாயிக்கு சுயக்ஞானமுண்டாகி கண்ணைத்திறந்து ஜனபாயியைப்பார்த்து ஓ அம்மணி மெத்தப் பசியினால் மெலிந்து எனக்காகக் காத்துக்கொண்டு புசிக்காமலிருப்பது தகுதியோ போழுதுசாய்ந்த அகாலமாய்விட்டதேமெத்த அபசாரத்திற்குட்பட்டேனே மதிகெட்டேனே உங்களிடத்தில் வைத்திருந்த விசுவாசத்தை விட்டேனேயென்று தன்னைத்தானே நிந்தித்து குணபாயியை வந்தித்துப் பகவானைச் சிந்தித்து கடாக்ஷமென்றழைந்து குணபாயிக்குத் தெண்டனிட்டு என்னபசாரங்களைப் பொருத்துக்கொள்ளும் அம்மணியென்று வெகுவாக வேண்டிக்கொண்டு குணபாயி அளித்த பிரசாதத்தைப் புசித்து இனைப்பசறி பகவன்னுமசங்கீர்த்தனைகளைப் பாடிக்கொண்

டிருந்தனள். இந்தப்படி வந்த ஜனபாயி சிலவருடங்கள் கடந்து ஒருநாள் பாண்டுரங்கன் சந்நிதிக்குச்சென்று பகவானுக் கிடது புறமாகநின்று எனது பிராணநாயகரே இன்னமெத்தனைநாளைக்கு இப்புவியினில் யிடுக்கண்பட் டலைந்துக்கொண்டிருப்பேன் எத் தனைநாளிருக்கினும் ஒருநாளைக்கு மரணமடைவது நிச்சயம் புழுக் கள்நிறைந்த துர்க்கந்தமான மலப்பாண்டம் இதைச்சுமந்துக்கொ ண்டுதிரிவதில் என்னலாபம் தேவரீர் அடியாள்மீது கிருபைக்கண் ணேக்கம் வைத்து தங்கள் திருவடியில் சேர்த்துக்கொள்ளும்சுவா மியென்று பலவாறு வேண்டிக்கொள்ள பகவான்புன்னகைபுரிந்து ஓ ஜனபாயி நினக்கு திரேகத்தின்மீது வெறுப்புண்டாகியதுபோ லத் தோன்றுகின்றது அன்றியும் நீ சந்நிதிக்குள் வருகிறபோதே உன் மனைவெண்ணத்தை நானறிந்துகொண்டேன் அவ்வுலகத்தி னில் கற்புடையமாதர்கள் எப்படி நினைக்கின்றார்களோ அந்தப்படி நடக்குமென்பதில் கிஞ்சிற்றுஞ் சந்தேகமில்லை உன்னிஷ்டப்படி யான் நடந்துக்கொள்ளாவிடில் எனக் கேதேனுமொரு கஷ்டம் வந்துசம்பவிக்கும் அதெப்படியெனில் முன்னம்யான் பாண்டவர் கள் பட்சமாயிருந்து துரியோதனாதிகளை வதைத்துப் பூமிபாரத் தைப் போக்கியபோது பதிவிரதையும் கற்புடையவளுமாகிய காந் தாரி தன்புத்திரர்கள் மாண்டதற்குக்காரணம் நானேயென்று வயி றெறிந்து சூறைக்கொள்ளியாகப் போகக்கடவாயென்று என்னைத் தபித்தனள். அந்தப்படியே ஜெகந்நாதக்ஷேத்திரத்தில் என்திரே தமானது சூறைக்கொள்ளியாகப்போயிற்று ஆகையால் ஓ உத்தம மாதே உன்னெண்ணத்தின்படி யுனக்குப் பரமபத சாம்பிராஜ்ஜி யத்தை யளித்தேன் அந்த ஈடிலாப் பதவியையடைந்து நித்தியா னந்த சுகமடைந்திருக்க கடவாயென் வர மளித்தனர் இதற்குள் பரமபத ரதமானது வந்துநிற்கப் பகவான் ஓ மாதுசிரோன்மணி யாகிய ஜனபாயி அதோபாரும் கோபுரதுவாரத்தினில் ரதம்வந்து சித்தமாயிருக்கின்றது தடைசெய்யாமல் சீக்கிரம்போவாயென்ன உடனே ஜனபாயி மகாபாக்கியமென்றுசொல்லி பகவானுக்குத் தீர்க்க தெண்டனிட்டெழுந்து களிக்கடலி லாழ்ந்தவளாகி திடுதி டென்றோடி ரதத்தின்மீதேறினள் அப்போது ரதமானது ஆகய மார்க்கமாகக் கிளம்பிப்போகிறபோது அங்குள்ள பாகவதர்களி யாவரும் சிரமேற் கரங் கூப்பிக்கொண்டவண்ண ஜனபாயியைப் பலவாறு புகழ்ந்துக் கொண்டாட ஜனபாயி நித்திய விபூதியை யடைந்தனள்.

ஜனபாயி கற்பின் மகத்துவம்

முற்றிற்று.

பதுமவல்லி கற்பின் மகத்துவம்.

(3) பண்டரிபுரத்தினில் பதுமவல்லியெனும் பஞ்சம மாதொ
ருவளுண்டு அம்மாதுக்கு சோகாமேனனெனும் பிரியமனைவினை
மணந்து தன்னுயகணவனன்றி வேறு தெய்வமில்லையெனக்கருதி தன்
னுயகணவப் பூசிப்பதினலும் நாயகனுக்கு ஊழியஞ் செய்வதிலும்
சலிப்பின்றி எந்நாளும் நாயகனைப் போஷிப்பதிலேயே உள்ளன்பு
டையவளாகியிருந்தனள் இம்மங்கையின்நாயகனே ஸ்ரீபாணுரங்
கனிடத்தில் பரமபக்தியுடன் கூடியிருந்தனர் அவர் அனுதினமும்
பகவான்சந்நிதிக்கு பிரதட்சணஞ்செய்தும் கோபுரவாசலினிடத்
தில் பகவானுடைய தெரிசனத்தைக்கருதி வீற்றிருந்தனர். இப்ப
டிக்கிருக்க ஒருநாள் சில பிராமணர்கள் இந்தப் பரமசாதுவைநோ
க்கி அடாசோகாமேளா நீயேன் பண்டரிநாதனைத் தெரிசிக்கவே
ணுமென்று வீணுகப் பக்திசெய்திருக்கின்றாய் உன்னிடத்தில் பக
வானுக்கு கிருபையுண்டாகியிருந்தால் உன்னை யவர் வரவழைத்து
தெரிசனமளிக்காமலிருப்பாரா பாகஞ்செய்யுமிடத்தினில் சுவா
னம் பிரவேசிக்கக்கூடாததுபோல நீ பகவான்சந்நிதியில் பிரவே
சிக்கக்கூடாது ஆகையால் நின்னுசை எப்படி நிறைவேறும்என்ன
சோகாமேளர் எழுந்துநின்று இருகரங்களையுங்குவித்து தெண்ட
னிட்டு ஓ பிராமணோத்தமர்களே ஆதித்தன் ஆகாயத்தினில்வெகு
தூரத்தினிலிருந்தும் தாமரை மொக்குகளை மலரச்செய்வதுபோல
பாண்டுரங்கன் ஆலயத்திற்குள்ளாகயிருந்த போதிலும் தூரத்தி
லிருப்பவர்களாகும் உண்மையான தாசர்கட்குச் சந்தோஷத்தை
யுண்டுபண்ணுவார் பாண்டுரங்கன் ஆலயத்திற்குள்ளேயே யிருக்
கின்றரென்று நினைக்கவேண்டாம் சர்வேசன்சகலஹிருதயனுகி
யிருக்கின்றன் யான் ஈனஜாதியிற் பிறந்தவனுயிருக்கினும் என்னு
டைய ஹிருதயகமலத்தினில் சந்நிதி செய்திருக்கின்றன் அன்றியும்
ராஜீவித்துக்கொண்டு மிருக்கின்றனென்றுசொல்லி ஓ பக்தவச்சலா
தேவரீருடைய திவ்யமங்கள விக்ரகதெரிசனம் எனக்குக் கிடைக்
கும்படி கிருபைசெய்யவேணுமென்று துதிசெய்து தன் வீட்டிற்
குச்சென்று மனைவியினுல் உபசரிக்கப்பெற்று சந்நிதியினெதிரில்
பிராமணர்கள் சொல்லியதும் பிராமணர்கட்குத் தான் பதில் சொ
ல்லியதும் சவிஸ்தாரமாகச் சொல்லினர் அதைக்கேட்டு அந்தப்
பதுமவல்லி தன் மணவாளன் திருவடியைத்துதிசெய்து ஓ பண்டரி
நாதா ஏழைகளும் குலயீனர்களுமாகிய எங்கள்மீது கிருபாகோக்

யிரையென்றுகேட்க அவன் பயபக்தியுடன் அவர்களைநோக்கி நான் உள்ளேபோகவில்லை பகவான் என் கைகளைப் பிடித்துச்கொண்டு உள்ளே யழைத்துக்கொண்டுவந்தனர் இப்போது நானிங்குவந்த குற்றத்தை மன்னித்துக் கொள்ளுங்கள் இனி வராதிருக்கிறேனென்று சொல்லிட பிராமணர்கள் இவனிடத்தில் தோஷமில்லை பண்டரிநாதன் இப்படிப்பட்ட லீலைகளைச் செய்தால் நாம் இவனைத் தண்டிப்பதினு லென்னபிரயோஜனம் ஆகிலும் இவனிங்கிருந்தால் தேவாதிதேவனுகும் பாண்டுரங்கன் அடிக்கடியிவனை ஆலயத்திற்கு ளழைத்துக்கெண்டு போவார் அவரப்படிச் செய்வது நமதாசாரங்கட்குக் குறைவாகுமென்று நினைத்து சோகாமேளனை நோக்கி அடா சண்டாளகுலத்திற்பிறந்தவனே நீ யிப்போதே யிவ்விடத்தைவிட்டு சந்திரபாகாநதியைத்தாண்டி அங்கு குடிசை போட்டுக்கொண்டு வாசஞ்செய்துக்கொண்டிருக்கக்கடவாய் அப்படி நீ செய்யாவிடில் உனக்குக் கொடியதண்டனை விதிப்போமென்று நவில அந்தப் பகவத்பக்தன் ஓ பிராமணர்களே உங்கள்நேமனத்தின்படி செய்கின்றேன் நான் பகவானைத் தெரிசிப்பது அனுசிதமென்று சொன்னீர்கள் செங்கையினில் பஞ்சமர்கள்ஸ்நானஞ்செய்யவில்லையா அதனால் செங்கைக்குத் தோஷமுளதா பூமியின்மீது சகல ஜாதியர்களும் நடந்துக்கொண்டிருக்கவில்லையா அதனால் பூமிக்குத் தோஷமுளதா அதுபோல ஆதிமத்தியாந்தரகிதனுகும் ருக்மணிநாதன் சகலத்திலும் சமனுகி வியாபித்திருக்கையில்அப்படிப்பட்ட சகல பரிபூரணனுக்கு தோஷமுண்டுபண்ணுவது ஞாயமல்லவென அதைக்கேட்டந்தப் பிராமணர்கள் பொறுமை யுடையவர்களாய் அடா சோகாமேளா நீ சண்டாளனும் சகலஜாதிகட்குங் கீழ்ப்பட்டவனுகும் நீயா எங்கட்கு ஞானோபதேசஞ் செய்கின்றாய் உன்னுடைய நடவடிக்கை விபரீதமாகியிருக்கின்றது இனி நீசந்திரபாகாநதிக்கு அக்கரையில் குடிசைகட்டிக்கொண்டு வாசஞ்செய்யும் அப்படிச் செய்யாவிடில் உன்னை சிடசைசெய்து ஓட அடிப்போமென்றார்கள். அப்போதந்தச் சாதுவானவர் பிராமணர்கட்குவந்தனஞ் செய்து நீங்களே தாய் தந்தையர்களென்று நம்பியிருந்தேன் சரணுகதியடைந்த என்னை அவமதிக்கத்தகுமா பகவான் சரணுகதி தருமத்தை அனுஷ்டிக்குக் காட்டவேயல்லவா ராமவதாரஞ்செய்தனர் நீங்களனவரதமும் ஸ்ரீராமாயணத்தைப் பாராயணஞ் செய்திருந்தும் அதின் சாரமாகும் சரணுகதி விபவத்தை உங்கள் மனதினில் வகிக்காதவரானீர்கள் இப்போதாகிலும் அந்தப் பெருத்த

அர்த்தத்தைச் சிந்தித்து சரணுகதியடைந்த என்னை ரட்சியுங்கள். விபீஷணர் சரணுகதியடைந்த காலத்தினில் பிரதிகூலமாகப் பேசினதை உண்மையான உள்ளத்தினராகும் பகவான் கபோதபட்சி விருத்தாந்தத்தை உபந்நியாசஞ்செய்து விபீஷணரை அங்கீகரித்தனரல்லவா, எவர்களிடத்திலும் பொறுமையென்பதில்லாத புராதனர்களாகியிருக்கத்தகுந்த பகவத்பக்தர்களாகும் உம்மைப்போன்றவர்கட்கு அடியேனைப்போன்றவர்கள்மீது தயவில்லாதிருப்பது தகாதென்று விண்ணப்பஞ்செய்தனர். இவர் எத்தனை விதமாகப் பிரார்த்தித்தபோதிலும் அவர்கள் கடுமையான மனதுடையவர்களாகி முன்போலவேசொல்லிக்கொண்டிருக்க சோகாமேளன் துக்கித்தவனுகி தாரைதாரையாகக் கண்ணீர் ஓடவிட்டுக்கொண்டு பாண்டுரங்கனைப் பலவாறு துதித்து வந்தனஞ்செய்து வீட்டிற்குச்சென்று தன் மனையாளுடன் நடந்த விருத்தாந்தங்களைச் சொல்லி யழைத்துக்கொண்டு சந்திரபாகா நதியைத்தாண்டி அக்கரையினிலொருகுடிசை கட்டிக்கொண்டு அதில் வசித்திருந்தபடி சாகூரத் பாண்டுரங்கனை நினைத்து நினைத்துக் கண்ணீர் ஆறுகப் பெருகவிட்டும் துக்கசாகரத்தில் மூழ்கினவனுகியிருந்தனன்.

அப்போது பதுமவல்லி தன்னுயகன் துக்கப்படுவதைக்கண்டு மனம்பொறுதவளாகித் தானும் அழுதுக்கொண்டே தன்கணவனை நோக்கி ஓ சுவாமி உலகத்தினில் யாவராயிருக்கினும் சுகம் வந்தபோது சந்தோஷித்தும் கஷ்டம்வந்தபோது விசனப்படுவதுந் தகாது சுகதுக்கங்களிரண்டையும் சமமாக அனுபவிப்பதே புத்திமான்களுடைய இயற்கையான குணமாகையால் தேவரீர் பகவத்பக்தரும் பரமசாதுவுமாகவிருந்தும் இப்படி விசனப்படுவது தருமமோ இந்தத் துக்கமுண்டாவதற்குக் காரணம் பகவானுடைய தெரிசன மில்லாதிருப்பதேயல்லவா தாங்கள் அடியாள்மீது கிருபைசெய்து நேமித்தால் பகவானை யிங்கு நம்மிடம் வரும்படியாகச் செய்கிறேன் தேவரீர் துக்கத்தைப்போக்கி சந்தோஷமாகயெழுந்து பகவானைத் தியானம்பண்ணுமென்று சொல்லக்கேட்டு சோகாமேளன் சந்தோஷசித்தனுகியெழுந்து சந்திரபாகாநதியில் ஸ்நானஞ்செய்து அநுஷ்டானங்களையு முடித்துக்கொண்டு பகவானுக்குத் திருவாராதனஞ்செய்து திருத்துழாய்த்தீர்த்தம் பெற்று பகவானைத் துதி செய்துகொண்டிருக்கும்போது பதுமவல்லி தன் கணவனுடைய திருவடிதாமரைகளில் விழுந்து தீர்க்கதண்டனிட்டெழுந்து ஓ பாண்டுரங்கா பவபங்கா சியாமளாங்கா கெருட

தரங்கா இப்படியும் தேவரீர் தெரிசனந் தராமல் என்கணவனைத் துக்கசாகரத்தில் மூழ்கச்செய்யலாமோ சதாகாலமும்மைத் தியானஞ் செய்துக்கொண்டிருக்கும் பரமசாதவின் மீது பராமுகமாமோ பக்தவச்சலனென்னும் நாமத்துக்கொர் இழிவுவரப்போமோ உண்மையானபக்தியுடைய பாகவதர்களை ரட்சிக்கிறேனென்று தரித்திருக்கு மமது விருதுக்கு மேன்மை யுண்டாகுமோவென்று முறையிடுவதைப் பகவான்கேட்டு,திடுக்கிட்டு மெய்நடுங்கி ஓகோ மோசம்வந்தது பதிவிரதையின் வாக்கு பலிக்காமற் போகாது இனி நாம் தாமதா யிருக்கலாகாதென்று புறப்பட்டு வேகமாகநடந்து சந்திரபாகாநதியைக்கடந்து சோகாமேளன் வீட்டை யடைந்து தம்பதிகளிருவருக்கும் சேவைதந்து நிற்கையில் சோகாமேளன் பாண்டுரங்கன் திருவடியில்விழுந்து தெண்டனிட்டெழுந்து தன் மனையாளை யழைத்து சீக்கிரம் தக்க ஆசனமெடுத்துவாவென அந்தப்படியே பதுமவல்லி ஆசனந்தந்து அதில் வீற்றிருக்கச்செய்து சகல வுபசாரங்களுஞ்செய்து நிற்கும் தம்பதிகட்குப் பல ஆசிகள்கூறி சோகாமேளனைநோக்கி ஓ பரமபாகவதசிகாமணியே நின்மனையாளாகிய பதுமவல்லி நின்பொருட்டு மூறை யிட்டதை நானென்னென்று சொல்லுவேன் இந்தக் கற்பின்மிகுந்த மாது சிரோமணியின் பொருட்டு இப்போது நான் ஓடிவரவேண்டியதாயிற்று. அப்போ தெனக்குண்டாகிய பயமானது எந்தக்காலத்திலும் நானடைந்ததில்லை ஏனென்றால் ஒருக்கால் பிரம்மன் சிவன் நான் மூவரும் வதிஷ்டருடைய ஆஸ்ரமத்திற்குச் சரியாக ஆகாயமார்க்கமாய்ப் போகிறபோது அவர்மனைவியாகிய அருந்ததியின் பதிவிரதா அக்கினியானது ஆகாயத்தை யளாவிக்கொண்டிருந்தது அதைக்கண்டு சிவனுடைய வாகனமாகிய ரிஷபமானது தடைபட்டு பின்னுக்கிடைந்ததுகள். இந்த அதிசயத்தையறிந்து சிவனும் அயனும்யானும் அம்மங்கையின் கற்பையழிக்கவெண்ணி வதிஷ்டருடைய ஆசிர்மத்திற்குட்புகுந்து போகிறபோதுவதிஷ்டரெங்களைக்கண்டு மெத்தவினயமாகப் பூசித்து நேச விஸ்வாசமாகப்பேசி புசித்துப்போகும்படி வேண்டினர். அதற்கிசைந்து வீற்றிருந்தோம் அப்போது வதிஷ்டர் தன்மனைவியையழைத்து பரிமாறும்படி கட்டளையிட்டார் அம்மாது கணவனிஷ்டப்படி பிரசாதம்பரிமாறுகிறபோது சிவன் வதிஷ்டரைநோக்கி ஓ முனிவரே எங்களுக் கிப்படி பிரசாதம் பரிமாறினால் திருப்தியில்லை. பின்னெப்படி பரிமாறினால் திருப்தியென்று கேட்பீரோ உமதுமனைவி

ஆடையின்றி நிர்வாணியாகிப் பிறந்தசொரூபத்துடன் பரிமாறி னுல் எங்களுக்குத் திருப்தியாயிருக்குமென்ன அம்முனிவர் தன் மனைவியைநோக்கி அடிபெண்ணே நீ ஆடையற்றவளாகிச் சிறி தும் நாணமின்றி இவர்கட்குப் பிரசாதம் பரிமாறக் கடவாயென கற்பின்மிகுந்த அம்மாது கணவன் கட்டளையின்படி ஆடையைக் களைந்துவைத்துத் தன் அளகபாரத்தினுல் திரேகமியாவும் மூடிக் கொண்டவளாகிப் பிரசாத மெடுத்துவந்து பரி மாறுகையில் சிவ ன் குறுக்கென்று நகைத்தார். அதைக்கண்டு அம்மாதுசிரோமணி ஞானதிருஷ்டியினுற்பார்த்து எங்களெண்ணத்தையறிந்து சீக்கிர மாக ஓடி பஞ்சபாத்திரத்தினில் தீர்த்தங்கொண்டுவந்து தன் கண வனுடைய நாமத்தைப் பாராயணஞ் செய்துக்கொண்டே பஞ்ச பாத்திரத்திலிருக்குந் தீர்த்தத்தையெடுத்து எங்கள் மூவர் மீதுந் தெளித்து மூவரையும் சிறு குழந்தைவடிவங்களாகச் செய்து மூவ ரையும் மூன்று தொட்டில்களில் கிடத்தி தாலாட்டிச் சீராட்டி நீராட்டி மைதீட்டி மலர்சூட்டிப் பாதுகாத்திருந்தனள். இச்செய் தியை லட்சுமி சரஸ்வதி பார்வதி யிம்மூவருங்கேட்டு ஓடோடியும் வந்து அருந்ததியின் திருவடிகளில் விழுந்து மங்கிலியப்பிச்சை தரவேணும் அம்மணி யென்று வேண்டிக்கொள்ள அம்மாது மன முருகி மறுபடியும் தீர்த்தத்தைத்தெளித்து எங்கள் மூவரையும் யெழுப்பிவிட நாங்கள் மூவரும் அம்மாதின் திருவடிகளில்விழுந்து அபசாரத்தை கூமித்துக்கொள்ளும்படி வேண்டிக்கொள்ள கற்பி னில்மிகுந்த அம்மாது கூமித்துக்கொண்டேன் போய்வாருங்க ளென்று விடைதரப் பெற்று நாங்கள் மூவரும் எங்களெங்க ளிரு ப்பிடஞ்சேர்ந்தோம். ஆகையால் அதுமுதல் பதிவிரதைகளிடத்தி லெனக்கு மெத்த பயமுண்டா யிருக்கின்றபடியால் நின்மனைவியும் கற்பில் மிகுந்தவளானபடியினுல் தன்வாக்கினுல் நம்மை யேதாகி னுஞ் சொல்லிவிட்டால் தப்பாம லனுபவித்தே தீரவேண்டுமென் றுணர்ந்து இத்தனிவேகமாக வந்தேன் வந்து உங்களிருவருக்கும் தெரிசனந்தந்தேன் உங்களிருவருடைய அன்புக்கு மெத்த வியப் படைந்தேன் நின்மனைவியின்பக்கலில் பயத்தா லிடைந்தேனென். ன்று பின்னுஞ் சொல்லத்தொடங்கினர்.

ஓ புத்தியிலும் பக்திபிலுமிகுந்த சித்தத்தினையுடைய பரமசா தவே எனக்கு உனனுடன் புசிக்கவேணுமென்ற அவா மெத்த வுண்டாயிருக்கிறது. அதுவெனக் கெப்போது பிராப்தமாகுமோ வென்றனர். அதற்கந்த சோகாமேளன் பகவானைநோக்கி ஓசுவாமி

இன்றையதினம் ஏகாதசியாயிருப்பதால் நிர்ச்சலமா யிருக்கவே ண்டியபடியால் தங்களெண்ணப்படி நடக்கத் தடையா யிருக்கின் றது நாளையதினம் சூரியோதயத்திற்காளல் துவாதசிபாரணைக் குத் தங்களிஷ்டப்படி நடக்கச் சித்தமாயிருக்கிறேனென அதற்கு பகவான் அப்படியே நாளைய ஸூரியோதயத்திற்கு வருகிறே னென்றுசொல்லி விடைபெற்றுக்கொண்டு மாயமாய் மறைந்துப் போயினர். உடனே சோகா மேளன் ஸ்நான அநுஷ்டானங்களை முடித்தி பகவானுக்குத் திருவாராதனஞ்செய்து திருத்துழாய்த் தீர்த்தம் ஸ்வீகரித்துத் தன்மனைவிக்கு மளித்துப் பகவன்னுமசங் கீர்த்தனஞ் செய்துக்கொண்டிருந்தார். அப்போது பதுமவல்லி தன் கணவனிடம்வந்து ஓ சுவாமி ஏகாதசிவிரத பலனை ஆதியோ டந்தமாகக் கேட்க விருப்பங்கொண்டேன் கிருபைசெய்து திரு வாய்மலர்ந்தருளவேணும் அன்றியும் இன்றிரவைப் போக்குவதற் கும் கண்விழிப்பதாகு மிவ்விரண்டிற்கு மெத்த நலமாக விருக் கின்றதென்று வேண்டிக்கொள்ளும் தன் பிராண நாயகியைநோ க்கி ஓ மாதுசிரோமணியே இன்றையதினம் ஏகாதசி யானதால் அன்னம் புசிக்கக்கூடாது (ஏகாதஸ்யாம் நபுஞ்ஜீத கதாசிதபிமா னவ; யதிபுஞ்ஜீதமோஹேன நரகேஷு நிமஜ்ஜதி) என்றுல் ஏகா தசியி லொருபோதும் புசிக்கக்கூடாது பிரியத்தினுல் புசிக்கும வன் நரகத்தில் விழுவன் என்று விஷ்ணுவும்ருஷி முறையிடுகின் றது (ஏகாதஸ்யாம்முனிஸ்ரேஷ்ட யோபுஞ்ஜேன்மூடசேதஸ; ப்ர திக்ராஸமஸௌபுங்தே கில்பிஷம்ஸ்வாதிவிட்ஸமம் நிஷ்க்ருதிர்மத் யபஸயோக்த: தாமாசாஸத்ரேமனீஷிபி: ஏகாதஸ்யன்னகாமஸ்ய நிஷ்க்ருதி: க்வாபிநோதிதா) என்றுல் எவன் மூடஹிருதயனகி ஏகாதசியினில் புசிப்பனே அவன் புசிக்கு மொவ்வொருகவள மும் பாவத்தை யுண்டாகச்செய்யும். அது நாய் முதலாகும் சன ஜந்துக்களின் வெட்டைக்குச் சமனகும் தரும சாஸ்திரத்தினில் மதுபானஞ் செய்தவனுக்கு பிராயச்சித்தம் விதிக்கப்பட்டிருக்கின் றது ஏகாதசியினில் புசித்தவனுக்கு பிராயச்சித்தம் விதிக்கப்பட வில்லையென்று சனத்குமாரசமிதை முறையிடுகின்றது அன்றியும் (அஷ்டவர்ஷாதிகோமர்த்யோ ஃமபூர்ணசிவத்ஸா: ஏகாதஸ்யா முபவசேத்பக்ஷயோருபயோரபி) என்றுல் எட்டு வருடத்திற்கு மேற்பட்டு எழுபது வயதிற்குட்பட்ட வயதுடையவர்கள் சுக்கில அமரபக்ஷங்களில் ஏகாதசிகளில் உபவாசமிருக்கவேணுமென்று காத்யாயனிசுருதிமுறையிடுகின்றது (ஸப்ரஃமஹாஸகோக்னஸச

ஸ்தேயீச்சகுருதல்பகஃ ஏகாதஸ்யாந்துயோபுந்தே ப்க்ஷயோருப
யோரபி மாத்ருஹாபித்ருஹாசைவ ப்ராத்ருஹாகுருஹாததா
ஏகாதஸ்யாந்துயோபுந்தே சக்திமான்நிருபத்ரவ: சுராபானசமம்
பாபம் பவேத்தஸ்யநசம்சய:) என்றால் ஏகாதசியினில் புசிக்கு
மவன் பிரம்மஹத்தியும் கோஹத்தியும் சொர்ணத்தைத்திருடுவ
தும் குருபத்தினி கமனஞ்செய்தவனுகுவன். மேலும் சக்திவானுகி
உபத்திரவமில்லாதவனுகியிருக்குமவன் ஏகாதசியினில் புசிக்கும்
விஷயத்தில் அன்னையைத் தந்தையை சகோதரனைக் குருவையுங்
கொன்றவனுகுவன். அப்படிப்பட்டவனுக்கு மதுபானத்திற்குச்
சமமாகும் பாபம் சந்தேகமின்றி யுண்டாகுமென்று விஷ்ணுதர்
மம் முறையிடுகின்றது (வரம்ஸ்வமாத்ருகமனம் வரப்கோமாம்ஸ
பக்ஷணம் வரம்சாசுராபானம் ஹரிவாசரபோஜனத்) என்றால்
ஏகாதசியினில் புசிக்கப்படும் அன்னத்திற் காகிலும் அன்னை
யோனியைப் பரிட்சைசெய்வதும் கோவின்மாங்கிச பட்சணமும்
மதுபானமும் சிறந்ததாகுமென்று ஸ்ரீமகா பாரதம் முறையிடுகின்
றது. (யானிகானிசபாபானி ப்ரஹ்மஹத்யாதிகானிச அன்னபாஸ்
பித்யதிஷ்டந்தி ஸம்ப்ராப்தேஹரிவாஸரே) என்றால் ஏகாதசிநாளில்
பிரம்மஹத்திமுதலாகும் சகலபாபங்களும் அன்னத்தை யடுத்தி
ருக்கின்றதென்று மதுபுராணம் முறையிடுகின்றது. ஆகையால்
நோயாளியும் சக்தியில்லாதவர்களும் கனிவர்க்கங்களேதாகிலும்
புசித்திருக்கலாமென்று சொல்லிக்கொண்டிருக்கையில் நாழிகை
இருபதாயிற்று. அப்போது தன்மனைவியை நோக்கி அடிபெண்
ணே மணியோ இரண்டாயிற்று சீக்கிரம் சமையலாகட்டும் பக
வான் பிரசாதத்திற்கு வருவாரென்று கட்டளையிட்டு பகவந்நாம
சங்கீர்த்தனஞ் செய்துக்கொண்டிருந்தார் பதுமவல்லி நாயகன்
கட்டளையின்படி ஸ்நானபான அநுஷ்டானங்களை முடித்து தன்
கணவன் திருவடித்தாமரைகளில் விழிந்து தெண்டனிட்டு அவர்
ஆசிகூறப்பெற்று சமையல்கட்டிற்குட் சென்று பாத்திரங்களைச்
சுத்திசெய்து நாயகன் திருவடிகளைத் தியானஞ் செய்துக்கொண்
டே அறுசுவை யன்னங்கள் சமைத்து பூசைப்பாத்திரங்களைத்துல
க்கி பூசைக்குவேண்டிய புட்பம் கனிவர்க்கமுதலானதுகளையும்
சித்தப்படுத்திவைத்தனள். இதற்குள் சோகாமேளன் சந்திரபாகா
நதியில் ஸ்நானஞ்செய்து அநுஷ்டானங்களை முடித்து கிரகத்திற்கு
வந்து திருவாராதனஞ் செய்துமுடித்து திருத்துழாய்த் தீர்த்தம
பெற்றுக்கொள்ளாமல் பகவானை யெதிர்பார்க்கிறபோது பகவா
ன்வந்து ஓ பரமசாதுவே இன்று என்னுசைதீர என்னுடன் நீயும்

புசிக்கவேண்டுமென சோகாமேளரும் பதுமவல்லியும் பகவான் திருவடிகளில் விழுந்து தெண்டனிட்டு ஓ சுவாமி எங்கள் முன்னோர்கள் செய்த தவப்பயனே நாங்கள் செய்த புண்ணியமோ அல்லது எந்த பெரியோர்களின் அனுக்ரகத் திருக்கண்ணோக்கமோ சகல பவனங்கட்கும் அதில்வசிக்கும் ஜீவராசிகட்கும் படியளந்து ரட்சிக்கும் தேவரீர் ஏழைகளும் இழிகுலத்தவருமான எங்கள்வீட்டினில் புசிக்கவேணுமென்ற அபேட்சை கொண்டாவதற்கு நாங்களென்னபாக்கியம் பண்ணினோம் இன்றல்லவோ நாங்கள் புனிதர்களாயினோமென்று பலவாறுகப் புகழ்ந்தேற்றும் போது பகவான் புன்னகைபுரிந்து அவர்களோநோக்கி துவாதசி திதி கடந்துபோகிறது சீக்கிரம் புசித்தாக வேணுமென சோகாமேளன் மனைவியைநோக்கி ஓ பெண்ணே சீக்கிரம்தளிகையிலே போட்டுப் பரிமாறுமென அப்பதிவிரதை நாயகன் சொற்படி கணப்பொழுதிற்குள் பரிமாறினள். உடனே சோகாமேளன் திருத்துழாயுந் தீர்த்தமும்பெற்றுக்கொண்டு தளிகையிலே முன்னம் வீற்றிருந்து பகவானுந் தானுமாகப்புசித்து திருப்தியடைந்தனர்கள். அப்போது சோகாமேளன் பகவானேநோக்கி எங்கள் குலதெய்வமே இன்றையதினம்போல ஒவ்வொரு துவாதசியினன்றும் தவறாமல் தேவரீர் வந்து புசித்துப்போகவேணுமென்று பிரார்த்திக்கின்றேனென்று வேண்டிக்கொள்ள பகவான் உன்னிஷ்டப்படி துவாதசிதோறுந் தவறாமல் வருகிறேனென்றுசொல்லி விடைபெற்று மாயமாய் மறைந்துப்போயினர் பின்பு பதுமவல்லி தன்கணவன் புசித்த சேஷான்னத்தை மகாப்பிரசாதமாகப்புசித்து திருப்தியடைந்து தினந்தோறுங் கணவன் பணி விடைகளிலும் கணவனைப் பக்திசெய்வதிலும் சிறிதேனுந் தவறாமல் நாளைப்போக்கிக் கொண்டும் துவாதசிதோறும் பகவானுக்குப் பிரசாதம் படைத்துக்கொண்டும் வருகிறபோது ஒரு ஏகாதசியி லுபவாசமிருந்து அன்றிரவு பகவத்தியானத்தினி லிருந்தபடியே ஆயாசமேலீட்டால் தம்பதிகளிருவரும் நித்திரை செய்யும்போது நாங்காஞ் சாமத்தினில் சோகாமேளன் திடுக்கிட்டெழுந்து அடிபெண்ணே இன்று ஏகாதசி விரதமதுஷ்டித்தும் இருவரும் நித்திரைபோய்விட்டோம் பொழுதுவிடிய காலமாயிற்று சீக்கிரமெழுந்து சமையல்செய் பாண்டரங்களும் சாப்பிடவந்துவிடுவார்களே விரதபங்கமுமாயிற்றே இதற்கு நானென்னசெய்வேன் இந்த அபசாரத்தை எப்படிபோக்குவேனென்று சொல்லி விசனப்பட்டுக்கொண்டிருப்பதை அவ்

வழியாய் ஸ்நானத்திற்குப்போகும் சில பிராமணர்கள்கேட்டு அடாசோகாமேளா இப்போதுன் மனைவியினிடம் என்னசொன்னாய் ஜாதியில் சண்டாளனை உன்வீட்டிற்குப் பகவான் சாப்பிட வருவாரா அடா துஷ்டா குலப்பிரஷ்டா இதோ இன்றுன் கெர்வத்தை யடக்குகிறேம் பாரடாவென்று சொல்லி நடந்து சந்திரபாகா நதியில் ஸ்நானம்பண்ணி அநுட்டானங்களை முடித்துக்கொண்டுதங்கள் தங்கள் வீடுசேர்ந்து துவாதசிபாரணையிலிருந்தனர்கள்.

இந்த சோகாமேளன் பிராமணர்கள் சொல்லிப் போனதற்குக் கிஞ்சித்தெனும் மனஞ்சலிக்காமல் சந்திரபாகா நதிக்குச்சென்று ஸ்நானனுட்டானங்களை முடித்துக்கொண்டு தன்வீட்டிற்கு வந்து திருவாராதனைமுடித்து பகவான்வரவுக் கெதிர் பார்த்துக் கொண்டிருந்தனர். இதற்குள் பதுமவல்லி சுசி ஆசாரத்துடன் பிரசாதஞ்சமைத்து சித்தப்படுத்தினுள் அப்போது பகவான் வழக்கப்படி அவர்கள் வீட்டிற்கு வந்து புசித்து தம்பதிகட்கு ஆனந்தமுண்டாகும்படி நடித்து விடைபெற்று மாயமாய்மறைந்துப்போயினர். தம்பதிகள் மெத்த சந்தோஷத்துடனிருந்தனர்கள். அன்று கோபத்துடன்சென்ற பிராமணர்கள் யெல்லோருங்கூடிசண்டாளனை சோகாமேளன் சொல்லிய கெர்வமொழிகளைச்குறித்து கட்டாகப் பேசிக்கொண்டு அவ்வூரையாளும் அரசனிடஞ்சென்று ஆசிகூறி ராஜாதிராஜ ராஜமார்த்தாண்டா கெம்பீரஉத்தண்டா கேளும் நமது பண்டரிபுரத்தின் சந்திரபாகா நதிக்கு அக்கரையினில் வசிக்கும் பஞ்சமகுலத்தோனை சண்டாளன் நேற்றைய விடியகாலத்தினில் நாங்க ளம்மார்க்கமாய்ப் போவதையறிந்து தன்மனைவியை யெழுப்புகிறவன் என்னசொல்லி எழுப்பினனென்றால் அடிபெண்ணே அருணோதயமாகப்போகிறது சீக்கிரமெழுந்து சமையல்செய்யடி பகவான் சாப்பிடவந்து விடுவாரென்றுசொல்லி எழுப்பினன் இது என்னகெர்வம் இப்படி எங்காகிலுமுண்டா சக்கிலிவீட்டினில் பகவான் சாப்பிட்டாரென்று சாஸ்திரத்தில் கண்டதுமில்லை எவர்களாலுங் கேட்டதுமில்லை இதுவென்ன அனியாயம் குலத்திலும் நலத்திலும் சுசியாசாரத்திலும் ஸ்நானநுஷ்டானங்களிலும் வேதாத்தியயனங்களிலும் எக்கியயாகங்களிலும் சிறந்து மேன்மையுடைய நாங்கள் எத்தனையோமந்திரங்களுச்சரித்து வேண்டி யழைத்தாலும் வராத பகவான் இந்தச்சண்டாளன் வீட்டிற்புசிக்க வருவாராயின் இனியென்னயிருக்கிறது ஜாதி யாசாரம் பக்தி யிதுகளெல்லாம் பயன்படாமற் போயிற்றன்றே. பிராமணர்

ಕಳೆಂಬ ಪೆಸರ್ ಇನಿಯೆನಕ್ಕು ಅವಳಿಂ ಪಿಡಿತ್ತುವಂದು ತಂಡಿಕ್ಕಾ
ಮಲ್ವಿಟ್ಟಾಲ್ ಇಂತಪ್ ಪಂಡಾರಿಕ್ಷೇತ್ತಿರತ್ತಿಲ್ ನಿಂಗುಕ್ ಕೆಡುದಿಸಂಪವಿಕ್
ಕಾಮಲ್ ಪೋಗಾತು ಮೇಲುಂ ಅವಳಿಂ ಎಳಿದಿಲ್ ವಿಟ್ಟುವಿಡುವೀರೆಯಾಗಿಲ್
ಎಂಗಳ್ ವೇತ ಸಾಸ್ತಿರಂಗಳೈ ಕೆರುಪ್ಪಿಲಿಟ್ಟು ಎರಿಪ್ಪತುಡನ್ ಪೂಣೂ
ಲಿಯುಂ ಅರುತ್ತೆರಿಂತು ತಂಗಳ್ ಸಮೂಕತ್ತಿನ್‌ಮೂನ್ನಂ ಎಂಗಳ್ ನಾಕ್
ಕೈಪ್ ಪಿಡಿಂಗಿಕ್ಕೊಂಡು ಉಯಿರ್ ತುಱಪ್ಪೋಂ ಇತು ಸತ್ತಿಯಮೆಂಱು
ನಂಪಕ್ಕಡವೀರೆನ್ಱು ಪಿರಾಮಣರ್‌ಕಳಿಪಾವರುಂ ಒರೇವಾಕ್ಕಾಯ್ ಕೊ
ರೋಮಾಕಪ್ ಪೇಸುವತೈ ಅರಸನ್ ಕೇಟ್ಟು ಮನತ್ತಾಳಾತವನುಕಿ ಅಂಗಿ
ರುಕ್ಕುಂ ತೂತರೈನೋಕ್ಕಿ ಅಟಾ ತೂತರ್‌ಕಳೇ ನೀಂಗಳ್‌ಸೀಕ್ಕಿರಮಾಯೋಡಿ
ಪೀಮನತಿಕ್ಕು ಅಕ್ಕರೈಯಿನ್ ಮೀತು ಒಂಡಿಕ್ಕುಡಿಸೈಯಿಲಿರುಕ್ಕುಂ ಪರಮ
ಸಂಡಾಳನುಂ ಕೊಡಿಯ ತುಷ್ಟನುಮಾನ ಸೋಕಾಮೇಳನೈಪ್ ಪಿಡಿತ್
ತುಕ್ಕೊಂಡು ವಾರುಂಕಳೆಂಱು ಕಟ್ಟಳೈಯಿಟ್ಟಾನ್. ಅವರ್‌ಕಳ್ ಅರಸ
ನತು ಕಟ್ಟಳೈಯೈಚ್ ಸಿರಮೇಱ್ ಕೊಂಡವರ್‌ಕಳಾಕಿ ತಿರುತಿರೆನ್
ಱೋಡಿ ಪೀಮರತಿಯೈಕ್ಕಡನ್ತು ಅಕ್ಕರೈಯಿನ್‌ಮೀತಿರುಕ್ಕುಂ ಕುಡಿಸೈ ವೀಟ್
ಟಿಱ್‌ಕುಟ್ಪುಕುನ್ತು ಸೋಕಾಮೇಳನೈಕ್ಕಂಡು ಅಟಾ ಸೋಕಾಮೇಳಾ ಅರಸ
ನುನ್ನೈ ಯೞೈತ್ತವರುಂಪಡಿಕಟ್ಟಳೈಯಿಟ್ಟಾರ್ ನೀ ಎತಿರ್ತ್ತು ಯಾತೊ
ರು ವಾರ್ತ್ತೈಯುಂವಿನ್ನಾಮಲ್ ಪುಱಪ್ಪಟ್ಟು ವರುವಾಯೆಂಱಪೋತು
ಸೋಕಾಮೇಳನ್ ಪಕವತ್ತಿಯಾನಂಕಳಿನ್ತು ತಿರುಕ್ಕಿಟ್ಟು ಏತುಕ್ಕಾಕ ಅರ
ಸನ್ ಎನ್ನೈ ಯೞೈತ್ತುವರಚ್ಚೊನ್ನೀರ್ ಎನ್ನುಲ್ ಅರಸನುಕ್ಕುಎನ್ನ
ಕಾರಿಯಂ ಅನ್ನಿಯ ವಿಷಯಂಕಳೊನ್ಱು ಮಱಿಯೇನೇ ಒಪಾಂಡ್ರಿರುಂಕಾ
ಇತೆನ್ನಮೋ ಮೋಸಮಾಯಿರುಕ್ಕಿನ್ಱತು ಇತಱ್ಕು ನಾನೆನ್ನ ಸೆಯ್
ವೇನೆನ್ಱು ಪಿರಲಾಪಿತ್ತುಕ್ ಕೊಂಡಿರುಪ್ಪತೈ ತೂತರ್‌ಕಳ್ ಕಂಡು
ಅಟಾ ಸೋಕಾಮೇಳಾ ಇನ್ನಮೆನ್ನ ಜಾಲಞ್‌ಸೆಯ್ಕಿಱಾಯ್ ಸೀಕ್ಕಿರಂ
ವರುಕಿಱಾಯಾ ಯಿಲ್ಲೆಯಾವೆನ್ಱು ಪತಱಿ ಅವಳೈಪ್‌ಪಿಡಿತ್ತು ಪಿನ್‌ಕಟ್ಟಾ
ಕಕ್ಕಟ್ಟಿ ಯಿೞುತ್ತುಕ್ಕೊಂಡುಪೋಯ್ ಅರಸನ್ ಸಮೂಕತ್ತಿನ್‌ಮೂನ್ನಂ
ನಿಱುತ್ತಿನಾರ್‌ಕಳ್. ಅಪ್ಪೋತು ಸೋಕಾಮೇಳನ್ ಅರಸನೈಕ್ಕಂಡು ವನ್ತ
ನನ್ತನ್ತು ಪಕವತ್ತಿಯಾನತ್ತಿಲಿರುನ್ತಾನ್ ಅತುಕಂಡು ಅರಸನ್ ಅಟಾ
ಸೋಕಾಮೇಳಾ ಮೂನ್ನುನಿರವಿನಿಲ್ ಇರಂಡುಮಣಿಸುಮಾರುಕ್ಕು ಉನ್‌ವೀಟ್
ಟಿಲ್ ಮನೈವಿಯೈ ಎನ್ನಸೊಲ್ಲಿಯೆೞುಪ್ಪಿನಾಯ್ ನಡನ್ತವುನ್ಮೈಯೈ
ಒಳಿಕ್ಕಾಮಱ್ ಸೊಲ್ಲಟಾವೆನಚ್ ಸೋಕಾಮೇಳನ್ ಓ ಸುವಾಮಿ ಅನ್
ನಿರವಿಲ್ ಪಕವತ್ತಿಯಾನಞ್ ಸೆಯ್ತುಕ್ಕೊಂಡೇಯಿರುನ್ತು ಮಱನ್ತಿತ್
ತಿನೈಪೋಯ್‌ವಿಟ್ಟೋಂ ಪೊೞುತು ವಿಡಿನ್ತಾಲ್ ತುವಾತಸಿಯಾನತಾಲ್
ಎನ್‌ಮನೈವಿಯೈ ಯೆೞುಪ್ಪಿನೇನ್. ಎನ್ನಸೊಲ್ಲಿ ಯೆೞುಪ್ಪಿನೇನೆನ
ನ್ಱುಲ್ ಪೊೞುತುವೀಡಿಯಱ್‌ಕಾಲಮಾಯಿಱ್ಱು ಪಕವಾನ್ ಸಾಪ್ಪಿಡುವತಱ್ಕು
ವನ್‌ತುವಿಡುವಾರ್ ಸೀಕ್ಕಿರಮೆೞುನ್ತು ಸಮೈಯಲ್‌ಸೆಯ್ಯವೆಂಱುಸೊಲ್ಲಿ

யெழுப்பினேன் இதன்றி வேறொன்றும் யானறியேன் இதுவே நடந்தவுண்மையெனக் கேட்டு அரசன் பற்களோ நறநறெனக்கடித்து மீசை படபடெனத்துடிக்கச் சினமிகுந்து அடாசண்டாளர்களிலும் பரமசண்டாளா கொஞ்சமேனும் பயமின்றி என் முன்னிலையில் இப்படிமொழிந்த உன்கெர்வத்தை யடக்குகிறேன் பாரடா பிராமணர்களனுட்டிக்கும்படியான ஏகாதசியை பஞ்சமகுலத்திற்குந்தாழ்ந்த சண்டாள குலத்தினிற்பிறந்த நீயனுட்டிக்கலாமா? அன்றியும் எத்தனையோ சுசியாசாரத்திலுயர்ந்தும் மேன்மையான பிராமண குலத்திற்பிறந்து யாகாதிகளிற் சிறந்த உத்தமர்கள்வீட்டிற்குச்சென்று புசிக்காதபகவான் அசுசியாகியும் ஆசாரமற்றவனுகியும் தாழ்ந்தகுலத்திற்பிறந்த சண்டாளனுகிய நின்வீட்டினில் பகவான் புசிக்க வருவாரென்றால் இது பொய்வார்த்தையல்லவோ நம்பத்தக்கதாக விருக்கவில்லையென்று கடுகடுத்துப்பேசி ஆறுக் கோபங்கொண்டு அருகிலிருந்த தூதர்களை நோக்கி அடா தூதர்களே தன்கடையேமேய்ந்து மதமேறியிருக்குஞ் காலிமாட்டு மந்தைக்குநடுவினில் இந்த நீச்சனை யழைத்துக்கொண்டு போய்ப்போட்டு கொன்றுவிடச் செய்யுங்களென்று கட்டளையிட்டான். அந்தப்படியே செய்கின்றோம் சுவாமியென்று சொல்லித் தூதர்கள் சோகாமேளன் பிடரியைப் பிடித்துத் தள்ளிக்கொண்டு போகிறபோது பதுமவல்லி பதறிக்கதறியழுதுக்கொண்டோடிவந்து தன் கணவனைக்கண்டு என்குலதெய்வமே உமக்கிப்படிப்பட்ட ஆபத்தும்வந்ததோ தாங்கள் தொழுதேத்துந் தெய்வத்திற்காகிலும் சம்மதியாகுமோ இந்தச்சதிவீண்போகுமோ தங்களைப்போன்ற புண்ணியவான்கட்கு யிப்படிப்பட்ட கஷ்டம் வரலாமோ எனக்கு யிந்தத்துயர் தரலாமோ ஓ தெய்வமே இதற்கு நானென்னசெய்வேன் எப்படி நானுய்வேன் ஓ கற்பினிற்சிறந்த பூமிதேவியே இனிவைப்பேனை எனதாவியை யென்று சொல்லிப் பலவாறு கலங்கியழுது தனக்குட்டானேதேறி மறுபடியும் ஓ என்பிராணநாதரே யான் தொழுதேற்றுந் தெய்வாதரே நற்குணவிஞ்ஞதரே விட்டலநாமோதரேயென்று துதித்து பூமியின்மேற்சாய்ந்து மெய்சோர்ந்து ஒரு முகூர்த்தகாலங்கிடந்து மறுபடியுந் தேறியெழுந்து தன்கணவனைத் தூதர்களழைத்துப்போகும் மார்க்கத்தைநாடி நடந்து தூதர்கள் பின்தொடர்ந்து திரௌபதியை தன்னெவி தொடர்ந்துவருவதுபோலத் தன்கணவன்பின் தொடர்ந்து நடந்தனள். இப்படியாகத் தூதர்கள் வெகுதூர மழைத்துச்சென்று மனிதசஞ்

சாரமில்லாத காட்டினு ளழைத்துச்சென்று அவ்விடத்தில் தன் கடையேமேய்ந்து கட்டுத்தரி யின்றித்திரியும் மதங்கொண்ட காலி மாட்டுக்கடையின் சமீபத்தில் நின்று தூதர்கள் சோகாமேளன் கைகால்களைக் குண்டுகட்டாய்ப் பிணைத்துக்கட்டித்தூக்கிக்கொண்டு போய் மாட்டுக் கடைக்கு நடுவில் விட்டெறிந்தார்கள். சோகா மேளன் மாடுகட்குநடுவினில் போய்விழுந்து பகவானைநோக்கி குய்யோமுறையோவென்று பதறிக்கதறி முறையிடுகிறபோது பதுமவல்லிகண்டு மனந்தாளாதவளாகி இந்தக் காலிமாடுகளால் என்னுயிருக்குயிராகிய என்பிராணநாயகரே உயிர்துறக்கும்போது அடியாள் உயிர்மாத்திரமென்ன பெரிதோ நானும் என்னுயிரனு டன் மடிகிறேனென்று திடஞ்செய்துக்கொண்டு தன்னுடையை நன்றாக யிறுக்கிக் கட்டிக்கொண்டு திடுதிடென்றோடித் தன்கண வன்கிடக்கும் ஒருதுமந்தைகளி னடுவேபோய் நின்றுக்கொண்டு ஓ ரிஷபங்களே பாவியாகுமென்னையுங் கொம்புகளாற் குத்திக் கொன்று என் பிராணநாயகரை மன்னித்து விடுங்கள். அரசன் செய்த கட்டளை யாரு மனிதிக்கு யான் நீச்சகுலஸ்திரீயாயில்லா மல் சூத்திர குலஸ்திரீயா யிருப்பனேயாகில் அரசனுக்கு நல்ல நீதி கூறப்போதித்து இவ்வுலகத்திற்கு க்ஷேமமுண்டாகும்படிச்செய் வேன். நீச்சகுலத்திலும் சண்டாள ஸ்திரீயாய்ப்பிறந்தவளாகையால் அரசன் சமீபத்திற்குஞ்செல்ல யோக்கியதையில்லாதவளாகையால் எங்களுக் கிப்படிப்பட்ட கொடுமையான தண்டனை விதிக்கப்பட் டது இனி பேசுவது வீணே அடியாள் உங்களுக்கேட்டுக்கொண்ட படி பிராணநாயகரைக் காப்பாற்றி அவரடையவேண்டிய தண் டனை எனக்குபயோகப்படுத்திக் கொன்று விடுங்களென்று சொல் லிக்கொண்டிருந்தனள். அப்போது பகவானுடைய கிருபையினு லும் உத்தமியின் கற்பின் பிரபாவத்காலும் தம்பதிக ளிருவரும் ரிஷபங்களின் கண்களுக்குப் புலிகளாகத் தோன்றினபடியால் அந்த ரிஷபங்களியாவும் மூலைக்கொன்றாக ஒன்றுபோனவழி மற் றொன்றுக்குத்தெரியாமல் ஓடிப்போயினதுகள். இந்தவிந்தையைக் கண்ட தூதர்கள் மெத்த ஆச்சரியப்பட்டு இதென்ன விபரீதம் இந்தமட்டும் எத்தனையோபேர்களை அரசன் கட்டளைப்படி கொண் டுவந்து காலிமாட்டுக்கடையினில் விட்டெறிந்திருக்கின்றோம் அம் மாடுகள தங்கள் கொம்புகளால் குத்தி அத்தனைபேர்களையுங் கொ ன்று விட்டதுகள். இவர்களென்ன மந்திரதந்திர ஜாலவித்தைகற்றுத் தேர்ந்த சாமர்த்தியத்தால் காலிமாடுகளை மூலைக்கொன்றாக ஓடச்

செய்தவர்களாகுமென்று சிலபேர்கள் சொல்ல இன்னுஞ் சிலபேர்கள் மந்திரதந்திரஞ் தெரிந்தவர்களல்ல சோகாமேளன் பரமசாது பாண்டுரங்கன் பக்தியிற் சிறந்தவனுகையால் அப்பகவானுடைய கிருபையானது ரிஷபங்களின் கண்களுக்கு இவர்களிருவரும் எப்படிக் காணப்பட்டார்களோ அதனுலேயே ரிஷபங்கள் மூலிக் கொன்றுகச்சிதறி யோடிப்போயிற் றென்றார்கள். சிலர் அப்படியல்ல சோகாமேளன் மனைவி மெத்தக் கற்புடையவளானதினுலே அவள் கற்பின் மகத்துவத்தாலேயே ரிஷபங்கள் மூலிக்குமூலியோடிப்போயிற் றென்றார்கள். சிலர் அவள் கற்புடையமங்கையல்லாவிடில் தன்னுயகனுடன் தானும் உயிரிழக்கத்துணிந்து ரிஷபங்களினடுவிற் செல்லுவாளோ யென்றார்கள் சிலர் இப்படிக் கணவனுடன் மடிய திடங்கொண்டு சென்ற மாதர்களொருவரையும் இதுபரியந்தங் கண்டதுமில்லை கேட்டதுமில்லை யென்றார்கள். சிலர் ஆஹா இம்மங்கை பஞ்சமஜாதியினுந் தாழ்ந்த சண்டாள ஜாதியிற் பிறந்தவளாயிருந்தும் என்ன மகத்துவம் விளங்கினது பார்த்தீர்களாவென்றார்கள் சிலர் எந்தஜாதியிற் பிறந்தாலுமென்ன குணமும் தன்கணவனிடம் பக்தி விசுவாசமுடையவளே மேன்மையான கௌரவத்தையும் கீர்த்தியையும் அடைந்தவளாகுவாளென்றார்கள். சிலர் குணம் பிரதானமேயன்றி ஜாதியைப்பற்றி அவசியமேயில்லை யென்றார்கள். சிலர் துரோபதை சாவித்திரி சந்திரமதி தமயந்திமுதலான கற்புடைய மாதர்களைப்பார்க்கிலும்இம்மங்கை சிறந்தவளாகுமென்றார்கள் சிலர் இம்மாதின் அடக்கம் ஒழுக்கம் சாந்தம் சமதமாதிகுணங்களும் அன்னத்தைப்போன்ற நடையும் சிங்கத்தைப்போன்ற யிடையும் தங்கத்தைப்போன்ற நிறமேச் சாயையும் பூரணச்சந்திரனைப்போன்ற முகமும் நீண்ட அளகபாரமும் சாமுத்திரிகாசாஸ்திரத்திற் சொல்லியபடி ஸ்திரீகட்குரிய சகலலட்சணங்களும்பொருந்திய இம்மாது க்ஷத்திரியகுலத்தினிற் பிறக்கவேண்டும் ஏதோ சிறிது பாவக்கொடுமையால் சண்டாள குலத்தினிற் பிறந்தவளாகு மென்றனர்கள்.

இவ்வண்ணம் சகலருங் கொண்டாடும்படியாகச் சோகாமேளனும் பதுமவல்லியும் கானகத்திலிருக்கத் தூதர்கள் இச்செய்தியை அரசனுக்குத் தெரியப் படுத்தும்பொருட்டு வேகமாய்ச் சென்றார்கள் அங்கே பூபாலன் முன்னம் சாட்சாத் பாண்டு ரங்கநாதன் அசரீரியாகத்தோன்றி ஓ அரசனே க்ஞான சூன்யர்களாகும் பிராமணர்கள் சொல்லைக்கேட்டு பரமசாதுவாகியும் எனக்கு மெத்தப்

பிரியராகும் சோகாமேளரையும் அவர் மனைவியையுங்கடுங்காட்டினில் கொண்டுபோய் விடுத்துச் சோகாமேளரை குண்டுகட்டாய்க் கட்டி எருதுகள் மந்தைக்குனடுவினிறபோட்டு எருதுகளால் கொன்றுவிடும்படி கட்டளையிட்டாய். தூதர்களும் அந்தப்படியே செய்தனர்கள். அப்போது அவர்மனைவி பலவாறு பிரலாபித்து கற்பினில் மிகுந்த உத்தமியானதால் தன்கணவனுடன் தானும் உயிரிழக்கத் திடங்கொண்டு ரிஷபங்கள் மந்தைக்கு னடுவினிற்சென்று ரிஷபங்களைநோக்கி அரசன்கட்டளையின்படி என்கணவனுக்கு விதித்த தெண்டனையை நானடைகிறேனென்னைக்கொன்று என் கணவனை விட்டுவிடுங்களென்ற பத்தினிமாதையும் சோகாமேளனையும் பார்க்கிறபோது அம்மங்கையின் கற்பின் மகத்துவத்தால் அவர்களிருவரும் புலிகளாகத் தோன்றினபடியால். ரிஷபங்கள் பயந்து மூலைக்கொன்றாக ஒன்றுபோனவழி மற்றொன்றுக்குத்தெரியாமல் ஓடிப்போயிற்று. இப்படிப்பட்ட மகத்துவம் பொருந்தியமாதும் உத்தமனுகிய சோகாமேளனையும் நீ சென்று வணங்கி அவர்களிருவரையு மழைத்துவராமலிருப்பாயேயாகில் அவர்கள் சபிப்பார்கள். அதனால் உன்குலம் நாசமாகும் ஆகையால் நீ காலதாமதஞ் செய்யாமல் சீக்கிரம்போமையா அரசனேயென்ற பாண்டுரங்கன் மொழியைக்கேட்டு அரசன் நடுநடுங்கி அங்கிருக்குந்தூதர்களைநோக்கி மந்திரியை சீக்கிரம் அழைத்துவரச்சொல்லி நடந்த செய்திகளையும் பகவான் சொல்லியதையும் ஒன்றொளியா மற்சொல்லி ரதகெஜதுரக பதாதிகளுடன் கானகஞ்சேர்ந்து தம் பதிகளிருவரையுங்கண்டு அரசன் விசனமேலிட்டு ஓ பரமசாதிக்களே அஞ்ஞானத்தினால் தெரியாமற்செய்த அபசாரத்தைமன்னித்து உங்கள் திருவாக்கினால் யாதொன்றும் வையாமல் என்னைக் காப்பாற்றவேணுமென்று எழுந்திராமற்கிடந்த அரசனை சோகாமேளன் இருகரங்களாலுந் தூக்கி நிறுத்தி ஓ சுவாமி பரமசண்டாளனுகிய எனக்குத் தாங்கள் சாஷ்டாங்க தெண்டனிடலாமோ குலநெறி தவறப்போமோ செங்கோல்முறைமையைவிடிக்கப்போமோ உலகத்திற் பழிப்பாமோயென்று சோகாமேளனுந் தரையில்விருந்து அரசனுக்கு சாஷ்டாங்க தெண்டனிட்டார். இப்படி பரஸ்பரம் தெண்டனிட்டு ஒருவரையொருவர் கட்டித்தழுவியும் புகழ்ந்துமிருக்கையில் அரசன் சோகாமேளனைநோக்கி ஓ பரமபாகவதரே உமது பெருமையும் அருமையும் திறமையும் பொருமையும் சாட்சாத் பாண்டுரங்கநாதன் சொல்லியபின்புலோ தெரி

பவந்தது அதற்குமுன் தங்களை யேதோ வாயில்வந்தபடி பிதற்றி விட்டேன் (சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம் பெரியோராயிற் பொருப்பது கடனே) என்பதுபோல அடியேன் தங்கள் விஷய மாய்ச் செய்த பிழைகளையெல்லாம் பெரியோர்களாகிய தாங்கள் பொறுத்துக் கொள்ளவேண்டிய கடமையாகையால் அப்பிழை களை மனதினிற் கொள்ளாமல் சந்தோஷத்துடன் ரதத்தின்மீதே றுமென்றுசொல்லி சோகாமேளர்கையைப்பற்றி ரதத்தின்மீதே ற்றி பதுமைவல்லியைநோக்கி ஒ அம்மணி பிள்ளைசெய்த குற்றத் தை அன்னை பொருத்துக்கொள்வதுபோல யான்செய்த குற்றத் தைப் பாராட்டாமல் மன்னித்து சந்தோஷத்துடன் சிவிகையின்மீ தேதமென்றுசொல்லித் தாதிப் பெண்களைக்கொண்டு அம்மாதி னைச் சிவிகையிலேற்றித் தானுஞ் சோகாமேளருடன் ரதத்தின் மீதேறிச் சகலமேளவாத்தியங்களுந் தாம்தாமென்று முழங்கச் சகலாடம்பரத்துடன் கானகத்தைவிட்டு வெளிப்பட்டு நகரை யடைந்து சோகாமேளரையும் பதுமவல்லியையும் நகர்வலஞ்செய் வித்துத் தன்னரண்மனைக்கெதிரில் அரண்மனையொன்று புதுக்கி அதில் அவர்களை குடியேத்தி இரண்டுவேளையும் அரசனவர்களைச் சேவித்தும் ஆதரித்துக்கொண்டு மிருந்தான். இப்படியாக அரச னல் ஆதரிக்கப்பட்டு சோகாமேளரும் பதுமவல்லியும் சிலகாலம் பகவத்பக்தி செய்துக்கொண்டிருந்து முடிவில் தம்பதிகளிருவரும் பரமபத சாம்பிராச்சியத்தை யடைந்தனர்கள்.

பதுமவல்லி கற்பின் மகத்துவம் முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

கிருபிகற்பின் மகத்துவம்.

(4) முன்னம் பிரமன்பேரனாகிய சரத்துவந்த மகாமுனிவர் ஒருவனத்திற்சென்று அருமையான தவஞ் செய்துக்கொண் டிருந் தனர். அதையறிந்து இந்திரன் அத்தவத்தை யழிக்க யெண்ணங் கொண்டு தன் நாடகசாலைப் பெண்களில் அதிகசுந்தரமும் அழ குமுவாய்ந்த ரம்பையை யழைத்து ஓ பெண்ணே பூலோகத்தில் சரத்துவந்த மகாமுனிவர் அருமையானதவஞ் செய்கின்றார். நீ அங்குசென்று அத்தவத்தை யழித்துவரக்கடவாயென்றுகட்டளை யிட அந்தப்படியே செய்துவருகிறேன் சுவாமியென்று விடைபெற் றுத் தன்னிருப்பிடஞ்சேர்ந்து ஸ்நானஞ்செய்து ஆடையாபரணங்

களை யணிந்து பரிமளத் திரவியங்களைப்பூசி மலர்மாலைசூடித் தன் னுக்கண்ட திவ்யக்ஞானசொரூபிகளா யிருந்தபோதிலும் பின் தொடர்ந்து வரும்படியான அலங்காரத்துடன் சாயலைக்கண்டு மயிலும் குரலோசையைக்கேட்டு குயிலும் நடையைப்பார்த்து அன்னமும் பின்தொடர்ந்துவர ரம்பையானவள் பூலோகத்திலிர ங்கி சரத்துவந்தமகாமுனிவர் தவஞ்செய்யும் வனத்தையடைந்து தன்னுடைய திரேகக்தி ணிந்திருக்கும் பரிமளமானது அவர் மூக்கிற்படும்படியான காற்றுவாடையில் நின்றிருந்தாள். காற்று வாடை அதிகரித்து சரத்துவந்தமகாமுனிவர் மூக்கினிற் படிய அவருடைய தவமானது கொஞ்சங் கொஞ்சமாகக்லைந்து பிரமக் ஞானங்கெட்டு சுயக்ஞானமுண்டாகி யிப்படிப்பட்ட சுவாசனை யிக் காட்டினி லேதென்று சொல்லிக்கொண்டே பரிமளவாடைவருகிற திக்கைநோக்கியபோது அழகிய மங்கையைக்கண்டு மெத்த விரக மடைந்து இப்படிப்பட்ட அழகுவாய்ந்த ஸ்திரீகளும் உலகத்தி லிருக்கின்றார்களல்லவாவென்று வியப்படைந்து தன்கருத்தைக் காமத்தின்வழி செலுத்தினர். அப்போது வீரியம் வெளிப்பட்டு தான் வீற்றிருக்குந் தெர்ப்பாசனத்தின்மீது இரண்டு துளிகளாய் விழுந்தது இச்செய்கையை ரம்பை யறிந்து நாம் வந்தகாரியம் அனுகூலமாய்விட்டது இனி யிங்கிருந்தால் சாபமுண்டாகுவென் று கருதி விரைவாக சொர்க்கலோகம் போய்ச்சேர்ந்தாள். உடனே சரத்துவந்தமகாமுனிவர் தன்னுடைய வீரியம் வெளிப்பட்டதற் காக சற்றுநேரம் மனவருத்தமடைந்து மிஞ்சிப்போனதற்கு விச னப்பட்டால் என்ன பிரயோஜனமென்று தனக்குட்டானே தேறி தன்கையிலிருந்த வில்லையும் திவ்யாஸ்திரங்களடங்கிய அம்புக்கூட் டையுந் தெர்ப்பாசனத்தின்மீது வைத்துவிட்டு மற்றொருவனத் திற்குச்சென்று நற்றவமியற்றிக்கொண்டிருந்தார் இங்கே தெர்ப் பாசனத்தின்மீதுவிழுந்த இரண்டுதுளி வீரியமும் மகாமுனிவரது விந்தாகையால் பழுதுபோகாமல் ஒருதுளி ஆணாகவும் மற்றொரு துளி பெண்ணாகவுந்தோன்றி அழுதுக்கொண்டிருந்தன. அப்போது சந்தனுமகாராஜன் வேட்டையாட விருப்பங்கொண்டு வேடர் வில் லியன் வலையர்முதலான சேனைகள்சூழ காட்டிற்சென்று வேட்டை யாடி அனேகமிருகங்களைக்கொன்று நாட்டைநாடித் திரும்பிவரு கையில் முன்னம் சரத்துவந்தமுனிவர் தவமியற்றிக்கொண்டிருந்த வனத்தின்வழியாக வருகிறபோது அச்சிறுவர்களழுகுரலைக்கே ட்டு விரைவிற்சென்றுபார்த்து வியப்புற்று ஓகோ இப்பிள்ளைகளைப்

பார்த்தால் மெத்த சந்தரத்சதாடு விளங்கிக்கொண்டிருக்கின்றது கள் இதகளைப்பெற்ற தாய்தந்தையர்கள் இங்குதா னெங்கேயோ அருகிலிருக்கிறார்கள். வனத்தைச்சுற்றிப் பார்க்கவேணுமென்று கருதித் தூதர்கட்குக் கட்டளையிட்டான் தூதர்கள் வனமுழுதுஞ் சுற்றிப்பார்த்துவந்து அரசனைவணங்கி ஓ சுவாமி இவ்வனமுழுது முனிவர்கள் மயமேயன்றி இக்குழந்தைகளைப்பெற்ற தாய்தந்தை யர்களைக் காணேமென்றுகூற அரசன் மந்திரிகளைநோக்கி சொல் லத் தொடங்கினன்.

கேளும் மந்திரிகளே பூலோகத்தில் மனுநீதிதவறுமல் செங் கோற்செலுத்தும் அரசர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட தேசங்க ளில்வசிக்கும் குடிகளுக்கு யாதொரு குறைவுமிராதபடிக்கு நடக்க வேண்டும். சத்துருவாயிருந்தபோதிலும் அவர்கள் காட்டினின்று தவித்தால் ஆதரிக்கவேண்டியது நமதுகடமை இப்படித் தரும சாஸ்திரங்கள் முறையிடுவதையுணர்ந்தும் மிகவும் இளமையாகிய யிம்மக்களது அழுகுரலைக்கேட்டும் நாம் நகரத்திற்குச் செல்வது தருமமல்ல இவர்களை நாம்யெடுத்துப்போய் வளர்த்தால் இச்சிறு வர்கட் குரியவர்கள் ஒருவேளை வந்துகேட்டால் அப்போது தடை சொல்லாமல் அவர்களிடத்தில் யிச்சிறுவர்களைக் கொடுத்துவிடு வோம். இப்போதுயிச்சிறுவர்களைநாமெடுத்துப்போய்வளர்ப்பதே தருமமாகுமென்று சொல்லக்கேட்டு மந்திரிகள் அரசன் கட்டளை ப்படி சிறுவர்க ளிருவரையும் வில்லையும் அம்புக்கூட்டையுமெடுத் துக்கொண்டு சென்று நகரத்தை யடைந்து அச்சிறுவர்களை யர்தப் புரத்தினிற்சேர்த்து செவிலித்தாய்களைக்கொண்டு போஷணைசெய் துக்கொண்டிருந்தான். இங்கே யிப்படிக்கிருக்க அங்கேதவமியற் றிக்கொண்டிருந்த சரத்துவந்த மாமுனிவர் ஒருநாள்தவநிலைகுறை ந்துதன்வீரியம் எவ்வாறுயிற்றே பார்த்துவருவோமென்று அவ்வ னத்திற்குவந்து தானிருந்தவிடத்தை நோக்கும்போது வில்லும் அம்புக்கூடு மில்லாமையைக்கண்டு நமதுவீரியமும் உருவாகிச் சிறு வராகியிருக்கவேண்டும் சிறுவர்களைக் கைப்பற்றினவர்கள் வில்லை யும் அம்புக்கூட்டையும் கைப்பற்றிருக்கவேணுமென்று நினைத்துச் சிறுவர்களைக் கொண்டுபோயினவர்கள் யாவரோ அவர்களை யறிய வேண்டுமென்று கருதித் தன் க்யானதிருஷ்டியினல் நோக்கி சந்த னுமகாராஜன் பெற்றுப் போனதையறிந்து அந்நகரத்திற்குச் சென்று அரசனைக்கண்டார். அரசன் திடுக்கிட்டெழுந்து சரத்து வந்தமுனிவரைப் பொற்பீடத்திலேற்றி சோடசோப சாரங்களு

ஞ்செய்து பயபக்தியுடன் எதிர்நின்று ஓ சுவாமி எளியேன்மீது கிருபைசெய்து இவ்விட மெழுந்தருளுவதற்கு யானென்ன புண்ணியஞ் செய்தேன் தேவரீர் திருவடிகள்பட்டு இந்நகரம் புனிதமாயிற்று தெரிசனத்தால் யானும் பவுத்திரமாயினேன் தாங்கள் வந்த காரணம்யாதோ அதைத் தெரியப்படுத்தினுல் தங்கள்கருத்தின்படி நடக்க விருப்புற்றிருக்கிறேனென்று வேண்டிக்கொள்ள சரத்துவந்த மாமுனிவர் அரசனுக்குப் யல ஆசிகள்வழங்கி ஓ அரசனே நீ வேட்டையாடி மூனிவர் தவஞ்செய்யும் வனத்தில் வந்தபோது என் வீரியத்தினுலுண்டான பிள்ளையையும் பெண்ணையும்பார்க்க நான் விரும்பிவந்தேன். ஆகையால் அக்குழந்தைகளை யெடுத்து வரும்படிச் சொல்லுமையாவென்று சொல்ல அரசன்கேட்டு ஓ சுவாமி இதோ எடுத்துவரச் செய்கிறேனென்று விளம்பி தூதர்களால் அந்தபுரத்தினி லிருக்கும் பிள்ளைகளையெடுத்துவரச்செய்து முனிவரிடமீந்து வில்லையும் அம்புக்கூட்டையும் முன்னம் வைத்தனன் சரத்துவந்தமகாமுனிவர் இரண்டு சிறுவர்களையும் பார்த்துக் களிப்படைந்து ஓ அரசனே இவர்களை நான் எடுத்துப்போய் வளர்த்துக்கொள்ளுகிறேனென்று சொல்லி விடைபெற்றுத் தான் தவமியற்றும் வனத்தைச்சேர்ந்து பிள்ளைக்குக் கிருபனென்றும்பெண்ணுக்குக் கிருபியென்றும் நாமகரணமிட்டு வளர்த்துத் தக்கவயதில் பிள்ளைக்குச் சகல சாஸ்திர புராணுதிகளையும் தனுர்வித்தைகளையும் அதின் மர்மங்களையும் பூரணமாகக்கற்பித்துப் பெண்ணுக்குப் பருவகாலம் வந்தவுடன் பரத்துவாசமுனிவர் புதல்வராகிய தரோணுச்சாரியாருக்குமணஞ்செய்வித்தனர். அக்கிருபிதன்கொழுனனுடன்கூடி இல்லறதருமத்தை நடத்தி வந்தனள் அதெப்படியெனில் கணவன் நித்திரைவிட்டெழுந்திருப்பதற்கு முன்னம் தானெழுந்து வலம்புரிந்துத் தீர்க்கதெண்டனிட்டெழுந்துச் சென்று காலைக்கடனைமுடித்து பாத்திரங்களைத் துலக்கி வீடுவாசல்களை மெழுகி சுத்திசெய்து ஸ்நானுஷ்டானங்களையியற்றி நாயகனது பூசைக்கு வேண்டிய பத்திரபுட்பங்களும் கனிவர்க்கங்களையுஞ் சேகரித்து வைத்து சுசியாகிய மடியாடையையுடுத்தி சமயல்கட்டிற்குச்சென்று காய்கரிகளைத்திருத்தி அறுசுவையன்னஞ் சமைத்துவைத்து நாயகனுக்கு ஸ்நானஞ்செய்வித்து மடியாடையளித்து பூசைக்கு வேண்டிய தூபதீபங்கள்தந்து பூசைமுடிந்தவுடன் கணவனுக்குப் பிரசாதமளித்துப் புசித்தானவுடன் சேஷான்னத்தைத் தேவாமிர்தமாகப் புசித்து அதிதிகட்கு அன்னபானுதிகளை யுதவி நாயகனு

க்கு தொண்டுசெய்துக்கொண்டு காலங்கழித்து வருகிறபோது ஒரு நாள் நாரதர் துரோணச்சாரியரிடத்திற் கெழுந்தருள அவரைக் கண்டு துரோணர் எதிர்கொண் டழைத்துவந்து ஆசனத்தில் வீற் றிருக்கச்செய்து சோடசோப சாரங்களால் பூசித்து சாஷ்டாங்க தெண்டனிட்டெழுந்து நின்று ஓ சுவாமி தங்கள்வரவு எங்கட்கு நல்வரவாயிற்று தெரிசனத்தால் யாங்கள் புனிதராயினோமென்று பலவாறு புகழ்ந்துக்கொண்டாடிப் புசித்துபோகும்படி வேண்டி னர். நாரதரும் அக்கருத்துக்கிசைந்து யிருக்கிறபோது துரோணர் தன் மனைவியை யழைத்து அடி பெண்ணே நம்முடைய ஆசிர்மத் திற் கெழுந்தருளின நாரதமாமுனிவர் சந்தோஷமடையும்படி பிர சாதமளிக்கக் கடவாயென்ன அந்தக்கிருபியும் சுசியாகி மடிவஸ் திரந் தரித்து சமையல் கட்டிற்குச் சென்று அறுசுவையுடன் அன் னஞ் சமைத்து நாரதரை யழைத்துச் சகல உபசாரத்துடன் பிர சாத மளித்துப் பலவாறு தோத்திரம் புரியும்போது நாரதர் புசித் துக் கிருபிக்குப் பல ஆசிகள் வழங்கி விடைபெற்று மனஞ்சென்ற படி நடந்து கைலாசத்தை யடைந்து சாம்பவமூர்த்தியைக்கண்டு தெரிசித்து அவரால் நேமிக்கப்பட்ட ஆசனத்தின்மீது வீற்றிருந் தார். அப்போது சிவபெருமான் நாரதரை நோக்கி ஓ நாரதரே பூலோகத்தி லேதேனும் விசேஷம் உண்டோவென்று வினவக் கேட்டு நாரதர் சிவபெருமானை நோக்கி ஓ சுவாமி தபோவனத்தில் துரோணசாரியாருடைய மனைவிக் கிருபியென்றொரு மங்கையிருக் கின்றனள். அவளுடைய நற்குண நற்செய்கையும் பதிபக்தியும் அதிதிகளைப் பூசிக்கும் இச்சையும் உபசாரத்தின் அருமையும் அம் மாதின் சுந்தரவடிவமைந்தப் பெருமையும் நானென்னென்றுசொ ல்லுவேன் அம்மங்கையைப் புகழுவதற்கு என்னெருநாக்கு போ தாதுபோதாது என்ற நாரதர் வசனங்களைக்கேட்டுசாம்பவமூர்த்தி சந்தோஷித்து நாமே சென்று அம்மங்கையின் பதிபக்தியையும் அதிதிபூசையின் விசுவாசத்தையுங் கண்டு தெளியவேணுமென் னுங் கருதி நாரதருக்கு விடைதந்தனுப்பி ஒருநாள் ரிஷபவாகன ரூடராய் அவ்வனத்திற் கெழுந்தருளி துரோணருடைய ஆசிர்மத் தை நோக்கி ரிஷபவாகனத்தை விட்டிறங்கி சன்னியாசி வேடம் பூணந்து போகிறபோது அச்சன்னியாசியை துரோணர் கண்டு விரைந்தோடி வந்து எதிர்கொண்டழைத்துச் சென்று ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து சோடசோபசாரங்களுஞ் செய்து அவர் திரு வடிகளில் விழுந்தபணிந்து நின்று ஓ சுவாமி தங்கள் தெரிசனத்தி

ஞலேயாங்கள் புனிதர்களாயிலேம் தங்களேப்போன்றபெரியோர் களே தெரிசிக்க நாங்களென்ன புண்ணியஞ் செய்தோமோ வென் றுப் பலவாறு புகழ்ந்துக் கொண்டாடுகிறபோது சிவபெருமான் பல ஆசிகள் வழங்கி ஓ புண்ணிய புருஷரே யான் மெத்தப் பசியி னல் மெலிந்து முகம்வாடித் தகுந்த அன்பரைநாடி உன்னிடம் வந்தேன் என்றுப் பசிகொண் டவருக்கிருக்கும் முகவாட்ட முதலான குறிகளேக்காட்டி நடந்தார். அதைக்கண்டு, துரோணர் ஜீவகாருண்ணியமும், பூததயையு மேடையவராகித் தன் மனேவியா கியக் கிருபியை அழைத்து அடி பெண்ணே! இந்த அதிதிக்கு அன்னம்படைத் துபசரியுமென்று நேமித்து ஸ்னைத்திற் கெழுந் தருளினர். கிருபியுங் கணவன் கட்டளேயின்படி அதிதியை யழை த்துச் சென்று தக்க ஆசனத்தின்மீது வீற்றிருக்கச்செய்து அறு சுவை யன்னமளித்து சோடசோப சாரங்கள் புரியும்போது சிவ பெருமான் கிருபியை நோக்கி எனக் கிப்படி அன்னம்படைத்தால் திருப்தியாயிராது பின்னெப்படிப் படைக்கவேணுமென்றுல் மீ கிருவாணியாகி எனக்கன்னம் படைத்தால் எனக்குத் திருப்தியா யிருக்குமெனக் கேட்டுக் கிருபி யிப்படியு மெங்காகிலும் நிருவாணி யாகி அன்னம் படைப்பவர்களு முண்டோ இதுவென்ன விந்தை யாயிருக்கின்றது ஆகிலும் கணவன் நேமித்தபடி இவர் மனம் போல அன்னம் பரிமாராவிடில் கற்பிக்கு அழிவுவந்திடும். கணவ ன் சொல்லே தெய்வ வாக்காக யெணி நடப்பவளே கற்பில் மிகு ந்த மங்கையாதும் அப்படிக்கு நடவாதவள் விபசாரி யாகுமெனக் கருதி அம்மங்கை யுடனே ஆடையைக் களேந்துத் தன் தியேகத் தை அளகபாரத்திஞல் மரைத்து ஒரு கிண்ணத்தில் அன்னமுத லான கரிவகைகளேயும் வைத்துத் தன் பிராணநாதருடைய திரு வடித் தாமரைகளே வந்தித்துச் சிந்தித்துக் கிண்ணத்தைக் கையி லேந்திக்கொண்டு அன்னம்போல நடந்துவந்து சன்னிசிக்கு ஊட்ட முயலுகையில் சன்னியாசியாகிய சிவபெருமான் அம்மங் கையின் ரூபத்தைக்கண்டு விரகங்கொண்டுத் தன் வீரியத்தை அம் மங்கையின் கையிலிருக்கும் அன்னத்தினில் விட்டு மாயமாய் மறை ந்துபோயினர். இதைக்கண்டு அம்மாது வியப்படைந்து சன்னியா சியாயிருந்தால் இப்படியுங் காமாபேக்ஷையுடையவர்களா யிருப் பார்களோ இவர் சகலமுந் துறந்த துறவியைப்போல வேடம் பூனேந்தவரே யன்றிச் சன்னியாசி யல்லவென்றுணர்ந்து வீரியம் நிறைந்த அன்னத்தைத் தன் கணவன் சவாரிசெய்யும் பெட்டைக்

குதிரையின் முன்வைத்தனள். அக் குதிரையானது அவ்வன்னத்தைப் புசித்தது இதற்குள் துரோணர் வந்து நடந்த செய்தியை மனைவி சொல்லக்கேட்டு இவ்வுருவத்துடன் வந்தவர் யாரோ அறியவேணுமெனக்கருதி தன் க்ஞான திருஷ்டியினால் நோக்கினார். வந்தவர் சிவபெருமா னென்றுணர்ந்து ஓ பெண்ணே! நம்முடைய ஆசிர்மத்திற்கு அதிதியாய் வந்தவர் பரமசிவமே உனனுடைய கற்பின் னிலைமையையறியவெண்ணி சந்நியாசிவேடம் பூனைந்துவந்தவராகும் என்று சொல்லிக் கொண்டிருக்கையில் சிவபெருமானது வீறியமானதினால் அக்குதிரையானது உடனே ஒரு புதல்வனையீன்றது, அப்புதல்வனை யொரு தாம்பாளத்தினி லேந்திக்கொண்டு துரோணர் பார்த்து சகலலட்சணங்களும் பொருந்தி யிருக்கும் அப்புதல்வனை மெத்தப்பிரியமாய்ப் பாலூட்டி வளர்த்துக்கொண்டு இவனுக்கென்ன நாமகரணஞ் செயவிக்கலாமென்று யோசிக்கையில் ஆகாயவாணி, துரோணரைக்கூவி ஐயாபரத்துவாசருடையதனயரே இப்புதல்வனுக்கு அசுவத்தாமனென்று நாமகரணஞ் செய்வியுமென்று மறைந்தனள் அந்தப்படியே துரோணர் மெத்தகளிப்புடன் அத்தனையனுக்கு அசுவத்தாமனென்று நாமகரணமிட்டுத் தானும தன்மனைவியும் அச்சிறுவனை அதிகப் பிரியத்துடன் வளர்த்து வந்தனர்கள். இதில் கிருபி அச்சிசுவுக்குப் பாலூட்டி நீராட்டி ஜமதிட்டி மலர்சூட்டி நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாகப் போஷித்து அச்சிறுவன்மீது அதிக ஆசையுடையவராகி விலைப்பால் வாங்கியூட்டி வருகையில் நாளுக்குநாள் அப்பாலகன் விருத்தியடைந்துப் பால்போதாமல் குழந்தையின்திரேகம் இளைத்துப்போவதைக்கண்டு கிருபி தன் கணவனைநோக்கி ஓ! சுவாமி! இரவில்பால்வார்த்து வருவதால் பிள்ளைக்குப்பால் போதாமல் நாளுக்குநாள் இளைத்துப் போகிறான். தங்களுச்கு வெகு பேர்கள் மாணாக்கர்கள் இருக்கின்றார்களல்லவா யாரிடத்திலாகிலுஞ் சென்று ஒரு பசுவுகேட்டு வாங்கி வந்தால் மெத்த நலமாயிருக்கு மல்லவாவென்று சொல்லக்கேட்டு, துரோணர் அடிபெண்ணை பாக்கியவதி நல்லசமயத்தில் நினைப்புக்கூட்டினாய் இனிகுறைவில்லை என்று சொல்லத்தொடங்கினர்

கேளும் மாதுசிரோமணி! எனக்குப் பாலியசினேகனாகிய பாஞ்சாலதேசத்தரசன் என்னிடத்தில் வில்வித்தைகளில் சில அருமையான வித்தைகளைக் கற்றுக்கொண்டான் அப்போ தென்னிடம் அவன் சொல்லியதாவது, இப்போது நான் இளவரசாயிருக்கின்

றேன் நான் பட்டாபிஷேகனாகியிருக்கிறபோது தாங்கள் வந்தால் வேண்டிய பொருளளிக்கிறே னென்று சொல்லியிருக்கின்றான். ஆகையால் நாம் அததேசத்தை யடைந்தால வேண்டியமட்டும் ஆதரிப்பான் இதிற் சந்தேகமில்லை இனித்தாமதஞ் செய்யாமல் நாம் போகலாம் வருவா என்றழைத்துக்கொண்டு புதல்வனுடன் பாஞ்சால தேசத்தை நோக்கி நடந்து சில நாளையில் பாஞ்சால தேசதத்தை யடைந்து அங்கோரிடத்தில் தன் மனைவியையும் பிள்ளையையும் நிருத்தித் தான் மாத்திரம் புறப்பட்டுத் தனியேசென்று அரசனுடைய சபையை யடைந்து துருபதனை நோக்கி, ஓ அரசனே! பாலியசினேகனாகிய என்னை மறந்துவிட்டீரோ நாம் யொருவரை யொருவர்பார்த்து நெடு நாளாயினதால் தங்களுக்கு மாதியாயிருக்கின்றதுபோல் தோன்றுகின்றது ஆகிலும் பழைய நாளையசினேகித மூண்டாயினதற்குக் காரணஞ் சொல்லுகின்றேன். அதைக் கேட்டாகிலுங் கியாபகம் வருவித்துக் கொள்ளுமையாவென்று சொல்லுகின்றார் ஓய் பாஞ்சாலதேசத்தை யாளும் துருபதமகாராஜனே, முனனம் யான் அக்கினிகோத்திர முனிவரிடத்தில் வில்வித்தைக் கற்றுக்கொண்டிருக்கையில் நீயும் அவரிடத்தில் வில்வித்தை கற்றுக்கொள்ளும் பொருட்டு அந்த அக்கினிகோத்திர முனிவரை வேண்டிக்கொள்ள அவரும் மனமிளகியுனக்கும் வில்வித்தையைக் கற்பித்துக்கொண்டிருக்கிறபோது என்னிடத்திலிருந்த சில அருமையான வித்தைகளை கற்றுக்கொண்டபோது நீ சொல்லிய தென்னவென்றால் நானிப்போது இளவரசாகயிருக்கின்றேன் தக்க வயதுவந்து பட்டாபிஷேகனாகி அரசாளுகிறபோது தாங்கள் வந்தால் உமக்கு வேண்டிய ஆடையாபரணங்களுந் திரவியங்களும் மனக்களிப்படையும்படியாகக் கொடுத்து ஆதரிக்கிறேனென்று சொன்னீரல்லவா, இதினாலாகிலும் பாலியசினேக நென்று உறுதியாக நம்பும் என்ற துரோணரைநோக்கி, ஓய் பயித்தியம்பிடித்தப் பிராமணா! என்னென்னமோ வாயில் வந்தபடி யெல்லாம் உளறுகின்றாய் வருமை நோயினால் மனம்போனபடி பிதற்றுகின்றாய் நானெப்போது உம்மிடத்தினில் அருமையான வில்வித்தைக் கற்றுக் கொண்டேன், எனக்கு அக்கினி கோத்திர முனிவர் கற்பித்த அருமையான வில்வித்தையைப் பார்க்கிலும் உம்மிடத்தினில் அருமையான வில் வித்தையை நான் கற்றுக்கொண்டே னென்பது பொய்யானவார்த்தையே, நானுன்னைப் பார்த்ததேயில்லை என்றான். இதைக்கேட்டு துரோணர் மெத்த வருந்தமடைந்து தனக்குண்டா

னவருமையினால் அரசன் சொல்லிய மொழிகளுக்கும் கோபங் கொள்ளாமல் பெருமையுடன் பின்னும் அரசனைநோக்கி ஓ பூபாலரே எனக்கு வேறொன்றும் வேண்டியதில்லை பிள்ளைக்குப் பாலில்லாமல் மெத்த இளைத்துப் போகுமான் அவன் பொருட்டு ஒரு பசுவு கொடுத்தால்போதும் இந்த சமயத்தில் இவ்வளவுஉபகாரஞ் செய்தால், மெத்த புண்ணிய முமக்குண்டாகுமெனக்கேட்டு, அரசன் வெகுண்டுக் கோபமீறி ஆரடா இங்கே தூதர்கள் இந்தப்பிராமணனைப் பிடித்துத் தள்ளிக் கொண்டுபோய் துவாரத்திர்க் கப்புரம் விடித்துவாருங்களென்று கட்டளை யிட்டான். அப்போது துரோணர், சினமிகுந்து அடா! துருபதா! என்னுடைய மாணாக்கனால் உன்னைப்பிடித்துத் தேர்க்காலில் கட்டிக்கொண்டு வரும் படியாகச் செய்வதுமன்றிப் பெருத்த அரசர்கள்முன் உன்னை அவமான மடையும்படியாய் செய்கிறேனென்றுசொல்லித் தூதர்கள் தன்னருகில் வராமுன்னஞ் சபையைவிட்டு வெளிப்பட்டுத் தன் மனைவிமகனிருக்குமிடம் வந்து நடந்த செய்திகளை யொன்றொழியாமற் சொல்லி விசனப்பட்டார். இப்படி விசனப்படும் தன்பிராணநாயகரை நோக்கி அந்தக்கிருபி ஓ! சுவாமி! இதற்காகவா தாங்கள் விசனப்படுகின்றீர். அசத்தியவானகிய திருபதன் னுட்டை விட்டு அஸ்தினபுரத்திற்குப் போவோமாகில் நமக்கும் பிள்ளைக்கும் மெத்த சௌக்கிய முண்டாகுமென்று சொல்லக்கேட்டுத் துரோணர் தன் மனைவியின் சொற்படி பிள்ளையுடன் அஸ்தினபுரஞ் சேர்ந்துக் குருகுல மைந்தர்கள் நூற்றைவருக்கும் வில்வித்தைக் கற்பித்துக்கொண்டு பீஷ்மாசாரியரால் யாதொரு குறையுமின்றி சுகித்தனர்கள் இப்படிக்கிச் சிலவருடகாலம் நடத்திக்கொண்டிருக்கையில் ஒருநாள் பீஷ்மர், துரோணரைநோக்கி ஐயா! வில்லாசிரியரான துரோணசாரியரே! தேவரீர் இந்த சமஸ்தானத்தைவிட்டு இனியெங்கும் போகவேண்டாம். எங்களைப்போல நீரும் இங்கிருந்து நீதிகளை யோதிக்கொண்டிருமென, அந்தப்படியே துரோணர் அஸ்தினபுரத்திலேயே மனைவி கிருபியுடனும் தனையன் அசுவத்தாமனுடனும் யாதொரு குறையுமின்றி வெகு சுகமாக வசித்துக்கொண்டிருக்கையில், பாண்டவர்களுக்குந் தரியோதனனுக்கும், பகை மேலிட்டு பதினெட்டுநாள் பாரதப்போர் நடக்கிறபோது இடையில் தானுஞ் சேனாதிபதியாகி அர்ச்சுனனுடன் போர்புரிந்துக் கொண்டிருக்கிறபோது தருமராஜன் வாக்கினால் அசுவத்தாமா அதாவென்ற சொல்லைக்கேட்டுத் தன்புதல்வனகிய அசுவத்தாமன்

இறந்துபோய்விட்டான் இனிநா மிவ்வுலகினி லிருப்பதினாலென்ன பயன் என்று திடங்கொண்டு அர்ச்சுனனுடன் போர்புரிந்து, அவனுடைய பாணத்தினால் உயிரிழந்தார். இதைக்கேட்டுக் கிருபி, ஆராத்துயர்க்கடலில் மூழ்கினவளாகித தன் பிராணநாயகர் இறந்துக்கிடக்கும் ரணக்களத்தை யடைந்து ஓ என்பிராண வல்லபரே அடியாளைத தனியேவிடுத்து நாங்கள்மாத்திரம் வீரசொர்க்கத்தை யடைவது நீதியோ பாரியாளைவிட்டுப் பரியாளாகிய நீர் மாத்திரம் போகலாமோ, உம்மைவிட்டு யான் மாத்திரந் தனித்திருப்பது தருமமோ, தாங்கள்போனகதியை யானும்வந்தடைகிறேன்.என்று சொல்லி பீஷ்மரிடஞ்சென்று ஓ ஐயா அடியாளுடைய நாயகனுடன் யானும் உடன்கட்டையேகச் சம்மதிப்பட்டிருக்கிறேன், தயை செய்துச் சீக்கிரம் தகனஞ் செய்விக்க உத்தரவளிக்க வேணுமென்று வேண்டிக்கொள்ள, பீஷ்மரும், அக்கருத்துக்கிசைந்து துரோணாசாரியாருக்கு அசுவத்தாமனுல் பிரேதசம்ஸ்காரஞ் செய்யும்படி நேமித்துப் பிரேதத்திற்குரிய சடங்குக ளனைத்தையும் நடத்தி மயான பூமியிற் சேர்த்து கட்டைமிட்டைகளை யடுக்கி துரோணசவத்தை யதின்மீது வளர்த்தி அசுவத்தாமனுல் கொள்ளியிட்ட போது கிருபி ஸ்னானாநுஷ்டானங்கள் முடித்து சுசியுடன்வந்துத் தன்னுயகனுடன் தானும் படுத்துக் கட்டைமிட்டைகளை மேலே வாரிப்போட்டுக்கொண்டு பிராண நாயகருடன் தானும் வெந்து சாம்பலாயினள்.

கிருபி கற்பின் மகத்துவம் முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

சுருந்தலை கற்பின் மகத்துவம்.

(5) அனேக முனிவர்கள் தவமியற்றிக்கொண்டிருந்த இமயமலைச்சாரலுக் ருகினில் கண்ணுவ மகாமுனிவர் தவமியற்றிக் கொண்டிருக்கும் அடர்ந்த வனமொன்றுளது. அவ்வனத்தினில் பிரமக்ஞானியாகியும் சாபானுக்கிரக சாமார்த்தியமும் சகல கலைகளில் வல்லவரும் வில்வித்தைகள் முதலான அரசர்களுக்குவேண்டிய பலவித்தைகளிலுஞ் சிறந்தக் கண்ணுவமாமுனிவர் ஒருநாள் இமயமலைச் சாரலுக்கேகியபோது அங்கொரு பாகத்தில்குழந்தையழுகுரலோசையைக் கேட்டு அருகிற் சென்றுபார்த்து அப்பெண்குழந்தையின் அழகையும் அக்குழந்தைக்குச் சூரியவெப்பம்

படாமல் சகுந்தலைப் பக்ஷிகள் தங்கள் சிறகுகளை விரித்து நிழலாகித் காப்பாத்திக் கொண்டிருப்பதையுங் கண்டு, ஆச்சரியமடைந்து பூததயவுண்டாகி அக்குழந்தையை எடுத்துவந்துத் தன் புதல்வியைப்போல அதிகப்பிரியமாய் காப்பாற்றிக்கொண்டு வந்தனர். அப்பெண்குழந்தையும் வளர்பிறைச் சந்திரனைப்போல நாளுக்குநாள் செல்வமாக வளர்ந்துப் பேதைப் பருவமும் பெதும்பைப் பருவமுங்கடந்து மங்கைப்பருவத்தை யடைந்திருக்கிறபோது கண்ணுவமுனிவரிடம்வந்து தெரிசித்துக்கொண்டுபோகும், சில முனிவர்கள் அப்பெண்ணைக் குறித்து கண்ணுவரை நோக்கி ஓ முனிநாதரே இப்பெண்ணை ராஜகுமாரர்கள் யாருக்கேனுங்கொடுத்து மணஞ்செய்விக்காமல் இப்படி வைத்திருக்கடபோமோ என்றனர்கள். அதைக்கேட்டு கண்ணுவமுனிவர் அம்முனிவர்களைநோக்கிப் பின் வருமாரு சொல்லக்கேட்டு முனிவர்கள் யாவருஞ் சந்தோஷசித்தர்களாகித் தங்களிருப்பிடஞ் சேர்ந்தனர்கள் இப்படி முனிவர்களுக்குச்சொல்லி கண்ணுவமாமுனிவர் ஸ்நானதுஷ்டானங்கள் செய்துப் பூசைமுடித்துக் கனிவர்க்கங்களைப் புசித்துப் பகவானுடைய குணானுபவஞ்செய்துக் கொண்டிருக்கையில் திவ்யக்ஞான சொரூபராகிய சதானந்தர் எழுந்தருள அவருடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்து தன்னுடன் வரும்படி சதானந்தர்வேண்டிக் கொள்ளக் கண்ணுவமாமுனிவர் அவர் பின் சென்றார். அப்போது அஸ்திநாபுரத்தையாளும் துஷ்டியந்தமகாராஜன், மந்திரி, சாமந்திரிகள், வேடர், வில்லியர், வலைஞர் முதலாகச் சகலசேனைகளும் புடைசூழக் காட்டைநாடி வேட்டையாடி விடாய்ப்பட்டு கங்கா நதியில்மூழ்கி விடாய்தீர தாகமருந்தி அதைவிட்டுப் புறப்பட்டு வருகையில் அங்கங்கு யாகசாலைகளும் ஓமகுண்டங்களும் வேதகோஷ்டங்களும் முனிவர்கள் கூட்டங்களுங் காணப்பட்டது. அதைக்கண்டு துஷ்டியந்த மகாராஜன் தனித்து ஒருவனுகப்புரப்பட்டுவந்து கண்ணுவமாமுனிவர் ஆசிர்மத்திற்குட் புகுந்தான். அங்கு அல்குலேத்தேராகவும், இரண்டு தனங்கள் யானையாகவும், இடையானது சிங்கமாகவும், புருவம் வில்லாகவு , இருகண்களைச் சரமாகவும், வீரகடகம் பூணந்து இரதிதேவி மன்மதன்மீதுயுத்தஞ் செய்ய எதிர்த்து வருவதுபோல ஒரு கன்னிகை யரசன்முன் தோன்றினாள். பெண்களுக்கெல்லாம் சிரோரத்தினமாகப் பிரகாசிக்கின்ற பெருமாட்டியைக்கண்டு அரசன் மையலாகித் திடபிரமை கொண்டு சற்று மனசையாமல் சித்திரப்பதுமைபோல் நின்றுத் தன்

கல்வியிற் நிறத்தால் மனதைக் காமத்தின்வழி செல்லவொட்டா மல் நிறுத்தி இது முனிவர்கள்வசிக்கும் ஆசிர்மம், இங்கு இந்தக் கன்னிகையைக்கண்டு மயங்குவது நமக்குத் தகுதியல்ல, நாமிக் கன்னிகையருகிற் சென்று வாய்மொழியறிந்து அதற்குமேல்நமது கருத்தை வெளியிட வேண்டுமென்று கருதி அக்கன்னிகையின் அருகிற் சென்றான் அப்போதக் கன்னிகை என்ன யோசிக்கிரா ளென்றால், முன்னம் நமது தந்தையாகியக் கண்ணுவரும், முனி வர்களும் இவ்வரசனது பெருமையும் திருவுருவத் திறத்தினையும், பேசிக்கொண்டிருந்தார்களல்லவா அதனாலும் பிரார்த்துவ சம்பந் தத்தினாலும் வந்த அரசனே துஷ்டியந்த மகாராஜ னென்றுத் தன் புத்தி கூர்மையினாலுணர்ந்து ஆசிர்மத்திற்குள்திடுக்கெனப்புகுந்து ஒரு பொற்பீடமெடுத்துவந்து அதிலரசனே வீற்றிருக்கச்சொல்லி நாணத்துடன் தூண்மரப்பில் நின்றிருந்தனள். அரசன் அக்கன்னி கை கொடுத்த பொற்பீடத்தின் மீதிருந்துக் கண்ணுங்கருத்தும் அக்கன்னிகையின் அழகிய கடலிலாழ்ந்திருந்த போதிலும் பெரி யோர்களின் பழக்கவாசனையினால் கருத்தைக் காமத்தின்வழியிற் செல்லவொட்டாமல் அக்கன்னிகையைப் பார்த்து ஒ தோகைமயி லே தானிக்குங் குயிலே இவ்வாசிரமத்திற்குத் தலைவராகிய கண் ணுவமகாமுனிவர் எங்கற்றரென்று வினவ அக்கன்னிகை ஒமகா ராஜாவே, அவர் இன்னேரவரையினி லிங்குதானிருந்தார், இப் போதுதான் திவ்யக்ஞானசொரூபராகிய சதானந்தர் வந்தழைத் துப்போயினர். இன்னு மிரண்டு மூன்று நாழிகைக்குள் வருவார் யென்றுகூற, அரசன் ஒ பெண்கள் நாயகமே முனிவர்களுக்குள் சிறந்தவர் கண்ணுவமாமுனிவர் இக்கண்ணுவருடைய ஆசிர்மத் தில் தனித்து இருக்கவேண்டிய காரணமென்ன, நீ யார்! உன்பெய ரென்னவென்று வினவ, அசற்குக்கன்னிகை ஒ அரசனே, நான் கண்ணுவருடையப் புதல்வி, என்பெயர் சகுந்தலையென மொழிந் தாள்.

அதை யரசன்கேட்டு திடுக்கிட்டு ஆ! பெண்ணரசி! ஆணவம், மாயை, காமிய மென்னு மும்பலங்களை அடக்கினவர்களில், மிக வுஞ் சிறப்புற்று பிரமசாரியாகியும் பரிசுத்தமனத்தினையுடைய கண் ணுவமகாரிஷிக்கு நீ புதல்வியாகிய விருத்தாந்தத்தையும் தன க்கிந்த பேர் வந்த வரலாற்றையும் விளங்க உறைக்கவேண்டு மென்ன அசற்றந்த சகுந்தலை ஒ அரசனே, சில நாளைக்கு முன்னம் இவ் வாசிர்மத்திற்குச் சதானந்தர் வந்தார். அப்போ தவரைநான் தெரி

கித்தேன் அவரென்னைப்பார்த்து இக்கன்னிகை யாரென்று கண்
ணுவமுனிவரைக்கேட்டார் அப்போதக்கண்ணுவர், என் விருத்
தாந்தத்தை யெல்லாம் சதானந்தருக்கு அறிவித்தார் அப்போது
யானருகிலிருந்து கேட்டேன் அதை அக்கண்ணுவர் கூறியபடி
சொல்ல எனக்கு சக்தியில்லாவிட்டாலும் தெரிந்த மாத்திரங்
கிஞ்சித்தெடுத்துரைக்கின்றேன் என்றுசொன்னன் கேளும் ராஜ
மார்த்தண்டராஜவத்தண்ட ராஜகெம்பிரரே தேவர்களும், முனி
வர்களும் மற்றுமுள்ளப்பிரஜைகளும்துதிக்கின்றசிறப்பினையுடைய
தவகிரேஷ்டராகியும் பிரமரிருஷ்டிக்குப்பதில்ரிருஷ்டிசெய்த மிகு
ந்தபராக்கிரமசாலியாகியும்வாக்கியசிலாக்கிபவாஞகிய விஸ்வாமித்
திரர் இமயமலைச்சாரலில் வந்து ஐம்பொறிசெல்லும்புலனை யொரு
வழிப்படுத்திஅறிவைப்பிரமத்தினிடத்திற்செலுத்தி அனேகாலம்
அகோரமாக அருமையான தவஞ்செய்திருந்தார், அத்தவத்தினி
லெழுந்த அக்கினி மூன்றுலோகங்களையுந் தகிக்கத்தலைப்பட்டது
அப்போது சொர்க்கலோகத்தையாளும் இந்திரன் இந்த அக்கினி
யினல் கனவருத்தமடைத்து முப்பத்து முக்கோடிதேவர்களையும்
நான்பத்தெண்ணுபிரம் முனிவர்களையும் கின்னரர், கெருடர், கிம்
புருடர், கித்தவித்தியாதரர், கெந்தருவர் முதலான யாவரையும்
அழைப்பித்து வியாழபகவானுடன் இங்காதனத்திலிருந்து வந்த
பரிஜனங்களை நோக்கிச்சொல்லுகின்றார் ஒ தேவர்களே முனிவர்
களே எக்காலத்திலும் கண்டறியாத இந்த அக்கினி எவ்விடத்திலு
தித்தது, இதனல்சொர்க்கமெல்லாங்கருகி கனவருத்த மடைகிற
போது பூலோகம் எவ்வாறு அவஸ்தைப்படும் ஆகையால் இந்த
அக்கினி எங்கிருந்துண்டாயிற்று அதையறிந்துரையுங்களென்று
னவ, தேவர்கள் முதலானேரும் இந்திரனை வணங்கிச்சொல்லு
கின்னர்கள் ஒ எங்களாண்டவனே, இந்த அக்கினியானது இமய
லைச்சாரலில் விஸ்வாமித்திரா அகோரமான தவஞ்செய்கிறர் அந்த
வத்திலெழுந்த அக்கினியாகுமிது இதைதணிக்கயாவராலு முடி
யாது இதற்குள் தாங்களே ஒருயுக்தி செய்யவேணுமென்றுகூற
அதற்கந்தஇந்திரன் அந்த விஸ்வாமித்திரன்மற்றமுனிவர்கள்போல
ல்ல பிரமரிருஷ்டிக்குப்பதில்ரிருஷ்டிசெய்யும்வல்லமையுடையவன்
அவன்தவத்தை யழிக்க நாமெல்லோரும் ஒருமுகமாய்க்கூடி எத்
தனித்தபோதிலும் நம்மையெல்லாம் அவன் எறித்துச்சாம்பலாக்
குவான் வடவையை எவிலல் அஞ்சாமலதனையுட் கொள்ளுவான்
சப்தமேகங்களையும் சண்டமாருதத்தையும் விட்டால் அவைகளை

யும் அரைநொடியில் தபாக்கினியினால் கொளுத்தி விடுவான் இந்த அண்டாண்டப் பிரமாண்டங்களிடிந்து விழுந்தாலும் பூலோகஞ் சொர்க்கலோகம், சுவர்னலோகம் பூலோகமாகித் தலைகீழானாலும் அஞ்சாத திடமனதுடையவன் இவன் தவத்தை யழிப்பதற்கு ஸ்திரீகளே காரணமல்லால் வேறொரு பதினத்தினு லழிக்கமுடியாது என்று தீர்மானித்து மேனகையை அழைத்து வரும்படித் தூதர்களுக்குக் கட்டளையிட்டான் தூதர்கள் மேனகையினிடத் திற்சென்று தேவராஜன் கூறியவற்றைச் சொல்ல அதுகேட்டு மேனகை அதிக விரைவில் வந்து இந்திரனைக்கண்டு வணங்கி ஓ சுவாமி! அடியாளை யழைப்பித்தகாரணத்தைத் திருவுளம் பற்ற வேணுமென, இந்திரன்மேனகையைப்பார்த்து ஓபெண்ணே இமய மலைச்சாரலில் விஸ்வாமித்திரன் அகோரமான தவஞ்செய்கிறான், அத்தவத்தி லெழுந்த அக்கினி பூலோகத்தையுஞ் சொர்க்கலோக த்திலிருக்கின்றவர்களையும் வருத்து கின்றது ஆகையால் நீவிரை வாகச்சென்று அந்த விஸ்வாமித்திரன் தவத்தையழித்துவரவேண் டுமென் றுரைக்கக்கேட்டு மேனகை திடுக்கிட்டு ஓ ஸ்வாமி, அந்த விஸ்வாமித்திரருடைய தன்மையையெல்லாந் தேவரீர் நன்றாய்த் தெரிந்திருந்தும் புலியினிடத்து மானையனுப்பி வைப்பதுபோல் என்னையனுப்பிவைக்க எத்தனிப்பதை யோசித்தால் தங்களுக்கு நான்மெத்தகுற்றஞ்செய்ததாகவும்அதற்கு தெண்டனைவிதிக்காமல் நயத்தில் தெண்டனைவிதிக்க நினைத்ததாகவும் தோன்றுகின்றது என்மனமறிய தங்களுக்கு நான் ஒருகுற்றமுஞ் செய்ததில்லையே என்றுபிரியவசனம்புகல இந்திரன்நகைத்து ஓபெண்ணே நீ ஒரு குற்றமுஞ்செய்ததில்லை உலகத்திற்கு ஒருகெடுதிவந்தால் அதனை அரசன்போக்கி உலகத்தையாதரிக்கவேண்டும் இப்போது உலகத் திற்கு விஸ்வா மித்திரனால் வந்த கெடுதியை நானல்லவோ நீக்கவேண்டும் ஆகிலும், இக்கெடுதி என்னால் நீக்க பட்ட தல்ல, அது உன்னால் நீங்கும் அதெப்படி யென்றால் சினத்தினுங் கொலைத் தொழிலினும் சாபத்தினும் தவத் தினும் ஒவ்வொருவர் அதிகப்பட்டவர்களாக யிருப்பதுண்டு, இச்செய்கைகள் ஒருவர்க்கேயிருந்தாலும் பெண்ணென்றவிடத்தில் இந்த நான்குஞ் செல்லாது ஆகையால் இந்த வேளையில் நாங்க ளெல்லோருஞ் சுகப்படும்படி நீ அந்த விஸ்வாமித்திரனிடத்திற் சென்று உன் வல்லமையால் அவனை மயக்கித்தவத்தையழித்து வர வேண்டுமென்றுகூற, மேனகை இந்திரனை வணங்கி, ஓ ஸ்வாமி

ஐம்புலனையும் அடக்கி அறிவைப்பரப்பிரமத்தினிடத்திற்செலுத்தி
ச்சித்திரப்பதுமைபோல்அசைவின்றியோகத்திலிருந்தாலும் அவர்
கனையும் அரைநொடியில்கைவசப்படுத்தலனக்குத்தெரியும்இதோ
சென்று விஸ்வாமித்திரன் தவத்தை யழித்து வருகிறே னென்று
விடைபெற்றுத் தன்னரண்மனைக்கிவந்து ஸ்நானஞ்செய்துவஸ்தி
ராபரணங்களணிந்துக் குங்குமம் தரித்து கலவைச் சாந்தணிந்துப்
பரிமளவாடைவீச அரண்மனையைவிட்டு வெளிப்பட்டு கண்டவர்
கள்காமவெறிகொண்டு திப்பிரமையுற்றுப்பின்தொடரும்படியான
ரூபச்சாயலுடன்வந்து இமயமலைச்சாரலில் விஸ்வாமித்திர முனிவர்
தவஞ்செய்யுமிடத்திற்கெதிரில் தென்றல்காற்றுவாடை யவர்மீது
படும்படி நின்றாள்.

இப்படியிவள் நின்றமாத்திரத்தில் முல்லை, யசோகு, முழுநீலம்
சூதகப்பூ, அல்லிமலரென்கிற ஐந்துபாணத்திற்குந்தலைவனுயமன்
மதராஜன், கவுசிகராஜனுகிய விஸ்வாமித்திரனை எதிர்த்து கரும்
புச்சிலையை வளைத்து வண்டு நாணியேற்றி குணத்தொனிசெய்து
முன்னம் இச்சையை விளைவிக்கின்ற தாமரைமலர்க் கணையை வில்
லில் தொடுத்து விஸ்வாமித்திரன்மீது விடுத்தான் அப்போது விஸ்
வாமித்திரன், தவநிலையை விட்டுக் கண்களை விழித்துப்பார்க்கும்
போது மேனகை, யணிந்திருக்கின்ற சந்தனம், புனுகு, கஸ்தூரி,
கற்பூரம், ஜவ்வாது, குங்குமம் இன்னும் பரிமளமிகுந்த நறுமலர்
வாடையையுணர்ந்தான் அதனை மதனராஜன்கண்டு இதுதான்
சமயமென்று கருதிப்பரபரப்பான காமவெப்பத்தையுண்டாக்கும்
சூதமலர்க்கணையைத் தொடுத்துவிடுத்தான் உடனே விஸ்வாமித்
திரன், தேள்கொட்டினவரைப்போலத் துடித்துத் தவநிலையை விட்
டெழுந்து பரிமளவாடை வீசும் திக்கைநோக்கிச்சென்றான் அங்கு
ஒரு சந்தனமரத்தடியிலிருக்கின்ற மேனகை, இந்தப்பூனையும் இந்
தப்பாலைக்குடிக்குமா வென்றப் பழமொழிக்கிணங்க, கடைக்கண்
ணோக்கத்தை விஸ்வாமித்திரன்மீது வைத்து மற்றோர்பொருளை
நோக்குவதுபோல அபிநயங்காட்டியிருந்தாள் இவளைவிஸ்வாமித்தி
ரன்கண்டமாத்திரத்தில் மதனராஜன், கணைத்துச்சிரித்து அதிக
உக்கிரத்துடன் சகிக்கக்கூடாதவருத்தத்தைத்தருவதாகும்அசோக
மலர்க்கணையைத்தொடுத்து விடுத்தான் அப்போது விஸ்வாமித்தி
ரன், மனங்கலங்கி மேனகையினருகிற்சென்று ஓ பெண்கள் பெரு
மானேமுனிவர்களுக்கு விரோதியாகிய மதனராஜன் என்னைமெத்த

துன்பத்திற்குள்ளாக்கினன் அதனை வெற்றிப்பெற என்னால் சக்தி யில்லாமல் அவன்பாணத்தினாலடிப்பட்டு முறிபட்டு ஓடிவந்தேன் தெய்வ கடாக்ஷத்தினாலே உன்னைக்கண்டேன் நீ மதனராஜன் மேட்டியாகிய மலையையும் அல்குலாகிய அகழியையும் தொடை யாகிய பொற் கம்பத்தையுமுடைத்தாகி நல்லகாவலைச்செய்யா நின்ற கண்களாகிய வாசலோடுங்கூடிய உன்மனக்கோட்டையை என்வசப்படுத்தி மதனராஜன், பாணத்தால் என்மார்பிற்றோன்றிய புண்ணுக்கும் அதனாலுண்டாகிய சுரத்துக்கும் ஸ்தனவேதுகொடு த்து இதழ் மருந்தளித்து ஆதரிக்கவேண்டுமென்று இனியவசனங் களால் பலவாறுவேண்டிக்கொள்ள அதற்கு மேனகை, விஸ்வா மித்திரரை வணங்கிச்சொல்லுகின்றாள். ஓ ஸ்வாமி நீரோகாமம், வெகுளிமயக்க மென்பவற்றை நீக்கிக் கருத்தைப்பிரமனிடத்திற் செலுத்தி சற்று மசையில்லாமல் தவத்திலிருக்கிறவர் உமக்கிந்தக் கருத்துண்டானதை நோக்கும்போது மெத்த ஆச்சரியமாகஇருக் கின்றது ஆனால் அபயமென்று வந்தவர்களை ஆதரிப்பதுமுறையே அம்முறைப்படி தேவரீர் கருத்துமகிழ என் மனக்கோட்டையை உமது வசமாக்கி முலைவேது கொடுத்து இதழ்மருந்தளித்து காம நோயைமாற்றுவேன் ஆனால் எனக்கொரு சந்தேகம் அதென்ன வென்றால் முனிவர்களென்றபோதே அவர்களெல்லாம் ஸ்திரீவிரோ திகள் நீரும்முனிவரானபடியால் உம்மை ஆதரிப்பதற்கு எனக்குக் கிஞ்சித்து அஞ்சிரிக்கையுண்டாயிருக்கின்ற தென்றுகூற விஸ்வாமி த்திரன்சிரித்து ஓபெண்கள்காயகமே நீசொல்லியதுசரிதான் விரோ தியாயிருந்தபோதிலும் அவ்விரோதி சகிக்கொணாத துன்பமடை ந்துவந்து முறையிட்டு அபயமென்று விழுந்தால் அவனைக்காப் பாற்றுவது முக்கியமானகடமை மேலும் உபகாரஞ்செய்கிறதினா லே அவமானம்வருகிறதேயில்லை, வந்தாலும் உபகாரஞ்செய்யச் சொல்லி நூல்கள் முறையிடுகின்றன ஆதலால் இத்தவேஷியில் என்னையாதரிக்க வேண்டுமென்று வணங்க மேனகை, மகிழ்ந்து விஸ்வாமித்திரன்களிப்புற மனக்கோட்டையை அவன்வசப்படுத்தி விஸ்வாமித்திரன்கொண்ட காமநோயை மாற்றினாள் அப்போது விஸ்வாமித்திரன் வீரிய விருத்தியால் மேனகையிடமாக நான் பிறந் தேன் அந்தமேனகை தெய்வப்பெண்ணாதலால் பிறந்த என்மேல் பிரீதியில்லாமல் ஓரிடத்தில்வைத்துப்போயினாள் விஸ்வாமித்திரோ முழுதுந்துறந்த முனிவராதலால் என்மேல் அன்புகூராமல் அவர் நினைத்தைக்கிசைந்த விடத்துச்சென்றார். பின்பு எனக்கு சூரியவெப்பத்

தினல் துன்பம் வராமம் சகுந்தலைப் பக்ஷிகள்வந்து இறகுபந்த லிட்டுபோதுகார்த்துவந்தன அவ்வழியாய்முனிசிரேஷ்டராகிய கண் ணுவர்வந்து என்னழு குரலோசையைக்கேட்டு அவருடையசிவந்த கரங்களிலென்னை யேந்திக்கொண்டு ஆசிரமத்திற்கெடுத்து வந்து சகுந்தலையென்று பெயரிட்டு மெத்த அன்புடன் வளர்த்துவந்தார் இது என் வரலாறு என்றுரைத்தனள் அரசன்கேட்டு பிரமானந்த மடைந்து இவள் கவுசிகராஜனுகிய விஸ்வாமித்திரனுக்கும் தெய்வ லோகப்பெண்ணுகிய மேனகைக்கும், பிறந்தவள் நாம்கொண்ட கருத்தின்படிஇவளைப்புணருதல்தகுதிதானென்றுமனதில் நினைத்து சகுந்தலையைப்பார்த்து ஓ பெண்கள நாயகமே நீ கவுசிகராஜனுகிய விஸ்வாமித்திரன் புதல்வியானதால்தடையின்றி உன்னையான்கூடத் தகும் ஆகையால் என்மீது கிருபைகூர்ந்து என்னையாதரிக்கவேணு மென்றுன் அப்போது சகுந்தலை மெத்த நாணமுற்று முகத்தைக் கோட்டிக் காலால் நிலத்தைக் கீறிக்கொண்டு பூமியைப்பார்த்த வண்ணமாய் ஒருவசனஞ் சொல்லுகின்றுள்

ஓ பூபாலரே இதுமுழுதும் துறந்த மஹாத்துமாக்களில் சிரே ஷ்டராகிய கண்ணுவர் ஆசிரமம் இதில்வந்தும் என்னைக்கூடுமென்று சொல்லுவது உம்மைப்போன்ற அரசருக்குத்தகுதியல்ல அவ்வாறு கூடுவோமென்றுலும் அருமை பாராட்டிவளர்த்த என் பிதாவாகிய கண்ணுவர்மனதுக்கு அருவருப்புண்டாகும்இதற்குமருவுத்தரவென் னென்றுகேழ்க்க அரசன் மகிழ்ந்து ஓ பெண்ணரசே நீயேன் ஐயப் படுகிறுய் பெண்ஜென்மமெடுத்து பூமியிற் பிறந்தபோதே ஒருபுரு டன் முன்னமே பிறந்திருப்பான்மேலும் பெண் பெற்றவர்கள் ஒரு வருக்குஅப்பெண்ணை மணஞ்செய்வித்துக் கொடுப்பார்களேயன்றி மனையில் வைத்திருக்கப் போகிறதில்லை கண்ணுவரே சிறந்தவர் மேலும் அவர் பிரமசாரி அவரிடத்தில் வருகிறவர்களும் ஸ்திரீ விரோதிகள் ஆதலால் உன்னை எந்த அரசர்களுக்காவது மணஞ் செய்விக்கப்போகிறுர் (குப்பிட்டதெய்வம்குறுக்கேவந்ததுபோல) அரசர்களில் ஒருவனுகிய நான் வந்துவிட்டேன் என்மீது கிருபை கூர்ந்து என்னையாதரித்து விரகநோயைத்தீர்த்தால் கண்ணுவர் தளிப்படைவரேயன்றி விரோதிக்கார் ஆதலால் இந்தவேளை என்னை வருத்தமுறச்செய்யும் ஐங்கணை வேளை முதுகிட்டோடும்படிச்செய் யென்றுவேண்ட சகுந்தலை அரசனைநோக்கி ஓ வேந்தர்வேந்தே எப் போது தாங்களிவடம் வந்து என்மீதுக்காதல்கொண்டீரோ, அப்

போதே எனக்கு நீர் நாயகரும் அடியாள் தங்களுக்கு நாயகியுமாகி னேம் உம்மையன்றி யான் வேறுபுருடனைக் கனவிலுங்கருதேன் குலமங்கையானவள், தன்னை யொருநாயகன் எப்போதிச்சைப்பட் டானே அப்போதே அம்மங்கை எச்சலாய்விட்டாள் அவனையன்றி வேறு புருடனைச்சேர என்னுபவள் விபசாரியாகும், அன்றியும் யானும் உம்மைப்பார்த்து இத்தனை நேரம்பேசினபடியால் எனக்கு மும்தபேரிலேயே பிரியமுண்டாய்விட்டது இனியும்மையன்றி அன் னியபுருடனை மணம்புரிவனேயாகில் யான் ரௌரவாதி நரகத்தை யடைவேன் இது சத்தியமென்று நம்பும் அன்றியும் உலகிலுள்ள பெண்கள் மணஞ்செய்யாமல் ஒருபுருடனைக்கூடினால் அப்பெண்ணை உலகத்தார் இகழ்வரேயன்றிப் புகழார்கள் ஆகையால் என்தந்தை யாகிய கண்ணுவர்வந்தவுடன் விவாகத்தை நிறைவேற்றித் தாங்க ளென்னுடைய கரத்தைபபற்றுவது தகுதியாமென்று புகலஅரசன் சிரித்து ஒ பெண்கள் பெருமாளே நீகூறிய வசனம் எவ்வாருக்கிற தெனில் விஷந்தலைக்கேறி மயங்கிப்பூமியில் விழுந்தவனுக்கு அவன் சினேகன் மந்திரங் கற்றுக்கொள்ள மலைவாசிகளிடத்திற் சென்று சூரிய கிரணத்தை நாடி எதிர்பார்த்திருப்பதுபோல விருக்கின்றது காமவெறிகொண்டு அலக்கோலமாயிருக்கு மென்னைப்பார்த்து நீ மணஞ்செய்துகூடென்றால் நான் எவ்வாறு சகிப்பேன் ஆதலால் நானொரு உத்திரவு சொல்லுகிறேன் அஃதென்னெனில் உலகத்தில் விவாகஞ்செய்துப் பெண்களைக்கூடுவது தகுதிதான் அந்த விவாகம் எட்டுவகை யுளது அவை யாதெனில் பிரம்மம்பிஜாபத்தியம் ஆரி டம், தெய்வம், காந்தருவம், அரசு, இராக்கதம் பைசாசம், இவற் றுள் பிரமசாரிக்குக் கன்னிகையைத் தீ முன்னங்கொடுப்பது பிர மாணம் தலைமகளினத்தார் வேண்ட தலைமகளினத்தாருட்பட்டு அவனை ஒமத்தீ முன்னர்கொடுப்பது பிரஜாபத்தியமணம் ஒன்றி ரண்டு பசுவு மெருதும் வாங்கிக்கொண்டு மங்கையைத் தீ முன்னர் கொடுப்பது ஆரிடமணம்வேள்வியால் வந்தபெண்ணை அக்கினிமுன் னர்கொடுப்பது தெய்வமணம் கொடுப்பாருங் கேட்பாருமின்றி இருவருந்தனியிடத்தெதிர்பட்டுத் தாமேகூடுவது காந்தர்வமணம் பெண்ணுக்குப் பொன்பூட்டிச்சுற்றத்தார்க்குப்பொன் வேண்டுவன கொடுத்துப் பெண்ணைக்கொள்வது அரசுமணம் பெண்ணும் பெண் ணினத்தாரு முடன்படாமல் வலிதிற்கொள்வது இராக்கதமணம் துயின்றுணைச்சென்று கூடுவது பைசாசமணம் இயற்றுள் கொடுப் பாருங் கேட்பாரு மின்றி இருவருந்தனித்தவிடத் தெதிர் பட்டுத்

தாமேகலத்தல் காந்தருவமணம் இத்தக்காந்தருவமணம் புரிந்து இருவருங்கூடுவோமென்று கழறச்சகுந்தலை, பிதுமெய்தான் இப் போதுமக்குண்டா யிருக்கிற காமநோயின் பொருட்டு இனிய வச னம் பேசிக்கூடி காமநோய் தீர்ந்தபின்பு உன்னையார் கண்டாரென் றுமாறுபட்டுப்பேசி வேறொரு ஸ்திரீயைமணம்புரிந்தால்நான்அவல மாய்ப்போவதுமன்றி என்வயிற்றிற்பிறக்கும் புத்திரனும் சுகப்பட மாட்டானே இதற்கென்ன பதிலுத்தரமென்று கேட்க அரசன் சிரி த்து ஓ பெண்கள்நாயகமே உலகத்தில் அரசராயிருக்கிறவர்களுக்கு வெற்றியும் பாக்கியமுங் கொடுக்கிறது வாய்மை அவ்வாய்மையை மறப்பார்களாகில் அது மும்மூர்த்திகளைநோக்கி அனேகமா தவம் புரிந்த சிலாக்கியத்தையும் பாக்கியத்தையும் அனேகதிவ்யாஸ்திரங் களையும் பெற்றதும் அவைகளையெல்லாம் நாசப்படுத்திக் குடிக்கக் கஞ்சியும் கட்டவஸ்திரமுமின்றி வருத்தச்செய்விக்கும் ஆகையால் நாளை வாய்மையிற் பிறழாமலிருக்கும் அரசர்களுக்கெல்லாம் அர சன் நான்சத்தியமறவேன் ஆதலால் உனக்கொரு உறுதியானவாக் கியங்கூறுகிறேன் அஃதென்னெனில் நீயே என்மனைவி உன்வயிற்றி லுதிக்கும் புத்திரனே என்பட்டத்துக்குரியவன் இதற்குசாக்ஷி ஆகாயவாணியும் பூமிதேவியுமேமாம் இனி ஜாலஞ்செய்யாமல்என் னைக்கூடென்று உறுதிவசனங்கூறினன் அதற்கு சகுந்தலை மங்கை சம்மதித்து மெத்தமகிழ்ச்சியடைந்து அரசன் மகிழ்வடைக்கடைக் கண்ணைப்பார்த்துக் காமக்குறியைத் தெரிவிக்கிற குருநகை புரிய அதுகண்டு அரசன் ஐந்துவித ஆலிங்கணம்பதினெருவித அதரபான மூதலியவற்றை இயற்றி சுந்தரசகுந்தலை மனங்களித்துலங்க ரதி கேளிவினோயாட மலர்சூடி மதனலீலைகள் புரிந்து புகழ்ந்து மகிழ்ந்து வியந்து நயந்துத்துணைமுலையிரண்டும் புயமதிலழுந்தப் புல்லி அம் மங்கையை நோக்கி ஓ பெண்கள் சிரோமணியே நாளை வேட்டை யாட வந்தேன் வந்தவிடத்தில் உன்னைக்கண்டேன் கருத்து மகிழ் வெய்தப்புணர்ந்தேன் இனி என் சேனைகளுடன் கலந்து நகரஞ் சென்று மந்திரிகளால் உன்னை அழைத்துக்கொள்ளுகிறேன் வீருத் தப்படாமல் மகிழ்வுடன் விடைகொடுமென்று வேண்ட சகுந்தலை கிஞ்சித்து வருத்தமடைந்து என்னுயிர்க்குயிராகிய பிராணவல்ல டரே சுதந்திரமாய் நடக்க வல்லவர் தேவரீர் பரதந்திரமாய் நடக் கப்பட்டவள் யான் புருஷன்சொல்லுக்குமனைவியா மறுத்துக்கூறு வதுதகுதியல்ல ஆதலால் உமதிஷ்டப்படி நடவும் ஆனால் என்னை மாத்திரம் மறக்காதிருக்கப் பிரார்த்திக்கின்றேன் என்று மெத்த

ஆரமையோடு விடைகொடுக்க அரசன் அவ்விடையைப்பெற்று மீண்டும் மந்திரியோடு கலந்துக்கரட்டில் நிறைத்திருந்த சேனைகளெல்லாந்தன்னைச்சூழ்ந்துவரச்செய்து நகரம் வந்துசேர்ந்து முன்போல அரசுசெய்திருந்தான்.

இங்கேசகுந்தலை மங்கைக்கணவன் பிரிந்தவருத்தத்தோடு திவ்யக்கியானியாகிய கண்ணுவர்க்கு என்னவுத்தரவு சொல்லப்போகிறோம் கற்றறிவில்லாத ஸ்திரீஜனங்களுக்குக் கல்விக்குறிகள் தெரியுமென்றல் சகலகலைவல்லவராகி உண்மைக்கியானத்தைப் பெற்றவர்க்குத்தெரியாமற் போகுமா நாமென்னகாரியஞ்செய்து விட்டோம் காமிகள்பேதைக்கு மஞ்சார்களென்றது நமக்குநிருஷ்டாந்தமாயிற்றுநாமென்னசெய்யப்போகிறோமென்றேங்கியபயந்திருக்கிறதருணத்தில் திரிகாலக்கியானியாகிய கண்ணுவமாமுனிவர்வந்துவிட்டார். அவர் வரவே கல்விபால் வெளுத்த இதழையும், வியர்த்த முகத்தையும், சிவந்த விழியையும் நகக்குறியையும், கலைந்த அளகத்தையும், புத்திரனிருக்கும் உடையவளாகிய சகுந்தலை திடுக்கென்றெழுந்து நாணமேற்கொண்டு மெல்லென நடந்து கல்விக்கடலாகிய கண்ணுவருடைய திவ்ய சரணம்புயத்தில் விழுந்து சாஸ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து (பேதமையென்பது மாதர்க்கணிகலம்,) என்றபடி நான் செய்த குற்றத்தைப் பொறுத்து ரக்ஷிக்கவேண்டுமென்றிரந்தாள். கண்ணுவர் மகிழ்ச்சியடைந்து சகுந்தலையை முற்றும் நோக்கிச் சொல்லுகின்றார் ஓ அம்மணி, உன் உதரத்திலிருக்கிற புத்திரன் இந்த நெடிய கடல்சூழ்ந்த உலகத்தையெல்லாம் ஒருகுடைநிழலில் ஆளும்படியான வல்லமையை உடையவன்: உன்னைக்கூடின அரசனே? அஸ்தினபுரத்தையாளும் துஷ்டியந்த மகாராஜன் நீலல்காரிய செய்தாய் அதற்கு உன்மேல் மகிழ்வேயன்றிக் கோபமில்லை, நீ அஞ்சாமல் நடந்த விருத்தாந்தத்தைக்கூறும் அம்மா வென்று சொல்ல, சகுந்தலை அரசன் வந்ததையும் தான் அவ்வரசனுக்கு மரியாதை செய்ததையும் அரசன் தன்னை யாரென்று கேட்டதற்குச் சொன்ன வரலாற்றையும், அதன்மேலாசன் விரகதாபப்பட்டு ஆகாயவாணியையும், பூமிதேவியையும் சாக்ஷிவைத்துக் காந்தர்வமணம்புரிந்துக் கூடிப்பின்புமந்திரிகளாள் அழைத்துக் கொள்ளுகிறேனென்று சொல்லியவற்றையும் விளங்க உரைத்தாள். கண்ணுவர்கேட்டு மகிழ்ச்சியடைந்து ஓ அம்மணி, உலகத்தில் பெண்கள் பெறும்பேறு என்னவென்றால், கல்வியையும், வல்லமையையும்,

அழகினையும்வாலிபத்தையும், செல்வத்தையும்பெற்றபுருடனையுடை
த்தாய்புத்திரபாக்கியத்தையும்பெருவதுமெத்தஅருமையானபேறு
இந்தப்பேறு எல்லாப்பெண்களுக்குங் கிடைக்காது. நீதவசிரேஷ்ட
சிகாமணியாகிய விஸ்வாமித்திரமுனிக்கும் மேனகைக்கும் பிறந்த
வளாதலால், தந்தை வழியில் நீ சகல பாக்கியமும் பெற்றுய் இனி
உனக்கு ஒரு குறைவுமில்லை சுகமாயிரு அம்மாவென்று வாழ்த்தி
னர். சகுந்தலைப் பரமானந்தத்தையடைந்தவளாய் கண்ணுவரை
வணங்கி, அந்தப்புறத்திற் சென்றிருந்தனள். சிலகாலஞ் சென்ற
பின்பு முதல் மாதத்தில் வெறுக்கத்தக்க பதார்த்தங்களில்விருப்ப
மும், குறைவுற்ற பசியும் உணவில் வெறுப்பும், புளியேப்பமு
முடைத்தாகி, இரண்டாம்மாதத்தில், அடிவயிறு கருக்குழியைச்
சார்ந்து ஓடி உள்ளடங்கி, மூன்றுமாதத்தில் மார்பின் நரம்புக
ளெடுத்து, நான்காமாதத்தில் முகம்வெளுத்துமூலைகருத்து மசகை
யென்னும் நோயுற்று, ஐந்தாமாதத்தில் சூலுக்குநோயும் வயிற்றுப்
புரட்டலுமுண்டாகி, ஆறுமாதத்தில் கண்களில் அடிநிமைக்கடுத்த
நரம்பு பிரகாசமாகவும், கண்களி நிறம்பேதமாகவுங் காணப்பட்டு,
ஏழாமாதத்தில் உட்காரும்போதும் எழுந்திருக்கும் போதும் புத்
திரக்கருவாதலால் வலதுகையை அடிக்கடி ஊன்றியும், எட்டா
மாதத்தில் மூலையிற் கிஞ்சித்துப்பாலுண்டாகி, ஒன்பதாமாதத்தில்
அதிக வருத்தமும் இளைப்புடனே வலது பக்கத்தில் பிண்டமிருக்
கிறதென்று அறியும் தன்மையை யுடைத்தாகி, பத்தா மாதத்தில்
கர்ப்பவேதனைப்பட்டு யாவரும் விருப்பமுறத் தக்கச் சிறப்பினை
யடையப்போகிற புத்திரனைப்பெற்றுள் அப்புத்திரனுக்குக் கண்ணு
வர் பல ஆசிகள்கூறிச்செய்யுஞ் சடங்குகளை நிறைவேற்றிப் பரத
னென்று பெயரிட்டு ஐந்தவயதுக்குமேல் வேதாகமங்கள் அறுபத்
துநாலு கலைக்கியானம் மதுவிக்கியான மூதலியவற்றை போதித்து
வில்வித்தை அம்புவித்தையானேயேற்றங்குதிரையேற்ற மூதலியவை
களைக்கற்பித்து அதிக விருப்பத்துடன் வளர்த்துவந்தார். அப்புத்
திரனுக்குப்பன்னிரண்டுவயதானகாலத்தில்கண்ணுவர்சகுந்தலையை
அழைப்பித்து, ஓ அம்மணி, இனி உன் கணவனுடைய துஷ்டியந்த
மகாராஜனிடத்துச் சென்று வாழ்ந்திரு உன்னை மந்திரிகளால்
அழைப்பிக்கிறேன் என்று சொல்லிப்போயின அரசன் இதுவரைக்
கும் உன்னை அழைக்கவில்லை, இராச்சிய சம்பத்தினாலே மறந்து
விட்டாற்போற் காணுகின்றது இதோ நமது சிஷர்களில் சிலரை
அனுப்பிவிக்கிறேன். அவர்களைத் துணையாகக்கொண்டு அஸ்தினை

புரத்திற்குச் செல்லென்று கட்டளையிட்டு சிஷர்களையழைத்து ஓ சிஷர்களே, இந்தச்சகுந்தலையை அஸ்தினபுரத்தில் விட்டுவாருங்கள் யென்றுசொன்னர். அப்போது, சகுந்தலை கனவருந்த முற்றுக் கண்ணுவருக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து ஓ ஸ்வாமி, இதுவரைக்கும் யாதொரு குறைவும் வராமல் என்னைப்பாதுகாத் தீர்கள். எனக்கு மாதா பிதா குரு, தெய்வமும் தாங்களே எப் போதும் ஸ்ரீ ஜாதிகளுக்குக் கணவன்வீடு சதமேயன்றித் தாய்வீடு சதமல்ல, நானும் ஸ்திரீயாதலால் மரபுவழக்கப்படி தங்கள் கட்ட ளையமீராமல் செல்லுகிறேன் இதுவரைக்கும் எப்படி என்மேல் கிருபைவைத்தீர்களோ அப்படியே இனி எளியேன்மீது கிருபை கூறவேண்டுமென்று இனிய வசனங்களுடன் வணங்கி விடைபெற் றுச்சிஷரைத்துணையாகக்கொண்டு புத்திரனோடு தானும் ஆசீர்மத் தைக்கடந்து அத்திரபுரத்தருகில்வந்து சிஷரை அனுப்பிவிட்டுத் தானும் புத்திரனுமாக நகரத்துட்சென்றார்.

அப்போது அந்நகரத்திலிருப்பவர்கள் இந்தச்சகுந்தலையையும் இராஜசிங்கமாகிய பரதனையும் பார்த்து மெத்த ஆச்சரியமடைந்து ஆஹா! இந்த அம்மனைப்பார்த்தால் மகாலட்சுமியைப் போலிருக் கிறது அருகிற்செல்லுகிற வாலிபனைப்பார்த்தால் மன்மதன்போலி ருக்கிறது இவ்வளவு சவுந்தரியமுள்ள இவர்கள் பாதசாரியாய் இந் நகரத்துட் பிரவேசித்த காரணமென்னவென்று ஒருவருக்கொரு வர்பேசிக்கொள்ள சகுந்தலை இராசன் கொலுமுக வாசலில் வந்து அங்கிருக்கும் காவலாளிகளைக்கொண்டுத்தன்வரவை அரசனுக்குத் தெரிவித்து அரசன் உத்தரவின்மேல் கொலுவிற்சென்று உயிருக் குயிராகிய கனவனுதலால் புத்திரனோடு தானும் வணங்கி நின்றாள். அங்கு அரசனோடு வீற்றிருக்கும் பதினெண்ணாயிரம் மந்திரிகளும் தொளாயிரத்தி அறுபத்தாறாயிரம் பட்ட வர்த்தனர்களும் மூன்னூ ற்றி மூப்பத்தாறாயிரம் மதுடவர்த்தனர்களும், இமபண்டிதர் இராஜ புரோகிதர் ஆசிரியர்கள் அன்பத்தாறு தேசாதிபர்கள் முதலான வர்களும் சகுந்தலையையும், பாதனுகிய வாலிபனையும் நோக்கி அழகுக்காக மெத்த மகிட்சியையும் அடைந்து இவர்கள் இந்த ராஜசபைக்கு வரும்படி இவ்விருவருக்கும் யார் என்ன தீங்குசெய் தார்களோ என்ற ஏக்கத்தைக்கொண்டிருந்தார்கள் அரசன்நமஸ் காரஞ்செய்த சகுந்தலையையும் புத்திரனையும் உய்த்து நோக்கி ஆ! ஆ! ஹா, நாம் வேட்டையாட வனத்திற்சென்றபோது கண்ணுவர்

ஆசீர்மத்தில் இவளைக்கண்டு பரவசஞ்செய்து காந்தருவமணம்புரிந்துக்கலந்து மந்திரிகளால் அழைத்துக்கொள்ளிறேமென்று சொல்லிவந்து இதுவரைக்கும் நாம் அழைக்காமலிருந்தனாலே இவளே வந்துவிட்டாள். இனி நாம் இவள்கருத்துக்கு விரோதம் வராமல் அழைத்துக்கொண்டோமாகில் இதோநிற்கிற நமது புதல்வனுக்கு நமக்குப்பின் நமது மந்திரி முதலானவர்கள் பட்டங்கட்டிவைக்க மாட்டார்கள். அல்லது நீக்கிவிடுவமாகில் இவள்மனம் நோகும் அதனால் நமது அரசுக்குக் கெடுதிநேரிடும் இதற்கென்ன செய்கிற தென்றுசற்றுநோம் ஆலோசித்து இப்போதிவளை நிராகரிப்போம் அப்போது நாம் சாக்ஷிவைத்த ஆகாயவாணிவந்து இச்சபையிலிருப்பவர்கள் யாவருமொத்துக்கொள்ள அக்காலத்தில் நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லுவள் அப்போது நாமிவளை ஆழைத்துக்கொண்டு நம்மால் அடைந்த வருத்தத்தை மாற்றுவோமென்று மனதுக்குள் தீர்மானித்துச் சகுந்தலையைப்பார்த்துச்சொல்லுகின்றன். ஓ! பெண்ணேநீயார்? உன்பெயரென்ன? உன்னருகில்நிற்கிற சிறுவன்யார்? உன்னிருப்பிடம் எது? நீ இராஜசபைக்கு வரவேண்டியகாரணமென்னவென்று வினவ, சகுந்தலை திடுக்கிட்டு ஆ! இதென்ன, அரசன் நம்மையாரென்று வினவுகிறார். இவர் நம்மைப் பகற்காலத்திற் கூடினவராயிற்றே குறிப்புத்தெரியாதா? இவர் இப்படிகேட்டது ஆச்சரியம் ஒருவேளை செல்வச்செருக்கினால் நம்மை அவமானப்படுத்த எண்ணியிருக்கிறாரோ அல்லது, மறந்துவிட்டாரோ என்னமோஎல்லாம் இன்னுஞ்சற்றுநேரத்திற்குள் தெரியவருகிறது, நாம் உண்மையைக்கூறினால் தெய்வம் விட்டகதியாகுதென்று தனக்குத்தானே யோசித்து அரசனேவணங்கி, ஓ என்பிராணநாயகரே, நானுன் மனைவி, என்பெயர் சகுந்தலை இதோநிற்கிற சிறுவன் உமது புத்திரன். என்னிருப்பிடம் கண்ணுவர் ஆசீர்மம், நான் இவ்விடத்துக்கு வந்த காரணம் முன்னம் நீர் என்னைக்கூடின காலத்தில்மந்திரிகளால் அழைத்துக்கொள்ளுகிறேனென்றுசொல்லிவந்து இதுவரைக்கும் என்னை அழைக்காமல் இருந்துவிட்டதினால் நானே உமது இடத்துக்கு வந்துவிட்டேனென்று மறுமொழி வழங்கினள் அரசன்மொழிபைக்கேட்டு புத்திரனையும், மனைவியையும், பார்த்து மகிழ்வைப்பரியாசச் சிரிப்பாக வெளியிற் காட்டக் கருதிக்கலகலவென்று நகைத்து, அன்புடன் பார்க்கும்பார்வையை கடும்பார்வையாகத்தாக்கி ஒருவசனஞ்சொல்லுகின்றன். ஓமந்திரிகளே பார! பார! இதென்ன ஆச்சரியம்! இதோ இருக்கிறபெண்

என் மனைவியாம். அவள் அருகிலிருக்கிற சிறுவன் என் மூடியைத் தாங்கும் புத்திரனும், இவள் மூன்னும் பின்னும் ஜெகப்பிதிகட்டிப் பேசுவதுமெத்த மேலாயிருக்கின்றது, பொய்யை மெய்போலக் காட்டுகிறுள் பாருங்கள் சபாசு? சபாசு? நன்றுயிருக்கிற தென்று ஏளிதஞ்செய்து சகுந்தலையைப் பார்த்துச்சொல்லுகிறுன் ஓ பெண் ணே, நானே அரசன், நான்கண்ணுவர் ஆசீர்மத்துக்கு என்ன காரணத்துக்கு வரப்போகிறேன், அப்படிவந்தாலும் தனித்துவரு வனுதென்ன விந்தை, நான்உன்னைக்கூடினதெப்படி அந்தவரலாற் றையாவர்க்குந்தெரியவுரையென்றுகூற, சகுந்தலைகனவருத்தமடை ந்துசொல்லுகின்றுள். மன்னுயிர்களைத் தன்னுயிர்போலக்காக்கும் என்பதியே, நீர்வேட்டைக்கு வந்து போவரையும்நீங்கி ஒருவராய்த் தனித்துக்கண்ணுவமுனிவர் ஆசீர்மத்துக்குவர நான்கண்டுஎழுந்து மரியாதைசெய்து பொற்பீடமளித்திருக்கச் செல்ல, யிருந்து என் வரலாற்றைக்கேட்டு மையலாகிப் பூமிதேவி, ஆகாயவாணி, இவர் களை சாக்ஷிவைத்து உனக்குப்பிறக்கும் புத்திரனுக்கு முடிசூட்டு கிறேனென்று உறுதிகூறி, காந்தருவமணம்புரிந்து என்னைக்கூடி உடனேமந்திரிகளால் அழைத்துக்கொள்ளுகிறேன் என்றுவாக்கு தத்தஞ்செய்து வந்து கூறிய வாக்குதத்தத்தை மறந்து விட்டீர், பின்புநான் கர்பவதியாகி இப்புத்திரனைப் பெற்றேன்கண்ணுவர் இப்புத்திரனுக்குப் பாதநென்றுபெயரிட்டு புத்திரோச்சலமுதலிய சட்கருமங்களும் கடத்திசகல சாஸ்திரங்களையும் ஓதிஅரசர்க்குறிய வில்வித்தைமுதலியதகளும் அப்பியாசஞ்செய்துவைத்து என்னை யும் இப்புத்திரனையும் உமது நகரத்தில் விட்டுவரச்சொல்லி தமது சீஷருக்குக்கட்டளையிட், அச்சீஷர்கள் அவ்வாறு உமது நகரத்தில் கொண்டு வந்து விட்டுப்போயினர். உடனே நான் உமது சபைக்கு வந்தேன் என்றுள். அரசன் இவ்வசனங்களைக்கேட்டு இதெல்லா மூரமையென்று தோற்றப்பட்டும் தன்கருத்து நிறைவேறக்கருதி முகம்வேறுபட்டு மகா உக்கிரத்தோடு கடு கடுத்த முகம் போலத் தன்முகத்தைக்காட்டி மின்னலிடியிடித்தா லெப்படியோ, அப்படி போல அதட்டிச்சொல்லத் தொடங்கினன்.

ஆஹா! பெண்ணே! நானென்ன அரசனல்லவா நான் வேட் டையாடப் புறப்பட்டால் ஒருவனுகப் புறப்படுவனு அல்லது வேட்டையாகிற தருணத்தில் ஏதாவதொரு மிருகமீறி ஓடிற்றுனுல் அப்போது சேனைகளைவிட்டுப் பிரியலாமா, அப்படிப் பிரிந்த கால

த்திலும் உயிர்க் குயிரா யிருக்கிற மந்திரிகள் பிறிவாகளா ! நான் எவ்விடத்துச் சென்றாலும் அவ்விடத்துக்கு யாதொரு தடையு மின்றி உடனிருப்பார்களே, அப்படியிருக்க நான் தனித்துவருகிற தென்ன, அப்படிதான் வந்தாலும் முனிவர் ஆசிர்மத்துக்கு வரவே ண்டியகாரணமென்ன, வழிதப்பி முனிவர் ஆசிர்மத்துக்கு வந்தா லும் அந்த இடத்திலொரு ஸ்திரீயிருந்தால் அவளைக்கண்டுமோகிக் கக் கூடுமா இதையெல்லாம் யோசித்தால் சுத்தப் பொய்யாகின்ற தே, அன்றி, உண்மையென்று உன்னருகிருக்கிற சிறுவனும் நம்ப மாட்டான் இதுவுமன்றி, நீசொல்லுவது என்னவென்றால், ஆகாய வாணி பூமிதேவியறிய என்னைகாந்தருவ மணம்புரிந்தாயென்றுய் அதுசபைக்கு யோக்கியமாமா மூழுப்பூசினிக்காயை சோற்றுடு மறைத்தவ ளென்று உலகத்தோர் சொல்லக் கேட்டிருந்தனே யன்றி நானெப்போதுங் கண்டறியேன். இன்றையதினம் உன்வாய் மொழியை யோசித்தால் உலகாதிபனை என்பேரில் வழக்காடத் துணிந்து வந்த நீ யானையைச் சுண்டெலிரலால் மறைப்பதுவு மன்றி இன்னுஞ் சற்றுநேரம் உன்னை வைத்திருந்தால் எல்லாம் என்ன தென்று கைக் கொள்வாய் உன்னைப்போல் ஸ்திரீகளை நானெங்கு கண்டதில்லை இனி அரைநொடிப்போதேனு மிங்கு நிற்கவேண்டிய திதில்லை. எந்தவழியே நோக்கிச் செல்லென்று கடுகடுத்துக் கூற, இவ்வார்த்தைகளைக் கேட்டு சகுந்தலை கனவருத்தமுற்று, ஆஹா ! தெய்வமே ஆதியில் இந்த அரசனைக் கண்டபோது பெண்கள் பெ ரும்பேறு பெற்றேமென்று விருப்புற்று அரசனைக்கூடி மெத்த களி ப்படைந்திருந்தேனே அன்றையதினம் இவ்வரசன்சொல் அளவற்ற களிப்பை யுண்டாக்கியது. இன்றையதினம் இவ்வரசன் சொல்லா னது சந்தோஷத்தை அதமாக்கச் சகிக்கக்கூடாத துன்பத்தைக் கொடுத்ததே இதற்கென்ன செய்வேன் அந்தோ, இன்னுஞ் சற்று நேரமிருந்து உண்மையை விவரித்துக் கூறுவோமென்றுஎவளாளி களால் நம்மை வெளியே தள்ளிவிடுவார்போல் தோற்றுகின்றது. இனிநாம் என்னசெய்யப் போகிறோமென்று தனக்குத்தானே மன தில் நினைத்து அரசனைநோக்கிச் சொல்லுகின்றாள் ஓ வேந்தர் வே ந்தே, உலகத்தில் யாராவதொருவர் கொலை களவுகாமம் பொய் சூது வாது, மூதலான அக்கிரமங்களில் ஒன்றைச் செய்தால் அவர் களை அரசன் தண்டிப்பது சகஜம், அரசனே குறுவாது அக்கிரமத் துக்குப் பாத்தியப்பட்டால் அந்த அரசனை தண்டிப்பதுயார் ஒரு வரு மில்லை, நீர் உலகாதிபன் உம்முடைய வாக்குக்கு எதிர்வாக்

குண்டா இல்லை, ஆதலால், வேலிபயிருக் காதாரம் வேலிதானே பயிரைமேய்த்தால் விளைவதெப்படி மலைபோன்றப் புயமூடைய மன்னனே, என்னைக்கண்டபோது சத்தியவாக்குடனும் நிலைபெற்ற அறிவுடனும் இன்சொல்லுரைத்து எண்ணைக்கலந்து பிரிந்தபிற்பாடு கல்லைப்போல மனமும் கரவடமுங்கற்று இப்போது இப்படிப் பேசுவீரென்று அப்போது பேதமையாகிய சிறியாள் அறியாமற் போனேன். மாரிபோற் பொழியும் கரத்தினையுடைய வள்ளலே உடலு முயிரும், மருவும் மணமும், இரத்தினங்களும் அதனது ஒளியும்போல இன்னிதமாகுங் கணவனுடன் பொருந்திய ஸ்திரீகளின் வாழ்வே வாழ்வல்லது அன்னியரைப்போல் பிரிவற்றுத் தன் பத்தால் வருந்தித் துயரப்படாநின்ற தோகையர்கள் என் போலு முண்டோ, இறைவனே! தனக்கு வழிபடு கடவுளும் தனக்குண்டாகிய இன்பமும் தன்னுடைய வலிமையும் அழகும் இன்ன முள்ள சுபங்கள் யாவும் தன்னுடைய நாயகனென்றே வந்தித்துச்சிலாக்கித்திடும் பதிவிரதைகளை மனம் நோகச் செய்தல் விவேகமோ, நீதியோ தருமமோ, அந்தோ, அன்னீதியும், அசத்தியமும் உம்மிடத்திலிருக்குமாகில் கன்னீதியும் சத்தியமும் இருக்குமிட மெங்கே, ஓ பூபாலரே, அரசருக் குண்டாகிய பெருமை, கீர்த்தி, இன்பம், பேறு, யாகம், வெற்றி முதலிய சகல கருமங்களும் கற்புடையமனைவியைப் படைத்தவர்க் குண்டென்றும் அவர்கட்கே உரிமை யென்றும் வேதத்தில் சொல்லியிருப்பதை அறிந்திருந்தும் என்னையும் அருமைமகனையும் அவமதித்துத் தள்ளிவிடுவது ஞாயமோ ஓ! வேந்தர் கோமானே! தேவரீர் வாழ்வைப் பெற்றாலும் இருந்தாலும் இறந்தாலும் கூடப்பொருந்தியனுபவிப்பவளாகிய குலாயகியின் மனந்தளரும்படிக்கு மேலெழுந்து நக்கையையாட்டிஉள்ளிருக்கும்மீனை வெளிப்படுத்தி விழுங்கி உராய்ந்துகொண்டு தேகத்தில் ஜலம் ஒட்டாமல் உதறிவிட்டுப் போகின்ற மீன்கொற்றிக் குருவியைப்போலப் பசையற்றுப் பற்றற்றுப்போகின்ற புருடரையடுத்தால் அவர் காப்பாரோ அன்றியும், காவலரே ஒரு புத்திரன் பிறக்கவேணுமென்று புத்திரகாமேட்டியாகமும்-தருமமும்-விரதமும் - நோன்பும்-சத்திரம் சாவடி மடம்-தடம்-சோலை-சாலை-தெய்வப் பிரார்த்தனை-மந்திரம்-இயந்திர சக்கரம்-அவுஷதம் முதலியமுயற்சிகளைச்செய்து பிள்ளையைப் பெற்றுக் கொள்வார்கள் அப்படிக் கெந்த முயர்ச்சியுஞ்செய்யாமல் தன்னிச்சையாய்ப் பிறந்து அன்னியர்களால் வளர்த்து கல்வி முதலானதுகளுங் கற்பித்து எந்தகஷ்டமுமில்லாமல்

தங்களிடம் வந்திருகலும் தீவ்ர மான குமாரனைக் கண்டும் நீ யாரோ நானரோ வென்று வெறுத்தபேர்களைக் கதையிலுங் கேட்டறியேன் காவினியிலும் கேட்டறியேன் சந்திர மம்ச உத்தாரகனே இவ்விடத்தில் சந்ததியைக் குறித்துச் சலித்த உண்மைக் கண்டேனென்றுக் சதறி மேலும் ஓ! பூமிபாலரே! நெருப்பிற் கொளுத்திய நெருப்பும், கண்ணடியிற் காட்டிய வஸ்து வைக் காட்டிடும் நிழலும், வெவ்வேறு பெயரைப் பெற்றலும் பொருளென்றே யல்லது வேறில்லை யதுபோல் தந்தையே புத்திர னென்று புராதனமாய் வேதஞ்சொல்லுவது பொய்யாகுமோ என் னறிய தவமே இந்தச் சிறுவனை யாரோவென்று அவமதித்தால் அந்த அவமதிப்பு உம்முடைய தல்லவோ ஆகையால், தாங்களே னிதை யோசிக்கவில்லை என்னிறைவரே நூறு கிணருகள் வெட்டின பலன் ஒரு தரவெடித்தால் வரும் நூறு தரவெடுத்த பலன் ஒரு தடாகம் வெட்டினுல் வரும் நூறுதடாகம் வெட்டியபலன் ஒரு யாகஞ்செய்தால் வரும் நூறுயாகம் செய்தபலன் ஒரு சத்புத்திர னைப்பெற்றலுண்டாகும், நூறு சத்புத்திரர்களை பெற்றபலன்சத்தி யந்தவராதிருந்திடிற் கிடைக்குமென்று சுருதிமுறையிடுகின்றது இதையுணர்ந்திருந்தும் தேவரீர் சொற்சோர்வுபடப்போமா இதன் றியும், இராஜாக்களுக்கு முக்கியமாக யிருக்கவேண்டியது குற்ற மற்ற இல்லாளும் சொல்லுதற் கருமையான மைந்தனும் சத்திய வாக்கும் நன்னீதியும் நடுவு நிலைமையும் இவைகளோசிக்குமிடத் தில் என்னையும் இப்புத்திரனையும் பெருமகிழ்சியுடன் சேர்த்துக் கொள்ளுவீராகில் சத்தியமுதலிய சற்குணங்களும் உமக்குண்டா கின்றதுமேலும், இன்னொருவிசேஷமுமுளது அதென்னவெனில், இப்புத்திரன் பிறந்த அன்றைக்கு நினைப்பதற்கரிய யாகங்களெல் லாஞ்செய்து ஆழிசூழ்ந்த அம்புவியனைத்தும் ஒருகுடை நிழலில் ஆள்வான் சத்குருஜெயமடைவானென்று அசரீரிவாக்குப் பிறந்தது இப்படிப்பட்ட மகனை ஆதரித்தருள் செய்யக்கடவையென்றுள். இவ் வண்ணமாக சகுந்தலை சொல்லிய மொழிகளனைத்தையுங் கேட்டு துஷ்டியந்தமகாராஜன் ஒபிறைபோன்ற நெற்றியையுடையமின்னே உன்னையின்னுளென்றறியமாட்டேனை சும்மாய்ப்பன்னிப்பன்னிப் பேசுகிறாய் நீ அன்னம்போல நடந்தமுன்னமிருந்த இடம்போய்ச் சேருமென்று பொன்னைப்போன்ற சாயலையுடைய அணங்குக்குச் சொல்லிவிட்டு அரசன் வேறுவேலையி லிருப்பவன்போல் உள்ள முடைந்து விசனப்பட்டுக்கொண்டிருந்தான். அப்போது, சகுந்

தலை கண்ணீர்விட்டுத்தன் பக்கடலிலாழ்ந்து மன்னவனேநோக்கி ஓ அரசே, நீர் பூர்வத்தில் கண்ணுவரிஷியின் ஆசிர்மத்துக்கு வந்து சந்தோஷவார்த்தைகளைச்சொல்லி புணர்ந்து சத்தியம் ஒருநாளும் தப்பேனென்றுடனிருந்து இருவர்மனமும் ஒன்றெனக்கலந்து எண்ணி இல்லாளாக அனுபவித்ததண்டு அப்போதுபேசிய சொற்களெல் லாம் இப்போது மறந்து சொல்லுகிறீர் இதுயென்ன மர்மமோ அல்லது இப்படிப்பேசுவதுதருமமோ யான்முன்செய்தகருமமோ இதெல்லாம் உமதுபேரிற் குற்றமில்லை என்னுடைய தீவினையின் பயனுகும் மிகுந்த அறிவிற்சிறந்த அன்னையும் பிதாவும் நான் பிற ந்தபோதே எள்ளளவு மாசையின்றித்துறந்து விட்டார்கள். இப் போது என்பட்சத்தில் நாயகன் பிரியமற்று மறந்துவிட்டார் என் னைப்போலப் பெண்ணுருக்கொண்டவர்களில் மகா தீயபாவிகள் வேறுண்டோ, விஸ்வாமித்திரருக்கும் மேனகைக்கும் பெண்ணுப்பிற ந்தும் கண்ணுவமகாரிஷியின் கண்ணருளால் வளர்ந்தும் சிங் காசனுதிபதியாகிய சந்திர வம்சத்துக்கு இராஜாதி இராஜனுகிய வேந்தனுக்கு உரிய மனைவியாய்ச்சிறந்தும் சூரியனைப்போன்ற வீரி யனைபின்றும் பரவசமாகிய துன்பம் என்னைவிட்டு நீங்கவில்லை ஆத லால் ஒருவரையும் வெறுக்கத்தக்கதன்று இது யான்செய்த பாவ மாகும். ஆகிலும் இவ்வுலகில் நல்லோர்-புல்லோர்-புருஷர்-ஸ்திரீ கள்-பசுபக்ஷி மிருக முதலிய வெல்லாவற்றிற் காரணனுகியகடவுள் ஒருவனுண்டாகில் காத்தளிப்பது அவன் கடமை என்று இளமை யாகிய சகுந்தலைச்சொல்லித் தன் பிள்ளையின் காத்தைப்பற்றித் திரும்புகையில் அரசரே நீர் சுகமாகவாழும் நான்செலவுபெற்றுக் கொள்ளுகிறேன் அப்புறம் என் தலைவிதி யென்றுசொல்லி அதிக துன்பத்தோடு இராஜசபையைவிட்டுஇரண்டடி எடுத்துவைத்தாள். இதற்குள் அரசனும் மனங்கலங்கி இன்னும் ஆகாயவாணியும், பூமி தேவியும், என்வரவில்லை நாம்பொய் முதலிய குற்றங்களை நீக்க அரசுசெய்தாலும் தற்காலத்தில் இந்த சகுந்தலைக்காக இச்சபை யறிய நடந்ததை இல்லையென்று மறுத்துக்கூறினுமே அதனால் தானேவரவில்லை அல்லது இன்னும்என்ன நேரிடப்போகின்றதோ வென்றும் கண்ணுவர் சபாஜுக்கிரக சாமர்த்திய மூடையவரா யிற்றே, அவர் இவ்விருத்தாந்தத்தை அறிந்தால் கனவருத்தம் மடைவாரே என்றும் பலவாறுமனதில் நினைத்துத்தன் கண்ணையும் கருத்தையும் சகுந்தலையின்மீதுவைத்து வாடியிருக்கிறதருணத்தில் சகுந்தலைமங்கை முன்னமெனக்கு சாக்ஷியாகவிருந்த ஆகாயவாணி

யும்-பூமிதேவியும்-இப்போது எங்கொளித்தாரோ வென்றுசொல்லி சபையை விட்டுப் பின்னுமொரு அடியெடுத்து வைக்கிறபோது அண்டங்கள் இடிந்ததோவென்று நினைக்கும்படியாக ஆகாயவாணி அந்தரத்திலிருந்தபடியே சபையோர்கள் அறிய அரசனை நோக்கிச் சொல்லுகின்றன். ஓ அரசனே! இந்தச்சகுந்தலை மகா பதிவிரதை ஆதியில்நீ இவளைக்கூடும்போது என்னையும் பூமிதேவியையும்சாட்சி வைத்துக்கூடினை இந்த ராஜசபையில் இவள் சொல்லிய தெல்லாம் உண்மைதான் இனித்தடையின்றி இவளை மனைவியாகக்கொண்டு இச்சிறுவனுக்குப் பட்டங்கட்டும் இச்சிறுவனுடைய வம்சத்துக் கெல்லாம் பெருமை யிடைக்கப்போகின்றது, ஆகையால்சீக்கிரஞ் சகுந்தலையை ஆதரியுமென்றுசொல்ல, அரசன் பேரானந்தத்தை அடைந்து ஓடோடியும் வந்து சகுந்தலையினது இரண்டு கரங்களையும் பற்றியழைத்து வந்து சிறுவனுகிய பரதனையும் வாரித்தழுவி முத்தமிட்டு சபையைப்பார்த்துச்சொல்லுகிறன் கேளுங்கள், சபை போர்களே! சில காலத்துக்கு முன்னம் யான் வேட்டையாடக் காட்டிற்சென்றபோது ஒரு மானைத்துரத்தி கொண்டோடி மந்திரியும்யானும் தனித்து ஒருசோலையிற்போய் அதிலிருக்குந் தடாகத்தில் தாகமருந்தி களைதீர்ந்த ஓர் மரத்தடியிலிருந்து சற்றுநேரஞ் சென்றபின்புதனியே அவ்வனவிநோதத்தைப்பார்க்கச்சென்றேன் அங்கு என் கண்ணுக்கு கண்ணுவர் ஆசிரமம் தோன்றிற்று அதிற் சென்றபோது இம்மடமயிலைக்கண்டு ஆகாயவாணி, பூமிதேவிகளை, சாக்ஷிவைத்து காந்தருவ விவாகஞ் செய்து இம்மங்கையைக் கூடினதுஉண்மைதான். ஆனால், அழைப்பித்துக்கொள்ளுகிறேனென்று சொல்லிவந்தேனே யன்றி சொல்லியபடி அழைப்பித்துக்கொள்ளவில்லை, அதன்மேல்இவள் என் சபைக்கு வந்துவிட்டாள் வந்தவளை அங்கீகரிப்பேனுகில் எனக்குப்பிற்காலம் என் புத்திரனுகிபஇச்சிறுவனுக்குக்கிஞ்சித்து மரியாதை தாழ்வு வருமென்று யோசித்து சாக்ஷிகளாயிருக்கிற ஆகாயவாணி, பூமிதேவி இவ்விருவர்களில் ஒருவர்வந்து வாக்குக்கொடுக்கிற வரைக்கும் உண்மையைவெளிப்படுத்தாதிருக்கவேண்டுமென்று தாறுமாறுமான உத்தரவுகொடுத்துவந்தேன் இப்போது சகுந்தலைபின் கற்பின் மகுத்துவத்தாலும் எனது மனோபாவத்தின்படியும் ஆகாயவாணிவந்துகூறியபடியால் இனிப்புத்திரனை எனக்குப்பின்பு என்னைப்போல் அங்கீகரியுங்களென்றும்நடந்ததெல்லாம் உண்மைதானென்றும் ஒப்புக்கொள்ள உடனே மந்திரிமுதலானவர்கள திடுக்கென்றெழுந்து சகுந்தலைக்கு நமஸ்காரஞ்செய்து சொல்லுகின்றார்கள்.

ஓ லோகமாதாவே! எங்களைபாதரிப்பது தங்கள் கிருபைஎளி யேங்கள்மீது விரோதம்வைக்காமல் ஆட்கொள்ள வேணுமென்று வேண்டிவணங்கிய மந்திரிமுதலானவர்களை ஆசீர்வதித்துச்சகுந்த லச்சொல்லுகின்றாள் ஓ மந்திரிமார்களே, ஜல ஒட்டத்திற் பட்ட தெப்பமும் அரசன் வழிப்பட்டவர்களும் ஒன்றுனதால் அரசன் ஒன்றையிகழ்ந்தால் ஒக்கயிகழவேண்டியது ஒன்றைப்புகழ்ந்தால் ஒக்கப்புகழவேண்டும் அப்படிக்கிருந்தும் என்னைகூடதர்க்கித்த அரசனைகூடி யாதொரு மொழியும் வழங்காமல் உள்ளக்கருத்து வள்ளலுக்குத்தெரியுமென்று பெருந்த ஆலோசனைசெய்து சும்மா யிருந்தபோதேநீங்கள் விவேகிகளென்பதற்கு ஐயமில்லைஇனியுங்க ளுக்கொரு குறைவில்லையென்று ஆதரித்தான். பின்பு அரசன்சகு ந்தலையுடன் அந்தப்புரத்திற்குசென்று கூடிக்குலாவி சகல இன்பத் தையும் அனுபவித்து வருகிற நாளில் ஒருநாள் அரசன் உலகயின் பத்தின்மேல் வெறுப்புற்று இனிநாம் மறுமைப்பயனை அடையவே ண்டும் அப்பயனுக்குறிய தவம்புரியவேண்டுமென்று கருதித் தன் புதல்வனுகிய பரதனையழைத்து வேதவேதியர்கள் ஆசிகள்கூறஐம் பத்தாறு தேசத்தரசர்களும் மந்திரிகளுங்கொண்டாட மகுடாபி ஷேகஞ்செய்வித்துத்தான் தன்மனைவியுடன் கூடி காட்டிற்குச்செ ன்று அருமையான தவமியற்றிச் சிலநாளையில் தம்பதிகளிருவரும் பரமபத சாம்பிராச்சியத்தை யடைந்தார்கள்.

சகுந்தலை கற்பின் மகத்துவம்
முற்றிற்று.

காந்தாரி கற்பின் மகத்துவம்.

(6) கடல்சூழ்ந்த ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்றுகிய காந் தாரதேசமென்றொரு நகரமுண்டு அந்த நகரத்தை மநுநீதி தருமத் நின்படி சுவேத மகாராஜன், அரசுசெலுத்திவந்தான் இவ்வரசனுக் குச்சுருணவதியென்றொரு மனைவியுண்டு அம்மனைவியுடன் கூடிக்கு லாவி (இல்லறமல்லது நல்லறமன்று) எனமொழிந்த ஔவையார் மொழிக்கிணங்க துறவிகளுக்குபயோகமாகும் இல்லறதருமத்தை யனுசரித்துக்கொண்டுவருகையில் சகலமுந்துறந்த திவ்யக்ஞான ராஜன்கண்டுதிடுக்கென்றெழுந்து எதிர்கொண்டுசென்று அழைத்து வந்துதக்க ஆசனத்தில் வீற்றிருக்கச்செய்து சோடசஉபசாரங்கள்

செய்து சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ்செய்து எழுந்து இருகரங் கூப்யுஞ்சென்னிமீது குவித்துக்கொண்டு ஓ சுவாமி! தங்கள் தெரி சனத்திஞல் அடியேன் புனிதனுயினேன். திருவடிப்பட்டு இன்ன கரம்பாவனமாயிற்றுகிருபையினுல் யாதொருகுறைவுமின்றிச்சுகமே யிருக்கின்றேன் ஏழையின்மீது கிருபை கூர்ந்து இங்கெழுந்தருளிய காரணம்யாதோ அதைத்திருவுளம் பற்றவேணுமென்று வேண்டிக் கொள்ளும் அரசனேநோக்கிச் சவுபரிமாமுனிவர் பல ஆசிகள் கூறி ஓ அரசனே உனக்கொரு இனிஞ்சொல்லும்பொருட்டு வந்தேன் அதென்னவெனில் இப்போதுன் மனைவியின் வயிற்றிலிருக்கும் கருவானது பெண்சிசு அப்பெண்சிசுவானது உதித்தமாத்திரத்தி லுனக்குமெத்த சம்பத்துங்கீர்த்தியும் உண்டாகும் மேலும் அப் பெண்ணுனது குருடனுக்கு மாலையிடுவதன்றியும் மெத்தப்பதிவிர தையாயும் கண்வன்சொல்லுக்கடக்காதவளாகியும், கணவனுக்கினி யவளாகியும் குளிர்ந்த சொல்லுடையவளாகிலும் யிருப்பவளாத லால் அப்பெண்ணின் இஷ்டப்படி நடந்துக் கொள்ளக் கடவாய் மறுத்துக்கூறுவையாகில் நீமெத்த கஷ்டத்தை யடையும்படியான சன்திசையினை யடைவதுடன் பாவியென்ற பேருடன் நரகத்தை யடைவாய் இதுகளையெல்லாம் நின்மனதில் பதியவைத்து வெகு ஜாக்கிரதையாய் நடந்துக்கொள்ளுவாய் என்னமோசொல்லினே னென்று அசட்டைபண்ணுமல் கவனத்தில்வைத்து அப்பெண்ணின் கருத்தின்படி நடந்துக்கொள்ளுமென்று சொல்லி விடைபெற்றுச் சென்ருர். அரசன்சவுபரிமாமுனிவர் சொல்லிப்போயினசெய்தியை நினைத்து நினைத்துமெத்தமகிட்சியடைந்திருந்தான். இப்படிக்கிருக் கையில் சிலநாளையில் பெண்குழந்தையை மனைவியானவள் பெற்று ளென்று தாதிகளால்சொல்லக்கேட்டு ஆனந்தக்கடலில் மூழ்கின வனுகிப்புத்திரி யுற்சவமுதலானதும் நடத்தி அப்பெண் சிசுவுக்குக் காந்தாரியென்று நாமகரணஞ்செய்வித்துக் கோதானம், பூதானம், வஸ்திரதானம், ஹிரண்யதான முதலானசோடச தானங்களும் அபாரமாகச்செய்துவந்த ராஜாக்கள் யாவரையும் ஆதரித்து தக்க படி உபசரித்து யாவரும் விடைபெற்றுச்சென்றபின்பு அச்சிசுவை, நாளொருமேனியும் பொழுதொரு வர்ணமுமாக வளர்த்துப் பேதைப்பருவங்கடந்து பாலிகைப்பருவ மடைந்து தாதிகளுடன் கூடிபற்பல விளையாடல்களை விளையாடிக்கொண்டு அன்னதந்தை கள்மகிழ நடந்துக்கொண்டிருந்தனள். இப்படிக்கிருக்கையில் நல்ல கடிகையினில் புஷ்பவதியாதினள் அரசனதையறிந்து அப்போது

நடத்தவேண்டிய சடங்குகளனைத்தையும் நடத்தி இப்பெண்ணை யாருக்குக் கொடுத்து மணஞ்செய்விக்கலா மென்று யோசித்துக் கொண்டிருக்கிறபோது அஸ்தினபுரத்திலிருந்து பீஷ்மரால் அனுப் பப்பட்ட தூதர்கள் காந்தார தேசத்தையடைந்து சுவேதமகாரா ஜன் குணாதிசயங்களை யறிந்து பீஷ்மரிடத்திற்குவந்து சாஷ்டாங்க மாகதெண்டனிண்டு ஒமண்டலேஸ்வரா! தாங்கள் கூறியகட்டளைப் படி தேசங்கள் தோறுஞ் செல்லுகையில் காந்தார தேசத்திற்குச் சென்றோம் அத்தேசத்துக்கு அரசன் சுவேதமகாராஜன் அவனுக் கொருபுத்திரியுண்டு அப்புத்திரியோ மகாலட்சுமியைப்போல் ரூப வதியாகி அருந்ததியைப்போலக் கற்புடைத்தாயிருக்கின்றாள் என் றுரைக்க, வீஷ்மர்சாமபேததான தண்ட மென்னும் சதுர்வித உபாயங்களை நன்றுயறிந்த சிலமந்திரிமார்களையும் வேதியர்களையும் அழைத்து தூதுவருடன்கூட்டி நீங்கள்போய் சுவேதமகாராஜனைக் கண்டு பெண்கேட்டுவாருங்களென்று திட்டஞ்செய்து அனுப்பினர் உடனே மந்திரி முதலானவர்கள் வீஷ்மர்கட்டளையைச் சிரமேற் கொண்டு காந்தாரதேசத்தரசனிடம்சென்று தங்கள்வரவைக்காவ லாளிகளால் தெரிவிக்க அரசனழைத்துத் தகுந்த மரியாதைகள் செய்திருக்கச்சொல்லி வந்தகாரணமென்னவென்று வினவ, மந்திரி கள் சொல்லுகின்றார்கள். ஓ காந்தாரதேசத்தலைவனே பூமண்ட லாதிபதியாகிய சந்தனமகாராஜருடைய சிரேஷ்டபுத்திரரான வீஷ் மரசாரி அனுப்பிவைத்தார் என்னகாரியமென்றால் அந்த மகாரா டைய சகோதரரின் மனைவிகளின் அம்பிகையினிடமாகப் பிறந்து உலகமுழுதையும் ஒரு குடை நிழலில் காத்துவரும் திரிதராஷ்டிர மகாராஜனுக்கு மணம்புரிவிக்கக்கருதி உமதுகுமாரத்தியைகேட்டு வரச்சொன்னர் அதற்காகவேநாங்கள்வந்தோம் உமதுகருத்தென் னவென்றுவினவ அரசன் மகிழ்வடைந்து ஓமந்திரிமார்களே பழம் நழுவிப்பாலில்விழுந்தா லெப்படியே அப்படிப்போலாயிற்று என க்குமெத்த சந்தோஷந்தான் அந்தவீஷ்மர் சுகமாகவந்து எனது புத்திரியை, திரிதராஷ்டிர மகாராஜனுக்கு மணஞ்செய்துக்கொள் ளட்டுமென்றுகவிலப் பக்கத்திலிருக்கிற தன்மந்திரிகளும் அரசர் களும் மன்னனை வணங்கி ஓ ராஜராஜேஸ்வரா! தாங்களென்ன யோசிக்காமல் திரிதராஷ்டிரனுக்கு தங்கள் குமாரத்தியை பாணிக் கிரகணஞ்செய்துகொடுக்கிறேனென்று சொல்லுகின்றீர்கள் திரித ராஷ்டிரன் குணாதிசயத்தை அறிவீர்களோவென்றுவினவ, அரசன் மந்திரி முதலாரையும் பார்த்து திரிதராஷ்டிரன் குணாதிசய

மென்னவென்றுகேட்டு செய்தியறிந்து கனவருத்தமடைந்து வீஷ்மரிடமிருந்துவந்த மந்திரிகளை நோக்கிச்சொல்லுகின்றான்.

ஓ மந்திரிமார்களே! உங்களரசன் வரன்முறையே நோக்கும் போது ஒருவிதத்தில் குற்றமா யிருக்கின்றது அக்குற்றத்தை வேத விதியென்று பரிசரித்துக் கூறியவாக்கைப் பாதுகாப்போ மென்றும் உங்களரசனுக்குக் கண்ணில்லை மேலும்கன்னிகைகள் கைநிறைந்த பொன்னைவிட கண்ணிறைந்த கணவனே இனிதென்று சொல்லுவார்கள் ஆதலால் உமதரசனுக்குப் பெண் கொடுப்பது தகுதியல்ல வென்று தடுக்க மந்திரிகள் அரசன் வாக்கியத்தைக் கேட்டு கலகல வென்று நகைத்துச்சொல்லுகின்றார்கள் ஓ வேந்தர்சிகாமணியே! உலகத்தில் மேகம் நல்லஜலத்தைக் கொடுக்கிறது அச்சலம் எந்தெந்த நிலத்தில் படியுமோ அந்தந்த நிலத்தின் சாரப்படி வேறு படுகிறது அதுபோலத் தாங்கள் தேடிய ஆலோசனை செய்யாமல் பெண்ணைக் கொடுக்கிறேனென் றெப்பிக்கொண்டு மந்திரிகளுடைய தர்ப்போதனையால் இப்போது மாறுபட்டு மூன்சொல்லிய வாக்கை மறுக்கிறீர் அதனால் கெடுதி விளையுமே அக்கெடுதி என்ன வென்றால் முதலாவது செங்கோல் செலுத்தும் அரசர்கள் ஒன்றைக் கொடுக்கிறே மென்று வாக்குதத்தஞ் செய்தால் பின்பு அவர்களுக்கு என்ன கெடுதி வந்தபோதிலும் அக்கெடுதிளைப் பாராட்டாமல் தாம் கூறிய வாக்குதத்தத்தை நிறைவேற்ற வேண்டும் அப்படி நிறை வேற்றாமல் விட்டு விட்டால் அரசரிமைக்கு யோக்கியதை யல்ல மேலும் சொற்பகாரியமாக இருந்தபோதிலும் அதனைத் தாம் நன்றாகநினைத்து அதனால் வரும் பலாபலனை அறிந்துக்கொண்டு பெரியோர்களுடன் யோசித்து மந்திரிகளோடு உசாவி அதன்மேல் யோக்கியதையா யிருந்தால் அங்கீகாரஞ்செய்ய வேண்டும் யோக்கியதை இல்லாமையா யிருந்தால் 'சட்டிசுட்டது கைவிட்டதென்ற' பழமொழிக் கிணங்க கிணத்தின் கபோல் சும்மாயிருக்கவேண்டும் இது அரசர்களுடையதருமம் தாங்கள் அவ்விதிலையக்கைவிட்டு மூன்னம் எங்கள் கருத்துக்கு ஒத்துக்கொண்டு பின்பு வேறுபட்டால் உமதுவாக்குக் கழிவுவந்தது பன்றி இந்தவார்த்தைகளை எங்கள் தலைவருக்குத் தெரிவிக்கும் போதவாக்கு அதிககோபமுண்டாகி உமது ஆக்கத்துக்குக் கெடுதி நேரிடப் போர்க்கோலங் கொண்டு வருவார் அப்புறம்ஜெயாபஜயமெப் படியோ ஆகையால் பிரமனுக்குத் தலைக்குறைஉண்டு திருமாலுக்கு

விஷதோஷத்தால் கரிய நிறமுண்டு சாம்பவமூர்த்திக்கி வாதக்கா லுண்டு இந்திரனுக்கு யோனியமான புடம்புண்டு சூரியனுக்குப் பல்லில்லை சந்திரனுக்கு களங்கமுண்டு ஆதிசேஷனுக்கு விஷமுண்டு இப்படி மும்மூர்த்திகள் முதலானவர்களுக்கும் பழுதிருக்கின்றது இந்த பூமண்டலத்தில் பழுதிராமலிருக்கிறவர்களில்லை ஆதலால் மந்திரிமுதலானவர்களின் அப்போதனைக்குடன்படாமை முன்கூறிய படி உமது குமாரத்தியை எங்களரசனுக்கு மணம்புரிவிக்கப் பாரும் அப்புறம் உமதிஷ்டம் மேல்வருவதை நீதான் அனுபவிக்க வேண்டுமென்று நயபயமாய்ப் பேசினார்கள். அப்போது அரசன் மனங்கலங்கி சற்றுநேரம் மவுன்மாக விருந்து வந்திருக்கும். மந்திரிகளை நோக்கி ஓ புண்ணியவான்களே வருவதெல்லாம் வரட்டும் பெண்ணைக் கொடுக்கிறதில்லை யென்றுகூறி தகுந்தமரியாதைகள் செய்து அவர்களை யனுப்பிவிட்டான் மந்திரிகள் வீஷ்டமரிடம் வந்து சுவேத மகாராஜனிடத்துச் சென்றதையும் அங்கு நடந்த விருத்தாந்தங்களனைத்தையும்கூற, வீஷ்டமர் கேட்டு மெத்த சினங் கொண்டு சகல சாஸ்திர சம்பன்னராதலால் சற்று நிதானித்து ஆஹா நமது குமாரன் என்ன வல்லவனு மிருந்தபோதிலும் கண்ணில்லாதவனுக்கு பிருக்கின்றான் இவனுக்குப் பெண்கொடுப்பதற்கு யார்தான் சம்மதிப்பார்கள் முதலில்புண்ணிருக்கிறவன் செவியில் நமைவது நமையான். அதைப்போல் இவ்விஷயத்தில் பின்னிட்டு நயத்தில் காரியத்தை நிறைவேற்ற வேணுமென்று யோசனை செய்திருந்தார் இங்கே காந்தாரதேசத்தரசன் விஷ்டமால் என்ன கெடுதி நேரிடுமோ வென்று பலவாறு யோசித்திருக்கிறதருணத்தில் அந்தப்புரத்திலிருக்கும் காந்தாரியைச் சில தாதிகள்கண்டு சொல்லுகிறார்கள், ஓ அம்மணி இன்றையதினம் ராஜசபையில் ஒரு விசேஷம் நடந்தது அஃதென்னவெனில் அஸ்தினபுரத்துக்கதிபதியான திரிராஷ்டிர மகாராஜனுக்கு மணஞ் செய்விக்க வேண்டுமென்று கருதிச் சில மந்திரிகள்வந்து உமதுதந்தையைக் கேட்டதாகவும் அவர்கள் கருத்துக்குச் சரியாய் உனது தந்தை யொத்துக் கொண்டபின்பு அந்த திரிதராஷ்டிர மகாராஜனுக்குக் கண்ணில்லாதிருப்பதை மந்திரிகளாலறிந்து மூன்னங்கூறிய வாக்கை மறுத்து பெண்கொடுக்கிற தில்லையென்று கூறினார் பெண்கேழ்க்கவந்தவர்கள் சிலதாயங்கள் சொல்லிப்போய் விட்டார்கள் இத்தச்செய்தியை உமக்குத் தெரியப்படுத்தினே மென்றார்கள் இதைக்கேட்டு காந்தாரி சில தாதிகளை யழைத்து அவர்களால் தன் தந்தையை

அரண்மனைக்கு வரவழைத்து அவர்க்கு வந்தனை வழிபாடுகள் செய்து ஒரு பொற்பீடத்திலிருக்கச்செய்து ஓ ஐயா எனனைப் பெற்ற தந்தையே உமதுவாக்கினால் எனக்கு ஒருவனை நியமித்த போதே அவர்தான் எனக்குக் கணவர் நீர் நியமித்தபின்பு அவருக் குக் கண்ணில்லையென்று நீக்குவது, தகுதியல்ல இக்கணம் தாங்கள் முந்திகூறியபடி என்னை அவ்வரசருக்கே மணஞ்செய்வியும் ஒரு வேளை கண்ணில்லாதவரென்று ஐயப்படுவீராகில் அதற்குத்தக்க உதாரணங் கொடுக்கிறேன் அஃதென்ன வெனில் உலகிலுள்ள பெண்கள் கருத்தென்ன வென்றால் அவயவப்பழுதில்லாமல் அழகி யுயர்ந்தவர்களில் ஒருவரை மணம் புரிய வேண்டுமென்று கருது வார்கள். மத்திபஸ்திரீகள் உத்தமஸ்திரீகள் தேக சவுந்தரியத்தை நோக்காமல் குணசவுந்தரியத்தை நோக்குவார்கள், மேலும் தாங்களெப்போது அஸ்தினபுரத்தரசனுக்கு கொடுக்கிறேனென்று மந்திரிகளுக்கு வாக்குதத்தஞ் செய்தபடி மனம் வாக்கு காயமென் மென்னும் திரிகரணங்களுக்குள் மனதே பிரதானமானதால் மன மணமே மணமன்றி இனமனம் மணமல்ல, இதனால் சுயவரவாதி ர கந்தையடையும்படிநேரிடும் அன்றியும், உலகத்திலுள்ளவர்கள் இவ்வரசனென்ன தன் பெண்ணை திரதராஷ்டிரனுக்கு கொடுக்கிறே னென்று சொல்லி சொற்சோர்வு பட்டானே இதனாலிவன் சத்திய வாதென்றெப்படிச் சொல்லுவதென்றும் அரசன் தான் சொற் சோர்வு பட்டாலும் ராஜகன்னிகையாகிலும் தந்தையின் வாக் கைப் பரிபாலனஞ் செய்யவேண்டி அதற்குத் தக்கபடி முயர்ச்சி யைத் தேடாமற் போயினாளே என்று இழிசொற் பகருவாகள் ஆத லால் நான் ராஜகன்னிகை வேறொரு புருஷரைக் கனவிலும் விரும் பேன் முந்தித்தாங்கள் குறித்த கருத்தின்படி நிறைவேற்றுமையா வென்று வேண்ட, அரசனதிக மகிழ்வடைந்து கொலுவுக்கு வந்து மந்திரி முதலானவர்களை யழைத்து ஓ மந்திரிமார்களே! திரிதரா ஷ்டிர மகாராஜனுக்கு நமதருமாத்தி காந்தாரியை மணஞ்செய் விக்கப் போகவேண்டு மாகையால் நமது ரதகெஜதுரகபதாதி நால் வகைச் சேனைகளுடன் பிரயாணப்படுங்களென்று கட்டளையிட்டு அரண்மனைக்குட்சென்று ஸ்நானஞ்செய்து போஜனமுண்டு ஆடை பாபரணங்களணிந்துத்தன் புதல்விக்கும் ஆடையாபரணங்களணி யச் செய்வித்துத் தாதிகளுடன் முத்துச்சிவிகையி லேத்தித் தானும் ரதமேறிக்கொண்டு அனேக மேளவாத்தியங்கள் தாம்தாமென்று முழங்க பரிவாரங்களுடன் நகரத்தைவிட்டு வெளிப்பட்டான். இத

ற்குள் மந்திரிமுதலானவர்களும்வந்து கலந்தார்கள் யாவருமொன் றுகக்கூடிக் கடலொலிபோல் வாத்தியங்கள் முழங்க அதிக மகிழ் வுடன் சென்று அஸ்தினு புரத்தருகிலிருக்குமோர் சோலையிலிறங் கிச் சிலதூதர்களால் தன் வரவை வீஷ்மருக்குத் தெரியப்படுத் தும்படி அனுப்பினன், அத் தூதர்களும் அரசன் கட்டளையை சி ரமேற்கொண்டு நடந்து அஸ்தினு புரத்தைச்சேர்ந்து வீஷ்மரைக் கண்டு வணங்கித் தங்களரசன் மணமுடிக்கும்பொருட்டுசோலையில் வந்திரங்கி யிருப்பதை தெரிவிக்கக்கேட்டு வீஷ்மர் ஆனந்தக்கட லில் மூழ்கினவராகி சுகஞ்சொல்லவந்த தூதர்களுக்குச் சில ஆடை யாபரணங்கள் வெகுமதியாகக்கொடுத்தத்தானும் ரதகஜதுரபதா திகள்சூழ ரதமேறி அனேக வாத்தியங்கள் அண்டகடாகங்களு மதிரும்படி கோஷிக்கச்சென்று சுவேதமகாராஜனைக்கண்டு தழுவி தக்க மரியாதைகள்செய்து அழைத்துவந்து தக்கவிடுதிகளில்யிருக் கச்செய்து வீஷ்மர் சபைக்குச்சென்றார்.

அப்போது சுவேதமகாராஜன் வீஷ்மரிருக்கும் சபைக்குச் சென்று வீஷ்மரைக்கண்டு வணங்கி ஓமண்டலேஸ்வரா தாங்களனு ப்பிவைத்த மந்திரிகள்கூறிய கருத்துக்கிசைந்துபின்பு மாறுபட்ட தைக்குறித்துக் குற்றம் பாராட்டுவது தருமமல்ல இப்போது என் குமாரத்தி தனக்குக் குறித்தபுருஷரெவரோ அவரேகணவரென்று கூறியபடியால் நான் குமாரத்தியை அழைத்துக்கொண்டுவந்தேன் என்னையாதரித்த உமதிஷ்டப்படி என்குமாரத்தியை உமது குமா ரனுக்கு விவாகஞ்செய்வியுமென்று வணங்கினன் வீஷ்மர் சுவேத மகாராஜனை யாதரித்துவிடுதிக்குப்போயிருக்கும்படி கட்டளையிட்டு தன் மந்திரிகளை நோக்கிக் கல்யாணத்துக்குத் தகுந்தமுயர்ச்சி செய்யும்படி திட்டஞ்செய்தார் மந்திரிகள் அக்கணத்தில் கல்யாண த்துக்குத் தக்க வஸ்துக்களை சேகரித்து நாடு நகரங்களுக்கெல்லாம் மணவோலைநோக்கி அஸ்தினுபுரத்தை தெய்வலோகத்தைபோல அலங்கரிக்கக் கட்டளையிட்டு வீஷ்மரிடத்து வந்து வணங்கி ஓ சுவாமி! தாங்கள் கட்டளையிட்டபடி கல்யாணத்துக்கு வேண்டிய வஸ்துக்களையெல்லாம் தயார்செய்துவைத்து வந்தோம் என்று விண் ணப்பஞ்செய்ய வீஷ்மர் எழுந்து சித்ரன்னையிடத்துக்குவந்து வணங்கிப் பெண்கேட்டது முதல் பெண்ணைப்பெற்ற அரசன்; தன் னகரத்துக்கு வந்திருக்கும் வரையில் நடந்த விருத்தாந்தத்தைச் சொல்லப் பரிமளகந்தி மகிழ்வுற்று வீஷ்மரைநோக்கி, அப்பா

மகனே, நமது குலம் விருத்தியாகவரைவில் கல்யாணத்தை நிறை வேற்றுமென்றாள். வீஷ்மர் மந்திரிகளையழைத்து நல்ல சுபமூகூர்த்தத்தில் கல்யாண மண்டபஞ்சிங்காரிக்கும்படி கட்டளையிட்டார் அவ்வாறேமந்திரிகள் அதிக விநோதமாகக்கல்யாணமண்டபத்தை யலங்கரித்தார்கள். இதற்குள், ஐம்பத்தாறு தேசத்தரசர்களும், வேதவேதியர்களும், பந்துஜனங்களும் வந்துசேர்ந்தார்கள். அவர் அவர்களனைவரையும் மந்திரிகள் மரியாதையுடன் கல்யாணமண்ட பத்திலிருக்கச்செய்து வீஷ்மருக்கறிவித்தார்கள் உடனே வீஷ்மர் மந்திரிகளுக்கெல்லாம் முதல் மந்திரியாயிருக்கிற விதுரமகாராசனை அழைத்துஉன்தமையனுயிரிதராஷ்டிரனை மணக்கோலஞ்செய்து அழைத்துவாவென்று கட்டளையிட்டு சுவேதமஹாராசனை நோக்கி கல்யாணப்பெண்ணை சகல அலங்கிருதஞ்செய்து கொண்டுவரக்கட் டளையிட்டார். அப்படியே விதுரமகாராஜனும் திரிதராஷ்டிரனை வணங்கி, வீஷ்மர் தனக்கு உத்திரவுசெய்ததையிளம்பி அழைத்துப்போய் கங்கை முதலான தீர்த்தங்களால் ஸ்நானஞ் செய்வித்து ஆடைபரணங்களால் மணக்கோலஞ்செய்து வேதவேதியர்கள் ஆசி கூற, மங்களஓசை கடலொலிபோல ஒலிக்கப் பலவாத்தியங்கள் முழங்க அழைத்துவந்து மணவரையில் உட்காரவைத்தான் அது கண்டு, வீஷ்மர் வேதவேதியர்களை நோக்கி முகூர்த்தத்தை நடப் பிக்கும்படியாக உத்திரவுசெய்தார் பிரமக்ஞானிகளாகும் வேதியர் கள் வேதாகமவிதிப்படி மந்திரங்களை யுச்சரித்து மங்களகரமான முகூர்த்தத்தில் மந்திரி ராக்ஷதைகளால் பூஜைபெற்றிருக்கிற திரு மங்கில்பத்தைப்பெரியோர்கள் ஆசிகூற,சபையிலுள்ளோர்தொட்டு வாழ்த்தத் திரிதராஷ்டிர மகாராஜன் கையில் கொடுத்து காந்தாரி கண்டதில் தரிப்பித்து இன்னும் செய்யவேண்டிய சடங்குகளனைத் தையுஞ்செய்துமுடித்தார்கள். பின்பு,வீஷ்மர் விதுர மகாராஜனைக் கொண்டு வந்தவர்கள் யாவருக்கும் யாதொரு குறைவும் வராமல் தாம்பூல முதலியவற்றை நடத்தி அவரவர்களுக்கு வேண்டிய வஸ் துக்களைக்கொடுத்து அன்னதானம், கோதானம்,பூதானம், கன்னி காதானமுதலியவற்றைச்செய்துவந்தஅரசர்களுக்கெல்லாம் தக்கப் பரிசளித்து அவர்கள் தங்கள்தங்கள் இருப்பிடம்போய் சேரக்கட் டளையிட்டார். பின்பு, திரிதராஷ்டிரனும் காந்தாரியும் அந்தப் புரத்திற் சென்று ரதியும் மதனும் போலக்கூடிக்களித்து வாழ்ந் திருந்தார்கள். இதில்காந்தாரி தன்கணவன் குருடனுயிற்றேளன்று அலக்ஷியஞ்செய்யாமலும் கண்ணுள்ளவர்போல பாவித்து அவரை

இடைவிடாமல் அவருக்குவேண்டிய தொண்டுகளைச்சிறிதுங் குற்ற மின்றி நடத்தி பயபக்தி விசுவாசத்துடன் காலையிலெழுந்து கணவ னுக்குப்பிரதக்ஷண நமஸ்காரஞ்செய்துச்சென்று காலைக்கடனைமுடி த்து ஸ்நானஞ் செய்து மடிவஸ்திரந்தரித்து சுசியாகிவந்துத் தன் கணவனை எழுப்பிக்காலைக்கடன் கழிக்கச்செய்து ஸ்நானம்பண்ணி வைத்தமடிவஸ்திரமுடுத்திச்செய்து ஒருபொற்பீடத்தின்மீது உட் காரவைத்து கங்காதீர்த்தத்தினால் அவர் திருவடிகளை விளக்கி புஷ் பாக்ஷதைகளாலர்ச்சித்து சந்தனபூசி அத்திருவடிகளுக்குதூபதீப ஆராதனைப்புரிந்து ஸ்ரீ பாததீர்த்தத்தை ஸ்வீகரித்து சிரசின்மீது புரோக்ஷித்துக்கொண்டு அவர் மனங்களிக்கும்படி தீர்க்க தெண்ட நிட்டு எழுந்து நின்று கைக்கூப்பிக்கொண்டு, ஓ பிராண நாயகரே! அன்னை, தந்தை, குருதெய்வம் யாவும் தாங்களே? தேவரையன்றி வேறுதெய்வங்களேத்தொழ அடியாளுக்கு மனமில்லை. ஆகையால், தேவரீரே அடியாளைக்காத்து ரக்ஷிக்குங் கடவுள் என்னுயிருக்குயி ரும் சகலபந்துக்களும் தேவரென்றே நம்பி இருக்கிற இவ்வேழை யின்மீது கடாக்ஷம்புரியும் மண்டலேஸ்வரரே என்று, அவர்மனங் களிகொள இனியவசனங்களே பேசுகிற தன்மனைவியாகிய காந்தாரி யை தன்னருகில் வரச்சொல்லிக் கரங்களால், அவள் தேகத்தைத் தடவிப் பல ஆசிகள்கூறி சந்தோஷ சாகரத்தில் மூழ்கியிருக்கிற போது இதற்குள் அறுசுவை அன்ன மூதலானதுகளுந் தாதிகள் பொற்கிண்ணங்களிலெடுத்து வந்துவைக்க அதைக்கண்டுகாந்தாரி களிகொண்டு நாயகரை எச்சரித்து அன்னத்தில் பருப்பைச்சேர்த் தப்புத்தருக்கு நெய்யைவிட்டுக்கலந்து மெத்தஅன்புடன் ஊட்டி பற்பல சிறுதிண்டி பலகாரவகைகளையுந் தின்னச்செய்து ஜலமீந்து வாய் கொப்பளித்து மிழச்சொல்லி களப கஸ்தூரிபூசி விடாய்தீரக் கவரி ஆலவட்டம் விசிறிகளைக்கொண்டுபசரித்து அடைக்காயும் வெற்றிலையுந் தந்துகொஞ்சம் உலாவும்படி இப்படியும் அப்படியும் அழைத்தச்சென்றபின்பு, பொற்பீடத்தின்மீது வீற்றிருக்கச்செய் தக்கொண்டிருக்கையில் இதற்குள் முதல் மந்திரியாகிய விதுர் வரக்கண்டு காந்தாரி மைத்துனரே வாரும் வாருமென்று அன்புட னழைத்துத் தன்கணவனை அவரிடமாக ஒப்பித்து ஓ சுவாமி! பிரா ணநாயகரே! கொலுக் கூடத்துக்குத் தங்கள் இளைய தம்பியுடன் போய் வருகிறீரா வென்றனுப்பித் தன் கணவன் புசித்து மிச்சமா கிய சேஷான்னத்தை தேவாமிர்தமாகபாவித்து அவ்வன்னத்தைப் புசித்துத் திருப்தியடைந்து அடைக்காயும் வெற்றிலையும் தரித்துப்

பொழுது போகிற பரியந்தம் தன் கனவனது திருவடிகளைத் துதி செய்துக்கொண்டிருப்பாள்.

இவ்வண்ணம் அந்த காந்தாரித்தன் கணவனையே? தெய்வமென்றும் குருவென்றும், பந்துவென்றும்கருதி, அவர்திருவடிகளையே இடைவிடாது தியானஞ்செய்துக்கொண்டிருக்கிறபோது, சிலவருடத்தில் கர்ப்பவதியாயினள் மூப்பத்தாறுமாதமாகியும் பிரசவமில்லா திருப்பதையும் தன் மைத்துனன் மனைவி பிள்ளைபெற்றுச் சுகமாகயிருப்பதையும் காந்தாரி அறிந்து மெத்தப்பொறுமையினல் கல்லையெடுத்துகர்ப்பத்தின்மீது இடித்துக்கொள்ள, கர்ப்பங்கலங்கி உதிரமயமாயோட வியாசபகவான் வந்து அந்த உதிரத்தை வீண் போகவிடாமல் நூறு கலசங்களிலடைத்து மிச்சமாகியிருந்ததை மற்றொரு கலசத்தில் சேர்த்து அதற்குயாதொரு பின்னமும் நேரிடாவண்ணம் சிலமந்திரங்களையுச்சரித்துப்போயினர். அப்போது காந்தாரி வேதவியாசர் சொல்லிய வண்ணம், கலசங்கள் வயிற்றிற் படும்படியாகக் கோழியானது முட்டைகளைவயிற்றினில் அணைத்துச்சூடுண்டாக்கிக்குஞ்சிபொறிப்பதுபோலக்காத்திருக்க ஒவ்வொரு நாளுக்கொன்றாக நூறுபிள்ளைகளும் ஒருபெண்ணும் கலசங்களையுடைத்துக்கொண்டு வெளிப்பட்டார்கள். அப்புதல்வர்களையும் புதல்வியையும் மெத்தப்பிரியத்துடன் வளர்த்து தக்க வயதினில் அவரவர்களுக்கு மணம்புரிவித்துத் தன் மூத்த குமாரனுக்கு மகுடாபிஷேகஞ்செய்துஅஸ்தினபுரத்தைஆளச்செய்தகாலத்தில்மூத்த குமாரன் தாயாதிகளுக்குப் பாதிநாடுகொடுக்க வேண்டியதாயிருக்கிறதே அவர்களைக்கொன்று தானொருவனே முழுநாட்டையும்ஆளவேணுமென்றபொராமைகொண்டு பங்காளிகளால்போரில்மாண்டு போயினர்கள். அதைக்கண்டு காந்தாரிதுக்கசாகரத்தில் மூழ்கினவளாகி பலவாறு பிரலாபித்துத் தன் புதல்வர்கள் மாண்டு போயினதற்குக்காரணம் கிருஷ்ணபகவானென்றுணர்ந்துகிருஷ்ணபகவானைநோக்கி, ஐயா! கிருஷ்ணமூர்த்தியே பங்காளியோடு பங்காளி எதிர்த்து யுத்தஞ்செய்கிறபோது எங்களுக்கு விரோதிகளாகிய பாண்டவர்கள்பக்ஷமாயிருந்து என்பிள்ளைகள் நூறுபேர்களையுங் கொன்றுவிட்டபடியினலே மீமரணமடைய உன்னைப்பந்துக்கள் மயான பூமியிற் சேர்த்துக் கொள்ளிவைத்த போதிலும் உன்தேகம் குறைக்கொள்ளிபாய்ப் போகக்கடவதென்று சாபமிட்டு தன்னுடைய நாயகனுடன் தானும் உயிரை மாய்த்துக்கொண்டு சொர்க்கத்தை படைந்தனள்.

காந்தாரி கற்பின் மகத்துவம்.

முற்றிற்று.

ஸ்ரீ

ராமஜெய.

மத்திராதேவி கற்பின் மகத்துவம்

ஸ்ரீ திருமகள் கடாக்ஷம் நிறைந்த ஐம்பத்தாறு தேசங்களில் ஒன்றாகிய மத்திரதேசமென்றொரு நகரமுண்டு அந்நகரத்தை மத்திராதிபனென்னும் அரசன், மனுநீதி வழுவாமல் செங்கோல் செலுத்திக் கொண்டும் மன்னுயிரைத் தன்னுயிர்போலபாதுகாத்து தருமதேவதை நாலுபாதத்தில் நடக்கவும் மாதமும்மாரிபொழியவும், சத்திய சந்தனாகியும் இருந்தான். அவ்வரசன் மதிமுகியனும் மனைவியுடன் கூடிக்குலாவிவருகிறபோது பகவான் கிருபையாலும், பெரியோர்களின் ஆசீர்வாதத்தினாலும் பெண் குழந்தை யொன்று பிறந்தது. அக்குழந்தையை மெத்தப்பிரியமாக நாளொருமேனியும் பொழுதொருவர்ணமாகவும், வளர்த்துவருகையில்அப்பெண்குழந்தையும் வளர்பிறைச் சந்திரனைப்போல, நாளுக்கு நாள் விர்த்தியடைந்து ஐந்து வயதானவுடனே? இப்பெண்ணுக்கு மத்திராதேவி யென்று நாமகரணஞ்செய்து, அன்னதானகோதான, பூதான, வஸ்திரதான முதலானதானங்களும் அபாரமாகச்செய்து அரசர்களையும் பந்துக்களையும் அன்புடன்உபசரித்து அவரவர்களைதங்கள் தங்கள்நகரத்தைச் சேரும்படி விடைகொடுத்து அனுப்பி மத்திராதேவியின்மீது மெத்த பக்ஷமாவிருந்தான். அந்தமத்திராதேவியோ ஆழகில் ஊர்வசி ரம்பை-திலோர்த்தமை-மேனகைகளைப் பார்க்கிலும்அதிகரித்திருந்தனள். பகவான் பக்தியில் பிரஹ்லாதனுக்கும் வீஷ்ம கானத்தில் நாரதருக்கும் நற்குணசம்பத்தினில் சாவித்திரிதேவிக்கும் சமமாகியிருந்தனள் இப்படிக்கிருக்க, சூரசேன மகாராஜன் பெற்ற சுந்தி தேவியென்னும் பிரதைபெதும்பைப்பருவங்கடந்து மங்கைப்பருவமடைந்தனள். இவளைமெத்த அன்புடன் வளர்த்துவருகிற சூரசேனன் மங்கைப் பருவமடைந்தனளென்று கேட்டுச் சிலது மாதங்கள்கடந்து சுயம்வரஞ்சாட்டி ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்கும் திருமுகமெழுதி தூதுவர்கள் கையிற்கொடுத்து அனுப்பினன்தூதுவர்கள் அந்தந்த அரசர்களுக்குங் கொண்டுபோய்கொடுக்க அரசர்கள் அத்திருமுகத்தின் கருத்தை யுணர்ந்து தங்கள் தங்கள் ரதகஜதுரகபதாதிகளாகிய நால்வகைச் சேனைகளுடன் சூரசேனன் நகர

த்துக்கு வந்தார்கள் வீஷ்டுமர் இத்திருமுகத்தை யுணர்த்து பாண்டு மகாராஜனே அழைப்பித்து கங்கை முதலிய தீர்த்தங்களினுல் ஸ்ஞானஞ் செய்வித்து அங்குதானே மணக்கோலஞ் செய்து ரதகஜ துரக பதாதிகள் சூழ பாண்டு மகாராஜனுடன் வீஷ்டுமரும் சூரசேன மகாராஜன் நகரத்துக்கு வந்தார். அப்போது, சூரசேன மகாராஜன்வந்த அரசர்களுக்கெல்லாந் தகுந்த மரியாதைகள் செய்து விடுதி விட்டு சந்திரபலன் தாராபலன் கூடிய காலவோரையில் தன் மகளாகிய குந்திதேவிக்கு கங்கை முதலிய தீர்த்தங்களினுல் ஸ்ஞானஞ் செய்வித்து ஆடையா பரணங்களினுல் அலங்கிருதஞ் செய்து சித்தப்படுத்தி அரசர்கள் யாவரையும் வரவழைத்துத் தக்க பொற் பீடங்களில் உட்காரவைத்துத் தன் புதல்வியை அழைத்து, ஓ அம்மணி! குந்திதேவி இதோ வீற்றிருக்கிற அரசர்களில் எந்த அரசன் மீதனக்குஇச்சையோ! அந்த அரசன்கண்டத்தில்பூமாலையைப்போடக்கடவாயென்று சொல்ல, குந்திதேவியும் சில தாதிகளுடன் தந்தையின் கட்டளைப்படி பலராஜர்கள் வீற்றிருக்கிற சபைக்குள் பிரவேசித்தாள். அவளைக்கண்ட அரசர்கள் யாவரும் மெத்தவிருப்பங் கொண்டு எனக்கு மாலை சூடுவன் இல்லை இல்லை எனக்கு சூடுவனென்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ள குந்திதேவிக்குத் தாதிகள் அந்தந்த அரசர்கள் பெயரையும் அவர்கள் ஆளும் தேசத்தையும் பெருமையையும் எடுத்தோதிக் கொண்டே பாண்டுமகாராஜன் அருகில்வந்து ஓ அம்மணி! எங்களிறைவியாகிய மாதரசே! இதோஇருப்பவரைப்பார்த்தீரா இவர் இளஞ்சூரியனைப்போல பிரகாசிக்கின்றார் இவ்வரசன் ஆரென்றுல் சந்திரவம்சத்திலுவர் அஸ்தினபுரத்திற் கதிபர் பாண்டுமகாராஜனெனும் பெயரையுடையவர் அரசர்க்குள்ராஜசிங்கம்போன்றவர் என்று தாதிகள்கூற, குந்திதேவி பாண்டுமகாராஜன் திருமுகமண்டலத்தைத் திருத்தமாய் நோக்கி, மனம் பூரித்துக் குலத்திலும் கல்வியிலும் பலத்திலும் செல்வத்திலும் குணத்திலுஞ் சிறந்தவராகுமென்று கருதி உடனே தன்காதலத்திலிருந்த மலர்மாலையைப் பாண்டுமகாராஜன் கண்டத்தி லணிவித்து வணங்கி நின்றனள் அதைக்கண்டு சூரசேன மகாராஜன் களிக்கடலி லாழ்ந்தவனுகி உடனே, வேத வேதியர்களை அழைப்பித்து மகளையும்மருமகனுகிய பாண்டு மகாராஜனையும் மணவரையிலிருத்தி நல்லசுபமுகூர்த்தத்தில் பாண்டு மகாராஜன் கரங்களால் குந்திதேவியின் கண்டத்தில் மாங்கல்யத்தைத் தரிப்பிக்கச்செய்து அக்கினிபகவான் திருப்தியடையும்படி ஓமமுதலிய சடங்குகளை நிறைவேற்றி அபார

மாகிய தானதருமங்களைச்செய்து மணவரையைவிட்டு தம்பதிகளை எழுப்புகிறபோது அங்கு வந்திருந்த அரசர்க்குள் மத்திரதேசாதிபன் எழுந்து சூரசேனன் முதலாகிய சகல அரசர்களையும்நோக்கி ஓ அரசர்களே நான் செய்யும் விண்ணப்பத்தை அங்கிகாரஞ்செய்யவேண்டும் அஃதென்னவெனில் மெத்தவும் அருமையான தவஞ் செய்து பெற்ற என்குமாரத்தியாகிய மத்திராதேவியை இப்பாண்டு மகாராஜனுக்கு விவாகஞ் செய்துகொடுக்க விருப்பமுடையவனாக இருக்கிறேன். அம்முகூர்த்தம் நிறைவேறுகிற பரியந்தம் யாவரும்தயவுசெய்து இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு அக் கல்யாணபண்டபத்தைவிட்டு உடனே புறப்பட்டு சென்றுத் தன் புதல்வியை அழைத்து அவளுக்கு கங்கை முதலான தீர்த்தங்களினால் ஸ்நானஞ் செய்வித்து ஆடையாபரணங்களால் அலங்கிருதஞ் செய்து அழைத்துவந்து வீஷ்டுமர் முதலான அரசர்கள்களிப் புறக் கன்னிகாதானஞ்செய்துகல்லசுபமுகூர்த்தத்தில் பாண்டுமகாராஜனுல் மங்கிலியந்தரிப்பித்து வேதவேதியர்கள் மகிழ்வெய்த தானதருமங்களைச் செய்துவந்த அரசர்களுக்கு விருந்திட்டு அவரவர்கள் இருப்பிடம்போய் சேர விடைகொடுத் தனுப்பினன். உடனே பாண்டுமகாராஜன் குந்திதேவிமத்திராதேவி என்னும் இரண்டுதேவிகளை ரதத்திலேற்றி வீஷ்டுமருடன் தன்னகரஞ் சேர்ந்துப் பட்டணத்தை வலமாகவந்து குடிப்படை முதலியபேர்கள் மகிழ்வெய்த விருந்துடன் வெகுமதிசெய்து பூமிபிராட்டிக்கமலப் பிராட்டி சமேதனுகிய திருமால்போல் குந்திதேவி மத்திராதேவி சமேதனுகி பாண்டுமகாராஜன் இன்பமுடன் வாழ்ந்துவருகிற காலத்தில் குந்திதேவியும் மத்திராதேவியும் மனமொத்து தாங்கள் பிராண நாயகராகிய பாண்டுமகாராஜனைப் போஷிப்பதில் அன்னையைப் போலவும் தொண்டுசெய்வதில் அடியாளைப்போலவும், அழகில்-பூமிபிராட்டி கமலபிராட்டியைப்போலவும், பொருமையில் பூமாதைப்போலவும்-கல்விபில்-வேசியைப்போலவும், மதிபில் மந்திரிகளைப்போலவும், பாதுகாத்துக் கொண்டும் இடைவிடாமல் பிராணநாயகன் திருவடிகளைத் தியானஞ் செய்துக்கொண்டு மிருந்தார்கள்.

இப்படியிருக்கிற உத்தமிகளும் பதிவிரதைகளுமாகிய இரண்டு மனைவிகள் மீது பாண்டுமகாராஜன் மெத்த அன்புவைத்துக் கூடிக் குலாவிக் கொண்டிருக்கிற காலத்தில் ஒருநாள் பாண்டு மகா

ராஜன் வேட்டையாட விருப்பங்கொண்டு மந்திரிகளையும் கால்வ
கைச் சேனைகளையும் வில்லியர்-வலையர்-வேடர்களையும் பிரயாண
மாகும்படிகட்டளையிட்டுத்தான் அந்தப்புரத்துச்சென்று ஸ்னானம்
பண்ணிபோஜனஞ்செய்து ஆடையாபரணங்களை யணிந்துவேட்டை
முடிதரித்து வில்லம்பு முதலியபடைகளை யெடுத்துக்கொண்டு மனை
வியரிடத்துச் சென்று வேட்டையாட காட்டிற்குச்செல்ல விடை
கொடுங்களென்றுகேட்க மனைவியரிருவரும் அரசனேவணங்கி, ஓ!
சுவாமி! எளியோங்களுங் காட்டின் வினோதங்களைப் பார்க்கவெகு
நாளாக விருப்பங்கொண்டிருக்கிறோ மென்றனர். அதற்கு பாண்டு
மகாராஜன் ஒத்துக்கொண்டு வீஷ்டிமர் பரிமளகந்தி இவர்களுத்
திரவுபெற்று இரண்டுமனைவியரையும் அழைத்து ரதத்தின்மே
லேற்றிக்கொண்டு நகரத்தைவிட்டு வெளிப்பட்டான். அதற்குள்
நால்வகைச்சேனைகளுடன் மந்திரிகள்வந்து கலந்தார்கள் யாவரும்
ஒன்றுகூத்திரண்டு சகலவாத்தியங்களுங் கடலொலிபோல முழங்க
ஆரவாரத்துடன் காட்டிற்சென்று யானை-புலி-கரடி-சிங்கம்-காண்
டாமிருகம்-மான்-பன்றி-மூயல் முதலியவற்றை குத்தியும், வெட்
டியும், அடித்தும், பிடித்தும், கிழித்து, இப்படி நானாவிதமாக
விலங்கினங் கலங்கி உயிர்சோர வேட்டையாடுகிறபோது, ஒரு
பெரிய கண்டா மிருகமானது இராஜன்கண்ணுக்குத் தோன்றி
மறைந்தது, அதை அரசன் கண்டு வதைசெய்ய வேண்டுமென்று
பின்தொடர்ந்து போகிறபோது வழியில் அமுதந்தியென்னும்முனி
வர்தானும் தன்மனைவியையும் அனேககாலந் தவத்திலிருந்து ஒரு
நாள் காமத்தின்மீது மனதைச்செலுத்தி தன்மனைவியை அழைத்
தார் மனைவி அக்குறிப்புணர்ந்து ஓ! ஸ்வாமி! அடியாள் கருத்தும்
காமத்திற் சென்றிருக்கின்றது ஆனல் ஒருவிண்ணப்பம் இக்காம
மென்பது உலகிலுள்ள யெல்லா உயிர்க்குமுள்ளது தான் அதில்
எவ்வுயிர் அதிககாமத்தை யுடையது அதையுரைத்தால் அவ்வுரு
வங்கொண்டு புணரலாம் அப்போது, இன்பமதிகரிக்கிறது மன்றிப்
பகற்காலத்துக்கும் அஞ்சவேண்டியதில்லை என்று நவில, முனிவன்
மனைவி கூறியவற்றிற்கு மகிழ்வடைந்து, ஓ! பெண்கள் நாயகமே!
எல்லா உயிர்களிலும் மான்சாதி அதிக காமத்தையுடையது அந்த
மானுருவமெடுத்தும் புணரலாமென்றுரைத்து, இருவரும் அவ்
வுருக்கொன்று புணர்ந்துக்கொண்டிருந்தார்கள். அப்போது அர
சன், அஃதுணராமல் மான்தானேயென்று வில்லில்தொடுத்திருந்த
பாணத்தைவிட்டுவிட்டான். அப்பாணம் குறிதப்பாமல் ஆண்

மானின்மீது பட்டெறிவிப்போயிற்று. உடனே முனிவன் தன் னுரு வங்கொண்டு அரசனேநோக்கி மெத்தகோபத்துடன் ஓ! அரசனே! நீ சந்திரவமிசத்தராதிபதியா யிருந்தும் கெலிதி சம்பாதித்து கொண்டாய் வேட்டையாடுகிறபோது எதிர்பட்ட மிருகங்களைக் கொல்லுகிறதென்று விதியிருப்பதாலும் புணர்ச்சியிலிருக்கும்உயிர் களைக் கொல்லுதல் புண்ணியமல்ல. இவ்வாறு மநுதருமமுறைத் திருக்க அதையுணர்த்தும் கல்வியிலிருக்கிற என்னுயிரை பாணத் தால் கொள்ளை கொண்டாய் ஆதலால், நீ உன்மனைவியரோடு புணர் ச்சிசெய்வையாகில் அக்கணம் உன்னுயிர்நீங்கக்கடவதென்று பூமி யில் விழுந்து இறந்தார் அதைக்கண்டு அவர் மனைவியும் உடனே தானுமிறந்தாள் அப்போது, அரசன் இச்செய்கையைநோக்கி, அடடா மோசம் வந்தது நாம் சுபாவமான மானென்று பாணத் தை விட்டோம் முனிவராக விருந்தார். அன்றியும் நம்மாலிரண்டு யிர் போயிற்று இதற்கென்ன செய்கிறதென்றேங்கி கனவருத்த மடைந்து சேனைகளுடன் வந்துகலந்து மந்திரிகளை நோக்கிக் கூறு கின்றான்.

கேளுங்கள் மந்திரிகளே! இம்மை இன்பங்களில் முக்கியமான இன்பம் காமம் அக்காமத்துக்கு ஒரு முனிவராலே அபாத்திர ரா னேன் என்று அவ்வரலாற்றைக் கூறி இனி நான் அரசருக் குறியவ னாகியிருந்தும் என்னபலன் ஆதலால், நான் துறவரத்தை யடைந்து தவத்தைச்செய்து நற்கதி யடைகிறேன். நீங்களெல்லவருஞ் சென்று நகரத்தை யடைந்து என் மூதாதையர்கிய வீஷ்டமர், முதலியோர்க்கும்என்னிர்த்தாந்தத்தைதெரியப்படுத்துங்களென்று கட்டளையிட்டான் அதை மந்திரிகள் முதலானேருங்கேட்டு கனவ ருத்தமடைந்து நால்வகைச் சேனைகளோடு நகரம்வந்து வீஷ்டமர் முதலிய அரசர்களைவணங்கி பாண்டுராஜனுக்குநேரிட்டசாபவரலா ற்றைச்சொன்னார்கள் அதைக்கேட்டு வீஷ்டமரும் பெரிய ராஜனும் பரிமளகந்தியும்மெத்தத்துக்கமடைந்துயாதொன்றுந்தோன்றாமலிரு ந்துவிட்டார்கள். இங்கே பாண்டுமகாராஜன் தன் மனைவியிருவரை யும்அழைத்து தனக்குநேரிட்டசாபத்தின் வரலாற்றைச் சொல்லி இனிநான் தவத்தக்குறியனே யன்றி, உங்களிருவர் போகத்திற் குரியவனன்று ஆதலால, நீங்கள் உங்கள் தாய்வீடுசேர மனமிருந் தால் போகலாம்அல்லது, மாமிவீடுசேர மனமிருந்தால்போயிருக்க லாம் இவ்விரண்டில் உங்கள் மனதுக்கிசைந்ததெதுவோ அதைச்

சொல்லுங்களென்று வினவியபோது, மனைவியரிருவரும் இவ்வசனங்களைக் கேட்டவுடன் செவியில் நாராசத்தை விட்டதுபோல கனவருத்த மடைந்து அடியுற்ற கூந்தற்கனிபோல, அரசன் திருவடியில்விழுந்து, ஓ! எங்களுக்குயிராகிய நாதிபரே என்ன வார்த்தை யுரைத்தீர் கணவனைவிட்டு உயிர்வைத்து வாழ்வதைவிட இறப்பது மெத்த நலமென்று ஸ்திரீகளுக்கு விதியிருக்கும் உம்மை விட்டுப்பிரிந்து நாங்கள் உயிரோடு வாழமாட்டோம் தேவரீருக்குப் பணிவிடைப் பெண்களாகவாவது இருப்பமே யல்லது, இவ்வுலகத்தில் ஒரு கணப்பொழுதேனும் தங்களைவிட்டுப் பிரிந்துயிருக்க மனஞ் சகியோமென அரசன் மனைவியர் கருத்தறிந்து அவ்விருவரையும் அழைத்துக்கொண்டு ஒரு வனத்திற்சென்று மணிமகுடத்தை நீக்கி சடைமுடி தரித்து ஆடையாபரணங்களை நீக்கி காவிகாம்பர தண்டுகமண்டலாதிபதியாகி தவஞ் செய்திருக்கும் பெரியோர்களை அடுத்து உபதேசம் பெற்று தவத்தாலடையும் லோக்கியமான பாக்கியமெதுவோ, அதனையடைய வாளேந்திய கரத்தில் ஓமதிரவியங்களை ஏந்தி ஓமத்தை வளர்த்தும் ஜலத்தில் நின்றும் ஒருகாலூன்றியும் பஞ்சாக்கினி நடுவிற் பொருந்தியும் இப்படி அனேகநாள் தவஞ்செய்திருந்தான். இப்படி இருக்கிற காலத்தில் கருத்தைப் பிரமனிடத்திற் செலுத்தித் தவஞ்செய்து திவ்யக்ஞானத்தை யடைந்திருப்பதை மகாமுனிவர்கள் யாவரும் வந்து தவஞ்செய்கிற பாண்டுமகாராஜனது மனவுறுதியைக் கண்டு மெத்த மகிழ்ச்சியையும் அடைந்து அரசர்களிலிப்படித் தவஞ்செய்தவர்களைக் கண்டதில்லையென்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டிருக்கையில் குந்திதேவியும் மத்திராதேவியும் பர்ணகசாலையை விட்டு வெளியில்வந்து முனிவர்கள் யாவரையும்வணங்கி அவரவர்களுக்குத் தக்கபடி உபசரித்து அவர்களால் ஆசிபெற்றுத் தவத்திலிருக்கும் கணவனுக்கு வேண்டிய வஸ்துக்களைத் தயார்செய்து வைத்து எப்போது கண்விழிப்பாரென்று எதிர்பார்த்திருந்தார்கள் சிறிதுநேரத்திற்குள் பாண்டுராஜன் கண்ணைவிழித்து வந்திருக்கும் முனிவர்களைக் கண்டு அவர்களை வணங்கி உபசாரம்செய்து வினயமுடன் நின்றுக்கொண்டிருக்கும் பாண்டுமகாராஜனுக்குப் பல ஆசிகள்கூறி வேதத்தினுட் கருத்தைவிளங்க யுரைத்துச்சென்றார்கள். பின்பு பாண்டுமகாராஜன் கன்னிருமனைவிகளால் உபசரிக்கப்பெற்று மூன்போல நாளுக்குநாள் தவத்தில் அதிகமுயர்ச்சியை யுடையவனாகித் தவத்தினுலடையும் பயனைய மனப்பதை

யை வென்று அறிவின்மயமாகி நின்றிருந்து ஒருநாள் வடபாரிசத்தினி லிருக்கும் சிருங்கிவனத்துக்குச் செல்லக்கருதி மனைவியரை நிறுத்தித் தனியே சென்று அவ்வனத்தினில் வசிக்கும் சதாநந்தர் முதலிய முனிவர்களைக் கண்டு வணங்கிநின்றான். சதாநந்தர் முனிவரும் இன்னுஞ் சில முனிவர்களும் ராஜமுனிவனைக் கண்டு மகிழ்வடைந்து ஆசிகள்வழங்கி அரசனுகையிருந்தும் தவசிரேஷ்டனுகிய தன்மையைக் கண்டு வேதாகமங்களின் நுட்பத்தையும் மகா மந்திரங்களின் ரகசியத்தையும் போதித்தார்கள் பாண்டுமகாராஜனும் மகாமுனிவர்கள் கூறிய ரகசியத்தை மனதிற்பதித்து மறுபடித் திரும்பிவந்து தன் பர்ன்னசாலையை யடைந்து முன்போல மனிவியர்கள் உபசரிக்கப்பெற்றுத் தவத்திலிருந்தான். இவ்வாறு சில நாட் சென்றபின்பு ஒருநாள் சதாநந்தர் வசிஷ்டர் வால்மீகர் விஸ்வாமித்திரர்முதலான முனிவர்கள் கைலாயத்தைத் தரிசிக்கக்கருதி வடதிசையை நோக்கிச் செல்லுகின்றவர்கள் பாண்டுராஜன் தவஞ் செய்கிறவனத்துக்குவந்துப் பாண்டுராஜனைக் கண்டார்கள் பாண்டுராஜன் திடுக்கென்றெழுந்துவந்த முனிவர்களுக்கு வந்தனை வழிபாடுகள்செய்து பயபக்தியுடன் நிற்கிறபோது முனிவர்கள்பாண்டுராஜனுக்கு ஆசிகள் வழங்கி சொல்லுகின்றார்கள். ஓ ராஜமுனியே! நாங்கள் கைலாயத்தை தரிசிக்கக் கருதி வடதிசையை நோக்கி வந்தோம் உம்மையும் பார்த்துப் போவோமென்றிங் கடைந்தோம் என்றுரைக்கப் பாண்டுராஜன் முனிவர்களை வணங்கிச் சொல்லுகிறன் ஓ சுவாமிகளே! அக்கயிலாசத்தை அடியேனுந் தரிசிக்க வேண்டும் யானும் வருகிறேனென்று புகன்று தன் மனைவியரிடஞ் சென்று ஓ! உத்தமர்களே சில முனிவர்கள் கைலாசத்தை தரிசிக்கச் செல்லுகிறார்கள் யானுந் தரிசிக்க விருப்பங்கொண்டேன் ஆதலால் தடையின்றிப் போய்வரும்படி விடை தருவதுடன் நான்வருகிறபரியந்தம் பர்ன்னசாலையைவிட்டு வெளிப்படாமல் வெகு ஜாக்கிறதையா யிருங்களென்று நவிலக்கேட்டு மனைவிகளிருவரும் இடியோசையைக்கேட்ட நாகங்களைப்போல மனங்கலங்கி ஓ எங்கள் பிராணநாயகரே காட்சியளிக்கும் மாசுமையாகிய கொழுநனைப்பிரிந்தக் குலமங்கையர்கள் உலகிலுண்டா பிரிந்து துணிந்திருப்பவர்க்குப் பரகதியுண்டா நீரிப்படி எங்களைவிட்டுப் போவது கைலாசத்தின்மீதாசைகொண்டா தங்களுக்கு அந்த கைலாசத்தை தரிசிக்க ஆவலுண்டாகியபோது எங்களுக் காவலில்லாமற் போகுமா ஆனல், பதிவாக்கை மறுத்த பாவையர்கள் கார்த்த பத்துக்கினை

பானவர்களுக்கும் அவர்களையே விபசாரிகளென்றும் கணிகை மாதர்களென்றும் சொல்லத்தகும் ஆகையால் தாங்களினித் தடையின்றிக் கயிலையங்கிரிக்குப் போய்வாரும் தங்கள் கட்டளையின்படி நாங்களிருவரும் பர்ணசாலையை விட்டு வெளிப்படாமலிருக்கிறோமென்று சொல்லக்கேட்டு ராஜமுனிவனுனவன் மெத்தமகிழ்வடைந்து அம்முனிவர்கள் பின்தொடர்ந்து சென்றான். அப்போ தம்முனிவர்கள் ஒன்றுஞ்சொல்லாமல் அழைத்துச்சென்று கைலாயத்துக்கருகிலடைந்து அங்குநின்று ராஜமுனிவனைப்பார்த்து ஓ ராஜமுனிவனே எங்களுடன் பின்தொடர்ந்து வரச்செய்தது நீ செய்த தவப்பலன் இனி நீ வரக்கூடாது ஏனென்றால் உலகத்திலொருவன் அளவற்ற புண்ணியத்தைச் செய்தபோதிலும் புத்திரனில்லாதவனுக்குப் புண்ணியலோகமில்லை என்று சுருதிகள் முறையிடுகிறபடியால் உனக்குப் புத்திரனில்லை நீ கைலாசத்தை தரிசிப்பதற்கு யோக்கியதல்லவென்று மறுக்க பாண்டுமுனிவன் மனங்கலங்கி அம்முனிவர்களுக்கு வந்தனைசெய்து சொல்லுகின்றான்.

ஓ சுவாமிகளே, புத்திரனில்லாவிட்டால் புண்ணியலோகமில்லையென்று கட்டளையிட்டீர்கள் அஃதுண்மைதான் அடியேன், மனிஷிகளிடம் புணர்ச்சிசெய்தால் மரணமடைவதாக சாபம் நேரிட்டிருக்கின்றது எனியேனிதர்க்கென்ன செய்வேன் தங்களுடையகிருபையிருந்தால் எல்லா நலத்தையும் ஒரு நொடிப்பொழுதிலடையலாம் ஆதலால் அடியேன்மீதுக் கிருபைவைத்துக் கைலாசத்தை தெரிசிக்க அருள்புரியவேண்டுமென்று வேண்டிக்கொள்ள முனிவர்கள் பாண்டுமுனிவனை நோக்கிப் புன்னகைபுரிந்து சொல்லுகிறார்கள் ஓ ராஜமுனிவரே நாங்களே வேதவிதியை விலக்குவமானால் உலகிலுள்ளவர்கள் அவ்வேதத்தை மதிப்பார்களா வல்லமை இருக்கின்றதென்று மீறி நடப்போமானால் எளியவர்க்காசை சொல்லிப் பலதரந் தன்னிடத்துக்கு வரும்படிச்செய்து பின்பு ஒருதவியுஞ் செய்யாமற் கடித்து இல்லையென்று கைவிரிப்பவன் எக்கதியடைவானே அக்கெதி எங்களுக்கு வருமாதலால் நாங்கள் கூறுவதைக் கேள் புணர்ச்சி செய்தால் மரணமடைவாயென்று உனக்குச் சாபமிருக்கிறபடியால் தேவர் அல்லது முனிவர் இவ்விருநிரத்தாரிலொருநிரத்தாரால் புத்திர சந்தானம் பெறலாமென்று விதியிருக்கிறது இவ்விதிப்படியே முன்னம் பராசராமரால் நாசமடைந்த சூரியகுலம் முனிவர்களால் உலகில் விர்த்தியாயிற்று இன்னம்

அனேக அனுபவமிருக்கின்றது அவைகளைக் குறித்து உதாரணங் கொடுக்கவேண்டியதில்லை எனென்றால் உங்கள் பரம்பரையே போதுமான திருஷ்டாந்தமாகியிருக்கின்றது ஆகையால் நீபோய் புத்திரசந்தானம் பெற்றுக்கொள்ளுமென்று நிறுத்தி அரசன் பின் தொடராதிருக்கத் தங்கள் சக்தியால் உருவத்தை மறைத்து அந் தரத்தானமாகச் சென்றார்கள் பாண்டு முனிவன் வருத்தமடைந்து தன் தவநிலைசேர்ந்து இரண்டு மனைவியரையும் நோக்கி ஓ புண்ணிய வதிகளே முனிவர்கள் யாவரும் கைலாசத்தைத் தரிசிக்கச்சென் றார்கள்யானும் அவர்களோடு சென்றேன் கைலாசத் தருகிற்சென் றபோது அம்முனிவர்கள் என்னைநோக்கி உனக்குப் புத்திரனில்லை ஆதலால் நீ கைலாசத்துக்கு வரக்கூடாது என்று மறுத்து தரும சந்தானமாகிலும் பெற்றுக்கொள்ளென்று உத்திரவுகொடுத்து மறைந்துவிட்டார்கள் நான் இந்த பூதலத்திற் பிறந்து என்ன பாக் கியத்தை அடைந்தேன் என்னைப்போல் பாவி உலகிலில்லை நீங்க ளிருவரும் என்சொற்படி நடந்தீர்களானால் அப்போது உலகிலு ள்ள எல்லாபாக்கியத்தையும் பெறுவதுமன்றி மேலாகிய புண்ணிய லோக வாழ்வையும் அடையலாம் என்கருத்தென்னெனில் கோ தானம், பூதானம், கன்னிகாதானம், வஸ்திரதானம், அன்னதானம் சொர்ன்னதான முதலிய தானங்களையும் இறப்போர்க்குக் குறிப் பறிந் தீதலையும் நல்ல விரதங்களையும் அனேகயாகங்களையும் செய் தாலும் எவர்களாலுங் கற்றுக்கொள்ளக்கூடாத மாதரியத்தை யுடைய மழலைச் சொல்லைமொழிந்து மார்பின்மேலும் தோளின் மேலும் ஏறிவிளையாடி சொல்லால் பிரமை யுருவச்செய்யும் புத்திர னில்லாவிட்டால் எல்லாபாக்கியமும் நிறைந்திருந்தும் திருவிளக் கில்லாத வீட்டை நிகர்க்கும் ஆதலால் நீங்கள் யாரையாகிலும் மனமகிழ்வுடன்கூடி புத்திரனைப்பெற்றால் எனக்குமெத்த நலமுண் டாவது மன்றி உங்களுக்குக் கணவனிருக்க மற்றொருவரை சேரச் சொல்லுகிறேனென்று ஐயமும் வருத்தமும் வேண்டுவதில்லை முன் னம் பராசராமரால் நாசமடைந்த சூரிய வமிசம் முனிவர்களால் விருத்தியாயிற்று சூரியகுலத்து அரசனிய கன்மாடபாதனென் போன் தன்குருவாகிய வசிஷ்டரால் ஒரு புத்திரனைப் பெற்றுக் கொண்டான் பலிச்சக்ரவர்த்தி தீர்க்கதமனால் புத்திரபாக்கியத்தை அடைந்தான் கேகய தேசத்து அரசன் சுரதனென்பவன் அவன் பத்தினி சுரதியேனு இருவரும் புத்திரனில்லாமல் பெரியோரைக் கொண்டு மூன்று புத்திரர்களைப் பெற்றுக்கொண்டார்கள் இதன்றி

யும் உத்திருஷ்டமான புத்திரர்கள் ஆறுபேர், அவர்கள்யாரெனில் பெண்சாதியிடத்துப் பிறந்தவன் அவுசன் புருஷன், வமிசத்தில் மூத்தவர்க்குப் பிறந்தவன் க்ஷத்திர சன்ஸ்வீகாரம் பெற்றுக்கொண்டவன் தத்தபுத்திரன் தாய்தந்தையில்லாமல் தன்னுஸ்தியைக் கொடுத்து வளர்த்துக்கொண்டவன் குறித்திமன் தன்பத்தினி தன் வமிசத்தாருடன் சேர்ந்துபெற்ற பிள்ளைகூட தன் தாயுந்தந்தையும் வளர்க்க நிர்வாகமில்லாமல் போட்டுவிட்ட பிள்ளையை வளர்த்துக் கொண்டது அபிவிந்தன் இப்படியாகிலும் ஆறுபிள்ளைகளைப் பெற்றுக்கொள்ளவேண்டும் இதற்கும் வழியில்லாவிட்டால் நிக்ருஷ்டம் ஆறுபிள்ளைகளையாவது பெறவேண்டும் அவர்களாரென்றால் கன்னிகையின்ற பிள்ளை காளீனன் கல்யாணம் பண்ணும்போது கர்ப்பமாயிருந்து பெற்றபிள்ளை சகோடன் மாதா பிதா விற்றுப்போட வாங்கிவளர்த்த பிள்ளை பிறித்திபன் இரண்டாவது விவாகம்பண்ணிப் பெற்றபிள்ளை பவன் பவன் உனக்குப் பிள்ளையென்றுவந்து சரணம் புகுந்தவன் சுயந்தத்தன் பெண், வயிற்றில் பிறந்தவன் சொந்த பிள்ளைக்கிச் சரியானவன் இவ்வகைப் புத்திரசந்தானமாவது பெறவேண்டுமென்று வேதமுறையிடுகின்றது இதைவிட எனக்கு வேறுவழியில்லை நீங்கள் தடைகூறாமல் எந்த முனிவரையாகினுங்கூடிப் புத்திரனைப் பெறுங்களென்று வேண்டினான் இவ்வசனங்களைக்கேட்ட இரண்டு மனைவியரும் அனலில் வீழ்ந்த அரவிந்த மலர்போல் வதங்கி கணவன் திருவடியில் விழுந்து வணங்கி எழுந்துநின்று எங்களுயிருக்குயிராகிய பிராண நாயகரே தாங்கள்வழங்கிய சொற்களை கவனிக்குமளவில் மானங்கெட்டால் கெடுது புத்திரனுண்டானாற் போதுமென்று நினைக்கிறதாய் தோன்றுகின்றது இது தருதியா அவ்வாறு நாங்கள் செய்யலாமாவென்று மறுக்க அரசன் மனைவியரை நோக்கிப் பின்னுஞ் சொல்லத் தொடங்கினான்.

ஓ உத்தமமங்கையர்களே எனக்கில்லாத மானமும் சினமும் உங்களுக்கு வந்ததென்ன கணவனொரு கட்டளையிட்டால் அக்கட்டளை அதிக கெடுதியாயிருந்தபோதிலும் அக்கட்டளைக்குட்பட்டு நடப்பது கற்புடைய மாதர்களின்கடமை நானே கெடுதியான கட்டளையை உங்களுக்கு இடவில்லை தருமத்தைப்போதித்து நடவுங்களென்றால் ஏன் மறுக்கின்றீர்கள் நான் கூறுவது பழுதல்ல நானும் என்தமைபன் திருதராஷ்டிரனும் தம்பி விதுரனும் என்தந்தை

யாகிய சித்திரவீரியனுடைய பிள்ளைகளல்ல எங்கள் வரன்முறை யைச் சொல்லுகிறேன் கேளுங்களென்று வேதவியாசரால் தாங் கள் வந்த வரலாற்றை ஆதியோடந்தமாகச் சொன்னான் அதுகே ட்டு குந்திதேவி கணவன்சொல்லை மறுப்பது தகுதியல்ல அன்றியுங் கணவன் கட்டளையைமீறி நடப்பவள் கார்த்த பத்தாக்கிணையான வளாகும் என்றுன்னி கணவன் வாக்கை குருவார்த்தையாகக் கருதி ஓஸ்வாமி தங்கள் கட்டளையின்படி நடக்கச் சித்தமாயிருக் கின்றேம் எண்ணறக்கற்று எழுத்தறவாசித்தாலும் பெண்புத்திப் பின்புத்தி என்பதுபோல ஏதோ தெரியாமல் தங்கள் வாக்குக் கெதிர்வாக்கு கூறினேம் மேலும் கணவனிருக்க அன்னியபுருட னைக்கூடிப் பிள்ளையைப் பெற்றுக்கொண்டால் உலகத்தார் இழி வாகப் பேசுவார்களேயென்றும் எங்கள் மனதுக்கு சம்மதியில்லாம லிருந்தபடியினாலே பதறி மறுத்தக்கூறி விட்டோம் இதைப்பற்றி தேவரீர் சினங்கொள்ளாமல் மன்னிக்கவேணுமென்று பணிந்தார் கள். அப்போது பாண்டுராஜன் மனைவிகளைநோக்கி ஓ பெண்மணி களே! எந்தன் கண்மணிகளே! காலதாமதஞ்செய்யாமல் சீக்கிரம் யாரையாகிலுங்கூடி பிள்ளையைப் பெறுங்களெனக் குந்திதேவி ஓ ஸ்வாமி சொத்துக்குடையவர் அந்த சொத்தை கெட்டதென்று நிந் தித்தாலும் தன்மார்க்கர்களென்று சிந்தித்தாலும் எங்களுக்கு சந் தோஷமேயாம் ஏனெண்பீரேல் உம்முடைய சொத்தை நீ ரெப்படி எண்ணினாலும் தன்பமூறப் பண்ணினாலும் வாயில் வந்தபடி வை தாலும் அல்லது சித்திரவதை செய்தாலும் செய்யலாம் நாங்கள் பரதந்திரமாய் நடக்கவேண்டியது இயல்பேயாகுமென்று கணவன் மனது களிக்குமாறு நவின்று யாரைச்சேர்ந்து அணையலாம்குட்டு பட்டாலும் மோதிரக்கையினல் குட்டுபடவேண்டும் முடித்தாலும் நல்ல மணமுள்ள மலரை முடிக்கவேண்டுமென்று ஆலோசித்திருக் கிற தருணத்தில் தூறுவாசர் உபதேசித்த திவ்யமந்திரங்களை நினைத் துக்கொண்டு கணவனை வணங்கிக் குந்திதேவி சொல்லுகின்றாள். ஓ பூமிகாவலரே! மகானுபாவரே! எளியேன் ஒரு விண்ணப்பஞ் செய்கிறேன் அது தங்கள் மனதுக்கு உத்தமமாயிருந்தால் அவ் வாறு நடக்கிறேன். அதென்னவெனில் நான் சிறுவயதாயிருந்த காலத்தில் தூறுவாசருக்குப் பணிவிடைப் பெண்ணுகயிருந்தேன் அவர்யான் பயபக்தியுடனே செய்துவந்த பணிவிடைக்கு மகிழ் ந்து சில மந்திரங்களை உபதேசித்தார். அம்மந்திரங்களின் மகுத் துவ மென்னவென்றால் எந்த தெய்வத்தை நினைத்து மந்திரத்தை

புச்சரிக் கிறேமோ அந்த தெய்வம் வந்தகூடிப் புத்திரபாக்கியத் தைக் கொடுக்கும் அவ்வாறுசெய்வது தங்களுக்குச் சம்மதிதானு வென்று கேட்க இவ்வசனங்களைக் கேட்ட பாண்டுராஜன் மகிட்சி யடைந்து சொல்லுகிறான் ஓ பெண்கள் நாயகமே! நீ கூறிய வசன மெவ்வாறிருக்கிற தென்றால் சர்க்கரைப்பந்தலில் தேன்மாரி பெய் தாலெவ்வளவு இனிப்பைக் கொடுக்குமோ அவ்வளவு இனிப்பைக் கொடுக்கிறது அவ்வாறு செய்வது மெத்த உத்தமம் எனக்குச்சம் மதிதான் அப்படியே செய்யென்று கட்டளையிட்டான். அதற்குக் குந்திதேவி ஒத்துக்கொண்டு பர்ன்னகசாலைக் குட்புகுந்து இராஜன் அரண்மனையிலிருக்கும் பள்ளியறையைப்போலப் பரிமள மலர்க ளால் படுக்கை வீடு அலங்கரித்து நல்ல தீர்த்தங்களினால் ஸ்நானஞ் செய்து ஆடையாபரணங்களை நிரம்ப அணிந்து பர்ன்னகசாலையிற் புகுந்து தூபவாசனை தியானித்து அவர் கூறிய மந்திரத்தில் ஏமனை நினைத்து ஒரு மந்திரத்தை உச்சரித்தனள். அப்போது மந்திர தேவதைகள் ஓடிவந்து ஏமனைச்சூழ்ந்து ஐயா தருமதேவனே உல கத்தில் ஒரு ராஜகன்னிகை உம்மை அழைக்கிறாள் வாருமென்று பற்றி இழுக்க ஏமன் மந்திரதேவதைகளின் கருத்தின்படி பூலோ கத்திற்கு வந்து குந்திதேவி எதிர்கொண்டு சென்று அழைத்துப் போய் மலரணையிலிருத்தி சோடச உபசாரமுஞ்செய்து யாவை மரு ப்பையும் கனகப்பொருப்பையும் வெற்றிபெற்ற முற்றுமுலையை ஏமன் மார்பூடுருவ அழுத்திப் புல்லினள் ஏமன் சற்று ஆலோசித்து ஸ்திரீகள்வலிய அணைய எத்தனித்தால் யாராசயிருந்த போதிலும் தடைசொல்லாமல் புணரவேண்டுமென்று வேதம் முறையிடுகின்ற தினால் இனி நாம் தடைசொல்லாதெனக் கருதி அதிக மகிழ் வை யடைந்து குந்திதேவியை இருகத்தழுவி ஆலிங்கனமுதலிய புறத்தொழிலையும் சண்டவேகமுதலிய அகத்தொழிலையும் புரிந்த னைந்தான். உடனே ஏமனது வீரிய விர்த்தியால் குந்திதேவி வயி ற்றில் கருவுண்டாகி குருவாரத்தில் நவக்கிரகங்கள் உச்சத்திலிருக் கிற சுக்கிரவோரையில் உலகத்தை எல்லாம் ஒருகுடை நிழலில் ஆளத்தக்க சிறப்பினைவாய்ந்த புத்திரனொருவனுதித்தான் இப்புதல் வன் தருமபுத்திரனென்று பெயர் பெற்றார்.

பின்பொருநாள் பாண்டுராஜன் தன் மனைவியாகிய குந்திதேவி யை அழைத்து ஓ! பெண்கள் நாயகமே! அருமையான தவத்தால் இடைத்த திவ்யமந்திரங்கள் உனக்கு எளிதிலகப்பட்டிருக்க அந்த

மந்திரங்களை ஏன் வீணுக்குகின்றாய் வல்லமையிற் சிறந்த வாயுபக வானை நினைத்து ஒரு மந்திரத்தை யுச்சரித்து தேவேந்திரனைக் குறித்து ஒருமந்திரத்தை யுச்சரிக்கக் கடவாயென்று கட்டளையிடகுந்தி தேவி கணவனிட்ட கட்டளைப்படி ஸ்னானஞ்செய்து பர்னசாலையிற் சென்று நல்ல ஆடையாபாணங்களை யணிந்து மலரணையிட்டு அன்றிரவில் வாயுபகவானை நினைத்து ஒரு மந்திரத்தை யுச்சரித்தாள் மந்திரதேவதைகள் ஓடோடியுஞ்சென்று வாயுபகவானைச் சூழ்ந்தழைக்க வாயுபகவான் குந்திதேவி யிருக்கும் பர்னசாலைக்கு வந்தான் குந்திதேவி எதிர்கொண்டு சென்று அழைத்துவந்து மலரணையிலிருத்தி சோடச உபசாரங்கள்செய்து இருமூலையும் அழுந்தப் புல்லினுள்வாயுபகவான் மனமகிழ்ந்து குந்திதேவியைக் கட்டியணைத்துப் புணர்ந்தான் உடனே வாயுபகவான் வீரியவிர்த்தியால் சர்ப்பத்தாங்கிக் கரியமேகம்போல நிறத்தினையுடைய ஒருபுத்திரனை நல்ல சுபமுகூர்த்தத்தில் பெற்றாள் இப்புத்திரன் பெயர் வீமன், பின்பொருநாள் குந்திதேவி கணவனை வணங்கி, ஓ! ஸ்வாமி! இன்னுமிரண்டு மந்திரங்களிருக்கின்றதென்று சொல்லப் பாண்டுராஜன் குந்திதேவியை நோக்கி, அடிபெண்ணே! அடங்கா மகிட்சியைத் தரும் என்னிருகண்ணே இந்திரனைநாடி ஒரு மந்திரத்தை யுச்சரியென்றான் அந்தப்படியே குந்திதேவி இந்திரனை நோக்கி, ஒரு மந்திரத்தை யுச்சரித்தாள், இந்திரனும்வந்து மனதொத்துக் குந்திதேவிவைப் புணர்ந்தான், அப்போது இந்திரன் வீரியவிர்த்தியால் குந்திதேவிக்கு கர்ப்பந்தரித்துக் கருவுருவாகிப் பங்குனிமாதம் உத்திரநக்ஷத்திரம் பூரணச்சந்திரோதயத்தில் அருமையான நன்னிமித்தங்கள் தோன்ற தேவர்கள் கொண்டாட ஒரு புத்திரனைப் பெற்றாள். அப்புத்திரன் மன்மதன்போல் வடிவும் திருமால்போல வல்லமையும் பெற்று விளங்கினன். அப்புத்திரனைக் கண்டு குந்திதேவி வாரித்தழுவி முத்தமிட்டுக் கொஞ்சிக் குலாவி எடுத்துவந்துக் கணவனிடத்தில் கொடுத்தாள் பாண்டுராஜன் அப்புத்திரனுடைய சுந்தரத்தையும் இராஜ அம்சையையும் நோக்கி மகிழ்வடைந்து இப்புத்திரனுக்கு என்ன பெயரிடலாமென்று நினைத்தபோது ஆகாயவாணி பாண்டுராஜனை அழைத்து இப்புத்திரனுக்கு பற்குணனென்று பெயரிடுமென்ன அவ்வாறு பாண்டுராஜன் பற்குணனென்று பெயரிட்டு மூன்றுதரம் அழைத்து தானதருமங்களைச் செய்தான் குந்திதேவிமத்திராதேவி இருவரும் மூன்றுபுத்திரர்களையும் நாளுக்குநாள் செல்வமாக வளர்த்து வருகிற காலத்தில் ஒருநாள் மத்திராதேவி தன் கணவன்

93

தனித்திருக்கிற வேளையறிந்து அவரிடம் வந்து வணங்கி ஒருவசனஞ் சொல்லுகிறாள். ஓ ஸ்வாமி என் தமக்கையான குந்திதேவி வேறு நான் வேறல்ல அவள்வயிற்றில் பிறந்த புத்திரர்கள் என் வயிற்றிற் பிறந்த புத்திரர்கள்தான் ஆகிலும் என் வயிற்றினிடமாக இரண்டுபுத்திரரைப் பெறவேண்டுமென்று காதல் கொண்டிருக்கிறேன். அந்தப்படி தங்களுடன் கூடிப் புத்திரரைப்பெறலாமென் றுலோசித்தால் தங்களுக்குச் சாபம் நேரிட்டிருக்கின்றது இக்காதல் எனக்கெவ்வாறு நிறைவேறுமென்று வேண்டப் பாண்டு ராஜன் மத்திராதேவி கொண்டிருக்குங் கருத்தை யுணர்ந்து ஓ! பெண்ணே உன் கருத்தின்படி இரண்டு புத்திரரை பெரும்படிச் செய்கிறேனென்று சொல்லிக் கொண்டிருக்கையில் குந்திதேவி வந்து விடடாள் பாண்டுராஜன் குந்திதேவியை நோக்கி, ஓ மாதரசே உன்தங்கையாகிய மத்திராதேவி இரண்டு புத்திரர்களைத் தன் வயிற்றிற் பெறவேண்டுமென்று காதல்கொண்டிருக்கிறாள். ஆகையால், உன்னிடத்தில் இன்னும் ஒரு மந்திரமிருக்கின்றதே அதை யிவளுக்குபதேசித்து அந்த விதியையுஞ் சொல்லென்று நயிச்சியமாக உறைத்தான் அதைக்கேட்டு குந்திதேவி மகிழ்வடைந்து சொல்லுகிறாள். ஓ ஸ்வாமி தாங்கள் இப்போது கூறிய கருத்தின் படிநடக்க மூன்னமே எங்கருத்திலுமுண்டு அவ்வாறே மந்திரோபதேசஞ்செய்து செய்கிறேனென்று சொல்லி தன் தங்கையான மத்திராதேவியை வேறோரிடத்திற் கழைத்துப்போய் ஸ்ஞனஞ்செய்து வரச்சொல்லி வந்தவுடன் மந்திரோபதேசஞ் செய்து அதின் விதியையுங்காட்டினாள் மத்திராதேவி அதை யுணர்ந்துக்கொண்டு கணவனிடத்துவந்து வணங்கி, ஓ ஸ்வாமி நான் இரண்டு புத்திரரைப் பெறவேண்டும் ஆதலால் உத்தரவெப்படி பென்றுவினவ பாண்டுராஜன் மகிழடைந்து ஓ மாதரிரோன்மணி அஸ்வனி தேவதைகளை நாடி மந்திரத்தை யுச்சரித்தால் இரண்டு புத்திரர்களுண்டாமென்றான். மத்திராதேவி தன்கணவன் வாக்கு வேதவாக்கெனக் கருதி அன்றிரவில் ஸ்ஞனஞ்செய்து ஆடையாபரணங்களை யணிந்து பர்ணசாலையைச் சுத்திசெய்து மலரணையிட்டு அஸ்வனி தேவதைகளை நாடி மந்திரத்தை யுச்சரித்தாள் அஸ்வனி தேவதைகளும் வந்து மத்திராதேவியைக்கூடிக் கலந்தணைந்து போயினர். அஸ்வனிதேவதைகள் இருவராதலால் மத்திராதேவி கருத்தரித்து முன்னும் பின்னுமாக இரட்டைப் புத்திரரைப்பெற்று அப்புத்திரர்களை வாரித்தழுவி எடுத்துவந்து கணவனிடத்தில் கொடுத்தாள் பாண்டுராஜன் அப்புத்தி

ர்களோ உச்சிமுகந்து முகத்தோடு முகஞ்சேர்த்து முத்தமிட்டு மடியில்வைத்துக்கொண்டு இப்புத்திரர்களுக்கு என்ன பெயரிடலாமென்று யோசித்துக் கொண்டிருக்கும்போது ஆகாயவாணி பாண்டு ராஜனை அழைத்து நகுலனென்றும் சகாதேவனென்றும் பெயரிடும் படி திருவாக்கருளினால் பாண்டுராஜன் அவ்வாறு பெயரிட்டு மூன்றுதரம் அழைத்து தான் தருமங்களைச் செய்தான் தருமராஜன், வீமன் பர்க்குணன், நகுலன், சகாதேவன். இவ் வைவரும் பாண்டு ராஜன் மைந்தர்களாதலால், பஞ்சபாண்டவரென்றுபெயர்கொண்டு அங்கங்குசென்று விளையாடுகிறதும் பெரியோர்களைக்கண்டு வணங்கி அவர்களுடைய ஆசீர்வாதங்களைப் பெற்று மெத்த வணக்கத்துடன் முனிவர்களுக்கு மகிழ்வுண்டாக நடக்கிறதும் இவ்வாறு இவர்கள் நடந்து வருகிறபோது அவ்வனத்திலிருக்கும் முனிவர்களும் பெரியோர்களுங்கூடி இப்புத்திரர்கள் சிறந்த விவேகிகளாக இருக்கிறார்களென்று உபநயனஞ்செய்து நாலுவேதம் ஆறுசாஸ்திரம் அறுபத்துநாலு கலைக்கியான மதுவிக்கியமான முதலியவற்றை போதித்து ராஜகுமாரர்களாதலால் மதுசாஸ்திரத்தையுங் கற்பித்தார்கள். அப்புத்திரர்களும்திருவினக்குமுன் காண்பித்த கற்பூரம் போல முனிவர்கள் கூறிய வரலாற்றையெலாம் மனதில்பதித்தும் சிறுவர்களாதலால் அவர்கள் கருத்தின்படி விளையாடி வருவார்கள் இப்படிக் கிருக்கிறபோது ஒருநாள் குந்திதேவி ஸ்நஞ்செய்வதற்கு நதிக்குச்சென்றாள் ஐவரும் குந்திதேவியைப் பின்தொடர்ந்து நடந்தார்கள். அப்போது இங்கேபாண்டுராஜனும் மத்திராதேவியும் தனித்திருந்தார்கள் வசந்தகாலமாதலால் பாண்டுராஜனுக்கும் காமமேலிட்டு கெடுமதி கண்ணுக்குத்தோன்ற தென்ற பழமொழிப்படி தனக்கு நேரிட்டிருக்கிற சாபத்தைக் காலகதியால் மறந்து அதிக மோகங்கொண்டு மத்திராதேவியைப்பார்த்து கைசரசஞ் செய்தான். அந்த மத்திராதேவியும் கணவனுக்கு நேரிட்டிருக்கும் சாபத்தை நினைக்காமல் மறந்தமதிமயங்கி கணவன் கருத்துக் கிசைந்து மதனசாஸ்திர விதிப்படி ஆலிங்கன முதலியவற்றைச் செய்து புணர்ந்தாள். ரதியும் மதனும் போலப் பாண்டுராஜனும் மத்திராதேவியும் கூடிப்புணருகிறபோது வீரியங் கலிதமாகுந் தருணத்தில் அழுதந்தி முனிவரிட்ட சாபப்படி ராஜன் பூமியில் விழுந்து மரணமடைந்தான் அதைக்கண்டு மத்திராதேவி விரைந்தெழுந்து கணவன் விழுந்ததை நோக்கி நெடுநாள் அரசன் புணர்ச்சியில்லாதிருந்த படியால் அதிக காமமேலிட்டு கோபித்து விழுந்தாரென்று கருதி அரசனுக்கு சிலசைத்திய உபசாரங்களைச்செய்தாள். அப்

படி செய்தும் அரசன் அசைவத்திருப்பதைக்கண்டு தட்டி எழுப்பினள். அதற்கும் பேசவில்லை இதென்ன விபரீதமென்று புரட்டிப் பார்த்தாள் கட்டைபோல் உடல் முழுதும் உறத்துப்போகவே மனம் நடுங்கி ஓகோ ஸ்திரீகளைப் புணர்ந்தால் மரணமடைவாரென்று அமுதத்தி முனிவர் சாபமிட்டிருந்தாரே அதனை மறந்து அரசன் புணர்ந்தார் நாமும் அதற்கு ஒத்திருந்தோம் சாபத்தின் படி இறந்து விட்டார். இனி என்னசெய்யப் போகிறோமென்று ஓ வென்றலறி அரசன்மேல்விழுந்து குயிலினமெல்லாம் நாணக்கதறி யழுதாள். இதற்குள் குந்திதேவி ஸ்ஞனஞ்செய்து பர்ன்னசாலை அருகில் வந்தாள் மத்திராதேவி யழுகுற லோசனையைக் கேட்டு திடுக்கிட்டு நமது தங்கை ஏனழுகிறாள் ஏதோ அரசனுக்குக் கெடுதி நேரிட்டதாகும் அதனால் தான் அழுகிறாளென்று மனதில் மதித்து ஐந்து புத்திரர்களும் ஆச்சரியப்பட்டு பின்னேடிவரத்தான் முன்னேடிவந்து பர்ன்னசாலைக்குள் நுழைந்துக் கணவனைநோக்கும்போது கணவனிறந்திருப்பதை அறிந்து மேல்விழுந்து புரண்டு கோவென்று அழத்தொடங்கினள் இதில்மத்திராதேவி நடந்தவிர்த்தாந்தத்தை யெல்லாஞ் சொல்லினள் குந்திதேவி அதனைக்கேட்டு இது காலகதியென்று தீர்மானித்துப்புலம்பியழுகிறபோது பிள்ளைகள் ஐவரும் தாதிகள் முதலானவர்களும் கோவென்றலறவே இவ்வோசையை அங்கிருக்கிற முனிவர்களாகிய பெரியோர்கள் சதானந்தர், வசிஷ்டர் வால்மீகர் முதலாகிய தவசிரேஷ்ட சிகாமணிகளுமறிந்து யாவருமொன்றுகத்திரண்டுவந்து அரசன் அலங்கோலத்தைக்கண்டு கனவருத்த மடைந்து குந்திதேவி மத்திராதேவி ஐந்து சிறுவர்கள் தாதிகள் முதலானோருக்குந் தேறுதலை சொல்லி ஐவரைக்கொண்டு பாண்டுராஜனை அடக்கஞ்செய்தார்கள் இதற்குள் மத்திராதேவி குந்திதேவியை வணங்கி, ஓ அம்மணி ! உன் கிருபையினால் நான் இரண்டு புத்திரர்களைப் பெற்றேன் இவர்கள் உன் புத்திரர்களே அன்றி, என்புத்திரர்களல்ல, இனிநான் பூமியிலிருந்தால் கணவனுக்கு நேரிட்டிருக்கிறசாபத்தை அறிந்திருந்தும் காமமதிகரித்துக் கணவனைக்கூடிகொன்றுவிட்டாளென்று உலகம் பழிக்கும் அன்றியும் கணவன் இறந்துபோயினபின்கட்டழகுமாறி நானிருப்பதிலென்னலாபம் ஒன்றுமில்லை கணவனுடன் இறப்பவளே கற்புடைய காந்தையென்று சாஸ்திரங்கள் முறையிடுகிறபடியால் அதை யறிந்திருந்தும் இவ்வுடலை வைத்துக்கொண்டுலகுவது தருமமல்ல ஆகையால் அரைக்கணப்பொழுதேனுமினி இப்பூமியிலிருக்கமனம் சகிக்கவில்லை கணவனோடு நானும் இறப்பேன் எனறு கூறி நகுலசகாதேவரைக் குந்திதேவியிடம் ஒப்பித்துக் கணவனைச் சிந்தித்துக் கொண்டவண்ணமே உயிரைவிட்டுக் கணவனடைந்தப் பதவியைத்தானுமடைந்தனள்.

மத்திராதேவி கற்பின் மகுத்துவம்
முற்றிற்று.

சுபத்திரை கற்பின் மகத்துவம்.

திருமகள் கிருபாநோக்கம் பெற்ற சூரசேனமென்னும் நகரத்தை பாலித்துக்கொண்டிருந்த வசுதேவராஜனுக்கும் ரோகணி தேவிக்கும் பலராமர் பிறந்தார் இப்பலராமருக்குப்பின் சுபத்திரை யென்னும் பெண்மணி யொருவள் பிறந்திருந்தாள். அப்பெண்ணுக்குப் பன்னிரண்டாநாள் ஆசானையும் பிராமணர்கள் பந்துக்கள் அரசர்கள் முதலானோரையும் வரவழைத்து சுபத்திரை யென்று நாமகரணஞ்செய்வித்து கோதான, பூதான, வஸ்திரதான, ஹிரணிய தானசொர்ன்னதான முதலானதான தருமங்களைச்செய்து பந்துக்களுடன் புசித்து அரசர்களுக்கெல்லாம் விடைகொடுத்து அனுப்பி விட்டு வசுதேவர் அன்றுமுதல் சுபத்திரையின்மீது அதிகப் பிரியத்துடன் நாளுக்கு நாள் செல்வமாய் வளர்த்துவந்தார் அப்பெண் குழந்தையும் வளர்பிறைச் சந்திரனைப்போல தினந்தினம் விர்த்தியடைந்துக்கொண்டிருக்கிறபோது ஜராசந்தனுக்குங் கிருஷ்ணமூர்த்திக்கும் யுத்தம்நேரிட அம்மூசா நீராய் கிருஷ்ணமூர்த்தி வடக்கடலின் னடுவில் துவாரகையென்னுருபட்டணம் நிர்மித்து அதில் பலராமர் வசுதேவர் நந்தகோபர் ருக்குமணி சத்தியபாமை பதினாயிரத்திருநூறு கோபிகாஸ்திரீகளும் தேவகியசோதைரோகணி யாதவப் பிரமுகாளுடன் அந்த துவாரகையில் குடிபுகுந்துபலராமருக்கு அத்துவாரகையைப் பட்டங்கட்டிந் தான் அவருக்குச்சகாயராகியிருக்கிற போது சிலநாளில் அந்த சுபத்திரைப் பெதும்பைப் பருவங்கடந்து மங்கைப்பருவமடைய அதையறிந்து வசுதேவரும் பலராமரும் அம்மங்கைக்காகுஞ் சடங்குளனைத்தையும் வெகுசிறப்பாகநடத்தி அந்தப்புரத்தில் கன்னிகாமாடத்தில்வைத்து அனேகதாதிகளைக்காவலாக யமைத்து வைத்திருக்கிறகாலத்தில் யாதவகுலத்தனும் தனக்குத்தமையனுமாகிய கதனென்பவனுல் அர்ச்சுனனுடைய ரூபம் சவுரிய பராக்கிரம முதலான குணாதிசயங்களைக் கேட்டு மனம்பூரித்து மோகாந்தகாரத்தி லகப்பட்டவளாகி அந்த அர்ச்சுனராஜனையே மணம் புரிந்து இஷ்ட கர்மங்களை யடைந்து சுகித்திருக்க வேணுமென்று கருதி, ஜகத்துக்கெல்லாம் அன்னையாகிய இலக்குமியைத் தியானித்துத் தான் கொண்ட கருதின்படி நிறைவேற்ற வேணுமென்று வேண்டிக்கொண்டே கன்னியாமாடத்திலிருக்கிறபோது திருமாமகளுக்கு சுபத்திரையின்மீது கிருபாகோக்கமுண்டாகி அர்ச்சுனனை துவாரகைக்கு வரும்படியான மூய

176348

ர்ச்சியை ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியினுல் செய்வித்தனள். அப்போது, அர்ச்சுனன் ஒரு நாளிரவில் பிராகணர்கள் வேண்டு கோளினுல் சோரர்களை அதம்பண்ணும் பொருட்டுத் தன்னுடைய வில்லையெடுத்துவர வெண்ணி அகஸ்மாத்தாய் அந்தப்புரத்திற்கேக அங்கே துரோபதையுடன் தருமநந்தனரிருப்பதை புணராமல் சோரரைக் கட்டிக்கொண்டு வரவேணுமென்ற வேகக்கத்தினுல் உள்ளே புகுந்து காண்டீபத்தை எடுத்துக்கொண்டு திரும்புகையில் தருமநந்தனரையும் துரோபதையையுங்கண்டு ஆஹா, நாமென்ன அறிவீனத்தினுலே உள்ளே பிரவேசித்தோம் இத்தோஷம் எப்படி நிவர்த்தியாமென்றுன்னிக்கொண்டே வெளிப்பட்டுத் தன்னுடைய பாணங்களைவிட்டுச் சோரர்களை ஒடிப்போக விடாமல் தடுத்துப் பசுமாடுகளைப்பிடித்துப் பிராமணர்கள் வசம்விடுத்துத் தான் தீர்த்தயாத்திரைசெய்யபுறப்பட்டு வெகு திவ்ய க்ஷேத்திரங்களையடைந்து அங்குள்ள தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து மூர்த்திகளைச்சேவித்துக்கொண்டேவந்து பிரபாசதீர்த்தம் வந்தடைந்து அத்தீர்த்தத்தில் மூழ்கி பிராமணர்களையெலாம்பூசித்து தானதருமங்களைச்செய்து உடனே புசித்து அன்றிரவில் படுத்திருக்கும்போது யாதவ குலத்தனுகிய கதனென்பவன் முன்னமொரு காலத்தில் சுபத்திரையின் ரூபரேகை சௌந்தியத்தையும், தருமம், சாந்தம் பொருமை முதலான கற்குணங்கள் பொருந்தினவளென்றும் புகழ்ந்துசொல்லக்கேட்டிருந்தவனுதலால் அதுகளையெல்லாம் நினைந்து நினைந்து அவளைப்பார்க்க வேணுமென்ற கருத்துகொண்டு இரவெல்லாம் நித்திரைப்பிடிக்காமல் இதற்கென்னசெய்கிறது எந்த உபாயத்தினுல் அவளைக்காணலாம் என்று தீர்க்காலோசனைசெய்து காலத்திற்குத்தக்கக் கோலமென்பதுபோல சன்னியாசி வேஷம் போட்டுக்கொண்டு யாதவர்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்குந் தெரியாமல் பிரயாணஞ்செய்துக்கொண்டு போவோமாகில் எவ்விதத்திலாகிலும் சுபத்திரையைக் காணலாம் கண்ட பின்பு கிருஷ்ணனுடைய கருத்தையறிந்து அவர் சகாயத்தினுல் செய்யவேண்டியதைச்செய்யலாமென்று மனதில் நிச்சயித்துத் திரிதண்டம்-கஷாயம் கமண்டலம்-ஜெபமாலையோடு சன்னியாசி வேஷந்தரித்து யோகீஸ்வரரைப்போல விளங்கினன். இப்படி இருக்கும்போது மேகங்கள் ஆகாயமெல்லாம் படர்ந்து ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியின் திருமேனிபோலக் கருத்து அவர் கையினில் விளங்கும் சக்கரத்தின் ஒளிபோலமின்னி அவருடைய சங்கத்தொனிபோல கிடுகிடுவென் றிடிபிடித்து அவரு

டைய சாரங்கமென்கிற வில்லிலிருந்து புறப்படுகிற பாணங்களின் கூட்டம்போல மழைபொழியவும் அவருடைய பேரருட்பிரவாகம் போல பூமியெங்கும் ஜலப்பிரவாகம் நிறைந்தோடவும் அர்ச்சுன னுடைய மனமானது காமத்தினிலமிழ்ந்ததுபோல தாமரைகளெல் லாம் நீரினில் அமிழ்ந்துபோகவும் முன்னம் அழகினாலே தன்னை வெற்றிகொண்ட மன்மதன் இப்போது சுபத்திரையென்கிற அஸ் திரத்தினாலே வெற்றிகொள்ளப்போகிறானென்கிற மகிழ்ச்சியினால் அவன்கொடியாகிய மீன் துள்ளவும் தங்களுக்கினியான சுபத்தி ரைக்கு அர்ச்சுனன் மணவாளனாக வாய்க்கப்போகிறானென்கிற சந் தோஷத்தினாலே மயில்களெல்லாம் நர்த்தனஞ்செய்யவும் செந்தா ழைகளும் குடமல்லிகளும் மலர்ந்து வண்டுகளுக்கு விருந்திடவும் ஆறுகளெல்லாம் பூரணமான வெள்ளங்களுடன் கூடிச்சமுத்திரரீ கனாத்தங்கள் வடிவமாக்கவும் நாயகரும் நாயகிகளும் அகிற்புகை கமழும் பள்ளியறைகளிற் கட்டியணைந்து படுத்திருக்கவும் பயிர் களெல்லாஞ் சந்தோஷத்துடனே கதிர்களின் பாரத்தினாலே முடி வணைந்து தங்கள் ஜீவனைக்காப்பாற்றும் மேகங்களைக் கும்பிடுவது போலிருக்கவும் விளங்கியது, இவ்விதமாக மாரிகாலமானது விளங் குமளவில்சக்கியாசிரமத்தம்பூண்ட அர்ச்சுனனானவன்சுபத்திரையை நினைந்துநினைந்து மனமுருகி இருக்கிறபடியினாலே பொறிகள்வேறு வழிசெல்ல மாட்டாமையாலும் தேகம் செய்கையற்றிருப்பதினா லும் தானெடுத்த வேடத்துக்குத்தக்கபடி அமைத்து ஓர் ஆலமரத் தின் பொந்தில் உட்கார்ந்து கண்ணனை நினைத்தான் அர்ச்சுனன் தன்னை நினைத்தமாத்திரத்திலே சத்தியபாமையுடன்மஞ்சத்தின்மீது துள்ளிகொண்டிருந்த ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி திடீரென்றெழுந்து உட் கார்ந்து விழுந்து விழுந்து சிரித்தார் அதுகண்டு சத்தியபாமை ஓ ஸ்வாமி இதென்ன தேவரீர் அகாரணமாய்ச் சிரிக்கிறீர் இதற்குக் காரணமென்ன சொல்லவேணும் அடியாள்கேட்க விருப்பமுற்றி ருக்கிறேனென்றாள்.

அதற்கு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி மறுபடியுஞ் சந்தோஷத்தினால் அடிக்கடிச் சிரித்துக்கொண்டே சத்தியபாமையைப் பார்த்து பெ ண்ணாசே, உனக்குச்சொல்லத்தகாதசெய்தியுமிருக்கின்றதோ என் மனது அறியாததெதுவோ அதுதான் நீ அறியக்கூடாது ஆகை யால் நான் சிரித்ததற்குக்காரணஞ் சொல்லுவேன் அதென்னவெ னில்என்னுடைய நல்லத்தையின்மகனும் வீபசேனனுக்குத்தம்பியு

மாகிய அர்ச்சுனன் தூரோபதையின னிமித்தமாக தீர்த்தயாத் திரைப்புறப்பட்டு வந்தான் அதின் மூடிவில் நமதுசுபத்திரையின் அழைகை நினைத்து நினைத்து உருகி அவளைக் காண்பதற்காக சன் னியாசி வேடம்பூண்டு இந்த துவாரைக்குக் சமீபத்தில் ஓரலமரத் தின் கீழ் மழையில் நனைந்து கனவருத்தப்பட்டுக்கொண்டு என்னை நினைத்து தியானிக்கிறான் அதற்காகத்தான் நான் சிரித்தேன் பெண்ணே நீ உன்னண்ண னுகிய அர்ச்சுனனைப் பார்க்கவேண் டாமோ என்னுடன்கூடவந்தால் காண்பிக்கிறேனென்றுசொல்லி சத்தியபாமையையும் அழைத்துக்கொண்டு அர்ச்சுன னிருக்கும் மரத்தினிடத்தில் வந்து இதோபார் சன்னியாசி வேடத்துடன் வழு ந்துகிறான் நம்முடைய அர்ச்சுனன் என்று சத்தியபாமைக்குக் காண்பித்தார். அப்போது, சத்தியபாமை அர்ச்சுனன் உருமாரி இருப்பதையும் மழையினல் வருத்தப்பட்டுக்கொண் டிருப்பதை யுங்கண்டு விசனமடைகிறபோது ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனன் தீர்தயாத்திரை செய்யவந்ததைத் தானறிந்திருந்தும் தெரியாத வரைப்போல் அர்ச்சுனனைநோக்கி ஓ அர்ச்சுன ஏதுக்கு நீ தீர்த்த யாத்திரை செய்யவந்தா யென்று வினவ அர்ச்சுனனும் ஆதிமுதல் நடந்த வீர்த்தாந்தங்களை யெல்லாஞ் சொல்லக் கேட்டு மகிழ்வடை ந்து இருவரும் சில நாழிகை வேடிக்கையாகப் பேசிக்கொண்டிரு ந்து உடனே சத்தியபாமை அர்ச்சுனனுடன் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி புறப்பட்டு மனோரம்மியமாகிய காடுகளும் அருவிகளும் மடுக்களும் பொருத்திய பலவித மிருகங்களுக்கும் பட்சிகளுக்கும் வாசமாயிரு க்கு மிடமாய் விளங்கா நின்ற ரைவதமென்று பேர்பெற்ற பருவத் திற்கு வந்து சோந்தார்கள். அவ்விடத்திலே ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி யின் ஊழியக்காரர்கள் முன்னமே ஓரிடத்தை செவ்வையாய் அலங் காரஞ்செய்து வேண்டியபோஜன வஸ்துக்களைக்கொண்டு வந்து கிருஷ்ணமூர்த்தியின் கட்டளைப்படி வைத்தார்கள் அவ்வுணவுகளை யெல்லாம் அந்த அர்ச்சுனன் கண்ணனுடன்புசித்துக் சிலநேரம் ஆடல் பாடல்களைப் பார்த்திருந்து அவர்களை யனுப்பிவிட்டு திவ்ய மாகிய படுக்கையிற் சயனித்துக் கொண்டு தீர்த்தயாத்திரையிற் கண்ட திவ்ய க்ஷேத்திரங்களின் சரித்திரங்களை யெல்லாஞ் சொல்லிக் கொண்டே நித்திரை போய்விட்டான். பிறகு, விடியற்காலத்தில் யதுகுல மன்னருக்கு முழக்கும் வீணைவேணு முதலிய வாத்தியங் களைக்கேட்டு எழுந்திருந்து காலைக்கடனை முடித்திருக்க ஸ்ரீகிரு ஷ்ண மூர்த்தியும் அங்கிருக்குப் ஊழியக்காரர்களை நோக்கி, இவ

ருக்குக் காலந்தப்பாமல் தகுந்தபோஜனங்களைக்கொடுங்களென்று
னியமித்துத்தான் அர்ச்சுனனிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சந்
தியபாமையுடன் பொற்கட்டினு லலங்கரிக்கப்பட்ட இரதத்தின்
பேரிலேறித் துவாரகையைச் சேர்ந்தார் அர்ச்சுனனும் கிருஷ்ண
மூர்த்தியின் உத்திரவின்படி அந்த மலையின்பேரிலேயே இருந்தான்
இப்படிக்கிருக்கச்சிலநாளைக்கெல்லாம் அந்த ரைவதபருவதத்திலே
வருஷந்தோறுஞ் செய்கிறபடியே யாதவர்க்குத்திருவிழா ஒன்று
கேரிட்டதுஅந்தத்திருவிழாவில் அம்மலையைச்சுற்றிலும் அங்கங்கே
அமைக்கப்பட்டிருக்கிற அழகான வீடுகளினுலேயும் கிணைகளுடன்
கூடியபெரிய மரங்கள்போல வைத்திருக்கிறவிளக்கு வரிசைகளினு
லேயும் இன்னும்பல அலங்காரங்களினுலேயும் கோடி சூரியப்பிர
காசமாய் விளங்கும் மலையிலே விருஷ்ணி அந்தகர்போசர் என்கிற
பலப்பிரிவாயிருக்கின்ற அந்த யதுவம்ச குமாரர்களெல்லாம் மங்
களஸ்னானஞ்செய்து நல்ல ஆடையாபரணங்களைத் தரித்துப் பிரா
மணர்களுக்குங் பலதானங்களும் வழங்கித்திவ்ய போஜனங்களைப்
புசித்து சந்தனபுஷ்ப தாம்பூலாதிகளுடனே வேடிக்கையாய் வாக
னங்களிலேறிக் கொண்டு அனேக பட்டத்து ஜனங்களுடனே
பல வாத்திய கோஷங்களோடும் சங்கீதங்களோடும் நாட்டியங்
களோடும் நாற்புரங்களிலுஞ் சுற்றிவரப் பலராம ரேவதி தேவி
யெனகிற தன் மனைவியுடனே பலபேர்களோடு கூடியாடி வர
யதுவமிசத்து மகாராஜா வாகிய உக்ரசேனன் என்ற வரும்
அனேக ஸ்திரீகளோடும் பாடுகிற பேர்களோடும் சூழ்ந்துவர
இன்னு மிப்படியே பிரத்யுமன் சாம்பர் முதலாகிய பேரும்
வேடிக்கையாயிருக்க இந்தப்படி கோலாஹலமா யிருக்குஞ்சமயத்
தில் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் தாமுஞ் செய்யவேண்டிய தானம்
முதலாகிய காரியங்களைச்செய்து அங்கு ஓரிடத்திலிருக்கும் அர்ச்
சுன சன்னியாசியைக்கண்டு அதிவினய பயபக்தியுடன் நமஸ்காரம்
பண்ணிக்கொண்டிருக்குங்காலத்தில் எல்லோரும் விழுந்து விழுந்து
கும்பிட்டார்கள் அப்போது, திருவிழாவுக்காக மிகவுஞ் சிங்காரித்
துக் கொண்டு வந்த சுபத்திரையானவள் தோழிமார்களுடன் கூட
அந்த மலையில் சஞ்சரிக்கக்கண்டு அர்ச்சுனனவன் காமவிகார
மடையவே கிருஷ்ணமூர்த்தி அக்குறிப்பையறிந்து கொஞ்சம் நகை
த்து அந்த மாயசன்னியாசியைப் பார்த்து ஓ சன்னியாசியே,
காட்டில் சஞ்சாரஞ் செய்து தவசியாகிய உமது மனம் நாட்டில்
சஞ்சரிக்கும் மாதர்கள் மீது காம மீறியதுபோல் தோற்றுகின
றது இந்தப் பெண்ணைப் பார்த்ததினுலேயே உமக்கு மோகப் பேய்

பிடித்தது ஓ பெரியவரே, இவளாரென்றால் என்னுடைய தங்கை, இவள் பெயர் சுபத்திரை, என் தகப்பனருக்கு இந்தப் பெண்ணின் பேரில் மெத்த விசுவாசம் ஆகையால் அஞ்சாமற் சொல்லு உனக்கு அப்படி இப்பெண்ணினிடத்தில் கருத்திருந்தால் நானே எங்கள் தகப்பனருக்குத் தெரிவிக்கிறேனென்று சொல்ல, அதற்கு அர்ச்சுனன், ஓ கிருஷ்ணமூர்த்தி, என்னபரிகாசஞ் செய்கிறீர், நான் வந்தகாரியமே இதுவாயிற்றே, வசுதேவருக்குப் புதல்வியாகியும், உமக்குத் தங்கையாகியும். ரூபலாவண்ய குணமுடையவளாகியும் பிராமின்ற இந்தப் பெண்மணியைப்பார்த்து மெத்த தீரமுடைய தபசிகளும், பார்த்த மாத்திரத்திலேயே மயங்கி மெய்சோருவார்களென்றால் நான்மயங்குவது ஓர் அரிதோ, நீர் சும்மா வேடிக்கைப் பேச்சு பேசவேண்டாம். அவள் எனக்கு மனைவியானாலேயானால் எல்லாசம்பத்தும் வந்தாற்போலாம் ஆகையால் தேவரீர் என்னிடத்தில் பரிபூரணக் கடாக்ஷம் வைத்து அவளையான் விவாகம்பண்ணிக்கொள்ளும்படியான வகையெதுவோ அந்த உபாயத்தைச் சொல்லவேண்டுமென்று வேண்டினான்.

இவ்வாறு வேண்டிக்கொள்ளும் அர்ச்சுனன் நய மொழிகளைக் கேட்டு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி சொல்லுகிறார் ஓ அர்ச்சுனா நீ சொல்லுகிறது சரிதான். அதற்கு உபாயமென்ன வென்றால் க்ஷத்திரியர்களுக்குச் சுயம்வரமென்பது ஒன்றுண்டு. அந்தப்படிசெய்விக்கலமென்றால் அதுவும் உபாயமாக மாட்டாது மேலும் பெண்ணிஷ்டப்படியே அன்றி புருஷனிஷ்டப்படியே நடக்க மாட்டாது ஆனால் இன்னொருபாய மிருக்கின்றனது அது யாதென்றால் அரசர்கள் பெண்ணை வலிமையினாலே கொண்டுபோகிற வழக்கமுண்டு இதைப் பெரியோர்களும் ஒத்துக்கொள்ளுவார்கள் ஆனபடியினாலே ஓ அர்ச்சுனா இதுதான் நல்ல உபாயம் அந்தப்படியே என் தங்கையை நீ எடுத்துக்கொண்டு போகலாம் அதற்குத் தக்க சமயமிருக்கிறது சொல்லுகிறேன் அப்போது நீசெய்ய முயற்சிகொண்டிருப்பதுடன் இப்போது நாம்பேசி முடிவுசெய்த செய்தியையாராகிலும் அறியப் போகிறார்கள். ஒருவருக்குஞ் சொல்லாதே என்னப்படி முடிந்த பிற்பாடு பார்த்துக்கொள்ளுவோம் நான்வருகிறபரியந்தம் இங்கேதானே இருமென்று சொல்லி நியமித்து விட்டுத்தான் முன்போல எல்லவருடன் கூடிக்கொண்டு துவாரகா பட்டணம்போய் சேர்ந்தார். இங்கே அர்ச்சுனன் சுபத்திரையைப் பார்த்து முதல்

காமவிகார மதிகரித்துச் சகிக்கமுடியாதவனுகி அழகாகிய சோலை சூழ்ந்திருக்கிற ஒருபாரையின்மீ துட்கார்ந்து சுபத்திரை சுபத்திரை என்று ப்பாலஞ்செய்துக் கொண்டிருந்தான். இப்படியிருக்க ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி யொருநாள் வேட்டைக்குப் போயிருக்கிற போது பலராமர்கிருதவர்மன்சாம்பன்சாரணன்பிரத்யும்னன், கதன், சாருதேஷ்ணன், விதேதன், பானு, நிசதன், விபுருது, பிருது முதலிய திலயாதவ வீரர்களுடன் வேடிக்கையாய் அந்த ரைவத கிரிக்குப் போயிருக்கும்போது அவ்விடத்திலிருக்கும் அர்ச்சுனசன்னியாசியைக்கண்டுசந்தோஷித்து அவரருகிற்சென்று அதிக வினயத்துடனேபணிந்துநிற்க, அவர்களுக்கு அந்தசன்னியாசி ஆசிகூரிவீற்றிருங்களென்றுசொல்ல அவர்கள் அங்கிருக்கும்பாறைகளின்மீ துட்கார்ந்துக்கொண்டு இவர் யாரோ மகானுபாவர் மெத்தசாந்தமூர்த்தி என்று மனதில் எண்ணிக்கொண்டு இருந்த சன்னியாசி அவர்களைநோக்கி, ஓ யாதவீரர்களே க்ஷேமமாவென்று கேட்டார். அதற்கு பலராமர் சுவாமிகளுடைய அநுகிரகத்தினுலே எல்லோரும் க்ஷேமந்தான் தேவரீர் யாரோ எவ்விடத்தி நின்றும் ஏதுக்காக எழுந்தருளியதோ தெரியவில்லை ஆகையால், அதைத் திருவாய் மலர்ந்தருள வேண்டுமென்று வினவினர். அதற்கு சந்நியாசியானவர் நமக்கோரிடமென்றுண்டா இப்புவனமெல்லாம் நம்முடைய விடந்தான். தீர்த்த க்ஷேத்திரங்களே யெல்லாம் பார்த்துக்கொண்டு மழையாதலால் இவ்விடம் வந்திருக்கிறேனென்று சொல்லக்கேட்டு பலராமர் ஓஸ்வாமி அடியேன்கள் செய்த தவப்பலனே தேவரீர் இடம் எழுந்தருளியது ஆனுல் தேவரீர் அனேகபுண்ணிய தீர்த்தங்களையும் ஸ்தலங்களையும் கண்டவராகையால் அவைகளின் பிரபாவங்களைச் சொல்லவேண்டுமென்று பணிய சந்நியாசியும் தீர்த்தங்களினுடையனவும் ஸ்தலங்களினுடையனவும்தருமத்திற் குறித்தாகிய சில சரிதைகளையுஞ் சொல்லக்கேட்டு பலராமர்களித்து இவர் மகாபெரியவரென்று மனதிலெண்ணி எழுந்து வந்தனஞ்செய்து யாதவவீரர்கள் யாவரும் கூடி இந்த சந்நியாசி மெத்த யோக்கியர் நாம் செய்த புண்ணிய வசத்தினுலேதான் இவர் நமது பட்டணத்திற்க்கு வந்தார். ஆகையால் இவர் இந்தமழைக்காலமெல்லாம் கஷ்டமின்றி சவுக்கியமாக இருக்கும்படியாய் இவரை எந்தயிடத்திலே இருக்கச் செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கும்போது வேட்டையாடப் போயிருந்த கிருஷ்ணமூர்த்தி அவ்விடத்திற்கு வந்தார். அவரைக்கண்டு பலராமர் தம்பி கிருஷ்ணு இங்கு ஒரு சன்னி

யாசி வந்திருக்கின்றார் மழையினாலே அவர் இவடத்தில் மெத்தவரு
ந்துகிறார். ஆகையால் இவரை நமதுபட்டணத்திற்குள் எவ்விதத்தி
லிருக்கச்செய்யலாம் சொல்லென்று கேட்க அதற்குக் கண்ணன் ஓ
அண்ணா தேவரீரிருக்க நான்சொல்லுவதெப்படி உங்களுக்கு
அவரை எவ்விடத்தில் வைக்க இஷ்டமோ அவ்விடத்தில் வைக்
கலாமென்று சொல்ல பலராமர் கேட்டு தம்பிசொல்லிய வினய
வாக்கியத்திற்குச் சந்தோஷப்பட்டுப் பலராமர் சற்றுலோசித்து
தம்பி கிருஷ்ணா என்மதிக்குத் தோன்றுகிறதைச் சொல்லுகிறேன்
கேள் இவர் நமது சுபத்திரையினுடைய அந்தப்புரத்தில் போஜனம்
பண்ணிக்கொண்டு நம்முடைய தோட்டத்தில் கொடிவீடுகட்டி
யிருக்கும் அறைகளிலே இந்த மழைகாலமெல்லாக் கழிக்கிறவரை
யில் வாசஞ் செய்துக் கொண்டிருக்கட்டும் பின்பு அவர் மனதுக்
கிசைந்தபடி போய்விடுவார் என்று எண்ணுகிறேன் உனக்கென்ன
தோன்றுகிறது இங்கிருக்கும் யாதவர்களெல்லாம் உன் சம்ம
தியை எதிர்பார்க்கின்றார்கள் என்று நவில, அதற்கு கண்ணன் ஓ
அண்ணா உம்முடைய சம்மதிக்கும் உத்திரவுக்கும் எதிரில்லை, நீரோ
எல்லாம் அறிந்தவர் மகாபக்தியுள்ளவர் எங்களுக்கெல்லாம் பெரி
வர் ஆகையால், நானென்றும் மறுத்துச் சொல்லக் கூடவில்லை
ஆகிலும் இப்படிச் செய்வதில் ஒரு குறைவும் வாராமலிருப்பதைக்
குறித்துக் கொஞ்சம் யோசிக்கவேண்டியதாய் தோன்றுகிறது
என்று சொன்னார். அதுகேட்டு பலராமர் தம்பி நீ சொல்லுகிறது
சரிதான் ஆனால் இந்த சன்னியாசி வெகுவாய் படித்தவராயும்
மெத்த யோக்கியராயும், சார்ந்தமூர்த்தியாயுங் காணப்படுகிறார்
உள்ளமெப்படி யிருக்கிறதோ யாருக்குத் தெரியும் ஆகையால் ஓ
கிருஷ்ணா உள்ளகருத்து வள்ளலுக்குத் தெரியும் என்ற பழமொழிப்
படி நாம் நல்லவழியே நடப்போம் அப்புறம் பகவான் செயலின்படி
நடக்கட்டுமென்று மனதிடஞ் செய்து அந்த பலராமர் கண்ணனை
நோக்கி அப்பா தம்பி நீ இவரை அழைத்துகொண்டுபோய் சன்
னியாசாமடத்தில் விட்டு நான் உத்திரவு பண்ணினதாகச் சுபத்திரை
க்குச்சொல்லி அன்னபானம் முதலாகிய உபசாரங்கள் செய்து வரு
ம்படியாய் நிட்டம் பண்ணு என்றுசொல்லக்கேட்டு கிருஷ்ணமூர்
த்தி ஓ அண்ணாதங்கள் கட்டளையின்படி நடக்கிறேனென்றுசொல்லி
அந்தக்கபட சன்னியாசியைக் கும்பிட்டு அழைத்துக்கொண்டுவரு
கிற வழியில் ஒருவரோ டொருவர் வேடிக்கையாகப் பேசி சித்
தக் கொண்டே காரிய மெல்லாஞ் சித்தமாய் பயன்படுமென்று

சந்தோஷப்பட்டவர்களாய்பட்டணத்துட்சென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தித் தன்வீட்டுக்கு அர்ச்சுனனை முன்னம் அழைத்துக்கொண்டு போய் தன்மனைவிகளாகிய ருக்மணி சத்தியபாமைகளை அழைத்து காணமுற்றுத் தலை வணங்கி நகைத்துக்கொண்டுநிற்கிற அர்ச்சுனனைக்காட்டித் தானும்நகைத்துக்கொண்டு பார்த்தீர்களா இவர் மகா பெரிய சந்நியாசிமேலேதரித்துக்கொண்டிருக்கிறகாஷாயத்துக்குச் சரியானரூபமும்உள்ளும்புறம்பும்ஒத்திருக்கும்மகானுபாவர்சமீபத்துக்குத் தக்கபடியிருப்பார். இவரிடத்தில் கபடம் லேசமாயினும் கிடையாது இவரின்னவரென்று இதுவரைக்கும் ஒருவருக்குந் தெரியாது இவர் மெய்யான தனஞ்செயன் சந்தேகமில்லை, இவருக்கு நீங்கள் மருமகனுக்குச் செய்யத் தக்க உபசாரங்களைச் செய்ய வேண்டும் எங்களண்ணனின் உத்திரவின்படி சுபத்திரையின் கன்னியாமாடத்தில் இவரை இருக்கச்செய்து சுபத்திரையைப் பணிவிடைசெய்யும்படி நியமித்துவரப் போகிறேனென்று சொல்லவே அந்த ருக்மணி முதலான பேர்களெல்லாம் குலுங்கச் சிரித்துக் கொண்டு ஆம் ஆம் பார்க்கும்போதே தெரிகிறது வெகு பெரியவர் தான் இப்படிப்பட்ட மகானுபாவர் இனி கிடைக்கமாட்டார். சுபத்திரை நல்ல பாக்கியஞ் செய்தவளே யாம் இதிலெவ்வளவும் சந்தேகமே இல்லை இவரெப்படியிருந்தாலும் இருக்கலாம்போலக் காண்கிறது சந்நியாசத்துக்குப் பலன் கிடைத்தால் மறுபடி இல்லறத்தானுய் விடலாம் என்று சொல்லிக்கொண்டே அர்ச்சுனனை நோக்கி, ருக்மணி சொல்லத் தொடக்கினுள்.

ஐயா துறவியே வாரும் உட்காரும் தாம்பூலம் போட்டுக் கொண்டு வெகுநாளாயிருக்குமே இப்போது தாம்பூலம் போட்டுக் கொள்ளுதிரோ இனி பறவாயில்லை, வந்தகாரியம் பலிக்கும் கஷாயத்தைக் களைந்து நல்லவஸ்திரம் உடுத்திக்கொள்ளும் நாங்கள் வெளிப்படுத்துகிறதில்லை மறுபடிபோகும்போது காஷாயங்கட்டிக் கொள்ளலாம் முதல்முதல் எங்கள் வீட்டிலேதான் மருவுண்ண வேணும் ஆகையால் சாப்பிடும் இன்னைக்கிபிக்ஷைவேண்டாம் எப்போதும் நீர் உயர்ந்தவேடந்தரிக்கிறீரோ அப்போதெல்லாம் உமக்குப்பெண் கிடைக்கிறது அதெப்படியென்றால் பிராமண வேடம் போட்டபோது துரோபதை கிடைத்தாள் தபசிவேடம்போட்டபோது நாகக்கன்னிகையும் பாண்டியகன்னிகையும் கிடைத்தாள். அந்தப்படியே இந்த சந்நியாசிவேடத்துக்குத் தக்க பலன் கிடைக்

கும் என்று பரிகாசமாய்ப் பகர அதற்கு அர்ச்சுனன் மெய்தான் தங்கள் நாயகராகிய ஸ்ரீ கிருஷ்ண மூர்த்தியின் சினேக பலத்தினாலேயே எனக்கு இப்படிப்பட்டசாமர்த்திய முண்டாகியதே அன்றி, என்பலத்தினாலே ஒன்றுமில்லை என்று அர்ச்சுனனும் சில பரிகாச வார்த்தைகளைப்பேசிப் பின்னும் கண்ணனுடைய மனைவிகள் ஓ அர்ச்சுனநெடுநாளாய் உன்னை எங்கள்வீட்டிற்கு வரக்காணவேண்டுமென்று ஆசைகொண்டிருந்தோம் அதுஇன்றைக்கித்தான் எங்கள் கோரிக்கை நிறைவேறியது என்று நவின்றுமெத்த அன்புடனே போஜனமுதலானதும் உதவி உபசரித்தார்கள் பின்பு அர்ச்சுனனைக் கண்ணன் கன்னியாமாடத்துக்கு அழைத்துப்போய் தன் தங்கையாகிய சுபத்திரையை அழைத்து ஓ அம்மணி இவர் மகாபெரியவர் இவரை நீ உன் மாளிகையில் வைத்துப்பூசித்து மிகவும் நன்மை உனக்கு நல்ல பலன்கிடைக்கும் இப்படியே முற்காலங்களில் நமது கன்னியாமாடத்திலே வெகு பெரியோர்கள் வந்து தவஞ்செய்துக் கொண்டிருந்தார்கள். அவர்களையெல்லாம் நமது சந்ததியிற்பிறந்த அனேகம் பெண்கள் பூசித்துவெகுகன்னிகளைப் பெற்றார்கள். ஆகையால் குழந்தாய் இந்த சந்நியாசியை நீவெகு பயபக்தியுடனே பூசித்துவரவேண்டுமென்று என்னுடைய அண்ணா நியமித்திருக்கிறார். ஆகையால் அம்மா சுபத்திரையே நீ இந்தப் பெரியவர் எந்த வேளையில் என்ன சொல்லுகிறாரோ அதைதடுக்காமல் தகுந்தபடி போஜனமுதலானவைகளால்உபசாரஞ்செய்து வரவேண்டும் இவருக்குத் தவஞ்செய்ய நமது தோட்டத்திலிருக்கும் கொடிகளால் கட்டியவீடு தகுந்ததாயிருக்கிறபடியினாலே அங்கேயே வாசம்பண்ணிக் கொண்டிருக்கட்டும் என்று சொல்ல அதைக் கேட்டு சுபத்திரையையும் ஓ அண்ணா அந்தப்படியேசெய்து இவர் சந்தோஷப்படும்படி நடந்துக்கொள்ளுகிறேன் என்று சொன்னாள் அப்போது யாதவகுல திலகராகிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் அந்தக்கபட சந்நியாசியை தோட்டத்திற்கு அழைத்துப்போய் இருக்க வேண்டிய இடங்களைக்காட்டி சுபத்திரையையும் பணிவிடைக்கு அவரிடத்தில் ஒப்புவித்து சந்நியாசியிடத்தில் விடைபெற்றுச்சென்று இச்செய்தியை தமயனருக்கு அறிவித்தார் பிறகு அந்த அர்ச்சுனனவன் தினந்தோறும் விடியற்காலமுதல் இராத்திரி சயனித்துக்கொள்ளும்வரையில் சுபத்திரையினாலே வேண்டிய உபசாரங்கள் செய்யப்பட்டு வருங்காலத்தில் அடிக்கடி சுபத்திரையைப்பார்த்துக் கொண்டிருப்பதினால் அவளுடன் பேசுவதனாலும்

அவளுடைய நடை புன்சிரிப்பு முதலாகிய செய்கைகளைக் காண்பதிலும் முன்னிருந்ததைவிட எண்மடங்கதிகமாகத் காமத்தீயானது எழும்பி உள்ளும் புறமும்எரிட்கவே நாளுக்குநாள்தேகமானது இளைத்து வெளுத்துத் தலைண்டு மெய் சோர்வும் உண்டாகியது.

இவ்வண்ணமாக அர்ச்சுனன் காமநோயினுலே மெத்தவருத்தமடைந்து அதிதுண்டாகிய தாபத்தைச் சகிக்கமாட்டாமல் பெருமூச்சுவிட்டு நீரிலமழ்ந்தியசுரக்காயைப்போல எவ்வளவு அடக்கினாலும் அடங்காமல்மேலிட்டு தனதுகபடம் வெளிப்பட அதையெல்லாம் வெவ்வேறு பாவனையால் மறைத்துக்கொண்டு தன்வேஷத்திற்குத் தக்கபடி ஹரிகோவிந்தா மாதவாவென்று கிருஷ்ணமூர்த்தியையே தியானித்துக்கொண்டிருந்தான் அப்போதந்த சுபத்திரையும் தன்மனதில் அர்ச்சுனனையே தியானித்துக் கொண்டிருந்தாள், அதேனென்றுல்யாதவர்களுக்குள் ஒருவரோடொருவர் வீரவாதம் பேசுங்காலத்தில் அந்த அர்ச்சுனனே எனக்கு நிகரல்லவே நீ எவ்வளவென்றும் வில்வித்தை கற்குங்காலத்தில் நான் அர்ச்சுனனுக்கு மேலான வீரபராக்கிறமமுடையவ நாகிறேன் பாரென்றும் எவனுகிலும் சவரியத்தில் கர்வமடைந்தால் அவனைப்பார்த்து நீ என்னடா அர்ச்சுனனுக நினைத்துக்கொண்டாயோவென்றும் அன்றியும் வில்வித்தை கற்கிற பிள்ளைகளை ஆசான் ஆசிகூறுங்காலத்தில் அர்ச்சுனனுக்குச் சமானமாகக்கடவாயென்றும்ஆசீர்வாதஞ்செய்கிறபடியாலும் அதுகளை யெல்லாம் பலதரம் சுபத்திரை கேட்டிருந்தவளாகையால் புருஷர்களுக்குள் அர்ச்சுனனே மேலானவனென்று எண்ணி அவனையே மணம்புரிய வேண்டுமென்றும் கனவிலும் மரவாமல் சிந்தனை செய்துக்கொண்டிருப்பாள். அன்றியும் குருதேசத்தில் நின்று யாராகிலும் வந்தால் அவர்களை யுபசரித்து அர்ச்சுனனுடைய சரிதைகளைசொல்லச்சொல்லிகேட்டு அவர்கள் சொல்லுமளவில் மனதில் மிகவுங்களிப்படைவாள் மேலும் வெண்மையான வஸ்துவைக்குறித்துயாராகிலும் அர்ச்சுனனென்றசொல்லைச்சொல்லும் போது அதையுற்றுக்கேட்பாள் இன்னும் யாராகிலும் தபசிகள் சோதிடர்கள் குறிசொல்லும்வோர் முதலான பேர்கள் வந்தால் அவர்களுக்கு உபசாரஞ்செய்து நான்நினைத்திருக்கிறகாரியங்கூடிவருமா வாதாவென்று கேட்டு அவர்கள் கூடிவருமென்று சொல்லுமளவில் அர்ச்சுனனை விவாகஞ்செய்துக் கொண்டதுபோலவே களித்திருப்பாள் இப்படிக்கெல்லாம் அந்த சுபத்திரை

ஜாக்கிரதையினும் சொற்பனத்திலும் அச்சுனனை பாவனையினாலே கண்டு அவனிடத்திலேயே மனமழுந்தியிருப்பாள் ஆனபடியினாலே இனந்தோறும் கபட சந்நியாசியை யுற்றுப்பார்க்குமளவில் தான் கேட்டிருக்கிறபடியும் சொற்பனத்தில் காண்கிறபடியும் இவனுடைய ரூபமிருப்பதினாலும் கைதனில் நாணிரைச்சலுண்டாகிய காய்ப்பு காணப்படுகிற படியினாலும் அர்ச்சுனன் தீர்த்தயாத்திரையாய் பிரபாசம்வரைக்கும் வந்திருக்கிறானென்று முன்னமே தான் கேள்விப்பட்டிருப்பதினாலும் அந்த யாதவப் பெண்ணின் மனதில் சந்தேகமுண்டாயிற்று இப்படிக்கிருக்க ஒருநாள் இந்த சன்னியாசியானவன் காளையிஸ்னானஞ்செய்து ஆசனத்திலுட்கார்ந்துக் கொண்டு ஜபம்பண்ணி நிற்குத்தருணத்தில் சுபத்திரை சென்று நமஸ்காரஞ்செய்து ஓசுவாமிதேவரீர் வெகுதேசங்களையும் நதிகளையும் க்ஷேத்திரங்களையும் கண்டவரானபடியினாலே அவைகளின் சரிதைகளைச்சொல்ல வேண்டுமென்று கேட்டாள். அதற்கு அர்ச்சுனன் மிகவுஞ் சந்தோஷித்து காமப்பார்வை முதலாகிய விலாசங்களுடன் அநேகக் கதைகளையெல்லாஞ் சொல்லிவந்தான் நடுவில் குருதேசத்து சங்கதி வந்தபோயால் சுபத்திரையானவள் சந்நியாசியை நோக்கி ஓ சுவாமி அவிடத்தில் காண்டவ பிரஸ்தமென்றும் பெயருடைய பட்டணத்தில் எங்களத்தை குந்தி தேவியைக் கண்டீரா அவளும் அவளுடைய குமாரர்களும் க்ஷேமமாயிருக்கிறார்களா அவர்களில் துரோபதைக்காக ஏற்பட்ட நிபந்தனையின்படி அர்ச்சுனராஜனுக்குத் தீர்த்தயாத்திரை நேரிட்டதாமே அந்த மகாபுருஷர் மெத்த சவுக்கியமாயிருந்தவர் நெடுநாளாய் வனந்திரங்களில் திரிந்து கஷ்டப்பட்டுக் கொண்டு இந்த மழைக்காலத்திலே எங்கேயிருக்கிறாரோ தேவரீரும் தீர்த்தயாத்திரை வந்தவராகையால் அவரை யெங்கேயாகிலும் கண்டதுண்டா அல்லது கேட்டதுண்டா இதுகளையெல்லாந் தயைசெய்து சொல்லவேண்டுமென்று கேட்கும்போது அர்ச்சுனன் தன்னிடத்தில் அவளுக்கு ஆசையிருப்பதாக குறிப்பினாலறிந்து மிகுந்த காமக்கினியினால் உடம்பெல்லாம் பொங்கிச் சிலுசிலுத்து நடுக்கமுற தொனித்து புன்னகையுடனே சொல்லுகிறான். ஓ? யதுகுலத்தோர் தவத்தினாலுதித்த மின்னாரே உங்களத்தையாகிய குந்தியைக்கண்டேன் க்ஷேமமாயிருக்கிறாள். அவள் புத்திரர் முதலானபேர்களும் க்ஷேமமாயிருக்கிறார்கள் அர்ச்சுனனோ தீர்த்தயாத்திரை முடிந்தும் இன்னும் தன் தேசம் போய்ச் சேரவில்லை ஆனால் அவனெங்கேயிருக்கிறானென்றால் இப்

போது துவாரகாபுரி பட்டணத்திலேயே சந்நியாசிவேடம் பூண்டு ஒருவருக்குந் தெரியாமலே வாசஞ்செய்துகொண் டிருக்கின்றன் ஓ! பொற்கொடியே நீ தினந்தோறும் அவனைப் பார்த்துக்கொண் டிருக்கிறபோது அவனை இன்னானென் றறியாமலிருக்கிறாய் என்று சொல்லக்கேட்டு சுபத்திரை திடுக்கிட்டு பெறிமூச்செரிந்து முக த்தை வளைத்துத் தரையைக் காலால்சீரி நின்றாள் இப்படி நிற்கும் சுபத்திரையைக் கண்டு அர்ச்சுனன் மெத்த அன்புடனே அடிபூங் குழலே நான்தான் அர்ச்சுனன் உனக்கெப்படி என்னிடத்தில் கரு த்திருக்கின்றதோ அப்படியே எனக்கும் உன்னிடத்தில் பதின் மடங் கதிகமாய் கருத்தமைந்திருக்கிறது உனது பணிவிடைக்கிக் காத்திருக்கிறேன் பூரணச்சந்திரனைபொத்த முகமுடையவளே நல்ல நாளில் கர்மவிதிப்படி சாவித்திரி என்பவளைச் சத்தியவான் விவாகஞ்செய்துக்கொண்டதுபோல உன்னை நான் விவாகஞ் செய் துக்கொண்டு உன்னுடன் வாழ்வேனென்று சொல்லிக்கொண்டே கொடிகளால் கட்டிய அறைவீட்டிற் குள்ளே பிரவேசித்தான் பின்பு சுபத்திரையானவள் மிகவும் மதிகலங்கி மெய்துவண்டு தனது பள்ளியறைக்குள்ளேபோய் கட்டிலின்மீது சயனித்துக் கொண்டு மூர்ச்சை யடைந்தவள் போல ஒன்றும் தெரியாமல் லிரு ந்தாள். இப்படியிருக்க ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியானவர் இச்செய் தியை எல்லாம் தனது பேரரிவினாலறிந்து சுபத்திரைக்கும் அர்ச் சுனனுக்கும் போஜன மிடும்படி ருக்மணி தேவியை யனுப்ப அம் மாதும் போஜனத்தைக் கொண்டு வந்து இருவருக்கும் பரிமாரி இவ்விருவருடைய மனோவியாதியை மூற்று மறிந்துக்கொண்டு போயினாள். அர்ச்சுனனும் அந்தக்கொடியரையிலேயேஇருந்துக் கொண்டு உன்மத்தம் பிடித்தவன்போலிருந்தான்.

இந்தப்படி அர்ச்சுன னிருக்குறபோது சூரியன் மேற்கடலில் மூழ்கினவுடனே அர்சுனனையும் சுபத்திரையையும் மோகமென்பது மொய்த்துக்கொண்டதுபோல அருளானது பூமியெங்கும் சூழ்ந்து க்கொண்டது அவ்விருளைப்பார்த்தால் ஒருவன் மெத்தப்புண்ணி யஞ் செய்து சுவர்க்கலோகமடைந்து போகங்களையெல்லா மனு பவித்து அப்புண்ணியம் நீங்கியபின் மறுபடியும் அவனைப் பிரவிக் கடல்சூழ்ந்துக்கொண்டது போலிருந்தது உடனே ஆகாசத்தில் நக்ஷத்திரங்கள் காணப்பட்டன அதெப்படி யிருந்ததென்றால் சுபத் திரையின் தேகத்திலுண்டாகிய வெப்பமானது வீசி ஆகாயத்தில் கொப்பளங்கள் புறப்பட்டதுபோலத் தோன்றிற்று சூளிர்ச்சியும் வெண்மையுமுடைய கிரணங்களை வீசி இருளைத் தூரத்தி யடித்துக் கொண்டு சந்திரன் உதயமாகியதை நோக்கினாலெப்படி யிருந்த

தெனில் மூகத்தினழகினுலே தன்னை ஜெயித்தவளாகிய சுபத்திரை யைத் தன் தோழனுகிய மன்மதன் மிகவும் வருந்துகிறானே இத்தருணத்தில் நாமும்போய் வருந்தி அவள்மூகத்தை வாடச்செய்ய வேண்டுமென்றுச் சந்திரனும் வந்ததுபோல விருந்தது இப்படியத்தச் சந்திரனுதித்து நிலவு பிரகாசிக்கும்போது அந்த சுபத்திரை யானவள் மன்மதன் பிரயோகிக்கிற புஷ்ப பாணங்களினுலே தேக மெல்லாம் தளைக்கப்பட்டுச் சகிக்கமாட்டாமல் தான்சயனித்திருக் கின்ற புஷ்ப சயனமெல்லாம் கருகிப்போகும்படியாகிய தாபத்தை யடைந்து பெருமூச்சுவிட்டுத் தன்னைத் தொந்தரவுசெய்கிற மன் மதனையும் அவனுக்குத் தோழனுகிய சந்திரனையும் குயில்களையும் மலயமாருதத்தையும் தூஷித்து மெய்சோர்ந்து மூர்ச்சையாகிக் கிடக்கவே இதைக்கண்டு இவளுடைய தோழியர்களெல்லாம் விச னமடைந்து தேவகிதேவிக்கு அறிவிக்க அந்த தேவகியும் ஓடிவந்து மகளைப்பார்த்து மிகுந்த தயரத்துடனே அடி குழந்தாய் நீயேன் இப்படி வருந்துகிறாய் உனக்குண்டாகிய வியாதிக்குத்தக்க சிகிச்சை செய்விக்கிறேன் தைரியத்தை யடைந்திரு நீ இப்போதிருக்கிறபடி இன்னுஞ் சிலகோரம் இருப்பையே யாகில் நாங்களெல்லாம் பெண் ணையிழப்பதுமன்றி, உயிரையுமிழப்போம் ஆகலால் அடிமகளே? கொஞ்சம் தைரியமடைந்து உன்னுயிரைக் காப்பாத்து உன்கருத் தை உன்னண்ணன்மார்களுக்கும் உன் தகப்பனுர் முதலானபேர் களுக்குந் தெரிவித்து உன்னிஷ்டப்படியே நடத்துகிறேன் தயரப் படாதே என்று சொல்லி தன் பிராணநாதராகிய வசுதேவரிட்டத்தி ற்கு வந்து ஏகாந்தத்தில் அவரைப்பார்த்து கேட்டீரோ பிராண நாயகரே நமது தோட்டத்தில் வந்திருக்கிற சன்னியாசி அர்ச்சுன னென்று தெரியவருகிறது அதனுலே நம்முடைய குழந்தை சுபத் திரை அவனிடத்தில் மெத்தக் காதலாகி கனவருத்தமடைந்திருக் கின்றுள். ஆதலால் இதற்குத்தக்க யோசனை செய்யவேண்டு மென்று சொல்லக்கேட்டு வசுதேவரும் அதை அக்குரூர், ஆகு கன், கிருஷ்ணன் முதலாகிய பேர்களுக்குந் தெரிவித்தார். அது கேட்டு உக்கிரசேனன் சத்திகன், அக்குரூரன், கதன், கிருஷ்ணன், பிருது சிரவன், தேவகி, ரோகணி, ருக்குமணி, சத்தியபாமை, இவர்களெல்லாங் கூடி நன்றுயோசித்து ரகசியமாக புரோகிதரை அழைப்பித்து யாவருக்குந் தெரிவித்து அவர்களுடைய யோசனை களையும் அறிந்துப் பன்னிரண்டாநாள் முகூர்த்தம் வைத்துக் கொண்டார்கள். பின்பு, ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி சுபத்திரையை

அர்ச்சுனனுக்கு கொடுக்கப் பலராமர் உத்தவர் முதலானபேர்களுக்
குஞ் சம்மதியில்லாமையால் அவர்கள் இச்செய்தியை அறியாதிரு
க்கவேண்டியதற்காக யோசித்து ஒரு விளம்பரஞ்செய்து பறை
சாற்றிவித்தார். அவ்விளம்பரம் என்னவென்றால் நம்மூடைய
சுபத்திரைக்குத் தேகத்திலென்னமோ தெய்வீகமாய் உபத்திரவம்
உண்டாயிருக்கிற படியினாலே சமுத்திரத்தி நடுவிலிருக்கிற தீவில்
சிவனுக்கு முப்பத்துநாலுநாள் மகா உச்சவம் நடக்கப்போகிறது
அதற்காக இன்றைக்கி நாலாநாள் யாவரும் தங்கள் குடும்பங்களு
டனே அந்தத் தீவுக்குப்போய் சேரவேண்டியது என்றுபறையறை
வித்தார் அதுகேட்டு பலராமர் முதலிய சகல யாதவர்களும் பட்ட
ணத்திலுள்ள ஜனங்களும் வஸ்திராபரணங்களைப் பூண்டு அழகிய
கொடிச்சீலைகளைக் கட்டிய கொடிமரங்களுடன் னல்ல யந்திரங்க
ளுடைந்தாய் உட்காரவும் படுக்கவும் வினையாடவும் உபயோகமா
யிராநின்ற, யிடங்களையுடைய கப்பல்களின்மே லேறிக்கொண்டு
அந்தத் தீவுபோய் சேர்ந்தார்கள். இப்படியிருக்கச் சுபத்திரை
இச்செய்தியை யறிந்து இதற்கு நாமும் அத்தீவுக்குப் போகவேண்
டியவளாகவே யிருக்க நம்மைவிட்டு அண்ணு போவாரோ போக
மாட்டாரே இதற்கு நாமென்ன செய்யப்போகிறோம் சந்நியாசியா
கிய அர்ச்சுனமகாராஜன் பனிரெண்டுகா லிங்கிருப்பேன் அதற்கு
மேல் எண்ணிச்சையின்படி செல்வேனென்று மொழிந்தாரே உச்ச
வமோ முப்பத்துநாலுநாள் நடக்கப்போகிறதே இதற்குள் கபட
சந்நியாசி நம்முடைய கன்னியாமாடத்தைவிட்டுப் போய்விடுவார்
போலிருக்கின்றதே என்னெண்ணம் பலிக்காமற் போயிற்றேஅந்த
ஸ்ரீ மகாலட்சுமிக்கும் என்மீது கிருபையில்லையே என்கருத்தை
மூடித்துவைக்கும்படியான பேர்களொருவரு மில்லையே பாவியா
கிய யான் முன்னமென்ன தீவினைகளைச் செய்தேனோ எந்தப் பெரி
யோர்களை வைதேனோ ஓ ஜகதீஸ்வரி எழையாகிய என்முறை
யிடுகேட்க வில்லையோ? சதனக்கொரு தொல்லையோ? ஓ! சர்வ
லோகநாயகி முன்னம் காகாசுரனுக்காக மனமிளகிக் காத்தவள்
நீ யல்லவோ இதின் பொருட்டு என் பிராணனை மாய்த்துக்கொள்ள
வோ எனது கோரிக்கையை யீடேற்றுவ தன்மனதிற்குச் சம்மத
மல்லவோ இன்னும் பலவாக வெடுத்துச் சொல்லவோ அறுபது
நாழிகைக்குள்ளாக அடியாள் கோரின கோரிக்கையின்படி நீ
கருணைகூர்ந்து நடத்தாவிடில் சரணமடைந்தவர்களை ரக்ஷித்து
அவர்கள் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கிறேனென்று உலகப்

பிரசித்தமாக நின்கரத்தினி லணிந்திருக்கும் விருது அத்தத் தகூ
ணமே அந்த விருதானது உம்மைவிட்டு நீங்கிப்போகு மென்றும்
பலவாறு சிந்தனைசெய்துக் கொண்டே தனக்கு அண்ணனுகிய ஸ்ரீ
கண்ணனிடம் வந்து ஒ அண்ணு நமது தோட்டத்திலிருக்கிற சன்
னியாசி இன்னும் பனிரெண்டு தினங்களிவ்விடத்திலேயே இருக்
கப்போகிறாமே நன்றங்களுடன்உச்சவத்திற்குவந்துவிட்டான்
அவருக்கு உபசாரஞ்செய்யுமவர்கள் யாரென்ன அதற்குக் கண்
ணனும் சுபத்திரையின் மனநிலைமையைத் தன் பேரறிவினு லுணர்
ந்து மந்தகாசத்துடன் சுபத்திரையை நோக்கி ஒ அம்மணி உன்னை
யல்லாது வேறு ஆர்செய்வார்கள். நீயே செய்யவேணுமென்று
சொல்லி பேரிகை முதலான வாத்தியங்கள் முழங்கப் புறப்பட்டு
கப்பலேறி அத்தீவை யடைந்து எல்லாருடன் கூடி அவ்விடத்துத்
திருவிழாவை நடத்தியருளினர்.

பின்பு அங்குள்ள சகலமான பேர்களும் தானதருமங்களைச்
செய்து வேடிக்கையாய் தோட்டங்கள் துரவுகள் குளங்கள் குட்
டைகள் முதலானவிடங்களிலே வாசஞ்செய்து திருவிழாவைப்
பார்த்துச் சந்தோஷமடைந்துக்கொண்டு முப்பத்திநான்குநாளும்
அங்கனே இருந்தார்கள் இப்படியிருக்க அர்ச்சுனனவன் தன்
காரிய மநுகூலமாயிற்றென்று மனதில் சந்தோஷமடைந்து ஒரு
நாள் சுபத்திரையைப் பார்த்து ஒருவசனஞ் சொல்லுகிறான். அடி
தேன்மொழியே இப்போது உன் தகப்பனர் முதலிய யாவரும்
திருநாள்பார்க்கப் போயிருக்கின்றார்கள் இந்தச் சமயத்திலே தான்
நாம் விவாகஞ் செய்துக்கொள்ள உத்தமம் ஆகிலும் பெரியோர்
கள் விவாகங்களைப் பற்றிப் பலவாறுகச்சொல்லி யிருக்கின்றார்கள்
அந்த விவாகம் எட்டுவகைப்படும் அவை யாவெனில் பிரமம் பிர
சாபத்தியம் ஆரிடம் தெய்வம் காந்தர்வம் ஆசுரம் இராக்கதம்
பைசாசமெனப்படும் இவற்றுள் பிரமசாரிக்குக் கன்னிகையைத்
தீமுன்னங் கொடுப்பது பிரமமணம் தலைமகளினத்தார் வேண்ட
அவளை ஓமத்தீமுன்னங் கொடுப்பது ஆரிடமணம் வேள்வியால்
வந்தபெண்ணை அக்கினிமுன்னங் கொடுப்பது தெய்வமணம்
கொடுப்பாருங் கேழ்ப்பாருமின்றித் தனியிடத் தெதிர்பட்டுத்
தாமே கூடுவது காந்தருவமணம் பெண்ணுக்குப் பொன்பூட்டிச்
சுற்றத்தார்க்குப் பொன்வேண்டுவன கொடுத்துக்கொள்வது ஆசுர
மணம் பெண்ணும் பெண்ணினத்தாரு முடன்படாமல் வலிதிற்

கொள்வது இராக்கதமணம் துயின்றுனைச்சென்று கூடுவது பை சாசமணம் இவற்றுள் கொடுப்பாருங் கேட்பாருமின்றி இவருந் தனித்தவிடத் தெதிர்பட்டு இருவருங் கலந்து கூடுவதாகும் ஐந்தா வது மணமாகிய காந்தருவ மணமென்பதுதான் நமக்கிப்போது இசைந்ததாய் காண்கின்றது அன்றியும் கணனிகையை ஒருவனுக் குக் கொடுக்க முயன்றபோது முறையே தகப்பன் உடன் பிறந் தாள் தாய் அம்மான் தகப்பனுடன் பிறந்தவன் ஆசாரியன் இவர் களெல்லாம் அதிகாரிகளா யிருக்கின்றார்கள். மேலும் பெரியோர் கள் விவாகமுறைமையைக் குறித்துச் சொல்லியதில் சிறிது சொல் லுகிறேன் கேள் பெண்ணைப்பெற்றவன் யோக்கியனுகியவரனை யழைத்து விதிப்படிகன்னிகையைக் கொடுத்தால் அக்கன்னிகைப் பத்தினியென்ற பெயருடையவளாகின்றாள் மனைவி மரித்தபின் தன்னையுந் தன்னை யடுத்தவர்களையும் காப்பாற்றுகிற நிமித்தியம் தானே யொருபெண்ணைத் தேடி விவாகஞ் செய்துக்கொண்டால் அந்தப் பெண்பாறியை யென்று பெயருடையவளாகின்றாள் பிள் ளைக்குத் தகப்பனுனவன் குலமுதலான யோக்கியத்தையுடைய கன்னிகையைத் தேடி விவாகஞ்செய்வித்தால் அந்தக் கன்னிகை தாரமென்று பேருடையவளாகிறாள் அன்றியும் அவளுக்குஜாயை என்கிற பேருமுண்டு இப்படிக்கிருக்கிறபடியினாலே ஆசையுள்ள பெண்ணை ஆசையுள்ள புருஷன் ரகசியமாய்ச் சேருகிறது தருமமா யிருக்கிறது அடி மாண்விழியே இப்போது நான் சொல்லிய காந் தருவ விவாகமானது அக்கினி முன்பாகச் சடங்குகள் நடத்திசெய் துக்கொள்ளத் தக்க தாகாமற் போனாலும் நீ தயைசெய்து அதை அங்கீகரிக்கவேணும் ஏனென்றால் உச்சவத்திற்குப் போயிருக்கிற வர்களெல்லாம் வராமலிருப்பதற்கு முன்னமே நல்லநாள் இன் றைக்குத் தான் அமைந்திருக்கின்றது எப்படியென்றால் உத்தரா யண வைகாசிமாதம் சுக்கிலபக்ஷம் ஹஸ்த நக்ஷத்திரம் திருதியை திதி மகாலக்கினம் பலகரணம் கூடிய சுபமூகூர்த்தம் இவைகளெல் லாம் இன்றிராத்திரிக் கிசைந்திருக்கிறபடியால் நீ மனதைப்பரித பண்ணவேண்டும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியோ சகலமுமறிந்தவர் தான் ஆனால் மன்மதனுல் மெத்த வருத்தப்பட்டு தவிக்கின்ற என் னைக் காப்பாற்றவேணுமடி கண்ணேயென்று சொல்லக்கேட்டு சுபத்திரை தன் தமயனை கண்ணனை மனதில் நினைத்து ஒன்றுஞ் சொல்லாமல் கண்களில் நீர் ததும்ப நின்றாள் அப்போது அர்ச்சு னன் காமாக்கினியினுல் தாபமடைந்துச் சகிக்க மூடியாதவனகி

கொடிவீட்டை யடைந்து தன் தந்தையாகிய இந்திரனினிணைத்தான் இப்படி அர்ச்சுனன் தன்னினிணைந்த மாத்திரத்திலே தேவேந்திரனவன் இயமன் வருணன் குபேரன் அக்கினிவாயு சூரியன் சந்திரன் அஷ்டவசுக்கள் ஏகாதசருத்திரர் சித்தர் சாத்தியர் கின்னரர் கிம்புருடா முதலாகிய சகல தேவர்களுடனும் நாரதர் வசிஷ்டர் வால்மீகர் முதலாகிய ரிஷிக்கூட்டங்களுடன் தேவஸ்திரீகளோடும் ஐராவதத்தின்மீதி லேறிக்கொண்டு தன் மகனுகிய அர்ச்சுனனிருக்கும் நந்தவனம் வந்து சேர்ந்தான்.

அப்போது ஸ்ரீகிருஷ்ணமூர்த்திசுபத்திரைதன்னினிணைத்தினிணை வையுணர்ந்து அக்ரூரன் ஆகுகன் கதன்வசுதேவன்தேவகிரோகணி ருக்குமணி சத்தியபாமை முதலானோரையும் அழைத்துக்கொண்டு பலராமர் முதலிய பேர்கள் சித்திரையிலிருக்குந் தருணத்தில் புறப்பட்டு இவ்விடம் வந்து சேர்ந்து தேவேந்திரன் முதலானவர்களைக் கண்டு ஆலிங்கனஞ்செய்து நல்வரவுகேட்டு க்ஷேமமறிந்து சந்தோஷித்திருக்க தேவேந்திரன் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை நோக்கி ஐயா யாதவ சிரேஷ்டரே இன்னும் ஏன் காலதாமதஞ்செய்கிறீர் சீக்கிரத்தில் விவாகத்திற்கு யத்தனப்படவேண்டுமென்று சுவிலவே கிருஷ்ண மூர்த்தியும் தம்முடையவர்களைக் கொண்டு விவாகத்திற்கு வேண்டிய சகல சாமக்கிரியைகளை சித்தப்படுத்தி தேவேந்திரனுக்குத்தெரிவிக்க தேவேந்திரன் தன் மகனுகிய அர்ச்சுனனுக்கு மங்களஸ்நானஞ்செய்வித்து நவமணிகளிழைத்துப் பளபளென விளங்கும் கிரீடம் தோள்வளை ஆரங்கள் முதலான பல வாபரணங்களாலும் திவ்விய பீதாம்பரங்களாலும் அலங்காரஞ் செய்து நாரதர் வசிஷ்டர் முதலான மஹா முனிவர்களைக்கொண்டு சுபச்சடங்குகளைச்செய்வித்திருக்கச் கிருஷ்ணமூர்த்தியும் தன் தங்கையாகிய சுபத்திரைக்கி இழையாயிரம்பொன் பொரும்படியாகச் சகலாபரணங்களாலும் பட்டுபீதாம்பரங்களாலு மலங்கரித்துசித்தப்படுத்த சகல மங்களவாத்திய முழக்கத்துடனே பெண்ணையும் பிள்ளையையும் விவாகமண்டபத்திற்கு நடுவினில் ரத்தினங்கள் பொருந்திய பொற்பீடத்திலுட்காரவைத்துக் காசிபமாமுனிவர் விதிப்படி அக்கினியை வளர்த்தி ஓமஞ்செய்ய வசிஷ்டர் முதலாகிய ரிஷிகளெல்லாம் கூட்டமாய் வேதிகை சூழ்ந்துட்கார்திருக்க அருந்ததி முதலாகிய ரிஷிபத்தினிகளும் இந்திராணி முதலாதிய ரிஷிபத்திகளும் இந்திராணிமுதலாகிய தேவஸ்திரீகளும் தேவகிருக்குமணிசத்தியா

பாமை சாம்புவதி முதலாகிய யாதவபத்தினிகளும் பாலிகைகளில் விரைகளை விதைத்தும் பால்கலந்த சீரிடவும் பூரணகும்பங்களும் தீபங்களுமேந்தி மங்களபாடலுடன் சூழ்ந்திருந்தனர்கள் தேவதுந்துபி முதலான பதினெட்டு வாத்தியங்களு முழங்க அரம்பை ஸ்திரீகள் நர்த்தனஞ்செய்ய கந்திருவர் முதலான பேர்களெல்லாம் பாடமஹா விபவமான விவாகத்தை தேவேந்திரன்ஸ்ரீகிருஷ்ணபகவான் முதலாகியபேர்கள் நடத்தினர்கள். அர்ச்சுனனும்புரோகிதர் சொற்படியே நடக்கக்கிருஷ்ணமூர்த்தியும் ருக்குமணியுமாகத் தாரைவார்த்துக் கன்னிகாதானஞ் செய்து சுபத்திரையைக்கொண்டு அக்கினியையும் வேதியர்களையும் ரிஷிகளையும் வலம்வரச்செய்து உட்காரவைத்து மங்கிலியஞ்சூட்டி அம்மிமிதித்துப் பொரியிட்டு வெகு சம்பிரமமாக விவாகம் நிறைவேற்றி உடனே ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி நாரதர் காசிபர் வசிஷ்டர் முதலாகிய மஹாரிஷிகளையும் அருந்ததிமுதலாகிய ரிஷிபத்தினிகளையும் பூசித்துப்பலதானங்கள் வழங்கி இந்திரன் முதலாகிய தேவர்களும் இந்திராணி முதலாகிய தேவஸ்திரீகளுமாகிய சம்பந்திகளை உபசரித்துப்பூசித்துச் சகலருக்கும்விருந்துசெய்துச் சந்தன தாம்பூலாதி புஷ்பங்களளித்தனர். அப்போது அர்ச்சுனன் தன் மனைவியுடன் ரிஷிகளையும் அவர்களுடைய மனைவிகளையும் நமஸ்கரித்து அவர்களால் ஆசிகளும் பெற்றுப்பின்பு இந்திரன் முதலாகிய தேவர்களையும் அவர்கள் மனைவிகளையும் நமஸ்காரஞ்செய்துநிற்க அவர்களெல்லாம் பெண்ணுக்குத் தக்கபிள்ளை பிள்ளைக்குத்தக்கபெண் இப்படியமைந்தது அதிசயமாதலால் ஒரு குறைவுமின்றி இவ்விருவரும் நன்மக்களைப்பெற்று நற்செல்வங்களடைந்து கல்லோர்களுக் குதவிசெய்துக் கொண்டு நெடுநாள்வாழகவென்று ஆசீர்வாதஞ்செய்துமணக்கோலத்துடன் விளங்காநின்ற மகனையும் மருமகளையும் எதிர்முத்தமிட்டு உச்சிமுகந்து மருமகளுக்குப் பலவணிகளும் வழங்கினன். பின்பு அர்ச்சுனனும் சுபத்திரையும் வசுதேவர்தேவகி முதலானவர்களுக்கு நமஸ்கரித்து அவர்களாலும் ஆசிகள் கூறப்பட்டு மணவிருந்து மிடப்பட்டார்கள் இப்படிக்கலியாணம் நடந்தபின்னே இந்திரன் முதலானவர்களெல்லாம் யாதவர்களிடத்தில் விடைபெற்றுக்கொண்டு தங்கள்பதிபோய்சேர்ந்தார்கள் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியும் அர்ச்சுனனையழைத்து ரீவிவாகத்தைச் சேர்ந்த மற்ற சடங்குகளை நிறைவேற்றிவிட்டு இன்னும் இருபத்திரண்டு தினத்திற்குள்ளாகவே ரீ சுபத்திரையை அழைத்துக்கொண்டு நமது தேரிலேறி இந்திரப்பிர

ஸ்தப்போய் சேரக்கடவாய்அன்றியும் நீஇவ்விடத்திலிருக்கிறவரை
க்கும் சந்நியாசிவேஷத்துடனே இருக்கவேண்டும் நாங்கள் பல
ராமர் நித்திரைவிட்டெழுந்திருக்கு முன்னமே அவ்விடம்போக
வேண்டும் ஆகையால்விடைதாருமென்று சொல்லிவிடை பெற்றுக்
கொண்டு சுபத்திரைக்குந் திட்டஞ்செய்து சகல யாதவர்களுடன்
புறப்பட்டுத் தீவுபோய்சேர்ந்தார்கள் உடனே அர்ச்சுனன் சொர்க்
காதிபத்தியமடைந்தவன் போல மஹா சந்தோஷமடைந்து சுபத்
திரையுடன் கூடி பற்பல போக்குகளையுமனுபவித்துக்கொண்டு
சாந்தியடைந்து இருபத்தொருநாள் கடந்தவுடனே தன்மனைவியா
கிய சுபத்திரையை அழைத்து அடியென் பிராணநாயகி இனி நாம்
ஸ்ரீகிருஷ்ணபகவான் உத்திரவின்படி இந்திரப்பிரஸ்தம் போய்ச்
சேரவேண்டும் ஆகையால் நீ இன்றைக்கு விரதமுடிவுரரென்று
சொல்லி வேதியர் முதலானபேர்களுக்கு அன்னதான முதலாகிய
பலதானங்களையுஞ்செய்து நீயும் உன் தோழிமார்களுடன் நல்ல
பூஷணங்கள் முதலானவைகளால் அலங்கரித்துக்கொண்டு வேடி
க்கையாய் நகரத்தை வலஞ்செய்ய வேண்டுமென்று சகல அஸ்திர
சஸ்திரங்கள் நிறைந்த ரதத்தை சித்தப்படுத்திக்கொண்டு வந்து
எனக்குத்தெரியப்படுத்துமென்றுசொல்ல அந்தப் பூங்கொடியும்
கணவன் கட்டளையைச் சிறமேற்றரித்து உத்தமர்களாகிய வேதி
யர்களை யழைப்பித்து அவர்களுக்கு அன்னவஸ்திர தக்ஷணைதாம்
பூல முதலானதுகளெல்லாங் கொடுத்துப் பூசித்து அவர்களால்
ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு தன் பந்துக்கள் தோழிமார்
களுடன் சரஸ சல்லாபங்களுடனே போஜனஞ்செய்து அவர்களு
க்கு சில பரிசுகொடுத்து அரசனது ஊழியக்காரர்களை அழைத்து
நமது ரதத்தை சகல ஆயுதங்களுடன் நன்றாய் அலங்கரித்துக்
கொண்டு வாருங்களென்று அவர்களும் அந்தப்படியே அலங்கரித்
துக்கொண்டு வந்து நிருத்திச்செய்து தெரிவிக்கச் சுபத்திரைக்
கேட்டு அதில் தன்னுடை முதலானதுகளைத் தாதிகளைக் கொண்டு
ஏற்றிவித்துத் தன் கணவனிடத்திற்குவந்து நமஸ்கரித்து என்பிரா
ணநாயகரே உமது தத்திரவின்படி ரதத்தைச் சித்தப்படுத்தி வந்தே
னென்று நவின்றவுடனே அர்ச்சுனன் மெத்த சந்தசந்தோஷத்து
டன் அம்மாதைக்கட்டி முத்தமிட்டு அடிபெண்ணே என்னருகண்
ணே நாம் போவதற்கு இன்னொருதடை யிருக்கின்றது அதென்ன
வெனில் ரதத்தைச்செலுத்த சாரதியொருவன் வேண்டியிருக்கிறது
அவனிருந்தபோதிலும் நமது சந்தர்ப்பத்திற்குக்கெடுதியாகவிருக்

கிறதே இதற்கென்னசெய்கிறது என்று ஆலோசனைசெய்துக்கொண்டிருக்கும் தன் புருஷனை வணங்கி ஓ ஸ்வாமி அடியாளுடைய விண்ணப்பமொன்றுளது அதைக்கேட்டு அங்கீகரிக்கவேண்டும் அதாவது ரதசாரத்தியஞ்செய்ய அடியாளுக்குங்கிஞ்சித்துத்தெரிந்திருக்கின்றது ஆகையால் தேவரீர் இதற்காக சிந்திக்கவேண்டாம் யான்சாரத்தியஞ் செய்கிறேனென்று அதற்குப் பாண்டவ வீரன் அடிபெண்ணரசே தண்ணீர்ப் பந்தலில் தேன்மாரி பொழிந்தது போல எனக்கு மெத்த சந்தோஷமாயிற்று ஆனல் நீ முன்னமே சென்று ரதமேறு என்று சொல்லித் தானணிந்திருந்தக் காஷாய வஸ்திரங்களைக் களைந்து விட்டு திவ்யவஸ்திரத்துச்சுக் கவசகுண்டல கேயூரங்களைத் யணிந்து கத்திகேடயமுதலிய ஆயுதங்களைக் கட்டி தூணீரங்களைத்தோட்களில் தாங்கி காண்டீவத்தைக்கையிற் பிடித்துக்கொண்டு முன்னமே ரதத்தின்மீதேறி குதிரைகடிவாளக் கயிற்றைக்கையிற் பிடித்துக் கொண்டிருக்கும் சுபத்திரையினுல் விளங்காநின்றத் தேறின்மீதேறினன்.

இவ்வண்ணம் அர்ச்சுனன் ரதத்தின் மீதேறின மாத்திரத்தில் சுபத்திரை குதிரைகளைச் சவுக்கினுலடிக்க அந்த உத்தம அஸ்வங்கள் கருடனும்காற்றும் தோற்றுப்போகும்படி தேரையிழுத்துக்கொண்டு போகும்போடி மாரிகாலத்தில் வானத்திலே மேகங்கள் முழங்கினுலெப்படியோ அப்படிப்போல கிடுகிடென்று ரதமானது கோஷித்துக்கொண்டு செல்லச் சுபத்திரையின் தோழிகள் அம்மாதைநோக்கி எமதன்புடைய அரசியே உனக்குத்தக்க புருஷன் கிடைத்தற்காகவும் நீயப்புண்ணியபுருடனுடன் னீடித்து வாழ்ந்திருக்கவும் சுவாமியைத் தோத்திரஞ்செய்கிறோம் மேலும் நீ மக்களைப்பெற்று மகராஜியாய் வாழுங்காலத்தில் நாங்களுன்னைப்பார்க்கும்படி தயைசெய்யவேணுமென்று சொல்லசுபத்திரை அப்படியே உங்களிஷ்டப்படி வரவழைத்துக்கொள்ளுகிறேனென்று அவர்கட்கினிய வசனம்கூறிக்கொண்டே ரதத்தை நடத்துகிறபோது அந்த ரதத்தின் ஓசையைக்கேட்டுப் பட்டணத்திலும் அரண்மனையிலுமுள்ள அனேகர் ஓடிவந்துபார்த்து நமது சுபத்திரையை யாரோ எடுத்துக்கொண்டு போகிறனென்று ஓவென்று கூக்குரலிட்டு யாவருங்கும்புகூடி யாரடா இவன் நமெல்லாமிருக்க அரண்மனையிற் புகுந்து பெண்ணை யெடுத்துக்கொண்டு போகிறனென்றுசிலர் இவன் அரண்மனைத் தோட்டத்திலிருந்த சன்னியாசியாகு

மென்றுச்சிலர் ஆம்! ஆம்! அந்தச்சன்னியாசியை முன்னம் பார்க்கிறபோதோ சந்தேக முண்டாயிருந்தது சரியாயிருந்ததெனச் சிலர் இவன் பாண்டவரில் ஒருவனுகிய அர்ச்சுனனுகுமென்னச் சிலர் சரிதான் அவனைத்தான் காணப்படுகிறது என்று பேசிக் கொண்டே பற்பல ஆயுதங்களே விட்டெறிந்துக்கொண்டே பின் தொடர்ந்து ஓட, அர்ச்சுனன் தான் வசித்திருந்த குகையைச் சுபத்திரைக்குக்காட்ட அவளும் நல்ல குகையிது இதை நான் நமஸ்கரிக்க வேணுமென்று சிரித்துக்கொண்டே விரைவாய்த் தேரை யோட்டினுள் அங்கு பட்டணத்தைக்காக்கிற நிமித்தியம் வைக்கப்பட்டிருக்கிற விபிருதுவென்பவன் இந்தத் தேரோசையையும் பட்டணத்து ஜனங்களிந்த ஓசையையுங்கேட்டு ஓடிவந்து சுபத்திரை தேரோட்டுவதையும் பார்த்து மூன்னம் கிருஷ்ணமூர்த்தி சொல்லிய செய்தியை யறிந்திருப்பவனுனலும் அதை வெளிக்குக் காட்டக்கூடாதென்று மனதிலுன்னி மெத்த விரைவாய்த் தன் சேனைகளைச சன்னகைப்படுத்தி வில்லில் பாணங்களைத்தொடுத்து சரமாரிப்பொழிந்துக் கொண்டே பின்றொடர்ந்தான் இவ்வண்ணமாகச் சேனைகளின் பின்றொடர்ந்து வருவதைக்கண்டு சுபத்திரையானவள் தன் கணவனைகோக்கி ஓ ஸ்வாமி அதோ பார்த்தீரா நால்வகைச் சேனைகளுடனே விபிருது துரத்திக்கொண்டு வருகிறுன். அவர்களுடனே உமக்குயுத்தம் நேரிடும்போது நெடுநாளாய் என் மனதிலிருந்த கோரிக்கை நிறைவேறுமென்று சந்தோஷப்படுகிறேன் அதென்ன கோரிக்கை என்றுல் மஹாபல பராக்கிரமங்களுடைய தேவரீருக்குயுத்தம் நேரிடுங்காலத்தில் அடியாள் சாரதியாகியிருக்கவேணுமென்ற கோரிக்கையே என்று மொழிந்தாள் அதற்கு அர்ச்சுனனும் மெத்த சந்தோஷமாயிற்று பெண்ணே அந்தப்யடியே ரதத்தைச் செலுத்தக்கடவாய் மேலும் இப்படிப்பட்ட சாரதியையடைந்த வீரனுகிய என் புஜபல பராக்கிரமங்களைப் பார்த்து நீ சந்தோஷப்படப் போகிறுய் சேனைகள் கிட்டிவரட்டும் தேரையோட்டென்று சொல்லவே அம்மங்கையும் முன்னிலும் வீரவாக யோட்டினுள். அப்போது விபிருதுவும் அவன் சேனைகளும் ஒன்றுகத்திரண்டு சரமாரிபொழிந்து அர்ச்சுனன் ரதத்தைத் தெரியவொட்டாமல் செய்தார்கள். அதுகண்டு அர்ச்சுனன் வெகுண்டு சூரியக்கிரணங்களைக் கண்ட மாத்திரத்தில் பனியானது விலகிப் போவதுபோலத் தன் பாணங்களென்னும் சூரியக்கிரணக்களை விடுத்து எதிரிகள் விடுத்த பாணங்களென்னும் பனிக்கூட்டத்தை விலகிப் பஞ்சாய்ப் பரக்கச்செய்து அந்த வீரர்களையெல்லாம் நானுனி தங்களாகச் சின்னபின்னப் படுத்திச் சுபத்திரையைநோக்கி ஓ பெண்ணே உங்கள் சேனைகள் பட்டபாட்டைப் பார்த்தாயாயென்று சொல்லக்கேட்டுச் சுபத்திரையும் அடங்காத சந்தோஷமுடையவளாகித் தேரையோட்ட முயன்றபோது விபிருதுவானவன்

ரதத்தைவிட்டுக் கீழேகுதித்து ஓ அர்ச்சுன மஹாராஜனே சற்று நிற்கவேணும் குழந்தாய் சுபத்திரை நில்லுநில்லு என்று சொல்லிக் கொண்டேபோய் அர்ச்சுனனே இருகரங்களாலும் கட்டித் தழுவின படியே சொல்லுகிறான்.

விஜயவீரப் பிரதாபசாலியாகிய ஓ! அர்ச்சுன மஹாராஜனே இப்போதெனக்கு மெத்த சந்தோஷமாயிற்று ஏனென்றால் நீ நமது மருமகனாகி வந்தாயே அதைப்பற்றி யென்மனது களிசாகரத்தி லில் மூழ்கியது அன்றியும் நீ முன்னம் சன்னியாசிவேஷத்துடனே உருமாறியிருந்த செய்தியை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியினால் தெரிந்திரு க்கிறேன் மேலும் எப்படியாவதனக்குச் சுபத்திரையைப் பாரியை யாக்க ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி எண்ணமிருந்தது அவரன்றோ குணகு ணங்களை நிச்சயிக்க வல்லவர் ஆகையால் உன் விஷயத்திலே நடந்த சரித்திரமெல்லாம் எனக்குத்தெரியும் அன்றியும் இப்போது நீ சுபத்திரையுடனே இந்திரப் பிரஸ்தத்திற்குப்போய் சேரவேண்டிய ரகசியத்தையும் யானறிவேன் ஆனாலும் ஜனங்களுடைய திருப்திக் காக நான் உன்னுடன் யுத்தஞ்செய்வதற்கு வந்தேனே யன்றி என் மனமாரயுன்மீது விரோதங்கொண்டு யுத்தத்திற்கு வந்தவகல்ல ஆதலால் என்மீது கோபங்கொள்ளவேண்டாம் மேலும் ஓ அர்ச் சுன மஹாராஜனே உனக்கு யான் சொல்லவேண்டிய வார்த்தை யொன்றிருக்கின்றது அதென்னவெனில் முன்ன மிந்திரன் சகிதே வியை விவாகஞ் செய்துக்கொண்டதுபோல, நீ எங்கள்பெண்ணை விவாகஞ்செய்துக்கொண்டு விளங்குகிறாய் ஆகையால் எங்கள் பெ ண்மூகங் கோணமல் நீ நடந்துக்கொள்ள வேணுமென்று கோரு வதன்னியிலும் நீ சுகமாய்ப் பட்டணம்போய் சேர்ந்து உன் எண் ணன் தம்பிகளுடன் யாவருஞ் சந்தோஷிக்க வாழ்ந்தடவாயென்று சொல்லி சுபத்திரையை நோக்கி ஓ அம்மா குழந்தாய் நீ நல்லபுரு ஷனை யடைந்தாய் நீ மிகவும் பாக்கியம் பெற்றவள் ஆகையால் நீ மாமியார் முதலாகிய பந்துக்களும் புருஷனும் உகக்கும்படியாக நற்செய்கையில் மிகுந்து வாழக்கடவாய் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும் இவ்விடம் வந்தவுடனே சகலவரிசைகளும் இந்திரப் பிரஸ்தத்திற்கு வந்துசேரும் போய்வாருங்களென்று சொல்லவே அர்ச்சுனன் விபி ருதவை நமஸ்கரித்து விடைபெற்று திவ்யரதத்திலேறி முன்போ லவே சுபத்திரை ரதத்தைக் கடத்தச்சென்றான். இந்தப்படி போ கும்போது பதாதிகள் யாவரும் இது மிகவும் அன்னியாயம் ஊரி லொருவரு மில்லாதிருக்கிறபோது பெண்ணைத் திருடிக்கொண்டு போகலாமா இப்படிச் செய்வதுதான் இராஜகுமாரனுக்கு லக்ஷண மோ அன்றியும் இந்த சேனாதிபதியிலாகாதவன் ஒருவனைத்தன் சேனையுடனெதிர்த்துப் பிடிக்கமாட்டாமற் போனதென்று கூக்குர லிட்டுக்கொண்டே திரும்பி துவாரகைக்குவந்து சித்தங்கலங்கிச்

சுதர்மையென்னும் சபைக்குச் சமீபத்திற் சென்று அச்சபையின் அதிகாரிக்குத் தெரிவிக்க அந்த அதிகாரியும் மெத்த ஒலிக்க தக்க பேரிகையின் உப்பரிகை மீதேற்றி அடிக்கும்படி உத்திரவு பண்ணினன் ஆபத்துகாலத்துக்கு அடையாளமாகியும் தீவுகளுக்குச் சென்றவர்களுக்குக் கேழ்க்கத் தகுதியாகியு மிராகின்ற அவர்களும் அந்தப்படியே அடிக்க அவ்வோசையைக் கேட்ட மாத்திரத்தில் தீவுகளிலிருந்த யாதவர்கள் யாவரும் மிகவும் கலக்கமுற்று ஒன்றுந் தோன்றுதவர்களாகி எவரெவர் எந்தெந்தகாரியஞ் செய்துக்கொண்டிருந்தார்களோ அவரவர்கள் அந்தந்தக் காரியங்களை அப்படி அப்படி யேவிட்டு ஆசனங்கள் பாத்திரங்கள் வஸ்திரங்கள் ஆபரணங்கள் முதலான சகல வஸ்துக்களையும் போட்டுவிட்டு ஒருவரோடொருவர் பேசாமல் புறப்பட்டு ஒரு நிமைப்பொழுதுக்குள்ளாக சுதர்மை என்னுஞ் சபையை வந்தடைவார்கள் அச்சபைக்குத் தலைவர் யாதவர்கள் முதலானோரையும் நோக்கி அர்ச்சுனன் பெண்ணை யெடுத்துக்கொண்டு போனதும் விபிருதுரத்தி பங்கப்பட்டதும் முதலானசகல செய்திகளையும் தெரிவித்தான்.

அதுகேட்டு யாதவர் யாவரும் அடங்கச் சினங்கொண்டு கண்கள்சிவக்க உதடுகளைக் கடித்து மீசைகள் படபடவென்று துடிக்க ஆசனத்திற் பொருதாமல் எழுந்து சேனாபதியை யழைத்து சீக்கிரம் ரதகஜ துரகபதாதி சேனைகளைச் சித்தப்படுத்துங்க ளென்றுக் கட்டளையிட அந்தப்படியேசேனாதிபதி சொல்வகைச்சேனைகளையுஞ் சித்தப்படுத்தித் தானும் கோலத்துடன் வந்துநின்றன் இப்படிக்கிச் சகல சேனைகளும் வீரர்களுஞ் சூழ்ந்து நிற்கச் சங்குகள் காகளங்கள் பேரிகை ரணபேரிகை முதலான ஓசைகளெழும்பித் திக்குகளைச் செவிடுபடச் செய்யும்போது பலராமர்யாதவ வீரர்களை நோக்கி ஓ வீரர்களே நீங்களென்ன அறியாதவர்கள்போலே குதிக்கின்றீர்கள் இத்தனை ஆர்ப்பாடத்துக்கும் கிருஷ்ணன் சும்மாயிருக்க உங்களுக்கே வந்த யோசனை ஆகையால் இவர்கருத்தறிந்து பின்பு இந்தமுயற்சிகளைச் செய்யவேணும் ஆனபடியினாலே மகாபுத்திவாஞ்சிய கிருஷ்ணன் தன்கருத்தை வெளியிட்டும் அந்தப்படியே நடப்போமென்று பலராமர் சொல்ல யாவருங்கேட்டு நன்று நன்று அந்தப்படியே செய்யவேண்டுமென்று அங்கீகரித்து முன்போல யுத்தசன்னத ஓசையின்றி நிம்மதியாய் ஆசனங்கள் மீது வீற்றிருந்தார்கள் பின்னர் பலதேவர் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைப் பார்த்து தம்பி கிருஷ்ணா மூன்றுகாலமும் அறிந்தவனாகியுமிருக்கின்ற நீ இந்த ஜனங்கள் செய்யும் ஓசையையும் நடந்த காரியத்தையும் அறிந்திருந்தும் என்ன சும்மா கிருக்கினாய் அர்ச்சுனனுக்கு உன்னைப்பற்றி மறியாதை செய்தோமேயன்றி வேறில்லை, அந்த துஷ்டன் நமக்கு மரியாதைசெய்யத் தக்கவனா அவனை கெட்டகினவும் கெட்டநடக்

கையுமுடையவன் குலத்தைக்கெடுக்கப்பிறந்தவன் அதெப்படியெனில் எவனுகிலும் உண்டவீட்டிற்கு இரண்டகம் நினைக்கிறவனுண்டா அவன் நறகுலத்திற் பிறந்தவனுகியிருக்க ஆபத்துக்களி லுபகாரிகளாகிய நமக்கு இப்படிப்பட்ட அபகாரஞ் செய்யலாமா மேலும் இவர்களுக்கும் நமக்கும் முன்னேர்கள் நாள் முதற்கொண்டு சம்பந்தம் நடந்துவருகின்றது அன்னுள்முத லின்னுள்வரைக்கும் இவனைப்போல யாராகிலும் இப்படிப்பட்ட சாகச காரியஞ் செய்திருப்பார்களா இல்லையே அப்படிக்கிருக்க இவனிப்படிச் செய்யலாமா அன்றியும் அந்த துஷ்டன் என்னையும் உன்னையும் மதியாமல் வீட்டுக்குள்ளே புகுந்து திருடனைப்போல பெண்ணை யெடுத்துக்கொண்டு போனதை நாமெப்படி சகித்திருக்கலாம் அந்தப் பஞ்சை மனிதன் என்மானத்தைப் போக்கினுல் நான் பொறுப்பேனே ஆகையால் நான் இப்பொழுதேபோய் இந்தப்பூமியில் கவுரவப்பூண்டை இல்லாமற் செய்துவிடுகிறேன் நீ மாத்திரம் சும்மாயிரு அவன் செய்த அக்கிரமத்தை எள்ளளவும் பொறுக்கமாட்டேனென்று மிகவும் ஆக்குறஷத்துடனே பிரளயகாலமேகம்போல கர்ச்சிக்காகின்ற பலராமரை யாதவீரர்க ளெல்லாம் அனுசரித்து அவர்களும் அப்படிச் செய்வதுதான் நன்றென்று கூடவே இரைந்து பேச அப்பொழுது ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர் யாவரையும் பார்த்துச் சொல்லுகின்றார். ஓ யாதவீரர்களே சற்றே நிதானியுங்கள் எனக்குத்தோன்றினதைச் சொல்லுகிறேன் அதை நீங்கள் கவனித்துகேட்கவேணும் அதென்னவெனில் நானுய் ஒன்றுஞ் சொல்லக் கூடாதென்று இருந்தேன் எங்களண்ணுவே என்னிஷ்டத்தை சொல்லச்சொல்லி நியமித்தபடியினுலே இனி சொல்லத்தடையில்லை கேளுங்கள் ஆதியில் அந்தக் கபடச் சன்னியாசியைக் குறித்து நீங்களெல்லாம் என்னைக் கேட்டபோதே எனக்குச் சந்தேகமாயிருந்தது அதனுலே அச்சன்னியாசியை அந்தபுரத்திலே கொண்டு போய் வைக்கவேண்டாமென்று சொன்னேன் அதை நீங்கள்கேளாமல் உங்களிஷ்டப்படிக்கிச் செய்துப் போட்டீர்கள் அதனுலே இப்போது இவ்வளவு வருத்தம்வந்து சேரிட்டது போனதுபோயிற்று இனிமேல் நடக்கவேண்டிய காரியங்களுக்கு யோசனைசெய்ய வேண்டும் எப்படியும் சுபத்திரை அர்ச்சுனனுக்கு அம்மான்மகள் கலியாணஞ்செய்துக் கொள்ளுவதற்கு முறைதான் அவன்குணம் வித்தை சாமர்த்தியம் முதலானதுகளில் தகுந்தவனே ஆனுல் அவன் மோசமான காரியஞ் செய்ததற்காக நாம்கோபிக்கவேண்டியதாயிருக்கிறது ஆனபோதிலும் பதராதகாரியஞ் சிதராது என்பதுபோல எதையும் நன்முகயோசித்துச் செய்யவேண்டும் இப்படி அர்ச்சுனன்செய்த தகாதகாரியத்தினுலே நமது குலத்திற்குப் பெருமையேயல்லது சிறுமை எவ்வளவுமில்லை, அதெப்படியென்றுல் அர்ச்சுனனே மெத்த பலசாலி அவன் நம்முடனெதிர்த்தேபெண்ணைக்

கொண்டுபோகலாம் அப்படியிருக்க ரகசியமாய்க் கொண்டுபோன திலுலே நாமெல்லாம் மெத்த வீரர்களென்று பெருமையேயாகி றது அன்றியும் நாமெல்லாம் மெத்தவீரர்களென்று பெருமையே யாகிறது அன்றியும் நாமெல்லாம் பணத்திலே மதிப்புவைத்துக் கன்னிகையை விறகப் புகுந்தவர்களென்று அவன் கினைத்து அவ் வளவுபொருள் கொடுக்க சக்தியில்லாதவனுகி க்ஷத்திரிய தருமத் திற் கேற்றபடிக்குக் கன்னிகையை பலவந்தமாய் எடுத்துக்கொ ண்டு போவானுகத் தோன்றுகின்றது அப்படிப்பட்டவன் மீது நாமெல்லாஞ் சேனைகளைக்கூட்டிக்கொண்டுபோய் யுத்தஞ்செய்த போதிலும் அவனை நாம் ஜயிக்கப்போகிறதில்லை இப்போதிருக்கிற படி நாமெல்லா மிருந்தால் அவனுக்கு நாணமும் நமக்கு கவுரவமு மாம் யுத்தத்திற்குப்போய் அபஜயமடைந்து வந்தால் அதைவிட நமக்கு அவமானம் வேறில்லை ஆகையால் போனது போயிற்று நமது பெண் தக்கவிடத்திற் சேர்ந்ததே அன்றி இழிகுலத்திற் சேரவில்லை இதைப்பற்றி நாமெல்லோரும் மெத்த சந்தோஷிக்க வேண்டும் ஆகையால் பெருமையுடனே நாமெல்லோரும் அந்த காரியத்திற்குச் சம்மதித்தவர்போல வெண்ணி நட்டதவேண்டிய வரிசை வித்தாயங்களை நடத்தினால் மெத்த நன்மையாகும் இது தான் எனக்குத் தோற்றுகிற யோசனை உங்களுக்கு யுக்தமாயிருந் தால் அங்கீகாரஞ் செய்யுங்கள் இல்லாவிட்டால் உங்களிஷ்டப்படி நடவுங்களென்று பகவான் னவிலக் கேட்டு பலராமர் முதலாகிய யாதவவீரர்களும் கிருஷ்ணமூர்த்தி சொல்லியது சரிதான் யுக்தியு டன் கூடினதா யிருக்கின்றது யென்றுணர்ந்தும் பேரிகை யறை வித்து யுத்தத்திற்காகவே சித்தப்பட்டார்கள்.

இங்கே யிப்படியிருக்க இந்த ரணபேரிகை சப்தத்தைக் கேட் டவுடன் அங்கே அர்ச்சுனன் கபத்திரையைப் பார்த்து அடிபெண் ணே உனது பக்துக்களெல்லாம் யுத்தத்திற்காகவருகிறதைப்போல் காண்கின்றது யுத்தபேரிகையின் ஓசைகேட்கின்றது ஆகையால் சிக்கிரம் ரதத்தைத் திருப்பு குடியரும் மடையருமாகிய அவர்களை யெல்லாம் அதம்பண்ணிப் போடுகிறேன் மூடர்களாகிய அவர்கள் தங்களுடைய யோக்கியதையையும் எதிரியினுடைய யொக்கியதை யையு மறியாமல் விளக்கைக்கண்ட விட்டிற் பூச்சிபோல ஓடிவரு கிறார்களென்று கோபத்துடனே பேசியதைக் கேட்டு சுபத்திரை மெத்தவும் மனங்கல்ங்கித் தன் கணவன் அடிகளில் விழுந்துதெண் டனிட்டு ஓ ஸ்வாமி என் பிராணநாயகரே நாயகன் சொல்லைமீறி நடப்பவள் விபசாரியாகும் நாயகன் சொல்லுக் கெதிர்த்து பே சுமவள் மூதேவியாகும் நாயகனை அலட்சியமாய்ப் பேசுமவள் கார் த்தபத்திற் கினையாகும் நாயகன் ஒன்றைச்சொன்னல் தானென்று செய்யுமவள் பைசாசமாகும் என்று சுருதிகள் முறையிடுகின்றன.

ஆகிலு மின்னமொரு விசேஷமுளது அதென்னவென்றால் புதல்வனை அன்னையானவள் மெத்தப் பிரியத்துடன்போஷிப்பதுபோல தன் கணவனைப் போஷிப்பது ஒன்று, வீட்டு வெள்ளாட்டியைப் போல தன்கணவனுக்குத் தொண்டுசெய்வது இரண்டு, மெத்தபே ழையாயிருக்கினும் சுசியாசாரத்துடன் மடியுடுத்தி மதத்தையனு சரித்து நெற்றியில் ஸ்ரீசூர்ணமோ அல்லது குங்குமமோ தரித்து நாயகனை வலம்வந்து பணியுமவள் மகாலட்சுமி மூன்று, பூமாதே க்கு நிகரான பொருமையுடையவள் நான்கு, கலவியில் கணவனிஷ் டத்தைப்போல நடப்பவள் ஐந்து, அரசனுக்கு முன்பின்வரும் காரியாகாரியங்களை யெடுத்தோதும் மந்திரியைப்போலத் தன் கணவனுக்கு முன்பின்வருங்காரியா காரியங்களை யோதுமவள் ஆறு, இந்த ஆறு நடவடிக்கையுள்ளவள் மகாபதிவிரதை சற்பில் மிருத்தவளென்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேனுகை யால் மேற்சொன்ன ஆறுகுணங்களில் ஒன்றுகிய ஆராவதாகும் மந்திரியைப்போன்ற புத்திகூர்மையுடன தங்களுக்கு சில மொழி கள் கூறுகின்றேன். அதை செவிசாத்திக்கேட்டுத் தங்கள் மனதிற் குப் பிரியமாக விருந்தால் அந்தப்படி நடத்தும்படி அடியாளுக் குக் கட்டளையிடும் பிரியமில்லாவிட்டால் இது சரியல்லவென்றும் அப்படிக்கிச் செய்வதால் நன்றல்லவென்றும் நீக்கிவிடும் என்று வினயமாகச் சொல்லி பணிந்து தன் கணவனுகிய அர்ச்சுனனைநோ க்கிச் சொல்லுகின்றுள். என்னுயிருக் குயிராகிய மணவாளரே! இப்போதென்மீது தயைவைத்து அடியாள் சொற்படி நடக்கவே ணும் அதென்னவென்றால் தேவரீர் யாதவர்களை சங்கரிக்கப் புறப் படுவீரேயாகில் அந்த யாதவ குலத்துக்குச் சுபத்திரை மிருகயு தேவதை யென்று உலகிலுள்ள யாவருஞ் சொல்ல அடியாளுக்கு மெத்த நிந்தைவந்து சம்பவிக்கும் இதிற் சிறிதேனுஞ் சந்தேக மில்லை அப்படி குலத்துக்கெல்லாம் நாசகாரியாகி நிந்தைக்குட்ப ட்டு இவ்வுலகத்தில் யான் உயிர்பெற்றிருப்பதைப் பார்க்கிலும் உயிர்துறப்பதே மேலான கீர்த்தி பிறந்தவீட்டிற்கும் புகுந்தவீட் டிற்கும் மெத்தப் பிரியமுடையவளாகி இவ்வுலகத்திலும் பெண் கள் உலகத்தினில் தேடக்கிடையாது என்ற நற்பேரை வகித்திருப் பவளன்றே பெண் அம்படிக்க நற்பேரடையாமல் பிறந்த வீட்டா ருக்கும் புகுந்த வீட்டாருக்கும் பெருத்த சண்டை விளைவிக்கும் படியானவள் பெண்ணு அல்ல அவளைப்பேயென்றே சொல்லத்த கும், ஆகையால், தங்கள் மனதைப் பெரிதுபண்ணி இந்திரப்பிரஸ் தத்திற்கே ராதத்தைச் செலுத்தும்படித் தங்கள் வாக்கினுல் கட்டளை யிடும்படி வேண்டிக்கொள்ளுகிறே னென்று சுபத்திரையின் நீதிவசன சற்புடமைக்கி மெத்தவுங் களிப்படைந்து மனமிதங்கி அவளைக்கட்டி முத்தமிட்டு பயப்படாதே அடி பின்னலைப்போன்ற இடையையுடைய மாதுசிரோமணியே நீகூறிய வசனங்களைக்

கார்த்த இன்பத்தை யுண்டாக்கினது மன்றி இப்படி சமயத்துக் குத்தக்க யுக்தியெடுத்துச் சொல்லப்பட்ட மங்கைகளுன்னைப்போ லிவ்வுலகத்தில் யாரையுங் கண்டதுமில்லை கதையிலுங் கேட்டது மில்லை இப்படிப்பட்ட புத்தி கூர்மையுடைய நின்சொல்லுக் கிரண் டுண்டோ என்று பலவாறு தன் மனைவியாகிய சுபத்திரையைப் புகழ்ந்து கொண்டாடி மறுபடியும் ரதத்தைத் தன் பட்டணத்துக் கே நடத்தும்படிக் கட்டளையிட்டான் அதற்குச் சுபத்திரை என்று மில்லாத பேரானந்த மடைந்து தன் கணவன் கட்டளையின்படி இந் திரப் பிரஸ்தத்தைப் பார்க்க விரைந்து ரதத்தை நடத்தினள்.

இங்கே யாதவவீரர்களும் புறப்பட்டுப் பட்டணத்தைக்கடந்து வரும்போது மெத்தையிலும் மேடையிலும் பிரகாரங்களிலும்கோ புரங்களிலும் சர்ப்பங்கள்போல் விழுந்துகிடக்கிற அர்ச்சுனனுடை ய அம்புகளைக்கண்டு ஆச்சரியமடைந்து கிருஷ்ணமூர்த்திசொல்லிய வார்த்தை மெய்தானென்று எண்ணிக்கொண்டு ரைவதகிரிக் கரு கினில் வந்து அங்கிருக்கிற சேனாபதியாகிய விபிருது வென்கிறவன் தான் அர்ச்சுனனுடன் யுத்தஞ்செய்து அபஜயமடைந்ததையும் அர்ச்சுனனுடைய பராக்கிரமத்தையுஞ் சொல்லக்கேட்டு ஆகிலும் அர்ச்சுனனை விடக்கூடாது அவனை மடக்கி ஒருகை பார்த்துதான் விடவேண்டுமெனக் கருதிச் சிறததூரஞ்சென்று பார்த்தும் அர்ச் சுனன் மெத்ததூரம் போய்விட்டா னென்றும் அவனுடன் யுத்தஞ் செய்ய வேண்டுமென்று ஆசை நிராசையாகித் திரும்பித்துவாரகா புரிக்கு வந்து சேர்ந்தார்கள். அர்ச்சுனனும் அனேக தீர்த்தங்க ளையும் வெகு மலைகளையும் பட்டணங்களையும் குக்கிராமங்களையும் கடந்து தன் பட்டணமாகிய இந்திரப் பிரஸ்தத்திற்கு அருகிலிருக் கும் ஓர் சோலையின் இடையிலிருக்கும் இடச்சேரியி லிரவைப் போ ஜன முதலானதைகளுஞ் செய்தபின்பு சுபத்திரையை நோக்கி அடி பெண்ணே எதுகுலத்து மின்னாரே இனிநாம் சேரவேண்டியது இந்திரப்பிரஸ்த புரிதான் ஆதலால் நான் சொல்லும் வசனத்தை நீ அங்கீகரிக்கவேணும் அதென்னவென்றால் நீ இடைச்சிபோல் வேடம் புனைந்துக்கொண்டு நமது நகரத்துக்குச் செல்லவேண்டும் ஏனென்றால் நீ என்னுடன் கூட உண்மையான ரூபத்துடன் வரு வாயாகில் ஒருவேளை துரோபதை யுன்னைக்கண்டு மனம்நொந்து ஏதாகிலுங் கடுமையான வார்த்தைகள் சொல்லுவான். ஆகையால் நீ தனித்து வேறு ரூபத்துடன் சென்று அவளை வணங்குவையே யானால் நல்லவார்த்தை சொல்லுவாள் அவள் முதலிற்சொன்ன வார்த்தைக்கு வேறாக மடக்கமாட்டாள் என்று சொல்லக்கேட்டு சுபத்திரைத. தன்கணவனை வணங்கி ஓ பிராணநாயகரே உம்மு டையசொல்லுக் கிரண்டுண்டோ தாங்களெப்படி நேமித்தாலும் அந்தப்படி நடக்கச் சித்தமாயிருக்கின்றேனென அதற்கு அர்ச்சு

னன் மெத்த சந்தோஷித்து அவ்விடச்சேரியிலிருக்கும் இடையரை யழைத்து இடப்பெண்கள் யாவரும் அச்சுபத்திரையுடன் நமது நகரத்திற்குச் செல்லவேண்டுமென்று கட்டளையிட அவ்விடையர் கள் யாவரும் ஒருக்கணநேரத்திற்குள் தங்கள் தங்கள் ஸ்திரீகளைச் சித்தப்படுத்தினார்கள் பின்பு அர்ச்சுனன் தன் மனைவியாகிய சுபத் திரைக்குத்தானே ஆய்ச்சிவேடம் தரிப்பித்து அவ்வுருவத்திலும் மெத்த அழகுடன் விளசம்பொருந்திவிளங்கும் அவளைகட்டியணை த்து முத்தமிட்டு ஆய்ச்சியருடன் கூட்டி அனுப்பிவைத்தான் அவ ளுமவ்வுருவத்துடன் இந்திரப் பிரஸ்தம் அடைந்துஅரண்மனைக்குட் புகுந்துத் தன் அத்தையாகிய குந்திதேவியை நமஸ்காரஞ்செய்து அவளாலே ஆசி கூறப்பட்டு பின்பு துரோபதியின் பாதங்களில் விழுந்து தெண்டனிட்டு நானுனது பணிவிடை செய்பவளென்றுள் அப்போ தந்தப் பாஞ்சாலி யாதவப் பெண்ணினுடைய ரூபலாவ ணணியத்தைக் கண்டு வியப்படைந்து சந்தோஷத்துடனே அவ ளைப்பார்த்து அடிபெண்ணே நீ உனக்குத் தகுந்த உத்தமப் புரு ஷனுடன்கூடி நன்மக்களைப்பெற்று சக்களத்தியின் விரோதமின்றி வாழக்கடவாயென்று ஆசிகூறக்கேட்டு சுபத்திரையானவள் ஓ! அம்மணி! நாங்கள் சொல்லிய வாக்குச் சரியாயிருக்க வேணுமென் றுசொல்லப் பாஞ்சாலி அப்படியே யாகட்டுமென்று சுபத்திரை யை வாரியெடுத்துத் தன் மடிமீது உட்காரவைத்துக்கொண்டு உற் றுப்பார்த்து இவள் சுபத்திரையென் றுர்ந்து மனதிற் கோப மின்றி ஆலிங்கனஞ்செய்து மேகவண்ணனை நினைத்து நல்லகாரி யஞ் செய்தார் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி யென்று அவரை மிகவுங்கொ ண்டாடிக்கொண் டிருக்கையில் அர்ச்சுனனுனவன் அந்த இட்டச் சேரிவிட்டுப் புறப்பட்டுப் பட்டணத்திற்குள் பிரவேசித்திருக்குந் தருணத்தில் யாதவசேனைகளும் கடல்போ லிறைந்துக்கொண்டு பின்னு வந்துவிட்டார்கள் அர்ச்சுனனும் அச்சேனைகளைக் கண்டு அதனுடன் கூடிக்கொண்டு தன் பட்டணத்தைப் பாராத்துக்கோண் டே வருகையில் அப்பட்டணவாசிகள் அர்ச்சுனனைக்கண்டு நெடுநா ளாயிற்று இன்று நாமெல்லாங்கண்டு களிக்கும்படி நேரிட்டதெ ன்று சந்தோஷிக்க அர்ச்சுனனும் அரண்மனைவாசலில் தேர்விட் டிறங்கி புரோகிதராகிய தவுமியரையும் அண்ணனுகிய தருமபுத்தி ரர் பீமசேனனையும் அன்னையாகிய குந்தியையும் இணங்கி வணங்கி தெண்டனிட்டு தம்பியர்களாகிய நகுல சகாதேவாகளாலே நமஸ் கரிக்கப்பட்டு அவர்களுக்கு ஆசிகூறிப் பின்பு தன் மனைவியாகிய சுபத்திரைக்கு ஸ்ரீதனமாக வந்த யானை குதிரை ஒட்டை முதலா னவைகளையும் மஹாராஜாவாகிய தருமநந்தனரிடத்தில் ஒப்புவி த்து பிருந்தான். அப்போது யாதவீரர்கள் மஹாராஜாவுக்குச் செ லுத்தவேண்டிய மரியாதைகளைச் செலுத்திவிட்டுப் பின் அவரும் இவர்களுக்குத் தக்கபடி சன்மானங்களைச் செலுத்திவிட்டுப் பின்

அவரும் இவர்களுக்குத் தக்கபடி சன்மானங்களைச் செய்துத் தக்க ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்துத் தானும் தன் தம்பிமார்களுட னிருந்து சுபத்திரையைத் தன் மனைக்குவந்த லட்சுமிதேவியேயாமென் றறுதி மெத்த வானந்தமுற்றிருந்தார்.

இவ்வண்ணமாக அர்ச்சுனனும் சுபத்திரையை எடுத்துக் கொண்டு யாதவசேனைகளை ஜெயித்துத் தன்னரண்மனைவந்து சேர அங்கே யாதவர்களெல்லோரும் அர்ச்சுனன் சுபத்திரையை எடுத் துக் கொண்டு போனதற்கு இந்த கிருஷ்ணனே உளவாளியும் காரணமாகியு மிருந்தான் இல்லாவிடில் நமது பட்டணத்திற்குள் வந்து சுபத்திரையை எடுத்துக்கொண்டு போகும்படியான தீரனும் வீரனும் இவ்வுலகத்திலுண்டோ உளவில்லாமல் கோட்டை யழி யுமோ வென்று ஸ்ரீகிருஷ்ணமூர்த்தியை நிந்தனைசெய்தார்கள். இப் படிச் சொல்லும்போது ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி அவர்களைநோக்கி ஞானந்தப்படி செய்யவில்லை யென்றால் என்வார்த்தை புங்களுக்கு நம்பிக்கைப் படாது ஆம் ஆம் நானே அந்தப்படி செய்வித்தவ னென்று அவர்களுக்குச் சொல்லித் தமயனிய பலராமரிடம்வந்து ஓ அண்ணா யாதவவீரர்கள் யாவரும் அர்ச்சுனன் சுபத்திரையை எடுத்துக்கொண்டுபோனதற்கு உளவும் காரணமும் யானே என்று எண்பேரில் அபவாதஞ் சொல்லுகிறார்கள் சொல்லட்டும் இனி யார்தான் செய்யவேண்டிய தென்னகாரியம் மிஞ்சிப்போயிற்று ஆதலால் நான் பாண்டவர்களுடைய பட்டணத்திற்குப்போய் சுபத் திரையின் பொருட்டு நடத்த வேண்டிய வரிசைவித்தாயங்களை நட ப்பித்து வருகிறேனென்று விடைகேட்க அதற்கவர் தம்பி கிருஷ்ண னெனக்கும் அதுகடமையாகையால் நானும் வருகிறேன் போவோ மென்று இருவருஞ்சென்று உக்கிரசேனன் முதலான யாதவ வீர ர்களுடன் சொல்லிவிடைபெற்றுக்கொண்டு நால்வகைச் சேனைகளை யும் ஆயுத்தப்படுத்திப் பல ஆபரண முதலான சீதனங்களுக்குறிய வஸ்துக்களை யெடுத்துக்கொண்டு சகல வாத்தியங்களும் முழங்க வெளிப்படுகையில் அப்போது சில அடையாளங்களிலையும் சுபத்திரையின் தோழிகள் சொன்ன சூசனையினாலும் இந்திரன் முத லானவர்கள் வந்து அர்ச்சுனனுக்கும் சுபத்திரைக்கும் விவாகம் நடப்பித்ததாகத் தெரிந்து யாதவர்களெல்லாம் மெத்த சந்தோஷி த்து அக்ரூரன் கிருதவர்மன் உத்தவர் சத்தியகன் சாத்தகி முதலான யாதவீரர்களெல்லாம் இந்திரப்பிரஸ்த நகரத்தை நோக்கிப் புறப் பட்டார்கள். இதில் பலராம கிருஷ்ணர்களும் யாதவர்களுடன் சேர்ந்து இந்திரப் பிரஸ்தத்திற்குப்போய்சேர்ந்தார்கள் இப்படி இவர்கள் வருகிற சேதியை தருமபுத்திர மகாராஜன்கேட்டு விரை ந்து புரோகிதப் பிராமணர்கள் முதலான பேர்களுடன் கிருஷ் ணனை எதிர்கொள்ள நகுலசகாதேவர்களை யனுப்பித் தானும் பீம

னுடனே பலர்மரை எதிர்க்கொண்டார். இவ்வண்ணம் பாண்ட வர்கள் எதிர்க்கொள்ள ஒருவரையொருவர் கட்டித்தழுவி பெரிய வர்களை வணங்கி சிறியவர்களை ஆசீர்வதித்து க்ஷேமங்களைவிசாரி த்து அழைத்துக் கொண்டு பட்டணஞ்சேர்ந்து அரண்மனையை படைந்து தருமபுத்திரர் அவரவர்களுக்குத் தக்கபடி விருந்து செய்து உபசரித்துக் கொண்டிருக்கிற குந்திதேவியும் திரோபதை யும் பலராம கிருஷ்ணர்கள் வந்த விஷயத்தில் மெத்த சந்தோஷ மடைந்திருந்தார்கள்.

அப்போது வசுதேவரும் தேவகியும் புதல்வியாகிய சுபத்திரை யைக்கண்டு பரமானந்தமடைந்து சமீபத்திலழைத்து உட்காரவை த்துக்கொண்டு க்ஷேமலாபங்களை விசாரித்துப் பலவாறு புகழ்ந் துக்கொண்டாடினார்கள் அதுகண்டு பலராம கிருஷ்ணரும் தங் கையை உசாவி நவரத்தினபரணங்களும்விசித்திரமாக ஆடைகளும் அனேக பொற்பாத்திரங்களும் யானைகள் குதிரைகள் ஒட்டங்கள் ரதங்கள் முத்துச் சிவிகைகள் இன்னும் பலவித சீதனங்கள் கொடு த்தார் மைத்துனனுகிய அர்ச்சுனனுக்கு நவரத்தினங்கள்ளிழைத்த பொற் பீடம் ஒன்று கொடுத்தார் இப்படி யெல்லா வரிசைகளும் அபாரமாகக் கொடுத்துத் தங்கையைக்கட்டியணைத்து முத்தமிட்டு அழைத்துக்கொண்டுபோய் திரோபதியினிடஞ் சேர்த்து அம்மா பாஞ்சாலி இப்பெண் உன்னுடைய அடைக்கலம் இம்மங்கையை நீயேகாப்பாற்றவேணுமென்று சொல்லி ஒப்பிவித்து சகலயாதவர் களுடன் தாங்களும் பாண்டவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு துவாரகா நகரம்போய் சேர்ந்தார்கள் பின்பு அர்ச்சுனன் சுபத்தி ரையுடன் உடலு முயிர்போலவும், மலரு மணம்போலவும், கரும் புஞ் சாரமும்போலவும், உடலிரண்டு மனமொன்றுபோல, ஒரு வரைவிட்டொருவர் பிரியாமல் சரசசல்லாப விநோதமாக போக மென்கிற அமுதக்கடலிலாழ்ந்து பேரின்பமும் இதற்கு மிகராகா தென்னும்படி பலவித சிங்கார விநோதங்களை யனுபவித்துக்கொ ண்டிருந்தான். சுபத்திரையும் தன்கணவனுகிய அர்ச்சுனன் சொற் களுக்கிசைந்து அவனிஷ்டப்படியே நடந்துகொண்டிருக்கிற காலில் சுபத்திரை கருப்பமாயினள். அப்போது அம்மங்கை மூன்னிருந்த அழகிலும் அதிகவொளியடைந்திருக்க அர்ச்சுனன் கண்டு மெத்த சந்தோஷமடைந்திருந்தான் சுபத்திரையோ பத்துமாதமும்பூரண மானபின்பு இந்திராணி ஜயந்தனைப்பெற்றதுபோல மகாபல பராக் கிரமசாலியும் மெத்தப் பிரகாசமும் பொருந்திய ஆண் குழந்தை யைப் பெற்றாள். அர்ச்சுனன் அக்குழந்தையைக் கண்டு தனக்கும் அதிரூப பலங்களுமுடைய புத்திரன் பிறந்தானென்று வியந்து மிகவுஞ் சந்தோஷத்தினாலே சாதகருமஞ் செய்வித்துப் பதினாயிரம் தன்றுகளுடன் இளங்கும் உத்தம கோக்யினை தானஞ்செய்து

யாவரும் அதிசயிக்கத் தக்கதா பூதானம் வஸ்திரதானம் சொர்ன தான முதலாகிய பற்பல தானங்களும் அபாரமாகவளித்துப் பன் னிரண்டாநாள் புரோகிததர் முதலான பெரியோர்களேவரவழைத் துக் குழைந்தைகளே அவர்களிட மளிக்க அவர்களு மக்குழைந்தை யைப் பார்த்து இவனுக்கு அபிமன்னியுவென்று பெயரிடவேண்டும் அதென்னவெனில் அபியென்றால் ஒன்றுக்கும் பயப்படமாட்டான் மன்னியுவென்றால் சத்துருக்கள் விஷயத்தில் மகா கோபமுடைய வன் ஆகையால் இக்குழந்தை மேற்சொன்ன குணங்களுக்கொத் திருப்பதனால் இவனுக்கு இப்பெயரேதகு என்று ஸுக்ஷத்திரத்திற் ணங்க அப்பெயரிட்டு ஆசிகூற தருமகந்தனர் களித்து வந்திருக் கும் பிராமணர் புரோகிதர் பெரியோர்கள் முதலானவர்களுக்கும் தக்கபடி உபசரித்து சன்மானங்கொடுத்து அவரவரிடத்திற் கேகு ம்படி விடையளித்து அவர்கள் யாவரும் போனபிறகு தன்பந்து மித்திரர் புத்திரர்களுடன் புசித்து அபிமன்னியுவுக்குக் காப்பிட்டு தொட்டிலிட்டுக் சீராட்டித் தாலாட்டி மெத்த அன்புடனே நாளு க்கு நாள் செல்வமாக வளர்த்துவர அவனும் சுக்கிலபக்ஷத்து சந் திரன்போல தினே தினே வளர்ந்து ஐந்துவயதில் உபனயன முத லான தகளுஞ் செய்யப்பட்டுத் தக்கவயதில் தநுர்வித்தை யானேபே ற்றங் குதிரையேற்ற முதலான வித்தைகளே கற்பித்து சுத்தவீரனு கச் செய்தார்கள். அபிமன்னியும் பாண்டவர்களுக்கு மேலான வித்தை புத்தி சகலத்திலுஞ் தேர்ந்து ஒருவருக்கும் நிகரற்றவனகி யிருந்தான்.

இப்படிக்கிருக்கிறபோது பாண்டவர்கள் வெகு சந்தோஷத் துடன் இனிது வாழ்ந்துக்கொண்டிருப்பதைக் கண்டு துரியோத னன் மனம் பொராமல் பொராமையுடையவனகி அவர்கள் பூமி முதலாகியதையும் தானெருவனே ஆண்டு சுகிக்கவேண்டுமென்ற எண்ணங்கொண்டு சகுனிமாமனுல் யுக்திசெய்து பாண்டவர்களே வரவழைத்துச் சூதாடிப் பாண்டவர்கள் சம்பத்துமுதலான தகளே யும் கெலித்து அவர்களேப் பராரியாகச் செய்துப் பனிரெண்டுவரு டம் காட்டிலும் ஒருவருடம் அக்கியாதவாசமுஞ் செய்துவந்தால் உங்கள் நாட்டைத் தருவேனென்று சொல்லப் பாண்டவர்களும் அந்தப்படி சம்மதித்துக் காட்டைநாடிச் செல்லுகையில் அர்ச்சுன னுனவன் தன் மனைவியாகிய சுபத்திரையையும் புதல்வன் அபிமன் னியுவையும் நோக்கி நீங்களிருவரும் எங்கள் சிறியதந்தையாகிய விதுரர் வீட்டினிலிருங்கள் நாங்கள் காட்டிற்குச்சென்று பனிரெ ண்டுவருடங் கடந்து வந்து உங்களே அழைப்பித்துக் கொள்ளுகி றேனென்று சொல்லக்கேட்டு சுபத்திரை துக்கசாகரத்தில் மூழ்கின வளாகி ஓ என் பிராணபதியே உலகத்தில் கணவனேப் பிரிந்தும் தனித்து யிருக்கும் மங்கைகளுமுண்டோ யாரியாளென்பது

அரசர்பெண்ணுகும் பாதியாளாகும் இப்படிப் பாதியாளாகிய அடியாளை இங்கு தனியே விடுத்துத் தாங்கள் காட்டிற்சென்று காய்கிழங்குகளைத் தின்று நல்லபோஜனம் படுக்கை முதலானது மின்றிக் கஷ்டப்பட்டுக்கொண்டு விசனமடைந்திருக்க அடியாள் நாட்டினில் நல்லபோஜனம் ஆடையாபரண முதலானதுகளையுந் தரித்தும் தின்றும் சுகமடைந்துக்கொண்டிருப்பது நீதியோ இப் படிக்கிருப்பது குலஸ்திரீகளுக்கு தருமமாகுமோ ஆகாது ஆகை யால் தயவுசெய்து அடியாளையும் தங்களுடன் அழைத்துப்போக மனமிசையவேணுமென்றுக் கண்களில்தாரைதாரையாக நீரொழுக விட்டுக்கொண்டும் கணவன் பிரிவாற்றுமையால் பூமிமீதுவிழுந்து மெய்சோர்ந்தனள் அதைக்கண்டு அர்ச்சுனன் அவளை யெடுத்து உபசரித்து மூர்ச்சையைப்போக்கி அடிபெண்ணே நீ பதிவாக்கியங் கடக்காத சதியாளுய் என் வாக்கை மறுக்காமல் மறுத்தோர் மொ ழியும் விள்ளாமல் என்சிறிய தந்தையின்பாலிருமென்று அதிவேக மாய் நடந்து தன் தமையர் தம்பியருடன் சேர்ந்து நாட்டைவிட் டுக் காட்டையடைந்தனன் இங்கே சுபத்திரை கணவன் தன்னைவிட் டுப்பிரிந்து போயினதற்காக விசனமுறுமல் அன்றுதொடங்கித் தன் பதியாகிய அர்ச்சுனன் திருவடிகளையே துதிசெய்துக்கொண் டிருக்கையில் துரியோதனன் சகுனியை அழைத்து ஓ மாமா பாண்டவர்களுக்கு சொன்ன தவணைகடந்துவிட்டபடியால் அவர் கள் நாட்டைகொடுக்கும்படி கேட்கவருவார்களோ லிருக்கிறது மகாதுஷ்டர்களாகிய அவர்களுக்கு அண்ட இடமில்லாமற் செய்ய வேண்டும் அதற்குத்தக்க யோசனை செய்யுமென்று வேண்டச் சகுனி யோசனைசெய்து சொல்லுகிறான் ஓ வணங்காமுடிமன்னனே நான் சொல்வதைப்போல நீ நடப்பாயாகில் முழுநாடும் நீ யாளும் படியாகச் செய்வேன் அதென்னவெனில் பலராமருக்கு சசிரேகை யென்றொரு பெண்ணிருக்கிறது அப்பெண்ணை யுனது குமாரனுக்கு லக்குமணனுக்குப் பேசி விவாகஞ்செய்வித்தால் பலராமர் நமது வசமாகி விடுவார் அப்போது கண்ணனும் எளிதில் நமக்கு வழி படுவான் பின்பு பாண்டவர்களை வெகு லேசில் வெல்லலாமென்று சொல்லக்கேட்டு துரியோதனன் களிசாகரத்தில் மூழ்கினவனுகி உடனே சகுனியைப் பெண்கேட்கும்படி துவாரகைக்கு அனுபபி னன் சகுனியும் ரதமேறி அனேக மேளவாத்தியங்கள் முழங்க நால் வகைச் சேனைகளுஞ்சூழச் சென்று துவாரகைக்கு அருகிலிருக்கும் ரைவதகிரிச் சோலையிலிறங்கித் தன் வரவைத் தூதுவர்களால் பல ராமருக்குத் தெரியப்படுத்தும்படியனுப்ப அத்தூதர்களுஞ்செ ன்று பலராமரைக் கண்டு சகுனிராஜன் வந்திருப்பதை தெரிவித் தார்கள். உடனே பலராமரும் சகல சேனைகளுஞ்சூழப் பலவாத் தியங்கள் முழங்கப் புறப்பட்டுவந்து சகுனியைக்கண்டு ஒருவரை யொருவர் கட்டியாலிங்கனஞ்செய்து இனியில்லாதக் களிப்படை

ந்து பலராமர் சகுனியை அழைத்துக்கொண்டு துவாரகையை யடைந்து தக்க விடுதியிலிருக்கச்செய்து உபசரித்தார். சனியு பலராமர் செய்த உபசாரத்தைக் கைக்கொண்டு புசித்துத் தாம்பூல சந்தனாதி புஷ்ப்பங்களோத தரித்துப் பலராமருடைய சபைக்குச் சென்றுன் அதைக்கண்டு பலராமர் சகுனியைஅழைத்து ஆசனத்தி லிருக்கச்செய்து ஓ சகுனிராஜனே துரியோதனாதிகளும் மைற்று முள்ள பெரியோர்களுஞ் சுகமாவென்று க்ஷேமத்தை விசாரித்து என்றுமே வராத நீ இன்று இந்த துவாரகைக்கு வந்தது மெத்த ஆச்சரியப்படத் தக்கதாக விருக்கின்றது ஆகிலும் நீ மெத்தப் பிர யாசை எடுத்துக்கொண்டுவந்த காரணமென்னமோ அதைத் தெரி யப்படுத்தவேணுமென்று வேண்டச் சகுனிப் புன்சிறிப்படைந்துச் சொல்லுகிறுன். கேளும் பலராமச் சக்கிரவர்த்தியே வணங்கா முடிதரித்த சுயோதனன் புதல்வனுகிய லக்குமணனுக்குப் பெண் வேண்டி நகரங்கள்தோருஞ் சென்று பார்த்துக்கொண்டே வரு கையில் நெந்தப்பெண்ணும் என்மனதுக்குச் சம்மதிப்படாமலிருக்கி ன்றது ஏனெனில் ஒன்று குருடும் ஒன்று செவிடும் ஒன்று மொண் டியும் ஒன்று மூடமும் இப்படி அவயவ பின்னமாக விருப்பதால் என் மதிக்குச் சம்மதியில்லாமல் புறப்பட்டு வருகிறபோது உம் மூடைய கியாபகம் வந்தபடியாலும் அன்றியும் யாதாமொரு கால த்தில் தாங்கள் என்னைக்கண்டு எல்லாதேசங்களுக்குஞ்சென்று பெ ண்பார்த்த நீ எனக்கேன் தெரியப்படுத்தவில்லை தெரிவிக்காவிட்டா லும் என்னுடைய துவாரகை நகரத்திற்கேன் வரவில்லையென்று கேட்டால் பதில் சொல்லும்படி நேரிடும் என்று கருதி மூன்ஜாக் கிரதையா யுமது பட்டணத்தை நாடிவந்தேனென்று சொல்லி ராஜகன்னிகைகளின் பொட்டகிராப் படங்களையெல்லா மெடுத்து ஒவ்வொன்றுகக் காட்டினுன். அதைக்கண்டு பலராமர் அருவருப் படைந்துத் தன் புதல்வியாகிய சசிரேகையின் பொட்டகிராப் படத்தை எடுத்துவரச்சொல்லி அப்படத்தைச் சகுனிக்கிக் காட்டி னுன். அப்படத்தைச் சகுனிகண்டு பேரானந்த மடைந்தவனைப் போல அபிநயித்து பலராமரைநோக்கிச் சொல்லத்தொடங்கினுன்.

ஓ பலராமச் சக்கரவர்த்தியே உலகத்திலுள்ள ராஜகன்னிகை களெல்லாம் இராஜகன்னிகைகளாவரோ இக்கன்னிகையை இராஜ கன்னிகை என்றே சொல்லத்தகும் ஏனென்றுல் சாமுத்திரிகா லட் சணத்திற் கிணங்கி சகலசுந்திரமும் அமைந்திருப்பதினுலே இக்கன் னிகையை இராஜகன்னிகையென்றே சொல்லத்தகும் என்று பல வாறு புகழ்ந்து இத்தனை பொட்டகிராப்படங்களிலமைந்தக் கன் னிகைகளைத் தவிர்த்து இப்படத்தின் லமைத்த இக்கன்னிகைலக்கு மணனுக்குத் தகுந்தவளென்று என் மதிக்கிச் சம்மதியாயிருக்கிற படியால் தாங்கள் தயவுசெய்து லக்குமணனுகு இக்கன்னிகையை

விவாகஞ்செய்விக்கும்படி இசைவீரேயாகில் மெத்த உத்தமமாயி
ருக்குமென்று சொல்லக்கேட்டு பலராமர் ஓ சகுனிராஜனே இக்
கன்னிகையை முன்னமே என்தங்கைப் புதல்வனுகிய அபிமன்னியு
வுக்குக் கொடுக்குறேனென்று வாக்களித்துவிட்டேன் ஆகையால்
அந்த சொல்லைத்தவரி லக்குமணனுக்குக் கொடுப்பேனுகில் உலகத்
தார் சொற்சோர்வு பட்டானென்றும் சொந்த மருமகனைப் பாரா
மல் அன்னியருக்குத் தன் கன்னிகையைக் கொடுத்தானென்றும்
என்னை இழிவாகப்பேசுவார்கள் அப்படி யாவரும் என்னைப் பழிக்
கும்படியாக னிவ்வுலகினில் உயிர்பெற்று வாழ்வதைத் பார்க்கிலும்
இறப்பதுமேலான கீர்த்தியைத் தரும் ஆகையால் இந்த விபகாரத்
தைவிட்டு வேறெந்த விபகாரமான போதிலும் யானுடன்படுவேன்
என்று திடமாகச்சொல்லிய பலராமரை நோக்கிச் சகுனி பின்னுஞ்
சொல்லுகின்றான். கேளும் பலராம சக்கரவர்த்தியே பாண்டவர்
களில் நடுப்பிறந்தோனுகிய அர்ச்சுனன் புதல்வன் அபிமன்னியுவுக்
கே நின்புதல்வியைக் கொடுத்து மணமுடிக்க முயன்றிருக்கின்றீர்
கள். அப்பாண்டவர்கள் உப்புசட்டி வாவோடுஞ் சொக்கட்டா
ஈடித் தோற்றுக் கட்டத்துணியும் புசிக்க அன்னமுமில்லாமல்
காடேகியாய்ப் போயினர்கள் துரியோதனனே சகல சம்பத்தி
னுங் குறைவின்றிக் குபேரனைப்போல அஸ்தினபுரத்தை யாண்டுக்
கொண்டிருக்கிறான். ஆதலால் துரியோதனன் புதல்வனுக்கு நின்
கன்னிகையைக்கொடுத்துக் சுகவாழ்விலிருப்பதை நின் கண்ணுரக்
கண்டு களிப்பதை விடுத்துக் கஞ்சிக்குந் துணிக்குங் கதியற்றவன
வாசஞ்செய்து காய் கனி கிழங்குகளைத்தின்று வயிறுவளர்ப்பவர்
க்கு நின் கன்னிகையைக் கொடுத்தால் அக்கன்னிகையும் அக்கிழ
ங்கு கனிகளைத்தானே புசித்து அவர்களுடன் காடேகியாய் திரி
கிறதை நீர்கண்டால் அப்போதுமது மனதுக்கு எத்தனை கஷ்ட
மூண்டாகும் அன்றியும் உமது தங்கை சுபத்திரையை அர்ச்சுன
னுக்குக் கொடுத்து விவாகஞ்செய்வித்தீர் அந்த சுபத்திரை இப்
போது வயிற்றுசோத்துக்கும் இடைக்கி துணிக்கும் விதுரன் வீட்
டில் வேலைக்காரியாகி யிருக்கின்றனள் இதையெல்லா மூன்பின்
யோசியாமல் சொற்சோர்வு அடையமாட்டே னென்பது தகுதி
யோ உலகத்தினிலொவ்வொருவரும் சுகத்தையடையக் கோரு
வார்களே அன்றி உம்மைப்போல விளக்கைப் பிடித்துக்கொண்டு
கிணற்றிலே விழுவாருமுண்டோ பாண்டவர்களுக்கிருக்கும் பூமி
முதலாகியதும் சூதாடித் தோற்றுப் பரதேசிகளாகினர்களென்று
யான் பலவாறு அவர்களுடைய ஸ்திதியைப் பன்னிப் பன்னிச்
சொல்லியும் முன்பின்வருங் குணகுணங்களை யுணராமல் பிடிவாதம்
பேசி சொன்ன விக்கிரகத்தைபோன்ற உத்தம கன்னிகையை
மனமாரக் கிணற்றிற்றள்ள முயன்றிருக்கின்றீரென்று நவின்ற சகு
னியின்மொழிகளைக் கேட்டு (கலைப்பார் கலைத்தக்கால் கல்லும்

கறையு) மென்று பழமொழிக்கிணங்கப் பலராமர் மனங்கலங்கித் திடீரென்று எழுந்து அந்தப்புரத்திற்குச் சென்றுத் தன் மனைவியாகிய ரேவதியை யழைத்துச் சகுனிவந்ததுமுதல் நடந்தவைகளெல்லாஞ்சொல்லி அவன்மனதையு மாறுபடச்செய்து சுயோதனன் புதல்விக்கே தங்கள் புதல்வியை கொடுப்பதுநன்றென்றுசித்தித் திடஞ் செய்துக்கொண்டு சபைக்குவந்து கிருஷ்ணமூர்த்தியை அழைத்துவருமாறுபடி தூதர்களை யனுப்பினர். அதுகண்டு சகுனி ஓஹோ கிருஷ்ணன்வந்தால் முடிவாயிருக்கும் இச்சுபகாரியத்துக்குத் தடைவந்து நேரிடுமென்று யோசித்துப் பலராமரை நோக்கிச் சொல்லுகின்றான்.

ஓபலராம சக்கரவர்த்தியே சகலமுமறிந்தத் தாங்கள் கிருஷ்ணனை வரவழைத்துத் தாங்களிச்செய்தியை சொல்லி அவர்மனமுங்கலந்து ஆலோசித்துச் செய்யவேணுமென்றல்லவோ யோசித்துத் தூதரையனுப்பினீர் அந்த கிருஷ்ணன் வந்தால் முடிவாகிய அசுபம் நடக்கமாட்டாது எனென்றால் முன்னம் நீங்களெல்லோரும் தீவாந்தரத்திற்குச்சென்று தேவதையூசை நடத்துகிற நிமித்தியம் கவனித்திருக்கையில் இந்த கிருஷ்ணன் உமக்குத் தெரியாமல் துவாரகைக்கு வந்து சன்னியாசிவேடம் புனைந்து அந்தப்புரத்திலிருந்த அர்ச்சுனனுக்கு தனது சகோதரியாகிய சுபத்திரை இராத்திரிகாலத்தினில் ஒருவருக்குந் தெரியாமல் மணஞ்செய்வித்த கொடிய சூதனுகையால் இச்சுபம் அவன் வந்தால் நடக்கமாட்டாது, உமது மனத்துக்குத் திருப்தியாயிருந்தால் சம்மதித்து வாக்குகொடும். அவன் வரவேணும் இவன் வரவேணும் அவனைக் கேழ்க்கவேணும் இவனைக் கேழ்க்கவேணுமென்று ஆலோசிப்பதில் பிரயோஜனமில்லை, எனக்கு சிலவுகொடுத்தால் யான் போகிறேன். என்ற சகுனியைநோக்கி பலராமர் சொல்லுகிறார் ஓ சகுனி ராஜனே நீரென்ன மெத்த அவசரப்படுகிறீர், யான்பெற்ற பிள்ளையாயிருந்தபோதிலும் தாய் தந்தை தம்பி முதலானோருக்குந் தெரியப்படுத்தி அவர்களும் சம்மதிக்கும்படி மனமொத்து இனமொத்து நடத்துவதல்லவோ மணம் அப்படிச் செய்யாமல் தான் தோணியாய் ஒருவரையும் எதிர்ப்பாராமல் நடத்துவது மணமாமோ? என்று சொல்லிக்கொண் டிருக்கையிலேயே தூதர்கள் சென்று கிருஷ்ணமூர்த்தியை அழைத்துவந்தார்கள் கிருஷ்ணனும் பலராமருக்கு வந்தனந்தந்து அருகிலிருக்கும் சகுனியை நோக்கி, ஐயா! சகுனிராஜனே! எப்போதுவந்தீர்? என்று சுபசேமங்களை விசாரித்து அங்கோ ராசனத்தின்மீது வீற்றிருந்தார் அப்போது பலராமர் கிருஷ்ணமூர்த்தியை நோக்கித் தம்பி கிருஷ்ணு! சகுனி ராஜன் நமது சகோதரைகையைத் துரியோதனன் புதல்வனுகிய லக்குமணனுக்குக் கொடுக்கும்படி கேழ்க்கிறார் உன்னிஷ்டமெப்படி?

யென, அதற்கு கிருஷ்ணமூர்த்தி ஓ அண்ணு ! பெண்ணைப்பெற்ற வர் நீரோகையாலும், உமக்குத் தெரியாததொன்று மில்லாமையா லும், உமதிஷ்டப்படிக்கி நடத்துவதே மேன்மை, அப்படிச்செய் வதைவிடுத்து யாதொன்றுந் தெரியாதவனுயும் வயதிற் சிறியவனு யும் இருக்கு மென்னை விசாரித்து என் யோசனையின்படி நடத்து வதா பெரியோர்களுக்கு அழகு என்றார். இதைக்கேட்டு பலராமர் தம்பி கிருஷ்ணு ! நமது கன்னிகையை தங்கை சுபத்திரையின் புதல்வனுக்கு கொடுக்கிறதாய் நான்முன்னம் வாக்களித் திருக்கி றேன், அப்படி செய்விக்க எனக்கு இஷ்டமில்லை. ஏனென்றால், பாண்டவர்களிப்போது தங்களுடைய சொத்துக்களை யெல்லாம் துரியோதனனுக்குத் தோற்றுக் காடேகுதியாய் பரதேசிகளாய்ப் போயினர். அவர்களில் நடுப்பிறந்தோனுகிய அர்ச்சுனன் புதல்வ னுக்கு நமது கன்னிகையைக் கொடுத்தால் அவர்களைப்போல அக் கன்னிகையுங் கஷ்டத்தை யடைந்துக்கொண்டிருக்கவேண்டியதே யன்றி சுகமடையப்போகிற தில்லை; அதைக்கண்டு நாமும் விசனப் பட வேண்டியதாக நேரிடும். ஆகையால் நமது கன்னிகையை சம்பத்திலும் புத்தியிலும் சகலத்திலும் விசேஷித்திருக்கும் துரி யோதனன் புதல்வன் லக்குமணனுக்குக் கொடுத்தால் யாதொரு விசனமுமின்றி சுகமாக விருப்பதுடன் நம்மைப்போன்றவர்கள் யாரேனும் பார்த்தபோதிலும் இப்பெண்குழந்தை பலராமர் புதல் வியாயென்று களிப்படைவார்கள். இப்படிப்பட்ட சம்பந்தத்தை விட்டு சுத்த கேவலஸ்திதியிலிருக்கும் பாண்டவர்களுடைய சம்பந் தம் எனக்கு வேண்டியதில்லை. இது என்னிஷ்டம், இனி உன்னு டைய இஷ்ட மெப்படியோ அதையும் தெரியப்படுத்திலை இரண் டையும் யோசித்து யுக்தா யுக்தமெதுவோ அந்தப்படி நடந்து கொள்ளுவோ மென்றனர் அதைக்கேட்டு கிருஷ்ணமூர்த்தி கல கலவென்று சிரித்து ஓ அண்ணு ! உலகத்தில் ஏழையாயிருக்கினும் அவன் வித்தையிலும் புத்தியிலும் குலத்திலும் நலத்திலும் விசேஷ ப்பட்டு சகலருங் கொண்டாடும்படியான கீர்த்தியைப் பெற்றவ னெவனே அப்படிப்பட்டவனுக்குத் தங்கள் கன்னிகையைக்கொடு த்து மணஞ்செய்விப்பது இயற்கை. இதைவிடுத்து வித்தையிலும் புத்தியிலும் குலத்திலும் நலத்திலும் தாழ்ந்து சகலரும் இழிவாகப் பேசும்படியான அபகீர்த்தியைப் பெற்றவனுக்கு மனமாரப் பெண் ணைக்கொடுத்து மணஞ்செய்வித்து பின்பு துக்கப்படும்படியான வர்களு முண்டோ ? இல்லை. இதைப்போல தங்கள் பொன்னை யும் பொருளையும் நாட்டையும் பார்த்து கன்னிகையைத் துரியோ தனன் புதல்வனுக்குக்கொடுக்க மனஞ்சிச்சயங்கொண்டீர், குலமும் பலமும் நலமும் உம்மிடம் பயன்படாமற் போயிற்று, இனியானென் ன சொல்லினும் உமது மதிக்கிச் சம்மதியாகமாட்டாது என்ற னர், அதற்குப் பலராமர் அடாக்கிருஷ்ணு! என்புதல்வி சுகமடைந்

ந்திருக்க நின்மனம் தாளாமல் பொறுமையினுல் அவளை ஏழைப் பரதேசியாயிருக்கிற பாண்டவர் புதல்வனுக்குக் கொடுத்தால் அப்போது அவள் கண்ணுங் கண்ணீருமாயழுதுக் கொண்டிருந்தால் நின்கண்ணீரைக் களிப்பையோ? போடாபோ! இப்படிப்பட்ட கெட்ட எண்ணமுடைய நீ இனி என் கண் முன்னே வரவேண்டாமென்றனர். அதற்கு கிருஷ்ணமூர்த்தி ஒ அண்ணு! உமதிஷ்டப்படியே துரியோதனன் புதல்வன் லக்குமணனுக்கு சசிரேகையைக் கொடுத்துத்திருமணமுடித்து வைக்கவேணுமென்ற எண்ணமுமக்கிருந்தபோதிலும் பகவானுடையசூத்திரமொன்றிருக்கின்றது அதைக் கவனியுமென்று சொல்லிக்கொண்டே போய்விட்டார்.

பினபு பலராமர் சகுனியை அழைத்து சமீபத்தினில் வைத்துக்கொண்டு புரோகிதரைக்கொண்டு நிச்சயஞ்செய்து மணவோலையெழுதி ஒருவர்க்கொருவர் பெற்றுக்கொண்டு சந்தோஷசித்தர்களாக விருக்கையில், சகுனியானவன் நாமெத்தனித்த காரியம் முடிவாய்விட்டது; இனி பாண்டவர்களை எளிதினில் வென்றுவிடலாமென்று தனக்குள்தானே யோசித்துக் களிசாகரத்தினில் மூழ்கினவனுகிப் பலராமரைநோக்கி இனி யெனக்கு விடைதரவேணுமென்று விடைபெற்றுத் தன் பரிவாரங்களுடன் புறப்பட்டுச் சில நாளில் அஸ்தினபுரியைச் சேர்ந்தான். அங்கே துரியோதன மகாராஜன் சகுனிமாமன் சென்றுரே காரியசாதகஞ் செய்துக்கொண்டே வருவார், அவர்நினைத்தகாரியம் எதுநிறைவேறுமர் போயிற்று? யாவற்றுக்காரியமும் அனுகூலமாகியேவந்தது; அதுபோல இந்தக்காரியமும் அனுகூலமாகியே இருக்குமென்று பேசிக்கொண்டிருக்கையில் தூதர்களோடி ஒ சுவாமி! தங்கள் மாமனுராகிய சகுனிராஜன் பட்டணத்துக்குள்வந்து விட்டாரென்றசொல் கேட்டவுடனே தடாலுமென்றெழுந்து தம்பிமார்களுடன் எதிர்க்கொண்டுசென்று சகுனியைக்கண்டு ஆனந்தங்கொண்டு கட்டித்தழுவி ஒமாமா! போனகாரியம் ஜெயஞ் செய்துக்கொண்டுவந்தீராவென, அதற்குசகுனி துரியோதன மகாராஜனே நானே சென்றபோது காரியம் ஜெயமாகமல் வருவேனு? உன்மனதுக்கு ஆயாசந் தருவேனு? வென்று சொல்லிக்கொண்டே மணவோலையை யெடுத்துக் கொடுத்தான். அந்த ஓலையைக் கண்டமாத்திரத்தில் துரியோதனன் இனியில்லாத களிசாகரத்தில் மூழ்கினவனுகிச் சகுனியைப் பலவாறுகொண்டாடி ஓலையைப்பிரித்து வாசித்து ஆனந்தமடைந்து தன் தந்தை பீஷ்மர் முதலானேருக்கும் அவ்வோலையைக் கொடுத்து வாசித்துக்கொள்ளும்படி விண்டு கலியாணத்திற்குவேண்டிய சகல சாமக்கிரியைகளையுந் தயார்செய்துக்கொண்டு தேச தேசங்களுக்கும் மணஓலையனுப்பி பீஷ்மர், துரோணர், கிருபர் முதலான பெரியோர்களும் தன்தம்பிமார்கள் கர்ணன்

சகுனி பிரமுகாளுடனும் ரதமேறிக்கொண்டு யாவருந் தன்னைச் சூழ்ந்துவர அஸ்தினபுரத்தைவிட்டு புறப்பட்டு ஹரித்துவாரத்தைச் சேர்ந்து அங்கோர் மணஓலை யெழுதி தூதுவன்கையிற் கொடுத்து இதைக்கொண்டுபோய் விதுரன் வீட்டிலிருக்குஞ் சுபத்திரையினிடங் கொடுத்து வாவென் றனுப்பி சகுனியை நோக்கி எனதருமை மாமா ! இந்த மணஓலையைப் பார்த்தவுடனே சுபத்திரை காக்கைப்பிடிங்கிக் கொண்டு இறந்துவிடுவாளென்று சொல்லித் கொண்டே மிகுந்த உச்சாதத்துடன் சிலகாளில் துவாரகைபோய் சேர்ந்தார்கள். இவர்கள் வரவையறிந்து பலராமரெதிர்கொண்டு வந்து அழைத்துச்சென்று அவரவர்களுக்குத் தக்க விடுதிகளில் அமைத்து விவாகத்திற் காகவேண்டிய காரியங்களில் முயர்ச்சி செய்துக்கொண்டிருந்தார். இங்கே தூதுவன் மணஓலையை எடுத்துச்சென்று விதுரர் அரண்மனைசேர்ந்து சுபத்திரையை அழைத்து மணஓலையைக் கொடுத்துத் துவாரகைப்போய்ச்சேர்ந்தான் உடனே சுபத்திரை அம்மணஓலையைப் பிரித்து வாசித்து அதிலெழுதியிருக்கும் கருத்தை யுணர்ந்து ' ஆஹா நமது தமையன் சகிதேவகையை அபிமன்னியுவுக்குக் கொடுக்கிறேனென்று அனேக அரசர்கள் முன்னல் சொல்லியவாக்கை மறுத்து சொற்சோர்வுபட்டார். இதற்குக் காரணம் பாண்டவர்கள் சகல சொத்துக்களையும் சூதாடித் தோற்றுக் கானகமடைந்த ஏளிதமேயாம். இதையோசித்து நமது தமயன் காடுஞ் செல்வமுமுடைய துரியோதனன்புதல்வனுக்குத் தன் புத்திரியைக்கொடுக்க நிச்சயித்து விட்டார். உலகத்தில் பொருள் பிரதானமேயன்றி நலங் குலம் பலம் பிரதானப் படமாட்டாது. மேலும் பாண்டவர்கள் இச்சமயமிங்கிருந்தால் அந்த பலராமரிடம் போர்புரிந்தாகிலும் அக்கன்னிகையைப் புதல்வனுக்கு மணஞ்செய்விப்பார்களே, காலக்கொடுமையால் காட்டிலுஞ் சென்றார்கள் இதற்கென்ன செய்கிறதென்று பலவாறு சிந்தித்துக் கொண்டே ஆழ்துயரக்கடலிலாழ்ந் திருந்தாள். இதற்குள் அபிமன்னியு வேட்டையாடச்சென்றவன் தக்க மிருகங்களைக் கொன்று இருகரங்களிலும் பிடித்துக்கொண்டு விரைந்து வீட்டைநாடிவந்தனன் தன் தாயைக் காணமல் தேடி விசனக் கிருகத்திலிருப்பதையறிந்து உட்புகுந்து, ஓ ! அம்மணி யுமக்கிப்படிப்பட்டவிசன முண்டாகும்படிச் செய்தவன் யாவன் ? பாட்டனார் ஏதாகிலுஞ் சொன்னாரோ ? அல்லது, பாட்டி யாதாகிலுஞ் சொன்னாளோ ? சொல்லும் அம்மாவென்று எவ்வளவு வேண்டிக் கேட்கினும் மறுமொழி கூறாமலிருப்பதைக் கண்டு ஓ ! ஹோ ! என்னமோ கஷ்டம்வந்து நேர்ந்திருக்கிறுப்போ லிருக்கின்றது அதினாலேயே நமதன்னை மறுமொழி சொல்லாம லிருக்கின்றாள், நமது கண்முன்னே இப்படிப்பட்ட விசனப்படும்படிப் பார்க்க நேரிட்டதல்லவா வென்று அடற்காத் கோபங்கொண்டு வாளாயுருவிக் கையிற்பிடித்துக்கொண்ட

படியே என்னையின்ற அண்ணையே! இனியாகிலும் உனக்கு விசன மூண்டாகும்படி வைத்தவனைச் சொல்லுகிறையா அல்லது இந்த வாளினு லுன்னை முதலில்வெட்டி மாய்த்துப்பின்னே மாண்வெட் டிக்கொண்டு மடிகிறேனென்று வானை போங்கினதைக்கண்டு சுப த்திரை திடுக்கிட்டெழுந்து புதல்வன் கரத்தைப் பிடித்துக்கொண்டு அப்பா மகனே! என்னை யெவர்களும் வையவில்லை; இந்த மண ஓலையைக்கண்ட யென்மனம் ஆழுத்துயரக்கடலில் மூழ்கிபது என் று அந்தமணஓலையைக் கொடுத்தாள். உடனே அபிமன்னியுவும், அந்த மணஓலையைப் பிரித்து வாசித்து அதின்கருத்தை யுணர்ந்து, ஓ! என்னை யின்ற அம்மணி! இதற்காகவா ரீபபடி விசனப்பட் டது? அந்தசொர்சோர்வுபட்டதுஷ்டனையும் அவனைச்சார்ந்த யாத வர்களையும், என்பாணுக்கினியினுலே ஒரு நிமைப்பொழுதில்சுட் டெரிந்துச் சாம்பலாகச்செய்து உன்மனது களிக்கும்படி அக்கன் னிகையை மணம்புரிகிறேன். அப்படிச்செய்யாவிடில் யானுரு சுத்த வீரனுவனே? இப்போ துனக்குண்டாகிய விசனத்தை யொ ழித்து சீக்கிரம் புறப்படுமம்மாவென்று பணிந்த அபிமன்னியுவை, சுபத்திரையெடுத்து முத்தமிட்டு உச்சிமுகந்து அப்பா! மகனே! யுன்னிஷ்டப்படியே வருகிறேனென்று துவாரகைக்குப்போகசித்த மாயினுள். அப்போது அபிமன்னியுவும் மெத்த சந்தோஷத்துடன் தனக்கு வேண்டிய அம்புப்புட்டில் முதலாகிய ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு புறப்பட்டான். அதைக்கண்டு சுபத்திரை, அப்பா மகனே! அஸ்தினு புரத்திற்கு துவாரகை மெத்த தூரமிரு க்கின்றது, ரதமொன்றில்லாமல் போவது ஆகாதகாரியம் ஆத லால், நீயுன்பாட்டனிடஞ்சென்று ரதமொன்று தரும்படி கேளு மென்ன, அத்தப்படியே அவனும் விதுரரிடம் போகிறபோது அம்மகானுபாவர் பகவானை பூசித்துக் கொண்டிருந்தார் அதை யுணராமல் அபிமன்னியுவானவன் தாதா கல்யாணம் கல்யாணம் ரதமொன்று வேண்டும் கொடும் கொடுமென்றான். இவ்வோசை கேட்டு விதுர், அடா! அபிமன்னியு ரதமாத்திரமிருக்கின்றது, சாரதி கிடையாது சம்மதியிருந்தால் கொண்டுபோ வென்றார். அதைக்கேட்ட அபிமன்னியுவும் ரதசாலையிற் புகுந்து ரதத்தை வெளிப்படுத்தி உத்தமமாகிய அசுவங்களைப் பூட்டி சித்தப்படுத்தி தன் அண்ணையை அழைத்தான் சுபத்திரையும் விரைந்து வந்து ரதத் தின்மீதேறி குதிரைக் கடிவாளக் கயிற்றைப் பிடித்து வலதுகையில் சவுக்கைப் பிடித்தாள், உடனே அபிமன்னியுவும் ரதாரோகணஞ் செய்யக்கண்டு சுபத்திரை குதிரைகளோட்டி ரதத்தைக் கடத்தி னுள். அப்போ தந்தக் குதிரைகளானது வாயுவேகத்தைத் தவிர் த்து மனோவேகத்துடன் திக்கு திசைகள் தெரியாமற்போகிற போது சுபத்திரை அபிமன்னியுவை நோக்கிச் சொல்லுகின்றுள்;

அடாயென் கலிதீர்க்க வந்த கண்மணியே! நானிந்த ரதத் தைபாதை வழியாய்ச் செலுத்தினுல் துவாரகையைச் சேருவத ற்கு நான்கு நாட்கள செல்லும். இதற்குள் துரியோதனன் புதல் வனுக்குச் சசிரேகை மனைவியாய் விடுவள். விவாக முடிந்த பின்பு யுத்தஞ்செய்து அவர்களை வென்று ஜெயம்பெற்றபோதிலும் என்ன பிரயோஜனம் விழலுக்கிரைத்த நீராகும். ஆதலால் இரண்டா நாளே நாம் துவாரகையைச் சேரும்படியான யோசனை செய்யடா யென் களிக்கடலே! யென்றுள். அம்மொழி சொல்லி வாய்மூடி முன்னமே நான்கு நாராசங்களையும். நான்கு வாயுவாஸ்திரங்களை யும் பிரயோகித்து விடுத்து அன்னையை நோக்கி, ஓ! அம்மணி! யாதொன்றும் யோசியாமல் ரதத்தை நேராகச் செலுத்துமென் றுன். அவ்வசனங்களைக்கேட்டு சுபத்திரை அடா மகனே குறுக்கே அனேக மரங்களும், பள்ளங்களுங், குன்றுகளுமா யிருப்பதால் ரதம தடைப்படுவது மனறி நமக்கும் ஆபத்துவந்து நேரிடுமே என் று யோசிக்கிறேனென அதற்கு அபிமன்னியு அம்மா நான் அதை யோசித்தே பாணங்களை விட்டிருக்கிறேன் அப்பாணங்களென்ன செய்யுமென்றுல், மரங்களையும் பர்வதங்களையுஞ் சேதித்துப் பள் ளங்களிற் நள்ளித் தடைப்படாமல் ரதம் போகும்படி பாதைசெய் துவிடும் இதற்காக நீ சந்தேகிக்காமல் ரதத்தைச் செலுத்துமெ ன்று சொல்லிக்கொண்டிருக்கிறபோதே அபிமன்னியுவிட்ட பாண ங்கள் சென்று மரங்களையுங் குன்றுகளையும் வெட்டிப் பள்ளத்திற் போட்டு பாதை செய்துக்கொண்டே போவதை சுபத்திரைகண்டு களிகூர்ந்து சிறிதேனும் சந்தேகமென்பதை விடுத்து ரதத்தை விரைவாய் நடத்தினுள். இந்தப்படியாக ரதமானது மிக்க வேக மாகப் போகிறபோது சூரியன் மேற்றிசைக் கடலில்மறைந்தான், அதைக்கண்டு அபிமன்னியு வானவன் விரைந்து இரண்டு அக்கினி யாஸ்திரங்களை யெடுத்துப் பூசித்துத் தூபதீப நைவேத்தியங்க ளீந்துத் தன் வில்லில் சந்தித்து விடுத்தான். அவ்வஸ்திரங்களிரண் டும் வில்லைவிட்டு வெளிப்பட்டு அந்தரத்தி னிருபக்கங்களிலும் இரண்டு பூரணச் சந்திரர்கள் உதித்ததைப் போல பிரகாசித்துக் கொண்டு இருளை தலைகாட்ட வொட்டாமலும், ரதத்தைவிட் டகலாமலும், நடந்துக்கொண்டே யிருந்தது. இவ்வண்ணம் ரதமா னது சுபத்திரையினுல் செலுத்தப்பட்டு நடுராத்திரி வேளையில் கடோர்க்கஜன் வனத்தையடைந்தது. அவ்வனத்தில் காவலாகவிரு ந்த ராக்கதர்கள் அனேகர் விரைந்தெழுந்து ரதத்தையும் அதில் ரதிகளு யிருப்பவனையும் ரதத்தைச் செலுத்தும் மங்கையையுங் கண்டு அதிக சினங்கொண்டு எங்கள் வனத்திற்குள் கிஞ்சித்தே னும் அச்சம் பயமுமின்றி வந்தவன் யாடா? உன்பெயரென் னடா? ஊரென்னடா? வென்று கொக்கரித்துக் கொண்டு தங்கள் தங்கள் ஆயுதங்களைக் காத்திவேந்தி ஓங்கியடிக்க வருவதைக்கண்டு

அபிமன்னியு இரண்டு அர்த்தசந்திர பாணங்களைத் தொடுத்து விடுத்தான் அப்பாணங்க ளிரண்டும் வெளிப்பட்டு அடிக்கவந்த அத்தனைபேர்கள் கரங்களையும் ஆயுதத்துடன் வெட்டித் தள்ளி விட்டது. அதைக்கண்டு அரக்கர்கள் மற்றொரு கரத்தினுல் கதை-சுட்டி-பல்லயம் எரியீட்டி முதலிய ஆயுதங்களை அபிமன்னியுவின் மீது விட்டெரிந்தார்கள். அதுகண்டு அபிமன்னியுவும் சிலபாணங் களால் ஆயுதங்களைப் பொடியாக்கி இரண்டுபாணங்களை விடுத்து அரக்கர்களின் மற்றொரு கையையும் வெட்டித் தள்ளினுன்: இரண்டு கைகளும் போகவே அரக்கர்கள் மூலக்கொருவனுக ஓடி கடோர்க்கஜனிடஞ்சென்று அபயம் அபயம் என்று விழுந்து எங்களைக் காப்பாற்றவேணும் சுவாமி யென்று கதறிப் பதறி யழுதார்கள். அவ்வழு குரலோசையைக் கேட்டுக் கடோர்க்கஜனவன் திடுக்கென் றெழுந்து என்னமோ இவர்களுக்கு ஆபத்து நேர்ந்ததென்று கருதி என்ன சமாசாரம் யாரால் உங்களுக்கிரண்டு கைகளுந் துண்டிக்கப்பட்டது சீக்கிரஞ் சொல்லுங்களென அவர்கள் வனத்தில்நடந்த விஷயங்களைச்சொல்லி நாங்களிதுகாலபரியந்தம் இப்படிப்பட்ட சூரனைக் கண்டதில்லை என்று முறையிட் டழுதார்கள். அதைக்கண்டு கடோர்க்கஜன் அதிக சினங்கொண்டு பற்களை நறநறெனக்கடித்து மீசை படபடெனத்துடிக்க ஆக்கிரவியாக்ரோஷத்துடன் இப்போதே அக்கொடிய துஷ்டனை மாய்க்கிறேனென்று கடித்துச் சிடுசிடுத்து அடா வீரர்களே! அச்சிறுவனெங்கிருக்கிறான் காட்டுங்களென்று அவர்களுடன் விரைந்து சென்று கண்டு அடா! அரக்கர்களே! நீங்க ளித்தனிபேர்க ளிருந்து இச்சிறுவனொருவனைக் கொல்லுவதற்கு வகையறியாமல் ஒரு சிறுவனுல் இத்தனைபேர்களும் கைகளிழந்து வந்தீர்களே நீங்களும் ஒரு வீரர்களோ வென்று சொல்லிக்கொண்டே தன்னகையிலிருந்த கதையை ஒங்கி விடுத்தான் அக்கதைவரும் வேகத்தைக்கண்டபிமன்னியு இவர்களுக்கெல்லா மிவன் அரசனுகவிருக்க வேண்டுமென்று கருதி வெகுண்டு தன் வில்லில் இரண்டு பாணங்களைத் தொடுத்து ஒரு பாணத்தினுல் கதாயுதத்தைப் பொடியாக்கி மற்றொரு பாணத்தினுல் அவனைநோக அடித்தான். அந்த அடியினுல் கடோர்க்கஜன் மெத்தவும் மெலிந்து இராத்திரிகாலம் அரக்கர்கள் யுத்தஞ்செய்வதற்கு வலிவு அதிக மாதலால், நிசாசரர் என்றொருபெயரு மிவர்களுக் கிருப்பதனுலும் கடோர்க்கஜன் தன்னுல் கூடிய வரையில் யுத்தஞ்செய்தும் இவனை வெல்லுவது நம்மாலாகாதகாரியமென் றுணர்ந்து தன்னுடைய மாய்கையினுல் தடாலென்று மேகமண்டலத்தில் போயொளித்து அங்கிருந்தபடியே மோசவெண்ணங் கொண்டு சத்தியாயுதமெனு மோராயுதத்தைப் பூசித்து விடுத்தான். இங்கே அபிமனனியு தன்னை யெதிர்த்து யுத்தஞ் செய்துக் கொண்டிருந்த அரக்கனைக் காணும் எப்படிப்போயினு

னே தெரியவில்லையே ஆனால் ராக்கத மாபையென்று சொல்லக்கே ட்டிருக்கிறேமே அப்படியிருந்தாலும் இருக்கலாமென்று யோசி த்துக்கொண்டிருக்கிற தருணத்தில் அந்த சத்தியானது அபிமன் னியுவின் மார்பிற்பட்டு மூதுகு லுருவிப்போய் விட்டது உடனே அபிமன்னியுவானவன் வாடைக்காற்றினால் சல்லிவேற்றுவிழும் மரம்போல ரதத்தின்மீது சாய்ந்து உயிர்விட்டான். இதைக்கண்ட சுபத்திரை அனலிடு மெழுகுபோலுருகி அடா மகனே! நின் தந் தை வனத்திற்கேகின துக்கத்தை உன்னைப்பார்த்தல்லவோ மற ந்து காலத்தைப்போக்கிக் கொண்டிருந்தே இன்று அயன் உன்னு டைய துக்கத்தையும் அனுபவிக்கும்படியாக என்தலையி லெழுதி னானே? அடாமகனே அபிமன்னியுவென்று இனியாரை அழைக் கப்போகிறேன்? என்வயிற்றில் தீயை இட்டுப் போனையே இனி யொருக்கால் உன் இனிமையான மொழியைக் கேழ்ப்பேனே? அடா மகனே உன்வீரமும் சூரமும் எங்கே பொளித்துவிட்டாய்? நானினி எப்படி உயிர்வைத்துக் கொண்டு உலகினி விருப்பேன்? ஆ! ஹா! நானென்னென்ன எண்ணங்கொண்டிருந்தேனடா அந்த எண்ணமெல்லாம் வீணுப்போய்விட்டதே! அன்றியும், என்னை யிந்த அவாந்தரமான காட்டில் ராக்கதர்கள் பங்காகச்செய்து மா ண்டாயே! நீ இறந்த செய்தி உன்தந்தை யறிந்தால் உயிரை மாய் த்துக்கொள்வரே! உன் பெரியதந்தைகள் சிறிய தந்தைகள் உன மரணத்தைக் கேட்டால் உயிர் தரிப்பார்களோ? இதற்கு நானென் ன செய்வேனடா? அனைதையைப்போல தவிக்கலாயிற்றே! இனி யானெவ்வாறு பிழைப்பேன்? இங்கு யாரைத் துணைவரும்படி யழைப்பேன்! இதற்கு நான் யாரை வைவேன் எவ்வண்ணமுய் வேன் என் துக்கத்தை யாருடன் சொல்லுவேன் சொல்லி யாற் றிக்கொள்ளுவேன்! (புத்ரதுக்கம் நிரந்தரம்) என்ற முதியோர் வாக்கியத்தின்படி என்னுயிருள்ள பரியந்தம் நின்துக்கம் என்னை விட்டு மாறுவதில்லையே என்றுப் பதறிக் கதறி மார்பிலும் முகத்தி லும் அறைந்துக்கொண்டு கோவென்று அழுது புலம்பி சாவுக்குச் சரியான மெய்சோர்ந்து பூமியின்மீது விழுந்து சற்றுநேரமிருந்து மறுபடியுமெழுந்து மிஞ்சிப்போயினதற்கு நாமெத்தனையாய் தய ரப்பட்டாலும் வரப்போகிறதில்லை என்று திடஞ்செய்துக்கொண்டு இதற்கு இன்னொரு உபாயஞ்செய்து பார்ப்போம் அப்புறம் தெய் வம்விட்ட வழியாகுதென்று தீர்மானித்துத் தன் கணவனுடைய திருவடியை மானசீகமாகத்தொழுது அவர் திருவடியை ஆகார மாக வைத்துக்கொண்டு ஆநிமத்தியாந்த ரகிதனுகியும் ஆபத் பந்து வாகியும் அனுதரக்ஷகனுகியும் மூன்னம் காந்தேபருடைய புத்திரனை குந்தகூஷிணியின் பொருட்டு எமபுரத்திலிருந்து அழைத்து வந்து கொடுத்த தீனதயாளனுமாகிய ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமாவைநோ க்கித் துதிசெய்யத் தொடங்கினுள்.

ஓ ஜகன்மாதா! பஞ்சபூத அத்மாவாகி பதினொரு இந்திரிய அத்மாவாகி பரமாத்மபாவாகி யிருப்பதிலே நீயொருவனே ஐந்துவிதங்களாகி யிருப்பின் றவனுமே சகலுமாகி சகலத்திற்கும் ஆத்மாவாகி கூடங்களாகும் சர்வபூதங்களுக்கும் அகந்தாமாகும் அத்மாவுக்கும் பொருந்தியவனாகி பிரம்மா, விஷ்ணு, சிவனாமங்க ளென்று கற்பனையிலல் சொல்லப்பட்டு மவனாகியிருக்கும் ஓ! பகவா னே! நீ பிரசன்னமாகவேணும். அனந்த குணங்களுடன் கூடின ஆத்மாவாகிய ஆனந்தபூரணனை பரமேசனே! அனந்த நாமங் களுடன் கூடி யிருக்கும் உனக்கு நமஸ்காரஞ் செய்கின்றேன். ஜீவாத்துமாக்களைப்போல கர்ம உபாதியாகும் தேவமனிதாதி நாமரூப கற்பனைகளின்றி நித்தியமாய் உத்தமமாய் விகாரபேத மாகும், பரப்பிரம்மமும நீயே நாமரூப கற்பனைகளின்றியே ஒரு பதார்த்தத்தை அறிவது அசாத்திய மாகையால் நீ கிருஷ்ண, அச் சுத அனந்த, விஷ்ணு, முதலாகிய நாமங்களாலே துதிக்கப் பட்டி ருக்கின்றாய். அயனாகி அனந்தனாகிய ஓ தேவா இந்த தேவாதி கற்பனைகளுடன் கூடி சகலப் பிரபஞ்சமும் நீயே விகாரமற்றதாகும் ஆத்மாவும் நீயே இப்படிச் சகலமும் நின் விபூதியாகி யிருப்பதி னாலே நினக்கன்னிய மெதுவுமில்லை. ஆகையால் நீரே பிரமனாகி சிவனாகி சூரியனாகி விதாதாவாகி தாதாவாகி இந்திரனாகி வாயுவாகி அக்கினியாகி வருணனாகி எமனாகி வெவ்வேறு காரியங்களுடனே கூடிய சோரூப பேதங்களாலே உலகத்தை ரக்ஷித்துக் கொண்டிரு க்கின்றாய். மேலும் சூரியகிரண ரூபியாகி ஞாலத்தை சிருஷ்டித் துக்கொண்டிருக்கின்றாய் ஆதலா லிப்பிரபஞ்சம் யாவும் நினக்கு சேஷபூதமாகி யிருக்கின்றது. சத்தென்னும் பதத்தினால் சொல் லப்படும் விகாரசூனியமாகும் பரசொரூபமாகி சுத்தஞான சொரூப மாகி சராசரங்களுக்கு அதிகாரியாகி யிருக்கு மூனக்கு அனேகவந் தனங்கள்; பிரணவப்பிரதிபாத்தியனாகும் ஸ்ரீவாசுதேவனுக்கு நமஸ் கரிக்கின்றேன் சங்கர்ஷனுக்கு வந்தனம் பிரத்தியும்னனுக்கு தெண் டன் சமர்ப்பிக்கின்றேன் அனிருத்தனுக்கு வந்தனஞ் செய்கறேன் இப்படி நான்குயுக ரூபியாகும் உனக்கு நமஸ்கரிக்கின்றேன். சீக் கிரம் வந்து என்னுடைய துக்கத்தைப் போக்குவது நின்பாரமாகு மென்று துதிசெம்பும் சுபத்திரையின் முறையானது துவாரையி லிருக்கும் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி செவியிற்பட்டு விரைந்து அகோ நமது தங்கை மனிதசஞ்சார மில்லாத காட்டினில் அரக்கர்கள் கூட்டத்தி லகப்பட்டுக்கொண்டு கதறுகிறாளென் றுணர்ந்து புறப் பட்டு வந்து சுபத்திரையைக் கண்டார், எவ்வண்ணமாக வந்தா ரென்றால் கெங்கம்காள் வேடம் புனைந்து கருத்த உருவத்துடன் ஆகாயத்தினில்வந்து தோன்றி அம்மா! சுபத்திரையே! நீயேன் இந்தக் கடுங்காட்டில் மைந்தனையிழந்து தன்னந்தனியே பதறிக் கதறியழுது புலம்புகின்றாய், ஆதியில் உனக்கு லட்சுமி இரண்டு வர

மளித்திருக்கின்றாள். அதைக்கொண்டு லட்சுமியைத் துதித்து நின்வலது கைபினாலே உன்பதல்வனைத் தடவிக்கொடுப்பையே யாகில் அச்சிறுவன் உயிர்பெற்றெழுந்திருப்பன் இனிகலங்கி அழ வேண்டாம். சீக்கிரமெழுந்து யான் சொல்லியபடி செய்யுமென்று சொல்லி மாயமாய் மறைந்துபோயினர். உடனே சுபத்திரை ஆனந்தக்கடலில் மூழ்கினவளாகிப் பரிசுத்த மனத்துடன் லட்சுமியை நோக்கித் தாமரை மலரிலுதித்துத் தாமரை மலரை ஆசனமாகக் கொண்டு தாமரை மலைப்போன்ற இரண்டு நேத்திரங்களையுடையவளாகி இரண்டு கரங்களும் தாமரைமலரை யொத்து இருகரங்களிலுந் தாமரை மலரைத்தரித்து பாதங்களிரண்டும் பொற்றாமரை சோ நிகர்த்த விளங்கும் ஸ்ரீ மகாலட்சுமி தேவியே! நினக்கு அனேகவந்தனஞ் செய்கின்றேன் காகாசுரன் செய்த துஷ்க்குக்காக நின் ஞானவிட்ட புல்லம்புக்குபயந்து அந்த காகாசுரன் லோகா லோகங்களெல்லா மோடி அங்குள்ள கடவுளர்களைச் சரணமடைய ஒருவரும் தனக்கு அபயஸ்தந் கொடுத்து தன்னை ரக்ஷிக்காதலால் நடுநடுங்கி நின் திருவடிகளில் வந்து விழுந்து சரணகதியடைய அவனை யன்புடனெடுத்துப் பகவான் திருவடிகளினிடம் போட்டு ஆதரிக்கச்செய்து புத்திரவாச்சல்யத்தை வெளிப்படையாகச்செய்த நின் கிருபைக்கும் கருணைக்கும் அனேக வந்தனந் தந்தேன். என்று பலவாறு தோத்திரஞ் செய்தும் அன்றியும் தன் கணவன் திருவடிகளையும் ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமா திருவடிகளையும் துதி செய்துக் கொண்டே இறந்து கிடக்கும் தன் புதல்வனருகிற்சென்று வலது கரத்தினால் அவன் தேகமெல்லாந்தடவினாள். அப்போது அபிமன்னியுவும் நித்திரையைவிட்டு எழுந்திருப்பவன் போல உயிர்பெற்று எழுந்தான் அவனைகண்டு சுபத்திரை களிசாகரத்தினில் மூழ்கினவளாகி மகனைக் கட்டியணைத்து முத்தமிட்டு அப்பாமகனே! இனி யான் பிழைத்தேன் எனக்கொன்றுங் குறையில்லை யென்று சந்தோஷமேலிட்டால் அகமு முகமுமலர்ந்து வெகுதிடத்துடன் மகன்பால் நின்றிருந்தாள்.

இவ்வண்ணம் சுபத்திரையானவள் தன்புதல்வன் உயிர் பெற்றெழுந்ததற்காக பிரம்மானந்தத்தை யடைந்திருக்க அபிமன்னியுவானவன் தான் ஜீவித்திருக்குஞ் செய்தி தன் அன்னையினால் சொல்லக்கேட்டு வெகுண்டு கோபச்சிரிப்பு சிரித்து அந்த கொடியபாதகனாகிய ராக்கதன் சுத்தவீரனாகில் எதிர் நின்றுயுத்தஞ்செய்து வெற்றிபெறாமல் எங்கேயோ ஓடி ஒளித்துக்கொண்டிருந்து மறைவாகச் சக்தியாயுதத்தை விடுத்துக்கொன்றான். அவனுமொரு சுத்த வீரனே இப்போதவன் என்கண்முன் அகப்படுவானேயாகில் ஒரு நிமைக்குள்ளாக அவனைச் சித்திரவதை செய்வேனென்று வெகுவாகக் கடுத்துப்பேசினான், இந்த சபிஸ்தாரத்தை யெல்லாம் கடோ

ர்க்களுல் காவலிருக்கப்பட்ட அரக்கர்கள் தெரிந்து ஓடோடியுஞ் சென்று கடோர்க்கஜனைக்கண்டு ஒ சுவாமி! அரக்கர் கோமானே தாங்கள் விடுத்த சக்தியாயுதத்திலுல் மடிந்த மானிடச்சிறுவன் உயிர் பெற்று எழுந்து ஏதேதோ வீரப்பிரதாபங்களை மொழிந்துக் கொண்டு உக்கிராகாரனுய் யுத்தத்துக்கு சித்தப்பட்டிருக்கிறன். இந்த வேளை தாங்கள் வராவிடில் அந்த மானிடச் சிறுவனுல் நாங்க ளெல்லோரும் மடிந்துபோவது சித்தமென் றெண்ணக் கடவீரெ ன்றுகூறிய மொழியைக் கேட்டு ஆச்சரியமு மாச்சரியமு மடைந்து பற்பல ஆயுதங்களை எடுத்துக்கொண்டு யுத்த சன்னத்தனுய் வெளி ப்பட்டான். இதைக்கண்டு கடோர்க்கஜன் அன்னையாகிய இடும்பி மகனுக் கெதிரில்வந்து நின்று அடாமகனே! நீயுத்தஞ்செய்யப் போகிராய் அங்கேயுனக்குணடாகும் ஜெயாபஜெயங்க ளெனக்கெ ப்படி தெரியலாகும் அதற்கொரு அத்தாட்சி யெனக்குப்புலப்படும் படியாகச் சொல்லிவிட்டுப் போடா மகனே என்றுள். அதற்கு கடோர்க்கஜன் ஓ! அம்மணி! இதோ யிருக்கும் ஐந்து பனைமரங் களும் தழைத்துப் பச்சென் றிருந்தால் நானுயிருடனிருக்கின்றே னென் றெண்ணிக்கொள் இம்மரங்கள் வாடி வதங்கி மட்டைகளுதி ர்ந்து மொட்டையாய் நிற்குமாகில் நானிறந்தேனென் றெண்ணக் கடவாயென்று சொல்லி அரக்கர்கள் சூழ வெகு ஆக்ரஷத்துடன் புறப்பட்டு அபிமன்னியுவிருக்கு மிடத்தையணுகி எதிர்த்து நின் றுன். இப்படியாக வந்து நின்ற அரக்கர் கோமானைக் கண்டு அபி மன்னியுவானவன் வெகுண்டு தன் வில்லை மண்டலாகாரமாக வளை த்துக் குணத்தொனிபண்ணி அதில் அனேகமரயிரம் பாணங்களைத் தொடுத்து விடுத்தான். அதுகண்டு கடோர்க்கஜன் தன்கையிற் பிடி த்திராநின்ற கதாயுத்தத்திலுல் அப்பாணங்களை யெல்லாம் பொடி யாகும்படி யடித்துப் பெருங் காற்றிலுல் பரக்கும் பஞ்சைனப் பர க்கச்செய்து சிங்காரஞ்செய்து நின்றுன். அதுகண்டு அபிமன் னியுவும் தன் வில்லிலே அனேக நாராச பாணங்களைத் தொடுத்து விடுத்து மேலும் இடியாஸ்திரம் மேகாஸ்திரமென்று சொல்லும் பாணங்களை நிமைக்கட்டுவதற்கு முன்விடுத்துப் பின்னும் ஒரு வேலாயுதத்தை யெடுத்து அபிமந்திரித்து விடுத்தான் அதுகண்டு கடோர்க்கஜன் வெகு ஜாக்கிரதையாய் கதாயுதத்திலுலே அப்பா ணங்களை எல்லாம் பொடிசெய்துக்கொண்டேயிருக்கையில், வேலா யுதமானது வெகு மகிமையுடன் வந்து கடோர்க்கஜன மார்பிற் பட்டு முதுகி லுருவிப் போய்விட்டது. உடனே கடோர்க்கஜனு வன், பெருத்தபர்வதாகாரமாய் பூமியின்மீதுசாய்ந்து உயிர்துறந் தான். இங்கிப்படியிருக்க இடும்பியானவள்! பனைமரங்களின்மட்டை களுதிர்ந்து மொட்டையாய் நிற்பதைக்கண்டு மகன் மானிடலுல் பட்டானென்றுணர்ந்து வாயிலும் வயிற்றிலு மறைந்துக்கொண்டு மகனே மாண்டுபோனுயோ! மானிடப்பயலாலே நீமாண்டு மடிய

வேண்டுமென்று அயன் உன் தலையிலெழுதினனே! என்று பலவாறு உருகிக் கதறி ஓவென் றழுதுக் கொண்டேவந்து இறந்து கிடக்கும் தன்மகன்மீது விழுந்து, அடாமகனே! உன்தரியமும் சௌரிய மும் எங்கேஒளித்தாய் அடாமகனே! பிள்ளைகலிதீர்க்கவந்த பேரி ன்பவாழ்வே! ஐயா தருமகந்தனரே! அர்ச்சுன மகாராஜனே! நகுல சகாதேவர்களே! இந்த சமயத்தில் நீங்கள் ஓடிவந்து என் பிள்ளையை எழுப்பிப் பாவியாகிய மானிடப்பயலைக்கொன்று என் பகை தீர்க்கமாட்டீர்களோ? என்று சொல்லிப் புலம்புவதைச் சுப த்தினரகேட்டு இது வென்ன ஆச்சரியம் இவளைப் பார்த்தால் பெரு த்த பர்வதாகாரமாகவும் அமாவாசைக் கருக்கலைப் போன்றக் கரு த்த நிறமும், காரைப் பற்களும், செம்பட்டமயிரும், இப்படிப் பட்ட அகோர ரூபமுடைய இவ்வரக்கி பாண்டவர்களை நினைத்துப் புலம்புகின்றாள். இதை யோசிக்கையில் ஏதோசம்யந்தமிருக்கின்றது போல் தோன்றுகின்றது இவ்விஷயத்தைத் தீரவிசாரிக்க வேண்டு மென்று கருதிச் சுபத்திரை இடும்பியின் பக்கலில் சென்று ஓ அ ம்மா! நீ அழவேண்டாம். நின்புதல்வன் இன்னுங் கொஞ்சகோரத் தில் உயிர் பெற்றெழுந்திருப்பன். பயப்படாதே என்று பல இனிய வசனங்களைக்கூறி அவளைத் தேற்றிப் பின்னுஞ் சொல்லுகின்றாள். ஓ அம்மா! உன்னைப்பார்த்தால் அரக்கர்குலமாதாயிருக்கின்றும் பாண்டவர்களோ தேவாம்சம் பெற்றவர்களாயிருக்கின்றார்கள். அப்படியிருக்க நீபாண்டவர்களை நினைத்துப் புலம்ப வேண்டிய காரணமென்ன? உனக்கும் அவர்களுக்கும் ஏதாகிலும் சம்பந்த முண்டோ? அதைத் தெரியச்சொல்லவேண்டு மென்று வேண்டி னாள். அதற்கு இடும்பி ஓ மாதரசே! யாதா மொரு சம்பந்த மில்லாமல் யான பாண்டவர்களை நினைப்பேனே சம்பந்தமிருந்தே அவர்களை நான் நினைத்துப்புலம்பினேன். அதெப்படி எனக்கும் அவர்களுக்கும் சம்பந்த முண்டாயிற்றென்றால்? சில வருடங்களு க்கு முன்னம் துரியோதனன் பாண்டவர்களைக் கொல்லவேண்டு மென்று கருதி, அரக்குமாளிகையொன்று கட்டுவித்து அதில் அப் பாண்டவர்களை வரவழைத்து மகிழப்பேசி வேடிக்கையாய்ப் புகு த்து யாவரும் அங்குபடுத்து நித்திரைசெய்ய அதில் துரியோதனரி கள் நடுராத்திரியிலெழுந்து அரக்குமாளிகையில் பாண்டவர்கள் கல்ல நித்திரையிலிருக்கப் பார்த்து இன்புடன் பாண்டவர்களென் கிற பேர் போயிற்றென்று சந்தோஷித்து, அங்கிருக்கும் காவலரை எச்சரித்துவிட்டு அஸ்தினபுரஞ் சேர்ந்தார்கள். அப்போது பாண் டவர்களி லொருவராகிய வாயுபுத்திரர். இந்த உளவெல்லாம் தெ ரிந்திருப்பவராதலால் தனக்கு மூத்தவர் இளையவர்களாகிய கால்வ சையும் குந்திதேவியையும் அசையாமலும் நித்திரைபண்ணாமா லும் தூக்கித் தோளின்மீதிலும் மார்பின்மீதிலும் தாங்கிக்கொண்டு தானே அமமாளிகைக்கு நெருப்பிட்டு பிலத்தின் வழியாய் இவ்வ

னம்வந்து சேர்ந்து அவர்களைப் படுக்கவைத்துக் காவலாக விருந்தார். அப்போது நான் அவ்விடஞ்சென்று அந்த வாயுபுத்திரரைக் கண்டு மோகித்து அவரை இசையச்செய்து அவருடன் கூடிக் குலாவியபடியால் இப்புதல்வன் பிறந்தான். ஆகையால் இந்த சம்பந்தத்தால் அவர்கள் எனக்குப் பிரியமுள்ள பந்துக்களாகுமென்று நினைந்தனள். இதைக்கேட்டு சுபத்திரையானவள் வாயுபுத்திரரைப் பரிகசித்து வீண்காலம் போக்குவதில் பயனில்லை நாம் போகவேண்டிய அவசியமான காரியத்தைச் சீக்கிரம் பார்க்கவேண்டுமென்றுகருதி, லட்சுமியை நினைத்துச் சிந்தித்துக்கொண்டே இடதுகரத்திலுல்ல கடோற்கஜன் தேகத்தை தடவினமாத்திரத்தில் அவனும் நித்திரைவிட்டெழுந்தவனைப்போல, உயிர்பெற்றெழுந்தான். இதைக்கண்ட இடும்பி மிக்க ஆச்சரியமடைந்து சுபத்திரையைநோக்கி நீயார்? உன்னுரென்ன பேரென்ன சொல்லுமம்மணி! என்று சுபத்திரையைக் கட்டித்தழுவிப் பலவாறு கொண்டாடுகையில் சுபத்திரை இடும்பியைநோக்கி ஓ! அம்மா! நான் பாண்டவர்களில் நடுப்பிறந்தோராகிய அர்ச்சுனன் மனைவி. என்பெயர் சுபத்திரை இவனென் புதல்வன் நமக்குள் சம்பந்தம் தெளியாமையால் ஒருவர்க்கொருவர் புத்தஞ் செய்யும்படி நேரிட்டது இப்படிக் கெல்லாம் நடக்கவேண்டுமென்று பகவான் செயலிருந்தபடியால் இவ்வண்ணம் நடந்துவிட்டது என்று சொல்லியதைக் கடோற்கஜன் கேட்டுக் களிசாகரத்தில் மூழ்கினவனுகி சுபத்திரையைப் பணிந்து ஆசிபெற்று தம்பியாகிய அபிமன்னியுவைக் கட்டித்தழுவி நீங்களிப்படி நடோத்திரி காலத்தில் வரவேண்டிய கர்ண மென்னவென்றுவினவ, சுபத்திரையானவள் சொல்லத் தொடங்கினள்.

கேளுமப்பா கடோர்க்கஜா எனக்கு மூத்த அண்ணனுகிய பலராமர் தன் புதல்வியை அபிமன்னியுவாகிய இவனுக்குக் கொடுத்து மணஞ்செய்விக்கிறே னென்று அனேகர் முன்னிலையில் சொல்லி சொற்சோர்வு பட்டதையும் துரியோதனன் புதல்வனுக்கு கொடுக்க நிச்சயித்து நாளைய உதயத்தில் மூகூர்த்தம் நடத்தப் போகிறதையும் ஆதியோடந்தமாகச் சொல்லக்கேட்டு கடோர்க்கஜன் வெகுண்டு சினங்கொண்டு அந்த பலராமர் எப்படி துரியோதனன் புதல்வனுக்குத் தன் புதல்வியைக் கொடுத்து விவாகஞ் செய்விக்கிறுன் இந்த துரியோதனன் தான் எப்படி அக்ஷன்னிகையைக்கொள்கின்றுனே இதை நான் கூடிய சீக்கிரத்தில் அறிகிறேன். ஆகிலும் கலியாணநாளோ குருகிவிட்டது இனி தாமதஞ் செய்துக்கொண்டிருக்கலாகாது என்றுண்ணி ஆடா ராட்சதப்பயல்களே இரண்டு லட்சம் பேர்கள் சீக்கிரம் புறப்பட்டுப்போய் வைதகிரியிடம் இருங்கள் இன்னுமிரண்டு லட்சம் பேர்கள் துவாரகைக்குள் சென்று சவுனியொன்றேற்படுத்திக்கொண்டு இதில் நால்வர் காரியஸ்தர்க

ளாய் நின்று மற்றவர்களெல்லாம், காஸ்மீர், பொம்பாய், சால்வை களாகவும் பலவித வர்ண ஆடைகளாகவும் நவரத்தின ஆபரண ங்களாகவும் உருவமெடுத்துக்கொண்டு இருப்பதுந் தவிர பலராமர் துரியோதனாதிகளுக்காகவே இந்த ஜவுளியை வைத்தனரென்றும் அந்த துரியோதனாதிகள் தரித்திருக்கும் பழய வஸ்திரங்களையும் சால்வைகளையும் இரத்தினாபாணங்களையும் பெற்றுக்கொண்டு இந்த சால்வை வஸ்திரங்கள் ஆபரணங்களை யீயும்படி நேமித்தாரென்று சொல்லி வியாபாரஞ்செய்யக் கடவீர்களென்று கட்டளை யிட்டனுப்பினன். அவர்களும் அந்தப்படியே சென்று ரைவதகிரியினிலும் துவாரகையில் சவுளியிலும் பொருந்தி இருந்தார்கள். இங்கே கடோர்க்கஜன் தன் அம்மானுகிய இடும்பனையழைத்துரைவதகிரியி னிடம் போயிருக்கச்சொல்லி சுபத்திரையையும் அபிமன்னியுவை யும் தன் வலது கரத்தினிலேந்தி உட்காரவைத்து கண்களை மூடிக் கொள்ளச்சொல்லி அங்கிருந்தபடியே ஓரடியெடுத்துவைத்து ஓ அம்மா ரைவதகிரிக்கு வந்தோம் இனி யிரங்குங்களென்று அபி மன்னியுவையும் சுபத்திரையையும் இரக்கி அந்த ரைவதகிரிக் குகை யினிலவர்களை யிருக்கும்படி யமர்த்தி வெளியில்வந்து அரக்கர்களை எச்சரித்து ஜாக்கிரதையென்று சொல்லி திட்டஞ்செய்து தன்னு டைய மாய்கையினல் ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா சயனித்திருக்கும் அந்தப்புரத்துக்குள் புகுந்து அவர் நித்திரையிலிருப்பதை யறிந்து சமதமாதி ஷட்குணஐஸ்வரியத்திற் சிரேஷ்டமாகிய கடவுளே உம க்கு வந்தனம் இறப்புப் பிறப்பில்லாமலும் ஒருவராலுஞ் ஜயிக்கக் கூடாத தற்பரனே உமக்கு தண்டன் சமர்ப்பிக்கின்றேன் சகல அண்டாண்ட சராசரங்களிலும் ஜீவராசிகளிலும் பிராணி கோடிக ளிலும் உள்ளும புறம்புமாகி எள்ளுக்கு ளெண்ணெய்போல நிறை ந்திருக்கும் ஜெகதீசனே! உமக்கு சாஷ்டாங்க தெண்டனிடுகின் றேன் வேதங்களாலும் யோகீஸ்வரர்களாலும் பிரமனுலும் சிவனு லும் தேவேந்திராதி தேவர்களாலும் அறிதற்கரிய விராட்புருஷ னே உமக்கு அனேககோடி நமஸ்காரம் சகல பற்றுகளுமற்று உம் மையன்றி வேறொருவரையுந் தொழாம லுன்னையே நவவித பந்து வாக வெண்ணி இரவும் பகலும் தைதாராவிச் சின்னமாகத் துதி செய்யும் பரம பாகவதர்களுக் கினியவனுகிய பக்தவச்சலா! உம க்கு அனேகவந்தனம் யாதொன்று மறியாத இவ்வேழையின் மீது கிருபை கூர்ந்து அடியேன் கோரிக்கையை நிறைவேற்றி ரக்ஷித்தரு ளும் கோபால சூடாமணியே! என்று தோத்திரம் புரிவதைக்கே ட்டுங் கேளாதவரைப்போல அபினயித்து, இங்கு அகாலத்தில்வந்த வன் யீயார் உன்னுரென்ன? பேரென்ன? எந்தகாரியத்தை யனு சரித்துவந்தாய் சொல்லடா வென்றார். அதற்கு கடோர்க்கஜன் ஓ! சுவாமி! வாயு புத்திராகிய வீமசேன மகாராஜன் புதல்வனு கிய கடோர்க்கஜன் யான் வந்தகாரியம் தங்களுக்குத் தெரியாத

தொன்றுண்டோ ஆகிலும் யானே சொல்லுகிறேன் கேளும் தங்க ளுடைய தங்கையாகிய சுபத்திரையம்மாளும் புதல்வன் அபிமன்னி யுவும் வந்தார்கள். அவர்களை யழைத்துவந்து ரைவதகிரி பர்வதத் தில்வைத்து வந்தேன் தாங்கள் கிருபை செய்தால் அபிமன்னியுவு க்கு விவாகம் நடக்கும் இல்லாவிடில் மணம் நிறைவேறுவது கடின மாகுமென்று நவின்றான். அதைக்கேட்டு கிருஷ்ணமூர்த்தி சந் தோஷசித்தராகி ஓ! கடோர்க்கஜா! சகிரேகையைக் கொண்டு போய் ரைவதகிரியிற்சேர்ப்பது உன்பாரம்நடப்பிப்பது என்பாரம் இந்த காரியஞ்செய்து எனக்குத் தெரியப்படுத்துவையாகில் நான் வந்து உன் கோரிக்கையை நிறைவேற்றி வைக்கிறேனென்றனர். அம்மொழிகளைக் கேட்டவுடன் கடோர்க்கஜன் பேரானந்தமடை ந்து அந்தப்படியேசெய்து வருகிறேனென்று சொல்லிப் பகவா னைப் பணிந்து அந்தப்புரத்தை விட்டு வெளிப்பட்டு ரைவதகிரியை யடைந்து தன் அம்மானுகிய இடும்பனை யழைத்து ஓமாமா! நாமி ருவரும் அப்சர ஸ்திரீகளைப்போல வடி வெடுத்துக்கொண்டு பல ராமருடைய அந்தப்புரத்துக்குச் செல்லவேண்டும் சீக்கிரம் புறப் படுமென்று சொல்லி வாய்மூடுவதற்குள் இடும்பன் கண்டவுடன் யாவரும் பிரமிக்கும்படியான அப்சரசைப்போல வடிவெடுத்து நின்றான். இதற்குள் கடோர்க்கஜனும், அப்சரசைப்போல வடி வெடுத்துக் கொண்டு இருவரும் ஆகாயமார்க்கமாகக் கிளம்பிப் பலராமர் அந்தப்புரத்திற்கு நேராக இறங்கி உள்ளே புகுந்துபோவ தை அங்குள்ள துரியோதனன் மனைவி முதலானோரும் கண்டு இப் படிப்பட்ட ஸ்திரீகளும் உலகிலுண்டோ இவர்களென்ன தேவஸ்திரீ களோ அல்லது யக்ஷஸ்திரீகளோ இவ்விருவருடைய நடை தொடி பாவனைகளை நோக்கும்போது எல்லா ஸ்திரீகளைப் பார்க்கிலும் இவர்கள் மேலானவர்களாய்த் தோன்றுகின்றார்களென்று பிரமி த்து ஆச்சரிய மேலீட்டால் எல்லாரும் கூடிக்கொண்டு வேடிக்கைப் பார்த்து ஆனந்திக்கும்படி நடந்து ரேவதி பக்கலில் சேர்ந்தார்கள். ரேவதியும் இவர்களைக் கண்டு துரியோதனன் மனைவிகளாகுமென் றறிந்து அவர்களுக்குப் பொற்பீடங் கொண்டுவந்து போடு அதன்பேரில் உட்காரும்படி வேண்டினாள். அதற்கவர்கள் ஓ! அம்மணி! நாங்கள் துரியோதனமகாராஜன் மனைவிக்குத் தோழிக ளாகும் நாங்கள் இப் பொற்பீடத்தின் மீதிருக்கத் தகுமோ தகா தெனக் கேட்டு ரேவதி மிக்க ஆச்சரியப்பட்டு தாதிகளே இத்தனை சுந்தரமா யிருந்தால் அரசியெப்படி இருப்பாளோ வென்று விய ந்து தாதிகளைநோக்கி நீங்க ளிங்குவந்த காரணமென்ன வென்று வினவ, அதற்கந்த மாயாதாதிகள் ஓ அம்மணி! தாங்கள் புதல்வி க்கு ஆபரணங்கள் அனேகமாகச் செய்துகொண்டு வந்திருக்கிறார் கள். அதைப் போட்டுப்பார்த்து மீட்டவேண்டியதை மீட்டிக் குறு க்கவேண்டியதைக் குறுக்கும்பொருட்டு பீஷ்மாச்சாரி கல்யாணப்

பெண்ணை அழைத்து வரும்படி கட்டளையிட்டா ராகையால் அந்த காரியத்தை மூன்னிட்டு இவ்விடம் வந்தோமெனக் கேட்டு ரேவதி பிரம்மானந்த மடைந்துத் தன் புதல்வியாகிய சசிரேகையைஅழைத்து அடியேன் கண்ணே உன்பாட்டனார் உனக்காக அனேகவாபரணங்கள் செய்துகொண்டு வந்திருக்கின்றார்ம் அதை யுனக்குப் போட்டுப் பார்க்கும்படி அழைத்துவரச் சொன்னதாக இத்தாதியர்கள் சொல்லுகின்றார்கள் ஆகையால் நீ அங்கேபோய் வரக்கடவாயென்ற வின்ற மாத்திரத்தில் அச்சசிரேகை தடாலென்றோடி அரைவீட்டிற்குள்ளேபோய் புகுந்துகொண்டாள். அதைக்கண்டு ரேவதி பின்தொடர்ந்து ஓடி மகளேநோக்கி தாதிகள் வந்து காத்துக்கொண்டிருக்கின்றார்கள் அவர்க ளெண்ண நினைத்துக்கொள்ளுவார்கள் போடியம்மா போடி என்று கட்டாயஞ்செய்ய சசிரேகையானவள் ஐயையோ! நான் போகமாட்டேன் ஏனென்றால், நூறு மாமனார்களும், நூறு மாமிகளு மிருக்கின்றார்கள் அவர்க ளொவ்வொருவருக்கும் ஒவ்வொருதரம் தெண்டனிட எனக்கு மோ இளைப்பும் ஆயாசமும் எனக்கு நேரிடும் அப்போதென்னை ஆதரிப்பவர்கள் அங்காரிருக்கின்றார்கள். இந்த சிரமத்துக்காகவே நான் போகமாட்டேனென்று சொன்னாள். அதைக்கேட்டு ரேவதி அடியம்மா! அதற்கொருபாயஞ் சொல்லுகிறேன் அந்தப்படி செய்துவருவாய் அதென்ன உபாய மென்பையோ உன் மாமன்மார்கள் தனித்தனியா யிருக்கமாட்டார்கள். மாமிகளும் தனித்தனியிருக்கமாட்டார்கள் ஒரே கூட்டமாகவே இருப்பார்கள். ஆகையால், புருஷர்கள் சமூகத்தினில் ஒரே தெண்டனிட்டும் அந்தப்படியே ஸ்திரீகள் கூட்டத்தின் மூன்சென்று ஒரே தெண்டனிட்டு அவர்கள் சொற்படி நடந்து சீக்கிரம் வந்துசேருமம்மா வென்று சில புத்திமதிகளைச சொல்லி யனுப்ப சசிரேகையும் அன்னையின் கருத்துக்கிசைந்து அவ்விடம் விட்டுப் புறப்பட்டாள். அப்போது மாயா தாதிகளிலொருவள் சசிரேகையைக் கக்கத்திலெடுத்துக்கொண்டு கொஞ்சதூரம் நடந்து உடனே ஆகாயமார்க்கமாய்க்கிளம்பி ரைவதகிரியை யடைந்து குகைக்குள்ளே புகுந்து சுபத்திரை அபிமன்னியுவின் பக்கல் சசிரேகையை ஒப்புவித்துப் பதனம் பதனம் என்று எச்சரித்துச் சுயரூபத்துடன் கிருஷ்ணமூர்த்தியின் அந்தப்புரஞ் சேர்ந்து அவரைக்கண்டு பணிந்து சசிரேகையை ரைவதகிரிக்கிக் கொண்டுபோய் சேர்த்தசெய்தியை எச்சரித்தான். அதைக்கேட்டவுடன் கிருஷ்ணமூர்த்தி தேவகிவசுதேவர் ராதாருக்குமணி மூதலானோருடன் அந்தபுரத்தைவிட்டுப் புறப்பட்டு ரைவதகிரியைச்சேர்ந்து சுபத்திரை அபிமன்னியு சசிரேகை மூவரையுங் கண்டு களித்து கடோர்க்கஜனுல் கல்யாணமண்டபஞ் சிங்காரிக்கச்செய்து தேவேந்திராதி தேவர்களையும் நாரதாதி முனிவர்களையும் வைத்துக்கொண்டு மாப்பிள்ளையையும் பெண்ணையும் திவ்ய தீர்த்தங்களால் ஸ்னு

னஞ்செய்யச் சொல்லி ஆடையாபரணங்களால் அலங்கிருதஞ்செய்து இருவரையும் சபலக்கினத்தில் மணவரையிற் பொருந்தவைத்து வசிஷ்டாதிகளால் சடங்குகளை நடத்திச் சுபமுகூர்த்தத்தில் அபிமன்னியுவின் கரத்தால் சசிரேகையின் கண்டத்தில் மாங்கிலியஞ் சூட்டச் செய்து தேவதுந்துமி முதலான வாத்தியங்கள் கோஷிக்கச்செய்து தம்பதிக ளிருவரையும் ஆசீர்வதித்து வெகு சந்தோஷத்துடன் அவரவர்கள ஸ்தானம்போய்ச் சேர்ந்தார்கள். பின்பு கடோர்க்கஜன் சுபத்திரை அபிமன்னியு சசிரேகை இம்மூவரையும் அந்த ரைவதகிரியின் குகையிலேயே இருக்கச்செல்து தன் மாமனுகிய இடும்பனை நோக்கி, ஓ! மாமா நான் க்ஷத்திரிய பீஜத்துக்குப் பிறந்தவனுதலால் சொற்சோர்வு படாமல் சத்தியவா னுவதற்கு ஒருபாயஞ்செய்கிறேன் அதென்னவெனில் நான் சசிரேகையைப் போல,வடிவமெடித்துக் கொள்ளுகிறேன் நீ முன்போல அப்சரசை வடிவங்கொண்டு என்னை யெடுத்துப்போய் பலராமர் அந்தப்புரத்தில் ரேவதியின் பக்கலில் ஒப்புவித்து விட்டு இவ்விடத்தில் வந்திரும் என்று சொல்லி கடோர்க்கஜன் சசிரேகை வடிவெடுத்து நின்றுன். உடனே இடும்பன் அப்சரசைப்போல ரூபமெடுத்து மாயா சசிரேகையை தூக்கி இடுப்பின்மீது வைத்துக்கொண்டு ஆகாய மார்க்கமாய் கிளம்பிப் பலராமர் அந்தப்புரஞ் சேர்ந்து ரேவதியின் பக்கலில் சென்று ஓ! அம்மணி! உமது புதல்வியைப் பாரும் ஒப்பித்துவிட்டேன் ஒப்பித்து விட்டே னென்று சொல்லி விட்டு அங்கிருந்து கிளம்பி ரைவதகிரியைச் சேர்ந்திருந்தான்.

மறுநாட் பொழுது விடிந்தவுடன் துரியோதனுதிகளுடன் கூடிவந்த பிராமணனொருவன் துவாரகையைச் சுற்றிப்பார்த்து வருவோமென்று யோசித்து ஒவ்வொரு வீதியையுஞ் சுற்றி அங்குள்ளவேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டே கடோர்க்கஜன் கட்டளையின்படி ராக்கதமாய்கையினுலாகிய ஜவுளிக்கிடங்கைப் பார்த்துப் பிரமித்து இப்படிப்பட்ட ஜவுளிக்கிடங்கை எங்கும்கண்டதுமில்லைக் கேட்டதுமில்லையென்று ஆச்சரியப்பட்டு அந்த ஜவுளிக்கிடங்குக்கு எஜமானனை நோக்கி ! ஓ! ஐயா ! வர்த்தகரே ! அதோயிருக்கின்றதே அந்த சால்வை என்னவிலை இந்தப் பட்டுக்கரை அங்கவஸ்திரம் என்னவிலை என்றான். அதற்கந்த வர்த்தகன் பிராமணனை நோக்கி, ஐயா ! பிராமணோத்தமரே ! இந்த ஜவுளிதினுசுகள் விக்கிரயஞ் செய்வதல்ல, துரியோதனனைச் சார்ந்த பந்துக்கள் இதைப்பார்த்து எந்த தினுசின்மீது ஆசைப்படுவார்களோ? அதற்காக அவர்களிடமிருக்கும் பழசியைப் பெற்றுக்கொண்டு புதுசினைக் கொடுக்கும் படியாக பலராம சக்ரவர்த்தி எங்களுக்குக் கட்டளையிட்டு இந்தக் கிடங்கை வைத்திருக்கின்றார். என்று சொல்லவே பிராமணன் அப்படியானுல் நானும் துரியோதனமகாராஜனைச்

சேர்ந்தவன்தான் இந்தப் பழைய சால்வையையும் பழைய அங்கவஸ்திரத்தையுந் தருகிறேன் இதைப் பெற்றுக்கொண்டு அந்த புது சால்வையும் புது அங்கவஸ்திரத்தையுங் கொடுமையாவென்றான். அந்த மாவாவர்த்தகனும் இசைந்து பிராமணன் கொடுத்த பழைய துணிகளைப் பெற்றுக்கொண்டு புதிய துணிகளைக் கொடுத்தான் அதைப் பெற்றுக்கொண்டு அப்பிராமணன் அவை மாய்கையென் ராகியத்தை யறியாதவனுனதாலும், மெத்த பேழையு மானதினு லும், அதிக ஆசையினுலும், அந்த துணிகளை உடுத்திக்கொண்டும் போர்வை போர்த்திக்கொண்டும அதிக உல்லாசமாக நடந்து துரியோதனுதிகள் முன்னஞ் சென்றான். அதைக்கண்டு துரியோதனன் தம்பிகளி லொருவன் இதேது இப்பிராமணன் நம்மூடன் புறப்பட்டு வருகிறபோது மெத்த பேழையைப்போல விருந்தான். இப்படிப்பட்ட தீனனுக்கு இந்த அங்கவஸ்திரம், சால்வை எப்படி கிடைத்தது இந்த செய்தியைப் பிராமணனை யழைத்துக்கேட்டால் தெரியுமெனக் கருதிப் பிராமணனை யழைத்து விசாரித்தான் பிராமணனும் பலராமரால் ஜவுளி வைக்கப்பட்டிருக்கிற செய்தியையும் அதில் தன்பழைய ஆடையைக்கொடுத்துப் புதியதை வாங்கி உடுத்திக் கொண்டதையும் விவரமாக அறிவித்தான். அதைக்கேட்டு அவன் மெத்த ஆசைகொண்டவனுகி தன் தமயன்மார்களிடத்திலும் தம்பிகளிடத்திலும் இச்செய்தியைச் சொல்லக்கேட்டு அவர்களும் இன்னுமிருக்கப்பட்ட பீஷ்மர், துரோணர், கிருபர், முதலானவர்களுக்குஞ் சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்ட ஸ்திரீகளும் மற்றுமுள்ளவர்களும் பிராமணனைக்கண்டு ஆச்சரியப்பட்டு பீஷ்மர் ஒருவர் தவிர மற்ற வருஷர்கள் ஸ்திரீகள் யாவருக்கும் ஆசை யதிகரித்து அந்த ஜவுளிக் கிடங்கைப்பார்த்து வரவேண்டுமென்று மனமுண்டாகி அனைவரும் புறப்பட்டு அந்த ஜவுளி கிடங்கை யடுத்து அதிலிருக்கும் நவரத்தின ஆபரணங்களை யெல்லாம் பார்த்து ஆசித்து ஒவ்வொருஸ்திரீயும் தானணிந்திருக்கும் ஆபரணங்களை யெல்லாம் களைந்து வர்த்தகனிடங் கொடுத்து வர்த்தகனிட மிருக்கும் நவரத்தினங்க ளிழைத்த ஆபரணங்களையும் ஆடைகளையும் பெற்று அலங்கரித்துக் கொண்டார்கள் இதற்குள் துரியோதனுதிகளும் துரோணர், கிருபர், அஸ்வத்தாமன்முதலான பிரமுகர்களும் இன்னு முள்ள பிராமணர்கள் முதலாஞ்சனரும் அவரவர்கள் தரித்திருந்த ஆடைகளையும் ஆபரணங்களையுங் களைந்துக்கொடுத்து வர்த்தகனிடம் நவரத்தினபரணங்களையும் பட்டு பீதாம்பரங்களையும், சால்வைகளையும், வாங்கி உடுத்திக்கொண்டஸ்திரீ கூட்டங்களுடன்சேர்ந்து வெகு ஜெயிலாக நடந்து கல்யாண வீட்டை யடைந்தார்கள்.

பலராமருடைய அந்தப் புரத்தினில் சஞ்சரிகையைப்போல வடிவங்கொண்டிருக்கும் கடோர்க்கஜனுனவன் ரேவதியைநோக்கி,

அம்மா ! எனக்கு மெத்தப் பசியா யிருக்கின்றது அன்னம்போடு மென்றாள் உடனே ரேவதி மடப்பள்ளியி லிருக்கும் பிராமணனை யழைத்து இந்தப் பொற்கிண்ணத்தில் அன்னம் பருப்புநெய்விட்டுக் கொண்டு வாருமென, சசிரேகை ஓ! அம்மணி ! எனக் கப்படிவே ண்டாம் சமயல் செய்யும் பிராமணர்கள் யாவரும் வெளியில் வந்து விட்டால் நானங்குசென்று எனக்கிஷ்டமான பதார்த்தத்துடன் புசித்துவருகிறே னென்றனள். ரேவதியும் அக்கருத்துக்கிசைந்து பிராமணர்கள் யாவரையும் வெளியில் வரச்சொல்லி சசிரேகையை நோக்கி, அடியம்மா ! நீபோய் உன்னிஷ்டப்படி புசித்து வருவா யென சசிரேகையும் அன்னையின் சொற்படி சமையல்கட்டிற்குள் ளே புகுந்து சதவுகளைச் சாத்தித் தாளிட்டு அந்த மாயா சசிரேகை யாகிய கடோர்க்கஜன் தன் சுயரூபமெடுத்துக்கொண்டு அங்கே விவாகத்திறகு வந்திருக்கும் அனேகருக்கும் ஆகும்படி பருவாகார மாய் குவியல் குவியலாகக் கொட்டி யிருக்கும் அன்னத்தையும் அதற்குத்தக்க கரிகாய்வகைகளையும் பல டல பலகாரவகைகளையும் நெய்பாயசமுதலானவைகளையும் பார்த்து இத்தனையும் தரியோத னதியருக் கல்லவோ பலராமர் செய்துவைக்கும்படி கட்டளையிட் டிருப்பார் இதிலொரு அன்னமும் லகோடாவுக் குதவும்படியும் வைப்பேனே பாவற்றையும் புசித்துத் திருப்தியடைந்து அந்த துரியோதனதியர்கள் பசிபசியென் றலையும்படியாகச் செய்யவே ண்டுமென்று கருதி மலைபோன்ற அன்னக்குவியல்க ளனைத்தையும் ஒன்றுய்ச்சேர்த்து கரியமுதுகள் பச்சடிவகைகள் குழம்பு ரசம் பல கார திணுசுகள் பருப்பு நெய் பாயச முதலாகியதையும் அந்த அள் னத்தில் கலந்து பற்றென்பதில்லாமல் புசித்துக் கடாயிகள் டேக் ஸ்ா தவலை ஜோடுதலை முதலான பாத்திரங்களிலொன்று மில்லாம லுருட்டி தரகத்தீரத் தயிரைக்குடித்து அந்த சமையல்கட்டை வெ றுங் கட்டாகும்படிச்செய்து பழையபடி சகிரேகை யுருவத்துடன் வெளியில்வந்தான். உடனே பிராமணர்கள் சமயல்கட்டிற்குள் புகு ந்து பார்க்கிறபோது வெரும் பாத்திரங்களாகவும், பெருக்கிய பூமியைப்போல யாதொன்றுமின்றி யிருப்பதைக்கண்டு இதுவெ ன்ன ஆச்சரியம் ! மலைபோன்ற பல அன்னக்குவியல்களையும் அதற் குத் தக்க கரியமுது பலகார பாயாசம் பருப்பு முதலாகியவற்றை யும் ஒரு பெண்பிள்ளை புசிப்பாளோ ? புசிக்கமாட்டாள். அன்றி யும், வயிறுதாரியாயிருக்கினும் இத்தனையையும் புசிப்பார்களோ ? புசிக்கமாட்டார். அதிலும் பலராமருடைய அருமைப்பெண் இத தற்கென்ன குறைவு இந்தப் பெண்ணே யாவற்றையும் புசித்தாளெ ன்றால் யார்தான் நம்புவார்கள் ஒருவரும் நம்பமாட்டார்கள். ஆகையால் இச்செய்தி பலராமர் அறிந்தால் நம்மை யெல்லாம் எளி தில் விடமாட்டார். அவர் காதில் இச்செய்தி படாமுன்னம் நா மெல்லோரும் ஓடிவிட்டால் இன்னுஞ் சிலகாலம் உயிரோடு வாழ

லாமென்று அவர்கள் கூடி ஆலோசித்துக்கொண்டு ஒருவன்போன வழி மற்றொருவனுக்குத் தெரியாமல் ஓடிப்போய் விட்டார்கள். பினபு, பீஷ்மர், விவாஹத்திற்கு நேமித்த லக்கினம் சமீபித்துவிட்டது. பெண்ணை அலங்கரித்து அழைத்துவரும்படி கட்டளையிட்டார். அந்தப்படியே தாதிகளோடி ரேவதியைக்கண்டு சிக்கிரம் பெண்ணை அழைத்துவரும்படி பீஷ்மர், கட்டளையிட்டனரென்று நவிலக்கேட்டு ரேவதி சசிரேகையை யழைத்துப் பல திவ்ய தீர்த்தங்களிலுல் ஸ்நானஞ் செய்வித்து மேன்மையாகிய ஆடையாபரணங்களா லலங்கரித்து மணமுள்ள மலர்களேச்சூடித் தாதிகளுடன் கூட்டியனுப்பினள். அதற்குள் அங்கே பீஷ்மர் லக்குமணனுக்கு திவ்யதீர்த்தங்களைக் கொண்டு ஸ்நானஞ் செய்வித்து ஆடையாபரணங்களா லலங்கரித்து அழைத்துவந்தார். அப்போது சகல மேளவாத்தியங்களும் கடலெலிபோல கோஷிக்க, வேதவேதியர்கள் மங்களாசிகூற, ஸ்திரீகள் நவரத்தின தீபமேந்திவர இருவரையும் மணவரையிலிருத்தி நலங்கு முதலான சடங்குகளே நடத்தி மங்கள சூஸ்திரந் தரிப்பதன்பொருட்டு தம்பதிக ளிருவரையும் நிறுத்தி நடுவில் திரைபோட்டு மந்திராக்ஷதைகளாலும் வேதமந்திரங்களாலும் பூசித்து சபையோர்களாலும் பந்துக்களாலும் ஆசீர்வதிக்கப்பட்டமங்கல சூஸ்திரத்தை பீஷ்மர், லக்குணன் கையிற் கொடுத்து சசிரேகையின் கண்டத்தில் தரிப்பிக்கும்படி நேமித்தார். அந்தப்படியே லக்குமணனும் மங்கள சூஸ்திரத்தை கண்டத்தினில் கட்டமுயன்றபோது, மாயா சொரூபனுகிய கடோர்க்கஜன், புலியைப் போலவுங் கரடியைப்போலவும் தோன்றினன் அதைக்கண்டு லக்குமணன்பயந்து பீஷ்மரை நோக்கித், தாதா! இப்பெண்ணை சசிரேகை யென்று யெண்ணுகிறீர். இவள் புலியைப்போலுங் கரடியைப் போலும் நிமிஷத்திற்கு நிமிஷம் உருவமெடுத்துப் பயமுறுத்துகின்றனென்று சொல்லிக்கொண்டே யிருக்கையில் கடோர்க்கஜனவன் தன்பாதத்தின் பெருவிரலே கெட்டபாரையைப்போல நீட்டிக்கொண்டு மாப்பிள்ளையாகிய லக்குமணன் தலையினில் வைத்திருக்கினுள். அக்கெட்டபாரையானது தூளித்துக்கொண்டு பின் பக்கத்தில் வந்தபடியால் உதிரம் பெருகி யோடத் தலைப்பட்டது. அதனுல் லக்குமணன் மிகவும் நொந்து ஓ! தாதா! என் சொல்லைத் தாங்கள் நம்பிக்கை கொள்ளாமல் சசிரேகையென்றே நம்புகிறீர். இதோ பாரும் என் தலையில் துவாரமுண்டாகி உதிரம்பெருகி யோடுகின்றதென்றன். அதைக்கண்டு பீஷ்மர் இதென்ன விபரீதமாயிருக்கிறதென்று சொல்லி அந்த மாயா சசிரேகையைப் பிடித்துக்கொண்டு நீயாரென்றுவினவினர் அப்போது அவளுள்ளபடியாவும் ராக்கதமாய்கைக் குட்பட்டவளாகையால் ஒருவருக்கும் இக்கொடியசெய்கை காணப்படவில்லை யாதலால் அவர்கள் பீஷ்மரை நோக்கி இக்கன்னிகை பலராமருடைய புதல்வி சசிரேகை யென்ப

தற்குச் சந்தேகமில்லை என்றார்கள். அப்போது அம்முகூர்த்தத்திற்கு வந்திருப்பவர்களுக்குள் இந்த பீஷ்மர் ஒருவர்மாத்திரம் ராக்கதமாய்கைக்குள் அகப்படாதவ ராகையால் வந்திருக்கும் யாவரும் சொல்லியும் சந்தேக மேலீட்டால் மறுபடியும் சகிரேகையைப் பிடித்துக்கொண்டு யோரென்று கேட்கிற சமயத்தில் கடோக்கஜனவன் தன் சுயரூபத்துடன் பீஷ்மருடைய கையைத்தட்டிவிட்டு அடா ராக்கதப் பயல்களே சீக்கிரம் வந்து சேருங்களென்று ஆகாயமாய்க் கிளம்பிவந்து ரைவதகிரியைச் சேர்ந்தான் உடனே ஆடைகளாகவும் ஆபரணங்களாகவு மிருந்த அரசர்கள் இரண்டு லட்சம் பேர்களும் சுயரூபமெடுத்துத் தொப்பு தொப்பென்றுகுதித்தார்கள். அப்போது அங்குள்ள பீஷ்மர் ஒருவர்தவிர மற்றஸ்திரீகளும் புருஷர்களும் ஆடையாபரணங்களற்றும் பிறந்த சொரூபமாக விளங்கி ஒருவரை யொருவர் பார்க்க நாணங்கொண்டு கண்ணை மூடிக்கொண்டார்கள் இந்த விந்தையைக் கண்ட பலராமர் மெத்த விசனமும் அவமானமு மடைந்து உடனே நூதனமாகிய வஸ்திரங்களை அழைப்பித்து ஆளுக்கு நான்குமுழத்துண்டும் ஸ்திரீகளுக்கு எட்டுமுழத்துண்டுகளுங் கிழித்துக் கொடுத்துக் கட்டிக் கொள்ளச்சொன்னர் பின்பு பீஷ்மர் பலராமரை நோக்கி உமது கண்ணிகை எங்கே யென்றார் பலராமர் திடுக்கிட்டு நமது புதல்வியைக் காணோமே இதென்ன அன்னியாயமோ தெரியவில்லையே? என்று பல விடங்களிலுந் தேடிக்கொண்டிருந்தார் இந்த சந்தர்ப்பத்திலே விவாகத்துக்குவந்த யாவருக்கும் பசியதிகரித்துப் பாகசாலைக்குள் புகுந்து பார்க்கையில் அன்ன மென்பது கண்களுக்கு அகப்படாததால் மெலிந்து வாடி வதங்கி இங்கிருப்பதில் பசிதாபத்தினால் சாகவேண்டியதே ஊர்போய்ச் சேர்ந்தாலும் இன்னுஞ் சிலகாலம் உயிர்பெற்று வாழலாமென்று யோசித்து கௌரவர்கள் முதலாகிய யாவரும் புறப்பட்டு தங்கள் தங்கள் சுயஸ்தானம்போய்ச் சேர்ந்தார்கள், பலராமர் தன் புதல்வியைக் காணமல் பரதவிக்க ரேவதி முதலானபேர்கள் அந்தப்புரத்திற் கூடி ஓவென்றழத் தொடங்கினர்கள். இதைக்கண்ட பலராமர் மனங்கலங்கியாதொன்றுந் தோன்றுதவராகி திக்பிரமை யடைந்து சற்றுநேரமிருந்து உடனே மனதைத் திடஞ்செய்துக்கொண்டு சில யாதவர்களுடன் ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி யிருக்கும் அந்தப் புரத்தை யடைந்து தம்பி கிருஷ்ணவென நமழைத்தார். அப்போது கிருஷ்ணமூர்த்தியானவர் தலையில் பற்றுபோட்டுக் கொண்டும சால்வை போர்த்துக் கொண்டும் மஞ்சத்தின்மீது படுத்திருந்தபடியே ஏன் அண்ணா! மூன்று நாளாய் சுரம் தலைவலியினால் மெத்த கஷ்டப் படுகிறேன் வாரும் வாரும் என்றார். பலராமரும் கிருஷ்ணமூர்த்தியின் அருகிற்சென்று பார்த்து மெய்யென்றே நம்பி அப்பா! கிருஷ்ணா! நமது சகிரேகையைப் பார்த்தையாவென கிருஷ்ணமூர்த்தியும் அண்ணா நான்

பார்க்கவே யில்லை. எங்கு போனாள் விவாகம் நடந்துவிட்டதா என்று மெத்த சிரத்தையாய் விசனப்படி மவர்களைப்போல அபி நயித்தார் அதைக்கண்டு பலராமர் அப்பா! கிருஷ்ணா மெள்ள எழுந்து வருவாய் நீ இல்லாத விவாகமும் ஒரு விவாகமோ உன்னை நீக்கிச்செய்ய முயன்றதால் அந்த விவாக காரியம் நிறைவேறுமலும் கல்யாணப் பெண்ணை காணுமலும் போய்விட்டாள் என்று சொல்லி அழைத்துக்கொண்டே வருகையில் திரிலோக சஞ்சாரியாகிய நாரதர் அங்குவந்தார் அவரைக்கண் டுபசரித்து ஓ நாரதமகாமுனிவரே! எனது புதல்வியாகிய சசிரேகையைக் காணும் நீ ரெங்காகிலும் பார்த்தீரா வென்று மிக விசனத்துடன் வினவ, அதற்கு நாரதர் ஓ! பலராமரே! உமது புதல்விக்கி நேற்றிராத்திரியேவிவாகமாய்விட்டதே அதைப்பற்றி நீர் சந்தோஷமடைந்திருப்பதைவிடுத்து சசிரேகையைக் காணுமென்று விசனப்படவேண்டிய காரணமென்னவென்றார் அதற்கு பலராமர் வெகுண்டு சினங்கொண்டுஎப்படி விவாகமாயிற்று யாரை மாலியிட்டாள் யாரிதற்குக் காரணகர்த்தராக விருந்து நடத்தினவர்கள் பெற்றவன் நான் உயிருடனிருக்கத் தாயுமிருக்க யாரு மற்ற அனுதையைப்போல என்புதல்விக்குவிவாகஞ் செய்வித்தவன்யாவன் அவனே யின்னுனென்றுதெரியப்படுத்து வீரேயாகில் இப்போதே சித்திரவதை செய்து மடிக்கிறேனென்று கடுகடுத்துக் கூற நாரதர் கோழித்திருடியுங் கூடக்குலாவுவதுபோல நினக்குச் சமீபத்திலேதானே விவாகஞ்செய்வித்த எஜமானனும் யாதொன்று மறியாதவரைப்போலத் தானும் உம்முடன் சசிரேகையைக் காணுமே எங்குபோயினளோ யாரெடுத்துச் சென்றார்களோ நானென்று மறியேன். மூன்றுநாளாய் சுரத்திரனுல் தலையெடுக்க மாட்டாமல் படுத்திருந்தே னென்று சொல்லிக் கொண்டு கள்ள வேஷம் போட்டு உமக்கு நம்பிக்கை யுண்டாகும்படி நடிக்கின்ற தென்று சொல்லக்கேட்ட பலராமருக்கு அதிக சினமுண்டாகிப் பற்களை நறநறெனக் கடித்து மீசை படபடெனத் துடிக்க அடா தம்பி கிருஷ்ணா! என்னை யன்றி நீ இக்காரியஞ்செய்யலாமா? முன்னமிப்படியே சுபத்திரையை அர்ச்சுனனுக்கு எனக்குத் தெரியாமல் கொடுத்தாய் அவளென்ன கலகலென்று வாழ்கின்றது. உண்ணச் சோற்றுக்கும் கட்டத்துணிக்கும் வழியின்றி விதுரன் வீட்டினில் வேலை செய்துக்கொண் டிருக்கின்றாள். இஃதிருக்கட்டும், கன்னிகையை யாருக்குக் கொடுத்துத் மணம்புரிவித்தாய் அதைச்சொல்லுமென, ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி ஓ! அண்ணா! நானென்ன அறிவேன். பீமன் புதல்வனுகிய கடோரக்கஜன் என்னிடம் வந்து சுரத்தினுல் பீடிக்கப்பட்ட என்னை பலவத்காரமா யழைத்துச்செல்ல ரைவதகிரியையடைந்து அங்கிருந்த தேவேந்திராதி தேவர்களையும் யோகீஸ்வரர்களையும் பிராமணர்களையும் சுபத்திரை அபிமன்னியு இந்த நாரதர் முதலானோரையும் கண்டேன், அவர்

கள் யாதொரு விஷயமுஞ் சொல்லாமல் என்னைக் கொண்டு சகிரே கையை அபிமன்னியுவுக்குக் கொடுத்து மிகுந்த சிறப்பாக விவா கத்தை நடத்தி வைத்தார்கள். அதைக்கண்டு யான் மனஞ் சந் தோஷிக்காமல் அதிக சுரம் வந்துவிட்டபடியால் உடனே அவ்வி டம் விட்டு என்னரண்மனை சேர்ந்தேன். இதுவே யானறிந்தவிஷ யம். உம்முடைய அனுமதியின்றி நானெந்தக்காரியமுஞ் செய் வேனே? அன்றியும் முன்னமொருநாள் சகுனிவந்திருந்தபோது தாங்களெண்மீது சினங்கொண்டு இனி யென்முன் நிற்காதே போ டாபோ வென்று கூறியதை மறந்துவிட்டே னென்று யோசித் திருக் கின்றீரோ? ஒருவேளையேனும மறக்கமாட்டேன். மேலும் அப்போதே, பகவத் சூத்திரமொன் றிருக்கிறது அந்தப்படி நடக் குமேயன்றி உமதிஷ்டம் எனதிஷ்டப்படி எந்தக் காரியமும் நடவா தென்றுமொழிந்தேனே அதைச் சிறிதேனுங் கவனத்தில் வைத் தீரா பகவத் சூத்திரப்படியே நடந்து விட்டது என்னூர் அம்மொ ழிகளைக் கேட்டவுடன் பலராமருக்கு அடங்காக் கோபமுண்டாகி அந்த கடோர்க்ஜனுகிய நாக்கதனே இந்த விவாகத்தைக் கெடுத்து கௌரவக்களையும் அவர்கள் ஸ்திரீகளையும் தன் மாய்கையினால் அவ மானப்படுத்தி என் பெண்ணை நாஞ்ஞுவனுக்குக் கொடுக்க முயன் றிருக்க எனக்கும் என் மனைவிக்குந் தெரியாமல் மோசஞ் செய்து பெண்ணைக் கொண்டுபோய் விவாகஞ் செய்விப்பதற்கு இவரூர் என் பந்துவா என் குலத்தோனு? நாக்கதப்பயலுக்கு இத்தனை கெர் வமா? அந்த துஷ்டநாக்கதப்பயலை எளிதினில் விடப்போமா? இப்போதே சென்று யான் அவனையும், அவனுக்குத் துணையாக வருபவர்களையுங் கொன்று வருவேனென்று மெத்த ஆக்ருஷத் துடன் கலப்பை ஆயுதத்தை எடுத்துக்கொண்டு புறப்பட்டார். அதைக்கண்டு கிருஷ்ணமூர்த்தி குறுக்கேபோய் தடுத்து அண்ணு! உமக்கிந்த கோபமாகாது, (கோபமே குலத்தினையும் நலத்தினையுங் கெடுக்கவந்த களங்கம்) என்ற முதியோர் வாக்கியத்தின்படிகோப மானது, குலஒழுக்கத்தையும், நன்மார்க்கங்களையும் கெடுத்து பா பங்கள் மேலு மேலும் அதிகரித்து அந்தப் பாபராசிகளைக் கொ ட்டி வைப்பதற்கு ஒரு பெருத்தக் களஞ்சியமாகும். ஆதலால், இப்போ தமக்குண்டாகிய கோபத்தைச் சாந்தப்படுத்தி யான் சிறுவனு யிருக்கினும் என் சொல்லைக் கேட்டு குணகுணங்களை யுணர்ந்து நன்மையா யிருந்தால் அந்தப்படி நடந்துக்கொள்ளும் அது தீமையா யிருக்கில் நீக்கி விடுவீர் என்று புகன்று அவருடைய கோபத்தைத் தணித்து வினயமாகச் சொல்லத்தொடங்கினர்.

கேளும் அண்ணு! நமது கன்னிகையை மணம்புரிந்தவன் அன் னியனல்ல, தங்கையின புதல்வனுகிய அபிமன்னியு நமக்கு மரு மகனே. அவனுக்கு நம்மிடத்தில் பல விதத்திலுஞ் சண்டைசெ

ய்து கன்னிகையை மணம்புரிவதற்குச் சொந்த மிருக்கின்றது, அந்தச்சொந்தத்தைப் பாராட்டியே கடோர்க்கஜனைத் துணைபற்றி வந்து மோசமோ கபடமோ வஞ்சகமோ புரிந்துதன் காரியத்தை முடித்துக் கொண்டான். இப்படிப்பட்ட மோசஞ்செய்வானேன் ராஜாங்கமாகவந்து பேசி எவ்விலாரு மணமகிழ்ச்சியடைய விவாகஞ் செய்துக்கொண்டு போகிறது தானே என்பீராகில், மூன்னம் தாங்களே மோசஞ் செய்திருக்கின்றீர் ; அதெப்படி யென்றால், ஆதியிலமது கன்னிகையை அபிமன்னியுவுக்குக் கொடுக்கிறேனென்று அனேக அரசர்கள் முன்னிலையில் சொல்லிப் பின்பு துரியோதனன் புதல்வனுக்கு கொடுக்கத் துணிந்து சொற்சோர்வு பட்டதே மோசமாகும். இதைக்கொண்டு யோசிக்கு மளவில் நீர் செய்ததே மோசமாக விருக்கின்றது. அவன் செய்தது மோசமல்ல அன்றியும், இப்போதவர்களே யெல்லாங் கொன்று விடுகிறேனென்று உக்கிராகாரங்கொண்டு புறப்பட்டீர்? இப்படி நீர் போய் அவர்களையெல்லாங் கொன்று விடுவதால் உமக்கென்ன லாபம் உம்முடைய பெண் அமங்கலியாகி அந்தப்புரத்தை யடைந்து மாண்டு மடிந்துபோகிற பரியந்தங் கண்ணீர்விட்டு துக்கசாகரத்தினில் மூழ்கும்படியாகவே நேரிடும். அன்றியும் இதை நம்மைப் போன்றவர்கள் யாரேனுங் கேட்டால் நம்மையே இகழ்வார்கள், காரியம் மிஞ்சிப்போன பின்பு அதைப்பற்றி மூன்பின் யோசிக்காமல் மனம்போனபடி நடப்பதால் இகழ்வே யொழியப் புகழில்லையென்று பல நீதிகளே எடுத்தோதக் கேட்டு பலராமர் தம்பி கிருஷ்ணா! நீ சொலிய நீதி சரியே, என்மனது சந்தோஷமாயிற்று, இனிமேல் நடக்கவேண்டியதற்கு என்ன யோசனையென்றார். அதற்கு கிருஷ்ணமூர்த்தி ஓ! அண்ணா அவர்கள் மீது விரோத மென்பதை விடுத்து நாம் ரைவதகிரிக்குச் சென்று அவர்களுக்குச் சகமுண்டாகும்படி அழைத்துவந்து சகல அரசர்களுக்கு மணவோலையனுப்பி வரவழைத்து நல்ல லக்கினத்தில் முகூர்த்தம் நடத்தி அண்ணியும் தாங்களும் கண்ணாரக்கண்டு ஆனந்தித்துச் சகல வரிசைகளையுமீந்து அநுப்புவதே மேலான யோசனை இதைவிட வேறு யோசனை யொன்றும் என் மனதுக்குச் சம்மதிப்படவில்லையென்றார். இம்மொழிகளைக் கேட்டு பலராமர் களிசாகரத்தினில் மூழ்கினவராகி உடனே சகல பரிவாரங்களையும் யாதவர்களையும் வரும்படிக் கட்டளையிட்டுத் தானும் தன் தம்பி கிருஷ்ணமூர்த்தியும் யாதவர்களும், ரதகஜ துரக பாதாதி சேனைகளுஞ்சூழ பேரிடங்கா முதலாகிய மங்களவாத்தியங்கள் கோஷிக்கப் புறப்பட்டு ரைவதகிரியைச் சேர்ந்து அங்கிருக்கும்சபத்திரை அபிமன்னியி சசிரேகை இவர்களை யழைத்துக்கொண்டு துவாரகையை யடைந்து மூவர்களையும் அந்தப்புரத்திற் சேர்ந்து சகல அரசர்களுக்கும் மணவோலையனுப்பி துவாரகையை அலங்கரித்துப் பூரணகும்பங்கள் கிரு

த்தி கலவைச் சாந்துகள் தெளித்து வாழைக்கமுகு முதலாகிய வற்றைக்கட்டி கல்யாணமண்டப மலங்கரித்துச்சர்வ சித்தமுஞ் செய்து சுபலக்கினத்தில் தம்பதிகளை அழைத்துவந்து மணவரையிற் சேர்த்து சடங்குகளனைத்தையும் நிறைவேற்றி மந்திர புஷ்பாக்ஷதைகளா லர்ச்சித் திருக்கிற மங்கல சூத்திரத்தை அபிமன்னியுவினிட மீந்து சசிரேகையின் கண்டத்தினில் கட்டும்படிச் செய்து வசிஷ்டர், வால்மீகர், சதானந்தர் முதலான பிரமரிஷிகள் ஆசிகூறப் பிராமணஸ்திரீகள் மங்களம்பாட கணிகை மாதர்கள் ஆடிக்கொண்டாட வெகு ஆடம்பரமாக விவாகத்தை முடித்து, கோதான, பூதான, வஸ்திரதான, கன்னிகாதான, சொர்ண தானங்களை அபாரமாகச் செய்து தன்பந்துக்களை அரசர்கள் முதல்வோருக்குக்குத் தக்கபடி பரிசளித்து விடைதாப் பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் நகரஞ் சேர்ந்தார்கள். பின்பு பலராவர் ரதகஜ துரகபதாதிகளும், ஆடையாபரணங்கள் முதலான பலவித சீதனங்களைகொடுத்து அபிமன்னியுவையும் சசிரேகையையையும் தன்னரண்மனையிலேயே இருக்கும்படி நியமித்து பிரமானந்த மடைந்திருந்தார்.

அப்போது சுபத்திரைக் குண்டாகிய சந்தோஷத்தை இன்னதென்று சொல்லமுடியாது. அதென்னவெனில், புதல்வனையும் மருகியையுங் கண்டு களிசாகரத்தினில் மூழ்கினவளாகி இத்தனையும் நமது அண்ணனுகிய கிருஷ்ணமூர்த்தியின் சகாய மில்லாவிடில் இந்த விவாக முடியுமோ முடியாது யென்று கிருஷ்ண பரமாத்மாவைப் பலவாறு புகழ்ந்துக் கொண்டாடி, நமது நாயகன் விராட மகாராஜன் அரண்மனையி லிருக்கும்படி நமக்குக் கட்டளையிட்டிருக்க இனி நாமிங்கிருந்தால் பதிவாக்கைக் கடந்த பாவியாவோம். ஆதலால், சீக்கிரம் ஹரித்துவாரம்போய் சேருவதே நமக்கு யோக்கியதையெனக் கருதி பலராமர், ரேவதி, கிருஷ்ணமூர்த்தி, முதலானோரிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு ரதாரோகணஞ் செய்து ஹரித்துவாரத்தை யடைந்து விதுரருடைய அரண்மனையைச் சேர்ந்துத் தன் கணவனையே சிந்தித்து வந்தித்து சிலவருடங்கள் கடத்திக்கொண்டிருக்கிறபோது பாண்டவர் வனவாசஞ் ஒழித்து வெளிப்பட்டு துரியோதனனுடன் யுத்தம் புரிந்து வெற்றிபூண்டு அஸ்தினபுரத்தை யடைந்தபோது அர்ச்சுனனுடு பதிபக்தியுடன் இல்லறம் நடத்தி முடிவில் திரௌபதியுடன் சொர்க்கலோகத்தை நாடி ஐவரும் போகும் போது (சுபத்திரை யாவள்) தன் கணவன் பிரிவாற்றுமையால் மெத்த மனமுருகிப் பதறிக் கதறி யழுது புலம்பித் தன்பிராணனைவிடுத்துப் பேரின்ப வீட்டை யடைந்தனள்.

சுபத்திரை கற்பின் மகத்துவம் முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

ஆண்டாள் கற்பின் மகத்துவம்

ஸ்ரீ வில்லிபுத்தூரெனுந் திவ்ய தேசத்தில் விஷ்ணுசித்தரென்று பெயர்கொண்ட பிராமண ரொருவரிருந்தார் தாய்தந்தையர்கள் அதி பாலியத்திலேயே தேக வியோகமடைந்து விட்டபடியால் இவர் கல்வி பயிலாமலே தன் மரபினர் வீடுகளில் யாசகமெடுத்து ஜீவித்துக்கொண்டு வருகையில் தனக்குத்தானே ஒரு யோசனை யுண்டாயிற்று அதென்னவெனில் ; வடபெருங் கோயிலானுக்குப் பூமாலைக் கைங்கரியஞ் செய்தால் நிரகூர குக்ஷியாகிய நமக்கு மெத்த நலமாகும் என்று கருதி, அவ்வூரிலேயே மூன்ஞேர்கள் சம்பாதித்த நிலத்தினைக் கொத்தி அதைப் புழுதியாகச் செய்து அதற்கு ஜலங்கட்டி அதில் மல்லிகை, மூல்லை, இருவாக்ஷி, சண்பகம், மரு, மருக்கொழுந்து, அலரி, பாதிரி, சுரபுன்னை, பாரிஜாதம், வகுளம், மஞ்ஜரஞ்சிதம், கோங்கு, மந்தாரை, கொடிசம் பங்கி, நிலசம்பங்கி, ஜாதிமல்லி, குடமல்லி, ரோஜா, துளசி, முதலாகிய பற்பல புஷ்ப்பச்செடிகளை வைத்து அவற்றிற்குக் காலந்தப்பாமல் ஜலம்பாய்ச்சிக் களையெடுத்து யாசகத்திற்குப் போகும் வேளை யன்றி, மற்றைப் பொழுதெல்லாம் நந்தவன கைங்கரியத்திலேயே காலத்தைப் போக்கி வருகையில் இச்செடி கொடிகளெல்லாம் நாளுக்கு நாள் செழுத்துந் தழைத்தும் அரும்புகளெடுத்தும் மொக்குகளாகிய மலர்ந்தும் வருவதைக்கண்டு விஷ்ணுசித்தர் மிகவும் களித்து ஸ்நானானுஷ்டங்களை முடித்து மலர்களை யெடுத்து மாலையாகத்தொடுத்து அதனை அர்ச்சகரிடங் கொடுத்து பகவானுக்கு சமர்ப்பித்துக் கொண்டு நெடுநாள்வரையில் கைங்கரியஞ் செய்து வருவதை யறிந்து அச்சந்நிதி தருமகர்த்தாவானவர் தினமுமிரண்டு வேளையும் விஷ்ணு சித்தருக்குப் பிரசாதங் கொடுக்கும்படி மணியக் காரருக்கு நியமித்தார். அப்படியே மணியக்காரரும் விஷ்ணு சித்தருக்கு இரண்டு வேளையும் பிரசாதங் கொடுத்துக் கொண்டு வந்தார் விஷ்ணுசித்தரும் அப்பிரசாதத்தைக் கைக் கொண்டு புசித்து அன்னாள் முதல் யாசகத்திற்குப் போவதை விடுத்து மென்மேலும் நந்தவன கைங்கரியத்திலேயே முயர்ச்சி செய்திருந்தார்.

இப்படிக்கிவர் நந்தவன கைங்கரியத்தில் ஊக்கமுடையவராகவும் மாலைகள் தொடுத்து தினமுங் கொடுப்பதில் நிரேக சிரமத்தைப் பாராதவராகவும் பக்தி மேலிட்டவராகவும் தன் அம்சம் பெற்றவராகவு மிருப்பதற்கு மிக்க சந்தோஷித்துப் பகவான் தன்னுடைய தேவியாகிய பெரிய பிராட்டியை அழைத்துப் பெண்ணே ! நீ பூலோகத்தில் பூமாலைகள் தொடுத்து எனக்கு சமர்ப்பித்

துக் கொண்டிருக்கும் விஷ்ணுசித்தர் நந்தவனத்திலிருக்கும் திருத்துழாய்ச் செடியின்கீழ் அயோனிஜையாய் அவதரிக்கக்கடவாய் என்று கட்டளையிட்டார். அந்தப் பெரிய பிராட்டியும் பகவான் கட்டளையின்படி பூலோகத்திற்குவந்து விஷ்ணு சித்தர் விருத்தி செய்திருக்கும் நந்த வனத்தை யடைத்துத் திருத்துழாய்ச் செடியின் கீழே சிறுமதலையாகி யிருந்தனள். அப்போது விஷ்ணுசித்தரும் வழக்கப்படி ஸ்நானானுஷ்டானங்களை முடித்துப் பூக்குடலையை யெடுத்துக்கொண்டு நந்தவனத்திற்குள் நுழைந்து மலர்களைப் பரித்துக்கொண்டே வருகையில் அங்கொரு திருத்துழாய்ச் செடியின் கீழ் சிறு குரலோடு அழுதுக் கொண்டிருக்கும் பெண் சிசுவைக் கண்டு பூதத்தை பச்சாத்தாப மடைந்தவராகி அச்சிசுவை யெடுத்துப் பார்த்து சாமித்திரிகா சாஸ்திரத்தின்படி பெண்களுக்குரிய சகலலட்சணங்களும் பொருந்தி யிருப்பதை யுணர்ந்து, இப்பெண் சிசு பெரியபிராட்டி அம்சம் பெற்றவளாகவும். அப்படிக் இல்லாவிடில் இந்த ரூபரேகை சௌந்தரியமும் மானிடப் பெண்களுக்குண்டாமோ? இப் பெண்ணை நீளாதேவியென்றே சொல்லத்தகும். இச்சிசுவுமக்குக் கிடைத்ததும் பகவானுடைய கிருபையே' என்றுணர்ந்து அங்கொரு சுத்தமான பூமியில் தன்னுடைய உத்தரீயத்தை நான்கு மடிப்பாக மடித்துப்போட்டு அதன்மீது அச்சிசுவை வைர்த்திவிட்டு வேண்டியமட்டுக் திருத்துழாயெடுத்துக்கொண்டு வந்து கொட்டகையில்வைத்துச் சென்று சிசுவையும் உத்தரீயத்தையு மெடுத்து வந்து கொட்டகையிலோர்புரத்தில் இரண்டு உத்தரீயங்களை மெத்தென விருக்கும்படி பரப்பி அதன்மீது குழந்தையைக் கிடத்திக் குழந்தையைப்பார்த்த வண்ணம் மாலைகளைத் தொடுத்து அம்மாலைகளைக் குடலையிலமைத்து வைத்து அக்குடலையை இடது தோளினில் மாட்டிக்கொண்டு குழந்தையை யெடுத்து இருகரங்களினும் மேந்தியபடியே சந்நிதிக்குட்சென்று குடலையுடன் மாலைகளை அர்ச்சகரிட மொப்புவித்து விட்டு, அச்சிசுவை ஏந்திக்கொண்டுபோய் தருமகர்த்தா வீட்டையடைந்து அவரைக்கண்டு தனக்கு அச்சிசுகிடைத்த வரலாற்றை யுரைத்து 'இச்சிசுவுக்குப் பால் வேண்டியிருக்கிறது. இந்த கைங்கரியம் தங்களாலாகவேண்டு' மென்று இனியமொழி கூறினர். அதைக்கேட்டு அந்த தருமகர்த்தா அச்சிசுவை சமீபத்தில் கொண்டுவரச் சொல்லி பார்த்துப் பேரானந்த மடைந்து உடனே கன்றுடன் கூடப் பசுவொன்று கொடுத்தார். விஷ்ணு சித்தரும் அப் பசுவையுங் கன்றையும் ஓட்டிக்கொண்டு மெத்தக் களிப்புடன் தன்னிருப்பிடமாகிய நந்தவனக்கொட்டகையைச் சேர்ந்து அப்பசுவின் பாலைக் கரந்து அக் குழந்தைக்கு ஊட்டிக்கொண்டும் தானெடுத்துக்கொண்ட கைங்கரியத்தை விடாமல் நடத்தியும், அப்பெண் சிசுவை மெத்தப் பிரியத்துடன் வளர்த்து வந்தார். அச்சிசுவும் வளர்பிறைச் சந்தி

னைப்போல நாளுக்குநாள் செல்வமாக வளர்ந்து ஐந்துவயதிலேயே பொம்மை வீடுகட்டி, அவ்வீட்டினில் ரங்கநாதனை எளப்பண்ணி, அந்த ரங்கநாதனுக்கு அனுதினமும்திருமஞ்சனம் ஆடையாபரணம் தூப தீப நைவேத்தியங்கள் சமர்ப்பித்துக்கொண்டும் வருவதை விஷ்ணுசித்தர் கண்டு, சந்தோஷித்தவராய் அதி பாலியத்திலே தானே இந்த பாலிகைக்குப் பக்தி யுண்டாயிற்றே, எல்லோருக்கும் இப்படிப்பட்ட மனதுண்டாவது மிகவும் அரிதாகுமென்று எண்ணி மென்மேலும் அப்பாலிகையின்மீது அதிகப் பிரியமுடையவராக விருந்தார்.

இப்படி யிருக்கிறபோது, ஒருநாள் விஷ்ணுசித்தர் இப் பெண்ணுக்கு என்ன பெயரிடலாமென் றாலோசித்து ஆதியில் அக் குழந்தையைக் கண்டதாலேக் கணக்கிட்டு ஆடிமாதம் பூரநக்ஷத்திரமும் கடலகத்தினமும் பொருந்தி யிருந்தமையால் ஆண்டாளென்று நாமகரணமிட்டு தன்னுல் கூடியமட்டும் தான தருமங்களை பிராமணர்களுக் கீந்து ஸ்ரீ மகாலட்சுமியே இவளாகுமென்று பாவித்து இருக்கிறபோது, ஒருநாள் விஷ்ணுசித்தர் வழக்கப்படி மாலைகள் மிக்க வுன்னிதமாகக் கட்டிக் குடலையிற் சேர்த்து வைத்துவிட்டு எதோ காரியமாய் வெளியிற் போயிருக்கிறபோது ஆண்டாள் அப்புஷ்பக்குடலையை எடுத்து வைத்துக்கொண்டு அதிலிருந்த மாலைகளையும் புஷ்பச் செண்டுகளையும் எடுத்து தரித்துத்கொண்டு நிலைக் கண்ணுடியின் முன்னின்று தன்னழகைப்பார்த்துப் பகவானுக்குச் சூடினதும் இந்தப்படி தானே மிக்க சுந்தரமாக விளங்குவாரென்று தனக்குத்தானே யோசித்திருக்கிற சமயத்தில் திடீரென்று விஷ்ணுசித்தர் வருகிற அரவமறிந்துப் பயத்தினுல் சிக்கிரமாக மாலைகளைக் களைந்து வைப்பதைக்கண்ட விஷ்ணு சித்தர் விரைந்து சென்று குடலையிலிருக்கும் மாலைகளைப் பார்க்கையில் அது ரோமத்துடனிருப்பதை யுணர்ந்து இது சேஷப்பட்டு விட்டது ஆதலால் இதைப் பகவானுக் குபயோகித்தால் தோஷமுண்டாகுமென்று கருதி, ஓ! ஆண்டாளம்மா! நீ யிப்படிப்பட்ட காரியஞ்செய்யலாமா? பகவானுக் கென்று சீர் திருத்திய மாலைகளை நீ தரித்துக் கொள்ள உனக் கழகுண்டாமா? இனியேனும் எப்போது இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யாதேஎன்று பற்பல புத்திகளைச்சொல்லி மறுபடியும் நந்தவனத்திற் சென்று மலர்களைக் கொய்துக் கொண்டு வந்து வேறு புதிய மாலைகளைத் தொடுத்து பகவானுக்குத் திருவாராதனை வேளை கடந்துபோகிறதே என்றுன்னி அந்த விஷ்ணுசித்தர் சிக்கிரமாக மாலைகளை எடுத்துச் சென்று பகவானுக்கு சமர்ப்பிக்கும்படி கொடுத்தார். அப்போது பகவான் ஓ! விஷ்ணுசித்தரே! சிறிதுகோரம் இங்கிருந்து போமென்றார். அதைக் கேட்டு விஷ்ணுசித்தர் பகவந் நியமனத்தின்படி அங்கிருந்தபடியே

'என்றுமில்லாமல் இன்று நம்மை சிறிதுநேரம் யிருக்கும்படி பகவான் கட்டளையிட்ட காரண மேதோ முன்னம் நாம்கட்டிய மாலைகள் சேஷப்பட்டு விட்டதென்று அந்த புஷ்ப்ப மாலைகள் நீக்கி வேறு புதிய மாலைகளைக் கட்டி வந்தோமே இதிலும் ஏதாகிலும் ரோமங்களிருக்கின்றதோ என்னமோ அறிந்திலோம் இந்த தோஷத்திற்காக பகவான் என்ன தண்டனைவிதிப்பரோ' என்ற வேக்கங் கொண்டிருந்தார். இதற்குள் சந்நிதி அர்ச்சகர் பகவானுக்குத் திருமஞ்சனங் கண்டருளி ஆடையாபரணங்களைத் திருத்தி மலர் மாலைகளைச் சாற்றும் பொருட்டுக் குடலையை எடுத்தார் அதையறிந்து பகவான் அர்ச்சகரை நோக்கி, ஓய் பட்டாச்சாரி! நமக்கு இம்மாலைகளைச் சாற்றவேண்டாம் சற்றே நிதானியும் அதோயிருக்கிற விஷ்ணு சித்தரை இங்கே வரச் சொல்லுமென அந்தப்படியே அர்ச்சகர் விஷ்ணுசித்தரை எச்சரிக்க அவரும் பகவானுக்குச் சமீபத்திற் சென்று பயபக்தி வினயத்துடன் கைகட்டி வாய் போத்தி நின்றார். இப்படி நின்றிருக்கும் விஷ்ணு சித்தரை நோக்கி 'ஓய் பரம சாதுவே! இப்போது நீர் கொண்டு வந்த மாலைகளெனக்குப் பிரியமில்லை. இதில் மணம் கிடையாது அன்றியும் இம்மாலைகளைக் கட்டின வனக்கும் சூடிக்கொள்ளு மெனக்கும் யாதொரு பிரயோஜனமுமில்லை. ஆதலால் இம்மாலைகளென் மனதுக்குப் பிரியப்படவில்லை, உமது நந்தவனக் கொட்டகையில் நின்ற புதல்வி சூடிக்களைந்த மலர்மாலைகள்மீதென் மனம் பிரியங்கொண்டிருக்கின்றது, அமமாலைகளைச் சீக்கிர மெடுத்து வாருமென்று நியமித்தார். அதற்கு விஷ்ணுசித்தர் பகவான் திருவடிகளில்விழுந்து பணிந்து எழுந்து, 'ஓ! பரமபாவனமூர்த்தி! எங்கும் பிரசித்தமாகிய நற்கீர்த்தியே? அம்மாலைகள் என் புதல்வி தரித்துக்கொண்ட படியாலும் அவற்றில் ரோமங்கள் கலந்திருந்த படியாலும் சேஷப்பட்ட மலர் மாலைகளை தேவரீருக்குச் சூட்டிஸ்ல் தோஷ மூண்டாகு மென்றுங் கருதி, வேறுமாலைகளைச் சீர்திருத்தி கொண்டு வந்தேன். தங்கள் மனதுக்கு எந்த மாலைகள்மீதுப் பிரியமோ அந்தப்படி கொண்டுவந்து கொடுக்க சர்வசித்தமாயிருக்கிறேன்' என்றார். அதற்குப் பகவான் விஷ்ணு சித்தரை நோக்கி 'ஓய் சாந்தகிலரே! எனக்கு அந்த சேஷப்பட்ட மாலைகளின் மீதே பிரியமுண்டாயிருப்பதால் அந்தமாலையையே கொண்டுவந்து சமர்ப்பிக்கக் கடவீ' ரென விஷ்ணுசித்தரும் நந்தவனத்திற்கு மீரைந்துசென்று அம்மாலைகளை யெடுத்துவந்து அர்ச்சகரிடம் அளித்தார் அர்ச்சகரும்அம்மாலைகளைச்சாத்தி அர்ச்சனைமுதலாகிய ஆராதனையுஞ் செய்து வழக்கப்படி கதவைமூடிச் சென்றார். விஷ்ணுசித்தரும் சந்நிதிப் பிரசாதம் பெற்றுக் கொண்டு தன்னிருப்பிடமாகும் நந்தவனக் கொட்டகையைச் சேர்ந்துப் பிரசாதத்தைப் புதல்விக்கும் அளித்து 'ஓ! அம்மணி! ஆண்டாளே! உன்னுடைய

சாந்த சமதமாதி குணங்களையும் அழகு சவுந்தரியங்களும் பகவ தபிமானத்தையும் நானென்னவென்று புகழ்ந்து கொண்டாடப் போகிறேன்; உலகத்தி லுனக் கிணையான உத்தம ஸ்திரீகளைக் கண் டதுமில்லை, ஒருவரால் சொல்லக்கேட்டதுமில்லை. இப்படிப்பட்ட உத்தமமாக விருப்பதினா லன்றோ நீசூடிக் களைந்த மலர்மாலைகளில் மணமுண்டா யிருக்கிறதென்றும் மற்ற மாலைகள் தனக்குப் பிரிய மில்லை யென்றும் அவற்றை நீக்கி நீ சூடிக்களைந்த மாலைகளையே கொண்டுவாச் சொல்லி சாத்திக்கொண்டு மிக்கப்பிரகாசமாக விள ங்கினார். ஆகையால் இன்றுமுத லுனக்கு சூடிக்கொடுத்த நாச்சி யார் யென்று இரண்டாவது நாமகரண மிடப்பட்ட' தென்று சொல்லி முன்னிலும் அதிகப் பிரியத்துடன் போஷித்துக்கொண் டிருந்தார்.

இப்படியாக ஆண்டாள் சூடிக்கொடுத்த நாச்சியாரென் னும் பெயர் பெற்றுத் தன் தந்தையாகிய விஷ்ணு சித்தராலும் அந்த ஸ்ரீ வில்லிபுத்தூர் திவ்ய தேசத்தில் வசிக்கும் யாதவத்திரா ளும் புகழ்பெற்று அன்று தொடங்கி தன் தந்தையாகிய விஷ்ணு சித்தர் மலர்களை யெடுத்துவந்து கொடுக்க அந்த ஆண்டாள் அவ ற்றைக் கொண்டு பகவந்நாம பாராயணஞ் செய்துகொண்டே மாலை கட்டிக்கொடுக்க அம்மாலைகளைக் கொண்டுபோய் பகவானுக்கு சம ர்ப்பித்து வருவார். இப்படி தினந்தோறும் அந்த விஷ்ணு சித்தர் மலர்களை யெடுத்து வந்து கொடுப்பதும் அம்மலர்களை ஆண்டாள் மாலைகளாக பகவன்னும தியானத்துடன் கட்டிக்கொடுக்க அவ ரும் அம்மாலைகளை பகவானுக்கு சமர்ப்பித்துக் கொண்டும்வரு வாராயினர்.

ஒருநாள் விஷ்ணுசித்தர் தன் புதல்வியாகிய ஆண்டாளை நோ க்கி, !ஓ அம்மணி! உனக்கிப்போது பெதும்பைப் பருவங் கடந்து மங்கைப் பருவம் வந்து சேர்ந்திடும் வயதாயிற்று உன்னுடைய நடவடிக்கைகளைப் பார்த்தால் பகவான் விஷயத்திலே அன்புசெ ய்து வருகின்றாய் பகவானும் உன்மீதும் மெத்தக் கிருபைவைத் திருக்கின்றார், மேலும் உன்னுடைய ரூபரேகை சவுந்தரியங்களை நோக்கு மளவில் உன்னைப் பெரிய பிராட்டியென்றே சொல்லத் தக்கதாக விருக்கிறது. இப்படிப்பட்ட அருமையும் பொருமையும் உரிமையுமான உனக்கு மணஞ்செய்விக்க வெண்ணங் கொண்டேன் உலகத்தில் தாய்தந்தையர் தங்கள் பெண்ணுக்கு வயது வந்தவுட னே ஒருவனைத்தேடி அப்பெண்ணுக்கு விவாகஞ் செய்விப்பது அ வர்களுக்கு கடமை யாதலால், நீ அயோனிஜையா யிருந்தபோதி லும் உனக்குத்தக்க வரனைத் தேடவேண்டிய கடமை என்னதே. ஆதலால், நிச் கருத்தென்ன வெளிப்படுத்து மென்றார். அவ்வச

னக்களைக் கேட்டு ஆண்டாள் சிறுநகை புரிந்து ஓ! தந்தையே! எனக்குப் பிராணநாயகன் எப்படிப்பட்டவனுக விருக்கவேணுமென்றுல் இறப்பும்பிறப்பு மில்லாதவனும், அஷ்டைஸ்வரிய சம்பத்துக்களுடையவனும், வேறெவர்களாலும் தன்னை ஜயிக்கக் கூடாதவனும் சாமுத்திரகா சாஸ்திர விதிப்படி சகல லட்சணங்களு மமைந்தவனுகில்லாத வித்தை புத்திகளை யுடையவனும், பிரம குலத்தோர்கள் கொண்டாடப்பட்ட உத்தம குலத்தினி லுதித்தவனும், சரணமடைந்தவர்களை ரக்ஷிக்கும் தயாள குணமுடையவனும், யாவரும் தன் திருவடிகளைத் துதித்திருக்க அவர்களுக்கு தன் படைவீடாகிய நித்திய முக்தர்கள் வசிக்கும் பரமபத சாம்பிராச்சியத்தையளிப்பவனு மெவனே அப்படிப்பட்ட நாயகனை மணம்புரிய வேண்டுமென்று கருத்துடையவளாகி யிருக்கின்றேன். இது நிச்சயம்! ஆதலால், இப்போது யான் சொல்லிய வித்தனை குல நல முதலான செய்கைக்குப் பாத்திரனைத் தேடி எனக்கு மணம் புரிவிப்பீரேயாகில் சம்மதிப்பேன். இது சத்தியமென்று கூறக்கேட்டு விஷ்ணுசித்தர் 'இது வென்ன! எவர்களாலுஞ் சாதிக்கக்கூடாத காரியம்! இப்பெண் சொல்லிய இத்தனை வகைகளையும் பொருந்தி யிருப்பவன் சாக்ஷாத்து ஜகதீச னொருவனே! அன்றி வேறெவர்க்கும் இத்தியாதிகளெல்லாம் பொருந்தி யிருக்குமோ? ஆதலால் தேவேந்திராதி தேவர்களுக்கும், பிரம ருத்திரர்களுக்கும், சனக சனந்தனாதி யோகீஸ்வர்களுக்கும், வேதங்களுக்கும், மனதுக்கும் வாக்குக்கு மெட்டாத பரம்பொருளைத் தேடி தனக்கு மணஞ் செய்விக்கும்படி சொல்லும் இக்காரியம் நம்மாலாகா' தென்றுகருதி, பகவான்செயலின்படி யாகுமென்று தீர்மானித்துப் பதிலொன்றுஞ் சொல்லாமல் சும்மாயிருந்து விட்டார்.

பின்பு ஆண்டாள் இரவும் பகலும் இடையிடாமல் பகவத்தியானஞ் செய்துக்கொண் டிருக்கிறபோது தனுர் மாசம் வந்து விட்டது, அம்மாசத்தில் நோன்பு நோக்க முயன்றுள். அதெப்படியெனில், அந்த வடபெருங்கோயிலையே நந்த கோபனுடைய அரண்மனையாகவும், அதில் வசிப்பவர் ஸ்ரீகிருஷ்ண பலராமநந்தகோப வசுதேவப் பிரமுகளாகவும், ஸ்திரீகளில் ராதாருக்குமணி ரேவதி யசோதை தேவிகளாகவும் அந்த ஸ்ரீ வில்லிபுத்தூரை ஆயர்பாடியாகவும் அதில் வசிக்கும் ஸ்திரீபுருடர்களை கோபஸ்திரீகளுங் கோபாலர்களாகவும் பாவனைசெய்து வைகரையிலெழுந்து கோபிகஸ்திரீகள் வீடுகள் தோறுஞ் சென்று அவர்களை எழுப்பிக் கொண்டு நதிக்குச்சென்று ஸ்நானநுஷ்டானங்களை முடித்து ஸ்ரீகிருஷ்ண பரமாத்துமனைப் பலவாறு துதித்துக்கொண்டே தன்வீட்டையடைந்து பகவானுக்குத் திருவாராதனங் கண்டருளப்பண்ணித் திருத்துழாய் தீர்த்தமும் ஸ்வீகரித்து எந்த வஸ்துக்களையும் புசிக்காம

லும் கல்ல ஆடையா பரணங்களைத் தரித்துக் கொள்ளாமலும் பக வானையே சிந்தித்துக்கொண்டு பிருப்பள். இப்படி தினந்தோரும் கோபஸ்திரீகளை எழுப்பிக்கொள்வதும் ஸ்னஞ்ஷ்துடானங்களை முடித்து அந்த கோபஸ்திரீகளை நோக்கி மாபலியிடஞ் சென்று மூன்றடி பூமியைத் தானமாகக்கொண்டு ஓரடியால் ஆகாயத்தை யளந்து கெங்கையை யீன்று அத்திருவடிகளைப் பிரமதேவனுல் அர்ச்சிக்கக் கைக்கொண்டு இரண்டாவது அடியால் பூமி முழுதை யும் அளந்து மூன்றுவதடியை அப்பலியின் சிரத்தில் வைத்துப்பாத லத்தி லழுத்திய உத்தமனுகும் ஸ்ரீகிருஷ்ண மூர்த்தியைப்பாடி நா மெலலோரும் நம்முடைய பாவைக்கு நோட்டினுல் மூன்றுவருட காலம் மழை யில்லாததால் நேரிட்ட க்ஷாமமென்பது நீங்கி நாடுக ளெல்லாம் மாதமும்மாரி பெய்து க்ஷேமமோங்கி என்றும் நீங்காத செல்வமடைந்து யாவரும் சுகமடைவார்க ளென்றும் இந்தப்படி யே தினந்தோரும் ஒவ்வொரு விசேஷங்களைச் சொல்லி யாவரை யும் களிக்கடலில் மூழ்த்தி மூப்பதாலும் மூப்பது பாசுரங்களைப் பாடிப் பகவானை உகப்பித்து இருக்கையில் எங்கும் புஷ்களமாக மழைபெய்து ஏறி குளங்கள் மடுக்கள் மூதலானவை யெல்லாம் நிறைந்து மேல்வெள்ளம் பாலிப் பசுக்களும் எருமை மூதலானவை யும் மனிதர்களும் மெத்த சந்தோஷ சித்தர்களாகி ஆண்டாளை வெ குவாகக் கொண்டாடிக்கொண்டிருந்தார்கள்.

இவ்வண்ணம் யாவரும் தன்னைப் புகழ்ந்துக் கொண்டாட அ ந்த ஆண்டான் உலகத்திற்கு க்ஷேமமுண்டாகும் மார்க்கங்களேதே ணுண்டோ அந்த நன்மார்க்கங்களை யெல்லாஞ் செய்துக் கொண் டும் தன்னைப் பலவருடங்களாய் கைசோரவிடுத்து ஏகாந்தமா யிரு க்கும் பகவானை நினைந்து நினைந்து இன்னமும் எத்தனைநாளாக்கி யானிப்படி ஒண்டியாக இவ்வுலகத்தினில் சிரமப்பட்டுக்கொண்டி ருப்பேன். தேவரீருடைய மனமானது சிறிதேனுங் கரையவில்லை யா அடியாளை தங்களிடஞ் சேர்த்துக்கொள்ள நமக்கோர் தொ ல்லையாவென்றுக் கண்ணீராராய்ப் பெருகவிட்டுக்கொண்டே மலர் மாலைகளைக் கட்டிக்கொடுக்க அம்மாலையை விஷ்ணுசித்த ரெடுத் துக்கொண்டுபோய் அர்ச்சகரிடங் கொடுங்க அர்ச்சகரும் அம்மா லைகளைப் பகவானுக்கு சாத்தின உடனே பகவான் கண்களில் நின்றும் நீர் சோர விடுத்தனர் அதைக்கண்டு அர்ச்சகர் இதென்ன வழக்கப்படி யான் மாலைகளைப் பகவானுக்குச் சாத்தினேன் என்று மில்லாம லின்று பகவான் கண்களில் நீர் சொரிகின்றார். இந்த மாலைகளில் ஏதேனும் தீட்டுப்பட்டதோ? அல்லது ரோமங்களே தேனு மிளிதமாயிருக்கிறதோ? என்றுந் தெரியவில்லையே யென்று சிந்தனைப்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது பகவான் ஓய் விஷ்ணுசித்தரே! உமது புதல்வியாகிய ஆண்டாள்படுந் தக்கமா

னது என்னையுந் தக்கப்படும்படியாகச் செய்தது ஆகையால் நீர் சீக்கிரமாய் உமது புதல்வியை அழைத்துச்சென்று ஸ்ரீரங்கநாதன் சந்நிதியில் சேர்த்து வாருமென்று நியமித்தார். அதற்கு விஷ்ணு சித்தர் பகவானே வணங்கி ஓ, என்னையாண்டிரட்சிக்கும் பரமசாந்த மூர்த்தியே என் புதல்வியாகிய ஆண்டாளென்னும் சூடிகொடுத்த நாச்சியார் கோரியிருக்கும் புருஷனுடைய குணதிசயங்களுக்கு அனுகுணமுடைய புருஷோத்தமன் தேவரீரையன்றி வேறெவர்களு மில்லை. ஆதலால் அப்படிப்பட்ட விரதசீலியைத் தாங்கள் அழைத்துப்போய் ஸ்ரீரங்கநாதன் சந்நிதியில் விட்டு வரும்படி அடியேனுக்கு நியமித்தீர் அந்த திவ்யத் தலத்திலெந்த புருடனிடம் விட்டு வருவேன் அன்றியும், புருடனைவன் வந்து பெண்ணுக் குடையவரிடம் பேசி விவாகஞ் செய்துக்கொண்டு போவது உலக இயற்கையாகியிருக்க அதை மறுத்து யான் பலவந்தமாய்ப் பெண்ணை யழைத்துக்கொண்டுபோய் சந்நிதியில் விடுத்து வருவது ஞாயமாகுமோ ? அன்றியும் உமது நியமனத்தின்படியே விட்டு வருவதற்குப் பெண் சம்மதிப்பாளோ? புருடனின்னனென்று தெரியாமலும் யானங்கு பெண்ணை யழைத்துச் செல்லுவதும் நீதியாமோ ? என்றார். அதற்குப் பகவான் ஓய் விஷ்ணுசித்தரே ! உமது புதல்விக்குச் சம்மத மில்லாத புருடனிடம் விடுத்து வரும்படி யான் விள்ளுவேனே ? அவள் கோரிக்கையின் படியே சகல குணங்களிலும், சம்பத்திலும், ரூபத்திலும், வீரத்திலும், இறப்பும் பிறப்பும் இல்லாத தெய்வமாகிய ஸ்ரீரங்கநாதனே இவளுக்குப் பதியாகும். ஆதலால், நீர் உமது புதல்வியை அழைத்துப் போய் விட்டு வாருமென்றார் அதற்கு விஷ்ணுசித்தர், ஓ! ஸ்மிமி! தாங்களென்புதல்விக்கு ஸ்ரீரங்கநாதனே புருடனென்று நியமித்தபோது யான் தங்களுடைய இஷ்டப்படியே பரதந்திரமாய் நடக்கவேண்டிய அவசிய மிருக்கினும் இந்த அபசாரத்திற்கு அனேக வந்தனம் புரிகிறேன். உலக இயற்கையின்படி நடவாவிட்டால் யாவரும் என்னை இகழ்ந்துப் பேசுவார்கள். அதென்னவெனில், இந்த விஷ்ணுசித்தன் தன் பெண்ணை யொருவரும் விவாகஞ் செய்துக்கொள்ளாமையால் இவனே வலுவில்கொண்டுபோய் யாரிடமோவிட்டு வந்தானென்று வசைச்சொல கூறுவார்கள். அன்றியும், இப்போதிவ்விடம் நடந்த விருத்தாந்த மனைத்தும் ரும் நானு மறிந்ததேயன்றி, அன்னிய ரெவர்களும் அறியார்கள் ஆகையால் தேவர் கூறியபடி ஸ்ரீரங்கநாதன் என்புதல்விக்கு மணவாளனாகியிருந்தபோதிலும் அந்த ஸ்ரீரங்கநாதனிடமிருந்து பரிவாரங்கள் வந்தழைக்காமல் யான வலுவில் என்பெண்ணை யழைத்துப்போய்விட மனமிசைகிலேன் என்றார். அதற்குவடபெருங் கோயில் பெருமாள் ஓய் விஷ்ணு சித்தரே! உமக்கு மருமகன் அண்டரண்ட சராசரங்களுக்கும் ஈஸ்வரனும் ஆதிமத்யாந்த ரகிதனும் என்று மழிவில்

லாதவனுமாகியிருக்க அதையும் யோசியாமல் அவனிடமிருந்து பரிவாரங்கள் வந்தாலொழிய பெண்ணை யான் கொண்டுபோய்விட மாட்டேனென்று சொல்லுவது அபசாரத்துக் கிடமாகும் ஆதலால் யென் சொற்படி பெண்ணைக் கொண்டுபோய் விட்டு அபசார க்ஷமை பெற்றுக்கொண்கி வாருமெனப் புகன்றார். அம்மொழிகளைக்கேட்டு விஷ்ணுசித்தர் ஓ! ஸ்வாமி! என் புதல்விக்கு வாய்க்கப்பட்டவன் நித்திய விபூதியாகியும் படைவீடாகியும் நித்தியசூரிகள் சேவிக்கப் பட்டவனுகிப் பொருந்தியிருப்பவனுமாயிருந்த காரியத்திற் குடன்படமாட்டே னென்றார்.

அப்போது வடபெருங்கோயில் பெருமான் விஷ்ணுசித்தரை நோக்கிக் கலகல வென்று சிரித்து ஓய் விஷ்ணுசித்தரே! உமது மனதைச் சோதிக்கவெண்ணி புதல்வியை அழைத்துப்போய்விட்டு வரச் சொன்னேனே யன்றி, உண்மையாய் உம்மைப் போகச்சொன்னவ னன்று, இதைப்பற்றி நீர் கோபங்கொள்ள வேண்டாம். உலக இயற்கையை மறுத்துச் செய்ய யார்தான் சம்மதிப்பார்கள்? அப்படி யல்ல வென்று நீர்தான் சம்மதித்த போதிலும் உமது புதல்வி சம்மதிப்பாளோ? அப்படி யவளும் சம்மதித்த போதிலும் உலகம் சம்மதிக்குமோ? சம்மதிக்கமாட்டாது. உமதிஷ்டப்படியே ஸ்ரீரங்கநாதன் சன்னிதியிலிருந்து சகல பரிவாரங்களும் வரும்படிச் செய்விக்கின்றேன். நீர்சீக்கிரமாய் உமது திருமாளிகை சேர்ந்து புதல்வியைத் திருமணக்கோலஞ் செய்விக்கக் கடவீரென்று நியமித்தார். விஷ்ணுசித்தரும் சந்தோஷ மனதராகிப் பகவானை வணங்கி விடை பெற்றுக்கொண்டு விரைந்து தன் திருமாளிகையைச் சேர்ந்து புதல்வியை நோக்கிச் சன்னிதியில் பெருமாளுக்குந் தனக்கும் நேர்ந்த விவாதங்கள் யாவையும் தெரிவித்தார். அதைக் கேட்டு ஆண்டாள் களிக்கடலில் மூழ்கினவளாகி உடனே மங்களஸ்னானஞ்செய்து திவ்யமாகிய ஆடையாபரணங்களை அணிந்து சர்வ சித்தமாகியிருக்க அங்கே வடபெருங்கோயில் பெருமான் அப்போதே ஸ்ரீரங்கமடைந்து ரதகஜ துரகபதாதி பரிவார ஜனங்கள் சூழ மங்களவாத்தியங்கள் முழங்கப் புறப்பட்டுச் சில நாழிகைக்குள் ஸ்ரீ வில்லிபுத்தூரி லடைந்து விஷ்ணுசித்தர் வீட்டை நாடி வருகிறபோது விஷ்ணுசித்தர் அவர்களுக் கெதிர் சென்று தக்க மரியாதைகள் செய்து அழைத்துவந்து தக்க ஆசனங்கள் தந்து வீற்றிருக்கச் செய்து அத்தலத்திலிருக்கும் பிராமணர்களையெல்லாம் வரவழைத்து உட்கார வைத்தார். அப்போது, ஸ்ரீரங்க க்ஷேத்திரத்திலிருந்து வந்தவர்களில் ஒரு விருத்தப் பிராமணர் விஷ்ணுசித்தரை நோக்கி ஓய் பரம சாதுவே! உமது குமாரத்தியை எங்கள் ஸ்ரீரங்கநாதனுக்குக் கொடுத்து விவாகஞ் செய்விக்கும்படி கேட்க்க வந்தோ மென்றனர். அதற்கு விஷ்ணுசித்தர் அப்பெ

ண்ணை வளர்த்தவன் பாலு யிருந்த போதிலும் சபையோர்கள் சம்மதி யெப்படியோ வென்று சபையோர்கள் மீது பாரத்தைப் போட்டார். அதற்கவர்கள் ஒப் விஷ்ணு சித்தரே! குல நலம் கேழ்க்கப் போகின்றீரா? ஸ்ரீரங்கநாதனுக்கு கின்புதல்வியைக் கொடுப்பதற்கு என்ன ஆக்ஷேபனை! சுகமாய்! கொடுக்கலா மென்றார்கள். அதற்கு விஷ்ணுசித்தர் உங்களுக் கெல்லாம் சம்மதியானால் எனக்கும் சம்மதி யென்றார், அவர்கள் இவ்வார்த்தையைக் கேட்டு ஸ்ரீரங்க க்ஷேத்திர வாசிகளை நோக்கி, ஓ! சுவாமிகளே! உங்களிஷ்டப்படியே விஷ்ணுசித்தர் புதல்வியாகிய ஆண்டாளம்மாளை ஸ்ரீரங்க நாதனுக்குக் கொடுக்க சம்மதித் திருக்கின்றோமென்று நிச்சய தாம்பூல மாற்றி முடிவு செய்து முகூர்த்த லக்கினங் குறித்து மணஓலை எழுதி அதைப் பிள்ளைவீட்டுக் காரும் பெண்வீட்டுக்காரரும் மாற்றிக் கொண்ட உடனே ஆண்டாளம்மாளைச் சிவிகையின்மீ தேற்றிக்கொண்டு மங்களவாத்தியங்கள் முழங்க யாவத்திராளும் சூழ நடந்து ஸ்ரீரங்க க்ஷேத்திரம்வந்து சேர்ந்து விவாகத்திற்கு வேண்டிய சாமக் கிரியைகளைச் சேகரித்து வைத்துக் கலியாண மண்டபம் அலங்கரித்து மங்களவாத்தியங்கள் முழங்க ஸ்ரீரங்க நாதனுக்கும் ஆண்டாளம்மாளுக்கும் திவ்ய தீர்த்தங்களினால் மங்கள ஸ்நானஞ் செய்வித்து இருவருக்கும் ஆடையாபரணங்களை அலங்கரித்து அழைத்துவந்து மணவரையினில் உட்காரவைத்துச் சடங்குக ளனைத்தையும் நடத்தி பிராமணஸ்திரீகள் நவரத்தின தீபங்களேந்தச் சுபலக்கினத்தில் ஸ்ரீ ரங்கநாதர் ஆண்டாளுடைய கண்டத்தினில் மங்கல சூத்திரந் தரிப்பித்தனர். உடனே கோதான, பூதான வஸ்திரதான, கன்னிகாதான முதலாகிய சோடச தானங்களுஞ் செய்து விவாகத்திற்கு வந்தவர்களுக்கெல்லாம் தக்கபடி உபசரித்தும் இப்படி ஏழுநாள் விவாகம் நடத்தி மாமனாராகிய விஷ்ணுசித்தருக்குத் தக்கபடி மரியாதைகள் நடத்தி தம்பதிகளை பள்ளியறையிற் சேர்த்து யாவரும் தங்கள் தங்கள் இருப்பிடஞ்சேர விடைதரப் பெற்று சென்றார்கள். விஷ்ணுசித்தர் அன்னலங்கிருந்து மறுநாள் புதல்வியைப் பார்த்து வெகு சந்தோஷமாகிப் விடைபெற்றுக் கொண்டும் ரங்கநாதரைப் பணிந்து போய் வருகிறே னென்று சொல்லி விடைதரப் பெற்றுக்கொண்டு ஸ்ரீ வில்லிபுத்தூரைச் சேர்ந்தார். இங்கே ரங்கக்ஷேத்திரத்தில் ஆண்டாளம்மாள் ரங்கநாதனைக் கூடிக் கலந்து அடங்காச் சந்தோஷத்தினிருந்து மூன்றுநாள் மானிட உருமாறி விக்கிரக ரூபமாய் விளங்கும்படி ஸ்ரீ ரங்கநாதன் கிருபை செய்ய ஆண்டாளம்மாளும் எல்லோருக்கும் விக்கிரக ரூபமாய் சேவை சாதித்துக்கொண்டிருக்கின்றனள்.

ஆண்டாள் கற்பின் மகத்துவம் முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

தேவகி கற்பின் மகத்துவம்

ஸ்ரீ வடமதுராபுரியென்றோர் நகரமுண்டு அன்னகரத்தை உக்கிரசேனனெனும் அரசன் பரிபாலித்துக் கொண்டிருந்தான். இவர்க்குக் கம்சனென்னும் புதல்வனொருவனுண்டு ; இவருக்கு உடன்பிறந்த தம்பி தேவகனென்பவன் இளவரசுப் பட்டத்துக்குரியவனாயிருந்தான். இத்தேவகனுக்கு பங்கயமுகியெனும் மனைவியினிடமாகப் பெண்குழந்தையொன்று பிறந்தது. தேவகி யென்று நாமகரணஞ் செய்வித்தனர். உக்கிரசேன மகாராஜன் குழந்தை பிறந்ததற்காக ஆனந்தமடைந்து தானதான பூதான வஸ்திரதானமென்னுஞ் சோடச தானங்களும் செய்து ஆசாரியர் முதலானோருக்குந் தக்கபடி சன்மான மளித்து சிசுவை நாளுக்குநாள் செல்வமாக வளர்த்து வந்தார்கள்: அப்பெண் சிசுவுப் வளர்பிறைச் சந்திரனைப் போல, தினே தினே வளர்ந்து ஐந்து வருடமாகவே அக்கன்னிகையைப் பார்த்த யாவரும் இவளுடைய சுந்தரவடிவுக்கு ரம்பை, ஊர்வசி, திலோர்த்தமை, மேனகைகளும் நிகராக மாட்டார்களென்று சொல்லும்படியான அழகினை வகித்திருந்தனள். இந்தப்படியிக்கன்னிகைப் பெதும்பைப் பருவங்கடந்து மங்கைப்பருவ மடையவே உக்கிரசேன மகாராஜனும் இளவரசாகிய தேவமகாராஜனும் அப்போது நடத்தவேண்டிய சடங்குகள் யாவையும் நடத்தி இந்தத் தேவகியினுடைய அழகுக்கும் நற்குணங்களுக்குந் தக்க புருடனைத் தேடி விவாகஞ் செய்விக்க வேண்டுமென்று கருதித் தங்கள் மரபினில் நற்குணங்களிற் சிறந்த உத்தமனுய வசுதேவரை அழைத்து நல்ல சுபமுகூர்த்தத்தில் தேவகியை வசுதேவருக்குக்கொடுத்து மணஞ் செய்வித்துத் தங்க ளரண்மனையில் பத்துநாள் பரியந்தம் தம்பதிகளை வைத்திருந்து வசுதேவருடைய வேண்டு கோளினுலே தேவக மகாராசன் பரிசுத்தமான சுழிகளையுடைய குதிரைகள் பூட்டிய ரதங்கள் ஆயிரத் தெண்ணூறு, நானூறு யானைகள் பதினாயிரங் குதிரைகள், இரநூறு தாசி ஜனங்கள் இன்னும் பற்பல ஆடையாபரணங்கள் முதலானவைகளும் ஸ்ரீதனமாகக்கொடுத்து மகளையும் மருமகளையும் ரதத்தின்மீ தேற்றி அனேக மங்கல வாத்தியங்கள் முழங்க வெகு ஆடம்பரத்துடன் அனுப்புகிற சந்தர்ப்பத்தில், உக்கிரசேன மகாராஜன் புதல்வனுகிய கம்சன் அங்குவந்து தம்பதிகளைப்பார்த்து சந்தோஷமடைந்து, அவர்களுக்குச் சாரத்தியஞ்செய்ய வெண்ணி ரதத்தின்மீதேறி குதிரைகளின் கடிவாளக் கயிற்றை இடதுகையிற் பற்றி கொரடாவை வலதுகையினிற் பிடித்துக் குதிரைகளைக் கொரடாவினுற் றட்டி ரதத்தைச் செலுத்தினன்.

குதிரைகளும் மெல்லன நடந்து சேனைகளும் பந்துக்களுஞ் சூழ்ந்து சூரசேன மென்னும் நகரத்தை நோக்கி, அதிக உத்சாகத்

துடன் யாவரும் பின்தொடர்ந்து போகிறபோது இடியிடித்தது போல, ஆகாயத்தில் சிலவசனம் கேழ்க்கப்பட்டது, அதென்னவெனில், ஆகாயவாணி கம்சனைநோக்கி 'அடா! கம்சா! அறிவில்லாக் கல்நெஞ்சா! நின் தங்கையாகிய தேவகியும் மைத்துனராகிய வசுதேவரும் ரதஞ் செலுத்துகிற சந்தோஷத்தினால் மெச்சிக்கொள்ளும்படியாய் உச்சாகத்துடன் மேல்வருங் காரியத்தை யுணராமல் ரதத்தைச் செலுத்துகிறாய். அதென்ன வெனில், உனது தங்கையாகிய தேவகி வயிற்றிற் பிறக்கும் எட்டாவது புத்திரனால் உனக்குக் கட்டாயம் மரணம் நேரிடப்போகிற' தென்று சொல்லி மறைந்து போயினாள். அவ்வசனத்தைக் கேட்டவுடன் ரதத்தை நிருத்தி கம்சன் இடியோசையைக் கேட்ட நாகம்போல ஏங்கித் தியங்கி மயங்கி யாதொன்றுந் தோன்றாமல் திக்பிரமை கொண்டு சற்று நிதானித்து இதற்கென்ன செய்கிறது நமக்கு மரணம் நேரிடுவதற்கு இவள் வயிற்றிற் பிறக்கும் பிள்ளை ஏமன், அவனுக் காகிலும் அவனைப் பெறப்போகிற இவள் பெரிய ஏமனுக்கு மென்றும் நம்மைக் கொல்லும் பிள்ளையைப் பெறப்போகிற இவளையே மூன்னங் கொன்று விட்டால் நமக்கு மரணம் நேரிடப்போகிறதில்லை நமக்குமுன் மிருத்தியு தேவதையும் வரப்போகிறது மில்லை என்று யோசித்துத் தன் தங்கையாகிய தேவகியின் அனகபாரத்தைக் கையிற் பிடித்துக் கொண்டு அவளைப் பூமிக்கு வலித்துத் தன்னிடையினில் பிரகாசித்துக்கொண்டிருக்கிற வாளையுருவி ஒங்கிவெட்டப்போகிற சமயத்தில் தேவகி தன்னுடைய நாயகனிருக்கிறபோது நமக்கென்ன சுதந்திரம் அன்றியும் ஒருவருடைய பொருளை மற்றொருவன் சேதிக்க உத்தேசித்தால் அப்பொருளுக் குடையவன் சம்மதித்திருப்பனோ இரான். அதுபோல, பொருளுக் குடையவன் சமீபத்திலிருக்கும் போது அப்பொருளினுடையும் லாப நஷ்டம் அவனுடையதாகவிருக்கையில் நாம் யாதொன்றும் பேசாமலிருப்பதே நமக்குக் கற்பாகும் மேலும் பிராணநாயகனிருக்க நாம் பேசினால் அபசாரியாவதுடன் நம்மைப் பிராணநாயகரும் இகழ்வார். இதனாலே நாயகர் மனதுக்குக் கஷ்டமுண்டாகு மென்று கருதி, வாயைத் திறவாமலேகுனிக்திருந்தாள்.

அதுகண்டு வசுதேவர் விரைவாய்த் தேரைவிட்டுக்குதித்து ஓடிவந்து வாளையோங்கி வெட்டத் துணிந்திருக்கும் வலதுகையைப் பிடித்துக்கொண்டு, 'ஓய் மைத்துனரே! சற்றேபொருத்துக்கொள்ளும். நிதானியும்! நிதானியும்! பதறவேண்டாம்! யான்சொல்லும்தரும சாஸ்திர வித்தையைக்கேட்டு நலமாயிருந்தால் இம்மாதினை விட்டுவிடும், நீதாக விருந்தால் வெட்டிவிடும் அதென்ன வெனில், அண்ணனுடைய நீதங்கையைப் பிரியத்துடன் ஆதரிப்பதை விடுத்து, ஆகாயவாணி சொல்லியதையே உண்மையெனக் கருதி விரைந்து

வெட்டத் துணிந்தாய். பூத தயை பச்சாத்தாப தயாள குணமுடைய வேந்தனே! உன்னுடைய சகோதரியானவள் சக்தியில்லாதவள், எப்போதும் உனக்கு க்ஷேமமுண்டாகும்படியான கோரிக்கை கொண்டிருப்பவள். அப்படிப்பட்ட எண்ணமுடைய உத்தம ஸ்திரீயை வெட்டத் துணிவது உன்னைப்போன்ற அரசர்களுக்குத் தகாது. மேலும் உலகத்தி கோ ஹத்தி ஸ்திரீ ஹத்தி சிசு ஹத்தி யென்று சொல்லும் மூன்றினில் யாதொரு குற்றமுஞ் செய்யாத நிரபராதியாகிய ஸ்திரீயைக் கொலைசெய்வது ரௌரவாதி நரகத்திற்கே தூவாகும். சுத்திர குலத்திற்கு யீசனும் புண்ணியங்க ளெல்லாந் திரண்டோ குருவாகியுதித்த சொரூபனுமாகிப் பிரகாசம் பொருந்திய சக்கரத்தைத்தரித்த ஸ்ரீ மகாலட்சுமிக்கு நாயகனுகிய ஸ்ரீமந் நாராயணனுக்கு நிகராகிய நீ இப்படிப்பட்ட காரியஞ் செய்வதில் முயற்சி கொள்ளுவையே யாகில் உன்னை யாவரும் வெகுவாய் நிந்திப்பதுடன் மசகத்தைப்போல கேவலமாக மதிப்பார்கள்' என்று தன்னுடைய மெல்லிய வசனங்களாகிய அமுதமாரி பெய்து அந்தக் கம்சன் கோபாக்கினியைத் தணித்துப் பின்னுஞ் சொல்லுகின்றூர்; ஓ! வேந்தர் கோமானே! உனக்கோர் உபாயஞ் சொல்லுகிறேன் கேளும். அதென்ன உபாயமெனில், இப்போதிந்தமாதினைக் கொல்வதை நீக்கி விட்டு விடுவையாகில் இவள் புதவனுல்லவோ உனக்கு மரணமுண்டாகு மென்று ஆகாயவாணி சொல்லி உனக்கித்தனை சீற்ற முண்டாகியது; நின் தங்கைப்பெறுகிற புதல்வர்களைப் பிறந்த உடனே உன்னிடங் கொண்டுவந்து கொடுக்கின்றேன் அவர்களைக் கொன்று பகைதீர்த்துக் கொள்ளும்; இந்தப்படி செய்வது மநுசாஸ்திரவிதி, இதை விடுத்து ஸ்திரீவதை செய்வது கொடிய பாதகமாகும். ஆகையால், வலது கரத்தினில் இடைவிடாது சக்கரத் தாழ்வானை தரித்துக் கொண்டிருக்கும் எம்பெருமான் மீது ஆணையாக இம்மங்கை பெற்றிடும் பிள்ளைகளைக் கொண்டுவந்து கொடுக்கின்றேன் இம்மாதினைக் கொல்லவேண்டா' என்று வினயமாகக் கேட்டுக் கொண்டனர்.

வசுதேவருடைய மொழிகளைக் கேட்டுக் கம்சன் அவருடைய சத்திய வாக்கில் நம்பிக்கை கொண்டவனுகி தேவகியைக்கொல்லாமல் விடுத்துத் தன்னுடைய நரகம் போய்ச் சேர்ந்தான். இங்கே தேவகி வசுதேவர் இருவரும் ஆகாயவாணி சொல்லிய கற்பனையாகிய கோணும் கழுத்துக்கு மேல் வந்தவளும் இன்று நமக்குத் தப்பிப் போயிற்று. மேலும் அந்த வஞ்சகனுகிய கம்சனுகுத் தேவரீர் சொல்லிய இனிய வசனங்களைக் கேட்டல்லவோ எனக்கு மறுஜனன முண்டாயிற்று. காலைச் சுற்றிக்கொண்ட பாம்பானது யாதொன்றுஞ் செய்யாமல் போயிற்று அன்றியும், இன்று அவன் கையிலகப்பட்டுக்கொண்ட நாம் தப்பிவந்தது எப்படி யாமெனில்

புலியின்வாயி லகப்பட்டுக்கொண்ட மனிதனைவன் அப்புலிக் கிறையாக வேண்டியவனுகயிருக்க அந்தப்புலியையும்ஏமாற்றி உயி ரைக் காப்பாற்றிக்கொண்டு வந்தவனைப்போல, நம்முயிரைக் காப் பாற்றிக் கொண்டல்லவோ வந்தோம் என்று பலவாறு வசனித் துக் கொண்டு வெகு சந்தோஷமாய் சகல சேனைகளுஞ் சூழ மங் கலவாத்தியங்கள் முழங்க வெகு ஆரம்பரத்துடன் சூரசேன நகர த்தை வலம்புரிந்து அந்தப்புரஞ் சேர்ந்து ரதியுமதனைப்போலவும், தீபமும் ஒளியைப் போலவும், ரத்தின மணியும் அதின் பிரகாசத் தைப்போலவும், சொல்லும் சொல்லின் இனிமையைப் போலவும் ஒருவரைவிட்டொருவர் பிரியாமல் கேளி விலாசமாக விருந்தார் கள். இதில் தேவகியானவள் இரவும் பகலும் ஓயாமல் தன் பதிக் குத் தொண்டு செய்வதிலும் போஷிப்பதிலும் அவரைத் துதிசெய் வதிலும் அவரிஷ்டப்படி நடப்பதிலும் மனதைச் சிறுதேனும் சஞ் சலத்தில் விடாமல் செலுத்திக் கொண்டு வருவதைக்கண்டு வசுதே வர் மெத்த சந்தோஷித்து அடிபெண்ணே! தேவகி இங்கேவா வென்றழைத்துப்போய் வேறேரு அரண்மனைக்குட்சென்றார், அங் கே யிருந்த ஏழுமனைவிகளோடோடியும் வந்து வசுதேவரைப் பணி ந்து அருகிலிருக்கும் தேவகியைக் கண்டு ஆசீர்வதித்து இவளென் ன, அரம்பை, ஊர்வசி திலோர்த்தமை, மேனகை, யென்னும் தேவதாசிகளைப் பார்க்கிலும் அதிக சுந்தரமாக விருக்கின்றாளென் று அவர்கள் பிரமித்து நிற்கிறபோது வசுதேவர் தேவகியை நோக்கி 'அடிபெண்ணே! இவர்கள் ஏழுபேரும் என் மனைவிகளே! இந்த ஏழுபேர்களில் ஒருவளாகியும் உன்னைப்போல குண சௌந் தரிய நடவடிக்கைகள் பொருந்தினவளல்ல; இதனாலேயே இவர் கள் மீது சிறிதேனும் பிரியமுண்டாகவில்லை. ஏனென்றால் பதிவிர தையைக் கூடி இல்லற தருமத்தை நடத்துமவன் வாழ்வே வாழ்வு விபசாரியைக்கூடி வாழுமவன் வாழ்வே தாழ்வு. இவ்விருவரில் பதிவிரதையை யடைந்தவனுக்கு எல்லா பாக்கியங்களுக்கும் தன் கடையாகவே வந்து சேரும், அந்தப் பதிவிரதையினால் புருடனு க்கு நல்லகீர்த்தி யுண்டாகும் என்ற வேத வாக்கியப்படி யுன்னால் யான் பெருத்த புகழடைவேன். இதோ இருக்கிற ஏழு மனைவிக ளால் எனக்கு இகழ்வே யன்றிப் புகழ்ச்சி யுண்டாக மாட்டாது இதனாலேயே இவர்கள் மீது எனக்கு விருப்பமில்லை' யென்றுசொ ல்லு தேவகியை வசுதேவர்புகழுறிபோது தேவகி அம்மொழிக ளுக்குச் சந்தோஷிக்காமல் வசுதேவர் திருவடியில் விழுந்து ஓ! ஸ்வாமி! எல்லா விபவங்களுக்கும் காரணம் தேவரீர் திருவடிகளே யன்றி அடியாளா லென்ன பிரயோசனம் உண்டாகப்போகிறது. கொள்ளைக் கண்ணனை செந்தாமரைக் கண்ணனென்று உலகோர் சொல்லுவதைப்போலக் குலத்திலும், குணத்திலும் அழகிலும் குறைந்தவளாகும் அடியாளை தேவரீர் இவர்கள்முன் புகழ்வது நீதி

யோ? கணவன் சொல்லுக்கு மறுத்து உத்தரஞ் சொல்லுமவள் கர்த்தபமாகும் பிராணநாயகர் குறிப்பை யுணர்ந்து நடக்காதவள் பேயாகும், கொழுந்னுக்குத் தக்கபடி உணவாதிகள் தின்னச்செய்து மகிழாமல் முன்னம் புசிப்பவள் கோந்தியாகும், கணவனிஷ்டப்படி தொண்டு செய்யாதவள் காலனாகும் என்றிப்படி சாஸ்திரங்கள் முறையிடுகிற தென்றுபெரியோர்களால் சொல்லக் கேட்டிருந்தும் அடியாளுக்கிந்த குணக்களில் ஒன்றேனும் கைவல்லிய மாகாமல் எப்படி யிவைகளெல்லாம் அனுகூலமாகுமென்று ஏங்கி அந்தப்படியே நடந்துக் கொள்ளுவே னென்று மனதைத் திடப்படுத்தினபோதிலும் அது சஞ்சலத்திலேயே மூழ்கச் செய்கின்றபடியால் அடியாளைப்போலொத்தவர்களுக்கு மேற்சொன்ன நடவடிக்கைகள் அனுகூலப்படுவது அசாத்தியமாகு. ஆயினும் தேவரீருடைய திருவடிகளைத் தியானஞ்செய்துக்கொண்டிருந்தால் மந்தமதியாகு மடியாளுக்குப் பதிவிரதைகளின் கற்பென்னும் நற்குணங்கள் யாவும் அநுகூலமாகு மென்று கருதி, நானேமூத லந்தப்படி செய்ய மணமுடையவளாக விருக்கிற போதையிலும் பேதையான அடியாளைப் புகழத்தகுமோவென்று பணிந்தாள். அப்போது வசுதேவர் தேவகியைநோக்கி ஆனந்தக்கடலில் மூழ்கினவராகி அடிபெண்ணே! உலகத்தில்யாரேனு மொருவன பிரர்பொருளைக் திருடிக்கொண்டு போக அவனைப் பிடித்துக்கொண்டு நீ எங்கள் பொருளைத் திருடினையே அப்பொரு ளெங்கே யென்றால் அவன் ஐயோ! இதென்ன அனியாயமாகவிருக்கிறது. வழியே போகுமென்னைப் பிடித்துவந்து எங்கள் பொருளைத் திருடிக்கெண்டு போனையே அப்பொருளெங்கே யென்று என்னைக் கேழ்ப்பது தருமந்தானு யாதொன்று மறியாத என்னை யேனிப்படி பிடித்துக்கொண்டு தொந்திரவு செய்கிறீர்களென்று தான் தப்பித்துக்கொண்டு போகும் பொருட்டுப் பலவித நீதிகளைச் சொல்வது போல, நீ கற்பிலக்கினம் நன்றாய் அறிந்தவளாகவிருந்தும் எனக்கொன்றுந் தெரியவராது இனிமேல் தான் கற்றுக்கொள்ள வேண்டுமென்று தானென்ற மமகாரத்தை விட்டு நைச்சியம் பகர்கின்றாய், இதுமதியோர்களுடைய கருத்தாகும். ஆதலால் உனக் கிப்படிப்பட்ட சைன்னிய மூண்டானதற்கு நான் மெத்தவும் சந்தோஷ மடைந்தேனென்று சொல்லி அந்த தேவகியை அழைத்துக்கொண்டு முன்னமிருந்த அந்தப்புரஞ்சேர்ந்து முன்னிருந்த அன்பைவிட எண்மடங் கன்புடன் அவளைக் கூடிக் குலாவியிருந்தனர். இப்படியாக தேவகி கற்பவதியாயினள். அதையறிந்து வசுதேவர் மெத்தக் களிப்படைந்திருந்தார். கிரமமாய் பத்து மாதமும் பூரணமாகி ஆண் சிசுவைப் பெற்றாள்.

உடனே வசுதேவர் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டவராகி பிரசூதிகா கிருகத்திலிருந்தபோதே பிறந்த ஆண்மகவை யெடுத்துக்கொண்டு கம்சனுடைய சபையைச் சேர்ந்து அவனிடம் அச்சிசுவை யிந்தார். கம்சனும் சிசுவைக்கைக்கொண்டு அச்சிசுவிருக்கும்ரூப சுந்தரத்தையுந் திருத்தத்தையுங் கண்டு சந்தோஷித்து வசுதேவருடைய சத்திய வாக்கையுங் கருதி, ஓ வசுதேவரே! உன்னைப்போல சத்தியத்திற்குட்பட்டு பெற்ற பிள்ளையை மனமாரக் கொன்றுவிடும்படி கொடுத்தபோர்கள் இவ்வுலகத்தினி லொருவரையுங் கண்டதில்லை, உன்னுடைய சொற்சோர்வுபடாத நிலைமைக்கி நான் களிப்படைந்தேன். அன்றியும், இச்சிசுவுக்குப் பின் பிறக்கும் எட்டாவது பிள்ளை யன்றோ எனக்கு மிருத்யுவாகின்றான் அவனைப் பிடித்து வதை செய்கிறேன் இந்த சிசுவை மறுபடியும் எடுத்துக்கொண்டு போமையா சத்திய வாக்கினையுடைய உத்தமனே! என்றான். இவ்வசனங்களைக் கேட்ட வசுதேவர் 'அச்சிசுவை எடுத்துவந்து தன் மனைவியின் பாலளித்து அவ்விடத்திய செய்திகளைத் தெரிவித்தார். அதைக்கேட்டு தேவகி மனம் சம்மதியாமல் இன்னமும்யாதோ கெடுதிவந்து நமக்கு நேரிடும்போலத் தோன்றுகின்ற தென்றாள், அதற்கு வசுதேவர் அடிபெண்ணே தேவகி! உலகத்தில் நன்மை தீதென் றிரண்டுளது இவற்றில் யெந்தெந்த காலத்தி லெதெதை யனுபவிக்க வேண்டுமோ அந்தந்த காலத்தினி லததை யனுபவித்தே தீரவேணும், பெரியோர்களாகிய மகாத்துமாக்களையும் விட்டதல்ல நம்மை விடுவதற்கு, நாமும் சத்கருமமோ துர்க்கருமமோ இவ்விரண்டையும் அனுபவிக்கத்தான் வேண்டும், சத்கருமம் வந்தபோது சந்தோஷித்தும் துர்க்கருமம் வந்தபோது துக்கப்படுவதும் சரியல்ல, இரண்டு கருமங்களையும் சமமாகவே பாவனைக் கர்ப்பணஞ் செய்து அனுபவித்தே தீரவேண்டும் ஆதலால் ஆண்டவன் செயலின்படி நடக்கட்டு மென்று கூறினர். அதற்குதேவகி சந்தோஷித்துக் கணவனுக் கிணங்கி வணங்கி நடந்துகொண்டும் கற்பின் நிலையைத் தவராமல் வருஷத்துக் கொருபிள்ளையாக ஆறுபிள்ளைகளைப் பெற்றுப் பாலூட்டிச் சீராட்டித் தாலாட்டி மைதீட்டி வளர்த்துவந்தனள் அவர்களும் பாலக் கிரீடைகளால் விளையாடிவரக் கண்டு தேவகி களித்து அன்பு பாராட்டி வந்தனள்.

இவ்வாறுக தேவகி நாயகனையும் பிள்ளைகளையும் வெகு பிரியமாகப் போஷித்துக்கொண்டு வருகையில் ஒருநாள் திரிலோகசஞ்சாரியாகிய நாரதர் கம்சனுடைய சபையைநாடி வீணாகானஞ்செய்துக்கொண்டே வந்தார். அவர்வரவையறிந்து கம்சன் எதிர்கொண்டு சென்று வினயமாகப் பேசி அழைத்துவந்து தக்க ஆசனத்தின் மீது வீற்றிருக்கச்செய்து சோடச உபசாரங்களால் பூசித்து ஓ! ஸ்வாமி! தேவரீர் அடியேன்மீது கிருபைசெய்து எழுந்தருளிய

காரணம் யாதோ அதைத் திருவாய் மலர்ந்தருளவேண்டு மென்று பணிந்தான், அப்படிப்பணிந்த கம்சனுக்கு நாரதர் ஆசிகூறி ஓ! கம்ச மகாராஜனே! உனக்கோர் இதஞ் சொல்லவந்தேன், அதென்னவெனில், உன்னுடைக் குட்பட்ட இந்த மதுரா நகரத்திலும் ஆயர்பாடி மூதலான சேரிகளிலும் நீ யொருவன் தவிர மற்றவர்களெல்லாம் தேவர்கள், அவர்கள் பகவான் நியமனத்தின்படி யாதவர்களாக வந்தவதரித்திருக்கின்றார்கள் இதில் தேவகி வயிற்றினில் சாக்ஷாத் பகவான் வந்தவதரித்து உன்னைக் கொல்லப்போகின்றன். ஆதலால், உன்னைக் கொல்லும்படியான பிள்ளையைப்பெறப் போகிற துஷ்டர்களாகிய வசுதேவ தேவகியையும் நின்தந்தையாகிய உக்கிர சேனனையும் பிடித்துக் காராக் கிருகத்தினி லடைத்து வையும். அன்றியும். தேவகிக்கி இப்போது பிறந்து வளர்ந்துக் கொண்டிருக்கும் ஆறுபுதல்வர்களையும் பிடித்து வதைசெய்து விடுவதுடன் இந்நால்வர்களிடத்தில், வெகு ஜாக்கிரதையாக விருந்து உம்முடையப் பிராணனைக் காப்பாற்றிக் கொள்ளும், இந்தப்படி இப்போதே நீர் செய்யாவிடில் உமக்கு மோசம்வந்து சம்பவிக்கு மென்று சொல்லி நாரதர் விடை பெற்றுச் சென்றார் உடனே கம்சன், மனங்கலங்கி தேவகியின் பிள்ளைகள் அறுவரையும் வெட்டியெறிந்துக் கோபமதிகரித்து வசுதேவதேவகி உக்கிர சேனரிகளைப் பிடித்துக் கால் கரங்களுக்கு விலங்கு பூட்டிக்காராக் கிருகத்தினி லடைத்து நிமைகொட்டாம லிருக்கும்படி சில பராரஜனங்களை நியமித்து அன்றுமுதல் யாதவர்களைக் கண்டால் விஷத்தைப் போலப் பார்த்துக்கொண்டும் நம்மைக் கொல்லும் பொருட்டு பகவான் பிறக்கப் போகிறானே மே எந்த வேளையில் எந்த சமயத்தினில் எப்படிப் பிறந்து வருகிறானே யென்ற யேக்கமிகுத்துத் தூக்கமின்றி இரவும் பகலும் ஓயாமல் பயமதிகரித்து விசனத்துட னிருந்தான். இதுநிற்க,

காராக் கிருகத்தினி லடைக்கப்பட்ட வசுதேவ தேவகி யிருவரும் இந்தக் கம்சன் இன்னமுமென்ன செய்வானோ? எப்படியாமோ? தெய்வமே! நீயே துணையென்று மனக்கலக்கங்கொண்டிருக்கிறபோது, சாக்ஷாத்பகவான் ஆதிசேஷனை யழைத்து நீபோய்கம்சனுல் காராக்கிருகத்தினிலடைக்கப் பட்டிருக்கும் தேவகி வயிற்றினில் அமர்ந்திருக்கக் கடவாயென்று நியமிக்க அந்த ஆதிசேஷனும் மகாபாக்ய மென்று பூலோகத்திற்கு வந்து தேவகி வயிற்றினில் ஆறுமாதகாலம் சேஷாம்ச பூதராய்ப் பொருந்தியிருந்தார். அதுகண்டு பராரஜனங்கள் கம்சனிடஞ் சென்று தேவகி கற்பவதியாயிருக்கின்றாளென்று தெரியப்படுத்த கம்சனு மறிந்து அதிஜாக்ரதையாய் யிருக்கும்படி அவர்களுக்குக் கட்டளையிட்டு முன்னிருந்த பயத்தைவிட எண்மடங் கதிக பயத்தினுள் கலக்கங் கொண்டிருந்தான்.

இப்படி யந்த கம்சன் தீராத பயத்தினுல் ஏக்கங்கொண் டிரு க்கையில் பகவான் மறுபடியும் மாயா சக்தியை அழைத்து நீபோய் தேவகி வயிற்றி லிருக்கும் பிண்டத்திற்கு யாதொரு கெடுதியும் சேரிடாத படிக்கி அப்பிண்டத்தை உபாயமாக வெளிப்படுத்தி அதைக்கொண்டுபோய் நந்தகோபருடைய கிருகத்தினில் கம்சனு க்கு பயந்துக் கொண்டிருக்கும் ரோகணி தேவியின் கர்ப்பத்தினில் பொருந்தவைத்து நீயும் யசோதையின் கர்ப்பத்தினி லுதிக்தக்கட வாயென்று கட்டளையிட்டார். அதன்படி அந்த மாயா சக்தியும், தேவகியின் கர்ப்பத்தினி லிருக்கும் ஆறுமாதத்திய பிண்டத்தை அசையாமல் வெளிப்படுத்திக் கொண்டுபோய் ரோகணியின் கர்ப பத்தினில் பொருத்தவைத்துவிட்டுத் தானும் யசோதையின் கர்ப் பத்தினில் பொருந்தி யிருந்தாள். இங்கே காவலாளர்கள் தேவகி யைக் கண்டு ஆறுமாதத்திய சர்ப்பம் கரைந்து போயிற்றென் றுண ர்ந்து இச்செய்தியை கம்சனுக்கு கறிவித்தார்கள் அதைக்கேட்டுக் கம்சன் நீங்காத பயத்தினுல் காவலர்களே வெகு ஜாக்கிரதையாக யிருங்களென்று மூன்போலவே கட்டளையிட்டான். அவர்களும் அந்தப்படியே நிமைகொட்டாமல் வெகு ஜாக்கிரதையுடன் காவலி ருந்தார்கள். அப்போது பகவான் பூர்வ ஞானத்தோடு தேவகி வயிற்றினில் வந்து பொருந்தி நாலுமாதமாகவே ஆயர்பாடியிலிரு ந்து ரோகணிக்கிப் பத்துமாதமும் பூரணமாகி ஆண்மகவைப் பெற்றனள். அம்மகவுக்குப் பலாமரென்று நாமகரணமிட்டு வள ர்த்துக்கொண்டு வருகிற காலத்தில் பலராமருக்கு வயது ஆறுமாத மாயிற்று உடனே யசோதைக்கும் பத்துமாதமும் பூரணமாகிப் பெண்குழந்தையைப்பெற்றாள். அப் பெண்குழந்தை மாயாசக்தி யாகையினுலே அந்த ஆயர்பாடியி லுள்ள யாவத்தாளையும் யசோ தையையும் மாய்கை சூழ்ந்துக் கொண்ட படியினுலே அந்தமாய் கைக் குள்ளாக்கி நித்திரையில் சொக்கி யிருந்தார்கள் இங்கே கா ராக் கிருகத்தினி லிருக்கும் தேவகி கோடி சூரியப் பிரகாசம் பொ ருந்திய ஆண்பிள்ளையைப் பெற்றாள். அக்குழந்தையைக் கண்டு தேவகி இதோ பிரப்போகிறானே பாவி கம்சன் இப்பிள்ளையைக் கூட கொன்றுவிடுவானே இதற்கென்ன செய்யப்போகிறோ மென்ற ஏக்கங்கொண்டிருந்தாள். தனக்கு ஆண்குழந்தை பிறந்ததென்று கேழ்விப்பட்டவுடனே ஸ்னைஞ்செய்து சக்தியானு சாம் தானஞ் செய்யவேண்டு மென்ற விதியிருப்பதினுலே அந்தவசுதேவர் ஸ்னை னஞ்செய்வ தெங்கே எதைக்கொண்டு தானஞ் செய்வது எதற்கும் உபயோகப் படாத இந்த காராக் கிருகத்தினி லெதவுஞ் செய்யக் கூடாமையா யிருக்கிறதே இதற்கென்ன செய்யலாமெனக் கருதி, பிள்ளை பிறந்த சந்தோஷத்தினு லுண்டாகிய ஆனந்த சாகரத்தில் மூழ்கினவராய் பிராமணர்களுக்குப் பதினாயிரம் பசுக்களை காராக் கிருகத்தை விடுத்து விடுதலே யானவுடன் தானம் கொடுக்கிறதாய்

மனதில் உத்தேசித்துக் கொண்டார். பின்பு வசுதேவர் பிரசூரிகா கிருகத்திற் குட்சென்று பிள்ளையைக் கண்டு ஆனந்தங் கொண்டு பலவாறு புகழ்ந்துக் கொண்டிருக்கையில் தேவகி சிசுவை நோக்கி, அப்பா மகனே! உண்மையாக நீ எனக்குப் பிறக்கப் போகிறாயென்று இந்தப் பாதகனுகிய கம்சன் எங்களிருவரையும் ஒரு வருஷ காலமாய் கால் கரங்களுக்கு விலங்கு பூட்டி இந்த காராக் கிருகத்தினில் அடைத்துவிட்டான். அந்த துஷ்ட சித்தமுடைய பாவியை சிக்ஷைசெய்து அவனால் பயமடைந்திருக்கும் எங்களைக் காப்பாற்றுமையா வென்று வேண்டினாள். அப்போதந்தச் சிசுவானது ஓ அம்மணி உங்களிஷ்டப்படியே அந்தக்கொடிய பாவியை சங்கரித்து உங்களுக்கு க்ஷேமமுண்டாகச் செய்கிறேன் சற்றே பொருத்திருப்பதுடன் என்னைக் கொண்டு போய் ஆயர்பாடியில் யசோதையின் பக்கலில் கிடத்தி அவள் பெற்றிருக்கும் படியான யோகமாயாசக்தியை எடுத்துவந்து உங்கள் பக்கலில் கிடத்திக் கொள்ளுங்களென்றார். அம்மொழிகளைக் கேட்டு வசுதேவர் மெத்த விசனக்கிராந்தராய் நின் அண்ணன் மார்களெல்லாம் கம்சனால் வெட்டுண்டுமடிந்து போயினர்கள் நீயாகிலும் ஒருவன் எங்களிடமிருந்துக்கொண்டுஎங்களுக் குற்றதுயரத்தை மாற்றுவா யென்றல்லோ எண்ணி யிருந்தோம் நீயும் எங்களைவிட்டு நீங்கிப்போகிறாயா வென்று கண்களில நீர் சோர விட்டு விசனப்படுகின்ற தந்தையை நோக்கி அக்குழந்தையாகிய பகவான் ஒளன் தந்தை தாய்களே! நீங்களேன் வீணாய் விசனப் படுகிறீர்கள் அவ்விசனத்தை மாற்றி என்னைச் சற்றே பாருங்களென்று சொல்லி ஆரகேயூர கடக கங்கண கிரீட பீதாம்பர பஞ்சாயுத தாராராய் விராட் சொரூபராய் ஆகாயத்திற்கும் பூமிக்கும் ஒரே ரூபமாய் விளங்கினார். அந்த சொரூபத்தை வேத புருஷனாலும் யோகிஸ் வரர்களாலும் கண்டு சேவிக்க முடியாதென்றால் இவர்களால் அந்த சொரூபத்தைச் சேவிக்கக் கூடாமையால் கண்களை மூடிக்கொண்டவர்களாகி ஓ பகவானே இந்த சொரூபத்தை விடுத்து மூன்போல சிசுவாகி சேவை கொடுமய்யா வென்று வேண்டினார்கள். அவர்களிஷ்டப்படியே சிசுவாகி சேவைதந்து வசுதேவரையழைத்து இனி வீண்காலம் போக்க வேண்டாம் சீக்கிரம் என்னைக் கொண்டுபோய் ஆயர்பாடியில் விடுத்து யோகமாயாசக்தியை எடுத்து வந்து இவ்விடம் வைத்துக் கொள்ளுங்களென்ற சிசுவை நோக்கி வசுதேவர் சொல்லத் தொடங்கினர்..

அப்பா மகனே! என்னுடைய கால் கரங்களில் விலங்கு பூட்டியிருக்கிறது யானெப்படி யுனையெடுத் தேகுவேன் அன்றியும் காவற்காரரோ வெகு ஜாக்கிரதையாக விழித்தகண் சிமிட்டாமலிருக்கின்றார்களே இதற்கு நானென்ன செய்வேன் என்று மனங்கலங்கும் தந்தையை நோக்கிச் சிசுவானவன் என்னைப்பெற்ற தந்தையே இத

ற்காக நீரேன் மனக்கலக்க மடைகிறீர். உமது கரங்களா லென் னைத்தொட்ட மாத்திரத்தில் கால் கரங்களுக்குப் பூட்டி யிருக்கும் படியான விலங்குகள் தன் கடையே கழன்றுவிடும் காவற்காரரோ யாதொன்றும் தெரியாமல் திக்பிரமை கொண்டிருப்பார்கள் கதவு களோ தன் கடையே திறந்துக்கொள்ளும் ஒன்றுக்கும் தாங்கள் அஞ்சவேண்டாம் எல்லாக் காரியங்களும் யான் பார்த்துக்கொள்ளு கிறேன் சீக்கிரம் எழுந்திரு மென்ற சிசுவின் மதுர வசனங்களைக் கேட்டு வசுதேவர் தடாலுமென் றெழுந்துத் தன் கரங்களால் சிசு வைத் தொட்டார் உடனே விலங்குக ளகன்றுப் போயிற்று அதைக் கண்டு வசுதேவர் மெத்தசந்தோஷத்துடன் குழுக்குப் பிள்ளையாக வெடுத்துக்கொண்டு மெல்லென நடந்து போகிற போது சிசுவின் ஸ்பரியப் பட்டுக் கதவுகள் திறந்துக் கொள்ளக் கடந்து சென்று யமுனாநதியைத் தாண்டி ஆயர்பாடிக்குட்சென்று யசோதையின் பிரசூதிகாக் கிருகத்தை யடுத்துத் தன் சிசுவை யசோதையின் பக்கலில் கிடத்தி யசோதை பெற்ற யோக மாயா சக்தியை எடுத்துக்கொண்டு வெளிப்பட்டு ஆயர்பாடி யமுனாநதி முதலான தலைவர்த் தாண்டி காராக்கிருகத்திற்குள் நுழைகிறபோ து யோக மாயா சக்தியிள் ஸ்பரியம் படு பழயபடி கதவுகளெல் லாம் மூடிக்கொண்டது. சிசுவைக் கொண்டு போய் தேவகியின் பக்கலில் கிடத்தின் மாத்திரத்தில் வசுதேவர் கால் கரங்களில் தன் கடையே விலங்குகள் வந்து மாட்டிக்கொள்ள அந்தப் பெண் சிசு வானது காவு காவென்று கத்த வாரம்பித்தது அந்த ஓசையைக் கேட்டுக் காவலர்கள் ஓடிவந்து பார்த்து பெண்குழந்தையென் றுணர்ந்து இச்செய்தியை கம்சனுக் கறிவித்தார்கள் அதைக் கேட் டவுடனே கம்சன் திடுக்கிட்டெழுந்து அரையிற் கட்டிய வஸ்திரம் நழுவ சிகையவிழ்ந்தலைவ பெருமூச்சு விட்டுக் கொண்டு ஓடோடி யும் வந்து கதவுகளை பெல்லாந் திறந்துக்கொண்டு உள்ளே புகுந் தக் காவலர்களை எச்சரித்துப் பிரசூதிகாக் கிருகத்தை யடுத்து தே வகி பெற்ற பிள்ளையை எடுத்துக் கொண்டு வெளியில் வருவா யென தேவகி கெருடன் சாயல்பட்ட நாகம்போல நடுநடுங்கிப் பிள்ளையை பெடுத்துக் கொண்டு வெளியில் வந்து ஒ! அண்ணை! மருகனல்ல இது பெண்குழந்தை யாகும் முன்னம் யான பெற்ற பிள்ளைகளைப்பிடித்து பின்னப்படுத்தி விட்டாயே இப் பெண்குழந் தையை யாகிலும் புத்திரி பிரைஷ்டாய்க் கொடும் அன்றியும் ஆண் மகவாய்ப் பிறந்தாலல்லவோ நினக்குப்பகையாளி இதுபெண்குழ ந்தை யாதலால் இது உன்னைபென்ன செய்யும் நீர் முன்னஞ்செய்த சிசு ஹத்திகளை யுணர்ந்து இம்மதுரா புரத்தினி லிருக்கும்ஜனங்க ளெல்லாம் தங்கை பிள்ளைகளைக் கொன்ற காதகனுகும் கம்சனென் றுநிந்திக்கிறார்கள் அந்தப்படி இந்தப் பெண் சிசுவைபுங் கொன்று மென்மேலும் நிந்தைக் குட்படாமல் இச்சிசுவைபாகிலும் மன்னி

த்து அளிப்பீராகில் என் கலிதீர இப்பெண்ணை யாகிலும் வளர்த்துப் புத்திரசோகம் தீருகிறேன் என் வயிற்றுனது பற்றி எறிகிறது சக்கரத் தாழ்வானைத் தரித்த எம்பெருமான் மீது ஆணையாக இப் பெண் சிசுவை ஹத்தி செய்ய லாகாது என்றுப் பதறிக் கதறி முறையிட்டுக் கொண்டிருக்கும் தேவகியின் கரத்திலிருக்கும் பெண்சிசுவைப் பற்றி வலித்து தேவகி நீ எம்பெருமான்மீது ஆணையிட்ட போதிலும் பெண்ணுனுரும் ஆணுனுரும் மடிக்காமல் விடுப்பேனே யாராயிருக்கினும் நான் பயப்படுவேனே வென்று சொல்லி அப் பெண் சிசுவை அங்கிருக்கும் பாராங்கல்லின்மீது விட்டெரிந்தான் அச்சிசு யோக மாயா சக்தி யானதால் தன்னுடைய மாய்கையி னால் அக்கல்லின்மீது விழாமல் இரண்டு பாதங்களையும் அக்கல் லின் மீது ஊன்றி தடாலுமென்று ஆகாயத்திற் கிளம்பி சகல ஆடையாபரண பூஷிதமாகி மூப்பத்திரண்டு கரங்களிலும் ஆயுதங் களேத் தாங்கி தன்னே தேவ ஸ்திரீகள் சூழ்ந்து உபசரிக்க ஆகாயவீதியில் தோன்றி அடா ! கம்சா ! என்னை என்னவென்றெ ண்ணினாய்சிறுகுழந்தையென் றெண்ணினையோ சிறு குழந்தையின் வல்லமையைப் பார்த்தாயா உலகத்தினில் அம்மானுனவன் தங்கை யின் பிள்ளைகளைத் தன் பிள்ளைகளைப்போல வெண்ணி அவர்களைப் பெரும்பாலும் போஷிக்க வேண்டுமென்றும் விதியிருப்பது மல்லா மல் பெற்றவன் ஒரு தந்தை கல்வி கற்பித்தவன் ஒரு தந்தை மந்தி ரோபதேசம் செய்தவன் ஒரு தந்தை பெண்ணைக் கொடுத்தவன் ஒரு தந்தை தாயுடன் பிறந்தவன் ஒரு தந்தை இந்த ஐவர்களும் ஒருவனுக்கு தந்தைகளா மென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றது இந்த ஐந்து தந்தைகளுக்குள் நீயுமொரு தந்தையாக விருந்தும் சிறிதும்யோசிக்காமல் சிசுவதைகள் புரிந்த சண்டாளா மேலும் உன் தந்தையின் புதல்வர்கள் ஆறுபேர்களையும் விடாமற் கொன் றும் அத்துடன் சாந்தப் பட்டிராமல் என்னையுங் கொல்லத்துணிந் தாய் இந்தகாரியம் உன்னுலாகுமோ என்னை வெல்லப் போகுமோ இதனு லுனக்குக் கீர்த்தியுண்டாகுமோ இக்கொடிய செய்கை செ ய்த உன்னுயிர் நீடித்திருக்குமோ அடா மூழுமூடா சகல ஜீவராசி களுக் குள்ளும் புரம்புமாய்வாசஞ் செய்துக் கொண்டிருக்கும் எம் பெருமான் உன்னைக் கொல்லும் பொருட்டு ஓர் மாளிகையினி லவதரித்து வளர்த்துக் கொண்டிருக்கின்ரு னென்று சொல்லி மாய மாய் மரைந்து போயினள். அப்போ தந்தக் கம்சன் பெண்சிசு செய்த சாகத்தையும் ஆகாயத்தினிற்சென்றுக் காளிரூபங்கொண்ட விந்தையையும் தனக் கவள் சொல்லிய புத்தியின் னுட்பத்தை யும் உணர்ந்து ஐயையோ மெத்த துராத்மனுகி நாம் செய்த சிசு வதைகளா லுண்டாகிய பாபங்களுக்குக் கணக்குண்டோ இந்தப் பாபங்கள் எப்படி நம்மைவிட்டு நீங்கும் இத்தனையும் நமக்குண்டா கிய கோபமே பாபமாகி விளைந்த தென்று கருதி சீக்கிரமாக வந்து

தேவகி வசுதேவர்கள் திருவடிகளில் விழுந்து அவர்களுக்குப் பூட்டி யிருந்தவிலங்குகளைக்களைந்து அவர்கள் பாதபங்கயங்களைப்பிடித்த க்கொண்டே எழுந்திராமற் கிடந்தபடியே ஓ! தேவகி! உன்னுடைய வயிற்றினில் பகவான் பிறந்து எண்ணுயிரைக் கொள்ளை கொள்வா னென்று மூன்னம் நாரத மாமுனிவர் சொல்லியதைக் கேட்டு மெ த்த பயாக்கிராந்தனுகி அதிக மத கெர்வத்தினுலே உத்தமர்களா கிய உங்களை யிந்த காராக் கிருகத்தில் விலங்கிட்டு அடைத்தேனே யன்றி, என்னுடைய சுயேச்சை யினுலே உங்களை யிப்படிப்பட்ட கொடிய கஷ்டத்துக் குள்ளாகச் செய்தவனன்று மேலும் உன்னு டைய பிள்ளைகள் ஆறுபேர்களைப் பிடித்து என் வாளுக் கிறையா கச் செய்தேன் இத்தனை பாபங்களுக்குக் காரணம் என்னுடைய விதிவசமே அந்தவிதியை வெல்லுவதற்கு தேவர் மூவர் யாவராலு மாகாதென்றுல் என்னுல் வெல்லத்தரமாமோ உத்தமர்களாகியஉங் களுக்கிப்படிப்பட்ட கஷ்டத்தைக் கொடுத்த துஷ்டாத்துமனுகிய என்னை உங்கள் வாக்கினுல் துக்கத்தை யடையும்படி யாதொன்றும் விள்ளாமல் சுகத்தை யடையும்படி திருவாக்களிக்கும்படி உங்களை வேண்டிக் கொள்ளுகிறேனென்று மெத்தவும் வினயமாகப் புகன் ருன். அதைக் கேட்டு வசுதேவர் மனமுருகி ஓகம்சமகாராஜனே நீ சுகஜீவியாய் வாழ்ந்திருக்கக் கடவாயென்று ஆசிகூறி எழுந்திரா மல் கிடக்கும் கம்சனை இருகரங்களாலும் வாரியெடுத்து அங்கோ ரிடத்தில் உட்கார வைத்துக்கொண்டு ஓ கம்ச மாராஜனே உலக த்தில் ஒரு ஜீவன் பிறப்பதும் கர்மத்தினுலேயே அந்தஜீவன் நாளு க்கு நாள் விருத்தி யடைவதும் கர்மத்தினுலேயே அப்படி விருத் தியடைந்த ஜீவன் நசித்துப் போவதும்கர்மத்தினுலேயே இந்த கர் மத்தினுலேயே இந்த கர்ம்ம மானது ஜெனங்களுக்கு தேவதையா கியும் சுகதுக்கங்களுக்குக் காரணமாகியும் விளங்கு கின்றது ஆத லால், ஓ! கம்சமகாராஜனே! கர்ம சுபாவமாகிய இந்த ஜீவனுக் குப்பிறப்பதும் இறப்பதும் சுபாவமாகவே இருக்கின்றது இதை யுணராமல் மனிதர்கள் மந்த மதியினுலே என்னுலவன் விருத்திக்கு வந்தான் என்னுலவன் நசித்துப்போயினன். என்னுலவன்கொல்வ மடக்கப் பட்டது என்னுலவன் மாண்டுபோயினு னென்று பிதற் றிக் கொள்ளுவார்களே அன்றி, அணுவொன்றை அசைப்பதற்கு ஒருவராலு மாகாது எல்லா விஷயங்களுக்கும் பகவா னொருவ னிருந்துக்கொண்டு அவரவர்கள் கர்மானு சாரத்தின்படி அவரவர் களுக்குச் கண்டனை தண்டனைகளை விதித்து அதைக்கண்டுமகிழ்வது அவனுக்கு லீலா விபூதியாகும் ஆகையால் ஓ! கம்சமகாராஜனே! (அவனலாலுலகமில்லை, அவனலால் நீயுமில்லை, அவனலால் நானு மில்லை, அவனசையாமலெங்கு மணுவசையாது கண்டாய்) என்ற விதின் கருத்தென்ன வெனில ஆதிமூர்த்தியாகிய பகவானை யன்றி, இவ்வுலக மில்லை, அப்படிப்பட்ட பகவான் சகலத்திலும்வியாபித்

திருப்பதினாலேயே இவ்வுலகம் நிலையில் நிற்கின்றது அந்த பகவான் இல்லாவிட்டால் நீயுமில்லை, நானுமில்லை, அவர் நம்முடைய உள்ளத் திற் பொருந்தி யிருப்பதினாலேயே நீயும் உயிர்பெற் றிருக்கின்றாய் நானும் உயிர் பெற்றிருக்கின்றேன் அந்த மூர்த்தி அசையா விட் டால் அணுவும் அசையமாட்டாது அவனசைவதினாலேயே அணு வும் அசைகின்றது, இதை யறிந்துக்கொள்ள மாட்டாமல் ஜனங் கள் கன்ன பின்ன வென்று உளறிக் கொண்டிருக்கின்றார்கள் எல் லாம் அவனுடைய செயலேயன்றி, உன்னாலும் என்னாலும் யாதொ ரு காரியமும் நடக்க மாட்டாது வீணாக யேன் நீ தயரப்படுகின் றாய் இத்தயரத்தை விட்டொழித்து சன்மார்க்கத்திலேயே நின் மனதைச் செலுத்திக்கொண்டிருக்கக் கடவாயென்று கூறக்கேட்டு சொர்க்காதிபோகம் தனக்குக் கிடைத்ததுபோல சந்தோஷத்தை யடைந்து தம்பதியாகும் வசுதேவரையும் தேவகியையும் அக்காட் கிருகத்தைவிட்டு வீதியில் செய்து தன்னரண்மனைபோய்சேர்ந்தான்

அப்போது வசுதேவர் தன் மனைவியாகிய தேவகியை அழைத் துக்கொண்டு சூரசேனப் பட்டணத்தை யடைந்து தங்களரண்மனை யைச் சேர்ந்து இன்புடன் வாழ்ந்து வருகையில் ஒருநாள் வசுதே வர் தான் முன்னம் யசோதையின் பக்கலில் கிடத்திவிட்டு வந்த பிள்ளையை நினைத்துக்கொண்டு உலகத்தினில் பிள்ளையைப் பெற் றால் அப்பிள்ளையை அன்பாக வளர்த்து அப்பிள்ளையின் மதலை மொழிகளையும் விளையாடல்களையும் தாய் தந்தைகள் கண்டு களி த்து ஆனந்திப்பது இயற்கையாக விருக்க யான் பெற்ற பிள்ளை யை அன்னியர் வீட்டினில் விடுத்து அப்பிள்ளையின் மதுர மொழிக ளையும் ஆடல்பாடல்களையும் அவர்கள் கண்டானந்திக்கும்படி மன மாரக் கிடத்திவந்த என்னைப்போலபாவிகளிவ்வுலகத்தினில் யாரே னுமுண்டோவென் றழுது கண்களில் நீர் சோரவிட்டுப் பிரலாபிக் கும் தன் கணவனைக் கண்டு தேவகி பிள்ளையைப் பத்துமாதமும் சுமந்து பெற்றவளான படியினாலே கணவனைவிட எண்மடங் கதிக மாய் அழுது புலம்பித் தனக்குத்தானே ஒருவாராய்தேறிபுருஷ னோக்கி ஓ! ஸ்வாமி! தேவரீரே இப்படி விசனப்பட்டால் அடியா ளைப்போன்றவர்கள் எப்படி சகித்திருப்போம் நமது பிள்ளை எங் கேபோனான் இன்னுஞ் சிலநாள் போனால் தனக்குத்தானே நம்மி டத்திற்கு வருகிறான் ஆடு கொழுக்கிற தெல்லாம் இடையனுக்கு லாபந்தானே அதுபோல நமது பிள்ளை நாளுக்கு நாள் வளர்ந்து பெரியவனான பிறகு நம்மிடம்வந்து சேர்ந்தால் நமக்கு நன்மை தானே அன்றியும் நமது பிள்ளை நம்மிடத்திலே தானே வளர்ந்துக் கொண்டிருப்பானேயாகில் அவனுக்கு கம்சனால் ஆபத்திவந்து சம் பவிக்கும் இப்படி யாருக்குந் தெரியாமல் மரவடமாய் வளர்வத னாலே நமது பிள்ளைக்கு ஆபத்திவர மாட்டாதென்று பலவாறு

போதிதத் தன் புருஷருக் குண்டாகிய துக்கத்தைப்போக்கி அவருக்குப் பணிவிடை செய்வதிலும் போஷிப்பதிலும் பூஜிப்பதிலும் அவர் மனதின்படிப் புணர்ச்சி செய்வதிலும் அவருக்கு விசனமுண்டாகும்போது மந்திரியைப்போல தக்க நீதிகளைச்சொல்லி தேற்றுவதிலும் தன் மனதைச் செலுத்திக்கொண்டு கண்ணே யிமைக் காப்பது போலக் காத்துக்கொண்டுமிருந்தனள் இங்கிப்படிக்கிருக்க அங்கே ஆயர்பாடியில் வசுதேவர் தன்பிள்ளையை யசோதை பக்கலில் கிடத்திய யசோதையின் பிள்ளையை எடுத்துப்போயினுடனே யசோதை மூதலாளுருக்குந் தெளிவுண்டாயிற்று அதெப்படியெனில் இருட்டுக்கும் நித்திரைக்குங் காரணமாகிய யோகமாயை அவ்விடம் விட்டுப் போயின வுடனே பிரகாசத்திற்கும் தெளிவுக்குங் காரணமாகிய சூரியனைப்போன்ற கோடிசூரியப்பிரகாசம்பொருந்திய பகவான் யசோதையின் பக்கலில் சேர்ந்த மாத்திரத்தில் இருள்நீங்கிப் பிரகாசமோங்கவே யசோதை மூதலாளுருக்கும் தெளிவுண்டாகி பெற்ற சிசுவைக்கண்டு ஆண்பிள்ளைப் பிறந்ததென்று சொல்லி அந்த ஆயர்பாடி யெங்குந் தெரியப் படுத்தினர்கள் அதைக்கேட்டு யசோதையின் கணவனுகிய நந்தகோபன் பரமபத சாம்பிராச்சிதத்தை அடைந்தவனைப்போல ஆனந்த மேலீட்டால் உடனே ஸ்நானம்பண்ணி, உத்தமமாகி கன்றுகளுடன் கூடிய பதினாயிரம் பசுக்களையும் பூமிகளையும் வஸ்திரங்களை கன்னிகைகளையும் மனம் போனபடி தானம் பண்ணினர் பின்பு அந்த ஆயர்பாடியிலுள்ள கோபிகா ஸ்திரீகளும் கோபாலர்களும் தங்கள் தங்களுக்கியன்றமட்டும் பால் தயிர் வெண்ணை மூதலான துகளும் காவடிகளில் எடுத்துக்கொண்டு வந்து பிள்ளையைப் பார்த்து ஆனந்த மேலிட்டுத் தங்களை மறந்தவர்களாகி ஓடுவார்களும் விழுவார்களும் ஒருவரை யொருவர் கட்டித் தழுவுவார்களும் பாடுவார்களும் பல்பறை கொட்ட அந்த யிசையினிற் கலந்து நின்று ஆடுவார்களுமாயிற்று ஆயர்பாடியானது அன்றியும் உறியை முற்றத்தி லுருட்டி நின்றுடுவார்களும் நெய் பால் தயிர் இவைகளை ஒருவர்மீ தொருவர் தூவிக்கொள்ளு மவர்களும் பலவித ஆட்டங்களால் கூந்த லவிழ்ந்ததுந் தெரியாமல் அறி வழிந்தவர்களு மாயினர்கள். அந்த ஆயர்பாடியில் வசிக்கும் ஆயர்களனைவோரும்.

இந்தப்படியாக பற்பல கோலாகலத்துடன் அந்த ஆயர்பாடியிலுள்ள ஆயர்கள் யாவரும் ஆடிப்பாடி முடிவில தங்கள் தங்கள் வீட்டை யடைந்தார்கள். குழந்தைபிறந்த பன்னிரண்டா நாள் ஆசாரியர் பிராமணர்கள் பந்துக்கள் மூதலானோரையும் நந்த கோபர் வரவழைத்து இருக்கச்செய்து தங்கள் குல குருவாகிய கர்க்காசாரியரைக்கொண்டு அக்குழந்தைக்குக் கண்ணனென்று நாமகரணமிட்டு மூன்றுதர மழைத்துத் தொட்டிலி லிட்டு அக்குழந்தைக்கு

ஊசல் லாலி முதலாயின கோப ஸ்திரீகள் பாடக்கேட்டு யாவருங் களித்திருக்க அப்போது நந்தகோபர் வந்திருக்கும் ஆசாரியர்முத லாகுருக்குந் தக்க சன்மான மளித்து விடைகொடுத் தனுப்பி பந்துக்களுடன் புசித்து சந்தன புஷ்ப தாம்பூலாதிகளைத் தரித்துப் புத்திரனை எடுத்துக் கொஞ்சிக் குலாவி களிசாகரத்தினில் மூழ்கி யிருந்தார். யசோதையும் பேரானந்த முடையவளாகிப் புத்திரனை வெகு செல்வமாக வளர்த்துக் கொண்டிருக்கிற போது ஒருநாள் கம்சனவன் கொலுவிலிருந்து மந்திரிகளை நோக்கி ஓ! அமைச்சர் களே! நேற்றிரவில் யோக மாயா சத்தியானவள் ஆகாயத்தில்தோ ன்றி என்னைச் சங்கரிக்கும் பொருட்டு பகவான் ஒரு கிருகத்திற் பிறந்து வளர்ந்து வருகின்றானென்று சொல்லி மறைந்து போயினள் ஊரு பேரில்லாமற் சொல்லிய யோகமாயையின் கபடமொழிகளுக் கென்னசெய்யலாம் யோசித்துச் சொல்லுங்களென்று புகலக்கே ட்டு அந்த அமைச்சர்கள் ஒருவருக் கொருவர் யோசனை செய்துக் கொண்டிருக்கையில் பூதகியானவள் வந்து ஓ ஸ்வாமி இதற்காகத் தாங்களேன் பயப்படவேண்டும் அடியாளை யனுப்பிஇல் பட்டண ங்களிலும் ஆயர்பாடிகளிலும் பிறப்பதும் வளர்ப்பதுமான பிள்ளை களை விடாது பிடித்து வதைசெய்து வருகிறேன் என்னை யனுப்பு மையா வென்றனள் அம்மொழிகளைக் கேட்டு இதுவே சரியான யோசனை இப்படிச் செய்தால் உமது பிராணனுக்கு பயமில்லையெ ன்று சொல்லும் மந்திரிகளின் இஷ்டப்படி கம்சன் அந்த பூதகியை யழைத்துநீ சொல்லியபடி பட்டணங்களிலுங் கிராமங்களிலும்,பிற ப்பதும் வளர்வதுமான பிள்ளைகளைப் பிடித்துக் கொன்றுக்கொண் டேவரக் கடவாயென்று கட்டளையிட்டனுப்ப அவளும் அந்தப் படியே சென்று தன் மூலையில் விஷத்தைப்பூசி அங்குள்ள பிள்ளைக ளுக்குப் பால்கொடுத்து அனேக மாயிரம் பிள்ளைகளைக் கொன்றுக் கொண்டே ஆயர்பாடியைச்சேர்ந்து அங்குள்ள ஸ்திரீகளெல்லாம் தன்னைக் கண்டு பிரமிக்கும்படியான அழகிய சுந்தர வடிவமெடுத் துக்கொண்டு யசோதையின் அரண்மனைக்குள் புகுந்து அங்குவிசா லமான அழகிய கூடத்தினில் நவரத்தினங்கள் பதித்த தொட்டி லில் இடத்தி யிருக்கும் கோடி சூரியப்பிரகாசம் பொருந்திய பிள் ளையைக் கண்டு இவன்தான் கம்சனுக்கு வைரியென் றுணர்ந்து நாம் வந்தகாரியம் அனுகூலமாயினதென மகிழ்ந்துத்தனக்குப்பின் வரும் கதியை யறியாமல் சிறு குழந்தையென மதித்து அக்குழந் தையின் அருகிற் குருகியபோது அச்சிசுவானவன் வந்தவனின்னு னென்றும் கம்சனு லேவப்பட்டவ னென்றும் தன்னைக் கொல்ல வெண்ணங்கொண்டிருப்பதையும் உணர்ந்து காவு காவென்றுவீரிட் டழத் தொடங்கினன். அவ்வழு குரலோசையை இரண்டாம்கட் டில் வீட்டு வேலைகளைச் செய்துக்கொண்டிருக்கும் யசோதைகே ட்டு செய்துக்கொண்டிருந்த வேலையை விடுத்து ஓடோடியும்வந்து

தன் பிள்ளையின் பக்கலில் நின்றுக் கொண்டிருக்கும் மங்கையைக் கண்டு நீ யாரம்மா? உன்னூரென்ன? பேரென்ன? நீ யிங்கே வந்திருக்கவேண்டிய காரணமென்ன சொல்லுமம்மா வென, அதற்கந்த மாயா மங்கை நான் கொஞ்சதூரத்திலிருக்கும் இடைச்சேரியில் வசிப்பவள் எனக்கு மொரு பிள்ளையுண்டு அப்பிள்ளைக்கிப்பாலூட்டி விடுத்துத் தயிர் விற்பதற்காக வந்தேன் நெடுநேரமாய்விட்டபடியால் பால் கட்டிக்கொண்டு மெத்த உபத்திரவமாக விருக்கின்றபடியாலும் இப்பிள்ளைக்காகிலும் பால்கொடுத்து எனக் குண்டாயிருக்கும் உபத்திரவத்தைத் தீர்த்துக் கொள்ளலாமென்று இங்குவந்தேன் என்று வினயமாகக் கூறினள் அதைக்கேட்டு யசோதை ஓ! அம்மா! வெகு திட்டமாக என் பட்டியை முத்தமாட கிட்டாதே கைனீட்டித் தொடாதே வேறொருவர் பாலை இவன் குடிக்க மாட்டான். சற்றே பொரு அழகிய ரூபரேகைக ளமர்ந்த இப்பிள்ளைக்கு உன்னுடைய ஸ்பரிசம் அக்கரையில்லை, விசேஷமாகப் பால் இங்கிருக்கின்றது போதும் உன்னுடைய பாலை யென் பிள்ளைக்கி நீகொடுக்கவேண்டிய அவசியமில்லை யென்று சொல்லி விறிட்டு மேலுமேலும் அழுகிற தன் புதல்வனை தொட்டிலில் நின்றும் எடுத்துப் பலவாறு உபாயங்களால் அழுகிறதை மாற்ற வேணுமென்று ஏதேதோ செய்தும் கைக்கடங்காமல் வெகு உபத்திரவம்செய்யும் பிள்ளையை அந்த மாயாமங்கையினிடமாகிலுங் கெடுத்துப் பார்ப்போமென்று கருதி அவளிடம் யசோதை கொடுத்தாள் உடனே பிள்ளை அழுவதை விடுத்தான் அவளும் அந்தப் பிள்ளையை மடிமீது கிடத்திக்கொண்டுபால் கொடுத்தாள் என்ன சொல்லிக் கொண்டே பால் கொடுத்தா ளென்றால். அடா சிறுகுழந்தாய் என்னுடைய முலைப்பால் ஒருமுணர்குடிப்பையே யானால் அதினுள்ள திரேக புஷ்டியையும் இப்போ தனக்கிருக்கும் அழகைப் பார்க்கிலும் அதிக அழகையுந் தரும் அதைக்கண்டு யான் களிப்பதுடன் என்னுடைய எண்ணமும் நிறைவேறுமென்று சொல்லிக்கொண்டே அக்குழந்தைக்குப் பால் கொடுத்தாள். குழந்தை வடிவமாயிருக்கும் பகவான் அவளெண்ணத்தையும் சொல்லியதையும் அறிந்து ஒரு முணரிலேயே அவள் பாலையெல்லாம் உண்டார். இரண்டாவது முணரினால் அவள் திரேகசக்தியை யெல்லாம்உண்டார் மூன்றாவது முணரினால் அவள் பிராணனையே உட்கொண்டார். இப்படி யச்சிசுவருக்கொண்டிருக்கும் பகவான் பூதகியின் பிராணனை உண்டமாத்திரத்திலேயே வாக்கு வெளிப்பட்டு கோரைப்பற்களைக் காட்டி ஆறு யோசனை நிகளமும் இரண்டு யோசனை யகலமு முடைய பெரிய பர்வ்தத்தைப் போல வீழ்ந்தனள். இப்படி யந்த அரக்கி விழுந்த போது இடையிலிருந்த வீடுகளெல்லாம் கீழேயும் அவள் மேலேயும் விழுந்தபடியினாலே அனேகம் வீடுகள் அப்பளங்களாய் நொறுங்கிப்போயிற்று அவள் மார்பின் மீது குழந்தையாகிய பகவான்

தவழ்ந்துக் கொண்டிருந்தான். இதைக்கண்ட யசொதையும் ரோகணியும் இது வென்ன மாயம், மந்தையா யிருந்தவள் மாயா வரக்கியாகிமலையப்போல விழுந்திறந்தாளே என்று மெத்த ஆச்சரியப்பட்டு அவள் மார்பினி லிருந்தத் தங்கள் புதல்வனைச் சிக்கிர மெடுத்துப்போய் எப்படி பயந்தானை என்னமாய்க் கதறி யழுதானை வென்று கருதி அக்குழந்தைக்கி திருஷ்டி கழித்து ரக்ஷாமந்திரம் யெழுதிக்கட்டி இச்செய்தியை நந்தகோபருக்குத் தெரியப்படுத்த அவரும் என்னமோ மோசமுண்டாயிற் றென்று வெகு சீக்கிரமாய் வந்து பெருத்த பர்வதாகாரமாய் விழுந்து கிடக்கும் அரக்கியைக் கண்டு இவள் ரசக்கதமாய்கையினல் வந்து நம்முடைய பிள்ளையைகொல்ல நினைத்தவளாகும் இப்படிப்பட்ட கெட்ட வெண்ணமுடைய இவளைப் பகவான் பார்த்துக் கொன்றுவிட்டதாகத் தோனறுகிறதென் றுணர்ந்து அனேகமாயிரங் கோபாலர்களைக் கொண்டு அச்சவத்தைத் தூக்கிப் பார்த்தும் எடுபாடமல் அதிக பாரமாயிருந்தபடியால் கண்டகோடாலியைக் கொண்டு துண்டாக அச்சவத்தைவெட்டி மயான பூமியிற் சேர்த்து வெகுவாகக் கட்டை மிட்டைகளைக் கொண்டு அக்கினியிட்டுச் சாம்பலாக யெறித்தார்கள் இப்படி யெறிகிற போது சுடுநாற்றி மின்றிப் பரிமளவாசனை வீசியது அதே சமயல் பகவானுடைய ஸ்பரியம் பட்டபடியினும், பகவானைக்கொல்ல வெண்ணங் கொண்டு வந்தவளா யிருந்த போதிலும் அவள் தன் மூலப் பாலைக் கொடுத்தபடியினலே பகவான் அவளையும் தன்னைப் பெற்ற அன்னையைப் போல பாவித்தப் பாலையுண்டு அவளைக் கிருபாநோக்கத்தால் பார்த்தபடியினலும் அவள் செய்த பாபங்களெலலாம் பெருங்காற்றின் முன்னம் பஞ்செனவும ஆகாயத்தையளாவிய பஞ்சுப்பொதிகளின் மீது அக்கினிப் பொறியொன்று பாந்து அப்பஞ்சு பொதிகளெல்லாம் யெறிந்து உருமாய்ந்து போவது போல நசித்துப் போயினபடியால் சுடுகாற்ற மின்றி, பரிமளம் வீசியது இது தெரியாமல் யாதவகர்ள் இப்படி யிவ்வுலகத்தி லெங்குங் கண்டதில்லை யென்று ஆச்சரியமடைந்து தங்கள் தங்கள் இல்லறஞ் சேர்ந்தார்கள் அப்போது நந்தகோபர் தன் னரண்மனையை யடைந்து பிள்ளையைக் கண்டு ஆனந்தங் கொண்டு பதனம் பதனம் யென்று யாவரையு மெச்சரித்துப் புசித்துத் தன் காரியங்களுக்குப் போயினர்.

அங்கே கம்சன் பாலர்களை மடித்து வருகிறேனென்று போயின பூதகி இன்னும் வரக்காணுமே யென்று யெதிர்ப்பார்த்துக் கொண்டிருக்கையில் சில தூதர்களோடி கம்சனை வணங்கி ஓ ஸ்வாமி பூதகியானவள் ஆயர்பாடியி லிருக்கும் நந்தகோபருடைய கிருகத்துள் சென்று அங்கு தொட்டிலி லிருந்தப் புதல்வனை யெடுத்துப் பால்கொடுத்துக் கொண்டிருக்கையிலே தன் கடையாய்

உயிர் நீங்கினனென்றும் அவள் திரேகத்தை நந்தகோபர் கோபால
ர்களைக் கொண்டு தண்டந் தண்டமாக வெட்டி ஸ்மசான பூமியிற்
சேர்த்து எரித்துச் சாம்பலாக்கினர் என்றும் வதந்தி பிறந்ததென்
றூர்கள் அதைக்கேட்டு கம்சன் அக்குழந்தையே தனக்குவைரியாகு
மென் றுணர்ந்து அவனைக் கொல்லுதற்குத் தக்க சூரனை யனுப்ப
வேண்டுமென்றுலோசித்து அங்கிருந்த சகடாசூரனை யழைத்து நீ
போய் அந்தநந்தகோபருடைய கிருகத்தினி லிருக்கும் பிள்ளையைக்
கொன்றுவரக் கடவாயென்று கட்டளையிட அவனும் அந்தப்
படியே வண்டி சக்கரம்போல, ஆகாய வீதியிற் கிளம்பி உருண்டுக்
கொண்டே நந்தகோபருடைய கிருகத்துக்குள் புகுந்து தொட்டி
னில் நித்திரை செய்பவனைப்போல மூன்பின்வரும் காரியங்களை
யெதிர்பார்த்துக்கொண்டும் அதற்குத் தக்க உபாயத்தை யோசித்
துக்கொண்டு மிருக்கும் பிள்ளையின்மீது போய்ப் பாய்ந்தான்.
அப்படிப் பாய்ந்த அரக்கனை அப்பிள்ளை தன்னிடது காலா லொ
ருஉதை உதைத்த மாத்திரத்தி லந்த சகடாசூரன் உயிர் துறந்து
பூமியின் மீது வீழ்ந்தான். அவனையும் பூதகியைப் போல ஸ்மசான
பூமியிற் கொளுத்தி விட்டார்கள் இந்தப்படியே திருணவர்த்தன்,
பகாசூரன், தேனுகாசூரன், கார்த்தபாசூரன். முதலான அனேக
அசுரர்களைக் கம்சன் வேவ அவர்களும் அச்சிறுவனால் மடிந்தனர்
கள் பின்பு அந்தக்கண்ணன் ஆயர்பாடிக்குட் புகுந்து அவர்கள்
சேகரித்துவைத்திருக்கும் பால், தயிர், வெண்ணை, நெய், முதலிய
வைகளையும் உண்டு வெரும் பாண்டங்களாக்கி முற்றத்தி லுருட்டி
வருவதனாலே அந்த ஆயர்பாடியி லிருக்கும் கோபஸ்திரீகள் யாவ
ரும் ஒன்று கூடிப் பேசிக்கொண்டு ஒருநாள் கண்ணனைப் பிடித்து
ஒரு வீட்டினுள் போட்டு அவ்வீட்டின் கதவைப் பூட்டி அனேக
நாளையதிருடன் இன்று அகப்பட்டானென்று யாவரும் கூடி யசோ
தையி னிடம் வந்து ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் வீட்டிற்குள்
கண்ணன் வந்து பால், தயிர், வெண்ணை, நெய்யிதகளைத் திருடி
யுண்டு பாண்டங்களை முற்றத்தி லுருட்டிவிட்டு வருகிற படியினாலே
இன்றையதினம் அத்திருடனைப் பிடித்துக் கட்டி ஒரு அரைவீட்டி
ற்குள் போட்டு பத்தோ பஸ்தாய் கதவைப் பூட்டி அவன் செய்
கையையுன்னிடத்திற் சொல்ல வந்தோமென்றனர். அதுகேட்டு
யசோதை அந்த கோபிகைகளை நோக்கி என்னுடைய ஸ்தன்னி
யத்தை விட்டு யெங்கும் ஏகமாட்டாதவனும் என்று அடுத்த வீடுக
ளுக்குச் செல்ல வழிபறியாதவனும் இன்னும் நன்றாய்க்கண்களைத்
திறந்து பார்க்கச் சக்தியில்லாதவனுமாகிய இச்சிறு குழந்தையின்
மீது கோள் சொல்ல வந்தீர்கள் அன்றியும், நீங்களிவனைப்பிடித்து
வீட்டினி லடைத்து வைத்திருக்கிறேமென்றும் கூறிய மொழிகள்
பொய்யல்லவோ நீங்கள் திருடனென்று பேர்ப்படுத்திய சிறுகுழ
ந்தை இதோ என்னிடத்தில் நீங்காதிருக்கின்றான் பாருங்க ளென்

முத் தன் புதல்வனை பக்கத்தி லிருக்கக் காட்டினாள். அச்சிறு குழ
ந்தையைக் கண்டு கோபிகள் யாவரும் பிரமித்து இதென்ன மாயம்
இக்குழந்தையை வீட்டிற்குள் போட்டு நாம் பூட்டிவிட்டு வந்திரு
க்க இவனெப்படி யிங்கு வந்தானென்று ஆச்சரியப்பட்டு யசோதை
யுடன் பதில்பேச நாவெழாமல் வெட்கி நாணமடைந்து சென்று
அவ்வீட்டை சோதிக்கையில் வீடு பூட்டிய வண்ண மிருக்கக்கண்டு
தாவுகோலைப் போட்டுக் கதவைத் திறந்துகொண் டுள்ளே சென்று
பார்த்துச் சிறு குழந்தையைக் காணுமல் நாம் பூட்டினபூ பூட்டின
படி யிருக்க எப்படிப் போயினானே அவன் மெத்த மாயஜாலங் கற்
றவனாக விருக்க வேணு மென்று யோசித்துத் தங்கள் தங்கள் இல்
லறஞ் சேர்ந்தனர்கள். பின்பு கண்ணன் நாளுக்குநாள் செல்வ
மாக வளர்ந்து ஐந்துவயதாகவே ஒருநாள் பலராமருடன் சில கோ
பஸ்திரீகளுடனும் விளையாடிக்கொண் டிருக்கையில் அந்தக் கண்
ணன் மண்ணையள்ளி யுண்ணையள்ளி யுண்டார் அதைக்கண்டு பல
ராமர் அடா! தம்பி கண்ணு? மண்ணைத் தின்றவர்கள் ஜீவித்திரு
க்க மாட்டார்கள் அப்படிக்கிருக்க நீயே னப்பா மண்ணைத் தின்
றாய் என்றார் அதற்கு கண்ணன் அண்ணு! மண்ணி னிடத்தி லெனக்
கென்னமோ பிரிய முண்டானதால் மண்ணைப் புசித்தேன் அன்றி
நும் எனக்கு மெத்தப் பசியா யிருப்பதாலும் மண்ணைத் தின்றே
னென்றார். அதற்கு பலராமர் அடா! தம்பி நான் கேட்ட கேள்
விக்குத் தக்கபதில் சொல்லாமல் பசியினால்மண்ணைத் தின்றே னென்
கிறாயா நல்லது இச்செய்தியை அம்மாவிடத்திற் சொல்லி உன்னைத்
தக்கபடி தண்டனை செய்யும்படிச்சொல்லுகிறே னென்று சொல்லிக்
கொண்டே சென்று யசோதையைக் கண்டுபணிந்து சொல்லத்
தொடங்கினார்.

ஓ! அம்மணி! நமது கண்ணன் மண்ணைப்புசிக்க வேண்டாம்
வேண்டாமென்று நான் சொல்லிக்கொண் டிருக்கும்போதே என்
சொல்லைக்கேளாமல் மண்ணை வாரிவாரி யுண்டான் அப்படி யவ
னுண்டதற்கு இதோநிற்கிற கோபச் சிறுமிகள் சாட்சியென்றார்.
அதுகேட்டு யசோதைகரத்தினி லொருபிரம்பை யெடுத்துக்கொ
ண்டு வெளிப்பட்டு கண்ணன் விளையாடு மிடத்திற்கு வந்து அட
குழந்தாய் நீயேன் மண்ணைத்தின்றாய் இந்த துடுக்குக் காரியங்களை
யேன் விடமாட்டாய் நீ மண்ணைப் புசித்தா யென்று உன னண்ண
னுகியு பலராமனும்கோபச் சுறுமியர்களுஞ் சொல்லுகின்றார்களே
மண்ணையன்றி உனக்கு வேறு பாதார்த்தங்க ளில்லையோ வென்று
மிரட்டி பயமுறுத்தினள். அதற்கு கண்ணன் மெத்த பயந்ததனை
ப்போல, அழுகையித்து அம்மா யான் மண்ணைத் தின்னவில்லை அப்
படி யான் மண்ணைப் புசித்ததற்கு நானென்ன சிசுவா வருமையினா
லும் பசியினாலும் பீடிக்கப்பட்டவனே அல்லது பயித்தியம் பிடித்

தவனே இவர்கள் வார்த்தையை நம்ப வேண்டாம் என்னை எப்படியாகிலும் அடிப்பிக்க வேண்டுமென்று மனதிலெண்ணி இம்மார்க்கத்தை யோசித்து இவர்கள் சொல்லுகின்றார்களம்மா என் வாயைத் திரக்குறேன் அந்த வாயில் எங்காகிலும் மண்ணிருக்கிறதா அன்றியும், மண்ணின் வாசனையாகிலும் மிருக்கிறதாயென்று பரிசோதித்து என்வசனங்கள் பொய்யாகில் தண்டனை செய்யுமம்மா வென்றனன். அதற்கு யசோதை சம்மதித்துப் புதல்வனை அருகிலழைத்து வாயைத் திரக்கச்சொல்லி பார்க்கிறபோது அந்த கண்ணன் வாக்கினில் சப்த சமுத்திரங்களும் எட்டு பர்வதங்களும் இதற்கு நடுவினி லிருக்கும் வனங்களையும் பட்டணத்துக் கிராம வனந்திர ஆகாயத்தையும் சூரிய சந்திர நவக்கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் ஏகாதச ருத்திரர்களையும் சாசிஜபவசிவதனய முகாதிகளும் சகல யோகிகளையும் நாரதாதி மகாரிஷிகளையும் சகல ஜீவராசிகளையும் அண்டபிண்ட பிரமாண்டங்களையுங் கண்டு பிரமித்து இது வென்ன சொற்பனமோ அல்லது பிள்ளையின் மீதிருக்கும் பிரியமோ? மாய்கையோ? அன்னியர்களால் விடப்பட்ட ஏவலோ இது உண்மைதானே இதை யின்னதென்று அறிந்துக்கொள்ள சக்தியற்றவளாகி யிருக்கின்றேனே யசோதை யானல்லவோ என்ற சந்தேக மூண்டாவதற்குக் காரணம் ஆயர்பாடி நந்தகோபர்ய சோதை கோபஸ்திரீகள் கோபாலர்கள் முதலானேரும் வாக்கிலிருக்கக் கண்டபடியினாலே யசோதைக்கு சந்தேக மூண்டாகியது மன்றி பாலகன் எவ்வளவு இவனுடைய வாயிலே பிரம்மாண்டங்களும் பிரகாசித்துக் கொண்டிருப்பதற்குக் காரணமென்ன இதை யோசிக்கையில் பெருந்த ஆசசரியத்திற்கு மூலமாக விருக்கிறது என்று சற்றேநிதானித்து இவன் நமது புதல்வனல்ல, சாவாத்து மாவாகும் எம்பெருமானே யிவனுகு மென்றுன்னினபோது பகவான் ஓ! ஹோ! இவள் நம்மை இன்னனென்று தெரிந்துக் கொண்டனளென் றுணர்ந்து உடனே யசோதை னிடத்திற்கு தன் மாயையை ஏவினர். அம்மாயை யசோதையின் பக்கலில் அணுகிய மாத்திரத்தில் பகவானென்ற நிச்சயத்தை மரந்து அதிகப் பிரியத்தினால் தன் புதல்வ னென்று தொடைபின்மீது வைத்துக்கொண்டு பலவித வேடிக்கைகளை அப்புதல்வனுக்குக் காட்டி பால் கொடுத்து மமதையடைந்திருந்தனள்.

இப்படிக் கிருக்கிறபோது யசோதைக்கொரு கியாபகமுண்டாயிற்று அதென்ன வெனில் அடுப்பின்மீது பால்வைத்து வந்தவளானபடியினாலே பால் பொங்கிப் போயிருக்கு மென்ற நினைவுண்டாகி விரைரப் பாலுண்ணுத தன் பாலகனை அங்கொரு பீடத்தின் பேரில் விடுத்துப்போய் பாலை இறக்கிவைத்து விட்டுத் தயிர் கடைவதற்குத் தொடங்கினள். அப்போது கண்ணன் மெத்தப்

பசியினாலே சோர்ந்து பூமியின்மீது விழுந்தும் அழுதும் அம்மா சீக்கிரம் வாரும் பசிதீரப் பால் கொடும் என்றும் வெட வெட என்று உதைத்துக் கொள்வது முதலாகிய பால சேஷ்டைகளைச் செய்துக்கொண்டே யசோதை தயிர் கடையும் பானையை யடித்து மத்தை யெட்டிப் பிடித்துக்கொண்டான். அப்படி மத்தை யெட்டிப் பிடித்துக்கொண்ட தன் பிரிய புதல்வனாகிய கண்ணனை யெடுத்து மடியின்மீது வைத்துக் கொண்டு பால கொடுக்க அவனுங் குடித்துக்கொண் டிருக்கையில் மறுபடியும் யசோதை கண்ணனை யொரு பீடத்தின் மீதில் விடுத்து வேதோ காரியமாய்ப் போயினள். அதை யறிந்துக் கண்ணன் மெத்த கோபத்தினால் அங்கிருந்து ஓர் கல்லைக்கைக்கொண்டு தயிர்ப்பானையை யுடைத்து வெகு தைரியத்துடன் அந்தத் தயிர்ப்பானையிலிருந்த வெண்ணையை யெடுத்துத் தின்று அதை விடுத்து வேறொரு அரைவீட்டிற்குள் புகுந்து உரலைத் திருப்பிப் போட்டு அதின்மீதேறி உரியினிலிருந்த வெண்ணையை யெடுத்து அது நேத்திய வெண்ணையா யிருப்பதையறிந்து அவ்வெண்ணையை ஒரு குரங்குக்குக் கொடுத்துக்கொண்டிருக்கிற பாலகனை யசோதைக்கொண்டு கையிலொரு பிரம்பைப் பிடித்துக் கொண்டு அடா! கண்ணா! ஆகட்டும் ஆகட்டும் இத்தப்படி திருட்டு வேலைகள் செய்தவர்களை யானிதுபரியந்தம் ஒருவரையுங் கண்டதில்லை, யின்றைக்கு உன்னை நேரில் கண்டேன் இத்தப்படி தான் கோபிகா ஸ்திரீகள் வீடுகள் தோறுஞ் சென்றுப் பால் தயிர் வெண்ணை நெய் யிவைகளைத் திருடித் தின்றிருப்பாய் இல்லாவிடிலென்று மில்லாமல் நேத்திய தினம் ஆயர்பெண்க ளெல்லாம் வந்து உன்மீது புகார் சொல்லுவார்களோ அவர்கள் சொல்லியது பொய்யென் றிருந்தேன் இன்று நீ செய்கிற செய்கையினாலது வுண்மையாகவே யிருக்குமென்று நம்பத் தக்கதாக விருக்கின்றது இப்படிப்பட்ட துஷ்ட செய்கையையுடைய நின்னை வெளித்தில் விடவேனை வெளியிலே சீக்கிரம் வாடாவென்று பயமுறுத்து வதைக் கண்டு கண்ணன் யிதற்கென்ன செய்கிறதென்று மெத்தவும் பயந்து அவ்வரைவிட்டுக் கதவின் சந்தில் பதுங்கினான் அப்போது யசோதை வெளியில் சீக்கிரம்வாடா வாடா வென் றழைத்தும் அவன் நம்மூடைய சொல்லை லட்சியஞ்செய்யாம லிருக்கின்றான் நல்ல தாகட்டுமென்று உள்ளே தேடிப் போய்த் தேடிப் போகப் பார்த்துக் கதவின் சந்திலிருந்தவன் தடாலுமென்று வெளிபி லோடினான். அவனோடின அரவமறிந்து யசோதையும் பின்னே தொடர்ந்தோடி ஓடி வேசாரி விடாய்த்து வெகு நயவார்த்தைகள் மொழிந்து அழைத்தும் வராமலோடுவதைக்கண்டு மெத்தவும் அலுத்த இவனைப் பிடிப்பதற்கு நம்மாலாகாதென்று கலைத்து வீழ்ந்தனள். அதைக் கண்டு கண்ணன் மெத்தவும் மனமுருகி போல ஓடிக்கொண்டே வந்து தன் கடையே யசோதை கரத்தி லகப்பட்டுக்கொண்டான்.

அப்படி யகப்பட்ட தன் புதல்வனை விடாமற் பிடித்துக்கொண்டு யசோதையானவள் தன் னரண்மனைக் கழைத்துப்போய் இவனை வெவ்வாறு தண்டிப்பேன் பூலோகத்தி லில்லாத போக்கிரியாயினன் என்று பலவாறு சிந்தித்து உரலில்கட்டிப்போட்டால் வெளியி லெங்கும் போகவு மாட்டான் வீட்டிலுங் கொடிய துஷ்டதனமுஞ் செய்யவு மாட்டா னென்று யோசித்து ஒரு முழக்கயிறுகொண்டு கண்ணன் இடுப்பிற்கு அளவிட்டாள் அதுபோதாம லிருக்கவே பின்னுமொரு முழங்கயிறு பிணைத்துப் பார்த்தாள் அதுவுங் குறை நிருப்பதால் இந்தப் படியே தன் னரன்மனை யிலுள்ளக் கயிற்றை யெல்லாம் பிணைத்தும் அதுவும் கண்ணன் யிடுப்பிற்குக் குறைவா யிருந்தபடியால் மிகக் களைத்து அப்பா யிவனைக் கட்டுவதற்கு நம் மால் முடியாதென்று மெய் சோர்ந்து சற்றுநேரம் பொறுத்து ஒரு சாண் கயிற்றிலேயே யிடுப்பிற் கட்டி மற்றொரு மூனையில் வே றுகயிற்லைப் பிணைத்து உரலுடன் சேர்த்துக் கட்டி விட்டுத் தன் வீட்டுக்காரியங்களைச் செய்யச் சென்றனள்.

அப்போது கண்ணன் தவர்ந்து அந்த உரலையிழுத்துக்கொண்டு புழக்கடைக்குச் சென்று அங்கொரு மருதமரம் இரண்டு பிரிவா யிருக்க அதின் நடுவிற் புகுந்து உரலை யிழுத்துக்கொண்டு போகை யில் உரலானது அம்மரத்தின் இரண்டு பிரிவுக்கு நடுவில் மாட்டிக் கொள்ள அதைக்கண்டு கண்ணன் மறுபடியும் ஒரு நெக்கு நெக்கி யிழுக்கிறபோது. அம்மருத மரமானது சல்லி வேறற்றுப் பூமியின் மீது சாய்ந்தது, உடனே, அம் மருத மரத்திலிருந்து இரண்டு சித் தபுருஷர்கள் வெளிப்பட்டுப் பாலகனுகிய பகவானைத் துதித்தவ ரம் பெற்றுக்கொண்டு தங்கள் வாச பூமியாகிய குபேரன் பட்ட ணத்தை யடைந்தார்கள். இந்த சித்த புருஷர்கள் என்ன காரண த்தால்மருதமரமாயினர்களென்றால், இவ்விருவரில் ஒருவன் பெயர் நளகூபரன், மற்றொருவன் பெயர் மணிக்ரீவன் இவ்விருவரும் குபே ரனுடைய தூதர்கள் இவ்விருவரும் மதுபானஞ் செய்து தங்களை மறந்தவர்களாகி ஒருநாள் தங்கள் ஸ்திரீகளுடன் யமுனாநதியை யடைந்து ஜலக்ரீடை செய்துக்கொண் டிருந்தனர்; அப்போது. திரிலோக சஞ்சாரியாகிய நாரதமாமுனிவர் அம்மார்க்கமாய்வரக் கண்டு ஸ்திரீக ளிருவரும் வினாந்தோடி வந்து கரையேறி தங்கள் தங்கள் ஆடைகளைத் தரித்துக் கொண்டார்கள். நளகூபரன் மணிக் ரீவன், இவ்விருவரும் அதிக மதுபானஞ் செய்த வெறியினால் நார தரை மதிக்காமல் கர்வங்கொண்டு நதியை விட்டு வராமல் ஆடை யின்றிப்பிறந்த சொரூபமாக விருந்தார்கள் அதைக்கண்டு நாரதர் அவர்களை நோக்கி, அடா! துஷ்டாத்துமாக்களே! இம்மார்க்க மாய் அனேகம் யோகீஸ்வரர்கள் முனீஸ்வரர்கள் முதலான பெரி யோர்கள் அடிக்கடி வந்துக்கொண்டே யிருப்பார்கள், இப்படிப்

பட்ட தலத்தினிலிருக்கும் யமுனாநதியினில் நீங்கள் ஜலக்கிரீடை, செய்வதுதகாத ; அன்றியும், அப்படி நீங்கள் செய்தபோதிலும் பெரியோர்க ளென்ற மதிப்பில்லாமல் உங்களுக் கிருக்குஞ் செல்வச் செருக்கினாலுஞ் மதபான வெறியினாலும், அலட்சியஞ் செய்த படியினாலே நீங்களிருவரும் பூலோகத்தினி லனேக வருஷகாலம் மருதமரமாகி யிருக்கக் கடவீரென்று சபித்தார். அதைக் கேட்டு அவர்க ளிருவரும் மெய் நடுங்கி நாரதர் திருவடியில் விழுந்து, ஓ ! ஸ்வாமி ! மதபான வெறியினால் நாங்கள் செய்த அபசாரத்தை மன்னித்து எங்களை ரட்சிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண் டார்கள். அதற்கு நாரதமுனிவர் நாமிட்ட சாபந் தவறமாட்டாது. அந்தப்படியே ! நீங்கள் மருத மரமாகி யிருக்கிறபோது பகவா னுடைய ஸ்பரிசம் பட்டு உங்களுக்கு சுயரூபமுண்டாகிப் பகவா னிடம் வரம்பெற்று வாசபூமியைச் சேரக் கடவீர்களென்று சொ ல்லி மனமதுக் கிசைந்தபடிச் சென்றனர். இவர்களந்தச் சாப விசேஷத்தால் மருதமர மாயினர் ; பகவானும் நாரதர் வசனத்தை க்கௌரவிக்க வெண்ணி அவர்சொல்லியபடியே அவர்களையும் ஆத ரித்து வரந் தந்தருள புரிந்தனர். பின்பு, இந்த யசோதையும் நந்த கோபரும், மருதமரத்தின் சமீபத்திலோடிவந்துபார்த்து பாலனு க்குயாதொரு அபாயமும்நேரிடாத வண்ணம் பகவானே காப்பாற் றினா ரென்று மனமகிழ்ந்துப் பாலகனை உரலினின்றும் விடுவித்து எடுத்துப்போய் ஸ்நான முதலானவையுஞ் செய்வித்து வெகுப்பிரி யமாக வளர்த்து வந்தனர். இந்த யசோதையும் நந்த கோபனும் பூர்வ ஜன்மத்தினி லென்ன புண்ணியஞ் செய்தவர்கள் ! சகல ஜீவ ராசிகளிலும் அந்தராத்துமாவாய் விளங்கும் சர்வேஸ்வரனுக்கு ஸ்தன்னியங் கொடுப்பதற்கும் அந்த பகவானுடைய வாக்கினில் பிரம்மாண்டங்களையுஞ் சேவித் தானந்திக்கவும் அவருடைய லீலைக ளாகும் விளையாட்டைக் கண்டு களிக்கவும் என்ன நோன்பு நோற் றாரோ ! தன் புதல்வனென்று எடுத்து முத்தமிட்டுக் களிப்படை யும் நந்தகோபரென்ன புண்ணியஞ் செய்தவரோ ? அதையும் தெரி ந்துக் கொள்ள ஆவல்கொண்டோமென்றால் இந்த யசோதையின் கற்பின் னிலைமையும் நந்தகோபருடைய தபோ வல்லமையையுஞ் சிறிது விவரிக்கின்றேன்.

மூன் ஜென்மத்தினில் அஷ்டவசுக்களில் ஒருவராகிய துரோ ணர், இவர் மனைவியாகிய தரை இவர்க ளிருவரும் ஒருவரைவிட் டொருவர் பிரியாமல் உடலு முயிர்போல, (இல்லற மல்லது நல்லற மன்று) என்ற ஔவையார் வாக்கியத்திற் கிணங்க, இல்லற தரு மமே மேன்மையாகிய தருமமென் றுணர்ந்து இல்லறத்தை படை ந்து அதற் குபயோகமாகும் நடவடிக்கைகளில் பிடிபட்டு வருகிற போது தரையானவள் தன் கணவனைவிட வேறு தெய்வமில்லை

யென்றும் தன்கணவனுக்குத் தானேசெய்யும் பணிவிடையைவிட அன்னியர்கள் பணிவிடை பயன்படாதென்றும் தானேசெய்துக் கொண்டும் லீலையில் நாயகன் இஷ்டப்படி நடத்திக் கொண்டும் தன்மனுளன் கண்டு களிக்கும்படியான ரூபத்துடன் விளங்கிக் கொண்டும், தன் பிராணநாயகன் திடகாத்திரவச்சிர சரீரம் பெற்று விளங்கும்படியாகப் போஷித்துக் கொண்டும், சுரலத்துக்குத் தக்க படி தன்கணவனுக் கினிய மொழிகளே யுரைத்துக் கொண்டும் எப் பொழுதும் தன் கொழுனன் மீதிலேயே மனதைச் செலுத்திக்கொ ண்டும், நெடுநாள் இல்லறத்தில் வாழ்ந்து வருகையில் எல்லா பாக்கி யங்களுமிருந்தும் புத்திரபாக்கிய மொன்றில்லாக் குறையால் அதற் காகவேண்டிய தான தருமங்களைச் செய்து திவ்ய க்ஷேத்திரங்களுக் குச் சென்று அங்கங்குள்ள மூர்த்திகளே சேவித்தும், திவ்ய தீர்த்த ங்களில் மூழ்கியும், பற்பல விரதங்களே யனுஷ்டித்தும், இன்னும் மனேக்கிரியைகளேச் செய்தும் இவர்களுக்குப் புத்திர பாக்கிய மூண்டாகாமையால் மிகவும் வருந்தி முடிவில்தவஞ்செய்ய விரும்பி வானப்பிரஸ்த ஆசிர்மத்தை யடுத்துக் காட்டிற் சென்று தவமியற் றினர்கள் அதெப்படியெனில், பிரமதேவனே நோக்கி, இரண்டு பகூத்திற் கொருதரம் கண்ணைவிழித்துக் கனிவர்க்கங்களேப் புசித் தும் தவமியற்றிக்கொண்டிருந்து மறுபடி மூன்றுபகூத்திற் கொரு தரம் கண்ணை விழித்துச் சாகுபகூணஞ்செய்து தவமியற்றி யிருந்து மறுபடியும் நான்கு பகூத்திற் கொருதரம் ஜலத்தைப் புசித்துத் தவமியற்றி யிருந்து, மறுபடியும் ஐந்துபகூத்திற் கொருதரம் வாயு பகூணங்களேச் செய்துக் கொண்டு அனேக வருஷகாலம் தவமியற் றிக்கொண் டிருக்கிறபோது பிரமதேவன். சரஸ்வதி சமேதனுக் காட்சிதந்து யாதுவரம் விரும்புகிறீர்களென்று வினவ, துரோணர் பிரமனேவணங்கி துதித்து புத்திரபாக்கிய மொன்றே வேண்டுவ தென்றனர். அதற்குப் பிரமன் இச்சன்மத்தில் உங்களுக்கு அப்பாக் கியம்கிட்டாது அடுத்தஜன்மத்தில் உண்டாகும் ஆதலால் கிலேசப் படவேண்டாமென்று கூறி மறைந்தனர். தம்பதிகளிருவரும் இத் தனே சிரமப்பட்டும் நமக்கிந்த ஜன்மத்தினில் புத்திர பாக்கிய மில்லா தொழிந்ததே யென்று சிந்தித்துக் கொண்டே தங்க ளிருப்பிடத் தைச் சேர்ந்து சிலகாலம் வாசம் பண்ணிக் கொண்டிருந்து மூடிவி ளிலக்த ஜென்மத்தை யொழித்து துரோணர் நந்தகோபராகவும் அவர்மனேவி, தரை யசோதையாகவும், ஜன்ம மெடுத்தார்கள். பிரம தேவன் கொடுத்த வரத்தின்படி சாகூரத் ஜெகதீசன் இவர் களுக்குப் பிள்ளையாகப் பிரமதேவனே அரிய கௌரவப் படுத்தினர்.

தவமியற்றிய, இவர்கள் புண்ணியத்திற்கும் பாக்கியத்திற்கும் தக்கபடி பகவான் லீலைகளென்னும் விளையாட்டினலும், பல விநோதங்களேக் காட்டி இவர்களே மகிழச் செய்துக் கொண்டிருக்

கையில் யசோதையும், நந்தகோபரும் தங்கள் பிள்ளை யென்றும் அவர்செய்யும் லீலையாட்டினையும் வீரதங்களையும் கண்டு அடங்கா மகிழ்ச்சி யடைந்து வெகு பிரியமாக வளர்த்து வந்தனர். அவரும் பலராமருடன் வெகு சுந்தரமாய் வளர்ந்து தக்க வயதில் பலராமருடன் மதுரா நகரத்தை யடைந்து கம்சனை வதைத்துப் பீமனுல் ஜராசந்தனைக் கொன்றுக் கடலில் துவாரகை யென்றொரு நகரத்தை மயனுல் நிர்மித்து அதில் குடிபுகுந்து ருக்குமணி, ராதை முதலான அஷ்ட பாரியைகளை மணந்து தன்னைப் பெற்ற தாய் தந்தையர்களாகும், வசுதேவ தேவகியையும் வளர்த்த தாய் தந்தையர்களாகும், நந்தகோப யசோதைகளையும், பதினுயிரத்திருநூறு கோபஸ்திரீகளையும், துவாரகைக்கு வரவழைத்து அவரவர்களோடு வெகு காலம் வாழ்ந்திருக்கும் போது வசுதேவர் மூன்னம் மரணமடைய அதைக்கண்டு தேவகியும், காமினிப் பூதலத்தினி லிருந்து என்ன பிரயோசன மென்று தானும் உயிர் மாய்த்துக்கொண்டாள்! இவ்விருவருக்கும் கண்ணன் விதிப்படி பிரேத சம்ஸ்காரங்களைச் சிறப்பாக நடத்தினர். சிலநாட்களுக்குள் நந்தகோபர் மரணமடைந்தார். அதுகண்டு, யசோதை துக்கசாகரத்தினில் மூழ்கினவளாகிப் பலவாறு புலம்பி யழுது உடனு முயிருமா யிருந்த அடியாளை விட்டு உயிராகிய தேவரீர் பிரிந்துபோன பின்பு உடலாகிய யான் மாத்திரம் மிப்பூமியில் வாழ்வதெப்படி அடியாளும் தேவரீருடனே வருகிறே னென்றுசொல்லி துக்கப்பட்டுக் கொண்டிருந்தபடியே பிராணனை விடுத்தனள். இதை யறிந்து பலராம கிருஷ்ணமூர்த்திகள் அவர்களுக்குந் தக்கபடி சம்ஸ்காரங்களைச் செய்வித் தருளினர்கள்.

தேவகி கற்பின் மகத்துவம் முற்றிற்று.

ஸ்ரீராமஜெயம்.

உலூபி கற்பின் மகத்துவம்.

அதல-விதல-சுதல-தராதல-மகாதல-ரசாதல-பாதாள-மென்னும் கீழுலகங்கள் ஏழினில் ஒன்றுகிய பாதாளலோகத்தில் கவுரவியனென்னும் நாகராஜ னொருவனிருந்தான். அந்த கவுரவியனுக்கு உலூபி யென்றொரு புதல்வி யுண்டு. அக்கன்னிகையை உலகினில் சுந்தர மூடைய மாதர்கள் ரூபத்தினில் எள்ளள வெள்ளளவாக அழகை ஆராய்ந்தெடுத்து மிக்க கஷ்டப்பட்டு பிரமதேவர் சிருஷ்டித்தாரோவென்று சொல்லும்படியான ரூபரேகை சௌந்தரிய மூடையவளாக விருந்தனன். இப்படிப்பட்ட அழகும் சாந்த சமதமாதி குணங்களாகும், உத்தம குணங்களும் வாய்ந்த அந்தபா

தாள லோகத்தினிற் வசிக்கும் சகலருந் தண்ணீப் புகழ்ந்துக் கொண்டாடும்படியான குணசம்பத்தையு மடைதிருக்கிற போது தன் தந்தையாகிய கவுரவிய நாகராஜனல் அர்ச்சுனனுடைய ரூபங்-குணம்-சௌரியம்-வீரம்-அடைக்கலம் புகுந்தவர்களைக் காக்குந்திறம் முதலானவைகளைச் சொல்லக் கேட்டிருந்தவ ளானதால், அந்த அர்ச்சுனனையே தான் மணம்புரிய வேண்டுமென்றும், அவனையன்றி அன்னியர்களைக் கனவிலும் மணம்புரியக் கருதுவதில்லை யென்றும், அந்த அர்ச்சுனன் தனக்குப்பிரப்த மாகாவிடில் அவசியம் உயிரைத் துரப்பேனென்றும், மனோநிடஞ் செய்துக் கொண்டு படுக்கும்போதும், எழுந்திருக்கும் போதும் வீட்டு வேலைகள் செய்கிற போதும், யாரிடத்திலேனும் பேசிக்கொண் டிருக்கிறபோதும், அந்த அர்ச்சுனனையே இடைவிடாது சிந்தித்து வந்தித்துக் காலத்தை யெதிர்பார்த்துக் கொண்டு மிருந்தனள் இப்படிக்கிருக்கிறபோது, இந்த உலூபிக்கி ஒரு யோசனை யுண்டாயிற்று; அதென்ன வெனில் நாமித்தப் பாதாள லோகத்தினி லிருந்துக்கொண்டு பூலோகத்தில் வசிக்கும் புருடனை சிந்தனை செய்துக் கொண்டிருந்தால் அப்புருடன் நமக்குக் கிடைப்பது அசாத்தியமாகும் ஆதலால், நாமித்தலத்தை விட்டுக் கெங்கா நதிக்கித் தினந்தோறுஞ்சென்று அங்குள்ள பெரியோர்களைக் கொண்டு சங்கற்பங்கள் செய்து தான தருமங்களீந்து வருவோமாயின் அந்த கங்கா தேவிக்கி நமது பேரில் கிருபையுண்டாகி நாம் நாடிய புருஷனை மாலையிடும்படிக்குச் செய்விப்பாள். அன்றியும், அங்கே தினந்தோறும் வந்து சங்கற்பமும் தானதருமங்களையுஞ் செய்யும் பெரியோர்களின் தெரிசன பலத்தினாலும் நமது எண்ணங் கைகூடி வருமென்றும் பெருத்த யோசனை செய்து தான தருமங்களுக்கும் கங்காதேவியைப் பூசிப்பதற்கும வேண்டிய உபகரணங்களையு மெடுத்துக் கொண்டு புறப்பட்டனள்.

இவ்வாறு, அந்த உலூபி மஞ்சள் குங்குமம்-அகுதை-தாம்பூலம்-புஷ்பம்-முதலாகிய சகல வஸ்துக்களையுமெடுத்துக் கொண்டு பூலோகத்திற்குவந்து பிராதக் காலத்தில் கெங்காநதியை யடுத்து அந்த கெங்கையில் மூழ்கிப் பெரியோர்களை வணங்கி கங்கையைப் பூசித்து அநேக நாகரத்தினங்களைத் தானஞ்செய்து கங்கையை நோக்கி,ஓ! கங்கா பாவனியே! அடியாள் மனதினி லெண்ணியபுருடனை மாலையிடும்படி கிருபைக் கண்ணோக்கம் வைப்பாய், நினக்கு அனேகங் கோடி சரணம் செய்கின்றேன், மகா விஷ்ணுவின் திருவடிகளிற் பிறந்து சகலருங் கொண்டாடத் தக்க சிறப்பினையடைந்தி நினக்கு அனேக மாயிரங் கோடி சரணம் நின்னுருவமாகிய நதியினில் மூழ்கினவர்களுடைய சகல பாபங்களையும் போக்கி அவர்களைப்புனிதராகச் செய்வதுமன்றி, அவர்கள் கோரின கோரிக்கைகளையும் நிறைவேற்றும்படியான கிருபா நோக்கமுடையளன்தாயே!

முன்னமொரு காலத்தில் பிராமணனொருவன் தன் மனைவி புத்திரர் களை விடுத்து வேசி வீடே கெதியாகவிருந்து நிர்யாணகாலம்வந்து சம்பவிக்க அந்த வேசியானவள் பிராமணனுயிற்றே யென்றுன்னி அவனைப் பெண்சாதி பிள்ளைகளிடம் சேர்ப்பிக்க அந்தப் பிராம ணன் தன் மனைவியை நோக்கி ! அடி பெண்ணே என் பிராணனை திரேகத்தை விடுத்துப் போகிற சமயமா யிருப்பதால் சீக்கிரம் யா ரையாகிலும் அனுப்பி என தன்புக்குரிய வேசியைத் தாம்பூலத்தை மென்று கொடுக்கும்படி நியமித்து அத்தாம்பூலத்தை வாங்கிவரச் செய்யடி யென, மனைவியானவள் வேசியினிடம் ஒரு புதல்வனை யனுப்ப அவனும் வேசியினிடமேமேகி செய்தியைத் தெரிவிக்க (அத்புதம் மகிமாகங்கா பஜவியேலம் ஜனிதபசூர்ணு தத்வே ஸ்யா தாம்பூலே விமானேயதூர்ணு) என்றபடி அந்த வேசியானவள் வாசனைத் திரவியங்கள் சேர்ந்த பாக்கை வாயிற்போட்டுக் கொண் டு பிடிவெற்றிலையைக் கையிற் பிடித்துச் சுண்ணும்புதேடுகிற போ து அப்பாத்திரத்தில் சுண்ணும் பில்லாமையாலும் நடுராத்திரியான தாலும் அப்பாத்திரத்தைச் சுரண்டி யெடுத்துக்கொண்டு வெளியில் வந்து திண்ணையின் மீது படுத்திருக்கும் காசிப் பிராமணனை யெழு ப்பிக் கொஞ்சந் தீர்த்தங் கொடுமென, அக்காசிப் பிராமணனும் தன் காவடியைத் திறந்து, அதினுள்ள கங்கா தீர்த்தத்தில் உத்த ரணி தீர்த்தங் கொடுக்க அத் தீர்த்தத்தை யந்த வேசி உலர்ந்த சுண்ணும்பினிற் சேர்த்து வெற்றிலையிற்றடவி வாயில் போட்டு மென்று அந்த உச்சிஷ்டத்தை யொரு இலையி லுமிழ்ந்துக் கொடு க்க, அதை யந்தப் பிராமணச் சிறுவன் பெற்றுக்கொண்டோடோ டியும் வந்து தன் தந்தையினிடமளிக்க அதைப் பிராமணன் வாங்கி வாயிற்போட்டுக் கொண்ட மாத்திரத்திலேயே யப்பிராமணன்னு யிர் நீங்கினது மன்றி, தேவ விமானம்வர அதின்மீதேறி சொர்க்க லோக மடைந்தனன். ஆகையால், ஒரு கரண்டி தீர்த்தத்திலேயே இப்படிப்பட்ட பாதகனுடைய பிராமணன் செய்த பாபங்கள் யாவும் நசித்து சொர்க்கலோகத்தை யடைந்தநின் பெருமை மகா அற் புதம் ! அற்புதம் ! யாவராலும் புகழத்தரமென்று. அனறியும், நின் தீர்த்தத்தைப் புசிப்பவர்களும் நின் தீர்த்தத்தில் மூழ்கு மவர் களும், நின் தீர்த்தத்தால் பிரசாதஞ் செய்து புசிப்பவர்களும், நின் தீர்த்தக் கரையினில் வாசஞ்செய்யு மவர்களுமாகிய பெரியோர் களின் அருமையையும், பெருமையையும், தரும நிலமையையும், பொறுமையையும், ஆயிரம் பணமுடிகளையும், இரண்டாயிரம் நாவு களையும்,பெற்ற ஆதிசேஷனலும் சொல்லமுடியுமோ? என்னம்மணி ஏழையாகு மடியாள் மனத்துயரம் போக்கி கேரிக்கையை! நிறை வேற்றுவ தனக்கோர் அருமையோ வென்று பற்பலவாறு துதிசெ ய்து வணங்கிப் பணிந்துப் பாதாள லோகத்தை யடைந்து அன்று தொடங்கி கங்காதேவியைக்குறித்து விரகமனுஷ்டித்துயிருந்தனள்

அந்த உலூபி பாதலத்தைவிட்டு பூலோகத்தை யடுத்து கங்கா நதியை யணுகி தினந்தோறுஞ் சென்று கங்கையினில் மூழ்குவதும், கங்கையைப் பூசிப்பதும் பெரியோர்களைப் பணிந்து தானதருமஞ் செய்வதும், கங்கா தேவியைத் துதிப்பதுமாக வெகுகாள் கடத்திக் கொண்டு வருகிற போது, கங்காதேவி உலூபியின் பக்தி விசுவாசத்திற்கு மெச்சி இவள் கோரிக்கையின்படி இவளுக்கு அர்ச்சுனன் கணவனுக்கடவனென்று மனதி லெண்ணி அந்த கங்கா தேவி, ஆகாயத்தினில் அசரீரியாக நின்று ஓ! உலூபி! நின் கற்பின் நிலமைக்கும், நினதரிய நற்குணங்களுக்கும், நின் பக்தி விசேஷத்திற்கும் யான் மெத்தவும் களிப்படைந்தேன். நீ யின்றுமுதல் தினந்தோரும் இந்த கங்கையிலேயே மறைந்து உருமாறி கால அளவுப்படி போக்குவரத்தா யிருப்பையே யாகில் நீ கோரிய புருஷனுகும் அர்ச்சுனனை இன்னுஞ் சிலகாளில் காணுவாய் அவனை மணந்து சுகஜீவியாய் வாழ்ந்திருக்கக் கடவாயென்று சொல்லி வரந்தந்து மறைந்துபோயினள். அம்மொழிகளைக்கேட்ட மாத்திரத்தில் அந்த உலூபி தேவ போகத்தை யடைந்தவளைப்போல ஆனந்தமடைந்து கங்காதேவி சொல்லியபடிக்குத் தினந்தோறுங் கங்கைக்கு வந்து தன்னுருவத்தை மாற்றிக் கொண்டு அந்த கங்காஜலத்திற்குள் அந்த கட்டத்துக்குரிய கால அளவின்படி சஞ்சரித்துக் கொண்டிருக்கிறபோது, ஒருகாள் அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை செய்யப் புறப்பட்டு அநேக நதிகளெல்லாம் மூழ்கிக் கொண்டே கங்காநதியைச் சேர்ந்துத் தன்னுடன் வந்த பிராமணர்களும் தானும் ஸ்நானம்பண்ணி மடியாடையுடுத்திப் பரிசுத்தவான்களாகி அக்கினி வளர்த்தி ஹோமஞ் செய்துக் கொண்டிருக்க, அர்ச்சுனனும் சங்கற்பமும் முதலிய தர்பணமுஞ் செய்துக் கரையேறவேணுமென் றிருக்கு மளவில் அந்த ஜலத்துக்குள்ளே கெங்காதேவி சொற்படி விளையாடிக் கொண்டிருந்த உலூபி யென்னும் நாக கன்னிகையானவள் அர்ச்சுனனைக்கண்டு மோகித்துத் தன்னுடைய மாய்கையினுல் அந்த அர்ச்சுனனைத் தவளையாகச் செய்து ஓய்மகாராஜனே! உமது வீரபராக்கிரமத்தையும், நற்குணங்களையும், அடுத்தவர்களை யாதரிக்குங் கீர்த்தியையும், என் தந்தையினுல் சொல்லக் கேட்டது முதல், தேவரீரையன்றி, அன்னியர்களை மணம்புரிய யென் மனது சம்மதிக்க வில்லை. அன்னுள் தொடங்கி நாளது பரியந்தம் கெங்காதேவியை நோக்கி விரதமும் பூசை முதலானதுகளும் நடத்திக்கொண் டிருக்கின்றேன் இன்றையதினம் என் பாக்கியவசத்தினுலும், கெங்காதேவியின் கிருபையாலும், தாங்களே வந்துவிட்டீர் இனி யட்டிசொல்லாமல் வந்து அடியாளை மணம்புரிந்து எனக்குண்டாயிருக்கும் மன்பத பாதையைத் தீர்த்துக் காப்பாற்ற வேணும் ஸ்வாமி யென்று வணங்கினுள். அப்படி தன்னை வணங்கிய உலூபியை நோக்கி, அர்ச்சுனன் சொல்லுகின்றன். அடி மாதரசே! நான்

வந்த காரிய மொன்று யிருக்க, அக்காரியத்தை முடிக்காமல் எந்த காரியத்திலும் பிரவேசிக்க மாட்டேன் என் கருத்தினி லுன்னிய காரிய முடிந்தபின்பு யான்வந்து நின்னை மணம் புரிகிறேன் என் றான். அவ்வசனங் கேட்டு, அந்த உலூபி யானவள் அர்ச்சுனனை நோக்கி, ஓ! என் பிரியமுள்ள நாயகரே! உம்முடைய மனதிலெ ண்ணிய காரியமென்ன, அக்காரிய முடிந்த பின்பு வந்து என்னை மணம்புரிகிறே னென்றீர் அந்த காரியத்தை விவரித்து அடியாளுக் குச் சொல்லவேணும் ஸ்வாமி என்று பணிந்தாள். அதற்கு அர்ச் சுனன், ஓ பெண்ணே! என்னுடைய தமையனாராகிய தருமராஜன் பன்னிரண்டு மாதம் விரத மிருக்கும்படி எனக்குக் கட்டளையிட்டி ருக்கிறார். அந்தக் கட்டளையையான் தவறக்கூடாது, நீயோ என்னை விசு வாசித் திருக்கிறவளானபடி யினாலே உனக்கும் இஷ்டத்தைப் பூர்த்தி செய்யவேண்டியதா யிருக்கிறது நானே பொய்யாய் நடக் கிறவனல்ல, என்னுடைய விரதத்திற்குங் குறைவுவராம லிருக்கவே ணும், உனக்கும் இஷ்டத்தை நிறைவேற்ற வேணும், இவ்விரண்டிற் கும் விரோத மில்லாமற் எப்படிநடக்கலாம், இதற்கொரு உபாயஞ் சொல்லுமென்று கேழ்க்க, அந்த உலூபியானவள் ஓ! பாண்டு குமாரனே! நீர் இப்போது தீர்த்யாத்திரை செய்து வருவதுந்தெரி யும் உமக்கு உம்முடைய தமையனரிட்ட கட்டளையுந் தெரியும் இதெல்லாமல் திரௌபதியின் நிமித்தியம் நாரதருடைய முன்னிலை யில் ஏற்ப்பட்ட தன்றோ அந்த தருமத்திற்குயாதொரு குறையும் வரமாட்டாது, எப்படியென்றால், மெத்த ஆபத்தை யடைந்து சர ணம் புகுகின்றவர்களைக் காப்பாற்றுதல் எல்லா தருமங்களைப் பார் க்கிலும் முதன்மையான தரும மல்லவோ அந்தபடி அடியாள் மன் மதனாலே மெத்தவும் வேதனைப்பட்டு அந்த வேதனையைச் சகிக்க முடியாமல் தேவரீரைச் சரணமடைகின்றேன் இந்தச் சமயத்தி லெ ன்னைக் காப்பாற்றினா லன்றோ தருமம் உமதுவிரதத்தைப் பூர்த்தி செய்துவந்து காப்பாற்றுகிறே னென்பது தருமமாகுமோ, ஆகமாட் டாது, ஆதலால், இப்போதே எனக்குண்டாகிய மன்மத பாதை யைப் போக்கும்படியான கிருபா நோக்கஞ் செய்வீரேயாகில் உம் முடைய விரதமும் பூரணமாகி தருமமுங் கெடாதிருக்கும் ஆசை யால், தேவரீரே கதியென்று நம்பின இழ்வேழையைக் காப்பாற்ற வேணும் இது சகல சாஸ்திர சம்பன்னர்களும் ஒப்புக் கொள்ளத் தக்க தருமமாகும் இப்படிக்கிச் செய்யாமல் நீர் உமது விரதத்தை பே பெரிதாக வெண்ணி என்னிஷ்டத்தை நிறைவேற்றாமல் போவீ ரேயாகில் உடனே யான் மரணமடைவேன் இது சத்திய மென்று நம்பும், இதனால் உமக்குப் பெண்பாவம் பெண்பழிவந்து நேரிடும். என்று நிச்சயமாய் எண்ணும், அன்பும், உலகத்தில் ஒருவருக்கு உயிரைக் கொடுப்பதைக் காட்டிலும் உயர்ந்த தருமமுண்டோ! இந்த நீதிகள் தங்களுக்குத் தெரியாதோ மேலும் தங்களைச் சரண

மடைத்த அனேக யேழைகளைத் தாங்கள்முன்னங் காப்பாற்றி இர ட்சித்திருக்கின்றீரே ! இந்த சமயத்தி லதுகளே யெல்லாம்மறந்து விட்டீர் போலத் தோற்றுகின்றது, என்னிடத்தினி லில்லவது கிரு பை செய்யலாகாதோ என்பிராணநாயகரே ! உம்மிட நிமித்தியம் பன்மதனுலே மெத்த துயரத்தை அனுபவிக்கின்றேனே எவ்வித த்திலும் என்னைக் கைவிடாமல காக்கும்படி வேண்டிக் கொள்ளுகி றேன் என்று மிகவும் பரிதாபமாகச் சொல்லக்கேட்டு, அர்ச்சுன னும் மனமுருகி இவளிஷ்டத்தை நிறை வேற்றுகிறது பெரிதான புண்ணியமென்றெண்ணி அந்த உலூபியை நோக்கி அடிபெண்ணே! யுன் மனங்களிகொள யானுன்னை மணம் புரிந்து அனேக நாளாய் எனக்காக கெங்கா தேவியைக் குறித்து விரதஞ் செய்திருந்த நின் ஆவல்தீர உன்னைக் கூடிக் கலந்தனைந்து உனக்குற்ற காமவேளைத் தீர்க்கமனமிசைந்தவனு விருக்கின்றே னென்றுன் இம்மொழிகளைக் கேட்ட உலூபி அடங்கா மகிட்சியடைந்து அர்ச்சுன னடைந்திருக் குந் தவனே யுருவைமாற்றி என் தன்புக்குரிய பிராண நாயகரே ! வாருமென்றழைத்துக் கொண்டு பாதாளலோகத்தை யடைந்து இச்செய்தியை தன் தாய் தந்தைகளுக்குத் தெரியப்படுத்தி அவர் களும் சம்மதிக்க அந்த நாகலோகத்தை அலங்காரஞ்செய்வித்து கல்யாண மண்டபம் சிங்காரித்து, அனேகமேளவாத்தியங்கள்முழ ங்க, வேதவேதியர்கள் சூழ, அரசாணிக்கால்நாட்டி, உத்தமமங்கி லிய ஸ்திரீகள் பாலிகையும், மாணிக்க தீபங்களு மேத்திவர, அர்ச் சுனனுக்கு திவ்ய தீர்த்தங்களால் ஸ்நானஞ்செய்வித்து மாணிக்கங் கங்கள் பதித்த ஆடையாபரணங்களால் அலங்கிருதஞ் செய்து கல்ல லக்கினத்தினி, லழைத்து வந்து கல்யாண மண்டபத்தில் மணவரை யின்மீது உட்காரவைத்து நலங்கிட்டு சுப வாசகங்கள் பாடினர். இதற்குள் உலூபியை திவ்ய தீர்த்தங்களினுல் ஸ்நானஞ்செய்வித்து விலையுயர்ந்த ஆடையாபரணங் களினு லலங்கிருதஞ் செய்து அழை த்துவந்து மணவரையிலிருத்தி கலங்கு முதலான சடங்குக ளிய ற்றி மந்திர புஷ்ப்பாக்ஷதைகளால் பூசித்தும் பெரியோர்களாலும் பந்துக்களாலும், ஆசிகூறப்பட்டு விளங்கும் மங்கள சூத்திரத்தை அர்ச்சுனனிடங் கொடுத்து மங்கள வாத்தியமும், வேத கோஷ்ட மும், பெரியோர்கள் கூறும் ஆசியும் கடலொலிபோல் முழங்க, சுபமூகூர்த்தத்தில் உலூபியின் கண்டத்தில் தரிக்கச் செய்து ஹோ மம்வளர்த்தி சடங்குகள் யாவற்றையும் முடித்துப் புரோகிதர் பிரா மணோத்தமர்கள் முதலான அதிதி அப்யாகதிகளுக்கும் அந்த கவுர வ நாகராஜன், கோதானம் பூதானம்-வஸ்திரதானம்-கன்னிகாதா னம்-ஹிரண்ணியதான-முதலாகிய சோடச தானங்களும், அவரவர் கள் மனங்களிக்கும்படிச்செய்து விடைகொடுத்தனுப்பித் தன் பந் துவர்க்கங்களுடன் புசித்துச்-சந்தன-புஷ்பதாம்பூலாதிகள்-தரித்து அப்படி ஏழுநாள் வெகு சம்பிரமமாக விவாகத்தைமுடித்து அன்றி

ரவில் படுக்கைவீடு அலங்காரஞ்செய்து அதில் காமத்துக்குரிய வஸ்துக்களோ யமைத்துத் தம்பதிகளிருவரையும் அப்பள்ளி யறையிற் சேர்த்தார்கள். அப்போதந்த உலூபி யானவள், அடங்கா மகிட்சியுடன் பள்ளியறையைச் சேர்ந்து தன்பிராணநாயகரான அர்ச்சுனன் திருவடிகளைப் பரிசுத்ததீர்த்தத்தினால் விளக்கி சந்தன-புஷப் பாட்சதைகளால் அர்ச்சித்து தூபதீப நைவேத்தியங்களால் பூசித்து அத்தீர்த்தத்தையும் கொண்டு வெகு வாகத் துதித்துக் கொண்டே நின்றனள். இப்படி நிற்கும் உலூபியின் பதிவிரதா தனத்திறமும், நற்குண நற்செய்கைகளுக்கும், அர்ச்சுனன் மெத்தக் களிதக் களிப்படைந்து அவளை வாரித் தழுவி முத்தமிட்டு, அடி பெண்ணே? உன்னைப்போல பதி பக்தியிற் சிறந்த உத்தமிகளை யான் கண்டதில்லை, இப்போது நடக்கவேண்டிய காமா விஷயங்களை விடுத்து நீ கற்பிக்குறிய நடவடிக்கைகளில் மனதை நிருத்தி நீ செய்த பக்திக்காக உன்னைப்பற்றி நான் அடைந்த சந்தோஷத்தை யென்ன வென்று சொல்லுவேன் யென்று வெகுவாகப் புகழ்ந்தான். அதற் கந்த உலூபியுஞ் சந்தோழிக்காமல் ஒ! ஸ்வாமி! பதிபக்திசெய்யும் விதி யிப்படிப்பட்ட தென்றும் அறியாத நிர்மூடியாயிற்றே. அடியாளைத் தேவரீர் சிலாக்கித்துப் புகழ்வது நீதியாமோ! தேவரீர்! அனேகந் தீர்த்தயாத்திரை செய்து வந்தவ ரென்றும், பெரியோரென்றும் உலகத்தார் செய்யு முறைமையைப்போல அடியாளுஞ் செய்தேனே அன்றி, உண்மையிலேயே பக்தியுடன் செய்தவளென்று ஆ! ஹ! ஹா! பதிவிரதையென்றபெயர் எனக்குத் தகுமோ யென்று கைச்சியமாகச் சில மொழிகளைப் பகர்ந்து நிற்க, உடனே அர்ச்சுனன், அவளுடைய பரதந்திர நடவடிக்கைகளை யுணர்ந்து இவள் அருந்ததிக்கும் சாவித்திரி தேவிக்கும் நிகரானவளாகு மென்று மதித்து அவளைக் கடடியணைத்து முத்தமிட்டு ஐக்கியித ஆலிங்கனம், பதினெருவித அதரபான முதலிய வற்றை இயற்றிச் சுமந்தர உலூபி மனங் களிப்புற ரதிகேளி விளாபாடி மதனலீலைகள் புரிந்துப்-புகழ்ந்து-மகிழ்ந்து-நயந்து-வியந்து அன்றிரவெல்லாம் வெகு சந்தோஷித் திருந்தான்.

இவ்வண்ணமாக, அர்ச்சுனன் அந்தப் பதிவிரதையாகிய உலூபியைக்கூடி சிலநாளிருந்து அவளகங் களிக்கச் செய்து ஒருநாள், அர்ச்சுனன் தன் மனைவியாகிய உலூபியை நோக்கி, அடிபெண்ணே! குணவதியே! நா னிவடத்திற்கு வந்து சில ஞளாயிற்று உன்மனோரதத்தைப் பூர்த்தி செய்விப்பது பெருத்த தருமமெனக் கருதி, இத்தனைநாளிருந்து நெடுநாளாக என்னையே கோரி காதல் கொண்டிருந்தனின் கோரிக்கையை நிறைவேற்றினேன் இனி யெனக்குச் செலவு கொடுத்தால் போய்வருகிறே னெனக் கேட்டு அந்த உலூபி நீங்காத்துயரக் கடலிலாழ்ந்ததனாலப் பெருமூச்சி விட்டு

என்னுயிருக்குயிராகிய பிராணநாயகரே? உம்மை விட்டுப்பிரிந்து எவ்வண்ணம் உயிர் தரிப்பேன் என்னை விட்டு நீர் பிரிந்துபோனால் உடனே மரிப்பேன் என்று மெய்சோர்ந்து பூமியின் மீது வீழ்ந்தாள். அதைக்கண்டு, அர்ச்சுனன் அவளுக்கு சில சைத்தியோபசாரங்கள் புரிந்து அவளைத் தேற்றி அடிபெண்ணே! என் கண்மணியே! என் தமையனுர் கட்டளையின்படி யான் வந்தகாரியத்தை நீ யறிந்தவளாக விருந்தும் என்னைப் போகவிடாமல் மறுபது நீதியோ! எனக்குற்ற தீர்த்தயாத்திரையை முடித்துக்கொண்டு சுதேசத்தை யடைந்தவுடனே யானுன்னை யழைப்பித்துக் கொள்ளுகிறேன் என்றுன். அவ்வார்த்தைகளைக் கேட்டு அந்த உலூபி தன் கொழுனன் முன்களில் வீழ்ந்து பலதரம் தாழ்ந்து ஓ! என் பிராணநாயகா! உம்மை பிரிந்துயிருடனிருக்க யென்னுலாகுமோ ஒருவரா லென்குறை போகுமா வென்று உருகி யழத் தொடங்கினுள். அதற்கு அர்ச்சுனன்: ஓ! பெண்ணே! நீ பதிவாக்கியங் கடக்காத சதியாலுல் என் வாக்கியந் தள்ளாமல், மறுத்தோர் மொழியும் விள்ளாமல் நின் தந்தையின்பாலிருமென்று கவிலக் கேட்டு, அந்த உலூபி மறுத்தொன்றுஞ் சொல்ல மாட்டாமல் தன் கணவனைப் பணிந்து ஓ! ஸ்வாமி! தங்க ளிஷ்டப்படிக்கிப் போய் வாரும் என்று சொல்லி அழைத்துக்கொண்டுவந்து கெங்கைக் கரையினில் விடுத்தாள். அர்ச்சுனனும் அவள் மனங் களிக்கும்படி இனிய வசனங்களைப்பேசி விடைபெற்றுக் கொண்டு பிராமணர்களுடன் கூடிக்கொண்டு அனேக திவ்ய தீர்த்தங்களில் மூழ்கிக்கொண்டே யாத்திரை செய்துக்கொண் டிருந்தான். இங்கே உலூபி தன் கணவனுகிய அர்ச்சுனன், தன்னை விடுத்துப் போயினாள் முதல் கருப்பவதியாகி அவனையே இரவும் பகலும் சிந்தித்துக் கொண்டு அதுவே கவலையாக விருந்தனள் இப்படிக் கிருக்கிற போது பத்துமாதமும் பூரணமாகி ஆண்சிசுவைப் பெற்றுள். அச்சிசுவுக்குப் பணிரெண்டாநாள் கவரவிய நெறும் நாகராஜன், பிராமணர், புரோகிதர், முதலானுளை வரவழைத்து சொஸ்தி புண்ணியாக வசனம் படித்து அரவானென்று பெயரிட்டு யாவருக்கும் பற்பல தானங்களித்துப் புத்திரோச்சவத்தைப் பிரமோற்சவமாகக் கொண்டாடினுன். உலூபியும் அப்புதல்வனை நாளுக்குநாள் செல்வமாக வளர்த்துத் தக்க வயதில் கல்விபயற்சி, யாணை யேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை முதலானவை களிலும் தேர்ச்சியடையும்படிக்கிச் செய்து அர்ச்சுனனுக்காகிலும் மகாவீர பராக்கிரமவானுகியிருக்கும் அந்த அரவானை யந்தப் பாதாள லோகத்திலிருக்கும் யாவரும் புகழ்ந்துக் கொண்டாடப் பிரதாபவானுகியிருக்கும் தன்புதல்வனுகிய அரவானைக் கண்டு களித்துக்கொண் டிருந்தாள். இப்படிச் சில காலம் நடத்திவருகிறபோது, அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை செய்து முடித்து இந்திரப்பிரஸ்தம் வந்து சேர்

ந்த வுடனே ஓலையொன் றெழுதி அதைத் தூதுவர்களிடங் கொடுத்து நீங்கள் கெங்காநதிக் கரையைச் சேர்ந்து அக் கங்கையைத் துதித்து இவ்வோலையைப் போடுவீர்களாகில் கொஞ்சநேரத்தினில் ஓர் மங்கைப் புத்திரனுடன் கங்கையிலிருந்து வருவாள், அவளையும் அப்புத்திரனையும், இந்த ரதத்தி லேற்றிக்கொண்டு வரக் கடவீர்க ளென்று கட்டளை யிட்டான். அந்தப்படியே, தூதர்களும் ரதத்தைச் செலுத்திக் கொண்டு கங்கைக் கரையையடுத்து அர்ச்சுனமகாராஜன் சொற்படி கங்காதேவியைத் துதித்து அவ்வோலைச் சுருளை கங்கையிற் போட்டார்கள். உலூபி சதா தன்னுயகனிடத்திலிருந்து யாராகிலும் எப்போது வருவார்களோ வென்று எதிர்பார்த்துக்கொண் டிருப்பவளாதலால், தூதர்கள் ரதத்துடன் வந்ததையும் தன் கணவனெழுதிய ஓலையைத் தூதர்கள்கங்கையிற் போட்டதையும் தன் பூர்வக்ஞானத்தினு லறிந்து ஓடோடியும் வந்து அந்த ஓலைச் சுருளை எடுத்து அதைப் பிரித்து வாசித்து அதிலுள்ள செய்தியை யுணர்ந்து வெகு சந்தோஷத்துடன் மருபடியும்பாதாள லோகத்தைச் சேர்ந்து தந்தையினிடம் ஓலைச் சுருளை யீந்து வாசிக்கும்படி சொல்லி அவரும் அதை வாசித்து அதிலடங்கிய செய்தியை யுணர்ந்துக் கொண்டு உடனே தன்மகளையும், பேரனையும், பிரயாணங் கூட்டி அளவிறந்த மாணிக்கங்களையும், ஆபரணங்களையும் ஸ்ரீதனமாகக் கொடுத்துச் சிறிதுதூரம் அவர்களை வழிவிடுத்து சுகமாய் வாழ்ந்திருக்கக் கடவாயென்று மகளைவாழ்த்திப் பேரனுக்கும் நற் புத்திமதிகளைச் சொல்லி, ஆசி கூறி யனுப்பி அந்தக் கவரவிய ராஜன், தன்னரண்மனை சேர்ந்தான். உலூபியும், தன் தந்தையினிடம் விடைபெற்றுக் கொண்டு தன் புதல்வனுகிய அரவானையு மழைத்துக் கொண்டு கங்கைக்கரையை சேர்ந்து அங்கிருக்குந் தூதர்களைக் கண்டு பேசி அரவானுந்தானும் ரதத்தினமீ தேறிக் கொண்டவுடனே தூதர்கள் ரதத்தைச் செலுத்திக் கொண்டுபோய் இந்திரப்ரஸ்த ஆசார வாசலில் நிறுத்தினர்கள். உடனே உலூபியும், அரவானும், ரதத்தைச் விட்டிறங்கிச் சென்று தரும புத்திரர் முதலானோருக்கும் தெண்டனிட்டு எழுந்து நிற்க, யாவரும் ஆசிகள் கூறி அரவானை உய்த்து நோக்கும் போது அர்ச்சுன னுடைய உருவமைந்திருப்பதால் அர்ச்சுனன் புதல்வனென்றும் இவள் அர்ச்சுனன் மனையாளென்றுங் குறிப்பினு லுணர்ந்துக் கொண்டார்கள். பின்பு உலூபியும், அரவானும், அந்தப்புரஞ் சேர்ந்துக் குந்திதேவியையும், திரௌபதையும், சுபத்திரையையுங் கண்டு பணிந்தார்கள் அவர்களும் அரவானுலே தெரிந்துக் கொண்டவர்களாகி ஆசிகூறி அருமை பாராட்டி ஆதரித்தார்கள். அப்போதந்த உலூபி, அரவானை நோக்கி, அப்பா மகனே! இனி நீயுன் பெரிய தந்தை முதலானோருக்குமிடத்திற் கேகி அவர்கள் காலாலிட்ட வேலைகளை நீயுன் சிரசால் செய்துக்கொண்டிருக்கக் கடவாயென்று சொல்லி யனுப்பி

மாமியார் குந்திதேவியையும் தமக்கை திரௌபதையையுமழைத்துத் தனக்குத் தன் தந்தை சீதனமாகக்கொடுத்த மாணிக்கங்களையும் ஆபரணங்களையும் அவர்களிடங் கொடுத்துப் பணிந்தாள். அப்படிப் பணிந்த மருமகளாகிய உலூபியைக் குந்திதேவியை வாரியெடுத்துப் பல இனிய மொழிகளைப் பகர்ந்தாள். திரௌபதையும் உலூபியை நோக்கி அடியம்மா! நீ என்றும் சுசஜீவியாய் வாழக் கடவாயென்றும் வேற்றுமையின்றி என்னைப்போல நீயு மிருப்பா யென்று ஆதரித்தனள் இந்தப்படி உலூபி திரௌபதையினாலும் சுபத்திரையினாலும் மதிக்கப்பட்டவளாகி இனிது வாழ்ந்துக் கொண்டு தன் கணவனுகிய அர்ச்சுனன் எந்த சமயத்தில் வந்தபோதிலும் மனமகிழும்படி தொண்டுகள் செய்துக் கொண்டும் மாமி மூதலாளைருக்குக் கீழ்ப்பட்டு நடந்துக் கொண்டு வருவதை யாவரு மூணர்ந்து இம்மங்கை மெத்தப் பதிவிரதை யாகுமென்று கொண்டாடும்படி அந்தப் புரத்தினில் வசித்துக் கொண்டு மிருந்தனள். உலூபி புதல்வனுகிய அரவானை பெரிய தந்தைகளாகிய தருமநந்தனர்; பீமசேனன், தன் தந்தையாகிய அர்ச்சுனன், சிறியதந்தையர்களாகிய நகுல-சகாதேவன், மூதலாளைருக்குக் கீழ்ப்படிந்து அவர்க ளெந்தவேலை யிட்டபோதிலும் சிரசாக வகித்துச் செய்து வருவதினாலும் பாட்டி குந்திதேவி, பெரிய தயார்கள் திரௌபதி. சுபத்திரை, மூதலானவர்களுக்கும் பிரியமாய் நடந்துக் கொள்வதினாலும் யாவர்களுக்கும் நேத்திரத்தைப் போல பாவித்து மெத்தப் பிரியமாய் பாதுகாத்து வந்தார்கள்.

இவ்வண்ணம் உலூபியும் அரவானும், யாவற்றிராளுடைய அன்பினால் பாதுகாக்கப்பட்டு வருகிறபோது சிலவருடங்கள் கடந்த பின்பு பாண்டவர்கள் ராஜசூய யாகமொன்று செய்தபடியாலும் சூபோசம்பத்துக்கு நிகரான செல்வத்தையும் நாட்டையும் பாண்டவர்களுக் குற்ற அதிகாரத்தையும் கண்டு துரியோதனன் பொறுமைகொண்டு பாண்டவர்களுடைய நாட்டையுஞ் செல்வத்தையும் தானடையை விருப்பங்கொண்டு தன் தந்தையின் யேவுதலால் விதுரரைக் கொண்டு பாண்டர்களை வரவழைக்கச் சொல்லியனுப்ப, அவ்விதுரர் உண்மையை வெளியிட அதை அரவானுணர்ந்த உலூபி, மேல்நடக்கப் போகிற காரியத்தையும் பாண்டவர்களனுபவிக்க வேண்டியவினையின் கொடுமைகளையும் அறிந்துத் தன் கணவனுகிய அர்ச்சுனனை நோக்கி ஓ! ஸ்வாமி! அடியாள் ஒருவிண்ணப்பஞ் செய்கிறேன் அதைத் தாங்கள் கவனமாகக் கேட்க விரும்புகிறேன் அதென்ன வெனில், பாண்டவர்களாகிய உங்களைவர்களுக்கும் என் தமக்கையாகிய திரௌபதைக்கும், பதிமூன்று வருடம் வரைக்கும் வினையின் கொடுமையால் ஆரணியத்திலும் மரைந்திருந்து நாட்டிலும் வசிக்கும்படி நேரிடப் போகிறதென்றுஎன் மனதிற் றோற்று

கின்றமையால் அடியாள் முன்னுதாய் தங்களுக்குத் தெரியப்படுத்தினேன். அன்றியும், கற்புடைய மாதர்கள் எந்த செய்தியும் ஒளிக்காமல் தங்கள் தங்கள் பிராணநாயகரிடம் சொல்லி அதற்குத்தக்க யோசனை முன்னமே செய்து குடும்பத்தைக் காப்பது கடமையாதலால், பின் வருங் காரியத்தை முன்னமே தெரியப் படுத்தினேன் இனி தங்களுடைய சித்தம், என்பாக்கியம் என்றனள். இவ்வசனங்களைக் கேட்டு அர்ச்சுனன் இம்மங்கை கற்புடையவ ளாதலாலும் நாகலோகத்து ஸ்திரீயாதலாலும். மேல் நடக்கப்போகிற கொடுமையை இப்போதே தெரிந்துறைத்தால் இதற்குத் தக்க முயற்சி புடனிருக்க வேண்டிய தென்று கருதி, அடிபெண்ணரசே! நீ சொல்லிய வசனங்க ளெல்லாம் உண்மை யென்றே எண்ணினேன் ஆகிலும் எனக்கு மூத்தவர்கள் இரண்டுபேர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் சொற்படி யான் னடக்கவேண்டியவனாக விருக்கின்ற தன்னிலும் வினையின் கொடுமையி மெப்படியோ யானறியேன் வினையை வெல்லமூவர் தேவர் யாவராலு மாகாதென்றால் என்போலியர்களாலாகுமோ என்றெந்த காலத்தினி லெந் தெந்த வினைகளை யனுபவிக்க வேணுமோ அந்தக்காலத்தினி லந்தந்த வல்வினையோ தீவினையோ அதுகளை யனுபவித்தே தீரவேணும். ஆதலால், தெய்வச் செயலின்படி நடக்கட்டு மென்று திடமன தடையவனாகி அடி பெண்மணியே! சற்றே பொருத்திரு, நான் சபைக்குச்சென்று அங்கே நடக்கிற விருத்தாந்தத்தை தெரிந்துக்கொண்டு வருகிறே னென்று சொல்லி உடனே சபைக்குச் சென்று அங்கு வந்திருக்கிற சிரிய தந்தையாகிய விதுரரைக்கண்டு பணிந்து அவரால் ஆசிபெற்றுதருமநந்தனரையும், வீமசேனனையும் பணிந்து தன்குற்ற ஆசனத்தின் மீ திருந்தான். அப்போது தருமநந்தனர், விதுர மகாராஜன், தங்களை யழைத்துப்போக வந்திருக்கிறதையும் பெரிய தந்தை எழுதியிருக்கிற ஓலைச்சுருளி லடங்கியிருக்கிற வசனங்களையும் யோசித்துத் தம்பியர்களை நோக்கி, அப்பா தம்பிமார்களே, (மூத்தோர் சொல் வார்த்தையமுர்தம்) என்ற ஔவையார் வாக்கியத்தின்படி நமக்குப் பெரிய தந்தையின் சொற்படி நாமெல்லாம் அங்கு சென்று அவரைக்கண்டு பணிந்து அவருக்கினங்கி நடப்பதே மேலாகிய தருமமாதலால், சிறிய தந்தையின் பின்னதே நாமும் அஸ்தினபுரத்திற்குப்போய் வருவோம் வாருங்களப்பாவென்று சொன்னர். அந்தப்படியே யாவரும் ஒப்புக்கொண்டு புறப்படுகிறபோது அர்ச்சுனன் விரைவாக உலூபியின் பக்கலில் வந்து அடிபெண்ணே! யெல்லோரும் அஸ்தினபுரத்திற்குப் போக சித்தமாயிருப்பதால் யானும் அவர்களுடன் போகாவிடில் தருமத்துக்கு விரோதமாகும் ஆதலால் என் புதல்வனாகிய அரவானுடன் நீயும் சிலநாள் உன் தாய் வீட்டைச் சேர்ந்திரு எங்களுக்கு யாதொரு கெடுதியும் நேரிடாமல் இந்திரப்பிரஸ்தம் வந்து சேர்ந்தோமேயாகில் உன்னையழைப்பித்

துக் கொள்ளுகிறேன் நீ சொல்லிய வண்ணம் வினவசத்தால் எங்களுக்கு யேதேனு மனுபவிக்கும்படி கேரிட்டால் அக்கொடிய வினைகளை யனுபவித்துத் திரும்பிவாங்கள் இந்திரப்பிரஸ்தம் வந்து சேர்ந்தவுடனே உன்னை யழைத்துக் கொள்ளுகிறே னென்று சொல்லியதள் மனதைத் தேற்றி யோர் ரதத்தின்மீது அரவாணியும் உலூபியையும், ஏற்றி பனுப்பிவிட்டுத் தானும் சர்வ சித்தமாய் தருமராஜனருடன சூதாடித்தோற்றுப் பனிரண்டு வருடம் வனவாசம் ஒரு வருடம் அக்கியாதவாசஞ்செய்து வந்து உலூபியையும் அரவாணியும் அழைப்பித்துக் கொண்டு ஸ்ரீ கிருஷ்ணபகவான் சகாயத்தினால் அந்த அரவாணைக்கடபலிவைத்துத் துரியோதனாதியருடன் யுத்தஞ் செய்து பாவரையுமடித்துத் தன் தமையனுகிய தருமராஜனருக்கு அஸ்தினபுரத்தை பட்டங்கட்டி சிலவருடகாலம் ஆண்டிருந்து முடிவில் சொர்க்காரோகணஞ் செய்யப் புறப்படுகையில் அந்த உலூபி, அர்ச்சுனனைப்பணிந்து, ஓ! ஸ்வாமி! தேவரீர் சொர்க்க லோகம்போய் சேருவதற்கு முன்னமே அடியாளும் வந்து சேருகிறே னென்றுசொல்லித் தனக்குத்தானே உயிர்மாய்த்துக் கொண்டவளாகி சொர்க்கலோகஞ்சென்று அங்கு தன் கணவனைக் காணுமல் பரிதபித்து முடிவில் வைகுந்த பதவி அடைந்தனள்.

உலூபி கற்பின் மகத்துவம் முற்றிற்று.

ஸ்ரீராமாஜயம்.

சித்திராங்கதை கற்பின் மகத்துவம்.

மாட்சிமை தங்கிய மணலூரெனு மோர் பட்டணமுண்டு, அப்பட்டணத்தைச் சித்திரவாகனெனு மரசன் ஆண்டிருந்தான். அவனைப்படிப் பட்டவ னென்றால் கல்வியில் தேவகுருவாகிய பிரகஸ்பதிக்கும், புத்தியில் நவக்கிரகங்களிலொருவராகிய புதனுக்கும், யுக்தியில் விக்கிரமாதித்தனுக்கும், பக்தியில் பிரகலாதனனுக்கும், வீரத்தில் ஜனகமகாராஜனுக்கும், பிவளிப்பதில் கர்ணனுக்கும், நிகரான நீதிவானாகி விருந்துத் தன் மனையாளாகிய சித்தாமணியுடன் இல்லற தருமத்திற் பொருந்தி மதுநீதி வழுவாமல் அரசு புரிந்து வந்தான். இப்படிக்கிவ் வரசனிருக்கிறபோது, எல்லா பாக்கியங்களும் நிரைந்திருந்தும் புத்திரபாக்கிய மில்லாக் குரை யொன்றால் இந்த சித்திரவாகனும், இவ்வரசன் மனைவி சித்தாமணியும் அநேகமாகிய விரதங்களை யனுஷ்டித்தும், புண்ணிய தீர்த்தங்களில் மூழ்கியும், திவ்ய க்ஷேத்திர வாசமூர்த்திகளைச் சேவித்தும், கோதான-பூதான முதலிய சோடச தானங்களைக் செய்தும், மாந்திரீக விஷயங்களாகிற குளிசங்கள் முதலானதுகளைத் தரித்துக்கொண்டும், இன்னு

மனைகமாகியக் கிரியைகளைச் செய்தும், புத்திரபாக்கியங் கிடைப்ப தரிதாக யிருந்தமையால், மெத்த கவலையுடையவர்களாய் அதில் அரசன், தன் மனைவியாகிய சிந்தாமணியைநோக்கி, அடிபெண்ணே! முன்னமென் மரபினில் பிரபாகர னென்னும் பெயருடைய அர சனொருவனிருந்தான் அவனுக்கு நம்மைப்போலவே பிள்ளைகளில் லாக் குறையால் அரசை மந்திரிகளிட மொப்பித்துத் தான் தவ வேடம் புனைந்து காட்டிற் சென்று சிவபெருமானை நோக்கி! அகோ ரமான தவஞ் செய்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் சிவபெரு மான் பார்வதி சமேதனாகி ரிஷபவாகனத்தின் மீதேரிக்கொண்டு அக்காட்டிற்குவந்து அந்தப் பிரபாக ராஜனைக் கூவி ஓ! அரசனே! நீ புத்திராபேக்ஷை கொண்டு தவஞ் செய்கிறா யென்று தெரிந்துக் கொண்டேன் உன்மனங் களிப்புற உனக்கோர் புத்திர னுதிப்பான். இந்தப்படியே உனக்குப் பின்னிருப்பவர்களுக்கும்-ஒவ்வொரு சந் ததியே யுண்டாகுமென்று சொல்லி வரந்தந்துப் பார்வதி-பரமேஸ் வரனும்மறைந்து போயினர்களென்று முன்னோர்கள் சொல்லக் கேட்டிருக்கின்றேன் அந்த சிவபெருமான் தந்த வரத்தின்படி நம க்கொருபிள்ளை பிறந்தாலும்போதும், அந்தப்படியும் பிள்ளையுதிக்க வில்லையே இதற்கென்ன செய்கிறதென்றுயோசித்துத் தன் மனைவி யை நோக்கி அடிமாதசிரோமணியே இன்று முதல் நாமிருவரும் சொக்கநாதரையும் மீனாக்ஷியம்மனையுந் தொழுதுகொண் டிருப் போம் பின்பவர்கள் செயலெப்படியோ அப்வடி யாகட்டுமென்று சொல்லி அன்றுமுதல் அவர்களிருவரும் அங்கு திருக்கோயில் கொ ண்டெழுந்தருளி யிருக்கும் சொக்கநாதரையும், மீனாக்ஷியம்மனை யுந், தினந்தோறுங் கண்டு தரிசித்துப்பூசித்து, நேசித்து, விசுவாசி த்து, வந்தனர்கள். இப்படிக் கிவர்களிருவரும் மிகுந்த பயபக்தி யுடன் பூசித்து வருகிறபோது அந்த சிந்தாமணியம்மாள் சொக்க நாதர், மீனாக்ஷியம்மன் கிருபையால் கருப்ப மாயினாள். அதுகண்டு அரசன் சொக்கநாதருக்கும், மீனாக்ஷியம்மனுக்கும் அபிஷேகம் ஆராதனை-முதலான துகளையும் வெகு கம்பிரமாக நடத்தி அவ்விரு வர்களையுஞ் சேவித்து ஆனந்தமடைந்து குருக்களால் கொடுக்கப் பட்ட திருநீரும் மலர் மாலை பிரசாதங்களும் பெற்றுக்கொண்டு தன்னரன்மனையைச் சேர்ந்து அப்பிரசாதங்களை மனைவி முதலா னோருக்கும் கொடுத்துத் தானும் புசித்துக்களிசாகரத்தினில் மூழ்கி விருந்தான்.

இப்படிக்கிருக்கிறபோது சிந்தாமணி யம்மாளுக்கு நாளுக்கு நாள் வயிற்றி லிருக்கும் பிண்டம் பெருத்து முறையே பத்துமாத ங்களும் பூரணமான உடனே பெண்குழந்தையைப் பெற்றாள். அதை யறிந்து அரசன் மெத்த ஆனந்தமேலீட்டால் மனம்போன படிக்கு கோதான-பூதான-வஸ்திரதான-கன்னிகாதான மென்று

சொல்லப்பட்ட சோடசதானங்களோயும் கணக்குமிதமில்லாமற்செ
ய்து சொர்க்காதி பத்தியத்தை யடைந்தவனைப்போல என்றுமில்
லாத சந்தோஷத்தை யடைந்திருந்தான். இப்படிக்கிருந்த அசுரன்
பனிரெண்டாநாள்-பிராமணர்-புரோகிதர்-தன்மரபினர் - யாவற்றி
னோயும் அழைப்பித்து சொஸ்திபுண்ணியாக வசனம் படித்து
அப்பெண் சிசுவுக்கு நாமகரணஞ்செய்யும்படி நேமித்
தான். புரோகிதனும் அந்தப்படியே அப்பெண்பிறந்த லக்கினந்
திதிநக்ஷத்திரம் யோகங் கரண முதலானதுகளைக் கணக்கிட்டு
சாதகங் குறித்துச் சித்திராங்கதை யென்று நாமகரணமிட்டு மூன்
றுதர மழைத்து அரசனிடத்திற் கொடுத்தான். அரசனும் மெத்த
தரித்திரவான் புதையலைக்கண்டா லெப்படி மனங்களிப்பனோ அவ்
வாறு களிப்படைந்து அப்பெண்சிசுவைக்கைக்கொண்டு முத்தமிட்
டுத் தாதிகளிடங் கொடுத்து, பிராமணர் புரோகிதர், முதலானோ
ருக்குந் தக்கபடி சன்மானமளித்து அவர்களுக்கு விடைகொடுத்
தனுப்பித் தானும் தன் பந்துக்களுடனும் அரசர்களுடனும் புசித்
துக் களவைச் சாந்தணித்து வெகு சந்தோஷமாகக் கொலுக்கூடத்
தில் வீற்றிருந்தான். இப்படிக்கி, அரசன் சந்தோஷசாகரத்தினில்
மூழ்கியிருக்க, சிந்தாமணி தேவியும், அப்புதல்வியை நாளுக்கு
நாள் மெத்த செல்வமாக வளர்த்துவர அப்பெண் சிசுவும், வளர்
பிறைச் சந்திரனைப்போல, வளர்ந்து பாலப் பருவங் கடந்து பெது
ம்பைப்பருவமடைந்து தாதிகளுடன் விளையாடிக்கொண்டு சிலவரு
டங் கடத்தி வருகையில் மங்கைப்பருவ மடைந்தனள் அதை யறி
ந்து, அரசன் அதற்குச் செய்யவேண்டிய சடங்குகளைச்செய்து
முடித்துக் கன்னியா மாடத்தினில் வசிக்கும்படி திட்டஞ்செய்து,
மந்திராலோசனைசெய்யத்தொடங்கினன். அதென்னவெனில், ஓ! மந்
திரிகளே! எனக்குப்பின் இன்னகரத்தையாளப் பிள்ளைகிடையாது,
இருப்பது பெண்பிள்ளை யொன்றே அப்பெண்ணையே ஆண்பிள்ளை
யாகவும், பெண்பிள்ளையாகவுங், கருதிக்கொண் டிருக்கின்றேன்.
இப்படிக்கிருக்கு மென்மனதுக்கோர் சிந்தனை யுண்டாகியிருக்கின்
றது அதென்னெனில் சித்திராங்கதை என்னும், அப்பெண்ணே?
இப்போது மங்கைப் பருவமடைந்திருப்பதால் அந்த சித்திராங்க
தைக்கித் தக்க ராஜகுமாரனைத் தேடி விவாகஞ் செய்வித்தால், உட
னே, அந்த ராஜகுமாரன் சித்திராங்கதைவய அழைத்துக்கொண்டு
தன்னகரத்தை யடைவான். பின்னர், எனக்கொரு பிள்ளையுமில்லா
ததால், இன்னகரத்தை யாரைப்படி யாளுவேன். அல்லது யானே
இக்கரத்தை யாண்டிருந்தாலும் எனக்குப் பிற்காலத்திற் கென்ன
செய்கிறது யென்ற கவலையே, என்னை மிகவும்வாட்டுகிறது ஆகை
யால், இதற்குத் தக்கயோசனை செய்தச் சொல்லுங்க ளென்றான்.
அதைக்கேட்டு, மந்திரிகள் பலவாறு யோசித்து முடிவுசெய்துக்

கொண்டு அரசனை வணங்கி, ஓ! வேந்தர் கோமானே! இதற்காகத் தாங்கள் விசனப்படவேண்டியதில்லை, தங்கள் புதல்வி சித்திராங்கதையை எந்த ராஜகுமாரன் மணம் புரிய வெண்ணங் கொண்டு வருகிறானே அந்த ராஜகுமாரனுக்கு இந்த விருத்தாந்தத்தைச் சொல்லி அவனுக்குண்டாகும் புதல்வனை நமது பட்டணத்துக்குக் கொடுக்கும்படி இசையச்செய்து, நமது சித்திராங்கதையை அவனுக்குக் கொடுப்பது நமக்கு நலமாகும், அப்படிக் இசையாதவனுக்கு நமது பெண்ணைக் கொடுக்கிற தில்லையென்றுத் திடமாகக் கூறுவீரேயாகில் உமக்குண்டாகிய கவலை நீங்குவதுடன், பட்டத்துக்குப் பிள்ளையுங் கிடைப்பன் என்றனர். அதைக் கேட்டுச் சித்திரவாகனனும் அரசன் மெத்த சந்தோஷித்து மந்திரிகளைக்கொண்டாடி சமயத்துக்குத்தக்க யோசனை சொன்னீர்க ளன்றோ வென்றுசொல்லி எப்போது நமது புதல்வி சித்திராங்கதைக்குத் தக்க புருஷன் கிடைப்பனெனென்று சொக்க நாதரையும், மீனாக்ஷியம்மனையும். துதிசெய்துக்கொண்டிருந்தனன்.

இவ்வாறு சித்திரவாகன் மந்திரிகள் சொல்லிய போசனைக்கிச் சந்தோஷித் திருப்பதைச் சில தாதிகள்கேட்டு, அந்த விருத்தாந்தத்தைக் கன்னியாமாடத்திலிருக்கும் தங்களரசியாகிய சித்திராங்கதைக்குத் தெரியப்படுத்தினர்கள். அதை யந்த சித்திராங்கதைக் கேட்டு, நற்குணமுடையவளாதலால், உலகத்தினில் ஒரு கன்னிகையிருந்தால் அக்கன்னிகைப் பிறந்த வீட்டிற்கும் புகுந்த வீட்டிற்கும் நன்மையுண்டாகும்படியான வழியெதுவோ? அந்த உத்தமமார்க்கத்தையே அடுத்த அதற்காக வேண்டிய யுக்திகளைச்செய்து நடப்பவள் கற்புடையவளாகும் அப்படிக்கி நடவாமல் இரண்டு வீட்டிற்கும் கலகங்களைச்செய்து ஒருவர்க்கொருவர் சண்டையிட்டுக்கொள்ளப் பார்ப்பவள் கழுதையாகும், என்று கற்பிலக்கணம் முறையிடுகிறபடியால், நாம் இராஜகுமாரியாகியும் நல்குணர் வைபெற்றிருத்தும, நமது தந்தைக்கி உண்டாகிய கவலையை மாற்றுத என்போலொற்றக் கன்னிகை இருந்தென்ன,இறந்தமென்ன, தவமிருந்து பெற்றதாய் தந்தைகளுக்குக் கஷ்டமுண்டாகக்கண்டு சகித்திருப்பவர்களும் புத்திரிகளாவர்களோ! இதனால் பெண்ணென்ற பேர்மாறி நமக்குப் பேயென்ற பெயருண்டாகுமாதலால்,இதற்குத் தக்கயோசனை செய்து நமது தந்தைக் குண்டாகிய கவலையைப் போக்கிப் பேயென்ற பெயரைமாற்றிப் பெண்ணென்ற பேரை நிலைநாட்டவேணுமென்றி தனக்குத்தானே யோசித்துச் சொக்கநாதரையும், மீனாக்ஷியம்மனையும், பலவாறு துதிசெய்துக்கொண்டு காலத்தைக் கடத்தி வருகிறபோது ஒருநாள் பயிலவா முனிவர், சித்திரவாகன், சபையை நோக்கி வந்தார். அவரைக்கண்டு, அரசன் எதிர்ச் சென்றழைத்துவந்து தக்க வாசனத்தின்மீது வீற்

நிருக்கச்செய்து அர்க்கியபாத்தியாதிகளால் உபசரித்துப் பூசித்து அவர் திருவடிகளில் வீழ்ந்துப்பணிந்து எழுந்தும், ஓ! ஸ்வாமி! தாங்க ளெழுந்தருள எங்கள் மூதாதைகள் செய்த புண்ணியப்பல னே அல்லது எந்த பெரியோர்களின் அருட்பயனே! இப்பட்டண மானது தேவரீர் திருவடிகள் பட்டு பவுத்திர மடைந்தது தங்கள் தெரிசனத்தினாலேயானும் புனிதனுகினே னென்று பலவாறு தோ த்திரஞ் செய்யும் அரசனை அப்பயிலவமா முனிவர் வாழ்த்தி க்ஷேம ங்களை விசாரித்து, ஓ! அரசனே! உமது புதல்வியாகிய சித்திராங் கதைக்கி நானுர் இதஞ்சொல்ல வந்தேன் ஆதலால், நின்புதல் வியை அழைப்பியுமென, அரசன் சந்தோஷித்து, ஓ! ஸ்வாமி! அந்த சித்திராங்கதை அந்தப்புரம் கன்னியாமாடத்தினி லிருக்கின் றுள். தாங்கள் தயவு செய்து அங்கு வந்தால் அழைத்துப்போய் அம்மங்கையி னிடத்தில் விடுகிறேனென; அம்முனிவரும் அதற் கிசைந்து, அரசன் பின்சென்று கன்னியா மாடத்தைச் சேர்ந்து சித்திராங்கதையைக் கண்டார். சித்திராங்கதையும் முனிவரைக் கண்டு இவராரோ மானுபாவர் வருகிறரென் றெழுந்து தாதிக ளுடனெதிர்ச் சென்று வணங்கினள். தன்னை வணங்கிய சித்திராங் கதைக்கு அம்முனிவர் நின் தந்தைக்கிப் பின்னரசாள ஒரு புத்திர னைப் பெற்றளித்து சுகமாக வாழக்கடவாயென் றுசிகூறக்கேட்டுச் சித்திராங்கதை சந்தோஷ சாகரத்தில் மூழ்கினவளாகித் தக்க ஆச னங்கொடுத்து அம்முனிவரை வீற்றிருக்கச்செய்து இருகரங்களை யுஞ் சென்னியின் மீது குவித்துக் கொண்டவளாகி, ஓ! ஸ்வாமி! தேவரீர் ஏழையும் நீர்க்குணமு முடைய அபலையின்மீது கிருபை வைத்து எழுந்தருளிய காரணம் யாதோ அதைத் திருவுளம் பற்ற வேணுமென்று வேண்டினுள். அதற் கம்முனிவர் களித்து: அம்மா சித்திராங்கதையே யானுனக்கோர் நன்மை சொல்ல வந்தேன். அதை நீ தெளிவாகக் கேட்டு அந்தப்படி நடப்பையேயாகில் உன் மனதிலெண்ணியபடி யாவு முனக்கு அனுகூலமாகும் அதென்ன வென்றால், நானிப்போ தனக்கோர் மந்திரத்தை உபதேசிக்கின் றேன். அம்மந்திரத்தின் பல னென்ன வெனில், உத்தமனும், மேலான தேவாம்சம் பெற்றவனும், பொய் சொல்லாதவனும், சுத்த வீரனும், அடைக்கலம் புகுந்தவர்களை ஆதரிக்கும் குணமு டையவனும், தன்னுயிர்போல மன்னுயிரைக் காப்பவனுமாகிய, தேஜோவந்தன் உனக்கு மணவாளனுகுவன், மேலும் உனக்குப்பிற க்கும்புதல்வன் இந்நாட்டிற் கதிபதியாகிய அரசு செலுத்துமவன், யானே வலிய வந்து உனக்கு மந்திரோபதேசஞ் செய்ய வேணு மென்ற எண்ண மெனக்கேனுண்டாயிற்றென்றால், நீ கற்பிலக்கண த்தின்வழி நடப்பவளாதலாலும் நின் தந்தைக்குற்ற கவலையைப் போக்கவெண்ணிச் சொக்கநாதரையும், மீனுக்ஷியம்மனையும், இடை விடாமல் துதிசெய்துக்கொண்டிருக்கிற உத்தமகுணம், பொருந்தின

வளா யிருப்பதினலும், என்போ லொற்ற முனிவர்கள் இந்த குண விசேஷமுடைய கற்புடைய மாதர்களுக் குண்டாகிய துக்கத்தைப் போக்க வேண்டியது அவசியமா யிருப்பதாலும் யானே வலியவந் தனக்குச் சொல்ல முயன்றே னென்று கூறிப், பஞ்சாக்ஷர மத்திர த்தையும் அதை யனுட்டிக்கவேண்டிய விபரங்களையுஞ் சொல்லி விடைபெற்றுக் கொண்டு தன்னிருப்பிடஞ் சேர்ந்தனர்.

இவ்வாறு சொல்லி பஞ்சாக்ஷரத்தை உபதேசித்தப்பயில வமா முனிவர் போயினவுடனே, சித்திராங்கதை ஸ்நானஞ் செய்து மடியுடுத்தி சுசியாகி தனக்குப் பயிலவமா முனிவர் உபதேசித்த பஞ்சாக்ஷரத்தை விதியின்படி உபாசித்துக்கொண்டு வந்தனள். காலைக் கடன் முடிக்கிற வேளையும், புசிக்கிற வேளையும், தவிர மற்ற வேளைகளி லெல்லாம் இடைவிடாமல் அந்த பஞ்சாக்ஷரத் தைத் தியானித்துக்கொண் டிருந்தமையால், அந்த சித்திராங்க தைத் தன்னேமாந்துத் தலைவனிற் கலந்து பரமானந்த நிஷ்டையில் பசுமர்த்தாணிபோல பேய்பிடித்தவள் போலவும், செய் யிருப்பது போலவும், அந்தகன்னியா மாடத்திற் பிரகாசித்துக்கொண் டிருப்ப தைச் சித்திரவாகனென்னும் தன் தந்தையறிந்து ஆனந்தம்பிரம்மா னந்தமென்னும், இவ்விரண்டையுங் கடந்து பரமானந்த மடைந்து இனி நமதெண்ணம் பலித்தது சமஸ்தானத்தினில் ஒரு உத்தம கற்புடைய மங்கை யிருப்பளேயாகில் அச் சமஸ்தானம் யென்று யழியாமல் நீடித்திருக்குமென்று பெரியோர்களால் சொல்லக்கேட் டிருக்கிறே மன்றே அப்படிக்கிருக்க காமினி எள்ளளவுங் கவலைப் பட வேண்டிய காரணமில்லையென்றுத் தன் புதல்வியின் கற்பு நிலை மைக்கி மெத்தக்களிப்படைந்துக் காலத்தை எதிர்பார்த்துக் கொ ண்டிருந்தனன். அப்போது, சொக்கநாதருக்கும் மீனாக்ஷி யம்ம னுக்கும் சித்திராங்கதைசெய்யும் அதன்பிற்கும, யோகசாதனத் திக்கும, மெத்தப்பிரியமுண்டாகியும் கற்பின் னிலைமைக்கும் பய ந்து அந்த சித்திராகதையின் சொற்பனத்தி லெழுந்தருளி ஓ! சித் திராங்கதையே நின்கற்பின் னிலைமைக்கும் சாதிக்கும்-யோகத்திற் கும்-மெத்தவுங் களித்தோம் நின் கருத்தின்படி நீ பிறந்த வீட்டிற் கும் இனிமேல் நீ புகப்போகிற வீட்டிற்கும சுபமுண்டாகும்படிக் கும் நின் வயிற்றினிற் பிறக்கப் போகிறபிள்ளை இங்ஙகரத்தை பாள வும் வரந்தந்தேன் இனி யுன் மனதில் கவலை யின்றித் தக்க புரு ஷனை மணந்து சுகஜீவியா யிருக்கக் கடவாயென்று வாழ்த்தி மறை ந்துப் போயினர் சித்திராங்கதை திடுக்கிட் டெழுந்து உட்கார்ந்து தன்கனவில் பரமசிவனும் பார்வதியும் எழுந்தருளினதையும் இதில் பரமசிவன் வரந்தந்தவிருத்தாந்தத்தையும யோசித்து இது உண் மையிலே கனவே யன்றி, நினைவல்ல வென்று நீர்மானித்து இத் தனை விருத்தாந்தங்களைச் சொல்லி வரங்கொடுத் தேகின பரம

சிவம் நமக்குக் கணவன்இன்னவரென்று சொல்லாமற் போய் விட்டாரே என்ற ஏக்கத்துடன் தூக்கமின்றிப் பஞ்சாக்ஷரத்தை ஜபித்திக்கொண்டிருக்கிறபோது பாண்டவர்களில் நடுப்பிறந்தோனாகிய அர்ச்சுனன் அந்தப் பாண்டியன் தேசத்தையடைந்து சொக்கநாதரையும் மீனாக்ஷியம்மனையும் சேவித்துக்கொண்டு மணலூர் பட்டணத்தை நோக்கிப் போகிறபோது, சித்திராங்கதை பஞ்சாக்ஷரத்தியானத்துடன் கையினில் ஜபமாலை அலங்கரித்திருக்க கன்னியர் மாடத்தைவிட்டு உத்தியான வனத்தை யணுகி மலர் கொய்துக் கொண்டிருக்க, அர்ச்சுனன் அந்த சித்திராங்கதையைக்கண்டு மோகித்து இவளாரோ மின்னல் கொடிபோலத் துலங்குகிறார். இவளென்ன ரம்பையோ-ஊர்வசியோ-மேனகையோ-திலோத்தமையோ-அல்லது, வனதேவதையோ-என்று தியங்கி மயங்கிப்பிரமித்து அங்கிருந்த தாதிகளால் அவளுடைய விருத்தாந்தத்தையறிந்து அதற்காக அந்த ராஜனைக் காணவேண்டி வாசல் காவலரிடம் தாண் வந்திருக்கிற செய்தியை உங்க ளரசனுக்குந் தெரியப்படுத்துங்களென அவர்களும் அந்தப்படியே சென்று சித்திரவாகனனிடம்விண்ணப்பித்து ஓ! ஸ்வாமி! எங்க ளாண்டவரே? அஞ்ஞானபுத்தையாளும் பஞ்சபாண்டவர்களில் நடுப்பிறந்தோனாகிய அர்ச்சுன மகாராஜன் தங்களைக்காணவேணுமென்று ஆசார வாசலில் வந்து காத்திருக்கின்றானெனக் கேட்டு அந்த சித்திரவாக மகாராஜன் மந்திரிகளுடன் சிங்காதனத்தைவிட்டெழுந்து வந்து ஆசார்வாசலில் நின்றிருக்கும் அர்ச்சுனனைக் கண்டு கட்டித் தழுவிக்கொண்டு அழைத்துச் சென்று சிங்காதனத்தின் மீது விற்றிருக்கச்செய்துத் தானும் சிங்காதனத்தின்மீதிருந்து ஓ அர்ச்சுனமகாராஜனே தாங்கள்தனியே இவ்விடம் வந்தகாரணம் யாதென்றுவினவ, அதற்கு அர்ச்சுனன் சாமிசேவையின் பொருட்டு வந்தேன் வந்தவிடத்தில் உன் புதல்வியாகிய சித்திராங்கதையைக் கண்டேன் பிரமைகொண்டேன் அதுமுதல் என் மனம் இப்படியும் அப்படியும் போகசம்மதிக்காமலிருப்பதால் இச்செய்தியை உமக்குத் தெரியப்படுத்தி உமது புதல்வியாகும் சித்திராங்கதையை மணம்புரிய வெண்ணங்கொண்டு உம்மை நாடிவந்தேன். இவ்விதத்திலேனும் உமது புதல்வியை எனக்கு மணஞ்செய்விப்பது உமது கடமையென்றான் இம்மொழிகளைக் கேட்டு, அந்த சித்திரவாக மகாராஜன் சந்தோஷித்து அர்ச்சுனனை நோக்கி, ஒருவசனஞ் சொல்லத் தொடங்கினன்.

கேளும், இந்திரகுமாரனே உமதிஷ்டத்துக்கு யாதொரு தடையுமில்லை, ஆகிலும் இதிலொரு விசேஷமுளது அதென்னவென்றால், எங்கள் குலத்தினில் ஆதியில் பிரபாகரென்றோர் ராசனிருந்தார் அவருக்கு நெடுகாளாய்ப் பிள்ளையில்லாமற் போனபடியால் அவர் பரமசிவனைக் குறித்து அரிதாகிய தவஞ்செய்தார் பரம

சிவனும் அத்தவத்திற்கு மகிழ்ந்துப் பிரசன்னராகி, ஓய் அரசனே! நீ பிள்ளைக்காகத் தவஞ்செய்கிறபடியால் உமக்கொரு புதல்வன் பிறப்பான் இது போலவே உன் குலத்தினில் பின்னிட்டாருக்கும் முறையே ஒவ்வொருபிள்ளையே யுண்டாகிக் கொண்டு வருவார்கள் என்று வரமளித்தார். அந்த சிவபெருமான் சொல்லியபடியே எங்கள் குலத்தினில் ஒவ்வொரு தலைமுறைக்கும் ஒவ்வொரு பிள்ளையே யுண்டாகின்றது அந்தப்படியே எனக்கும் இப்போது தான் மெத்த கஷ்டத்துடன் ஒரு பெண்ணே பிறந்திருக்கின்றது, இந்தப் பெண்ணையே நான் புத்திரராக நினைத்து இவளைப் புத்திரிகையாக பாவஞ் செய்து வெகு அருமையாகப் பாதுகாத்து வருகிறேன் இப்புத்திரியை விதியின்படியேர்க்கிய நாகிய ஒரு ராஜகுமாரனுக்குக் கொடுத்து விவாகஞ் செய்வித்து இவள் வயிற்றில் முதல்பிறக்கும் பிள்ளையை அரசனைப்போல என் சந்ததிக்கி உரியவனுகச் செய்துக்கொள்ள வேணுமென்று நினைத்திருக்கின்றேன். ஆனபடியினலே, இந்தப்படி செய்ய உனக்குச் சம்மதியானல் என் புதல்வியை யுமக்கு விவாகஞ் செய்விக்கிறேனென்று சொல்லக் கேட்டு, அர்ச்சுனன் சொல்லுகின்றன், கேளும் பாண்டிய நாட்டுக் கதிபனே! ஒருவன் தனக்குற்ற கஷ்ட நிஷ்டங்களை மற்றொருவரிடத்திற் சொல்லி இந்தப்படி நடந்தால் எனக்கும் அனுகூலம் உன்னுடைய காரியமும் நிறைவேறு மென்றும், அப்படி நடவா விட்டால் நின்னிஷ்டப்படி நடப்பது வீண் பிரயத்தினமே என்று சொல்லியும் அதின் யுக்தாயுக்தங்களை யறிந்து நடந்துக் கொள்ளாதவன் மூழ்மூடனுகும், மேலும் ஒரு பொருளினல் இருவருக்குப் பிரயோசனமாக வேண்டியதா யிருப்பதால், இருவரு மனமொத்துப் போனல்தான் அதினலுண்டாகும் பிரயோசனத்தை இருவரு மடையலாம். ஆதலால், உன் புதல்வியாகும் சித்திராங்கதையை எனக்குக் கொடுத்து மணஞ் செய்விப்பீரேயாகில் உம திஷ்டப்படிக்கி அவள் வயிற்றில் பிறக்கும் முதல் புத்திரனை யுமக்குக் கொடுக்கச் சம்மதித்தேன். இது உண்மையான மொழி மேலும் இந்த அண்டங்கள் இடிந்து என்மீது விழ அதினலெனக்கொரு ஆபத்து நேரிடுவதாயிருந்தாலும் அப்போது, என்னுயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் நிமித்தியம் மனமார ஒரு பொய்யையுஞ் சொல்லேன் என்று நின்மனதினில் கருதக் கடவீரென்று உறுதி கூறினன். இம்மொழிகளைக் கேட்டு, அந்த சித்திரவாக மகாராஜன் களிசாகரத்தினில் மூழ்கினவனுகி உடனே புரோகிதரை வரவழைத்து முகூர்த்தம் வைத்துத் தன்னுடைய பட்டணத்தை அலங்கிருதஞ் செய்யும்படியும் தேசதேசங்களுக்கு மணவோலை யெழுதி தூதர்களிட மனுப்பும்படியும் கட்டளையிட்டான். மந்திரிகளும் அந்தப்படியே அரசர்களுக்கு மணஓலை யெழுதித் தூதர்களிடத் தனுப்பி அப்பட்டணத்தை தேவேந்திரனுடைய பட்டணமோ இது வென்று யாவருங் களிக்

கும்படியாகப் பட்டணத்தை யலங்கிருதஞ் செய்துக் கலியாணமண்டப மியற்சிச் சகல வஸ்துக்களையுஞ் சித்தப்படுத்தி வைத்து அரசனுக்குத்தெரியப் படுத்தினார்கள் இதற்குள் அரசர்கள் மணஓலையைக்கண்டவுடன் தங்கள் தங்கள் ரதகஜ துரகபதாதிகள் சூழ வெகு ஆரவாரத்துடன் வந்துசேரக் கண்டு அரசன் எதிர்கொண்டுசென்று அழைத்து வந்து அவரவர்களுக்குத் தக்கபடி விடுதிகளை லமைத்து உபசரித்துப் பந்து மித்திர புரோஹிதர் பிராமணர்களுடனும் கல்யாணமண்டபத்தைச் சேர்ந்து மங்கள வாத்தியங்கள் கோஷிக்க மருமகனுக்கும், மகளுக்கும், திவ்ய தீர்த்தங்களைக் கொண்டு ஸ்நானஞ் செய்வித்து அருமையான, ஆடையா பரணங்களால் அலங்காரஞ் செய்வித்து, சபமங்கிலிய ஸ்திரீகள் மாணிக்கதீபமும், பாலிசையை ஏந்திக்கொண்டுவரத் தம்பதிகளிருவரையும் மணவரையிற் பொருந்தவமைத்து வேதவேதியர்கள் ஆகம மந்திரங்களை யோத சுபமங்கிலிய ஸ்திரீகள் மங்களம்பாட, மங்கள வாத்தியங்கள் கடலொலி போல முழங்கச் சகல சடங்குகளையும் நடத்தி புஷ்ப்பாக்ஷதைகளால் பூசித்திருக்கும் மங்கள சூத்திரத்தை வேத வேதியர்களும், பந்துக்கள் முதலானோரும் கரங்களால் தொட்டு ஆசிகூறச்செய்து அம்மங்கள சூத்திரத்தை மாப்பிள்ளையினிட மளித்து சுபமுகூர்த்தத்தில் சித்திராங்கதையின் கண்டத்தினில் சூட்டும்படிச் சொல்ல மாப்பிள்ளையாகிய அர்ச்சுனனும் சித்திராங்கதையின் கழுத்தில் மாங்கிலியத்தைச் சூட்டினான்.

அதைக் கண்டு, அந்த சித்திரவாக மாகராஜன், பரமானந்த மடைந்து வேத வேதியர் முதலானோருக்கும் அளவிறந்த கோதான பூதான-வஸ்திரதான-சொர்ணதான மென்னும் சோடச தானங்களுஞ் செய்துத் தன் பந்துமித்திர அசர்களுடனும் புசித்துச் சந்தன தாம்பூலாதிகளைத் தரித்து வெகு சந்தோஷமாக அந்தத் நிருமணத்தை ஒரு மாதம் நடத்தி இடையினில் பள்ளியரையை வெகு விநோதமாக அலங்கிருதஞ் செய்து அவ்வரையில் போகத்துக்குரிய வஸ்துக்களை நிறைப்பி மகளையும் மருமகனையும் அப்பள்ளியரையினிற் தாதிகளால் சேர்ப்பிக்க அப்போது, அந்த சித்திராங்கதைத் தன் கணவனாகிய அர்ச்சுனனை தெய்வமாகவும், அந்த தெய்வத்திற்கு அர்ச்சனை ஆராதனை முதலாகிய தொண்டுகள் புரிவதில் கிஞ்சித்து சலிக்காமல் வெகு அன்பாக நடத்தி யவர் கோரிக்கையின்படி நடந்துக்கொண்டு வருவதால் அர்ச்சுனன், அம்மங்கையின் கற்பிக்கும், குணசம்பத்துக்கும், மெத்தசந்தோஷித்துக் காலத்தில்காமேச்சை சனைநடத்தி அவள்செய்யும்உபசாரங்களையும் பூசை முதலான தகளையுங் கைக்கொண்டு மூன்று மாதகாலம் அவளுடன் கூடிக் கலந்தனந்திருந்துத் தன் மனைவியினிடம் விடை பெற்றுக்கொண்டு தன னிச்சையின் படிக்குச் சென்றான். இங்கே சித்திராங்கதை கணவன்

போயினதுமுதல் கவலை மேலிட்டு அதுவே ஏக்க மிகுந்துத் தூக்க மின்றிக் கருப்பவதியாயிப் பத்துமாதமும் பூரணமாகிய பின் ஆண் குழந்தையைப் பெற்றாள், அதை யறிந்து, சித்திரவாக மகாராஜன் பெருந் தரித்திரன் புதையலைக் கண்டதைப் போலவும் தன்னுடைய அரசாங்கத்தை யன்னியாயபகரிக்கப்பட்டு அனேகவருஷகாலம் காடே கெதியாய் போஜனதிகளின்றி விசனமடைந்து திரிந்துக் கொண்டிருந்தவனுக்கு தேவபோகமும், அமிர்தமுங் கிடத்ததைப் போலவும், வெகு சந்துஷ்டி யடைந்தவனாகி உடனே ஸ்நானஞ் செய்து பரிசுத்தமாகிய கன்றுகளுடன் கூடிய கோக்களை உத்தமர் களாகியும், வேதவித்துக்களாகியுங், விளங்கா நின்ற பிராமணர் களுக்குத் தானம் செய்து அதிதி, அப்பாகதர்களும், இன்னும் மற்றுமுள்ளவர்களுக்கும், பூதான-வஸ்திரதான-கன்னிகாதான சொர்ன்னதானமென்று சொல்லப்பட்ட சோடச தானங்களுஞ் செய்து. வெகு களிப்படைந்திருந்தனள். இப்படிக் கிருக்கிற போது, அர்ச்சுனன் அங்கு வந்து மாமனாராகிய சித்திரவாக மகா ராஜனைக் கண்டு க்ஷேமலாபங்களை விசாரிக்கிறபோது, அவ்வரசனும் மருமகனை நோக்கி ! ஐயா ! உமக்குப்புதல்வன் பிறந்து அவனும் அவனுடைய தாயும் சுகமேயிருக்கின்றார்கள் எனக் கேட்டு அர்ச் சுனன் மெத்தசந்தோஷித்து ஐயா வேந்தர் கோமானே உமது மனதிலிருந்தகவலை நீங்கிவிட்டதா சந்தோஷமேலிட்டதா லக்குமி கடாக்ஷம் கைகுள்ளகப்பட்டதா என்றவர் மனங்களி கொள்ளப் பேசிப் பனிரெண்டாநாள் அரசனுல் வேத வேதியர் பந்துக்கள் புரோகிதர் சகலதேசத்தரசர்கள் முதலானோரையும் வரவழைத்து அவரவர்களைத் தக்கபடி யுபசரித்துத்தகுந்த விடுதிகளமைத்துப் புரோகிதரைக் கொண்டு சொஸ்திபுண்ணியாக வசனஞ்சொல்ல வைத்துப் புதல்வனை பரிசுத்த தீர்த்தங்களால் நீராட்டி மைதீட்டி அணிகலன்பூட்டி, இவனை மேட்டான மேட்டி, என்றுப் பலருங் கொண்டாட எடுத்துவந்து புரோகிதரால் பிறந்தலக்கினங் குறி த்துத் திதி-வாரம்-நக்ஷத்திரம்-யோகங் கரணமுதலானதுகளை ஆராய்ச்சி செய்து ஜாதகமெழுதி பப்பிரவாக நென்று மூன்றுதர மழைத்து நாகமரணஞ் செய்வித்து அனேக தான தருமங்களைச் செய்து அரசர்களுடனும் பந்து மித்திரர்களுடனும் புசித்துச் சந் தன-புஷ்ப-தாம்பூலாதிகளைத் தரித்து வெகு ஆடம்பரமாக புத்தி ரோற்சவத்தைக் கொண்டாடி யாவருக்கும் விடை தந்து, அனுப் பிச் சாம்பிராச்சிய பதவியை யடைந்தவனைப்போலக் களிப்படைந் திருந்தனன் அப்போது சித்திராங்கதையும், தன் புதல்வனை நாளு க்குநாள் செல்வமாக வளர்த்துக் கொண்டிருந்தனள். அப்புதல் வனும் சுக்கிலபக்ஷ சந்திரனைப்போல, நாளுக்குநாள் வளர்ந்து வருகையில் அர்ச்சுனன் மணிவியினிடத்தும், மாமனாரிடத்தும் விடைபெற்றுக்கொண்டு இந்திரப் பிரஸ்தம் போய் சேர்ந்தான்.

இங்கே, பப்பிரவாகனும் தன்தாயினல் போஷிக்கப்பட்டுத் தக்கவயதில் சல்வி-வில்வித்தை-யானையேற்றம் குதிரையேற்ற, முதலாகியதினுந் திறவாஞகி பதினுறுவயதை யடைந்தவுடனே, அந்த சித்திரவாக மகாராஜன் அவனுக்கு இளவரசு பட்டங்கட்டி இனிதுடன் அரசு புரிந்துக்கொண்டிருந்து பப்பிரவாகன் விவாகத்திற் குறிய வயதை யடைந்திருப்பதைக் கண்டித் தங்கள் மரபினி லுதித்த இராஜகுமாரியைப்பேசி மெத்தவும் விபவமாக அவனுக்குக் கல்யாணத்தை நடத்தி வைத்தான் பப்பிரவாகனும் பாட்டன் மொழியைத் தவராமலும் தன்மனைவியுடன்கூடி மதனும்ரதியைப்போல, வெகு களிப்புடன் வாழ்ந்துக் கொண்டிருக்கையில், ஒரு நாள் சித்திரவாகமமஹாராஜன் மந்திரிகளை நோக்கி! ஓ! மந்திரிகளே! எனக்கிந்த அசாக்ஷியில் விருப்பமில்லாம லிருக்கின்றது. ஏனெனில் இந்த பஞ்சாசத்கோடி பூமண்டலங்களும், இதிலடங்கிய சகல ஜீவராசிகளும், மற்றுமுள்ள யாவற்றுமான வஸ்துக்களும். அழிந்து போகும்படியானதே, இதி லெந்த வஸ்துவேனும் அழியாம என்றும் நீடித்திருக்குமென்றலோ ஒன்றேனும் நீடித்திருப்பதா யில்லை, எல்லாப் பொருளும் அழிந்துபோவதாகவே இருக்கின்றது. இதிலழியாம லிருக்கும்பொருள் ஒன்றுளது, அதுயாதெனில், சிருஷ்டித்துப்-போஷித்துச்-சங்கரித்து - முடிவினில் யாவற்றையும் தன் குக்ஷியினில் வைத்துக்கொண்டு ரக்ஷிக்கும் ஆதிக்கடவுளாகிய விராட்புருஷ னொருவனே என்று மழியாமல் தற்பரனுகியிருப்பவன். அந்த விராட்புருஷனலே சிருஷ்டிக்கப்பட்ட எண்பத்து நான்கு லட்சம் ஜீவராசிகளிலே நின்றும் மானிடனுக அவதரிப்பது அரிது. இப்படி க்ஞானமென்னும் அறிவுடனே விளங்கும் அரிதாகிய இந்த மானிட ஜென்மத்தை யெடுத்தும் மண்-பெண்-பொன்னென்னு-மூவாசை கொண்டு வாழ்நாளையெல்லாம் வீணுளாகக் கழித்து மூடிவில் எமதூதர்களால் கட்டுப்பட்டு ஏமனிடஞ் சென்று விசாரிக்கப்பட்டுத் தக்க நரகதண்டனையடைந்து மீண்டும் பூலோகத்தினி லிதே ஜென்மம் வருமென்பதற்கு நம்பிக்கை கிடையாது. எந்த ஜென்மம் சம்பிராப்தமாகுமோ தெரியமாட்டாது. ஆகையால் எல்லாஜென்மங்களிலிட மேன்மையும் அருமையுமாகிய இந்த ஜென்ம மிருக்கிறபோதே சகல பற்றுக்களையும் மற்று ஜென்ம சாபல்யமாகும் பகவந்நாம பாராயணஞ் செய்து மோட்ச வீட்டையடைய வேண்டுமெனக் கருதினேன். இதற்கு யான் சுமந்து கொண்டிருக்கும் அரசாங்க பாரம் தடையா யிருப்பதால் இந்த பாரத்தை என் பேரனுகிய பப்பிரவாகன் தலையில் வைத்து யான் நிம்மதியாய் பகவந்நாமத் தியானஞ் செய்துக்கொண்டிருக்க விருப்பங் கொண்டிருக்கிறேன். இதை நன்றுக யோசித்துச் சொல்லுங்க ளென்றன், அதற்கந்த மந்திரிகள, அரசனை நோக்கி, ஓ! ஸ்வாமி! பூபாலரே! இப்போது தாங்கள் சொல்லிய

படி பகவந்நாமத் தியானஞ்செய்வதற்குத் தக்க காலம் இதுவே மேலும் பூமிபாரத்தைத் தங்கள் பேரனிய பப்பிரவாக மஹாராஜன் தலைமீது சுமத்துவதுந் தகுதியாகும், இது மெத்த நன்றாயிருக்கின்றது. இதைப்பற்றி யோசிக்கவேண்டிய காரணமே யில்லை யென்றனர்கள். இதைக்கேட்டு அரசன்மெத்த சந்தோஷமடைந்து தங்கள் புரோகிதரையும், ஜோசியர்களையும், வரவழைத்துப் பட்டாபிஷேகத்துக்குத் தக்க நாளொன்று குறித்துச் சகலதேச வர்சர்களுக்குந் தெரிவித்துத் தன்னகரத்தை யலங்கிருதஞ்செய்து யாவற்றிராளும் வந்து சேர்ந்தவுடன் பப்பிரவாகனைக் கங்கை முதலான தீர்த்தங்களைக் கொண்டு வேத வேதியர்களாலே அபிஷேகஞ் செய்வித்து ஆடையாபரணங்களா லலங்கிருதஞ்செய்து மலர்மாலைகளைச் சூட்டி யழைத்துவந்து குறித்த முகூர்த்தத்தில் சிங்காதனத்தின்மீது வீற்றிருக்கச்செய்து நவரத்தின மாணிக்கங்கள் பதித்த மகுடமுடியைச் சிரசினில் பொருந்த வமைத்துச் சகல மங்களவாத்தியங்களுங் கடலொலி போல முழங்க, வேதவேதியர்கள் ஆசி கூற, சுமங்கிலிய ஸ்திரீகள் மங்களம்பாட, ரம்பைக்கு நிகரான ரூபம் வாய்ந்த கணிகை மாதர்கள் ஆட, பராக்கு எச்சரிக்கை யென்றுங் கட்டியம் போட, தனக்குக் கப்பங் கட்டும்படியான அரசர்களும்-சேவக-சிப்பந்தி மந்திரி-பிரதானி - தண்டதலைவர்-யூகத்தலைவர்-அணித்தலைவர்-படைத்தலைவர்-முதலானோரும் சிரத்தின்மீது கை குவித்துக்கொண்டு பலவாறு துதித்துக்கொண்டாட பப்பிரவாகன்காத்திற் செங்கோல் பிடித்துக்கொண்டு தேவேந்திரனைப்போலக் கொலுவமர்ந்திருந்தான் அதைக்கண்டு சித்திரவாகராஜன் உடல் பூரித்து மயிர்க்குச் செரிக்க ஆனந்த மடைந்துத் தன் மனம் போனபடி வேதியர்கள்-பிராமணர்கள்-முதலானோருக்கும் பற்பல தானங்களைச் செய்து அரசர்கள் முதலானோருக்கும் விருந்திட்டு, அவரவர்களுக்குத் தக்கபடி சன்மானங்களித்து விடைதர, அவர்களும் விடை பெற்றுத் தங்கள் தங்கள் நகரம் போய்ச் சேர்ந்தார்கள்.

இந்தப்படி அரசர்கள் முதலானோரும் விடை பெற்றுக் கொண்டு போயின பின்பு, பப்பிரவாகன சாந்தசமதமாதி குணங்களுடன்-சாமபேத தான-தாண்டமெனும், சதுர்வித உபாயங்களாலும், மன்னுயிரைத் தன்னுயிர்போல பாவித்தும் இடம்பொருளேவலர் முதலாகிய சகல இன்பங்களுடனும் வெகு நீதியாய் அரசு புரிந்துக் கொண்டு வருகிற காலத்தினில், பாண்டவர்கள் ராஜசூயாகஞ்செய்து வெகு கீர்த்தியைப் பெற்றபடியால் துரியோதனனுடைய வஞ்சனைக் குட்பட்டு சூதாடித் தங்களுக்குள்ள சகல சொத்துக்களையுந்தோற்று வனத்திற பனிரெண்டு வருடங்கள் கடத்தி, ஒருவருடம் அக்கியாதவாசமுஞ் செய்துவந்து, ஸ்ரீகிருஷ்ண மூர்த்தி

பின் சகாயத்தினாலே துரியோதனாதிகளை மடித்துத் தரும நந்தனர் அஸ்தினபுரத்தைப் பட்டங்கட்டிக்கொண்டு சுகமாகத்தம்பிமார் நால்வர்கள் சூழ ஆண்டுக்கொண்டு யிருந்து, அசுவமேத யாகஞ் செய்விக்கக் குதிரையையும், அதின்பின்னே அர்ச்சுனனையுங் கூட்டி யனுப்ப, அந்த அர்ச்சுனனும், சில பட்டணங்களில் குதிரையை விட, அக்குதிரையைப் பிடித்துக்கட்டிய அரசர்களுடன் போர்புரி ந்து ஜெயம் பெற்றுக் கொண்டு மணலூர்ப் பட்டணத்தைச் சேர வருகிறபோது, குதிரையானது, நகரத்திற்குள் பிரவேசிக்கப் பப் பிரவாகன் அக்குதிரையின் லலாடத்திற் கட்டியிருந்த விருதா வொளியை வாசித்துத் தன் தந்தை வந்திருப்பதையும், பொழுது போயினதையும், யோசித்துச் சந்தோஷித்து காலைய தினங்காலை யில் நமது தந்தையைக் காணலாமென்று அக் குதிரையைப் பிடித் துக் கட்டிவிட்டு அரண்மனை சேர்ந்து அன் றிரவைப் போக்கி மறு நாள் காலையி லெழுந்துக் காலைக் கடனை முடித்துப் பூசை முதலா னதுகளையும் நிறைவேற்றிக் காணிக்கை கப்பங்களுடன் சகல பரி வாரங்களுடன் புடைசூழ, அனேக மேளவாத்தியங்கள் முழங்கக், குதிரையுடன் சென்று காணிக்கை கப்பங்களை வைத்துத் தன் தந் தையின் திருவடிகளில் விழுந்து பணிந்தான். அதைக் கண்டு, அர் ச்சுனன் அந்தப்பிரவாகனைக் காலா லெட்டி உதைத்துத் தள்ளி, அடா! துஷ்டா! நான் குதிரையின்பின் வந்திருப்பதை நீ யறிந்தி ருந்தும் குதிரையை விடாமல் கட்டி வைக்கலாமோ, அப்படிக்கிக் குதிரையைப் பிடித்துக் கட்டிவைத்தபோதிலும் நீயாகிலும்வந்து என்னைக் காணுமலிருக்கலாமோ, நீ என்ன ஒரு சுத்த வீரனை! என்னுடைய பராக்கிரமத்தையும் என்பின் வந்திருக்கும் சேனை களின் வீரத்தையும் யெவர்களாலே சொல்லக்கேட்டு பயந்து இப் போது காணிக்கை கப்பங்களைக்கொண்டு வந்து வைத்துப் பணி ந்த நின் கெர்வத்தை இப்போதே யடக்குகின்றேன் பாரடா மேலும் எனக்கே நீ பிறந்தவனாக விருந்தால் வந்தனுள் தவிர்த்து மருநாள் என்னிடத்திற்கு வருவையோவென்று கடுகடுத்துப்பேசி னான். அதற்கும் பப்பிரவாகன் கோபங்கொள்ளாமல் மருபடியுந் தந்தையைப்பணிந்து ஓ! ஐயா! பிள்ளைசெய்த குற்றத்தைப் பிதா பொருத்துக் கொள்வதைப் போலவும், சிறியோர் செய்த பிழை யைப் பெரியோராயிற் பொறுப்பது கடனே என்றது போலவும் யான் செய்த குற்றத்தை க்ஷமித்து ஆட்கொள்வதுமது கடமை யே யாமென்று இனிய வசனங்கள் கூறியும், அர்ச்சுனன் சாந்த மடையாமல் வெகுண்டு, ஆக்கிர வியாக்கிரம நிக் குரோதனுகி, அடா! பயலே! நின் தாயார் என்னைருவனுக்கே உன்னைப்பெற் றிருந்தால் வீரங்கெட்டு எனக்கு நீதாழ்ந்து பணியமாட்டாய் நின் அன்னை எத்தனைபேருடன் போய் உன்னைப் பெற்றாளோ, அதை வேயே இப்படி என்னை வணங்கிச் சாந்தம் பேசுகின்றாய், என்று

பற்களோ படபட வெனக் கடித்து மீசை துடிக்க, அதட்டி, உதட்டியாகப்பேசி, பேசினான். அதைக் கேட்டு பப்பிரவாகன் மூப்புரமெரித்த ருத்ர மூர்த்தியைப்போல கோபங்கொண்டு காணிக்கைகப்பங்களையும், குதிரையையும் கைக்கொண்டு தூதர்களிடம் பட்டணத்திற்கனுப்பி வைத்துத் தன் தந்தையை நோக்கி, பலபேரிடம் போய் பெற்ற வெள்ளாட்டிப் பிள்ளையின் திறத்தை இன்னுஞ் சற்றுநேரத்தில் காட்டுகிறேன் பாரும். அன்றியும் என்னுடைய அன்னையின் கற்பு நிலைமையை நீர் அறிந்திரும் அந்த உத்தமியைப் பழித்த நின் சிரத்தையும் காக்கையும் அறுத்துத்தள்ளி விபசாரிப் பிள்ளையாகிய என்னுடைய பராக்கிரமம் யாவருங் கண்டு களிக்கும்படி செய்கிறேனென்று கூறி, ரதகஜ துரக பதாதிகளென்னும் நால்வகைச் சேனைகளையும் வரவழைத்துக் கொண்டு யுத்த சன்னத்தனாகி எதிர்த்து நின்றான்.

இப்படியாக பலருமறியக்கூறி, பப்பிரவாகன் தன்னை யெதிர்த்து நிற்பதைக் கண்டு வெருண்டு இவனெம்மாத்திரம் அணுவுக்குச் சமானமாகு மிவனையென்னுட னெதிர்த்துப்போர் புரிபவன் என்று வீராவேசங் கொண்டு தன்னுடைய காண்டீபத்தை யெடுத்து நிறுத்தி, நாணி பூட்டி, குணத்தோனி காட்டி, அதில் ஒருபாணத்தை எடுத்து வில்லில் சந்தித்து விடுத்தான் அப்பாணமானது வில்லில் நின்றும் விடுபட்டு ஒன்று-பத்து நூறு-ஆயிரம்-பதினாயிரம்-லக்ஷம்-கோடி-சங்கம்-மகாசங்கம் க்ஷோணி - மகாக்ஷோணி-யென்னும் அளவிறந்தபாணங்களாகி எங்கே பார்த்தாலும் பாணமயமாகி நிறைந்து வருவதைப் பப்பிரவாகன் கண்டு, தன்னுடைய வில்லை வளைத்துக் குணத்தோனி செய்து அதிலொரு பாணத்தைத் தொடுத்து விடுத்தான். அந்தபாணமும் வில்லைவிட்டு வெளிப்பட்டு கணக்கிலிட்டுச் சொல்லமுடியாத பாணங்களாகிப் பரவி அர்ச்சுனன் விட்ட பாணங்களையெல்லாம் நடுபாதியிற் கண்டித்து விட்டன. அதுகண்டு அர்ச்சுனன் மறுபடியும் ஒரு பாணத்தை யெடுத்து அதற்குத் தூபதீப-மானச பூசை செய்து அதை வில்லில் சந்தித்து விடுத்தான். இந்த இரண்டு பாணங்களும், ஒன்றோடொன்று எதிர்த்துப்போராடி முடிவில் ரூபமில்லாமலே பொடி பொடியாய்ப் பூடியின்மீது உதிர்ந்து போயிற்று. இந்தப்படியாக அர்ச்சுனனும், பப்பிரவாகனும் நெடுநேரம் சமயயுத்தஞ்செய்துக் கொண்டிருக்கிறபோது பப்பிரவாகன் மூன்றாந் இடையி லொருபாணத்தை விடுத்து அர்ச்சுனன் கையிற் பிடித்திராநின்ற வில்லின்நாணியை யறுத்துவிட்டான். இதனால் அர்ச்சுனன் யாதொன்றுந் தோன்றாமல் பிரமித்து சற்றுநேரம் அசைவின்றிநின்று உடனே திடங்கொண்டு வேறொரு நாணியைப்பூட்டிக் குணத்தோனி நாட்டி அனேகம் பாணங்களைத் தொடுத்துவிடுத்தான். அதையறிந்து பப்

பிரவாகனும் தன் வில்லில் அனேகம் பாணங்களைத்தொடுத்து விடுத்தான். இவ்வாறு இருவரும் பாணங்களைச் சரமாரியாகத் தொடுத்தும் அப்பாணங்கள் நடுவே பாதி பாதியிலழிந்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தது. இதில் பப்பிரவாகன் உக்கிரங்கொண்டு ஒரு பாணத்தை யெடுத்தான். அந்தப்பாணம் கெங்காதேவி சாபத்தால் அவ்வுருக்கொண்டிருந்தது மன்றி: உத்தமபாகிய சித்திராங்கதையை நிந்தித்த தோஷமும் இரண்டும் சம்பந்தப்பட்ட அப்பாணத்தைப் பூசித்து-நேசித்து-விசுவாசித்து-ரோஷத்துடன், அர்ச்சுனன் சிரசுக்கு லக்குவைத்து வில்லில் தொடுத்து விட்டான், அப்பாணமானது நெருப்புப் பொறிகளை வாரி இரைத்துக்கொண்டே வந்து அர்ச்சுனனுடைய சிரசைக் கண்டித்துத் தள்ளியது. அப்போதந்த சிரசானது ஆகாயவீதியிற் கிளம்பி, நந்தநந்தா - முகுந்தா-கோவிந்தா-வைகுந்தா-ஆபத்பாந்தவா- அனுதரக்ஷகாவென்று சொல்லிக்கொண்டே ரணக்களத்தில் வீழ்ந்துவிட்டது உடனே பப்பிரவாகன் தன்னுடைய வெற்றி சங்கத்தை யெடுத்துத் திசைகளெட்டும் கிடுகிடுவென்று நடுங்க, அண்டர்கள் ஓடுங்க, வாயினில் வைத்து பம்பம்மென்று பூரித்துத் தன் சேனைகளுடன் லெகு சந்தோஷமாகத் தன் பட்டணத்தைச் சேர்ந்தான். இதற்குள் சித்திராங்கதை தன் கணவனாகிய அர்ச்சுனமகாராஜன் யாகத்தின் பொருட்டுக் குதிரையின் பின்வந்ததும், அக்குதிரையைப் பிடித்துப் பப்பிரவாகன் கட்டினதையும், போர்க்கோலங்கொண்டு சேனைகளுடன் சென்று யுத்தஞ் செய்துப் பப்பிரவாகன் தன் கணவனைக் கொன்றதையும் தாதிகளால் சொல்லக்கேட்டு, ஆ! பிராணநாதரே! மடிந்தீரா! இதுவென்ன அநீதம், ஒருவராலுஞ் ஜெயிக்கமுடியாத காலகேய நிவாதகவசாளை ஒரு முகூர்த்தகாலத்தில் ஜெயித்து வெற்றியடைந்த மகாதீர புருஷராயிற்றே? மேலும், பாரதப்போரில் பீஷ்மர், துரோணர், கர்ணன், முதலாகிய மகா பலபராக்கிரம புருஷர்களை யெல்லாம் வென்று ஜெயம்பெற்ற வீராதிவீரராகிய தேவரீர்! இந்தச் சிறுபயலால் மாண்டதற்குக் காரணம் யேதோ ஒன்றிருக்கின்றது..இல்லாவிடில் உம்மை ஜெயிப்பதற்கு இந்த துஷ்டப்பயலாகுமோ, இனி யெப்படி யான் உயிருடன் உலகத்தினில வசிப்பேன், யாரை யான் பிராணநாயகரே யென்றழைப்பேன், ஏதேது இனி அரை நிமிஷமேனும் உம்மைத் துறந்துயிருடனிரேன் இதோ யானும் உமது பின்னாலேயே வருகின்றேன் என்றுசொல்லி, பலவாறு பதறிக் கதறி யழுது வாடி மூர்ச்சையாகிப் பூமியின்மீதுவீழ்ந்து உடனேதேரி தாதிகளை யழைத்துக்கொண்டு ரணக்களஞ்சேர்ந்து பிரேதமாய் கிடக்கும் கணவனுடலைக்கண்டு வாயிலும் வயிற்றிலும் அடித்துக்கொண்டு கோவென்று புலம்பி யழுதுகொண்டு சோகசமுத்திரமாகிய கடலில் மூழ்கியிருந்தனள்.

இங்கிப்படி யிருக்க, அஸ்தினபுரத்தினில் குந்திதேவி, தர் சொர்ப்பனங்கண்டு திடுக்கிட்டெழுந்து உட்கார்ந்து யோசித்துத் தன் மனதுக்கு ஒன்றுந் தோன்றுமல் தருமநந்தனர் முதலான நான்கு புதல்வர்களே எழுப்பி குமாரர்களே! இப்போது நான் கண்டகனவின் விருத்தாந்தத்தைச் சொல்லுகின்றேன், கேளுங்கள் உங்களில் நடுப்பிறந்தோனுகிய அர்ச்சுனன் மொட்டை யடித்துக் கொண்டு சிவந்த மலர்மாலைகளைத் தரித்துக் கழுதையின் மீதேறி தென்முகமாய்ப் போகக் கனவுகண்டேன். ஆதலால் அர்ச்சுன னுக்குயேதோ விபத்து நேரிட்டிருக்கின்றது என் வயிறு எரிகின் றது மனமோ திகிலடைந்திருக்கின்றது கால்வோ உலர்ந்து தடுமாறு கிறது தேக மொடுங்குகின்றதென்று சொல்லிக்கண்ணீர் சோர விட்டு அழுதுக்கொண்டு நின்றனள். அதைக்கண்ட நால்வரும் துக் காக்கிராந்தர்களாகி ஒன்றுந் தோன்றுமலிருக்கிறபோது சில துற் சகுணங்கள் காணப்பட்டது அதென்னவென்றால், குறைக் கொள் ளியும் எலும்புகளும் உதிரமழையும் பெய்தன. அதைக்கண்டு சோதிட சாஸ்திரத்தில் வல்லவனுகிய சகாதேவன், ஆருடமூலமாக வும் கணிதமூலமாகவும் ஆராய்ந் தணர்ந்து அர்ச்சுனன் மரண மடைந்ததைச் சொன்னால் யாவரும் பெருங் கோஷ்டஞ் செய்வார் கள், அன்றியும் இன்றே அர்ச்சுனன் உயிர்பெற்றெழுப்ப போகிற தையுங் கருதி பொய்சொல்லாதவனும் சத்திய சந்தனுமானதால் அவர்களே நோக்கி, எனக்கு மூத்தோனுக்கு மூத்தோனுகிய அர்ச் சுனமாகாராஜனுக்கும் விபத்து நேர்ந்திருப்பது உண்மையே! ஆகி லும் அவர் இன்று அஸ்தமனத்துக்குள் உயிர்பெற்றெழுவார். இதை ப்பற்றி ஒருவருஞ் சிந்திக்கவேண்டிய காரணமில்லை சீக்கிரம் கிரு ஷ்ணபகவானே வரவழைத்தால் நலமாயிருக்கு மென்றான், அதைக் கேட்டுத் தருமநந்தனர், ஓ! ஆபத்பாந்தவே! கிருபாசிந்துவே! அனுதாரக்ஷகனே! ஆதிதேவனே! பக்தவச்சலா! பரமதயாளா! நின்னரிய நேசனுகிய அர்ச்சுனன் மரணமாயினதை நீரியாதது போலவிருக்கின்றீரே, இப்படிக் கிருப்பது ஞாயமோ இதனுல் பாண்டவர் சகாயனென்றபேர் தம்மை விட்டுநீங்குமே முதலிலிரு ந்து பாரதப்போர்வரையில் காத்ததுபோல மூழுதிலும் எங்களை ரையுங் காத்து ரக்ஷியும் சுவாமியென்று இரத்தின்மீது கைகுவித்துக் கொண்டு தோத்திரஞ்செய்யும் தருமநந்தனர் முறையை ஸ்ரீகிரு ஷ்ணபகவான் கேட்டுத் தன் ஞானதிருஷ்டியினுல் அர்ச்சுனனுக்கு நேரிட்ட ஆபத்தையறிந்து தாரகனே எச்சரித்து வைகுந்த ரதத் தைத் தருவித்து அதில் ஆரோகணஞ்செய்து தாரகன் ரதத்தைக் கடத்த அஸ்தினபுரஞ்சேர்ந்து ரதத்தைவிட்டிறங்கி அரண்மனைக் குட்சென்று தருமநந்தரை வணங்கி, ஆசிபெற்று பீம-நகுல-சகா தேவர்கள் வந்து தன்னைவணங்க, அவர்களுக் காசிகூறி தருமநந்த னைத்தேற்றி அந்தப் புரஞ்சென்று துக்காசாகரத்தில் மூழ்கியிரு

க்கும் குந்திதேவி, திரௌபதை சுமித்திரை, முதலானோரையும் துக்
கப்படாம லிருக்கும்படி ஆதரித்து பீமன் குந்திதேவியுடன் ரத
மேறிக்கொண்டு சென்று மணலூர்பட்டணத்தையணுகி ரணக்கள
த்திற்குச் சென்று அங்குதுக்கப்பட்டுக்கொண்டிருக்கும் சித்திராங்
கதை முதலானோரையும் அப்புறப்படுத்தி அர்ச்சுனன் தேகத்தைக்
கண்டு தானும் குந்திதேவியும் பீமசேனனனும் சிறிதுநேரம் பிரலா
பித்து உடனேதேறினவர்களாய் அர்ச்சுனன் சிரசைக்காணுமல்
பீமசேனன் அந்த ரணக்கள முழுதுஞ் சோதித்துக்கொண்டே வரு
கிறபோது பப்பிரவாகன் அர்ச்சுனன் சிரசை அந்த ரணக்களத்தி
லிருந்து எடுத்து வந்து தன் தாயாகிய சித்திராங்கதையின் கரத்திற்
கொடுத்தான். அதை யந்த சித்திராங்கதைபெற்றுக்கொண்டு தன்
மூந்தானையால் முகத்தைத் துடைத்து உய்த்துநோக்கி வெகுவாகப்
பிரலாபித்து அச்சிரசை பீமசேன மகாராஜனிடமளித்துத் தன்
புதல்வனுகிய பப்பிரவாகனைநோக்கி, அடா ! புத்தியில்லா மூடா
உலகத்தில் பிள்ளையாய்ப் பிறந்தவன் தாய் தந்தைகளைக் காப்பா
ற்றி அவர்களுக்கு யாதொரு இந்தனையுமில்லாமல் சந்தோஷித்தி ரு
க்கும்படிக்கிச் செய்யுமவனன்றே பிள்ளை இதனல் தாய் தந்தை
களுக்குங் கீர்த்தி, தனக்கும் பெருமை யுண்டாகும் இதை விடுத்து
தந்தையைக்கொன்ற பிதாதுரோகியாகியும், தாயை மலங்கலமிழக்
கச் செய்து சதாதுக்கசாகரத்தினில் மூழ்கிக் கிடக்கும்படி நடந்த
துஷ்டனுகிய நீயும் எங்களுக்குப் பிள்ளையோ, உன்னை அணிப்
பிள்ளை, கீறிப்பிள்ளை, தெண்ணம்பிள்ளைக்கு நிகராக சொல்லவுந்
தகாது ஏனென்றல், அதுகள் ஓரறிவு, நான்கறிவுவுடையஜீவன்
களாயிருக்கினும் அதுகளுக் குண்டாயிருக்கும் ஞானத்தினில்
பஞ்சறிவுடைய நினக்கு எட்டி லொருபங்கேனு மில்லை ஆதலால்,
அடா நிர்மூடா ! யினி யென்கண் முன்னம் நில்லாதே போடா குடி
யைக் கெடுக்கும் அஞ்ஞானம் நிறைந்த உள்ளத்தினை யுடைய குடி
கேடா என்றிகழ்வாகத் தன்னைத்தூரின அன்னையைப் பணிந்து ஓ!
அம்மணி ! தாங்களடியேனை எத்தனை யிழிவாக வையினும் எனக்
குச்சந்தாஷமே இதுபோய் என் தந்தையும் என்னை எத்தனைகேவ
லமாகப் பேசினபோதிலுங் கிஞ்சிற்றேனுங் கோபமென்பது எனக்
குப் பிறக்கமாட்டாது. தேவரீரை அவர் கணிகைமாதினுங் கேவ
லமானவளென்று பழித்தபடியானும அவருக்குயான் பிறந்தவ
னல்ல யாருக்கோ பிறந்தவனென்றும் இழிச்சொல் பகர்ந்த அவர்
மீதெனக்குச் சினமூண்டாகி; அவருடன் எதிர்த்து யுத்தஞ்செய்
துக்கொன்றேன் மேலுங் கற்புடைய மங்கையரை வேசி யென்றுந்
நாசி யென்றும் ஒரு மனிதன பகருவானேயாகில் அம்மங்கைக்
குறியவர்களை அவனெயெளிதில் விடுவார்களோ ! அன்றியும் நின்
கற்பின் திறத்தினுலே என்னுடைய பாணம்பட்டு இறந்தாரேயன்றி,
என்னுடைய வீரத்தினுல் இறந்தவர் அல்லவென்று தன் அன்னைக்கு

வெகு சாந்தமாக வுரைத்தும் அந்த சித்திராங்கதை புதல்வனை நோக்கி, அடா மகனே! இதற்கொரு விசேஷஞ் சொல்லுகின்றேன். அதை கவனித்துக் கேட்டேனும் நற்புத்தி வரவழைத்துக் கொண்டு உலகோர் சந்தோஷமடைய நடந்துக்கொள்ளுமப்பா வென்று சொல்லத் தொடங்கினள்.

கேளுமப்பா மகனே! உலகத்தில் புருடனுனவன் தன் மனைவியைத் தாசி யென்றும்-வேசி யென்றும்-பலபேர்களுக்கு வைப்பாட்டி யென்றும், இழிச்சொர்க்களைப் பகர்ந்திடினும், அதனுண்டாகும் மானமோ அவமானமோ அது அவரைச் சார்ந்ததே மேலும் என்னுடைய தந்தை எனக்குவயது வந்தவுடனே என்னையுன் தந்தைக்குக் கொடுத்து விவாகஞ் செய்வித்தபோதே யான் அவருடைய சொத்தாகிவிட்டேன், அவருடைய சொத்தாகிய யென்னை யவர் வெட்டினுலும், குத்தினுலும், எனக்கு யாதொரு சுதந்திரமுமில்லை, பரதந்திரமாகவே யான் நடக்க வேண்டியவளாகியிருக்கின்றேன் இப்படி யவர்செய்தால் நஷ்டம் யாருடையது அவருடையதே நஷ்டமானபடியால் இதையுணராமல் தந்தையின் மீதே எதிர்த்து யுத்தஞ்செய்து தந்தையைக் கொன்றுய், இதனுன்னை இப்பட்டணத்திற்கு அரசனென்று மதித்திருந்தக் குடிகள் யாவரும் உன்னைப் பிதா துரோகி யென்று இகழ்வதுடன் பேரறிவில்லாத சிற்றறிவையுடைய இவனுக்கெந்த குணத்தைக் கண்டு பாட்டனுனவன் இப்பட்டணத்தை யாளும்படிப் பட்டங்கட்டிவைத்தானே வென்று நின்பாட்டனுக்கும் இழிச்சொல்வந்து சேரிட்டது. ஆகையால், அடாமகனே! இனிமிக்கோபத்தை விடுத்து எந்தகாரியமாயிருக்கினும் மந்திரிகளுக்கும் என்போலொத்தவர்க்குந் தெரியப்படுத்திக் குணு குணங்களை யோசித்துச் சொல்லக் கேட்டு நடந்துகொள்ளுமப்பா வென்று கூறிய அன்னையை பப்பிரவாகன் பணிந்து ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியிருக்கு மிடத்தை யணுகினன்! அப்போது ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியாவர் பீமசேனன் கொடுத்த அர்ச்சுனன் சிரசை யவன்தேகத்தில் பொருந்தவைத்துச் சித்திராங்கதையை வரவழைத்து கேளுமம்மா தங்கையே, நின் கணவனுகிய அர்ச்சுனன் நின் புதல்வனுகிய பப்பிரவாகனுல் மடிந்தானென்ற ஏக்கத்தை விட்டுவிடு கெங்காதேவியின் சாபத்தினுல் மடிந்தானேயன்றி வேறொரு காரணத்தினுலும் மடிந்தவனல்ல அந்த கெங்கையைத் தன் ஜடையினில் தரித்த சொக்காதருடைய கிருபையையும் கற்பினில் மிகுந்த அருந்ததியினும் சிறந்த குணங்களையும் உடையவள் நீ யாகையால், சிக்கிரம் நின் கணவனுகிய அர்ச்சுனனை உயிர்பெற்றெழுந்திருக்கும் படியான மூபர்ச்சியைச் செய்யக் கடவரயென்றனர். அவ் வசனங்களைக் கேட்டு சித்திராங்கதை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியைப் பணிந்து, ஓ! ஸ்வாமி! தேவரீர்! பாண்

டவர் சகாயரென்றும், பிரியரென்றும், உலக மெங்கும் கீர்த்தி பெற்றவராயும், ஆபத்பந்துவாகியும், அனாதரக்ஷகராகியும், பிரமன் சிவன், தேவேந்திராதி தேவர்களுக்கும், அதிபதற்கும், அறிவதற் கும், அறிதாகிய மகிமைகள் பொருந்திய உமதுக் கிருபையென் னும்கருணை கடாக்ஷஞ் செய்தால் இவர் நித்திரை நீங்கி எழுபவ ரைப்போல எழுத்திருப்பதற்குத் தடையுண்டோ! இப்படிச் செய் வதை விடுத்து (எண்ணுக்கற்று மெழுத்தறவாசிக்கினும் பெண் புத்தி பின்புத்தி) என்பதைப்போலப் பின்புத்தியுடையவளும் கற்பி லக்கணமறியாதவளும் கொடுமையே செய்யுங் குணத்தினையுடைய வளுமான அடியாளா லிப்பெருத்தகாரியத்தைச் செய்யாமுடியா தென்றனள். அதற்கு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி, ஓ! அம்மா! சித்திராங் கதையே! நீ சொல்லிய வசனங்களெல்லாஞ்சரியே, ஆயினும் பாலொரு உபாயஞ் சொல்லுகிறேன், அந்தப்படி செய்வையாகில் இறந்து கிடக்கும் நின்கணவன் உடனே உயிர் பெற்றெழுவன், அதென்னவென்றால், ஓ முதலில் கணவன் திருவடிகளைச் சிந்தித் துப் பின்பு சொக்கநாதரையும் மீனாக்ஷியம்மனையுந் துதிசெய்துக் கொண்டே வந்து நின் வலதுகரத்தால் கணவனைத் தடவிக்கொடுப் பையேயாகில் உடனே யுயிர்பெற்றெழுவன் என்று சொல்லிய ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி வசனங்களைக் கேட்டு அந்த சித்திராங்கதை ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை வணங்கி விடைபெற்றுச்சென்று அந்தப் புரத்தை யடைந்து ஸ்நானாதிகளை முடித்துப் பகவான் கட் டளையின்படி முதலில் தன் பிராணநாதன் திருவடிகளைச் சிந்தனை செய்துப் பின்பு சொக்கநாதரையும் மீனாக்ஷியம்மனையுந் துதி செய் துக்கொண்டு தாதிகளுடன் ரணக்களத்தை யடைந்துத்தன் புரு டனை வலம்புரிந்து நின்றுக்கொண்டு யான் பதிவிரதத்தைக்கட வாமலும் அவ்விரதத்தில் சோம்பலென்ப தடையாமலும் இருப்ப தண்மையாகில் என் பதிக்குற்ற கெங்காதேவின் சாபம் நீங்கி என் கணவன் உயிர் பெற்றெழக்கடவர் என்று சொல்லிக்கொண்டே தன்பதியின் திரேகத்தை வலது கையினால் தடவினமாத்திரத்தில் அக்கினியில் நின்றும் சென்தாமரை மூளத்தாற் போலவும் நித்தி ரையில் நின்றும் விழித் தெழுந்தவரைப் போலவும் அர்ச்சுனன் உயிர் பெற்றெழுந்தான்.

ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியும் இந்தப்படியாக வெழுந்த அர்ச்சுன னைக் கண்டமாத்திரத்தில் குந்திதேவியும் பீமசேனனும் கட்டித்த ழுவிக் கொண்டார்கள் அப்போது அர்ச்சுனனும் அவர்களைப் பணிந்து ஆசிபெற்றிருந்தான் அப்போது சித்திராங்கதை தன்கண வனைப் பணிந்து கைகட்டி வாய்பொத்தி நின்றிருந்தனள் பப்பிர வாகனும் வந்துத் தந்தையைவணங்கிநின்றான் அர்ச்சுனன் தன்னை வணங்கின புதல்வனைக் காலாலெட்டி யுதைத்துத்தள்ளி அடா

துஷ்டா நீயுமொரு வில் பிடித்த சேவகனே மீசையுடைய ஆண் பிள்ளையோ கையிலாகாதவனென்றும் பேடியென்றும் உன்னை சொல்லத்தகும் நீ வீரனாக விருப்பையேயாகில் விரோதியாகிய என் னைப் பணிவையே இதனுன்னைப் பேடியென்றும் மூடனென்றும் திடமாகச்சொல்லலாம் இப்பவுஞ் சரிதான் நீ வீரனாகில் என்னு டன் யெதிர்த்து யுத்தஞ்செய்வதற்கு வருவாயென்றுத் தன்னு டைய காண்டீபத்தை யெடுத்து நிறுத்தி நாணிபூட்டி குணத்தொ னிசெய்து ஆக்கிரவியாக்கிரம நிக்குரோதனுகிப் பல்லை நறநறவெ ன்று கடித்து மீசை படபடென்று துடிக்க வெகுண்டு நிற்கும் தன் தந்தையைக் கண்டு பப்பிரவாகன் ஓ! ஐயா! தங்களுக்கு விரோதி யாகித் தீங்குவினைத்த இக்கொடியோனுகிய படியேனை நின் பாண ங்களைவிடுத்துக் கொன்றுல் மெத்த நலமாக விருக்கும் பிதாதுரோ கியென்று பெயர்பெற்ற யானினை யிருடன் இவ்வுலகத்திலிருந் தென்ன, இறந்தென்ன இப்படிப்பட்ட துஷ்டகொடியனுகியும், தாய்தந்தைகளுக்கும் ஆகாதமாபாவியாகியும், உலகிலுள்ள சகல ரும் தாய் தந்தைகள் சொல்லைக் கேளாத தரதலையாயினுனென்றப் பழிச்சொல் எனக்கு வந்து சேர்ந்திருக்கிறது. ஆகையால், தங்கள் கரங்களாலேயே யான் மடிவேனேயாகில் எனக்கு மெத்தச் சுக மாகு மென்றுசொல்லி வணங்கியபடி நின்றுன், அதுகண்டு பீம சேன மகாராசனும் கிருஷ்ணமூர்த்தியும், அர்ச்சுனனை நோக்கி ஓ அர்ச்சுன இதுவென்ன பெற்ற பிள்ளையுடன் வைராக்கியம் பேசு மவர்களுமுண்டோ. உலகத்தில் பிள்ளையானவன் எதேதோ தெரி யாமையால் தந்தைக்கு குற்றவாளியாகி யிருந்தபோதிலும் தந்தை யானவன் அதை மனதில வையாமல் புதல்வனை நயபயத்தினுல் சிர ட்டி மற்று மொருகால் அப்படிப்பட்டக் கெட்டகாரியத்தைச் செய்யாதிருக்கும்படி பயமுறுத்தி ஆதரிப்பது உலகவழக்கமாகி யிருக்க, அதை விடுத்துப் புதல்வனை யெதிரியாகப் பாவித்து அவ னைக் கடிந்துபேசுவது நீதியோவென்றும் அன்றியும், நின் கெட்ட காலத்தின் கொடுமையும் கெங்கதேவியின் சாபமும், கற்புடைய மாதாகிய நின்மனைவி சித்திராங்கதையைப் பழித்த தோஷமும் ஒன்றுச் சேர்ந்து நினக்கு விபத்து நேரிட்டதேயல்லாமல் இச்சிறு வனுலாகுமோ உன்னைக்கொல்லுவதற்கு மேலும் யின்னெரு திரு டாந்திரம் சொல்லுகின்றேன் கேளும் அதென்ன வெனில் பாரத யுத்தத்தினில் வீராதி வீரர்களாகிய பீஷ்ம, துரோண, கர்ண, சல்லியன், மூதலானேருடன் யுத்தஞ்செய்து வெற்றியடைந்த நின் வீரத்திற்கு எவ னெம்மாத்திரம இவனே உன்னை வெற்றி பெரும்படியான சுத்தவீரன் இனி யிவன்மீதனக்குற்ற கோபத் தை விடுத்து இவனை யாதரிப்பதுடன் நின்மனைவியையும் களிப்ப டையும்படியாக நய வசனங்களைப் பேசி விருப்பமடையும்படி செய்யுமையா வென்று சொல்லித் தந்தையும், பிள்ளையும் ஒரு

மிக்கச்செய்து சித்திராங்கதை பப்பிரவாகன் வேண்டுகோளிலே யாவரும் மணலூர் பட்டணத்தை யடைந்து பப்பிரவாகன் சித்திராங்கதை இருவர்களாலும் இவர்கள் யாவரும் உபசரிக்கப்பட்டு இரண்டு மூன்றுநாளிருந்துபின்பு ஸ்ரீகிருஷ்ணமூர்த்தி, பீமசேனன், குந்திதேவி, இம்மூவரும் அர்ச்சுன னிடத்தில் விடை பெற்றுக் கொண்டு அஸ்தினபுரஞ் சேர்ந்து அர்ச்சுனனுக்கு நேரிட்ட விபத்தின் வரலாற்றையும், உடனே சித்திராங்கதையினால் அர்ச்சுனன் உயிர்பெற் றெழுந்த விபரத்தையும் தாங்கள் மூன்றுகாலிங்கிருந்து அவர்களை யொருமிக்கச் செய்து வந்த செய்தியையும் ஒன்றேஒளி யாமல் யாவற்றையுஞ் சவிஸ்தாரமாகச் சொல்லி இங்கிருக்கும் யாவற்றிராஜருடைய மனக் கலத்தையும் போக்கி சந்தோஷ மடையச் செய்து சிலகாலிருந்து ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானர், தருமநந்தனர், குந்திதேவி, மூதலானோரிடத்திலும் விடை பெற்றுக்கொண்டு தன் சொஸ்தானமான துவாரகையைச் சேர்ந்தார்.

இவ்மண்ணமாக ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியானவர், அர்ச்சுனனை, உயிர்பெற் றெழும்பும்படி சித்திராங்கதையைக் கொண்டு செய்வித்து, அஸ்தினபுரத்தை யடைந்து இச் செய்தியை தருமநந்தனர் முதலானோருக்கும் தெரியப் படுத்தி துவாரகையைச் சேர்ந்தபின்பு அர்ச்சுனன், தன் புதல்வன் பப்பிரவாகனையும், மனைவி சித்திராங்கதையையும் சந்தோஷிக்கச் செய்து சிலகாலிருந்து அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு அசுவமேதக் குதிரையை விடுத்து ரதகஜதுரகபதாதிகள் சூழப் பின்னே சென்று, பற்பல பட்டணங்களையடித்து அப் பட்டணங்களை யாரும் அரசர்களில் எதிர்த்து யுத்தஞ் செய்ய வந்தவர்களுடன் போர் புரிந்தும் ஜெயம் பெற்றும் காணிக்கைகப்பணங்களைத் தந்து வணங்கின, அரசர்களை ஆதரித்தும் குதிரையுடன் சகல தேசங்களையுஞ் சுற்றி வெற்றிபெற்று அவரவர்கள் தந்தகாணிக்கைகப்பங்களுடன் திரும்பி அஸ்தினபுரத்தைச் சேர்ந்து தருமநந்தனரையும், பீமசேனரையுங் கண்டு வணங்கி, ஆசி பெற்று வணங்கின யாவருக்கும் ஆசிகூறி, சகல சொத்துக்களையும் பொக்கிஷத்தினில் சேர்த்து அந்தப்புரத்தைக் படைந்து குந்திதேவியைப்பணிந்து ஆசிபெற்றுத் தன்னை வணங்கின திரௌபதை சுபத்திரை, உலூபி, மூதலானோரையும் ஆதரித்து ஆசிகூறிய பின்பு ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தியை வரவழைத்து அவரைக் கொண்டு சகல ரிஷிகூட்டங்களையும், வரவழைத்து யாகத்தைப் பூர்த்திபண்ணி யாவருக்கும் சன்மானங்களைச் செய்து அவரவர்கட்கு விடைதந்து அனுப்பி சில வருடங்கள் அஸ்தினபுரத்தை யாண்டுகொண்டிருந்து பரிக்ஷித்துமகாராஜனுக்கு அஸ்தினபுரத்தைப் பட்டங்கட்டி பின்பு பாண்டவர்கள் சொர்க்க லோகத்தை நாடிப் போகிறபோது சித்திராங்கதையும் தன் கணவனாகிய அர்ச்சுனன் பிரிவை சகிக்காதல

ಳಾಗಿಬಲವಾಗಿ ಸಿಂಹಿತ್ತು ಅಳುತುಲಂಬಿ ಭೂಮಿಯಿಲ್ಲಿ ಬಿಳುಂತು ಮೂರ್ಚೆಯ
ಪಡೆದಳು ಅಂತಃಕರಣ ದಾಸಿಕಳೋಡಿಬಂದು ಬಲಸೆಹಿತಿಯೋಪ
ಚಾರಗಳ್ಳಿಸಿದಂ ಎಳುತ್ತಿರಾಮ ಬಿರುಪ್ಪಿಯನ್ನು ಗುರ್ತಿಸಿ ರಾಣಿಯನ್ನು
ಪಿಡಿತ್ತುಮೂಕ್ಕಿಲ್ ವಿರಲ್ಲಿನೆವೆತ್ತುಂ ಪಾರ್ಕ್ಕೆಯಿಲ್ ಯಾತೊರುಕುರಿ
ಯುಂ ಇಲ್ಲಾಮೆಯಾಲ್ ಇಱಂತಾಳೆಂಬೆ ಯಱಿತ್ತು ಪಪ್ಪಿರವಾಕನಿಕ್
ಕೊಂಡು ಸಕಲ ಕರ್ಮಂಗಳಿನ್ನು ನಿಱವೇಱ್ಱಿ ಪರಿಕ್ಷಿತ್ತು ಮಹಾರಾಜನ್
ಪಪ್ಪಿರವಾಕನಿತ್ತೆ ತೇಱ್ಱಿ ಮಣಲೂರ್ ಪಟ್ಟಣತ್ತುಕ್ ಕನುಪ್ಪಿತ್ತಾನುಂ
ವೆಕು ನೀತಿಯಾಯ್ ಅಂತಿನಿಪುರತ್ತೆ ಯಾಂಡಿರುಂತಾನ್. ಸಿತ್ತಿರಾಂ
ಗದೆಯಿನ್ ಉಯಿರಾನದು ಪಾಂಡವರ್ಕಳುಕ್ಕು ಮುನ್ನಂ ಸೊರ್ಕ್ಕ ಲೋ
ಕತ್ತೆ ಪಡೆಂತು ತಾನ್ ಸೆಯ್ತ ಪತಿವ್ರತತ್ತುಕ್ಕು ತಕ್ಕ ಪಲಿನೆಯನು
ಪಪ್ಪಿತ್ತಿರುಂತು ಪುನರ್ಜನ್ಮಮಿನ್ಱಿ ಪರಮಪತ ಸಾಂಪ್ರಾಚ್ಸಿ ಯತ್ತೆ
ಪಡೆಂತನಳ್.

ಸಿತ್ತಿರಾಂಗದೆ ಕತ್ಪಿನ್ ಮಹತ್ತುವಂ ಮುಱ್ಱಿಱ್ಱು.

ಶ್ರೀರಾಮಜೆಯಂ.

ಸಿತ್ತಿರರೇಕೈ ಕತ್ಪಿನ್ ಮಹತ್ತುವಂ.

ನಿಡತದೇಸತ್ತೈ ಯಾಂಡುಕೊಂಡ್ ಟಿರುಂತ ಕತ್ಕುಣ ವೀರಿಯನೆನ್
ನುಂ ಅರಸನುಕ್ಕುಪ್ ಪುಷ್ಪರೇಕೈಯೆಂಱೋರ್ ಮಿನೆವಿಯುಂಡು. ಅವಳ್
ತನ್ ಕಣವನಿನೆಯೆ ತೆಯ್ವಮೆಂಱುಂ ಅವರುಕ್ಕುಚ್ಚಕಲ ಉಪಚಾರಂಕ್ಕಳುಂ
ಕುಱೆವಿನ್ಱಿ ನಡತ್ತಿಕ್ ಕೊಂಡು ಅವರ್ಮನಂಕುಳಿಕ್ಕ ನಡಂತು ವಂತ
ನಳ್. ಅವ್ವರಸನುಂ ಅಮ್ಮಾತ ಸೆಯ್ಯುಂ ಪಣಿವಿಡೈಕ್ಕು ಮಗಿೞ್ತು
ಅವಳುಡನ್ ಕೂಡಿಕ್ಕುಲಾವಿಮರುವಿ ಯಿರುಕ್ಕಿಱಪೋತು ಅವರ್ಕಳುಕ್ಕೋರ್
ಪೆಂಕುಮುಂನ್ನು ಪಿಱಂತತು ಸಿತ್ತಿರರೇಕೈ ಯೆಂಱು ಪೆಯರಿಟ್ಟನರ್,
ಪುಷ್ಪರೇಕೈ ತನ್ ಪುತಲ್ವಿಯಾಗಿ ಸಿತ್ತಿರರೇಕೈಯೆ ನಾಳುಕ್ಕುನಾಳ್
ಸೆಲ್ವಮಾಕ್ ವಳರ್ತ್ತುವರ ಅಂತ ಸಿತ್ತಿರರೇಕೈಯುಂ ವಳರ್ಪಿಱೈಚ್ ಚಂ
ತಿರಂಪ್ಪೋಲವಳರ್ಂತು ಪೆತುಂಪ್ಪೆಪ್ಪರುವ ಮಡೈಂತು ಸಿಲವಕುಡಂ
ಕಳುಕ್ಕುಳ್ ಮಂಕೈಪ್ಪರುವಮಡೈಂತು ತಾತಿಕಳ್ ಪುಡೈಸೂೞಕ್ ಕುನ್ನಿಯಾ
ಮಡತ್ತಿಲ್ ವಸಿತ್ತುಕ್ ಕೊಂಡ್ ಟಿರುಂತಾಳ್. ಇಪ್ಪಡಿಕ್ಕಿರುಕ್ಕಿಱಪೋತು
ಕುಂತಲ ದೇಸತ್ತೈ ಪಾಳಪ್ಪಟ್ಟ ಪ್ರಪಾಕರ ಮಹಾರಾಜನ್ ತನ್ ಪುತಲವ
ನುಡಿಯ ಪವುಷ್ಯಂತನುಕ್ಕುರಿಯವಯತು ವಂತತೈಯುಣರ್ಂತು ಅವನುಕ್ಕು
ವಿವಾಕಞ್ಚೆಯ್ವಿಕ್ಕ ವೆಂಣ್ಣಿ ಅವನುರುವತ್ತೈ ಯೆೞಿಯ ಪಡತ್ತೈ
ಮಂತ್ರಿಕಳ್ವಸಮಳಿತ್ತ ಇವನುಡೈಯ ವೞಕುಕ್ಕುಂ ಕುಣತ್ತಿರ್ಕುಂ ತಕು
ಂತರಾಜಕನ್ನಿಕೈಯಿನ್ ಉರುವಮೈತ್ತ ಪಡತ್ತೈಪ್ ಪೆಱ್ಱುಕ್ ಕೊಂಡು
ವರಕ್ ಕಡವೀರ್ಕಳೆಂಱು ಕಟ್ಟಳೆಯಿಟ್ಟನುಪ್ಪ ಮಂತ್ರಿಕಳುಂ ಅರಸನ್
ಸೊಲ್ಪಡಿಯೆ ಸೆಂಱು ಒವ್ವೊರು ದೇಸತ್ತೈಯುಂ ಅಡುತ್ತು ಅಂತಂತ
ರಾಜಾಕ್ಕಳಾಲ್ ಉಪಸರಿಕ್ಕಪ್ಪಟ್ಟು ಅವರವರ್ಕಳ್ ಕನ್ನಿಕೈಯೆಪ್ ಪಾರ್

தும் சம்மதிப்படாமல் நிடததேசத்திற்குச் சென்று அந்நகரத்தை யாளும் நற்குண வீரியனைக்கண்டு அவனால் உபசரிக்கப்பெற்று மந் திரிகள் தங்கள் இளவரசாகிய பவுஷியந்த மகாராஜன் படத்தையவ் வரசனுக்குக் காட்டி தாம்வந்த காரணத்தைச்சொல்லினர். அவ் வரசனும் தன் புதல்வியின் படத்தை வரவழைத்து மந்திரிகளிட மளிக்க, அவர்களும் அப்படத்தை இராஜகுமான் படத்துடன் சேர் த்து ஒத்திட்டுப்பார்க்கிறபோது இராஜகுமாரத்தி அதிக வடிவழ கமைந்திருப்பதை யுணர்ந்து மெத்தசந்தோஷித்து அவ்வரசனை நோக்கி, ஓ! நரபதியே! எங்கள் அரசருக்கு இக்கன்னிகைத் தகுந்த வனென்று எங்கள் மனதுக்குச் சம்மதியாக விருக்கின்றது, ஆக லால் யாதொரு தடையுஞ் சொல்லாமல் விவாகஞ் செய்விப்பதற் குத் தக்க முகூர்த்த நாள் குறித்துக் கொடுத்து எங்களை சிக்கிரம் அனுப்புமையாவெனக் கேட்டனர். இராஜகுமாரனுடைய படத் தை அரசன் எடுத்துக்கொண்டு அந்தப்புரஞ் சேர்ந்து மனைவியை அழைத்து, ஓ!பெண்ணரசே இப்படத்தில் வரைந்திருக்கும் இராஜ குமாரனுக்கு நமது புதல்வி சித்திரரேகையைக் கொடுத்து, மண ஞ்செய்விக்கும்படி நிடததேசத்தரசன் மந்திரிகள் வந்து கேட்கின் றனர். ஆகலால், உன்னுடைய இஷ்டமும் நமது புதல்வியின் இஷ் டமு மெப்படியோ அதை சிக்கிரம் யோசித்துச் சொல்லக்கடவா யென்று கட்டளை யிட்டுப் படத்தையுங் கொடுத்தான். அப்படத் தைப் புஷ்பரேகை பெற்றுக்கொண்டு கன்னியாமாடத்திற்குட் சென்று தன்புதல்வியைப்பார்த்து பின்னே கலிதீர்க்கவந்த பேரின்ப வாழ்வே! இதோ யிந்தபடத்திலிருக்கும் இராஜகுமாரனைப்பார், இப்புருஷனை விவாகஞ்செய்து கொள்ளுவதற்கு உனக்குச் சம்மதி தானு னென்றுக யோசித்துச் சொல்லு மென்று படத்தைக் கொடுத் தாள் அப்படத்தை சித்திரரேகை பெற்று இராஜ குமாரனது வடி வழைக்கைக்கண்டு மெத்த சந்தோஷங்கொண்டு யானென்ன புண் ணியஞ் செய்தேனோ, பண்டு இவ்விராஜ குமாரனுக்குச் செய்யும் படியாகத் தொண்டு, எனவிண்டு, அன்னையை நோக்கி, என்னை யீன் றெடுத்த அன்னையே! (அன்னையும் பிதாவுமுன்னறி தெய்வம்,) என்ற ஔவையார் வாக்கியத்திற் கிணங்க, தாய் தந்தையர்களாகிய நீங்களே முதன்மையான தெய்வங்களாகி யிருக்க, உங்கள் கருத் திற்கிணங்கி, வணங்கி, நடக்கவேண்டியவளாகி யானிருக்க மறுத்து யென்னிஷ்டப்படி நடப்பது நீதியோ! உங்களிருவர்களுக்கும் சம் மதியானால் எனக்கும் சம்மதியே யென்று கூறினள். அதைக்கேட்டு அந்தப் புஷ்பரேகை மகளை யெடுத்துத்தழுவி இனியில்லாத சந் தோஷமடைந்து படத்தை எடுத்துக்கொண்டு தன் கணவரிடம் வந்து மகள் சொல்லிய விபரத்தைத் தெரியச் சொன்னாள். அர சனும் அம்மொழிகளைக் கேட்டு ஆனந்தப் பட்டு சபைக்கு வந்து மந்திரிகளைப்பார்த்து மந்திரிகளே! என்புதல்வியின் ரூபத்தைவிட

ந்திருக்கும் இப்படத்தை எடுத்துச்சென்று உங்களரசனுக்கும் ராஜ குமாரனுக்குங்காட்டி அவர்கள் சம்மதியைத் தெரிந்துவருவீர் களேயாகில் உங்களுக்கு முகூர்த்தம் வைத்து மணஓலை எழுதிக்கொ டுப்பேனென்று மொழிந்தான். அதைக் கேட்டு, மந்திரிகள் விடை பெற்று இராஜகுமாரத்தியின் படைத்தையுமெடுத்துக்கொண்டு தங் கள் நாட்டைச் சேர்ந்து அரசனை யடுத்து இராஜகுமாரத்தி பட த்தை கொடுத்து, அங்குநடந்த சமஸ்தாரத்தை மொழிந்தனர். அரசன் கேட்டு, அப்படத்தைப் பார்த்து மெத்த சந்தோஷித்துத் தன் புதல்வனிடத்திற்கு அப்படத்தைத் தூதர்கள வசம் அனுப்பி னன். அப்படத்தை இராஜ குமாரன் பெற்றுக்கொண்டு அதில் வரைந்திருக்கும் இராஜ குமாரத்தியின் அழகைக் கண்டு இவளெ ன்ன ரம்பையோ! ஊர்வசியோ! திலோத்தமையோ! மேனகை யோ! வனதேவதையோ! சித்திரத்தில் யெழுதியதே இவ்வளவு அழகாயும் கண்டவர்கள் மோகிக்கும் படியான ரூபத்துடன் விளங் கும் இம்மாதுசிரோமணி! உயிருடன் உண்மையான ரூபத்துடன் வரக்கண்டால்மோகங்கொள்ளாமல் ஒருவரு மிருக்க மாட்டார்கள். ஆதலால் இப்படிப்பட்ட இந்த மங்கையை நாம் விவாகஞ் செய்துக் கொண்டு சுகத்தை யனுபவிக்கவேண்டியதன்றே! புருஷனுக்கின் பமென்று இராஜ குமாரன் யோசித்துத் தூதர்களை நோக்கி, அடா! தூதர்களே! இப்படத்திலிருக்குங்கன்னிகையையே எனக்கு மணம் புரிவித்தால் செய்துக் கொள்வேனேயன்றி, வெறெந்த கன்னிகை யையும் மணம் செய்துக்கொள்ள மன மிசையாதவனுக விருக்கிறே னென்று என் தந்தையிடஞ் சொல்லுங்களென்று படத்தையுங் கொடுத்தனுப்பினன் தூதர்களும் அரசனைக் கண்டு வணங்கிப் படத் தைக் கொடுத்து இராஜ குமாரன் கூறிய வற்றை நவின்றார்கள். உடனே அரசன் மந்திரிகளை நோக்கி, ஓ! அமைச்சர்களே! இப்படத் திலிருக்கும் இராஜ கன்னிகையை என் புதல்வனுக்கு மணஞ் செய் விக்க எனக்கும் சம்மதியே, என் புதல்வனும் இவளையே மணம் புரிய வேணுமென்று சம்மதிப் பட்டு விட்டான் ஆதலால் நீங்கள் திரும்பவும் நிடததேசத்திற்கேகி அவ்வரசனுக்குச் செய்தியை யோதி எவ்விதத்திலேயேயும் அவ்வரசனை இசையச் செய்து முகூர்த் தங் குறித்து மண ஓலை யெழுதித் தரும்படி பெற்றுக் கொண்டுவர க்கடவீர்களென்று கட்டளை யிட்டான். அத்தப்படியே மந்திரிகளும் சதுரங்கபலங்களுடனேகி நிடதபுரத்தைச்சேர்ந்து அரசனைக்கண்டு வணங்கி எங்களரசனும் சம்மதித்தார். இளவரசனும் சம்மதி யென் றனர். ஆகையால், இனி வீண் காலம் போக்காமல் சீக்கிரம் முகூ ர்த்த நாள் குறித்து மணஓலை யெழுதித்தாருமென்று வேண்டிக் கொள்ள அதற்கந்த நற்குணவீரிய மகாராஜனும் மெத்த சந்துஷ்டி யடைந்து உடனே புரோகிதர்களையும் ஜோசியர்களையும் வரவழைத் துப் பொருத்த நிமித்தங்கள் யாவும் பரிசோதித்துப் பொருந்தி

யிருப்பதைப் புரோகிதர் அரசனுக்குத் தெரியப்படுத்தி முகூர்த்த நாள் குறித்து மணஓலை யெழுதி அதற்கு மஞ்சள் குங்கும முதலானதுகளைப் பூசித்தனுப்பினார்கள், அதை யரசன் மந்திரிகள் வசபாளிக்க அவர்களதையும் விடையும் அரசனிடம் பெற்றுக்கொண்டு விரைவாகத் தங்கள் நாட்டை யடைந்து அரசனைக் கண்டு வணங்கி, மண ஓலையைக் கொடுக்க அதைப் பெற்றுக்கொண்டு அரசன் மனமகிழ்ந்து மந்திரிகளை நோக்கி ஓ! மதியிற்றெளிந்த மந்திரிகளே! சகல தேசங்களுக்கும் மண ஓலைகளெழுதி தூதர்கள் வசம் அனுப்பவேண்டிய சாமக்கிரியைகளை யெல்லாம் தயார்செய்து நமதுபட்டணத்தை அலங்கிருதஞ்செய்து எனக்குத் தெரியப்படுத்துங்க ளென்று கட்டளை யிட்டான் அவர்களும் அந்தப்படியே மணஓலைகள் எழுதி சகல தேசத்தரசர்களுக்கும் கொடுக்கும்படி தூதர்கள்வசம் அனுப்பி வேண்டிய சாமக்கிரியைகளை யெல்லாம் தயார்செய்து வைத்து கல்யாண மண்டபம் அமைத்துப் பட்டணத்தை மாவிலை-வாழை-கமுகு-முதலாகியதாலும் - கலசவச்சாந்துகளாலும், பூர்ணகும்பங்கள் முதலானதுகளாலும், அலங்கிருதஞ் செய்து அரசனிடம் வந்து பணித்து, ஓ! ஸ்வாமி! சகலமும் சர்வசித்தஞ் செய்துவைத்தோ மென்று மொழிந்தார்கள்.

இந்தப்படியாக, சகலமுந் தயார் செய்து வைத்தோ மென்று சொல்லிய மந்திரிகள் மொழியைக் கேட்டு அரசன் சந்தோஷமடைந்திருக்கிறபோது, நிடத தேசத்தரசன் தன் புதல்வியுடன் ரதகஜதுரகபதாதிகள் சூழப்பட்டு குந்தள தேசத்தைச் சேரவருகிறபோது, பிரபாகர மகாராஜன் தன்னுடைய சேனைகளுடன் மங்கள வாத்தியங்கள் கோஷிக்க யெதிர்ச் சென்றழைத்து வந்து விடுதியிலமைத்து உபசரித்து மகிழ்வடைந் திருக்கையில் தேசதேசத்தரசர்கள் யாவரும் தங்கள் தங்கள் சேனைகளுடன் புறப்பட்டுவந்து சேர்ந்தார்கள். அரசர் அவர்களுக் கெல்லாம் விடுதிகள் விடுத்து வேண்டிய வஸ்துக்களை யெல்லாம் மந்திரிகளால் தருவித்துக்கொடுத்து யாவரும் தன்னைப் புகழும்படி யன்றைய தினம் போக்கி மறுநாள் காலையி லெழுந்து நித்தியக் கடனை முடித்துக் கொண்டுவந்து புரோகிதர் பிராமணர்கள் சூழ மங்கலவாத்தியங்கள் முழங்க கல்யாண மண்டபஞ் சேர்ந்து இருவருக்கும் கலங்கிட்டு திவ்ய தீர்த்தங்களைக்கொண்டு இருவருக்கும் ஸ்னானஞ் செய்வித்துவிலையுயர்ந்த பட்டுப் பட்டாடைகளாலும், நவரத்தின ஆபரணங்களாலும், அலங்கிருதஞ் செய்து மணமுள்ள மலர்மாலைகளைச் சூட்டி மங்கள வாத்தியங்கள் முழங்க உத்தம ஸ்திரீகள் ரத்தினதீப மேந்திவர, சில பேர்கள் பாலிகை யேந்திவரக் கல்யாண மண்டபஞ்சேர்ந்து தம்பதிகளிருவரையும் மண்வரையிற் பொருந்த வைத்து சடங்குக ளனைத்தையும் நடத்தி புஷ்பாக்ஷதைகளாலும் பெரியோர்கள் அர்ச்சித்

திருக்கும் மாங்கிலிய சூத்திரத்தை அங்கு வந்திருக்கும் பிராமணர் களாலும், பந்துக்களாலும், சபையோர்களாலும், ஆசீர்வதிக்கச் செய்து அம்மாங்கிலிய சூத்திரத்தை பவுஷியந்த மகாராஜனிட மளித்துச் சித்திரரேகையின் கண்டத்தினில் சூடும்படிச் செய்து யாவருங்களிக்க முத்தாலாத்திப் பவழாலாத்திச் சுற்றி எரித்து சகல தான தருமங்களையும் அபாரமாகச்செய்து பந்துமித்திர அரசர்க்ளுடன் புசித்துச் சந்தன புஷ்ப தாம்பூலாதிகளைத் தரித்து வெகு ஆடம்பரமாக கல்யாணத்தை முடித்து தம்பதிகளைப் பள்ளியறையிற் சேர்த்து அரசர்களை உபசரித்து விடை கொடுத் தனுப்பி சம்மந்தியைச் சிலநாள் தன்னிடம் நிறுத்திக்கொண்டிருக்க, ஒருநாள் சம்மந்தியான அரசன் தன் புதல்வியை அழைத்து நல்ல புத்திமதிகளைச் சொல்லி புதல்வியினிடத்திலும் அரசனிடத்திலும் விடை பெற்றுக் கொண்டு தன் பட்டணம் போய் சேர்ந்தான். இங்கே சித்திரரேகை, தன் கணவனுகிய பவுஷியந்த மகாராஜனை வணங்கி இணங்கி அவருக்குச் செய்யுந் தொண்டுகள் தனக்கு புத்திமார்க்க மென்றும், அவரை யாராதிப்பதே தனக்கு நியபெருந்தனமென்றும், அவரை மகிழச்செய்வதே பேரின்பவாழ்வென்றும், அவரைதியானித்துக்கொண் டிருப்பதே, பவக்கடலைத் தாண்டும் உபாயமென்றும், அவர் மனதின்படி கல்வி செய்வதே சொர்க்காதிபோகமென்றும், அவருடையநாமமே தாரக மந்திரமென்றும், அவர் நாமத்தியானமே பவக்கடலைத் தாண்டு விக்கும் யந்திரமென்றும், அவர் நாமசாரமே மோட்ச மடையும் தந்திரமென்றும் அவருக் காகவேண்டிய காரியங்கள் யாவற்றிலும் விடாமுயற்சியிலிருக்கவேண்டியதே நமது கடமையாகும் நிரந்தரம் என்றும் நினைத்துக் கனவிலும் தன் கணவனுக்குத் தொண்டு செய்வதில் மரவாமலிருந்தனள். இதைக்கண்டு பவுஷியந்த மகாராஜன் வெகு சந்தோஷங் கொண்டு தன் மனைவியைப் பலவாறு-புகழ்ந்து-மகிழ்ந்து அவளைக் கூடிக் கலந்தினைந்து-ரதியும் மதனைப்போல இனிதுவாழ்ந்து வருகையில் சொர்க்கலோக வாசிகளாகிய அஷ்ட வசுக்களில் முதன்மையானவர் ஆதிசேஷனைக் காணவேண்டி நாகலோகத்திற்குச் சென்று ஆதிசேஷனைக் கண்டு பேசித் திருப்பி வருகிற தருணத்தில் அந்த ஆதிசேஷன் அம்முதல் வசுவுக்குக் காணிக்கையாகத் தனது சிரோரத்தினங்களில் சிலது கொடுத்தான் அவைகளைப் பெற்றுக்கொண்டு அந்த முதல் வசுவானவர் சொர்க்கத்தை நாடிப் போகிறபோது கிடததேசத்திலிருக்கும் இளவரசாகிய பவுஷியந்த மகாராஜனுடைய நல்லொழுக்கங்களைக் கேள்விப்பட்டு இளவரசனைக் காணவந்தார். அப்போது பவுஷியந்தனும் சித்திரரேகையும் சிங்காரவனத்திலிருக்க அந்த யிடத்திற்குப்போயினர். அவர் வரவைக் கண்ட தம்பதிகளிருவரும் விரைந்தோடிச் சென்று அழைத்து வந்து அர்க்கிய பாத்தியாதிகளால் பூசித்துத் தக்க ஆசனத்தின்

மீது வீற்றிருக்கச்செய்து வலம் புரிந்து தீர்த்தமாக விழுந்து தெண்டனிட்டு எழுந்து நின்று சிரசின்மீது கைகுவித்துக் கொண்டு ஓ! ஸ்வாமி! தேவரீர்! பாதமலர்கள் பட்டு இன்னகரம் புனிதமாயிற்று தெரிசனத்தினுலே நாங்கள் பவுத்திரமடைந்தோம், இவ்வேழைகளின்மீது கிருபைகூர்ந்துத் தாங்க ளெழுந்தருளிய காரணம் யாதோ அதைத் திருவாய்மலர்ந்தருள வேணுமென்று பலவாறு துதிசெய்தனர்.

இப்படியாகப் பூசித்துத் தன்னை வணங்கித் துதிசெய்துக்கொண்டு நிற்கும் தம்பதிகளிருவருக்கும் ஆசிகூறி, அந்த வசுத்தலேவர் சித்திரரேகையை நோக்கி ஓ! அம்மணி நின்முக சுந்திரத்தை நோக்கினுல் இலக்குமியைப்போன்ற அழகும், நின்னகமும், புறமும் ஒரே பெண்ணமாகியும் கணவனை தெய்வமென்று கருதியிருக்கும் நின் கற்பின்நிலைமையும், சாந்த சமதமாதி குணத்தின் அருமையும் பெரியோர்களைக் கண்டு பூசிக்கும் நின் பெருமையும் புகழ்ந்துகொண்டாடுவதற்கு ஆதிசேஷனுலு மாகுமோ! ஓ! கற்புக்களஞ்சியமே! விற்பன விவேகமே! நினது பெருமையையும் பொறுமையையும், நா னெவ்வாறு புகழ்ந்து கொண்டாடுவேன். இப்படிப்பட்ட அருமையாகிய மங்கையை நா னெங்கும் கண்டதில்லை. உன்னுடைய உத்தம லக்ஷண குணங்களைக்கண்ட என்னைப்போலொத்தவனுக்கே இத்தனை பிரிய மூண்டா யிருக்கின்ற தன்னியிலும் எனக்குப் பசி தாப மூண்டாகவில்லை, நின்னையே பார்த்துக் கொண்டும் வசனித்துக் கொண்டு மிருக்கில் எனக்கு அதிதாகிய பதவியும் எளிதில் கிடைக்கு மென்று நம்புகிறேன். மஹாலட்சுமியையும் அருந்திய யும்போல கற்பினளாகும் நின்னை துஷ்டராத்துமாக்கள் யாரேனுக் கண்டால் கெட்ட எண்ணங் கொள்வது மன்றி நினக்கு அபாயம் நேரிடச் செய்வார்கள். அவ்வகைப்பட்ட வருத்த மூனக்கு நேரிடாதிருக்கும்படி இதோ இந்த ரத்தினத்தைக் கொடுக்கின்றேன். இதைக் கம்மலில் பொருந்தச்செய்து அக்கம்மலை செவியினி லணிந்துக்கொண் டிருப்பையே யாகில் நல்லொழுக்கமுடைய மகத்துக்களுக்கும் நின் புருடனுக்கும் காணப்படுவையே யன்றி துராத்துமாக்களுக்கும் அசுசியா யிருப்பவருக்கும் நினது ரூபந் தெரிவதரிதாகும். அதனலேயுன் கற்புக்கழிவுநேரிடாது இப்போதிருக்கும் பக்திக்காகிலுக் எண்மடங் கதிகமான பக்தி நின் புருடனுக்குச் செய்து திருப்தியடைந்திருக்கக் கடவாயென்று வாழ்த்தி, அந்த ரத்தினங்களைக் கொடுத்து விடைபெற்றுச் சென்றனர் உடனே சித்திரரேகை அவ்விரத்தினங்களைத் தன் மணுளனிட மளித்தனள் அவ்விரத்தினங்களை அந்த பவுஷியந்த மகாராஜன் கைக்கொண்டு தன் மனைவியை யழைத்துக் கொண்டு அந்தப்புரஞ் சேர்ந்து சித்திரரேகையினுல் ஸ்நானமுதலானவைகளுஞ் செய்விக்கப்பட்டு பூசைவீட்

டிற் சென்று பகவானுக்குத் திருமஞ்சனஞ் செய்து ஆடையாபரணங்களாலும், மலர்மாலைகளாலும் அலங்கிருதஞ் செய்து தூபதீபநைவேத்தியஞ் சமர்ப்பித்துப் பலவாறு துதித்து வலம்புரிந்து தீர்க்கமாகதண்டனிட்டுப் பூசை வீட்டை விட்டு வெளிப்பட்டவுடன் சித்திரரேகைத் தங்கக் கிண்ணியில் அன்னமும் அறுசுவையுடன் கூடின கரியமுதும் பலகாரவகைகளுட னெடுத்து வந்து தன் கணவனுக்கு எந்த வஸ்துவினிடத்தில் பிரியமோ, அந்த வஸ்துக்களை அதிக பக்ஷத்துடன் பிள்ளைக்குத் தாய் ஊட்டுவதைப்போல ஊட்டி பலகார திணுசுகளைத் தின்னும்படி வாயில் வைத்துத் திருப்தியாயிற்று போதும் போதுமென்று சொல்லும் வரைக்கும் யிந்து ஜலங் கொண்டு வாயைக் கொப்பளித் தமிழச் செய்துத் தன் முந்தானையால் வாயைத் துடைத்து வாசனைத்திரவியங்களைச் சேர்ந்த அடைக்காயும் வெற்றிலைச் சுண்ணமுடன் கூட்டிக்கொடுத்துச் சிறிதுநேரம் மயில் விசிரியைக்கொண்டு விசிரி ஆயாசந்தீரப் பஞ்சணையிற் சேர்த்து நித்திரை செய்யும்படி உபசரித்து அவரும் நித்திரை நீங்கி எழுந்த வுடனே ஜலங்கொண்டுவந்து முகங் கால் கரங்களைச் சுத்தஞ் செய்து பலகாரவகையும் பாயசமு மருந்தச் செய்து சந்தன புஷ்ப தாம்பூலாதிகளை யளித்து அவர்மனங் களிக்க மதுரமாகிய மொழிகளைப் பகர்ந்து கொண்டிருக்கையில் அந்த பவுஷ்யந்த மகாராஜன் தன்மனைவியை நோக்கி, அடி சுற்பிக்கரசே! நமது கொலுக்கூடத்தில் மந்திரிப்பிரதானி, தண்டத்தலைவர், அனித்தலைவர், படைத்தலைவர், குடிகள், முதலானோரும் வந்து சேர்ந்து எண்ணுடைய வாவுக் கெதிர் பார்த்துக் கொண்டிருப்பார்கள். நெடுநேரமாய் விட்டது; ஆகையால், நான் கொலுக்கூடத்திற்குச் சிக்கிரம்போகவேணுமென்று பகரக் கேட்டு, சித்திரரேகை மகிழ்ந்து அரிதாகிய பட்டாடைகளையும் ஆர, கிரீட, கேயூர, கடககங்கண முதலான ஆபரணங்களையும் எடுத்துவந்து அவரை நன்றாக அலங்கிருதஞ் செய்து அவருக்கு வலம்புரிந்து, விழுந்து, பணிந்து, வினயமாக நின்றனள். அது கண்டு அரசன் அம்மங்கையை வாழ்த்திப் பலபேர்கள் தன்னைச் சூழ்ந்துவர நடந்து சபையைச் சேர்ந்து சிங்காதனத்தின் மீது வீற்றிருந்தான். சபையிலிருந்த மந்திரிகள் முதலானோரும், அரசனைப் பணிந்து அரசன் அனுமதியைப்பெற்றுத் தங்கள் தங்கள் ஆசனத்தில் வீற்றிருந்து அன்று நடத்தவேண்டியக் காரு பாரு விசாரணைகளைச் செய்து தருமந்தப்பாமல் தாராசு முனையைப்போல தீர்ப்பு கொடுத்து அனுப்பிய பின்பு பவுஷ்யந்த மகாராஜன் மந்திரிகளை நோக்கிச் சொல்லுகின்றான்.

ஓ! மதியிற்சிறந்த மந்திரிகளே! இன்றையதினங் காலையில் ஒரு பெரியவர் நமது சிங்கார வனத்திற்கு வந்தார். அவரைக் கண்டு யானும், பட்டத்தரசியாகிய சித்திரரேகையும் எதிர் கொண்டு சென்

றழைத்து வந்து தக்க ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து அர்க்கிய பாத்தியாதிகளால் பூசித்து வணங்கி நின்றேரும் அப் பெரியவர் எங் களுக்கு ஆசிகூறி, சித்திரரேகையைப் பலவாறு புகழ்ந்து சில ரத் தினங்களைத் தந்து அவற்றைக் கம்மலில்பதித்து, காதினில் அணிந் தக் கொள்ளும்படியும் அதனு லுண்டாகும் பலனையும் சொல்லிப் போயினர் ஆகையால், அந்த ரத்தினங்களைக் கம்மலில் பொருத்த வேண்டியதா யிருப்பதால் குந்தன வேலைக்காரரை சீக்கிரம் வர வழையுங்களென்று கட்டளையிட்டான். அதைக் கேட்ட மந்திரி கள் சந்தோஷங் கொண்டு தூதர்களைக்கொண்டு குந்தன வேலையில் தேர்ச்சி யடைந்த சிலரை யழைத்து வரச்செய்து அரசன் முன் விடு த்தார்கள். அரசன் அவர்களை யழைத்து ரத்தினங்களால் கம்ம லொன்று இழைக்கவேண்டியதாக விருக்கிறபடியால் நம தரண் மனையிலேயே நீங்கள் வந்து இருந்துகொண்டு வேலை செய்து கொ டுக்க வேண்டும் என்று கட்டளையிட்டு மந்திரியை நோக்கி அதற் காகவேண்டிய பொன் முதலியவைகளையும் கொடுத்து கிட்டவிரு ந்து முடிக்கும்படி ஆக்ஞாபித்து ரத்தினங்களையும் மந்திரியிடம் கொடுத்தனர். மந்திரி சில தினங்களுக்குள் குந்தன வேலையான திடமிருந்து கம்மலைப் பெற்று அரசனிடம் கொடுத்தனன். அரச னும் அக்கம்மலைக் கையினி லெடுத்துப்பார்த்து அதின் பிரகாசத் திற்கு மெத்த ஆச்சரியப்பட்டு அந்தப் புரத்தையடைந்து மனை வியை அழைத்து அடி மாதரசே! சில காலத்துக்கு முன்னம் வசுக்கள் தலைவர் உனக்குக் கொடுத்துப் போயின ரத்தினங்களைப், பதித்த கம்மலைப் பார்த்தையா வென்று சொல்லி அக்கம்மலை எந்து அப் பெரியவர் சொல்லியபடி காதினிலணிந்து கொள்வாயென்றனன். அம் மங்கையும் அக்கம்மலை வாங்கிப் பார்த்து ஓ! ஸ்வாமி! இந் தக் கம்மல் மெத்த நன்றாயிருக்கின்றது, இருந்தபோதிலும் இந்த அரித்தியமான வஸ்துக்களின் மீது அடியாளுக் கெள்ளளவும் பிரி யமே கிடையாது. ஆகிலும் தாங்கள் கொடுக்கிற படியால் இதை யான் அணிந்து கொள்ளாமற் போவனேயாகில் அடியாளுக்கு மெத்த தோஷமுண்டாகும் ஆதலால் அணிந்து கொள்ளுகிறேனென் று சொல்லி, அந்த சித்திரரேகையும் கணவன் சொல்லைத் தட்டா மல் உடனே அக்கம்மலை செவியிலணிந்துத் தன் கணவன் தொண்டு களில் பிசகாம லிருந்தனள்.

இந்தப்படியாக, அந்த சித்திரரேகை, ரத்தினங்கள் பதித்தக் கம்மலைச் செவியினி லணிந்துக்கொண்டு தன் பிராண நாயகருடைய பணிவிடையிலேயே காலத்தைக் கழித்துக்கொண்டு யிருக்கிற போது, சகல வேத சாஸ்திரங்கள் வல்லவராயும், நிர்மலக்ஞான வைராக்கிய சம்பன்னரும், கர்ம யோகத்தில் விற்பன்னரும் ப்ர பன்னருமாகி விளங்கும் பயிலவமா முனிவரென்றொரு தவசி யிருந்

தார். அவரிடத்தில் நான்கு வேதம், பஞ்ச காவியம், ஆறுசாஸ்திரம், பதினெண் புராணம், அறுபத்து நாலு கலைக்கியான முதலான தருமசாஸ்திரக்களைக் கற்றுக்கொள்ள விருப்பங்கொண்டு உதங்க னென்னும் பிராமண பிரமசாரி அந்தப்பயிலவ மூனிவரையடுத்து, அம்மூனிவருக்குத் தன் மீது அன்புண்டாகும்படி வழிபட்டு தொண்டு புரிந்துக்கொண் டிருக்கையில், அம் மூனிவர் அந்த உதங்கன் தன்னையடுத்து வணங்கித் தனக்குத் தொண்டு புரிந்து கொண்டிருக்கும் அவன் கருத்தையுணர்ந்து அவன் மீது மெத்தப் பிரிய முண்டாகி அவன் கருத்தின்படி சகல வேத சாஸ்திரங்தளையும் ஐயந்திரி யில்லாம லிருக்கும்படி எல்லா நூல்களையும் ஓதினர். அவ் வுதங்கனும் யாவற்று நூல்களையு முணர்ந்து சகல வேத சாஸ்திரங்களிலும், சம்பன்னனாகியக் களிப்படைந்து குருவாயிய பயிலவ முனிவரை வணங்கி ஓ !ஸ்வாமி ! அடியேன் பொருட்டுத் தாங்கள் கல்வி யோதிட யெடுத்துக் கொண்ட சிரமத்திற்குத் தக்கபடி குருதக்ஷிணை கொடுக்க விரும்புகின்றேன். தங்களுக் 'கென்ன வேண்டு மென்று பிரார்த்தித்தான். அதற்கு அம்மூனிவர் உதங்கனை நோக்கி, அப்பா ! சிஷ்யனே ! எனக்கொன்றும் வேண்டுவதில்லை யென்று மறுத்தனர். அந்த உதங்கன் மறுபடியும் மிகவும் வேண்டிக் கொண்டான். அம்முனிவர் உதங்கனை நோக்கி, அப்பாசிஷ்யனே யெனக்கு யாதொன்றும் வேண்டியதில்லை என் மனைவியின் பாலேகி அவளை வணங்கிப் பிரார்த்தித்துக் கொள்வையாகில் அவ ளெதை விரும்பிக் கேழ்க்கின்றாளோ அதைக்கொண்டு வந்து குரு தக்ஷிணையாகக் கொடு மென்றார். உதங்கன் குருமொழியை சிரமேற் கொண்டு விரைவாகச் சென்று குருபத்தினியைக் கண்டு பணிந்து ஓ ! அம்மணீ ! அடியேனைச் சகல சாஸ்திர சம்பன்னனாகச் செய்வித்தப் பரமகுருநாதருக்குக் குருதக்ஷிணை யளிக்க விருப்பங்கொண்டு குருவைப்பணிந்து என்னவேண்டு மென்று கேட்டதையும் அவர் தனக் கொன்றும் வேண்டாமென்று சொல்லியதையும் பின்னும் வேண்டிக் கொண்டமையால் அப்பரம குருநாதர் தங்களை வினவி தாங்களெதைக் கேழ்க்கின்றீர்களோ அதைக்கொண்டு வந்து குரு தக்ஷிணையாகக் கொடுக்கும்படியாக நேமித்தார். ஆகையால், தங்களுக் கெந்தவஸ்துவின் மீதுபிரியமோ அதைத்திருவாய் மலர்ந்தருள வேணும் என் தாயே யென்று மெத்த வினயமகாப் பணிந்தான். அந்தப்பயிலவமா முனிவர் மனைவி தன்னை வணங்கின உதங்கனை வாழ்த்தி அப்பா ! மகனே ! யான் விருப்பங்கொண்ட வஸ்துவைக் கொண்டு வந்து கொடுக்க உன்னால் முடியுமோ என்றனள். அதற்கந்த உதங்கன் என்னம்மணி ! தாங்கள் விருப்பங்கொண்டிருக்கும் வஸ்து வானாலு எத்தனை அருமையாயிருக்கினும் எந்த லோகத்திலிருந்தபோதிலும் அவசியம் அதற்காகவேண்டிய முயற்சிகளைச் செய்து கொண்டு வந்து கொடுக்கின்றேன் என்று நவிலக்

கேட்டு, குருபத்தினி அடா! என் கண்மணியே! யான் விரும்பிய வஸ்துவானது தேவலோகத்தி லிருப்பதல்ல பாதாளலோகத்தில் மிருப்பதல்ல பூலோகத்தினி லிருப்பதே அவ்வஸ்து யாரிடமிருக் கின்றதென்பையோ ஐம்பத்தைந்து தேசங்களிலொன்றுகிய நிடத தேசத்தை வெகு தரும நீதியாய் பரிபாலித்துக் கொண்டிருக்கும் பவுஷியந்த மகாராஜன் மனைவியாகிய உத்தம கற்புடைய மாது சிரோமணி சித்திரரேகை செவியினிலணிந்திருக்கும் கம்மலின் மீது பிரியமுண்டாயிருக்கினறது அந்த கம்மலைக்கொண்டு வந்து குரு தக்ஷிணையாகக் கொடுப்பையேயாகில் பெற்றுக் கொள்ளுகிறேன். வேறெந்த வஸ்துவும் எனக்கும் பிரியப்படமாட்டா தென்றனள். அதைக் கேட்டு அந்த உதங்கன் மெத்தக் களிப்படைந்து, ஓ! அம் மணி! இந்தக் கம்மலுக்காக ஒருமாதம் தவணை எனக்குத்தாங் கள் கொடுத்தால் அத்தவணைக்குள்ளாக அக்கம்மலைக் கொண்டு வந்து கொடுக்கக் கடவேனென்று சொல்லி விடைபெற்றுக்கொ ண்டு நிடததேசத்தை நாடிவருகிறபோது, அந்நகரத்திற் கருகில் ஒரு திவ்யபுருஷன் வெள்ளை யெருதின் மீதேறிவந்து உதங்கனை நிடததேசத்திற்குட் போக வொட்டாமல் தடுத்தான். அப்போது அந்த உதங்கன் அப்புருஷனை நோக்கி, ஓ! ஐயா! யான் நிஷததேச த்தை யாளும் பவுஷியந்த மகாராஜனைக் கண்டு அவர் மனைவி சித் திரரேகை செவியிலணிந்திருக்கும் நாகரத்தினங்கள் பதித்த கம்ம லைப் பெற்றுக் கொண்டுபோய் குருதக்ஷிணைக் கொடுக்கவேணும் இந்த சமயத்தில் என்னைத் தடுக்கவேண்டாம் தயவு செய்து என் னைப் போகவிடுமையா வென்றுப்பணிந்து வேண்டிக்கொண்டனன்.

இவ்வண்ணமாக, அந்த உதங்கன குருதக்ஷிணைக் கொடுக்கும் பொருட்டு நிடததேசத்தை நாடிப்போகிற செய்தியைக் கேட்டு அந்ததிவ்யபுருஷன் உதங்கனை நோக்கி, ஒப்பிரமசாரி பிராமணு! இதோ இந்த எருதின்கோமயத்தை ஒருகையளவு புசிப்பாயாகில் உன்னைவிடுவேன்புசியாவிடில்விடுவதில்லை மேலும் யாராயிருந்தபோ திலும் என்னுடைய உத்திரவின்றி யிவ்வழியே போகக்கூடாது நீ குருதக்ஷிணையின் நிமித்தம் போகறேனென்று உண்மையைச்சொன் னபடியினாலே ஒருகையளவு எருதின் கோமயம் புசித்துவிட்டு நீசுக மாய்ப் போகலாமெனக்கேட்டு அந்த உதங்கன் திவ்யபுருஷன் சொல்லியபடி எருதின் கோமயத்தைக் குடித்து விடைபெற்றுக் கொண்டு சென்று நிடதபுரத்தையடைந்து ஆசாரவாசலின் காவ லரை எச்சரித்தான். அக்காவலரும் சபைக்குச் சென்று கொலுவா யிருக்கும் அரசனைக் கண்டு பணிந்து உதங்கன் வரவைத் தெரி வித்தார்கள், அதைக் கேட்டு, அரசன் மந்திரிகளுடனெழுந்து எதிர் சென்றழைத்து வந்து தக்க ஆசனத்தில் வீற்றிருக்கச் செய்து அர்க் கிய பாத்தியாதிகளால் பூசித்து வலம்புரிந்து தெண்டனிட்டு, ஓ!

ஸ்வாமி ! தேவரீர் ! தெரிசனபலத்தால் யாங்கள் புனிதர்களாயினேம் தங்கள் திருவடி ஸ்பரிசத்தால் இன்னுபாவனமாயிற்று யாது காரணத்தால் தாங்க ளெழுந்தருளியதோ அதைத் திருவாய் மலர்ந்தருள வேணுமென்று பிரார்த்தித்தான். அதற்கந்த உதங்கன். அரசனே வாழ்த்தித் தரும சிந்தனையிற் சிறந்தவேந்தர் கோமானே, சகல வேத சாஸ்திரங்களையும் ஐயந்திரிபர எனக்கு ஓதின பயிலவல்லவர்க்கு குருதக்ஷிணை கொடுக்க முயன்று என்ன வேண்டு மென்று வினவினேன். அதற்கம் முனிவர் தனக்கொன்றும் வேண்டியதில்லை யென்றார். யானவரை மறுபடியும் பிரார்த்தித்துக் கொண்டேன். அம்முனிவர் தன் மனைவி எதைவிரும்பிக் கேட்கின்றளோ, அதை குருதக்ஷிணையாகக் கொடுக்கும்படிக் கட்டளையிட்டார். யானுமவர் சொற்படிக்குக் கற்புடைய அவர் மனைவியை வேண்டிக் கொண்டபடியால், அந்தம்மணி என் மீது கிருபை கூர்ந்து, ஓ! உதங்கா நீடதேசத்தைப் பரிபாலித்துக் கொண்டிருக்கும் சத்தியகுணசீலராகிய பவுஷ்யந்தமகாராஜன் மனைவி சித்திரரேகை யணிந்துகொண்டிருக்கும் படியான கம்மலைக் கொடு மென்றுகேட்க்க, அந்தப்படியே யந்த கம்மலை ஒரு மாத கெடுவிற்குள் கொண்டு வந்து கொடுக்கிறேனென்று சொல்லி யுமதிடத்திற்கு வந்தேன். என் வாக்குப் பொய்த்துப்போகாவண்ணம் தயவு புரிந்து உமது மனைவியின் கம்மலைவாங்கித்தரவேணும் புண்ணியாத்துமனே என்று கெஞ்சிக் கொண்டார். இப்படி தன்னைத் கெஞ்சிக் கேட்க்கின்ற உதங்கனை நோக்கி, அந்த உதாரபுருஷனை பவுஷ்யந்த மகாராஜன் சொல்லுகின்றார். ஓ ! பிராமணோத்தமரே, என் மனைவி அந்தப்புரத்திலிருக்கின்றாள், நீர் அங்கு சென்று நான் கொடுக்கச் சொன்னே னென்று சொல்லி அக்கம்மலைப் பெற்றுக் கொள்ளு மென்று சொல்லி அனுப்ப அவ்வுதங்கன் அந்தப்புரத்திற் கேகி எங்கும் தேடிப்பார்த்தும் அந்த அரசன் மனைவியைக் காணுமல் மறுபடியும் திரும்பி அரசனிடத்திற்கு வந்து ஓ ! மகாராஜனே உமது மனைவியை அந்தப்புரத்திற் காணேமென, அரசன் கேட்டு, ஒருவசனங் கூறுகின்றார். ஓ ! மகானுபாவரே ! என் மனைவி அந்தப் புரத்திலே தானே இருக்கின்றாள். அவள் அசுசியாயிருப்பவர்கள் கண்களுக்குப் புலப்படமாட்டாள், நீர் அசுசியாயிருக்கின்றப் போல தோன்றுகிறது, நீர் சீக்கிரஞ் சென்று ஸ்நானஞ்செய்து அந்தப் புரத்திற்குச் செல்வீரேயாகில், என் மனைவி காணப்படுவாள். நான் சொன்னதாகச் சொல்லிக் கம்மலைப் பெற்றுக்கொள்ளுமையா வென்றனன் அது கேட்டு, அந்த உதங்கன் ஆச்சரியப்பட்டு யானென்ன அசுசியாகவா யிருக்கின்றேன். இந்த வசனத்தைக் கேழ்க எனக்கு மெத்த விபரீதமாக விருக்கின்றது. ஆகிலும், ஸ்நானஞ் செய்து அசுசியைப் போக்கி அந்தப் புரத்தைக் சேர்ந்து பார்த்தால் அப்பேரதிசயம் நீங்குமென்று கருதித் தடாகத்திலதயணுகி ஸ்நானஞ்

செய்து மடிவஸ்திரந்தரித்துச் சுசியாகி அந்த உதங்கன் அந்தப்புரத்திற்குள் சென்று சித்திரரேகையைக் கண்டு, பிரமை யடைந்து அரசன் சொல்லியபடி நாம் அசுசியாக விருந்தமையால் இம்மங்கை நமது நேத்திரத்திற்குப் புலப்படாமலிருந்தனள். ஸ்நானஞ் செய்து சுசியாகி வந்தமையால் நமது கண்களுக்குப் புலப்பட்டாள் என்று சந்தேக நிவர்த்தி செய்துக் கொண்டு அம்மங்கையின் சமீபமாகச் செல்லுகிறபோது, அம்மங்கை உதங்கனைக் கண்டு யாரோ பிராமணர் வருகின்றாரென்று எழுந்து விரைந்தோடி வந்து அழைத்துச் சென்று தக்க ஆசனத்திலிருத்தி சோடச உபசாரங்களும் புரிந்து ஓ! ஸ்வாமி! தாங்களிந்த ஏழையின்மீது கடாக்ஷம் வைத்து எழுந்தருளின காரணம் யாதோ! அதைத் தெரியப்படுத்தினால், அந்தப்படி நடந்துக்கொள்ள சித்தமாயிருக்கின்றேன். என்று கூற, உதங்கன் கேட்டு சந்தோஷித்து ஆகூறி தான் வந்த காரியத்தை விபரமாக மொழிந்தான்.

அதைக்கேட்டு, அந்த உத்தமியாகிய சித்திரரேகை உதங்கனை நோக்கி கேளும், சிறப்பினை வாய்ந்த பிராமண சிரேஷ்டரே! தேவரீர் நாடிவந்த கம்மலைக்கொடுப்பதற்கு யாதொரு தடையுமில்லை, ஆனால், அதற்கொரு மர்ம்மமுளது அதென்ன வெனில், இக்கம்மலில் பதித்திருக்கும் ரத்தினங்களானது வசுக்களில் முதன்மையானவர் நாகலோகத்திற்குச் சென்றபோது, ஆதிசேஷன் அவருக்கு சன்மானஞ்செய்ததாகும் அந்த ரத்தினங்களை அப்பெரியோர் என் கணவரது உத்தம குணங்களுக்கு மெச்சிக்கொடுத்துப் போயினர். அவற்றையிந்தக்கம்மலில் பதித்து எனது செவியிலணிந்துக் கொண்டிருப்பதை ஆதிசேஷன் கேழ்விப்பட்டு, இந்த ரத்தினங்களை பூலோகத்திலிருப்பவர்கள் தரித்துக் கொள்ளக் கூடாதென்றும் நாகலோகத்து ரத்தினங்கள் பூலோகத்திலிருக்கக்கூடா தென்றும் யோசித்துக் கொண்டிருக்கும்போது தக்ஷகன் ஆதிசேஷனைப்பணிந்து, எந்த விதந்நிரத்தினமும் பூலோகத்திலிருக்கும் ரத்தினங்களை நாகலோகத்தில் கொண்டு வந்து சேர்ப்பிக்கிறேனென்று உறுதி கூறி, இக்கம்மலைக் கொண்டுபோக வேணுமென்று வெகு ஜாக்கிரதையாய் காத்துக்கொண்டிருக்கின்றான். ஆகையால் இந்த கம்மலை மறதியாய் எங்காகிலும் தரையில்வைத்து விடப்போகின்றீர். அந்தப்படிக்கு வைத்து விடுவீரேயாகில் மோசம் போவது மன்றி, சொற் சோர்வும் வந்து நேரிடும். யான் சொல்லிய இந்த ரகசியத்தை மறக்காமல், இந்தக் கம்மலை அணிந்துகொள்ளப் போகிற பயிலவமாமுனிவர் மனைவியோ மெத்தக் கற்புடையவள் இச்செய்தியை எல்லாம ரகசியமாகச் சொல்லி இக்கம்மலை வெகு பத்திரமாக அணிந்துக் கொள்ளும் தெரியப்படுத்தினென்றுரைத்து அந்தக் கம்மலைக் கொடுத்தாள். உதங்கரும் அந்த கம்மலைப் பெற்றுக்கொண்டதன்

நியும், சித்திரரேகையின் கற்புடமைக்கு அதிக மகிழ்ச்சி யடைந்து வனுடி அம்மங்கையினிடம் விடை பெற்றுக்கொண்டு அரசனிடம் வந்து சமமலைப் பெற்றுக் கொண்டதையும் தகுந்தகண் அக்கம்மலைக் கொண்டு போவதற்கு சமயம் பார்த்துக் கொண் டிருப்பதையுஞ் சொல்லி விடைதர வேண்டுமென்று வேண்டினான், அதற் கரசன், உதங்கனே நோக்கி, ஓ! பிராமணோத்தமரே! இன்லையதினம் என் மனையிற் புசித்துப் பின்பு, உமது குருபத்தினியினிடத்திற்கேகுமென்று கவில, உதங்கன் சம்மதித்து அவ்வாசனேடு அந்தப் புரத்திற்குச் சென்று அரசனுக் தானும் புசிக்கிறபோது, அந்தப் பிரசாதத்தில் ஓர் மயிரிருக்கக் கண்டு உதங்கன் கோபங்கொண்டு அரசனே நோக்கி, ஓ! அரசனே! "கலத்தில் சோற்றையிட்டுக் கழுத்தை யறுத்ததுபோல" அசுசியா யிருக்கிற அன்னத்தையிட்டு என்னைப் பசித்திருக்கச் செய்தீனியே! இப்படி நீ செய்த குற்றத்திற்காக உனது கண்ணெளி இழக்கக் கடவாயென்று சாபமிடக் கேட்டு, பவுஷியந்த மகாராஜன் பயந்து ஐயா! உதங்கரே! இந்தக் குற்றம் என்னால் நேரிட்டதல்ல, அப்படி யல்லவென்று இக் குற்றத்தை யென்னதாகபாவித்தாலும் குற்றத்திற்குத் தக்க சாபங் கொடாமல் விபரீத சாபங் கொடுக்கலாமா! இதை நன்றாயோசிக்காமல் ஆத்திரப்பட்டுச் சினங்கொண்டு சாபங் கொடுத்ததினால் நீர் கலியாண மின்றி தேச சஞ்சாரியா யிருக்கக் கடவாயென்று அந்த உதங்கனே அரசன்சபிக்க, உதங்கன் அரசனே நோக்கி, ஓ! பார்த்திபனே! நீ எனக்குக்கொடுத்த சாபம் என்னே யடையா திருக்கும்படி கிருபை செய்ய வேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அரசன் கைகூத்து ஓ! ஐயனே! உலகத்தையாளும் அரசர்கள் இட்ட சாபத்திற்கு மறுசாபங் கொடுத்ததை எங்காகிலுங் கேட்டதுண்டோ! இதுவென்ன மெத்த விந்தையிலும் விந்தையாக விருக்கின்றது, யானிட்ட சாபத்திற்கு மறுசாபமு முண்டோ! எல்லா நூல்களையுங் கற்றுணர்ந்து சித்தசாத்தியடைந்த தேவரீர் பரமாத்துமா வாகையால், எளியேன் மீது கிருபைகூர்ந்து, நீரிட்டசாபத்தை மாற வேண்டுமென்று மெத்தவும் வணங்கிக் கேட்டுக் கொண்ட அரசனே நோக்கி, ஓ! அரசனே! எனக்குண்டாகிய முன் கோபத்தினால் பரோபகாரியாகு முனக்கு முன்பின் யோசிக்காமல் சாபங் கொடுத்தேன் என்னுடைய அறிவீனத்தை யென்னென்று பகர்வேன், உத்தம புருஷனும்-தருமாத்துமாவாகியும்-சத்திய சந்தனாகியும் மனுஷியைத் தன்னுயிர்போலக் காத்துரக்ஷிக்கும் நின தரிய பக்தி விசுவாசத்தையும் மூணராமல் என்னுடைய அஞ்ஞானத்தினால் கூறிய சாபத்தை மாற்றினேன். நீ சுகமாக வாழ்ந்திருக்கக் கடவாயென்று, பிரிய வசனங்கூறி அரசனிடம் விடைபெற்றுக் கொண்டு அந்தக்கம்மலைக் கைசோராவிடாமல் வெகு ஜாக்கிரதையாக வைத்துக்கொண்டு தன

குருவாகிய பயிலவமாமுனிவர் ஆசிர்மத்தை நோக்கிச் செல்லுகையில் சூரியன் மேற்கு திக்கில்போய் மறைந்தான்.

அதுகண்டு உதங்கன் சந்தியாநுஷ்ட்டானஞ் செய்ய ஓர் தடாகத்தையணுகி, அக்கம்மலை பூமியின்மீது வைத்து சந்தியாநுஷ்டானஞ் செய்துக்கொண்டிருக்கையில் துஷ்டனுகிய தக்ஷகன்பிராமணனுக வேடம்புனைந்துவந்து அக்கம்மலை எடுத்துக்கொண்டு போவதை உதங்கன் கண்டு, அந்த தக்ஷகனை விடாமற் பின்றொடர்ந்தோடிவருவதை தக்ஷகனறிந்து விரைந்தோடித்தன்னுடய லோகமாகிய பாதாளலோகத்தை யடைந்தான் இந்த உதங்கனும் தக்ஷகனை விடாமற் பின்றொடர்ந்தோடி பாதாள லோகத்தைச்சேர்ந்தான். இதனையுணர்ந்து அந்தத் தக்ஷகன் நாகலோகத்தினி லிருப்பவாகனில் ஒருவரையாகிலும் உதங்கன் கண்களுக்குப் புலப்படாமலிருக்கும்படி மாயையை ஏவி மறைந்து போயினன் அப்போதந்த உதங்கன் மெத்தகுன்பத்தை யடைந்து அதிக சினங்டிருப்பதைவிட அதிக மகிக்ஷியில் மறதியைக் கொண்டிருப்பது கெடுதிகளுக் கெல்லாம் மேலான கெடுதியென்று நூல்களா லறிந்திருக்கிறது மன்றி, இக்கம்மலைக்கொடுத்த சித்திரரேகையும் மூன்றுதாகவே நடக்கப் போகிற தன்பங்களை நமக்குக் கியாபகப்படுத்தி யிருந்தும் விளக்கைப் பிடித்துக் கொண்டு கிணற்றினில் விழுந்தவர்போலாயினுமே என்று பலவாறு தன்னை தானே நிந்தித்துக்கொண்டு அந்த நாகலோகத்தைச் சுற்றி சுற்றி வருகிறபோது பார்க்குமிடமெல்லாம் ரத்தின மயமாகிய மாடமாளிகைகளும் சிங்கார வனங்களும் தாமரைத் தடாகக்களுமே யன்றி, வேறொருவரும் கண்ணுக்குப் புலப்படவில்லை. ஆனல், ஒருபக்கத்தில் இரண்டு ஸ்திரீகள் பவளம்போன்ற தமதுவிரல்களில் கருப்பு நூலையும், வெள்ளை நூலையும், சுற்றிக் கொண்டிருப்பதையும் பன்னிரண் டிதழுடன் கூடி அறுகோணம்போலிருக்கிற ஒரு பீடத்தையும் பீடத்தின் கோணங்களோறும் பொருந்தியிருக்கிற ஆறு குமாரர்களையும் பார்த்து வியந்து, சற்றலோசித்து நாகலோகத்திபதியை துதித்தா லல்லது, நமது குறை நீங்காதெனக் கருதி, அவ்வுலகத்தரசனைத் துதிசெய்தார். அதெப்படி யெனில், மகா தபோதியாகிய காசிபருடைய புத்திரரே! பார்வதிசமேதனுகி விளங்கும், ஸ்ரீகைலாசபதியாகிய பரமசிவன் கையில்லுக்கு நாணியாகி திருமறுமார்பனுகிய திருமாலுக்கும் பாயலாகி இந்த ஏழுலோகத்தையும் பணமுடியிற்றாங்கி தேவர்களுக்கு அமுதங் கெடுத்து விளங்குகின்ற உபகாரியாகிய, ஆதிசேஷனே! எனது குருபத்தினியின் பொருட்டை கொண்டுவந்த கம்மலைக் கொடுத்து சொற்சோர்வு படாமல் இரக்ஷிக்க வேண்டுமென்று பலவாறு தோத்திரம் புரிந்தும் அபாத்திரத்திற்குப் பிச்சையிட்டது போல, பயனபட்டாம லிருக்கக் கண்டு மெத்த வல்லமையுடைய அந்த உதங்கன்

மனங் கலங்கி ஒன்றுந் தோன்றுமல் இந்த நாகலோகத்தில் தானே பிராணனை விட்டுவிடுவோமென்று நினைத்து நிற்கிற தருணத்தில் வாயுகதியோடு கூடிய அஸ்வத்தின் மீதேறி அக்கினிசொரூபமுகிய ஒரு தேவபுருஷன் இந்த உதங்கன் கண்ணுக்குத் தோற்றப் பட்டான். உடனே, அவ்வுதங்கன் தரித்திரனுக்குத் தனப் புதையல் கிடத்ததைப்போல மகிழ்ந்து, அந்த திவ்யபுருஷனை வணங்கித் தான் குருபத்தினியின் நிமித்தம் வந்ததையும் வந்தவிடத்தினில் நடந்த விருத்தாந்தத்தையும் சொல்லி முறையிடுவதைக் கேட்டு, அந்த திவ்யபுருஷன் உதங்கனை நோக்கி, உன்கருத்தென்னவென்று வினவ அதற்கு உதங்கன், ஐயா! என்னை வஞ்சித்த இந்த நாகலோகத்தாரெல்லாம் நடுங்கி எனக்கு வழிபடவேண்டுமென்று வேண்டிக்கொள்ள, அந்த திவ்யபுருஷன் உதங்கனை யழைத்து ஆனால், இந்த அஸ்வத்தின் செவியில் ஊதுமென்று கூற, உதங்கனும் அந்தப்படியே அஸ்வத்தின் செவியில் ஊதினான். உடனே, ஒரு அழற்சியுண்டாயிற்று அதனால் பஞ்சாயுதந் தரித்த திருமால் செய்யும் ரூகத்தொணியைகேட்ட அசுரரைப்போல, அந்த பாதாள லோகத்தினிலிருக்கிற யாவரும் துடிதுடித்துப், பதைபதைத்து, நடுநடுங்கிக் கடுகடுத்து, விடவிடத்து, நெஞ்சலர்ந்து, ஆஹா இதென்ன, ஆச்சரியம் இப்படிப்பட்ட ஓசையும், அழற்சியும், ஒரு நாளுங் கேட்டதில்லையே இன்றைப்தினம் இவ்வகைப்பட்ட கெடுதி நேரிட்டதற்குக் காரண மென்னமோ! ஆனல், ஐயையோ! வைதிக நிலைமையுண்டாகாத்துமாலை நம்மினத்திலொருவனுகிய தக்ஷகன்செய்த கொடூரமான வஞ்சனையே இப்படிக்கி வந்து சேர்ந்ததென்று பலவாறு நினைந்து நினைந்துருகி அந்த நாகலோகத்தினிலிருக்கின்ற யாவரு மொருமித்துக்கூடி தக்ஷகன் வஞ்சித்தெடுத்து வந்த கம்மலை அத் தக்ஷகன் கையிலுலேயே உதங்கனுக்குக் கொடுப்பித்தார்கள், அவ்வுதங்கன், கம்மலைப் பெற்றுக்கொண்டு யாமாளந்தத்தை யடைந்து இக்கம்மலை நமது குருபத்தினிக்கிச் சேர்ப்பிக்கவேண்டுமே நாமோ நாகலோகத்தில் லிருக்கின்றோம். இதற்கென்ன செய்கிறது எவ்வாறு நாகலோகத்தைக் கடந்து பூலோகத்திற்குப் போகப் போகிறோமென்று இடிவிழுந்த நாகம்போலேங்கி நிற்கிற சமயத்தில் முன் குறித்த மகா புருஷன் பின்னும் அஸ்வத்துடன் வந்து தோன்றி, ஓ! பிரமசாரி பிராமணரே! இன்னும் நீர் கிலேசப்படவேண்டிய காரணமென்ன வென்று வினவ, அதற் கவ்வுதங்கன் ஓ! ஆண்டவனே! என்னுடைய குருபத்தினிக்கு இக்கம்மலை இத்தினநாள் கெடுவிற்குள் கொண்டுவந்து கொடுக்கிறேனென்று சொல்லி வந்தயான் அந்த கெடுவுக்குள் கொண்டுபோய் சேர்ப்பிப்பதற்கு நாள் கடந்துபோகிற படியால் வருந்துகின்றேன். யென்று கூற, அந்த திவ்யபுருஷன் இதற்காக நீர் கவலைப்படவேண்டாம் இதோ யிந்தக் குதிரையின் மீதேறிக்கொள்ளும் ஒரு நொடியில் உமது குருபத்

தினிமிளிடஞ் சோப்பிக்குமென, அந்தப்படியே! உதங்கன் மெத்த களிப்படைந்து அக்குதிரையின்மீதேறினன். ஒருகண நேரத்தில் பயில்வமாமுனிவர் ஆசிரமத்திற் கொண்டு வந்து விடுத்து அக்குதிரை மாயமாய் மறைந்து போயிற்று.

அப்போதந்த உதங்கன் குருபத்தினியைக்கண்டு வணங்கிக் கம்மலைக் கொடுத்தான். அக்குருபத்தினியும் உதங்கனை வாரித் தழுவி அப்பாமகனே! இக்கம்மலுக்காக மெத்தப் பிரயாசைப்பட்டுக் கொண்டுவந்து கொடுத்த நின்பக்திக்கு மெச்சினேனென்று வாழ்த்தி விடைதரப் பெற்றுக்கொண்டு தன் குருவாகிய பயிலவாமுனிவரிடம் வந்து வணங்கி பயபக்தியுடனே எதிர் நின்றான். அப்படி நின்ற சீஷனை அப்பயிலவாமுனிவர் கண்டு, அப்பா மகனே! குரு விசுவாசத்தில் உன்னைப்போல, இவ்வுலகத்தி லொருவரு மிலையென்று சொல்லி அவ்வுதங்கனைத் தழுவிக்கொண்டு ஒருவசனஞ் சொல்லுகின்றார். சகலசாஸ்திரங்களிலும் வல்லவராகியும் சகல பற்றினையும் நீக்கின மகாத்துமாக்களிலுஞ் சிறந்த புத்தியில் மிகுந்தப் புத்திரனே பவுஷ்யந்த மகாராஜன்மனைவி சித்திரரேகை காதிலணிந்திருந்த கம்மலைக் கொண்டுவந்து கொடுக்கப்போயின நீ இத்தனை நாள் பரியந்தம் வராமலிருந்ததற்குக் காரணமென்ன வென்று கேட்க்க உதங்கன், அரசனிடத்திற்குச் சென்று கம்மலைப்பெற்று நாகலோகஞ் சென்று இங்குவந்து சேர்ந்த விர்த்தாந்தத்தை ஆதியோடந்தமாகச் சொல்லிப் பின்னும் உதங்கன் குருவைநோக்கி, ஒருவசனஞ் சொல்லுகின்றான். ஓ! ஐயனே! நானிவ்விடம் விட்டுப் பவுஷ்யந்தமகாராஜன்பட்டணத்தை நோக்கிச் செல்லுகையில், வெள்ளை யெருதின்மேலேறி ஒரு திவ்யபுருஷன் வந்து என்னை மறித்து இவ்வழி போகிறதற்கு உனக்கு மனமிருந்தால் இவ்வெருதின் கோமியத்தைப் புசித்தால் போகலாம் இல்லாவிடில் நானுன்னைப் போகவிடேனென்றும் பின்பு நாகலோகத்திற்குச் செல்லுகையில் இரண்டு ஸ்திரீகள் தங்கள் விரல்களில் கருப்புநூலையும், வெள்ளைநூலையும் சுற்றிக்கொண்டிருந்தார்கள் மற்றோரிடத்தில் ஆறுகோணபீடமும், கோணத்திற்கிரண்டிதமும், ஆறுகுமாரர்களு மிருந்தனர் அன்றியும், யான் நாகலோகத்திற்குட்சென்று திக்குதிசை தெரியாமல் கவலைப்பட்டிருக்கின்ற தருணத்தில், அஸ்வத்தின்மீ தொரு சவுக்தரிய புருஷன்வந்து என்னை இவ்விடம்சேரும்படிக்கிச் செய்வித்தான் இவைகளையெல்லாம் என்னுற் கூடிய மட்டும் யோசித்துப்பார்த்தும் அவர்க ளின்னரென்று என்மனதிற் றோன்றவில்லை, எனதாண்டவனே? அடியேன்மீது கிருபை புரிந்து அவர்களின் னரென்று யானுணர்ந்துக் கொள்ளும்படி போதிக்கவேண்டுமென, அதற்குப் பயிலவமாமுனிவர் உதங்கனை நோக்கிச் சொல்லுகின்றார். கேளுமப்பா! உதங்கா நீ பவுஷ்யந்த

ராசனைக் காணப்போகிறபோது, வழியில் வெள்ளை யெருதின்மே லேறிவந்து மறித்தவன்-இந்திரன், அவ்வெருதோ-வெள்ளை யானை கோமியமோ-அமிர்தம், பாதாள லோகத்தில், சருப்புநூலும், வெள்ளைநூலும், விரலிற் சுற்றிக்கொண்டு இருண்டு ஸ்திரீக ளிருந்தார்களே அவர்களில் ஒருத்தி-தாதை, மற்றொருத்தி - விதாதை, சருப்புநூலும், வெள்ளைநூலும், இரவும் பகலும் அறுகோணமும் கோணங்கடோறும் இரண்டிதழும் ஆறு குமாரரும் என்னவென் றால், அறுகோணம் பூமி, கோணங்கடோறும் இரண்டிதழிருந்தது பன்னிரண்டுமாதம் அந்த ஆறுகுமாரரும்-ஆறு ருதுக்கள், உன் மூன் குதிரையோடு தோன்றின புருடன்-வருணன், அச்சுதிரை யோ-அக்கினி பகவான், நீ குருபக்தியுள்ளவ னதலால், உனக்கு தேவர்களெல்லாஞ் சகாயப்பட்டார்கள் உன்னைப்போலனவான் இவ்வுலகத்திலொருவருமில்லை, இனி தவநிலை சேர்ந்து தவஞ்செய் யென்று மொழிந்தனர், உதங்கன் மகிட்சியடைந்து குருவாக்கிய த்தைச் சிரமேற்கொண்டு தவம்புரியச் சென்றார் நிடததேசத்தினி யாளும் பவுவியத்தனும் அவர் மனைவி சித்திரரேகையும் சிலவருட காலம் அரசாண்டிருக்கிறபோது, சித்திரரேகைக்கு ஒரு புதல்வ னும் ஒரு புதல்வியும் பிறந்தார்கள். அவர்களை யந்தசித்திரரேகை அன்புடன் வளர்த்துப் புதல்வனுக்கு பௌண்டரீகனென்றும் புதல்விக்கி தருமநிதி யென்றும், பேரிட்டுப் போஷித்து வருகை யில் அவர்களிருவரும் சுக்கிலபட்சத்துச் சந்திரனைப்போல விரு த்தியடைய பௌண்டரீகனுக்குக் கல்விப்பயிற்சிசெய்வித்து, வில் வித்தை யானையேற்ற-குதிரையேற்ற-மூதலிய சகல கலையுங்கற்பி த்து சிலவருடகாலம் இளவரசாகநியமித்துத் தக்க வயது வந்த வுடனே, அந்த பௌண்டரீகனுக்கு நிடதபுரத்தைப் பட்டாபிஷே கஞ் செய்வித்து மந்திரிகளை எச்சரித்து நீதிகுன்றாமல் அரசுசெலு த்தும்படிப் புதல்வனுக்கு கட்டளையிட்டுச் சதிபதிக ளிருவரும் ஆடையாபரணங்களைக் களைந்துவைத்து மரவுரிதரித்துத் தண்டுக மண்டலங்களை பிடித்துக்கொண்டு நிடதபுரத்தைவிட்டு வெளிப் பட்டு கடுங் காட்டை யடைந்து அங்கு தவமியற்றிக் கொண்டிருக் கும் முனிவர்களை யடுத்துத்தவத்துக்குரிய மந்திரங்கள் மூதலான வற்றையு மூணர்ந்து அங்கோரிடத்தில் பர்ணசாலை யொன்றியற்றிக் கொண்டு அதிலிருந்தபடி நெடுநாள், கோரமாகியதவமியற்றிக் கொண்டிருந்து பகவானுடைய தெரிசனமடைந்து முடிவினில் அத்தம்பதிக ளிருவரும் யேககாலத்தினில் பரமபதசாம்பிராச்சி யத்தை யடைந்தார்கள்.

சித்திரரேகை கற்பின் மகுத்துவம்
முற்றிற்று.

கோகிலாம்பாள் கற்பின் மகுத்துவம்.

தெடிய கடல் சூழ்ந்த தேசங்களிற் சிறந்த அயோத்திமா நகர மொன்றுளது அன்னகரத்தை பலிச்சக்கிரவர்த்தி வம்ச பரம்பரையிற் சேர்ந்த சிபிச் சக்ரவர்த்தி யென்னும் அரசன் நீதி குன்றுமல் செங்கோல் செலுத்தி வந்தார். இவருக்குக் கோகிலாம்பாளென்னும் மனைவி ஒருவளுண்டு. இம்மாது தன் கணவனையன்றி வேறு தெய்வமில்லையெனும், அவருக்குச் செய்யும் தொண்டுகளே பாகதி யடைவதற்கு வழியென்றும் அவர் மகிழும்படி உருவந் திருத்தி நடப்பதே மேலான யின்பமென்றும் அவா யெத்தனை வையினும் பொறுமை வகித்திருப்பதே தனக்கு சொரூபமென்றும் கணவன் மனதின்படித்தழுவிக் கூடுவதே இகபோகமென்றும் ஆபத்து நேர்ந்தகாலத்தில் தன் கணவனுக்குத் திட்டஞ்சொல்லித் தேறுதல் செய்தே தருமநீதியென்றும் அவருக்கு அன்னபானாதிகளை யுண்பித்துப் போஷிப்பதே இனிதாகிய தவமென்றும் கருதி வெகு பயபக்தி விசுவாசமாக நடந்துக்கொண்டிருக்கக்கண்டு சிபிச் சக்கரவர்த்தி மெத்தவுங் களித்து வெகுவாகப் புகழ்ந்து அடிபெண்ணரசே இந்த அயோத்திமாநகரத்தை யாண்டுகொண்டிருப்பதில் கிஞ்சித்தும் எனக்குப் பிரியமே இல்லை, ஏனெனறால், இன்னுட்டை யெத்தனை காலம் ஆண்டுகொண்டிருந்தபோதிலும் பூலோகத்தரசர்கள் வந்து வணங்கி காணிக்கை கப்பங்கள் கட்டி மகிழ்வதனாலே சக்கிரவர்த்தியென்ற பெயரை வகித்திருப்பதால் எனக்கொரு கௌரவமும் கீர்த்தியுமுண்டாயிருக்கினும் இதுகவெனக்கு சம்மதியாகியும் ருசிக்கவு மில்லை. அரம்பை - ஊர்வசி - மேனகை - திலோர்த்தமைகள், ஆடப்பாட சப்தரிஷிகள் சிவிகையைச் சுமக்க பிருகஸ்பதி பகவான் குருவாகி இதோபதேசஞ்செய்ய மாணிக்கங்களாலும் ரத்தினங்களினாலும் இழைக்கப்பட்டிருக்கும் தேவேந்திராவுடைய சிங்காசனத்தில் வீற்றிருந்து யக்ஷகின்னர்-கிம்புருட-சித்த வித்தியாதராதிகளும் வந்து தொழுதேற்றுமபடியாக சொர்க்காதிபத்தியத்தை படைய வேணுமென்ற இச்சை மெத்தவும் என்னை பாதிக்கின்றமையால் அந்த இந்திர பட்டத்தைப் பெரும் படியான உபாயமெதுவோ அதை விசாரித்து அந்தப்படியாகயான் செய்து தேவலோகத்தை ஆளவேண்டும் ஆகையால் நின் கருத்தென்ன வெளியிடக் கடவரென்ற பதியின் சொல்லைக் கேட்டு, அந்தக் கோகிலாம்பாள் தன் பிராண நாயகரை நோக்கி, ஓ! ஸ்வாமி! உலகத்தினில் பதிவிரதைகளாகிய ஸ்திரீகள் தனமனுளன் எந்த வஸ்துவின்மீது பிரியங்கொண்டிருக்கின்றாரோ அந்த வஸ்து எத்தனை அருமையாக விருக்கினும் அதற்குத்தக்க உபாயம் நினைச்செய்து அவ்வஸ்துவைக் கிரகித்து வந்து தன பிராணநாயக

ருக் களித்து அவருடைய ஆவலைத் தணிபச் செய்யவேண்டிய க்ட மையாகுமென்று சுருதிகள் முறையிடுகிறபடியால் அத்தப்படி யடியாளுக்கு செய்விக்க சக்தியற்றிருந்த போதிலும் தேவரீரே அதற் குதக்க முயர்ச்சிகளைத்தேடி இந்திரபதத்தைப்பெறுகிறேனென்று கூறியதை யான் தடுக்க வல்லவளோ தங்களிஷ்டப்படியேசெய்து அச்சொர்க்கலோகத்தைத் தாங்கள் கைவச படுத்திக்கொண்டு தேவசிங்காதனத்தின்மீது வீற்றிருந்து செங்கோல்செலுத்த யான் கண்டு பரமானந்தத்தை யடைவேன்என்று கூறினள். அம்மொழி களைக்கேட்டு, சிபிச்சக்கிரவர்த்தி சந்தோஷித்து அந்தப்புரத்தை விட்டுநடந்து கொலுகூடத்தை யடைந்து மந்திரிகள் வணங்க சிங் காதனத்தின்மீது வீற்றிருந்து மந்திரிகளை நோக்கி, ஓ! மதிமந்திரி களே! தேவலோகத்தை யாளவேணுமென்ற விருப்பமெனக்கு மெத்த உண்டாயிருக்கிறபடியால் அந்த சொர்க்கலோகம் நமது வசமாகும்படியான உபாயமொன்று யோசித்து சொல்லக் கடவீர் களென்று கட்டளையிட்டான் அம்மந்திரிகள் ஓ! சுவாமி! தங்கள் கட்டளையின்படியே யோசித்துச் சொல்லுகிறோமென்று கணின்று மந்திரிகள் யோசிக்கத் தொடங்கினர்கள்.

சாமபேத தானதண்டமெனும் சதுர்வித உபாயங்களைக்கொ ண்டு யோசித்தும் இவற்றல் தேவேந்திர பட்டத்தை யடைவது மெத்த கஷ்டசாத்தியமாகும் யாகங்களிற் சிறந்ததாயும் சிரோபூஷ ணமாகியும் விளங்கும் யாகத்தால் அந்த சொர்க்க லோகாதிபத் தியம் எளிதினில் கைப்பற்றலாமென்றும் யோசித்துக் கொண்டிரு க்கையில் குலகுருவாகிய சுக்கிராசாரியர் எழுந்தருளினர். அவரைக் கண்டு சிபிச்சக்கிரவர்த்தி சிங்காதனத்தை விட்டுக் குதித்து எதிர்க் கொண்டு சென்று அழைத்து வந்து தக்க வாசனத்தின்மீது எழுந் தருளப் பண்ணி அர்க்கிய பாத்தியாதிகளால் உபசரித்து தீர்க்க மாக விழுந்து பணிந்து அஞ்சலியத்தஞ்சி எதிர்நின்று ஓ ஸ்வாமி! தாங்கள் வந்தது அடியேனுடைய கோரிக்கை நிறைவேறும் பொ ருட்டே என்று யோசிக்கிறேன் அதற்குக்காரணம் அடியேன் தங் களை அழைப்பிக்க வேணுமென்று எண்ணங்கொண் டிருக்கிற போதே தாங்களெழுந்தருளியபடியால் அடியேன் கொண்டிருந்த வாஞ்சை நிறைவேறுமென்பதற்குச் சந்தேகமேயில்லையென்று அனுகளித் திருந்தான், இப்படிக் கிருக்கும் சிபிச்சக்கரவர்த்திக்கி சுக்கிராசாரியர் ஆசிகூறி சிங்காதனத்தின் மீதிருக்கும்படி நியமித்து ஓ! சக்கரவர்த்தி நின் மனதினில் எண்ணிண கோரிக்கையென்ன, அதை யெனக்குத் தெரியப்படுத்துவையேயாகில் யுக்தாயுக்தங்களை போசித்துச் சொல்லுகிறேன் என்று வினவக்கேட்டு சிபிச்சக்கிர வர்த்தி சுக்கிராசாரியரை நோக்கி ஓ! ஸ்வாமி! அடியேனுக்கு சொர்க்காதிபத்தியத்தைக் கைக்கொண்டு தேவசிங்காதனத்திலிரு

ந்து சொர்க்கலோகத்தை யாளவேணுமென்று மனதிற் கோரிக்கை யுண்டாகி யிருக்கின்றது வெகுநாளா யெனக்கு இதுவே கோரிக்கையாயிருக்கின்ற படியால் இந்த எண்ணத்தை யெப்படியாகிலு முடித்துவைப்பது உமது பாரமென்று பணிந்தான். இப்படிப் பணிந்த சக்கிரவர்த்தியை இரண்டு கரங்களாலு மெடுத்து, ஓ! வேந்தே! நின் மனதிலுதித்த வெண்ணம் எனிதிலடையத் தக்கதல்ல, சொர்க்கலோகத்தை யாளுவ தென்றல் மெத்த புண்ணியஞ் செய்திருக்க வேண்டும் அப்புண்ணியத்தைச் சம்பாதிப்பதற்குத் தக்க யுக்தி யொன்று சொல்லுகின்றேன் அந்தப்படிக்குச் செய்வையே யாகில் சொர்க்கலோகத்தை மெத்தவும் எளிதிலடையலாகும். வேறெந்த மார்க்கத்திலும் அடைவதற்கு அசாத்தியமாகும் ஆகலால், இதுவே தகுந்த யுக்தி யென்றனர். சக்கிரவர்த்தி ஆசானை வணங்கி ஓ! ஸ்வாமி! தங்களெவ்வண்ணம் சொல்லுகின்றீரோ, அந்தப்படியே நடக்கின்றேன். அந்த சுலபமானமார்க்கத்தைச் சொல்லி எவ்விதத் திலேனும் அடியேனை சொர்க்கலோகத்தை யாளும்படிக் கிருபை செய்யவேணு மென்று வேண்டிக் கொள்ளும் சிபிச்சக்கிரவர்த்தியை நோக்கி, சுக்கிராசாரி சொல்லுகின்றார். கேளும், வேந்தர் கோமானே! வேதத்திற் சொல்லியிருக்கும் யாகங்கள் பலவாயிருக்கினும் எல்லாயாகங்களிலும் சிறந்த யாகமொன்றுளது. அதென்னயாக மெனில், விஸ்வஜயாக மென்று சொல்லப்படும். இந்தவிஸ்வஜயா கம் நூறு யாகங்கள் செய்து முடித்தால் நின் மனதினிற் கருதிய படி சொர்க்கலோக சாம்பிராஜ்யத்தை எளிதினிலடைந்து தேவ சிங்காதனத்தின் மீது வீற்றிருக்கலாம் எனக் கேட்டு, சிபிச்சக்கிரவர்த்தி சுக்கிராசாரியை வணங்கி, எமது குருநாதரே! அந்தயாகஞ் செய்விப்பதற்கு யாரை முதன்மையாக வைத்துக் கொண்டு செய்விக்க வேண்டும் அதற்கு வேண்டியவைகள் யாது அவற்றையெல்லாம் விவரமாகச் சொல்லவேண்டு மென்று வேண்டிக்கொள்ள சுக்கிராசாரியர் சிபிச்சக்கிரவர்த்தியை நோக்கி ஓ, அரசனே! மகாதவ சிரேஷ்டராகிய கண்ணுவமாமுனிவரை வரவழைத்து இச்செய்தியை அவரிடம் சொல்லுவீரேயாகில் அவர் அந்தயாகத்துக் குறித்தான சகலமும் தெரியப்படுத்துவார். அந்தப்படி சகல சாமகிரியைகளையுஞ் சேகரித்துவைத்துக் கொண்டு அவரால் அந்த யாகத்தை நிறை வேற்றிக்கொள்ளக் கடவாயென்று கட்டளை யிட்டு விடைபெற்றுச் சென்றார். பின்பு சிபிச்சக்கிரவர்த்தி மந்திரிகளுடன் கண்ணுவமாமுனிவர் ஆசிரமத்தை யடைந்து அவரைக்கண்டு பணிந்து அவரால் ஆசிகூறப் பெற்று இருகரங்களையுஞ் சென்னியின்மீது குவித்துக் கொண்டு ஓ! ஸ்வாமி! அடியேன் விஸ்வஜயாகம் செய்ய வெண்ணி எமது குலகுருவாகிய சுக்கிராசாரியரை வேண்டிக்கொண்டேன். அவர் தேவரீரைக்கொண்டு செய்துகொள்ளும்படிச் சொல்லி ஏகினார் தாங்களோ சகல வேத வேதாந்தங்

களிலும் வல்லவர் நிர்மலஞ்ஞான வைராக்கிய சம்பன்னர் கர்மயோ கத்தினில் விற்பன்னர் பிரபன்னரு மாகையால் இவ்வேழையின் மீது இருபாகடாக்ஷம் வைத்து அயோத்திமா நகரத்திற் கெழுந்த ருளி தங்கள் கரங்களால் அத்தயாகத்தைச்செய்து மூடித்து அடி யேனுடைய கோரிக்கையை நிறைவேற்றி ரக்ஷிக்கவேண்டு மென்று பலவாறு வேண்டிக் கொள்ளக் கேட்டுக் கண்ணுவமாமுனிவர் சிரி த்து சிபிச்சக்கிரவர்த்தியை நோக்கி, ஓ! அரசர்க்கரசே! இப் போது நீர் சொல்லிய யாகஞ் செய்ய வேண்டி மானால் பாரங்கன் கணக்காகத்தங்கம் வேண்டும் எத்தனை பிராமணர்கள் வந்தபோதி லும் அவர்களை வணங்கி அவர்களிஷ்டப்படி தங்கத்தை மலைகளைப் போல குவித்துக்கொண்டு கொடுக்கவேண்டும், யாரையு மனது சங்கடப்பட்டுக் கொண்டு போகக்கூடாது. அதனால் யாகத்துக்கு லோபம் சம்பவிப்பது மன்றி முன்னின்று செய்விப்பவனுக்குந் தோஷம்வந்து சம்பவிக்கும், யாககர்த்தாவாகிய நீயும், நகரவேதனை யடையும்படியாக நேரிடும் ஆதலால், இவற்றுக்கெல்லாம் மனமே காரணமாக யிருப்பதால் நீயும் நின்பத்தினியும் யாகதீக்ஷையைவகி த்துக் கொண்டது முதல் பூர்த்தியாகிற பரியந்தம் பரிசுத்தமான மனத்தினையுடையர்களாகி பக்தி, விசுவாசம், பயம் இம்மூன்றை யும் தவறுதலின்றி மன சஞ்சலப்படாமல் யார்யார் எப்படிவிருப் பங் கொள்ளுகின்றார்களோ அவரவர்களுக்கு கந்தப்படிக்கி வெகுமகி ழ்ச்சியுடன் தான தருமங்களைச் செய்யவேண்டும் இவர்களென்ன இத்தனைபொருளைக் கேழ்க்கின்றார்களே யென்று மனதில் நினைத் தாலே போதுமானது வேறுவித அபசாரப்பட வேண்டியதில்லை இந்த ஒரு கேழ்விக்குமாத்திரம் தக்கபதில் சொல்லுவையேயாகில் உனக்கு யாகஞ்செய்விக்க முதன்மையாக விருந்து நிறைவேற்று கின்றேன். அப்படியே உமதிஷ்டப்படியே நடக்கின்றேன் என்று சொல்லித் திடங்கூறி சொற் சோவு படுவையேயாகில் யாகஞ் செய்விக்க முபன்ற நீயும் நின்மனைவியும், யாகத்தைச்செய்விக்க ஒப்புக்கொண்டுநடத்துகிற யானும் ஆகநாம் மூவரும் ரௌரவாதி நரகத்தையடையும்படிக்கி நேரிடும் ஆகையால், இப்போது யான் சொல்லிய விஷயங்களை யெல்லாம் தவராமலும் சொற் சோர்வு படாமலும், நடத்துவதா யிருந்தால் எனக்கொரு உறுதி வார்த்தை கூறுவையே யாகில் நீ சொல்லிய யாகத்திற் சூடன்பட்டு நடத்தி வைக்கின்றே னென்று மொழிந்த கண்ணுவரை வணங்கிச் சிபிச்சக் கிரவர்த்திச் சொல்லுகின்றார். கேளும் ஓ! ஸ்வாமி! தானஞ்செய் கிற விஷயத்திலும் வருகிற முனிவர்கள் விஷயத்திலும் யாதொரு குறைவுமின்றி, நடப்பதுடன் சொற்சோர்வு படாமலும் தாங்களை பபடி சொல்லுகின்றீரோ, அந்தப்படிக்கி என்னுடைய குருநாதன் மீது ஆணையாகத் தவறிநடப்பதில்லை அப்படிக்கி யான் இதசத்தி யத்தையுந் தவறிநடப்பேனே யாகில் இதினால் நேரிடும் பாபங்களை

ஸ்திரீகள் பக்தவிஜயமென்னும் உச

என் பத்னியும் தாங்களும் யானும் மூவருமன்றே அனுபவிக்கவே
ண்டியதாய் நேரிடுமென்றல்லோ மொழிந்தீர் அந்த பாபங்கள்
யாவும் உங்களிருவரையும் தொடராமல் யானொருவனே அனுபவிக்
கச் சம்மதிப்பட்டேன். ஆதலால் தேவரீர் தயவுசெய்து விரைவாக
எழுந்தருளி யாகத்துக்காக வேண்டிய சாமக்கிரியைகளை விவரமா
கத தெரியப்படுத்தவேண்டுமென்று முனிநாதரே என்று வேண்டிக்கொண்
டார். இந்தப்படிச்சித் தன்னை வணங்கி வேண்டிக்கொள்ளும் சிபிச்
சக்கிரவர்த்தியை நோக்கிச் கண்ணுவமாமுனிவர் அகங்குளிர்ந்து
முகமலர்ந்து, ஓ! வேந்தர் வேந்தே! நாளையதினம் பத்தாமிகைக்
குமேல் நல்லமுகூர்த்தகாலமாயிருப்பதால், அந்தவேளைகாலத்
தில் யாகத்திற்காக நேமித்திருக்கும் பூமியை உழுத போது கிடைத்த
எலும்புகள் முதலானவைகளில்லாமல் பரிசோதித்துத் திருத்திப்
பதறபோடுவித்தலையும் யான் நாளையதினம் அஸ்தமனத்திற்கு
வந்து சேர்ந்து அகவேண்டிய விஷயங்களையும் வெல்லாம் அருகிலி
ருந்து செய்விக்கிறேனென்று சொல்லி விடை கொடுக்கப் பெற்
றுக்கொண்டு சிபிச்சக்கிரவர்த்தி மந்திரிகளுடன் தன்னகரத்தை
யடைந்து மறுநாள் பத்தாமிகைக்குமேல் உத்தமமாகிய எருது
களிரண்டை கலப்பையிற் சேர்த்துக்கட்டித் தன்கையினாலே யோ
ட்டி விடித்துக் குடியானவனைக்கொண்டு யாகபூமி முழுவையும்
உழுது பரிசோதித்து ரோமங்கள்-எலும்புகள்-முதலானவற்றை
நீக்கிப் பரிசுத்தமாகச்செய்து கொட்டகைப்பந்தல் போடுவித்துக்
கண்ணுவமாமுனிவரை யெதிர்பார்த்துக்கொண்டிருக்கிறபோது,
அந்தக் கண்ணுவமாமுனிவரும் மாவரியுடன் தண்டகமண்டலங்க
ளுடன் சிவபெருமானைப்போல யெழுந்தருளினார். அவரைக்கண்ட
மாத்திரத்தில் சிபிச்சக்கிரவர்த்தி விரைந் தெதிர்சென்று அழைத்தி
வந்து தக்க ஆசனத்தில் யெழுந்தருளச் செய்து, சோடச உபசாரங்
களால் பூசித்து அவர் திருவடிகளில் விழுந்து தெண்டனிட்டு அவ
ரால் ஆசிகூலப் பெற்று முனிவர் ஆக்ஞைப்படி பத்துசிற்பிகள் கை
தேர்ந்தவர்களாய் வரைவழைத்து முனிவரிடம் விட்டனன். முனி
வரும் சந்தோஷித்து அவர்களை அழைத்துக் கொண்டு சிபிச் சக்
கிரவர்த்தியுடன் யாகபூமியை யடைந்து அந்தப் பூமியை அகல நிக
ளங்களாக் கணக்கிட்டு, வேதிகைகளாக் கட்டும்படி சிற்பிகள்மன
திற்படும்படி விபரமாகச் கூறிட சிற்பசாஸ்திரத்திற்றேர்ந்த சிற்பி
கள் கண்ணுவமாமுனிவர் சொற்படி அகளநிகள உயரக்கணக்கின்
அளவுக்கு வேதிகைகளைக்கட்டி முடித்து யாகசாலை யேற்பட்டு
த்தி அதற்குத் தக்க கூலியுடன வெகுமதிகளையும், பெற்றுக் கொ
ண்டு சென்றார்கள்.

பின்பு, மாவிலை-தோர்ப்பை-சமித்து-மலர்மாலைகள் - வாழை-
கமுகு முதலாயின தருவித்து யாகசாலையை யலங்கிருதஞ் செய்
வித்துப் பதினாயிரம் கணக்கான நெய்க்குடங்களையும் தேங்காய்-

பழம்-வெற்றிலைப்பாக்கு-சாம்பிராணி-கற்பூரம்-குங்குமம்-பஞ்சல் இவை யெல்லாம் அளவற்றனவாயும் லட்சம் கன்றுகளுடன்சேர்ந்த உத்தமமாகிய பசுக்களையும் லட்சக்கணக்காக பற்பலவஸ்திரதானங்களையும் ஒவ்வொரு குவியல் ஆரம்பாரமாக நூறு குவியல் தங்கம் மலைகளைப்போலவும் தருவித்து அதையதை வைக்கவேண்டிய விடங்களில் வைத்து, உத்தமமாகிய அழகும்குணங்களு மமைந்த லட்சங் கன்னிகைகளையும் வரவழைத்து, அங்கோர் கிடுதியில் விடுத்துவைத்து, அன்னதானத்திற்கு வேண்டிய வஸ்து சம்பாரங்களையும் மலைபோல் சேர்த்தோர் சத்திரமமைத்து வைத்தனர். இவ்வாறு முப்பத்திரண்டு அறங்களுக்கும் வேண்டிய வஸ்துக்களையெல்லாஞ் சித்தப்படுத்தி வைத்தவிட்டு சிபிச்சக்கிரவர்த்தியானவர் யாகத்திற்குக் கண்ணுவமாமுனிவர் எப்போது ஆரம்பிப்பாரோ வென்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தார் அப்போது, கண்ணுவமாமுனிவர் ஆகாயத்தை நோக்கி அங்கு கிரகதாரைகைகள் உச்சத்திலிருப்பதை யுணர்ந்து, சிபிச் சக்கிரவர்த்தியை நோக்கி, ஓ ! வேந்தர் கோமானே ! சீக்கிரமாக நீரும் உமதுமனைவியும் ஸ்ஞனஞ்செய்து சுசியாகி மடியாடையுடுத்தி பயபக்தி விஸ்வாசத்துடன் பகவந்நாமதியானஞ் செய்துக்கொண்டே யாகசாலைக்குள் வரவேண்டுமென்று நவிலக்கேட்டு சிபிச்சக்கிரவர்த்தி அகமுழுக மூமலர்ந்து ஆனந்த வெள்ளம் பெருகியோட உடலம் பூரித்து மயிர்க்குச்சிட்டு தன்னைமறந்து தலைவனிற் கலந்து ஒருமுகூர்த்த காலம் யாதொன்றும் குறியாமல் உலகவாழ்க்கையை மறந்திருந்து சுபாவம் வந்தவுடன் விரைந்தோடிச்சென்று அந்தப்புறத்தையடைந்து மனைவியைக் கண்டு ஸ்ஞனஞ் செய்யும்படி விண்டு உடனே, தானும் ஸ்ஞனஞ்செய்து சுசியாகி மடிவஸ்திரந்தரித்து திருமணி - ஸ்திரீ சூரணம் - அணிந்து பகவந்நாமபாராயணஞ் செய்துக் கொண்டிருந்தார் இதற்குள், மனைவியும் ஸ்னஞ்செய்து சுசியாகி மடியாடையுடுத்தித் தன்னுயகனை வலம் வந்து பணிந்து அவர் நியமனத்தின்படி பகவத்தியானஞ் செய்துக் கொண்டே பின் தொடர்ந்து நடந்து யாகசாலையைச் சேர்ந்த மாத்திரத்தில் கண்ணுவமாமுனிவர் சதிபதிகளைக் கண்டு அவர்கள் செய்யும் பக்திபரவசத்திற்கு மெச்சி இந்தயாகத்தினுலிவர்கள் இந்திரலோகத்தைக் கொள்ளை கொள்ளுவார்களென்று மதித்து அவர்களிருவரையும் சமீபத்தில் வரும்படியழைத்தார். அப்போதவர்களிருவரும் கண்ணுவமாமுனிவரைக் கிட்டி வலம் புரிந்து தீர்க்கமாக விழுந்து பணிய முனிவரும் அவர்களுக்காசி கூறி விதாயகபூசை நடத்தி யாகத்தைத் தொடக்கஞ்செய்வதற்கு முன்னம். சதிபதிகளிருவருக்குங் காப்புக்கட்டி யாகத்தைத் தொடங்கிசமித்துகளினுலும்-நெய்யினுலும்-பூர்ணாகுதியுண்டாகும் படிக்கும் யாகத்தினுற்பவிக்கும் புகையானது ஆகாயத்தை யணுகவும், யாகத்தைச் செய்துக கொண்டிருக்கையில்

பிருகு, வசிஷ்ட - விசுவாமித்திரர் - ஜாபாலி - மிருகண்ட வால்கில்
லிய சுகசௌனக - அத்திரிபரத்துவாஜ - விபண்டக - கௌதம -
வால்மீக - ரோமரிஷி - அஷ்டகோணரிஷி - என்று சொல்லப்
பட்ட - தேவரிஷி - ராஜரிஷிகள் - தங்கள் - தங்கள்சிஷியர்களுட
னும் அந்த யாகசாலைக்கு யெழுந்தருளக்கண்ட சிபிச்சக்கிரவர்
த்தி, எதிர் கொண்டு அழைத்து வந்து தக்க ஆசனங்கள் அவர்க
ளுக் களித்து சோடச உபசாரங்களும் செய்துப் பணிந்து
அவர்களால் ஆசிகூறப்பெற்றுக் களித்திருக்க வந்த முனிவர்கள்
யாவரும் கண்ணுவமா முனிவருக்குச் சகாயமாக யாகத்தில்முயன்
றிருந்தார்கள் இதற்குள் இன்னுமிருக்கப்பட்ட முனிவர்களில் ஒரு
வரேனும் பாக்கியில்லாமல் எல்லா முனிவர்களும் வந்து சேர்ந்து
யாகத்தை மெத்தவும் சிரத்தையுடன் நடத்திக் கொண்டிருந்தனர்.
அப்போது, பிரமவித்துக்களாகிய பிராமணர்கள் இவ்வளவுதா
னென்று கணக்கிட்டுச் சொல்லமுடியாதபடி யாகசாலைக்குள் வந்து
நிறைந்து கொண்டனர். அவர்களைக் கண்டு, சிபிச்சக்கிரவர்த்தி
மெத்த சந்தோஷமடைந்து யாவரையுமழைத்து அன்னதானம்
நடக்கும் இடத்தைக்காட்டி, ஓ! ஸ்வாமிகளே! இப்போது பதி
னேந்து நாழிகையாயிற்று இதுபரியந்தம் புசிக்காமலிருப்பது ஞாய
மல்ல, இந்த தோஷம் அடியேனை வந்தணுகும். ஆதலால், நீங்க
ளெல்லோரும் அன்னதானம் நடக்கும இடத்திற்குச் சீக்கிரஞ்
சென்று அறுசுவைகளுடன் கூடின அன்னம் புசித்து வாருங்க
ளென்று பணிந்தார். அப்படிப் பணிந்த சிபிச்சக்கிரவர்த்திக்கிப்
பிராமணர்கள் யாவரும் ஆசிகூறி பலவாறு புகழ்ந்து விடைபெற்
றுக்கொண்டு சென்று அன்னதானம் நடக்கும் இடத்தை யணுகி,
அங்கிருக்குஞ் சிப்பந்திகளால் பரிமாறிய யதேஷ்டமான கரிகாய்
வகைகளுடன் கூடிய அன்னம் புசித்து திரும்பி யாகசாலையை
யடைந்திருப்பதைக் கண்ட சக்கிரவாக்தி, அகமகிழ்ந்து அப்பிரா
மணர்களனைவோரையும், மெத்தவும் விநயமாக அழைத்து அங்கு
வீற்றிருக்கும்படி செய்து சிப்பந்திகளை யழைத்து இதோ இங்கு
வீற்றிருக்கும் பிராமணர்கள் யாவருக்கும் வேண்டியமட்டும் சிற்
றுண்டி பலகாரங்களுடன் மோருங் கொண்டு வந்து கொடுங்க
ளென்று கட்டளை யிட்டார் அப்படியே அச்சிப்பந்திகள் மோர்
குடங்களுடன் வேண்டிய மட்டும் பலகாரவகைகளை அனேகம்
பொற்றும்பாளங்களிலெடுத்துக் கொண்டு, வந்து எவரெவர்கள்
என்தெந்த பலகாரங்களின்மீது இச்சைகொண்டு கேழ்கின்றார்களோ
அவரவர்களுக்கு அந்தந்தப் பலகாரங்கள் வேண்டு மட்டு மளித்து,
யதேஷ்டமாக மோருங்கொடுத்து அருந்தச் செய்து உபசரித்
தார்கள். அப்பிராமணர்கள் யாவரும் வெகு சந்தோஷத்துடன்
பலகாரங்களுடன் மோரையும் புசித்து ஆசாசந்தீர்ந்து சிபிச்சக்
கிரவர்த்தியின் நற்குணங்களைப் வெகுவாகப்புகழ்ந்து கொண்டாடி

வேதபராயணஞ் செய்வதாயினர். அந்த, ஓசையானது அயோத்திமா னகரமெங்கும் பேரொலியெழித்தது. இப்படி யந்தயாகத்தை வெகு சிறப்பாக ரிஷிகளும் பிராமணர்களு மிருந்து கடத்தி பூர்ணாகுதிகொடுத்து நிறைவேற்றி சந்தோஷசாகரத்தினில் மூழ்கினவர்களாகி கோலாகல மடைந்திருக்கிற போது, கண்ணுவமாமுனிவர், சிபிச்சக்கிரவர்த்தியை நோக்கி ஓ சக்கிரவர்த்தியே இனியாதொரு தடையுமின்றி யுன்மனதினி லுதிக்கும் உத்தேசத்தின்படி தானங்கள் செய்யக்கடவாயென்று நியமிக்க அந்திய மனத்துதக் கேட்டு சிபிச்சக்கிரவர்த்தி உத்தமியாகிய தன் மனைவியை அழைத்துக் கொண்டு தானங்களுக்குறிய வஸ்துக்களிருக்கு மிடத்தைச் சேர்ந்து தன்கையினில் எள்ளை வைத்துக்கொண்டு தன்மனைவியை தீர்த்தம் விடச்சொல்லி கிருஷ்ணார்ப்பணமென்று சொல்லி தானஞ் செய்யநியமித்திருக்கும் ஒவ்வொரு வஸ்துவின் மீதும் தெளித்து தத்தம்பண்ணி பிராமணர்களையும் முனிவர்களையும் அழைத்து ஓ! ஸ்வாமிகளே! இதோயிருக்கும் கன்றுடன் கூடின உத்தமபசுக்களில் யாராருக்கெந்த கோவும் கன்றின்மீதிலிச்சையோ அவரவர்களந்தந்த் கன்றுடன் கூடின கோவைப் பிடித்துக்கொள்வதுடன் பூதானம், சொர்னதானம், வஸ்திரதானம், கன்னிகாதானம், என்றுசொல்லப்பட்ட மூப்பத்திரண்டு தானங்களையும், உங்களுங்கள் மனதின்படிக்கிக் கொண்டு போகலா மென்று பிரியமாக மொழிந்தார்.

அப்பிரிய வசனத்தைக்கேட்ட பிராமணர்களும் ரிஷிகளும் மெத்த சந்தோஷ மடைந்து ஒவ்வொருவரும் கன்றுடன் கூடிய கோவு ஒன்று, கன்னிகையொன்று ஆறுகாணி பூமி உயர்ந்த பட்டு பீதாம்பரங்களிரண்டு, சுமக்கத்தக்கின மட்டு தங்கமும் எடுத்து மூட்டைகட்டிக்கொண்டு இன்னுமுள்ள தானங்கள் யாவும் பேற்று விடைதரப் பெற்றுக்கொண்டு போகிற பிராமணர்களையும் முனிவர்களையும் சிபிச்சக்கிரவர்த்தி வணங்கி, ஓ! ஸ்வாமிகளே உங்கள் யாவருக்கும் சந்தோஷமாயினதா இன்னுமிவைகளில் யேதாகிலும் வேண்டியிருந்தால் மனம்போல் எடுத்துக்கொண்டு போகலாம் யான் தடை சொல்வதில்லை என்மீது தோஷஞ் சொல்லவேண்டாம் என்று பணிவுடன் பகரக்கேட்டு அப்பிராமணர்களும் முனிவர்களும் சக்கிரவர்த்தியை நோக்கி, ஓ! வேந்தர்கோமானே சகலவேத சாஸ்திரங்களில் வல்லவரும் நிர்மலக்ஞானவைராக்கிய சம்பன்னர்களும் காமயோகத்தில் விற்பன்னர்களும் பிரபன்னர்களும் தருமாத்துமர்களும் நற்குணங்களிற் சிறந்தவர்களுமானபெரியோர்களும், உமக்கிணையாவர்களோ நற்குணம் பொறுமை சாந்தம் தயாளம் இவைகள் பொருந்திய உம்மைப் போன்ற ராஜர்களிலெரு வரையும் நாங்கள் கண்டதில்லை ஆஹா! ஹா இப்படிப்பட்ட கொடையா

ளியாகிய உம்மைப் புகழ்ந்து கொண்டாட ஆயிரம் நாவும்படைத்த ஆதிசேடனாலு மகாதென்றால் எங்கள் ஒருநாவினா லென்ன வாகும். ஓ! வேந்தர்சிகாமணியே! முன்னம் உங்கள் குலத்தினில் பிரகலாதனென்றோர் புண்ணிய சீலன் மெத்த பக்தியிற் சிறந்தவனாகியிருந்து வெகு காலம் அரசாண்டிருந்து முடிவில் பரமபத சாம்பிராஜ்ஜியத்தை யடைந்தனன். அந்த மகாபாவரைப்போல நீரும் நற்கீர்த்தியைப் பெற்று தேவ சம்பத்தையடைந்து வெகுகாலம் தேவலோகத்தை யாண்டு கொண்டிருக்கக் கடவீரென்று வாழ்த்தினர்.

சிபிச்சக்கிரவர்த்தி களிசாகரத்தினில் மூழ்கின வராகிப் பிராமணர்களையும் முனிவர்களையும் நோக்கி, ஓ! பரமசாதுக்களே! இந்த யேழையையு மொரு பொருளாக் மதித்துப் புகழ்வது நீதியோ, வென்று தாழ்ந்து வசனித்து இப்போது நடத்திய யாகத்தைப்போல் இன்னும் தொண்ணூற்றி யொன்பது யாகம் செய்ய வேண்டியதா யிருப்பதால் அவற்றையும் இப்போ தங்களுக் குண்டாகிய சந்தோஷ்டியைப்போல அடியேன்மீது கிருபைகூர்ந்து எழுந்தருளி முற்றிலும் நிறைவேற்றி வைத்து ஏழையேனைப் புனிதனாகச் செய்ய வேண்டுமென்று வேண்டிக் கொண்டார். அதற்கந்த முனிவர்களும் பிராமணர்களும் களித்து சக்கிரவர்த்தியை நோக்கி ஓ! முடிவேந்தர் சிகாமணியே தங்களிஷ்டப்படியே யாங்க ளெல்லோரும் வந்திருந்து யாகத்துக்கொரு விக்னமும் நேரிடாமல் பூர்த்தி செய்து தங்களைப் புனிதராகச் செய்வதுமன்றி, அற்பமாகிய சொர்க்கலோகவாழ்க்கைக்காகிலுஞ் மெத்தசிரேஷ்டமாகிய பேரின்ப வாழ்க்கையையடையும்படிச் செய்விக்கிறோம் இதற்காகத் தாங்கள் சிறிதேனும் அதைரியப்படவேண்டாம் தைரியத்துடன் மேல் நடக்கவேண்டியதற்காகும் உபகரணங்களைச் சித்தப்படுத்தி வைத்துக் கொண்டிரும் நாங்களும் மறுபாகத்திற்குவந்து சேருகின்றோமென்று கூறிச் சென்றார்கள். பிராமணர்களும் முனிவர்களுஞ்சொல்லிச்சென்ற பின்பு சிபிச்சக்கிரவர்த்தி அப்போதே பேரின்ப வாழ்க்கையைப் பெற்றதைப்போலப் ஆனந்தம் பிரம்மானந்தமென்னும் இரண்டையுங் கடந்து பரமானந்த மடைந்தவராகி யாகதீக்ஷை மேற்கொண்டு மேல் நடக்கவேண்டிய காரியங்களில் ஊக்கமுடையவராகியிருந்தனர். இதற்குள் கண்ணுவமாமுனிவர் யாகசாலையை விட்டுப் புறப்பட்டுச் சரயூநதியை யடைந்து ஸ்நான அனுஷ்டானங்களை முடித்துக்கொண்டு நதியை விடுத்து வெளிப்பட்டு வரும் வழிமார்க்கத்தில் முனிவர்களும், பிராமணர்களும், சிபிச்சக்கிரவர்த்தியுடைய உத்தம குணங்களைப்பற்றி ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டே போவதைக் கேட்டு களிப்படைந்து இந்த சக்கிரவர்த்திபின் குணமெப்படியிருக்குமோ வென்று சந்

தேகங்கொண்டிருந்தோம். இவர்கள் பேசிக்கொண்டு போவதைக் கவனித்தால் இச்சக்கிரவர்த்தி சத்தியசந்தனும், உத்தமகுணங் கள்யாவுந் திரண்டோருருவாய் உதித்தவனைப்போல விளங்கின் றது. இதனால் யாகவேதிகை முன்னமிருந்து மந்திராலோபம் கிரி யாலோபமின்றி நடத்துகிற நமக்கும் யாக கர்த்தர்களுக்கும் யா தொரு கெடுதியும் நேரிடாதென்று தன்மனதில் தீர்மானித்துக்கொ ண்டு வெகு சீக்கிரமாகநடந்து யாகசாலைக்குட்சென்று பூசைமுடி த்து கனிவர்க்கங்களைப்புசித்து ஜலமருந்தி சிறிதுநேரம் ஆயாசந் தீர்ந்து அருகினி லுபசரித்துக் கொண்டிருக்கும் சக்கிரவர்த்தியை நோக்கி, ஓ! பரமசாதுவே யான் உம்முடைய குணாதிசயங்களைப் பற்றி என்னமோ ஏதோவென்று சந்தேகங் கொண்டிருந்தேன் அச்சந்தேகமானது சரயூ நதிக்குச்சென்று யான் ஸ்நான அநுஷ் டானங்களை முடித்துக்கொண்டு வருகிறபோது வழியில் முனிவர்க ளும் பிராமணர்களும், உன்னுடைய குணாதிசயங்களைப்பற்றிப் பே சிக்கொண்டு போவதை யுணர்ந்தவுடன் நின்மீது எனக்குற்ற சந் தேகமானது நீங்கி மெத்தப் பிரியமுண்டாயிற்று, இத்தன்மை போலவே முற்றிலும் நடந்துகொள்வாயாகில் தேவசம்பத்தைப் பார்க்கிலுஞ் சிறந்த வைகுந்த சாம்பிராச்சியத்தை யடைந்து நித் திய குரியர்களுடன் கலந்திருக்கும்படிச் செய்விக்கிறேனென்று நவிலக்கேட்டு, சக்கிரவர்த்தி கண்ணுவமா முனிவரை நோக்கி ஓ! ஸ்வாமி! அடியேனையாண்டு ரக்ஷிக்க இவ்வுருக்கொண்டுவந்த தெ ள்ளமுதே தெவிட்டாத பேரின்ப வாழ்வே! பக்தியிலும், புதியி லும், மிகச் சிறியனான இவ் வேழையின் மீது கிருபா நோக்கம் வைத்து ரக்ஷிப்பது உமது பாரமாகும் என்று கூறிப் பணிந்தார். கண்ணுவமாமுனிவர் அவரை ஆதரித்து உன்னிஷ்டப்படியே நடக் கக்கடவது என்று ஆசிகூறி இரண்டாவது யாகத்தைத் தொடக் கஞ்செய்து விநாயக பூசை நடத்தி அக்கினியை யாககுண்டலத் தில் வளர்த்தி சமித்துகளை அக்கினியில் மந்திரபூர்வமாக இட்டு நெய்யைக்கொண்டு அதில் விடுத்து சங்கல்பஞ்செய்து சோனமாரி போல ஆகுதியில் நெய்யை விட்டு வேத மந்திரங்களால் தோத்தி ரஞ்செயதுக் கொண்டிருக்கையில் பிராமணர்களும் முனிவர்களும் வந்து யாகசாலையைச்சேர்ந்து முன்போலவே வேதபாராயணகோ ஷ்டம் செய்துகொண்டுமூப்பதுநாட்களில்இரண்டாவதுயாகத்தை முடித்தார்கள். அப்போது சிபிச் சக்கிரவர்த்தி முனிவர்களுக்கும், பிராமணர்களுக்கும் கணக்குமிதமில்லாமல் சகல தானங்களும்செ ய்து யாவரையும் மெத்த வினயமாக வணங்கி நின்றார். அதுகண்டு எல்லோரும் அச்சிபிச் சக்கிரவர்த்திக்கி ஆசிகூறி சகல தானங்களும் பெற்றுக்கொண்டு அவரவர்களிருப்பிடஞ் சேர்ந்தார்கள் இவ்வாறு தொண்ணூற்றொன்பது யாகங்களை முடித்து நூறுவது யாகத்தைத் தொடங்கி நடத்திக் கொண்டிருக்கையில், திரிலோக சஞ்சாரியா

திய நாரதமாமுனிவர் அந்த யாகசாலைக்குள் புகுந்தார். அவர் வரவைக்கண்ட சிபிச் சக்கிரவர்த்தி எதிர்கொண்டழைத்துவந்து தக்க ஆசனத்தின் மீது வீற்றிருக்கச்செய்து சோடச உபசாரங்களும் புரிந்து விழுந்து பணிந்து எழுந்து நின்று சிரசின்மீது கைகுவித்துக்கொண்டு பற்பலவாறு தோத்திரஞ்செய்ய நாரதர் புகழ்ந்து ஆசி கூறி ஓ! வேந்தர் வேந்தே! உன்னுடைய பக்திக்கும் நீ செய்யும் யாகத்தின் பெருமைக்கும் மெத்த சந்தோஷமடைந்தேன். நீ மெத்தப் புண்ணிய புருஷனாகையால் செய்விக்க அரிதாகும் இந்த யாகத்தில் மனதைச் செலுத்தித் தொண்ணூற் றொன்பது யாகங்கள் செய்துமுடித்ததாய் பாபிகளுக்கு எத்தனை பொருளிருக்கினும் அரிதாகிய இந்த யாகத்தை செய்விக்க தானதருமங்கள் நடத்த மனம்பொருந்துமோ! ஒருக்காலும் பொருந்தமாட்டாது, ஓ! பக்தசிகாமணியே! சொல்வதற் கரிதாகிய பதவியை நீ அடையக் கடவாயென்று மொழிந்து விடைபெற்றுக்கொண்டு சொர்க்கலோகத்தையடைந்து தேவராஜனால் பூசிக்கப்பட்டு தேவேந்திரனுக்கு ஆசி கூறி இந்திரனோக்கி, ஓ! தேவர் கோமானே! நினக்குரிய சொர்க்கலோகாதிபத்தியத்தைச் சிபிச்சக்கிரவர்த்திதானடைய வேணுமென்று கருதி, யாகங்களிற் சிறந்த விஸ்வஜ யாகங்கள் தொண்ணூற்றொன்பதும் பூர்த்தியாகச் செய்து முடித்து நூறுவது யாகத்தை ஆரம்பித்து நடத்திக்கொண்டிருக்கின்றான். இந்த யாகமும் பூர்த்தியாய்விட்டால் அந்த சிபிச்சக்கிரவர்த்தி இந்த தேவலோகத்தை யாளுவானென்பதற்குச் சந்தேகமேயில்லை, இந்த யாகம் முடிவுபெறுவதற்கு முன்னமே தக்க யோசனை யூகித்து யாகத்திற்கு விக்கினம் நேரிடும்படிக்கிச் செய்வித்தாலே இந்த சொர்க்க லோகத்தை இன்னுஞ் சிலவருடகாலம் நீ ஆண்டுக்கொண்டிருக்கலாம். அப்படிச் செய்யாவிடில் சிபிச் சக்கிரவர்த்தி இந்த தேவலோகத்தை யாளுவானென்பது திண்ணம். நீ எனக்கு மெத்தப் பிரியனாகையால் உனக்கு நேரிடுங் கஷ்டத்தைக் காண்பதற்கு மனந்தாளாமல் முன்னுதாக உனக்குத் தெரியப்படுத்தினேன். அப்புறம் நின்னிஷ்டமாகும் என்று கவின்று, விடைபெற்றுக்கொண்டு இஷ்டபடி சென்றார்.

தேவேந்திரன் மந்திராலோசனைசெய்து தக்க சூசனையை ஏற்படுத்திக்கொண்டு அக்கினிதேவனை யழைத்து ஓ! அக்கினி தேவனே! நீ சீக்கிரம் புறாவடிவங் கொள்ளும் யான் வல்லூறு பரவையாகின்றேன். புறாவடிவமெடுத்த நீ வல்லூறு பரவையாகிய என்னால் பிடிக்கப்பட்டு தந்திரமாய் விடுவித்துக்கொண்டு போகையில் என்னுடைய நகங்கள் பட்டு நின்தேகத்தில் காயம் நேரிட்டு அந்த காயத்திலிருந்து உதிரம்பெருகி வருவதைப்போல, அபிநயித்துக் கொண்டோடி சிபிச்சக்கிரவர்த்தியின் யாகசாலைக்குள் புகுந்து

அபயம் அபயம் என்று சொல்லிக்கொண்டே சென்று அந்த சிபிச் சக்கிரவர்த்தியின் திருவடிகளில் விழுந்து சரணாகதியடையவே யாகில் அந்த வேந்தர் வேந்தன் மெத்தவும் பூதகயை, பச்சாத்தாப முடையவனுதலால் அபயஸ்தங்கொடுத்து உன்னை எடுத்து ஆதரித்துவைத்துக்கொள்ளுவன பின்பு யான் வந்தமற்றவிஷயங்களைப் பேசி தந்திரமாய்யாகத்தை விக்கினப்படுத்தகிறே னென்று சொல்லி வாய்மூடி முன்னமே அக்கினிதேவன் புராவுருவமெடுத்து வல்லூறு பக்ஷியால் அடிக்கப்பட்டு உதிரம்பெருகியோடி வருவதைப் போல அபிநயித்துக்கிளம்பி அப் புராவானது சிபிச் சக்கிரவர்த்தியிருக்கும் யாகசாலைக்குட் புகுந்து அபயமபயமென்று முறையிட்டுக்கொண்டே சென்று அவர் திருவடிகளில் விழுந்து சரணாகதியடைந்தது சிபிச் சக்கிரவர்த்தி திடுக் கிட்டெழுந்து இப்புராவின் தேகத்தில் காயம் பட்டிருப்பதுடன் உதிரமும் பெருகி வந்துக் கொண்டிருக்கின்றது எவர்களா லிந்த ஆபத்து நேரிட்டதோ யென்று தயாளமுண்டாகி உடனே அப்புராவுக்கு அபயங் கொடுத்து அதைத் தன் கைகளா லெடுத்து திரேகம் யாவும் தடவிக் கொடுத்து உளுந்து பச்சைப் பயிரை ஆகாரங் கொடுத்து தண்ணீர் அருந்தவைத்து சிறிது நேரங் கழிதீர உபசரித்து உடனே அப்புராவை நோக்கி, ஓ! புராவே நின் திரேகத்தினில் காயமும் அக்காயத்திலிருந்து உதிரமும் பெருகும்படி உன்னை யடித்தவர்கள் யாவர் இப்படி யுன்னை யடிக்கவேண்டிய காரண மென்ன வொளிக்காமல் நடந்தவுண்மையைச் சொல்லுமென்ற அரசனை நோக்கி, அப்புரா வானது ஓ! முடிவேந்தர் சிகாமணியே! அடைக்கலம்புகுந்தவர்களை ஆதரிக்கும் பரம்பாவன குணக்கனியே தொண்டர்களிற்சிறந்த பூமண்டலாதிபதியே ஜீவகாருண்ய விரதசீலரே தன்னுயிரைப்போல் மனனுயிரைக் காக்கும் தயாளரே! இப்போதெனக்கு நேரிட்ட ஆபத்தை என்னென்று சொல்லுவேன் அதை நினைத்துக் கொண்டால் திரேகம் யாவும் நடுநடுங்குகின்றது திரேகத்தைவிட்டு உயிர் பிரிந்து போகும் போலத்தோன்றுகின்றது. ஆ! ஹா! ஹா! இப்போது யான் தப்பித்துக்கொண்டு வந்தது எப்படியாகுமென்றால் புலியின்வாயி லகப்பட்டுக்கொண்ட ஆடானது சித்தங்கலங்கி தெய்வத்தைத் துதித்து மூன்ஜென்மத்திற் செய்த புண்ணிய பலத்தின் சுபாவத்தினால் எதோ ஒருவகையாற் உயிர்பெற்று வந்ததைப் போலாகும் அதின் மர்மத்தை வெளியிட்டு சொல்லலாமென்றால் உடல நடங்குகின்றது, நாவுலர்ந்து போகின்றது, கண்கள் சுழலமிடுகின்றது, காதடைக்கின்றது பயமோ இவ்வளவவ்வளவென்று சொல்ல முடியாது என்று சொல்லிக்கொண்டே பூமியின் மீது விழுந்து கடகட வென்று புரளத் தலைப்பட்டது அதுகண்டு சக்கிரவர்த்தி அப்புராவையெடுத்து ஆதரித்து நீ பயப்படவேண்டாம் உன்னுயிரைக்காக்கும் பொருட்டு என்னுயிரையேனும்

கொடுப்பேனென்று முன்னமே யானனக்கு அபயஸ்தம் கொடுத் திருக்கும்போது நீ பயப்படவேண்டிய காரணமில்லை, நடந்த செய் தியை சீக்கிரம் சொல்லுமென்று நவின்று, அங்கிருக்கும் தூதனை யழைத்து அடா தூதனே! நீ சீக்கிரமாக ஓடி அந்தப்புரத்திலிரு க்கும் கிளி கூண்டுகளில் காலியா யிருக்கும் கூண்டி லொன்றை யெடுத்தோடி வாக் கடவாயென்று கட்டளையிட்டார். அந்தத் தூதனும் சக்கிரவர்த்தியின் சொற்படி விரைந் தோடிச் சென்று அந்தப்புரத்தைச் சேர்ந்து சொன்ன மயமாகிய கூண்டொன்றை எடுத்தோடிவந்து அரசனருகில் வைத்தான். அதைக் கண்டு அர சன் புராவைப்பிடித்து அக்கூண்டினி லடைத்து இனி யுனக் கெந்த ஆபத்தும் நேரிடாது நடந்த செய்தியை பயமின்றி சொல் லக்கடவாயென்று வினவ, அந்த மாயப் புராவானது சக்கிரவர்த் தியை நோக்கி, ஓ! உத்தமகுணங்களிற் சிறந்த சக்கிரவர்த்தியே! கேளும், இன்றுகாலையில் குஞ்சுகளுடன் அடைந்திருந்த எனது கூ ண்டைவிட்டெழுந்து குஞ்சுகளைக் கூண்டைவிட் டெங்கும் போகா திருக்கும்படி புத்திமதி சொல்லி ஆகாரத்தின்பொருட்டு வெளி யில்வந்து கிளம்பி காடுக ளெல்லாம் திரிந்தும் ஆகாரம் அகப்ப டாமையால் குஞ்சுகளெல்லாம் பசியினால் வாடித் தவித்துக் கூண் டின் மூகப்பி லிருந்தபடியே என் வரவை எதிர்பார்த்துக்கொண் டிருக்குமே இதற்கென்ன செய்கிறது என்று ஆலோசித்து வே றொரு காட்டை நாடிப்போகிறபோது ராஜாளியென்றும், டேகை யென்றும், இரண்டுபெயர் வகித்த ஒருபறவையானது திடீலென்று எங்கிருந்தோவந்து கூர்மையுள்ள நகங்கள் பொருந்திய தன் னுடைய இரண்டு கால்களாலும் என்னைப் பிடித்து இப்படி அப்படி அசையவொட்டாமல் கொண்டுபோகிறபோது யான் பட்ட கஷ்ட த்தைச் சொல்லிமுடியாது ஒரு ஜெந்துவை மூப்பிரி கயிற்றினால் யிருக்கிக் கட்டிவிட்டால் என்னபாதை யடையுமோ அப்படிப்ப ட்டவேதனை யெனக் குண்டாயிற்று எப்படி விடுவித்துக் கொண்டு போகப் போகிறேனென்ற ஏக்க மிகுதியுடன் குஞ்சுக ளென்ன பாடுபடுகின்றதோ வென்றும் இன்னும் சிறகுகள் நன்றாய் முளை த்து வரவில்லையே எப்படி ஆகாரம் மேய்ந்துவரும் என்றும் பல வாறு தக்கித்தக்கொண்டே யிருந்து அந்த டேகை கொஞ்சம் பிடியைத் தளர்விட்டதை யுணர்ந்து சடாலுமென்று அப்பிடியை விடுவித்துக்கொண் டோடோடியும் வந்து உம்மைச் சரணதி யடைந்தேன் பயத்தையுந் துறந்தேன். அந்த டேகைப் பறவையா னது என்னைப் பின்றொடர்ந்து பின்னே தரத்திக்கொண்டு வந்த மையால சமீபத்தி லெங்கையோ பதுங்கிக்கொண் டிருக்கிறதெ ன்று எண்ணுகிறேன் ஐயனே என் குஞ்சுக ளென்னமாயிற்றோ அதற்கு உணவுகொடுத்துக காப்பாற்றும்படியான பொருப்புடை யவர்கள் ஒருவருமில்லையே இதற்கு நானென்ன செய்வேனென்று

சிந்தித்தக்கொண் டிருக்கும் புராவின் கபடவஞ்சக மொழிகளெ யெல்லாம் அந்த சிபிச் சக்கிரவர்த்தி உண்மையென்றே கருதித் தானும் விசனப்பட்டுக் கொண்டிருந்தார். அப்போது, தேவேந் திரனவன் ராஜாளி யென்னும் டேகை யுருவமெடுத்து, மெத்த வும் அலண்டு சரணடைந்ததைப் போல அபிநயித்துக் கொண்டே சிபிச்சக்கிரவர்த்தியின் யாகசாலைக்குட் புகுந்து சக்கிரவர்த்தியை நோக்கி ஓ ஐயனே! ஜீவகாருண்ய பச்சாத்தாபமுடைய மெய் யனே! அளவிறந்த தானஞ்செய்த கையனே! உத்தமர்களிற் சிறந்திடுந் துய்யனே! உம்மிடத்தினில் அதோ கூண்டுக்குள்ளிருக் கும் புராவைக்கொன்று தின்னவேணுமென்று ஆசைமிகவு முண் முண்டாகி அனேகநாளாய் காத்திருந்தேன் இப்படிகாத்திருந்த என்கைக் கெட்டினது வாய்க் கெட்டாமற்றப்பித்துக்கொண்டு ஓடிவந்தவிட்டது அதெப்படியெனில் இன்றையதினம் சுமார் பத்துநாழிகைக்குமேல் இப்புராவானது அதிவேகமாகப் பரந்து வருவதை யானொரு மரத்தின்மீதிருந்து பார்த்துக்கொண்டேயிரு ந்து சமீபித்தபோது யானும் வெகுவேகமாகக்கிளம்பி இப்புரா வின் பின்தொடர்ந்துச் சென்று இரண்டுகால்களாலும் பற்றிப்பி டித்து நழுவிடாமல் கொண்டுபோய் என்னிருப்பிடஞ் சேர்ந்து இப்புராவைக்கொன்று தின்று ஆசைதீரலாமென்றும் அனேகநா ளாயவெண்ணம் இன்று நிறைவேறும்படிக்கி பகவான் கிருபை செய்தனரென்றும் அதிக சந்தோஷத்துடன் இருப்பிடம் நோக்கி அதிவேகமாகச் செல்லுகையில் இப்புராவானது என்னுடைய பிடியைத் தன் வீரத்தினால் தளரச்செய்து மெல்லன சமயம்பார் த்து நழுவிக் கெட்டேன பிழைத்தே னென்று தப்பித்துக்கொண் டோடிவருகிறபோது என்னுடைய கால்களின் நகங்கள் இதின் திரேகத்தை இரண்டு பக்கமும் பத்தலாகக் கிழிக்கப்பட்டு உதிரம் பெருகிட யோடிவந்து விட்டது. ஆகலால், இப்போது நெடுநேர மாயிற்று யானே இப்புராவைப் பிடிக்கும் பொருட்டு மெத்தசிரம மெடுத்துக்கொண்ட படியால் இளைப்பும் ஆயாசமு மேலிட் டிருப் பதிடன் பசியோ அகோரமாகி என்னை வேதனை செய்கிறது மன்றி காதடைத்துக் கண்கள் சுழலமிடுவதால் தாங்க லிந்த புராவை யளிப்பீரேயாகில் இதைக் கொன்று தின்று என் பசியாறுவேனென் றும் சொல்லும் ராஜாளிப் பாவையை நோக்கி சிபிச்சக்கிரவர்த்தி சொல்லுகின்றார். ஓ! பாவை வேந்தனே! இந்தப் புராவைப்போ லொத்த வேறு புராவைத் தருகிறேன். அதைக் கொன்று தின்று நின் பசியைத் தீர்த்துக்கொள்ளு மென்றனர் அதற்கந்த ராஜாளி ஓ! வேந்தர் வேந்தனே! வேறு புராக்கள் ஆயிரங் கொடுத்தபோதி லும் யான் புசியேன். அனேக நாளாய் இச்சைப்பட்டிருந்த இந்த புராவைக்கொடுத்தால் கொன்றுதின்று என் பசியாறுவனேயன்றி வேறு புராக்களைப் புசித்தபோதிலும் எனக்குற்ற பசியுந்தீராது

மனதுக்குத் திருப்தி யாகவு மிராது ஆகையால் இந்தப்புராவைக் கொடுத்து என் பசியை யாற்றுகிறீரா அல்லது உம் சமுகத்தினி லென்னுயிரை மாய்த்துக் கொண்டு இறந்து போக நிச்சயித் திருக் கின்றேன் உமது கருத்தென்ன் சீக்கிரஞ் சொல்லுமையா வென்று சினமிகுத்துக் கடுமையாக மொழியும் ராஜாளியை நோக்கி சிபிச் சக்கிரவர்த்தி மொழிகின்றார். கேளும் ராஜாளிப் பரவையே இந் தப் புராவை யன்றி, வேறெந்த வஸ்துவைக்கேட்ட போதிலுந் தடையின்றித் தருவேன் என்னுயிர் நீங்கலும் இப்புராவை யுண க்கு யான் கொடுப்பே னென்று கனவிலுங் கருதவேண்டாம், அன் றியும் இப்புராவானது எனை யடைக்கலம் புகுந்தபோது யானத ற்கு அபயஸ்தங் கொடுத்து ரக்ஷிக்கின்றேனென்று உறுதிகூறி யிருப்பதாலும் இப்புராவை யானுனக்குக் கொடுப்பேனே யாகில் என்னைப்போன்ற வேந்தர்க ளென்னை யென்ன மதிப்பார்கள் மே லும் யான் அசத்தியவானுகிறது மன்றி, சூரிய சந்திராதிகளுள்ள நாள் வரைக்கும் எனக் கபகீர்த்தியே யன்றி, கீர்த்தி யுண்டாவ தில்லை யாதலால் இப்படிப்பட்ட அபகீர்த்தி யெனக்கு சம்பவிப்ப தடன் ரௌரவாதி நரகத்துக் காளாக வேணும் இதிலுள்ள நன் மை தீமைகளை நன்றுயோசித்து நின் மனதைத் திடப்படுத்திக் கொ ண்டு வேறெந்த வஸ்துவைக் கேட்டபோதிலுங் கொடுத்து நின் பசிதீரச் செய்வனே யன்றி, புராவை மாந்திரங் கொடே னென் றுத் திடமாக மொழியும் சிபிச்சக்கிரவர்த்தியின் மனோதிடத்தை யுணர்ந்து தேவேந்திரனுகிய ராஜாளிப்பரவை கூறுகின்றது. ஓ! மெய்ஞ்ஞானம் நிறைந்தமெய்யனே! என்னைப்போன்ற யேழைப் பரதேசிகளுக்குத் தந்தையைப்போன்ற என்னையனே! மன்னுயி ரைத் தன்னுயிர்போலக் காக்குந் துய்யனே! அளவிட்டுச் சொல்ல ப்படாத வேதியர்களுக்கும் முனிவர்களுக்கும் யீவியளத்தகை யனே! எத்தனையோ கோடான கோடி பேர்கள் மனதைச் சந் தோஷிக்கச்செய்த தாங்கள்என் னொருவனுடைய மனதை மாத் திரம் துக்கமடையச் செய்வதால் நீர் செய்யும் யாகத்திற்கு விக்கி னம் வந்து சம்பவிக்கு மல்லவா இந்த விக்கினத்தினுல் யாகஞ் செ ய்யு மவர்களுக்கும் யாகம் செய்விப்பவர்களுக்குங் கொடிய தோ ஷமுண்டாகி அந்த தோஷத்திற்காக ரௌரவாதி நரகத்தை யடைய வேண்டியதாய் நேரிடும் இந்த அற்பவஸ்துவாகிய புராவின் பொரு ட்டு சொல்லுதற் கரிதாகிய கஷ்டத்தைப்பட்டு நூறு யாகங்கள் செய்து முடித்து அதன் பலனை யனுபவிக்காமல் வீணிலேன் போக் குகின்றீர் என்னிஷ்டத்தின்படி புராவைக் கொடுத்து எனக்குண் டாயிருக்கும் பசியைப் போக்குவீரே யாகில் தாங்கள் கொண்ட கோரிக்கையின்படி நூறு யாகங்களின் பலனுகும் சோர்க்கலோக வாழ்வைப் பெற்று தேவசிங்காதனத்தின்மீது இனிது வீற்றிருப்பீ

ராக வென்று மொழிந்த ராஜாளிப் பரவையை நோக்கி சிபிச்சக்கிர வர்த்திப் பின்னுஞ் சொல்லத் தொடங்கினார்.

கேளும் ராஜாளிப் பரவையே ! இனி யெனக்குப் பிராப்தமா கப் போகிற சொர்க்கலோக வாழ்வும் இப்போதெனக் குண்டா பிருக்கும். இவ்வுலக வாழ்க்கையும் மற்று முள்ள யானை குதிரை சேனை பண்டு பண்டாரங்கள் யாவையும் கேழ்க்கினுங் கொடுப் பனே யன்றி புராவை மாத்திரம் என்னுயிர் நீங்கினும் உனக்குக் கொடேன் இதை யுண்மையெனக் கருதக் கடவாய் மேலும் நீ சொல்லியபடியாக பலனுங் கிட்டாமல் ரௌரவாதி நரகத்தை படைந்தாலும் அடைவேனே யல்லாமல் என் மனமார இப்புராவை யுணக் குணவாகும்படிக்குக் கொடேன் என்று கடுமையாக மொழி வதைக் கேட்டு அந்த ராஜாளிப் பரவை இனியா னென்ன செய் வேன் இவ் வேந்தர் கோமானுக் கெத்தனையாய்ச் சொன்னபோதி லும் புராவைக் கொடுப்பதற் கிசையே னென்றார். வைராக்கிய மெனுங் குன்றேறி நிற்கின்றார். ஆகிலும் இன்னமொரு தந்திர மாய்ப் பேசவேண்டும். அதற்கும் உள்படாவிட்டால் தெய்வச் செயலின்படி நடக்கட்டு மென்று தீர்மானித்துக் கொண்டு அந்த ராஜாளிப்பரவை சிபிச்சக்கிரவர்த்தியை நோக்கி மேலுஞ் சொல் லத் தலைப்பட்டது. கேளும், அரசர்கோமானே ! இவ்வுலகத்தினில் ஒரு மனிதனுக்கு விரதங் கெட்டபோதிலும் சுகமாகிலுங் கிட்ட வேணும் சுகங்கெட்ட போதிலும் விரதமாகிலும் பலிக்க வேணும் இவ்விரண்டுங் கெட்டால் மனிதனுக்கு என்னகதி அதோகதிதான் ஆதலால் நன்றாக இவைகளை யோசித்து எதினால் சுகமுண்டாகு மோ அம்மார்க்கத்தை யனுசரித்து என்னிஷ்டப்படிக்கு புராவை யெனக்குக் கொடுத்து என் பசியாற்றினால் உமக்கு மெத்த புண் ணிய முண்டாகும் அப்படி யந்தப் புராவை யெனக்குக் கொடுத் தப் பசியாற்றுவிடில் யானும்முடைய சமூகத்திலே பசியினாலே தவிப்பது உம்மைப்போன்ற புண்ணியவான்களுக்கு சம்மதியாகு மோ இனி யிப்பசியின் கொடுமையினாலே உமது முன்னிலேயே என் பிராணனைவிட்டு விடுவேன் மேலும் இப்போ தெனக்குற்ற பசிதீரும்படி இப்புராவின் இடைக்கிடை உமது தேகத்தை யறு த்து அந்த மாங்கிசத்தை யேனுங் கொடுக்கச் சம்மதியாயிருந்தால் சொல்லும் என்ற ராஜாளிப்பரவையை நோக்கி, சிபிச்சக்கிரவர்த்தி சொல்லுகின்றார் ஓ ! ராஜாளிப்பரவையே வேறெந்த வஸ்துவையுங் கோராமல் என் தேக மாங்கிசத்தின் மீது இச்சைப்பட்ட படியால் யான் மெத்தவும் சந்தோஷித்தேன். அத்தப்படியே என் தேகத்தி லிருக்கும் மாங்கிசங்களைப் புராவின் இடைக்கிடை யறுத்துக் கொடுக்கின்றேன் மாங்கிசத்தைப் புசித்துப் பசியாறக் கடவா யென்று சொல்லி உடனே அங்கிருந்த தூதர்களைக் கொண்டு தராசு

கொண்டு வரும்படி யனுப்ப அவர்களும் அந்தப்படியே சென்று மூக்கோண தராசைக்கொண்டு வந்து நிருத்தினர்கள். அதைக் கண்டு அரசன் புராவை யோர் தட்டினி லமர்த்தி கூர்மையுள்ள தன் வாளை யுருவிக் கொண்டு தேகத்தை யறுக்க முயலுவதைக் கண்டு கோகிலாம்பாள் மனஞ் சகியாதவளாகித் தன் கணவனை வணங்கி ஓ! ஸ்வாமி! யாகஞ் செய்யும் பொருட்டுக் கண்ணுவமா முனிவர் தேவரீர் காத்தினில் காப்புக்கட்டி யிருக்க அக்காப்புக் கட்டின காத்தினுலே எப்படிப்பட்ட ஆபத்து வந்து நேரிட்டபோதி லும் எந்த மாங்கிசங்களையும் அறுக்கப்படா தென்றும் அப்படி யல்லவென்று அறுத்தவர்கள் ஏழுலுல் கொடிய தண்டனை யடைவ தடன் யாக பலனையும் இழந்துவிடு நேரிடும் என்றும் முன்னமே கண்ணுவமாமுனிவர் திருவாய் மலர்ந்திருக்க அவர் கட்டளையும் மறந்து தாங்களிந்த விஷயத்தில் கவனிக்கலாமோ என்று கியாப கப் படுத்தினள். அதைக்கேட்டு சிபிச்சக்கிரவர்த்தி இதற் கென்ன செய்வேன் என்று பலவாறு சிந்தித்து முடிவில் மனைவியை நோக்கி, அடிபெண்ணரசே! அபயமென்று எனையடைந்த புராவை இந்த ராஜாளிப்பரவைக்குக் கொடுத்தால் என்னிடை நிர்மூடனும் பாவியும் சத்தியர் தவரினவனு மிவ்வுலகத்திலுண்டோ இதனுல் யாவரும் என்னை பழிக்கவும் இத்தேகத்தைச் சுமந்துக்கொண்டு திரிவதிலு லென்னபிரயோஜனம் நரகத்திற் காளாகவேண்டியவனே பாவேன் மேலும் இந்தராஜாளிப் பரவைக்குப் புராவின் இடைக் கிடை என்தேக மாங்கிசத்தை யறுத்துக்கொடுக்கிற னென்று வாக்களித்து விட்டேன், அந்தப்படிக்கி என்தேக மாங்கிசத்தை யந்த ராஜாளிக்கிக் கொடா விட்டாலும் அசத்தியவா னெனறும் சொற்சோர்வு பட்டானென்றும் உலகத்தினர் பழிக்கும்படி நேரி டும். அது வெப்படி யானபோதிலும் புராவைக் காப்பதும் என் தேக மாங்கிசத்தை ராஜாளிப் பரவைக் கறுத்துக் கொடுப்பது மாகிய இவ்விரண்டு காரியங்களையும் நடத்துவதைவிட வேறு தந் திரம் எனக்கொன்றுந் தோன்றகில்லை யாதலால், அவசியம இவ் விரண்டையுஞ் செய்ய சித்தமாகி யிருக்கின்றேன்; இதைப்பற்றி அடி பெண்ணே! நீ விசனப்படவேண்டாமென்று சொல்லி திடச் சித்தனுகி ஆபத்துபந்துவே-அனுதரக்ஷகனே-ஆதிதேவனே-அஷ் டைஸ்வரிய சம்பத்துகளும் பொருந்தினவனே-இஷ்டர்களுக்கு-பந்துவே-துஷ்டர்களாகிய ராக்ஷதர்களை வதைத்து சிஷ்டர்களா கிய சாதுசனங்களை ரக்ஷித்த திருபாதிதியே யோகீஸ்வரர்களுடைய உள்ளத்தினில் நிவாசமே கோடிமன்மதருக்கு நிகரான அழகு சுர திரம் பொருந்தினவனே மின்னலுடன்கூடின மேகத்தைப்போன்ற பிரகாசம் பொருந்திய சரீரத்தைப் பெற்றவனே! ஸ்னக ஸனந்தன ஸனத்குமார ஸனஸ்ஸுஜாதர்களென்றும் முனிவர்கள் சதாகால மும் தொழுதேற்றுந் திருவடித்தாமரைகளை யுடையவனேதேவே

திராதி தேவர்களும் கண்டு சேவிப்பதற்கு அரிதாகிய தேவரீருடையதிருமலரடி கட்கு அனேகம் வந்தனஞ் செய்கின்றேன் என்று பற்பலவாறு ஸ்ரீ மந்நாராயணனைத் தொழுதுக்கொண்டே சந்திராயுதத்தைக் கொண்டு தேகத்தைக் கண்டங் கண்டமாக அறுத்து மற்றோர் தட்டின்மீது வைத்தார்.

இந்தப்படியாக தன் தேகத்தினிலிருந்த மாங்கிசங்களெல்லாம் அறுத்து மற்றோர் தட்டினில் வைத்தும் புராணிருக்கும் தட்டானது அணுவளவேனும் மேலேகிளம்பாமல் பூமியோடு பூமியாயிருப்பதைக் கண்டு சிபிச்சக்கிரவர்த்தி இதென்ன விந்தையிலும் விந்தையாக விருக்கின்றதென்று பிரமித்து இதர்க்கென்ன செய்கிறதென்று யோசித்துக்கொண்டிருக்கிறபோது ராஜாளிப்பரவையானது சிபிச்சக்கிரவர்த்தியை நோக்கி, ஓ! வேந்தர்கோமானே என்ன சும்மாநின்றிருக்கின்றீர் வெகுநேரமாயிற்று எனக்கோ அகோரமான பசினேயுண்டாகிவருத்துகின்றது சீக்கிரம் நின்தேகத்தினிலிருக்கும் மாங்கிசங்களையறுத்து வைத்து புராவின் இடைக்கிடைச் சரிவர சன்னிதமாய் தராசுமுணையை நிருத்திக்கொடுமென்று பகரக்கேட்டு சிபிச்சக்கிரவர்த்தி ராஜாளிப்பரவையைநோக்கி ஓ! பரவையே என் தேகத்தினில் அணுவளவு மாங்கிசத்தையும் விடாமல் யாவற்றையும் அறுத்துத் தராசுத் தட்டினில் வைத்தும் புராவிருக்கும் தட்டானது பெருத்தபாரமாகி அரையங்குலமேனும் மேலுக்குங் கிளம்பாமலும் இப்படியும் அப்படியும் அசையாமலிருக்கின்றது இதற்கு யினி யானென்ன செய்வேனென அதற்கந்த ராஜாளிப்பரவை ஓ வேந்தர் சிகாமணியே நீசொல்லியவாக்குத் தவராமல் புராவின் இடைக்கிடை யுமது தேகத்தினி லிருக்கும் மாங்கிஷத்தை யெல்லாம் அறுத்து வைத்தும் தராசு சரிவர சுன்னிதமாய் நிறைக்கு நிற்காமல் தாழ்ந்தே யிருக்கிறதென்றுல் எனக்காக வேண்டிய தென்ன எப்படியாகிலும் நீர் சொல்லியசொற்படி என் பசிதீர மாங்கிசத்தைக் கொடுத்து சொற் சோர்வுபடாமல் சத்திய நிலையில் நில்லுமையா வென அதற்கு சிபிச்சக்கரவர்த்தி ஓ பரவையே புராவின் இடைக்கிடை என்தேக மாங்கிசத்தைக் கொடுக்கிறேனென்று என்வாக்கினுல் சொல்லியது உண்மையே அந்தப்படியே யாவற்று மாங்கிசத்தையும் அறுத்து வைத்து விட்டேன் இனி அணுவளவேணும் என் தேகத்தினில் மாங்கிசமில்லாமையால் என்னே என்ன செய்யச் சொல்லுகின்றீர் அதையின்னதென்று வெளிப்படுத்துவையாகில் அந்தப்படியே நடந்து கொள்ளுகிறேன் என அதற்கந்த ராஜாளிப்பரவையோ வேந்தர் கோமானே என் வார்த்தையைத்தள்ளி அசத்தியத்திற் றுடன் படாமல் எதிர்த்தொன்றும் பதில் வார்த்தை விள்ளாமலும் கண்டிப்பாய் உன்சிரசை யறுத்தலையுமெனக் கேட்டு சிபிச்சக்கிரவர்

த்தி சொல்லுகின்றார். ஓ! ராஜாளிப்பறவையே உன்னிஷ்டப்படி யே என் சிரசை யறுத்து வைக்கிறேன் நீ கோபங் கொள்ளாமல் சந்தோஷமா யிருமென்று நவின்ற மொழியைக் கேட்டு கோகிலாம்பாள் மனக் தாளாமல் தன்னருகிலிருக்கும் தோழிகளே நீக்கி அடிதோழிகளே! இனி யிவ்வுலகத்தி லெனக்கென்ன ஆசையிருக்கின்றது மணவாளனே யிழந்து யானிருப்பதனு லென்பலன் சதி பதிகள் இருவரு மிருந்தால் மூழு ஆளாகும் இவ்விருவர்களில் ஒருவர் மரணமடைந்து ஒருவருயிருடனிருந்தால் பாதியாளாகும் இதையே உலகத்தோர் இன்னருடைய பாதியாளென்று சொல்லுகிற வழக்க மாதலால், பாதியாள் மாய்ந்து போயின பின்பு எனக் கென்ன பிழைப்பு மனுள னில்லா மங்கை விதவையன்றே மணவாளனில்லாத விதவை ஏதோ ஒரு காரியார்த்தமாய் ஒரு புருஷனிடத்தில் பேசிக் கொண்டிருப்பதை யுணராமல் உலகத்தோர்கள் பழிச்சொல் பகருவார்கள் இப்படிப்பட்ட பழிச்சொல்லை யடைந்து இவ்வுலகத்தினில் உயிர் பெற்று வாழலாமோ மேலும் உயிரொன்று பொந்தி யிரண்டாகவும் கூடிக்குலாவி கரும்பிற்குள் ருசியைப்போலவும், பாக்கிற்குள் சுவையைப்போலவும், மலருக்குள் மணம்போலவும், பிரியாமல் மிகவு மொத்துமையாகி ஒருவரை விட் டொருவர் இணைபிரியாமல் இத்தனை காலம் போக்கிக்கொண்டிருந்த கணவனைப் பிரிந்து ஒரு நிமைப் பொழுதேனும் உயிருடனிருக்க என் மனஞ் சம்மதிக்கவில்லை. ஆகையால் சீக்கிரம் இவ்விடத்திலேயே பெருத்த பள்ளமொன்று வெட்டி அப்பள்ளத்தினில் கட்டைகளைப் போட்டு அக்கினியை இட்டு வெகுவாக நெய்க் குடங்களைச் சொரிந்து அக்கினிகுண்டம் தயார்செய்யுங்களென்று கட்டளை யிட்டனள். அம்மொழிகளைக்கேட்டு தோழிகள் பற்பல இனிய வசனங்களைக் கூறினர்கள். அதற்கந்த கோகிலாம்பாள் தோழிகளை நோக்கி அடி பெண் பிரியமுள்ள தோழிகளே பதி மரண மடைந்த பின்பு சதியிருக்தென்ன லாபம் பூமிக்கி பாரமும் பழிச் சொல்லுக்கு தேகமும் வைத்துக்கொண்டு உயிர்வைத்து வாழ்வதைவிட பதியுடன் பதியு மிறப்பதே மேன்மை இதனால் புண்ணியலோகத்தை யடையலாம் இந்த விதமே கற்புடைய மாதர்களுக்கோர் ஆபரணமாகும் ஆதலால், ஓ! தோழிகளே! சீக்கிரம் அக்கினி குண்டத்தைத் தயார் செய்யுங்கள் இப்படிச் செய்தால் உங்களுக்குப் புகழேயன்றி இகழ்வில்லை, இனி மறுத்தொன்றும் பேச வேண்டா மென்று மொழிந்த கோகிலாம்பாள் சொற்படி அந்தத் தோழிமாதர்கள் உடனே அக்கினி குண்டத்தைத் தயார் செய்து குடங் குடமாக அனேக நெய்க்குடங்கள் சொரிந்துக் கொழுந்து விட்டெரியும் படியாகச் செய்து வந்து அரசியைப் பணிந்து ஓ! அம்மணி யாகத்திற்கு ஓம குண்டம் போட்டு நெய் சொரிந்து ஆகுதி கொடுத்து யாகபலனை யடைய விருந்தத் தாங்

கள் அக்கினிகுண்டத்தில் விழுந்து உயிர் துறக்கத் துணிந்திருப்ப தற்குக் காரணம் நேரிட்டதே ஆகிலும், இதென்ன கொடுமை யோ சதிபதிகளிருவருக்கும் ஏக காலத்தில் இப்படிப்பட்ட ஆபத் தும் நேரிடுவதற்கு காலந்தானென்ன கெட்டதோ! தருமத்திலும் நீதியிலும்-உத்தமகுணத்திலும் - மன்னுயிரைத் தன்னுயிர் போலக் காக்கும் - பூததயை-பச்சாத்தாபத்திலுஞ் சிறந்த இவர்களுக்குத் தான இப்படிப்பட்ட கஷ்டம் வந்து சம்பவிக்க வேணும் இது யார் செய்த சூதோ! எவர்களால் நேரிட்ட வஞ்சகமோ! யாரிட்ட சாபமோ! இதுவென்ன பாவமோ! என்று பலவாறு சிந்தனை செய்துக் கொண்டிருக்கையில் அரசர் கோமானுக்கு நேரிட்டிருக் கும் ஆபத்தையும் மாதசிரோமணி தன் கணவனுக்குற்ற கஷ்டத் தைப் பார்க்கமனதுசகியாமல் தானும் அக்கினி குண்டத்தில் விழு கிச்சயித் திருப்பதையும் கேட்டு, அன்னகரத்தில் வசிக்கும் குடி கள் யாவரும் மனக் கவலையடைந்து, வேந்தர் கோமானும் மாத சிரோமணியும் யிருக்குமிடத்திற்கு வந்து, சதிபதிகளிரு வரையுங் கண்டு, வெகுவாக சிந்தனைப் பட்டுக் கொண்டிருக்குஞ் சமயத்தி னில் யாக சாலையிலிருக்கும் முனிவர்களும் பிராமணர்களும் அறி ந்து, ஹா! ஹா, இது வென்ன கஷ்ட காலம் என்று அவர்கள் செய்யும் கோஷ்டமும், ராஜாளிப்பரவை செய்யும் வேதனையும், தோழிகள் செய்யும் ரோதனமும், நகரவாசிகள் செம்யும் ஆரவார மும், அந்த அயோத்திமா னகரமெங்கும் அல்லோகல்லோகப்பட் டுக்கொண் டிருக்கிறபோது, திரிலோக சஞ்சாரியாகிய நாரதமா முனிவர் வீணையை மீட்டி பகவந்நாம சங்கீர்த்தனம் பாடிக் கொ ண்டே சிபிச்சக்கிரவர்த்தி யிருக்கு மிடத்திற்கு வந்து அரசர் கோ மானுல் பூசிக்கப்பட்டு அணுவளவு மாங்கிசமு மில்லாமல் எல்லம்பு மயமாயும் பார்ப்பதற்கு விகாரமாகியு மிருக்கப்பட்ட அரசர்க்கரச னுகிய சிபிச்சக்கிரவர்த்தியை நோக்கி, ஆகூறி ஓ! வேந்தர் கோ மானே! உமது தேகத்தினில் அணுவளவேணும் மாங்கிசமில்லாமற் போயினதற்குக் காரண மென்ன வென்று வினவ, அதற்கு சிபிச் சக்கிரவர்த்தி நாரதரை வணங்கி, ஓ! ஸ்வாமி! புரா ஒன்று ஆபத்து நேரிட்டு அபயமபயமென் றோடிவந்து சரணுகதியடைந்தது அப் படி யென்னைச் சரணுகதியடைந்த புராவுக்கு யான் அபயஸ்தங் கொடுத்து ஆதரித்துக் கொண்டிருக்கிறபோது, ராஜாளிப்பரவை யொன்று ஒடிவந்து என்னை நோக்கி ஓ! ராஜேந்திரனே! உமதிடம் வந்திருக்கும் புராவின் மாங்கிசத்தைப் புசிக்கவேண்டு மென்று அனேகநாளாய் விருப்பமுற்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன் என்னுடைய நற்காலத்தின் பொருட்டு இப்புரா வின்று என்னல் பிடிக்கப்பட்டு மெத்த சந்தோஷத்துடன் யானந்தப் புராவைக் கொன்று தின்று ஆசைதீரவேணுமென்று என்னிருப்பிடத்தை நாடிப்போகையில் இப்புராவானது எப்படியோ பிடியை நழுகச்செய்

துக்கொண்டு ஓடிவந்து விட்டன அப்புராவைக் கொடுக்கின்றீரா அல்லது, புராவின் இடக்கிடை உமது மாங்கிசத்தையேனும் அறுத்துக் கொடுப்பீரே யாகில் அம்மாங்கிசத்தைப் புசித்துப் பசியாறிப் போகிறே னென்றமையால், அதற்கு யாது மொத்துக்கொண்டு மூக்கோண தராசை தருவித்து நட்டு அதிலோர் தட்டினில் புராவை வைத்து மற்றோர் தட்டினில் என் தேகத்தினிலுள்ள மாங்கிசங்களே யெல்லாம் அறுத்து வைத்தும் புராவிருக்கும் தட்டு பெருத்த பாரமாகி சரிதுக்காமலிருந்ததாயிற்று அதைக்கண்டு, ராஜாளிப்பரவை என் சிரத்தை யறுத்து வைக்கும்படி சொல்லிய படியால் அதற்கு யானும் சம்மதித்துச் சிரசை யறுத்துக் கொடுக்க முயன்றிருக்கின்றபோது, தாங்க ளெழுந்தருளியபடியால் தங்களைப் பூசித்துப் பின்பு சிரத்தை யறுத்துக் கொடுக்கலா மென்று கருதினேன். இதுவே நடந்த விருத்தாந்தம் என்றனர். இப்படிச் சொல்லிய, அரசர் கோமானுடையமொழிகளைக் கேட்டு, நாரதமா முனிவர் வேந்தர் கோமானுடைய திடமாகிய மனதிற்கும் சத்தியந் தவராத நற்குணங்களுக்கும் வியப்புற்று கேவலம் ஒரு புராவின் னிமித்தியம் தனதேகத்தை யறுத்துக்கொடுத்ததுவுமல்லாமல், சிரத்தையும் அறுத்துக் கொடுக்கத் துணிவுகொண்டிருக்கின்றான். இப்படிப்பட்ட சத்திய சந்தனனை இதுபரியந்தம் நாம் கண்டதுமில்லை, கேட்டதுமில்லை, அன்றியுமிவன் சிரத்தை யறுத்துக் கொடுத்து விடுவனே யாகில் இதற்குத் தூண்டுகோலாகி இந்திரனையேவி நாமும் இவ்விந்திரனும்-அக்கினிதேவனும்-ஆக மூவரும் நெடுநாள் பௌரவாதி நரகத்தினில் மூழ்கிக் கிடக்கும்படிக்கு நேரிடும், இதற் கென்ன செய்கிறதென்று யோசித்து ராஜாளிப்பரவையை நோக்கி, நாரதமாமுனிவர் சொல்லுகின்றார்.

ஓ! ராஜாளிப்பரவையே! வேந்தர்கோமான் நீ கேட்டபடிக்குச் சிரத்தை யறுத்துக் கொடுக்கத் தயாராக விருக்கின்றான். ஆகிலும் நானுன்னை யொருமனுகேட்டுக் கொள்ளுகின்றேன். அதென்னவெனில், யான் வைகுந்தமா நகரத்திற்குச் சென்று வருகிறபரியந்தங் இந்த வேந்தர் கோமானைச் சிரத்தை யறுத்துக் கொடுக்கும்படி நிர்ப்பந்தஞ் செய்யாமலிருக்கவேணு மென்று கேட்டுக் கொள்ளுகின்றேன் யுன் கருத்தென்ன சொல்லுமென்றுவினவ, அதற்கு ராஜாளிப் பரவை நாரதமுனிவரை நோக்கி, ஓ! ஸ்வாமி! யுமது சொற்படி யான் இந்த சிபிச்சக்கிரவர்த்தியை நீர் வருகிறபரியந்தம் நிர்ப்பந்தஞ் செய்யாமலிருக்கின்றேன், சீக்கிரம்போய் வாருமையாவென்று வணங்க, நாரதர் மெத்த சந்தோஷத்துடன் வேந்தர் கோமானிடம் விடைபெற்று வீணையைமீட்டி பகவத்தியானஞ் செய்துக்கொண்டே வைகுந்தமானகரத்தை யடைந்து அங்கு நித்திய சூரியர்கள் சூழ ஆதிசேஷன்மீது சயனித்து பூதேவி-ஸ்ரீதே

வி-நீளா தேவிகளென்னும் மூவரும் ஆலவட்டம் சாமரங்களேக் கொண்டு உபசரிக்க யோக நித்திரையினிலிருக்கும் ஸ்ரீமன் நாராயணமூர்த்தியைக் கண்டு, வலசாரி இடசாரியாகப் பிரதக்ஷணம் வந்து விழுந்து பணிந்து எழுந்து கரங்களேக் குவித்துக்கொண்டு நின்றார். அப்படி நின்ற நாரதரை, லட்சுமி நாராயணன் பார்த்து புன்னகைப் புரிந்து நாரதரை பழைத்து தன்னருகினில் உட்கார வைத்துக்கொண்டு, ஓ! நாரதமாமுனிவரே! என்ன இந்த அகாலத்தினில் நீரிங்குவந்த காரணத்தையோசித்தால், பூலோகத்தினிலென்னமோ விசேஷம் நடந்திருக்கிறதாய் தோற்றுகின்றது, அதென்ன விசேஷம் அதை தெரியப்படுத்துமெனக் கேட்டு நாரதர் பகவானே நோக்கி ஓ! ஸ்வாமி! பூலோகத்தினில் அயோத்திமா நகரத்தையாளும் சிபிச்சக்கிரவர்த்தியானவர் தேவலோகத்தைக் கைப்பற்ற வேணுமென்று ஆசித்து அதற்குத் தக்க தந்திரமாகும் விஸ்வஜ யாகங்கள் தொண்ணுற்றி யொன்பதும் முடித்து நூறுவது யாகத்தை செய்ய முயனறு தொடக்கஞ்செய்து நடத்துகிறபோது தேவேந்திரன் இச்செய்தியை யறிந்து யாகத்தைக்கெடுக்க வெண்ணங் கொண்டு அக்கினி தேவனேப் புராவடிவ மெடுக்கச்செய்துத் தானும் ராஜாளிபரவை யுருவமெடுத்துத் தன்னுல் புரா அடிப்பட்டு ஓடி சிபிச்சக்கிரவர்த்தியைச் சரணமடையும்படித் தந்திரம்பேசி யனுப்ப அப்புராவும் அந்தப்படியே அபிநயித்தோடி சிபிச்சக்கிரவர்த்தியைச் சரணமடைய அப்புண்ணிய சீலனும் உண்மையென்றே கருதி, அப்புராவுக்கு அபயஸ்தங் கொடுத்து உபசரித்து ஆதரித்து ஓர் கூண்டினில் அப்புராவைவிட்டு அதைப் பத்திரமாக பாதுகார்த்துக் கொண்டிருந்தார், அப்போது ராஜாளி யுருவங்கொண்டிருக்கும் தேவேந்திரனவன், சிபிச்சக்கிரவர்த்தின் பக்கலடைந்து பசியாறிக் கொள்ளும் பொருட்டு புராவை தனக்குக் கொடுக்கும்படி கேழ்க்க அதற்கு சிபிச்சக்கிரவர்த்தி ராஜாளிப்பரவையைநோக்கி, என்னுயிரைக் கொடுத்தாலும் உனக்குக் கொடுப்பனேயன்றிப் புராவை மாத்திரங் கொடேனென்று கூற, அதற்கந்த ராஜாளிப்பரவை ஓ! வேந்தர் சோமனே! இப்புராவின் இடைக்கிடை நின்தேகத்திலிருக்கும் மாங்கிசத்தை யறுத்துக் கொடுத்தால் அம்மாங்கிசத்தைப் புசித்துப் பசியாரிப் போகிறேனென்று மொழிய, சிபிச்சக்கிரவர்த்தி யந்தப்படியே தன் தேக மாங்கிசத்தை யறுத்துத் தாராசைத் தருவித்து அத்தராசின் ஒரு தட்டினில் புராவைப் பொருந்தவைத்து மற்றொரு தட்டினில் தன் தேக மாங்கிசம் அணுமாத்திரமும் விடாமல் யாவற்றையும் அறுத்துவைத்தும் புராவிருக்கும் தட்டானது பெருத்த பாரமாகியதால் தராசு சரிவர சுன்னிதமாய் நிற்காமையால் அதைக் கண்டு ராஜாளிப்பரவை வேந்தர் சோமனே நோக்கி, இன்ன மென்ன தாமசஞ் செய்கின்றீர் உமது சிரசைக்கிரம் அறுத்துவையு

மென அந்தப்படியே சிரசை யறுத்து வைக்க திடங்கொண்டிருக் கிறார். அதைக் கண்டு சக்கிரவர்த்தியின் மனைவியும் மனந்தாளா மல் அக்கினி குண்டத்தில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ள சித்தமா யிருக்கின்றாள். இவைகளை யான் என் கண்ணாரக் கண்டு மனஞ் சகியாமல் சற்றுநேரம் பொருமையா யிருங்கள் கூடிய சீக் கிரத்தினில் யான் வருகிறேனென்று சொல்லி யிங்குவந்து சகல செய்திகளையும் தங்களிடம் முறையிட்டுக் கொண்டே னென்று மொழியக் கேட்டு சாகஷாத்து லட்சுமி வல்லபன் மெத்தசினங்கொ ண்டு நாக சயனத்தை விட்டுக் கீழே குதித்து நித்திய சூரிகள் முத லானோரும் பின் தொடர்ந்துவரப் பாதசாரியாய் விரைவாகநட ந்து அயோத்திமா னகரத்தை யடைந்து யாகசாலையை னருகிற்செ ன்று சிபிச்சக்கிரவர்த்தியும் அவர் மனைவி கோகிலாம்பாளும் தன் னைக் கண்டு புகழ்ந்து கொண்டாட அவ்விருவரையும் கடாக்ஷித்து ஓ! உத்தம தம்பதிகளே! உங்களுடைய பக்திக்கும்-ஜீவகாரு ண்ய பச்சாத் தாபத்திற்கும்-சத்திய நிலமைக்கும்-யான் மெத்த சந்தோஷமடைந்தேன் ஓ! சக்கிரவர்த்தியே! கேவலம் ஒரு புரா வின்பொருட்டு நின் தேகத்தினி லிருந்த மாங்கிசம் யாவற்றையும் அறுத்து வதைத்தது மன்றி சிரசையும் அறுத்து வைக்கத் துணி ந்த உம்மைப்போன்ற சத்தியநிலையிற் கட்டுபட்ட வேந்தர்கள் யாவரையுங் கண்டதில்லை, ஓ! பரமபாகவதசிகாமணியே! மூடி வேந்தர் சிரோமணியே! என்று புகழ்ந்து அருகினில் நிற்கும் கோகிலாம்பாளை நோக்கி. ஓ! கற்பினிற்சிறந்தகாந்தையே! பதி யினிடத்தில் பக்திசெலுத்திய ஏந்திழையே உன்னைப்போன்ற உத் தமமாதர்களிவ்வுலகினி லுண்டோ! இப்படிப்பட்ட பரிசுத்தமா கிய பதிவிரதை நீ யொருவ ளிவ்வுலகினி லிருப்பதால் அந்தரத் தினில் ஆகாயம் நிற்கின்றது கடலும் தவறிலையை விடுத்துப் பிரியா மல் கட்டுப்பட் டிருக்கின்றது. ஓ! குணவதியே! தாயைதாய் குருதெய்வம் யாவும் பதியே என்று தீர்மானித்திருக்கும் உன்னு டைய மனை திடத்துக்கு நிகராக எந்தப்பொருளைச் சொல்லு வேன் உனக்கு யேசரி உனக் கிணையாக வேறொருவரையுஞ் சொ ல்ல என்மனஞ் சம்மதிக்க விலலையே! என்று புலவாறு புகழ்ந்து சக்கிரவர்த்திக்கி முன்போல தேகத்தைப் பூர்ணமாகும்படி கடா கூஷித்துத் தேவேந்திரனையும் அக்கினி தேவனையும் நோக்கிச் சொல் லத் தொடங்கினர்.

அடா தேவேந்திரனே! அக்கினிதேவனே! நீங்களிருவரும் ஒன்றுசேர்ந்துக்கொண்டு செய்தகாரியம் தகுமோ இந்த காரியம் இப்படிப்பட்ட உத்தமர்கள் சமூகத்திலா செய்கிறது இத்தமோச வெண்ணத்தையும் நீங்களிப்படிப்பட்டவர்களென்பதையும் அறி யாத இக்கள்ளங் கபடுனாத இப்பாகவதர்கள் மனம்நோகச் செ

ய்த நீங்களிருவருமின்னுஞ் சிறிதுநேரம் யான் வராவிடில் பெருத்த ஆபத்தை யடைந்திருப்பீர்கள் ஏதோ உங்கள் நற்காலத்தினால் யானிங்குவந்தேன் இதற்குக் காரணம் நாரதமா முனிவர் இங்கு நடந்த செய்தியை வைந்தமானகரத்திற்கு வந்து என்னிடஞ் சொல்லிய படியால் நீங்களிருவரும் தப்பித்துக்கொண்டீர்கள் அந்த நாரதமா முனிவர் சிரம மெடுத்துக்கொண்டு என்னிடம் வந்து சொல்லாவிடில் நீங்களின்னேரம் என்ன பாடுபடும்படி நேரிடுமோ அதை யானறி யேன் னன்றியும், எந்தபுருடன் யாகஞ்செய்ய மூவன்று மந்திரலோபம் கிரியாலோப மின்றி அந்த யாகத்திற்கு வந்திருக்கு முனிவர்கள் பிராமணர்களுக்கும் சாத்திரத்திற் சொல்லிய படிக்கித் தானதரு மங்களைச் செய்து யாவற்றிராளும் களிகொள்ளும்படி நடக்கின்றனை அந்தப்புருடன் அந்த யாகத்தினுண்டாகும்பலனை யனுவிப்பா னென்று வேதங்கள் மூறையிடுகிறபடி யாலும் மந்திராலோபமும் கிரியாலோபமும் மனதி லொன்று வாக்கிலொன்று மாக நினைத்துக் கொண்டு பிரியமில்லாமல் தானதருமங்களைச் செய்வானேயாகில் அந்த யாகத்தின் பலனுகிய ரௌரவாதி நரகத்தை யடையக் கடவனென்று நன்மைக் குண்டாகிய பலனையும் தீமைக்குண்டாகிய பலனையும் அடைவர்களென்று கூறியிருக்க அதை யுணராமல் உத்தமனுகியும் பரம பாகவதனுகியும் யாவருங் கொண்டாடத் தக்க இந்த சிபிச்சக்கிரவர்த்தியின் பொருட்டு நீங்களிருவரும் சுதந்திரங் கொண்டு யாகத்தை எவ்வித உபாயத்தினுலாகினும் கெடுக்கவேணுமென்றருதிச் செய்த கொடுமையையும் அபசாரத்தையும் எப்படி நிவர்த்தி செய்துக் கொள்ள போகுமீர்கள் பகவானிடத்தில் அபசாரப்பட்டால் அவ்வபசாரத்தை பாகவதர்கள் புருஷாகாரத்தினுல் போக்கிக் கொள்ளலாம் பாகவதர்களிடத்தில் அபசாரப்பட்டால் பகவானும் இன்னு மெவர்களாலும் அவ்வபசாரத்தைப் போக்கிக்கொள்வ தரிதாகும், ஆதலால் நீங்களிப்போது பரமபாகவதராகிய சிபிச் சக்கிரவர்த்தியினிடத்தினில் பட்ட அபசாரத்தைப் போக்கிக் கொள்வ தரிதாகும் ஆதலால், அவ் வுபசாரத்தைப் போக்கிக் கொள்வதற்கு ஓர் தந்திரஞ் சொல்லுகின்றேன் அந்தப்படி நீங்கள் நடந்துக் கொண்டால் அந்த அபசாரம் உங்களை விட்டு நீங்கும் அதென்ன தந்திர மென்றால் நீங்களிருவரும் உங்கள் சுயரூபமெடுத்துக் கொண்டு சிபிச் சக்கிரவர்த்தியின் திருவடிகளிலும் உலகமாதாவுக்கு நிகரான அவர் மனைவி கோகிலாம்பாள் திருவடிகளிலும் விழுந்து பணிந்து வேண்டிக்கொள்வீர்களே யாகில் அவர்கள் உங்களிருவருக்கும் ஆசிகூறி ஆதரிப்பார்கள் அப்போது நீங்கள் செய்த அபசாரமானது சூரியனைக் கண்ட பனிபோல நீங்கிவிடும் மேலும், இந்தத்தடவை நீங்கள் செய்த அக்கிரமத்தை மன்னித்தக்கொண்டேன் இன்னொருதடவை இப்படிப்பட்ட அக்கிரமம்

நீங்கள் செய்யக் காண்பனே யாகில் உங்களிருவருக்குந் தக்க தண்டனை விதிப்பேனென்று சொல்லக் கேட்டு தேவேந்திரனும் அக்கினி தேவனும், நடுநடுங்கி சுயரூபங்கொண்டு பகவான் திருவடித் தாமரைகளில் விழுந்து பணிந்து பலவாறு தோத்திரம் புரிந்து அவரால் ஆசிகூறப் பெற்று அருகினில் பயபக்தி விசுவாசத்துடன் கைகளைக் குவித்துக் கொண்டு நின்றிருக்கும் சிபிச்சக்கிரவர்த்தியினுடைய திருவடிகளிலும் அவர் மனைவி கோகிலாம்பாள் திருவடிகளிலும் விழுந்து பணிந்தார்கள். அதுகண்டு சதிபதிகளிருவரும் தங்கள் கரங்களால் அவர்களிருவரையும் வாரியெடுத்து ஆசிகூறி ஓ! புண்ணிய புருடர்களே! அசுரர்களாகியும் ஞான சூனியர்களுமாகிய எங்கள் திருவடிகளில் விழுந்து பணிய தேவாம்சத்தைப் பெற்ற உங்களுக்குத் தகுமோ! இந்த அபசாரத்தை பாங்கெப்படிப் போக்கிக் கொள்ளபோகிறோமென்று சதிபதிகளிருவரும் தேவேந்திரனுடைய திருவடிகளிலும் அக்கினி தேவனுடைய திருவடிகளிலும் விழுந்து பணிந்தார்கள். அப்போது பகவான் தேவேந்திரனையும் அக்கினி தேவனையும் நோக்கி ஓ! இந்திராக்கினி தேவர்களே பார்த்தீர்களா! இந்த சதிபதிகளுடைய சாந்த குணத்தை இப்பேர்ப்பட்ட நற்குண விவேகிகளுக்குக் கஷ்டமுண்டாகும்படிச் செய்த உங்கள் நெஞ்சு தணிவுக்குத் தக்கபடி தண்டிக்க வேண்டியதா யிருக்க இது முதல்தடவை யாதலால் மன்னித்து விட்டேன் இனியேனும் இப்படிப்பட்ட பரமபாகவதர்களுக்குக் கெடுதி செய்யாமலிருங்களென்று சொல்லி அவர்களுக்கு விடை கொடுத்தனுப்பிவிட்டு சிபிச்சக்கிரவர்த்தியின் நூறுவது யாகத்தை பூர்த்தி செய்வித்து யாக தீட்சையைப் போக்கி சிபிச்சக்கிரவர்த்தியின் கரங்களால் சகலதான தருமங்களையும் அபாரமாகக் கொடுக்கும்படி நேமித்து இருந்த மிச்சம் மீதிகளையும் மனம்போனபடிக்கி யாவற்றி ராளுக்கு மளித்து விட்டு தன்னை வணங்கி நிற்கும் சிபிச்சக்கிரவர்த்தியையும் அவர் மனைவி கோகிலாம்பாளையும் பகவான் தன்னுடன் வைகுந்த ரதத்தின்மீ தேறிக்கொண்டு விரஜா நதியைத் தாண்டி போகிறபோது அமானவர்கள்-பூர்ணகும்பங்களை யேந்திக்கொண்டும் மலர்மாலைகளை யேந்திக்கொண்டு மாணிக்க விளக்குகளை யேந்திக்கொண்டும் எதிர்நோக்கி வந்து பரமபாகவதர் வந்தார் பரமபதி விரதை வந்தரென்று கொண்டாடி மாலைகளைச் சூட்டி தூபதீபங்கொடுத்து ஆலாத்திகளெடுத்து அனேக மேள வாத்தியங்கள் கடலொலி போல கோஷிக்க அழைத்துச் சென்று பரமபத சௌபாக்கியமாகிய சிங்காதனத்தினருகினில் நித்திய சூரிகளுடன் கலந்திருக்கும்படி பகவான் நேமனத்தால் பரம சாமபி ராச்சிய பதவியை அடைந்தனர்கள்.

கோகிலாம்பாள் கற்பின் மகத்துவம் முற்றிற்று.

புனிதவதியார் கற்பின் மகுத்துவம்.

இப்பூமண்டத்தினில் காரைக்காலென்று, சிறப்புற்றேங்கிய பிராஞ்சுபட்டணத்தில் வைசிய குலத்தினில் உதித்த தனதத்தன் என்றொரு புண்ணிய புருடரிருந்தார் அவர் செல்வத்திலும் மாகாணத்திலும் இன்னும் பலவித சம்பத்திலுங் குபேரனொத்திருந்தார் இவருக்குக் கனகாம்பாளென்றொரு மனைவியுண்டு அம்மனைவியுடன்கூடி இல்லறதருமத்தை நடத்திக்கொண்டுதன் குலத்தொழிலாகிய வியாபாரத்தில் முயன்று நடத்திக்கொண்டு அதிதியபயாகதிகளே யாதரித்தும் தான தருமங்களே மென்மேலுஞ் செய்து சிவனடியார்களைக்கண்டால் பரமசிவமே இவர்களாகுமென்று மதித்து, அவர்களே வணங்கி, இணங்கி, தொண்டுகள் புரிந்து, அவர்களுக்கு வேண்டியவைகளையறிந்து, சந்தோஷிக்கச் செய்துக்கொண்டு வருகிறபோது சிவபெருமானுடைய கிருபையினாலே இவருக்கொரு பெண்குழந்தை பிறந்தது, அக்குழந்தைக்கு புனிதவதியென்று நாமகரணமிட்டு ஆசானுக்கும் பிராமணர்களுக்கும் கோதானம், பூதானம், வஸ்திரதானம், இரண்ணியதான, மென்று சொல்லப்பட்ட மூப்பத்திரண்டு தானங்களையும் சிறப்பாகச் செய்து விடைகொடுத்தனுப்பி பந்து மித்திரர்களுடன் புசித்து சந்தனதாம்பூலாதிகளைத் தரித்துச் சந்தோஷ சாகரத்தினில் மூழ்கியிருந்தார் இவரிப்படிக்கிருக்க, மனைவியாகிய கனகாம்பாள் தன் பெண்குழந்தையை நாளுக்குநாள் செல்வமாக வளர்த்து வருகையில் அப்பெண்குழந்தையும் வளர்பிரைச் சந்திரனைப்போல வளர்ந்து நாளுக்குநாள் விர்த்தியாகி பத்துவயது கன்னிகையாயிருக்கிறபோது தனதத்தன் தன் பெண்ணை யொருவனுக்கு மணஞ்செய்வித்துத் தன்வீட்டிலேயே மாப்பிள்ளையை வைத்துக்கொள்ளவேணுமென்று கருதி கல்வித் திறமையும் புத்திமானுமாகியவனை விசாரித்துக் கொண்டிருந்தார் இப்படி யொருவகுடகாலம் விசாரித்துக் கொண்டிருக்கையில் நாகப்பட்டணத்தில் வசித்துக்கொண்டிருக்கும் நிதிபதியென்பவர் புத்திரனாகிய பரமதத்தன் வயதிலும் கல்வியிலும், குணத்திலும், புத்தியிலுஞ், சிறந்தவனாகியிருப்பதை இவன் தந்தையாகிய நிதிபதியறிந்து இனி நமது புதல்வனுக்குத் தக்க பெண்ணைப்பேசி மணஞ்செய்விக்க வேணுமென்று கருதி அப்பட்டணத்திலிருக்கும் தம் மரபினர் வீடுகள் தோறுஞ் சென்று பெண்ணைப்பார்த்தும் தனமனதுக்குப் பிரியப்படாமல் தன் வீட்டையடைந்து தன் மனையாளையழைத்து அடிபெண்ணே! குணவதி இப்பட்டணத்திலிருக்கும் நம்முடையபந்துக்கள் வீடுதோறுஞ் சென்று பெண்களைப் பார்த்ததில ஒரு பெண்ணிலும் எனக்குப் பிரியப்படவில்லை இனியெங்காகிலும் பெண்கள் இருக்கிறபக்ஷத்தில் உனக்குத் தெரிந்திருந்தால் சொல்லுமெனக்கேட்டு அந்த கனகாம்பாள் யோசித்துத் தன் கணவனை நோக்கி, ஓ! ஸ்வாமி! என்பிராணநாயகரே! காரைக்கால் பட்டணத்திலிருக்கும்நமது

பக்தவாகிய தனதத்தனென்பவருக் கோர் பெண்ணிருக்கின்றது அப்பெண்ணே அழகிலும் குணத்திலும் தனத்திலும் நடக்கையிலும் மெத்தவும் சிறந்தவளென்று சொல்லக்கேட்டிருக்கின்றேனேயல்லது நானொரு நாளேனும் அப்பெண்ணைப் பார்த்ததில்லை இந்தப்பெண்ணினுடைய குணநிசயங்கள் மூதலானதகளுந் தெரிந்துக்கொள்ளவேணுமென்றுல் என்தமக்கை குணநிதியை யழைப்பித்துக்கேட்டால் யாவற்றும் தெரிந்துக்கொள்ளலாமென்று சொல்லக்கேட்டு, நிதிபதிமனமகிழ்ந்து உடனே குணநிதியை அழைப்பித்து ஓ! அம்மா! காரைக்கால் பட்டணத்திலிருக்கும் தனதத்தரென்பவருக்கு பெண்ணென்றிருக்குதாமே அது வுண்மையா? அப்பெண்ணின் குணம் நடவடிக்கைகள் மூதலானதுகளெல்லாம் உனக்கு நன்றுய்த்தெரியுமென்று கேழ்விப்பட்டேன். அப்பெண்ணின் விருத்தாந்தம் யாவும் எனக்கு விபரமாகச் சொல்லவேணுமென்று நவில, அதற்கந்த குணநிதி, ஓ! மைத்துனரே! தனதத்தருக்கு ஒரு பெண்ணிருப்பதுண்மையே அப்பெண்ணு ரூபத்தினில் இலக்குமியையொற்றவள். சாந்த சமதமாதிகுணங்களில் பூமாதுக்கு நிகரானவள், தாய்தந்தையர்களுக்குப் பணிவிடைசெய்வதில் வீட்டு வேலைக்காரியை நிகர்த்தவள், புத்தியில் மந்திரிக்கு நிகரானவள், அப்பெண்ணே யுமது புதல்வனுக்கு மணஞ்செய்வித்தால் மெத்த நன்வையாகவிருக்கும் என்று சொல்லக்கேட்டு நிதிபதிபானவர் மெத்த சந்தோஷித்து அந்ததனதத்தர் நமக்கு பந்துவாகவிருந்த போதிலும் செல்வத்திலுங் கீர்த்தியிலும் சிறந்தவராக விருப்பதால் தன் பெண்ணே நமது புதல்வனுக்குக் கொடுத்து நம்மிடத்தில் சம்மந்தஞ் செய்வாரோ தன்னைப்போன்ற பொருளுடையவர்களுக்குத் தன் பெண்ணைக்கொடுத்து சம்பந்தஞ் செய்ய கருதுவரேயல்லாமல் ஏழைகளுக்குக்கொடுக்க சம்மதிக்கமாட்டாரென் றெண்ணுகிறேன், பென்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தார். அதைக் கேட்டுக் குணவதியம்மையார், ஓ! மைத்துனரே! நீரேன் விசனப்பட்டுக்கொண்டிருக்கின்றீர் இந்த விசனத்தைவிட்டு தைரியத்துடன் காரைக்கால் பட்டணத்திற்கு நீரேசென்று தனதத்தரைக் கண்டு உமது புதல்வனுக்கு அவர் பெண்ணைக்கொடுக்கும்படி கேழ்ப்பீரேயாகில் தடைசொல்லாமல் அவர் பெண்ணே யுமது புதல்வனுக்குக்கொடுத்து அவரே மணஞ்செய்துவைப்பார் விவாகமானவுடனே உமது புதல்வனுக்கு பெருத்தநிசை யடிக்கப்போகின்றது பாரும் யானென்னமோ சொன்னே னென்று யோசித்து வீண்காலம் போக்கவேண்டாம் சீக்கிரம் புறப்பட்டுப் போமையாவென்று சொல்லிய குணவதியம்மையார் வார்த்தையைத் தட்டாமல் அந்த நிதிபதியானவர் சந்தோஷத்துடன் நாகப்பட்டணத்தை விட்டுப் புரப்பட்டு நடந்து காரைக்கால் பட்டணத்தையடைந்து தனதத்தர் வீட்டைச்சேர்ந்தார்.

அப்போது, தனதத்தர் தன் வீட்டுக்கு வந்த நிதிபதியைக் கண்டுபசரித்து க்ஷேமங்களை விசாரித்து என்றும் வராதவர் இன்று என்னைநாடி.வந்த காரணம்யாது? அதைத் தெரியப்படுத்துமையா வென்று வினவினர். அதற்கு நிதிபதி ஓ! ஐயா! தனதத்தரே எனக்கொரு அருமையான புதல்வனிருக்கின்றான். அவனுக்கு விவாகஞ்செய்விக்க வெண்ணி நாகப்பட்டணத்திலுள்ள நம்மவர்கள் வீடுதோறுஞ் சென்று பெண்களைப்பார்த்தேன். அப்பெண்களில் எந்தப்பெண்ணும் எனக்குப் பிடிக்கவில்லை, எனக்கே சம்மதியாகாமலிருக்கிறபோது மாப்பிள்ளைக்கிச் சம்மதிப்படாதென்று கருதி, இனிஎங்காகிலும் பெண்ணிருக்கிறதா யென்று விசாரிக்கிறபோது தங்களுக்கோர் பெண்ணிருப்பதாய் தெரிந்து உமது பெண்ணை என் புதல்வனுக்குப் பேசி மணஞ்செய்விக்கும்பொருட்டு உம்மை நாடிவந்தே னென்று சொல்லக்கேட்டு, அந்த தனதத்தர் மிகுந்த சந்தோஷமடைந்து, ஓய் நிதிபதியே! ஜாதி குலம் பார்க்கவேண்டியதில்லை நீர் நமக்கு மெத்த பந்துவானதால் உமது புதல்வனுக்கு எனது புதல்வியைக் கொடுத்து மணஞ் செய்விப்பதற்கு யாதொரு தடையுமில்லை. ஆனால் ஒரு விசேஷமிருக்கின்றது அதென்னவெனில் உமது புதல்வனுடைய குணமுங் கல்வியும் எப்படியிருக்கின்றதோ அதையான் விசாரித்துத் தெரிந்துக்கொண்டுதான் உமக்கு பதில் சொல்ல வேண்டியவனாகயிருக்கின்றேன் அதுகளை விசாரித்துத் தெரிந்துக்கொள்ளும் வரையில் தாங்களிங்குதானே இருப்பீராகில் இண்டொரு நாளையில் தெரிந்துக்கொண்டு உமக்கு நல்ல வாக்குக்கொடுக்கிறேன். என்ற தனதத்தர் மொழிகளைக்கேட்டு, மெத்த சந்தோஷம் உமது இஷ்டப்படிக்கு விசாரித்துத் தெரிந்துக்கொள்ளும் அதுபரியந்தம்யானிங்குதானேயிருக்கின்றேனென்று சொல்லக்கேட்டு, தனத்தர் மகிழ்ந்து தன்னிடத்திலிருக்கும் உத்தமனாகிய குமஸ்தாவையழைத்து அடா தம்பி நாளையதினம் காலையில் எழுந்து நீ நாகப்பட்டணத்திற்குச் சென்று நிதிபதியின் புதல்வனாகிய பரமதத்தன் கல்விப்பயிற்சியையும் நற்குணத்திறமையையும் அக்கம் பக்கங்களில் விசாரிப்பதுடன் அவனையும் நேரில் கண்டு பேசிக் குணத்தின் அளவையும், கல்வியின் திறமையையும், தெரிந்துக்கொண்டு வருவாயெனக்கேட்டு, அந்த குமஸ்தாவானவன் தங்க ளுத்திரவின்படிக்கே யான் நாளையதினம் காலையிலெழுந்து நாகப்பட்டணஞ் சேர்ந்துப் பரமதத்தனைக் கண்டுபேசி அவருடைய குணநிசயங்களையும் கல்வியின் திறத்தையுந் தெரிந்துக்கொண்டு வருகிறேனென்றுசொல்லி விடைபெற்றுக்கொண்டு தன் வீட்டைச்சேர்ந்து அன்றிரவைப் போக்கி அதிகாலையி லெழுந்து வீட்டைவிட்டு நடந்து நாகப்பட்டணத்தையடைந்து பரமதத்தனைக்கண்டு, கல்வியைப் பரிக்ஷித்து குணங்களையும் தட்பமாகத்தெரிந்துகொண்டு அக்கம் பக்கங்களிலும் பரம

தத்தன் குண விசேஷங்களை விசாரித்து தெரிந்துக்கொண்டு அ இ. நிரவு அங்கு தங்கியிருந்து மறுநாட்காலையி லெழுந்து நடந்து காரைக்கால் பட்டணத்தையடைந்து தன் எஜமான்வீட்டைச்சேர்ந்து எஜமானைக்கண்டு பரமதத்தனைக் கண்டுபேசிக் கல்வியை பரிக்ஷசெய்ததையும் அவருடைய குணவிசேஷங்களைப் பற்பலவாகப் புகழ்ந்து கொண்டாடினான். அதுகேட்டு, தனதத்தன் அடங்காமகிழ்ச்சிகொண்டு நிதிபதியை அழைத்து உமது குமாரனுக்கு எனது புதல்வியைக் கொடுத்து யானே மணஞ்செய்வித்து உமக்கொருகாசளவும் சிலவில்லாமல் என்வீட்டிலேயே மாப்பிள்ளையை நிருத்திக்கொள்வேன் இதற்கு சம்மதியானால் சீக்கிரம் சொல்லுமையாவென்று வினவ, அதற்கு நிதிபதி ஓ! ஐயா! எனக்கு யிருப்பது ஒரே புதல்வன் அவனை யுமது வீட்டினில் விடுத்து யானைப்படி ஜீவனஞ் செய்வேன். அவனுலல்லவோ வியாபாரமும் ஜீவனும் சையும் நடந்துவருகின்றது, அப்படிப்பட்ட உத்தம புதல்வனை யுமக் கொப்புவித்து யானெவ்வாறு ஜீவித்திருப்பேன், என்ற நிதிபதின் மொழிகளைக்கேட்டு தனதத்தன் மொழிகின்றார். ஓய் நிதிபதியே! உமது புதல்வன் சம்பாதனையில் யான் ஜீவனம் பண்ணவேணுமென் றெண்ணி என் வீட்டினில் மருமகனை வைத்துக்கொள்ளவிருப்பங் கொண்டவனல்ல என் வீட்டினிலுமது புதல்வனிருந்தபோதிலும் அவனுடைய சம்பாதனையை நீரே பெற்றுகொள்ளும் எனக்கொருகாசளவும் வேண்டியதில்லை ஏதுக்காக என்வீட்டிலேயே மருமகனைவைத்துக்கொள்ள விரும்புகிறேனென்பையோ என் புதல்வியாகிய புனிதவதியார் மெத்த அருமையும் பெருமையுமாக வளர்ந்தவளாதலாலும், அக்கன்னிகையை என்னுயிர் நீங்கினும் ஒரிடத்திற்கு அனுப்ப சம்மதிப்பட்டேன் ஆதலால் அக்காரணத்தைப்பற்றி மருமகனை என்னிடத்திலேயே நிருத்திக்கொள்ள இச்சைக்கொண்டேன். அன்றியும், எனக்கு ஆண்பிள்ளைகள் ஒன்றேனுமில்லாமையால் எனக்குள்ள ஆஸ்திகளையெல்லாம் எனக்குபிற்காலம் நின் புதல்வனுக்கேகொடுக்க நிச்சயித்திருக்கின்றேன். ஆகையால் உமது கருத்து என்னவென? அதற்கு நிதிபதியானவர் இவருக்குள்ள ஆஸ்திகளையெல்லாம் நமது புதல்வனே கைக்கொள்ளப் போகிறான். அன்றியும், வீட்டிற்குச் சொந்தக்காரனும் நமது புதல்வனே ஆகப்போகிறான். இதைப்பற்றி நாம் சிந்திக்கவேண்டியதில்லை. இவருடைய இஷ்டத்தைப்போலவே நமது புத்திரன் இருக்கட்டுமென்று தன் மனதில் நிர்மானித்துக்கொண்டு, ஓ ஐயா? உம திஷ்டத்தின்படியே என் புதல்வனை யுமது வீட்டிலேயே வைத்துக்கொள்ளுமையா வென்று சொன்ன மாத்திரத்தில் தனதத்தன் இனி யில்லாத ஆனந்த சாகரத்தினில் மூழ்கினவராகி, ஓ நிதிபதியே? இனித் தடையின்றி நினது குமாரனுக்கு எனது புதல்வியைக் கொடுத்து மணஞ் செய்விக்கச் சம்மதியாயினேன்.

என்று சொல்லி குமஸ்தா ஒருவனை யழைத்து புரோகிதரை சிக்கிரம் அழைத்துவரச் சொல்லி அவர் வந்தவுடனே அவருக்கு சோடச உபசாரங்கள் செய்து முகூர்த்தநாள் குறித்து முகூர்த்தப்பத்திரம் எழுதி பந்துக்கள் முன்னிலையில் முகூர்த்தப்பத்திரத்தை ஒருவருக்கொருவர் மாற்றிக்கொண்டு புரோகிதருக்கு தக்ஷிணைதாம்பூலாதிகளை அளித்து விடைகொடுத்தனுப்பி உடனே பந்தக்கால் நாட்டி கல்யாணப்பந்தல் போடுவித்து அந்த தனதத்தன் வேண்டிய சாமக்கிரியைகளெல்லாம் தயார்செய்து பந்தலுக்கு வாழை முதலாகியதுகளையும் கட்டி யாவற்றுமான பந்துக்களை யெல்லாம் வரவழைத்துப் புரோகிதர் பிராமணர்கள் யாவருக்கும் உபசாரஞ் சொல்லி வீற்றிருக்க செய்வித்தனர். அப்போது மங்கள வாத்தியங்கள் கடலொலிபோல முழங்க மங்கிலிய ஸ்திரீகள் மணவரையை அலங்கிருதஞ் செய்தனர்கள். இதற்குள் நிதிபதியானவர் தன் புதல்வன் முதலான பந்துக்களுடன் கல்யாண வீட்டிற்கு வந்து சேர்ந்தனர்கள். தனதத்தன் அவர்களுக்குத்தக்க மரியாதை செய்து ஆசனந் தந்து வீற்றிருக்கும்படி நேமித்து விவாகத்திற்கு ஏற்படுத்திய லக்கினமும் முகூர்த்தமுஞ் சமீபித்து விட்டதென்று விரைவாக மாப்பிள்ளையையும் பெண்ணையும் சிக்கிரம் அழைத்து வரும்படிச் சொல்ல உடனே பெண்ணுக்கும் பிள்ளைக்கும் மங்களஸ்நானஞ் செய்வித்து நல்ல வஸ்திராபரணங்களைக்கொண்டு சிங்காரித்து பதினெட்டுவகை மேளவாத்தியங்களும் தாம் தாமென்று முழங்க, மங்கிலிய ஸ்திரீகள் மாணிக்க விளக்குகளும், பாலிகைகளு மேந்தி வர மாப்பிள்ளையையும் பெண்ணையும், அழைத்துவந்து மணவரையிற் சேர்த்து நலங்கிட்டுக் காப்புக்கட்டியின்னும் நடத்தவேண்டிய சடங்குக ளனைத்தையும் செய்து முடித்து வேத மந்திரங்களால் பூசித்திருக்கும் மங்கிலியத்தை அச் சபையிலிருக்கும் பிராமணர்களாலும் பெரியோர்களாலும் பந்துக்களாலும் ஆசிகூறச் செய்து, புரோகிதர் அந்த மங்கிலியத்தை மாப்பிள்ளையாகிய பரமதத்தன் கரத்தினி லளிக்கப் பரமதத்தனும், அம்மங்கிலியத்தைப் பெற்றுக் கொண்டுப் புனிதவதியார் கண்டத்தினிற் சூட்டினன். அப்போது பிராமணர்கள் நவக்கிரக ஓமம் வளர்த்து வேதமந்திரங்களை உச்சரித்து தம்பதிகளை வாழ்த்தினர்கள். இந்தப்படியே, பெரியோர்களும் பந்துக்களும் வாழ்த்தி அட்சதைகளைச் சொரிந்தனர்கள். பின்பு தனதத்தன் அனேகமாயிரங் கோதானங்களும் பூதான வஸ்திரதான இரணியதான மென்னும் மூப்பத்திரண்டு தானங்களையும் கணக்கு மிதமில்லாமற் செய்து பிராமணர்கள் மூதாளரையுடைய மனதுகளையும் சந்தோஷப்படுத்தி விடை கொடுத்தனுப்பித் தன் பந்துமித்திரர்களுடன்புகுந்துத் தாம்பூல சந்தனாதிகளை யணிந்து சந்தோஷ சாகரத்தினில் மூழ்கியிருந்தனர். இந்தப்படியாக அத்தத் திருமணத்தை ஒருமாதகாலம் நடத்தி கச்சேரி முதலான துக

ளாலும் பந்துகளைச் சந்தோஷப்படுத்தி யாவருக்கும் தக்கபடி சன்மானங்களளித்து விடைகொடுத்தனுப்ப அவர்களும் விடை கொண்டுச் சென்றுத் தங்கள் தங்கள் கிருகத்தைச் சேர்ந்தனர்கள். பின்பு தனதத்தர் சம்மந்தியாகிய நிதிபதியை இரண்டு மாதம் தன் கிருகத்திலே வைத்திருந்து அவருக்கும் அவர் மனைவி மூதலானோ ருக்கும் தக்கபடி சன்மானங்கள் ளளித்து விடைதந்தனர் அந்த நிதிபதியும், சம்மந்தியளித்த சன்மானங்களையும், விடையையும் பெற்றுக்கொண்டு பந்துக்களுடன் நாகப்பட்டணம் போய்சேர்ந்த னர் இங்கேதனதத்தன் தன் மருமகப்பிள்ளையைத் தன்வியாபாரத் தைப் பார்த்துவரும்படி சொல்ல அவரும்மாமனார்சொற்படி வியா பாரத்தை கண்டிப்பாய் பார்த்துக்கொண்டு வருவ்தை குமஸ்தர் கள் கண்டு வெகு சந்தோஷ மடைந்து இச் செய்தியை தங்கள் பெரிய யஜமானுக்குத்தெரியப்படுத்தினர்கள் அதுகேட்டதனதத்த ரும் மருமகனுடைய புத்திகூர்மையைக்கண்டு இவரால் நமதுவியா பாரம் மெத்தவிருத்திக்கி வந்துவிடுவதுமன்றி லாபமும் அதிகமாய் தேறுமென்று சந்தோஷத்தை யடைத்திருக்கிறபோது தன்ம னைவி யோடிவந்து வணங்கி ஓ பிராண நாயகரே நமது புதல்வியா கும் புனிதவதியார் புஷ்ப்பவதியாயினள் இச் செய்தியைசம்மந்திக் கும் பந்துக்களுக்குந் தெரியப்படுத்தி வரவழைக்கவேண்டுமெனக் கேட்டு தனதத்தரும் சந்தோஷங் கொண்டு குமஸ்தர்களைக் கொ ண்டு ஓலைக ளெழுதி அதுகளைச் செந்திரிகை யிட்டு அதற்குமஞ்சள் குங்குமமிட்டுச் சில பிராமணர்களிடங் கொடுத்து ஓ பிராமணர் களே செந்திரிகையில் வரைந்திருக்கும் மேல்விலாசத்தின் படி அவரவர்களிடம் தப்பாமல் அளித்து அவசியம் வரும்படியாகச் சொல்லிவத்து சேருங்களென, அப் பிராமணர்களும் அந்தப்படி யேசென்று செந்திரிகையிலுள்ள மேல் விலாசத்தின்படி நபர்வாரி யாகக் கொடுத்து அவசியம் வரவேணுமென்றுசொல்லி விடைபெ ற்றுக்கொண்டு காரைக்கால் பட்டணத்தைச் சேர்ந்து தனதத்த ரைக்கண்டு போய்வந்த செய்தியைச் சொலல்த் தங்களுக்குச் சேர வேண்டிய கூலிகளைப் பெற்றுக் கொண்டு சென்றார்கள்.

பின்பு, தனதத்தர் அச் சடங்குக்கு வேண்டிய சாமக்கிரியைக ளெல்லாம் தயார்செய்து வைத்து மங்கள வாத்தியங்கள் வாசிக் கும்படி நேமித்து தகத்து சிங்காரித்து புஷ்பங்களா லலங்கிருதஞ் செய்து வெகு ஆடம்பரஞ் செய்துக்கொண் டிருக்கிறபோது சம்ம ந்தியும் பந்துக்களும் வந்து சேர்ந்தார்கள் அவர்களை யெல்லாம் தக்கமரியாதைகளால் உபசரித்து தன் பெண்ணுக்கு ஸ்நானஞ் செ ய்வித்து ஆடையாபரணங்களால் திருத்தி தகத்தில் உட்கார வை த்து ஆட்ட கச்சேரி பாட்டு கச்சேரிகள் வைத்து மெத்த வைபவ மாய் சடங்குகள் பத்துநாள் நடத்தி விருந்துகள் செய்து யாவரை

யும் மகிழ்ச்செய்து உல்லாச விலாசமாக உள்ளங்களித்து சம்பந்தி யும் பந்துக்களும் விடைபெற்றுக்கொண்டு போயின்பின்பு இரண் டொருமாதம்போக்கி நல்லநாளொன்று பார்த்து அந்த நாளில் அரை வீட்டையலங்கிருதஞ்செய்து மலர்களாறும் வாசனை திரவி யங்களாலும் விடெல்லாம் பரிமளவாசனை வீச சதிபதிகளிருவ ரையும் ஆடையாபரணங்களால் திருத்தி கல்ல கடிகையினில் இரு வரையும் அரைவீட்டிற்குள்ளே சேர்த்து மெத்த மனங் களித்திரு ந்தார் இப்படிக்கி ஆறுமாதகாலம் சதிபதிகள் வெகு சந்துஷ்டியுட னிருக்கிறபோது, புனிதவதியார் தன் புருடனை தெய்வமாக பாவி த்து அவரைச் சகலவிதத்திலும் உபசரித்து அவர் மனங்களிக்கும் படி நடந்துவந்தாள். இதைக்கண்டு, அந்தப் பரமதத்தரும் தன் மனைவியின் பதிவிரதா தொண்டுகளுக்கு மெத்த சந்தோஷித்து கற்புடையமங்கையென்பதற்கு இவளுடையநடவடிக்கையேபோது மான சாக்ஷியாகி யிருக்கின்றது, இதுவும் நாம் ஜென்மாந்திரத்திற் செய்த புண்ணியபலனுகும் மேலும் நமக்கு வாய்ந்தமனைவியும் மாமியும் மாமனும் இம்மூவரும் ஒரே அச்சில் வார்ப்படஞ் செய்வ தைப்போல் நற்குணங்கள் பொருந்தினவர்களா யிருக்கின்றார்கள். இதுவும் நாம் செய்தபாக்கியந்தானென்று அடங்காமகிழ்ச்சி கொ ண்டு மாமனருக்கும் மாமியாருக்கும் மெத்தப் பிரியம் உண்டா கும்படி அடக்க ஒடுக்கமாய் நடந்து வருகையில் தனதத்தருக்கு மாப்பிள்ளை மீது மெத்தப் பிரிய மூண்டாகி நூதனமாக வீடொ ன்று கட்டி அவ் வீட்டினில் தன் புதல்வியையும் மருமகனையும் குடியேற்றி வேண்டிய சிப்பந்திகளுடன் பலபல ஸ்திரீதனங்களு மளித்தது மன்னியில் வியாபாரத்திற்கு வேண்டிய பொருள்களை யளித்து வேறுகத்தன்னிஷ்டப்படிக்கி வியாபாரஞ்செய்துக் கெள் ளும்படி நேமித்தார் அந்த நேமனத்தின் படிக்கி வெகு கூர்மைபு த்தியுடன் தனியாய் வியாபாரஞ் செய்து அதினால் அளவற்றப் பெருள்களை சேகரித்து வைத்துக்கொண்டு, அப்பொருள் களில் தானதருமங்களுக் கொருபங்கு பொசிப்புக்கொருபங்கு இருப்பு க்கொரு பங்கு, பகவானுக் கொருபக்கு என்றுமநுசாஸ்திரமுறை யிடுவதைப்போல தருமத்தில் புத்திசெலுத்தினவனுகி ஒரு பாகத் தைதான தருமத்திலும் ஒருபாகத்தைப் புசிப்பிலும் ஒருபாகத்தை இருப்பிலும் மற்றொருபாகத்தை பகவான் கைங்கரியத்திலும் உப யோகித்துக்கொண்டு சிலவருடகாலம் வியாபாரத்தை நடத்திவரு கிறபோது அந்தப் பரமதத்தரிடத்திற்கு வழக்கமாக வியாபாரஞ் செய்ய விரும்பி வருகிற ஒருவர்த்தகர் ஒருநாள் வர்த்தக விஷய மாய் இரண்டு மாங்கனியைக் கொண்டுவந்து கொடுத்தார். அம் மாங்கனிகளிரண்டையும் பரமதத்தர் பெற்றுக்கொண்டு அம்மாங் கனிகளை அங்கு வந்திருக்கும் அடியாரிடத்திற் கொடுத்து இதைக் கொண்டுபோய் என்மனைவியாகியபுனிதவதியாரிடத்திற்கொடுத்து

வீட்டு அன்னம் புசித்துப்போமையா வென்று இன்பமாகச்சொல்
லியனுப்பினர். அந்த சிவனடியாரும் அந்தப்படியே செய்கிறேனென்று சொல்லி மாங்கனிகளைப் பெற்றுக்கொண்டுசென்றுபுனிதவதியாரைக்கண்டு மாங்கனிகளிரண்டையுங் கொடுத்து அந்த அம்மையாரால் அன்னம்பரிமாறப்புசித்துப்போயினர் உடனே, இன்னொரு சிவனடியார் வந்து புனிதவதியாரைக்கண்டு ஓ! அம்மணி! மெத்தப் பசியாயிருக்கின்றது, அன்னம் படைக்கவேணுமென்று சாந்தமாக மொழியக்கேட்டு அகாலமாய்விட்டதே கரியமுது ஒன்றுமில்லையே என்று ஜீவகாருண்ணிய பச்சாத்தாப மடைந்தவளாகியிருக்கிறதை வஞ்சனையில்லாமல் பரிமாரி இவர் பசியைத் தீர்ப்பதே மெத்தப் புண்ணியமாமெனக் கருதி அந்த அம்மையார் சிவனடியாருக்கு ஜலங் கொடுத்து இலைபோட்டு அன்னமுடன் மோரைப் பரிமாரிக் கரியமுது இல்லாலையால் மூன்றித்தன் பிராணநாயகர் சிவனடியாரிடத்தில் கொடுத்தனுப்பிய மாங்கனிகளிரண்டில் ஒரு கனியை பெடுத்துவந்து அந்த அடியாருக்குப் பரிமாரினுள், அவரும் அந்த அன்னத்திற் கரிகமுது இல்லையென்ற மனசஞ்சலம் கொள்ளாமல் மாங்கனியுடன் அந்த மோரன்னத்தை தேவாமிர்தமாகப் புசித்துத் திருப்தியடைந்து சென்றனர், பின்பு, அந்தப் புனிதவதியார் அஸ்தமித்தவுடன் அன்னம் சமைத்துவைத்து நாயகன் வரவுக்கெதிர் பார்த்திருக்கிறபோது அந்தப் பரமதத்தர் கணக்கு வேலைகளை முடித்துக் கிடங்கைச் சாத்திக்கொண்டு தன் வீட்டை நாடிவந்து சேர்ந்து குளித்துப் பூசை முடித்துக்கொண்டு அன்னம் புசிக்கச் செல்லுகையில் புனிதவதியார் மெத்த பயபக்தி விசுவாசத்துடன் அன்னம் கரியமுதுகளைப் பரிமார அந்தப்பரமதத்தர் சந்தோஷத்துடன் வீற்றிருந்து புசிக்கையில் புனிதவதியார் அருகிலிருந்து உபசரித்துக்கொண்டேயிருந்து மாங்கனியின் ஞாபகமுண்டாகி வீட்டுக்குள் சென்று மாங்கனி யொன்றை யெடுத்துவந்து வகுந்து இலையில் வைத்து விசிரிக்கொண்டுபசரித்து இனிமையாகப் பேசிக்கொண்டிருக்கையில் பரமதத்தன் மனைவி யெடுத்துவந்து வைத்த மாங்கனியைப்புசித்து அதுமெத்த இனிப்பாகயிருந்தபடியால் மனைவியைநோக்கி ஒருவசனஞ் சொல்லத் தொடங்கினர்.

கேளும், கற்பிலும் சாந்தசமதமாதி குணங்களிலும் ஜீவகாருண்ணிய பச்சாத்தாபத்திலும் சிறந்த என் மனதுக்கினியபெண்ணே! இம்மாங்கனி மெத்தவு மினிப்பாகயிருப்பதால் இன்னொரு கனியும் புசிக்கவேணுமென்ற இச்சைமிகவுமுண்டாகியிருப்பதால் மற்றொருகனியையும் எடுத்துவந்து வகுத்துவையும் நானபதினம் வேண்டிய கனிகளை வாங்கிவருகிறேன் அக்கனிகளை நீ புசிக்கலாம் இக்கனியை எனக்குப் படைப்பாயெனக் கேட்டு அந்த கற்பு

டைய மங்கை ஓ! நாதா! உலகத்தில் உத்தமஸ்திரீகள் தங்கள் நாய கன் எந்த வஸ்துவின்மீது அதிகப்பிரியங்கொண்டு புசிப்பாரோ அந்த வஸ்துவை சமைத்து அதைப்பரிமாரி யவர்புசித்து மீதியா கிய சேஷத்தைப் புசித்துத் திருப்தியடைவார்கள். இப்படிக்கிருக்க யான்மாத்திரம் அப்படிக்கி நடவாமல் உமதிச்சையை நிறைவேற் றாமல் புசிப்பது நீதியோ? இன்னொரு கனியையும் இதோ பெடு த்துவருகிறே னென்று சொல்லி அரைவீட்டிற்குட்சென்று நாயக னுடைய அனுமதி யின்றி ஒருகனியை எடுத்துச் சிவனடியாருக் குபயோகப்படுத்தியது நமது குற்றமே? இக்குற்றத்தை எவ்வாறு போக்கிக்கொள்ளப் போகிறோம் அன்றியும், நமது பிராணநாயகர் இந்த மர்ம்மத்தை யறியாதவரானதால் மற்றொரு கனியின்மீதும் எனக் கிச்சையுண்டா யிருப்பதால் அக்கனியும் எடுத்துவரக்கட வா யென்கின்றார். இதற்கு நானென்ன செய்வேன் தெய்வமேயெ ன்று சிவபெருமானே நாடிக் கைதொழுதேற்றினாள். அதெப்படி யெனில் ஓம்நம பார்வதிபதியே விவாகஞ்செய்துக் கொண்ட காளி லிருந்து யான் என் கணவனையே தெய்வமென்றும் கணவன் திரு வடிகளே துதிசெய்வதே வேதமந்திரமென்றும், கணவனுடைய புக ழைப்பாடுவதே மோட்சமடையும் மார்க்கமென்றும், கணவனுக் குத்தொண்டுசெய்வதில் மனதைப் பொருந்தவைப்பதே பரலோக வாழ்வென்றும், கணவன்களிக்கும்படி நடப்பதே இகலோகவாழ் வென்றும், கருதிக்கொண்டிருந்தது சத்தியமாகில் அடியாளுக் கொரு மாங்கனி இவ்விடத்தினில் கிடைக்க வேணுமென்று தன் கணவனது திருவடித் தாமரைகளையே சிந்தித்துக் கொண்டிருக் கிறபோது சிவபெருமான் புனிதவதியார் பத்திக்கும், விசுவாசத் திற்கும், உத்தமகுணத்திற்கும், அடியார்களை ஆதரிக்கும் பூத - தயை - பச்சாத்தாபத்திற்கும், மெத்தகளிகொண்டு தெகிட்டாத தெள்ளமுதைப்போன்ற மாங்கனி யொன்றைக் கொண்டுவந்து அம்மாதிற்குத் தெரியாமல் அங்கு வைத்துப்போயினர். இதற்குள் அம்மாது மெத்த நேரமாயிற்றே நமது நாயகர் என்ன கோபிப் பாரோ என்று பயமடைந்து முன்னம் மாங்கனிவைத்திருந்த இட த்தை நோக்கினாள். அங்கொரு மாங்கனி தன்னிச்சையா யிருப்ப தைக்கண்டு இது சிவபெருமா னருளெனவிண்டு அக்கனியைக் கைக்கொண்டு விரைவாகத் தன்னுடனிடத்திற்குவந்து அக்கினி யை வகுந்து இலையினில் வைத்தனள். அம்மாங்கனியை யுற்றுப் பரமதத்தன் புசித்து இம்மாங்கனி முன்னம் நாம்புசித்த மாங்கனி க்காகிலும் இம்மாங்கனி அதிக மதுரமாயிருக்கின்றது அன்றியும். இக்கனியின் னிரமும் வர்ணமும் வேறுவிதமா யிருக்கின்றது, நாம் கொடுத்தனுப்பிய மாங்கனி யிதுவல்ல இதென்னமோ விந் தையாக விருக்கின்றதென்று சந்தேகமடைந்து தன்மனைவியை நோக்கி, ஓ பெண்கள் நாயகமே? இதேது இம்மாங்கனி நான்கொ

தித்தனுப்பிய மாங்கனி யிதல்லவே அம்மாங்கனியிலொன்று
ன்று யிருக்கவேணுமே அவையென்ன செய்தாய் இக்கனி உனக்
கெப்படி கிடைத்தது. இச்செய்தியை ஒளிக்காமல் நடந்தவுண்மை
யைச் சொல்லக்கடவா யென்றனர் இம்மொழிகளைக்கேட்டு அந்
தப் புனிதவதியார் பயந்து இந்த மாங்கனிதான் கொடுத்தனுப்பிய
கனியல்லவென்று இது வேறு கனியென்றும் எப்படியோ தெரிந்
துக்கொண்டதுமல்லாமல் அக்கனியிலொன்று எனக்குணவாகும்
படிக்கொடுத்தாய் மற்றொருகனியிருக்கவேணுமே அது எங்கே?
அதை யென்னசெய்தாய் உண்மையைச் சொல்லென்று விளுவுகி
ன்ற பிராணநாயகருக்கு நாம் ஒளிக்காமல் நடந்த உண்மையைச்
சொல்லுவதே கற்புள்ள மாதர்களுக்கு அழகாதலால் நடந்த உண்
மையையே சொல்லவேணுமென்று கருதித் தன் கணவரைநோக்கி,
தெய்வத்துக்கு நிகராகிய என் பிராணநாயகரே! தேவரீர் கொடுத்
தனுப்பிய கனிகளிரண்டில் ஒன்றை சிவனடியா ரொருவருக்கு
அன்னம்படைத்தபோது கரியமுதும் கொழம்பும்ரசமு மில்லாமை
யால் மோர்பரிமாரிக் கரியமுதுக்கு பதில் மாங்கனியை வகுந்து
அளித்தேன், மற்றொரு கனியை உமக்கு வகுந்து இலையில் பரிமாரி
னேன். தாங்களதைப்புசித்து வெகு மதுரமாக யிருக்கின்றது
இன்னொரு கனியையும் எடுத்துவந்து வகுந்துவையும் என்றசொல்
லக்கேட்ட மாத்திரத்தில் அடியாளுக்கு பயமுண்டாகியது. ஏனெ
ன்றால் தங்களனுமதி யில்லாமல் மாங்கனி யொன்றைச் சிவனடியா
ருக்கு வகுந்து பரிமாரியபடியால் அபசாரப்பட்ட தல்லாமல் சுதந்
தரமு மடைந்துவிட்டோமே என்றும் மாங்கனியை சிவனடியாரு
க்கு படைத்தசெய்தியைச் சொல்லாமல் இதோ மற்றொரு கனியை
யுங் கொண்டுவருகிறேனென்று சொல்லி அடியாளிவ்வரைவீட்டிற்
குட் சென்று சிவபெருமானைத் துதிசெய்துக் கொண்டிருக்கும்
போது உமையவள் நாதன், கிருபைசெய்து இம்மாங்கனியை மாய
மாய் கொண்டுவந்து வைத்துப்போயினர். அதை யடியாளறியா
மல் எப்படி நமது நாயகருக்கு மாங்கனியை உதவப் போகின்
றோம் வெகு நேரமாயிற்றே, இதற்கு என்ன செய்கிறதென்று
யோசித்துக்கொண்டே அவ்விடத்தை யடியாள் நோக்குகையில்
அங்கொரு மாங்கனி இருக்கக்கண்டு மெத்த சந்தோஷத்துடன்
இம்மாங்கனி சிவபெருமான் அருளால் கிடைத்ததென்றெண்ணி
அம்மாங்கனியை எடுத்துவந்து வகுந்துத் தாங்கள் புசித்துக்கொ
ண்டிருந்த இலையில் வைத்தேன். இதுவே நடந்த உண்மையா
மென்று மொழிந்தனள்.

இவ்வண்ணமாகத் தன்மனைவிப் புனிதவதி சொல்லிய உண்
மையை கேட்டு அந்த பரமதத்தன் மிக ஆச்சரியமடைந்து இப்படி
யும் இவ்வுலகத்திலேதேனும் நடந்த துண்டோ இதை யோசிக்க

மெத்த பிரமை யுண்டாகிறது ஆகிலும், இன்னொரு காரியம் இம் மங்கையைக்கொண்டே வரவழைக்க வேண்டும் அந்தப்படிக்கு கிடைக்குமாகில் இப்புனித வதியாரை தெய்வமென்றே தோழ வேண்டும் அப்படி யந்த வஸ்துவானது கிடைக்காவிடில் இம்மங் கையை நமதுமனைவியென்றே பாவித்து இம்மாதுடன் இல்லறதரு மத்தை நடத்திக்கொண் டிருக்கலாமென்று யோசித்து கொண்டு புனிதவதியாரைநோக்கி ஓ ! மாதாசே ! மாங்கனியின் பொருட்டு நீ சிவபெருமானைத் துதிசெய்த மாத்திரத்திலே அச்சிவபெருமான் உனது துதிக்கு மகிழ்ந்து ஒருமாங்கனியை அளித்தன ரென்பது உண்மையாகில் இன்னொரு பழத்தைச் சிவபெருமான் அருளால் கொண்டுவருவையாகில் உன் வார்த்தையை நம்புவேன் அப்படி நீ கொண்டுவராவிடில் உன் சொல்லை எப்போதும் நம்புவதில்லை யென்றார் அவ்வசனங்களைக்கேட்டுப் புனிதவதியார் தன்கணவனை வணங்கி ஓ ! ஸ்வாமி ! தங்களுத்திரவின்படி சிவ பெருமானைத் துதித்து இன்னுமொரு மாங்கனியைப் பெற்றுக்கொண்டு வரு கின்றேனென்று சொல்லி ஓர் அறைவிட்டிற்குட் சென்று ஓ ! ஸ்வாமி! சிவபெருமானே ? தேவரீர் இன்னொரு மாங்கனியை தயைபுரிந்து அளிக்கவேண்டும் அப்படி தேவரீர் மாங்கனி யொன் றை நீரளித்தால் அம்மாங்கனியால் அடியாள் எனது பிராண நாய கருக்கு உண்மையைப்பகர்ந்தவளும் சத்தியவதியு மாகுவேன் அப் படிக்கு மாங்கனியொன்றை நீர் அளிக்காவிடில் யான் பொய்யா ளாகியும், அசத்தியவதியுமாகின்றேன். ஆகலால், புனிதவதியென் னும் அடியாளுடைய சபதை காப்பது உமது பாரமாகும். அன் றியும், உலகத்தோர் கணவனுக்குப் பொய்வார்த்தையைப் பகர்ந் தவளென்று அடியாளை இழிவாகப் பேசும்படிச் செய்யாமல் என் சொல்லை பொய்த்துப் போகாமலும் திருபைபுரிய வேணும் ஐய னே ! திருநீரணிந்த மெய்யனே ! கபாலமேந்தும் கையனே ! மெய்யடியார்களைக் காக்கும் துய்யனே, என்று பற்பலவாறு துதி செய்துக்கொண்டு பிட்சைக்கு இருகரங்களையும் ஏந்தி யிரக்கும் அடியார்களைப்போல தன்னிருகரங்களையும்மேந்தி தேஹியென்று வேண்டினள்-அப்போது, காமதகனனும், கறைமிடற் றண்ணலும், கைலைவாசனும், எமாமகேசனுமாகிய சிவபெருமான் அந்தப் புனித வதியார் தன்னைத் துதிசெய்யும் வசனங்களனைத்தையும்வேத வசனங்களாகக்கருதி, ஆனந்தித்து மருபடியும் ஓர் மாங்கனியை அம்மாதின் கரங்களில் வைத்துப்போயினர் அதையறிந்து அப் புனித வதியார் தெய்வலோக வாழ்வைப் பெற்றதைப்போல, இனி யில்லாத ஆனந்தக் கடலில் மூழ்கினவளாகி அக்கனியை எடுத்து வந்து பயபக்தி விசுவாசத்துடன் தன்னுடைய பிராணநாயக ருடைய கரத்தினி லளித்தனள். பரமதத்தன் அம்மாங்கனியைத் தன் கரத்தினில் வாங்கிப் பார்த்துப் பிரமித்து மயங்கித் தியங்கி

ஒன்றுஞ் சொல்வதற்கு நாவெழாமல் சிறிதுநேரம் சித்திரப்பது மைபோல அசைவற்றிருந்து பின்பு தனக்கு சுயஞ்ஞானம் வந்த வுடன் தன்கரத்தினில் சனியைக் காணுமையால் யோசிக்கத் தொடங்கினர். அதென்னவெனில், இம்மங்கையின் பகுத்துவத் தை நா மித்தனை நாளாய் தெரிந்துக்கொள்ளாமல் இவளை மனைவி யென்றும் இவளுடன் கூடிக் குலாவிக்கொண்டு இல்லறத்தை நடத் திவந்தது நமது புத்தியீனமே, நாமிருந்துக்கொள்ளா முன்னம் இம்மங்கையை மது மனைவி யென்று கருதி, இம்மாதின் கைக ளால் அனேகமாக தொண்டுகள் செய்ய ஏத்துக் கொண்டு யிருந் தோம் இப்போது ரூபில் இத்தெய்வத்தின் மகுத்துவத்தைக் கண் டும் இனி யிக்கற்புடையமங்கையை நமக்கு மனைவி யென்று யெண் ணுவது அஞ்ஞானமே யாம்மேலும் இம்மங்கையின் கைகளால் தொண்டு செய்யப் பெற்றுக் கொள்வதும் நமக்கு மெத்த அபசா ரத்திற் கிடமாகும் ஆதலால், இன்றுமுதல் இம்மாதாவைத் தெய்வ மென்றே பாவனைசெய்து தோத்திரஞ் செய்தும் தொழுது கொ ண்டு மிருப்பதே நமக்குப் பேரின்பவாழ்வைப் பெற்றதற்கு நிக ராகுமென்று மனதில் யெண்ணிக்கொண்டு தன்கருத்தை அன்னிய ருக்குப் புலப்படுத்தாமலும் அம்மங்கையினால் எந்த தொண்டுக ளுஞ் செய்துக்கொள்ளாமலும் அம்மங்கையை தெய்வமென்றே துதிப்பதும் தொழுவதுமாகத்தான் அம்மங்கைக்குத் தெரியாவண் ணம் மானசிகத்தில் செய்துக்கொண்டே யிருந்து எப்படி இத் தெய்வத்தைப் பிரிவது என்று யோசிக்கின்றனன். அதேனெனில், அம்மங்கை தனக்குத் தினந்தோறுஞ் செய்துக்கொண்டிருந்த தொண்டுகளைப்போல அன்னாள் முதல் தொண்டுகள் தனக்குச் செ ய்யும்படிக்கி அம்மங்கை இடைவிடாமல் தொண்டுகள் செய்ய முயல்வதை கண்டு ஏதோ ஒரு போக்குச் சொல்லி அத்தொண்டு களைச் செய்ய வொட்டாமல் நிற்பாடி செய்துக் கொண்டிருந்தும், அம்மங்கை கற்புடையவளாதலால் மனுளனுக்குத் தொண்டு செய் யாமல் இத்தேகத்தை வளப்பதினு லென்ன பயனுண்டாகும் எத் தனைநாளைக் இப்படி யொருவேலையுஞ் செய்யாமல் நன்றாய்த்தின்று கொழுக்கச் செய்தபோதிலும் ஒரு நாளைக்கி யித்தேகத்தை அக் கினிக் கிரையாகச் செய்வது உண்மை யாதலால் எப்படியாகிலும் நமது கணவனை இசையும்படி நயம்பேசி அவருக்குத் தொண்டு செய்து கொண்டிருப்பதே நமக்கு கடமையென் றெண்ணி தன் னிடம்வந்து பணிந்து தொண்டு செய்ய நிர்ப்பந்திப்பதனால் அப் பரமதத்தர் தெய்வமென்று துதிசெயயும் அம்மாதினிடம் பணி விடை செய்துக்கொள்ள மனமில்லாமையாலும் அடிக்கடி வந்து அம்மாது தன்னை நிர்ப்பந்தப்படுத்துவதாலும் அம்மாதைவிட்டுப் பிரிந்துப்போக மனமுடையவனுகி எதெதோ சாக்கு போக்குக ளைச் சொல்லி பணிவிடை செய்ய வொட்டாமல் தடுத்துக்கொண்

டே இம்மாதைப் பிரிந்து நாமெங்காகிலும் சென்றால் தான் நமக்கு அபசாரம் வந்தணுகாதென்று யோசித்து அப்போதே நூதனமாக மரக்கலம் ஒன்று செய்விக்கும்படி தச்சருக்கு உத்திரவுசெய்ய அவர்களும் சிலநாளையில் மரக்கலத்தைச் செய்து முடித்து வந்து பரமதத்தருக்குத் தெரியப்படுத்திடக்கேட்டுப் பரமதத்தரும் அங்கு சென்று மரக்கலத்தைப்பார்த்து சந்தோஷித்துத் தான் போக உத்தேசித்திருக்கும் தீவினில் அகப்படாத வஸ்துக்களைதுவோ அவ்வஸ்துக்களே யெல்லாம் கிரயத்திற்குக் கொண்டு அம்மரக்கலத்தினிலேத்துமதி செய்து நல்லநாளொன்றுபார்த்து அன்னாளில் தெய்வமாக பாவித்திருக்கும் மனைவியை அழைத்து ஓ மாது சிரோமணி பார்வதிக்கி நிகரான பாக்கியவதியே ? யான் வியாபாரஞ் செய்யும் பொருட்டு வெகு சரக்குகளை மரக்கலத்தினில் ஏற்றுமதி செய்துக்கொண்டு தீவாந்திரத்திற்குப் போகின்றேன். ஆதலால், நீ பரமசிவத்தைத் துதிசெய்துக் கொண்டு அவர் திருவருளை படையும் படியான சிந்தனையில் ஜாக்கிரதையா யிருமென்று சொல்லித்தந்திரமாக விடைபெற்றுக்கொண்டு மரக்கலத்தை யோட்டும் மீகாமன் முதலானேருடன் தானும் மரக்கலத்தினிலேறிக்கொண்டு மீகாமனை எச்சரிக்க அவனும் பாயைவிரித்து விட்டு சுக்கானைப் பிடித்துக் கொண்டு மரக்கலத்தை யோட்டினான். அம்மரக்கலமும் காற்று மெத்த அடிப்பதினால் வேகமா ஓடி ஒருவாரத்திற்குள் குறித்த தீவையடைந்து உடனே பரமதத்தன் சரக்குகளையெல்லாம் மரக்கலத்திலிருந்தும் இரக்குமதி செய்து வண்டிகளின்மீ தேற்றிக்கொண்டுபோய் அவ்வூரினில் வாடகைக்கு ஒரு வீட்டைவாங்கி அவ்வீட்டினில் சரக்குகளை இரக்கி வைத்துக் கொண்டிருந்து ஆறு மாதத்தில் எல்லா சரக்குகளையும் விக்கிரயஞ் செய்து பணங்களை வசூல் செய்துக்கொண்டு வந்து மரக்கலத்திலேறிக்கொண்டவுடன் மீகாமன் மரக்கலத்தை யோட்டக்கண்டு பரமதத்தன் மீகாமனை நோக்கி, ஒய் மீகாமனே ? மரக்கலத்தைக் காரைக்கால் பட்டணத்தில் நிருத்தவேண்டாம் அவற்கப்புரம் எந்தத் துரைமுகமிருக்கின்றதோ அத்துரைமுகத்தில் மரக்கலத்தைச் சேர்த்து எனக்குத் தெரியப்படுத்தக்கடவா யென்று திட்டஞ் செய்துவிட்டுத் தான் சென்று தனக்காக அம்மரக்கலத்தில் ஏர்ப்படுத்தி யிருக்கும் அறை வீட்டிற்குள் படுத்துக்கொண்டு நித்திரைசெய்து எழுந்து ஸ்நான ஜபதங்களை முடித்துக்கொண்டு பொரிமாவுடன் கனிவர்க்கங்களைச் சேர்த்துப் புசித்துக்கொண்டு போகிறபோது அம்மரக்கலமானது பதினோராநாளிரவில் காரைக்கால் பட்டணத்திற் கப்புர மிருக்கும் துரைமுகம் போய் சேர்ந்தது. உடனே மீகாமன் பரமதத்தனிடம் வந்து பணிந்து, ஓ ! ஐயா ! செட்டியாரே தாங்கள். சொல்லியபடி காரைக்கால் துரைமுகத்தைத் தாண்டி அதற்கடுத்த துரைமுகத்தினில் மரக்கலத்தை யோட்டிவந்து நிருத்தி யிருக்கின்

றேன். இங்கேதானே லங்கர்பாய்ச்சி விடட்டுமா அல்லது, இனி யெங்காகிலும் போகவேண்டுமா சொல்லவேணுமென்று வினவி னன். அதுகேட்டு, பரமதத்தன் மீகாமனை நோக்கி, ஓ! மீகாம னே! இனியெங்கும் போகவேண்டிய தில்லை, இங்கேதானே லங் கர் பாய்ச்சிவிடு கோராத்திரியா யிருப்பதால் பொழுது விடிந்த வுடன் மற்ற காரியங்களைப் பேசிக்கொள்ளலாம் சீக்கிரம் லங்கர் பாய்ச்சிவிடு மென்று சொல்ல அப் பரதத்தர் முன்போல படுத்து நித்திரை செய்தார். இதற்குள் மீகாமன் லங்கர்பாய்சசி விட்டுத் தானும்படுத்து நித்திரைசெய்தான். உஷ்ணகாலமானவுடன் பரம தத்தன் எழுந்து உட்கார்ந்து சிவபெருமானைத் துதிசெய்துக்கொ ண்டிருந்து சூரியோதயமானவுடனே எழுந்து காலக்கடனை முடித் துக் கொண்டுவந்து அலண்டு நித்திரையும் மீகாமனை எழுப்பி ஓ! மீகாமனே! படவு ஒன்றை சீக்கிரம் வரும்படிச் செய்யும் என் றான். அந்தப்படியே மீகாமன் ஒருபடவை வருவித்து அதில் பரமதத்ததரை யேற்றிப் பணப்பைகளையும் அப்படவினி லமர்த் திப் படவுக்காரனை எச்சரித்தான். படவுக்காரனும் மீகாமன் உத் தரவின்படிக்குப் படவைச் செலுத்திக் கரையினில் விடுத்தான், அதைக்கண்டு பரமதத்தனும் பணப்பைகளை யெல்லாமெடுத்துக் கரையின்மீது வைக்கும்படிப் படவுக்காரனுக்கு உத்தரவளிக்கப் படவுக்காரனும் அந்தப்படியே பணப்பைகளையெல்லாம் படவினி லிருந் தெடுத்துக்கொண்டு போய் கரையினில் ஓரிடத்தினில் வைத் தான். உடனே பரமதத்தன் அப்படவுகாரனுக்குள்ள கூலியைக் கொடுத்து விட்டு ஐந்து வண்டிகளைப் பேசி அதில் இப்பணப்பை களை யேற்றிக்கொண்டு வண்டிகளைத் தொடர்ந்துக்கொண்டே செ ன்று அவ்வூரைச் சேர்ந்து அங்குள்ளவர்களுடன் பிரியமாகப் பேசி வாடகைக்கு ஒரு வீட்டைப்பேசி அவ்வீட்டினில் பணப்பைகளைச் சேர்த்துக் குச்சியிட்டுத் தன் மாபினர் வீட்டை விசாரித்துக்கொ ண்டு சென்று அவர்களைக் கண்டுபேசி தனக்கு இரண்டுமாதத்திற்கு அமுது படைத்தால் அதர்க்குண்டான பணத்தைக் கொடுக்கிறே னென அவர்களும் அந்தப்படியே உமக்கிரண்டுமாதம் வரையில் அமுது படைக்கிறேமென்று ஒப்புக்கொண்டு உடனே அப்பரம தத்தருக்கு ஸ்நானஞ் செய்யும்படி ஜலம் விளாவி பூசைக்குவேண்டி யவைகளை யுதவி அமுது செய்வித்து அன்றுமுதல அவாகள் பரம தத்தனை யிணைபிரியாமலிருக்கிறபோது பரமதத்தன் அந்தவீட் டினி லிருந்தப் பெண்ணெருவளைக் கண்டு அப்பெண்ணை தனக்கு விவாகஞ் செய்துவைக்க வேணுமென்றுக் கேட்டு அவாகளும் பர மதத்தனிட மிருக்கும் பொருளின்மீது ஆசைகொண்டு தங்கள் பெண்ணை இவருக்குக் கொடுத்தால் இப்பொருள்க ளெல்லாம் நமது பெண்ணுக்குத்தானே ஆஸ்தியாகுமென்று யோசித்துத் தன் மரபினருக்கெல்லாந் தெரியப்படுத்தி யாவரையும் வரவழைத்து

உபசரித்திருக்கச் செய்து அவர்களுக்குப் பரமதத்தனை காட்டி இவருக்குத்தான் நமது பெண்ணைக் கொடுக்க வெண்ணி உங்களுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துக்கொண்டு பின்பு நிச்சயித்த முகூர்த்த நாள் குறிக்க வேணுமென்று தெண்ணங்கொண்டு உங்களை யெல்லாம் வரவழைத்தேனுதலால் நீங்கள் யாவரும் ஒன்று சேர்ந்து நன்றாயோசித்து இவருக்குக் கொடுக்கலாம் கொடுக்கக் கூடாதென்ற இரண்டிலொன்றைச் சொல்லுங்களென பந்துக்கள் யாவரும் கேட்டு இவர் யாருடைய புதல்வன் தாய் தந்தைகளின் பெயரென்ன எந்த ஊரில் வசிப்பவர்களென்று வினவ அதற்குப் பரமதத்தன் எங்களூர் நாகப்பட்டணம் என் தந்தையின் பெயர் நிதிபதி செட்டியார் என் தாயார் பெயர் குணநிதியம்மாள் எனக் கேட்டு பந்துக்கள்யாவரும் நமக்கந்த நிதிபதி செட்டியயர் நெருங்கிய பந்துவாயிற்று. குணநிதியம்மாள், எனக்கு சகோதரி எனக்கு தமக்கை எனக்கு மைச்சினி எனக்கு மூத்தமாமியார் என்று ஒவ்வொருவரும் ஒவ்வொருமுறை கொண்டு பேசிக்கொண்டு இவருக்கு நமது பெண்ணைக்கொடுத்து விவாகஞ் செய்விப்பதற்கு யோசிக்கவேண்டியதே யில்லை தடையில்லாமல் கொடுக்கலாம் என்று யாவரும் சம்மதிக்கக்கேட்டு பெண்ணுக்குத் தந்தையான வன் வெகு சந்தோஷமடைந்து உடனே புரோகிதரை வரவழைத்து முகூர்த்தநாள் குறிக்கும்படிச் சொல்ல, அப்புரோகிதரும் திதி-வாரம்-நக்ஷத்திரம்-யோகம்-கரணம் - லக்கினம் - முதலானதுகளைக் கணக்கிட்டு சுபமுகூர்த்தம் ஒன்று குறித்து மணஓலை இரண்டெழுதி ஒருவருக் கொருவர் மாற்றிக்கொண்டு பந்தல்கள் போடுவித்து அலங்கிருதஞ் செய்து பந்துக்கள் முதலானோருக்குத் தெரியப்படுத்தி வரவழைத்து பெண்ணையும் பிள்ளையையும் சிங்காரித்து அழைத்து வந்து மணவரையில் உட்காரவைத்து சடங்குகளனைத்தையும் முடித்து பிராமணர்கள் வேத மந்திரங்களையோத மங்கிலியஸ்திரீகள் மங்களங்கள்பாட பரமதத்தன் அப்பெண்ணின் மிடற்றினில் மாங்கிலியஞ் சூட்டி யாவராலும் ஆசிகூறப் பெற்று வெகு சந்தோஷத்துடன பந்துக்களுடன் புசித்து சந்தன புஷ்பதாம்பூலாதிகள் தரித்து மெத்த உல்லாசமாகவிருந்து ஒருமாதகாலம் விவாகம் கச்சேரி முதலாகிய பற்பல ஆடம்பரங்கள் நடத்தி நிஷேகமுகூர்த்தமுஞ் செய்வித்துப் பந்துக்கள் யாவரும் விடை பெற்றுத் தங்கள் தங்கள் அகம்போய் சேர்ந்தார்கள். பின்பு பரமதத்தனும் அம்மங்கையுடன் இல்லறத்தினில் தருமத்தை நடத்திக்கொண்டும் வியாபார பலத்தினால் திரண்டபொருள்கள் சேகரித்துக் கொண்டும் நவகோடி நாராயண செட்டியாரைப் போல தானதருமங்கள் குறைவின்றி நடத்திக் கொண்டு மிருக்கிற போது அம்மங்கையின் வயிற்றினில் சிவபெருமானுடைய கிருபையினாலே ஓர் பெண்குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்குத்

தான் விட்டுப்பிரிந்த தெய்வமாகியும் முன் மனைவியுமாகிய புனித வதியார் பேரைவைத்து மூன்றுதரம் அழைத்து வேண்டிய மட்டுக்கும் தான தருமங்களைச் செய்து பந்துக்களுடன் புசித்து வெகு சந்தோஷமாக விருந்தார்.

இவரிங் கிப்படியிருக்க, அங்கே காரைக்கால் பட்டணத்திலி ருக்கும் புனிதவதியார் தன்கணவன் வியாபாரத்தின்பொருட்டு தீவாந்திரம் போயினவர் இரண்டு மூன்றுவருடமாகியும் வராததா ல்நமது பிராணநாயகர் இன்னும்வராமலிருப்பதற்குக் காரண மென்ன ஏதோவகை மோசமாக விருக்கின்றது காலதாமதஞ் செ ய்யாமல் யாரையாகிலும் அனுப்பி அவரெங்கிருந்தபோதிலும் போய்த்தேடி யழைத்துவரும்படிச் சொல்லி யனுப்பவேணுமெ ன்று கருதித் தன்தந்தை தாயார் வசிக்கும் வீட்டையடைந்து இரு வரையும் வணங்கித் தன் கணவன்சென்று மூன்று வருடமாயிற்று. இன்னும் வரவில்லை யாதலால் யாரையாகிலும் அனுப்பி இருக்கு மிடத்தைக்கண்டு தெரிந்துக் கொண்டு வரும்படி சொல்லியனுப்பு மைபா என் தந்தையார்களே என்று விசனப்பட்டழுவும் பெண் ணைக்கண்டு அவர்களிருவரும் வெகுவாக சிந்தித்து உடனே தேறி புதல்விக்குப் பற்பல நீதிகளையோதி விசனத்தைப் போக்கி அந்த தனதத்தர் தன்னிடத்தினில் மெத்த புத்தி கூர்மையுள்ள குமஸ் தாக்க ளிருக்கின்றார்க ளன்றே ? அவர்களில் இருவரையழைத்து உங்களுக்கு வேண்டிய படிச்சிலவு மூதலானதுகளுந் தருகிறேன், அதுகளைப் பெற்றுக்கொண்டு சென்று என் மருமகன் பரமதத் தன் எங்கிருந்தபோதிலுந்தேடி இருக்குமிடத்தைத் தெரிந்துக் கொண்டு சீக்கிரம் வந்துசேருங்களென்று திட்டப்படுத்தி படிச் சிலவுகளுக்கு வேண்டிய பொருளையீந்தார். அவ்விருவர்களும் அதைப் பெற்றுக்கொண்டு தீவாந்திரங்களுக்குச் செல்லும் மர கலத்தின் மீதேறிக்கொண்டு போய் வெகு தேசங்களைச் சுற்றித் தேடியும் பரமதத்தனைக் காணாமல் அவர்களும் மெத்தக் கவல யடைந்தவர்களாகி நாம் தேடாத தேசமில்லை எந்த தேசத்திற்குப் போயிருப்பானென்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டே பரம தத்தன் ஆறு மாதகாலமிருந்து வியாபாரஞ்செய்த தேசத்திற்குச் சென்று அங்கிருப்பவர்களை விசாரி தெரிந்துக்கொண்டு இந்தப் பரமதத்தன் வியாபாரா முடிவுசெய்துக்கொண்டுபோய் இரண்டரை வருட மாகின்றது என்று இவ்வூரார் சொல்லுகின்றார்கள் அப்படிக் கிருந்தால் நேராய் காரைக்கால் பட்டணத்திற்கல்லவோ வந்து சேரவேணும் அங்கும்வரவில்லையே இனி எங்கேதான் போயிருப் பான் என்று கவலைமேலிட்டுத் தூரமுகத்தில் வந்து அங்கிருந்த யோர் மரக்கலத்தின் மீதேறிக் கொண்டு திரும்பிவருகிறபோது அம்மரக்கலத்தை யோட்டும் மீகாமனைக் கொண்டு இம்மரக்கலம

பரமதத்தனுதல்லவா அப்பரமதத்தன் எங்கே என்று வினவுவதைக் கேட்டு மீகாமன் அந்த இவர்களை நோக்கிச்சொல்லுகிறான் ஒ ஐயா நீங்களிருவரும் தனதத்த செட்டியாருடைய குமஸ்தாக்க ளல்லவா நீங்கள் இவ்வளவு தூரம் வரவேண்டிய காரணமில்லையே? உங்கள் வரவையோசித்தால் ஏதோபெருத்த காரியமாகத் தோ ன்றுகின்றது என்ன விசேஷம் அதையெனக்குத் தெரியப்படுத் தினால் அக்காரியத்திற்கு வேண்டியமுயற்சி செய்வதன்றியும் எனக் குத் தெரிந்திருக்கும் பக்ஷத்தில் அச் செய்தியை இப்போதே சொ லலுகிறேன். நீங்களும் உங்கள் உளவுக்குக் கூடிய சீக்கிரத்தினில் போய் சேரலாமெனக் கேட்டு குமஸ்தாக்களில் ஒருவன் மீகா மனைநோக்கி ஒ ஐயா நாங்கள் வந்தகாரியம் என்னவெனில் தன தத்தர் மருமகனுகிய பரமதத்தன் இதோமரக்கலத்தைப் புதுமை யாகச்செய்தபோது இம் மரக்கலத்தின் மீது வெகு சரக்குகளை யேற்றுமதி செய்துகொண்டு தீவாந்திரத்திற்குப்போய் வியாபாரஞ் செய்து வருகிறேனென்று சொல்லிப் போய் மூன்றுவருட கால மாயின படியால் அவர்மனைவியார் நாயகன் இன்னும் வரவில்லையே என்ன காரணமோ தெரியவில்லை யென்றுத் தன் தந்தையிடம் முறையிட்டுக் கொள்ள அவர் எங்களை யனுப்பித் தேடிப் பார்த்து இருக்குமிடத்தைத் தெரிந்துக்கொண்டுவரச் சொல்லி விடையளித் தார். நாங்களும் அவர் சொற்படியே வெகு தேசங்களுக் கெல் லாஞ் சென்று தேடித் தேடித் வேசாரிவந்தோம் ஆகையால் இந்த மரக்கலத்திற்குச் சொந்தக் காரரும் பரமதத்தரு மென்கிற உத்த மரை நீர் பார்த்தேயிருக்கலாம் அதெப்படி யெனில் தாங்களும் மரக்கலத்திற்கு மீகாமராகியபடியால் மாதமாதம் சம்பளம் உம க்கு அவர்தானே கொடுக்கவேணும் அன்றியும் அவரிடத்திற்குத் தாங்கள் சென்று தானே சம்பளம் வாங்க வேண்டியவரா இருப் பதனால் அந்தப் பரமதத்தரிருக்குமிடம் உமக்குத் தெரிந்தே யிரு க்குமென்பதற்கு ஐயமே இல்லை ஆகையால் எங்கள்மீது கிருபை செய்து அந்தப்பரமதத்தர் இருப்பிடமின்ன தென்று எங்களுக்குத் தெரியப்படுத்தினால் நாங்களவ்விடத்திற்குச்சென்று அவரைக்கண்டு பேசி எங்கள் குறையைத் தீர்த்துக்கொண்டு எங்கள் ஊரைப்போய் சேருகின்றோமென்று மெத்தவணக்கமாகப் பேசுகின்ற குமஸ்தா க்களுடைய இனிய மொழிகளைக் கேட்டு அந்த மீகாமன் மெத்தப ச்சாத்தாபமடைந்து குமஸ்தாக்களைநோக்கி ஒ ஐயா! கணக்குப்பி ள்ளைகளே அந்தப் பரமதத்தர் மூன்று வருடத்திற்குமுன்ன மித்த மரக்கலத்தினில் சரக்குகளை ஏற்றுமதிசெய்துக் கொண்டு போயி னது உண்மையே அப்போதும் நானே இம்மரக்கலத்தை ஓட்டிக் கொண்டுதீவாந்தரத்திற்குப்போய் ஆறுமாதகாலம் அங்குதங்கியிரு ந்து சரக்குகளை யெல்லாம் விற்பனை செய்து அளவற்ற திரவியங் களைச்சம்பாதித்துக்கொண்டுதிரும்பியும் மரக்கலத்தில் அவரையே

ற்றிக் கொண்டு காரைக்காலுதிகு அப்புரமிருக்கும் ஓர் தறையில
ரக்கிவிட்டேன் அவரும்திரண்டபொருள்களடங்கிய பணப்பைகளு
டன் அவ்வூரைச்சேர்ந்து அங்கோர் வீட்டினிலமுது செய்துக்கொ
ண்டு இரண்டுமூன்றுமாதகாலமாயின பின்பு அவ்வீட்டினிலிருக்கும்
ஓர் மங்கையை மணம்புரிந்து அம்மங்கையுடன்கூடி இல்லறதருமத்
தைநடத்தியும் வியாபாரவிஷயங்களில் கவனித்துக்கொண்டுமிருக்கி
றபோது அம்மங்கையின் வயிற்றினிலொருபெண்குழந்தை யுதிக்க
அக்குழந்தைக்குப் புனிதவதியாரென்று காமகரணமிட்டுவளர்த்து
க்கொண்டு வெகு சந்தோஷமாக இனிது வீற்றிருக்கின்றனர் அவ
ரைப்பார்க்கவேணு மென்ற இச்சையுங்களுக் குண்டாயிருந்தால்
இம்மரக்கலத்தின் மீதேவருவீர்களானால் அவரிருக்குமிடத்தை
யுங்களுக்குக் காட்டுகின்றேன் நீங்களும் அவரைக் கண்டு பேசிப்
போகலாம் வாருங்களேயா வென்றழைக்க அவனும் மீகாமன்சொ
ற்படி அம்மரக்கலத்தின் மீதேறிக் கொண்டு சென்றார்கள்.

இவ்வாறுபரமதத்தன் விருத்தாக்கங்களனத்தையுஞ் சொல்லி
யந்தக்கணக்குப்பிள்ளைகளையும் அம்மரக்கலத்தினிலேற்றிக்கொண்
டு ஆறுவதுநாள் அத்தரைமுகத்தினில்லங்கர் போட்டுக்கணக்கர்க
ளுடன் கரையேறி அவ்வூர்குட்சென்று பரமதத்தனிருக்கும் வீட்
டையவர்களுக்குக் காட்டி இனியெனக்குவிடை கொடுங்களென்று
விடைபெற்றுக்கொண்டு மீகாமன் போயின பின்பு கணக்கர்களிரு
வரும் அவ்வீட்டிற்குட்சென்றார்கள் இவர்கள் வரவைக்கண்டு பரம
தத்தன் எதிர்க்கொண்டுவந்து அழைத்துச் சென்று அவர்களைத்த
க்கஆசனத்தின் மீதிருக்கச் செய்து சேமங்களை விசாரித்துதன்னு
டைய சேமத்தையுந் தெரியப்படுத்தி தெய்வமென்று துதிசெய்
யும்புனிதவதியார் சேமத்தையும் விசாரித்துத்தெரிந்துக்கொண்டு
அவர்களிவருக்கும் பிராமணன் வீட்டில் அமுதுசெய்விக்கும்படி
சொல்லி அவர்களும் அந்தப்படியே பிராமணன் வீட்டினில்அமுது
செய்துவந்தபின்பு தான்சென்று ஸ்நான அநுட்டானங்கள் முடித்
துவிந்திப்படிக்கி சிவபெருமானைப்பூசித்து அமுதுசெய்துவந்து அவ
ர்களுடன்சந்தன தாம்பூலாதிகளைத் தரித்துச் சிதநேரம் படித்து
இளைப்பாறி உடனேஎழுந்து அவர்களுடன் வியாபாரத்தின்முறை
மைகளைப்பேசிக்கொண்டிருந்து பொழுதுபோனபின்பு அவர்களை
பிராணன்வீட்டிற்குச்சென்றுப் புசித்துவரும்படி யனுப்பித் தான்
சென்று குளித்துப்பூசை செய்துக்கொண்டிருக்கையில்அவர்களும்
பிராமணன் வீட்டிற்குச்சென்று புசித்து வந்து சேர்ந்தார்கள் இத
ர்க்குள் பூசைமுடித்துக் கொண்டு வெளியில் வந்து அவர்களைக்
கண்டுபோசிப்பு ஆச்சுதாவென்று விசாரித்துத் தெரிந்துக்கொண்டு
அவர்களை வீற்றிருக்கும்படிச் செய்து தான் சென்றுப்புசித்துச்சந்
தனதாம்பூலாதிகளுடன் வந்து அவர்களுக்கு மீந்து தரித்துக்கொ

ள்ளும்படி சொல்லிதானும் தரித்துக்கொண்டிருக்கிறபோது கணக்கர்களில் பெரியோன் பரமதத்தனே நோக்கி, ஓ! ஐயா! புண்ணிய புருடரே? இனிஎங்களுக்கு விடையளித்தால் நாங்கள் ஊருபோய் சேருமுறேம் வீட்டைவிட்டு வெளிப்பட்டுமெத்த நாளாய்விட்டது உமது மனைவி புனிதவதியாரும் மாமன்தனதத்தரும்எங்களைஎதிர் பார்த்துக் கொண்டிருப்பார்கள் ஆதலால் நாங்கள் ஊருக்குச் சீக்கிரம்போகவேண்டுமெனக்கேட்டு அந்தப் பரமதத்தன் தன்னிடமிருக்கும் சேவகனையழைத்து அப்பா சேவகனே நீதுரைமுகத்துக்குசீக்கிரமாயோடிநமது மரக்கலத்தை யோட்டும் மீகாமனையழைத்துவரக்கடவா யென்றனுப்ப, அச்சேவகனும் அந்தப்படியேயோடித்துரைமுகத்தைச் சேர்ந்து மீகாமனைக் கண்டு ஓ! ஐயா! நமது யெஜமான் தங்களை சீக்கிரம் அழைத்துவரச் சொனனர். எழுந்து வருவீரெனக் கேட்டு, அந்த மீகாமனும் விரைந்தெழுந்து, சேவகனுடன் நடந்து சென்று திண்ணையின் மீதிருக்கும் எஜமானனைக் கண்டுவணங்கி ஓ! ஸ்வாமி! என்னையழைப்பித்தக்காரியம் யாதோ தெரியவில்லை அதைத்திருவுளம் பற்றவேணுமென்று வேண்டினன் அதைக்கேட்டுபரமதத்தன் மீகாமனை நோக்கி, ஐயா! மீகாமனே! இவர்களிருவரையும் நமது மரக்கலத்தில் ஏற்றிக்கொண்டு சென்றுகாரைக்கால் பட்டணத்துரைமுகத்தினில் இவர்களை யிரக்கிவிட்டு சீக்கிரம் இங்குவந்து சேரவேண்டும் என்றுசொல்ல மீகாமனும் அப்படியே வருகிறேன் ஸ்வாமியென உடனே பரமதத்தன் அவர்களைப் பிரயாணப் படுத்திவேஷ்டிகள் முதலான துகளும் அவர்களுக்கு சன்மானமாகக்கொடுத்து அவர்களுடன் சென்று வழிபட்டுத் திரும்பிவந்து தன்னகரம் சேர்ந்து சுயனித்து நித்திரை செய்தான் கணக்கர்களிருவரும் மீகாமன் பின்சென்று மரக்கலமேறிக்கொள்ள மீகாவன் கண்டு காத்து வாட்டமறிந்து பாய்களைவிரித்து சுக்காளைப்பிடித்து மரக்கலத்தையோட்டி மூன்றுநாள் காலையில்காரைக்கால் பட்டணத்து துரைமுகத்தினில் கொண்டுபோய் நிறுத்திக் கணக்கர்களை எச்சரித்தான் அவர்களும் நமது ஊரைவந்து சேர்ந்தோமென்றுமெத்த சந்தோஷித்து மீகாமனைநோக்கி ஓ! ஐயா! மீகாமனே பரமதத்தனைக் கண்டதும்உம்மாலே நாங்கள் எங்களூரைச்சேர்ந்ததும் உம்மாலே நீர்செய்த இன்னன்றிக்குப்பதில் நாங்களென்ன செய்யப்போகிறோமென்றுபற்பலவாறு புகழ்ந்து விடைபெற்றுக் கொண்டு மரக்கலத்தை விட்டிரங்கி நடந்துதங்கள் வீட்டைச்சேர்ந்து குளித்துப்பூசைமுடித்து அமுதுசெய்துபடுத்து சற்றுநிளைப்பாரி உடுத்திக்கொண்டுவீட்டை விட்டு வெளிப்பட்டு நடந்து தங்கள் எஜமான் வீட்டைச்சேர்ந்துப்புனிதவதியாரையும் எஜமானியுங்கண்டு பரமத்தரிருக்கும் ஊரையும் அவர் இரண்டாவது விவாகஞ் செய்துக்கொண்டதையும் அம்மனையியின் வயிற்றினிலொரு பெண் பிள்ளைப் பிறந்திருப்பதையும் அப்பெண் குழந்தைக்குப்

புனிதவதியாரென்று பெயரிட்டிருப்பதையும் அவருக்கப்போதிரு
க்கும் பொருளின் அளவையும்ஆதியோடந்தமாகச் சொல்லிவிடை
பெற்றுக்கொண்டு சென்றுகிடங்கைச் சேர்ந்து கணக்குவேலைகளி
ல் தங்கள் மனதைச் செலுத்திக்கொண்டிருந்தார்கள். பின்பு தன
தத்தர் தன் சம்மந்தியாகியநிதிபதியை வரவழைத்து ஏகாந்தமாக
வைத்துக் கொண்டு ஒய் நிதிபதியே! உமது குமாரியான் மெ
த்தபோக்கியன் கல்வியிலுங்சணக்கிலுந்திறவானென்று பலருஞ்
சொல்ல யானும் பரிட்சித்துஇவனுக்கு நமதுபெண்ணைக்கொடுத்
தால் பெண்ணுஞ்சுகமடைவாள்நாமும் சுகம் பெறலாமென்றெண்
ணி அநேக பந்துமித்திரர்கள்முன்னிலையில் என்பெண்ணைக் கன்னி
யாதானமாக அவனுக்குக்கொடுத்து விவாகஞ்செய்வித்தேன் அ
வனும் என்சொல்லுக்குமறுத் தொன்றுங் கூறாமல் வியாபாரத்தி
லும் வீட்டுக்காரியங்களிலும் மெத்தநிறமையுடையவனாக விருந்த
மையால் எனக்குசந்தோஷம் பிறந்துநூதனமாக ஓர்வீட்டைக்கட்
டி அவ் வீட்டினில் சதிபதி யிருவர்களையுங் குடியேற்றி யான்வெ
ளியிலிருந்தபடியே இவர்களுக்கு வேண்டியவர்களை யெல்லாம்
அநுகூலப் படுத்திக்கொண்டு மிருந்தேன, இப்படிப்பட்ட யென்மீ
தும் என் புதல்வியின் மீதும் யேதோ விகல்ப்பம்எண்ணிக் கொண்
டு அதை யின்னதென்றும் வெளிப்படுத்தாமல் வஞ்சகக் கருத்தினா
ல் மாக்கலமென்று புதுக்கி அதில் பற்பல சரக்குகளை யேற்றுமதி
செய்துக்கொண்டு தீவாந்திரத்திற்குச் சென்று வியாபாரஞ் செய்து
வருகிறேனென்று சொல்லிப்போய் வேறொருஊரில்தங்கி அங்கோ
ர்பெண்ணை விவாகஞ்செய்துக்கொண்டு அம்மங்கையின் வயிற்றினி
லொரு பெண்குழந்தையையும் பெற்றுக்கொண்டும் அப்பெண்குழ
ந்தைக்குப் புனிதவதியாரென்று நாமகரணமிட்டு வெகு செல்வமா
கவளர்த்து வருவதாய் கேழ்விப்பட்டேன், மேலும் இப்படிப் பட்
டகபடநெஞ்சமுடையவ னென்று யான்முன்னமே யறிந்திருப்ப
னேயாகில் இவனுக்கென் பெண்ணைக் கண்ணியாதானமாகக்கொடு
த்து அளவிறந்த பொருளை விரயஞ் செய்விப்பேனே ஆஹா! ஹா!
இதென்னமோசம் இதென்ன வஞ்சகம் அப்படியுஞ் செய்யு மவர்
கள் இவ்வுலகத்தி லெங்கேனு மூண்டோ இதுவென்னிதியோ? அல்
லது யார்செய்த சதியே? இதுவென்ன பாபமோ? யாரிட்டசாப
மோ என்று மதிகலங்கி முகங்கருகித் துயரப்படத் தொடங்கினர்.

இவ்வண்ணஞ்சொல்லி மதிகலங்கி துயரப்படு சம்பந்தியாகிய
தனதத்தரை நோக்கி, நிதிபதிசொல்லுகின்றார். ஒய்தனதத்தரே? உ
லகத்தினில் நற்கருமம், துஷ்க்கருமமென் றிரண்டுளது இவ்விரண்
டையும் மனிதனானவன் சமமாகவே அனுபவிக்கவேணும், தெஅ
ப்படியெனில் சுகம் வந்தபோது-சந்தோஷமும் துக்கம் வந்தபோ
து-விசனப்படவுங்கூடாது! சுகத்தை யெப்படி சந்தோஷமாகவே

அனுபவித்தோமோ அப்படியே துக்கம் வந்தபோதும் சந்தோஷமாகவே அனுபவிக்க வேண்டுமென்று சாத்திரமுறையிடுவதால் விவாகஞ் செய்வித்த காலத்தினில் நீரடைந்த சுகத்தைப்போல மருமகன் பிரிந்துபோயின துக்கத்தையுஞ் சுகமாகவே அனுபவிக்கவேண்டியதை விடுத்துத் துயரப்படுவது நீதியாமோ அன்றியும் மனிதனைவன் எந்தெந்த காலத்தி லெந்தெந்த சுகத்தை யடையவேணுமோ அந்தந்தகாலத்தி லந்தந்த சுகத்தை யடைந்தே தீரவேனும் அன்னியிலும் எந்தெந்த காலத்தி லெந்தெந்த துக்கத்தை யடைய வேண்டுமோ அந்தந்த காலத்தி துக்கத்தை யடைந்தே தீரவேணும் இதர்க்குமேர்க்கோளி யாதெனில் நவகிரகளுக்கும் அதிபதியாகிய குபோன்தனக்குப் பிரியமான நேசனுகி யிருந்தும் தன் கரத்திற் பிடித்திருப்பது சொர்ன்ன மலையாகி யிருந்தும் தரன் தேவர்களுக் கெல்லாம் அதிபதியாகி யிருந்தும் சிவபெருமான் ஒருகாலத்தினில் கபாலத்தை யோந்திக்கொண்டு பிட்சை யெடுக்கும்படியாக நேரிட்டது அதேனெனில் பூர்வத்திற் செய்த கருமத்தின் பலனுகும் ஆகையால் கருமமான தேவர்கள் மூவர்கள் மற்ற யாவர்களையும் விடமாட்டாது மூன் ஜென்மாந்திரங்களில் உனது புதல்வியாகும் புனிதவதியார் எந்தகருமத்தைச் செய்தனளோ அந்த கருமத்தின்பலன் இந்தஜென்மத்தினி லனுபவிக்காமல் தீராது இப்படிக் கெல்லாம் பகவானுடைய யேர்ப்பாடுக ளிருப்பதால் அந்த மர்மங்களை யறியாமல் நீர் துக்கப்படுவதால் நின்மருமகன் அங்கிருக்கும் சம்சாரத்தைவிடுத்து இங்கிருக்கும் சம்சாரத்தினிடம் வந்தசேருவானே ஒருக்காலும் வந்து சேரமாட்டான் வீணுக நீரேன் விசனப்படுகிறீர் உமது பேரறிவுலே உமக்குண்டா யிருக்குந் துயரத்தைப் போக்கிச் சந்தோஷத்துடன் இனிமேல் நடக்கவேண்டிய காரியங்களை யோசித்துச்செய்ய முயலுமையா வென்று நீதிகளை யோதி அந்த தனதத்தருக்குற்ற விசனத்தை மாற்றினர் உடனே தனதத்தரும் விசனமாரித் தெளிவடைந்து மூத்துச் சிவிகையில் தன் புதல்வியாகிய புனிதவதியாரை யேற்றி போயிகளால் எடுப்பித்துக் கொண்டும் தானும் சம்பந்தியும் இன்னுஞ் சிலருடன் வண்டியின்மீ தேரிக்கொண்டு தன்மருமகனுகிய பரமதத்தனிருக்கும் வூரைநாடிச் சென்றுநாலாவதுநாள் தன் மருமகனிருக்கும் வூருக்கருகிலிருக்கும் ஓர் சோலையிலிரங்கி அங்கிருந்தபடியே போயிகளை யனுப்பித் தன் மருமகனை அழைத்துவரும்படி நேமிக்கக் கேட்டு, அந்த போயிகளும் எஜமான் உத்திரவுபடிக்கி அவ்வூரைச்சேர்ந்து பரமதத்தரைக் கண்டு வணங்கி ஓ! ஸ்வாமி! உங்கள் மாமனாரும் உமது தந்தையும்மனவி புனிதவதியாரும்இன்னுஞ்சில பந்துக்களும்அதோ யிருக்கின்ற சோலையில்வந்திரங்கி யிருந்துக்கொண்டு தங்களை அழைத்து வரும்படிஎங்களையனுப்ப இங்குவந்தோம் காலதாமசஞ்செய்யாமல் சீக்கிரம் வரவேணுமென்று தரிதப்படுத்தும்

போயிகள் மொழிகளே கேட்டு அந்தப்பரமதத்தன மெத்த சந்தோஷத்துடன் தன் புதல்வியை அழைத்துக் கொண்டு போயிகளுடன் அச்சோலைக்குட்சென்று மாமனரையும் தந்தையையும் இன்னமுமுள்ள பந்துக்களையுங் கண்டு வணங்கி அருகினில் நின்றிருக்கும் புனிதவதியாரையும் வணங்கி, ஓ! தெய்வமே! நினது அரிய தெரிசனம் அடியேனுக்குக் கிடைத்தது மெத்தநாளாய் விட்டபடியால் இவ்வேழையின்மீது கடாக்ஷம் வைத்துத்தாங்களே இவனுக்குத் தெரிசனங் கொடுக்கும் பொருட்டு எழுந்தருளினதாகவெண்ணுகிறேன். அன்றியும், பெற்ற பிள்ளையின் மீது அன்னைக்குப் பிரியம் அதிகரித்தால் தன் பிள்ளையைக் காணவேணும் கண்டு மனங்களித்து நீடுழியாய் வாழ்ந்திருக்கும்படி வாழ்த்தி வரங் கொடுப்பதைப்போல, என் மீது தங்களுக்கெத்தனை கோபமிருக்கினும் அக்கோபத்தை சாந்தப்படுத்திக் கொண்டு அடியேனை யாண்டிரட்சிப்பதை உமதுபாரமாகுமென்று துதிசெய்வதைக்கண்ட மாமனரும் தந்தையும் பந்துக்களும் இதென்ன விந்தையா யிருக்கின்றது, மனிஷியைப் பணிந்து துதிசெய்யும் மனுஷனு முண்டோ இப்படி எங்காகிலும் நடந்தது மில்லை, கதையிலுஞ் சொல்லக் கேட்டதில்லை இவனுக்கென்ன பைத்தியந்தான் பிடித்ததோ அல்லது ஏவலின் வசமையோ இதை யோசிக்கையில் மெத்த ஆச்சரியத்தை விளைக்கின்றது மேலும் இந்தப்பரமத்தத்தன் மெத்த புத்திமானுயிற்றே அப்படிப்பட்ட உத்தமனுக்கு இப்படிப்பட்ட துர்க்குண மூண்டாவதற்குக் காரணமென்ன இதைக் கவனிக்கு மிடத்தில் இப்பரமதத்தனுக்கும் புனிதவதியாருக்கும் உள்ளுக்குள்ளே ஏதோ ஒருவிசேஷம் நடந்திருக்கவேண்டும் அப்படிக்கிருக்கிறபடியினலன்றே மனிஷியாளென்று தனக்குத் தெரிந்திருந்தும் இம் மங்கையின் திருவடிகளில் விழுந்து பணிந்து துதி செய்கின்றான். இவருக்குள் விருக்கும் ரகசியத்தை விசாரித்து வெளிப்படச் செய்யவேண்டுமென்றுகருதி அந்த தனதத்தன் மருமகனை நோக்கி, ஒரு வசனஞ் சொல்லுகின்றார்.

அப்பா யென்மனதுக்கினிய மருமகனே! இந்தப்புனிதவதியை நீ விவாகஞ்செய்துக்கொண்டு அவளுடன் இல்லற தருமந்தை நடத்திக்கொண்டு வெகு பிரியமாக விருந்த உனக்கு இம்மங்கையின் மீது வெறுப்புண்டாகி அவ்வூரைவிட்டு இவ்வூரைச் சேர்ந்து வேறு பெண்ணை மணம் புரிந்துக்கொண்டு இம்மங்கையின் முகத்தையும் பாராமல் நீயிருப்பதற்கு இப் புனிதவதி யுனக்கென்ன கெடுதி செய்தனள். எந்தகாரணத்தைப்பற்றி இம்மங்கையை நீபணிந்து துதிசெய்கின்றாய் இந்த செய்தியை ஒளிக்காமல் உண்மைக் குத்தாரமாக நாங்கள் தெரிந்துக் கொள்ளும்படி விபரமாகச் செல்ல வேணுமென்று நயமாகப் பேசி வினவினர் அதற்கந்த பரமதத்

தன் சிறித்துத் தன் மாமனுரை நோக்கி, தன்னைப் பெற்றவனும் தனக்கு மூத்தவனும் தனக்கு கல்வி கற்பித்தவனும், மந்திரோப தேசஞ் செய்வித்தவனும் பெண்ணைக் கொடுத்தவனும் இந்த ஐவ ரும் தந்தைகளாகு மென்று நீதிசாஸ்திரம் கூறுவதால் இவ்வைவ ரில் தாங்கள் அடியேனுக்குப் பெண் கொடுத்தவரானபடியால் தாங்களும் ஒரு தந்தையாகும் உம்மைப்போன்ற பெரியோர்க ளிடத்தில் யான் பொய் சொல்லுவது நீதியாகுமோ உண்மையை சொல்லி நற்கீர்த்தியடைய வேண்டு மாகையால் நடந்த பெதார்த் தத்தையே சொல்லுகின்றேன் செவி சாற்றிக் கேழ்க்க வேண்டு மென்று வினயமாகச் சொல்லத்தொடங்கினன் யான் என்மனை வி யுடன் சந்தோஷமாக இல்லற தருமத்தை நடத்திக்கொண் டிருக் கிறபோது ஒருநாள் எனக்கு மெத்த நேசமாகிய பொருவன் இர ண்டு மாங்கனிகள் கொண்டுவந்து கொடுத்தான் அக்கனிகளை அப் போது, என்னிடம் வந்திருந்த சிவனடியாரிடங்கொடுத்து இதைக் கொண்டுபோய் என்மனைவியினிட மளித்து அமுதுண்டு போமை யாவென்று சொல்லி யனுப்பினேன் அவரும் அந்தப்படியே கனி களைக் கொண்டுபோய் புனிதவதியாரிட மளித்து அமுது படைக் கப் புசித்துச் சென்றனர் உடனே இன்னொரு சிவனடியா ரொரு வர் வந்துப் புனிதவதியாரைக்கண்டு பொசிப் பளிக்கும்படிவே ண்ட அதற்கம்மாது சிரோமணி அகாலமாய் விட்டபடியால் அன் னமும் மோரு மிருக்கிறது கரியமுது முதலானதுகளும், இல்லை யே என்ன செய்கிறது எப்படி இவருக்கு அன்னம் படைக்கிறது என்று யோசித்து நம்மால் வஞ்சனை யில்லாமல் இருக்கிறதையிவர் பசிதீரப் படைத்தனுப்புவதே விசேஷமெனக் கருதி, அந்த சிவ னடியாருக்கு மோரன்னம் படைத்து நான் கொடுத் தனுப்பிய மாங்கனிகளிரண்டில் ஒருமாங்கனியை வகுத்துவைக்க அந்தச் சிவ னடியாரும் மாங்கனியுடன் மோரன்னத்தைப் புசித்து வெகுசந் தோஷத்துடன் சென்றனர். பின்பு புனிதவதியார், இராத்திரிப் பொசிப்புக்கு வேண்டியவைகளைச் சமைத்து வைத்துக்கொண்டு என்னை யெதிர் பார்த்துக்கொண்டிருக்கையில் யானுங் கடங்கு வேலைகளை முடித்துக்கொண்டு வீட்டைச் சேர்ந்தவுடன் புனிதவதி யார் கண்டு குளிக்க ஜலமும் பூசைக்கு வேண்டியவைகளையுந் தயார் செய்து வைக்க யானுமதை யறிந்து சென்று குளித்துப் பூசை முடித்துக்கொண்டு வந்ததைக்கண்டு இலையில் அன்னம் கரி வகைகளைப்பரிமாரி அருகிலிருந்து உபசரித்துக் கொண்டிருந்த புனிதவதியார் தடாலுமென்று அரைவீட்டிற்குள் சென்று மாங் கனியைக் கொண்டுவந்து வகுத்து இலையினில் வைக்க யானதைத் தின்றேன் அக்கனி யெனக்கு அமிர்தம்போ லிருந்தமையாலும் ஒரு கனியைச் சிவனடியாருக்கு அமுதுடன் படைத்ததை யான றியாததாலும் புனிதவதியாரை நோக்கி, இக்கனிமெத்த நன்றாக

யிருப்பதால் இன்னமொருகனி யிருக்கவேணுமே அக்கனியையுங் கொண்டு வந்து வகுத்து வையுமென்றேன். அப்போதாகிலும் அக்கனி யொன்றைச் சிவனடியாருக் கமுதுடன் உண்ணும்படிக்கு அளித்தேனென்று ஒருவார்த்தை சொல்லி யிருந்தால் யானிந்த விபரீதத்திற் குடன்பட்டிரேன் இந்த மர்ம்மத்தைச் சொல்லாமல் இதோ எடுத்து வருகிறேனென்று சொல்லி அரைவீட்டிற்குட்சென்று சிவபெருமானைத் துதித்து அவரளித்த கனியை எடுத்து வந்து வகுத்துவைக்க அதையான் புசித்த மாத்திரத்தில் முன்னந் தின்றக் கனியைப் பார்க்கிலும் தெகிட்டாத அமுதைப்போலவும் பெருங்கனியாகவுமிருந்தமையால் எனக்கு சந்தேக முண்டாகிப் புனிதவதியாரை நோக்கி, இக்கனி யான் கொடுத்தனுப்பிய தனி யல்லவே இதுபெருங்கனியாகவும் தெகிட்டாத அமுதாகவு மிருக் கின்றமையால் இக்கனி யுனக்குக் கிடைத்த தெப்படி இதின் செய்தியை ஒளிக்காமல் நடந்த உண்மையைச் சொல்லக்கடவா யென்று வினவியபோது புனிதவதியார் என்னை நோக்கித் தாங்க ளனுப்பிய கனிகளிரண்டில் ஒன்றைச் சிவனடியார் அமுதுடனுண் ணும்படி வகுத்து வைத்தேன். மற்றொரு கனியை உமக்கு வகு ந்து வைத்தேன் அதைத் தாங்கள் புசித்தது மதுரமாக விருந்தமை யால் இன்னொருகனியையு மெடுத்து வந்து வகுத்து வையுமென்று தாங்கள் சொல்லிவ மாத்திரத்தில் அடியாளுக்கு மெத்த பயமுண் டாகியது ஏனென்றால் தாங்கள் உத்திரவின்றி அக்கனியைச் சிவ னடியாருக்கு அளித்தபடியால் தாங்களென்ன செய்வீரோ எப்படி யாகுமோ என்ற திகிலுண்டாகிய படியால் மர்மத்தைச் சொல்லா மல் மற்றொரு கனியையும் இதோ கொண்டு வருகிறே னென்று சொல்லி வீட்டிற்குள் நுழைந்துச் சிவபெருமானை யான் துதி செய்தமையால் அச்சிவபெருமான் கருணையுட னிக்கனியையளி த்து மாயமாய் மறைந்து போயின தெனக் கேட்டு யான் மெத்த ஆச்சரியமடைந்து சிறிதுநேரம் திப்பிரமை கொண்டிருந்து சுயக் ஞானம் வந்தவுடன் புனிதவதியாரை நோக்கி, உனக்கு இக் கனி யைச் சிவபெருமான் அளித்தனரென்பது உண்மையாகில் அச்சிவ பெருமானை மறுபடியுந் துதிசெய்து இன்னுமொரு கனியைப் பெற்றுக்கொண்டு வரக்கடவாயென்று சொல்லியனுப்ப அம்மாது சிரோமணியும் அப்படியே சிவபெருமானிடம் இன்னுமொரு கனி பெற்றுக்கொண்டு வருகிறேனென்று சொல்லி இப்புனிதவதியார் மூன்போல, அரை வீட்டிற்குட்சென்று சிவபெருமானைத் துதித்து மற்றொரு கனியையும் பெற்றுக்கொண்டு வந்து பெண் காத்தினி ளலிக்க அக்கனியை யான் பார்த்துக்கொண் டிருக்கிறபோதே எப்படியோ மாயமாய்ப் போய்விட்டபடியாலும் புனிதவதியாரை தெய்வமென்று பாவித்துத் துதி செய்துக் கொண்டிருந்து இனி நாமிந்த தெய்வத்தை மணமு யெனக் கருதி, இல்லறத்திலிருப்பது

மெத்த அபசாரத்திற் கிடமாகுமென்று யோசித்து நூதனமாக மரக்கலமொன்று செய்து அம்மரக்கலத்தில் சரக்குகளை ஏற்றுமதி செய்துக் கொண்டு வியாபாரத்தின் பொருட்டு தேசாந்திரம் போ குவனைப்போல போக்குக் காட்டி யான் குறித்த தீவுக்குச் சென்று சரக்குகளை விற்பனை செய்துக் கொண்டு வந்து இவ்வூரைச் சேர்ந்து சிலகாள் ஒரு வீட்டினில் வெள்ளிகளைக் கொடுத்துப் பொசிப் பெடுத்துக் கொண்டிருந்து என் மனதுக்குச் சம்மதிப்படாமல் நமது மரபினிலொரு பெண்ணைப்பேசி விவாகஞ் செய்துக்கொண்டு இல்லற தருமத்தை நடத்தி வருகிற போதுச் சிவபெருமானு டைய அருளினு லிப்பெண் ணொன்று பிறந்தது இப்பெண்ணுக்குப் புனிதவதியென்றே நாமகரணமிட்டு வளர்த்துவருகிறேன் இப்படி யிருக்கு மென்னைத் தேடிக்கொண்டு நீங்களும் புனிதவதியாரும் இச்சோகையில்வந்திருங்கி யிருக்கிற செய்தியை யறிந்து உடனே ஓடிவந்துப் புனிதவதியாரை வணங்கினேன் மேலும் பிருமருத்திர இந்திராதிகளாலும் சேவிப்பதற்கு அரிதாகும் சிவபெருமானை மெத்த யெளிதினில் துதிசெய்து தெரிசனஞ் செய்த நினது புதல்வி யாகும் புனிதவதியாரை யான் வணங்கித் தொழுதற்குக் காரணம் யாதுவேயாகும் அன்றியும், காட்டினில் பஞ்சாக்கினி நடுவிலும் இன்னும் பலவிதமாக அவரவர்க ளிச்சையின்படி யிருக்கும் கந்த மூலங்களைப் புசித்தும் சரகு பட்சணஞ் செய்தும் ஜலத்தைப் பானம் பண்ணியும் வாயுவை ஆகாரமாகக் கொண்டும் அனேக வருடகாலங்கள் உக்கிரமான தவம் புரிந்துக் கொண்டு யிருக்கும் முனிவர்களுக்குங் கிடைப்பதற் கரிதாகிய சிவபெருமானைக் கண்டு தெரிசித்துப் புனிதவதியின் பெருமையை யானென்ன வென்று புகழத் தரமாகும் மேலும் சனசனந்தன னென்குமார னென்க ஜாதரென்று சொலலப்பட்டப் பரமயோகிகளாலும் புகழு வதறகுத் தரமாகாத பார்வதி பதியைப்புகழ்ந்து மகிழ்ந்து அகங் குளிர்ந்து முகமலர்ந்து உள்ளம்பூரித்து தேகம்பாரித்து மயிர்க் குச்சிட்டு பரமானந்த மடைந்த நினது புதல்வின் பாக்கியமேபாக் கியம் இப்படிப்பட்ட அருமையும் பொருமையும் பெருமையும் திறமையும் வாய்ந்தப் புனிதவதியாரைபெற்ற நினது உதிரத்தின் சிலாக்கியமே சிலாக்கியம் இவ்வுத்தமியைப் பத்துமாதஞ் சுமந்து பெற்றெடுத்து வளர்த்த அன்னையின் புண்ணியமே புண்ணியம் அந்த அம்மணியின் கண்ணியமே கண்ணியம் என்று பற்பலவாறு புகழ்ந்துக் கொண்டாடும் தன் கணவனை நெருங்கி அந்தப் புனித வதியார் திடீலென்று அவர் திருவடிகளில் விழுந்து பணிந்து எழு ந்திராமல் இரண்டு பாதங்களையும் பிடித்துக்கொண்டு என் குலதெ ய்வமாகிய தேவரீரே அடியாள்மீது வெறுப்படைந்து நீக்கிவிட் டால் யானெவ்வாறு வாழ்வது தேவரீரை யன்றி, யாரைத்தொழு வது என்னுயிருக் குயிராகிய பிராணநாதரே! இந்த யேழையாகிய

யான் தெரிந்தோ தெரியாமலோ செய்த குற்றத்தை மன்னித்து அடியாள் பின் வந்து நமக்கென்று ஏர்படுத்தி யிருக்கும் மாளிகையிலிருந்து இன்னுஞ் சிலகாலம் இல்லற தருமத்தை நடத்திக்கொண்டிருப்போம் அன்றியும் இப்போது விவாகஞ் செய்துக்கொண்டிருக்கிற மனையாளைவிட்டு வருவது நீதியல்ல, அம்மங்கையையும் அழைத்துக்கொண்டு யாவரும் மூவருமாக விருந்து இல்லற தருமத்தை நடத்திக்கொண்டிருக்கலாம் வாரும் ஸ்வாமி மேலும் தேவரீரையே உண்மையான தெய்வமென்றும் உம்மூடைய நாமத்தையே பரலோகவாழ்வை யடையச் செய்யுமென்றும் உமக்குத் தொண்டு செய்துக்கொண்டிருப்பதே இகலோக வாழ்வென்றும் இத்தேகத்தை யுமக்கு ஒப்பித்துப் பாதந்திரமாக நடக்கும் அடியாள்மீ தமக்கு யித்தனைகோபமோ அடியாளைத் தனியே விடுத்து நீரிப்படிக் கிருப்பதால் என்னலாபமோ இது அபஜலெழுந்திய சாஸனமோ இன்றோடு அடியாளுக்கு சாப விமோசனமோ என்று சொல்லி அருவியில் நினறும் ஜலம் பெருகி யோடிவருவதைப்போலக் கண்களில் நின்றும் நீர்பெருக விட்டுக்கொண்டு பற்பலவாறு புலம்பி அழுதுவாடுகிற புனிதவதியாரைத் தந்திரமாக விலக்கி விட்டு அந்தப் பரமதத்தன் புனிதவதியாரை நோக்கிப்பின்னு மொருவசனஞ் சொல்லத் தொடங்கினன்.

கேளும் யான் தொழுதேத்தும் தெய்வமே சிவ பெருமானே வசப்படுத்தும்படியான பக்தியிலும் அவரிடம் மாங்கனியைப் பெறத்தக்க புத்தியிலும் சிறந்த மகுந்துவங்களுடைய நின் பெருமையைக் கண்டும் யானுன்னிடம்பொருந்தி இல்லறத்தில் வாழ்ந்திருக்கத்தக்க காரணமில்லை எப்போது உன்னை என்மனமாரதெய்வமென்று நினைத்துப் பணிந்தேனோ அப்போதே உனக்கு மனக்கு மிகுந்த நேசமும் ஆசையும் நீங்கிப்போயின பின்னும் நீ பிராபித்து அழுது புலம்புவதால் பிரயோஜன மேதேனுமுண்டோ கீழ்த்திசையிலுதிக்குஞ் சூரியன் மேல்திசையி லுதிக்கினும் இனியொருக்காலும் யானுன்னுடன் இல்லறத்திலிருப்பே னென்று நீ எள்ளளவும் நினைக்க வேண்டியதே இல்லை இனியிந்த யெண்ணத்தை மறந்து விடுவாய் என்றப் பரமதத்தன் மொழிகளைக்கேட்டுப் புனிதவதியார் ஓ! ஸ்வாமி! சிலகாலம் பொண்டாட்டியாக ஆண்டுக்கொண்டிருந்து உடனே அவளை தெய்வமென்று எண்ணினதைப்போல தெய்வமாகப் பாவித்திருந்த அம் மங்கையைப் பெண்டாட்டியாக யாளலா மன்றோ இதனில் குற்றமில்லை யல்லவா என்றனள். இவ்வசனங்களைக் கேட்டு அந்தப் பரமதத்தன் மேட்டிற் சென்றால் தாயும் பள்ளத்திற் சென்றால் மனைவியுமாக வெண்ணி நடக்கும் அதமர்களிலு மதமனுனவன் செய்கை யன்றோ நீ சொல்லியபடி நடப்பது யானபடிக்கி நடக்கும் அசத்தியனல்ல

ஏன் வீணைப் பிரயாசமெடுத்துக்கொண்டு வீண்காலம் போக்குகின்றீர்? சிவபெருமானைத் துதிசெய்துக் கொண்டிருந்த போதிலும் புண்ணிய மூண்டாகும் ஏதோதோ சொல்லுகின்றீர் அதற்குச் சம்மதித்து யானுன்னுடன் கூடி வாழ்வதென்பது இல்லை இச் சொல்லைச் சத்தியமென்று நினைக்கக் கடவாயென்று கடுமையாக மொழிவதைக் கேட்டு அந்தப் புனிதவதியார் ஓ! ஸ்வாமி! அடியாளைப் பந்துக்களும் மற்றுமுள்ள பெரியோர்களும் நிரைந்திருந்த சபையினில் அக்கினி சாக்ஷியாகவும் புரோகிதர் பிராமணர்கள் சாக்ஷியாகவும் நீயே என் மணவாளனென்னை யின்னொருவனைக்கைப் பிடிப்ப தில்லையென்று சொல்லி மங்கிலியஞ் சூட்டிக் கைப்பிடித்த தேவரீருக்கே அடியாள் மீது வெறுப்புண்டாகித் தொடுவது மில்லை இல்லறத்தி லிருப்பது மில்லையென்று நீக்கிவிட்ட அடியாள் இனியித்தேகத்தை வைத்துக்கொண்டிருப்பதினு லென்ன பயன் உமக்கேயுதவாத இத்தேகத்தை அரைநிமிஷமேனு மிவ்வுலகத்தி லிருந்தலவும்படி வைத்திருப்பது தருமமல்லவென்று திடங்கொண்டு சிவபெருமானைத் துதிசெய்துக்கொண்டே முள்ளம் பன்றியானது தன் தேகத்தைச் சிலிர்த்திக்கொள்கொள்வதுபோல தன் தேகத்தைச் சிலிர்த்திக்கொண்டு உதறின மாத்திரத்தில் மாமிசங்கள் யாவுஞ் சிதறி மூலைக்கொன்றாக விழுந்தது உடனே எலும்பு மயமாகிப் பேயுருவங்கொண்டு ஆகாயத்திற் கிளம்பி சிலவருடகாலம் சுடலையில் வசித்துப்பேயோடாடி யென்னும் சிவபெருமான் களிக்கும்படி தான்கொண்ட பேயுருவத்துடன் ஆடிக்கொண்டிருந்து ஆயுள்முடிந்தவுடன் சிவபதவியாகும், கைலாசத்தினில் வசிக்கும் அடியார்களுடன் கூடிக்கொண்டு மறுஜெண்மமின்றி தொண்டர்களுக்குத்தொண்டுசெய்து கொண்டிருந்தனள். இங்கே தனதத்தனும் நிதிபதியும் பரமதத்தன் மூதலானோரும் புனிதவதியார் செய்துகொண்டேகின அசாத்தியமான வித்தையைக்கண்டு ஆனந்தங்கொண்டு அம்மங்கையின் கற்புக்கும் உத்தமகுணங்களுக்குத் தக்கபடி சிவபெருமான் இவ்வுலக வாழ்க்கையை யொழித்து அவ்வுலகவாழ்க்கையளித்தனரென்று யாவரும் அம்கங்கையை பற்பலவாறு துதித்துப்பணிந்து பரமதத்தனிடம் விடைபெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் ஊரையடைந்தார்கள்.

புனிதவதியார் கற்பின் மகுத்துவம் முற்றிற்று.

சத்திநுங்கி கற்பின் மகத்துவம்.

திருமகள் கடாக்ஷம் பொருந்திய அஸ்தினபுரத்தினில் பாண்டவர்கள் வமசத்தினிற் பிறந்த நரேந்திர னெனறோர் அரசரிருந்தார் அவ்வரசன் ஜீவகாருணியம் பச்சாத்தாப சாந்த சமதமாதி நற்குணங்களிற் சிறந்தவராகி மநுநீதி வழுவாமல் அந்த அஸ்தினு

புரத்தையொருகுடை நிழலி லாண்டும் தானதருமங்களே நடத்திக் குடிகளைத்தன் புதல்வர்களைப்போலப் பாதுகாத்துக்கொண்டுமிருந்தனர். இப்படிப்பட்ட தருமசிந்தனையுடைய நரேந்திரபூபதிக்கு ரத்தினாங்கியென்றோர் பட்டமகிஷியுண்டு. அம்மாது சிரோன்மணி தன்கணவனைவிட வேறு தெய்வமில்லையென்று கருதி அவரைப் போஷிப்பதிலும், அவருக்குத் தொண்டு புரிவதிலும், அவரைத் துதிசெய்வதிலும், அவர் திருவடிகளை அர்ச்சனை செய்வதிலும், அவரை வணங்குவதிலும், சதா காலமும் மனதைச் செலுத்திக் கொண்டிருந்தனள். இதை நரேந்திரன் தெரிந்து தன் மனைவியின் சாந்த சமதமாதி நற்குணங்களுக்கும் கற்பின்நிலைமைக்கும் மெத்த சந்தோஷித்து அம்மாதரசியினிடம் வெகு பிரியஞ் செலுத்தி அம் மங்கையைக் கூடிக்குலாவிக்கொண்டும் தானதரும பரோபகார மன்னுயிரைத் தன்னுயிர்போலக் காப்பதிலும் விடாமனத்தினை யுடையவராகி யிருக்கும் போது இந்த நரேந்திரனுக்கோர் யோசனை யுண்டாயிற்றுத் அதென்னவெனில், எல்லா பாக்கியங்களும் தனக்குக் குறைவற்றிருந்தும் புத்திரபாக்கியம் ஒன்றில்லாக்குறையினால் ஏக்கங் கொண்டு தூக்கமின்றி முகவாட்டத்துடன் அந்தப் புரத்திற்கு வந்து தனியே ஓரிடத்திலுட்கார்ந்து கொண்டிருக்க, அதை ரத்தினாங்கி கண்டு, நமது பிராணநாயகா எனதுயில்லாமல் இன்று முகவாட்டத்துடன் ஒண்டியாய் தனித்து உட்கார்ந்திருக் கிறகாரணம் யாதோ தெரியவில்லையே என்று தனக்குத்தானே யோசித்துக் கொண்டேவந்து நாயகனை - இணங்கி-வணங்கி-ஓ ! ஸ்வாமி! இன்றையதினம் தேவரீர் முகம்வாடி வதங்கி ஏதோ ஒரு விதமாகத் தனித்திருக்கவேண்டிய காரணம் யாதோ இக்குறி குணங்களைப் பார்க்க அடியாள்மனது மெத்த துயரமடைந் திருக்கின்றதுஎன்று வினதத்துடன்கூறினள் நரேந்திரன் மனைவியை நோக்கி ஓ ! மாதுசிரோன்மணியே! இப்போதெனக்குற்ற மனக்கவலையின் கொடுமையை என்னென்றுரைப்பேன், எப்படி மனம்பொருத் திருப்பேன், அஃதா தென்றால் நமக்கு எல்லாபாக்கியங்களும் பகவானுடைய திருபையினாலுண்டாகி யிருந்தும் புத்திரபாக்கியம் ஒன்றில்லாக் குறையே என்னை வாட்டுகின்றது இந்த வினமே இரண்டொரு மாதமாய் எனக்குண்டா யிருப்பதால் நாளுக்குநாள் தேக மினைத்து அனேக நாட்களாய் நோயினால் பீடிக்கப் பட்டவன் கால் கரங்கள் எப்படி சக்தியில்லாமல் நடக்கவும் கைகளை நீட்டவும் மூடக்கவும் கூடாம லிருக்குமோ அத்தன்மையாக என் கால் கரங்களில் சக்தியற்று யிருக்கின்றது. இதற்கு காரணம் புத்திரனில்லாத குறையேயன்றி வேறெந்த காரணமு மில்லை என்று சொல்லி வினவப்படும் தன்கொழுநனை நோக்கி, ஓஸ்வாமி புத்திரப்பேறடைவதற்குத் தகுந்த முயர்ச்சியைத் தேடாமல் நமக்குப் புத்திரனில்லையே! புத்திரனில்லையே என்று அடிக்கடி சொல்லிக்

கொண்டே விசனப் பட்டால் புத்திரப்பே ருண்டாகுமோ தெய்வ
ங்காட்டும் ஊட்டுமோ? புருஷப் பிரயத்தினஞ் செய்யாமல் எந்த
காரியமும் தன்கடையே அனுகூலப்படமாட்டாது. ஆகையால்
வீணுகயேன் தேவரீர் விசனத்தினால் திரேகத்தை மெலியச்செய்து
கொள்ளுகிறீர். இப்போ துமக்குண்டா யிருக்கும் மனக்கவலையை
தங்களுடைய விவேகத்தினால் போக்கித் திடச்சித்தராகி வைராக்
கியங்கொண்டு தவவேடம் புனைந்து காட்டிற்கேகி பரமசிவத்தை
நோக்கித் தவம்புரிவீரேயாகில் அப்பரமசிவம் தாங்கள் செய்யுந்
தவத்திற்குமெச்சித் தெரிசனமீந்துப் புத்திரப்பேறுண்டாகும்படி
க்கிக் கிருபைசெய்து வரமளிப்பார், இப்படி திரேக கஷ்ட மெடுத்
துக்கொண்டு புத்திரப்பேறையடையும் மார்க்கத்தை விடுத்து விச
னப்பட்டுக்கொண்டிருப்பதால் தங்களுக் கெப்படி புத்திரபேறுண்
டாகுமென்று அதிக நயகாம வசனிக்கும் மாதரசியின் வசனங்
களைக் கேட்டு அந்த நரேந்திர பூபாலன் களிகொண்டு தனக்குற்ற
விசனத்தைப்போக்கி திடச்சித்தனுகி அந்தப்புரத்தை விடுத்து நட
ந்து கொலுக்கூடத்தை நாடிப்போகலுற்றான்.

நரேந்திரபூபதி கொலுக்கூடத்தை யடைந்து சிங்காதனத்தின்
மீது வீற்றிருந்து மந்திரிகளில் முதல் மந்திரியை நோக்கி, ஓ! மதி
யிற்சிறந்த மந்திரியே! எனக்குப் பிற்காலம் இன்னுட்டை யாளுவ
தற்கொரு புத்திர பாக்கிய மெனக் கில்லாமையால் யான் காட்டி
ற்குச் சென்று தவமியற்றிப் புத்திரப் பேறையடையும் படியான
வரத்தைப் பெற்றுக்கொண்டு வருகிறபரியந்தம் நீ இந்த அஸ்தினு
புரத்தை மறந்தீதி வழுவாமல் செங்கோல் செலுத்திக்கொண்டி
ரும்? கூடிய சீக்கிரத்தில் வந்து சேருகிறே னென்று சொல்லி அந்
தப்புரத்தை யடைந்து மனைவியாகிய சுத்தினுங்கியை அழைத்து,
ஓ! பெண்ணரசே! நானேயதினம் காலையினில் யான் காட்டைவிட்
டுக் காட்டை யடைந்துத் தவமியற்றப் போகின்றேன். ஆதலால்
உன் கருத்தென்னவென, அதற் கம்மாது சிரோன்மணி தன் மணு
ளனைநோக்கி, ஓ! ஸ்வாமி! தேவரீர் புத்திரப் பேறையடையும்
பொருட்டுச் செல்வதை யான் போகவேண்டாமென்று தடுப்பது
நீதியோ ஆனல் ஒரு விசேஷமுளது அதென்னவெனில் பதிவிரதை
யாயிருப்பவள் தனது பிராணநாயகனை விட்டு ஒரு நிமைப்பொழு
தேனும் பிரிந்திருக்க லாகாதென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்ற
படியால் அடியாள் தேவரீரைவிட்டு ஒருக்கண நேரமாயினும் பிரிந்
திருக்க மனமில்லாதவளா யிருக்கிறேன் ஆகையால், யான் தனி
த்து தேவரீரை விட்டு எப்படியிருப்பேன், இருந்துயிர் தரிப்பேன்,
எவ்வாறு மனஞ்சகிப்பேன் அந்த மனித சஞ்சாரமில்லாத கடுங்
காட்டினில் வேளைக்கி உமக்குணவாதிகளைக் கொடுத் துபசரிப்ப
வர்கள் யாவர் எவ்வண்ணம் பரிதாபங்களுக்குச் சகித்திருப்பீரோ

என்று மெத்தவும் வியாகூலமடையும் மாது சிரோன்மணியை நோக்கி, அடி பெண்ணே! நாமிருவரும் காமேச்சையுடைய வயதை அடைந்திருப்பவர்கள் ஆதலால், உன்னையும் யான் அழைத்துப்போவனே யாகில் அங்குயான் தவத்திலிருக்கிறபோதுநீஎனக்கு பரிக்கும் பொருட்டு என்னெதிரில் வருவையே யாகில் அப்போதெனக்கு எந்த வேளையில் எப்படி மனச்சஞ்சலம் நேரிடுமோ தவங்கெடுவ தல்லாமல் விரதமுங்கெடு மானதால் என் சொல்லைத் தட்டாமல் நீ யிங்கேயே இருந்துக்கொண்டு பரமசிவத்தைத் துதி செய்துக்கொண்டிருப்பாயாகில் அப்போ தந்தச் சிவபெருமானுக்கு நாமிருவர் செய்யும் தவத்தினால் களிப்புண்டாகி விரைவில் பார்வதி சமேதராகி ரிஷபவாகனத்தின்மீ தேரிவந்து நாம்கோரிய வரத்தைக் கொடுப்பார் இதை நன்றாய் நீ யோசித்து என் சொற்படிக்கு பட்டணத்திலேயே இருக்கக் கடவாய் நான் சென்று தவஞ்செய்து புத்திர பேறைப் பெற்றுவருகின்றே னென்று சொல்லி அம்மாதினை யிசையச்செய்து மூதல் மந்திரியை யழைத்துத் தன் செங்கோலையும் முத்திரை மோதிரத்தையும் கொடுத்து என் மனதுக்கினிய மந்திரியே! நீமதியிற்சிறந்த உத்தமனைபடியினாலே யானுனக்கு விசேஷித்துச் சொல்ல வேண்டிய தில்லை, சகல தந்திரங்களையும் அறிந்த நீ என் பேரைக் கெடுக்காமல் வெகு ஜாக்கிரதையாக அரசுசெலுத்திக்கொண்டிரு மப்பாநானும் கூடிய சீக்கிரத்தில் உத்தேசித்த காரியத்தை முடித்துக்கொண்டு வந்துசேருகிறே னென்று சொல்லியனுப்பி அன்று பகல் முழுதும் அந்தப் புரத்திலேயே யிருந்துப் பொழுது போக்கி இரவு வந்வுடன் புசித்துத் தாம்பூலந் தரித்து சப்பரகூட மஞ்சத்தின் மீதுசயனித்து நித்திரை செய்து வைகுகையி லெழுந்து ஸ்நான அநுட்டானங்களை முடித்து இடையில் மரவுரிதரித்து மணிமுடி தரித்த சிரத்தில் சடைமுடி தரித்துக் காவிகாம்பர தண்டுகமண்டலம் பிடித்து பாதங்களில் மிதியடி சூட்டி மனையாளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு சிற்றிருட்டிலேயே நாட்டினுள்ள குடிகள் கண்களில்படாமல் அரண்மனையை விடுத்துப்புறப்பட்டு நாட்டைக் கடந்து காட்டை நோக்கிச் சென்றார்.

அரசன் சொற்படிக்கி முதல் மந்திரியானவன் கொலுக்கூடத்திற்குவந்து சிங்காதனத்தின் மீது வீற்றிருந்து ராஜகாரியங்களில் அணுவளவேனும் குறைவின்றி நடத்தி நீதி குன்றாமல் செங்கோல் செலுத்தி அரசனுக்காகிலும் எண்மடங்குஅதிகமாக தானதருமங்களைச் செய்துகுடிகளைப் பாதுகாத்துக் கொண்டிருந்தான். இங்கிப்படியிருக்க, காட்டை நோக்கிச் சென்ற அரசன் கற்களினும்முட்களினும் நடந்துசூரியனுடைய வெப்பத்தினாலும் என்றும் நடக்காத கால்கள் நோயினாலும் பசிதாகத்தினாலும் வதங்கிக் காட்டின்

மார்க்கமே நெடுந்தூரம் நடந்து ஆயாசம் அதிகரித்து அங்கோர் ஆலமரத்தடியில் சற்றுநேர மிருந்து ஆயாசந் தீர்த்துக்கொண்டு பசிதாக மதிகரித்திருப்பதால் அக்காட்டிலுள்ள பழங்களைப் பரித்துவந்து அவ்வாலமரத்தடியில் வைத்துக்கொண்டு புசித்து மலைய ருவிகளில் பிரவஹிக்கும் தண்ணீரை அருந்தி நடுப்பகலானதால் அவ்வால மரத்தடியிலேயே இலைகளைப்பரப்பி அதின் மீது படுத்து நித்திரை செய்து பொழுது சாய்ந்தவுட னெழுந்து நடந்துப் போ கையில் பெருங் காடாய் இருப்பதாலும் அக்காட்டினில் யானை-சிங்கம்-புலி-காடி - சிறுத்தை - முள்ளம்பன்றி-காட்டுப்பன்றி-கழு தைக்குரத்தக்-கோனுய்-காண்டாமிருகம்-முதலான அனேக துஷ் டமிருகங்களின் ஆரவாரக் கூக்குரல்களாலும் கழுகு-கெருடன்-மயில்-குயில்-சக்கிரவாளம் - கண்டபேரண்டம்-முதலான பலவக களின் இனிமையான தொனிகளாலும் காதுசெவிடுபட்டுப் போகும் படியான இடியோசையோ என்று பயமும் திகிலுமடைந்து அம் மிருகக் கூட்டங்களைக் கடந்து போவதற்குச் சற்றிடைந்து உட னேதன்னிடையி லிருக்கும் சந்திராயுதை யுருவிக் கையிற் பிடித் துக்கொண்டு வெகு தைரியமாக நடந்து அம்மிருகங்களின்னடுவே புகுந்துச்சென்று அம்மிருகங்களையெல்லாங்கடந்துபோகிறபோது அம்மிருகங்களும் இத்தவசின் கரத்திற் பிடித்திருக்கும் வாளாயுத த்தையும் இவரது திடச்சித்தத்தையுங்கண்டு வெகுண்டு மூலைக் கொன்றாக ஓடிப்போயிற்றுகள். அப்போதந்த நரேந்திரன் வெகு சுருக்காக நடந்தும் அங்கோர் மலையைக் கண்டு அதின்பேரிலேறி நான்குதிக்குகளையும் நோக்குகிறபோது அங்கோர்திக்கினில் கண் ணுக்குரமணீயமாகிய சோலையுடன் தடாகமொன்று காணப்பட் டது. இந்த வனந்தரத்தினி லிப்படிப்பட்ட அருமையாகிய சோலை யிருப்பதற்கு என்னகாரணம் இங் கேதோ மகிமையுளதாகத்தோ ன்றுகின்றது என்றுக்கருதி அவ்விடத்தை நோக்கிச்சென்று சோ லைகளைப் பார்த்துக்கொண்டே செல்லுகையில், ஓர் மரத்தடியில் மூனிவர் ஒருவர் தவஞ்செய்துக் கொண்டிருப்பதைக் கண்டு அவர் சமீபத்திற்சென்று அவருக்குப் பிரதக்ஷண நமஸ்காரங்கள்செய்து எழுந்து நின்று கைகூப்பிக்கொண்டு எப்போதவர் கண்திறந்து கடாக்ஷிப்பரோ என்று யெதிர்பார்த்துக்கொண்டிருக்கிறபோது, அம்முனிவர் கண்களைத்திறந்து எதிரில் கைகுவித்துக்கொண்டு நிற் கும் தவசியைக்கண்டு ஆகிகூறி நீர் யாவர் உம்முடைய ஊரென்ன பேரென்ன எந்த ஆசானுடைய சிஷ்யர் இங்கு வந்ததற்கு காரண மென்ன இதுகளை யெல்லாம் ஒன்றெளியாமற் சொல்லுமையா வென்று வினவக் கேட்டு தவவேடம் புனைந்திருக்கும் நரேந்திரன் பின்னும் அவரை வலம் வந்து பணிந்து எழுந்து நின்று ஒஸ்வாமி! யான் வசிக்கும் நகரம் அஸ்தினபுரம். அடியேன் பெயர் நரேந்தி ரன். எனக்கு சகலபாக்கியங்களு மிருந்தும் புத்திரபாக்கிய மொன்

றில்லாக் குரையால் யாளுண்டிருந்த அஸ்திபுரத்தை மந்திரிகள் வசஞ் செய்து யானிந்தத் தவவேடம் புனைந்துத் தவம்புரிந்தாயி னும் புத்திரப்பே ரடையவெண்ணிக் கொடியதான காணகங்க ளெல்லாங் கடந்து வந்து இங்கு தேவரீரை கண்டமாத்திர த்தில் புத்திரப்பேரை யடைந்ததைப் போல சந்தோஷமடைந் தேன். யாதொரு குரையுமில்லை யென்று ஆனந்தங்கொண்டே ன் இதுவேயான் வந்த காரணமெனக்கேட்டு, அம்முனிவர்க்குச் சந்தோஷமேலிட்டு ஓ! நரேந்திரனே! உண்னுடைய பெண்ணம் நிரைவேரக் கடவதென்று ஆசிகூறி அந்தநரேந்திரனைத் தன்னருகி லிருக்கச்செய்து தவத்துக்குறிய சில மந்திரங்களை யுபதேசித்து அதோயிருக்கும் ஆலமரத்திற் கருகிலிருந்து தவஞ்செய்யுமென்று நேமித்தார். அவர் நேமனத்தின்படி அந்தநரேந்திரன் அவர் குறி த்த ஆலமத்திற்கு அருகினி லிருந்துத் தவம்புரிந்துக் கொண்டி ருந்து சிலநாள் காய்கனிகளையும், சிலநாள் சருகுகளையும், சிலநாள் ஜலத்தையும், சிலநாள் வாயுவையும், ஆகாரமாகக்கொண்டு நெடு நாள் அதிகாரமான தவஞ் செய்துக்கொண்டிருக்கையில் ஒரு நாள் சிவபெருமான் பார்வதி சமேதராகிரிஷபவாகனத்தின் மீதூர்ந்துக் கொண்டே கடம்காணகத்திற்கருகிருக்குஞ் சோலையினருகில் தவஞ் செய்துக் கொண்டிருக்கும் நரேந்திர னெதிரில் தோன்றி, ஓ! நரே ந்திர பூபதியே! நீர் செய்ததவத்திற்கு மெச்சினேன். கண்களோத்தி ரந்து எம்மை சேவித்து உமக்கு வேண்டிய வரத்தைக் கேளும்தரு கிறே னென்ற வசனங்களைக் கேட்டு அந்த நரேந்திரன் கண்களோத் திரந்து சிவபெருமானே சேவித்துத் தவநிலையைவிட்டு அவரு கில் வந்து வலம்புரிந்து தெண்ட நிட்டு வெகுவாகத் துதித்துக் கேட்டுத்தோத்திரப் பிரயனுகிய சிவபெருமான மகிழ்ந்து, நரேந் திரனே நோக்கி,உமக்கென்ன வரம்வேண்டும் கேளுமென்று வினவ அதற்கு நரேந்திரன் சந்தோஷித்து ஓ! பார்வதி மணாளரே! உமக் குத் தெரியாத காரியமும் இவ்வுலகத்திலுண்டோ சகலமுந் தெரி ந்திருக்குந் தேவரீரே அடியேன் வாய்ப்பிறப்பைக் கேட்டுனர வேணுமென்று கருதி அடியேனைத்தாங்களே வினவுகிறபோது அடியேன் மனத்திலெண்ணிருப்பதை வெளிவிடுவதே மேன்மை யென்றுத் தன் மனதில் குடிகொண்டிருப்பதாகும் புத்திரப்பே ரடையும்படிக்கி வர்ந் தாவேணுமென்று வேண்டிக் கொண்டார். அதற்குச் சிவபெருமான் சிறுத்து ஓ! நரேந்திரனே! உமதிஷ்டத் தின்படி ஓர் புத்திரனுண்டாகக் கடவனென்று வாழ்த்திச் சென் றார். அவ்வரத்தையும அவரனுமதியையும் பெற்றுக்கொண்டு தன க்கு கந்தோபதேசஞ் செய்வித்த முனிவரிடத்திற் சென்று வண ங்கி சிவபெருமான் வந்து தெரிசனமும் வரமுந்தந்துச் சென்ற தைக் கூறக் கேட்டு, அம்முனிவர் ஓ! நரேந்திரனே உமக்கு மூன்று வருடத்திற்கு முன்னம் யான்தவஞ்செய்ய எத்தனித்துச் செய்தக்

கொண்டிருக்கிற எனக்கு அந்தச் சிவபெருமான் ஞாதுரையில் தெரிசனந் தாமதமும் என் கோரிக்கையின்படி வரமுங்கொடாமல் இப்படி யென்னைக் கஷ்டப்படச்செய்து இப்போது தவத்திற்கார ம்பித்த நினக்கு வரங் கொடுத்துச்சென்றது உன்னுடைய பாக்கிய விசேஷத்தை யானென்னென்றுசொல்லுவேன் ஆகிலும் நீர் மெத்த தூரத்தில் நின்று வந்தது மல்லாமல் நகரத்தை மந்திரிகள் வசம் ஒப்பித்து வந்தது மல்லாமல் கற்பிற் கரசாகிய ரத்தினங்கியை தனியே விடுத்து வந்ததுமாகிய இம்மூன்றையுமே பகவான் கருதி யுமக்குத் தெரிசனமும் வரமும் மூன்னுதாகக் கொடுத்துக்கிருபை செய்தார் ஆகையால், நீர் வந்தவேளை நல்லவேளையானதாலும் ரத்தினங்கியின் மஞ்ஞிடத்தினாலும் காரியானுகூலமாயிற்று. இனி இவ்விடத்தினி லரைக்கணப் பொழுதேனும் காலம் வீண்போக்கா மல் விடைபெற்றுக் கொண்டு விரைந்து சென்று பட்டணத்தைய டைந்து மனையாளின் மனங்களிக்கவிருந்து கூடிய சிக்கிரதினில் புத்திரப்பேரை யடைந்து சுகித்திருக்கக் கடவீரென்று வாழ்த்தி விடைதரப் பெற்றுக்கொண்டு நரேந்தின் ஆனந்தக் கடலில் மூழ் கினவராகி தன்பட்டணத்தைநோக்கி நடந்து காடு மலை வனம்வனந் திரங்களைக் கடந்துச் சிலநாளில் தன் பட்டணத்திற் கருகி லிருக் கும் ஓர் சோலையிலிரங்கித் தான் வந்திருக்குஞ் செய்தியை மந்திரி களுக்குத் தெரியப்படுத்தக்கேட்டுமந்திரிகளும் மெத்தமகிழ்வடை ந்து உடனே ரதகஜ துரகபதாதிக ளென்னும் நால்வகைச் சேனை களுடன் ஜெயபேரி வெண்கலபேரி முதலான வாத்தியங்களும் கட லொலிபோல முழங்கப் புறப்பட்டு அரசனிருக்குஞ் சோலைக்குட் புகுந்து அரசனைக்கண்டு வணங்கி க்ஷேமங்களை விசாரித்தறிந்து சந் தோஷசித்தராகி அரசன் தரித்தி யிருக்குந்தவவேடத்தைக் களைந் தாபரணகேயூரகடககங்கணமுதலான ஆபரணங்களால்ராஜதிரு க்கோலம் புனையச்செய்து சகலாடம்பரத்துடன் ரதத்தின்மே லே றச் செய்து மங்களவாத்தியங்கள் முழங்க சேனைகள் புடைசூழப் புறப்பட்டு நகர்வலஞ்செய்வித்து அந்தப்புரஞ் சேரச்செய்துவிடை பெற்றுக்கொண்டுதங்கள் தங்கள் அகஞ் சேர்ந்திருந்தனர்கள்நரே ந்திரனே அந்தப்புரஞ்சேர்ந்தவுடன் மனையியாகியரத்தினங்கியோ டிவந்து கணவனைப்பணிந்துக் காணுது கண்டவனைப்போல்அடங் காமகிட்சியடைந்து ஓ ஸ்வாமி தேவரீரில்லாத இவ்வந்தப்புரமும் கொலுக் கூடமும் எப்படியிருந்ததென்றால் தாமரையில்லாததடா கத்தைப் போலவும் மஞ்சரியில்லாத இராஜசபையைப் போலவும் சற்புத்திரனில்லாத மனையைப் போலவும் பண்டிதனில்லாத சபை யைப் போலவும் பர்வதத்தைப் போன்ற மதங்கொண்டயானைக்கி எல்லா அவயவங்களுமிருந்தும் கும்பிக்கை யொன்றில்லாவிட்டா ல்அவ்வியானை எப்படி அலங்காரப்படமாட்டாதோ அதைப்போ லவிருந்தது இப்படியிருந்த இவ்வந்தப்புரமும் சபையும் தேவரீர்

295

வ்வுடன் தாமரையுள்ள தடாகத்தைப் போலவும், சந்திரனிருக்கும் வானத்தைப்போலவும் புருடனைப் பிரியாமல் வாழும் மங்கையைப் போலவும் மந்திரி யிருந்துக்கொண்டு நீதிகளையோதும் ராஜசபையைப் போலவும், உத்தமனுடைய புத்திரனிருக்கும் மனையைப் போலவும் பண்டிதனிருந்து பற்பல சுலோகங்களைப் பகர்ந்துகளிக்கச் செய்யும் சபையைப்போலவும், சகல லக்ஷணங்களும் பொருந்தி ராஜசமஸ்தானத்திலிருந்து மகிழச் செய்யும் பட்டத்து யானையைப் போலவும், பிரிந்துபோயின இலக்குமி மருபடியும் வந்து சேர்ந்த நகரத்தைப் போலவும், இன்று அத்தப்புரம் வெகு அழகாய் பிரகாசிக்கின்றது அன்றியும், தேவரீர்! கடுங்காட்டினில் பசிதாபத்திற் கென்ன செய்தீர்! எப்படி காலத்தைப்போக்கிக் கொண்டிருந்தீர்! போனகாரியம் அநுகூலமாயிற்று என்று வினவிக் கொண்டே அவரையோர் உன்னிதஸ்தானத்தில் வீற்றிருக்கச்செய்து கால்களைப்பிடித்து உபசரித்தனள், அப்போது, நரேந்திரன் தனக்கு மனைவிசெய்யும் தொண்டுகளுக்கும், அம்மங்கை கூறிய வசனங்களுக்கும். மெத்த மகிட்சியடைந்துத் தன்மனையாளை வெகுவாகக் கொண்டாடி அடிமாதரசே! நாட்டைவிட்டுக் காட்டைச் சேர்ந்தது முதல் காய், கனி சருகு, வாயு, ஜலம், இதுகளையே ஆகாரமாகக்கொண்டு திடச்சித்தத்துடன் வைராக்கியங் கொண்டு தவசு புரிந்துக்கொண்டிருக்கையில் சிவபெருமானுக்குக் கருணைபிரந்துப் பார்வதிசமேதராகிப் ரிஷபவாகனத்தின் மீதேறி வந்து எனக்கு தெரிசனந்தந்து யான் கோரியவாரத்தையு மீந்து மறைந்து போயினர், பின்பு, அங்கிருந்தமுனிவரிடம் விடைபெற்றுக்கொண்டு இங்கு வந்து சேர்ந்தேனென்று சொல்லி வெகு சந்தோஷத்துடன் எழுந்து ஸ்நானனுட்டங்களை முடித்து போஜனசாலைக்குள் சென்று மனைவியினை உபசரிக்கப் புசித்துச் சகலாலங்காரத்துடன் கொலுக்கூடத்திற்குவந்து சிங்காதனத்தின் மீது வீற்றிருந்து நகர வளப்பத்தையும் காரு பாரு விசாரணைகளையுஞ் செய்து முடித்து மந்திரிகளை நோக்கி, ஓ! மதிமந்திரிகளே! யான் காட்டிற்குச் சென்று சிவபெருமானை நோக்கித் தவமியற்றிச் சிவபெருமானைக் கண்டு தெரிசித்துப் புத்திரப்பேருக்காகும் வரத்தையும் பெற்று வந்தேன் ஆகையாலின்று முதல் நமக்குப் புத்திரன் பிறக்கும் பரியந்தம் தான தருமங்களை விசேஷமாகச் செய்ய வெண்ணங் கொண்டேன். அதற்காகவேண்டிய கோக்களையும் அதன் கன்றுகளுடன் ஓட்டி வரும்படிக்கிச் சில தூதர்களை யனுப்புவது மன்றியில் இன்னும் வேண்டிய திரவியங்கள் முதலானதுகளையும் நமது ஆஸ்தான மண்டபத்தினில் சித்தப்படுத்திவைக்கக் கடவீர்களென்று கட்டளையிட்டுக் கொலுவைவிட்டு அத்தப்புரம் போய் சேர்ந்தார்

295

ಇವ್ವಾಱು, ನರೇಂದ್ರನ್ ಕಟ್ಟಳೈಯಿಟ್ಟಪ್ಪೋಲ ಮಂತ್ರಿಗಳ್ ತನ್ನಿಸೈಯಾಯ್ ಕಾಲೈಯಿಲ್ ಮೇಯ್ಂದು ವರುಕ್ಕೊಂಡಿರುಕ್ಕುಂ ಕನ್ಱುಗಳುಡನ್ ಕೂಡಿಯ ಅನೈಕ ಮಾಯಿರಂ ಪಸುಕ್ಕಳೈಕ್ ಕೊಂಡು ವರುಂ ಪಡಿತ್ ತುದರ್ಗಳುಕ್ಕುಕ್ ಕಟ್ಟಳೈಯಿಟ್ಟು ಮಱ್ಱುಂ ತಾನ ತರುಮಂಗಳುಕ್ಕು ವೇಂಡಿಯ ವಸ್ತುಕ್ಕಳೈ ಯೆಲ್ಲಾಂ ತಯಾರ್ಸೆಯ್ತು ಆಸ್ತಾನ ಮಂಡಪತ್ತಿನಿ ಲಮರ್ತ್ತಿ ವೈತ್ತು ವೇಂದನುಕ್ ಕಱಿವಿತ್ತುಚ್ ಚೆನ್ಱನರ್. ನರೇಂದ್ರನುಂ, ಅನ್ಱಿರವು ಪೋಕ್ಕಿ ಮರುನಾಳ್ ಕಾಲೈಯಿಲೆೞುನ್ತು ನಿತ್ಯಕಡನ್ಕಳೈ ಮುಡಿತ್ತುಕ್ ಕೊಂಡು ಸುಚಿಯಾಕಿ ಆಸ್ತಾನ ಮಂಡಪತ್ತೈ ಯಣುಗಿ ಅಂಗುವಂತಿರುಕ್ಕುಂ ಪಿರಾಮಣರ್ಕಳ್ ಮುತಲಾ ನೋರುಕ್ಕುಂ ಗೋದಾನ - ಭೂದಾನ - ವಸ್ತಿರದಾನ - ಹಿರಣ್ಯದಾನ ಮೆನ್ಱು ಸೊಲ್ಲಪ್ಪಟ್ಟ ಮೂಪ್ಪತ್ತಿರಂಡು ದಾನಂಕಳೈಯುಂ ಯತೇಷ್ಟ ಮಾಕಚ್ ಚೆಯ್ತು ಅಪ್ಪಿರಾಮಣರ್ಕಳಾಲ್ ಆಶಿಕೂಱಪ್ ಪೆಱ್ಱು ಮಗಿೞ್ವುಡನ್ ತನ್ ನರಣ್ಮನೈಯೈಚ್ಚೇರ್ನ್ತು ಪುಗಿೞ್ತ್ತು ಸರ್ವಾಲಂಕಾರತ್ತುಡನ ಸಬೈಕ್ಕು ವನ್ತು ದೇಸ ವಳಪ್ಪಂಗಳೈಯುಂ ಕಾರುಬಾರು ವಿಸಾರಣೈಗಳೈಯುಞ್ ಸೆಯ್ತುವನ್ತಾರ್. ಇಪ್ಪಡಿಕ್ಕಿಯನ್ತ ನರೇನ್ದ್ರನ್ ತಿನಂತೋಱುಂ ತಾನ ತರುಮಂಗಳೈ ಅಳವಿಲ್ಲಾಮಱ್ ಚೆಯ್ತುಕ್ಕೊಂಡು ವರುಕೈಯಿಲ್ ಇವ ಪೆರುಮಾನುಡೈಯ ಕಿರುಪಾ ನೋಕ್ಕತ್ತಿನುಲ್ ತನ್ ಮನೈವಿಯಾಕಿಯ ರತ್ತಿನಂಗಿ ಕರುಪ್ಪಮಾಯಿನುಳ್. ಅದೈಯಱಿನ್ದು ನರೇನ್ದ್ರನ್ ಎನ್ಱುಮಿಲ್ಲಾತ ಆನನ್ತ ಮಡೈನ್ತವರಾಕಿ ಮೆನ್ಮೇಲುಂ ವಿಸೇಸಿತ್ತುತ್ ತಾನ ತರುಮಂಗಳೈಚ್ ಚೆಯ್ತುಕ್ ಕೊಂಡೇ ವರುಕೈಯಿಲ್ ರತ್ತಿನಂಗಿಯುಂ ನಾಳುಕ್ಕು ನಾಳ್ ಕರ್ಪ್ಪಂ ನನತ್ತುಪ್ ಪತ್ತುಮಾತಮುಂ ಪೂರಣಮಾನ ವುಡನ್ ಸುಪಮಾಕ - ಸುಪವಾರ - ಸುಪತಿತಿ ಸುಪನಕ್ಷತ್ತಿರ - ಸುಪಯೋಕ - ಸುಪ ಕರಣ-ಸುಪಲಕ್ಕಿನತ್ತಿನಿಲ್- ಉತ್ತಮಾಕಿಯ ಲಕ್ಷಣಂಗಳ್ ಪೊರುನ್ತಿಯ ಆಣ್ ಕುೞನ್ತೈಯೈಪ್ ಪೆಱ್ಱುಳ್ ಇಚ್ಚೆಯ್ತಿಯೈ ತಾದಿಕಳ್ ಅರಸ ನುಕ್ಕು ತೆರಿಯಪ್ ಪಡಿತ್ತಿನುರ್ಕಳ್. ಅದೈಕ್ ಕೇಟ್ಟು ಅರಸನ್ ಸೊರ್ಕ್ಕ ಲೋಕತ್ತೈ ಯಡೈನ್ತವನೈಪ್ಪೋಲ ಆನನ್ತಕ್ಕಡಲಿಲ್ ಮೂೞ್ಗಿನ ವರಾಕಿ ಪಿನ್ನುಂ ಪಿಱನ್ತ ಚೆಯ್ತಿಯೈ ತನಕ್ಕುಚ್ ಸೊಲ್ಲಿಯ ತಾದಿಯರ್ ಕಳುಕ್ಕು ವೇಂಡಿಯ ಮಟ್ಟಿಲುಂ ವೆಗುಮತಿಕಳ್ ಸೆಯ್ತನರ್. ಅತ್ತಾದಿ ಕಳುಂ ತ ವೆಗು ಮತಿಯೈಪ್ ಪೆಱ್ಱುಕ್ಕೊಂಡು ವೆಗು ಸನ್ತೋಷತ್ತುಡನ್ ಸೆನ್ಱನರ್ಕಳ್. ಪಿನ್ಬು, ಪತ್ತುನಾಳುಞ್ ಕಡನ್ತ ಇರಣ್ಡಾನಾ ಳೆನ್ಬತು ಪೋಲಪ್ ಪನಿರೆಣ್ಡಾನಾಳ್ ಅರಸನ್ ತನ ಪನ್ತುಮಿತ್ತಿರಪ್ ಪುರೋಹಿತರ್ ಪಿರಾಮಣರ್ ಮಱ್ಱುಮೋರುಕ್ಕುರ್ ತೆರಿಯಪ್ಪಡಿತ್ತಿ ಯಾವರೈಯುಂ ವರವೞೈತ್ತು ಉಪಸರಿತ್ತು ಯಿರುಕ್ಕಚ್ ಸೆಯ್ತು ಪುತ್ತಿರ ನುಕ್ಕುಸ್ನಾನಞ್ ಸೆಯ್ವಿತ್ತು ಆಡೈಯಾ ಪರಣಂಗಳಾಲ್ ಅಲಂಕಾರಞ್ ಸೆಯ್ತು ಎಡುತ್ತುಕ್ಕೊಂಡು ವನ್ತು ತನಕ್ಕು ಆಚಾರಿಯಾಕಿಯ ಪುನಿತ ನಿಡಂ ಅಪ್ಪುತಲ್ವನೈ ಯಳಿತ್ತು ಓ! ಸ್ವಾಮಿ! ಎಙಕಳ್ ಕುಲಕುರು ನಾತ ರೇ? ಇಚ್ ಚಿಱುವನುಕ್ಕುತ್ ತಙಕಳ್ ತಿರುವಾಕ್ಕಿನುಲ್ ನಾಮಕರಣಞ್ ಸೆಯ್ ವಿಕ್ಕುಂಪಡಿಪ್ ಪಿರಾತ್ತನಕ್ಕಿನ್ಱೇ ನೆನ್ಱ ಅರಸನೈ ಅನ್ತ ಆನಾನ್ ಕುಳಿರಪ್ಪಾರ್ತ್ತು ಅಕ್ ಕುೞನ್ತೈಯೈತ್ ತನ್ ಕೈಯಿನಿಲ್ ಪೆಱ್ಱುಕ್ ಕೊಂಡು ಕುೞನ್ತೈ ಪಿಱನ್ತ ಲಕ್ಕಿನಂ ತಿತಿ - ವಾರಂ - ನಕ್ಷತ್ತಿರಂ -

யோகம் - காரணங்கள் முதலானதுகளையும் கணக்கிட்டுக்கிரக நிலைகளையுணர்ந்து சாரங்கதரன் என்று நாமகரணமிட்டு மூன்று தரம் அழைத்து வாழ்த்தி அக்குழந்தையை அரசனிடமளித்தார். அரசனும் அக்குழந்தையை அன்புடன் தன் கரங்களில் பெற்றுக்கொண்டு சிறிதுநேரம் வைத்திருந்து உடனே அருகிலிருந்த தாதிகளிடம் ஈய்ந்து ஆசான் புரோகிதர் பிராமணர்கள் முதலானோரையும் தான தருமங்களால் மகிழச் செய்து விடை தந்துத் தன் பந்துக்கள் முதலானோருடன் உண்டு தாம்பூலந் தரித்து வெகு சந்துஷ்டராகியிருக்கப் பந்துக்கள் முதலானோரும், விடை பெற்றுச் செல்லப் பின்பு அச்சிறுவனை அரசனும் அரசியும் நாளுக்கு நாள் மெத்த செல்வமாக வளர்த்துவர அக்குழந்தையும் வளர்பிறைச் சந்திரனைப்போல நாளுக்கு நாள் வளர்ந்து ஐந்துவயதாகவே அரசன்கண்டு வித்தையிலும் பக்தியிலுஞ்சிறந்த உத்தமராகிய ஓர் உபாத்தியாயரை வரவழைத்துத் தன் புதல்வனை அவ்வுபாத்தியாயரிடம்கொடுத்து ஐயா! உபாத்தியாயரே? இச்சிறுவனுக்கு கல்வியை யோதித் திறவானுகும்படிக்கி செய்யும் என்ற அரசனுக்கு அவ்வுபாத்தியார் ஓ! வேந்தர்கோமானே! உமதிஷ்டப்படிக்கி இச்சிறுவனுக்குக் கதலா கமலம்போலக்கல்வியை யோதி சகல வேத இதிஹாஸ புராண சம்பன்னனாகச் செய்து வைக்கிறே னென்று சொல்லி அந்த சாரங்கதரனை அழைத்து அருகில் உட்கார வைத்துக்கொண்டு கல்வியை போதித்துவந்தார் சாரங்கதரனும் உபாத்தியாருக்கிணங்கிவணங்கி அவர் சொற்படி நடந்து அவர் சொல்லும் பாடங்களைப் படித்துக் கருத்தினில் பதித்து அக்கரையுடன் ஒப்பித்துக் கொண்டு நாளுக்கு நாள் சிறந்து சகல வேத சாஸ்திர சம்பன்னனாகி விவேக மதிகரித்துச் சாதுக்களைக்கண்டால் அவர்கள் திருவடிகளில் விழுந்து பணிந்து அவர்களுக்குத் தொண்டுகள் செய்து வருவதுமன்னியில் துஷ்டர்களைக் கண்ணால் தூரத்தில் ஒதுங்கி நடந்து வருகையில், ஒரு நாள் நரேந்திரன் தன் புதல்வனுடைய வித்தை புத்திகளுக்கு மகிழ்ந்து வில்வித்தை-யானையேற்றங்-குதிரையேற்ற-முதலானதுகளையுங் கற்பித்து அதிலும் தேர்ச்சியடையச் செய்துத் தன் முதல் மந்திரிப் புதல்வனாகிய சுமந்திராகாரனுடன் சேர்ந்துத் தன் புதல்வனை நோக்கி அப்பா எனக் குற்ற பிள்ளைகலியைத் தீர்த்த பேரின்ப வாழ்வே எனக்குப் பின் உனக்கிந்த மந்திரி குமாரனாகிய சுமந்திராகாரனே யுனக்கு மந்திரி யாதலால் இன்று முதல் நீயும் அவனை விட்டுப் பிரியப் போகாது அவனும் உன்னைவிட்டுப் பிரியப் போகாது நீங்களிருவரும் ஒருமையுடன் வீளையாடிக் கொண்டிருங்களென்று சொல்லக் கேட்டு சாரங்கதரனும் அந்தப்படியே தங்கள் சொற்படி நாங்களிருவரும் ஒத்துமையாகிப் பிரியாமலிருக்கிறே மென்றுத் தந்தையைப் பணிந்தான், சுந்திரகாசனும் ஓ! ஸ்வாமி! தங்கள்

கட்டளையின்படி இளவரசைப் பிரியாமல் ஒத்துமையுட னிருக்கின்றே னென்று சொல்லிப் பணிந்தான். இவ்விருவர்களை அரசன் வாழ்த்தி நீங்களிருவரும் நமது பட்டணத்தை விட்டு வெளியே போக வேண்டாம் நமது நகரிலேயே சஞ்சரித்துக் கொண்டிருங்க ளென்று கூறி விடைதந்தனர். அவர்களிருவரும் விடைபெற்றுக் கொண்டு சென்று தங்கள் நகரத்திலே தானே புரா கூண்டொன்று கட்டி அதில் தாம்பிராவெடையென்றும் சப்ஜாவெடை யென்றும் படங்கான்வெடை யென்றும் சொல்லப்பட்ட பற்பல ஜாதி புராக்களைச் சேர்த்து அதகளுக்குக் காலத்தில் தீனியும் ஜலமும் வைத்துப் போஷிப்பதும் அப்புராக்களை ஜதை ஜதையாய் விடுத்து பரக்கும்படிப் பார்ப்பதும் மருபடியும் அப்புராக்கள் கூண்டைத் தேடி வந்திரங்க அதகளைக் கூண்டினில் அடைப்பதுமாகப் பொழுது விடிந்தால் புராக்கூண்டைத் திறந்து அதகளை வெளிப்படுத்தித் தீனி ஜலம் வைத்துத் தினையைத் தின்று ஜலமருந்திய பின் வானத்தில் பரக்கும்படி விடுத்து அதகள் பரக்கும் நிலமையைப் பார்த்து சந்தோஷிப்பதுமாக விருந்தார்கள்.

இந்தப்படியாக அந்த சாரங்கதரனும் சுமந்திராகாரனும் நிகழுஞ் சதையைப்போலவும், கண்ணும் - நிமையைப் போலவும், பாக்குஞ் சுவையைப்போலவும், கரும்புங் கரும்பிற்குள் மதுரம் போலவும், மலரும்-மணமும்போலவும், பிராணனொன்று பொந்தியிரண்டாக ஒருவரைவிட் டொருவர் பிரியாமல் மெத்த நேசமாக விருக்கும்போது, அரசன் இவர்கள் புராணைவிட்டுப் பாப்பதை பார்த்து சந்தோஷிப்பதையும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியாதிருக்கும் நிலைமையையுங் கண்டு சந்தோஷித்திருந்தான். இவ்வாறு யிவர்களிருவருஞ் சில வருடகாலங்கள் விளையாடிக் கொண்டிருக்கையில் சாரங்கதரனுக்கு இளவரசுப்பட்டத்துக்குத் தக்க வயது வந்திருப்பதை யுணர்ந்து மந்திராலோசனை செய்து இளவரசுப்பட்டங் கட்டுவதற்கு நிச்சயித்து அதற்குத்தக்க லக்கினம் பார்த்து வேண்டிய சாமான்கள் யாவுஞ்சேகரித்து தேச தேசங்களுக்குத் திருமுகமெழுதி அரசர்கள் யாவரையும் வரவழைத்து உபசரித்து இருக்கச் செய்து நேமித்த லக்கினத்தில் சாரங்கதரனையும் சுமந்திராகாரனையும் ரத்தின மயமாகிய மண்டபத்தில் சிங்காதனத்திலிருக்க நியமித்து அருமையாகிய தீர்த்தங்களைக் கொண்டு அபிஷேகஞ் செய்வித்து உயர்ந்த பட்டு பீதாம்பரங்களை யுடுத்தி ஆபரணாதிகளால் அலங்கிருதஞ் செய்து மணமுள்ள மலர்மாலைகளைச் சூட்டி அழைத்துச் சென்றுத் தன் சிங்காதனத்தின் மீதுப் புதல்வனையும் மந்திரி யிருக்கும் சிங்காதனத்தின் மீது மந்திரி குமாரனையும் வீற்றிருக்கச்செய்து நேத்திரோற்சவமாகப் பார்த்து சந்தோஷித்து இன்முகமுடனல்லெண்புதல்வன் இவ் வஸ்திரபுரிக்கி

இளவரசனும் இவனுக்கு சுமந்திராகாரன் மந்திரியுமாக விருக்கும் படிச் செய்வித்தேன் ஆகையால் யாவரும் இவ் விருவருடைய க்ஷேமத்தைக் கோரிவாழ்த்தி விடைகொடுங்களென் றியம்பின அரசன்சொற்படி யாவரும் அவர்களிருவரையும் வாழ்த்தி அட் சதைகளைச் சிரசின்மீது தூவினர்கள் அதைக்கண்டு அரசன் ஆனந்த மடைந்து உடனே தன் புதல்வனையும் மந்திரி புதல்வனையும் சிங்காதனத்தை விட்டிரங்கும்படி நவின்று, அவ்விருவர்கள் கரத்தி னுலே அங்குவந்திருக்கும் பிராமணர்கள் முதலானோருக்கும் தான தருமங்களைச் செய்யும்படி நவில அவர்களும் அந்தப்படியே தான தருமங்களைச் செய்து பின்பு அவர்களிருவரும் யாவரையும் வணங்கி விடை பெற்றுச்சென்றனர்கள். அப்போது நரேந்திரன் சுபத்திற்காகவந்த அரசர்களுடனும் பந்துமித்திரர்களுடனும் புசித்து அவரவர்களுக்குத் தக்கபடி வெகுமதிகள்செய்து விடைதர அவர் களும் விடை பெற்றுக்கொண்டு தங்கள் தங்கள் நாட்டையடைந் தனர்கள். அத்தருணியினில் சனிபகவான சாரங்கதரனை ஏடி வரக் கண்டு சாரங்கதரன் யாரோ பிராமணர் வருகின்றரென்றுத் தன் மந்திரியுடன் தானும் எதிர்க்கொண்டு சென்று அன்புட னழைத்துவந்து ஓராசனத்தின் மீது வீற்றிருக்கச்செய்து அவருக்குப் பூசைபுரிந்து தூபதீப நைவேத்திய மளித்துச் சோடச உபசாரங் களையும் நிரைவேற்றிப் பற்பலவாறு தோத்திரஞ்செய்ய அச்சனி பகவான் மெத்த சந்தோஷத்துடன் பூசைகளையும் தூபதீப நை வேத்தியங்களையும் தோத்திரங்களையும் அங்கீகரித்துச் சாரங்க தரனை வாழ்த்தி வீற்றிருக்கும்படி நவில அந்தப்படியே சாரங்கதர னும் மந்திரியும் வீற்றிருக்க அதில் சாரங்கதரன் பிராமணரை நோக்கி ஓ! ஸ்வாமி! தாங்க ளெந்தவூர்? தங்கள் பேரென்ன? இவ்வேழைச் சிறுவனை பொரு பொருளாக நாடிவந்த காரணம் யாது இதுகளையெல்லாம் விபரமாகத் திருவுளம் பற்றவேண்டு கிறேனென்று மெத்த நயமாக வசனிக்கும் சாரங்கதரன மொழி களைக்கேட்டு, அந்தச் சனிபகவான அகமகிழ்ந்து சாரங்கதரனை நோக்கி, ஓ! அஸ்தினு புரத்திற்கு இளவரசனுகிய சாரங்கதரனே எங்கோர் ஊரென்றுகிடையாது யானெங்கும் வசிப்பவன் என் பேர் சனிபகவான் உனக்கு இளவரசு பட்டங் கட்டினார்களென் றுக் கேழ்விப்பட்டு உன்னைப் பார்த்துப்போக வந்தேன வேறெ ந்த காரியத்தையும், விரும்பி வந்தவனல்ல, ஆகையால் இனி நீ சுக ஜீவியாய்வாழக்கடவாய் என்றுசொல்லிப் பின்னுஞ் சனி பகவான் சொல்லுகின்றார் ஓ! சாரங்கதரனே! யானின்றே உன்னைத் தொ டர்ந்தேன் இன்று முதல் ஏழரைவருடம் வரைக்கும் உன்னைவிட்டு நீங்கேன ஏழரை வருடமும் பூரணமாயிற்றுனல் உன்னை விட்டு நீங் கிப் போவேனென்று நின்மனதினில் திடமாக பெண்ணக் கடவா யென்று சொல்லி மாயமாய் மறைந்துபோயினர். இவ்வாறு சொ

ல்லி மறைந்து போயின சனிபகவானுடைய மாய்கையைக்கண்டு சாரங்கதரன் வாலிபனுகையால் அதையொரு லக்ஷியஞ்செய்யாமல் என்னமோ சனிபகவானும் நம்மைத் தொடர்ந்திருக்கின்றனும் பார்த்துக்கொள்ளுவோ மென்று அசட்டையாக விருப்பதை மந்திரிகுமாரன் கண்டு ஓகோ இவரென்ன சனிபகவான் சொல்லியதைச் சிறிதேனுங் கவனிக்காமல் மெத்த யெளிதாக மதித்து இருக்கின்றார். இவருக்கு சனிபகவானுடைய செய்கைகளெல்லாம விபரமாகத் தெரியப்படுத்தாம லிருப்போமே யாகில் மோசம் வந்துவிடுமென்று ஆலோசித்துச் சாரங்கதரனை நோக்கி சொல்லத் தொடங்கினன்.

கேளும், என்னையாண்டி ரக்ஷிக்கும் இளவரசே! சனி பகவான் தானே வந்து சொல்லிப்போயினதை தாங்கள் மனதிற் கொள்ளாமல் அசட்டையா யிருக்கின்றீர் கவக்கோள்களில் சனியினுடைய தசை யொரு மனிதனையணுகு மாகில் அம்மனிதன் குபேந்திரனுகவிருந்தபோதிலும் அவனை நானுவித கஷ்டங்களுக் குட்படுத்துவது மல்லாமல் குடிக்க கஞ்சிக்கும் உடுக்க ஆடைக்கும் வழியில்லாமல் பாரியாகச் செய்துவிடுவன் இதற்கு திருஷ்டாந்திர மே, தேனுமுண்டோ யென்பீராகில் அனேகம் திருஷ்டாந்திரங்களிருக்கின்றது அஃது யாதெனில் ளசச்சக்கிரவர்த்தி யொன்று, புரூரவச் சக்கிரவர்த்தி இரண்டு, தருமநந்தனர் - மூன்று, துரியோதனன் நான்கு, ஸ்ரீராமர் ஐந்து, சுப்பிரமணியர் ஆறு, கண்ணன் ஏழு, வாலி-எட்டு, ரகுராஜன்-ஒன்பது, அரிச்சந்திரன்-பத்து, இந்திரன் பதினென்று ராவணன்-பனிரெண்டு, இரணியாக்கன்-பதிமூன்று இரணியகசிபன் பதினான்கு, இன்னு மநேக அரசர்களும் இந்தச் சனி தசையினுல் மெத்தக் கஷ்டமும் நஷ்டமு மடைந்தனர்கள். ஆதலால், இந்தச் சனி தசை மாறுகிற பரியந்தம் தாங்கள் மெத்த ஜாக்கிரதையாக விருக்கவேணும் அன்றியும், மேற்சொன்னவர்கள் ஒருவருக்கேனும் சனிபகவான் தானேவந்து உன்னை ஏழரைவருடம்வரையில் பிடித்திருப்பே னென்று சொல்ல வில்லை உமக்கு மாத்திரம் அவர் வந்து சொல்லிய தற்குக் காரணம் யாதென்றுல் தாங்கள் உத்தமரும் சொற்சோர்வு படாதவரும் எந்த பெரியோரைக் கண்டபோதிலும் தொண்டருக்குத் தொண்டரைப்போலப் பனிவிடையிலும் ஆதரிப்பதிலும் மன்னுயிரைத் தன்னுயிர்போலக் காக்கும் பச்சாத்தாப தயாள குணமும் அன்னிய ஸ்திரீகளைக் கண்டால் தாய் தமக்கை தங்கை யென்ற பாவங் கொண்டிருப்பவரும், மண் பெண் பொன்னுசை களற்றவருமாகவிருப்பதினுலே அந்தச் சனிபகவான் தங்களிடத்தில் கோபில் வந்து சொல்லாமல் தேவரீரைத் தொடருவனே யாகில் நானுக்கு நாள் அவன் பலமானது குறைந்துச் சனிபகவா னென்ற பேரில்லாமல்

அழித்து போவன் ஆகையால், தேடிடிக்கொண்டு வந்து சொல்லி மறைந்து போயினன். இந்த மர்மங்களை யறியாமல் தேவரீர் லக்ஷியஞ் செய்யாவலிருக்கினறீர் அப்படிக்கிருந்தால் பெருத்த ஆபத்துவந்து சம்பவித்துவிடும் அன்றியும் இன்று முதல் ஏழையே னிடம் சொல்லாமலெந்த காரியமுந்துணிந்து செய்யாமலும் ஒருக் கினை நேரமேனும் அடியேனை விட்டுப் பிரியாமலும் இருக்கும்படி தேவரீரை மெத்தவுங் கேட்டுக்கொள்ளுகிறே னென்று சொல்லிய மந்திரியின் வசனங்களைக் கேட்டு சாரங்கதரன் பயமும் திகிலு மடைந்து மந்திரியை நோக்கி ஓ மந்திரியே சனிபகவான் என் றல் யாரோ பிராமணனென் றிருந்தேன் அவர் நடவடிக்கையை நீ யெனக்குச் சொல்லக் கேட்ட பின்பு சனிபகவானுடைய நடை நொடி பாவனைகள் யாவுமுணர்ந்தேன் இனியான் அவர் விஷயத் தில் அசட்டையாயிருப்பனே உன்னுடைய சொல்லையுந்தவரி நடம் பேனை இனியெப்போதும் நடக்கமாட்டேன் என்று சொல்லி மந் திரியின் சொல்லைக்கடவாமலிருந்தது அவனுடன் வினையாடிக்கொ ண்டு மிருந்தனன் இப்படிக்கிருக்கையில் நரேந்திரன் ஒருநாள் வழக்கப்படி சபைக்குவந்து கொலு வீற்றிருந்து மந்திரியை நோ க்கி ஓ மதிமந்திரி நேற்றியதினம் எமது அருந்தவப்புதல்வனுகும் சாரங்கதரனிடம் சனிபகவான் வந்ததாகக் கேழ்விப் பட்டேன் என்னவிசேஷம் சொல்லிப்போயினர் அதைக்கேட்க விரும்புகிறே னென அதற்கு மந்திரி ஓ ஸ்வாமி எங்களாண்டவரே அச் சனிப க வான் எங்களிளவரசராகிய சாரங்தரமகாராஜனுக்கு ஈகித்திருக் கும்படி வாழ்த்தி உடனே இன்றுமுதல் ஏழரைவருஷம் வரையில் உன்னைவிட்டு அகலேன் என்று தன்னுடைய தசை யின்னுஞ் சில நாளிருக்கையிலேயே மூன்று தாய் பயமுறுத்திச் சென்றார். இதுவே அவர் சொல்லிச் சென்றது வேறொன்று மில்லை யெனக் கேட்டு நரேந்திர பூபாலன் மந்திரியை நோக்கிப் பின்னுஞ் சொல்லு கின்றார் கேளும் என மனதுக்கினியே மந்திரியே இப்போது என் னருமைப் புதல்வனுகிய சாரங்கதரனுக்கு விவாகஞ் செய்விக்கத் தக்க வயது நேர்ந்திருப்பதால் அவனுக்குத்தக்க அழகுவாய்ந்த பெண்ணைப் பெரி வரக்கடவாயெனக கேட்டு, அம்மந்திரி அரசனை நோக்கி ஓ வேந்தே ! இதற்கொரு தந்திரமிருக்கின்றது அந்தப் படிக்கிச் செய்தலுபினுல் இளவரசுக்குத் தக்க அழகு வாய்ந்த பெண் மெத்த வெளிதில் கிடைக்கும். அதென்ன தந்திர மெனில நமது இளவரசரைப் போலச் சித்திரவேலைக்காரனைக் கொண் டோர் படமெழுதி அப்படத்தைப் பிராமணர்கள் வசங்கொடு த்து ஒவ்வொரு நகரத்திற்குஞ் சென்று அங்குள்ள அரசர்களிடம இப்படத்தைக் காட்டி இவரிராஜகுமாரனுக்குப்பெண் வேண்டி வந்தோமென்று சொல்லுவார்களேயாகில் ஐம்பத்தாறு தேசங் களில் வெந்ததேசத்திலாவது கிடைக்காமற் போகாது அவசியம்

கிடைக்குமென்று கவிலக்கேட்டு அந்த நரேந்திரன் இதுவும் தக்க யோசனையே என்று கருதிச் சித்திரவேலைக்காரனை வரவழைக்கும் படி மந்திரிக்கிக்கட்டளை யிட்டார் மந்திரியும் அப்படியே வர வழைக்கின்றேன் ஸ்வாமி என்று சொல்லி அங்கிருக்குஞ் சேர் வைக்காரனைபழைத்து அடா சேர்வைக் காரனே சீக்கிரமாக ஓடி சித்திர வேலைகளில் கைதேர்ந்த சித்திரக் காரனை அரசனழைத்து வரச்சொன்னரென்று சொல்லி அழைத்து வரக்கடவா யென்று சொல்லக்கேட்டு அந்த சேர்வைக்காரன் அப்படியே மகாபாக் கியம் ஸ்வாமி இதோ அழைத்து வருகிறே னென்று சொல்லி ஓடோடியுஞ் சென்று சித்திரக்காரனைக்கண்டு அரசனழைத்து வரச்சொன்ன ரென்று சொல்லி அழைத்து வந்து மந்திரியின் மூன்னம் விடுத்துப் பணிக்தான் மந்திரியும் சித்திரக்காரனைக்கண்டு அரசனுக்குத் தெரியப்படுத்தினன் அதை அரசன்கேட்டுச் சித்திர வேலைக்காரனை நோக்கி ஓய் சித்திரவேலைக்காரரே எமது புதல்வனு கியசாரங்கதரனைப்போல சித்திரத்தினால் படமொன்றெழுதவேண் டியிருக்கின்றது அவனைப்போல எழுதஉம்மாலாகுமா சொல்லுமென அதற்கு சித்திர வேலைக்காரன் பணிந்து ஓ ஸ்வாமி சித்திரவேலை களில் என்னைவிடவல்லவர்க ளெவர்களுமில்லை நானெழுதிக் கொக் கும்படத்தையும் உமது புதல்வரையும்நிருத்திப்பார்த்து அப்படம் தங்கள் புதல்வனைப்போலவே இருந்தால் எனக்கு கூலியுடன்வெகு மதியுங் கொடுங்கள் அப்படிக்கில்லாமல் பேதப்பட்டிருந்தால் கூலி யும் வெகுமதியும் எனக்கு கொடுக்கவேண்டாம் என்று சொல்லக் கேட்டு அரசன் சம்மதித்தது ஆனால் செய்யும் பார்ப்போ மென்று உத்திரவளித்தான் உடனேஅந்த சித்திரவேலைக்காரன் படம்எழுத ஆரம்பித்துச் சிலநாளில் படத்தைஎழுதிமுடித்து அரசனுக்கும்மந் திரிக்குந் தெரியப்படுத்தினன் அதையறிந்து அரசனும் மந்திரியும் அப்படத்தை எடுத்துவரச்சொல்லிப் பார்த்தமந்திரியை நோக்கிச் சொல்லத் தொடங்கினர்.

கேளும் மந்திரி இந்த படத்தைப் பார்த்தையா ஆ! ஹா ஹா எண்ண அழகா யிருக்கின்றது இந்த சித்திர வேலைக்காரன் மெத்த கெட்டிக்காரன் கைதேர்ந்தவன எமது புதல்வனுகிய சாரங்கதரனை அழைத்து வரச்சொல்லுமென மந்திரியும்சாரங்கதரனை அழைத்து வரக்கண்டு அரசன் தன் புதல்வனையும் படத்தையும் நிருத்திப் பார் த்து அடங்காமகிஷியடைந்து மந்திரியைப் பார்த்து ஓமந்திரிஇந்த வேலைக்காரனுக்குத் தக்கபடி வெகுவதியுங் கூலியுங்கொடித்தனுப் புமென்று உத்திரவளித்தும் பிராமணர்கள்சிலரை வரவழைத்துஓ ய்பிராமணர்களே இப்படத்தை யெடுத்துச்சென்று ஒவ்வொருநக ரத்தையும் அடித்து அவ்வூரையாளும் அரசனுக்குக்காட்டி இப்பட த்தில்வரைந்திருக்கும் இராஜகுமாரனுக்குப்பெண்வேண்டி வந்தோ

மென்றுசொல்லி எவ்வித தந்திரஞ் செய்தேனும் தக்கப் பெண்ணை ப்பேசி அப்பெண்ணை வரைந்திருக்கும் படத்தைப் பதினுக்குக்கொ டுக்கும்படி பெற்றுக்கொண்டு வந்தால் உங்களுக்குத் தக்க இனாம் கொடுக்கிறேனென்று சோல்லகேட்டு அந்தப்பிராமணர்கள் தங் கள் கட்டளையின் படிக்கிச் சென்று எப்படியாகிலும் பெண்ணைப் பேசி முடிவுசெய்துக்கொண்டு வருகின்றேமென்றுசொல்லி விடை பெற்றுக்கொண்டு படத்துடன் பிராமணர்கள் நகரத்தைவிட்டுவெ ளிப்பட்டு பல தேசங்களுக்குச்சென்று படத்தை அரசர்களுக்குகா ட்டி இப்படித்தினில் வரைந்திருக்கும் இராஜகுமாரன் யாரென்றால் அஸ்தினபுரத்தை யாளும் நரேந்திர பூபதியின் புதல்வன் இவன் பெயர் சாரங்கதரன் இவனே அதி வீராதி வீரன் ரணரங்க சூரன் பிரம இந்திராதிகளாலும் மதிக்க தக்க கெம்பீரன் விண்ணோர்மண் ணோர்களுக்கும் உபகாரன், சுகுமான், சகல வேத வேதாந்தசாஸ் திரங்களில் வல்லவன், சாதுக்களுக்கு நல்லான், துஷ்டர்களுக்குப் பொல்லான், நிர்மலக்ஞான வைராக்கிய சம்பன்னன், சர்மமயோக த்தினில் விற்பன்னன், பிரபன்னனுமாகிய புண்ணியகண்ணியவானு கும்இப்படிப்பட்ட உத்தமகுணங்கள் பொருந்திய இவ்விராஜகுமா ரனுக்குத் தக்கப்பெண் வேண்டிவந்தோம் என்றுசொல்லி அப்பட த்தை அரசர்களிடமளிக்க அவ்வரசர்களும் படத்தில் வரைந்திரு க்கும் இராஜகுமாரனது அழகையும் சுகத்தையுங்கண்டு ஆச்சரியங் கொண்டு ஆ ஹா ஹா இப்படிப்பட்ட அழகும் சுந்திரமும்வாய்ந்த இராஜகுமாரனை நாமிது பரியந்தம் எங்குங் கண்டதுமில்லை, எவர்க ளாலுஞ் சொல்லக் கேட்டதுமில்லை, நமக்குப் பெண்ணிருந்தால் இ ந்த சுகுமாரனுக்கு கொத்து மணஞ் செய்விக்கலாம் நமக்தே பெ ண்ணில்லையே என்று ஒவ்வொரு அரசரும் விசனப்படுவதைகண்டு பிராணர்கள் நாம் தேசங்களனைத்தையுஞ் சுற்றித்திரிந்தும் அரச ர்களைக் கண்டும் படத்தை காட்டியும் பெண்வேண்டு மென்றுகேட் டும்ஒரு அரசனுக் காகிலும் பெண்ணில்லாத குறையால் விசனப்ப ட்டுப் படத்தை திரும்பவும் நம்மிடங் கொடுத்துப் போகச் சொன் னார்கள் எல்லா தேசமுஞ் சென்று பெண் கேட்டும் ஒரு அரசனுகி லும் தனக்குப் பெண்ணிருக்கிறது அதை கொடுக்கினறே னென்று சொல்ல வில்லை இனி யெந்த தேசத்தைநாடிப்போகிறது அன்றியும் அரசனுக்கு எந்த வித்தத்திலேனும் பெண்ணைப் பேசிக்கொண்டுவரு கிறேமென்று சொல்லிவந்த நாம்பறபடியும்சென்று பெண்கிடை க்கவில்லை யென்று எப்படிச்சொல்லுகிறது பெண்ணைப்பேசிக்கொ ண்டுபோனால் அரசனையுங் கண்டு பேசலாம் தகுந்த பரிசையும்பெ றலாம். பெண்ணில்லாமல் அரசன் முகத்தை யெப்படி காண்கிறது காம்பரிசு பெரும்படியான நற்காலம் நமக்கிருந்தால இத்தனைநகர ங்களுக்குச் சென்று பெண்வேண்டு மென்று சொன்னபோதுஎந்த நகரத்திலாவது ஒரு பெண்ணிருக்க மாட்டாளா நமக்கு கெட்ட

காலத்தின் கொடுமையால் எங்கும் பெண் கிடைக்க வில்லை இதற்கு நாமென் செய்வோமென்று பிராமணர்கள் ஒருவரோடொருவர்பே சிக்கொண்டு விசனப்படுகையில் அதிலொரு பிராமணன் மற்றவர்க ளைநோக்கி, ஒய் குப்பனேயங்காரே? ஒய் அப்பனேயங்காரே? ஓ!சே ஷ ஒய் கிட்டு நீங்களேன் விசனப்படுகிறீர்கள் விசனப்பட வேண் டாம் அதோ தெரிகிறது பார்த்தீர்களா பாண்டிய நாடு அந்நாட்டி ற்குச்சென்று அவ்வரசனை கண்டு பேசிப் பெண்ணை கேட்டால் அவ சியம் சாரங்கதரனுக்கு பெண் கிடைக்கின்றதுஇது என்ஜோசியஞ் சொல்லுகின்றது இது உண்மை யென நம்பக் கடவீர்கள் அப்படி க்கி அங்கும் பெண் கிடைக்காமல் போகுமே யானில் உடனே என் சோதிட சாஸ்திரத்தை உங்கள் முன்னமே கிழித்தெறிகிறேன்பா ருங்கள் என் சாஸ்திர வலுவை யென்று அவர்களுச்சூத் திடஞ் சொல்லி அழைத்துகொண்டுப்போக யாவரும் பாண்டிய நாட்டை ச்சேர்ந்தார்கள்.

இவ்வாறு சோதிட சாஸ்திரத்தில் வல்லவனுகியப்பிராமணன் சொல்லக் கேட்டு மற்றுமுள்ள பிராமணர்கள் விசனத்தை யொழி த்து மெத்த சந்தோஷத்துடன் யாவருமாகப் பாண்டிய நாட்டை யடைந்து சித்திராங்கதனைக்கண்டு வாழ்த்தி அவனு லுபசரிக்கப்பெ ற்றுப் படத்தை யளித்து நாங்க ளிப்படத்தில் வரைந்திருக்கும்சா ரங்கதரனுக்குப் பெண்வேண்டி வந்தோமெனக் கேட்டு அந்த சித் திராங்கதன புன்சிரிப்புடன் அப்படத்தை நோக்கிப் பிரமித்துச் சிறிதுநேரம் அசைவற்றிருந்து உடனே தெளிந்து இதென்ன வாச் சரியம் இப்படத்தினில் வரைந்திருக்கும் புருடன் சாத்திர விதிப் படிசகல லக்ஷணங்களும் பொருந்தியிருப்பதால்புருடனுகியநாமே இப்புருடனுடைய அழகைப் பார்த்துப் பிரமித்து அசைவற்றிருக் கும்படி நேரிட்டால் இம்மகாபுருடனைக் கண்ட மாத்திரத்தில்எப்ப டிப்பட்ட திடசித்தமுடையவர்களா யிருக்கினும் அந்த ராஜகன்னி கைகள் தங்கள் சுவாதீனமற்று மூர்ச்சையடையாமலிருப்பார்களோ உடனே மெய்சோர்ந்துப் பூமியின்மீது விழுவார்கள். இதி லெள்ள டவுஞ் சந்தேகிக்க வேண்டியதில்லை யெனக்கருதி இவ்வடிவழகைக் கூட்டி சிருஷ்டிசெய்த அப்பிரமதேன் மெத்த நல்ல புத்திமானு மென்று மதித்து உடனே அப்படத்தை தாதிகளிட மளித்துஇப்ப டத்தைக்கொண்டுபோய் எனது அருந்தவப்புதல்வியாகும் சித்திரா ங்கிக்கு காட்டி அவள் கருத்தை யறிந்துக்கொண்டு வந்து தனக்குச் சொல்லக் கடவீர்களென்றுகட்டளையிட்டனுப்பினுன். தாதிகளும் அரசன் கட்டளையின் படிக்கிப் படத்தை யெடுத்துக்கொண்டு அந்த ப்புரத்தை யடைந்து சித்திராங்கியை கண்டு பணிந்து ஓ! அம்மணி! தங்கள் தந்தை இப்படத்தை யுமக்கு காட்டி யின் னபிப்பிரயாயத் தை யறிந்து தனக்குத் தெரியப்படுத்தும்படி கட்டளை யிட்டார்.

305

ஆகையால், இதோ யிப்படத்தினில் வரைந்திருக்கும் புருடனைப்பார்த்துஉன் கருத்தை வெளிப்படுத்து மம்மா தாயேஎன்று சொல்லி வினயமாகப் படத்தைக் கொடுத்தார்கள் சித்திராங்கியும் அப்படத்தைப்பெற்றுக்கொண்டு அதில்வரைந்திருக்கும் புருடனைக்கண்ணேக்கம் வைத்துப்பார்த்த மாத்திரத்தில்பிரமையுண்டாகி ஆஹா ஹா இப்படிப்பட்ட அழகுவாய்ந்தப் புருடனும் இவ்வுலகத்தினி லிருக்கின்றாரல்லவா யென்று சொல்லிக்கொண்டே மெய்சோர்ந்துப்பூமியின் மீது வீழ்ந்தனள். அதைக் கண்டு தாதியர்கள் விரைந்தோடிச்சென்று சைத்தியோபசாரங்கள் செய்து மூர்ச்சையைத் தெளியச்செய்த மாத்திரத்தில் சித்திராங்கி எழுந்து மறுபடியும் படத்தைப்பார்த்து தோழிகளே நோக்கி அடியெண் மனதக்கினியதோழிகளே இப்படத்தினில் வரைந்திருக்கும் புருடன் சாமுத்திரிகா சாஸ்திரத்தினில் சொல்லியபடி சகல திருத்தமும் பொருத்தமும அழகும் வரய்ந்திருக்கின்றார். இந்த திவ்யமாகிய அழகு பொருந்திய இப்புருடனே யெனக்குத் தக்கநாயன்க இவரையேநான்மணம்புரிவனேயன்றி வேறுஎந்தப் புருடனையும் மணம்புரிய கனவிலும் கருதேன் நினைவிலும் மதியேன் இது உண்மை யென்று என் சொல்லை நம்பி என்னைப் பெற்றெடுத்து அருமையாகவளர்த்த என்தந்தைக்குச்செய்தியை தெரியப்படுத்தி இப்புருடனையே நான் மாலையிடும்படியாக தந்திர வசனங்களைப்பேசி மூடிவு செய்யச் சொல்லி பகருவதுடன் காலம் வீண்போக்காமல் சீக்கிரத்திலே தானேவிவாகம் நடத்தும் படிக் சூசனையாகத் தெரியப்படுத்தி இதற்கு பதில் அவ்விடத்திலென்ன நடக்கிறதோ அதையும் தெரிந்துவரக் கடவீரென்று சொல்லிப்படத்தைத்தன்னிடத்திலேயே தைத்துக்கொண்டு சீக்கிரம்போய்வாருங்களடி தோழிகளேஎன்று கவிலக்கேட்டு அத்தாதிகளும்மெத்த சந்தோஷத்துன இதோ போய்வருகின்றோம் தாயே என்றுசொல்லி விடைபெற்றுக்கொண்டு தாதிகள் விரைந்து இராஜசபையைச் சேர்ந்து அரசனைக்கண்டு வணங்கிச் சித்திராங்கி சொல்லியசெய்திகளையெல்லாம் ஒன்றொளியாமற் பகர்ந்துபடத்தைப்பார்த்தமாத்திரத்திலே மூர்ச்சையாகிதும் உடனே தாங்கள்உபசரித்ததையும் தெரியபடுத்தினர்கள். அதைக்கேட்டு சித்திராங்கத மகாராஜன் வெகு களிகொண்டு தாதிகளே நோக்கி, ஓ! தாதிகளே! நமது சித்திராங்கியை வரைந்திருக்கும் படத்தை யெடுத்து வந்து இப்பிராமணர்களிடம் கொடுங்களென அவர்களு மந்தப்படியேபடத்தையெடுத்து வந்து பிராமணர்களிடமளிக்கஅப்பிராணர்களும் என்றுமில்லாத சந்தோஷசித்தராகி அரசனை நோக்கி, ஓ! தாதிகளே! நமது ளரசனுக்கென்ன பதில்கூறச் சொல்லுகிறீரென அதற் கவ்வரசன் ஓ!பிராமணர்களே உங்கள் இராஜகுமாரன்படம் உங்களிடமும்எங்கள் கன்னிகையின் படம் உங்களிடமும் எப்போதுகொடுக்கப்பட்டதோ அப்போதேவிவாகத்திற்கு எத்தனப்படுமபடியாகச்சொன்

305

தைப்போல மூடிவாகிவிட்டது வேறென்ன நவிலச்சொல்லுகின்றீர்கள் ஒன்றும் வேண்டாம் படங்களைதிருஷ்டாந்திரம்காட்டுகிறது இப்படத்தை யுங்களரசனுக்குக் காட்டி சீக்கிரம் விவாகம்முடித்துக்கொள்ளும்படிக்குச் சொல்லவும் என்றான்.

இவ்வசனங்களைக் கேட்டு அந்த பிராமணர்கள் அடங்கா மகிழ்ச்சிகொண்டவர்களாகி அவ் விராதசபையை விட்டு வெளிப்பட்டுத் தங்கள் நகரத்தை நோக்கி,வருகிறபோது பிராமணர்களிலொருவன் மற்றவர்களை நோக்கி, ஒப்புப்பரீயங்காரே? அப்பரீயங்காரேஒய் சேஷா அடாகிட்டு நான் சொல்லிய ஜோசியம் பலித்ததுபார்த்தீர்களா இதிருக்கட்டம் இனி நமக்கெல்லாம் நல்லகாலம்பிறந்திருக்கின்றது இதெப்படி என்பீர்களோ சுக்கிரதசையில் சுக்கிரன் உச்சம் பெற்றிப்பதாலே நமக்கெல்லாம் நல்லயோக முண்டாகும் அந்த யோகத்தின்பலன் யாதென்றால்இப்பட்டத்தைக்கொண்டுபோய்அரசனிடம் அளித்த உடனே அரசன் நமக்கு நல்ல வெகுமதி செய்யப் போகிறான் இந்த ஆருடத்தின் பலனையும் பாருங்களென்று சொல்லிக் கொண்டே அவர்களுடன் நடந்து அஸ்தினபுரத்தைச் சேர்ந்து கொலுக்கூடத்தையடைந்து அரசனைக்கண்டு வாழ்த்தித்தாங்கள் போய்வந்த செய்தியை யெல்லாம் ஒன்றொளியாமற் கூறிக்கன்னியையை வரைந்திருக்கும் படத்தையெடுத்து அரசன் கரத்தினி லளிக்க அரசன் அப்படத்தைக் கைக்கொண்டு கண்ணோக்கமிட்ட மாத்திரத்தில் அரசன் மனஞ்சிதரிப்பிரடத்து ஆஹாஹா ஹா என்ன சுந்திரம் என்ன அழகு இம்மங்கையின் முகத்தைத்தினமும் பார்த்துக் கொண்டிருந்தாலே போதுமான சவுக்கியத்திற் கிடமுண்டாகு மென்று யோசிக்கிறேன் மேலும் இப்படிப்பட்ட அழகுவாய்ந்த இம்மங்கையைச் சேராத நரஜென்மமும் ஒருஜென்மமோஎப்படியாகிலும் இம்மங்கையைக் கூடிவாழ்வதேவாழ்வமற்றதெல்லாம் தாவ்வுயென்றெண்ணி மந்திரிகளை நோக்கி ஒருதல்மந்திரியே அரசனுக்கோர்தன்பம் நேரிட்டால் அதைத்தீர்க்குமுயர்ச்சியாருடைய பொருப்பு என்றான் அதற்குமுதல் மந்திரிசொல்லுகின்றான் ஓ வேற்றை அத்தமுயர்ச்சியும் கடமையும் மந்திரிகளுடையதாயம் அத்தன்பம் இனதென் றியம்பவேணும்பூபாலரென்ற மந்திரியை நோக்கி அரசன் சொல்லலுற்றான். ஓ! மதிநனில் தேர்ச்சியடைந்த எனதுபிரிய மந்திரியேஇப்படத்தினில் வரைந்திருக்கும் மங்கையை எவ்விதத்திலுலேனும்யான் கூடிக்களிசெய்யஎன்மதிகோரியிருப்பதால் அவளைச்சேராவிடில் என்னுயிர் இவ்வாழ்க்கையிலிருக்கு மென்றெண்ணவேண்டாம் ஆதலால் அம்மாதினைக்குயிசைந்தொழுகவும் என் புதல்வன் மாலைசூடாமல் வேறுவிதமாய்மாலை சூட்டி இக்கழைப்பித்தனைக்குண்டாயிருக்குங் காமகோலைப்போக்கும் படியான உபாயமொன்று சொல்லிஎன்மனதைனி

லத்திருக்கச் செய்யுமைமாமந்திரியே என்று உருகிவாடுகின்ற அரசனைநோக்கி அம்மந்திரி சொல்லுகின்றான் ஒ வேந்தே அற்பமாகிய இக்காரியத்திற்காக தேவரீர் மனங்கலங்கி வாடாலாமோஎப்படிப்பட்டஆபத்து வந்து நேர்ந்த போதிலுங் கலங்காமனத்தையுடைய தாங்கள் இதற்காகதைரியத்தை விடலாமோ விட்டுக் கவலையடையலாமோ தாங்கள் கோரியபடிக்கேஅம்மாத சிரோமணியைவேறு விதத்தில் மாலை சூடச்செய்து இங்கு அழைத்து வந்து சேர்க்கின்றேன்நீர்விசனப் படாமல் திடமாகவிரும் இதற்கொருதந்திரன்செய்கின்றேன் அதென்ன வெனில்உமது சந்திராயுதத்தை இப்பிராமணனிடங்கொடுத்து அனுப்பி அந்த வாளுக்கு மாலை சூடச்செய்வதே சகுதியாணயுத்தி இந்தப்படிவாளுக்குச் சித்திராங்கி மாலைசூடவளையாகில் மற்றகாரியங்களெல்லாம் வெகு எளிதினில் நடக்கும் படிசெய்விப்பேன் என்றனன் பின்பு இரண்டாவது மந்திரி அரசனைநோக்கி ஒ பூபாலரே சகலதருமங்களோபு மறிந்த சுத்தவீராகவிருந்தும் புதல்வனுக்கென்று பேசிய பெண்ணைத் தாங்கள் அணையவிரும்புவது நீதியோ இதனால் உமக்குண்டாயிருக்கும் கீர்த்தியழிவதுடன் இவ்வுலகத்திலுள்ளச் சகலரும் உம்மையிகழ்வார்கள் அன்றியும் உம்மைப் புகழ்ந்து கொண்டாடிய அரசர்கள் யாவரும் உம்மைப்பழிக்கும்படிநேரிடும் ஆனதால் இக்காரியம் உம்மைப்போன்ற அரசர்கள் செய்யத்தகாது இந்த மந்திரியின் சொல்லைக் கேட்டு அதர்மத்திற் பிரவேசிக்கவேண்டாம் உமக்குக் கொடிய பாவம் வந்துசம்பவிக்கும் என்று கூறிய இரண்டாவது மந்திரியின் சொல்லைக் கேட்டு அரசன்வெகுண்டு சினங்கொண்டு ஒ மதியிலாமந்திரீ சொல்லிய வார்த்தைகளின்படி நடக்கஎனக்கு மனமில்லைமுதல்மந்திரியின் சொற்படிநடப்பதே உத்தமமென்று என்மனதிற்குத்தோன்றுகின்றது அன்றியும் அம்மங்கையின்மீது காதல் கொண்டஎனக்கு எந்த அபவாதமும் பாவமும்பழியும் வந்து சேர்ந்தபோதிலும் அதற்குயான் கிஞ்சிற்றுமே பயப்படுவே னென்றெண்ணுதே எவ்விதமுயர்ச்சியிலாவது அம்மங்கையைக் கூடிக்கலவி செய்யாமல் விடுவதில்லை என்ற அரசன் சொல்லைக் கேட்டு இரண்டாவது மந்திரிப் பின்னும் அரசனை நோக்கி சொல்லத் தொடங்கினர்

கேளும் அரசனே உலகத்தில் ஒரு பெண்ணை யொருவனுக்குப்பேசிமுடித்த பின்பு அப்பெண்ணை யின்னொருவன் கூடி கலவிசெய்யவெண்ணங் கொள்ளுவது தகாது அன்றியும் வாளுக்கு மாலைசூட்டும்படிச் செய்து அப்பெண்ணை தனையன்பால் விடுக்காமல்தானே அனுபவித்தக் கருதுவது மெத்தமோசம்இப்படிப்பட்டகெட்டகாரியங்களைச் செய்யஉன்மூதாதைகள் கனவிலும் நினைக்கமாட்டார்கள் அப்பேர்ப்பட்ட உத்தமகுலத்தினி லவதரித்த நீஇக்கொடியகாரியங்களை மனமாரச்செய்யஎத்தனித்த உமதுமுகத்தையும்பார்க்கலா

காத இந்தக் கொடுமையைச் செய்ய முயன்றிருக்கும் உமதுசபை யினில்யான்மந்திரியாயிருக்கத்தகாத ஓ கொடுங்கோல் மன்னனே உன்னிடத்திலிருந்தும் அபவாதச் சொல்லைக் கேட்பதற் காகிலுங் காட்டிற்குசென்று வாழ்வது மேன்மையாகுமென்று சொல்லிஅம் மந்திரிஉடனே சபையைவிட்டு வெளிப்பட்டுத் தன்னகம்புக்கிருந் தான்.உடனே அரசன்பிராமணர்களை அழைத்துஅவர்களிடம்தன் வாளாயுதத்தைக்கொடுத்து இவ்வாளாயுதத்தை எடுத்துச்சென்று பாண்டியனைக்கண்டு இந்தவாளுக்கவ்வரசன்புதல்வியாகும் சித்திரா ங்கியைமாலையிடச்செய்து வருவீர்களே யாகில் உங்கள்ஏழேழுதலை முறைக்குபயோகப் படும்படியாக மூன்று கிராமங்களை விடுதேன் அன்றியும் மேற்சொன்ன காரியத்தை முடித்துக்கொண்டுவந்தால் தக்கஇனாமளிக்கிறே னென்று சென்ன அரசன் சொல்லைக்கேட்டு அப்பிராமணர்கள் அகங்குளிர்ந்து முகமலர்ந்து ஆனந்தமடைந்து அ ரசனிடம்விடை பெற்றுக்கொண்டு வாளாயுதத்தைக் கையிற்பிடித் துச்சென்று பாண்டியநாட்டை யடைந்து சித்திராங்கதனைக்கண்டு வாழ்த்தி அவனு பசரிக்கபெற்று அரசனை நோக்கி, ஓ!பூபாலரே எங்களரசன் தன்புதல்வனுக்கு நின்புதல்வியை மணம் புரிவதற்கு ச்சம்மதித்து இந்த வாளைக்கொடுத்தனுப்பினர், எனினும்விவா கத்திற்காக நேமித்திருகும் லக்கினத்தில் இந்த வாளுக்குத் தங்கள் புதல்வியைக் கொண்டு மாலை சூட்டும்படித் தங்களிடஞ்சொல்லும் படி எங்களுக்குக் கட்டளையிட்டாரெனக் கேட்டு அந்த சித்திராங் கதன் பிராமணர்களைநோக்கி,ஓ!பிராமணோத்தமர்களே இந்தப்படி வாளுக்கு எவர்களும் மாலையிட்டதையான் கண்டது மில்லைக்கேட் டது மில்லை,இந்த விந்தையான செய்தியை என் புதல்வியும்இன்னு முள்ள எங்கள் பந்துக்களுங் கேட்டால் சம்மதிப்பார்களோ எள்ள ளவும் இதற்கு யான் சம்மதிக்கமாடேன் அந்த ராஜகுமாரனை சாரங்கதரனே நேரில்வந்து என்புதல்விக்கி மாங்கிலியம் சூட்டவே ணும் என் புதல்வி ராஜகுமாரனுக்கு மாலை சூட்டவேணும் இந்தப் படிக்கிசம்மதியாஞல்என்புதல்வியை அந்தராஜகுமாரனுக்குக்கொ டுத்து மணஞ் செய்விப்பேன் அப்படிக் கில்லாமற் வாளுக்குமாலை சூட்ட யார்தான் சம்மதிப்பார்கள். ஆதலால், ஓ! பிராமணர்களே நீங்கள் சீக்கிரம் உங்களரசனிடஞ் சென்று நான்சொல்லிய இச்செ ய்திகளைச் சொல்லி அரசனுடன் சாரங்கதரனையும் இன்னுமுள்ளப ந்துக்களுடன் இங்குவந்து விவாகஞ்செய்துகொள்ளும்படிச்சொ ல்லி அழைத்துக்கொண்டு வாருங்களென்று கவிலக்கேட்டு பிராம ணர்களிலொருவர் அந்த சித்திராங்கதனை நோக்கி ஓ!பாண்டியரா ட்டுக்கதிபதியே நீரென்ன தெரியாதவர் போலப் பேசுகின்றீர்இப் படி வாளுக்கு மாலைசூட்டுவது அவர்களின் முறையேயெனக்கேட்டு ச்சித்திராங்கதன் ஓ! பிராமணர்களே! சற்றே நிதானியுங்கள்யோசி ப்போம் என்று வெகுநேரம் யோசித்தும் தன் புத்திக்கி எதுவும்

தோன்றவில்லை நீங்களே அவர்கள் தலமுறையில்கடந்த விருத்தாந்தத்தை வெளிப்படுத்துவீர்கள் என்ற சித்திராங்கதனுக்குப் பிராமணர்கள் சொல்லத்தலைப்பட்டார்கள். ஓ பூபாலரே! பூர்வத்தில்தருமகந்தனர் கௌரவர்களுடன் போர் புரிந்து யாவரையும் மடித்து அஸ்தினபுரத்தைப் பட்டங்கட்டிக்கொண்டபோது அனேக மணங்கள் செய்வித்தார் அந்தகாலத்தில் அவர்க ளெல்லோரும் வாளுக்கு மாலையிட்டதை நீர்கேட்ட தில்லையோ? உமக்கு முன்னம் இப்பாண்டி நாட்டை அரசுபுரிந்துக்கொண்டிருந்தவருக்கு இந்தசெய்தி தெரிந்தேயிருக்கும் இந்த உண்மையை அவ் வரசனிடத்தில்மந்திரியாகஅப்போதிருந்தவரைக் கேட்டால் தெரியவரு மென்றுபிராமணர்கள் சொல்லியதைக் கேட்டு அந்தச் சித்திராங்கதனுக்குக்கியாபகமுண்டாகி சரி சரி அப்படியா? ஆனல் இந்தவாள் யாருடையதுஇதை நன்றுய்ப் பரிசோதனை செய்தச் சொல்லுங்கள் மந்திரிகளே! என்று கவில,மந்திரிகள் அந்தவாளைஎடுத்துப் பரிசோதிக்கிறபோது அந்தவாளில் தருமகந்தனருடையபெயர் வரைந்திருப்பதைக்கண்டு அவர்கள்ஓஎங்களரண்டவரே! இந்தவாளில் தருமகந்தனருடைய பெயர் வரைந்திருக்கிறதெனக் கேட்டுச்சித்திராங்கதன் பிராமணர்களை நோக்கி, ஓபிராமணோத்தமர்களே? இந்தவாள் சாரங்கதரனுடைய வாளல்லவே அவனுடைய வாளாக விருந்தாலல்லவோ மாலைசூட்டத் தகும். இந்தவாள் தருமகந்தனருடையவாளாகயிருப்பதால் இவ்வாளுக்கு மாலை சூட்டத்தகுமோஎன்றனன் அதற்குப் பிராமணர்கள் ஓ வேந்தே! தருமகந்தன ர்மகாவிந்தம் போகிறபோது தன்வாளை பரிக்ஷித்துமகாராசனுக்குக்கொடுத்துச் சென்றார், அந்த பரிக்ஷித்து மகாராசன் தன் புதல்வனுகிய ஜனமேஜயனுக்குக் கொடுத்துப் போயினர் அந்த ஜனமேஜய மகாராஜன்தன் புதல்வனுகிய நரேந்திரபூபதிக்கிக் கொடுத்துப் போயினர் இந்த நரேந்திரபூபதிதன்புதல்வன் சாரங்கதரனுக்கு இளவரசுபட்டங் கட்டுகிறபோது இந்தவாளை சாரங்கதரனுக்குக் கொடுத்தனர். ஆதலால், இவ்வாளானது ஓரான்வழிபாய்வந்துக்கொண்டிருக்கின்றது என்றுப்பிராமணர்கள் மொழியைக் கேட்டு அந்தச்சித்திராங்கதன் மதிக்குச்சம்மதியுண்டாகி ஓ! பிராமணர்களே! நீங்களித்தனை திருஷ்டாந்திரமாகச்சொல்லுகிறபோது யானிதை நம்பத்தகுதே ஆதலால்,உங்களரசன் நரேந்திரபூபதியின் இஷ்டப்படிக்கி என்புதலவியை சாரங்கதரனுடைய வாளுக்கு மாலை சூட்டும்படிக்கிச்செய்விக்கின்றேன் என்றுசொல்லி விவாகத்திற்காக வேண்டிய வஸ்துகளை தயார் செய்யும்படி மந்திரிகளுக்குக் கட்டளை யிட்டான். அப போது சித்திராங்கி,தாதியை நோக்கி,அடி ரத்தின மாலை முன்னம் நீடபங்கொண்டுவந்து கொடுத்தையே அந்தப்படத்தில்எழுதியபடி டன் எனக்கு மணவாளனை எப்போது வருவாரடி எனக் குண்டாயிருக்கும் காமநோயை எப்போது தீர்ப்பாரடி சீக்கிரமாய்ச்சொல

லடியென அதற்கு அத்தோழியானவள், ஓ அம்மணி! அப்படத்தைக்கொண்டுவந்து கொடுத்தப்பிராமணர்கள் நின்னுரு வமைத்தப்படத்தையெடுத்துக்கொண்டு போயிருக்கிறார்கள். அவர்கள்வந்தவுடனேஉள்ள செய்திதெரியவரும் அன்றியுமதின் கருத்தின்படியுனக்குச்சாரங்கதரனே கணவனாகும்படிப் பரமசிவன் கிருபைசெய்வார். நீ அஞ்சவேண்டாம் இதோ யான் உனது தந்தையின்சபைக்குச்சென்று செய்தியைத் தெரிந்துகொண்டு வருகிறேனென்று சொல்லிச் சபையை நோக்கிச் சென்று அங்கு பிராமணர்கள்வந்திருப்பதையும் அவர்கள் சொல்லிய செய்தியையும் அதற்குத் தங்களரசன் கேட்டகேள்விகளையும் அதற்குப் பிராமணர்கள்சொல்லியபதிலையும் அதற்குஅரசன் சம்மதித்து விவாகத்திற்கு வேண்டியவஸ்துக்களை மந்திரிகளிடஞ் சொல்லித தயார் செய்யச் சொல்லியதையுங்கேட்டு வெகு சந்தோஷமடைந்திருக்கையில், அரசன்அத்தோழியைக்கண்டு ஓ சித்தினமாலையே! சீக்கிரஞ் சென்று உன்னரசியை சகலாபரண ஆடைகளால் அலங்கிருதஞ்செய்து அழைத்துவரக்கடவாயென்று கட்டளையிடக்கேட்டு, அத்தாதி கொற்றவரேஅப்படியே தங்களிஷ்டப்படி எங்களரசியை ஆடை யாபரணங்களைத்திருத்தியழைத்து வருகிறேனென்று சொல்லிச்சபையை விட்டுப்புரப்பட்டு அந்தப்புரத்தை யடைந்து சித்திராங்கியைப் பணிந்து, ஓ அம்மணி! யான் சபையைச் சேர்ந்தபோது அன்று படங்கொடுத்தப்போயின பிராமணர்கள் வந்திருக்கக்கண்டேன். மெத்தசந்தோஷங்கொண்டேன். அத்தருணியில் அரசன் என்னையழைத்து விரைவாகஉன்னை யலங்கிருதஞ்செய்து அழைத்து வரும்படி கட்டளை யிட்டார் ஆகையால் நீ சீக்கிரஞ் சென்று ஸ்நானஞ்செய்து வருவாயெனக்கேட்டு சித்திராங்கி அடங்கா மகிட்சியடைந்து வேகமாகச் சென்று ஸ்நானஞ்செய்து வந்தனள, உடனே அத்தாதி விலையுயர்ந்தஆடையாபரணங்களால் அலங்கிருதஞ்செய்து அழைத்துவந்து அரசன் முன்னம் விட்டனள். அப்போது சித்திராங்கித் தன் தந்தையை வணங்க, அவனும் புதல்விக்கி ஆசிகூறி, என்னருந்தவத்தினலுதித்துப் புத்திரிக்கவலி தீர்க்கவந்தபேரின்பவாழ்வே இப்பிராமணர்கள் நீகோரிய புருடனை சாரங்கதரன் வாளைக்கொண்டுவந்திருக்கின்றார்கள். இந்த வாளை நீ கைக்கொண்டு சாரங்கதரன் திருவடியைத் துதிசெய்துக்கொண்டபடியே வாளுக்குமாலை சூட்டக்கடவாய், என்னருமைப் புதல்வியே எனக் கேட்டந்த சித்திராங்கி, ஓ எந்தந்தையேஇதென்ன வாளுக்கெங்காகிலும் மாலை சூட்டினதுண்டா? அப்படி இவ்வாளுக்கு மாலை சூட்டுவதற்கு என் கேள்விக்கிப் பதிலெப்படி கிடைக்கும் யார் சொல்பவர்களென, அதற்குச்சித்திராங்கதன் பிள்ளைகலிதீர்த்த என் செல்வமே, அவாள் வாளுக்குமாலைசூட்டிவதே முறையென்கிறபடியால் நீ மறுத்தொன்றுஞ் சொல்லாமல் வாளுக்கு மாலைசூட்டக்கடவாயென்று கட்டளை யிட்டான்

அதற்கந்த சித்திராங்கி, ஓ என் பிதாவே! தங்கள் கட்டளையின்படி மாலை இவ்வாளுக்குச் சூட்ட சித்தமாயினேன் ஆகிலும் யான் கேட்கும் கேள்விக்குப்பதிலெப்படி கிடைக்குமென, அதற்கரசன்பிராமணர்களை நோக்கி, ஓ வேதியாகளே! என்புதல்வி கேட்பதற்குஎன்னசொல்லுகின்றீரென, அதற்கந்த பிராமணர்கள்ஓபூபாலரே! இப்போதிந்த வாளுக்குமாலை சூட்டுவதால்நீரும் பெண்ணைசாரங்கதரனுக்குக் கொடுக்க நிச்சயித்ததுபோலவும், நரேந்திரனும் தன்புதல்வனுக்குச் சித்திராங்கியைக் கொள்வதற்கு நிச்சயித்தைப் போலவும் அரசர்கள் முன்னம் மணஞ்செய்விக்கிறபோது உமது புதல்வி கேள்க்கும் கேள்விக்கிச் சாரங்கதரன் பதில் சொல்லி மாங்கிலியஞ் சூட்டச்செய்விக்கலாமென, அதற்கு அரசன் சரி அப்படியே நடத்தலாமென்று ஒப்புக்கொள்ளச் சித்திராங்கிஉடனே அந்தவாளுக்குமாலை சூட்டினாள். என்ன கருத்தைக்கொண்டு சித்திராங்கிமாலை சூட்டினளென்றால தன் மனத்தினில் சாரங்கதரனுடையதிருவடிகளைப் பதியவைத்துக்கொண்டு வாளாயுதத்தைக் கணவனுகப் பாவித்து அந்தவாளுக்கு மாலைசூட்டிவலம்வந்து பணிந்து என் மனதுக்கினிய மணவாளரே! இந்த வாளை நீரென்றே மனதில் மதித்துஆகாயவாணி, பூமிதேவியறிய, மாலைசூட்டினேன் இதனலென் மனதிலுற்றக் கவலைகளை யெல்லாம் பஞ்சாகப் பரக்கும்படி யோட்டினேன் இனியுமதுமனையாளாகினேன் என்றுப்பின்னிட்டுநடக்கப்போகிற படுமோசத்தை யறியாதவனாதலால் மெத்த மகிட்சியுடன் தந்தையை நோக்கி, ஓ என்னைப் பெற்ற தந்தையே! தங்கள் இஷ்டப்படி வாளுக்கு மாலைசூட்டினேன். இனி அடியாள் செய்ய வேண்டியது யாதோ? அதைத்திருவாய் மலர்ந்தருளவேணு மென்று வேண்டினாள். அதற்குச்சித்திராங்கதன் களித்து ஓ அம்மா! இனிக் காலதாமதஞ்செய்யாமல் இந்த முத்துச்சிவிகையின்மீது உனக்குகந்தப்பாங்கியுடனேறிக்கொண்டு இப்பிராமணர்களுடன் சென்று அஸ்தினபுரத்தைச் சேர்ந்து மாமி மாமனரை வணங்கி, அவர்கள் சொற்படி நடந்துக்கொண்டிருப்பையே யாகில் இன்னுஞ் சிலகாளில் உனக்கு மணஞ்செய்விக்க முயன்று நரேந்திரன் எனக்கு மணவோலையெழுதிவான், அவ்வோலையைக்கண்டவுடன் யான் அஸ்தினபுரத்திற்கு வந்து உன்னைக்கண்டு உன் மனத்தை முடித்து உனக்கு வேண்டியமட்டும் தக்கபடி ஸ்ரீதனங்கள், வரிசைகள், முதலானதுகளையும் உன்மனங்களிக்கும்படி செய்விக்கிறேன்என்ற தந்தையின்மொழியைக்கடக்காமல்பாங்கியுடன் சிவிகையின் மீதேறிக்கொண்டுபிராமணர்கள் பின்சென்று சிலகாளையில் அஸ்தினபுரத்திற் கருகிற் செல்லப்பிராமணர்கள், அங்கோர் சோலையைக்கண்டு அங்கு சிவிகையிலிருந்தசித்திராங்கியையும் பாங்கியையும் இறக்கிஅக்கோரிடத்திலிருக்கும்படிச்சொல்லித் தூதர்களால் தங்கள் வரவை நரேந்திரனுக்குத்தெரியப் படுத்தினர்கள் நரேந்திரனும், பிராமணர்கள் சித்திராங்

கியுடன் சோலையில் வந்திருப்பதைத்தூதர்களாலறிந்து அத்தூதர்க
ளுக்குத் தக்கவெகுமதிகொடுத்து மந்திரியுடன்ரதகஜ துரகபதாதி
கள்சூழ,பேரி,மிருதங்காதி சகல மேளவாத்தியங்களும்,கடலொலி
போலமுழங்க எதிர்க்கொண்டு சென்று சோலையச்சேர்ந்துசற்றி
ளைப்பாரிப் பிராமணர்களால் சகல விருத்தாந்தங்களையு மறிந்துஅ
டங்காமகிழ்ச்சிகொண்டு சித்திராங்கியைச் சிவிகையிலேறச்செய்துச்
சிவிகை முன்னும் மற்றவர்கள் பின்னுமாய் சகல சேனைகளுஞ்சூழ
வாத்தியங்கள்கோஷிக்க நடந்து அஸ்தினபுரத்தை வலஞ்செய்வித்
துச்சித்திராங்கியைத் தனித்திருக்கும்படியோர் அரண்மனையில்சே
ர்ப்பித்து அவளுக்காகவேண்டிய சகல வஸ்துக்களையும் மந்திரியை
க்கொண்டு கொடுக்கும்படியாக நேமித்து இந்த சித்திராங்கி நம்மு
டைய வாளுக்கு மாலைசூட்டித் தன் வசம்வைத்துக்கொண்டதுமல்
லாமல் ஏதோ கேழ்வி கேழ்க்கப் போகிறதாயும் அந்தகேழ்விக்கு
தக்க பதில் சொல்லாவிடில் திரும்பிப்பாண்டிய நாட்டையணுகுவ
தாயும் பிராமணர்கள் புகன்றார்களல்லவா, அந்த கேழ்விதான
ண்ணமோ அதையறிந்து கொள்ளும் பொருட்டுப் போகிறதைப்
போல புதிய மாளிகையை யடைத்து அவள் கேழ்விக்குப் பதில்
சொல்லி அம்மங்கையை இசையச்செய்து அவளுடன் கூடிக் கலவி
செய்து நமக்குள்ள காமமோகத்தீர்த்துக்கொள்ளுவதற்குஇது
வே நல்ல தந்திரமென்று கருதி மந்திரியை நோக்கி, ஓ மந்திரிஇப
பிராமணர்களுக்கு வேண்டிய ரத்தினங்களும் பட்டுப் பட்டாடைக
ளையும் கொடுத்தனுப்பு மென்றுக் கட்டளையிட்டு அந்தப்புரத்தை
ச்சேர்ந்தான்.

இந்தப்படியாக அந்த நரேந்திரன் மந்திரிக்குக் கட்டளையிட்டு
அந்தப்புரத்தைச் சேர்ந்து ஸ்நானம்பண்ணி நூதனமாகிய ஆடை
யாபரணங்களினு லலங்கிருதனனி அந்தப்புரத்தை விட்டு வெளிப்ப
ட்டு சித்திராங்கியிருக்கும் மாளிகையை நோக்கி நடந்தான் அப்
போது சித்திராங்கித் தன்பாங்கியை நோக்கி அடிபாங்கியேஇதோ
விருக்கும் வாசனைத் திரவியங்களையெல்லாங்கூட்டி மெத்த மணமு
ண்டாகும்படிக்கி யோர்சொர்ன்ன பாத்திரத்திற்சேர்த்துவைத்து
என தன்பிற குகந்த நாயகர் வருவார், அவரை எதிர்க்கொண்டு நீ
சென்று அழைத்துவந்து வீற்றிருக்கச் செய்து எனக்குத்தெரியப
டுத்தக் கடவாயடி என்று கட்டளையிட, அதற் கந்தபாங்கியும் அப்
படியே தெரிவிக்கின்றேன் என்னம்மணி யென்றுசொல்லிவாசனை
த்திரவியங்களைக்கூட்டி சந்தனத்திற்சேர்த்து சொர்ன்ன பாத்திரத
தில் வைத்து இராஜகுமாரன் வரவுக்கெதிர்பார்த்துக் கொண்டிருந்
தனள். அப்போதுநரேந்திரபூபாலன்குதிரையின்மீதேறிக்கொண்டு
அந்தப் புதியமனையினருகில்வந்து குதிரையைவிட்டிறங்குவதை
ப்பார்க்கண்டுஓடோடியுமவந்து சித்திராங்கியை நோக்கிஓ அம்மணி

இதோ சாரங்கதரமகாராஜன் குதிரையைவிட்டிறங்கிநமதரண்மனை க்குள்ளே வந்துக்கொண்டிருக்கின்றானெனக் கேட்டு அந்தசித்திரா ங்கி அடங்கா மகிழ்ச்சிகொண் டெதிர்கோக்கி வந்து பார்த்தடிபா ங்கி! யிவர் சாரங்கதரனல்ல இவனோ கிழக்குரங்குபோன்ற மூக மும், நரைத்த ரோமமும், தளர்ந்த தேகமும் தள்ளாடிய நடையு மாக வருகின்றான். சீக்கிரமாக வோடி சாரங்கதரன்படத்தையெடு த்துவாடி யென, அப்பரிசியு மந்தப்படியே ஓடி சாரங்கதரன்பட த்தை யெடுத்துவந்து கொடுக்க சித்திராங்கி அப் படத்தினில்வரை ந்திருக்கும் சாரங்கதரனுடைய ரூபத்தையும் தன்னரண்மனையைநா டிவருகிற அரசனுடைய ரூபத்தையுங்கண்டு சாரங்கதரனல்லவென் றுணர்ந்து நாமேன் போகவேணும் யாரோவருகிறார் இங்குவந்த பிறகுவிசாரித்து தெரிந்துக்கொள்ளுவோ மென்றெண்ணித்தன்னி ருப்பிடஞ்சேர்ந்திருந்தனள். அத்தருணியில் நரேந்தின் சமீபத்தினில் வந்துப் பாங்கியை எச்சரித்து ஓமாதுசிரோமணி! வேதியர்கள்மூல மாய்வானேயனுப்பி அவ்வாளுக்கு உன்னைமாலையிடச்செய்து அழை ப்பிவைத்தவேந்தன்நான்தான் அப்படிக்கிச்செய்ததற்குக்காரணம் யாதென்றால், உன்னைப்போல வரைந்திருக்கும் படத்தை வேதியர் கள்கொண்டுவந்து கொடுக்க அப்படத்தை யான்கண்டு மெத்தமை யலாகிமெய்சோர்ந்து மந்திரிகளா லுபசரிக்கையெழுந்து அம்மந்திரி கள்கூறியபடிவானே வேதியரிடமனுப்பி எப்போது நீவருவாயென் றுஎதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தேன் என்னிஷ்டப்படிக்கியும்வா ளுக்குமாலைசூட்டி என்னுடைய நகரத்தினில் புதுமாளிகையில்வந் தசேர்ந்தாய், இனி வீண்காலம்போக்காமல் விரைவிலெனைக்கூடிக லவிசெய்து எனக்குற்ற காமநோயைதீர்த்து மகிழச்செய்வாயாகில் பலருமறிய உன்னை மணம்புரிந்து உன்சொற்படி யாள்ளடப்பேன் பெண்ணேயெனக்கேட்டு அந்த சித்திராங்கி ஒஹரசே அப்படியா தங்கள்நாமதேயமென்னவென அதற்கு நரேந்திரன் ஓமாதுசிரோ மணி! என் பெயர் நரேந்திரமஹாராஜன் என்றான் அதற்கு சித்தி ராங்கி, ஓவேந்தரே உமக்குப் புதல்வருண்டா? எத்தனை பெயரென அதற்கு நரேந்திரன் ஒருவனே எனக்குப் புதல்வன் அவன் பெய ரோ சாரங்கதரன், அவன் இன்னுஞ் சிறுபாலகன் என்றான் அதற் குச்சித்திராங்கி ஓபூபாலரே! கேவரீர் சொல்லிய தெல்லாம்சரிதான் எனக்கோர் கேழ்வியுண்டு அதென்னவென்றால், இவ்வுலகத்தினில் ஒருபாகத்தில் முதலில் பெண்ணைப்பிற கு பின்பு ஆணைப் விவா கஞ்செய்துக்கொண்டு மனைவியைக்கூடிப புதல்வர்களைபெற்று ம றுபடியும்பெண்ணைப் ஒருஆண்சிசுவைப்பெற்றெடுத்து அதின்பின் புமுன்போலஆணைப் அரசுபுரிந்துக்கொண்டிருந்தஅரசன்யாவனை அவ்வரசனை இன்னனென்றுவெளிப்படுத்துவீர்கொற்றவரேயென்று வினவினள் அதற்கு நரேந்திரன் ஓ எனதன்புக்கினிய மாதரசே இக்கச் சேழ்வியானது விந்தையிலும் விந்தையாக விருக்கின்றது

இதை யோசிக்கில் என்மனதுக் கேதும் தோன்றவில்லை. ஆகிலும் இது எந்த சாஸ்திரத்திலும் கண்டதுமில்லை எவர்களாலுஞ் சொல்லக் கேட்டதுமில்லை ஆதலால் இக்கேழ்விக்குப் பதில் மந்திரிகளால் தெரிந்து வந்து சொல்லுகிறேன். யான் காமாந்தகாரத்தினிலகப்பட்டுக்கொண்டு கவலையடைந்திருப்பதை யுனக்குத்தெரியப்படுத்தியும் அதைக்கவனிக்காமல் கேழ்வி கேழ்க்க முயன்றதெப்படியிருக்கிறதென்றால் ஒரு தூலுக்கன் தாடி பற்றிக்கொண்டெறிவதைமற்றொருவன் கண்டு அத்தூலுக்கனிடஞ்சென்று சுருட்டுக்கு நெருப்பு கொடுமென்று கேட்டதைப்போலவும் வீடுபற்றி வேகும்போதுக் கிணறெடுக்க முயன்றதைப்போலவும்இருக்கின்றது. இனியாகிலும் நீ தயவுசெய்து எனக்குற்ற காமாந்தகாரத்தைப் போக்கும்படியான முயற்சியை சீக்கிரம் செய்து மனமகிழப்பாரும் பெண்ணேயென்று பற்பலவாறு வேண்டிக்கொண்டான்,

இவ்வண்ணம் அந்த நரேந்திர பூபாலன் காம விகாரங் கொண்டு தன்னை வேண்டிக்கொள்ளுவதைக் கண்டுசித்திராங்கி சிறித்து அரசனை நோக்கி, ஓ பூபாலரே! உமது வாளுக்கு யானைப்போது மாலை சூட்டினேனே அப்போதே உமக்கு மனைவியாய்விட்டேன். மனைவியாயினபின்பு மனுளன் சொற்படி நடப்பது கற்புடைய மாதர்களின் இயற்கை யானதால் உமது சொற்படி நடக்கயாதொருதடையுமில்லை ஆகிலும் ஒரு விசேஷமுளது அஃதென்னவெனில், இன்று முதல் ஒருவருடம் வரைக்கும் எனக்கொரு விரதமுண்டு அவ்விரதமுடிகிற பரியந்தம் நீர் கருதிய வெண்ணத்தை முடித்தாலோ நீங்குவந்து நேரிடும் ஆதலால், தேவரீர் அடியாள் மீது கோபங்கொள்ளாமலும், உமது வார்த்தையைத் தடுத்தேனென்றுப் பிரியம் மாராமலும் பொருத்துக் கொண்டிருப்பீரேயாகில் இக்கெடுவு கடந்தவுடன் உமதிஷ்டப்படிக் கூடி சுகித்துக் காமவிகாரத்தைப் பேர்க்கடிக்க சித்தமாகவிருக்கின்றேன். இவ்வளவு கிருபை செய்யவேணும் கொற்றவரே என்ற சித்திராங்கியின் மொழியைக்கேட்ட நரேந்திரபூபாலன் ஓ மாதசிரோமணி நீ இந்த விரதம் பூண்டதற்குக் காரணமென்ன இவ்விரதத்தினு லுண்டாகும் பலனென்ன உன்னை இந்தவிரதத்தை அநுட்டிக்கும்படி சொல்லிய உத்தமர்கள் யாவர் அதுகளையெல்லாம் விபரமாக தயவு செய்து கூறடி மானே! யென அதற்கந்த சித்திராங்கி, ஓ வேந்தரே என் தந்தையானவர் தான்சூலத்தைவிட அச்சூலத்தை தங்கள் பாணங்களால் தடுப்பவனெவனே அந்த ராஜகுமாரனைக்கு என்னை மணமபுரிவிக்கிறேனென்று சுயம்வரம் சாட்டினார் இப்படி சுயம்வரம் சாட்டியிருப்பதைத் தெரிந்து அனேக ராஜகுமாரர்கள் வந்து என் தந்தைவிடுத்த சூலத்தின்மீது அனேகமாயிரம் பாணங்களைவிடுத்துத் தங்கள் தங்கள் முழுவல்லபத்தையும் காட்டினார்

கள். அப்பாணங்க ளந்த சூலத்தின் முன்னம் தலைக்காட்டாமல் மூலைக்கொன்றுகச் சிதரிப்போயினபடியால் அவர்களை யெல்லாம் என் தந்தையானவர் பிடித்துச் சிரத்துணித்துவிட்டார் அதை யானறிந்திருப்பவளாதலால் அப்படிப்பட்ட விவகாரம் இப்போ தொன்றும் வராம லிருக்கும்படியும் உமக்கோ ராபத்தும் நேராம லிருக்கும்படியாகவும் கருதி சிவபெருமானை நோக்கி இவ்விரதஞ் செய்ய மூயன்றது மன்னியிலும் இவ்விரதம் முடிகிறவரையில் இப்போது உடுத்திய ஆடையேயன்றி வேறு ஆடையை தரியேன் சடைமூடியோ டிருப்பனே யன்றிக் கோதிப் பின்னலிடேன். அடைக்காயும் வெற்றிலையும் வாயிற்கொள்ளேன் சன்னியாசி மாதை ப்போல நடையொடி பாவனங்களைக்காட்டி ஒருவருடகாலமும் சிவபெருமானைச் சிந்தித்து வந்தித்துக்கொண்டு மிருப்பேன், இது வே என் விரதத்தின் காரணம் என்றனள் அதற்கு நரேந்திரன் அடிமானே இவ்வுலகத்தினி லெத்தனையோ கற்புள்ள மாதர்களைக் கண்டேன். உன்னைப்போல அவர்கள் பதிவிரதைகளென்று சொ ல்ல என்னவெழவில்லை உன்னுடைய பதிவிரதா தர்மத்திற்கும் நீ கொண்ட இக்கொடிய விரதத்திற்கும் நான் என்னவென்று உன் னைப் புகழப்போகிறேன் எனக்கெந்த விபத்தும் உன் தந்தை யினல் நேரிடாதிருக்கும்படிச் சிவபெருமானைத் துதி செய்ய வெண்ணின உன்குண பரிபூரகத்திற்கு நானென்ன கைம்மாறு செய்யப்போகிறேன் இதுவும் யான் பூர்வத்திற்செய்த புண்ணிய வசமேயாகும் என்றுசொல்லி உளமகிழ்ந்திருக்கிற அரசனைநோக் கிச் சித்திராங்கி ஓகோமானே ! இவ்விரதம் முடிவாகிறபரியந்தம் தாங்களடிக்கடி இங்குவந்து என்னுடைய க்ஷேமத்தை விசாரணை செய்துக்கொண் டிருக்கும்படி தங்களை மெத்தவும் வினயமாக வேண்டிக் கொள்ளுகிறேன் என அதற் கவ்வரசன் அடிமானே, இப்போதுனக்குப் பணிரெண்டுபேர்கள் தோழிகள் பணிவிடை செய்யும்படிக்கி திட்டஞ் செய்திருக்கிறேன். அன்றியும் உன்னை அடிக்கடி யான்வந்து கண்டுபோகிறேனென, அதற்குச் சித்தி ராங்கி மகா சந்தோஷம் என்னையாளும் வேந்தே முற்றிலும் இதே யன்போடு யிருக்கும்படிக் கோருகினறேன் என்ற அம்மாதினிடம் நரேந்திரன் விடை பெற்றுக் கொண்டு தன்னரண்மனையைச் சேர்ந் தான். அனந்தரம் அந்தச்சித்திராங்கித் தன் பாங்கியை நோக்கி அடி ரத்தினமாலையே அந்தப் படுபாவிகளாகிய வேதியர்கள் என்ன மோசஞ் செய்தார்கள் பார்த்தையா சாரங்கதரன் படத் தைக்காட்டி எனக்கடங்சாக் காமமூட்டி மாலையிடும்படி வானைக் காட்டி அனேக நாள்களாய் குடிகொண்டிருந்த என்கவலையை யோடியபடியால்யான் மகிழ்ச்சியடைந்து ஏதோ மதி மயங்கி வாளு க்கு மாலைசூட்டி அந்தக் குடிகேடராகிய வேதியர்பின்னிங்குவந் தேனடி " கல்யாணஞ்செய்தும் சன்னியாசி - டன்பட்டும் பட்

டினி" என்பதுபோல யானிங்குவந்துசேர்ந்தும் என்மனைவியா கூலம் தீரவில்லையே, இதற்கு நானென்னசெய்வேனடி எனக்குற் றக்கவலை தீரும்படித் தக்க யோசனையொன்று சொல்லுவாயடி மானே என்று மனதுகலங்கி வாடி துக்கத்துடனிருந்தனள்.

இவ்வாறு கலங்கி முகமாறி துக்கப்படும் சித்திராங்கியை நோக்கி, தோழி சொல்லுகின்றாள். கேளும், என் குலதெய்வ மாகிய அம்மணி! தாங்கள் கல்வியிலும் குணத்திலும் கற்பினிலும் சிறந்தவர்களாக விருந்தும் தங்கள் மனதினில் கருதிய பணுளன் பிராப்தமாகாததால் விசனப்படலாமோ இவ்வுலையாளும் நரேந் திரன் தன் புதல்வனுகிய சாரங்கதானுக்கு மணஞ்செய்விக்க வெ ண்ணி வேதியரிடம் படத்தை யனுப்பியது உண்மையாகவே தோ ன்றுகின்றது அப்படத்தை யுமது தந்தை யுமதிட மனுப்பி யுமக் குக்காமவிகார மூண்டாகும்படி செய்வித்தது மன்றியும், உமது படத்தை அந்தவேதியர்களிடமே கொடுத்தனுப்பியபடியால் இந்த படத்தைக்கண்டு நரேந்திரன் கிஞ்சிற்றேனும் அறிவின்றி மதி கெட்டுத் தன் புதல்வனுக்கென்று பேசிய பெண் தனக்கு மரு மகளாமென்று கருதாமல் தருமத்திற்குவிரோதமாய் தானே உன்னை மணம்புரிய வேணுமென்று மனதிலெண்ணி தந்திர உபா யத்தினுலே வாளுக்கு மாலை சூட்டும்படி வேதியர்களை யனுப்பி உன் தந்தையின் மனதைக் கலைத்து அவராலந்த வாளுக்கு உன்னை மாலைசூட்ட செய்வித்த இவ்விராஜனையே நீ கூடி வாழ்வது மெத்த கலமென்று யோசிக்கிறேன் இதைவிட வேறு உபாயமொன்றும் எனக்குத் தோன்றவில்லை யெனக் கேட்டு அந்த சித்திராங்கிக்கடுச் சினங்கொண்டு அடிபாவி என்னசொன்னாய் இன்னொரு சமயத்தினி லிப்படிப்பட்ட மொழி பகருவாயாகில் அப்போதே உன்னுக்கை இரண்டு துண்ட மாகும்படி யறுத்தெரிவே னென்று திடமாக வுன் மனதினி லெண்ணக் கடவாய் முதல் ஒருவனைக் கருதி வாளுக்கு மாலைசூட்டிய யான் வேறொருவன் இத்திரனையிருக்கினுஞ் சந்திரனை யிருக்கினும் அவனுடன் சேரவும் அவனை மணம்புரியவுங்கனவிலு ஞ் கருதே னென்று எண்ணக்கடவாய் அப்படிக்கியான் வேறுபரு டனை விரும்புவதற்கு விபசாரியா ? கற்பைத் தவிர்ந்தவ ளன்றோ கணிகை மேலும் சிங்கமானது தனக்கு மெத்தப்பசி யுண்டாயிரு க்கினும் யானையின் மாமிசத்தைத் தேடிப் புசிக்குமே யன்றி நாயி யின் மாமிசத்தைப் புசிக்கமாட்டாது. அதுபோல எனக்கு மெத் தக் காமவிகார மூண்டாயிருக்கினும் அதை யடக்கி யான் கோரிய புருடனை அணைந்து சுகிப்பனே யல்லாமல் இந்தக் கொடிய பாவி யாகிய நரேந்திரனைக் கூடி வாழ்வேனென்று நீ கனவிலும் நினைக்க வேண்டாம் மேலும் என்மனதுக்கினிய நாயகனுகிய சாரங்கதரனை யடையவேண்டி உமாமகேசனைக்கோரி ஒருவேளை பாலையன்றி

வேறெதையும் புசிக்காமல் திடமாகவிரத மிருக்கின்றேன் இவ்விர
தத்திற்கு மெச்சி அந்த உமாமகேசன் அந்த சாரங்கதரனே எனக்கு
மணவாளனாகும்படிக்கிச் செய்யாவிடில் இவ்வுலகத்திலுள்ள சகல
பிராணிகளும் இறப்பவர்களே யன்றி மீழிகால மிருப்பவர்களி
ல்லை பிறந்த அன்றைக்கே இறந்துபோவு தொருநாள் அயன் எழு
தியிருக்கின்றான் ஆதலால் எத்தனைநா ளிப்பூமியிலிருக்கினும் ஒரு
நாளைக் கிறப்பதென்பது திண்ணமாக யிருப்பதால் யானிந்த வாளை
கட்டு என்னுயிரை யிவ்வாளுக் கிரையாகச் செய்வேன் இது சத்திய
மென்றுணர்வாய் ஆகினும் 'ஆய்ந்து ஒய்ந்து பாராதவா தான்
சாகக்கடவ' ரென்பது போல அவசரப்பட்டால் மிடிவந்து சேரும்
ஆதலால் இன்னுஞ் சிலநாள் சாந்தம் வகித்திருந்து பார்த்து என்
மனதின்படி சிவனருள் புரியாவிடில் மூன்கூறியதுபோல வாளை
கட்டு எனதாவியை மாய்த்துக் கொள்ளுகிறேனென்று மொழிந்த
சித்திராங்கியை நோக்கி அந்தத் தோழியானவள் சொல்லுகிறாள்.
ஒ! அம்மணி! நரேந்திர பூபாலா இங்குவந்து பேசிப்போயினதை
சாரங்கதர மகாராஜன் அறிந்தால் எப்படி யிங்கு வருவார்வருவது
அரிதேயாகும் ஒன்றைப்பிடி உறுதிப்பிடி நன்றைத் தருமென்று
முதியோர் வார்த்தைக் கிணங்கச் சிவபெருமான மீது பாரத்தைப்
போட்டு விரதத்தை யனுட்டித்துக்கொண் டிருப்பையேயாகில்
தெய்வச்செயலின்படியே நடக்கட்டுமென்று நவிலக்கேட்டு அந்த
சித்திராங்கியும் அந்தப்படியே விரதத்தை ஆரம்பித்து உடுத்திய
ஆடையின்றி வேறு ஆடையைத் தரியாமலும் வேறெந்த ஆகார
மும் புசியாமல் பாலையே உண்டு தலை கோதாமலும் தீர்த்தமாடா
மலும் கடுமையாக சன்னியாசி மாதைப்போல விரத மநுட்டித
துச் சிவனடிகளை யிடைவிடா தைல தாராவிச் சின்னமாகத துதி
செய்துக்கொண் டிருக்கையில இங்கே நரேந்திரனுடைய கொலு
கூடத்திற்குக் குடிகள் கூட்டமாகக் கூடிவந்து அரசனைப்பணிந்து
எங்களாண்டவரே நாங்களிட்ட மாஞ்சுளை யெல்லாம் வனமிருகங்
கள் வந்து நாளுவிதமாக மிதித்தும் தலைத்தும் மேய்ந்தும் நாச
ப்படுத்தி விட்டமையால் எங்கள்பாடு வீணாகியது அன்றியும் உமக்
குச் சேரவேண்டிய ஆறிலொரு கடமைக்கும் அதில் ஐவேசிலா
மற் செய்துவிட்ட படியால் நாங்களினி யெவ்வாறு பிழைக்கப்
போகிறோமென்றுக் கண்ணீர்விட்டுக் கதறினார்கள் அப்படிப் பத
றிக்கதரி விசனப்படுகிற குடிகளை யெல்லாம் அரசன் சமீபத்தினி
லழைத்து இதற்காக நீங்கள் விசனப்படவேண்டாம் உங்கள் ஜீவ
னத்திற்கு வேண்டியமட்டும் யான் தருகிறது மன்னியிலும் நாளை
யதினம் யானேவந்து வேட்டையாடி மிருகங்களை யெல்லாம் மடி
த்து மறுபடியு மொருகால் உங்கள் வயல்களைத் தலையெடுக்கப்
பாராதவண்ணம் விலங்கினங்களைப் போக்கி சவுக்கிய மூண்டாகும
படிக்கிச் செய்கிறேன் பயப்படாதீர்களென்று அவர்களைத்தேற்றி

விடைகொடுத்தனுப்பி அன்னூப்போக்கி மறுநாட்காலையி லெ
ழுந்து நித்திய கருமங்களை முடித்து உண்டு தாம்பூலம் தரித்து
சகலா லங்காரத்துடன் கொலுக்கூடத்திற்கு வந்து சிங்காதனத்
தின்மீது வீற்றிருந்து வணங்கிய மந்திரிகளை வாழ்த்தி அவரவர்கள்
ஆசனத்தின்மீது வீற்றிருக்கும்படி நியமித்து மந்திரிகளை நோக்கிச்
சொல்லத் தொடங்கினன்.

கேளுங்கள் மந்திரிகளே நேற்றியதினம் நமது சபையை நாடி
குடிகள் வந்து முறையிட்டதைக் கேட்டிருந்தீர்க ளல்லவா அவர்
கள் கஷ்டத்தைப் போக்கும்பொருட்டு யான் வேட்டையாடி மிரு
கங்களை மடித்து வருகின்றேன் அது பரியந்தம் நீங்களிந்த அரசு
ரிமையை யான் பாதுகாத்து வந்ததைப்போல வெகு ஜாக்கிரதை
யாக நடத்திக்கொண்டிருக்கக் கடவீரென்று கட்டளையிட்டுச் சிங்
காதனத்தை விட்டிறங்கி அந்தப்புரத்தை யடைந்து வேட்டைக்
குச் செல்லும் உபாவனைகளுடன் ஆயுதங்களையு மெடுத்துக்கொ
ண்டு தன் மனைவியாகிய ரத்தினாங்கியினிடஞ் சென்று தான் வேட்
டையாட செல்வதைப் புகன்று அம்மாதினிடம் விடைபெற்றுக்
கொண்டு வெளிப்பட்டு வேடர் வில்லியர்களுடன் ரதகஜ துரக பத
திகளாகும் நால்வகைச் சேனைகள் சூழ பேரி பூரி தாள மிருத
ங்க முதலாகிய பதினெட்டுவகை வாத்தியங்களும் முழங்கப் புறப்
பட்டுச் சித்திராங்கியின் அரண்மனை வாசலுக் கெதிரில் யாவரை
யும் நிருத்தி தானொருவனே தனித்துச்சென்று சித்திராங்கியின்
அந்தப்புறத்தை யடைந்து சித்திராங்கியை நோக்கி அடிமானே
யான் வேட்டையாடப் போகின்றேன் விடைதரவேண்டு மென்று
வேண்ட அதற்குச் சித்திராங்கி ஓ வேந்தே என்விரதமும் முடிவ
தற் கின்னும் பத்துநாளிருக்கின்றது இதற்குள்ளாகவே தாங்கள்
வேட்டையாடி வந்து என்பிதாவை சீக்கிரம் இங்கழைப்பீர்என்று
சொல்லக்கேட்டு நரேந்திரன் என்றுமிலாத சந்தோஷ மடைந்து
அந்தப்படியே யுன்பிதாவை அழைப்பிக்கிறேன் என்று சொல்லி
விடைபெற்றுக்கொண்டு வேட்டைக்குச்சென்றான்,

அரசன் சென்றதும் சித்திராங்கியை நோக்கிப் பாங்கி சொல்
லுகின்றாள், ஓ! என்னம்மணி யான் முன்னம் நரேந்திரனைக் கூடி
சுகித்திருக்கும்படிச் சொல்லியதற்கு மெத்தக் கோபங்கொண்டீரே
இப்போது விரத முடிவாகிறதென்றும் சீக்கிரம் வந்து தங்கள் தந்
தையை யழைப்பிக்கும்படியும் மெத்தப் பரிவுடன் நரேந்திரன்
வேட்டையாடி வரும்படியும் விடைதந்து அனுப்பியது நீதியோ
யென்றனள். அதற்கு சித்திராங்கி அடி பாங்கி யான் சொல்லியது
அரசனுக் கினிமையாக விருக்கினும் என் தந்தையை யழைப்பிக்
கும்படி பகர்ந்தது எதற்காகத் தெரியுமா? என்மனோபரிபாகத்

தைத் தெரிந்துகொள்ளாமலே வருந்துகின்றாய். இந்தப்பாவியை என் தந்தையைக்கொண்டு வதை செய்வதற்கென றெண்ணக்கட வாய் அன்றியும் இவனுட னித்தினாளும் பேசியது கபடமே யன்றி உண்மையல்ல வென அதற்கந்த பாங்கி ஆனால் சரிதான் இந்த மர்மத்தையானறியேன் உண்மையென்றே கருதியிருந்தேன் பிள்ளைக்கென்று மணஞ்செய்விக்கப் பேசிய பெண்ணைப் பெண் டாகக் கொள்வவெண்ணின இந்தப் படுமோசக்காரனைச் சித்திர வதை செய்தபோதிலும் பாப மணுகாதென்றனள் அதற்குச் சித் திராங்கி சற்றே பொருத்திரு நடக்கப்போகிற வேடிக்கைகளை யெல்லாம் நீ கண்குளிரக காணுவாயடி யென்றுசொல்லி மேல்நட க்கவேண்டியதற்காக வேண்டிய யோசனைகளைச் செய்துக்கொண் டிருந்தனள்.

ஒருநாள் சாரங்கதரன் தன் மந்திரியாகிய சுமந்திரகாரனை நோக்கி ஓ மதிமந்திரியே இன்றினம் சொக்கட்டா ஞடவேணு மென்ற இச்சையுண்டாயிருப்பதால் நாமிருவரும் யேதேனும்ஒன் றைப் பந்தயமாகவைத்து ஆடலாம் வருவாயென அதற்கு சுமந் திரகாரன் கேளும் என்னையாளும் வேந்தே! கொலைகள் களவு காமம் பொய்யென்னும் பஞ்சமா பாதகங்களில் ஒன்றுகிய பகடை யாடுவது கல்வியிதும் செல்வத்திலும் நற்குணங்களிலும் விற்பன்ன ரும் பிரபன்னருமாகிய மூதியோர்கள் இது தகாதகாரியமென்று ண்ணி நீக்கிவிட்டனர்கள் அன்றியும் ளன் உன் மூதாதையர்களா கிய பாண்டவர்கள் இன்னு மனேக அரசர்களும் பந்தயம் வைத் துச் சூதாடி சகல சம்பத்துக்களையுந் தோற்று அநேகவருடங்கள் காடேகதியாய் வசித்துச் சொல்ல முடியாத விடுக்கண்களை யடை ந்தனர்களென்று சொல்லக் கேட்டிருக்கின்றே ஞதலால் இக்காரி யம் நம்மைப்போன்றவர்கள் செய்யத் தகாதென மொழிந்த மந் திரியின் வசனங்களைக் கேட்டு சாரங்கதரன் ஓ மந்திரி! நீ கூறிய வசனம் சரியே ஆகிலும் பொழுதுபோக்குவதற்கு இனி யென்ன காரியஞ் செய்யலாம்? சரி, புறுக்களை விடுத்து அவை பறக்கும் வேடிக்கைகளைப் பார்த்துக் காலம் கழிப்போமென்றனன். அத ற்கு மந்திரி அப்படி செய்வதும் பந்தயமின்றி விடுவதே மேன்மை யாகுமென அதற்கு சாரங்கதரன் சம்மதித்து அருகிலிருக்கும் சே வகனை யழைத்து தான் அருமையாய் வளர்க்கும் இரண்டு புறுக் களையும் கொண்டுவரக்கடவாயென்று கட்டளையிட்டான் அந்தப் படியே சேவகனும் விரைந்தோடிச் சென்று கூண்டைத்திறந்து புறுக்களிரண்டையும் பிடித்துக்கொண்டு வருகிறபோது சனிபக வான் அங்கு வந்து இவ்வாறு யோசிக்கத் தொடங்கினன்.

இதுவேதமக்கு நல்லசமயம் இந்த சமயத்தில் சாரங்கதரன் விடும் புறுவைச் சித்திராங்கியின் வீட்டிலிறங்கும்படிச்செய்து இப்

புருவின் பொருட்டுச் சாரங்கதரனை சித்திராங்கியின் மனைவிக்கே கும்படிப் பிரமை யுண்டுபண்ணி இவன் அங்கேகின மாதத்திரத்தி லேயே சித்திராங்கியிலுல் வினைமூட்டிவைப்பதே சரியான நீதியே ன்றெண்ணி அங்கோரிடத்தினில பதுவிருந்து காலத்தை யெதிர் பார்த்துக்கொண் டிருந்தனன். அப்போது சேவகன் புருக்களிர ண்டையும் சாரங்கதரனிட மளிக்கச் சாரங்கதரனும் புருக்க ளிர ண்டையும் கைக்கொண்டு சீனிய மந்திரியினிட மளித்துத் தான் தாரா வெடையைப் பிடித்துக்கொண்டு ஓ மந்திரி நீயுன் சீனிய முன்னே விடுமென அதற்கு மந்திரி ஓ வேந்தே தாங்கள் முன்னம் விடுத்தாலன்றே பின்னே யான் விடுவேன் தங்களுக்கு முன்னம் யான் விடுவது நீதியோ ஆகையால் தங்கள் புருவை முன்னம் விடுத்தால் யான் பின்னே விடுகிறேனென்று மொழிந்தமந்திரியின் சொற்படி சாரங்கதரன் தன் கையிலிருக்கும் தாராவெடையை விடுத்தான் உடனே மந்திரியும் புருவை விடுத்தான் இவ்விரண்டு புருக்களும் ஆகாயமார்க்கமாகப் பறந்து சாரங்கதரன் விட்ட தாரா வெடையானது கண்ணுக்குத் தெரியாமல் மறைந்து விட் டது அத்தருணத்தினில் சனிபகவான் தன் மாய்கையினுல் அந்ததாரா வெடையானது சித்திராங்கியின் மாளிகையே தான் வசிக்கும் கூண்டிருப்பதாய்க் கருதி அங்குசென்று வட்டமிடுவதைக் கண்டு சாரங்கதரன் மந்திரியைநோக்கி ஓமந்திரி உன்சீனி வெடைமாத்தி ரம் இதோ பறந்துக்கொண் டிருக்கின்றது என் தாரா வெடை யைக் காணேமே இதற்கென்ன செய்கிறதென அதற்கு மந்திரி ஓ வேந்தே விரைவாகத் தாரா பெட்டையைப் பிடித்துவந்து விடு வீரேயானல் தாரா வெடை யெங்கிருந்தபோதிலும் பெட்டையைக் கண்டமாத்திரத்தில் இங்குவந்து சேருமென அந்தப்படியே சார ங்கதரன் தாராபெட்டையைப்பிடித்து கூண்டினமீது விடுத்தான் அதைக்கண்டும் தாரா வெடையானது சனிபகவான் மாய்கையி னுல் மனஞ் சஞ்சலப்பட்டு தாரா பெட்டையின்மீது சிறிதும் பிரி யமின்றிச் சித்திராங்கியின் மாளிகையினமீது இறங்கியது அதைப் பாங்கியானவள் கண்டு சித்திராங்கியினருகில்வந்து ஓ அம்மணி நமது மாளிகையின் மீது புருவொன்று வந்து இறங்கியிருக்கின்ற தெனக்கேட்டு அடி பாங்கி சீக்கிரஞ் சென்று அப்புருவைப் பிடித துக்கொண்டு வருவாயென அப்பாங்கியும் அப்படியே பிடித்து வருகிறேனென்று சொல்லி ஓடோடியுஞ் சென்றுத் தந்திரமாகப் புருவைப்பிடித்துக்கொண்டு வந்து சித்திராங்கியினிட மளிக்க அம் மங்கையும் புருவைக் கைக்கொண்டு அதின் சுந்திரத்தைக்கண்டு ஆஹா இதென்ன அன்னப்பறவையோ அல்லது சக்கரவாகமோ கண்டபேரண்டமோ பஞ்சவர்ணக்கிளியோ இதைஇன்னபறவை யென்று சொல்லத் தரமாகவில்லையே என்று ஆச்சரியப்பட்டுப் பாங்கியை நோக்கி அடி ரத்தினமாலே இதென்ன பறவை இதின்

பெயரை நன்றாய்த்தெரிந்துச் சொல்லக்கடவா யென்ன அதற்கந்
தப் பாங்கி ஓ! அம்மணி! இப்பறவை புறுவேயன்றி வேறென்று
மல்ல இது தங்கள் நாயகராகிய சாரங்கதர மகாராசன் வளர்க்கும்
புறுவாகும் இதோ பாரும் இப்புறுவின் காலில் அணிந்திருக்கும்
படியான சொர்ன்ன சலங்கையில் சாரங்கதர மகாராஜன் பெயரை
எழுதியிருக்கின்றது என அதற்கு சித்திராங்கி அப்படியா ஓ புறு
வே என்னருமை நாயகர் வரவைத் தெரிவிக்கும்படி மூன்னதாய்
உன்னை யனுப்பினரோ ஒரு வருடகாலமாய் வராதவர் இன்று என்
மாளிகைக்கு வருவரோ ஆனல் எனக்கொன்று தோன்றுகின்றது
அதென்னவெனில் அவருடைய தந்தையும் ஊரிலில்லை வேட்டை
யாடப் போயிருக்கின்றார் இந்த சமயத்தில் ஒருக்கால் வந்தாலும்
வருவார் என்று யோசிக்கிறேன் என்று தனக்குத்தானே எண்
ணிப் பாங்கியை நோக்கி அடிரத்தினமாய் இப்புறுவைக் கொண்டு
போய் கூண்டினில் விடித்து பத்திரப்படுத்துவாய் இதை என்பிராண
நாயகரான சாரங்கதர மகாராஜன் வந்தால் அவரைக்கூடிக் கலந்து
மகிழ்ந்து பின்பு கொடுப்பேன் அன்னியர்கள் யார்வந்து கேழ்க்கி
னும் கொடேன் என்று வைராக்கியஞ் செய்துக்கொண் டிருந்த
னள். அப்போது சாரங்கதரன் சேவகனை யழைத்து நீ சீக்கிரமாக
ஓடி என் சிறிய தாயார் மாளிகைக்குட் சென்று சிறியதாயாரைக்
கண்டு நான் அனேக வந்தனஞ் செய்வதாகச் சொல்லிப் புறுவைக்
கேட்டு வாங்கிக்கொண்டு வரக்கடவாயென்று கட்டளையிட்டான்
அதன்படி சேவகன் ஓட்டமாகஓடி சித்திராங்கியைக்கண்டு வணங்கி
னன். அவனை யம்மங்கை வாழ்த்தி நீயாரப்பாவென அதற்கு அவன்
அம்மா நான் சாரங்கதர மகாராஜாவின் ஊழியக்காரன் என்றன்.
ஆனல் நீ இங்கு வந்த காரணமென்ன வென சாரங்கதரமகாராசன்
தங்களுக்கு அனேகவந்தனஞ் செய்வதாகச் சொல்லி உம்மிட மிரு
க்கும் புறுவை வாங்கிக்கொண்டு வரும்படி எனக்குக்கட்டளையிட்ட
படியால் அக்காரணத்தைப்பற்றி யான் தங்களிடம் வந்து கண்
டேன் என அதற்குச் சித்திராங்கி கலகலவென்று சிறித்து ஓ
சேவகனே! உங்களரசனை யான் வெகுநாளாய்ப் பார்க்கவேணுமெ
ன்ற அவாகொண்டிருப்பதால் அந்த சாரங்கதர மகாராஜனையே
இங்கு நேரில்வந்து புறுவைப் பெற்றுக்கொண்டு போகும்படியான்
சொன்னதாய்ச் சொல்லுவாய் அந்த மகாராஜன் வராமல் உன்னி
டம் புறுவைக் கொடேன் என்றனள். அதுகேட்டந்த சேர்வைக்
காரன் அப்படியே சொல்லுகின்றேன் என்னம்மணி யென்றுமொ
ழிந்து விரைவா யோடிவந்து சாரங்கதர மகாராஜனைக்கண்டு பணி
ந்து ஓ சுவாமி தங்கள் சிறிய தாயார் உம்மைப் பார்க்கவேணுமெ
ன்று கவகு நாளாய் அபேக்ஷை கொண்டிருப்பதால் தாங்களே நே
ரில்வந்தால் தங்களைப்பார்த்து அபேக்ஷை தீர்ந்து உடனே புறு
வைத் தங்களிடம் அளிப்பதாய் வசனித்தார்கள். அன்றியும் உம்மை

யல்லாமல் வேறூர் வந்த போதிலும் புறுவைக் கொடுப்பதில்லையென்று கண்டிதமாய்ச் சொன்னார்களெனக் கேட்டு சாரங்கதரன்தன் மந்திரியாகிய சுமந்திராகாரனை நோக்கி ஒ மந்திரி யான் வருகிற பரியந்தம் நீ யிங்குதானே இருப்பாய் ஒரு கணப்பொழுதுக்குள்ளாக நானென் சிறியதாயார் மனைக்குச்சென்று அந்தம்மாளே வணங்கிப் புறுவைப் பெற்றுக்கொண்டு வருகின்றேன் என்ற அரசன் வசனங்களைக் கேட்டு அந்த சுமந்திராகாரன் சற்றுலோசித்து சொல்லத் தொடங்கினன்,

கேளும் எனையாண்டிரட்சிக்கும் வேந்தே இப்போது தேவரீர் உமது சிறிய தாயாரிடம்போய் வருகிறேனென்று சொல்லிய வசனங்களானது என்காதில் நாராசத்தைக் காய்ச்சிவிட்டதுபோலிருக்கின்றது எண்ணமோ மெத்த திகிலடைகிறது என்னமோ விபரீதம் நேரிடப்போகிறதென்று தேகம் நடுங்குகின்றது இந்தப்புறுப்போலே அளவற்றப் புறுக்களே சம்பாதித்துக்கொள்ளலாம் இது நிமித்தியமாய் நீங்கள் போகவேண்டாம் என்துரையே என்று பணிந்தான் அதற்கு சாரங்கதரன் மந்திரியை இருகரங்களாலும்எடுத்து நிறுத்தி ஒ மந்திரி என் சிறியதாயார் மாளிகைக்கு யான்போய் வருகிறேனென்றல் அங்குபோனல் ஏதோ விபரீதம் நடக்கும் நீர் போக வேண்டாமென்று என்னைத் தடுக்குறுய் விடாச்சலந் தொடுக்குறாய் வீண்கலகஞ்செய்து மூடிக்குறுய் என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளாமலே வாது கொறக்குறுய் உலகத்தினில் பத்துமாதஞ் சுமந்து பெற்றவர்கள் தாஞ அணைகள் மற்றவர்களெல்லாம் பரத்தையர்களா உனக்கிம்மதி போதித்தவர்களாடா துர்மதி தனக்கு மாலையிட்ட மங்கையொருவள் தவிர மற்றவர்கள் சிறுவர்களா யிருக்கில் தங்கைகளும் கொஞ்சம் வயதில் மூத்தவர்களாயி யிருந்தால் அவர்கள் தமக்கைகளும் அவர்களிலும் முதியோர்களா யிருக்கில் அன்னைகளென்றும் மனதில் பாவித்து நடக்கவேண்டு மென்றும் சாஸ்திரங்கள் முறையிடுகிற தன்னியிலும் பெரியோர்களும் போதித்திருக்கிற படியாலும் இக்தவரம்பு கடந்து நடப்பவன் மனிதனல்லவென்றும் இரண்டு பாதகளுடைய பசுவென்றும் அவன் ரௌரவாதி நரகங்களே யனுபவிப்பானென்றும் மறுபடியுமிந்த மானிடஜென்ம மெடுப்பது அறிதென்றும், தெரிந்திருக்கும் என்னையும் அப்படி கேவலமாக நினைத்துவிட்டாய் அப்படிக்கி எப்போதும் நீ என்னை நினைக்கவேண்டாம் இத்தனை வருடங்களாக எனனைவிட்டுப் பிரியாமல் எள்ளுக்குளெண்ணெயைப்போல் விருந்தும் என்னுடைய மனோபாவதைத இன்னதென் றறியாமலிருக்கின்றாய் இன்னொருக்கால் இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லி என்னைத் தடுக்காதே நான் என் சிறியதாயார் மாளிகைக்குச் சென்று புறுவைப் பெற்றுவருகிற பரி

பந்தம் நீயிங்குதானே யிருக்கக்கடவாயென்று கட்டளையிட்டுச் சாரங்கதரன் புறப்பட்டான் அதைக்கண்டு அந்த சுமந்திரன் மறு படியும் ஓடி என்னையாண்டி ரக்ஷிக்கும் வேந்தே யென்று பணிந்து உம்மை யொண்டியாக அம்மாதிருக்கும் மாளிகைக்கு அனுப்ப என் மனதென்னமோ எவ்வளவும் சம்மதிக்கவில்லை யான் சொன்னால் என்மீதுகோபிக்கிறீர் இப்படிகோபங்கொண்டுஎன்னை இரண்டாய்வெட்டி யெறிந்திடினும் யானும்மை மனமார அம்மங்கையின் மாளிகைக்குப் போகவிடேனென்றுசாரங்கதரனுடையகரங்களைக் கெட்டியாகப்பிடித்துக்கொள்ளக்கண்டு அடங்காச்சினங்கொண்டு அடாமதியில்லாதவனே உனக்கு ஞானத்தையோவிதங்களாகநீதி களையுஞ் சாஸ்திரங்களையும் எடுத்தோதியும் அதை கவனிக்காமல் உனக்குள்ள துர்க்குணங்களையேஎனக்கோதுகின்றாய் என்னுடன் கற்றுணர்ந்த நூல்களின் அளவாகிய நுண்ணறிவின் பயன் இவ்வளவுதானோ சிறியதாயார் வீட்டிற்குப் போகவேண்டாமென்று முன்னந்தடுத்தாய் இப்போ தும்போகாதே போகாதேயென்றுகைகளைப்பிடித்துக்கொண்டாய் இன்னொருவரா யிருக்கில் அவர்கள் நாக்கை யிரண்டுதுண்டாகும்படி வெட்டி எறிவேன் எனக்குமந்திரியாயிருப்பதால் மன்னித்தேன் உலகத்தில் 'அன்னையும்பிதாவும்முன்னறிதைய்வம்' என்ற முதியோர்வாக்கியத்திற் கிணங்கவும் 'தாய்சொற்றுரந்தால் வாசகமில்லை' என்பதைப்போலவும் ஒருவன் தன் தாய் தந்தையர்களை தெய்வமெனப் பணிந்தும் அவர்கள்சொற்படிநடப் பதே அவனுக்கு இகபரசாதனமென்றும் அவர்கள்சொல்லேவேத மந்திரமென்றும் அவர்களுக்குச்செய்யும் பணிவிடைகளே பவசாகரத்தைக் கடக்கச்செய்யும் ஓடமென்றும் நீதிசாஸ்திரங்கள் முறையிடுவதால் இதையுணர்ந்து யானும் என் சிறியதாயார் சொற்படி நடவாமலிருக்கலாமோ அப்படிக்கி யான் நடப்பது நீதியே தாய் தந்தையர் சொற்படி நடவாதபிள்ளையு மொருபிள்ளையோ அவன் கொடிய துஷ்டனுகும் ஆகையால் யானும் என்சிறியதாயார்சொற் படி அங்குசென்று பணிந்துபுருவை பெற்றுக்கொண்டுவருகிறேன் இனி என்னைத்தடுக்கவேண்டாம் என்று புகலக்கேட்டு அந்தச்சுமந்திரன்சாரங்கதரனைப்பணிந்து ஓ என்னுண்டவனே அந்தப்புருவைப்போல அனேகம் புருக்களைச் சம்பாதித்துக்கொள்ளலாம் அப்புருவை யொருபொருளாகவெண்ணி அதற்காகத் தாங்கள் போய் வருகிறேனென்றுசொல்லுகிறது எனக்கென்னமோ மனதில்கஷ்டமுண்டா யிருக்கின்ற தன்னியிலும், உலகத்தை யாளும் அரசனிடத்தி லிருக்கும் மந்திரி எப்படிப்பட்டவனாக விருக்கவேணுமென்றால் அரசனுக்கு நேரிடப்போகிற காரியா காரியங்களை யோசித்து அதற்குத் தக்க நீதிகளாலும் யுக்திகளாலும் அரசன்மனங்களிக்கப்போதித்து நீதிகுன்றாமலிருக்கும்படி அரசனைப்பாதுகாப்பவன் எவனோ அவனே மந்திரியாகும் ஆதலால் தங்களுக்குயான் மந்திரி

யாக விருந்தும் உமக்குமுன்பின்வருகிற காரியா காரியங்களை யெடுத்தோதி நீதிகுன்றுமலும் உலக வசைச்சொல்லில்லாமலும் தங்களைப் பாதுகாக்கவன்றேயானிருப்பதுஉங்களிஷ்டப்படிக்கியான் பிடிபட்டு ஆபத்துக்குள்ளாகச் செய்விப்பதால் எனக்கு மந்திரியென்ற பேர்தருமோ ஏதோ ஒரு கஷ்டம் தங்களுக்குநேரிடப்போகிறதென்று என்மனதிற்பட்டு உம்மைப்போகவேண்டாமென்று தடுக்கினறேன் அன்றியும் அந்தச் சித்திராங்கியம்மாளை நீ சிறியதாயாரென்று உண்மையிலே மனதினில் மதித்திருக்கின்றீர் உனக்கு அம்மாது சிறியதாயாரல்ல அதெப்படி யென்பீரேல் அந்தவிருத்தாந்தத்தை அதியோடந்தமாகச் சொல்லுகின்றேன் தாவுசெய்தபொருமையுடன் கேழ்க்கும்படி வேண்டுகிறேன் வேந்தே என்றுசொல்லத்தொடங்கினாள்.

கேளும் புத்தியிலும் விற்பத்தியிலுஞ் சத்தியிலுஞ் சிறந்த வேந்தே உனக்கு மணஞ்செய்விக்கவேண்டுமென்று உமது தந்தையெண்ணங்கொண்டு உம்மைப்போல ஓர் படமெழுதியப்படத்தைவேதியர்களிடங்கொடுத்தனுப்ப அவ்வேதியர்களும் படத்தை யெடுத்துச்சென்று பாண்டியநாட்டை யடைந்து அந்நகரத்தையாளும் சித்திராங்கத மகாராஜன் சபைக்குச் சென்று அவ்வரசனைக்கண்டு ஆகூறி படத்தைக் காட்டியதுமுதல் நடந்தசெய்திகள்யாவையும் ஆதியோடந்தமாகச் சொல்லக்கேட்டு சாரங்கதரன் ஓ! மந்திரி எப்போது வாளுக்கு மாலைசூட்டி என்தந்தையின் இஷடப்படிக்கி இந்நகரத்திற்கு வந்துசேர்ந்து என்னைப் பார்க்கவேணுமென்று அவாகொண்டு சேர்வைக்காரனிடஞ்சொல்லியனுப்பியபடியால்அப்போதே எனக்குசிறியதா யென்பதற்குச்சந்தேகமில்லை அவர்களையான் இணங்கி வணங்கி நடக்கவேண்டிய தருமமாதலால் அந்தச் சிறியதாயார் என்னைத் தன்னிடத்திற்கு வந்து முகத்தைக் காட்டிப்போகும்படி சொல்லி யனுப்பியும் யான் போகாமலிருப்பது நீதியோ அன்றியும் என்தந்தையின் சொற்படி தாதிகளால் போஷிக்கப்பட்டிருக்கும்படியான என்சிறியதாயார்என்மீது இச்சைகொள்வாரோ அவர்களுக்கு யான் பிள்ளையல்லவோ வயிற்றிற் பிறந்தால்தானு பிள்ளை சகல சாஸ்திரங்களிலும் வல்லவனுகிய நீ இந்த அற்பமொழிகளைக் கூறலாமோ மேலும் வீராதிவீரனுகியும் பாண்டிய நாட்டிற்கதிபதியாயும் சிவபக்தராகியும் சகலதருமங்களையும் அறிந்தவராகியும் இராகின்றசித்திராங்கத மகாராஜனுடையபுதல்வியாகியும்சகலகலை வல்லவராகியும்விளங்கும் அந்தச்சித்திராங்கியம்மாள் இப்படிப்பட்ட கேவலமான வெண்ணங்கொண்டு என்னை வரும்படியழைப்பரோ அப்படிக் கந்த யெண்ணங்கொண்டால் அவ்வம்மணியை கணிகைமாதர்களிலும் தாழ்ந்தவர்களென்று உலகத்தார் பழிக்க மாட்டார்களோ? அப்படிநீ சொல்லியவண்ணம் ஒருக்காலும் அச்

தம்மணி என்னை வரவழைக்கமாட்டார் இதுகளையெல்லாம் நீ நன்
றுயோசிக்காமல் அவசரப்பட்டு சொல்லிவிட்டாய் இதுவிஷயத்தில்
யான் சினங்கொள்ளாமல் உன்னை மன்னித்துவிட்டேன் இனியா
னும் என்னைத் தடைபடுத்தாமல் போய் வரும்படியாகச் சந்தோ
ஷத்துடன் விடைகொடுப்பாய், மந்திரி! என்ற சாரங்கதரனுடைய
மொழிகளைக்கேட்டு சுமந்திராகாரன், பதிலொன்றுங் கூறுவதற்கு
சம்மதியில்லாமல் சாரங்கதரனை நோக்கி, எனையாண்டி ரக்ஷிக்கும்
அரசே! தங்களுக்கு யான் எத்தனையாகச் சொன்னபோதிலும் நீ
ரேதமாக வெண்ணுகிறீர், உம்மைக் கெடுத்துவிட்டு யான் வாழ்ந்
தால் உலகத்தோர் என்னைப்பழிக்கமாட்டார்களா சகல நீதிகளும்
தெரிந்தவனுக யிருந்தும் தன்னரசனுக்குத் தக்கபடி புத்திகளைச்
சொல்லித் தடுக்காமல் போய்விட்டானே என்று வசைகூறுவ தன்
னியிலும் ஏதோ தங்களுக்கு ஆபத்து நேரிடப்போகிறதென்று என்
புத்திக்குத் தோன்றியபடியால் தங்களைச் சிறியதாயார் மனைக்குப்
போகவேண்டாமென்று தடுத்தேன் அப்படிக்கு நேரிடாத பக்ஷத்
தில் யான் தங்களைத்தடுக்கவேண்டிய அவசியமே இல்லை தாங்களும்
யான் சொல்லியதை யோசிக்காமல் ஒரேபிடிவாதமாய்ப்போய்வரு
கிறேனென்று பிரியங்கொண்டிருப்பதால் இனி தங்களை யான்
போகவேண்டாமென்று தடுப்பதற்கு ஞாயமில்லை பின்னிட்டுத்தெ
ரியும் இதின்சுகம் ஆகையால் தாங்கள் சென்று சிறிய தாயாரைக்
கண்டு பேசி விரைவினில் வந்துவிடுவீர் மெத்தநேரம் பேசிக்கொ
ண்டிருக்க வேண்டாம் என்று பணிந்தான். இப்படிச்சொல்லி தன்
னைப்பணித்த சுமந்திராகாரனை வாழ்த்தி அந்தச் சாரங்கதரன்மெத்
தமகிழ்வுடன் சிறியதாயார் மனையை நோக்கிநடந்தான். பிறகு
சுமந்திராகாரன் இதுவென்ன ஆச்சரியம்? எப்போதும் சாரங்கதர
மகாராஜன் என் சொல்லைமீறி நடந்ததில்லை இன்று நடந்ததற்குக்
காரணம் அந்த சூரிய சுதனான சனிபகவானுடைய செய்கையென்
றே எண்ணுகின்றேன் என்று தனக்குத்தானே சிந்தித்துக்கொண்
டிருந்தான இப்படியிருக்கையில சாரங்கதரன் சிறிய தாயார் மாளி
கைக்கருகினில் வருவதை அங்கிருந்த தாதியானவள் கண்டு திடீரெ
டென்றோடி சித்திராங்கியைப்பணிந்து, ஓ அம்மணி! நமது ஆசார
வாசலுக்குள் சாரங்கதரமகாராஜன் வருகிறானெனக்கேட்டு, சித்தி
ராங்கி தேவபோகத்தையடைந்தவளைப்போல மகிழ்வடைந்து அடி
பாங்கி இன்றல்லவோ என்திரேகம் புனிதமாயிற்று யான இத்தின
நாளும் சிவபெருமானைக்கோரி இயற்றிய நோன்பின்பலன்கரதலா
கமலம்போல கிடைத்தது இனிவெனக்கு பாதொருதீசனமுமில்லை
இன்றோடாழித்தது என் தொல்லை பென்றுசொல்லி எல்லையில்
லாத ஆனந்தமடைந்து அடிபாங்கி என் கண்ணைருக குதவுமபடி
யான கலவைச்சாந்தைக் கூட்டியைப்பதுடன் ஆபாசம் தீருவதற்
குத் தக்க கனிவர்க்கங்களுடன்பலகாரவகைகளுடன் சிங்காரதயா

செய்துவைக்கக் கடவாயென்று கட்டளையிட்டு, விரைவாகச்சென்று ஸ்நானஞ்செய்து ஆடையாபரணங்களணைத்தையுந் திருத்திவாசனை திரவியங்களியலந்தி மலர்களைக்சூடிவெகு ஆடம்பரத்துடன் வந்து படுக்கை வீட்டை ஜோடிக்கும்படி தாதிகளுக்கு நேமித்து சாரங்கதரனை வரைந்திருக்கும் படத்தை தருவித்து அருகினில் வைத்துக்கொண்டு சாரங்கதரன் வரவை யெதிர்பார்த்துக் கொண்டிருந்தனள்.

இவ்வண்ணம் சகல அலங்காரத்துடன் சித்திராங்கி இருக்கிறபோது சாரங்கதரன் வெகுசீக்கிரமாக நடந்து மாளிகைக்குள்புகுந்துசிறியதாயாராகிய சித்திராங்கியைக்கண்டு பணிந்து ஒஅம்மணி அடியேனைவரவழைத்த காரணம்யாதோ அதை தெரியப்படுத்தித் தங்களிடமிருக்கும் புருவைக் கிருபைசெய் தளிக்க வேணுமென்ற சாரங்கதரனைநோக்கி சித்திராங்கிசொல்லுகின்றாள் ஆ! ஹா! இதென்ன ஆச்சரியம் மனிஷிக்கு மணாளன்பணிவது இந்த லோகத்துக்கடுக்குமா பிராணநாயகராகிய தங்களை அடியாள் பணியவேண்டிய மூறமையிருக்க, அதை தவிர்த்துத் தாங்கள் அடியாளைப்பணிவது நீதியோ இதுயென் தலைவிதியோ யான் முன்னஞ் செய்த சதியோ இத்தனை நாளாய் நான் தங்களைப்போதுவருவீரோவென்று சிவபெருமானைக்கோரி தவமங்கையைப்போல வேடம்பூண்டுபக்திசெய்துக் கொண்டிருந்தது இதற்குத்தானே, ஆதியில்தங்கள் திருவடியைத்துதித்துப் பூமிதேவி) ஆகாயவாணியை சாக்ஷிவைத்துவாளுக்கு மாலைசூட்டியிருக்க அதைத் தெரிந்துக்கொள்ளாமலும் என் வாய்மொழியையறியாமலும் இப்படிப்பட்ட காரியஞ்செய்யத்தகுமோ ஆகிலும்தெரியாமற் செய்தகாரியத்திற்கு தோஷமில்லை அந்த தோஷநிவர்த்திக்காக இதோயான் அனந்தகோடிவந்தனம்புரிகின்றேன் என்சாமி உள்ளே வாரும் வந்து என்னுலைத்தீரும் மன்மதன்விடும்மலர்க்கணைகளால் எந்திநேகம் நொந்துநைந்துப்போயினதைப் பாரும் பார்த்து அன்னேப்தீர என்னைக் கட்டியணைத்து சேரும்என்றுபற்பலவாறு தன்னைவலுவிற்கூடும்படி முறையிட்டுக் கதருஞ் சித்திராங்கியை நோக்கிச் சாரங்கதரன் சொல்லுகின்றாள் ஒஅம்மணி தாங்கள் பெற்றபிள்ளையை இப்படிக்கித்தகாதகாரியஞ் செய்யும்படி உள்ளே அழைப்பது நீதியோ அன்றியும் இவ்வுலகத்தினில் விவாகஞ்செய்வதென்ற லென்னப்பல அரசர்களையும்பந்துமித்திர்களையும் வரவழைத்துச் சபைபோர்பாவருங்காணப்பெண் புருடனுக்கு மாலையிடுவது வழக்கமாகியிருக்க அவர்களிலொருவரையும் அழைப்பிக்காமல் வாளுக்குமாலைசூட்டினது எங்கும்பார்த்ததுமில்லை எவர்களாலுங் கேட்டதுமில்லை இந்தப்படி மாலைசூட்டுவதற்கு சகலசாஸ்திர சம்பன்னரும் சிவபக்தருமான நின் தந்தை எப்படிசம்மதித்தார் அவர்சம்மதித்தபோதிலும் தாங்களெந்தஞா

யத்தைக்கொண்டுசெம்மதித்துவாளுக்கு மாலைசூட்டினீர்இதுவன்றி யும் என்தந்தையின்சொற்படி இந்த மாளிகையிலிருக்கலாமோதே ராய் அரண்மனைக்கு என் தாயிடம் வந்து நடந்த விருத்தாந்தத் தைச் சொல்லாமலிருந்த படியினாலே எக்தைக்கிணங்கிய உன்னை யான்சிறியதாயென்றே மதித்துவணங்கவேண்டியவனுகியிருக்கின் றேன்இதுவுமன்றி என்னையழைப்பித்துஎன்னழகைக்கண்டுமோக ங்கொண்டு காமக்குறிகளைக்காட்டிக் கூடும்படி வற்புருத்துவதுநீதி யோ பெற்றபிள்ளையினிடம் இப்படிப்பட்டவார்த்தைகளைச்சொல் லத்தகுமோ யாதும் உமதிஷ்டப்படிக்கு உள்ளேவந்து கலவிசெய் வது நீதியல்லவே, அதனால் அதருமம்மேலிட்டு; தருமங்குரைந்து காலுக்குகால் தேய்ந்துபோகுமல்லவா இதுகளையெல்லாம் இராஜ குமாரத்தியாகியஉமக்கு நான்விரித்துச்சொல்லவேண்டுமோஎன்று நயமாகவசனித்து அம்மாளிகையைவிட்டு தப்பித்துக்கொண்டுவெ ளிப்பட்டுப்போகவேணுமென்றுகருதி சமயம் பார்த்துக்கொண்டி ருக்கும் சாரங்கதரனுடைய சூனங் குறிகளையுணர்ந்து அந்தசித்தி ராங்கிசாரங்கதரனுக்கு முன்னம்போய் நின்றுக்கொண்டுஎன்பிரா ணநாயகரேஉமதுமூதாதையாகிய தருமகந்தனர் காலத்திலிருந்து முறையே அந்தவாளாயுதமான துபரிட்சித்துமகாராஜனிடமிருந்து ஜனமேஜெயனுக்கு கொடுத்தார்; அந்தஜனமேஜெய மகாராஜன் உமதுதந்தையாகிய நரேந்திரனுக்குக் கொடுத்தார் அந்தநரேந்திர னும் இளவரசாகிய தங்களுக்கு அந்தவாளைக் கொடுத்ததாகஉமது படத்தை யெடுத்து வந்த குடிகேடராகிய பிராமணர்கள் சொல்லி நம்பி வாளுக்கு மாலைசூட்டினேன் இம்மாளிகைக்குவந்தவுடனேஉ மதுதந்தைவந்துஎன்னைக்கண்டு மருவும்படிவேண்டிகொண்டவிஷ யத்தி லெண்மனதுக்குத் தோன்றுதெல்லாம்தோன்றி நாம்மோசம் போயினேமே மகனைக் காட்டித்தந்தை மருகியிடத்தில் மருவவெ ண்ணங்கொள்ளுவது வஞ்சகமல்லவோ இதற்கென்னசெய்கிறதெ ன்றுயோசித்து உமதுதந்தையைநோக்கி யான்சொல்லியதென்ன வென்றால், ஓபெரியவேர்தே! எனக்குஒருவருடம்வரைக்கும்விர தமொன்றிருக்கின்றது அந்தவிரதமுடிந்தவுடன் உமதிஷ்டப்படிக்கு இணங்குவேனெனறேர்போக்குக்காட்டியனுப்பினேன் அப்படிக்கு யான் அனுப்பியதற்குக் காரணமென்னவென்றால் உமக்கு மாலை சூட்டி நாயகனாக மனதில் மதித்துயிருக்கிற நாம் கணிகைமாதைப் போலவேறுபுருஷனை அடைவது கற்புடைய மாதர்களுக்கு இழி வாகுமென்றுகருதி உமது திருவடிகளைத் தொழுது உம்மையெப்ப டியாகிலும் அழைப்பித்து உம்முடன் சேரவேணுமென்றுசிவபெரு மானைநோக்கிஒருவருடகாலமாய்விரதம்புரிந்துக்கொண்டிருந்தேன் இன்று அச்சிவபெருமானுடைய கிருபையினால் என்னிடம்இம்மன க்கு வந்த உம்மைபினிவிடுவேனேஎப்படியாகிலும்தந்திரஞ்செய்து ஓடிப்போகலாமென்றெண்ணி சமயம்பார்த்துக் கொண்டிருக்கும்உ

மதுகபடத்தை யான் முன்னமே தெரிந்துக்கொண்டல்லவோ மார்க்கத்தில் உமக்கு முன்னுதாய்வந்து நின்றுக்கொண்டிருக்கின்றேன் என்னை வஞ்சித்து யெண்மனதைச் சந்தோஷிக்கச் செயயாமல்போவீரேயாகில் உமக்குப் பெண்பாவம் பெண்தோஷம்வந்து சம்பவிக்கும்மேலும் தங்கள தந்தைக்கி யானிணங்கினவளா யிருந்தால்அப்போதே அவரைக் கூடிக்கலந்து வெகுசம்பிரமமாகயிருப்பேன் அப்படிக்கிருக்க எனக்கு சம்மதியில்லாமையாலன்றே உம்முடையவராவுக்கெதிர்பார்த்துக்கொண்டிருந்தேன்சமயம் நேரிட்டபடியால்உமது புறுவைப் பிடித்துப் பத்திரஞ் செய்துவைத்து உம்மை வரவழைத்தேன் அன்றியும் தங்கள்மீது பிரியமில்லாவிடில்இத்தனைகாரியங்களைச் செய்வேனே என் மனதுக்கினிய கண்ணாளரே இனியாகிலும்உமக்கு நேர்ந்த சந்தேகங்களை யெல்லாம் விடுத்து அடியாளைக் கூடிகலவிசெய்து இன்பரசம் தந்துகளிக்கும்படிச் செய்புமென்று சித்திராங்கியின் வசனங்களைக் கேட்டு சாரங்கதரன் சொல்லுகின்றன்.

கேளும் என தன்னைக்குத் தங்கையாகிவந்த சிற்றன்னையேஇப்படிப்பட்ட வார்த்தைகளை இனியென்னிடஞ் சொல்லுவது தகாது மெத்த நேரமாயிற்று மந்திரி சுமந்திராகாரன் இன்னும்அரன்வராதகாரண மென்னமோவென்றுசிந்தித்துகொண்டிருப்பான்ஆகையால் தயவுசெய்து தங்களிடமிருக்கும் புறுவைக் கொடுத்து ஆசி கூறியனுப்புமென்று வேண்டிக்கொண்டான இப்படிவேண்டிக்கொள்ளும் சாரங்கதரனை நோக்கிச் சித்திராங்கி சொல்லுகின்றன் என் ஞசைக் கண்ணாளரே என்னுடைய புறுவைக் தாங்கள்தந்தால்உம்மூடைய புறுவை யான் தருகிறே னென்றனள் அதற்குச் சாரங்கதரனஎன்னம்மணி தங்களுடைய புறு என்னிடமில்லையேஎன்னுடைய புறுவே தங்களிட மிருக்கிறது தயவுசெய்யது கொடுமென்றன் அதற்கு சித்திராங்கி என பிராணநாயகரே அடியாளுடைய புறுதங்களிடமில்லையா இருக்கிறது இத்தனைவீட்டிற்குள வந்தால்புறுவைக்காட்டுகின்றேன் யென அதற்குச் சாரங்கதரன் இதென்னவிந்தை உமது புறுயெண்ணிடமிருக்கிறதென்று வீண்வழக்குத் தொடர ஆரம்பித்தாப்போலிருக்கின்றன அதற்கு சித்திராங்கி சாமபேத தானதண்டமெனுஞ் சதுர்விதஉபாயங்களில் மூன்றுபாயங்களைச்சொல்லியும் இவ்வரசன் நமதிஷ்டப்படிக்கி இணங்குவதாய் தோன்றவில்லைநான்காவதாகிய தண்டத்தையெடுத்து உபயோகிக்காமல்இவர் நமது மனதைப் பூர்த்திசெய்விக்க மாட்டாரெனக் கருதி ஒளன்னுயிருக் குயிராகிய வேந்தேஇனி யென்மனது களிக்கக் கூடிகலவிசெய்யாவிடில் அரசனைக்கொண்டு உன்னை தண்டிக்கும்படி செய்விப்பேன் இதுஉண்மையென்று எண்ணி எண்ணிஷ்டப்படிக்கித்அரை வீட்டிற்குள்ளே வாரும் என்று சொல்ல, அதற்கு சாரங்கதரன் ஓ!

அம்மணி ஏதோ ஒருவகையானபொய்வார்த்தைப்புகன்று என்தக்
தையின் மனதைக்கரைத்து அவருக்கு என்மீதுகோபமூண்டாகும்
படிச்செய்து தண்டனை விதித்தபோதிலும் என்சிரசைக்கொய்த
போதிலும் யான்இக்காரியத்திற் கிணங்குவேனென்று யோசிக்கவே
ண்டாம் இவ்வுலத்தினில் ஜென்மமெடுத்தபோதே மரணமிருக்கின்
றது சிலவருடங் கடந்து மரணமடைவதைப் பார்க்கிலும் உடனே
மரணமடைந்தால் எனக்கு மெத்தசந்தோஷம் இதற்காகயான்கிஞ்
சித்தும் பயப்படுவதில்லை உபதிஷ்டப்படிக்கிஎன்மீதுகோள்புகன்று
என் தந்தையைக்கொண்டு எனக்கு சிக்ஷாவிதித்தால் கலமே உமக்
கும்எனக்கும்பொதுவாகஉமாமகேசனிருக்கின்றான் உம்மால்யான்
கருமம் அடையவேண்டிய விதி யிருந்தால் அனுபவித்தேதீரவேண்
டும்தேவர் மூவர்மற்றியாவரையும் விணைவிட்டதல்லஉன்னுலும்என்
னுலும் எந்த காரியமும் நடக்கமாட்டாது அவனன்றியோரணுவும்
அசையமாட்டா தென்பதுபோல சிவன் செயலின்படி நடக்கட்டு
மென்று சொல்லி சித்திராங்கி பிடித்துக்கொண்டிருக்கும் இடுப்பி
லுள்ள கச்சையை வாளினுலறுத்துக்கையை விடுவித்துக்கொண்டு
ஓட்டமாக ஓடிசுமந்திராகாரனருகில்வந்து சேர்ந்து ஒ மதியிற்றெ
ளிந்த மந்திரியே சிறியதாயார்மனைக்குஏகவேண்டாமென்றும்நடக்
கும்படியானவிபரங்களையும்நீவ்வாறுமொழிந்தையோ அவ்வாறே
அணுவளவும் தப்பாமல் அந்தப் பாவியான என்சிறியதாயார் என்
னைப் பிடித்துக்கொண்டுபோகவிடாமல் தன்னைக்கூடிக் கலவிசெய்யு
ம்படி நிற்பந்தஞ்செய்தனள் அதற்கு யான் எள்ளளவேனும் மதி
மோசம்போகாமல் தப்பித்துக்கொண்டோடிவந்தேன். என்று
நடந்தசெய்திகளையெல்லாம் ஒன்றொளியாமற் சொல்லக் கேட்டு,
அம்மந்திரியும் அக்கொடியபாவி அரசன் வந்தவுடன் எந்தகாரண
த்தைச்சொல்லி உமதுபேரில் கோபமூண்டாகும்படிக்குச் செய்து
என்னதண்டனை யடையும்படி செய்விப்பாளோயென்று மதிகலங்
கித் தன்புத்திக்கி யாதொன்றுந் தோன்றுமல் விசனப்பட்டுக்கொ
ண்டிருந்தான் அங்கே சித்திராங்கி தன் கரத்தைவிடுவிக்கும்பொரு
ட்டு சாரங்கதரன் வாளினுல் கச்சையை யறுத்துவிட்டு ஓடிப்போ
யினதைக்கண்டு அடங்காக்கோபங்கொண்டு தன் பாங்கியையழை
த்து அடிரத்தினமாலை நான் எண்ணுத எண்ணமெல்லாங் கொண்
டிருந்தேன். அந்தயெண்ணத்தை யெல்லாம் பாழாக்கி என்னை யங்
கேளிக்காமலும் என்சொல்லைத்தட்டி எனக்கு ஆயாசமூண்டாகும்
படிச்செய்து ஓடிப்போயின அந்த சாரங்கதரனைக் கொலைசெய்யும்
படியான காரணங்களை நரேந்திரனுக்கோதி அரசனைக்கொண்டுசா
ரங்கதரனைக்கொன்று யானும்திருவாளைநட்டு என்னுயிரையும்மாய்
த்துக்கொள்ளுகிறேன் இதற்கு நீ எனக்கோருபகாரஞ் செய்யவே
ண்டும் அதென்னவெனில், சாரங்கதரன் நமது மனைவிக்குவலியவ
ந்துதன்னைப்புணரும்படி யழைத்து என்னைப்பலவித நிர்ப்பந்தங்க

ள்செய்ததாக நீசாக்ஷிசொல்லவேண்டும் இதற்கு நீயுடன்படுவாயா கில் சாரங்கதரன் மாண்டானென்று திடமாக யெனக்கு நம்பிக்கை யுண்டாகும் ஆகையால், உன் கருத்தென்ன வெளியிடுவாயெனக் கேட்டு அந்த ரத்தினமாலையென்னும் பாங்கி சித்திராங்கியை நோ க்கிச் சொல்லத்தொடங்கினாள்.

கேளும், என்னம்மணி? உள்ளங்கையில் உப்பில்லாக்கீரையை இட்டவர்களே உயிருள்ளமட்டும்மரக்கலாகாதென்றதருமவாக்கின் படி அடியாளே சிறுவயதிலிருந்து இதுபரியந்தம் உணவாதி ஆடை யாபரங்களால் ஆதரித்துப்பாதுகாத்துவந்தத் தங்களுக்கொருகஷ் டம் வந்தால் அதற்குத்தக்கபடி நடக்காமல் உம்மூடைய சொல்லை த்தட்டி நடப்பனேயாகில் யானிந்த அரிதாகிய நரஜென்ம மெடுத் தும் ஞானமில்லாத இரண்டுகால்பசுவுக்கு நிகரானவளன்றே அன் றியும், உம்மூடைய உப்புருணத்தைப்புசித்து உமக்கிரண்டகஞ்செ ய்தவளாகிறேனல்லவா அப்படிக்கி என்மனமார உமக்கு வஞ்சகம் நினைக்கமாட்டேன் நீரேப்படிசொல்லுகிறீரோ அப்படிக்கேநரேந் திரனிடஞ் சாக்ஷிசொல்ல சித்தமாயிருக்கின்றேன் இதுசத்தியமெ ன்று நம்பக்கடவீரெனக்கேட்டு சித்திராங்கி சொல்லுகின்றாள் அடி பாங்கி நீ உத்தமியென்றுநம்பியல்லவோ உன்னிடமிந்தரகசியத்தை மொழியலாயினேன் அரசனுல்நேமிக்கப்பட்ட பாங்கிகள் பனிரெ ண்டுபேர்களிருக்கின்றார்களன்றே அவர்களிட மிந்த ரகசியத்தை யேன் சொல்லவில்லை என்மனதுக்கிசைந்தவள் நீயிருக்க அவர்களி டஞ்சொல்ல என்மனமானது சம்மதிக்கவில்லையாதலால், உன்னுட ன்சொல்லுகின்றேன் கவனமாகக்கேளும் சாரங்கதரன் இங்குவந் ததன்னைக்கூடும்படி என்னைபலாத்காரஞ்செய்துக் கைவளைகளை உடைத்துத்திரேகமெங்கும் உடைந்த வளைகளாற்கீறிகாயப்படுத்திய போதுயான்கூக்குரலிட்டதாயும் அக்கூக்குரலோசையைக்கேட்டு நீ ஓடிவந்ததாயும் உன்னைக்கண்டமாத்திரத்தில் சாரங்கதரன் ஓடிப் போயினதாயும், நரேந்திரன் முன்னம் நீ சொல்லவேண்டும் என்ற னள். அதற்காக பாங்கி, ஓ அம்மணி! அந்தப்படியே நரேந்திரன் இங்கு வந்தவுடனே சொல்லுவதுமன்னியிலும், விசாரணைகாலத்தி லும் தவருதலின்றிச் சொல்லுகின்றேன் இதற்காக நீர்சிறிதேனுஞ் சந்தேகிக்கவேண்டாமெனக்கேட்டு அந்தசித்திராங்கி உடனே தன் கைவளைகளை உடைத்துக்கொண்டு உடைந்த வளைகளால் தன்திரே கமெங்குங் கீறிக்கொள்ள, அதினால் உதிரம் பெருகியோடச்செய்து க்கொண்டு பூமியில்விழுந்து புரண்டு அழுதுபுலம்பிக்கொண் டிருக் கையில் வேட்டைக்குச்சென்ற நரேந்திரன் விலங்கினங்களை யெல் லாங்கொன்று குடிகளை ஆதரித்துவரவாதிகளுக்கு வேண்டியவை களை யளித்து மனமகிழச்செய்து தன்சேனைகளுடன் புறப்பட்டுநக ரத்தை யடைந்து சித்திராங்கியின்மாளிகையருகில்வந்துசேனைகளு

க்கு விடைதந்து மாளிகைக்குட் புகுந்து சென்று அங்கு தலைவிரி கோலமாய் திரேகமெங்கும் காயம்பட்டு உதிரம் பெருகப் பூமியில் விழுந்து புரண்டு அழுதுக்கொண்டிருக்குஞ்சித்திராங்கியைக்கண்டு அடிமானே! இதென்ன விபரீதம் இப்படிக்கி புன்னே செய்வித்தவர் கள் யாவர் அந்தோசொர்ன்ன மயமாகியதேகத்தில் உதிரம்பெருக பூமியில் புழுதியடைய விழுந்துகிடப்பதற்குக்காரணம்யாது, அதை சீக்கிரஞ்சொல்லுமென்று கடுஞ்சினங்கொண்டு வினவிய நரேந்திர னோக்கிச் சித்திராங்கி சொல்லுகின்றனள். கேளும், அரசே அடி யாளுக்கிந்த கஷ்டம் நேர்ந்ததற்குக் காரணம் உமது புதல்வனாகிய சாரங்கதரனே இப்படிக்கவன் செய்விப்பதற்கு என்ன முகாந்திர மென்பீரா தாங்கள் வேட்டைக்குச்சென்ற செய்தியை சாரங்கதர னறிந்து இதுவே நல்ல சமயமெனக்கருதி, தனித்து அவன் என் மாளிகைக்குள் வந்தான் அப்படி வந்தவனுடைய கெட்ட யெண் ணத்தை யறியாமல் நான் கபடமின்றி அப்பா என்னருமை கண் மணியேவாடா வென்றுப் பரிவுடனழைத்து அவனை என்வயிற்றிற் பிறந்த பிள்ளைவென்றேபாவித்து சூக்ஷமங்களாவிசாரித்துக் களிவர் க்கங்களுடன் பலகாரங்களை தருவித்துப்புசிக்கும்படி உபசரித்தே ன் அதுகளையெள்ளளவும் புசிக்காமல் என்கோரிக்கையை நிறைவே ற்றுவையேயாகில் பின்பு இவைகளைப்புசிப்பேனென்று கூறினான். அதற்குயான் அடாமகனே உன் கோரிக்கையென்ன அதைத்தெரி யபடுத்தமப்பாவென்றேன். உடனே அவன் என் கரங்களைப்பற் றிழுத்துவந்து இவ்வரைவீட்டிற் சேர்த்துக் காமவிகார மேற்கொ ண்டு தன்னைக்கூடிக் கலவிசெய்ய வரும்படி யென்னை நிர்ப்பந்தஞ் செய்தபடியால் அவனுக்குயான் அனேக நீதிகளையெடுத்தோதியும் அவன்காதிற் கொள்ளாமல் சிறிய தாயாரென்று மனதிலெண்ணு மலும் எண்களவனைகளை யெல்லாம் உடைத்து உடைந்தவனைகளால் என் திரேகமெங்கும் உதிரம்பெருகும்படி யடிவுண்டாக்கி என்னை கீழேதள்ளின மாத்திரத்தில் ஓகோ மோசம்வந்து நேருமென்று யான் கூக்குரலிட்டேன் அவ்வோசையைக் கேட்டு ரத்தினமாலை ஓடிவந்தாள் அவளைக் கண்டமாத்திரத்தில் சாரங்கதரன் என்னைவி ட்டு ஓடிப்போயினன். இது நடந்த உண்மை மேலும் உமக்குத்தா ன் யான் மனவியாகவேண்டுமோ இப்படிப்பட்ட அனியாயம் எந் தராஜாங்கத்திலேனும் நடக்குமா ஒருவரையெல்லாம் நோவதிற்பய னில்லை, இதுவென் விதிவசமாகுமென்று வெறுத்துப்பேசும் சித்தி ராங்கியின மொழிகளைக்கேட்டு அந்த நரேந்திரன் செவிகளில் நா ராசங்காய்ச்சி விட்டதுபோல கடுஞ்சினங்கொண்டு அடி மானே உ ன்னையிப்படி யலங்கோலஞ் செய்வித்த அந்த பஞ்சமாபாதனை இர ண்டுதுண்டாகும்படி வெட்டியெறிகிறேன் நீ எழுந்து ஸ்நானஞ்செ ய்து புசித்து விசனத்தைவிடுத்து அகங்குளிர்ந்து முகமலர்ந்து சுகி த்திரும் இதோ யான்சென்று சாரங்கதரனை யழைப்பித்து விசார

ணசெய்து அவனை தக்கபடி தண்டனை கண்டனைகளால் மரணம டையும்படி செய்வீக்கிறேனென்று பற்பல இனிய வசனங்களால் சித்திராங்கியைத்தேற்றி ஸ்நானஞ் செய்வதற்கனுப்பி ரத்தினமாலை யை யழைத்து அடிபாங்கி நான் வேட்டைக்குச் சென்றபின்பு இங் கென்ன விசேஷம் நடந்தது அதனை யொளியாமல் உண்மையைச் சொல்லுமென்ற அரசன் மொழியைக்கேட்டு அந்த ரத்தினமாலை தனக்குச் சித்திராங்கி சொல்லிவைத்த சொற்களெண்ணமோ அது கனைத் தவருதலின்றி பிரதியக்ஷமாய் நடந்ததைப்போல வெகு சமத்காரமாய் மொழிந்தாள். அதுகேட்டு நரேந்திரன் தன் புதல் வனுடைய நன்னடக்கை தேவபக்தி பிராமணவிசுவாசம் மனுயி ரைத் தன்னுயிர்போலவெண்ணுஞ் சாந்த சமதமாதி நற்குணங்க ளில் சிறந்தவனென்று தெரிந்திருந்தும் சனிபகவானுடைய மாய் கையினல் கட்டுப்பட்டவனுகி சிறிதேனும் புதல்வன் விஷயத்தில் தயையின்றி தகுந்த தண்டனை விதிக்கவேணுமென்றுதருதிச் சித்தி ராங்கியினிடம் விடைபெற்றுக்கொண்டு தன்னரண்மனைச் சேர்ந்து நித்தியவிதிகளை முடித்துப் புசித்துச் சற்றிளைப்பாரி கொலுக்கூடத் திற்குவந்து மந்திரிகள் வணங்க ஆசிகூறி சிங்காதனத்தின்மீது வீற் றிருந்து மந்திரிகளை நோக்கிச் சொல்லுகின்றன்.

கேளுங்கள் மந்திரிகளே! யான் வேட்டைக்குப் போயிருந்த சமயத்தில் என்புதல்வனுகிய சாரங்கதரன் சித்திராங்கியின் மாளி கைக்குச்சென்று அம்மாதினைத் தன்னைக் கூடும்படி சின்னபின்ன மாயிழுத்துத் திரேகமெங்கும் உதிரம்பெருகக் காயஞ்செய்வித்துக் கீழேவிழுத்தள்ளி வெகு துஷ்ட நடவடிக்கைகளைச்செய்ததாய்கேழ் விப்பட்டேன் இதற்கு என்ன செய்கிறது நன்றுயோசித்துத்தீர்க்க மாக விசாரித்து அவனைத்தக்கபடி தண்டிக்கவேண்டியது இதைப் பற்றி முயற்சி எடுத்துக்கொள்ளுங்கள் என்று கூறக்கேட்டு மந்திரி கள் அரசனைநோக்கி, ஓ! வேந்தே இதைத் தீர்க்கமாக விசாரித்து உமது புதல்வனைத் தக்கபடி தண்டனைசெய்விக்காவிடில் உலகம்பழி க்கும் ஆகையால் இன்னுமொருதாம் அந்தம்மாள்மாளிகைக்கு நா மிருவருஞ்சென்று நன்றுய் விசாரணைசெய்வோம் வாருமென்றழை த்த மந்திரியுடன் நரேந்திரனும் புறப்பட்டுச்சென்று ரத்தினமாலை யை யழைத்து விசாரணை செய்ததில் அந்த ரத்தினமாலையென்னும் பாங்கியானவள் முன்னம் அரசனிடத்தில் லெப்படி சொல்லினளோ அந்தப்படியே மந்திரியின் முன்னஞ் சொல்லக்கேட்டு அம்மந்திரி யும் அரசனைநோக்கி, ஓ பூபாலரே இந்த ரத்தினமாலை சொல்லும் செய்தியையோசிக்கையில் உண்மையாகவுமநுபத்தகினதாகவுமி ருக்கின்றது தங்கள்புதல்வனுகிய சாரங்கதரனும் இக்கொடியவிஷ யங்களைச் செய்தேயிருப்பானென்பதற்குச்சிறிதுஞ்சந்தேகிக்கவே ண்டியதேயில்லை இதைப்பற்றி இனிநாம் யோசிக்கவேண்டியமுகா

ந்திரமில்லையெனக் கேட்டு, நரேந்திரன் தன் புதல்வனுடைய வாய் மொழியையறியாமலும் விசாரிக்காமலும் தண்டனைவிதிப்பதற்குத் திடங்கொண்டு சகலசாஸ்திர சம்பன்னரான சாஸ்திரீகளை யழைத்துவரும்படி சேர்வைக்காரனுக்குக் கட்டளையிட்டு வாசற்காவற்காரனையழைத்து அடே காவற்காரா, நேற்றியதினம்என்புதல்வன்சாரங்கதரன் இங்கு வந்ததுண்டா உண்மையைச்சொல் பொய்சொல்லுவாயாகில்உன்னைதண்டிப்பேனென்று கடுமையாகசொல்வதைக் கேட்டு, அந்தவாசற்காவற்காரன் அரசனைப்பணிந்து, எங்களாண்டவரே தங்கள் புதல்வராகிய சாரங்கதரமகாராஜன் சகலஉடுபாவனைகளுடன் நேற்றியதினம் இம்மாளிகைக்குள்போகக்கண்டேன் சிறிதுநேரத்திற்கெல்லாம் மாளிகையைவிட்டுஓடிவெளியிற்போகக் கண்டேன் இதுசத்தியமான மொழியாகும் யான் எப்படிப்பட்ட ஆபத்து நேரிடிலும்என் மனமாறப் பொய் வார்த்தை பகர மாட்டேன் என அதற்கு நரேந்திரன் சரி சரி! சித்திராங்கி சொல்லிய தும்காவற்காரன்சொல்லியதும் இரண்டையும்யோசிக்கையில்உண்மையாகவேயிருக்கின்றது இதைப்பொய்யென்று சொல்லத்தகாது என்றும் தன் புதல்வன் இக்கொடிய செய்கை செய்திருப்பானென்றுமனதில் உறுதிகொண்டு அம்மாளிகையைவிட்டு மந்திரியுடன் புறப்பட்டு கொலுக்கூடத்தைச்சேர்ந்துசிங்காதனத்தின்மீதுவீற்றிருந்துசேர்வைக்காரனை அழைத்து அடாசேர்வைக்காரா நீசிக்கிரமாகஓடிஎன்புதல்வனைய சாரங்கதரனைப்பிடித்துமடலெடியபிருக்கட்டி அவன்கையிலிருக்கும் செங்கோலைவாங்கிக்கொண்டுஅவனைப் பாராவுடன்கொண்டுபோய் பாராவில்வைத்து எனக்குத் தெரியப்படுத்துமென்றுகட்டளையிட்டான் அதற்குசேர்வைக்காரனும் சில சேவகரும் அந்தப்படியே செய்துவந்து சொல்லுகின்றோமென்றுகூறி சபையைவிட்டு வெளிப்பட்டுச்சென்று சாரங்கதரனைக்கண்டு சேர்வைக்காரன் முதல்யாவரும் பணிந்து ஓ இளவரசே! பெரிய அரசன் தங்களைப் பிடித்துக் கட்டிக்கொண்டுபோய் பாராவில்வைக்கும்படி எங்களுக்குக்கட்டளையிட்டார் அந்தப்படிசெய்யவாருங்கள் வந்தோமெனக்கேட்டுச் சாரங்கதரன் ஓ! சேர்வைக்காரனே நீங்களொன்றுக்குமஞ்சாமல்என்தந்தையின்சொற்படிகட்டிக்கொண்டுபோய் பாராவில்வைப்பீர்கள், அப்படிக்கிச்செய்யாவிடில்உங்களுக்கு ஆக்கினைநேரிடுமெனக்கேட்டு, அந்தசேர்வைக்காரன் உடனே மணிக்கயிறுகொண்டு சாரங்கதரனைப் பிடித்துக் கட்டி செங்கோலைத்தரும்படி பெற்றுக்கொண்டு நடுவில் சாரங்கதரனை விட்டு, அவர்கள்பாராசெய்துஅழைத்துக்கொண்டுபோய்காவலில்வைத்து திரும்பிவந்து அரசனைக்கண்டு, செங்கோலைத்தந்து சாரங்கதரனைக் காவலில் வைத்துவந்ததைத் தெரியப்படுத்திப் போயினர். இதைக் கண்டசுமந்திரகாரன் மன தசகியாமல் ஆ! ஹா! ஹா! இதென்ன அனியாயம் நமதரசனுக்கு இப்படிபட்ட சங்கடமும்வரப்போமோ

இதற்குக்காரணம் சனிபகவானுடைய கொடுமையன்றே இதற்குத் தக்கபடி நரேந்திரனும் பெண்மோகத்திலில் தன்னுடைய புதல்வனை இக்கொடிய காவலில்வைத்தானே அன்றியும்புதல்வன் துஷ்டனு! அனீதிக்குட்படுவானு! உத்தம குணங்களுடையவனென்று தெரிந்திருந்தும், மோகத்திலில் பரமசண்டாளியாகியசித்திராங்கி செய்த கற்பனையைச்சிறிதும் யோசிக்காரும் வாதிபிரதிவாதிகளை எதிரில்நிறுத்தி விசாரணைசெய்து தப்புஒப்புகளை யுணர்ந்து ஆக்கினைசெய்யவேண்டியகடமை அரசன்தாயிருக்க, அந்தப்படிக்கிச்செய்யாமல் கொடிய பாவியாகிய சித்திராங்கியின் வார்த்தையைக்கேட்டு ஒரு நிலைப்பக்ஷமாய் ஆக்கினை விதிப்பது தருமமோ! இப்படி எந்த ராஜாங்கத்திலும் நடக்குமோ இனி இந்த ராஜனுக்கு அழிவு காலம் நேரிட்டுவிட்டதென்று பற்பலவாறு சிந்தனைசெய்துக்கொண்டிருந்தனன்.

இப்படிக்கிருக்கையில், மூன்னஞ் சபையை விட்டுப்போயின இரண்டாவதுமந்திரி இச்செய்தியைக் கேழ்விப்பட்டு மனந்தளர்மல்லிரைந்து சபைக்குவந்து அரசனைக் கண்டுபணிந்து ஓ வேந்தே மன்னுயிரைத் தன்னுயிர்போல பாதுகாப்பவனும்பெரியோர்களை கண்டால்வழியனைப்போலபணிந்துகொண்டாடுபவனும் அன்னியமாதர்களைக்கண்டால் அன்னைகளைப்போலபாவித்து வசனிப்பதும் குருவைக்கண்டால் தெய்வமென்று தீர்க்கதெண்டனிட்டுவணங்குமவனும் கனவிலும்பொய்சொல்லாதவனும் இப்படிப்பட்டஉத்தம குணநிதியாகிய சாரங்கதரனை எந்தக்குற்றம்சாட்டி காவலில்வைக்கும்படி கட்டளையிட்டீர் மேலும் தன்னைக்கூடி கலவிசெய்யாமல் சிறியதாயென்று பணிந்து இணங்காத சாரங்கதரன்மீது இப்படிப்பட்ட அடாநிந்தனைசொல்லிச் சாரங்கதரனைக் கொல்ல வெண்ணிய படுமோசக்காரியாகிய சித்திராங்கியின கற்பனைமொழிகளைக்கேட்டு உத்தமகுணத்திற் சிறந்த சாரங்கதரனை இப்படிக்குச்செய்வது நீதியல்ல, உலகத்தில் ஸ்திரீகள் சொல்லைக்கேட்டு கெட்டழிந்த புருடர்கள் அனேகர் அவர்கள் யாரெனில் சிறிய மனையாகிய கைகையின் வார்த்தையைக்கேட்டு தசரதமகாராசன் பிராணனைவிட்டான்அந்த கைகையும் தனக்குப்பிரிய தோழியாகிய கூனியின்சொல்லைக்கேட்டு அமக்கலியாயினள். அன்றியும், உத்தானபாத மகாராஜன் தன்னிரண்டாவது பத்தினியாகிய சுருசியின் வார்த்தையைக்கேட்டு மூதற்பத்தினியின் புதல்வனாகிய துருவனை யிளம் பிராயத்தான். திரிசீலக் கண்டகனாகிய ராவணன் சூர்ப்பனகையின் வார்த்தையைக்கேட்டு புத்திரமித்திர களத்திராதிகளுடன் எமபுரத்தையடைந்தனன் ஆதலால்,

(சுலோகம்) ஆத்மபுத்திஸ் கஞ்சைவ குருபுத்திவிசேஷித
பரபுத்திவினாசாய ஸ்திரீபுத்திப்ரளயங்கரி.

(இதன்பொருள்) தனக்குத்தானே நன்றுயோசித்து இது நன்று இதுதீது என்றுணர்ந்து ஒருகாரியத்தைச்செய்தால்சுகத்தையடையலாம் அதிலும் குருவினுடைய புத்தியைக்கேட்டு அந்தப்படிநடப்பது விசேஷம் அன்னியர்களுடைய புத்தியைக்கேட்டு அப்படிநடந்தால் நாசத்தை யடையச்செய்யும் இதுகளைத்தவிர ஸ்திரீயின் சொல்லைக்கேட்டுநடந்தால் ஆபத்துகள்வந்து சம்பவிப்பதற்குசொல்லவேண்டுமோ ஓ! பூபாலரே! இனியாகிலும் என் சொல்லைத்தட்டாமல் நடப்பீரேயாகில் உமக்கும் உமது புத்திரமித்திரகளத்திராதிகளுக்கும் க்ஷேமமுண்டாகும் முதல் மந்திரியின் சொற்படி நடப்பீரேயாகில் ரௌரவாதி நரகத்தை நீடையும்படிக்கு நேரிடும்அப்புண்ணிய புருடன் ஒருக்காலுமிக்கொடிய செய்கை செய்திரான் என்ற மந்திரியை நோக்கி நரேந்திரன் சொல்லுகின்றான் கேளும், இரண்டாவது மந்திரியே யான்பெற்ற பிள்ளையின்மீது யானேகுற்றஞ் சாட்டுவேனோ சித்திராங்கியும் அவள் பாங்கி ரத்தினமாலையும் சொல்லிய உண்மையை விசாரித்தன்றே என் புதல்வன் செய்தேயிருப்பானென்று குற்றஞ்சாட்டினேன் உனக்கு சந்தேகமாயிருக்கும்பக்ஷத்தில் எதிரில்வந்து விசாரணைசெய்து பொய் மெய்யென்றுணர்ந்துக்கொள்ளுமெனக்கேட்டு இரண்டாவதுமந்திரி அரசனைநோக்கி, ஓ! அரசே! நீரெத்தனை சாக்ஷிகளைக்கொண்டு சொலுவித்தாலும் அந்தசாக்ஷிகள் சொற்களை யான் நம்புவேனோ அந்த சித்திராங்கியம்மாள் இவ்வாறு யாவருக்கும் போதித்து சாக்ஷிசொல்லும்படி நேமித்து உன்புதல்வனுடைய பிராணனை வாங்க எமனுகலந்திருக்கிறாள் எத்தனையாக உமக்கு யான் சொல்லியபோதிலும் நீர் சித்திராங்கியின் மொழியே உண்மையென்று உமதுமனதில்தீர்மானித்திருக்கிறபோது, ஏழைச்சொல் அம்பலத்திற் கேற்குமோ, செங்கோலுக்கு மீறிய சங்கீதமோ உமக்கு இத்தனைகாலமில்லாமல் இந்த கிழப்பிராயத்திலிப்படிப்பட்ட துற்குணமுண்டாயிற்று ஞாயனியாயங்களை யுணராமல் ஒருவன் தலையை வாங்கிவிடுவதுதான் அரசர்கள் நீதியோ எப்போது புதல்வனுக்கென்று பேசியபங்கையை தந்தையாகிய நீர் மணம்புரியஇச்சை கொண்டீரோ அப்போ உமதிடத்தை லட்சுமி விலகிப்போயினள் தருமங் குன்றியது அதருமம் மேலிட்டது இந்தப்படிக்கு நீர் சித்திராங்கியின் சொல்லைக்கடவாமல் சாங்கதரனை தண்டிப்பீரேயாகில் இன்னுஞ் சிலகாள்களுக்குள் சாங்கதரனுடைய சத்தியமொழியையும் சித்திராங்கியின் அசத்திய மொழியையும் உமக்குப் புலப்படச்செய்விக்கிறேன் அன்னியிலும் உன்னைக் கொடுங்கோல்மன்னனென்றும் சத்தியங்களைதவறினவனென்றும் உலகம் பழிக்கும்படிக் செய்விக்கிறேன் பாரும் என் சமர்த்தையென்று சொல்லி சபையைவிட்டெழுந்து தன்னரண்மனையைச் சேர்ந்தனன்.

இவ்வாறு தன்னரண்மனையைச்சேர்ந்த இரண்டாவது மந்திரி தன்மனைதைத் தானே பற்பலவாறு தேற்றியும் மனந்தேராமல் அரண்மனையைவிட்டுப் புறப்பட்டு சிறச்சாலையை அடைந்து சாரங்கதர மகாராஜனைக்கண்டு பணிந்து ஒளிவரசே கல்வியிலும் கருத்தினிலும் சிறந்த அரசர்களுக்கும் மேலான உத்தமகுணசீலரேதாங்களிந்த சிறச்சாலையிலிருப்பதற்கு என்ன குற்றஞ்செய்தீர் அதைத் திருவாய்மலர்ந்தருள வேண்டுமென்று பணிந்த மந்திரியை நோக்கி சாரங்கதரன் சொல்லுகின்றான். கேளும், புத்தியிலும் பக்தியிலும் விற்பத்தியிலும் சிறந்த மந்திரியே அன்னைகோபித்தால் அதற்கும் யான் உட்பட்டிருக்கவேணும் அன்னையின் சொற்படி தந்தைதண்டனைத்திக்கினும் அதையும்யான் அனுபவிக்கவேண்டியவனாகவேயிருக்கின்றேன் இது மனுநீதியின் தருமமாகும் இவ்விரண்டையுங்கடந்து நடப்பேனையாகில் என்னைவிடதுஷ்டனும் தாய்தந்தைகளின் சொல்லைமீறி நடந்தவன் தருதலையன்றே இவைகளையுணர்ந்தயான் தவரி நடக்கலாமோ அன்றியும், சொத்துக்குரியவன் அந்தசொத்தைதானே என்னசெய்தபோதிலுந் தகும் அவர்கள் சுதந்திரமுடையவர்கள் யான் பாதந்திரமாய் நடக்கவேண்டியவனாகலால், தந்தையின்சொற்படி சேர்வைக்காரனைக் கட்டுண்டு இச் சிறச்சாலையிலிருக்கின்றேன். என்மனமாரயாதொரு குற்றமுஞ் செய்திலையெனக்கேட்டு இரண்டாவது மந்திரிசொல்லுகின்றான். ஓ! இளவரசே விதியைவெல்ல சுரர் நரர் முனிவராலும் ஆகாது, அநுபவித்தேதீரவேணும் நீர் சித்திராங்கி மாளிகைக்கேகி வழமிலவள்கையைப்பற்றிப் புணரவழைப்பது நீதியோவென? அதற்குசாரங்கதரன் ஓ மதிமந்திரி! தனயன்மீது தாயானவள் கோபிக்கத்தகும்அவள் கோபந்தணிக்க தந்தையானவர் தனயனை தண்டிக்கவுந்தகும் இவைகளை சகிப்பவனே சத்புத்திரனதுமென்று மநுநீதியுரைப்பதையறிந்திருந்தும், மேலுமேலும்என்னைசோதிப்பது ஞாயமோவென? அதற்கு மந்திரி ஓ! மன்னவரே! தங்கள் சித்திராங்கியம்மாள்மாளிகைக்கு ஏகும்போது உன்பின்னேவந்தவர்கள யாவர் அம்மாதின் கையை நீர் பிடித்தகண்டோ அல்லது அவளேசெய்தனளோ அதைத் திருவாய் மலர்ந்தருளுமெனக்கேட்டு, சாரங்கதரன் சொல்லுகின்றான், ஓ! மந்திரியான சித்திராங்கியம்மாள் மாளிகைக்குச் செல்லும்போது என்பின்வந்தவர் சுமந்திராகாரனும் சேர்வைக்காரனுமே அவர்களிருவரும் ஆசாரவாசல்மட்டே பின்தொடர்ந்துவந்தவர்கள்சித்திராங்கியம்மாளிடத்தில் பேசியபோது எனக்கு சாக்ஷி யாதொன்றுல் அந்தரியாமியாகிய சிவபெருமானொருவனன்றே யறியக்கடவானென, அதற்கு மந்திரி ஓ! இளவரசே இச்செய்தியை உமதுதந்தையாகிய நரேந்திராஜனுக்குத் தெரிவித்து அங்கு சித்திராங்கியம்மாளும் அவ்வம்மாளுக்கு சாட்சிகளுஞ் சொல்லும்வகையை உமக்குத்தெரியப்படுத்துகிறேனென்றுசொல்லிவிடைபெற்றுக்கொண்டு

சபையையேநோக்கி நடந்து அரசனைக்கண்டு பணிந்து, ஓ மன்னவரே உமது புதல்வனிய சாரங்கதரனை விசாரணை செய்தேன் அந்த இளவரசு தானப்படிப்பட்ட துஷ்டகாரியம் என் சிறிய தாயாரிடத்தில் தானே செய்வேன் இதைசொல்லுவார் சொல்லினும் கேட்போருக்கு மதியில்லையா யென்றும் தானப்படிப்பட்டதுஷ்டகாரியஞ் செய்ததில்லையென்றும் மொழிகின்றனன். ஆதலால் சித்திராங்கியின்வாக்குமூலம் சாக்ஷியின் வாக்குமூலமும் தெரிந்துகொண்டால் நமாகவிருக்கும் இச்சபை முன்னமே சித்திராங்கியம்மாளையும் சாக்ஷிகளையும் சாரங்கதரமகாராஜனையும்வரவழைத்தருளில்விசாரணைசெய்தல்வின்னர்சொல்லுவதுபொய்இன்னர்சொல்வதுமெய்யென்றும்குறிகுணங்களாலறிந்துக்கொள்ளஎளிதாகுமென்ற இரண்டாவது மந்திரியைநோக்கி, ஓ! மந்திரி! அந்தசித்திராங்கி இராஜகுமாரத்தியும் நாளதுவரையிலும் யாதொருதோஷமும் அறியாதவளும் எனக்கு மனைவியாகியுமிருப்பவளாதலால் அவளைநமதுசபைக்கு அழைப்பிப்பதுநமது அவமானமாகையால் நாம் அம்மாதிருக்கும் மாளிகைக்குச்சென்று விசாரணைசெய்து பொய்மெய்யை யுணர்ந்து வருவோமெனக்கேட்டிரண்டாவதுமந்திரி அரசனைநோக்கி ஓ பூபாலரேவாதிப்பிரதிவாதிகளை எதிரில்நிருத்தி விசாரணை செய்தலன்றே உண்மையும்பொய்மையும் எளிதிலுணரலாம் வாதியையோரிடத்திலும் பிரதிவாதியை யோரிடத்திலும் விசாரணைசெய்வது தகாதகாரியம் எதிரில்நிருத்தியேவிசாரணை செய்யவேணுமென்னனன் இதைக்கேட்டு மூதல்மந்திரிசொல்லுகின்றனன் ஓ! இரண்டாவதுமந்திரி வாதிப்பிரதிவாதிகளை எதிரில்நிருத்தி விசாரணைசெய்தால்தானே இது பொய்யென்றும் இதுமெய்யென்றும்தெரிந்துக்கொள்ளலாகும்வேறுவேறுக விசாரணைசெய்வதால்இதுமெய்யென்றும்,இதுபொய்யென்றும் தெரிந்துக்கொள்ளக்கூடாதோ நீர்மொழியும் வசனம் மெத்த நன்றாயிருக்கிறது வெவ்வேறுக விசாரணைசெய்து இவள்சொல்லுவது பொய் இவள்சொல்லுவது மெய்யென்றுணர்ந்துக்கொள்ள சக்தியில்லாத மூடனும் ஒரு மந்திரியோ இதைத் தெரிந்துகொள்ள மாட்டாதவன் மந்திரியாவதே இனிவிந்தையாகவல்லோயிருக்கின்றது அரசன்சொற்படி வாதிப்பிரதிவாதிகளிருக்குமிடஞ்சென்று விசாரணைசெய்வதே மதிப்பு குன்றுதலெனக்கேட்டு நரேந்திரன் இரண்டாவது மந்திரியைநோக்கி, ஓ! மதிமந்திரி பூரணசந்திரனைப்போன்ற முககாந்தியையுடைய சித்திராங்கியின் மொழி ஒருபோதும் பொய்யாக மாட்டாது திருடன் திருடினேனென்றொப்புகொள்வானே ஒருக்காலும் ஒப்புக்கொள்ளமாட்டான் அதுபோல துஷ்டசெய்கையைச்செய்த சாரங்கதரன் நான் துஷ்டகாரியங்களைச்செய்து உண்மையேயென்று ஒப்புக்கொள்ளான் வீணுப் பற்பல விபகாரங்களைப் பேசுவதிலென்னலாபம் தனித் தனியேவிசாரணை செய்யவேணுமென்றக்கடமையாக மொழியும்வேந்தனுடையகோ

பக்குறியைக்கண்டு இரண்டாவது மந்திரியானவன்சற்றுலோசித்து இனியிந்த வேந்தன் சித்திராங்கியின் சொற்படி நடப்பதற்கு சித்த மாயிருக்கின்றான் ஞாய அனியாயங்களைச் சிறிதேனும் கருதாமலிருக்கின்றான்இக்கொடுங்கோல் மன்னன் சாரங்கதாணுக்குஎன்னதண்டனை விதிப்பானே என்று மனங்கலங்கி வாடி இதற்கு நாமென்ன செய்கிறது பகவான் செயலின்படி நடக்கட்டுமென்று மனதிடங் கொண்டு சபையைவிட்டெழுந்து அரண்மனை போய் சேர்ந்தான்.

இந்தப்படி இரண்டாவது மந்திரியும் தன்னுல் கூடிய மட்டும் அரசனுக்குச் சொல்லியும் கேளாமல் முதல் மந்திரியின் சொல்லை எதிர்பார்த்து நம்பி பின்னிட்டு வீணாயப்போகிறமென்மையையுணராமல்கெடுமதி கண்ணுக்குத் தோன்றமாட்டாதென்பதுபோலவும் கேடுவருமுன்னே மதிகெட்டுவரு மென்பதைப் போலவுமிருக்கின்றது வேந்தே இன்னுமொருகாரியஞ் செய்யும் அதென்ன வெனில் ரத்தினமாலிகாவற்காரன் சேர்வைக்காரன் சுமந்திராகாரன் இன்னுல்வரையும் வரவழைத்து விசாரணைசெய்து அவர்கள் சொல்லும் சாக்ஷியத்தை யறிந்துயோசிப்போமெனக்கேட்டுரேந்திரன் அங்கிருந்தஒருவனை யனுப்பி அன்னுல்வரையும் வரவழைத்துக் கொலுமுகத்தில் நிருத்தி முதலில் ரத்தினமாலையை அழைத்து ரத்தினமாலை நான்வேட்டைக்குச் சென்ற பின்பு உன்னரசியிருக்கும் மாளிகையில் என்ன நடந்தது அந்த உண்மையைச் சொல்லக்கடவாயென அதற்கு ரத்தினமாலை ஐயா மந்திரி நேற்றியதினம்இளவரசாகிய சாரங்கதரர் எங்களரசியிருக்கும் மாளிகைக்கு வரயான்கண்டு எங்களரசிக்குத் தெரியப்படுத்தினேன் அரசியுங் கேட்டு சந்தோஷித்து என்றும் வராதவன் இன்றுவருகிற காரணம்யாதோபுதல்வன் அன்னையிடத்திற்குவந்தால் என்ன குற்றம் என்று சொல்லிச்சாரங்கதரன் அருகில் வந்தமாத்திரத்தினில் திருஷ்டி நெட்டையொடித்து அப்பாமகனேவருவாய் என்னுசைக்கண்மணியே என்றபோது சாரங்கதரன் தானுனக்குக் கணவன் நீ எனக்கு மனைவியாகும் என்னைப்புதல்வனென்றழைப்பதுஞாயமல்லவென்று சொல்லி அரசியின் கரங்களைப் பற்றியிழுத்து மெத்த மோகத்திலே மார்பின் வஸ்திரத்தைப்பற்றித் தன்னைக்கூடும்படி வற்புருத்தியபோது அரசியும் இதென்ன அனியாயம் பிள்ளையானவன் அன்னையைப்பெண்டுகளைப்பதையா னெங்கும் கண்டதில்லை, கேட்டதுமில்லை, அடாமகனே! இப்படிப்பட்ட காரியம்பெற்ற தாயாரிடத்தில்நீசெய்யவெண்ணுவது தகாது பெற்றதாய்க்குநிகரான சிற்றன்னையைப் பெண்டுக்கழைத்தமகாபாதகனிவனென்றுஉன்னைஉலகம்பழிக்கும் அன்றியும்உன் குலத்துக்கு இழிவு நேரிடுவதல்லாமலும் நீநரகத்துக்காளாகுவா யென்று பற்பல நீதிகளை யெடுத்தோதியும் சாரங்கதரன் கேளாமல் காமமீறி அரசியைக் கீழேதள்ளிப்புணருவதற்குமுயலுகையில் எங்களரசியாகிய சித்திராங்கி யம்மன் கூக்குரலிட அவ்

வோசையைக்கேட்டு யான் என்னமோ மோசம் விளைந்ததென்றெ
ண்ணிஓட்டமாக ஓடிப்பார்க்கையில் சித்திராங்கியம்மை கீழேவிழு
ந்து கதறுகின்றாள்அதைக்கண்டுயான் சாரங்கதரமகாராஜனுடைய
கச்சையைப் பிடித்துக்கொண்டு ஒருமாதினிடத்தில்தந்தையும்தன
யனும் போகிறது எந்த ஜாதியில் தகும் என்று சொல்லிக்கொண்டி
ருக்கிறபோது சாரங்கதரன் கச்சையைத் தன் வாளாலறுத்து என்
கையை விடுவித்துக்கொண் டோடிப்போயினர் இதுநடந்த உண்
மையென்று சொல்லக்கேட்டு மந்திரி அவனை யப்புரம் போகச்சொ
ல்லிக் காவற்காரனை யழைத்து நீ கண்டதென்ன சொல்லுமென அ
தற்கவன் மந்திரியைப் பணிந்து ஓ மதிதனிற் சிறந்த மந்திரியேநே
ற்றியதினம் சகல அலங்காரத்துடன் காரங்கதர மகாராஜன் சித்தி
ராங்கியம்மாள் மாளிகைக்குட்சென்று சிறிதுநேரத்திற் கெல்லாம்
வெளிப்பட்டு ஓடக்கண்டேன் என்றான் அவனையும் அப்புரத்திசே
ர்வைக்காரனை அழைத்து நீபோர்த்ததென்ன உண்மையைச்சொல்
லுமப்பா சேர்வைக்காரனென அதற்கவன் எங்களையனே இளவர
சரும் மந்திரியின்புருவைவிட்டு அதுகள் பரக்கும் விந்தையைப்பா
ர்த்து மகிழடைந்திருக்கையில் மந்திரியின் புருவம்து கூண்டின்மீது
இரங்கியது அதைக்கண்டு அந்தம்மாள் புருவைப்பிடித்துபத்திரப்
படுத்தினர் அப்போது இளவரசர் என்னையழைத்து என் சிறியதா
யார் வீட்டிற்கு நீசென்று நான் வந்தனஞ் செய்ததாகச் சொல்லி
புருவைக்கேட்டு பெற்றுக்கொண்டு வரும்படிகட்டளையிட்டார்யா
னும் இளவரசர் சொற்படி சித்திராங்கியம்மாள் மாளிகைக்குச்செ
ன்றுப்பணிந்து இளவரசர் சொல்லிய வந்தனத்தைச்சொல்லிப்புரு
வைத் தரச்சொல்லிக்கேட்டேன் அதற்கந்தம்மாள் சாரங்கதரமகா
ராஜன் இங்கு நேரில்வந்தால் புருவைக்கொடுப்பனேயன்றி, அன்
னியர்கள்யார்வந்து புருவைக்கேட்டபோதிலும் புருவைத்தரமாட்
டேனென்று சொல்லியதைக்கேட்டுஅம்மொழிகளை இளவரசரிடத்
திற்குவந்துயான் சொல்லக்கேட்டு அவர்சிறியதாயார்மாளிகைக்கு
யான்சென்றுவணங்கிப் புருவைப்பெற்றுக்கொண்டேவருகிறேனென
ன்று புரப்பட்டார் இதுவே யானறிந்த செய்தி பென்றான் அவனை
யும் அப்புரப்படுத்தி இரண்டாவது மந்திரி சுமந்திரகாரனை யழை
த்து ஓ சுமந்திராகாரனே நீ யறிந்ததென்ன சொல்லுமென அதற்
கந்த சுமந்திராகான் தேறித்தெளிந்த மந்திரியே இளவரசர் சிறிய
தாயார்வீட்டிற்குச்சென்றுபுருவைப்பெற்றுக்கொண்டுவருகிறேன்
மந்திரியென்றுசொல்லி விரைவாகப் புறப்படக்கண்டு யான் மனந்
தளராமல்இளவரசே அப்புருவைப்போல அனந்தம்புருக்களைச்சம்
பாதித்துக்கொள்ளலாம் அங்கேநீர்போகவேண்டாம்மங்கைப்பரு
வத்தையடைந்திருக்கும் சிறியதாயார்மனைக்குத் தாங்கள்தனித்து
ப்போவீரேயாகில் வினைவந்தமூண்டுகொள்ளும் என்றுபோகவிடா
மல் தடுத்தேன் அதற்குஇளவரசர் கடுஞ்சினமடைந்து நான்சிறிய

தாயாரிடம் போய்வருகிறே னென்றுசொல்லி புறப்பட்டால் ஏதே
தோ கற்ற கல்விகளையெல்லாஞ்சொல்லி எண்ணப்போகவேண்டா
மென்று தடுக்கிறாய் இவ்வண்ணம் இனியாரேனுஞ் சொல்லுவார்க
ளேயாகில் அவர்கள் நாக்கை இரண்டு தண்டாகும்படி யறுத்தெரி
வேன் யென்று கடுமையாக வசனிக்கக்கேட்டு யான்மெத்தவும்பய
ந்து அரசே யான் பின்வருமாறுணர்ந்து மொழிந்தால் என்மீது
மெத்த சினங்கொள்ளுகிறீர் தெய்வச்செயலின்படி நடக்கட்டும் ஆ
லில்அங்குசென்று காலதாமம்செய்துக்கொண்டிராமல்சீக்கிரமாய்
புறப்பட்டுவாருமென்றுசொல்லிஆசாரவாசல்வரைக்கும்அரசன்பி
ன்சென்றுவிடுத்துவந்தேன் இதுவே யானறிந்தவிஷயம் வேறொன்
றும் யான்கண்டதில்லையெனக்கேட்டு இரண்டாவதுமந்திரி மன்ன
னைநோக்கி ஓ அரசே இவர்கள் நால்வருஞ்சொல்லிய வாக்குமூலத்
தை யோசித்தால் சாரங்கதரமகாராஜான் சொல்லத்தகாத துஷ்ட
காரியஞ் செய்ததாகத் தோன்றவில்லை ரத்தினமாலையுஞ் சித்திராங்
கியுஞ்சொல்லிய வாக்குமூலத்தால் சாரங்கதரமகாராஜன்குற்றவா
ளியென்றே திடமாகத்தாங்கள் மனதிற்குத்தோன்றுவதால் சாரங்
கதர மகாராஜனுக்கு தக்கதண்டனை விதிக்கயெண்ணுகிறீர் அப்ப
டிக்கி தண்டனை விதிப்பது நீதியல்ல ஏனென்றால் சித்திராங்கியம்
மாள் சாரங்கதரனுடைய அழகைக்கண்டு மோகித்தயிருப்பவளா
தலாலும் புறுவை ஆதாரமாகக்கொண்டு சாரங்கதரனை வரவழைத்
துத் தன்னைக்கூடி கலவிசெய்யும்படிச் சொல்லியிருக்கலாம், அத
ற்கு சாரங்கதரன் சிறிய தாயாரென்ற மரியாதையை வகித்துப்பற்
பல நீதிகளையோதி தடுத்து இணங்காததால் அந்த சித்திராங்கியம்
மாள் கடுஞ்சினமடைந்து சாரங்கதரனைக் கொன்று தானும் உயி
ர்விடத்துணிந்ததன்பாங்கியைக்கைவசப்படுத்திக்கொண்டுஅரசன்
வந்து கேட்டால் இவ்வாறு சொல்லென்று போதித்திருப்பதால்
இரண்டுபேருடைய வாக்குமூலமும் முன்னும் பின்னுமாய் பிரட்டி
ச்சொல்லுகின்றார்கள் மேலும் இந்தரத்தினமாலைசித்திராங்கதகமா
ராஜன் தன் புதல்வியாகிய சித்திராங்கியம்மாளுக்கு ஸ்ரீதனமாகக்
கொடுக்கவந்தவளாதலால் இவளுடைய சொல்லை நம்புவதற்குக் கூ
டாமையாயிருக்கிறது ஆகையால் இந்தசித்திராங்கி யம்மாளுக்குப்
பணிவிடை செய்யும்படி விடுத்தப் பனிரெண்டுபேர் பாங்கிகளிருக்
கின்றார்களல்லவா அவர்களில் ஒருவருக்காகிலும் இச்செய்தி தெரி
யாமலிருக்குமோ தெரிந்தேயிருக்கலாம் ஆகையால் அப்பாங்கியர்
களைவரவழைத்து விசாரித்துப்பிறகு தண்டனைவிதிப்பது தருமமா
குமென்றனன். அதற்கு நரேந்திரன் இரண்டாவது மந்திரியைநோக்
கி மதிமந்திரி தோழி ரத்தினமாலைசொல்லியசாக்ஷிக்கு சூசனையாக
நீதியை வெளியிடக்கடவாயென அதற்கு மந்திரி வள்ளலே யான்
முன்னமே சொல்லியிருக்கிறனே தேவரீர் அதை கவனிக்கவில்
லையோ ஆகிலும் இன்னுமொருதரம் சொல்லுகின்றேன் கேளும்

அஃதியாதெனில் இத்தரத்தினமாலை சித்திராங்கியுடன் வந்தது தோழியானதால் இவளுடையசொல்லை நம்புவதற்குக் கூடாமையாயிருக்கின்றது மேலும் சித்திராங்கியம்மாள் தானே பூமியிற் படுத்தாளோ அல்லதுசாரங்கதரன் தள்ளினாலே இப்பாங்கியதையறியாள் ஆதலால் நமதுதேசத்துப் பாங்கிகளில்ஒருவரையுஞ் சாக்ஷிகோராதபடியினாலே இவள் மொழியைக் கொண்டு சாரங்கதரன் மீதகுற்றத்தை சாட்டலாகாதென அதற்கு நரேந்திரன் ஓ மந்திரிசேர்வைக்காரன் சொல்லிய சாக்ஷியின் கருத்தென்ன வென அதற்கு மந்திரி ஓமகாராஜனே அந்த சித்திராங்கியம்மாளுக்குச் சாரங்கதரன் மகளென விருப்பமிருக்குமேயாகில் தங்களால்சாரங்கதரனை வரவழைத்துப் பார்த்துக் களிப்படையாள் தாங்களில்லாதபோது பிடிவாதமாய் சாரங்கதர மகாராஜனை வரவழைப்பது பாலன்மீதுமோகங் கொண்டு அழைப்பித்தாளென்பதற்குத் தடையே இல்லையென அதற்கரசன் காவற்காரன் சொல்லிய சாக்ஷியின் பயனென்னவென அதற்கு மந்திரி ஓவேந்தே சாரங்கதரமகாராஜன் மாளிகைக்குட்சென்றதும் உடனே வெளியில் வந்ததையும் அறிவானேயல்லாமல் உள்ளேநடந்தகாரியம் பாலனுலோ அல்லது சித்திராங்கியம்மனுலோ வென்று பகுத்தறிந்து சாக்ஷிசொல்லாததாலே யார்மீதுகுற்றஞ் சாட்டலாகாதென அதற்குஅரசன் ஓமந்திரி சித்திராங்கிமொழிந்ததையும் அதற்கிணங்க தோழிகூறியதையும் அதைஒட்டி காவற்காரன் வெளியிட்டதையும் நீபென்ன வெட்டிப்பேசுகின்றாய் உன்கருத்தென்னவென அதற்குமந்திரி ஓபாலரே மங்கையொருவள் தன்னிஷ்டப்படிக்கு இணங்கி கலவிசெய்யும் ஏழையான புருஷனை வெகுகீர்த்தியை யடையும்படிச் செய்விப்பாள் அப்படி தனக்கிணங்காத மன்னவனுயிருக்கினும் அவன்சிரசை வாங்கும்படிக்குச் செய்விப்பான் இது உலக இயற்கையாதலால் ஸ்திரீகள் சொல்லை நம்பி எந்தகாரியமும் செய்யவொண்ணாது என அதற்கு அரசன் சுமந்திராகாரன் சொல்லிய சாக்ஷியின் பயன் யாதெனக்கேட்டு மூதல்மந்திரி அரசனைநோக்கிச் சொல்லுகின்றான்.

கேளும் வேந்தேஅரசனைத்துஷ்டகாரியத்திற்பிரவேசிக்கவொட்டாமல் தருமநீதிகளையோதி தடுப்பது மந்திரியின்கடமை அதையுங்கேளாமல் இவ்விராஜகுமாரன் சித்திராங்கியம்மாள் மாளிகைக்கேகினதை யோசிக்கும்விஷயத்தில்ராஜகுமாரன் காமாந்தகாரனுமிப்போயினனென்பதற்குசந்தேகமில்லையென அதற்குஇரண்டாவதுமந்திரி மூதல்மந்திரியைநோக்கி ஐயனே தலைமையானமந்திரியேஅரசன் ஒருகாரியத்தை முன்னிட்டு நீதியைக்கேட்டால் கடவுளாருவனிருக்கிறான் என்று அஞ்சி நீதியையோதவேண்டும் சாரங்கதர மகாராஜன் சிறியதாயார் வீட்டிற்குப்போகிறனெனச் சொன்ன தாய் சுமந்திராகாரன் சொல்லியும் சாரங்கதரனைக்காமியென்றுஎப்

படிசொல்லுகின்றாய் அடாபாவியிப்படி மனம்போனபடிக்கிப் பிதற்றுவது நீதியோ மனிதர்களுக்குப்பயப்படாவிட்டாலும்தெய்வத்திற்குபயந்து நடக்கவேண்டும் ஒருதலைப்பக்ஷமாய்ப்பேசுவதுஞாயமல்ல தெரிந்தால் ஞாயத்தைச்சொல்லு தெரியாவிட்டால் வாயை மூடிக்கொண்டு சும்மாவிரும் என்றான் இதைக்கேட்டு தரேந்திரன் கடுஞ்சினமடைந்து ஓ இரண்டாவது மந்திரி நீயென்னகொஞ்சமாகிலும் அஞ்சாமல் ஆஹா சத்தியவதியாகிய சித்திராங்கியின்மொழியையும் பொய்யென்றாய் பாங்கி சத்தினமாலை சாக்ஷி சொன்னதையும் பொய்யென்றாய் நீசபார்சு பேசும் அந்தக்கொடிய துஷ்டனே இதோ தெண்டிக்க மூயன்றேன் இதற்காக நீ செய்யும் வகையென்ன உன்னுலெண்ணவாகும் ஞாயமறிந்து நீதியுரைக்காதவன் நீயுமொரு மந்திரியாகுவையோ போபோவென்று கடுமையாக மொழிந்தானதைக்கேட்டு இரண்டாவது மந்திரி மனஞ்சகியாதவனுகி ஓ மகாராஜனே பறவை யிறங்கிய செய்தியைச் சிறிதேனும் யோசிக்காமற் பேசுகின்றீர் சித்திராங்கி வார்த்தையை நம்பி சாரங்கதர மகாராஜனே சிறையில்வைத்தீர் இதுவுமன்றிமகனுக்கு மணஞ்செய்விக்கவெண்ணி அவன் படத்தைக்காட்டி மங்கையைத் தாங்கள் கைபற்ற நினைத்தீர் அந்த சித்திராங்கி ஆசை சாரங்கதரன்மீதன்றி வேறெவர்கள்மீதுமில்லை தங்கள்மீது அம்மங்கை ஆசைகொண்டிருப்பதாய் எண்ணங்கொண்டிருக்கிறீர் எவ்வான பருவமுடைய மாது எவ்வானமான பருவமுடையபுருடனையே இச்சிப்பாளன்றிக்கள மார பருவமடைந்த தங்களை ஒருக்காலும் இச்சிக்கமாட்டாளெனக் கருதியிரும் அன்றியும் அந்தச் சித்திராங்கியே சாரங்கதரன்மீது இச்சைகொண்டு தன்னைக்கூடிக் கலவிசெய்யும்படி பலாத்காரஞ் செய்தா ளென்பதற்குச் சந்தேகமே இல்லை ஆகையால் இதுகளையெல்லாம் பகுத்தறிவதற்கு சக்தியில்லாமலும் என்போல்வர்சொன்னலும் அந்தப்படி நடவாமலும் அநீதமாய் நடக்கும் அரசனிடத்தில் என்னைப்போலொற்றவன் மந்திரியாயிருப்பதைப் பார்க்கிலும் மிருகங்கள் வசிக்கும் காட்டினில் வசிப்பது உத்தமமானதால் அரசே யிதோ யான்போகின்றேன் உமதிஷ்டப்படிக்கு யாதொரு தடையுமின்றி நடத்தும் என்றுசொல்லி சபையை விட்டெழுந்துப் போயினன் உடனேதரேந்திரன் சபைக்கு மறுதர்மசாஸ்திரவிதியையுணர்ந்த சாஸ்திரியொருவர் வந்து அரசனைக்கண்டு ஆசிகூறி என்னையழைப்பித்த காரியம் யாது அதைத் தெரியச் சொல்லவேணும் வேந்தேயென அதற்கு தரேந்திரன் ஓ சாஸ்திரியாரே சிறிய தாயானவள் தன் கணவனுக்கு முதல்தாரத்தின் புதல்வனை தன் புதல்வனுகப்பாவித்து அழைக்க அவன் சென்று சிறிய தாயைப் பலவந்தஞ்செய்துப் புணர்ந்த குற்றத்திற்கு என்ன தண்டனை விதிக்கலாம் சாஸ்திரத்தை ஆராய்ந்துப்பார்த்து யுரைப்பீரென அதற்காக சாஸ்திரி ஓ! வேந்தே! அந்த மாபாதகனை கொடிய துஷ்ட

னைக் கழுவிலேற்றும்படி தருமசாஸ்திரம்முறையிடுகின்றதுதெனக் கேட்டு சுமந்திராகாரன் ஓ பூபாலரேதன்னைப்புணர்ந்ததாகச் சித்திரரங்கியம்மாளுஞ் சொல்லவில்லைத் தோழியுஞ்சொல்லவில்லை ஆகையால் குற்றமறிந்து தண்டனைவிதிக்கில் உலகம் வசைகூறுதெனஅதற்கு நரேந்திரன் ஓசாஸ்திரிகளே சிற்றன்னையாயிருக்கினும் அவள் தனித்திருக்கும் மாளிகைக்குப்போகலாகாதென்று மந்திரிதடுத்தும் அவன்மொழியையுங்கேளாமல் தானங்குசென்று அவளைக்கண்டுதன்னைப் புணரும்படி இழுத்துச்சின்னபின்னஞ் செய்தவனுக்கு என்னதண்டனைவிதிக்கலாம் சொல்லுமென அதற்கு சுமந்திராகாரன் ஓ சாஸ்திரியாரே சிற்றன்னையென்பதற்குத் தந்தைக்கவள் மாலையிடவில்லை மகனைக்கோரியேவந்தவள் இன்னும் விவாகமில்லை ஆகிலும், அவள்மனைக்கிமகன்போனதண்டு இதற்கென்ன தண்டனையோ சொல்லுமெனக்கேட்டு சாஸ்திரியார் அரசனைநோக்கி, ஓ அரசனே! தன்னுடைய தந்தை மங்கையொருவளை மணம்புரிந்து அனுபவிக்க எண்ணங்கொண்டிருப்பதைப்புதல்வன் அறிந்திருந்தும் புதல்வன் தந்தையில்லாதகாலத்தில் அவள் மாளிகைக்குப்போனதாய் ருசுவாயினபடியால் இவன் விசாரப் பிரயத்தனமெனுங் குற்றவாளியாயினன், இவனுக்குதண்டனையென்னவெனில், இவனுடைய மாறுகால், மாறுகையை வெட்டும்படி சாஸ்திரமுறையிடுகின்றதென்றார். இவ்வசனங்களைக்கேட்டு நரேந்திரன் முதல்மந்திரியைநோக்கி, ஓமந்திரி சீக்கிரங் கொலையாளிகளை வரவழைப்பாயென, அந்தப்படியே மந்திரியும் கொலையாளிகளை வரவழைத்து வேந்தன் முன்னிருத்தினன். அக்கொலையாளரும் அரசனை வணங்கி, ஓ ஸ்வாமி, எங்களை யழைப்பித்த காரணம் யாதோ அதைத்தெரியச் சொல்லவேணுமெனக்கேட்டு நரேந்திரன் அடா கொலைஞரே! இதோ வாளையேந்தி சிறிதேனும் முன்பின்பாராமல் எவர்களைமொழிகளையுங் கேளாமற் சென்று சிறையிலிருக்குஞ் சாரங்கதரனைப்பிடித்து முன்கட்டு பின்கட்டாய்க்கட்டி நகர்வலஞ் செய்வித்துச் சித்திராங்கியின் மாளிகைக் கெதிரிலிருக்கும் இருண்டகானகத்திற்கொண்டுபோய் பாறையின்மீதுபடுக்கவைத்து இவ்வாளாயுதத்தினாலே அவன் மாறுகை மாறுகாலை வெட்டியெறிந்துவந்து எனக்குத்தெரியப்படுத்தக்கடவீர்களென்றுக் கடுமையான கட்டளையிட்டான். அதற்குக் கொலையாளரும் அந்தப்படியே செய்வித்து வருகிறோம் புண்ணியரே என்று பணிந்து வாளை எடுத்துக்கொண்டு அந்தக்கொலையாளிகள் விரைவாக நடந்து சிறைச்சாலைக்குட் புகுந்து சாரங்கதரனைக்கண்டு, இளவரசே தாங்கள்செய்த குற்றத்திற்காக நரேந்திரமகாராசன் மந்திராலோசனைசெய்து தங்களைக்கூட்டிக்கொண்டுபோய் இருண்ட காட்டினில் பாறையின்மீது படுக்கவைத்து உமதுமாறுகையையும் மாறுகாலையும் வெட்டிவிடும்படிக் கட்டளையிட்டார். அன்றியும் இந்தவாளாயுதத்தையுங்கொடுத்தார். ஆகையால்

இளவரசே இதற்கென்ன சொல்லுகிறீரெனக் கேட்டு சாரங்கதர
ன் அரசரா சிவமே இதென்ன கொடுமை "வழியோடுபோகப் பழி
வந்து நேர்ந்ததே' என்று சிந்திக்கத்தொடங்கினன்'

ஆ ஹாஹா! அரசனே! இவ்விதம் அடியேனுக்கு அமைத்ததே
னே பானே யான் மூன்ஜென்மத்திற்செய்ததீவினைபின்பயனேஅல்
லது என்தந்தை செய்ததவத்தின்பலனே இவ்வினைவந்து மூண்ட
தற்குக் காரணம் யானென்றுமரியேனே இதற்கென்னசெய்வேன்
சிவமே நீயேஎனக்குப் பக்கத்துணையாகவிருந்துஎன்னைக்காப்பாற்
றிரக்ஷிக்கவேணுமதவமே! அந்தசித்திராங்கியின்மையலிற்சிக்கிஎன்
தந்தை என்மீதிருந்த பக்ஷம் நீங்கி அவள்மொழியே சத்தியமென்
றுணர்ந்து நீதியைத்தவிர்த்து என்னுடைய கைகாலை வெட்டிவிடும்
படிக்குக் கட்டளையிடயான்செய்ததீதொன்றுமில்லையே அப்படிப்
பட்டஎனக்கு வந்ததே தொல்லையேஓம் கைலாசவாசா அன்பர்க
ள்நேசா பாபநாசா சகல உயிர்களைக் காக்கும் ஈசா இத் ததியினி
ல்வந்து காரும் கிருபைக்கண்பாரும் விரைவாகவாரும் அடியேன்
கவலை தீரும்என்று துதிசெய்யும் சாரங்கதரனை நோக்கிஓஇளவரசே
தேவரீர் இங்கு சிவனைத்துதிசெய்துக் கொண்டிருந்தால்காலதாமத
மாய்விடுகிறது இதை வேந்தனறிந்தால் எங்களுக்கு ஆக்கினை நேரி
டும்ஆகையால் சிக்கிரம் எங்கள்சமீபத்தில் வாருமெனக்கேட்டுசார
ங்கதரன் சமீபத்தில் வரக்கண்ட கொலைஞர்ஐயா சேர்வைக்காரரே
உத்தமசாந்த சமதமாதிகுணங்கள் நிறைந்த இளவரசைக் கட்டுவத
ற்கு எங்களுக்கு மனம் வரவில்லையே நாங்களென் செய்வோம் என
க்கேட்டு சேர்வைக்காரன் ஓகொலைஞரே நாமென்ன செய்யலாம்அ
ரசனுக்கினையின்படி நாம்கடவாவிட்டால்நமது உயிருக்கேசேதம்வ
ந்துநேரிடுமே இதையறியாமல் வீண்காலம் போக்கவேண்டாம்சீக்
கிரம்சாரங்கதரனைப்பிடித்துக் கட்டுங்களெனக் கொலைஞர்உடனே
சாரங்கதரனைப்பின்கட்டுமாராகப் பிடித்துக்கட்டிக்கொண்டுவாளை
யுருவிஏந்திக்கொண்டுராஜா வீதியிலிழுத்து வருகையில்சாரங்கத
ரன், சிவபெருமானைப் பற்பலவாறு துதிசெய்துக்கொண்டு வருவ
தைப் பட்டத்தரசியாகிய ரத்னாங்கியின் தோழியானவள் கண்டு
ஐயோ இதென்ன அனியாயக்கொடுமை சகலநற்குணங்களும் வாய்
ந்தசாரங்கதரமகாராசனைகொலைஞர்கள்உழிவினவாளோடுபந்தோ
பஸ்தாய்கட்டி யிழுத்துக்கொண்டுபோகிறார்களே இதற்குக் காரண
மென்னமோ தெரிந்து வருவோமெனச்சென்று சேர்வைக்காரனை
நோக்கி அப்பா சேர்வைக்காரனே! இராஜகுமாரன் என்னகுற்றஞ்
செய்தாரென்று கட்டிக்கொண்டு போகிறீரென்று வினவ, அதற்கு
சேர்வைக்காரன் ஓ அம்மணி! இந்த அனியாயத்தை நானென்ன
வென்று சொல்லுவேன் இந்த சாரங்கதரமகாராசன் மூந்தியனுள்
சகல அலங்காரத்துடன் சித்திராங்கியம்மாள் மாளிகைக்கேகிஅந்த

ம்மாளைப் பலவிததோந்திரவுசெய்து பெண்டுக்கழைத்ததாக சித்தி
ராங்கியம்மாள் பெரிய அரசருக்கு சாக்ஷியுடன் சொல்லக்கேட்டு
அவள்மோகத்தில் மூழ்கியிருக்கும் நமதரசன்வெகுண்டு சினங்கொ
ண்டு இரண்டாவது மந்திரிப் பலதீதிகளோயோதியுங் கேளாமல் சித்
திராங்கி சொல்லிய வசனத்தையே நம்பி சாரங்கதரமகாராசனு
டைய ஒருகையையும் ஒருகாலையும் வெட்டிவிடும்படி எங்களுக்குக்
கட்டளையிட்டபடியால் நாங்களும் அரசன்சொற்படி சாரங்கதரம
காராஜனைக்கட்டி இராஜவீதியைச் சுற்றிக்கொண்டு இருண்டவனத
திற்குச்சென்று மாறுகாலும் மாறுகையும் வெட்டிவிடப் போகிறோ
மெனக்கேட்டு ஐயையோ இதற்குத்தானு எங்களரசித் தவஞ்செய்
து இப்புத்திரனைப்பெற்றுளென்றுசொல்லி வாயிலும் வயிற்றிலும்
அடித்துக்கொண்டோடியுஞ் சென்று ரத்னங்கியைநோக்கி நானெ
ன்னவென்றுசொல்லுவேன் தாயே என்று பணியும்தோழியைஅந்த
ரத்தினங்கி இருகரங்களாலுந் தாவியெடுத்து அடியம்மா பாங்கி அ
தென்னசெய்தி சீக்கிரஞ் சொல்லுவாய் இப்படிப்பட்ட அலங்கோ
லமாய் நீஓடிவந்ததை நோக்குகையில் நம்மவர்கள் யாருக்கோவிப
த்துவந்து நேரிட்டதாகத் தோன்றுகின்றது ஆகையால், காலதாம
தஞ்செய்யாமல் விரைவாகச் சொல்லுமம்மாவென அதற்கு அந்த
தோழி என்னையாண்டிரக்ஷிக்குந் தாயே! சித்திராங்கிமனைக்கித்தங்
கள் புதல்வராகிய சாரங்கதமகாராஜன் போனதற்காக மாறு கால்
மாறுகை வாங்கிவிடுபடி அரசன் கட்டளையின்படிக்குக் கொலைஞ
ர்கள் சாரங்கதரமகாராஜனைப்பிடித்துகட்டிராஜவீதியாகப்பிடி
த்துக்கொண்டு போகின்றார்களெனக்கேட்டு அந்தரத்தினங்கி, அந்
தோ அந்தோ அடிபாங்கி, இதற்கென்னசெய்வேனடிசீக்கிரம்வாடி
ஒடிப்பார்ப்போம் என்றுதாதியுடனேடிக்கொண்டேஓபரமசிவமே
இதற்காகத்தானே உம்மைநோக்கித்தவஞ்செய்துபாலனைப்பெற்று
வளர்த்தேன், பாங்கிசொல்லிய வசனத்தைக்கேட்ட மாத்திரத்தில்
பாலனைப்பெற்றவயிறு பற்றியெரியுதே, கால்கள் நடையோடவில்
லையே மனந்தட்டுகெட்டுத் தடுமாறி திப்பிரமையடைந்தேனையோ
கைலைவாசா! இதுவென்ன பாபமோ! யாரிட்ட சாபமோ! எந்தப்
பெரிபோர்களுடைய வயிறெரியச் செய்தேனே! யாரை மனம்போ
னபடிக்கி வைதேனே! முன் ஜென்மாந்திரங்களில் யாருடையசித்
தைக் கொய்தேனே! மான்மழுவேந்துங் கையனே! வெண்ணீருபூசி
யமெய்யனே! புலித்தோல் தரித்த தூயனே! அமலனுகிய ஐயனே!
என்று பற்பலவாறு புலம்பியழுதுக்கொண்டேவந்தகொலைஞர்கள்
கட்டி இழுத்துக்கொண்டு செல்லுஞ் சாரங்கதரனைக்கண்டு அடா!
என் கண்மணியே! மாசிலாமணியே! நவமணியே! என் சிந்தாமணி
யே நிகரில்லாத அறியகனியே என்வயிற்றிற்பிறந்த உனக்கும் இக்
கெதி வாய்த்ததோ கொலைஞர்களுன்னைக் கட்டியிழுத்துக்கொண்டு
போக யான் பார்த்துப் பரதவிக்க என்னபாவஞ்செய்தேனே பாவி

யாகிய என்வயிற்றிற் பிறந்த உனக்கு இதுதான் பலனே உன்னை விட்டுப்பிரிந்து எப்படி உயிர்தரிப்பேனடா என்கட்டிக்கரும்பேஉத்தமனுகிய உனக்கு நின்தந்தை இக்கொடிய ஆக்கினைசெய்யும்படிஎப்படிமனந்துணிந்து கட்டளையிட்டாரோ உலகத்தினில் நிகரில்லாத நற்குணசம்பத்தையும் கல்வித்திறத்தையும் மன்னுயிர்களைத்தன்னுயிர்போல வெண்ணிப் பாதுகாக்கும் பூததயைபச்சாத்தாபமுடைய தெகிட்டாத தெள்ளமுதே! இதற்கு நாஎன்ன செய்வேனடாமகனே! பூரணச்சந்திரனைப்போலொத்த திருமுகனேகனவிலும்பொய் சொல்லாதஅகனே அஷ்டைஸ்வரியசம்பத்தினையடைந்த சுதனே! அடா சிவபக்தனே! நற்கீர்த்தியைப்பெற்ற பரிசுத்தனே! என்று பலவாறு அழுதுபுலம்பும் அன்னையைநோக்கி சாரங்கதரன் கூறுகின்றான்.

கேளும் என்னை யீன்றெடுத்ததாயே யானும் என்னுடைய மந்திரியும் வேடிக்கையாப்புறுக்கோப் பறக்கும்படிவிடுத்து பார்த்துப் பொழுதுபோக்கிக்கொண்டிருக்கையில் மந்திரியின் புறு கூண்டைநாடிவந்து இறங்கியது. என்னுடைய புறுவானது சித்திராங்கியம்மாள் வீட்டிலிறங்கியது. அதையறிந்து யான் சேவைக்காரனையனுப்பிப் புறுவைக் கேட்டு வாங்கிவரும்படிக்கிச் சொன்னேன்சேர்வைக்காரனுஞ் சென்று சித்திராங்கியம்மாளைக் கண்டு பணிந்துபுறுவைக்கொடுக்கும்படி கேட்க்க அதற்கு சித்திராங்கியம்மாள் சேர்வைக்காரனேபுறுவை யுன்னிடங்கொடேன் சாரங்கதரனைநான்பார்க்கவேணும்நான்வரச்சொன்னதாகச் சொல்லுவையேயாகில்அவனிவ்விடம்வந்தால் புறுவைக் கொடுத்தனுப்புகிறேன்மற்றெவர்கள் வந்தாலும் புறுவைக் கொடேனென்று சொல்லியனுப்பியபடியால் நம்மைப்பார்க்கவேணுமென்ற அபேக்ஷை நமது சிறியதாயாருக்கிருக்கிறப்போல தோன்றுகிறதென் றெண்ணி யானும் பிரயாணப்பட்டேன் அதையறிந்து மந்திரி நீ அங்கு சென்றால்ஏதோ ஒருவகைத்தன்ப மூமக்குவந்து நேருமென்றுப் பலதரஞ்சொல்லித்தடுத்தும்சிறியதாயார் வீட்டிற்குப் புதல்வன் சென்றலென்ன தன்பம்வந்தகேரிடும் போபோ இப்படிப்பட்ட வார்த்தைகளைச் சொல்லவேண்டாமென்று மந்திரியின்மீது யான்கோபித்து அவனைப்பலவாறுவைதுவிடைபெற்றுக்கொண்டு சென்று சித்திராங்கியம்மாள் மனையையடைந்து அந்தம்மாளைக்கண்டுபணிந்து தயைசெய்துபுறுவைத்தரவேணும் அம்மணியென்று வினயமாக மொழிந்தேன் அதற்கந்தம்மாள்என்னைநோக்கி என்னைசக்கண்ணுளரேஉலகத்தில்மனைவிமனுளனுக்குப்பணிவதுண்டு அப்படிக்கிருக்க மணவாளரேமனைவியைப் பணியத்தகுமாவென்றுப்பற்பல வார்த்தைகளாடி என்னைப்போகவிடாமல் மடக்கிக்கொண்டுத் தன்னைக்கூடிக்கலந்தினையும்படிஇனியில்லாத துயரப்பட்டாள்; அதற்கு யான் எள்ளளவேனும்

கம்வைத்துதேவரீருடைய தெரிசனந்தர சிக்கிரம் வாருமையா சுவாமியென்று ருக்மணிராதனைத் துதிசெய்தனள் பாண்டுரங்கன் இந்தப் பதுமவல்லியின் முறையாகும் துதிக்குத்தான்ருணஸ்தனாகி விட்டோமே இந்த ருணத்தைச் சீக்கிரம்போய் தீர்க்கவேணுமென்று கருதி இரவினில் கதவுகள் பூட்டியபின்பு சோகாமேளன்வீட்டிற்குச்சென்று சோகாமேனன் எதிரினில்நின்றனர் அதைக்கண்டு சோகாமேனன் பகவான் திருவடித்தாமரைகளில் சாஷ்டாங்கதெண்டனிட்டெழுந்து மனைவியையழைத்து சிக்கிரமாகப் பகவானுக்கு ஆசனங்கொண்டுவந்துபோடென்றுநேமிக்க அந்தப்படியே பதுமவல்லி தக்கபீடத்தைக் கொண்டுவந்துபோட்டு சுவாமி வீற்றிருக்கவேணுமென்று வேண்ட பகவானும் புன்சிறிப்புடன் பீடத்தின்மீது வீற்றிருந்தார் அப்போது சோகா மேளன் பகவானை நோக்கி ஓ சுவாமி கிருபாநிதியே தேவரீர் அடியேனுக்கு ஆலயத்தினில் தெரிசனங் கொடுக்கவேணுமென்று பிரார்த்தித்துக்கொள்ள பகவான் அப்படியே செய்கிறேனென்று சொல்லி சோகாமேளன் கையைப் பிடித்துக்கொண்டு சந்நிதிக்கழைத்துவந்து தன்னருகில் உட்காரவைத்துக்கொண்டு ஓ சோகாமேளரே நீ அந்தரங்கபக்தனாகும் உன்னை ஒருநிமைப்பொழுதேனும் மறவேன் நாமதேவருடன் புசிக்கிறபோதும் மற்ற பக்தர்களுடன் கலந்திருக்கும்போதும் உன்னினைப்பு வந்துகொண்டே யிருக்குமென்று சொல்லக் கேட்டு சோகாமேளன் பகவானுடைய உபயதிருவடிகளையும் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஓ சுவாமி தீனபந்துவே அனுதை கட்குநாதனே கிருபாநிதியே தேவரீருடைய பரிபூரணகடாட்சமே அடியேனுக்குத் தாரகமாயும் போஷகமாயும் போக்கியங்களாயுமிருக்கின்றதென்று விண்ணப்பஞ்செய்தான் இப்படியாக யிவர்களிருவரும் பேசிக்கொண்டிருப்பதை பிராமணர்கள் கதவுக்கு வெளியிலிருந்து கேட்டு வியப்படைந்து சோகாமேளன் சந்நிதிக்குள் பகவானுடன் பேசிக்கொண்டிருக்கிறப்போ லிருக்கின்றது பண்டரிநாதன் சந்நிதிக்குள் பஞ்சமன் வரத்தகுமா இவனிங்கு வந்தபடியால் நம்முடைய ஆசாரமியாவும் நசித்து பாகசாலையினிடத்தில் சுவானம் பிரவேசித்ததுபோல அறுவகைகுண ஐஸ்வரியசம்பன்னனாகும் பகவானது சந்நிதியில் இந்தப்பஞ்சமன் பிரவேசித்தானென்று சொல்லிக்கொண்டே கதவைத்திறந்து உள்ளே புகுந்துப்பார்த்து அடா சோகாமேளனே இழிகுலத்திற்பிறந்தவனுகும் நீ நாங்கள் கதவுமூடியிருக்குஞ் சமயத்தினில் எப்படியுள்ளேபோ

சஞ்சலமடையாமல் நீ அண்ணா நான் பிள்ளை ஆனதால் இப்படிப்பட்ட துஷ்டவார்த்தைகள் எண்ணிடம்வசனிப்பது நீதியல்லவென்று சொல்லியதைக்கேட்டு அந்தசித்திராங்கி என்மீது கடுஞ்சினங்கொண்டுஇப்போது என்னைக்கூடி என்னுடைய ஆசையைத் தீர்க்காமற்போவீரேயாகில் அரசனிடஞ் சொல்லி எப்படியாகிலும் உன்னுயிரைமாய்க்கும்படிச்செய்து யானும் என்னுயிரை மாய்த்துக்கொள்ளுகிறேனென்று கூறினதாதலால் நானும் அவ்வாறேசெய்யும் அம்மணினைனக்குச் சிவபெருமான் சாக்ஷியாகவிருந்து என்னைக்காப்பாற்றுவரென்றுசொல்லி வாளினுல் கச்சையைபறுத்து அந்தம்மாள்கையைவிடு வித்துக்கொண்டோடியும் வந்து மந்திரியின் பக்கலடைந்தேன் இதுவே நடந்த உண்மையாகும் அந்தம்மாள் சொல்லியபடி அரசன்என்னைத் தண்டிக்கும்படி கட்டளையிட்டார் இதுமுன் ஜென்மத்திற்செய்த வினைபென்று பெண்ணுகிறேன் தேவர்மூவர் மற்றுமியாவராயிருக்கினும் வினையை யனுபவித்தே தீரவேணும் இதற்காகநீ அழுதுபுலம்புவதாலென்னபயன் என்னைக்காப்பதற்குச் சிவபெருமானொருவரிருக்கின்றார் இதைப்பற்றிநீ விசனப்படவேண்டாம் அரண்மனைக்குப்போய் சேருமம்மணி எனக்கேட்டுஅந்த ரத்தினங்கி அடாமகனே உன்னைக்கொலைஞர்கள் பல்லிடித்து நான் அரண்மனையைடைவதற்கு மனஞ்சகிக்குமோசிறிதுநேரம் இங்கிருப்பையேயாகில் யான்அரசனைக்கண்டு பேசிவருகின்றேனெனக்கேட்டு சாரங்கதரன் ஒஅண்ணாயே தாங்கள் அரசனிடஞ்சென்று எத்தனையாயழுதுபுரண்டு வேண்டிக் கொண்டபோதிலும்அவர் மனமொத்துஎனனை விடுவிக்கப்போகிறதில்லை இதனுலுமக்கு அவமானம் நேரிரிம்ஆகையால் தாங்களென்வார்த்தையைநம்பி அந்தப்புரம் போய்சேர்ந்துச் சுகமாகவிரும் அரசனிடம்போகவேவேண்டாம் அன்றியும் கொலைஞர்கள் நீர்அரசனிடம் போய்வருகிறபரியந்தம் காத்துக்கொண்டிருக்கமாட்டார்களெனக்கேட்டுஅத்தரத்தினங்கி அப்பாகொலைஞர்களேயான் அரசனிடம்போய்வருகிறபரியந்தம்சாரங்கதரனைஅழைத்துபோகாமல்இங்குதானேகொஞ்சநேரமிருப்பீர்களேயாகில் ஒரு கணப்பொழுதினில்இதோஓடிவருகின்றேனெனக்கேட்டு கொலைஞர்கள் ஒஅம்மணி அந்தப்படியே இங்குதானேயிருக்கின்றோம் சிக்கிரம் போய்வாருமம்மாவெனக்கேட்டு அந்தரத்தினங்கிவிரைவாகநடந்து கொலுக்கூடத்தையடைந்து அங்கு ராஜபத்தினிகளுக்கென்று கட்டியிருக்கும் உள்ளறையிற் புகுந்துத் திறையைப்போட்டுக்கொண்டு பாங்கியினுல்தன்வரவை அரசனுக்குத்தெரியப்படுத்த அறிந்த அரசன்திறையைநீக்கிஉள்ளேபுகுந்துமனவியைக்கண்டு அவள் செய்ததீர்க்கதண்டனைப்பெற்று வாழ்த்தி அடிபெண்ணே இதென்ன திரேகமெங்கும்வேர்வைஜலமாயொழுகக்கண்களில் நீர்தாரைதாரையாகப்பொழிகப்பெருமூச்சுடன் அகமுழுகமும் மலர்ச்சியின்றி வெகு சிரமத்துடன்நீ

இங்குவந்த காரணமென்ன சிக்கிரஞ் சொல்லுமென்று வினவிய அரசனைநோக்கி ரத்நாங்கி சொல்லத்தொடங்கினள்.

கேளும்என்பிராணநாயகரே சிவத்தைநோக்கி நாம்அருந்தவத்தைச்செய்துபெற்ற அருமைப்பாலகனுயிசாரங்கதரனுக்குளன தண்டனைசெய்விக்கும்படிகொலைஞர்களிடம்அவனைக்காட்டிப்பிடித்துக்கட்டிக்கொண்டு போகும்படிகட்டளையிட்டீர் அப்படிச்செய்விக்க அவனென்னகுற்றஞ்செய்தானெனக்கேட்டு அரசன் ஓபிராணநாயகி நீபெற்றபிள்ளையாகிய சாரங்கதரன்என்மரபினில்இதுவரையில் யாருஞ்செய்யாத கொடியசெய்கையைச் செய்தபடியால் மநுசாஸ்திரவிதிப்படிக்கி தண்டனைவிதித்தேன் அப்படிக்கியான் செய்யாமல் புதல்வனென்று பக்ஷம்வைத்து அவனைத்தண்டிக்காமல்விடுவேனேயாகில் உலகமென்னைப்பழிக்கும் ஆகையால் நடவாநடைநடந்தக்கால் பிள்ளையாயிருக்கினும் பெண்டீராயிருக்கினும் பக்ஷபாதமின்றி தண்டனைவிதிக்கவேண்டியகடமை என்னதாகையால் என்னைப் பிறர்பழிச்சொல் பகராமலிருக்கும்படியான தருமத்தையான் நடத்தவேண்டியவனுக விருப்பதால் பிள்ளையென்றபக்ஷம் பாராட்டாமல் தண்டனைவிதித்தேன். அன்றியும் பிள்ளையாயிற்றே யென்று அவன்செய்த குற்றத்தை மன்னித்துவிட்டுவிடுவனேயாகில் என்னையாவரும் இகழ்ந்துபேசுவதுமன்றியும், இவ்வரசன் சகல தருமங்களையும் அறிந்தவனுகவிருந்தும் தன்பிள்ளை செய்தகுற்றத்தைக் கருதாமல் தருமத்துக்குவிரோதமாய் நடக்கிறபடியால் இனியின்னுட்டைவிட்டு இலக்குமி நீங்குவதுடன் மீளா நரகத்திற்கு ஆளாகுவனென்று யென்னையிழிவாகவசைக்கூறுவார்கள். ஆகையால் உனக்குமாத்திரம் அவன்பிள்ளையென்ற பட்சமிருக்கின்றபோது எனக்கில்லாமற்போகுமோ! என்னையும் பாசபந்தமானதுவாட்டுகின்றது என்னசெய்கிறது. மனுநீதியைக்கடந்து நடக்கலாமோ நடந்து விளையைமனமாரத் தேடிக்கொள்ளப்போமோ என்று பிராணநாதருடைய சொல்லைக்கேட்டு ரத்நாங்கி கூறலுற்றுள். கேளும் என்னையாட்கொள்ளும் மணவாளரே நமது புதல்வன் சொல்லத்தகாத கொடுமைகள் செய்யாதவனும், குணவாளனும், நீதிநெறியைக் கடவாதவனும், கோபத்தையும் லோபத்தையும்பற்றருத்தவனும் ஆகிய உத்தமகுணசீலனுக்குத் தேவரீர்வெகுமிக்ஷியுடன் மண்ஞ்செய்விக்க வெண்ணியிருந்த தாங்கள் அக்கருத்தைத் தவிர்த்து எண்ணறக் கற்று எழுத்தறவாசிக்கினும்பெண்புத்தி பின்புத்தியென்ற பெரியோர்சொற்படி பின்புத்தியையுடைய சித்ராங்கியின்சொல்லைக்கேட்டு ஏதோ குற்றஞ்செய்தானென்று அவன்மீது பழிசுமத்தித் தண்டனைவிதிக்கக் காரணம் யாதோ அதைத் தெரியச்சொல்ல வேணுமாய் கோருகின்றேன், என அதற்கு நரேந்திரன் அடிமாதே! அந்தப் பரமசண்டாளன் சித்ராங்கி மனைக்

கேகி அவனைச் சிறியதாயாரென்று கருதாமல் தன்னைப் புணரச் சொல்லி அவனை யலங்கோலஞ் செய்வித்துக் கீழேவிழத் தள்ளினதாகத் தக்க சாட்சிகள் மூலமாய் விசாரணைசெய்து அவன்செய்தது குற்றமென்றே கண்ணிற்கண்டவர்கள் சொல்லியதைக்கேட்டு அவனுக்குத் தண்டனை விதித்தேன் அதைப்பற்றி நீ இந்தச்சபையினிற் பேசுவதில் பயனில்லை சிக்கிரம் நீ அரண்மனைபோய் சேர்வாய் என அதற்கு ரத்தினங்கி ஏமாதரசே! பட்டத்துக்குப்பிள்ளையில்லையென்றுசொல்லி அருந்தவஞ்செய்துபெற்ற புதல்வனுக்கு எவளோ புழுக்கச்சிருக்கி சொல்லிய வார்த்தையை நம்பி தேவரீராக்கினைவிதிப்பது அடுக்குமா! இது தகுமா உம்மைப்போன்ற அரசர்களிதையறிந்தால் உமமை மதிப்பார்களோ இதனுமக்கு அவமானமல்லவோ இதைச்சிறிதும் யோசிக்காமல்துணிந்து தண்டனையிட்டீரே இதற்கு யானென்னசெய்வேன் பத்துமாதஞ் சுமந்து பெற்றபாலனை தண்டனைக்குட் படுத்திடக்கேட்ட என்வயிறுபற்றியெரிகின்றதே, உடல் நடுங்குகிறதே, நாவுலர்ந்து போகின்றதே பூமியில்நிற்கக்கூடவில்லையே, அடா மகனே இற்குத்தாலே உன்னையான் பெற்றுவளர்த்ததுஎன்றுசொல்லி அழுதுக்கொண்டே பூமியின்மீது விழுந்துமெய்சோர்ந்துச்சற்றுநேரதிற்றெளிர்ச்துநின்றுள், அப்படி நிற்பவனை நரேந்திரன் கண்டு கடுஞ்சினங்கொண்டவனந்து கோபத்துடன் மொழிகின்றுப் இன்னொருதரம் அப்படி மொழிவையேயாகில் அந்தகொடிய துஷ்டனுக்குவிதித்தஆக்கினையைப் போல உனக்கும் ஆக்கினைவிதிப்பேனென்ற அரசனைநோக்கி, சுமக்திராகாரன் மொழியலுற்றான். கேளும்அரசேபெற்றவள்பிள்ளைக்கி நேர்ந்த ஆக்கினையையும் கொலைஞர்கள் கட்டியிழுத்துக்கொண்டு போவதையுங்கண்டு வயிறெரிந்துவந்து தங்கள் திருவடிகளில்விழுந்து சரண்புகுந்து புதல்வனுக்குக் கட்டளையிட்ட தண்டனையைமாற்றும்படித் தங்களை வேண்டிப்பற்பலவாறு அழுது புரண்டுமெய்சோர்ந்துப் பரதவிப்பதைச்சபையிலுள்ள யாவருங்கண்டு சோர்ந்துவாடி வதங்கிநிற்கிறபோது, தங்கள்மனங் கிஞ்சித்நகினுங்கரையாமல் கடுஞ்சினங்கொண்டு கொடூரமாய்ப் பேசுவது நீதியோவென, நரேந்திரன் கேட்டுத் தன்மனைவியைநோக்கி, அடிமாதே? பொய்யனைப் பெற்ற பொய்க்காரி கெட்ட குணமுடைய நாரி, நீயேதாதேசொல்லுகின்றுப், அதுயின்னதென எனக்கு விளங்கவில்லை விபரமாகச் சொல்லடி என்ற கணவனைப்பணிந்து ரத்தினங்கி சொல்லுகின்றனள்

கேளும் எமதரசே அரசர்குல விதிமுறைப்படிக்குச்சுயம்வரம் சாட்டி ஐம்பத்தாறு தேசத்தரசர்களையும் வரவழைத்துப புரோகிதர் பந்துக்கள் அரசர்கள்யாவருங்காண மணவரையிலிருந்துமாலை சூட்டி உம்மைக் கைபிடிக்கவும் என்தாய் தந்தையாகள் தாரைவா

ர்த்தக் கன்னியாதானஞ் செய்யவந்த அடியாள் உமக்குப்பட்டம் கிஷியன்றி அந்தச்சித்திராங்கி உமக்குப் பட்டமகிஷி யாவாளா இத னும்மை உலகம் பழிக்கும் பழிபோட்டுத் தலைவாங்கும் அந்தப் படிலீயின் வார்த்தையை நம்பித் தவஞ்செய்து பெற்று அருமை யாக வளர்த்தப்புதல்வனை ஆக்கினைக் குடன்படுத்தலாமா மதநீதி பறிந்த உமக்கிந்த குணமுண்டாவதற்குப் பாலகன்செய்த கர்மமா அல்லது வர்மமா இதுதர்மமா மூன்னம திரிலோகசுண்டனுகிய ரா வணன் சூர்ப்பனகையின் சொல்லைக்கேட்டன்றே தம்பி கும்பகர் னன் புதல்வன் இந்திரசித்தன் முதலானேருடன் ராமபாணத்தினு லடிப்பட்டு மாண்டு நரகத்தையடைந்தனன். அன்றியும் தம்பியின் மனையாளாகிய தாரையின் மொழியைக் கேட்டல்லவோ ராமபாண த்தினுல் வாலியும் மாண்டான் மேலும் கற்பினில் மிகுத்த திரௌ பதியின்மீது இச்சைவைத்தக் சேனும் தன்தம்பியர் நூறுபேர்களு டன் பீமனுல் மாண்டான் அன்னியிலும் உமது மூதாதைகளாகிய தரியோதனன் முதலானேரும் அந்த திரௌபதியின் னிமித்தியம ன்றே பாண்டவர்களால் மாண்டார்கள். ஆகையால் மன்னவரே சித்திராங்கியின் சொல்லைமறந்துவிடும்படிக் கோருகின்றேன் அன் றியும் அவள்சொல்லை நம்பலாகுமோவென அதற்கு நரேந்திரன் அடிமாதே உலகத்தில் பதியின்சொற்படி நடக்காமல் எதிர்த்துவா ர்த்தையாடும்படியானவள் பதிவிரதை யாவளோ அவளை விபசாரி யென்றே சொல்லத்தகும் நீ பதிவிரதையா யிருந்தும் என்னுடன் எதிர்த்துப்பேசுவதற்கு ஏற்பட்டாய் இதனுலே நான் உன் புதல்வ னுக்கிட்ட ஆக்கினையைக்கி விடுவிப்பேனென்று கனவிலும் நினை யாதே சித்திராங்கியைப் பழிக்காரியென்றும் நீலியென்றும் பொய் சொல்லுபவளென்றும் வாயில்வந்தபடி பிதற்றுகின்றாய் இன்னெ ருக்கால் அப்படி நீ சொல்லுவையேயாகில் இப்போதே உன்னுயி ரைமாய்ப்பேன் சகலஉயிர்களுக்கும் ஈசனுகிய சிவபெருமானுடை ய வாக்குப் பொய்த்துப்போனபோதிலும் போகுமேயன்றி உத்த மியாகிய சித்திராங்கியின்சொல் பொய்யாகமாட்டாது, இதை யறி யாமல் என்னோடு என்ன மெத்த வாயாடுகின்றாய் அடிநாரி இந்தக் கணத்தில் நீ இச்சபையைவிட்டு வெளியே யோடிபோகாமல் இன் னும் ஏதாகிலும் இங்கு அதிகப்பிரசங்கஞ் செய்வாயாகில் தகூணை மே உன்னைப்பிடித்துச் சிறையினி லடைக்கும்படிச் செய்வேனடி யெனக்கேட்டு சுமந்திராகாரன் அரசனேநோக்கி ஓபூபாலசேளன்னை யின்றெடுத்த அன்னைக்கு நிகரான உத்தமியைத் தாங்கள் காரியெ ன்றும் நீலியென்றும் இச்சபையினில் பேசுவது ஞாயமோ புதல் வன்பொருட்டு தேவர் திருவடிகளில் அபயம் அபயமென்று சர ணம்புகுந்தவர்களை ஆதரிப்பது அரசர்களுக்கு அடுத்த நல்லகுண மாகையால் அக்குணத்தை விடுத்துச் சிறிய மனிவியின் சொல்லைக் கேட்டுப் பெரியமனிவியை இகழ்ந்துப்பேசுவது தருமமோ ஆதியு

கத்தினில் உத்தானபாத மகாராஜனென்பவன் இளைய மனைவியாகிய சுருசியின் வார்த்தையைக்கேட்டு மூத்த மனைவியாகிய சுருசியையும அவள்பெற்ற பிள்ளையாகிய துருவனையும் அரண்மனையை விட்டு நீக்கி வேறுமனையில் வசிக்கும்படி துரத்திவிட உத்தமனுகிய மந்திரி அவர்களிருவருக்கும் உணவாதிகளுக்குவேண்டிய வஸ்துக்களை அரசனுக்குத்தெரியாமல் கொடுத்து அவர்களை ஆதரித்துவருகையில் சிறுவனுகிய துருவன் தந்தையைப்பார்க்கவேணுமென்றே அபேக்ஷை அதிகரித்துத் தன்னன்னைக்குத் தெரிவிக்க அந்த உத்தமியுங்கேட்டு மகனைப்போகவேண்டாமென்று தடுத்தும் துருவன் கேளாமையால் அப்பா மகனே உனக்கு நானெத்தனையாக சொன்னபோதிலும் நீயென்வார்த்தையைக்கேளாமல் ஒரேபிடிவாதமாய் தந்தையைப் பார்த்தே வருவேனென்று வைராக்கியங்கொண்டிருப்பதால் இனி யிதற்கு நானென்னசெய்வேன் உன்னிஷ்டப்படியே போய்வாருமப்பா வெனக்கேட்டு அந்த துருவனும்வெகு சந்தோஷமடைந்து தந்தையிருக்குஞ் சிங்காதனத்தைநாடிப் போகிறபோது தந்தையானவன் சிறியதாயாருடன் உத்தமனென்னும் புதல்வனையெத்து உச்சிமுகந்து மூத்தமிட்டு அவனழகைப் பார்த்துப் பார்த்து களிப்படைந்துக்கொண்டு மூத்தமனைவியின் புதல்வன் தன்னை நாடிவருவதைக் கண்டும் இளையமனைவிக்குக் கோபம்பிறக்குமென்று மூத்தமனைவியின் புதல்வனைக் கண்ணெடுத்துப்பாராமலிருந்தான் அக்குறிப்பையுணர்ந்து அந்த இளைய மனைவியாகிய சுருசியானவள் துருவனைநோக்கி அடாபடலே இந்த சிங்காதனத்தின் மீது நீயிருப்பதற்குத் தகாது வெளியே போடாவென்றுப் பிடரியைப்பிடித்து வெளியிற்றள்ளினுள்

அதனால் துருவன் வெக்கி வெக்கி அழுதுக்கொண்டே தாயாரிடஞ்சென்று சிறியதாய் தன்னைச்செய்த அவமானத்தை மேற்கொண்டு தாயினிடம் விடைபெற்றுக்கொண்டு நாட்டைவிட்டுக்காட்டையடைந்து நாரதரால் உபதேசம்பெற்றுத் தவஞ்செய்துகொண்டிருந்து ஸ்ரீமந்நாராயணனை சேவித்து அவரால் நூதனமாகிய பதவியை யடையும் பொருட்டு வரத்தைப் பெற்றுக்கொண்டு தங்கள் நகரத்தை யடையக்கண்ட தந்தையானவன் துருவன் தவம்புரிந்ததையும் ஸ்ரீமந்நாராயணனுடைய கிருபையைப் பெற்றதையும் நாரதரால் சொல்லக்கேட்டு முன்னம் தானும் இளையமனைவியும் துருவனைச்செய்ணுப்பிய அவமானத்தை பெண்ணிபெண்ணி மெத்த விசனமடைந்து நாரதரால் தேறினவனுகி மூத்தமனைவியின்புதல்வனை அழைத்து அவனுக்கந்த நகரத்தை பட்டங்கட்டிவைத்துத்தான் காட்டையடைந்து தவம்புரிந்து அருமையாகிய பதவியையடைந்தான். ஆகையால் நானேக்கும் சிறியமனைவியின் சொல்லைக்கேட்டுப் பெரிய மனைவியையும் அவள்பெற்ற பிள்ளையையும் துரத்தி

விட்டப் பாதகனுகுமென்று உத்தானபாத மகாராஜனே உலகத்தி
லுள்ள யாவரும் வசைகூறுகின்றார்கள் இதைப்போல நீரும் சிறிய
மனைவியின் சொல்லைக்கேட்டு பெரியமனைவியின் சுதனை தெண்டனை
க்குள்ளாகச் செய்ததுமன்றியும் என்னாயகிய இந்த உத்தமியை
யும ஏதேதோ வாயில்வந்தபடிக்கு வசைகூறுகின்றீர் இதனால் உம்
மை இவ்வுலகம் பழிக்கும் மேலோர்களிடம் வாசித்துத் தேர்ந்த
உமது புத்தி இப்போதேனே கெட்டுப்போயிற்று ஒவ்வாத இந்த
உத்தமியின் மனம் குமுங்கினால் உமதுபுத்திரமித்திர களத்திராதிக
ளுடன் நீரும் அழிந்துப்போவீர் அன்றியும் என் அன்னைக்கு நிக
ரான ரத்தினாங்கியின் இஷ்டப்படிக்கு நடப்பீரேயாகில் இகபரமிர
ண்டிலும் உமக்கு நற்கீர்த்தி யுண்டாகும் மாருபாடாய் நடப்பீரே
யாகில் முன்னம் உங்கள் மூதாதையாகிய துரியோதன மகாராஜன்
திரௌபதையைதம்பி துச்சாதனனால் சபைக்கு இழுத்துவரச்செ
ய்து தன்மானம் பிறர்மானமென்பதைக் கருதாமல் திரௌபதை
யை உமானமாகப் பேசியபடியினாலன்றே புத்திரமித்திர களத்தி
ராதிகளுடன் மாண்டுபோயினர் இவை திருஷ்டாந்தமாகக் கொ
ண்டு இனியாகிலு மிவ்வுத்தமியைப் பலவாறு இழிவுவார்த்தைகள்
பகராமல் தருமமாகவும் பலரும் சரியென்று ஒப்புக்கொள்ளத்தக்
கதாகவும் நடக்கும்படிக் கோருகின்றேனெனக் கேட்டு நரேந்தி
ரன் அடங்காச்சினங்கொண்டு அடிமாதே நீயேன் வீணப் சிரமமெ
டுத்துக் கொள்ளுகிறாய் சாரங்கதாரனுக்கு யான் விதித்த தண்டனை
யை தேவர் மூவர் மற்றும் யாவர் வந்தபோதிலும் மாற்றுவதில்லை
யான்சொல்லிய சொல்லுக் கிரண்டுண்டோ இந்தமட்டில் நீ சபை
யைவிட்டு அந்தப்புரத்தை யடையக்கடவாய் இந்தசொல்லையுந் தடு
த்து நேதாகிலும் எதிரிட்டுப் பேசுவையேயாகில் பிடரியிற்கையை
ப்போட்டு வெளியில் தள்ளும்படியாகச் செய்வேனென்று கம்பக்க
டவாய் எனக்கேட்டு சுமந்திராகாரன் ஓவள்ளலே அரசியின் பிடரி
யைப் பிடித்துச் சபைக்கு வெளியில் தள்ளச்செய்வேனென்றுசொ
ல்லுவது தங்கள்போன்ற அரசர்களுக்கு தருமமோ இதுவென்ன
மோ கெட்டகாலத்தின்கொடுமை யென்று சொல்லி அரசியை நோ
க்கிஓ அம்மணி இனிநாமிக்கிருப்பதில் பயனில்லை தங்கள் புகல்வரா
கிய சாரங்கதர மகாராஜனிருக்குமிடத்தைத் தேடிப்போவோம்வா
ருமம்மணி யென்று சொல்லி அந்தசுமந்திராகாரன் ரத்தினாங்கியை
அழைத்துக்கொண்டு சாரங்கதரனிடத்திற்குச்சென்று கண்டு ரத்தி
னாங்கி அடாபாலா என்ன அவதிவந்துசேர்ந்தது அடாமகனேஎன்
வயிறு பற்றி யெரியுதடா எப்படி உன்னை உயிருடன் மாளும்படி
இக்கொலைஞர் இழுத்துப்போகப்பார்த்து சகித்திருப்பேன் இனி
யென்னுயிர் ஒரு நிமைப்பொழுதும் இப்பூமியில் தரித்திருக்குமோ
அடாமகனே அழகான மூகனே யானும் மந்திரி சுமந்திரனும் அர
சனுடைய கொலுக்கூடமலடர்ந்து உனக்கு நேரிட்ட குற்றத்தின்

கர்ணத்தையும் தண்டனையையும் அரசனுல் சொல்லக்கேட்டு மன
ங்கலங்கி பலவாறு அரசனை வேண்டி தினக்கு நேமித்த தண்டனை
யை தவிர்க்கும்படிக்கு பிரலாபித்தும் உனது தந்தை என்னைப்
பலவாறு இகழ்ந்துப்பேசக் கேட்டு மந்திரி சுமந்திராகாரன் இப்ப
டிப்பட்டகு மகிஷியைப் பலரும் நிறைந்திருக்கும் சபையில் காரியெ
ன்றும் பூரியென்றும் இழிவாகப் பேசுவது தங்களைப் போன்ற
அரசர்களுக்கு தருமமல்ல வென்று பற்பல நீதிகளைப் புகன்றும்
அதகளைக் கர்ணினிலேற்றுக்கொள்ளாமல் மூவர்தேவர் மற்றயாவர்
வந்தபோதிலும் நின்மகனுக்குக் கட்டளையிட்ட ஆக்ஞையை மாற்
றுவதில்லை இன்னு மேதாமலும் எதிர்த்துப் பேசுவையாகில் உன்
னைக் சபையைவிட்டு வெளியில் தள்ளும்படிச் செய்வேனென்று
சொன்னர் அதையும் நான் விரோதமாகக் கொள்ளாமல் சித்
திரங்கியின் சொல்லை கம்பி பெற்ற பிள்ளையைக் கொலை செய்விப்
பது ஞாயமோ வென்று யான் கேட்டேன் அதக்கவர் அடி நீலி
நான் கண்டிப்பாகச்சொல்லியும் அதைக் கேட்டுக்கொண்டு மரியா
தையாய் அந்தப்புரத்திற்கு போகாமல் மேலும்மேலும்எதிர்த்துப்
பேசுகிறையா உனக்கும் ஆக்ஞை விதிப்பேன் போடி வெளியிலெ
று கடுஞ்சினங்கொண்டு புகலக்கேட்டு சுமந்திராகாரன் இனிகாமி
ங்கிருக்கலாகாது இளவரசரிடம் போவோம் வாருமம்மணியென்
றுசொல்ல அந்தப்படியே சபையை விடுத்து வெளிப்பட்டுவந்தோ
மடா மகனே இனி யெப்போதுனைக் காண்பேன் அப்பா என்று
உருகிவாடி யழுது புலம்பும் அன்னையைநோக்கி சாரங்கதரன்சொ
ல்லுகின்றான்.

கேளும் என்னம்மணி என் தந்தையின் கொலுமுகத்துக்குத்
தங்களைப் போகவேண்டாமென்று முன்னமேபானுமக்குச் சொல்
லியும் என்சொல்லைக்கேளாமல் தாங்கள் போயினபடியால்தங்களு
க்கு இப்படிப்பட்ட இழிவான சொற்களைக்கேட்க வேண்டியதா
யிற்று நடந்துபோயின காரியத்தைப் பற்றி பேசுவதில்கண்டகோ
ஷமே யல்லாமல் காரியானுகூலமாகும்படியான பலன் சிறிதுமந்ட
க்கப்போகிறதில்லை வீண்காலம்போகிறது கொலுஞரோ என்னைவி
ரைவாகவரச்சொல்லி தூதப்படுத்துகின்றார்கள். ஆகையால், ஓ!
அம்மணி! நீ அணுவளவேனும் துக்கப்படாமல் அந்தப்புரஞ்சேர்
ந்து சுமந்திராகாரனுடன் சந்தோஷமாக விருப்பிரோயாகில்யானிந்
தகொலுஞருடன் சென்று அவர்களால் அரசன் கட்டளையாகும்த
ண்டனையை யடைந்துச் சிவபெருமானுடைய திருபையினுல் யெ
னக்கெந்த அபாயமும் நேரிடாமல் அவருடைய கடாக்ஷ வீக்ஷண
னியத்தினுலே சகமேவந்துசேருகின்றேன் விடைகொடுமம்மாவெ
ன்றுப் பணிந்தப் புதல்வனை இருகரங்களினுலும் தாவியெடுத்து மு
த்தமிட்டு அப்பா யினியெப்போதுன்னறியமுகத்தைக்காணப்போ

கிறேனடாயென்று அடங்காத துக்கசாகரத்தினில்மூழ்கினவளாகி மெய்சோர்ந்து பூமியின்மீது விழுந்து மறுபடியுந்தேறி அடாமகனே அந்த வஞ்சகியாகிய சித்திராங்கியின் மொழியே உன்னியிரை வாங்க நஞ்சாயமர்ந்ததே இனியென்னசெய்வேனடாஎப்படிஉயிர் தரித்திருப்பேனடாமகனே என்றுமருபடியும் கூவித்து மெய்சோர்ந்து பூமியின்மீது விழக்கண்டசுமந்திராகான் விரைவாக ஓடி அந்த வரசிகித்தக்க சிகிச்சைகளைச்செய்து சோகத்தை மாற்றி சில நீதிகளை போதியபோது சாரங்கதரன் அன்னையாகிய ரத்தினங்கியை நோக்கி ஓ! அம்மணி என்பொருட்டு மெத்தவுஞ்சிரமமெடுத்துக்கொண்டு தாங்களென் தந்தையிடஞ் சென்று எனக்கு நேமித்த தண்டனையை மாற்றிவிடும்படி வெகுவாகக் கெஞ்சித் தஞ்சமடைந்து வேண்டிக்கொண்டும் அரசன் மனங்கனியாமல் உன்மீது கடுஞ் சினங்கொண்டு பலவாறுதூஷிக்க அத்தனையும்பொருத்துக்கொண்டு வெகுதூரம் பாதங்கள்நோக அகமெலிந்து மூகம்வாட பலவாறு புலம்பிக்கொண்டு என்னிடம்வந்தாய் எனக்குயாதொரு அபாயமும்நேரிடாது சிவபெருமான் துணையாயிருக்கின்றார் ஆகையால்என்னைப்பற்றி நீ விசனப்படவேண்டாம் எனக்குவிடைதந்து அரண்மனைக்குச் சென்று சுகமுடனிருமெனக்கேட்டு அடாமகனே விடைதருமென்று கேட்க உன்னைவிட்டுப் பிரியக் கால் பின்னிடைகின்றதே குடல் துடிக்கின்றதே உதிரவாடை வீசுகின்றதே இனியானென்னசெய்வேனடா கண்மணியே என்றுபுலம்பும் அன்னையைநோக்கிசாரங்கதரன் ஓ அன்னையேமுன்னம் யான்செய்தவினையின் பலனுகிய கர்மங்களென்ன உண்டோ அவைகளையெல்லாம்யான் அனுபவித்தே தீரவேணும் ஆகிலும் பதிவிரதா சிரோமணியாகிய தாங்கள் செய்த தபோபலத்தினால் எனக் கெப்படிப்பட்ட கஷ்டம் வரினும் அதுகளையெல்லாம் சிவபெருமான் காற்றில் பாக்கும் பஞ்செனச்செய்து என்னைக் காப்பாற்றிரக்ஷிப்பார் இதிலணுவேணும் பிசகாது யானும் வெகு சுகமாய் வாழ்ந்திருப்பேனென்றுமனதிலெண்ணி அரண்மனைக்குப்போய் சேரும்தாயேயென அதற்கு ரத்தினங்கி அந்தோ அந்தோ தெய்வமே முன்னமேதானேபாவியாகிய என்கெர்ப்பம் ஒங்காமலிருக்கும்படி நீகிருபைசெய்திருந்தால் யான் வெகு சுகத்துடனிருப்பேன்றே இந்த கஷ்டமும் துக்கமும் என்னை யணுகமாட்டாதே சித்திராங்கியின்சொல்லைக்கேட்டு அரசனும் இக்கொடிய தண்டனையை என் புதல்வனுக்குவிதித்தார் அல்லவா வென்று பதறிக்கதறி புலம்பியழுதுக்கொண்டே சோர்ந்து பூமியின்மீதுவீழ்ந்தனள் அப்போது சேர்வைக்காரன் சாரங்கதரனை நோக்கி ஓ இளவரசே அருமையானதவத்தினாலுதித்தப்புத்திரனென்றும் சகல நற்குணங்களும்பொருந்தினவனென்றும் இவ்வஸ்தினாபுரத்தினில் வாழும்படியானகுடிகளனைவோருங்கொண்டாடத்தக்க உத்தமனென்றும் அறிந்திருந்தும் இவைகளையெல்லாம் அனு

வளவேனும்மனதினி லெண்ணுமல் உம்மை யிக்கொடிவாக்கினைக் குட்படச்செய்த அரசன் இங்குவெகுநேரமாய் நாம்காலங்கழித்து கொண்டிருப்பதை யறிந்தால்எங்களையுஞ்சிரச்சேதம் செய்யும்படி விதித்திடுவர் நாங்களென்செய்வோம் யாதொரு குற்றமுஞ் செய் யாத நாங்களும்உம்முடன் மடியும்படியாக நேரிடும் ஆகையால்சீக் கிரம் போவோம் வாருமெனக்கேட்டு சாரங்கதரன்தனதாயைநோ க்கி ஓ அம்மணி அரசனிட்டகட்டளைக்கு மாறுக யானிங்கு வீண்கா லம் போக்கிக்கொண்டிருப்பேனுகில் இதை யரசனறிந்தால் உங்க ளையுமவரையுங்கூட ஆக்கினையால் வதைசெய்யத் தடையொன்றும் நேரிடாது என்னொருவனல்நீங்களும் அனியாயமாய்மடிந்துபோகு ம்படி நேரிடும் ஆகையால் இனிநீகன் இப்படியே அரமனைக்குப் போய் சேருங்கள்என்று சொல்லி சேர்வைக்காரனை நோக்கி அப் பா சேர்வைக்காரனே நீசொல்லியது சரியே வாருங்கள் சீக்கிரங் காட்டிற்குப் போவோமென்று சொல்லி சுமந்திராகாரனை நோக்கி நான்குவேந்தகளும் பஞ்சகாவியங்களும் ஆறுசாஸ்திரங்களும் பதி னெண் புராணங்களும் மநுநீதிகளையுங் கற்றுதேர்ந்த நீயும்பேதை களைப்போலமதிமயக்கங்கொண்டு கவலையை யதிகரிக்கவிசனப்பட வேண்டாம்திடச்சித்தனகி மண்ணென்றும் புழுதியென்றும் பேத மெண்ணுமல் சேர்ந்து விழுந்து கிடக்கும் அன்னைக்குத் தேறுதல் சொல்லி அரண்மனைக்கழைத்துப்போ மப்பாவெனக்கேட்டு சுமந் திராகாரன் சாரங்கதரனை நோக்கிச் சொல்லத் தொடங்கினன்

ஓ அரசே உம்மைவிட்டு யான் தனியே நாயைப்போலஇவ்வு லகினில் உலாவுவனோ இதுவினைப்பயனுமோ எவரிட்ட சாமமோள ன்னினைவு தடுமாறுகிறதே மேனி சோருகிறதே ஆவியுஞ் சொக்கு கிறதே துக்கமும்மீறுகிறதே இனியும்மைவிட்டு ஒருக்கணப்பொழு தேனும் இங்கிருப்பானே யானும் உம்முடன்கூடவே வந்து மடிவ தேதிண்ணமெனருன் அதற்குச்சாரங்கதரன் அப்பாமந்திரீயென் னசகலமுந் தெரிந்தவனுக விருந்தும் பேதைகளைப்போல பாதவி க்கலாயினுய் இது அபன்விதி யென்றுக்கருதித் திடங்கொண்டுயிரா மல்யீயும் எனனுடன்வந்து மடிந்தால்அதிதாகிய உத்தமகுணங்கள் பொருந்தின அன்னையின் துக்கத்தை ஆற்றி யாதரிப்பவர்கள் யா வர் ஓமந்திரி நீ தயரப்படாதே என்சொல்லியுந் தள்ளாதே அன னையின்மனம்நொந்துவாடி பழாமலும் என்னைப்போலநீயிங்கிருந் துக்கொண்டு திருமலரடிகளைத் துதிசெய்து பணிந்திருப்பையாகில் அன்னையும்என்னுடைய கியாபகமின்றிஉன்னையே என்னைப்போல பாவித்து உந்தனைப் பார்த்தே மனங்களிப்புற்றிருப்பள் அன்றியும் என்னை இந்த அன்னையின் கெர்ப்பத்தினில் தங்கச்செய்த அந்தசிவ பெருமானடிசனைத்துதித்து அவரால் மேன்மையடைந்து வருகின் றேன் மேலும் சித்திராங்கியின் சொல்லைக்கேட்டு அரசன பத்தினி

யாகிய என்னை யெந்த துன்பமுஞ் செய்யாவண்ணம் பாது காத்துக்கொண்டிருப்பையே யாகில் உனக்கு இம்மையிற் புகழும் மறுமையில் பதவியும்உண்டாமென்று கூறக்கேட்டுசுமந்திராகாரன் மொழியலுற்றான் உத்தமர்களும் நற்றவ முனிவர்களுங் கொண்டா டத்தக்க நற்குணங்களைப் பொருந்தின அரசே என்னை யாவர் இக ழ்ந்திட்ட போதிலும் எவர்கள் தூஷித்தபோதிலும் அதுகளைக்கரு தாமல் உம்மைத் துடர்ந்தஉம்முடன் கூடவந்து மாய்ந்துவிடஉறு தியாக வெண்ணியான் வந்தவனுகும் அப்படி வந்த என்னை யொ ருபொருளாக வெண்ணித்தேவரீர் அன்னையைக் கரப்பாற்றிக்கொ ண்டிருக்கும்படிக்குவிதித்தக் கட்டளையைமீறுமல் அன்னையின் பக் கலில் இருக்க மனமிசைந்தேன் ஆகிலும் தங்கள் திருமுகத்தைமறு படியும் எப்போது காண்பேனை என்ற சுமந்திராகாரனை நோக்கி சாரங்கதரன் ஓமதிமந்திரி நீஒன்றுக்கும் அஞ்சவேண்டாம்கவலையு ங்கொள்ளவேண்டாம் சிற்றன்னையை யான் செய்த கோலங்களை பர மசிவம் பார்த்திருப்பாரன்றே அந்த மெய்யருக்கு மெய்யனைவ ரென்னைக்காப்பார் யானும்கூடிய சீக்கிரத்திலுனை காண்பேன்யே ம்என்னைக்கண்மிகிழ்வாய் இதிலென்னவும் பிசகிராத இனிமை வாசத் தாயுடன் சேர்ந்து அந்தப்புர மடைந்திருக்கக் கடவாயென அதற்கு மறுதிரி அப்படியே போய்வருகின்றேன வேந்தேயென்று சொல்லிவணங்கிவிடைபெற்றுக்கொண்டு ரத்தினங்கியம்பாள்மூர்ச் சையாய் விழுந்து கிடக்கும்இடத்திற்குச் சென்றான் அப்போதுசே ர்வைக்காரன் சாரங்கதரனை நோக்கிஇளவரசே அரசன் எங்களை அ திசீக்கிரத்தில் வரச்சொன்னார் இப்போது மூன்றுமணிமாமாகப்போ கிறதுஇனியெங்கும் வழியில்நிற்காமல் தாங்கள் எங்களுடன்விரை வாகநடந்து வாருமென அதற்கு சாரங்கதரன் அப்படிக்கேபோக லாம் வாருங்களப்பா வென்று சொல்லி அவர்களுடன் வேகமாய் நடந்து போகிறபோது துசித்திராங்கியின் தோழியாகியரத்தினமாலை கொலைஞர்கள்சாரங்கதரனைக்கட்டி யிழுத்துக்கொண்டுபோவதைக் கண்டு திடுதிடென்றோடிசித்திராங்கியைவணங்கி ஓ! அம்மணி!கொ லைஞர்கள் சாரங்கதரனைக்கட்டி மாறுகால் மாறுகையை வெட்டும் பொருட்டு இழுத்துக்கொண்டுபோகின்றார்களெனக்கேட்டு ஐயோ தோழியெங்கடி இதோபாரும்மாவென்று காட்டக்கண்டு அந்த சித்திராங்கி விரைந்தோடிச்சென்று சாரங்கதரன் திருவடிகளில் வி ழுந்து அந்தோ மணவாளரேஉலகினில்துயரமுற்றும்பழிக்கும்படி வசைக்குட்பட்டாயேஉத்தம சத்தியகுணனே உன்னுருவை யமை த்த படத்தைக்கண்டவுடனே யான்மெத்த மோகமடைந்துவேண் டியும்மை யழைத்தபோது என்னைநோக்கி பெற்றதாயாகிய நீபிள் ளைக்கண்டுமோகித்து அழைப்பது நீதியன்று மேலும்உன்னிஷ் டப்படிக்கி யானுன்னைக் கூடிகலந்துகலவிசெய்வேனுகில் எண்ணியு லகம் பழிக்குமென்று இனியவசனங்கூறித்தடுத்தப் புண்ணியனை

அதற்குமேல் யானுன்மீது சினங்கொண்டு இப்பழிவார்த்தையை உன்பிதாவிடஞ்சொல்லி உன்னை இவ்வாக்கினை யடையும்படிச்செய்வித்த மாபாதகியும் காதகியுமான யான் இனி இவ்வுயிரை உலகத்தினில் கணப்பொழுதேனும் இவ்வுடலில்பொருந்தியிருக்கும்படிச்செய்வேனோ இப்போதே அக்கினிவளர்த்தி அதில் விழுந்து இவ்வுடலைப் போக்கியும்மிட பொன்னடியைச்சேர்த்து வாழுவருகின்றேன் என்று சொல்லி ஆறுதுயரக் கடலில் விழுந்து புலம்பி யழுகிற சிற்றன்னையைநோக்கி சாரங்கதரன் ஓ அம்மணி! யான்முன்னெ ன்மத்திற் செய்த வினையின் பலனை அனுபவிக்கவேண்டியவனுயிருப்பதனாலே அதற்குக் காரணம் யாயும் காரணூதம் என்தாதை யாயு மிருந்தார். உன்னையும் இன்னொருவராயும் இவ்வாறுசெய்விக்கக் கூடுமோ அவனசையாமல் அணுவும் அசையுமென்பதையொழித்து என் பாதங்களை விட்டுவிடும அம்மணியென அதற்கு சித்திராங்கி கண்களில் நீர் தாரையாக வோடவிட்டுக் கொண்டு சொல்லுகின்றாள்.

என்னருமை துரையே உமது பெருமையை யுணராமல் உமக்குசிறுமை யுண்டாகும்படிச்செய்வித்த என்னையுமதுவாளினை லிரண்டு துண்டாகுப்படி வெட்டியெறிந்தாலும் உமக்கு தோஷமுண்டாகுமோஉண்டாகமாட்டாதுமேலும் என்னையெதிலுஞ்சேர்க்கையில்லாமல் செய்துவைத்தப்படுபாவியின் குலமும் என்மனந் துடித்து எப்படி எண்ணிவந்த எண்ணமழித்ததோ அப்படி யவன் குலமழிய வேண்டியது அப்பா கொலைஞர்களே இதற்கெல்லாம் முதன்மைப் பாவியாகிய என்னைவிடுத்து என்பிராணநாயகரைவெட்டுவது ஞாயமோ இந்த உத்தமகுணசிலரை விடுத்து என்னைக் கட்டிக்கொண்டுபோய் மாறுகாலும் மாறுகையும் வெட்டி அதை யடையாளமாக உங்கள் கொடுங்கோல் மன்னனுக்குக் காட்டிச்செல்லீர் உங்கள் பாதங்களைப் பணிகின்றேன்என்றுக் கதறி முறையிட்டழுதுபுலம்பும் சித்திராங்கியின மொழிகளைக்கேட்டு சோவைக்காரன் ஓ அம்மணி தாங்கள்சொல்லியபடி இளவரசருக்கு பதிலாய் உம்மை வெட்டிக்கொண்டுபோய்காட்டினபோதிலும் தான் பெற்ற பிள்ளையெனப் பாராமலும் மகனுக்குக்கேட்ட பெண்ணைத் தானுகூடக்கருதி மகனை வெட்டும்படிக்கட்டளையிட்ட அனிதிஅரசன எங்களை யெளிதில் விடுவாரா விடார்யெனச்கேட்டு சித்திராங்கிபற்பலவாறு பகர்ந்து அழுதுபுலம்புவதைக்கண்டு சாரங்கதரன் ஓ அம்மணி! தாங்களிப்படி பதறிக்கதறி யழுதுபுலம்பி வாடுவதால் என்னபலன் அடையப்போகிறீர் யாதொரு பலனையு மடையப்போகிறதில்லை என் பாதத்தை விடும் உமக்கென்ன குறை நரேந்திரமகாராஜனிருக்கிற பரியந்தம் உமக்கு யாதொரு குறைவும்நேரிடமாட்டாதுவீண் காலம்போகின்றதெனக் கேட்டு அந்த சித்திராங்கி ஓ என்பிராண

நாயகடுரை உமக்காக யான் மெத்தக் கஷ்டமெடுத்துக் கொண்டுவிர
தமநிட்டித்தேன் அந்த விரதமெனக்குப் பலியாமலும் உம்மை இ
க்கொடுமையாகிய தண்டனையினுல் சாகச்செய்தது அன்னியிலும்
உம்மை யிப்படி பழிசெய்வித்தப் பழிக்கு பதில் அந்த நரேந்திர
னென்னுங் கொடிய பாவியி னுடலை என்தந்தையின்சூலத்தால்சித்
திரவதை செய்வித்து அவனுயிரைப்போக்கி அதின்பின்யானும் அ
க்கினியிற் பிரவேசித்து உமதிடம்வந்துசேருவேனென அதற்குசா
ரங்கதரன் ஒ அம்மணி இக்கேயே வெகுநேரமாய் விட்டது யான்
போகவேண்டும்ஆனுல் எனக்கொருவரங் கொடுப்பாய்மாதேயென
அதற்குசித்திராங்கி என்னுயிரையே அவசியங் கொடுக்கிறேன் வெளி
யிடுமென அதற்கு சாரங்கதரன் ஒமங்கையுன் தந்தை சித்திரா
ங்கதமகாராஜனுல்என்தந்தைக்கொரு தீங்கும் நேரிடா வண்ணங்
காப்பதன் கடன் அன்னியிலும் நமக்கு வாய்க்குங் கஷ்டம் பாவ
ம் முன்னம் நாம் செய்த வினையே பாமென்றுணரக் கடவாயென
அதற்குசித்திராங்கிஅந்தப்படியே நடந்துக்கொள்ளுகின்றேனென
விடைபெற்றுக்கொண்டு சாரங்கதரன் சேர்வைக்காரனை நோக்கி
இனி முன்னுக்கு நடப்பாயெனக்கேட்டு சித்திராங்கி என்னுயிரையே
போகின்றீரா அந்தோ! ஒம் கெங்காதரா! சந்திரசேகரா! ஹர
ஹரா பரமசிவமே உமையவள் நாதா மூனிவர்களேத்தும் பாதா
வேதா தீதா ஞானபோதா நான் கனவிலும் அன்னியர்களைக் கரு
தாமல் சாரங்கதரமகாராஜன் திருவடிகளையே தஞ்சமென்று பணி
ந்திருந்த வுண்மையாகில் நரேந்திரன் ஆக்கினையின்படி கொலைஞர்
கள் சாரங்கதரருடைய மாறுமை யுமாறுகாலும் வாளினுல்வெட்டு
கிறபோது தேவரீர் அங்கெழுந்தருளியவருக் கொருபொல்லாங்கும்
நேரிடாவண்ணம் கிருபைசெய்வதன்றியும் அவருக்கென்றும் அழி
யாப் பெருங்கீர்த்தி யுண்டாகும்படிச் செய்ய வேண்டும் ஐயனே
என்று சிவபெருமானைத் துதிசெய்து வேண்டிக்கொண்டு தோழி
யுடன் சித்திராங்கி மெத்தக்கவலையுடன் அரண்மனையை யடைந்த
னள் இதற்குள் சுமந்திராகாரன் ரத்தினுங்கியி னருகிற்சென்று சை
த்தியோபசாரங்களால் மூர்ச்சை தெளிவிக்க ரத்தினுங்கி யெழுந்து
மைந்தனைக்காணுமல் தியங்கி மயங்கி அப்பாசுமந்திரா மைந்தனை
ங்குற்றுன் மறுபடியு மினனெருக்கால் என்னருமைப் புதல்வனைக்
காண்பானேயென்று கலங்கிப் பலவாறு வயிற்றிலும்வாயிலும்மார்
பிலும் அறைந்துக்கொண்டு கோவென்று புலம்பியழுவதைக்கண்டு
சுமந்திராகாரன் பல நீதிகளையோதி தேற்றி ஒ அம்மணி! இப்படி
யழுது புலம்புவதால் யாதொரு பயனுமில்லை வினைப்பயனை விலக்க
விண்ணவராலு மாகாது பிரமன்விதித்தவிதி பிசகி நடவாது அரண்
மனைக்குப்போவோம் வாருந்தாயே என் ரத்தினுங்கி அப்பா சுமந்
திராகரா உனைரசனைப்பிரிந்து அனுதியாகப் பாதேசியைப்போல
கின்றுயா அடிபாங்கி என்மகனெங்கடி எப்படிப்போனடி கொலை

ஞரிழுத்துச் சென்றுரோ அடா குற்றமற்ற குலமகனே உன்தலையி
லித்தலிதிப் பிரமன் எழுதினனே அடிதோழி பெற்று மலடியானே
னே சித்திராங்கியின் சொல்லால் பிள்ளையை இழக்கலானேனேஎன்
னைப்போலுங் கொடும்பாவிகள் இவ்வுலகத்திதுண்டோ இனியரை
க்கணமேனு மிவ்வுயிரை வைத்திரேனடி யானும் என்பிள்ளையுடன்
மடிவேனடி யென்று தரையிற்புரண்டு புரண்டு அழுது புலம்புகிற
ரத்தினங்கியை நோக்கித் தோழிசொல்லுகின்றுள்கேளும் என்னம்
மணி புழுவைபோலத் துடித்துப் புலம்பியழுது பூமியில் விழுந்து
புரளும் உத்தமியே பாலனை கொலைஞருடன் போயினன் வீணுயி
ங்கு பிரலாபித்துக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை அன்னி
யிலும் கணவன் உயிரோடிருக்கும்போது தாங்கள் உயிரைவிடுவது
நீதியல்ல பழியும்பாவமும் உன்னையடையும் ஆகையால் நாம்அரண்
மனையைச் சேருவதே உத்தமம் என அதற்கு ரத்தினங்கி அடிபா
ங்கி அப்படியானுல் உன்னிஷ்டப்படியே அரண்மனைக்குப் போ
வோம் இங்கொரு விசேஷஞ் சொல்லுகிறேன் கேளும் அதென்ன
வெனில் பதியே தெய்வம் பதியே குருபதியே பரமகுருபதியே பத்
தினியென்றும் நினைத்து பதியைபோஷிப்பதிலும் பதிக்குத்தொண்டு
செய்வதிலும் பதியின்மனதின்படிக் கலவிசெய்வதிலும் பதியினிட
த்தில் சாந்த சுமதமாதி குணங்களுடன் மிழ்ந்திருப்பதிலும் யா
தொரு குற்றமுமின்றி யான் பதிபக்திசெய்யும் பதிவிரதையேயாகி
லும் என் புதல்வன் சித்திராங்கியினிடத்தில் யாதொரு அக்கிரம
முஞ்செய்யாத உத்தமசதிய சந்தனுயிருப்பனேயாகில் புதல்வனு
டைய கைகால்களை கொலைஞர்கள் வெட்டினபோதிலும்அவனுக்கு
யெந்தவிதத்திலும் ஆபத்துநேரிடாமலும் அறுப்பட்டகைகால்கள்
மறுபடியும் வளரும்படிக் கிருபைசெய்து காப்பாற்றவேணும் அர
கரா கைலாசவாசா அம்பிகை நேசா வென்று துதித்துக்கொண்
டாடி அந்தரத்தினங்கியை சுமந்திராகாரன் தோழியுடன் அரண்ம
னையைச்சேர்ந்து மகனே மகனேயென்ற யேக்கத்தினுல் தூக்கமி
ன்றி இருந்தனள்.

இவ்வண்ணம் ரத்தினங்கி அஸ்தினுபுரத்தில் துக்கசாகரத்தி
னில்மூழ்கிக் கரைகாணுமலிருக்க அங்கேசாரங்கதரனை யழைத்துக்
கொண்டுபோகுங் கொலைஞர்கள் சாரங்கதரனை நோக்கி ஐயா இள
வரசரே மெத்த நேரமாயிற்று சீக்கிரம் நடந்து வாருமையா வென
அதற்கு சாரங்கதரன் அப்பாகொலைஞர்களேமெத்தநேரமாயினது
மெய்யே இனிக் காலதாமதஞ்செய்யாமல் உங்களிஷ்டப்படியேசீக்
கிரம் நடந்துவருகின்றேன் வேகமாய்நடந்து வாருங்களென்றுசொ
ல்லி விறைவாக நடந்து சொல்லுகையில் இரண்டாவதமந்திரியும்
அங்கு சாரங்கதரனைக்கண்டு ஐயா இளவரசே இந்தபாலியத்திலே
உமக்கிவ்விதி வந்தடையும்படி அந்த பிரமதேவனுக் கெப்படிதை

வந்ததோ நின்தந்தையும் நினக்கு இந்ததண்டனை விதிக்கவாயெப்
படி வந்ததோ அந்த கரேந்திரனைப் பார்க்கிலும் அதிக நீதிமார்க்க
ங்களைக்கற்று தேர்ந்த உத்தமனே இக்கொடுமையை என் கண்க
ளாரப் பார்த்து எப்படிசகிப்பேன் இதை பார்க்கத்தானே என்னை
யிங்குவரும்படிவினை தள்ளிக்கொண்டுவந்தது அரகராசிவசிவ சம்
போசங்கரா நானென்னபாவம் பண்ணினேனே என்று தன்னைத்
தானே நிந்தித்துக்கொள்ளும் இரண்டாவது மந்திரியைநோக்கிசா
ரங்கதரன் ஐயா மதிதனிற்றேர்ந்த மந்திரியாகியும் சகல சாஸ்திர
சம்பன்னராகியும்மநுநீதிப்படிநடக்கும் உத்தமராகியும் விளங்கும்
நீரே இப்படிமதிகலங்கி கவலைமேற்கொண்டு விசனமடைந்தால் எ
ன்போலொற்றவர்கள் கலங்கிவாடி அழுது புலம்புவதற்குச்சொல்
லவேண்டுமோ ஒருவன் முன்ஜென்மத்தினி லெந்தெந்தகர்மங்களை
ச் செய்தானே அந்தந்த கர்மங்களை இந்த ஜென்மத்தினில் அனுப
விக்காமல் விடமாட்டாது அதுபோலயான் முற்பிறப்பினில் எந்த
கர்மத்தைச்செய்தேனே அக்கர்மவிசேஷத்தை இந்த ஜென்மத்தில
டையும்படிபிரமன் என்தலையினி லெழுதிவிட்டிருக்க அந்தகர்மவி
சேஷத்தை யானனுபவித்தே தீரவேணுமல்லவா இதை நீயுணர்ந்
திருந்து தெரியாதவரைப்போல விசனப்படலாமோ இனியிவ்விச
னத்தையொழித்து சிக்கிரம் என்தந்தையின் கொலுமுகம்போய்
சேரும் அப்படிக்கிப்போகாமலென்னுடன் பேசிக்கொண்டிருப்பீ
ரேயாகில் இதையென்தந்தையறிந்தால் உமக்கும் தண்டனை நேரிடு
ம் ஆகையால்விரைவாகச்செல்லுவதேஉத்தமமெனக்கேட்டு இரண்
டாவதமந்திரியும் சாரங்கத்தானைநோக்கி ஓ இளவரசேதாங்கள்சொ
ல்லியது சரியே ஆகிலும் விசேஷமொன்றுளது அதென்னவெனி
ல் சித்திராங்கியின் மொழியைக் கேட்டுப்பெரிய அரசன் கடுஞ்சின
முகொண்டு உம்மைக் கொலைசெய்யும்படிக்கி யோசிப்பதை யறிந்து
யான் வெகு நீதிகளை யெடுத்துத் துறைத்துத் தடுத்தேன் அதைய
றிந்து முதல் மந்திரியானவன் யென்சொல்லைச்சிறிதேனுங்கவனிக்
காமல் அரசனுக்குக்கோபமூட்டி மாறுகால் மாறுகையும்வெட்டும்
படிக்கிக்கலைத்துவிட்டான் அவன் சொற்படியே அரசனும்உமக்கு
தண்டனைவிதித்தபடியினாலே அந்த நீதியைச்சிக்க மாட்டாமல்
அரசனை நோக்கி, ஓ! பூபாலகரே பிள்ளைக்கிப்பெண்ணைப்பேசி அப்
பெண்ணின் அழகைக்கண்டு காம்ந்தகாரனுகி மருமகளாகக் கொ
ள்ள நிச்சயித்த அம்மங்கையை மனைவியாக மணஞ்செய்துக்கொள்
ளும்பொருட்டு யெண்ணங்கொண்ட உம்மைப்போல கொடுங்கோ
லரசனை யானெங்குங் கண்டதுமில்லை யெவர்களாலுஞ் சொல்லக்
கேட்டதுமில்லை அன்னியிலும் சாரங்கதரன்மீது சித்திராங்கிபழிச்
சொல்லியோத அதைக்கேட்டு வாதிப்பிரதிவாதிகளை யெதிரில்விரு
த்தி விசாரணைசெய்து இவன் சொன்னதற்பு இவன் சொன்னது
ஒப்புஎன்று யோசித்துத் தண்டனைவிதிக்காமல் ஒருதலைப்பக்ஷமாய்

தண்டனைவிதித்த அதிபயசனுகிய உமதுகொலுவினில் யான் மந்திரியாக விருப்பதைவிட கடுங்காட்டிற்குச்சென்று வசித்திருப்பதுமெத்த நலமாக விருக்குமென்று சொல்லி உடனே சபையைவிட்டெழுந்து வந்துவிட்டேன் ஆகையால் அரசன் எண்மீது கோபங்கொண்டு எனக்கு தண்டனைவிதிக்கவும் யானதற் குடன்பட்டிருக்கவேண்டிய அவசியமுமில்லை இதைப்பற்றி யுனக்குக் கவலைவேண்டியதில்லையானும் உம்முடன்கூடவேயிருப்பேனெனக் கேட்டு சாரங்கதரன் அப்படியாஎல் பயப்படவேண்டியகாரணமில்லை உமதிஷ்டப்படியே என்னுடன்கூடவே யிருமையாவென்று சொல்லி மந்திரியுடனும்கொலைஞர்கள் பின்சென்றபோது கொலைஞர்கள்சாரங்கதரை நோக்கி ஐயா இளவரசே இதுவே இருண்டவனமும்வரண்டபாறையு மானபடியினாலே இப்பாறையின்மீதுதாங்கள் சயனிப்பீர்யெனக்கேட்டு சாரங்கதரன் அந்தோசிவனே இந்த விதியனுபவிக்கச் செய்தாய் இக்கொலைஞர்கள் என் காலையும் கரத்தையும் பதைக்கப் பதைக்க வெட்டிவாகளே அந்தநோயையானெப்படிசகிப்பேன் அன்றியும்இந்தயிருண்டவனத்தில் என்னை பொண்டியாகவிடுத்துப்போவார்களேஅப்போதுனக்குத் துணைபாக வந்திருந்துகார்க்கவேணும் இப்பவேயென் கண்களிருண்டுநெஞ்சந் துடிக்கின்றதேஉடல்நடுங்குகின்றதே ஒஉமாமகேசரேஉம்மைபன்றிவேறெனக்கொருவருந் துணையில்லாமையால் தங்கள் திருவடிகளில்சரணகதியடைந்தேன்என்று பதறிக்கதறி துடித்துச் சிவபெருமானதுதிசெய்துக்கொண்டிருக்கையில் கொலைஞர்கள் சாரங்கதரனை நோக்கி, இளவரசே! சித்திராங்கியின் மாய்கைக்குட் சிக்கிய அரசன் அவன்சொல்லைக்கேட்டு உம்மை இருண்டவனத்திற் கழைத்துப் போய்மாறுகாலும்மாறுகையையும் வெட்டிவிடும்படிஎங்களுக்குக் கட்டளையிட்டபடி உம்முடையகாலையுங் கையையும்வெட்டுவதற்கு எங்களுக்கு மனமிசையவில்லை யாதலால் நாங்களேதோ ஒருதந்திரஞ்செய்துக் கொண்டுபோய் அரசனுக்குக் காட்டி ஒப்புக்கொள்ளும்படிச்செய்கின்றோம் நீரும் இம்மந்திரியும் எங்காகிலும் ஓடிப்பிழைத்துபோங்க ளென்றார்கள் அதைக்கேட்டு இரண்டாவது மந்திரி சாரங்கதரனைநோக்கி ஐயா இளவரசே அன்று சித்திராங்கியின் மனையில் சாக்ஷிவைத்திருக்க சிவபெருமான் உனக்குத்துணையாகயிருப்பர் அன்றியும் நீசத்தியவானுகையிருப்பது உண்மையாகில் யாதொருவிபத்தும் சேரிடமாட்டாதுஅன்றியும் யானும்உன்னுடன்துணையாக விருக்கின்றேன் நீயோதொன்றுக்கும் பயப்படவேண்டாம் கொலைஞர் சொல்லுக்குடன்படவேண்டாம் சத்திய நிலையில் நின்று ராஜன் கட்டளையைத் தவிர்க்காமல் சிவபெருமான்மீதுபாரத்தைப் போட்டு இப்பாறையின்மீது படுத்துக்கொள்ளும் சிவன் செயலின்படி. நடக்கட்டுமென்ற மந்திரியின் சொற்படி சாரங்கத

ரன் பரமசிவத்தைத் துதிசெய்துக்கொண்டே கொலைஞர்களைநோ
க்கிச் சொல்லத் தொடங்கினன்

கேளுங்கள் கொலைஞர்களே அரசன் கட்டளைக் குட்பட்டுளப்
படிப்பட்ட கொடிய தண்டனையாயிருக்கினும் அதையனுபவிப்பவ
ன்றே உத்தமன் தண்டனைக்கு பயந்துநிரோகத்தைக் காப்பாற்றி
க்கொள்ளும் பொருட்டு அன்னியதேசத்திற்கு ஓடிப்பிழைப்பவன்
ராஜதுரோகியும்சத்தியஞ் தவருபவன்செய்யும்படியான காரியத்தி
ற்கு உடன்படமாட்டேன் இதோ நீங்கள் குறிப்பிட்டப்பாறையின்
மீதுபடித்துக்கொண்டேன் தலையும் தாக்ஷணியமும் பாராமல் மா
றுகால் மறுகையை வெட்டி பெறிந்து அரசனுக்குத் தெரியப்படு
த்தி விடைபெற்றுக்கொண்டு போகக் கடவீர்களென கொலைஞர்
கள் கேட்டு ஐயா இளவரசேஅப்படியானல்சரி அந்தப்படி செய்து
போகிறோமென்று சொல்லி வாளைக்கொண்டு பாறையின்மீது படுத்
திருந்த சாரங்கதரனுடைய மாறுகாலையும் மாறுகையையும் வெட்
டியெடுத்துக்கொண்டு நகரத்தை நோக்கிச் சென்றனர் இங்கேசார
ங்கதரன் காலுங்கையும் அறுபட்டவுடனே மெய்சோர்ந்துபிராண
விட்டவனைப்போல மூர்ச்சை யடைந்தான் அதைக்கண்டு இரண்டா
வது மந்திரி அந்தந்தோ இளவரசன் உயிரிழந்தவனைப்போல சோ
கமடைந்து கிடக்கின்றானே இதற்குநானென்ன செய்வேன்சம்போ
கெங்காதரா சந்திரசேகரா ஹர ஹரா இந்த சமயத்தினி லிங்கெழு
ந்தருளிய இளவரசனைக் காப்பாற்றி ரக்ஷிப்பதுமதுபாரம்என்றுப
ற்பலவாறு துதித்துஉருகிவாடுகிறபோது சாரங்கதரனைக் காக்கும்
பொருட்டுச் சிவபெருமான் அசரீரியாக அங்கெழுந்தருளி யிருக்க
ப்பரமசிவனது கிருபையால் சாரங்கதரன் மூர்ச்சை தெளிந்துஉ
மா மகேசனைத் துதிசெய்து நரம்புகளறுபட்டு நோயினாலும் வெ
ட்டுபட்ட இடங்களில் உதிரம் பெருகி வருவதினாலும் எரும்புசக்க
ளின் உபத்திரவத்தினாலும் சகிக்க முடியாத கொடுமையினாலும்ப
பலவாறு பதறிக் கதறியழுது புலம்பிக்கொண்டேயிருந்து மருபடி
யும் மூர்ச்சை யடைந்தான்அதைக்கண்டு இரண்டாவது மந்திரிமன
ங்கலங்கி ஒகைலாச வாசனே மருபடியும் இளவரசர் மூர்ச்சையா
யினரே உனதடியேனை சீக்கிரம் வந்து காரும் அம்பிகை நாதனே
என்று துதிசெய்ப சாரங்கதரன் மூர்ச்சை தெளிந்து பிஞகபாணி
யைத் துதிசெய்துக்கொண்டு கிடக்கிறபோது அங்கு சனிபகவான்
கோன்றி அப்பா சாரங்கதரா சுகமாயிருக்கின்றாவென்று வின
வக் கேட்டு சாரங்கதரன் ஓ சுவாமிதாங்கள் யாரோ எனக்குத்தெ
ரியவல்லியே கிருபைசெய்து திருவாய் மலர்ந்தருளவேணும் என
அதற்கவர் நான் சனிபகவா னைனக்கேட்டு சாரங்கதரன் ஆஹா
ஹர சுவாமி சனிபகவானே என்னுடைய சுகத்தை நீரறியாதவரை
ப்போல விசாரிக்கின்றீரே உமக்குத் தெரியாத காரியமும் இவ்வுல

கத்தினி லுண்டோ இப்படியும்அடியேனை செய்விக்கலாமோவென அதற்குச னிபகவான் அப்பா சாரங்கதரா இது மூன்னம்நீசெய்த வினையின் பயனுகும் இதற்கு யாரென்ன செய்வேன் இன்றேடே உன்னைவிட்டு யான் போகிறேன்இனிப் பரசிவ னருளினுலே நற் பதவியை யடையக் கடவாயென்று வாழ்த்தக் கேட்டு சாரங்கதரன்தனக்குண்டா யிருக்கும் வேதனையை மறந்து அப்போதேபதவியை யடைந்தவரைப்போலப் பரமானந்தமடைந்துச் சனிபகவானை நோக்கிஓ சுவாமி யான்முன்ஜென்மத்தினி லென்ன வினைவைச்செய்தேன்அந்த வினையின்னதென்று யான் தெரிந்துக் கொள்ளும்படிக்கி விபரமாகச் சொல்லவேணு மென்றுவேண்டிக்கொள்ளும்சாரங்கதரனை நோக்கிச் சனிபகவான் அப்பா சாரங்கதரா யானைசொல்லுவதைக் கவனமாகக் கேளும் அதென்னவெனில் துவாபரயுகத்தினில உன்மூதாதைகளாகிய பாண்டவர்களும் கௌரவர்களும்கலகமிட்டுக்கொண்டு அதில் துரியோதனன் துரோபதையை துச்சாதனனுல் சபைக்கு இழுத்துவரச் செய்து துகிலுரியும்படிச் செய்ய துச்சாதனனும் அண்ணன் சொற்படி துகிலுரிய கிருஷ்ணபகவானுடை அருளினுல் மாளாத்துகில்வளர்ந்த படியினுலே துச்சாதனன்கையும்மெய்யுஞ்சலித்து மூர்ச்சையாய் விழுந்துவிடக் கண்ட சபையிலிருந்த வீஷ்மர் துரோணர்கிருபர்முதலாகிய பெரியோர்கள் யாவரும் துரோபதையைப் பலவாறு புகழ்ந்துகொண்டாடாப்பார்த்து துரியோதனன் துச்சாதனனை யழைத்து தம்பி இந்த துரோபதையை பெரியோர்களனைவரும் புகழுகின்றார்கள்.

ஆதலால் இவள்செய்த குற்றத்தை மன்னித்துவிட்டேன் இவளைத்தூக்கி யென்துடையின்மீது உட்கார வைப்பாயெனக் கேட்டு துரோபதை துரியோதனனை நோக்கி ஓ அரசே என்னையாயுன் துடைமீது இருத்தச்சொன்னுய் எனக்கு பதிலாய் பீமராஜன் கதையல்லவோ உமதுதுடையின்மீது இருக்கப் போகின்றது அன்னியிலும் உன்னுடைய உயிரைப்போக்கியபின்பு உதிரத்தைத் தலையிற் பூசிக்கொண்டு தலைவாரி கொண்டையிடுவேன் அதுபரியந்தம் என்னுடைய கூந்தலைவாரி முடியேன் என்று சபதங்கூறினுள் பாண்டவர்களும் சபதங்கூறினர்கள். இதனுல் துவேஷமதிகரித்து இருதரத்தாரும் போர்புரிந்து கௌரவர்களுடைய சேனைகளும் பீஷ்மர்முதலாகிய பிரமுகாளும் பாண்டவர்களாலடிப்பட்டு படுகளத்தில்விழுந்திறக்க அப்போது கடைசி யுத்தத்தில் வீமனும் துரியோதனனும் போர்புரியுமளவில் துரியோதனன் வீமனைநோக்கி அப்பா வாயுபுத்திரா உன்னுயிர்நிலை யெங்கிருக்கின்றது உண்மையைச்சொல்லுமென, அதற்கு வீமன் கபடமின்றித் தன்னுயிர்நிலை யிருக்குமிடத்தை சொலலக்கேட்டு துரியோதனன் வீமனைநோக்கி தன்னுடைய உயிர்நிலை யிருக்குமிடத்தைச் சொல்லாமல் மாறுபாடாய் வேறிடத்

தைப் புகன்றான். அதையுணர்ந்து வீமன் துரியோதனன் கூறிய இடத்தைப்பார்த்துத் தன்கதையினாலோங்கிப் பலதரம் அடித்து ம்அதனால் துரியோதனனுக்கு அற்பகஷ்டமேனு மில்லாமல்வெகு சந்தோஷத்துடன் வீமனுடைய உயிர்நிலையாகிய மண்டையின்மீது தன்னுடைய கதையைக்கொண்டு தாக்கியபோது வீமனுக்கு உயிர்துடித்து ஒன்றுந் தோன்றுமல் மயங்கி நிற்கக்கண்டு கிருஷ்ணமூர்த்தி வீமனைப்பார்த்து சைகையாய் தன் தொடையைத்தட்டிக்காண்பித்தார் அதையறிந்து வீமன் ஆஹா இவன் உயிர்நிலை யிருக்கும் உண்மையைச் சொல்லாமல் சாவதற்குப்பயந்து பொய் சொல்லினன்போலத் தோன்றுகின்றது எல்லாரும் மாண்டு மடிந்தார்கள் இவனும் மடியப்போகிறான் இதை யுணராமல் இப்போதுகூடபொய்சொல்லினன் இவன்மெத்த வஞ்சகன் இனியிவனை இவ்வுலகத்தினில் வைக்கப்படாது என்று கருதி தன் கதையினால் துரியோதனன் தொடையின்மீது மோதியடித்துத் தடிக்கத் தடிக்க அவனைக் கொன்றான் அதையறிந்து திரோபதையங்குசென்று துரியோதனன் உதிரத்தையெடுத்துத் தலையிற்பூசித் தலைவாரிக்கொண்டு சபதத்தை நிறைவேற்றினாள் அதைக்கண்டு துரியோதனன் மனைவியாகிய பெருந்துரையாள் அப்பா வீமா வஞ்சனையாலென்கணவனைக் கொன்றாய் அடி திரோபதையே பெண்களுக்கு அடுக்காத ஆண்மைபூண்டாயன்றோ நீங்களிருவரும் இன்னொரு பிறவிபடைத்து நீ இவனையே கோரவும் உன்கோரிக்கையின்படி இவனுனக்கு உதவா மற்போகவும் என்கணவனையடித்தகையும் தொடையும் உன்னிலிவனுக்கு அறுபடவும் இக்கீர்த்தி போய் அந்தகனுக்கு அபகீர்த்தியுண்டாகி இவ்வினை யுனைச்சுற்றவும் அக்கினியில் நீயும் விழக்கடவாயென்று சாபமிட்டாள் அந்தப்படியே வீமனேதான் திரோபதையையே சித்திராங்கி துரியோதனனை யுன்தந்தை நரேந்திரன் பெருந்துரையை னின் தாயார்மேலும் உங்கள்மீது வைரங்கொண்டிருந்த சகுனியை மூதலமந்திரி அவன்மனைவியை தோழி ரத்தினமாலை உங்களில் மெத்த உத்தமனுயிய விதானுக்கு அக்காலத்தில் நீங்கள் அரசுகொடாமையால் இப்போதிந்த அஸ்தினபுரத்தையாள சுமந்திராகாரனுகவந்திருக்கின்றான் தெரிந்துக் கொண்டாயாவென அதற்கு சாரங்கதரன் ஓசுவாமி அப்படியாசெய்தி தெரிந்துக்கொண்டேன் சுவாமியென அதற்கு சனிபகவான் வாழிவாழி சாரங்கதரா நீ மூன்சென்மத்திலும் சிவனைப்பூசித்த உத்தமன் இச்சென்மத்திலும் அவ்வாறே சிவனைப்பூசித்து அறிதாகிய பதவியைப் பெறக்கடவாய் இனியான் போய்வருகிறேனென்று சொல்லி சனிபகவான் மறைந்து மாயமாயினர் அத்ததியினில் சாரங்கதரன் இனியில்லாத சந்தோஷத்துடன் சிவபெருமானை மனதினில் தியானித்துக்கொண்டு எப்போதுமது அரியசேவையை யான் கண்டு சேவிக்கும்படி கிருபை செய்வீரோ எப்போதெனைக் காப்பாற்றி ரக்ஷிப்பீரோ எப்போது

என்வினைகள் தூலைந்துப் புனிதனாகுவனே யென்று முறையிட்டுக் கதறுவதைக்கேட்டு சிவபெருமான் தயாளமடைந்து உமையவளுடன் ரிஷபவாகனத்தின்மீ தூர்ந்துக்கொண்டு சாரங்கதரனிருக்கும் வனத்திற்குவந்து அப்பா சாரங்கதரா நீயேன் மெத்தவுங்கதறியழுகிறாய் அழவேண்டாம் உபாயமாக என் பக்கந்திரும்பிப் பாருமென சாரங்கதரன் ஒற்றைக்கால் ஒற்றைக்கையுடன் பக்குவமாகத் திரும்பி சிவபெருமானைக்கண்டு தெரிசித்து ஆனந்தம் பிரமானந்தமென்னும் இரண்டு படியையுங்கடந்து மூன்றுவது படியாகிய பரமானந்தமடைந்து சிவபெருமானைத் தன்னை மறந்து பலவாறு துதிசெய்கிறபோது அத்தருணத்திக்கிப் பரமசிவன் மெத்த சந்தோஷித்து அப்பா சாரங்கதரா உன் துதிக்கி மெச்சினேன் நீ மெத்த வுத்தமன் சத்திய சந்தனன் உனக்குப் பூர்வஜென்மவினையிருந்தபடியால் அதற்கு சித்திராங்கி காரணமாகி உன்மீது பெரும்பழி சுமத்தினபடியால் அப்பழியை யனுசரித்து நீ இந்தத் தன்பம் அடைய வேண்டியதாயிற்று அவ்வினையும் நின்னைவிட்டுப் பரந்துபோயிற்று இனி வீசனப்படவேண்டாம் இப்போதே யுனக்குக்காலும் கையும் வளரும்படிக்கிக் கிருபை செய்தேன் இதற்குப் பின்னம் உத்தம ஆசானையடைந்து உபதேசம் பெற்றுச் சிலகாலம் நல்லோர்களுடன் பழகியிருந்து முடிவில்நமது கைலையை யடைந்துபேரின்ப வாழ்வைப் பெற்றுச் சுகித்திருக்கடவாயென்று வாழ்த்தி மாயமாய் மறைந்துபோயினர் உடனே சாரங்கதரனுக்குக் காலுங்கையும் வளர்ந்து முன்னமிருந்த அழகைப்பார்க்கிலும்எண்மடங்கதிக சுந்தரம்விளங்க கோடி சூரியப்பிரகாசம் பெற்றுத் தலங்கினன்.

இவ்வண்ணங் காட்டினில் சாரங்கதரன் சிவபெருமானருளினாலே சுகதேகத்தைப் பெற்றிருக்க அங்கேநாட்டைநோக்கிச்சென்ற சேர்வைக்காரன் கொலையாளிகளும் அரசனுடைய சபையையடைந்து வணங்கி ஒசுவாமி தங்கள் கட்டளையின்படி சாரங்கதரமகாராஜனை மடலோடிய இருகக்கட்டி நார்வலஞ்செய்வித்து அழைத்துப் போகிறபோது எனதம்மணியாகிய ரத்தினவல்லியம்மாள் அங்குவந்து சாரங்கதரனைக்கண்டு பற்பலவாறு அழுது புலம்பி சோகித்துப் பூமியில்விழுந்து மூர்ச்சையாயினள் அப்போது நாங்கள் சாரங்கதரனை அழைத்துக்கொண்டு மேலண்டைவீதி வழியாய்ப் போகிறகாலத்தில் அங்கு சித்திராங்கியம்மாள் வந்து சாரங்கதரனைக்கண்டுபுலம்பியழுதப்போயினள் பின்பு நாங்கள் சாரங்கதரனையழைத்துக்கொண்டு இருண்டவனத்தைக்கண்டு அங்கோர்பாறையின்மீது படுக்கவைத்து மாறுகால் மாறுகையை வெட்ட மனஞ்சகியாமல் சாரங்கதரனை நோக்கி ஐயா இளவரசே அரசனுக்கு யேதோ மார்க்கத்தைச்சொல்லி சம்மதிக்கச் செய்திறேம் நீ உன்னுடைய பிராணனைக் காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு எங்காகிலும் ஓடிப்பிழைத்துப்

போமையாவென்று வேண்டினேம் அதற்குச் சம்மதிக்கவேண்டு மென்று சாரங்கதரனுக்கு இரண்டாவதுமந்திரி சொல்லி தடுத்தார் அந்தப்படியே சாரங்கதரனும் ஒப்புக்கொண்டிருக்கப் பார்த்துத் தங்கள் கட்டளையின்படி அவருடைய மாறுகால் மாறுகையை வெட்டினேம் அப்போது சாரங்கதரன் பதறிக்கதறி மூர்ச்சையாய்வீழ்ந்து கிடக்கிறார். அதை நாங்கள்கண்டு சகிக்கமுடியாமல் தங்கள் சபையை நாடிவந்தோமெனக் கேட்டு நரேந்திரன் அப்பா சேர்வைக்காரா கொலைஞர்களே அப்படியானால் போய்வாருங்களென்றுகட்டளையிட அவர்களும் அந்தப்படியே விடைபெற்றுக்கொண்டு சென்றனர்கள் இங்கே சாரங்கதரன் தனக்குக்கால்கைகள் சிவபெருமான் திருவருளினால்வளர்ந்து முன்போலயிருப்பதைக்கண்டுஅடங்காமகிழ்ச்சியடைந்து சிவபெருமான் தனக்குக் கட்டளையிட்டபடி தக்க ஆசாரியனடையவேணுமெனக் கருதி மந்திரியுடன் அக்கானகமெங்கும் திரிந்து ஆசானைத்தேடி யலைகிறபோது மச்சமுனிவர் தன் ஞானதிருஷ்டியினாலுணர்ந்து சித்தர்களையழைத்து அப்பாசித்தர்களே யாரோ ஒருபுருடன் ஆசானைத்தேடி யலைகிறான் அவனைக் அழைத்துவாருங்களெனக்கேட்டு அந்த சித்தர்கள் அப்படியே அழைத்துவருகிறோம் சுவாமியென்று சொல்லி ஆசிரமத்தைவிட்டு புறப்பட்டு கானகத்தில் மேவி சாரங்கதரனைக் கண்டு, நீ யாரப்பா ஆசானைத்தேடிவந்தவன் நீதானே உனை எங்களாசான் அழைத்துவரும்படி எங்களுக்குக்கட்டளையிட்டார் வாருமப்பாவென்றழைத்துவந்து ஆசான்முன்னம் விட்டார்கள் சாரங்கதரன் மச்சமுனிவரைக்கண்டு பணிந்து கைகுவித்து எதிரில் நின்றான் அப்படி வினயபக்தியுடன் கைகுவித்துநிற்கும் சாரங்கதரனை மச்சமுனிவர் வாழ்த்தி நீயாரப்பா இங்கு என்னவேலையாய் வந்தாய் உன்னைப் பார்த்தால் இராஜகுமாரனைத்தோன்றுகின்றது காட்டினில் சிகத்தையடைந்துக்கொண்டிராமல் காட்டினில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கும் எங்களிடத்திலுனக்கென்ன வேலையென சாரங்கதரன்கேட்டு, மச்சமுனிவரைநோக்கி ஓ சுவாமி, அஸ்தினபுரத்தையாளும் நரேந்திரமகாராஜன் புதல்வனும் யான் என்பேர் சாரங்கதரன், எனக்கு மணஞ்செய்விக்க யெண்ணி யென்தந்தை என்னைப்போல படமொன்றெழுதி பிராமணர்களிடங் கொடுத்தனுப்ப அவர்களும் அப்படத்தை யெடுத்துச்சென்று தேசங்கள்தோறும் பெண்ணைக் கேட்டும் கிடைக்காமையால் சித்திராங்கதன் நாட்டையடைந்து படத்தை அவ்வரசனிடங்கொடுக்க சித்திராங்கதன் படத்தைக்கண்டு ஆச்சரியமடைந்து அப்படத்தைத் தன் புதல்வியாகிய சித்திராங்கியினிடமனுப்ப அவளுங்கண்டு ஆவல்கொண்டு இப்படத்திலிருக்கும் ராஜகுமாரனையே மணம்புரிவனேயன்றி வேறெவர்களையும் கனவிலேனும் மணம்புரியக் கருதேன் என்று சொல்லி தன்னுருவம் வரைந்திருக்கும்படத்தை லேகியர்களிடங்கொடுத்தனுப்ப, அப்ப

டத்தை என் தந்தைகண்டு அம்மங்கையைத் தான் மணம்புரியவெ
ண்ணி வாளுக்கு மாலைசூட்டும்படி தந்திரம்பண்ணி வானவேதியரி
டமனுப்ப சித்திராங்கதனும் தன்புதல்வியை வாளுக்கே மாலைசூட்
டும்படிச்செய்து வேதியர்களுடன்கூட்டியனுப்ப, அந்தமங்கையும்
அஸ்தினபுரத்தையடைந்து தக்கமாளிகையில் வீற்றிருந்து என்த
ந்தையின வாயிற்பிறப்பையறிந்து அவரை மணம்புரியவும் அவரு
டன் கூடியிருக்கவும் மனமில்லாமல் என்மீதே திருஷ்டிவைத்திருப்
பதை யானறியாமல் பரிவைப்பிடித்து வைத்தக்கொள்ள யானப்
புறவைக்கேட்டு வாங்கிவரச்சிறியதாயார்மனைக்குத்தானேகியதும்
அப்போது சித்திராங்கி தன்னைக்கூடியணையுமபடி தன்னை வேண்டி
க்கொண்டதையும் அதற்குத்தான் சம்மதிக்காததால் தன்மீது அ
பாண்டஞ்சொல்லி தண்டனைவிதிக்கும்படி அரசனுக்கு போதித்த
தையும் அரசன் அவள் சொற்படியே தன்னை தண்டித்ததையும் அத
னால் மெத்த சிரமப் பட்டுக்கொண்டிருந்ததையும் அப்போது சனி
பகவான்வந்து தன்னை வாழ்த்தி விடைபெற்றுச் சென்றதையும் உ
டனே உமையவளுடன் சிவபெருமான் ரிஷபவாகன மேறிவந்து
தெரிசனந்தந்து காவ்கை வளரும்படிக் கிருபைசெய்ததையும் பின்
புதக்க ஆசானை யடுத்து உபதேசம் பெற்று சீக்கிரத்திலேயே புனி
தஞ்சித் தன்னைவந் தடையும்படிக்கிச் சொல்லி மறைந்துபோயின
தையும் ஆதியோடந்தமாகச்சொல்லி வணங்கி நின்றான்.

அப்படிநின்ற சாரங்கதரனைநோக்கி, அப்பா! ராஜகுமாரனே
நீபனிரெண்டுவருடகாலம் குருகுலவாசஞ்செய்தபின்பே யுனக்கு
உபதேசஞ்செய்வேன். அன்னியிலும் தீவிரமதியுடையவனுக்குப்ப
னிரெண்டு வருடம்சோதித்து அதன்பின்பு உபதேசஞ் செய்விக்கு
ம்படி மநுதருமம் மூறையிடுகிறபடியால் நீ பனிரெண்டு வருடம்
வரைக்கும் நமதாசிர்மத்திலிருந்து தொண்டுபுரிந்துகொண் டிருப்
பையேயாகில் உன்னிஷ்டப்படி உபதேசஞ் செய்விக்கின்றே னென
க்கேட்டு சாரங்கதரன் மெத்த விசனமுற்று ஓ! சுவாமி! யான் மந்த
தரனல்லன் தீவிரனுயிற்றே இவனையும் பனிரெண்டு வருடகாலஞ்
சோதனைசெய்யவேண்டுமா அந்தகாரத்தைபோக்கி பிரகாசத்தையு
ண்டுபண்ணுங் குருநாதரே என்றுபணிந்தான் அப்படி பணிந்தவ
னுக்கு மச்சமுனிவர் ஆசிகூறி, அப்பா! சாரங்கதரா! கொஞ்சகால
ம்பொருத்துக்கொண்டு சாந்தமாகயிரும் உன்னிஷ்டப்படிக்கேஉப
தேசஞ்செய்விக்கிறேனென சாரங்கதரன்கேட்டு ஓ சுவாமியான்மந்
தனல்ல மந்திரனல்ல தீவிரனுமல்லன இதைப் பரிசோதித்து அதி
தீவிரனுயிருப்பனேயாகி லெனக் குபதேசிப்பதற்கென்னதடையெ
ன்றுகூற மச்சமுனிவர்கேட்டு சாரங்கதரனைப் பரிசோதனைசெய்து
அதி தீவிரனுயிருப்பதை யறிந்து சந்தோஷித்து அப்பா கோரக
நாதா இச்சிறுவன் அதிதீவிரதாரு யிருப்பதினுலே அழைத்துப்

போய் ஸ்ஞைஞ்செய்வித்து விபூதி ருத்திராக்ஷமாலையை தரிக்கச் செய்து சிக்கிரம்அழைத்துவருவாயெனக்கேட்டுஅப்படியே அழைத்துவருகிறேன்சுவாமியென்று சொல்லி அந்தகோரகநாதன் சாரங்கதரனை அழைத்தேகி அப்பாசாரங்கதரா! இதோஇந்த கண்டகநதியிற்குளித்துமுழுகி திருநீரணிந்து ருத்திராக்ஷமாலையைத் தரித்துக்கொள்ளுமப்பாவென, அந்தப்படியே சாரங்கதரனும் கண்டகநதியினில் மூழ்கி திருநீணிந்து ருத்திராக்ஷமாலை தரித்து நிற்கக் கண்டுகோரநாதர் சாரங்கதரனை அழைத்துவந்து மச்சமுனிவர் முன்னம்விட்டு ஓ சுவாமி தாங்கள்சொல்லியபடி இச்சிறுவனைக்கண்டகநதியினில் மூழுகச்செய்து திருநீரும் ருத்திராக்ஷமாலையும் தரிக்கச்செய்து அழைத்து வந்தேனெனக் கேட்டு மச்சமுனிவர் அப்பாவனுதிநாதா இச்சிறுவனுக்குமூன்னம் மூன்றுபடியை உபதேசஞ்செய்து பின்புயோகமதுட்டிக்கும்படிச்செய்வாயென அந்தப்படியேசெய்விக்கிறேன் சுவாமியென்றுசொல்லி சாரங்கதரனை நோக்கி அப்பாசாரங்கதரா பத்மாசனமிட்டு வீற்றிருந்து யான் சொல்லுவதை கவனிப்பாயாக சரியை அநுட்டித்தால் சிவசாயுச்சியத்தை யடையலாம் கிரியை அநுட்டித்தால் சிவபெருமானைனும்விட்டு அகலாதிருக்கலாம் யோகமநுட்டித்தால்உமாமகேசனைப்போல சடைமுடியுடனிருக்கலாம்யெனக்கேட்டு சாரங்கதரன்மச்சமுனிவரைவணங்கி ஓ சுவாமி முதல்மூன்றையும் விவரமாகத் தெரிந்துக்கொன்டேன் யான் கோரினவை கிடைக்கவில்லை அஃகுயாதெனில் சரியையென்பது மூடமாகும் கிரியையென்பது உலகாசையுடன் வாழ்தல் எடுபோகங்கள் கீண்ட மார்க்கமாகும் இம்மூன்று மார்க்கங்களையும் அநுட்டிக்க மனமொப்பிலேன்பின் னெந்த மார்க்கத்தையநுட்டிக்க மனமுடையவனுக விருக்கிறேன்யென்பீரேல் அச்சிவபெருமானுக்குஉளே கலந்துதானே தானுய்கால னுணுதிருந்தத்தவ முயர்ந்துபேரின்ப வீட்டை யடையும்படியானதக்க மார்க்கத்தை அடியேனுக்கு உபதேசஞ் செய்விக்கவேணும் சுவாமியென்று பணிந்தான் அதற்கு மச்சமுனிவா வெகு சந்தோஷமடைந்து சீஷர்களைநோக்கி, அப்பாசீஷர்களே! இச்சிறுவனுடைய அதிதீவாமதியையும் பரிபக்குவத்தையும் பார்த்தீர்களாவென அதற்கு சித்தர்கள்தெரிந்துக்கொண்டோம்இச்சிறுவன்பெரியோர்களைப்போல கனிந்தமனமுடையவனுயிருப்பதால் இவனுக்கு உபதேசஞ்செய்யத் தடைசெய்யக்கூடாது அன்னியிலும் இச்சிறுவனையினி பரிசோதனைசெய்யத் தகாதெனக்கேட்டு மச்சமுனிவர் மகிழ்ந்து அப்பாசாரங்கதரா! நீபரிபக்குவமானமனமுடையவனுகியிருப்பதால் உனக்கு உபதேசஞ் செய்விக்க எனக்குத்தகும் என்னிடம் உபதேசஞ்செய்துகொள்ள உனக்கும் தகும் ஆகையால் என்னருகில் வாருமப்பா வென்றழைத்து அருகினில்உட்காரவைத்துக்கொண்டு அப்பா! சாரங்கதரா! பிரிதிவு-அப்பு-தேயு-வாயு ஆகாச

மென்னும் இவ்வைந்தும்பஞ்சபூதங்களாம் மெய் வாய் கண் மூக்கு செவி இவ்வைந்தும் பொறிகளாம் சுவை ஊறு ஒளி ஓசை நாற்றம் இவ்வைந்தும்புலன்களாம். வாக்கு பாதம் பாணி பாயரு உபஸ்தம் இவ்வைந்துகர்மேந்திரியங்களாம் மனம் புத்தி சித்தம் அகங்காரம் இன்னுன்கும்காரணங்களாம். ஆக இவ்விருபத்தினுன்கும் ஆத்மதத்துவங்களாம். அன்னமயம் பிராணமயம்மனோமயம்விஞ்ஞானமயம் ஆனந்தமாயம் இவ்வைந்துக்கோசங்களாம்சாக்கிரம் சொர்ப்பனம் சுழுத்தி துரியம்-துரியாதீதம்-இவ்வைந்தும் அவஸ்தைகளாம் சாத்மீகம்-தாமதம்-ராஜஸம் இம்மூன்றுகுணங்களாம்வாத-பித்தசிலேத்மம் இம்மூன்றும் பிணிகளாம் ஆணவம் மாயைகாமியம் இம்மூன்றும் மலங்களாம். அக்கினி ஆகித்தன்-சந்திரன்-இம்மூன்றும்-மண்டலங்களாம் மூலாதாரம் சுவாதிட்டானம் மணிபூரகம் அனுகதம் விசுத்தி ஆஞ்ஞை இவ்வாறும் ஆதாரங்களாம். இரசம்-உதிரம்சுக்கிலம்-மூளை-தசை-அஸ்தி-தோல்-இவ்வேழும்-தாதுக்களாம் காமம்-குரோதம் லோபம் மோகம் மதம்மாச்சரியம் இடும்பை அசூயை-இவ்வெட்டும் விகாரங்களாம் கண்கள்செவிகள்நாசிகள்-வாய்குதம் குய்யம் இவ்வாறுவாயல்களாம் சுழிமுனை இடை பிங்கலை காந்தாரி அத்தி சிகுவை அலம்புடை புருடன் குரு சங்கனி இவை பத்தும் நாடிகளாம் பிராணன் அபானன் சமானன் உதானன் வியானன்நாகன் கூர்மன் கிருதரன் தேவதத்தன் தனஞ்செயன் இவை பத்தும வாய்வுகளாம் ஆக தொண்ணூற்றாறு தத்துவங்களடங்கிய செய்ககளெல்லாம் சடசம்பந்தமேயன்றி சத்தாகியதற்குச்சம்பந்தமே இல்லை. ஆகையால் உனக்குள்ளிருக்கும் சற்றே பாஞ்சுடர் அக்கினியாதெனில் பப்பிரமம் ஒன்றறிந்துக்கொள்ளக் கடவாயப்பா வென்று உபதேசஞ் செய்வித்தனர்.

இவ்வண்ணம் மச்சமுனிவர் உபதேசஞ்செய்ய சாரங்கதரன் தொண்டர்களுக்குந் தொண்டனுகி அன்புடன் உபதேசம்பெற்றுக் கொண்டு மச்சமுனிவரை முக்காலும் வலம்புரிந்து வணங்கி ஓசுவாமிபரமகுருநாதரே அடியேனுக்குற்ற அந்த காரத்தைப் போக்கி தெளிவென்னும் பிரகாசத்தை உளளே கண்டு தெரிசித்து பரமானந்தமடையும்படிக்குச் செய்வித்தக் காரணகுருவே அரிதாகும் காரிய குருவே எனறு பற்பலவாறு புகழ்ந்து மகிழ்ந்து ஆனந்தமேலீட்டால் தண்ணீரமந்து தலைவணிற்கலந்து நிஸ்தரங்க சாகரத்தைப் போலவும் நிவாததீபம்போலவும் அசைவின்றிச் சிறிதுநேரமிருந்து உடனே தெளிந்து நிஷ்டை செய்யும் விதத்தை யறிந்து மச்சமுனிவர் இனியில்லாத சந்தோஷமடைந்து அப்பா சாரங்கமுனியே! அதோ அந்த மரத்தடியி லுட்கார்ந்து தனித்திருக்கக் கடவாயென அதற்குசாரங்கமுனிவர் ஓசுவாமிதங்களுடைய கட்டளையின்படியே தனித்து மரத்தடியிலிருக்கின்றேன் என்று வணங்கிவிடைபெற்றுக்

கொண்டு அந்த மச்சமுனிவர் குறிப்பிட்டுக்காட்டிய மரத்தடிக்குச் சென்று இரண்டாவது மந்திரியை நோக்கி ஐயா மதிதனிற்றேர்ந்த மந்திரியே நீ சீக்கிரம் அஸ்தினபுரத்திற்குச் சென்று என்தாயாருக்குந் தோழனிய சுமந்திராகாரனுக்கும் என் க்ஷேமத்தைத் தெரியப்படுத்தி நீசுகமாயிருப்காயாகவென்று நவின்றதைக்கேட்டு மந்திரியும் இளவரசே அப்படியே யான் போய்வருகிறேனென்றுசொல்லி விடைபெற்றுக்கொண்டு இனியிளவரசர் நாட்டுக்கு வரப்போகிறதே இல்லை இவரடையாள மிருக்கும்படி அறுபட்ட காலியுங் கையையும் வெடித்துப்போய் அதுகளுக்கு வாசனையூட்டி ந்மதரண்மனையினில் பத்திரப்படுத்தித் தினமும் பார்த்து சேவித்துக்கொண்டிருந்தால் நமதுவூழ்வினையகன்றுபோமென வெண்ணி அப்பாறையினருகில்வந்து கையிலுங் காலிலும் உதிரம் வடிவதைக்கண்டு ஆச்சரியப்பட்டு அக்கையையுங் காலையும் வஸ்திரத்திற் சுற்றி எடுத்துக்கொண்டு நடந்து அஸ்தினபுரத்தை யடைந்து அரண்மனைகுட்புகுந்து ரத்தினங்கியைக்கண்டு பணிந்து கற்பினிற் சிறந்ததாயே சுகமாகவிருக்கின்றீராவெனக்கேட்டு ரத்தினங்கி இரண்டாவதுமந்திரியை நோக்கி ஐயா மந்திரியேபெற்றபிள்ளையை கொல்லவிடுத்தமாபாதகியாகிய எனக்குஞ் சுகமுண்டோ இதிருக்கட்டும் இத்தினாளாய் எங்குபோயிருந்தாயென அதற்குமந்திரி ஓ அம்மணி யான்இளவரசாகிய சாரங்கதர மகாராஜருடன் காட்டிற்குப் போயிருந்தேன் இதோ பார்த்தீரா அவருடைய கரமுங் காலுமென்றுவஸ்திரத்தையவிழ்த்து காட்டக்கண்டு ரத்தினங்கி ஆ என்மகனே அழகானழுகனே அந்தந்தோ நீ மாண்டுப்போனையா வென்று மார்பிலுமுகத்திலும் அறைந்துக்கொண்டு பதறிக்கதறி யழுது புலம்புவதைகண்டு மந்திரி அம்மணி தாங்களழவேண்டாம் அவர் உயிருடனிருக்கின்றரெனக்கேட்டு ரத்தினங்கி அபபா மந்திரி என்மகன் மாறுகையும் மாறுகாலும் அறுபட்டும் உயிருடனிருக்கின்றனென்பதை நான்நம்பேன் அவன் எவ்வாறு உயிர்பெற்றிருக்கின்றனன்அதைவிவரமாகச்சொல்லுமென அதற்கு மந்திரி ஓ அம்மணி கொலைஞர்கள் தங்கள் புதல்வனைகட்டி யிழுத்துக்கொண்டு இருண்டவனத்தில் ஓர்பாறையின்மீதுஇளவரசைப படுக்கவைத்து மாறுகையையும் மாறுகாலையும் வெட்டினவுடனே பாலன் மெய்சோர்ந்து உயிரைவிட்டபிரேதம்போல கிடந்து சிறிதுநேரத்தில் தெளிந்து பரமசிவத்தைநோக்கித் துதிசெய்துக்கொண்டிருக்கையில்சனிபகவான் தோன்றி அப்பாசாரங்கதரா மெத்தகஷ்டத்தையடைந்தாய் உன்னைப்போல சத்தியசந்தனையும் உத்தமகுணமுடையவனையும் யான் கண்டதில்லை இனி சிவபெருமானைக்கண்டு சேவித்து அவரருள்நோக்கத்தினால் வெட்டுண்ட கால்கரங்கள் வளர்ந்து சுகத்தையடையக் கடவாய் இன்றேபோ உன்னைவிட்டு யான் போகிறேனென்று சொல்லி வாழ்த்திச்சென்றனர் உடனே சிவபெருமான் அங்குரிஷபவா

னை சூடராய் உமையவளுடன்தோன்றி வெட்டுண்ட கால்களங்கள் வளரும்படி வாழ்த்தியேகினர் அந்தப்படியே காலுங்கரமும் வளர்ந்து அருகிலிருந்த மச்சமுனிவரையடைந்து உபதேசம்பெற்று சாரஸ்சமுனிவனெப் பேர்வழங்க அம்முனிவர்கள் கூட்டத்திற்கலந்து மௌனியாகிமெத்த சுகமாகிருக்கின்றனெனக்கேட்டு ரத்தினாங்கி அடங்காமலிட்சிகொண்டு ஆனந்தக்கடலில் மூழ்கியிருக்கிறபோது இதகளை யெல்லாம் அங்கிருந்துகேட்ட அரண்மனைக் காவற்சாரன் ஓடோடியும் வந்து நரேந்திரனைப் பணிந்து ஒசுவாமி எங்களாண்ட ரேஇரண்டாவது மந்திரி அரண்மனைக்குவந்து அரசியைக்கண்டு சாரங்கதரமகாராஜருடைய காலிலுங்கையையுங் காட்டி அவர் மூன் போலக்கால்களங்கள் வளர்ந்து சுகமாகயிருப்பதாய்ச் சொல்லக் கேட்டு அதைத்தங்களுக்குத் தெரிவிக்கவந்தேனெனச்சொல்ல அரசன் ஆச்சரிய மடைந்து முதல்மந்திரியைநோக்கி ஆஹா மந்திரிஇ துவிர்தையினும் விந்தையாகவிருக்கின்றது இதைச் செவ்வையாக விசாரித்துத் தெரியவேண்டும் ஆகையால் சிக்கிரம் இரண்டாவது மந்திரியை இங்குவரவழைப்பாயென மந்திரியும் அப்படியே வரவழைக்கின்றேன் வேந்தேயென்றுசொல்லி சேர்வைக்காரனே பார்த்து அப்பா சேர்வைக்காரனே சிக்கிரமாகவோடி அரண்மனையிலிருக்கும் இரண்டாவதமந்திரியைக்கண்டு அரசன் அழைத்துவரச்சொன்னரென நவின்று அழைத்துவாக்கடவாயென அவனும் ஓட்டமாபோடி இரண்டாவது மந்திரியைக்கண்டு அரசன் அழைத்துவாச் சொன்னரென்று சொல்லி அழைத்து வந்து கொலுமுகத்தில் விட்டான்.

இவ்வாறி அரசனல் வரவழைத்த இரண்டாவதுமந்திரி அரசனைக்கண்டு பணிந்து அரசே என்னை வரவழைத்தகாரணம் யாதோ அதைத் தெரியப்படுத்தமையாவென அதற்கு அரசன் ஒ மந்திரி காலுங்கையும் அறுபட்ட என் புதல்வன் எப்படியிருக்கின்றன் அதைத் தெரியச் சொல்லுமென அதற்கு மந்திரி உமதுபுதல்வர்மச்சநாதர் கூட்டத்தில் மெத்தசுகமாய் சுத்தஞானியாயிருக்கின்றனெனகேட்டுமுதல்மந்திரி அரசனைநோக்கிஎமகாசே இவன்முன்னமே கோணவழக்கிட்டு கொலுவைவிட்டுப் போயினவனுதலால் இவன் சொல்லை நம்புவதற்கிடமில்லை யென்றன் அதையுங்கருதாமல் அரசனிரண்டாவது மந்திரியைநோக்கி அப்பாமந்திரி மாறுகாலும்மாறுகையும் வெட்டுண்ட என் புதல்வன் பிழைத்திருக்கின்றனென்றுயேஅவனைப்படி பிழைத்திருக்கின்றனென அதற்கு மந்திரிபூபாலரேபரமசிவன் பிரசன்னமாகி இதுபொய்யால்வந்த பொல்லாங்காகுமென்று காலகரங்கள் வளரும்படி கிருபைசெய்தபடியினலேகாலகரங்கள் வளர்ந்து முன்னமிருந்த அழகைப்பார்க்கிலும் எண்மடங்குஅதிகஅழகாய் விளங்கிக்கொண்டிருக்கின்றனெ அதற்குஅரச

ன் அப்படியானால் சித்திராங்கி சாரங்கதரன் மீது சொல்லியது பொய் மொழியாவென அதற்குமந்திரி பொய்மொழியென்பதற்குச்சந்தே கமா பழியும் பாவமும் உம்மையிட்டு அப்புறம் போதுமா இவ்வுல கம்அழியும்பரியந்தம்உமக்கிதுஅபவாதமேயென்றதைக்கேட்டுமு தல்மந்திரியானவன் இரண்டாவதுமந்திரியைநோக்கி நீசொல்லியது உண்மையாகில் அன்று அங்குதோன்றிய அசரீ இக்குதோன்றி எ ங்களுக்குற்ற சந்தேகத்தை நிவர்த்தி செய்யும்படிக்குச் செய்யாவி டில் பொய்புகன்ற நின்னுடலை யறுத்தெரியும்படிச் செய்விப்பே னெனக் கேட்டு இரண்டாவது மந்திரி அப்படியே சிவபெருமானை இங்குவந்து சொல்லும்படிக்குச் செய்விக்கிறேன் கேளுமென்று சொல்லி அரகர சம்போ கங்காதரா சந்திரசேகரா மூப்புரத் தைச் சிவித்தெரித்த மூலகாரணனே பரமனே பரமயோகிகள்தொ ழுதோதும் கருணையங்கடலே அடியேன் முறையைக்கேட்டு கிரு பைகூர்ந்து இங்கெழுந்தருளி இவர்களின் சந்தேகந்தீர அங்குநடந் தமைகளைமொழிந்து அடியேனைகாப்பாற்றி ரட்சித்தருள் புரியவே ணுமென்று வெகுவாகத் துதிசெய்து வேண்டிக்கொள்ளும் மந்திரி யின் முறையைகேட்டு பரமசிவ மூர்த்தியானவர் ஆகாவவீதியில் நி ன்று அசரீரியாகி அரசன் முதலானோருங் கேட்கும்படியாக ஓகோ ந்திரா நின்னிடம் சித்திராங்கியும் அவள்தோழியும் சாரங்கதரன் மீது பழிவார்த்தைகள் புகன்றது பொய்யே இரண்டாவது மந்திரி இன்று உன்னிடஞ்சொல்லிய வசனங்கள்யாவும் மெய்யே இதிலணு வளவேனும் பிசகில்லை நினக்குற்ற சிலஹத்தி திரும்படி சாரங்கத ரனையழைத்துவந்து இந்நகரத்தை அவனுக்குப் பட்டங்கட்டிவைத் து நீசென்று காட்டிற்றவம்புரிந்து எவர்களாலும் அறிதற்கரியபே ரின்பவீட்டை யடைவாயென்று சொல்லி மாயமாய் மறைந்துபோ யினர் உடனே சுமந்திரன் துயர்க்கடலில் மூழ்கினவனுகி இரண் டாவது மந்திரியைநோக்கி ஐயாமந்திரி சிறிதுநேரம் இங்கேயிரு மென்று சொல்லி அடா வாசற்காவற்காரா நீசீக்கிரஞ்சென்று சிறைச்சாலை சேர்வைக்காரனையும் சாஸ்திரிகளையுஞ் சுமந்திராகார னையும் அழைத்துவரக்கடவாயென்று சட்டளையிட அந்தப்படியே காட்டியக்காரன் சென்று சேர்வைக்காரனுக்கு அரசன் வரும்பல் நேமித்ததைச்சொல்ல அவனும் அதிசீக்கிரமாக யோடிவந்து அர சனைக்கண்டு பணிந்து எங்களாண்டவரே அடியேனை யழைப்பித்த காரியம் தெரியப்படுத்த வேணுமென அதற்கு அரசன் அடா சேர் வையே என் அருந்தவப் புதல்வன்மீது அன்று பழிமொழிகள் சு மத்திய பரமசண்டாளியாகிய சித்திராங்கியையும் அவள் தோழியா யிரத்தினமாலையையும் நின் காவலுக்குட்படுத்தி பாதசாரியாய்க் டத்தி என்கொலுவின்முன்னங் கொண்டு வருவாயென அதற்கவ னும் அப்படியே மகாபாக்கியம் சுவாமியென்றுசொல்லி விரைந்து சென்று சித்திராங்கியின் அரண்மனைக்குட் சென்று தோழியைக்க

ண்டு அம்மா ரத்தினமாலையே உன்னையும் உங்களரசியாகிய சித்தி
ராங்கியம்மாளையும் என்காவலுக்குட்படுத்தி கொலுவின்முன்னங்
கொண்டுவரும்படி அரசன் ஆக்யாபித்தாரெனச் சொல்லக்கேட்டு
தோழியாகிய ரத்தினமாலை விரைந்தோடிச் சென்று சித்திராங்கி
யைப்பணிந்து ஓ அம்மணி நமக்கு யேதோகெடுதி சம்பவிக்கப்போ
கிறப்போல விருக்கின்றது நாமென்ன செய்யப்போகிறோம் அர
சன் உம்மையும் என்னையுங் காவலுக்குட்படுத்திக் கொண்டுவரும்
படி சேர்வைக்காரனை யனுப்பிவிருக்கின்றார் அந்தோ அந்தோஎன்
னசெய்வேனென்று கலங்கி கவலைப்படுகின்ற தோழியைக்கண்டு
சித்திராங்கி அடிபத்தினமாலையே யேன் பயப்படுகிறாய் பயப்படா
தே வருவது வந்தேதீரும் அதற்காக விசனப்பட்டால்வினைவிட்டுப்
போமோ ஒருக்காலும் போகாது ஆயிலுஞ்சாவு நூறிலுஞ்சாவு
கோரிடுவது இயற்கையே நாம் முன்ஜென்மத்திலென்னென்ன கர்ம
ங்களைச் செய்தோமோ அந்தக்கர்மங்களை இந்தஜன்மத்தில் அனு
பவிக்காவற்போகாது அன்னியிலும் சத்தியவாக்கிலும் நற்குணங்க
ளிலுஞ் சிறந்த என்னுசைநாயகராகிய சாரங்கதர மகாராஜனை மர
ணமடைந்துபோயினர் இனிநானிருந்து என்னடிபலன் அரசன்கட்
டளையின்படி சேர்வைக்காரனுக்கினக்குட்படிந்துபோவோம்வாடி
உனக்குயாதொருதீங்கும் வராமற்படிக்குக் காப்பாற்றுகிறதற்குச்
சிவபெருமானொருவனுண்டென்று தைரியஞ்சொல்லி எங்கடி சேர்
வைக்காரன் எனப்புகன்றுக்கொண்டே அரண்மனைவிட்டுவெளி
ப்பட்டுவந்து சேர்வைக்காரனை நோக்கி அப்பா சேர்வைக்காரனே
என்னையும் தாதியையும் உன்னுடைய ஆக்கினைக்குட்படுத்தி அரச
னைழைத்துவரச்சொன்ன காரணம்யாதோ அதைத் தெரியச்சொல்
லுமென அதற்கு சேர்வைக்காரன் ஓ அம்மணி தாங்களென்று சார
ங்கதரமகாராசன்மீது அபாண்டமாய் சாற்றியகுற்றத்தை உண்மை
யெனக்கருதிஅரசன்தன்னுடைய அருந்தவப்புதல்வனென்றும்பா
ராமல் மாறுகால் மாறுகைவாங்கும்படி ஆக்கினையிட்டது தங்களு
க்குத்தெரிந்தவிஷயமே அல்லவா அந்தப்படியே கொலுஞர்கள் சா
ரங்கதரமகாராஜனை இருண்டவனத்திற்கு கொண்டுபோய்பாறையி
ன்மீதுபடுக்கவைத்துமாறுகால் மாறுகையை வாங்கினவுடன் சிறி
துநேரம் சாவுக்குச்சரியான மூர்ச்சையாய்க்கிடந்து உடனே தெளி
ந்து சச்சிதானந்தமயமாகும் சர்வஜீவ தயாபரனுகிய பரமசிவத்தை
தியானிசெய்ய அவர்சிஷபவாகனரூடராய்த்தோன்றி வெட்டுண்ட மா
றுகால் மாறுகையையும் வளரும்படிச்செய்து அப்பா சாரங்கதரா
நீமெத்தவுஞ் சத்தியவான் நற்குணங்களிபாவும் ஒருருவாய்த்திரண்
டுவந்தசைப்போல உத்தமனுவலதரிதாதனின்மீது அந்தச்சித்திரா
ங்கி சொல்லியது அபாண்டமே இனிமேலோர்களாகிய தவசிகளை
டுத்து உபதேசம்பெற்று ஆனந்தவாரியில்முழ்கிச் சுகமுடனிருந்து
முடிவில் நம்முடைய பதவியை அடையக்கடவாயெனறு வாழ்த்தி

மறைந்துப்போயினதைக்கண்ட இரண்டாவதுமந்திரி அச்செய்தி யை அரசனுக்கறிவிக்க அதைக்கேட்டு அரசன்தனக்கு சிசுஹத்தி தோஷம்வந்து சம்பவித்ததேயென்றும் அத்தோஷத்திற்கு காரண மாகிய தங்களை விசாரணைசெய்யும்பொருட்டு சாஸ்திரிகளையும் வர ச்செய்தனுமன்றியுந் தங்களையுங் காவலுக்குள்ளாக்கிகொண்டு வரு ம்படி கட்டளையிட்டாரெனக்கேட்டுப் பின்வருமாறு சித்திராங்கி சேர்வைக்காரனைநோக்கி சொல்லத்தொடங்கினள்.

கேளுமப்பா சேர்வைக்காரனேஎன்னுடையவெண்ணம்யிதே றுங்காலம் சமீபித்துவிட்டது ஆண்டவருந் கிருபைசெய்தார்யான் விசாரணைக்கு வருவதற்கு யாதொருதடையுமேயில்லை ஆனல் என் னைவிசாரிக்கத்தக்கவர்களும் யான்சொல்லும்ஞாயநுட்பத்தைஅறி யத்தக்கவர்களும் உங்களரசனுகியகொடுங்கோல்மன்னனிடம்மொ த்தைச்சோற்றிற்கு மேளமடிக்கத்தக்க சாஸ்திரிகள் பிரயோசனப் படமாட்டார்கள் ஆகையால் நீசென்று நான்சொன்னதாய் அரச னுக்கறிவித்து இவ்வஸ்தினபுரியிலுள்ள நான்குவருணத்தாரிலும் கற்றுணர்ந்தவர்களாயும் ஞாயநுட்பங்களையறியத்தக்கவர்களாயுமி ருப்பவர்களில் ஒவ்வொருவகுப்பில் ஐந்தைந்துபேர்களை வரவழை த்துக் கொலுக்கூடத்தில் பலபட்டரை ஆலோசனைசபையொன்றை ற்படுத்தி என்னைவரவழைக்கச்செய்தால் யான்வருவேன் அப்படிக் கில்லாவிடில் நான் கண்டிதமாய் வரமாட்டேனென்று அறிவிப்பா யென்றுகடுமையாகவுரைத்த மொழிகளைச் சேர்வைக்காரன்கேட் டு அப்படியே அரசனுக்குத் தெரியப்படுத்துகிறேன் அம்மணியெ ன்றுவணங்கி விடைபெற்றுக்கொண்டு விரைவாய் நடந்து அரசன் கொலுமுகத்தை யடைந்து அரசனைக்கண்டு வணங்கி சித்திராங்கி சொல்லிய வசனங்களியாவையுங் கூறினன். அவ்வசனங்களைக் கே ட்டு அரசன்மந்திரியைநோக்கி அப்பா மதிமந்திரி சீக்கிரம் ஒருபல பட்டரை ஆலோசனைச் சபையைச்சேர்த்திடுவாயென .அந்தப்படி யே மந்திரியும் ஆலோசனைச்சபையொன்று சேர்த்து அரசனுக்க றிவிக்க அரசனும் சேர்வைக்காரனையழைத்து அடாசேர்வைக்கார னே நீ சீக்கிரம் சித்திராங்கியின் அரண்மனைக்குச்சென்று யான்பல பட்டரை ஆலோசனைச்சபையொன்று சேர்த்திருப்பதாய்ச்சொல் லி அவளை யுன்னுக்கினைக்குட்படுத்திப் பாதசாரியாய் நடத்திக்கொ ண்டு வரக்கடவாயென்று கட்டளையிட்டான்சேர்வைக்காரனும் அ ந்தப்படியே சென்றுசித்திராங்கியைக்கண்டு பணிந்து ஓ அம்மணி தங்கள் கருத்தின்படி ஆலோசனைசபை சேர்த்திருப்பதாய் தங்க ளை அழைத்துவரும்படி உத்திரவாயிருக்கின்றது சீக்கிரம்வாருமம் மாவென அதற்குசித்திராங்கி இதோவருகிறேனப்பாவென்றுசொ ல்லி அடிபாங்கிகளே சீக்கிரம் முத்துசிவிகைகொண்டுவாருங்களெ ன அதற்கு சேர்வைக்காரன் ஓ அம்மணி தாங்கள் குற்றவாளியா

யேற்பட்டிருப்பதால் பாதசாரியாப் கடந்துவரவேணுமென அதற்குச் சித்திராங்கி அப்படியா அந்தப் படுபாவிசொல்லியனுப்பினன் நல்லது அவனகங்காரத்தையும் எண்ணத்தையும் பறக்கடித்து அவனே யென்தந்தையால் சிறைச்சாலைக்குட் படுத்தி என்கண்குளிரப் பார்க்கிறேனென்றுசொல்லி அங்கிருக்கும் வேதியர்களைநோக்கி ஓ ஐயமாரே நீங்கள்சென்று என்தந்தைக்கு இச்செய்திகளை யுரைத்துப் பின்பு உங்கள் தீர்த்தயாத்திரைக்குப்போங்களென்று சொல்லி தன்னுடைய இரதத்தின கண்டியை அவர்களுக்குச் சன்மானமாகக்கொடுத்தனுப்பிவிட்டுத் தானும்தன்னுடைய தோழியும் பாதசாரியாய் நடந்து சேர்வைக்காரன் ஆக்கினைக்குட்பட்டு வருகையில் சித்திராங்கி ஓ பரமசிவமே அடியாளை இவ்வுலகத்தினில் பெண்ணாகப் பிறக்கச் செய்து பலமன்னர் வந்து என்னை விவாகஞ் செய்துக் கொள்ளும் பொருட்டு என் தந்தையைக் கேட்டும் அவர் சம்மதிப்படாமையால் அவர்களுக்கு கிட்டாமற் செய்து சாரங்கதரனுடைய படத்தைக் கண்டு என்தந்தை மகிழ்யானும் ஆவலாகவும் நரேந்திரன் வஞ்சிக்க கருதவும் யான் கோரிய கணவன் என்கருத்திற்கிசையாமல்மறுக்கவும் அதனால்யான்கடுஞ்சினங்கொண்டு அரசனுக்குப்பழிவார்த்தை புகலவும் அதைக்கேட்டு அரசன் என்கணவனுக்குஆக்கினைவிதிக்கவும் அவ்வாக்கினையை யவரடையவும் இவ்வாறுநடந்தயாவும் உன்திருக்கூத்தன்றே அந்தோஎனக்கென்னகாலம்வந்த திந்தக் கோலம் கள்ளியைப்போல என்னை இந்தகாவற்காரர்கள் சூழ்ந்துக்கொண்டு அழைத்துப்போகவும் யானும் அவர்களாக்கினைக்குட்பட்டு சிபிகையிலூர்ந்துப் போகாமல் பாதசாரியாய்நடந்து அரசன்சபைக்குப்போகவும் நேரிட்டதேயென்று புலம்பியழுதுக்கொண்டேவருவதைக்கண்டுதோழிசித்திராங்கியை நோக்கி கேளும் என்னம்மணி அன்று உனக்காக யானொருபொய் சொல்லியபடியால் இக்காவலரும் சேர்வைக்காரனும் நம்மைச்சூழ்ந்துக்கொண்டு அவர்களாக்கினைக்குட்படுத்திக்கொண்டுபோவதைப் பலருங்கண்டு சிரிக்கவும் கேலிசெய்யவும் இக்கெதி யெனக்குவந்து நேரிட்டதே அரசனதுசபைமுன்சென்றால் இன்னமென்ன ஆக்கினை விதிக்கப்படுமோ அப்போதெனக்குத் துணையொருவரையுங்காணேனே பட்சிக்காகிலும்மரமொன்று ஆதாரமிருக்கின்றது யாதொரு ஆதாரமுமின்றி பரதேசியைப்போல்நானேயென்றுபற்பலவாறு சிந்தித்துத் தியங்கி மயங்கி பெருங்கவலையடைந்து அழுதுபுலம்புவதைக்கண்டு சித்திராங்கி தோழியைநோக்கி அடி ரத்தினமாலையே வாளுக்கு மாலைசூட்டும்படி எனக்கு மேனங்கரையும்படி வெகுநீதிகளைச்சொல்லி இசையச்செய்தனையே அதை மறந்துவிட்டாயோ உன்னுலல்லவோ யெனக்கிக்கெதிவாய்த்தது இந்தச்சமயத்திலென்னையாதரிப்பவர்கள் யாவர் ஒருவருமில்லையேயென்னப்போனராஜகுமாரத்திக்கே இப்படிப்பட்ட ஆபத்துநேரிட்டிருக்க அதைமன

திற்கொள்ளாமல் தைரியங்கொண்டிருக்கின்றேன் இவ்வண்ணம் நீயும் தைரியஞ்செய்துக்கொண்டிராமல் கலங்கியழுதால் விடுவிடு மோவிடமாட்டாது எந்த ஆக்கினை வந்தபோதிலும் அனுபவித்தே தீரவேணுமென்று தைரியஞ்சொல்லிக்கேட்டு தோழியானவள் சொன்செயலின்படி நடக்கட்டுமென்று தன்மனதைதானே தேற்றிக் கொண்டு சேர்வைக்காரன்பின் நடந்துபோயினள்.

அப்போது சேர்வைக்காரன் அவ்விருவரையும்சபைக்குவெளியில் நிறுத்திவைத்துக்காவற்காரரிடம் அவர்களை ஒப்புவித்துசாக்கிரதையென்றுசொல்லி அரசன்கொலுமுன்னஞ்சென்று பணிந்து ஓசுவாமி தங்கள் கட்டளையின்படி சித்திராங்கியமாளையும் ரத்தின மாலையையும் என்காவலுக்குட்படுத்தி அழைத்துவந்து சபைக்கு வெளியில் விட்டுவந்தேனெனக்கேட்டு அரசன் அடாசேர்வைக்கார னே அந்தகொலைப்பாதகியாகிய சண்டாளியை யாவருங்காண இச் சபைக்குமுன்னந்தள்ளிக்கொண்டுவாடாவென சேர்வைக்காரனும் அந்தப்படியே சித்திராங்கியைச் சபையிலிருக்கும்யாவரும்காணும் படி தள்ளிக்கொண்டுவந்து அரசன்கொலுமுன்னம் நிறுத்திஞன் அப்போது சித்திராங்கி அரசனைநோக்கி என்னையிந்த காவற்கார ரைக்கொண்டு அழைப்பித்தகாரணம் யாதோ அதைதெரியச்சொல் லும் வேந்தேயென அதற்கு நரேந்திரன் அடிபாதகி சண்டாளிலீலி நிர்மூடி காதகி தோதகி நீசொல்லியவார்த்தையை உண்மையென் றேநம்பி அருந்தவப்புதல்வனுகியசாரங்கதரனைவதைசெய்வித்தேன் இன்று நீசொல்லியபடி சேர்த்திருக்குஞ் சபையோர்கள் முன்னம் நடந்தவுண்மையைப் புகன்று ஞாயத்தை ஏற்படுத்துவாயெனக் கேட்டு சித்திராங்கி ஆஹா அரசே அப்படியா (கேழ்வாகில் நெய் பொழுதுதென்று)சொல்லியபோதிலும் கேட்பவர்கள்மதிகெட்டுப் போயிற்றே ஆய்ந்தோய்ந்துப் பாராதவன்தான் சாகக்கேடுவரும் என்பதுபோல நீமுன்பின்யோசிக்காமல் மனம்போனபடி அரசர் குலத்திற்கு அடுக்காதகாரியம் நீசெய்ய எத்தனித்தபடியால் இக்க ருமம்கேரிட்டதென்றுணராமல்தப்பைதன்மீதுவைத்துக்கொண்டு என்னிகழ்வாய்ப் பேசத்தகுமோ உனக்கு நீதிதெரியுமா அறி விருக்கின்றதா இதுதானே செங்கோற்பிடித்த வலுமை இவ்வன் னீதியாலுன்னரசு ஒங்குமாவெனகேட்க அதற்குநரேந்திரன் சொல் லத்தொடங்கினன்.

என்னடிபாதகி யானென்றுகேட்டால் நீயொன்றுசொல்லுகி ன்றாய்குடியைகெடுக்கவந்தபடலீலியானபாவாதமாவத்தனைக்கீழே தள்ளினதுமல்லாமல் அவனைப் புதைக்கப் பள்ளந்தோண்டுவது போல நீதியில்லாப் பொய்வார்த்தையைச்சொல்லிப் பழிபுரியச்செ ய்ததுமல்லாமல் இந்த ராஜசபையில் கிஞ்சித்தேனும் அஞ்சாமல்

ஏதேதோ வெகுநீதிகளையும் உதாசனமாகவும் பேசத்தொடங்கினைப் பழிகாரியென அதற்கு சித்திராங்கி நீதியும் வரன்முறையும் விடுத்த பாவியோகியிருக்கயோக்கியனைப்போல என்னை நீ இழிவாகப் பேசுகின்றாய் இன்றுன்னுடைய பெண்ணம் மண்ணுவதறியாயோ கூடிய சீக்கிரத்தில்எல்லதந்தைவருவார் அவரைக்கொண்டு உன்செருக்கை யடக்கி ஆணவத்தைப்போக்கி செங்கோலேந்திக்கி உன்னைச்சிறைக்கு ள்ளாக்கி என்கண்குளிரப்பார்க்கிறேன் வாயில்வந்தபடி நீபிதற்று மல்முன்பின்யோசித்து பொழியுரைப்பாயென அதற்குநரேந்திரன் என்னடி இச்சபையின்முன்னம் நடந்த உண்மையைச் சொல்லும் படி நியாயங்கேட்டால் அரசனென்றும் இங்கிருப்பவர்கள் நீதியை உணர்ந்தவர்களென்றும் சிறிதேனும்பயமுமதிப்புமின்றி எடுத்தெ றிந்துபேசுகின்றாய் சாரங்கதரன் உன்னைப்பற்றியன்றிழுத்து பொ ய்யா அல்லது உண்மையா இதை யாவருமறியும்படிக்கி மர்மமின் றிநடந்த யெதார்த்தத்தைச் சொல்லுமென அதற்குச் சித்திராங்கி பாட்டுமிரட்டும் பேசுகின்ற உமக்குத் தெரியமாட்டாதோ என்னை க்கேட்டுத் தெரிந்துகொண்டு பிறகு ஞாயம் ஏர்ப்படுத்தப்போகின் றீரோ ஆ ஹா ஹா பாலுக்குங்காவல் பூனைக்குந் தோழகையிருக்கி ன்றீரோ உமது ஜெகஜாலப்பிரட்டை யானென்னவென்று சொல்லு வேன் ஆகிலும் முன்னம் நீர் வேதியர்களிட மனுப்பிய பத்திரத்தைக் கண்டுஆவலடைந்து வாளுக்குமாலைசூட்டினபோது என்மனதினில் சாரங்கதரனுடைய நிருவடியே எனக்குகதியென்று அவரைத்து திதுயான் மாலைசூட்டியபடியால் அவரென்னைப் பற்றியிழுக்கவும் யானவரைப்பற்றியிழுக்கவும் பாத்தியமுண்டு அப்படி யெங்களிரு வருக்கும் பாத்தியமில்லையென்று நீர் சொல்லவும் உமக்கு விவேக மாகுமோ மேலும் என்னைப் படுநீலியென்றும்பஞ்சமாபாதகி யென் றும் அடியென்றும் பிடியென்றும் பற்பலவாறுமதுவாக்கில்வ ந்தபடி பிதற்றுகின்றீர் உமக்கு அடியென்றெனையழைக்கவும் பாத் தியமுண்டோ உனக்கேது பாத்தியம் இதையாராகிலுங்கேட்டால் உம்மைப்பலவாறு இகழுவார்கள் நீசெய்யத்துணிந்த கெட்ட நட வடிக்கையேயும்மைப் பழிக்குள்ளாகச்செய்தது அன்றியும்என்னை அடிபிடியென்று பேசினதால் உன்னுயிர் நரகத்தை யடையுமென்ப தற்கு ஐயமேயில்லையென அதற்கு நரேந்திரன் அடிமாதே இச்ச பையினில் கொஞ்சமேனும் மஞ்சாமல் என்மீது பழிசுமத்திப்பேசுகி ன்றாய் அப்படியானிப்பழிக் குடந்தைப் பட்டவனுகையிருப்பதை இச்சபையோர் முன்னிலையில் தக்க ஞாயங்களை யாவரும் ஒப்புக் கொள்ளத்தக்க ஞாயத்தை யெடுத்துரைத்து யான்பழிக்குடன்பட் டவனென்பதை நிரூபிக்கக்கடவாயென அதற்கு சித்திராங்கி ஓசபை யோர்களே என்னுடைய ஞாயத்தைக்கேட்டு நடுநிலைமையாகத்தீ ர்ப்புசெய்கிறீர்களா அல்லது என்தந்தைவருகிறபரியந்தம் நிதானி த்திருக்கின்றீர்களாவென அதற்கு சான்றோர்கள் ஓ அம்மணி நாங்

கள் ஞாயத்தையுணர்ந்து பக்ஷபாதமின்றி நடுநிலைமையாகத் தீர்ப்பு செய்கிறோம் உம்மூடைய தாக்ஷண்ணியத்தையும் அரசனுடைய தாக்ஷண்ணியத்தையும் விரும்பி வந்தவர்களல்ல உங்களிருவருக்கும் பொதுவாகப் பேசப்பட்டவர்களாகையால் நடந்த உண்மையைச் சொல்லும்மாவெனக்கேட்டு சித்திராங்கி அப்படியானால்சொல்லுகின்றேன் கேளுங்கள் சபையோர்களே தருமகந்தனருடைய குலமுமக்குத் தெரியுமாவென அதற்கு சான்றிகள் அவர் குலம்உத்தமமாகிய சந்திரகுலம் அவர்களுற்பத்தி யெப்படியென்றால் சந்தனமகாராஜனுக்கு விசித்திரவீரியன் விசித்திரசேனன் என்ன இரண்டு பின்னைகளுதித்தார்கள் இதில் விசித்திரவீரியன் காசிராஜன் புதல்விகளாகிய அம்பிகை அம்பாலிகை யென்றஇரண்டு கன்னிகைகளை மணம்புரிந்துச்சிலகாலமிருந்து இறந்தான் அம்மங்கைகளிருவரும் வேதவியாசரைக்கூடி திருதராஷ்டிரனையும் பாண்டுவையும் பெற்றார்கள்இவர்களில பாண்டுமகாராஜன்குந்திதேவியையும் மத்திராதேவியையும் மணம்புரிந்துக் கூடிக்கலந்து வாழ்ந்திருக்குங் காலத்தில் பாண்டுமகாராசனுக்கு சாபம்நேரிட்டபடியால் குந்திதேவி புருஷனிஷ்டப்படி எமனைக்கூடி தருமகந்தனையும் வாயுதேவனைக்கூடி பீமனையும் தேவேந்திரனைக்கூடி அருச்சுனனையும் பெற்றாள் மத்திராதேவியானவள் அசுவனி தேவதைகளைக்கூடி நகுல சகாதேவர்களிருவரைப் பெற்றாள் ஆனால் இழிகுல மென்பையோ இவர்கள் தேவஅம்சம் பெற்றவர்களாதலாலும் சாஸ்திரவிதிப்படியும்மணவன்சொற்படியும் நடந்துபெற்றவர்களாதலால் அவர்களை விசாரகுலமென்று சொல்லத்தகாது அப்படிச் சொல்லுமவர்கள் ரௌரவர்திநரகத்தையடைவார்கள் யென அதற்கு சித்திராங்கி ஓசாஸ்திரிகளே இவர்கள் உத்தமமாகிய சந்திரகுலத்திற் பிறந்தவர்களாயிருந்தும் இவர்களுக்குப் பின்னிட்டு அரசனுகி கேங்கோல செலுத்தும் இந்த நரேந்திரன் தன்புதல்வனுக்கு மணஞ்செய்விக்க வெண்ணிப் படமொன்றெழுதி பெண்தேடும்படி வேதியரிடத்திற் கொடுத்தனுப்ப அப்படத்தை என்தந்தையும் யானுங்கண்டு மனமகிழ்ந்து அதில் என்தந்தை படத்தில் வரைந்திருக்கும் ராஜகுமாரனுக்கேள்வனைக்கொடுத்த மணம்புரிவிக்கவெண்ணி யதையானுமறிந்து அந்தராஜகுமாரனுக்கே மாலையிடவேண்டுமென்றுமனதில் கருதி அப்படத்தை என்னிடமிரித்திக்கொண்டு என்னுருவமைந்த படத்தை வந்தவேதியரிடங் கொடுத்தனுப்ப அப்படத்தினழகைக் கண்டு இக்கிழவடிவான் மோசமிறி என்னை யிவன்மணம்புரியக்கருதிவாளையனுப்பி அதற்குமாலைசூட்ட யென்னையழைத்த வரும்படிவேதியர்களையனுப்ப அவர்களு மத்தப்படியேவந்துவானைக்கொடுத்து அதற்குமாலைசூட்டும்படிச் சொல்லக்கேட்டு யானப்போதேஅவ்வேதியர்களைநோக்கி இதுவென்ன ஆச்சரியம் இப்படியெங்காகிலும் நடந்தஉண்டாவென்று மறுத்ததற்கு அவ்வேதியர் தருமகந்தனர் அர

சாக்ஷியில் அனேகங் கன்னிகைகள் வாஞ்சுகுமாலேசூட்டி வாழ்ந் திருக்கவில்லேயா இதென்னபுதுமையோவென்று கூறியதைகேட்டு வாஞ்சுகுமாலேசூட்ட ஒப்பினேன் அப்படியான்ஒப்பினபோதிலும் அந்தவாளில் தருமசந்தனருடைய பெயர் வரைந்திருக்கக்கண்டுவே தியர்களேநோக்கி இந்தவாளில் தருமசந்தனருடைய பெயர் வரை ந்திருப்பதால் இது சாரங்கதரமகாராஜனுடைய வாளல்ல இதற்கு யான்மாலேசூட்டுவதில்லேயென்று மொழிந்தேன் அதற்கவ்வேதியர் கள் இந்தவாள் தருமசந்தனருடையதே அதற்கு தடையேயில்லே ஆகிலும் இவ்வாளானது தருமசந்தனருக்குப்பின் பரிக்ஷித்துமகா ராஜனும் அப்பரிக்ஷித்துமகாராஜனுக்குப்பின் ஜனமேஜெய மகா ராஜனும், அந்த ஜனமேஜெயருக்குப்பின்பு நரேந்திரனும், நரேந் திரனுக்குப்பின் சாரங்கதரமகாராசனும்இப்படியோரான்வழியாய் கைப்பற்றிக்கொண்டு வந்தமையால் இப்போது இளவரசாகிய சா ரங்கதரமகாராஜன் அனுபலத்திலிருக்கிற படியாலும் சந்தேகிக்கா மல் தாங்களிந்தவாளுக்கு மாலேசூட்டலாமென்றுமொழியக்கேட்டு அப்படியே இருக்கலாமென்று நம்பிக்கைகொண்டு இவ்வாளுக்கு மாலேசூட்டினேன் என்மனதிலென்ன எண்ணிமாலேசூட்டினேனென் றால் மாப்பிள்ளேயாகிய சாரங்கதரமகாராஜருடைய திருவடியை தியானித்து இவரே நமக்குதெய்வம் இவரைவிடமேலானதெய்வம் இவ்வுலகிலில்லேயெனத் தீர்மானித்து பூமிதேவியையும் ஆகாயவா ணியையும் சாக்ஷிவைத்து மாலேசூட்டினேன் உடனே அவ்வேதியர் களெண்ணியழைத்துவந்து தனிமாளிகையிற் சேர்த்தனர்கள் அதை யறிந்து இப்பாவியெனக்கு மாமனாராகவிருந்தும் மணவாளனுகி என்னிடம்வந்து தன்னேக்கூடி கலவிசெய்யும்படி யெண்ணிவெகுவாக துதித்துவேண்டினன் அப்போது என்னிடமிருந்த படத்தின் அழ கையும் இவனுடைய அழகையும் ஒத்திட்டுப்பார்க்கையில் மாறுப ட்டிருப்பதையுணர்ந்து இவன்நமது கணவனல்லவென்றுன்னி அந் தசமயத்திற்குத்தக்க யுக்தியொன்றுசெய்து இவ்வரசனேநோக்கி எ னக்கு ஒருவருடம்நோன்புண்டு அந்தநோம்பு முடிந்தபின்பு உம திஷ்டப்படியிருப்பேனென்று தடைபடுத்தியனுப்பி என் கணவன் வரவுக்கெதிர்பார்த்திருந்து அவர் வந்தவுடன் என்னைக்கூடி கலவி செய்யும்படி வெகுவாய்வேண்டிக்கொண்டும் அவர் உடன்படாமல் என்னேச்சிறியதாயென்று அவரெனக்குப் பிள்ளேயென்றும் வெகு நீதிகளேஎடுத்துரைத்து ஓடிப்போவதற்கு வழி பார்த்துக்கொண்டி ருப்பதை யானறிந்து அப்போதெனக்குண்டாகிய அடங்காக் கோ பத்தினுல் அவரைநோக்கி என்னுடைய ஆசையை நிராசையாகச் செய்த உன்னே அரசனிடம்சொல்லி தக்கதண்டனே படையும்படிக் குச் செய்விப்பதுமன்றியானும் அக்கினியிற் குதித்து என்னுயிரை மாய்த்துக்கொள்ளுகிறேன் யென்று சொல்லியபடி அரசன் வந்தவு டன் யான்சொல்லியது பொய்யே அந்தப் பொய்வார்த்தையைச்ச

377

கலீதிகளையும் அறிந்த அரசன் எப்படி நம்பலாம் வாதிப் பிரதிவா திகளை யெதிரில் நிறுத்தி விசாரணை செய்யாமல் வாதியின் சொல்லே யேநம்பி ஒருதலைபக்ஷமாய் எப்படி பிரதிவாதிக்குதண்டனைவிதிக்க லாம், இப்படி ஞாயத்துக்கு விரோதமாய் தண்டனை விதித்தபடியி னலே இந்தகுற்றம் யாரை யடைந்தது அதினாலுண்டாகிய அத்தி தோஷத்தை அரசனே யடையவேண்டியவராயிருக்க இதை யோசி க்காமல் என்னைப்பழிக்காரியென்றும் கீலியென்றும் பாதகியென றும் காதகியென்றுஞ் சொல்லிப் பிதற்றுவது அறிவீனமன்றே யென்றனள், இவ்வசனங்களைக்கேட்ட சாஸ்திரிகள் அரசனைநோக்கி ஓ! வேந்தனே! தாங்கள் படமனுப்பியது உண்மைதானே வென, அதற்கு அரசன் பதில்சொல்லாமலிருக்க முதல்மந்திரி படமனுப் பியது உண்மையே யென்றான். அதற்கு சாஸ்திரிகள் ஐயா சபை யோர்களே இந்தமாதுகற்புடையவ ளாதலால் தன்னை யங்கீகரிக் காத புருஷன்மீது கோளுறைபுகன்று அவனையுங்கொன்று தானும் மடியத்துணிந்தனள் இதுஞாயமே! இந்த அரசனசெய்ய யெத்தனி த்தது அதருமமே இம்மங்கையை மருமகளென பாவித்து நடப்ப தைவிடுத்து மருமகளை மனையாட்டியாகச் செய்துக்கொள்ள வெ ண்ணினது அநீதியே! அன்றியும் வாதிப் பிரதிவாதிகளின் வாக்கு மூலத்தை விசாரணைச்செய்யாமல் தன் புதல்வன்மீது குற்றத்தைச் சாட்டி தண்டனைவிதித்ததும் அநீதியே! ஒப் அரசனே ! இதற்கெல் லாம் காரணம் யோகவிருந்தும் இந்த உத்தமியை நாரியென்றும் பூரியென்றும் வைத்து வீணே உமக்கேனிந்த தற்புத்தி யுண்டாகி யது, கேடுவரும்பின்னே-மதி கெட்டுவருமுன்னே யென்பதுபோ லவும் விஞசகாலே விபரீதபுத்தி யுண்டா மென்பது போலவும் உம்மாலேயே இக்கெடுதி யுண்டா யிருக்கின்றதென, அதற்கு சித்திராங்கி, ஓ சாஸ்திரிகளே! குற்றஞ்சாட்டிய எண்ணையும் குற்ற ஞ்சாட்டப்பட்ட சாரங்கதரணையும் எதிரில்நிறுத்தி விசாரணைசெய் திருந்தால் அவருக்கும் இவ்வாக்கினையைச் சாட்டப்படமாட்டா து. அவ்வாறுசெய்யாமல் என்னைக்கூடிக் கலவிசெய்யக்கருதித்தவ ஞ்செய்த பெற்றபுதல்வனை தண்டனைக்குட்படுத்தியது அநீதியே என்றனள் அதற்குசாஸ்திரிகள், ஓ அம்மணி நீசொல்லியபடி வா திப்பிரதிவாதிகளைநிறுத்தி விசாரணை செய்யாதபடியினலே இதைக் கொடுங்கோலரசென்றசொல்லத் தகுமென்றார்கள். அதற்கு முதல் மந்திரி, சித்திராங்கியைநோக்கி, நாங்களன்றுவந்துவிசாரித்தபோ து நீசொல்லியதென்ன, இன்றுநீபேசும் நீதியென்ன நீபழிகாரியெ ன்பதற்குத் தடையுமுண்டோ வெகு நீதியறிந்தவளைப்போலமொ ழிகின்றாயே நாரியென்றான் அதுகேட்டு சுமந்திராகாரன் முதல்மந் திரியைநோக்கி கொஞ்சமேனுமஞ்சாமல் இந்த ராஜசபையில் நாரி யென்றுசொன்ன வாக்கை இரண்டுதண்டாம்படி நறுக்கிவைக்கி ன்றேன் ஆகட்டுமடா பாவியென்றான் உடனே சித்திராங்கி முதல்

மந்திரியைநோக்கி அடாநாயே நீயா என்னை நாரியென்பவன் உன்னுயிரை என்தந்தையாசிய சித்திராங்கதன் பாணத்தார் சூரையிடுகிறேன் சற்றேபொருந்திருப்பாயடா பேயா என்றனள் அப்போது இரண்டாவதுமந்திரி, சபையோர்களைப் பார்த்துசொல்லத்தொடங்கினன்.

தேஞுங்கள் சபையோர்களே இந்த சித்திராங்கியம்மாள்சொல்லிய வார்த்தையினல் இந்நாட்டிற்கு அதிபதியாகியஸ்ரேந்திரமகாராஜனே குற்றவாளியென்றதற்குத் தடையேயில்லை இச்செய்திகளனத்தையும் சித்திராங்கத மகாராஜனறிந்தால் கடும்போர் விளையுமென்பதற்குச்சந்தேகிக்க வேண்டியதேயில்லை அப்போர்ப் பட்டபோர் விளையாமலிருக்கும்படியான யோசனையுடன் தீர்ப்புசெய்யவேணுமென, அதற்கு சபையோர்கள் அன்று சாரங்கதரணி விசாரணைசெய்யும்போதுகுற்றஞ்சாட்டியசித்திராங்கியம்மாளையும்,உடனிறுத்தி விசாரியாதது மெத்தவும் ஞாயவிரோதமென்றூன் உடனே இரண்டாவது சித்திராங்கியம்மாளுடன் வந்ததோழியாருவளுடைய சாக்ஷிவாக்கு மூலத்தினல் தெண்டித்ததும் அக்கிரமமெ, மூன்றுவது மகனுக்குத் தேடியபெண்ணை நீரே புணரக்கருதியதும் மெத்த அக்கிரமமெ இக் குற்றத்திற்காக ஓ ஸ்ரேந்திர பூபாலனே! இனி யிச்செங்கோல்பிடிபபதற்கு நீ தகாதவனுகும்பொய்சாக்ஷி சொல்லியதோழியின் நாக்கையறுத் தெரியவேணுமே, வனத்தில் தவவேடம்பூண்டிருக்கும் சாரங்கதரணி அழைத்துவந்து அல்தினபுரத்தையாளச்சிகாசனதிபதியாகச்செய்யவேண்டியது கற்பிற்கரசாகிய சித்திராங்கியம்மாள்மீது யாதொருகுற்றமு மிலலாமையால்சுகமாகயினிது வாழ்ந்திருக்கச் செய்யவேண்டியதென்று தீர்மானஞ் செய்தார்கள் அந்தப்படிபே யாவரும் சரி சரி யென்றுகொண்டாடிக்கொண்டேதங்கள்தங்கள் அகம்சேர்ந்தார்கள் இதில சாஸ்திரிகளோநோக்கிசித்திராங்கி கற்றறிந்த பெரியோர்களே யான்கோரிய கணவன் அனியாயமாய் மாண்டபோதேயான் விதவையாயினேன் இனியிவ்வுலகவாழ்வு யெனக்கேதுக்குபாணும் அக்கினிப்பிரவேகஞ்செய்து என்கணவரிடம்யானும்பயணுகின்றேன் என்றனள் அப்போதுஸ்ரேந்திரன் இவளுத்தமிய அருந்ததிக்கு நிகரானவளே நாமென்னமோ பேயாலோசனை செய்து இவ்வபகீர்த்திக்காளாளேனும் முன்னமிவள் விரகமென்றபோது இதென்னமோ கூடமென்றுதெரிந்துகொள்ளாமற்போனது நம்முடைய அஞ்ஞானமே இம்மாதினை அக்கினியில விழவொட்டாமல் உபாயந் தேடுவோமென்று தனக்குத் தானே போசித்தது சித்திராங்கியைநோக்கி ஓ மாதரசிரோன்மணி! நான் தெரியாமற்செய்தகுற்றத்தைப்பொறுத்து நீஇந்தச்சிவிகையின்மீதேறிக்கொண்டு அரண்மனைக்குப்போய்சேர்வாய் என்றன்னை கண்மணிபே தெகிட்டாக்கனியே கற்க

ண்டே நின்தோழிசெய்த குற்றத்தையும்மன்னித்தேன் என்றுவே
குவாக இனியமொழிபேசி வேண்டிக்மொண்டான் அதற்கந்த சித்
திராங்கி நரேந்திரனேநோக்கி ஓ அரசே என்னே நீரிப்படி மானே
தேனே மயிலே குயிலே யென்பதற்குரான் உமக்கு மருமகளாகும்
உமது மனையாளாகியரத்தினங்கியம்மாளையன்றேஇப்படிக்கெல்லா
ஞ்சொல்லி மகிழ்செய்வது ஞாயம் அதைவிடுத்து எம்போலியர்
களே இவ்வாறுசொல்லி மகிழச்செய்தால் மகிழ்வதுண்டோ ஏன்
வீணன எண்ணங்கொண்டு மனப்பால் குடிக்கின்றீர் இனி யான்
மிமைப்பொழுதேனும் உயிர்வைத்துக்கொண்டு இவ்வுலகினில்வசிப்
பதில்லை அக்கினியில்வீழ்வது உண்மையென்றான். அதற்கு நரேந்
திரன், அப்பா மந்திரி, சீக்கிரம் அக்கினி வளர்க்கச்செய்வாய் பொ
ய்மொழிபகன்றதோழியின் நாக்கையறுத்துக்காட்டிலில்விடச்செ
ய்வாயென, அந்தப்படியெமந்திரியும் சேர்வைக்காரனுக்குக் கட்ட
ளையிட, அவனும்ரத்தினமாலையென்னுந் தோழியைப்பிடித்துக்கட்
டிநகரத்தைவலஞ்செய்துகொண்டு போகிறபோது அந்நகரத்திலு
ள்ளயாவரும் அத்தோழியைப்பார்த்து இவள் அனியாயமாய்இரா
ஜகுமாரன்மீது பொய்சாக்ஷி சொல்லியபடியால் இவளுநாக்கையறு
த்துக் கடுங்காட்டினில் விடும்படி அரசன் கட்டளையிட்டான் யென்
றார் சிலர் இவள் பொய்மொழியைக் கூறியபோதிலும் மந்திரியும்,
அரசனும், அதைநன்றாய் விசாரித்திறியாமல் இவள் மொழியைநம்
பிஇராஜகுமாரனுக்கு தண்டனை விதிப்பது நீதியோவென்றார் சிலர்
அற்பமான இத்தோழியின் வசனத்தைக்கேட்டுப் புத்திரனை தண்
டித்தவனும் அரசனுவனே இவனுக்குத் தான் அறிவுகெட்ட போ
திலும், மந்திரியாவது அரசனுக்குத்தக்க நீதிகளைச்சொல்லி தடுக்
காமல் இதற்குட்பட்டவனும் மந்திரியாவனேயென்றார் சிலர் மக
னுக்குப் பெண்பேசி அப்பனே யப்பெண்ணை மணம்புரிய வெண்ண
ங்கொண்ட அரசனே கொடுங்கோலனு யிருக்கும்போது மந்திரியும்
அப்படித்தானே கொடியவனுகவிருப்பவன்யென்றார் சிலர் இப்படி
யாகப் பட்டணத்து ஜனங்கள் யாவரும் பற்பலவாறு இழிவாகப்
பேசிக்கொண்டிருக்கத் தோழியானவள் அந்தந்தோ இவ்வித ஆக்
கினையெனக்குவருமென்று அறியாமற்பொனே பொய்சொல்லும்
படி அரசனக்குபோதித்த விஷயத்தில் யான்புத்திமயங்கினேனே
ஜகதீசா! உமைநேசா! யான் செய்தபிழையை பொறுத்து என்னை
யாட்கொள்ளும் இமைநேசா! யான் முன்னஞ்செய்த வினையின்பல
னிதோ காட்டில் நாவறுபடச்செய்தது ஜகதீசா! எனக்குண்டா
கிய பயத்தைப்போக்கி யாட்கொள்ள விரைவினில்வருவாய் உமை
நேசா! யென்றுப் பதறிக்கதறியழுது புலம்பிக் கண்ணீர் ஆராய்ப்
பெருகவிட்டுக்கொண்டு சேர்வைக்காரன் பின்சென்று பெருத்த
கானகத்தை யடைந்தனள். அப்போது சேர்வைக்காரன் அம்மா
தோழி அரசன்கட்டளையின்படி நாக்கையறுக்கத்தக்கயிடமிதுவே

ஆகையால் சீக்கிரம் உன்னுக்கை நீட்டுவாயென, அவளும் அந்தப் படியே நாக்கைநீட்டியவுடனேசேர்வைக்காரன்தோழியின்நாக்கை வாளினுலறுத்தெரிந்து அவளையவ்விடத்திலேயேவிட்டு அவள்கண் ணுக்குப்புலப்படாமல் வேறுவழியாய்நடந்து பட்டணத்தையடை ந்து நரேந்திரனைக்கண்டு வணங்கி, ஓசுவாமி தங்கள் கட்டளையின் படி தோழியின் நாக்கையறுத்தெரிந்து அவளைக்காட்டினில் விடுத் துவந்ததெனைக்கேட்டு நரேந்திரன் அப்படியா சரி போய்வருவா யடாசேர்வைக்காரனே! என்று விடைகொடுத்தனுப்பி சித்திராங்கி தனக்கிணங்காமல் அக்கினியில் குதிக்க திடங்கொண்டிருப்பதைக் கண்டு சிந்தித்துக் கொண்டிருந்தான் இப்படி யிருக்க சித்திராங் கியினு லனுப்பப்பட்டப் பிராமணன் சென்று சித்திராங்கதனைக் கண்டு ஆசிகூறி, சித்திராங்கியம்மையின் விசனசமாச்சாரத்தை விரி த்துரைத்தான். அம்மொழிகளைக்கேட்ட மாத்திரத்தில் சித்திராங்க தனுக்கு என்றுமில்லாத கோபமுண்டாகித் தன்மந்திரியைநோக்கி ஓமதிமந்திரி அந்ததுஷ்டனுகிய நரேந்திரன் எனது புதல்வியாகிய சித்திராங்கியம்மாளைச் சிறையில் வைத்திருப்பதாய்த் தெரியவந்தது ஆகையால் அவனை என்குலத்துக் கிரையாகச்செய்ய வெண்ணங் கொண்டேன். சீக்கிரம் இரதகஜதுரகபதாதிகளாய் சேனைகளைத் தயார்செய்யக்கடவாயென, அந்தப்படியே மந்திரியும் நால்வகைச் சேனைகளையுந்தயார்செய்து சித்திராங்கதனுக்குத் தெரியப்படுத்தி னுன் உடனேசித்திராங்கதன் யுத்தசன்னத்தனுய்நால்வகைச்சேனை களும் புடைசூழ ரணபேரிவெங்கலபேரிகையுடன் சகலவாத்தியங் களுங்கமலாலிபோல முழங்கப்புறப்பட்டுக் குருநாட்டுக்கு அருகி லோர சோலையிலிரங்கி ஓர்தூதனையழைத்து அடாதூதா விரைவாக நரேந்திரன்பால் சென்று நாம் யுத்தத்திற்குவந்திருக்கின்றோம் சீக் கிரம் அவனையுத்தத்திற்குவரும்படி சொல்லுவாய் அந்தப்படியவன் வராவிடில் சேனைகளையே அஸ்தினுபுரத்தைக் கொள்ளையிடும்படி க்கிச் செய்விப்பேனென்று யான்சொல்லியதாகச் சொல்லக்கடவா யெனத்தூதனும் அந்தப்படி சொல்லுகிறேன் சுவாமி யென்றுவண ங்கிச்சென்றனன், பின்னும் சித்திராங்கதன் சேனைத்தலைவனைநோக்கி ஐயாசேனைத்தலைவனே நீயுமது சேனைகளுடன் சென்று கோட்டை க்குவெளியிலிருந்து ரணபேரிகை முழங்கச்செய்வாயென அவனு மந்தப்படியே சேனைகளுடன் புறப்பட்டு கோட்டைக்கு வெளியில் நின்று ரணபேரிகை முழக்கினன். இதற்குள் தூதுவனும் நரேந்தி ரன் சபையையணுகி ஓமகாராஜனே! சித்திராங்கதமகாராஜன் தங் கள்மீது தண்டெடுத்துவந்திருக்கின்றார் சீக்கிரம் யுத்தஞ்செய்யப் புறப்பட்டுவாரும் அப்படிக்கித் தாங்கள் வராவிடில் சேனைகளை வேவி, அஸ்தினுபுரத்தைக் கொள்ளைகொள்ளும்படிச் செய்வதாய் தங்களிடம் தெரியப்படுத்தும்படி என்னையனுப்பினர் என்று

சொல்லி, விடைபெற்றுக்கொண்டு வந்து சித்திராங்கனுக்குத் தெரியப்படுத்திச் சென்றான்.

இவ்வண்ணம் தூதுவன் சொல்லிபோயினதையுணர்ந்தமெத்ததிகிலடைந்து அதோ! இதர்க்கு நானென்னசெய்வேன் எவ்வாறுஇவ்வரசனை வெற்றிகொள்வேன் எப்படியானுய்வேன் அப்பாமந்திரிகளே! தம்பி சுமந்திராகாரா என்னசெய்வேன் இந்தவேளை என்னைக்காப்பாற்றவேணும் அன்பர்களே உங்களையன்றி யெனக்கு வேறுகெதியில்லையென்று நயந்து நநெடுங்கி ஒன்றுந்தோன்றாமல மதிகலங்கி நின்றான். அதுகண்டு, இரண்டாவதுமந்திரி பூதயாளம் பச்சாத்தாபமடைந்து, முதல்மந்திரியைநோக்கி, அடா படுபாவி அன்றுமெத்த மெத்தப்பேசி சாரங்கதர மகாராஜனை ஆக்கினைக்களாகிவிட்டாய் அந்தவாபை இன்றேன் மூடிக்கொண்டிருக்கின்றாய் எதோ உன்னுடைய உலக்கைக் கொழுந்துக்கொப்பாகும் கூர்மையுடைய புத்தியை சீர்தூக்கியோசித்து, சித்திராங்கதமகாராஜனைவசப்படுத்தும் வழியெதுவோ அதையாவருமறிய எடுத்துரைப்பாய் அவிவேகசிகாமணியாகியமந்திரியேயென அதற்குமறுமொழிகூறாமலிருக்கும் மந்திரியைநோக்கிசுமந்திராகாரன்சொல்லுகின்றான். ஐயா! அவிவேகமந்திரியே? யான்சொல்லுவதை சற்றுகவனமாய் கேழ்பாயாக, மூன்னஞ்சகுனியானவன் துரியோதனன் குலத்தை மாளச்செய்தான், மகோதரன் ராவணன் குடியை மூழுத்தினான், நீயோ நரேந்திரன் குடியைப்பாழாக்க உதித்தவனை விருக்கின்றாய் உன்னுடையபுத்தியை சூசனையாக வெளிபிட்டு நரேந்திரமகாராஜன் மீட்டுக்கொள்ளும் முயர்ச்சி யெதுவோ அதை சிக்கிரம்தேடுமப்பா மந்திரியேயென, அதற்கும் அந்த முதல் மந்திரி பதிலொன்றுங் கூறாமலிருப்பதையறிந்து நரேந்திரன் சொல்லுகின்றான் அப்பாதிமந்திரி பாலகா சுமந்திராகாரா மூதல்மந்திரியை நீங்கள்கேட்பதில் யாதொருபயனுமில்லை அவனுல்யான் மீளப்போகிறதுமில்லை இது உண்மை என்னை இச்சமயம் இவ்வாபத்தில் நின்றும் மீட்டிக்காப்பதுங்கள் கடமை ஏதோ என்னறிவுகெட்டு, இந்த முதல்மந்திரியாகிய மூடன் சொல்லைக்கேட்டு உங்களிருவரையும் உதாசினமாகப்பேசிபிருப்பேன் அதுளமனதில் வைத்துக்கொண்டு எதிராளியிடம் என்னைக் காட்டிக்கொடாமல் இவ்வாபத்தில் நின்றும் என்னை விடுவிப்பீர்களே யாகில், என்னுயிருள்ள பரியந்தம் உங்களிருவரையும் தெய்வமாக பாவித்துத் தொழுவேனென்று. மனங்கலங்கி துயரத்துடன் கூறும் நரேந்திரன் வசனங்களைக்கேட்டு, இரண்டாவது மந்திரியின் மனம் மெத்தவு மிளகி அரசனைநோக்கி, ஓ! அரசே! நீர் இதற்காகப் பயப்படவேண்டாம் யான் சித்திராங்கதனிடம் இப்போதேசென்று, தக்கஉபசாரவார்த்தைகளைப்பேசி அவ்வரசன் திருவடிகளில் விழுந்து சரணுகதியடைந்து, சமாதா

னப்படுத்தி இங்கழைத்துவருகிறேன் அச்சமயமறிந்து தாங்கள் சேனைகளுடன் எதிர்கொண்டுவந்து அழைத்துச்சென்று சிங்காதனத்தில் வீற்றிருக்கச்செய்து வணங்கித் ததிசெய்யுமையா? வேந்தேயென அதற்கரசன், மதிதனிற் றேர்ச்சியுடைய இரண்டாவது மந்திரியே? அந்தப்படியே செய்கிறேன் எனக்கேட்டு இரண்டாவது ஓ! அரசே! யான் போய்வருகிறேனென்று விடைபெற்றுச்சென்று சித்திராங்கதன் இருக்கியிருக்கும் சோலைக்குட்புகுந்து அரசனைக்கண்டு தீர்க்கமாக விழுந்துபணிந்து அபயம்அபயம் கிருபைசூர்ந்துகாத்தருளும் அரசர்க்கரசே என்றுமுறையிடக்கேட்டு, சித்திராங்கதன் தன்மந்திரியையழைத்து அப்பா! மந்திரி? இவனரென அதற்கம்மந்திரி, ஓ! சுவாமி யாராயிருக்கினும், அபயமென்றுபணிந்தவர்களைக் காப்பது அரசர்கடமையாதலால், காப்பதே நீதியென்றுன் அதற்கு சித்திராங்கதன் அப்படியானால் உடனே காப்பாற்றுகிறே னென்றுசொல்லி, அப்பா! பாலகா! என்பாதங்களைவிடு எனக்கிதோ அபயஸ்தங் கொடுத்தேன் எழுந்து என்னுனக்காக வேண்டிய காரியத்தை வெளிப்படுத்துமப்பா மைந்தா வெனக்கேட்டு, இரண்டாவது மந்திரி மெத்த சந்தோஷத்துடனெழுந்து நின்று அடக்க ஒடுக்கத்துடன் சித்திராங்கதனைநோக்கி, எங்களாண்டவரே. மானிடர்கள் முன்ஜென்மத்தில் செய்தவினையை அனுபவிப்பதற்கன்றே மறுஜென்மம் எடுப்பது, அவ்வினையை யல்லவோ விதியென்று மொழிவது, மெத்த நீதியுடனிருந்த அரிச்சந்திரன் நளன் புரூரூவன் முதலானவர்களையும் வினைவிட்டதல்ல, அவ்வாறே பங்களருந்தவப் புதல்வியாகிய சித்திராங்கி யம்மாளையும் வினையானது அணுகலாயிற்று. அதுவும் தங்களுள்ளத்திற் றெளிவாய் விளங்கியே இருக்கும், ஆதலால், தாங்கள் எங்களரசனுடைய, நரேந்திர மகாராஜன் மீது போர்புரிய வெண்ணிவந்த எண்ணத்தை மாற்றி அவரைத் தங்கள் சகோதரனைப்போல பாவித்து ஆட்கொள்ள வேண்டுமென்று பணிவாக மொழிந்தான். இம்மொழிகளைக் கேட்டு சித்திராங்கதன் தன் மந்திரியை நோக்கி, அப்பா! மந்திரி இவன் மெத்தபுத்திசாலி தன்னரசனைத்துயரக்கடலில்லின்றும் மீட்டுக்கொண்டான் நான் இவனுக்குகொடுத்த அபயஸ்தம் அந்த நரேந்திரனுக்கே ஆகிப்பலித்ததனாலும், மங்களபேரிகை அறைவிப்பாய்நான் அந்த நரேந்திரனைக்கண்டு வார்த்தையாடி வருகின்றேன்என்றுசொல்லி இரண்டாவது மந்திரியின் பின் சித்திராங்கதன் அஸ்தினபுரத்திற்குள் செல்லுகையில் நரேந்திரன் சகலமங்களவாத்தியங்களுங் கோஷிக்க எதிர்கொண்டுவந்து சித்திராங்கதனைக் கண்டு பணிந்துக்கொண்டாடத் தொடங்கினன்.

அதெப்படியெனில் சகல வேதசாஸ்திர புராணங்களும் மநுநீதிகளிலுந் தேர்ந்தெளிந்த எம்மாசே தேவரீர் இந்த அஸ்தினபுர

த்தைமிதிக்க யான் என்னபுண்ணியஞ் செய்தேனே தங்களுடைய தெரிசனத்தினாலே யானின்று புலிதனையினேன் என்னுடையபாக்கியமே பாக்கியம் என்று பற்பலவாறுபுகழ்ந்துகொண்டாடிப் பின்னுஞ்சொல்லுகின்றான் ஓ! அரசே நன்மார்க்கங்களும் நல்லோர்கள் பழக்கமும் இல்லாதபாவியாகிய அடியேன்செய்த குற்றங்களெல்லாம் மனதிற்கொள்ளாமல் நாயினுங்கடையேனுனதியீனக்காத்து ரக்ஷிப்பது மதுபாரமென்று வணங்கி இணங்கின,நரேந்திரனோக்கி சித்திராங்கதன் கூறுகின்றான் ஓ! நரேந்திரனே வந்தனம் உன்மீதெனக்குண்டாகிய சினந் தணிந்துவிட்டது என்மனமோ மெத்தகளிப்பையடைந்தது எழுந்திரும் சீக்கிரங்கொலுமகம் போவோம் வாருமைய வென்று விசுவாசநேசத்துடன் கொலுகூடத்தையடைந்து நரேந்திரனுஞ் சிங்காசனத்தின்மீது வீற்றிருந்து, நரேந்திரனையும் அருகினில்வீற்றிருக்கச்செய்து வெகு சந்தோஷத்துடன் இருக்கிறபோது சித்திராங்கியம்மாள் தன் தந்தையைக்கண்டு பணிந்து எழுந்துநின்று என்னை அருந்தவஞ் செய்துபெற்ற தந்தையே என்னையிந்த அபகீர்த்திக்கும் வியாகுலத்திற்கும் ஆளாகச்செய்து தாங்கள் கண்குளிரப்பார்க்கவா அன்று வாளுக்கு மாலையிடச்செய்தீர் என்றுசொல்லி விசனப்படும் சித்திராங்கியை நோக்கி, சித்திராங்கதன் மொழியலுற்றான் அதென்னெனில் எனக்குற்ற புத்திரவாஞ்சையைத் தீர்க்கப்பிறந்த தவச்செல்வமே நீயோ அனேக நூல்களை வாசித்துத் தேர்ந்தவள் உனக்குத்தெரியாத நீதியை யானென்ன சொல்லப்போகிறேன். ஆகிலும் எண்ணறக்கற்று எழுதறவறிக்கினும் பெண்புத்தி பின்புத்தியென்ற பழமொழிக்கிணங்க உனக்குண்டாயிருக்கும் பின்புத்தியினால் ஆராய்ந்தபாராமல் வசனிக்கலாயினுய் நானுனக்கோர் நீதியை யோதுகின்றேன் அதைக் கவனமாகக் கேட்ப்பையே யாகில் உனக்குண்டாயிருக்கும் விசனமானது உடனே நீங்கி சந்துஷ்டியடைவாய் அதென்னவெனில், மதிபான லல்லவோ முன்ன னேக உத்தமர்கள் மெத்த துன்பத்தையும், அபகீர்த்தியையும் அடைந்து சகிக்கக்கூடாத வதிமைகளைத்தங்கள் தங்கள் புத்திரமித்திரகளத்திராளுடன் அனுபவித்து பின்பு பெருமையையடைந்தார்கள் அதைப்போல வாழ்வுஞ் சிலகாலந்தாழ்வுஞ் சிலகாலம் ஒவ்வொருவரும் அனுபவித்தே தீரவேணும் ஆகையால் வேருந்தாதே அம்மணி எண்ணுடன்கூட வருவாய் உன் அன்னையிடம் போவோம் கண்மணியேயென்ற தந்தையை நோக்கி சித்திராங்கி என்தந்தையே அன்று யான்வாளுக்கு மாலையிட்டபோது இது யெனதுடைய நாடென்றும் இங்கிருந்தே வாழவேணுமென்றும் அன்றெனக்குச்சொல்லி இன்றென்னை அங்குவா போவோமென்பது தகுதியோ அன்றியும் யான்கோரிய கணவன் மாண்டுபோயினபின்பு மங்கைக் ஈகப்பெண்ணல்லவோ இனியிந்த காயத்தை

அக்கினிக் கிரையாகும்படிச் செய்யத்துணிந்து யிருக்கின்றேன்புரு டன் மாண்டுபோயினபின் யானிந்த உயிரைவைத்துக்கொண்டுஇவ் வுலகத்தினில் உலாவுவனே இதோநிற்கும் முதல்மந்திரியும் என்னை நாரியென்றும் பூரியென்றும் வையும்படி என்காலம் இப்படியுமா யிற்றே என்று வெகுவாக பிரலாபிக்கச் சித்திராங்கதன்கேட்டுகடு ஞ்சினங்கொண்டு அப்படியா கொடுங்கோலு கிசைந்த அடா மந்தி ரி உன்னுடையநாக்கை இப்போதே துணிக்கிறேன் ஒருநேரத்திரா யுங் கேட்டுக்கொண்டிருந்தாயோ அப்பா நீதிமந்திரி இது ஞாயந் தானுவென அதற்கு நரேந்திரன் வணங்கி, அசே கோபஞ்செய்ய வேண்டாம் இம்மந்திரி யந்தப்படி யுரைத்தது உண்மையே தாங்க ளிவனை தண்டிப்பதற்கு என்னுல் யாதொரு தடையுமில்லை யென, சித்திராங்கதன் கேட்டு அடா கொலைஞர்களே இந்த சண்டாளன் நாக்கை இரண்டு துண்டாயறுத்துக் காக்கைகளுக்கெரிந்து உயிரு ள்ள பரியந்தம் கடுஞ்சிறையினி லடைத்துவைக்கக் கடவீர் என்று கட்டளையிட்டு அருகினிலிருக்கும் சாஸ்திரிகளை நோக்கி நீதியுணர் ந்த சாஸ்திரிகளே யான்செய்த தீர்ப்பு சரிதானே அல்லவோ நீதி சாஸ்திரத்தை ஆராய்ந்துபார்த்து சொல்லக்கடவீர்க ளெனக் கே ட்டு அந்த சாஸ்திரிகளும் மநுதர்ம சாஸ்திரத்தைப் பரிசோதனை செய்து அரசனைநோக்கி ஓ சித்திராங்கதமகாராஜனே தாங்களிட் டதண்டனையே தருமசாஸ்திரத்தில் சொல்லுகின்றது அதுவே சரி யான தண்டனை யென்றார்கள்.

அதைக்கேட்டு சித்திராங்கதன் கொலைஞரை நோக்கினன் அக்குறிப்பையுணர்ந்து கொலைஞர்களிலொருவன் மற்றொருவனை நோக்கி, அடா! சற்குண! இம்மந்திரி நமதரசனுக்கு இல்லாததை யும்பொல்லாததையும்போதித்து அருந்தவப்புதல்வனை வெட்டிவிட ச்செய்த அவிவேகனுகும் இவனையெளிதில் விடப்படாது என்று ஒருவர்க்கொருவர் பேசிக்கொண்டு முதல் மந்திரியை நோக்கி, அப் பா அறிவில்லாதவீணனே இக்காவலாளிகளின் நடுவில்நிற்பாய், அப் பாகாவலாளர்களே! இவனிருகரங்களையும் அறுமணிக் கயிற்றால் இருகக்கட்டி இந்நகரத்தை வலஞ்செய்யும்படி இழுத்துக்கொண்டு போய் இவன்நாக்கையறுத்து காக்கைக்கு இரையாகும்படியெரிந்து இவனைக் கடுஞ்சிறையிலடைத்துக் கடினமாகிய தொழில்செய்யும் படிதினந்தோறும் நன்றுப்புடைக்கக் கடவீர்களென, அவர்களும் அப்படியே செய்விக்கிறேமென்றுசொல்லி முதல்மந்திரியை இருகக் கட்டி இராஜவீதிமார்க்கமாய் இழுத்துக்கொண்டு சீக்கிரம் நடநட, குத்தடாகுத்த மண்மீதிருந்துப் பெண்ணரம்பேசியபெரும்பாத கனை பிடரியைப்பற்றி கெட்டடாகெட்டு, தாக்ஷண்ணியம் கிஞ்சித் தேனும் பாராமல் தாடையிலறையடா வெகுவாகொலைஞர்கள் அம் மந்திரியைப் பற்பலவாறு அடித்தும் இடித்தும் புடைத்தும் இம்

385

சைசெய்துக்கொண் டிழுத்துப்போகையில் முதல் மந்திரியான்வன், அவ்வடிகளுக்குச் சகிக்கமுடியாமல் கோவிந்தா! முகுந்தா! வைகுந்தா! அடியேனை இக்கெதிக்காளாச்கிவிட்டனை துய மாகும் கடுஞ்சி றையிலிருக்கவா அமைத்தனையென்று முறையிட்டழுதுக் கொண் டேகொலைஞர்களுடன் போயினன் இங்கிப்படியிருக்க அங்கே சித் திராங்கி தன்தந்தையை நோக்கிப் பின்வருமாறு கூறலாயினள்

அஃ்து யாதெனில், அடியாளை ஈன்றெடுத்தப் பிதாவே! எனக் கொருவாக்களிப்பீரெனக்கேட்டு சித்திராங்கதன் அம்மாஎன்கண் மணியே கட்டித்தங்கமே உன்கணவனுயிய சாரங்கதரன் மரணம டையவில்லை மச்சமுனிவரால் ஞானுபதேசம் பெற்று சாகாவரம டைந்து சிவவேடம் பூணுக்திருக்கின்றனும் கணவனுயிருடனிருக் கக் கவலைப்படவேண்டியதில்லை. சீக்கிரம் நீசாரங்கதரனிடத்திற் கேகி சுகமாயிருக்கக்கடவாயென அதற்கு சித்திராங்கி, ஒதந்தை யே! கண்மாச்சுத்தையடித்து மூவாசைக்கோ விடித்துத்தவவேடம் பூண்டிருக்கும் என்கணவன் என்னைக்கண்டால் ஆசிப்பரோ! நேசிப் பரோ! பூஷிப்பரோ! விசுவாசிப்பரோ! தூவேஷிப்பரே அன்றி, என்னை அருமையாக வழைத்து இனியமொழி வசனியார், ஆகை யால், புருடனின்றி யானிருப்பதிற் பயனில்லை அப்படி புருடனி ன்றியிருப்பதற்குயாருக்கடுக்குமென்றால் இந்தமாபாவியாகியநரே ந்திரன் குலத்திற்கு அடுக்கும். என்போலொற்றவர்களுக்கு அடுக் காது யான் அக்கினிப் பிரவேசமாகி இந்த ஸ்தூலதேகத்தை நீக்கி சூக்குமதேகத்தைபெற்று அவரடியைத்தாழுது அரன்பதியிலிரு க்க எண்ணங்கொண்டேன். ஆனதால் என்கருத்தை ஈடேரச்செய் யும் என்தையேயென, அதற்கு சித்திராங்கதன் என்னருமைப் புதல் வியே நீசொல்லிய நீதியோ சகலரும் ஒப்புக்கொள்ளத சக்தே இதற்குயான் தடைசொல்லுவதிற்பயனில்லை எமதுகுலத்தினிற்பிற ந்ததற்காக என்றும் அழியாப்பெருமையைத்தந்தாய் உன்மனதினி லெண்ணியபடி செய்வாயம்மா என்குலவிளக்கேயென அதற்குசித் திராங்கி, அந்தப்படியே செய்கிறேன் தந்தையேயெனக் கேட்டுசித் திராங்கதன் சுமந்திராகாரனை நோக்கி, அப்பா! சுமந்திராகாரனே சீக்கிரம் அக்கினிகுண்டம் அமைத்தனைக்குத் தெரியப்படுத்துவா யெனக்கேட்டு, சுமந்திராகாரனும் சேர்வைகாரனுக்கு உத்திரவுசெ ய்தான் சேர்வைக்காரனும் சிப்பந்திகளைக்கொண்டு அக்கினிகுண் டம்அமைத்துஅதற்குவேண்டியகட்டைகளையும் நெய்குண்டங்களை யுந்தருவித்துஅக்கினியைமூட்டி நெய்குண்டங்களைச்சொரிந்துஆகா யத்தைபளாவிக் கொழுந்துவிட்டெரியும்படிச்செய்து சித்திராங்கத னுக்குத் தெரியப்படுத்தினன் அவ்வரசனும் தன்புதல்வியை எச்சரி க்க சித்திராங்கியும் வுதோவருகிறேன் தந்தையேயென்று சொல்லி சுமந்திராகாரன் நோக்கி, அப்பா சுமந்திராகாரனே! என்மாமியா

ராகிய ரத்தினங்கியம்மாளிடம்போய்வருவோம்வருகிறையாவென அதற்கு சுமந்திராகாரன் அம்மணி தங்களிஷ்டப்படிக்கி வருகிறே னென்றுசொல்ல, சித்திராங்கியம்மாள் சந்தோஷத்துடன் சுமந்தி ராகாரனைத் துணைபற்றிக்கொண்டு சபையைவிட்டுப் புறப்பட்டுரத் தினங்கியமமாள் மனைக்குட் செல்லக்கண்டு ரத்தினங்கியின் தாதி! ஓடோடியுஞ்சென்று ரத்தினங்கியம்மாளைக்கண்டுபணிந்துஅம்மணி தங்களைகாணவேண்டி சித்திராங்கியம்மாள் வருகிறாளெனக்கேட்டு ரத்தினங்கி இங்கு ஏன்வருகின்றாளோ காரணம் தெரியவில்லை, நம் மை நாடிவருகிறவர்கள் எவ்வளவு கொடிய பகைவர்களா யிருக்கி னும் எதிர்சென் றழைத்துவந்து இனியமொழிகளைப்பேசி அவர்க ளெண்ணத்தை நிறைவேற்றுவதேகன்னிமையுணர்ந்தஇல்லறவாழ்க் கையருக்குஇயல்பென்று ஞானஸ்றகளுமோதுவதால்அடிதோழி நாம் எதிர்சென் றழைத்துவருவோம் வருவாயென அதற்குத்தோ ழிஅப்படியே உமதிஷ்டப்படி அழைத்து வருவோம்வாரு மம்மா வென்ற தோழியுடன் ரத்தினங்கி எதிர்செல்லுவதைக்கண்டு சித்தி ராங்கி மாமியினடியில்விழுந்து பணிந்து மாமி எனைப்போலும்கொ டும்பாவி இவ்வுலகத்தினி லுண்டோ எப்போதுந் தீராப்பழி தேடி க்கொண்ட தீயவளாகும் என்மீது கோபங்கொளளாமல் தங்கள் வாக்கினால் ஏதாகிலும சொல்லிசிக்காமல் அமங்கலியாகும் அடி யாள்மேல கிருபைகூர்ந்து யான் கேழ்க்கும் வரத்தைக் கொடுத்து ஆசிகூர்ந்தனுப்புமபடிவேண்டுகிறேனென்று தயாமுற்றுக்கொண டேமாமியுடன் சென்றுள் ரத்தினங்கியும் மருமகள் மொழிகளுக்கு மனந்தளராதவளாகிஎன்கண்மணியாய்ய சித்திராங்கியே எனமக ன்சாகாமல்பெரியோர்கள் கூட்டத்திற் சேர்ந்து சாரங்க முனிவ ரென்று பேர்பெற்று சுத்தஞானியா யிருக்கிறபோது நீயேன்கைம் பெண்ணுவாய் புருடன் உயிருடனிருக்கிறபோதே உலகத்திலிரு க்கும் மங்கையர்கள் அமங்கலியாவர்களோ நீஎன்ன உலகத்திலில லாவார்த்தையை யுரைத்தாய் அப்படிக்கிச் சொல்லாதே உனக்கெ ன்னகுறைவு என்பக்கலில் நீசுகமாக யிருப்பாய் உலகிலுள்ளவர்க ள்மெத்தப்புகழ்ந்து உன்னைக் கொண்டாடுவார்கள் பிறந்த வீட்டி ற்கும் புகுந்த வீட்டிற்கும் இதனால் பெருங்கீர்த்தி யுண்டாகும்இப் படிப்பட்ட கீர்த்தியை அடையச்செய்வதை விடுத்து அக்கினியில மூழ்கிதேகத்தை மாய்த்துக்கொள்ள நீணைந்கொண்டிருப்பது நன்றல்லவென்றுரைத்த மாமியாரை நோக்கி சித்திராங்கி ஓ மாமி உலகத்தினிலுள்ள மாதர்கள் புருடனுடன்கூடி இல்லறத்தினி லிரு ந்து சுகத்தை யடைகின்றார்கள் யானே புருடனைத் தவசியா யிருக் கக்காட்டினில் விடுத்துத் தனித்து உயிர் வைத்துக்கொண்டிருப் பதுதருமமோ அப்படிக் கிருப்பது சாத்திரங்களுக்கு விரோதமும பகிரதாதருமத்திற்கு இழிவுமாகும் ஆகையால அடியாள்மீது தய வுபைகூர்ந்து அக்கினியில் மூழ்தற்படி வாக்களிக்கவேண்டும ப

திவிராதைகளில் சிரோன்மணியாய் விளங்கும் என்னம்மணியென்று பணிந்து வினயமாக மருமகளாகிய நின்றனள்.

இவ்வண்ணம் பயபக்தியுடன்சித்திராங்கிமொழிந்து வணங்கி நிற்பதைக் கேட்டுங் ண்டுமாத்திருந்கி மனதினில் அடங்காச் சந்தோஷங்கொண்டு அருகிலிருக்குந் தோழியை நோக்கி அடிதோழி சீக்கிரமாகஓரு எலுமிச்சம்பழம்மஞ்சள் குங்குமம் புஷ்பம் இவை கணுக்கொண்வுக் கடவாயென அத்தோழியும் அந்தப்படியேசென்று அரசிசொல்லிய வஸ்துக்களை எடுத்துக்கொண்டு ஓட்டமாயோடிவந்து அரசியினிடம் கொடுத்தனள் அரசியும், அவைகளைப்பெற்றுக்கொண்டு அருகினில்மெத்தலினபமாய் நிற்கும் மருமகள்மடியினில் அவைகளைக்கட்டி என்கண்மணியாகிய சித்திராங்கிசுகமுடன் அக்கினியில் மூழ்கி தேகத்தைப்போக்கி சிவபெருமானுடையபக்கலில் இனிது வீற்றிருக்கக் கடவாயென்று ஆசீர்வதிக்க சித்திராங்கி மெத்த சந்தோஷத்துடன் மாமியினிடம் விடைபெற்றுக்கொண்டு அக்கினிகுண்டத்தின் அருகில் வந்து தன்னுடைய கணவனுகியசாரங்கதானுடைய திருவடிகளைத் தஞ்செய்துக்கொண்டே அக்கினிகுண்டத்தினில் விழுந்து தேகத்தை அக்கினிக் கிரையாக்கி ஆத்துமாவைப் பரமாத்துமாவினிடம்சேர்ப்பிக்கும் பொருட்டுபோகிறபோதுகைலயங்கிரிவாசரும் கெங்கையைச் சடையிற்றரித்தவரும்பிஞை பாணியும் பேயோடாடியும் சிரித்துமுப்புரத்தையெரித்தவருமாகிய சிவபெருமான் காளபைரவரைநோக்கி அப்பா காளபைரவா மகா உத்தமபத்தினியாகிய சித்திராங்கியின் சூக்குமசரீரத்தைஇந்தபுஷ்பகவிமானத்திலேற்றி எண்ணிடங்கொண்டுவருவா யென அந்தப்படியே காளபைரவன் சென்று சித்திராங்கியின் சூக்கும சரீரத்தைப் புஷ்பகவிமானத்தினிபீது தேற்றிக்கொண்டுவந்து சாமபசிவமூர்த்தியின் முன்னம்வி சாம்பலமூர்த்தியும் அந்த சூக்குமசரீரத்தை அனேக உத்தமிகளைச் சேர்த்திருக்கும் மாலையுடனசேர்த்துத் தன் கழுத்தினில் தரித்துக்கொண்டார் இங்கே அஸ்தினபுரத்தில் அக்கினிகுண்டம் தணிந்து சாம்பலாயின்பின்பு சித்திராங்கதன் அக்கினிகுண்டத்தை பரிசோதிக்கும்படி ஆக்கினைவிதிக்க அந்தப்படியே சிலபேர்கள் அக்கினிகுண்டத்தினி லிநக்கும் சாம்பல்களைவிலக்கிப் பார்த்துக்கொண்டு போகிறபோது அங்கோர் பக்கத்தில்தெங்காய் புஷ்பம் எலுமிச்சம்பழம் மஞ்சள் காதோலை கருமணி முதலானது களுங்காணப்பட அதை யெடுத்துவந்து அவர்கள் சித்திராங்கதமகாராஜனிடம் அளிக்க அவ்வரசனும் அவைகளைப்பெற்றுக் கண்களிலொத்திக்கொண்டு தனபுத்தியின் பதிவிரதா மகாத்துவத்தைப்பலவாறுகொண்டாடி அருகினிலிருக்கும்சுமந்திராகாரனிடமவைகளைக்கொடுத்து அப்பா மந்திராகாரனே இந்தத் தாம்பூலமுதலானதுகள் வேஷாதிபபதினுல் இவைகளின் பூசைமனையிலிருத்திப் பூ

சிக்கக்கடவாயென்றுசொல்லி நரேந்திரனை நோக்கி அரசனே இனி என்னுட்டிற்குச் செல்கின்றேனென்று விடைபெற்றுக்கொண்டுசென்றான் உடனே இரண்டாவது மந்திரி நரேந்திரனை நோக்கி எமதரசே சித்திராங்கியம்மாளுக்கு பாரைக்கொண்டு கருமவிதிகளை நடத்துகிறதென அதற்கு நரேந்திரன் அப்பாமந்திரி சாரங்கதரன் மந்திரியாகிய சுமந்திராகாரன் சித்திராங்கிக்குப் புதல்வனென்கிற முறையானதால் அவனைக்கொண்டு நடத்திவையுமென அந்தப்படியே இரண்டாவது மந்திரியும் சுமந்திராகாரனைக்கொண்டு சித்திராங்கியம்மாளுக்கு நடத்தவேண்டிய கருமக்கிரிகைகளை நடத்திமுடித்தானபின்பு நரேந்திரன் இரண்டாவது மந்திரியைநோக்கி அப்பா நீதி மந்திரி எனதருமைப் புதல்வனுகிய சாரங்கதரனைக் கண்டு பேசி அழைத்துவரலாம் வாருமப்பாவென்ற வேந்தன்மொழிப்படி இரண்டாவது மந்திரியும், சுமந்திராகாரனும் ரத்தினங்கியின் பின்வா அழைத்துக்கொண்டு நரேந்திரன் கானகத்திற்குச்சென்று மச்சமுனிவரைக்கண்டு பயபக்தி விசுவாசத்துடன் இந்த நால்வரும் பணிந்து நின்றார்கள் அப்படி நிற்குமவர்களை மச்சமுனிவர் கிருபைக்கண்ணேக்கமிட்டு ஆசிகூறி நீங்கள் யாரப்பா இங்குவந்த காரணமென்னவென அதற்கு நரேந்திரன் எங்கள் சற்குருநாதரே நான் சாரங்கதரன் தந்தை என்பேர் நரேந்திரன் இவள் சாரங்கதரனுடையதாயார் இவன் சாரங்கதனுடைய மந்திரியாகிய சுமந்திராகாரன் இதோ நிற்குமவன் எண்ணுடைய மந்திரியாகும் நாங்கள் சாரங்கதரனைக்காணவேண்டி மெத்த ஆவல்கொண்டு வந்தவர்களானதால் இங்குபைகூர்ந்து சாரங்கதரனைக்கண்டு மகிழும்படி அருள்செய்யும்குருநாதரேயென அதற்கு மச்சமுனிவர் அப்படியா நீங்கள் தேடிவந்த சாரங்கமுனிவர் அதோ யோகத்திலிருக்கின்றார் கண்விழித்தபின்பு காணுவீர்களப்பாவெனக்கேட்டு நரேந்திரன் மூதல் நால்வரும்பேரின்பவாழ்வைப் பெற்றவர்களைப்போல மகிழ்வடைந்து யோகஞ் செய்துக்கொண்டிருக்கும் சாரங்க முனிவர் அருகிற் சென்று எப்போது கண்விழிப்பாரென்றுஎதிர்பார்த்துக்கொண்டிருந்தனர்கள் அப்போது ஒருஜாமமாயினவுடனே சாரங்கமுனிவர் யோகம்பூர்த்திசெய்துக்கொண்டு கண்களைவிழித்துப் பார்த்தார் அதை நரேந்திரன்கண்டு அப்பா என்னருந்தவப் புதல்வனே சாரங்கதரா வஞ்சகியாகிய சித்திராங்கியின் மொழியைப்பொய்யெனறுணராமல் அஞ்ஞானமதியால் சண்டாளனுகியயான் உன்னைச்செலுத்தக்கொடியதண்டனையை மனதினிலெண்ணுமலும் யான்செய்தகுற்றங்களையெல்லாம் நற்றங்களாக பாவித்துஎங்களுடன் நகரத்துக்குவந்தனைக்குற்ற அரசாஷியென்னும் பூபாரத்தை யாளக்கடவா யென்று மொழிந்த தந்தையின் வசனத்தைக்கேட்டு சாரங்கதரன் சொல்லுகின்றான்.

சேலும் என்னையின்ற தந்தையே தேவரீர்சகலகலை வல்லவராகியும் அஸ்தினபுரத்திற்கு அரசராகியிருந்தும் கேவலம் ஒரு பெண் வார்த்தையை நம்பி என்னையெதிர்நின்றுத்தி வாக்குமூலத்தைவிசாரிக்காமலே பழிசுமத்தி மாறுகால் மாறுகையை வெட்டிவிடும்படி கிஞ்சித்தேனும் புதல்வனுயிற்றே யென்று யோசிக்காமல்கடினமாகிய கட்டளையிட்டபோதேயானிறந்தவனுகும் என்னிடம் பொருந்தியிருந்த சத்திய நிலைமையினுலும் கைகால் அறுப்பட்டவேதனையினுலும் யான் சிவபெருமானை நினைந்துருகிவாடி முறையிட்டபடியினுலே அப்பரமசிவம் எழுந்தருளிப் பிராணபயமினறி பாதுகாத்து தெரிசனந்தந்து போயினர் அப்போதேதன் பிறுணன்போயிருந்தால் இப்போதென்ன செய்வீர் வீண் பிரயத்தினஞ் செய்யாமல் மகனிறந்தானென்றெண்ணி நாட்டுக்குப்போகும்வழியைப்பாரும் அதைவிட்டு இப்போதென்னை நாட்டுக்குவரும்படி யழைப்பதற்கு உமக்கென்ன சொந்தம் கடினமாகிய தண்டனை விதிக்காமுன்னம உமக்குயான் பிள்ளையென்றும் எனக்கு நீர்தந்தையென்றபந்தமிருந்தது தண்டனை விதித்தபின்பு உமக்கும் எனக்கும்என்னசொந்தம் ஆத்துமாவுக்கும் திரேகத்திற்கும்உயிர்பிரிந்தமாத்திரத்தில் எப்படி சம்பந்தமில்லையோ அதுபோல உமக்குமெனக்கு என்ன சம்பந்தமிருக்கிறது பயித்தியக்காரயோசனைசெய்யவேண்டாம் சீக்கிரம் நாட்டுக்குப்போய் சேரும் தந்தையேயென்று கடிந்துபேசும்புதல்வன் சொற்களுக்குநேரேந்திரன் மனம்நொந்து பதில்சொல்லக் கூடாமையால் மனவியாகிய ரத்தினங்கியை நோக்கி அடிபெண்ணே நானைத்தனையாய் நயந்து அழைத்தும் புதல்வன் கடிந்து மொழிகிறுன். பெற்றவள் நீயோகையால் ஒருகால் நீபோய் அழைத்தால் வருவானென்று நம்புகின்றேன் ஆதலால் நீசென்று அழைத்துவருவாயெனகேட்டுப் பிராணகாயகரே! இந்தப்படியே யான் சென்று அழைத்துவருகிறே னென்றுசொல்லி விரைவாகச்சென்று அந்த உத்தமி தனயனைக் கண்டு அண்புண்டாகும்படி இன்ப மொழிகளால் அடாமகனே! அழகானமுகனே என்கட்டிக்கரும்பே! மல்லிகை வென்று பதரிக்கதரி அரசனுடைய பிரிவாற்றுமலமுதான் அதைக் கண்டு சாரங்கதரன் அப்பா சுமந்திராகாரா நீயே அஸ்தினபுரத்திற் கரசனுவாய்யென்று வாழ்த்தி என்னுடைய பாதங்களை விட்டு விடுவாயென, அதற்குசுமந்திராகாரன்வேந்தே! விந்தையானவார்த்தைகளையுரைத்தீர் ஆ! ஹா ஹா மெத்த நன்றுபிருக்கிறது வேங்கையாளுங்காட்டை கரியாளத்தரமாமோ ஆகாயத்தில் தோன்றும் சந்திரனுடைய குளிர்ச்சியான பிரகாசம் நட்சத்திரத்திற் குண்டாமோ (சாகரத்தைப்போல கிணர் ஜலங்கொடுக்குமோ கொடாது) அதுபோலவும் சூரியன்மூன்றும் மின்மினிப்பூச்சி ஏதுக்காகும் ஆகையால் ஏதுக்குமுதவாதவஞ்சகயாகிய யான் அரசாளுவ தென்றும் பெருங்கால்நீபபதினமகப்பட்டபஞ்சுபோலாகும் என்னுடைய

கெதிஅசே தாங்கள் அஸ்திஜபுரத்திற் கெழுந்தருளி பட்டங்கட்டிக்கொள்ளவாவிடில் உம்முடைய திருவடிகளிலேயே என்சிரத்தை வாளால்வெட்டிக்கொண்டு உயிர்மாய்த்துக்கொள்ளுகிறேனென்று வாஜியுருவி கையிற்பிடித்தான் அதைக்கண்டு சாரங்கதரன் சுமந்திராகாரன் கையைப்பிடித்துக்கொண்டு அப்பா சுமந்திராகாரா உனக்கித்தனை பதட்டமாகாது எப்படிப்பட்டகாரியமாகிலும் பொருமை சாந்தமிருக்கவேண்டும் அப்படிக்கில்லாதவனும் மானிடனைனஜஅவன் ஜீவகாருண்ணியமில்லாதகிராதகனுக்குசமமாகுமாதலால்பொருபொரு பதராதே என்றுசிற்சில நீதிகளோயோதிக்கொண்டிருக்கையில் நரேந்திரன் மச்சமுனிவரிடஜ்சென்றுவணங்கிநின்றான் அதைக்கண்டமேச்சமுனிவர் வாழ்த்தி அரசனே மறுபடியும் வந்து பணிந்தகாரணமென்ன அதைச்சொல்லுமையா வென, அதற்குநரேந்திரன் ஓசுவாமி பெண்ணொருவளோ மணம்புரியவெண்ணி அவள் மொழித்த பொய்வார்த்தையை உண்மையெனக்கருதி தனயன் மாறுகால் மாறுகையை வாங்கும்படிக்கிகட்டளோயிட்டதோஷம் என்னையணுகாதிருக்கும்படியான மார்க்கமொன்று சூசனையாகச் சுட்டிக்காட்டவேணும் இதுவேகாரணம்வேறென்றுமில்லையென, அதற்கு மச்சமுனிவர்கேளுமப்பாநரேந்திர பூபதியே உமக்கு நேர்ந்தபழியும் பாவமும் போக்கிக்கொள்ளும் பொருட்டு சகலத்திலும் பற்றற்றுத் தரவியாகி நீதவவேடம் புனைந்து மகாத்துமர்க்ள்வசிக்குமிடத்தைநாடிசென்று மகாதேவனும் உமாமகேசனுமானசிவபெருமானோநோக்கிதவம்புரிந்திருந்தால்அவரருளால்உனக்குற்ற கருமம்நீக்குமெனக்கேட்டுநரேந்திரன் ஓசுவாமி குருநாதரே தங்கள் கட்டளையின்படி இப்போதேயான் தவத்திற்குச் செல்கின்றேன் இந்த செங்கோலைச் சாரங்கதரனிடமளித்து அஸ்திஜபுரத்தையாளும்படிக்குச்செய்வீர் முனிபுங்கவரேயென அதற்கு மச்சமுனிவர் நரேந்திரனே அந்தப்படியேசெய்விக்கிறேனென்று சொல்லிச்சாரங்கதரனையழைத்து அப்பாசிஷனே உன்தந்தை கொடுக்குஞ்செங்கோலைத்தாங்கி அஸ்திஜபுரத்துக் குடிகளைக்காத்து அரசாஜவையேயாகில் உனக்கு இகபரமிண்டியுங்கீர்த்தியுண்டாகி நீடூழிகாலம் வாழ்ந்திருப்பாயென அதற்குசாரங்கமுனிவர் கூறுகின்றார்.

கேளுமன்னினைனையறுத்த குருநாதரேஇந்திராதிகளுக்கும் அறிதற்கரிதாகியமன்னிலையையளித்தமுனிநாதரே தங்களுத்திரவின்படி செங்கோலைப்பெற்றுக்கொண்டேன் ஆனல்இதில்அதிகதொல்லைக்குள்ளாவோமேயென்று என்மனம்வருந்துகின்றது ஆகையால் இச்செங்கோலை மந்திரிக்கி கொடுத்து காட்டை யாளச்செய்யவும்யானிந்த யோகமார்க்கத்தையும் தங்களுடையதிரிசனத்தையும் நீங்காமலிருக்கவேண்டுமென்றும் எனமனம் நினைக்கின்றது தங்களுடைய திருவுளமெப்படியோ அறியேனென, மச்சமுனிவர்

அப்பாசீஷனே நரேந்திரன்பாரத்தை யுன்மீதிற் சுமத்தினன் அதற்கு பாத்தியன் நீயே ஆதலால் உன்மனமாரநீவேரெவருக்காவது கொடுக்கஉன்சுகுசுதந்தரமு மெப்படியாருக்கேனுங் கொடுப்பையேயாகில் அதனுனக்குப்பேருங்கீர்த்தியும் பெருமையுமுண்டாகும் விண்ணவர்களும் மன்னவர்களும் உனதைப் புகழ்வார்கள்உன்னிஷடப்படிக்கி நடத்துவாயென்று விடை கொடுக்கஉடனேசாரங்கதரன் எல்லையில்லாத சந்தோஷசாகரத்தில் மூழ்கினவனுகிமந்திரியைநோக்கி அப்பாசுமந்திராகரனேஎன்வார்த்தையை தடுக்காமல் நீ இந்த செங்கோலத்தாங்கிஅஸ்தினபுத்ரதிக் காசனுகி சுகத்துடன் இனிது வாழ்ந்திப்பாயென அதற்கு திமந்திராகரன் அரசனேநோகி ஆண்டவனே தங்களாக்கினையை மீறபான் சக்கியனல்லநீரென்னுடன்கூடஅஸ்தினபுரிக்குவந்தசகலருமறியவெண்ணசிங்காதனத்திலிருத்தி மகுடஞ்சூட்டிசெங்கோலக்கரத்தினிலளித்தாள் பெருமையாய் பெற்றுக்கொள்வேனெ கேட்டு மச்சமுனிவர் சாரங்கதரனே நோக்கி அப்பா சீஷனே சுமந்திராகாரன் கிசால்வது ஞாயமோ ஓ நரேந்திரபூபதி சாரங்கமுனிவர் இப்போது செய்த ஏர்ப்பாடு உமக்கு சம்மதிதானுவென அதற்கு நரேந்திரன் சமமானியேஎன மச்சமுனிவர் ஆனல்நானும் அஸ்தினபுரிக்கிவருகின்றேன் அரும்பே தேடக்கிடையாத தங்கமே! நற்குணங்களெல்லாந் திரண்டோ குருவாகிய அங்கமே! தாய்சொற்றாய்தால் வாகமில்லையென்ற வாகியத்திற் கிணங்கவும், தங்கைசொன்மிக்க மந்திரமில்லையென்ற ஓலையின்மொழிக்கிணங்க, உன்தந்தையின்வாக்கையும் என்வாக்கையும்தட்டாமல் தடித்தொன்றுஞ்சொல்லாமல் என்பின் நாட்டிற்குவந்து பட்டாபிஷேகனுகி அஸ்தினபுரத்தை யாண்டுகொண்டிருக்கக்கடவாய் மேலும், அருமையாக சிவனுடைய கிருபையினுல் பிறந்த புதல்வன் நீயொருவனேயன்றி வேறுபுதல்வருண்டாகாதாவு கின்னையன்றி எனக்கு வேறொருவருமில்லையே, என்மனக்குறைதீரும்படி வாடாவென்கண்மணியே! என்றுப்பலவாறு கெஞ்சிகெஞ்சி முறையிட்டழுகிற அன்னையை நோக்கி சாரங்கதரன் சொல்லுகிறன் கேளாய் அருந்தவஞ்செய்து பெற்றதாயே என்னையேவேண்டி நீயப்படவேண்டாம் என்னைவிட அதிக நற்குணங்களுடையசுமந்திராகாரனிருக்கின்றன். அவனையே மகனெனபாவித்து அவனுக்கு விவாகமுதலான சீரைநடத்திக் கண்குளிரப்பார்த்து களித்துக்கொண்டிருப்பாய் நானே உனவயிற்றிற் பிறந்தபுண்ணியவசத்தால் பெரும்பதவியடையும்படியானமேன்மையைப்பெற்றேன் ஆதலால், என்மீது கோபங்கொள்ளாமல் ஆசிகூறிகாட்டைச்சேர்ந்து சுகத்தடனிருமம்மாவென்று பணிந்தான், அதற்குசாந்தினுங்கி அடாமகனே! இந்த சுமந்திராகாரன உன்னைவிட சிலவும நற்குணங்களில் அதிகப்பட்டவனுயிருக்கினும் எனக்குக் கருமஞ்செய்யத்தகுதானடா கண்மணியேயென, அதற்குசாரங்கதரன்

ஓ அம்மணி! உலகத்தினில் ஒருபிள்ளையுமில்லாதவர்கள் தத்துவாங்கிக்கொண்ட பிள்ளையைக்கொண்டு கருமஞ்செய்விக்கின்றார்கள். அதுபோல சுமந்திராகாரனே தத்துபிள்ளையெனபாவித்து இவனைக்கொண்டு கருமம் நடத்திக்கொள்ளலாம். தாங்களதற்குச்சம்மதியாவிடில் எப்போதுஎன்னைநினைக்கின்றீர்களோ அப்போதேயான்வருகிறேன். வீண்காலத்தைப் போக்குவதில் பயனில்லைதாயே பெனக்கேட்டு, ரத்தினுங்கி சுமந்திராகாரனை நோக்கி, அப்பா சுமந்திராகாரா! நீயாகிலுஞ்சென்று பணிந்து தக்கதிதிகளோதி உன்னரசன் மனதைக்கனிந்து அழைத்துவருவாயென, அதற்குசுமந்திராகாரன் அந்தப்படியே அழைத்துவருகிறேனென்றுசொல்லி சாரங்கதரன் பால்சென்று வணங்கினன். அப்படி வணங்கிநின்ற சுமந்திராகாரனை சாரங்கதரன் வாழ்த்தி மௌனமாயிருக்க சுமந்திராகாரன் சாரங்கதரனைநோக்கிப்பக்தியிலும் விற்பத்தியிலுஞ் சிறந்த எமதரசே! சனியன் கொடுமையால் வந்த துயரத்தைப் பனிபோலத் துலைத்து சிவபெருமானுடையஅருளால் அறுபட்டகால்கரங்களைப்படைத்த எந்தையே அஸ்தினுபுறத்திற்கு அரசனில்லாமல் குடிகளெல்லாம் கலகப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். ஆகையால் தயவுசெய்துகரத்திற்குத் தாங்கள்வந்து பட்டங்கட்டிக்கொண்டு அரசாளுஞ்செய்வீர் வாரும் பரமகுண சம்பன்னரேயென்று வருந்தி பழைக்கக்கேட்டு சாரங்கதரன் சொல்லுகின்றான்,

கேளும் என்மனதுக்கினிய சுமந்திராகாரனே! தந்தை தாயர்கள் என்னை யிகழ்ந்தபோதிலும் சூரியசந்திரர்கள் கதிமாறி நடந்தபோதிலும் ஆகமங்கள் பொய்த்துப்போனபோதிலும் என்குலமாகிய சந்திரகுலம் இன்றோடழிந்துபோனபோதிலும் என்மனமாரப் பலவிதத் தன்பங்களுக்குக் காரணமாகியசெங்கோலைத்தாங்க எண்ணங்கொள்ளேனென்று நீமனதில் கண்டிதமாய் நினைக்கக்கடவாய் மேலும் அதிகபுத்தியிலும் நீதியிலுஞ்சிறந்தவனுகயிருந்தபோதிலும் நானிப்போதிருக்கும் கிலமைக்கு நீதாழ்ந்தவனே ஆகின்றாய் ஆகையால் இதையுணர்ந்துஎன்னுடன் தடுத்தொன்றும்விள்ளாமல் என்வார்த்தையைத் தள்ளாமல் மனதில் ஆயாசங்கொள்ளாமல் சீக்கிரம் நீஎன் அன்னையினிடம்போய் சேதிபம்மாவென, அந்தப்படியேபோகிறேனென்றுசொல்லி சுமந்திரா[illegible]பணிந்துவிடைபெற்றுக்கொண்டு விரைவாக ரத்தினுங்கியி[illegible]ர்து ஓ அம்மணி நானெத்தனையாக வேண்டியமைத்[illegible]லையென்று

அரசன் கடுஞ்சினங்கொண்டு வசனிக்கின்றார். இதற்கு நானென்ன செய்வேன் தாயேயென அதற்கு ரத்தினாங்கி பாலகா சுமந்திராகா ராமறுபடியும் நீயுன் மன்னிடத்திற்கேகித் திருவடிகளைப் பிடித் துக்கொண்டு மன்றாடி எவ்விதஉபாயத்தினாலாவது அழைத்துவாரு மப்பாவென அதற்கு சுமந்திராகாரன் நல்லது தாயே! அந்தப்படி யே அழைத்துவருகிறேனென்றுசொல்லி விரைவாகஉடன்தாசாரங்க தலைமையடைந்துஅவன்திருவடிகளைப் பிடித்துக்கொண்டுவிடாமல் அரசே தாங்களே எனக்குத் தாய்தந்தை குரு தெய்வமென்று நம்பியிருந்த அடியேனைபும்தங்களால் மெத்தப்பெருமையைஅடை பக்கருதி அருந்தவமியற்றிப் பெரு நோன்புக ளனுட்டித்து வாடி வதங்கி வயிற்றில் யிடந்தந்த மாதாவையும் பிதாவையும்தக்கசாக ரத்தினில் வீழ்த்தித்தங்களைப்போ லொற்றவர்கள்பார்ப்பதழகோ போவோம்வாரும் நரேந்திரனேயென்றுசொல்லி யாவரையுமழை த்துக்கொண்டு நடந்து அஸ்தினாபுரத்தையடைந்து மந்திரியினல்அந் நாட்டைபலங்கரித்துக் குடிகள்யாவரையும் வரவழைத்து நல்லகடி கையில் சுமந்திராகாரனுக்குதிவ்விய தீர்த்தங்களைக்கொண்டு அபி ஷேகஞ்செய்வித்து ஆடையாபரணங்களால் அலங்கிருதஞ்செய்து சிங்காதனத்தில் ஏற்றி முனிவர்கள்பிராமணர்களும்வேத மந்திரங் களால் ஆசிகூற உத்தமபக்தர்கள் பல்லாண்டிசைக்க மகுடஞ்சூட் டிமச்சமுனிவர் சுமந்திராகாரன்கையில்செங்கோலையளித்து அப்பா சுவந்திராகாரா மனுசாஸ்திரவிதிப்படிச்செங்கோல் செலுத்தி நற் கீர்த்தியையடைந்து சுகித்திருக்கக் கடவாயென்று வாழ்த்தி விடை பெற்றுக்கொண்டு சாரங்கதரனுடன் தன்னூர்மம்போய் சேர்ந் தார். இங்கே ரத்தினாங்கி தன் கணவனைப்பணிந்து ஒ பிரார்ணநாதா சுமந்திராகாரனுக்கு விவாகஞ் செய்துவிட்டால் நமக்கு நன் மையாயிருக்குமென அரசனும் அதற்கு சம்மதித்து பாஞ்சாலதே சத்தரசன் புதல்வியாகிய புஷ்பாஞ்சாலியைப்பேசி சகல அரசரை யும் வரவழைத்து சுபலக்கினத்தில் சுமந்திராகாரனுக்குத் திரும ணஞ்செய்வித்து அவரவர்களை தக்கபடி உபசரித்து விடைகொடுத் தனுப்பி இனிது வசித்துக்கொண்டேயிருந்து ஒருநாள் நரேந்தி ரன் தன்மனைவியை நோக்கி என்மன தக்கினியமாதுசிரோமணியே புதல்வன் நிமித்தியப் யான்செய்த தீவினை அகலும்படிக்கித் தவ வேடம் பூண்டு [illegible] யோர்கள் வசிக்குங் கானகத்தையடைந்து சிவபெரு [illegible] தவஞ்செய்யப்போகிறேன், ஆகையால்

நீ சுமந்திராகாரனே பத்திரமாக பார்த்துக்கொண் டிருக்கக்கடவா யென அதற்கு ரத்தினங்கி ஆ என் பிராணநாயகரே? விடுத்துத் தாங்கள் தனித்துப்போகவெண்ணுவது நீதியோ பதிவிரதையான வள் நாயகனேவிட்டுப் பிரியாதிருக்கவேணுமென்றும் ஒருவனே னும் கணவனுக்குத் தொண்டுசெய்யாமல் தனித்திருப்பவன் கணி கைமாதென்றும் சாஸ்திரங்கள் முறையிடுகிறபடியால் யான் தங்க ளைப் பிரிந்திருக்க மனமில்லாதவளாக விருக்கின்றேன் இது அடி யாளுடைய கருத்து இதை வெளியிட்டேன். இனி தாங்களைப்படி கட்டளை யிடுகின்றீரோ அந்தப்படி நடக்க சித்தமாக விருக்கிறே னென, அதற்கு நரேந்திரன் பதிலொன்றுஞ் சொல்லக்கூடாததா லும் பதிவிரதையின்மனம் புண்ணுகும்படி தனியே விடுத்துப்போ வோமேயாகில் தோஷம்வந்து சம்பவிக்கின்றதை நாமோமுன்னம் மனமாரச்செய்த தோஷத்தைப் போக்கும்பொருட்டு சிவபெரு மானே நோக்கித் தவஞ்செய்யப் போகிறோம் அந்த தோஷத்துடன் இந்த தோஷமும் நமக்கு வந்து சம்பவிக்கும்போலிருக்கின்றதே இதற்கு நாமென்ன செய்வோமென்று தீர்க்காலோசனைபண்ணி மனைவியைநோக்கி வனிதைகளின் ரத்தினமே நீ ஏன் மனக்கவலை படவேண்டும் சந்தேகமாக என்பின்வரக்கடவாயென ரத்தினங்கி களித்துத் தான் உடுத்திக்கொண்டிருந்த மேலான ஆடைகளையும் அணிந்திருந்த ஆபரணங்களையுங் கனிந்து மரவுரிதரித்துக்கொண்டு சுமந்திராகாரனை அழைப்பித்து நல்ல புத்திமதிகளைச்சொல்லி அ வனுக்குண்டாகிய துக்கத்தைப்போக்கி விடைபெற்றுக்கொண்டு கணவன் பின்னே நடந்து முனிவர்கள் வசிக்கும் ஓர் ஆசிரமத்தை யடைந்து அவர்களை பயபக்தி விசுவாசத்துடன் பணிந்து அவர்க ளால் உபதேசிக்கப்பெற்று நரேந்திரன் தவந்தினிருக்கத் தானும் சிவபெருமானைத் துதிசெய்துக்கொண்டேயிருந்து சிலவருடங்களு க்குப் பின்பு ரத்தினங்கி பேரின்பவீட்டை யடைந்தனள். நரேந்தி ரனும் மனைவியடைந்த லோகமில் தானும் பேரின்பவீட்டை யடைந்தனள்.

ஸ்திரீகள் பகத்விஜயமென்னும்

பதிவிரதைகள் சரித்திரம்

இரண்டாம்பாகம்

முற்றிற்.

17348